O31m211,N02
N92·17
160926

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்

தொகுதி-கஎ.] காலயுக்தி௵ கார்த்திகைமீ [பகுதி க.
Vol. XVII. November-December, 1918. No. 1.

## பல்லவ சரித்திரம்.

### அத்தியாயம் IV.

### நந்திவர்மன்வமிச சரித்திரம்.

### முன்னுரை.

### I. கங்கபல்லவ வாதம்.

இந்தியாவில் 1881-இல் ஒருவர் இருந்தார். அவர் பல்லவ சரித்திர விஷயமாக மிக உழைத்திருப்பதால் அவரை நாம் மறக்கக்கூடாது. அவர் பெயர் J. டிலாபோன். அவர் புதுச்சேரியில் 'மாஜிஸ்டிரேற்று' உத்தியோகம் வஹித்தார். புதுச்சேரியின் பக்கத்திலுள்ள பாஹூரில் நிருபதுங்கன் சாஸனங்களையும் காசகுடியில் நந்திவர்மன் பல்லவமல்லன் சாஸனங்களையும் கண்டுபிடித்தார்.

இவையிரண்டும் அகஸ்மாத்தாய்க் கண்டுபிடிக்கப்பட்டன அல்ல. அவை, இந்தி சரித்திரத்தையும் பாஷைகளையும் பல்லாண்டு வருந்திப் படித்த ஒரு பண்டிதரின் தன்னயங்கருதா உழைப்பினால் வந்தவையே.

1905-ல் கூடிய பௌரஸ்தர் மகாநாட்டுக்காக (Congress of Orientalists) பாரிஸ்நகரத்துக் கீழ்த்திசைப்பாஷை வித்யாலயத்தார் வெளியிட்ட ஒரு வியாசத்தில், வித்யாலயத்தில் ஒரு புரோபஸராயிருந்த மிஸ்டர் வின்ஸன் பாஹூர்ச்சாஸனங்களின் ஸம்ஸ்கிருத—தமிழ் மூலங்களைப் பூரணமாகப் பிரசுரித்திருக்கிறார். என்றாலும் பிரஞ்சுபாஷையில் வெளிவந்திருக்கும் நூல்களை இந்தியவித்வான்கள் புறக்கணித்துவிடுகிறார்கள், ஆகையால் மிஸ்டர் ஹுல்ட்ஷ்

*

160926



எழுதிய ஒரு ஸங்கிரஹத்திலிருந்தே (Vide his article No. 23 page 180 in Vol. IV Epigraphie Indicu) பாஹூர்ச்சாஸனத்தைப்பற்றி ஏதாவது அறியப்படுகின்றது.

மூலபாடம் மொழிபெயர்ப்பின்றிச் சிலநாட்களுக்குமுன் திரும்பவும் பிரசுரிக்கப்பட்டது. (Part V Vol. II of S. I. I. X. 514).

இந்த மூலம் அபூர்ணமானது. அது மிஸ்டர் டிலாபோன் காலத்தில் புதுச்சேரியில்வசித்த ஒரு பண்டிதரின்வேலை. அநேக இடங்களில் தப்பாகப் பெயர்த்தெழுதப்பட்டிருக்கிறது.

ஆகையால் பாஹூர்ச்சாஸனங்களை மொழிபெயர்க்கவேண்டுமென்றெண்ணி மூலத்தின் ஸம்ஸ்கிருதபாகத்தை (Vol II of S. I. I.) உள்ளபடி மொழி பெயர்த்துக்கொடுக்கவேண்டுமென்று மகா-௱-௱-ஸ்ரீ T. A. கோபிநாத ராயரவர்களை வேண்டினேன். அவர்கள் அதைப் பின்வருமாறு மொழிபெயர்த்துக்கொடுத்தார்கள்.

பாஹூர்ச்சிலாலிகித மொழிபெயர்ப்பு. சுலோகம் (1) தேவர்களின் கிரீடங்களால் உரசப்பெற்ற பாதபத்மங்களையுடையவரும், ஸர்வலோகராலும் பயப்படப்பெற்ற ராக்ஷஸர்களின் நாசத்துக்குக் காரணமானவரும், நித்யமானவரும், தாமரையிதழ்கள்போன்ற கண்களையுடையவருமான மதுசூதனன் உனக்கு எல்லா வாழ்வையும் தரக்கடவர்.

(2) எல்லாச்சிருஷ்டிப்பொருள்களுக்கும் உற்பத்திஸ்தானமாகிய அவரது உந்திக்கமலத்திலிருந்து பிரம்மன் தோன்றினான்.

(3) உலகநாயகனான நான்முகப்பிரம்மனிடமிருந்து அங்கீரஸ் தோன்றினான். அவனிடமிருந்து அஸுரன் வலனை ஸம்ஹரித்த சகானது (இந்திரன்) மந்திரியான பிரஹஸ்பதி தோன்றினான்.

(4) அவனிடமிருந்து ஸம்புவும் அவனிடமிருந்து பரத்வாஜனும் தோன்றினார்கள். அவனிடமிருந்து போரில் இந்திரனைப்போல் சக்தியுடைய வில்லவன் துரோணன் தோன்றினான்.

(5) பிறகு துரோணனிடமிருந்து எல்லாப் படைக்கலப் பயிற்சியுமுடையவனும் பினாகியின் (சிவன்) அம்சாவதாரமானவனும் ஆகிய சக்தியுடைய அசுவத்தாமன் தோன்றினான்.



(6) அசுவத்தாமனிடமிருந்து பல்லவராஜன் தோன்றினான். அவன் நவகண்டங்களிலும் உழவர்முதல் அரசர் ஈறாகவுள்ள ஸகலர்களையும் காப்பாற்றினான்.

(7) அவன் மரபில் விமலன், கோங்கணிகன், முதலிய அநேக ராஜாக்கள் தோன்றினார்கள். அவர்கள்முன்னே சத்துருக்களின் மனைவிமாரெல்லாம் தலைவணங்கினார்கள். எல்லா அரசர்களும் அவர்களது ஆணைக்கு அடங்கிநடந்தார்கள். அவர்கள் தமது குடிகளால் அன்புபாராட்டப்பட்டார்கள். அவர்கள் எப்பொழுதும் வெற்றியுடையவர்களாகவே இருந்தார்கள்.

(8—9) விமலன் ஆதியான மன்னவர்கள் நாற்கடலாற் சூழப்பட்டஉலகத்தை ஆண்டு, தங்கள் சக்தியால் விமானங்கள் வழி சுவர்க்கத்தை அடைந்தபிறகு நந்திவர்மன் என்னும் அரசன் வாழ்ந்திருந்தான். அவன் இந்திரனைப்போன்ற சக்தியுடையவனும், முராரியினது சிறந்தபக்தனும், மிகச்சக்தியுடையவனும் எல்லாமன்னராலும் முடிவணங்கப்பெற்றவனுமாயிருந்தான்.

(10) இவ்வரசன் இந்தக்கலியுகத்திலும் பூமியை நீதியாக ஆண்டு அநேக தானதருமங்கள் செய்ததனால் இந்திரனைப்போற் பிரகாசித்தான்.

(11) இந்தச்சுலோகம் தப்பாக இருக்கிறது. அதில் கீழ்வரும் கருத்து அடங்கியிருப்பதாகத்தோன்றுகிறது. நந்திவர்மன் தன் சத்துருக்கள் தலைகளை அரிந்தான். அந்தத்தலைகள் யமபுரத்துக்குப் பிரயாணம் புறப்படவிருக்கும் அவர்கள் ஆத்மாக்களுக்குக்கொடுக்கப்பட்ட கவளச்சோற்றை ஒத்திருந்தன.

(12) நந்திவர்மனிடமிருந்து வலிமிகுந்த நந்திவர்மன் தோன்றினான். அவன் ஒருவருடைய உதவியுமின்றித் தனிமையாக உலகத்தையெல்லாம் போரில் வென்றான்.

(13) முராரிக்கு (விஷ்ணுவுக்கு) லக்ஷ்மி மனைவியாக இருந்தது போல் ராஷ்டிரகூடமரபில் தோன்றிய சங்கா என்னும் இராணி நந்திவர்மன் மனைவியாக இருந்தாள்.

(14) அரசனது இராணியான சங்காதேவி பூமிதேவியைப் போல் பொறுமையும், குடிகளிடத்துத் தாய்க்கொப்பான அன்பும், உடையவளாய் லக்ஷ்மியின் அவதாரமாக விளங்கினாள்.

(15) உயர்குடிப்பிறப்புக்காக மதிக்கப்பட்டவனும் மூன்று உலகங்களுக்கும் நாயகனானவனும், உதயசூரியனைப்போல் பிரகாசமுடையவனும் கலாப யுத்தத்தில் ஜெயம்பெற்றவனும் ஆன நிருபதுங்கதேவன் அறிவு, அழகு, கல்வி முதலியவைகளையுடைய அந்த இராணியிடம் தோன்றினான்.

(16) முன்னர்ப் பாண்டியரிடம் தோல்வியடைந்த பல்லவச் சேனை இம்மன்னனது அருளினால் அநேக சத்துருக்களையும், அவர்கள் நாடுகளின் வளங்களையும் அரிசித் நதிக்கரையில்வைத்து எரிக்க வல்லதாயிற்று.

(17) இந்தப்பெயர்பெற்ற நிருபதுங்க மகாராஜன் வயதில் இளையோனாயிருந்தாலும் இராமனைப்போல, இந்த உலகத்தில்மட்டுமன்றி மற்ற உலகங்களிலும் பெயர்பெற்றான்.

(18) தன் குடிகளைக்காப்பாற்றுவதில் கருத்துடையோனாகிய குருவமிசத்தில்தோன்றிய வேசாலிமார்த்தாண்டன் (சூரியன்) இந்த நிருபதுங்கராஜனுக்குக் கடமைப்பட்டிருந்தான்.

(19—20) அவன் உலகத்தில் சந்திரனைப்போல மஹத்வம் பொருந்தியவனாக இருந்தான். பெருந்தன்மை முதலானவைகளில் அவன் கடலை ஒத்திருந்தான். சூரியனைப்போல் அவன் உலகத்தையெல்லாம் காப்பாற்றியதனால் அவன் உலகத்தவருக்கு ரக்ஷகனாயிருந்தான். ஆகையால் அவன் பெயருக்கும் உடலுக்கும் ஒற்றுமையிருப்பது சரிதான்; அல்லது அவன் தோற்றத்தினாலேயே ஒருஅரசன்தான்.

(21—23) குருவமிசத்தின் செல்வத்தைப் பெருகச்செய்த அவன் நிருபதுங்கனிடம் விண்ணப்பம்செய்து அவனது ஆஜ்ஞாபதி மூலம் அனுமதிபெற்று வித்யாஸ்தானத்துக்கு வேசாலிப்பாடிமாகாணத்திலுள்ளசேடுபாக்கம், விளாங்காதிரேபாந்தம் (விளாங்காத்தூர்) இறைப்புனைச்சேரி, ஆகிய மூன்று கிராமங்களையும் தானஞ்செய்தான்.



(24—29) அனேகம் அலைகளையுடைய கங்கையை தூர்ஜடி (சிவன்) ஜடையில் தாங்கிக்கொண்டிருப்பதுபோல் பதினான்குகுணங்களையுடைய கல்விநதி பாஹூர்க்கிராமவாசிகளின் இருப்பிடத்தைச் சுற்றிப்பாய்ந்துகொண்டிருந்தது; ஏனென்றால் அது பண்டிதர்கள் வாசஸ்தானம். அதனால் அதற்கு வித்யாஸ்தானம் என்றுபெயர்.

இந்த அரசன் ஆஜ்ஞாபதிமூலம் பாஹூர் வாசிகளான வித்வான்களுக்கு ஒரு யானையின் பிரதக்ஷிணப்பிரமாணம் கிராமங்களை அரசிறையின்றித் தானம்செய்ததனால் மிகப்பெருமையடைந்தான்.

தன் அரசன்ஆணைக்கு அடங்கிநடப்பவனும், தருமசிந்தனையுடையவனும், மூவுலகமன்னர்களாலும் (அரசனாகி?) மதிக்கப்பெற்றவனும், இந்திரனது குருவாகிய பிரஹஸ்பதியைப்போல் கீர்த்திபெற்றவனும் ஆன ஸ்ரீதுங்கவர்மனது மந்திரி தான் செய்த இந்தத்தருமத்தைப் பிற்காலத்துஅரசர்களும் பாதுகாத்துவரும்படி மிகவும் வேண்டிக்கொள்கிறான்.

(30) பாஹூர்வாசிகளின் வித்யாஸ்தானத்தின் அடிமையும் சாஸ்திரஜ்ஞனுமான தாசயன் இந்தஸ்துதிபொருந்திய பிரமாணத்தை எழுதினான். (தமிழ்ப்பாகம் மொழிபெயர்க்கப்படாது விடப்பட்டது).

(31) தருமம் செய்பவனுக்கும் அதைக்காப்பவனுக்கும் ஸமபலன் கிடைப்பதனால் நீங்களும் அதைக்காப்பாற்றுங்கள் என்றுகூறி, முகுந்தன்பாதங்களைத்தாங்கும் தன்சிரவினால் தாழ்மையாகவணங்கி நிருபதுங்கன் பிற்காலத்தில்வரும் அரசர்களிடத்தும் பிரார்த்திக்கின்றான்.

(32) உதிதோதித வமிசத்துக்கு அணியானவனும் எல்லாச் சாஸ்திரங்களிலும் வல்லவனும் பல்லவர்களின் பரம்பரைத்தாஸனுமாகிய பொற்கொல்லன் நிருபதுங்கன் இந்தப்பிரமாணத்தை எழுதினான்.

தென்னிந்திய சிலாலிகிதஆராய்ச்சி பிறப்பதற்குமுன் பாஹூர்ச் சாஸனங்கள் கிடைத்தன. தந்தி நந்தி நிருபதுங்கன் வமிசம் மிகப் புதிதாயிருந்தது. சில சிலாலிகிதங்களைப் பெயர்த்தெழுதியிருப்பதுடன் மிஸ்டர் ஹூல்ட்ஷ் புதுப்பிரமாணங்களை, பாஹூர்ச்சாஸனங்களோடு பொருத்தமுயன்றார்.

துர்ப்பாக்கியவசமாய் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட சாஸனங்களில் கீழ்முத்துகூர்ச்சிலாலிகிதம் உட்பட்டிருந்தது. அதை மிஸ்டர் ஹூல்ட்ஷ் பின்வரும் குறிப்போடு வெளியிட்டார். (Ep. Ind. Vol IV P. 177).

இந்தச் சிலாலிகிதம் வெற்றிபொருந்திய நரஸிம்ஹவர்மனது அரசாட்சியின் 18-ஆவது வருஷத்தில் உண்டானது. இதேபெயரைக் காஞ்சிபல்லவஅரசர்களுள்ளும் காணலாம். ஆனால் சிலாலிகிதங்களின் அடியிலுள்ள இரண்டுஉருவங்களால் எருதுமுடியும் தடிக்கொடியுமுடைய பல்லவ வமிசத்தவரால் இந்தச்சாஸனம் செய்யப்பட்டதென்று நம்பமுடியாமலிருக்கிறது. ஏனென்றால் மிஸ்டர் கிகெல் பதிப்பித்த மேலைக்கங்க வமிசத்தின் 3-சிலாலிகிதங்களில் களிறு தோன்றுகிறது. ஐதீக கங்கவரசன் கொங்கணியின் கொடியில் எழுதப்பட்டிருப்பது "ஹம்ஸம்" எனப்படுகிறது.

ஆம்பூரில் கண்டெடுக்கப்பட்ட நிருபதுங்கனது இரண்டு சிலாலிகிதங்களையும் வெளியிட்டபொழுது மிஸ்டர் ஹூல்ட்ஷ் சொன்னதாவது (Ep. Ind. Vol IV P. 180).

"அன்றியும் நிருபதுங்கவர்மனது ஆதிப்பூர்விகர்களில் கொங்கணிகன் பெயரை பாஹூர்ச்சாஸனங்கள் கூறுகின்றன. இது மேலைக்கங்க வமிசத்தவரின் ஆதிபிதாவாகக்கருதப்படும் கோங்கணியின் ஞாபகார்த்தமாக உள்ள பெயரென்று நான் எண்ணுகிறேன்."

பின்னும் (Ep. Ind. Vol III P. 182)

நரஸிம்ஹவர்மனது கீழ்முத்துகூர்ச் சிலாலிகிதத்தில் மேலைக்கங்கவரசர்களின் சின்னங்கள் இருக்கின்றன; அதன் எழுத்துக்கள் நிருபதுங்கனது இரண்டு ஆம்பூர்ச்சாஸன எழுத்துக்களைவிட மிகப்பழமையானதாக இருக்கின்றன. நிருபதுங்கன் பல்லவனது மட்டுமன்றி மேலைக்கங்க அரசரின் குலமுதலோன் கொங்கணிக்கும் பின்வந்தோன் என்று பாஹூர்ச் சாஸனங்கள் கூறுவதை நாம் ஞாபகத்தில் வைத்தால், மேலைச்சளுக்க அரசனாகிய இரண்டாவது விக்ரமாதித்தனது எதிரியான நந்திவர்மனோடு காஞ்சிபல்லவர்களின் பழைய வமிசம் முடிவுக்கு வந்ததென்று எண்ண இடமாகின்றது. பிறப்பினால் மேலைக்கங்க வமிசத்தைச்சேர்ந்தவனும் பெயரால் பல்லவனும்



ஆகிய நரஸிம்ஹவர்மன் உரிமையால் அவர்களுக்குப்பின் தோன்றினான். அவனுக்குப்பின்தோன்றிய தந்திவர்மன் நந்திவர்மன் என்னும் இரண்டு அரசர்களும் ராஷ்டிரகூட அரசர்களாகிய மூன்றாவது கோவிந்தனுக்கும் முதலாவது அமோஹவர்ஷனுக்கும் ஸமகாலத்தவராயிருந்தனர். வடஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி முதலிய ஜில்லாக்களை ஆண்ட நந்திவர்மன்மகனான நிருபதுங்கவர்மன் அல்லது நிருபதுங்கவிக்ரமவர்மன் மேலைக்கங்க அரசர்களின் கொடிச்சின்னங்களைநீக்கிப் பல்லவர்களின் கொடிச்சின்னங்களைச் சுவீகரித்தான்.

மிஸ்டர் ஹூல்ட்ஷ் மனோகற்பிதம்செய்த கங்க—பல்லவவாதம் மிக இலேசானது. அதைச் சொற்பவார்த்தைகளால் சுருக்கிச் சொல்லிவிடலாம்.

நிருபதுங்கவர்மன் நந்திவர்மபல்லவனது வமிசத்தவனல்ல; அவன் பல்லவனுமல்ல; அந்தப்பட்டத்தை அவன் அநியாயமாய்ச் சுவீகரித்தான். பாஹூர்ச்சாஸன வமிசாவளியில் காணப்படும் கொங்கணிகன் என்னும் பெயரால் அவன் நந்திவர்ம பல்லவமல்லனுடைய வமிசத்தவனல்லவென்றும் மேலைக்கங்கரிடமிருந்து உற்பவித்த சில சிற்றரசர்களின் தோன்றல் என்றும் தெளிவாகின்றது.

கங்க—பல்லவவாதம் முழுதும் கொங்கணிகன் என்ற பெயரொன்றைமட்டும் ஆதாரமாகக்கொண்டிருக்கிறது. ஒரு புது வமிசத்தை ஸ்தாபிக்க இந்தப்பெயர் ஒன்றுமட்டும் போதுமா?

துர்ப்பலமான ஆதாரத்தை வைத்துக்கொண்டு மிஸ்டர் ஹூல்ட்ஷ் ஒரு வழியைக்கற்பிதம் செய்துவிட்டார். பிற ஆதாரங்களால் பலப்படுத்தப்பட்டாலன்றி இதை ஒப்புக்கொள்ளமுடியாது. அதுவரையிலும் இது வெறும் ஊஹம் மாத்திரமாகவே இருக்கவேண்டும். நிருபதுங்கனும் அவனது பூர்விகர்களும் கங்கவமிசத்தவர்கள் என்று சந்தேகமறத்தெரியும் காலம்வரை, தந்திவர்மன் (Ins No 80 of 1898) நந்திவர்மன் (Ins No 72 of 1898), நிருபதுங்கன் (No 89 of 1898) முதலியோர் காலத்துள்ள சிலாலிகிதங்கள் எல்லாம் பல்லவர் சிலாலிகிதங்களாகவே கருதப்படவேண்டும்.

மிஸ்டர் ஹுல்ட்ஷ் அவ்வாறு கருதவில்லை. அவர் எழுதிய 1897-ஆவது வருஷத்திய எபிக்ராபி ரிப்போர்ட்டில் (G. O. Nos. 1093—1096, 29th August 1898) விஜயநந்தி விக்ரமவர்மனது அரசாட்சியின் 17-வருஷத்திய சிலாலிகிதத்தை (Ins No 304 of 1897) 'கங்கபல்லவ' என்ற தலைப்பின்கீழ் வைத்திருக்கிறார். ஆகையால் இந்தத் தப்பானகொள்கையை உறுதிப்படுத்தப் போதுமான ஆதாரங்கள் இல்லாதிருந்தும் அது துரைத்தனத்தாரால் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

கங்க—பல்லவ வமிசம் பல்லவ, சோழ, பாண்டியவம்சங்களோடு ஸமநிலையில் எண்ணப்பட்டிருக்கிறது.

இது ஒன்றினாலேயே மிஸ்டர் ஹுல்ட்ஷின் கொள்கை ஆட்சேபணைக்குப்பாத்திரமாக இருக்கின்றது.

நிருபதுங்கன் கங்கவமிசத்தவன் என்று கற்பிக்கவும், நாம் மேலே உத்தரித்த வாக்கியங்களை எபிக்ராபியா இண்டிகாவில் எழுதவும் அவருக்கு ஸர்வ சுதந்திரங்களும் உண்டு.

ஆனால் கங்க—பல்லவவமிசஉண்மை ஸ்தாபிக்கப்பட்டுவிட்டது போல் 1897 முதல் 1904 வரை 6-வருஷங்களுக்கு இடையிலுள்ள அநேக சிலாலிகிதங்களை கங்க—பல்லவப்பட்டிகையில் சேர்க்க அவருக்கு உரிமையே இல்லை. முதலில்,

(1) நிருபதுங்கன் கொங்கணிகன் என்ற ஒரு அரசன் வமிசத்தில் பிறந்தவனென்றும்,

(2) அந்தக் கொங்கணிகன் கங்கவரசனாகிய கொங்கணியே யென்றும்,

(3) நிருபதுங்கன் நந்திவர்ம பல்லவமல்லனது பின்வந்தோன் அல்லவென்றும் ருசுப்படுத்தவேண்டும்.

அத்தகைய ருசுக்கள் அவசியமானவையல்லவென்று மிஸ்டர் ஹுல்ட்ஷ் எண்ணினார்போலும்.

பெயர்களின் ஸாமியங்களைக்கொண்டும், தப்பான நம்பிக்கையினாலும், மனோகற்பிதமான வமிசாவளியை ஆதாரமாகக்கொண்டு பெயர்களைத்தப்பாக எண்ணியும், நிருபதுங்கன் கங்க வமிசத்தவன் என்று அவர் உறுதியாக நிரூபித்துவிட்டதாகக்கருதுகிறார்.



அதுமுதல் கங்க—பல்லவ வாதத்தை ருசுப்படுத்தவேண்டுமென்ற தேவையே இல்லாதுபோயிற்று. அவரது கொள்கையை வேறு ஆதாரங்களால் உறுதிப்படுத்தவேண்டிய தேவையும் இல்லாததாயிற்று. கற்பிதத்தினாலேயே அது உண்மையாயிற்று.

ஆகையால் கங்க—பல்லவவாதம் தக்க ஆதாரத்தோடு பிறக்கவில்லை யென்ற விஷயத்தை நாம் பிரத்தியேகம் ஞாபகத்தில் வைக்கவேண்டும்.

இதுகாறும் நாம் ஹுல்ட்ஷ் கொள்கையைப்பரிசோதனை செய்தோம். இனி வெங்கய்யா அவர்கள் வாதத்தைப்பரிசோதனை செய்வோம்.

திருவல்லிக்கேணியில் கண்டெடுக்கப்பட்ட நந்திவர்மன்சாஸனத்தைப் பதிப்பித்தபொழுது வெங்கய்யா அவர்கள் எழுதியதாவது (Ep. Ind. Vol VIII No. 29 P. 291) பல்லவ வமிசத்தின் அணியாய் விளங்கியவனும் பாரத்வாஜ கோத்திரத்தைச்சேர்ந்தவனுமான நந்திவர்மமஹாராஜன்காலத்தில் இந்தச்சாஸனம் தோன்றியிருக்கிறது. ஆகவே அவன் பல்லவவமிசத்தைச்சேர்ந்தவன் என்பதற்கு யாதொரு ஸந்தேகமும் இல்லை.

1905—1906-ஆவது வருஷத்திய எபிகிராபி ரிப்போர்ட்டில் (G. O. 492 2nd July 1906) 1905-இல் உள்ள 541-ஆவது சாஸனம், பாரத்வாஜகோத்திரத்திலிருந்துதோன்றிய பல்லவதிலகவமிசத்தைச்சேர்ந்த நந்திவர்மன் ஆளுகையில் உண்டானதாக அவர் சொல்லுகிறார். பல்லவதிலக வமிசத்தைச்சேர்ந்த நந்திபோத்தரையனது இராணி கங்க—பல்லவ அரசனாகிய நிருபதுங்கனுடையவும் ராஜகேசரிவர்மன் என்ற சோழராஜனுடையவும் காலம்வரை வாழ்ந்திருந்ததாக வேறுசாஸனங்கள்மூலம் நாம் அறிந்திருக்கிறோம். (Annual Report for 1900—01-Para 10). ஆகையால் மேலைச்சளுக்காராஜனான இரண்டாவதுவிக்ரமாதித்தனால் தோற்கடிக்கப்பட்ட நந்திவர்மபல்லவமல்லன் காலம்வரை காஞ்சிபுரத்திலுள்ள ஆதிபல்லவர்கள் வாழ்ந்திருந்ததாகத்தோன்றுகிறது. நந்திவர்மபல்லவமல்லன் தோற்றதுமுதல் தென்னிந்தியாவில் அவர்களுடைய பிரக்யாதி நின்றிருக்கவேண்டும். பல்லவர்களுக்கும் பிற்காலத்தில் அவர்

இறுதியில் கூறப்பட்டவிஷயம் மிகவும் முக்கியமானது. பல்லவமல்லன் நந்திவர்மனது தந்தையென்று முதன்முதல் உறுதிப்படுத்தியது கோபிநாதராயரவர்களே. ஆகவே பல்லவர்களின் வமிசாவளி பின் வருமாறாகும்.

நந்திவர்மன் பல்லவமல்லன்
|
தந்திவர்மன்
|
நந்திவர்மன்
|
நிருபதுங்கன்.

ஆனாலும் கோபிநாதராயரவர்கள் சொன்னதை ஒருவரும் கவனிக்கவில்லை. மிஸ்டர் வெங்கய்யா தன் அபிப்பிராயத்தையே உறுதியாக நம்பிக்கொண்டிருந்தார். பொது ஜனங்கள் துரைத்தனத்தாரை ஆதாரமாகக்கொண்டு கங்க—பல்லவவாதத்தையே நம்பியிருந்தனர்.

இது 1907-இல் நிகழ்ந்த விஷயம். அதற்கப்பாலுள்ள பத்து வருஷங்களிலும் வெளிவந்த விஷயங்களால் கோபிநாதராயரவர்கள் கொள்கையே உறுதியடைகின்றது.

(1) நம்மிடம் அநேக பிரமாணங்கள் இருந்தாலும், நிருபதுங்கன் கிழ்முத்துகூர் நரஸிம்ஹவர்மனுக்கும் கங்கவரசர்களுக்கும் ஸம்பந்தப்பட்டவன் என்று விளக்க ஒரு பிரமாணமும் இல்லை.

(2) கங்க—பல்லவர்கள் நந்திவர்மன் பல்லவமல்லனது பின்வந்தோரை விரட்டி அவர்கள் ஸ்தானத்தைப்பெற்றார்கள் என்று நம்புவதற்கு ஆதாரமான உட்குழப்பங்களை விளக்கும் சாஸனம் ஒன்றாவது இதுவரையிலும் அகப்படவில்லை. பல்லவராஜ்யத்தில் ஜன எழுச்சியாவது, சண்டைகளாவது உண்டாகவே இல்லை.

(3) பல்லவர்களுடையவும் கங்க-பல்லவர்களுடையவும் சாஸனங்கள் தேசமுழுதும் பரவிக்கிடப்பதாகக்காணப்படுகிறது. ஆகையால் இவ்விருவமிசத்தாரும் ஏககாலத்தில் ஒரேராஜ்யத்தை ஆண்டார்கள் என்று ஒப்புக்கொள்ளவேண்டும். "ஏககாலத்தவரான இவ்விருவமிசத்தவர்களும் எந்த இடத்தில் ஆண்டனர் என்று குறிப்பிட முடியாது" (பல்லவர்களும் கங்கபல்லவர்களும் பக்கம்-8)



(4) நிருபதுங்கன் பல்லவவமிசத்தவன் என்று விளக்கும் பெயரை அவன் உடைத்தாயிருந்தான் என்று ருசுப்படுத்தப்பட்டிருக்கிறது. 1908-ஆவது வருஷத்திய 68-ஆவது நம்பர் வழுவூர்ச் சாஸனத்திலுள்ள நிருபதுங்க போத்தரையார் என்ற பெயரிலுள்ள போத்தரையார் என்ற பின்னடைமொழியினால், இயல்பான கோவிசயன் முன்னடையின்றி, அவன் பெயரைக் கங்க—பல்லவர் தொகுதியில் உட்படுத்தலாமோ என்பது சந்தேகவிஷயமாயிருக்கிறது. (G. O. No. 538 28th July 1909.)

நந்திவர்மன் பல்லவமல்லன் பின்வந்தோர் பெயருக்கு "கோவிசயன்" என்னும் முன்னடைமொழியும் விக்ரமவர்மன் என்னும் பின்னடைமொழியும் உண்டாயிருந்தன என்று வேலூர்ப்பாளயம் சாஸனங்களால் தெரியவருகின்றது. (G. O. No. 832 28th July 1911.)

அந்த வேலூர்ப்பாளயம் சாஸனங்களினாலேயே கீழ்வரும் வமிசாவளி சந்தேகமற ருசுப்படுத்தப்பட்டிருக்கிறது.

நந்திவர்மன் பல்லவமல்லன்
|
தந்திவர்மன்
|
கோவிசய நந்திவிக்ரமன்.

1907-ஆவது வருஷத்திலேயே—அதாவது இந்தச்சாஸனங்கள் கண்டுபிடிக்கப்படுவதற்கு 4-வருஷங்களுக்குமுன்—தந்திவர்மன் நந்திவர்மபல்லவனுக்கு மகனென்று கோபிநாதராயரவர்கள் உறுதி கூறிவிட்டதனால், கங்க--பல்லவவாதத்தின் வெறுமையும், கோபிநாதராயரவர்கள் வாதத்தின் வன்மையும் நன்குவிளங்கும். ஆனாலும் கோபிநாதராயரவர்கள் வாதத்துக்கு அநுகூலமான ருசுவொன்றும் காணப்படாததனால் இதுகாறும் அவர்களதுவாதம் ஸந்தேகாஸ்பதமாகவே இருந்துவந்தது. கங்க—பல்லவவாதத்துக்கு ஆதாரந்தான் என்ன? ஆதாரமெல்லாம் பாஹூர்ச்சாஸன வமிசாவளியிலுள்ள கொங்கணிகன் என்ற பெயரே.

நிருபதுங்கன் பல்லவன் அல்லவென்றும், அவன் கொங்கணிகனுக்குப்பின்வந்தோனாதலால் கங்கவமிசத்தவனென்றும் மிஸ்டர்

ரிப்

ஹுல்ட்ஷ் கூறினார். வெங்கய்யா அவர்களும் அதை ஒப்புக்கொண்டார்கள். அதற்குக்காரணம் மேலேகூறிய ஒரு விஷயமே. அந்தக் காரணம் துர்ப்பலமானதென்று கோபிநாதராயரவர்களும் சொன்னார்கள்; கங்க-பல்லவவாதத்தைத் தகர்ப்பதற்கு அவர்கள் ருசுக்களும் தேடினார்கள். என்றாலும் நிருபதுங்கன் பல்லவன் அல்லவென்றும் கொங்கணிகனுக்குப் பின்வந்தோனென்றும், அவ்விதியை ஸ்தாபித்தோர் மறுத்துக்கொண்டே இருந்தார்கள். சிலநாளைக்குமுன் வெளிவந்த (Madras 1917) வேலூர்ப்பாளயம் சாஸனங்களை (Part V of Vol II of S. I. I.) வெளியிட்டபொழுது 'கோபிநாதராயரவர்களின்வாதம், பாஹுர்ச்சாஸனப்பெயர்களை வேலூர்ப்பாளயம் சாஸனப்பெயர்களோடு பொருத்துகின்றதென்றும், முன்னையசாஸனத்திலுள்ள விஜயநிருபதுங்கவர்மன் அநேகமாய், பின்னையதிலுள்ள மூன்றாவது நந்திவர்மனது மகனாயிருக்கலாமெனக்காட்டுகின்றதென்றும்" H. கிருஷ்ணசாஸ்திரியவர்க்ள் கூறினார்கள். (S. I. I. Vol II Part V No. 98. P. 505).

பின்னர், இதற்கு மாறாகநிற்கும் ஆக்ஷேபமெல்லாம் வமிசாவளி ஒன்றேயென்றும், முன்னையதில் கொங்கணிகன் என்ற தெளிவான மேலைக்கங்கப்பெயர் காணப்படுகிறதென்றும், பின்னையதில் அது காணப்படவில்லையென்றும் H. கிருஷ்ணசாஸ்திரியவர்கள் தெளிவாகக் கூறினார்கள்.

1917 ஜூன் மாதத்தில் வாயலூர்ச்சாஸனம் வெளிவந்தபொழுது இந்தத்தடையும் நீங்கியது.

ராஜஸிம்ஹன் என்ற இரண்டாவது நாஸிம்ஹவர்மனுடைய பூர்விகர்களது பூரணமான வமிசாவளி வாயலூர்ச்சாஸனங்களில் பெறப்பட்டதென்று இந்தப்புத்தகத்தில் இரண்டாவது அத்யாயத்தில் கூறியுள்ளோம்.

பல்லவன், அசோகன், ஹரிகுப்தன், ஆரியவர்மன் ஆதிய பெயர்களுக்கப்பால் காளிந்தன், பியாமல்லன், ஏகமல்லன், விமலன், கொங்கணிகன், காளபர்த்திரி, சூதபல்லவன், வீரகூர்ச்சன் முதலிய பெயர்கள் வருகின்றன.



ஏழாவது நூற்றாண்டில், ஒருகல்லில் செதுக்கப்பட்ட பல்லவ வமிசாவளிப்பட்டிகையில் ஆரியவர்மன், கொங்கணிகன் ஆதியான மேலைக்கங்கவமிசத்துப் பெயர்கள் இருப்பதனாலே, ஆறாவது நூற்றாண்டில் பல்லவர்களுக்கும் மேலைக்கங்க அரசர்களுக்கும் உண்டாயிருந்த நட்பும் ராஜாங்க ஸம்பந்தமும் வெளியாகின்றனவென்று நாம் கூறியுள்ளோம். நமது கூற்றை பெனுகொண்ட சாஸனங்கள் (G. O. No. 920 4th August 1914. Part II No. 4. Page 86) உறுதிப்படுத்துகின்றன; கொங்கணிவர்மன் பேரனான ஆரியவர்மனை, பல்லவ அரசனான ஸிம்ஹவர்மன் முடிசூட்டிவைத்தானென்றும், அவனுடைய மகன் பெயர் ஸிம்ஹவர்மன் என்றிருப்பதினாலே அவன் இந்த அரசன் மகளை மணந்திருக்கலாமென்றும் அந்தச் சாஸனங்கள் கூறுகின்றன. ஸிம்ஹவர்மன்மகனான இரண்டாவது மாதவன், அவிநிதன் என்னும் பெயருடைய இரண்டாவது கொங்கணிவர்மன். (Sringiri Plates, Mysore archaeological report for 1916. P. 33).

மேலைக்கங்கஅரசர் வமிசாவளி.

| உத்தேச காலங்கள். | |
|---|---|
| கி. பி. 420 | கொங்கணிவர்மன் (1) |
| கி. பி. 450 | மாதவன் (1) |
| கி. பி. 480 | ஆரியவர்மன் (பல்லவஅரசன் ஸிம்ஹவர்மனால் முடி சூட்டப்பெற்றவன்). |
| கி. பி. 510 | மாதவன் II என்ற ஸிம்ஹவர்மன் (பல்லவன் ஸ்கந்தவர்மனால் முடி சூட்டப்பெற்றவன், பெனுகொண்ட சாஸனங்கள்.) |
| கி. பி. 540 | கொங்கணிவர்மன் II அவிநிதன் (Sringeri Plults, Mysore Report 1916. P. 33) E. C. 10. Malur 72) |
| கி. பி. 580 | துருவிநிதன் (Mulbugal Plates-Mysore Report for 1916. P. 44) [Gummareddipuru Plates—Mysore Report for 1912. dated 40th year.] |

விமலன் கொங்கணிகன் என்னும்பெயர்கள் பல்லவவமிசாவளிப் பட்டிகையில் ஏழாவது நூற்றாண்டு முதல் இருந்தன என்று வாயலூர்ச்சாஸனங்களின் உதவியால் நாம் ருசுப்படுத்தியிருக்கிறோம்.

பாஹூர் வமிசாவளியிலும் இந்தப்பெயர்கள் இருப்பதனாலே நிருபதுங்கன் பல்லவன் என்ற கொள்கை பலப்படுகின்றது.

ஆகவே வாயலூர்ச்சாஸனம் வெளிவந்ததுமுதல் கங்க--பல்லவ வாதம் தகர்ந்துபோயிற்று; நிருபதுங்கன் வமிசவரலாறு தெளிவாயிற்று ; உண்மை வெளியாயிற்று ; கோபிநாதராயரவர்கள் சொன்னபடி கீழ்வரும் விஷயங்கள் உறுதிபெற்றன.

(1) எட்டாவது ஒன்பதாவது நூற்றாண்டுகளில் பல்லவவமிசம் மட்டுமே நிலைபெற்றிருந்தது.

(2) வேலூர்ப்பாளயம் சாஸனங்களினாலும் பாஹூர்ச் சாஸனங்களினாலும் பின்வரும் வமிசாவளி பெறப்படுகின்றது.

நந்திவர்மன் (பல்லவமல்லன்)
|
தந்திவர்மன்
|
நந்திவர்மன் (வேலூர்ப்பாளம் சாஸன தாதா.)
|
நிருபதுங்கன் (பாஹூர்ச்சாஸன தாதா.)

(2) கால நிர்ணயம்,

முதலில் ஒவ்வொரு அரசனது ஆளுகையின் காலஅளவை நிர்ணயம் செய்வோம். தந்திவர்மன், நிருபதுங்கன், காலங்களை வரையறுக்க வருத்தமே இல்லை.

திருச்சனூர்ச்சாஸனம் (No. 262 of 1904) தந்திவர்மன் ஆளுகையின் 51-ஆவது வருஷத்தில் தோன்றியது. அதனாலே தந்திவர்மன் 51 வருஷம் ஆண்டானென்று ஒப்புக்கொள்ளுவோம். நிருபதுங்கன் 26 வருஷம் ஆண்டான் என்பது நிச்சயமே; ஏனென்றால் அவனது சாஸனங்களெல்லாம் அளவிலாத அவனது ஆளுகையின்



-ஆவது வருஷத்துக்குள் தோன்றியவைகளே. மற்ற இரண்டு ரசர்கள் காலங்களை நிர்ணயிப்பது எளிதானதல்ல. அவர்கள் இருவரும் நந்திவர்மன் என்ற பெயருடையவர்களாயிருக்கிறார்கள்.

ஒரு நந்தியை மற்ற நந்தியிலிருந்து பிரித்தறிவதெப்படி? அவர்களில் ஒவ்வொருவனும் எத்தனை வருஷம் ஆண்டான்?

இந்தவிஷயத்தில் எனக்கு ஒரு முடிவான அபிப்பிராயம் உண்டு. அந்தப்புது அபிப்பிராயத்தை ருசுப்படுத்த இப்பொழுது தொடங்குகிறேன். இந்த அபிப்பிராயத்தை முதலில் வெளிப்படுத்துகின்றவன் நானே. அது உண்மையானதென்று எனக்குப் பூரணநம்பிக்கையிருப்பதனால் அதை நான் மிக உறுதியாக ஒப்புக்கொள்கிறேன்.

நந்திவர்மன் பல்லவமல்லன் 62-வருஷம் ஆண்டான். அவன் பேரன் சுமார் 24-வருஷம் ஆண்டான். என் அபிப்பிராயத்துக்கு ஆதாரமாயுள்ளவை தண்டந்தோட்டம் சாஸனங்களே. அவனது அரசாட்சியின் 58-ஆவது வருஷத்தில் விஜயநந்திவிக்ரமவர்மன் என்ற ஒரு அரசன் இந்தத்தானத்தைச்செய்தான். (S. I. I. Vol II Part V No 99 P. 517).

இந்தச்சாஸனங்கள் வேலூர்ப்பாளயம் சாஸனதாதாவினால்—அதாவது தந்தியின் மகனால்—உண்டுபண்ணப்பட்டவையென்று இதுகாறும் நம்பப்பட்டிருக்கிறது. நான் அதை ஒப்புக்கொள்ளவில்லை. தண்டந்தோட்டம் சாஸனதாதா நந்திவர்மன் பல்லவமல்லனே.

அதற்குள்ள காரணங்கள் பின்வருமாறு:—

(1) அக்ஷரவடிவசாஸ்திரப்படி (a) தண்டந்தோட்டம் சாஸனதாதாவும் வேலூர்ப்பாளயம் சாஸனதாதாவும் ஒருவனாயிருந்தால், முதலாவது சாஸனம் 58-ஆவது வருஷத்திலும் இரண்டாவது சாஸனம் ஆறாவது வருஷத்திலும் தோன்றியதாகக் காணப்படுவதனால், வேலூர்ப்பாளயம் சாஸனஎழுத்துக்கள் அதிகம் பழமையானவைகளாக இருக்கவேண்டும். ஆனால் அவை பழமையானவைகளாக இருக்கவில்லை. தண்டந்தோட்டம் சாஸனஎழுத்துக்கள் வேலூர்ப்பாளயம் சாஸனஎழுத்துக்களைவிட மிகப் பழமையானவைகளாக இருக்கின்றன.

தண்டந்தோட்டம் சாஸனம் ஸம்ஸ்கிருதப்பகுதியில், ஞ, வ, ம, ஷ, ய என்ற எழுத்துக்களை, வேலூர்ப்பாளயம் சாஸனங்களிலுள்ள அதே எழுத்துக்களோடு ஒப்பிட்டுப்பார்த்தால் அவை மிகப்பழமையானவைகளாகத் தோன்றுகின்றன.

ண, த, ந, ய, ல, தா, நா, யீ, மூ, லை, கொ, தொ, என்ற தமிழ் எழுத்துக்களும் அவ்வாறாகவே இருக்கின்றன.

ஆகையால் தண்டந்தோட்டம் சாஸனநந்தி, வேலூர்ப்பாளயம நந்திக்கு முன்னோன் என்று ஒப்புக்கொள்ளவேண்டியதாக வருகின்றது.

(b) எழுத்துக்களைத் தனித்தனியாய் எடுத்துநோக்காது, பொதுத்தோற்றத்தைமட்டும் பார்ப்போமானால் தண்டந்தோட்டம் சாஸனங்கள் காசகுடிச்சாஸனங்களையும், வேலூர்ப்பாளயம்சாஸனங்கள் உதயேந்திரத்தில் கண்டெடுக்கப்பட்ட ஹஸ்திமல்லசாஸனங்களையும் ஒத்திருக்கின்றன. திருஷ்டாந்தமாக, தண்டந்தோட்டம்சாஸனங்களில் வரைகள் மிகுந்திருக்கின்றன; மேலும் இரண்டாவது 'இ' அநேகமாய் வட்டமாயிருக்கிறது; இதற்குமாறாக, வேலூர்ப்பாளயம் சாஸனங்களில் நெடியவரைகள் அநேகமாய்க்காணப்படக்கூடவில்லை; மேலும் இரண்டாவது 'இ' பகுதி வட்டமாக இருக்கிறது.

(c) சாஸனங்களை ஒப்பிட்டுப்பாராமல் ஒவ்வொன்றையும் தனித்தனியாகப்பார்த்தால் கீழ்வரும் விஷயங்கள் பெறப்படுகின்றன.

நந்தியின்மகனுடைய அரசாட்சியின் 58-ஆவது வருஷத்தில் தண்டந்தோட்டம்சாஸனங்கள் தோன்றினஎன்று நாம் எண்ணினால் அவை 9-ஆவது நூற்றாண்டின் இறுதியில் உண்டாயின ஆகும். ஆனால் நந்தி மூன்றாவது கோவிந்தனால் கி. பி. 804-இல் தோற்கடிக்கப்பட்ட விஷயம் நமக்குத்தெரியும். (G. O. No 919. 28th July 1912. P. 59. Part II No. 7)

இந்தக்காலம் நந்தியினுடைய அரசாட்சியின் இறுதியில் என்றும், அவன் கி. பி. 805-இல் இறந்தான் என்றும் நாம் கொள்வோமானால், அவனுடைய மகனது அரசாட்சியின் 58-ஆவது வருஷம்



(805+58)=863 ஆயிருக்கவேண்டும். நந்தியின்மகன் நந்தியின் காலத்தில் தண்டந்தோட்டம் சாஸனங்கள் தோன்றின என்று நாம் ஒப்புக்கொண்டால் அவை 863-இல் ஆவது அல்லது சிலவருஷங்களுக்குப்பின்-அதாவது 9-ஆவது நூற்றாண்டின் இறுதியில் ஆவது தோன்றியிருக்கவேண்டும். அப்படியானால் அவைகளுக்கும் பாண அரசன் ஹஸ்திமல்லன் சாஸனங்களுக்கும் இடையில் 50-வருஷ வித்தியாசம் ஏற்படும். (S. I. I. Vol II Part III Plate fucing P. 385).

தண்டந்தோட்டம் சாஸனங்களை (S. I. I. Vol II. Plate XVIII) நேரிற்பார்க்கும் எவர்க்கும், அவைகளின் எழுத்துக்கள் 9-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் (அதாவது சுமார் 870-இல்) உள்ளவை என்று சொல்லக்கூடாதபடி அவ்வளவு பழமையானவைகளாய் இருக்கின்றவென்று பிரத்யக்ஷமாகும்.

இந்தச்சாஸனங்கள் 8-ஆவது நூற்றாண்டின் பிற்பாதியில் (சுமார் 775) உள்ளவையென்று நான் எண்ணுகிறேன்.

(2) அரைநூற்றாண்டுக்குமேலான அரசாட்சி சரித்திரத்தில் மிக அபூர்வமானது. நந்திபோத்தரசனது அரசாட்சியின் 50-ஆவது வருஷத்திலுள்ள 1915-இல் 10-ஆவது நம்பர் பஞ்சபாண்டவமலை லிகிதம், நந்தியினதுஅரசாட்சியின் 58-ஆவது வருஷத்திலுள்ள தண்டந்தோட்டம் சாஸனகாலத்தில் தோன்றியதே என்பதற்கு யாதொரு ஸந்தேகமும் இல்லை. இந்த அரசன் நந்தியின்மகனாக இருந்தால் பஞ்சபாண்டவமலைலிகிதம் 9-வது நூற்றாண்டின் பிற்பாதியிலுள்ளதென்று ஒப்புக்கொள்ளவேண்டும். அவ்வாறுகொள்ள முடியவேமுடியாதென்று நான் எண்ணுகிறேன். இந்தலிகிதத்தின் எழுத்துக்கள் பழையனவாக இருக்கின்றன. உதாரணமாக 9-ஆவது நூற்றாண்டின் பிற்பகுதியில் 'வ' என்ற எழுத்து வளைவாக எழுதப்பட்டது; பஞ்சபாண்டவமலைலிகிதத்தில் வளைவே இல்லை. (Vide Plate O. P. Ind. Vol IV).

(3) வம்சாவளியின் ஆதாரத்தைப்பார்க்கும்பொழுது ஹிரண்ய வர்மன் என்னும் பெயருடைய ஒரேஒரு பல்லவ அரசனே வாழ்ந்திருந்தான் எனத்தெரிகின்றது. இந்த அரசன் நந்திவர்மன் பல்லவ

மல்லனுடைய தந்தையென்று காசகுடிச்சாஸனங்கள் மிகத்தெளிவாகவும், காஞ்சிபுரம் வைகுண்டப்பெருமாள் ஆலயத்துத் தென்புறச் சுவரிலுள்ளலிகிதம் (No 37 of 1888) குறிப்பாகவும் தெரிவிக்கின்றன. தாதாவான நந்திவர்மன் ஹிரண்யவர்மன்மகனென்று தண்டந்தோட்டம் சாஸனங்கள் வியக்தமாகக்காட்டுகின்றன.

ஆகையால் ஒருவித ஸந்தேகத்துக்கும் இடமேயில்லை. தன் அரசாட்சியின் 58-ஆவது வருஷத்தில் தண்டந்தோட்டம் தானத்தைச்செய்த ஹிரண்யவர்மன் மகன் நந்திவர்மன் பல்லவமல்லனேயாம்.

(4) காசகுடிச்சாஸனங்களின்படி நந்திவர்மன் பல்லவமல்லன் கொடுகொள்ளிக்கிராமத்தைத் தானம்செய்தபொழுது அந்தக்கிராமம் ஏகதீரமங்கலம் என்னும் புதுப்பெயர்பெற்றது. இதனால் பல்லவமல்லன் ஏகதீரன் என்னும் பட்டப்பெயர்பெற்றிருந்தான் என விளங்குகின்றது.

தண்டந்தோட்டம் சாஸனதாதாவான நந்தி, அந்தச்சாஸனத்தின் 4-ஆவது சுலோகத்தில் ஏகதீரன் என்றழைக்கப்படுகிறான்.

மகா-ா-ா-ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரியவர்கள் சொல்வதாவது!—"திருவெள்ளறை Appendix C.—88-ஆவது லிகிதத்தில் சொல்லப்படும் தந்திவர்மன் பிரஹ்மக்ஷத்திரிய வமிசத்தைச்சேர்ந்தவன் என்றும் பல்லவமஹாராஜன் எனப் பட்டப்பெயர்பெற்றிருந்தான் என்றும் தெரியவருகிறது.. தந்தி நந்திவர்மன் என்னும் இரட்டைப்பெயரினால், தந்திவர்மன்மகன் நந்திவர்மன்எனப் பொருள்கொள்ளவேண்டும். பல்லவமகாராஜன் என்ற பட்டப்பெயரினால் அவன் ஒரு பல்லவ அரசனாயிருந்தான் என்று எண்ணலாம். ஒருக்கால் அவன் தெள்ளாற்றில் வென்ற திருச்சுண்ணம்பூண்டி (No 283 of 1901) சாஸன நந்திபோத்தரியனாகவும் இருக்கலாம்."

தெள்ளாற்றில் வெற்றிபெற்ற இவனது சாஸனஎழுத்துக்கள், நந்திவர்மன்பல்லவமல்லன் காலத்தன என்று சொல்லத்தக்கபடி அவ்வளவு பழமையானவல்லவாயிருப்பதால் இந்த அபிப்பிராயம் உறுதியடைகின்றது.



அன்றியும் தெள்ளாற்றுவெற்றியைப்பற்றி நந்திக்கலம்பகம் கூறும் விஷயங்களெல்லாம் நந்திவர்மன்பல்லவமல்லனுக்குப்பொருந்தா.

காடுவெட்டித் தமிழும் பேரரையன் என்பான் ஒருவன் தெள்ளாறு வெற்றிகொண்டவனுக்கும் நிருபதுங்கனுக்கும் ஸமகாலத்தவனாயிருந்தான்என்பதை ஆதாரமாக்கி 1907-ஆவது வருஷத்திலேயே (Madras Christian College Magazine. April 1907. Page 8) முதலாவது கூறப்படுபவனே (நந்தி) நிருபதுங்கனது தந்தையென்று கோபிநாதராயரவர்கள் முடிவுசெய்தார்கள்.

ஆகையால் தெள்ளாறுவெற்றிகொண்டோன் தந்திவர்மனுக்கு மகனாகவும் நிருபதுங்கன் தந்தையாகவும் இருத்தல்கூடும். அவனது ஆளுகையில் 22-வருஷத்துக்கப்பாலுள்ள சாஸனமொன்றுமே கிடையாததனால் (1) நந்திவர்மன்பல்லவமல்லன் 62-வருஷம் ஆண்டானென்றும் (2) நந்திவர்மன் தெள்ளாறெறிந்தவன் 22-வருஷத்துக்குச்சிறிது மேலாக ஆண்டானென்றும் கொள்ளலாம்.

குடிமல்லம்சாஸனம் (No 229 of 1903) இந்த அரசனது ஆளுகையின் 23-ஆவது வருஷத்தில் உள்ளதாக நான் நம்புவதனால் அவன் சுமார் 24-வருஷம் ஆண்டானென்றும்கொள்ளலாம். குடிமல்லம் சாஸனஎழுத்துக்கள் நிருபதுங்கன் சாஸன (No 228 of 1907) எழுத்துக்களை அநேகமாய் ஒத்திருக்கின்றன.

திருவல்லம் சாஸனம் (No 76 of 1889) நந்தியின் அரசாட்சியின் 62-ஆவது வருஷத்தில் தோன்றியதாகையால், நந்திவர்மன் பல்லவமல்லன் சுமார் 62-வருஷம் ஆண்டானென்று துணியலாம்.

இந்த அரசர்களின் அரசாட்சிக்காலத்தைப் பின்வருமாறு ஒருவாறு நிர்ணயம் செய்துவிட்டோம்.

| | | |
|---|---|---|
| நந்தி—ஏகதீரபல்லவமல்லன் | ... | 62-வருஷம். |
| தந்திவர்மன் ... | ... | 51-வருஷம். |
| நந்திதெள்ளாறெறிந்தவன் | ... | 24-வருஷம். |
| நிருபதுங்கன் ... | ... | 26-வருஷம். |

ஆனால் இந்த அரசர்கள் எப்பொழுது ஆண்டார்கள் என்று ஏகதேசமாகவாவது அறியவேண்டியது அவசியமானது.

அவர்கள் 7-ஆவது நூற்றாண்டுக்குப்பின்னும் 9-வது நூற்றாண்டுக்குமுன்னும் ஆண்டார்கள்என்று உறுதியாகச்சொல்லலாம்.

(1) ஏழாவது நூற்றாண்டுக்குப்பின் பல்லவமல்லன் ஆளத்தொடங்கினான்.

முதலாவதுபரமேசுவரவர்மன் சளுக்கர்களை கி. பி. 674-இல் தோற்கடித்தான் என்று முன் அத்தியாயத்தில் நாம் ஸந்தேகமறக் காட்டினோம். இங்கே நமக்கு ஒரு சரியான தேதி கிடைத்திருக்கிறது. இதற்கும் நந்திவர்மன் பல்லவமல்லனுடைய ஸிம்ஹாஸனாரோகணத்துக்கும் இடையில் (a) முதலாவது பரமேசுவரவர்மன் ஆளுகையின்முடிவும் (b) நீடித்ததாயிருந்த இரண்டாவது நரஸிம்ஹவர்மன் (ராஜஸிம்ஹன்) பூரண ஆளுகையும் (c) நீடித்திராத இரண்டாவது பரமேசுவரவர்மன் ஆளுகையும் நிகழ்ந்திருக்கின்றன.

இந்த ஸம்பவங்கள் 40-வருஷத்தில் நிகழ்ந்திருக்கக்கூடுமென்று எண்ணுகிறேன்; ஆகையால் நந்திவர்மன் பல்லவமல்லன் 716 அல்லது 717-க்குமுன் ஆளத்தொடங்கினான் என்பது பொருத்தமானதல்ல.

(2) நிருபதுங்கன் ஆளுகை 900-க்குமுன் முடிவுபெற்றது.

(a) 1903-இல் 28-ஆவது நம்பர்லிகிதம் நிருபதுங்கன் ஆளுகையின் 24-ஆவது வருஷத்திலும் அவனது சிற்றரசனான பாண அரசன் வாணவிஜ்ஜாதரன் ஆளுகையிலும் உள்ளது. 1903-இல் 223-ஆவது நம்பர்லிகிதம் பாணஅரசன் மகன் ஆளுகையில் சாகவருஷம் 820 (அதாவது கி. பி. 898-)லும் உள்ளது. ஆகையால் நிருபதுங்கன் ஆளுகையின் 24-ஆவது வருஷம் 898-க்கு முன்னுள்ளதென்றும் 26-ஆவது வருஷம் 900-க்கு முன்னுள்ளதென்றும் நாம் கொள்ளவேண்டும்.

(b) கிராமத்திலுள்ள 1905--735-ஆவது நம்பர்லிகிதத்தினால் முதல் பராந்தகச்சோழன் 907 முற்பகுதியில் ஆளத்தொடங்கினான் என்று அறிகின்றோம். (G. O. No 492 2nd July 1906, P. 68).



ஆகவே 906-ஆவது வருஷம் அவன்தந்தை முதல் ஆதித்யனது அரசாட்சியின் இறுதிவருஷம். ஆனால் திருக்கழுக்குன்றம் லிகிதங்களும் (Ep. Ind. Vol III P. 227), பிரம்மதேசம் லிகிதங்களும் (No 230 of 1915) ராஜகேசரிவர்மனது ஆளுகையின் 27-ஆவது வருஷத்தில் உள்ளவை. இந்த ராஜகேசரிவர்மன் முதல்ஆதித்யனே என்பது திண்ணம். ஏனென்றால் ராஜராஜனுக்குமுன் தீர்க்ககாலம் அரசாண்டிருந்த ராஜகேசரியென்னும் பெயருடைய அரசன் அவன் ஒருவனே. ஆகையால் முதல் ஆதித்யன் சுமார் 880-ஆவது அரசாளத்தொடங்கினான் என்பது திண்ணம்.

தொண்டமானாற்றூர்—துஞ்சின உடையார் என்னும் பட்டப்பெயருடைய இந்த அரசன் அவனது அரசாட்சியின் 21--22-ஆவது வருஷங்களில் வடஆர்க்காடு ஜில்லாவில் தானங்கள் செய்தான். (G. O. No 503 27th June 1907 P. 71 Part II No 29). இந்த அரசன் முதல்ஆதித்யன்என்பதற்கு ஸந்தேகமில்லை; ஏனென்றால் அந்தத்தானத்தில் உண்டான ஒரு தப்பிதம் அவன்மகன் முதல்பராந்தகன்காலத்தில் சரியாக்கப்பட்டிருக்கிறது. ஆகவே பல்லவ ஸாம்ராஜ்யம் முதல்ஆதித்யனது ஆளுலகயின் 21-ஆவது வருஷத்திற்கு முன் அதாவது கி. பி. 900-த்துக்குமுன் அவனால் வெல்லப்பட்டதென்று உறுதியாகக்கொள்ளலாம்.

ஆகையால் இந்நான்கு அரசர்களின் அரசாட்சிக்காலத்தை 717-க்கும் 900-க்கும் இடையில் நாம் குறிப்பிடவேண்டும். நந்தி—62 வருஷம்; தந்தி—51 வருஷம்; நந்தி—24 வருஷம்; நிருபதுங்கன் 26 வருஷம்.

இந்த நான்கு அரசாட்சிக்காலங்களையும் ஒன்றுசேர்த்தால் (62+51+24+26) 163 வருஷங்கள் ஆகின்றன. 715-முதல் 900-வரை 185-வருஷங்கள்.

ஆகையால் பின்வரும் முடிபுகள் ஒருவாறு நிர்ணயமானவையென்று நான் எண்ணுகிறேன்.

| | | | | |
|---|---|---|---|---|
| நந்திவர்மன் பல்லவமல்லன் | | | | |
| | முடிசூட்டப்பெற்றது. | | 717—737-களுக்கிடையில் | |
| தந்திவர்மன் | ௸ | ௸ | 779—799 | ௸. |

| | | | | |
|---|---|---|---|---|
| தெள்ளாறெறிந்தநந்தி | | ௸ | 830—850 | ௸ |
| நிருபதுங்கன் | ௸ | ௸ | 854—874 | ௸ |

இந்தக்காலவரையறை பின்வரும் இரண்டு விஷயங்களால் உறுதிபெறுகின்றது. அவ்விருவிஷயங்களையும் பின்னர் ருசுப்படுத்துவோம்.

(1) நந்திவர்மன் பல்லவமல்லன் 741-இடையில் சளுக்கர்களால் தோற்கடிக்கப்பட்டான். தந்திவர்மன் ராஷ்டிரகூடர்களால் 803 இடையில் தோற்கடிக்கப்பட்டான்.

இந்த அரசர்கள் முடிசூடப்பெற்ற இரண்டு தேதிகளுடையவும் சாசரியைக்கணக்காக்கினால் கீழ்வருகிறபடி ஆகும்.

| | |
|---|---|
| நந்திவர்மன்பல்லவமல்லன். | சுமார் கி. பி. 772-இல் முடிசூட்டப்பெற்றான். |
| தந்திவர்மன். | சுமார் 789-இல் முடிசூட்டப்பெற்றான். |
| தெள்ளாற்றுநந்தி. | சுமார் 840-இல் முடிசூட்டப்பெற்றான். |
| நிருபதுங்கன். | சுமார் 864-இல் முடிசூட்டப்பெற்றான். |

ஏறக்குறைய 10-வருஷங்களைத் தவறுதல்களுக்காக வைத்துக்கொண்டால் இந்தக்கணக்கு அநேகமாய்ச்சரியாயிருக்குமென்று நாம் திருப்தியடையவேண்டும்.

ஆனாலும் இந்த 10 வருஷங்களையும் நான் மேற்கூறிய கணக்கிலிருந்து எடுத்துவிடலாமென்று எண்ணுகிறேன். இந்த முடிபுக்குள்ள காரணங்களைக் கீழேகூறுகின்றேன்.

(1) நிருபதுங்கனது ஆளுகையின் 26-ஆவது வருஷமான இறுதிவருஷத்தில் உள்ள ஆம்பூர்லிகிதங்கள் (Nos 758 of 1896—vide also Ep. Ind. Vol IV P. P. 182 & 183) பிருதிகங்கரையர் இந்த அரசனது ஸமகாலத்தவர்என்று கூறுகின்றன. இந்தப்பிருதிகங்கரையர் முதலாவது பிரித்விபதியாக இருக்கலாம். அவரைப்பற்றி நாம் கடைசியாக அறியுங்காலம் 879. நிருபதுங்கனது 26-ஆவது வருஷம் இந்தக்காலத்தோடு பொருந்துகிறது என்று நாம் ஒப்புக்கொண்டால் நிருபதுங்கன் 854-க்கு அணித்தாக ஸிம்ஹாஸனம் ஏறினான் என்றும் கொள்ளவேண்டும். இந்தக்காலம் நாம் அதற்குக்குறிப்பிட்ட உத்தேசகாலத்துக்குச் சுமார் 10 வருஷங்களுக்குமுன்.



(2) தஞ்சாவூர் ஜில்லாவில் திருநாகேசுவரத்திற் கண்டெடுக்கப்பெற்ற ராஜகேசரிவர்மனது இரண்டாவது வருஷத்திலுள்ள 1911-இல் 222-ஆவது லிகிதம் முதல்ஆதித்யனுடையதென்று மகா-ளா-ளா-ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரியவர்கள் சொல்லுகிறார்கள்.

1914-இல் உள்ள 101—104—105—127—130—133-நம்பர் லிகிதங்கள் கி. பி. 907-க்குமுன் உள்ளலவயென்று திவான் பகதூர் L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். (G. O. No 1260. 25th August 1915. P. 72. Appendix F.) இந்த லிகிதங்கள் முதல்ஆதித்யவர்மனுடையவை என்று மகா-ளா-ளா-ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரியவர்கள் சொல்லுகிறார்கள். (Part II No 20 P. 96 of the same Report).

இந்த லிகிதங்கள் எல்லாம் அவனது ஆளுகையின் 5-ஆவது 6-ஆவது 7-ஆவது வருஷங்களில் உள்ளவைகளாயும், திருச்சிஜில்லா திருவெறும்பூரிலுள்ள ஆலயத்தில் செதுக்கப்பட்டவைகளாயும் இருக்கின்றன. ஆகவே இந்த லிகிதங்கள் எல்லாம் முதல்ஆதித்யன் ஆளுகையில் உண்டானவையென்று நாம் ஒப்புக்கொண்டால் இந்த அரசன் தன் அரசாட்சியின் ஆரம்பமுதல் 882-ம் (அவன் அரசாட்சியின் 2-ஆவது வருஷம்) 885-ம் (அவன் அரசாட்சியின் 5-ஆவது வருஷம்) முதல் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களின் ஏகநாயகனாயிருந்தானென்று நாம் ஒப்புக்கொள்ளவேண்டும்.

ஆனால் நிருபதுங்கன் அவனது ஆளுகையின் 21-ஆவது வருஷத்தில் (Insc. No 17 of 1895) தஞ்சாவூருக்கு ஸமீபமுள்ள கண்டியூரிலும் 22-ஆவது வருஷத்தில் லால்குடியிலும் (Insc. Nos 300 × 301 of 1901) அரசாட்சிசெய்தான் என்று நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். லால்குடியும் கோவிலடியும் திருச்சினாப்பள்ளிக்கு ஸமீபமுள்ள திருவெறும்பூரின் பக்கத்தில் இருக்கின்றன.

880-க்கு அணித்தாக அரசாட்சி முடியப்பெற்ற நிருபதுங்கன் மரணத்துக்குப்பின் முதலாவது ஆதித்யன் ஆளத்தொடங்கியிருக்க வேண்டுமென்பது என்னுடைய அபிப்பிராயம். ஆகையால் அவன் 854-இல் ஸிம்ஹாஸனம் ஏறியிருக்கவேண்டும். இந்தக்காலம் நாம் அதற்குக்குறிப்பிட்ட உத்தேசகாலமாகிய 864-க்கு 10 வருஷத்துக் குமுன்.

(3) நந்திவர்மன் பல்லவமல்லனது அரசாட்சியின் 21-22-ஆவது வருஷங்களில் உள்ள உதயேந்திரம், காசகுடிசாஸனங்களில் 741-க்கு அணித்தாக நிகழ்ந்த சளுக்கர் படையெடுப்பைப்பற்றி ஒன்றும் கூறவில்லை. ஆகையால் அந்த அரசனது ஆளுகையிலுள்ள அவ்வருஷங்கள் இந்த ஸம்பவத்துக்கு முந்தியவையென்றும் நந்திவர்மன் பல்லவமல்லன் 719—720-க்குமுன் ஆளத்தொடங்கினுன் என்றும் முடிபு கூறலாம்.

இக்காரணங்களால் நாம் நிர்ணயம்செய்த உத்தேசகாலங்களில் 10-வருஷங்களைக்குறைத்துப் பின்வரும் வமிசாவளியை உறுதிசெய்யலாமென்று நினைக்கிறேன்.

| | கி. பி. |
|---|---|
| நந்திவர்மன் பல்லவமல்லன். | 717—779 |
| தந்திவர்மன் | 779—830 |
| தெள்ளாறுநந்தி | 830—854 |
| நிருபதுங்கன் | 854—880 |

(3) பாண்டியர் சரித்திரம்.

சுமார் 741-க்கு அணித்தாக நந்திவர்மன் பல்லவமல்லன் ஆளுகையினுல் சளுக்கர்களின் படையெடுப்பு நிகழ்ந்தது என்றும் 803-க்கு அணித்தாக, தந்திவர்மன் ராஷ்டிரகூடர்களின் கீழரசன் ஆனுனென்றும் கூறியுள்ளோம்.

இந்த இரண்டு ஸம்பவங்களையும் தவிர, பல்லவர்கள்செய்த போரெல்லாம் பாண்டியர்களோடே. ஆகையால் பல்லவர்சரித்திரத்தை எழுதும் நாம் பாண்டியர்களைப்பற்றியும் பேசவேண்டிய அவசியம் ஏற்படுகின்றது.



வேள்விகுடி வமிசாவளியையும் சின்னமனூர் வமிசாவளியையும், கீழேவருகிறபடி ஒப்பிட்டுப்பார்த்துக்கொண்டு பாண்டியர் சரித்திரத்தைத் தொடங்குவோம்.

வேள்விகுடிதாளம் (Report-for 1908.)

(1) கொடுங்கோன்
(2) மாறவர்மன் அவனிசூளாமணி
(3) செழியன்சேந்தன்.
(4) அரிகேசரின் மாறவர்மன்
(5) கோச்சடையன்
(6) தேர்மாறன் ராஜஸிம்ஹன்
(7) ஜடிலபராந்தகன்

சிறியசின்னமனூர்ச்சாஸனங்கள் Report for 1911.

(1) ஜயந்தவர்மன்
(2) அரிகேசரின் மாறவர்மன்

பெரியசின்னமனூர்ச்சாஸனங்கள் (Report-for 1907.)

(1) அரிகேஸரின் பராங்குசன்
(2) ஜடிலன்
(3) ராஜஸிம்ஹன்
(4) வாருணன்
(5) மாறவகவீரஸ்ரீவல்லப பரசக்ரகோலாஹலன்

பெயர்பெற்ற முதல்அரசன் 4-ஆவது நம்பர் அரிகேஸரின் மாறவர்மனே. வேள்விகுடி சாஸனங்கள் பின்வருமாறு கூறுகின்றன:—“நெல்வேலிப்போரில் அவன் வில்வேலியின் கடல்போன்ற படையைஜெயித்து கேரளராஜாவின் சேனையையும் வென்றான்.” சுந்தரமூர்த்திநாயனரின் திருத்தொண்டத்தொகை 8-ஆவது பாட்டில் நெல்வேலிவென்ற நெடுமாறனைப்பற்றிக் கூறப்பட்டிருக்கிறது. அவன்முதல் ஜைந மதஸ்தனுயிருந்தான். திருஞான சம்பந்தர் அவனைச்சைவனுக்க அவனும் 63-நாயன்மாருள் ஒருவனுனன். ஆகையால் பக்தனுன இந்த அரசனும் மாறவர்மனும் ஒருவனே என்று தோன்றப்பட்டால் அவன் சம்பந்தர் காலத்தவனுயிருக்கவேண்டும்.

முதல் நரஸிம்ஹவர்மனோடு வாதாபியைவென்ற சிறுத்தொண்ட நாயனாரின் ஸமகாலத்தவர் சம்பந்தர். (பெரியபுராணம் V. 318) ஆகையால் 4-ஆவது நம்பர் மாறவர்மன் 650-க்கு அணித்தாக வாழ்ந்திருக்கவேண்டும். அவன்மகன் 5-ஆவது நம்பர் கோச்சடையன் 675-க்கு அணித்தாக வாழ்ந்திருக்கவேண்டும்.

வேள்விகுடி சாஸனங்கள் அவனைப்பற்றிப்பின்வருமாறு கூறுகின்றன:—"அவன் மருதூரில் கடல்போன்ற சேனையைவென்று மங்கலபுரம் என்னும் பெரிய பட்டணத்தில்வைத்து மஹாரதனையும் வென்று அழித்தான்—" மருதூர்வெற்றி—கடல்போன்ற படைகள்-மஹா ரதன்—இவையாவை?

கோச்சடையன் அநேகமாய் 675-க்கு அணித்தாக வாழ்ந்திருக்கவேண்டுமென்று சற்று முன்னே கூறினோம். 674-இல்தான் முதல் விக்ரமாதித்யன் உரகபுரத்தில் (திருச்சிராப்பள்ளி) பாளயம் அடித்திருந்தான். முதல் விக்ரமாதித்யன் பாண்டியர்களோடு யுத்தம் செய்ததாகக் கேந்தூர்ச்சாஸனங்கள் கூறுகின்றன. (Ep. Ind. Vol IX No 29. P. 205) பெருவளநல்லூர்வெற்றியில், ஐக்கியகட்சியார் மூன்றில் பாண்டியன் ஒருவனென்று முன்னமேயே கூறியுள்ளோம். ஆகையால் மேலேகூறப்பட்ட மஹா ரதன் சளுக்க அரசனாக இருக்கலாம்.

கோச்சடையன்மகன் ராஜஸிம்ஹன். இங்கே ஒரு புதிய ஒற்றுமையைக்காண்கிறோம். கோச்சடையனும் முதலாவது பரமேசுரவர்மன்மகனும் சேர்ந்து விக்ரமாதித்யனுக்கு எதிரிகளாய் நின்றார்கள் என்று நாம் கூறினோம். கோச்சடையன் மகனும் முதல் பரமேசுரவர்மன்மகனும் ராஜஸிம்ஹன் என்ற பெயரே வகித்திருந்தார்கள். இங்ஙனம் இருவருக்கும் ஒரேபெயருண்டாகக் காரணம் என்ன? பல்லவ ராஜகுமாரனும் சளுக்கர்என்ற தன் பகைவர்க்கு ஸிம்ஹமுமான ராஜஸிம்ஹன், தன் தந்தை பரமேசுவரவர்மன் அனுமதிப்படி கோச்சடையனோடுசேர்ந்து யுத்தம்செய்யவும், கோச்சடையன் ராஜஸிம்ஹன்மகளை மணம்புரியவும், பாண்டியன் மகனுக்குப்பாட்டனாகிய பல்லவராஜன் பெயர்சூட்டவும் செய்திருக்கலாம்.



அங்கே மறுபடியும் ஒரு புதிய ஒற்றுமையை நாம் காணலாம். நந்திவர்மன் பல்லவமல்லனுக்கு ஒருபெரிய ஆபத்துண்டானதாக உதயேந்திரம் சாஸனங்கள் கூறுகின்றன, (S. I. I. Vol. II Part III P. 376) அவனைப் பல்லவராஜகுமாரனான சித்ரமாயனும் வேறு ராஜகுமாரர்களும் சேர்ந்து எதிர்த்தார்கள். அக்கூட்டத்தில் மண்ணைக்குடிப்போர்புரிந்த பாண்டியனும் சேர்ந்திருந்தான். நந்திவர்மன் பல்லவமல்லன் தன் சத்துருக்களை, சங்கரகிராமத்தில்வைத்துத் தோற்கடித்தான்.

பல்லவமல்லன் உரிமையின்றி அரசனானவன் ஆகையால் சித்ரமாயன் இரண்டாவது பரமேசுவரவர்மனது அரசிளங்குமரனாகவே இருக்கவேண்டும். இவன் தன்பந்துவாகிய ராஜஸிம்ஹ பாண்டியனைத் தனக்கு உதவிபுரியும்படி வேண்டியிருத்தல் வேண்டும். கோச்சடையன் ஏழாவது நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்திருந்ததனால் அவன்மகனான ராஜஸிம்ஹன் 8-ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் நந்திவர்மன் பல்லவமல்லன் ஸிம்ஹாஸனத்தை அநியாயமாகக் கைப்பற்றிய காலத்தில் வாழ்ந்திருந்தான்.

நாம் இப்பொழுது வேள்விகுடி சாஸனங்களைப் பரிசோதனைசெய்வோம், கோச்சடையன்மகன் மண்ணைக்குறிச்சியில் (மண்ணைக்குடியாக இருக்கலாம்) பல்லவர்களை வென்றான் என்று தமிழ்ப்பகுதியிலிருந்து அறிகின்றோம்; ஸம்ஸ்கிருதப்பகுதியிலிருந்து ராஜஸிம்ஹன் பல்லவமல்லனைப் போரில்வென்றானென்று அறிகின்றோம். அரசன்பெயர் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், ஒருவித ஸந்தேகத்துக்கும் காரணம் இல்லை.

மாறவர்மன் அரிகேஸரி பராங்குசன் சங்கரமங்கையில் வைத்து, பல்லவர்களை வென்றான் என்று சின்னமனூர்ப்பெரிய சாஸனங்கள் கூறுகின்றன. சங்கரமங்கை என்பது சங்கரக்கிராமம் என்று மகா-ா-ா-ஸ்ரீ வி. வெங்கய்யா அவர்கள் கூறுகின்றார்கள்.

இந்த ஸம்பவங்கள் 8-ஆவது நூற்றாண்டின் முற்பகுதியில் நிகழ்ந்தன. அரிகேஸரிபராங்குச ராஜஸிம்ஹன் மகன் ஜடிலபராந்தகன், ஆனைமலைக்குகையிலுள்ள சாஸனங்களில் (Nos 453, 454 of 1906)

கூறப்படும் மாறன் சடையன் பராந்தகனே என்று துணிவதும் இயல் பேயாகும். மேலே கூறிய ஆனைமலைச் சாஸனங்கள், இந்த அரசன் 769-70 இல் வாழ்ந்திருந்தான் என்று உறுதியாகக் கூறுகின்றன.

ஆனைமலைப்பாடல்களைப் பாடியகவி, வேள்விகுடிச் சாஸனங்களை யெழுதிய ஆத்ஜபதியைப்போலவே, மாறங்காரியென்ற மதுரகவி மூவேந்தமங்கலப்பேரரையன் என்று அழைக்கப்படுவதனால் மேலே கூறிய விஷயங்கள் உறுதிப்படுகின்றன. இருவரும் கரவந்தபுரத்தில் வசித்தார்கள். ஆகவே மகா-ா-ா-ஸ்ரீ வெங்கய்யா அவர்கள் கூறிய படி இவ்விருவரும் ஒருவரேயாம்.

வேள்விகுடிச் சாஸனங்களின்படி, ஜடிலபராந்தகன் காவேரியின் தென்கரையில் பெண்ணாகடப்போரில் காடவனையும், காட்டுக்குறும்புச் சண்டையில் ஆயவேளையும், குறும்பர்களையும் தோற்கடித்தான்.

பல்லவர்கள் காடவர் என்றும் அழைக்கப்பட்டனர் என்று நமக்குத் தெரியுமே.

ஜடிலன் என்பான், சென்னை நவீனப்பொருட்காட்சிச்சாலைச் சாஸன தாதாவாகவும், திருப்பரங்குன்றம் லிகிதங்களிலும், (கோபிநாத ராயரவர்கள் கூறுகிறபடி) திருவனந்தபுரம் நவீனப்பொருட்காட்சிச் சாலை லிகிதங்களிலும் கூறப்படும் அரசனாகவும், சின்னமனூர்ச்சாஸன தாதாவாகவும் இருக்கலாம். சின்னமனூர்ச் சாஸனங்களில் காணப் படாதவற்றில் அவன் பெயர் இருக்கக்கூடும்.

சின்னமனூர்ப் பெரியசாஸனங்களில் ஜடிலன்மகனான ராஜஸிம்ஹ (பட்டப்பெயர் பெற்றவன்) னைப்பற்றியாவது அவன் பேரன் வரகுண னைப்பற்றியாவது யாதொரு விவரமும் இல்லை.

வரகுணன் மகன் ஸ்ரீமாறன் பரசக்ர கோலாஹலன். அவன் மாய பாண்டியனையும், கேரளனையும், ஸிம்ஹளராஜனையும், பல்லவனையும், வல்லபனையும் கீழடக்கினான் என்று, சின்னமனூர்ச் சாஸனம் ஸம்ஸ் கிருதப்பகுதி கூறுகின்றது. அவன் குன்னூரிலும் சிங்களத்திலும், விழிஞத்திலும் வெற்றிபெற்றானென்றும், குடமூக்கில் வைத்துத்தன்னை எதிர்த்த பல்லவர்களையும், சோழர்களையும், கலிங்கர்களையும், மகதர் களையும் தோற்கடித்தான் என்றும் தமிழ்ப்பகுதி கூறுகின்றது.



மகா-ா-ா-ஸ்ரீ வெங்கய்யா அவர்கள் கூறுவதாவது:—"அரசு செலுத்தும் அரசனுக்கு எதிரியாகப்பாண்டியராஜ குமாரன் நின்றான் என்று சொல்லப்படுவதனால் ராஜவமிசத்தில் ஒற்றுமைக்கேடும், குழப் பங்களும் இருந்தனவென்று அறியலாம்" ஸ்ரீமாறனுக்கு சிங்களரும் சத்துருக்களாயிருந்தார்களென்று கூறியுள்ளோம். சிங்களராஜன் மாய பாண்டியனோடு சேர்ந்தான் என்பதிலிருந்து நாம் ஒருபெயர் ஒற்று மையைப் பெறுகிறோம்.

மஹாவம்சம் 51-ஆவது அதிகாரத்தில் (Translation of Wife-sinha) சொல்லப்படுவதாவது (No. 27). "அதே ஸமயத்தில் பாண்டு ராஜ்யத்தை அழிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் பாண்டியராஜ னால் அவமதிக்கப்பட்ட ஒரு பாண்டியராஜகுமாரன் இங்கேவந்தான்."

சிங்கள அரசனான இரண்டாவதுசென்னன் பாண்டியராஜகுமார னோடு சேர்ந்து மதுரைப்பட்டணத்தை முற்றுகை செய்தான்.

பாண்டியராஜன் (No. 38) ஒரு யானைமீதேறி, போர்க்களத்தி லிருந்து ஓடி, வேறிடத்தில் உயிர்துறந்தான். உடன்தானே அவன் மனைவியும் அவனோடு உயிர்துறந்தாள்.

மஹாவம்சப்படி இரண்டாவது சேனன் 866 முதல் 901-வரை அரசுபுரிந்தான். இங்கே மஹாவம்ச காலத்தைப்பற்றிப் பின்னும் சிறிது கூறவேண்டும்.

சோழர்கள் சிங்கள அரசர்களோடு பகைகொண்டு சிங்களத்தைப் பலமுறை தாக்கினார்கள். இந்தப்படையெடுப்புகளின் திட்டமான காலம் இன்னதென நமக்குத்தெரியும்.

(1) முதலாவது பராந்தகன் தன் அரசாட்சியின் 37-ஆவது வருஷத்துக்குச் சிறிதுமுன்னே 942-க்கு அணித்தாக சிங்களத்தைத் தாக்கினான். (Tiruppalatnai Insc.)

(2) ராஜராஜன் 1002-க்கு அணித்தாக சிங்களத்தைவென்றான். இந்தப்படைப்புகளில் முதலாவது, மூன்றாவது உதயன்காலத்தி லும் இரண்டாவது, ஐந்தாவது மஹிந்தன் காலத்திலும் நிகழ்ந்ததாக மஹாவம்சம் கூறுகின்றது.

ஆனால் மஹாவம்சத்தில் கூறும் தேதிகள் சரியாயிருக்கவேண்டுமானால் சிங்கள காலநிர்ணயத்திலிருந்து 24-வருஷங்களைக் குறைக்க வேண்டும்.

அன்றியும் முதலாவது நரஸிம்ஹவர்மனது சிங்களப்படையெடுப்பைப்பற்றிப் பேசியபொழுது, மஹாவம்சகாலங்களிலிருந்து சுமார் கால் நூற்றாண்டு காலத்தைக் குறைக்க நமதுகால நிர்ணயம் ஒத்துவந்ததை முன்னரே அறிந்திருக்கிறோம்.

இதை ஒப்புக்கொண்டால் மஹாவம்சகால நிர்ணயத்தை நம்பி இரண்டாவது சேனன் 841-முதல் 876-வரை அரசாண்டான் என்று உறுதியாகக்கூறலாம். தன் பந்துவால் ஸிம்ஹாஸனத்திலிருந்து நீக்கப்பட்ட பாண்டியராஜன் ஸ்ரீமாறன் பரசக்ரகோலாஹலனே.

இன்னொரு விஷயம் ஒத்துவருவதையும் நாம் இங்கே கவனிக்க வேண்டும். ஸ்ரீமாறன் பல்லவர்களைக்குடமூக்கில்வைத்து எதிர்த்தான் என்று சின்னமனூர்ச் சாஸனங்கள் கூறுகின்றன.

9-ஆவது நூற்றாண்டில் புராதன பாண்டியர்கள் காலத்தில் கும்பகோணம் குடமூக்கு என வழங்கிவந்ததென்பதற்கு ஸந்தேகமேயில்லை. கும்பகோணம் நாகேசுவர ஆலயத்தில் உள்ள மாறன் சடையன் பாண்டியன்லிகிதத்தில் (No 13 of 1908) இந்தப்பட்டணம் திருக்குடமூக்கு என அழைக்கப்பட்டிருக்கிறது.

நிருபதுங்கன் தன் அரசாட்சியின் முதல் எட்டு வருஷங்களில் அதாவது 854 முதல் 863 வரை—அரிசித நதிக்கரையில் பாண்டியர்களை வென்றான் என்று பாஹூர்ச் சாஸனங்களிலிருந்து நாம்முன்னமேயே அறிந்துள்ளோம். அரிசித்நதி கும்பகோணத்துக்கருகே ஓடும் அரிசிலாறே என்று கோபிநாதராயரவர்கள் கூறுகிறார்கள்.

ஸ்ரீமாறன் 841-முதல் 876-வரை அரசாண்ட இரண்டாவது சேனனுக்கு ஸமகாலத்தவன் என்றும் நிருபதுங்கனது அரசாட்சியின் முதல் எட்டுவருஷங்களும் 854-முதல் 863-க்குள் விழுந்தன என்றும் நாம் கூறியுள்ளோம். ஆகையால் பாண்டியராஜ்யத்தில் சிங்களர்படையெடுத்துவந்த ஸமயத்தைத் தவறவிடாது பல்லவநிருபதுங்கன் ஸ்ரீமாறனை எதிர்த்துச்சென்று அவனைக்கும்பகோணத்தருகிற் புறங்கண்டானென நாம்கருதலாம். நிருபதுங்கன் இரண்டாவது சேனனை ஒத்திருந்தான் என்ற விஷயத்தை, ராமனுடைய புகழைப்போல நிருபதுங்கனது புகழும் கடல்கடந்து பரவியிருந்ததெனக்கூறும் பாஹூர்ச்சாஸனங்கள் வற்புறுத்துகின்றனபோலும். பாண்டியராஜன் கொல்லப்பட்டான் என்று சிங்களசரித்திரங்கள்கூறுகின்றன. அது 860-க்குஅணித்தாக நிகழ்ந்திருக்கவேண்டும். ஆகவே பல்லவசரித்திரத்தைச்செவ்வையாகஅறிவதற்கு பாண்டியர் சரித்திரமும் அறியவேண்டியதுமுக்கியமானதென்று இதுகாறும் கூறியவற்றிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

## பல்லவ வம்சாவளி.

யுவமஹாராஜன் சிவஸ்கந்தவர்மனது தந்தை
காஞ்சியரசன் சுமார் கி. பி. 200) (மயிதவோலு)

காஞ்சியரசன் சிவஸ்கந்தவர்மன்
(ஹீரஹடகல்லி)

காஞ்சியரசன் விஜயஸ்கந்தவர்மன்
(குண்டூர்ஜில்லா)

ஸ்கந்தவர்மன்
|
குமாரவிஷ்ணு I
|
புத்தவர்மன்
|
காஞ்சியரசன் குமாரவிஷ்ணு II

(ஸ்கந்தவர்மன் முதல் குமாரவிஷ்ணு II வரை: செந்தலூர்)

விஷ்ணுகோபன் (சுமார் கி. பி. 338) (அல்லாஹாபாத்லிகிதத்தில் கூறப்படும் காஞ்சியரசன்)
|
குமாரவிஷ்ணு (கி. பி. 366 சுமார்)
|
ஸ்கந்தவர்மன் (சுமார் கி. பி. 394)
|
வீரவர்மன் (சுமார் கி. பி. 422)
|
ஸ்கந்தவர்மன் (சுமார் கி. பி. 450)
|

சிம்ஹவர்மன் (சுமார் கி. பி. 478)
ஸ்கந்தவர்மன் (சுமார் கி. பி. 506)
நந்திவர்மன் I (காஞ்சியரசன் சுமார் கி. பி. 534)

யுவமஹாராஜன் விஷ்ணுகோபன் (சுமார் கி. பி. 478)
சிம்ஹவர்மன் (சுமார் கி. பி. 506)
விஷ்ணுகோபவர்மன் (பலக்கட அரசன் சுமார் கி. பி. 534)
சிம்ஹவர்மன் (கி. பி. 562 சுமார்)

சிம்ஹவிஷ்ணு (சுமார் கி. பி. 590)
மஹேந்திரவர்மன் I (சுமார் கி. பி. 618)
நரசிம்ஹவர்மன் I (சுமார் கி. பி. 646)
மஹேந்திரவர்மன் II (சுமார் கி. பி. 660)
பரமேசுவரவர்மன் I (சுமார் கி. பி. 674)
நரசிம்ஹவர்மன் II (சுமார் கி. பி. 700)
பரமேசுவரவர்மன் II (சுமார் கி. பி. 715)

பீமவர்மன்
புத்தவர்மன்
ஆதித்யவர்மன்
கோவிந்தவர்மன்
ஹிரண்யவர்மன்
நந்திவர்மன் II (சுமார் கி. பி. 742)
தந்திவர்மன் (கி. பி. 800. சுமார்.)
நந்திவர்மன் III (சுமார் கி.பி. 840)
நிருபதுங்கன் (சுமார் கி. பி. 875.)
(பிறகு)
அபராஜிதன் (9-ஆம் நூற்றாண்டின் இறுதியில்)

நந்திவர்மன் பல்லவமல்லன் நெடுங்காலம் ஆண்டான் என்று ஐந்து பிரமாணங்களால் உறுதிப்படுகின்றது.

47-ஆவது வருஷம் விரிஞ்சிபுரம் லிகிதம் (No. 55, of 1881.)

50-ஆவது வருஷம் பஞ்சபாண்டவமலை (10 of 1895.)

52-ஆவது வருஷம் சதுப்பேரி. (27 of 1887.)

58-ஆவது வருஷம் தண்டன்தோட்டம் தாம்பிரசாஸனங்கள்.

62-ஆவது வருஷம் திருவல்லம் லிகிதம். (76 of 1889.)

இறுதி லிகிதத்தினால் மாவலிராயர் என்ற பாண அரசன் பல்லவர்களுக்குக்கீழ்ச் சிற்றரசனாயிருந்தானென்று தெரியவருகிறது.

(2) தந்திவர்மன். (சுமார் கி. பி. 779—830.)

நந்திவர்மன் பல்லவமல்லனுக்கு ரேவா என்னும் ஓர்மனைவியிருந்தாளென்றும், அவள் ரேவாநதியைப்போல் ஒரு பெரிய அரசனிடமிருந்து (அல்லது பெருமலையினிடமிருந்து) பிறந்தாளென்றும் அவளிடமிருந்து தந்திவர்மன் பிறந்தானென்றும் வேலூர்ப்பாளையம் சாஸனங்கள் கூறுகின்றன. (S. I. I. Vol. II. Part. V. P. 511.) தந்தி என்னும்பெயர் ராஷ்டிரகூடரிடமிருந்து உற்பத்தியானது. ரேவா என்பவள் தந்தியென்னும் பெயருடைய ராஷ்டிரகூட அரசனது மகளாக இருக்கலாம்.

இதனால் பல்லவர்களுக்கும் ராஷ்டிரகூடர்களுக்கும் இக்காலத்து ராஜாங்க ஸம்பந்தம் இருந்ததென்று ஒருவாறு விளங்கும்.

780-இல் ஒருக்கால் தந்திவர்மன் அரசாட்சி ஆரம்பத்தில் காஞ்சியரசன், துருவனோடுள்ள சண்டையில் இரண்டாவது கோவிந்தனுக்கு உதவிபுரிந்தான். ஆனால் பின்கூறப்பட்டவன் தன் சகோதரனை ஸிம்ஹாஸனத்திலிருந்து நீக்குவதற்குச்செய்த முயற்சி அனுகூலமாயிற்று. (Ep. Ind. Vol. IV. No. 17. P. 104.)

இந்தக்காலத்தில் பல்லவர்கள் காஞ்சியில்மட்டுமன்றி, தற்காலத்துப் புதுக்கோட்டைராஜ்யம் வரையிலுமுள்ள காவேரிக்கரையிலுள்ள நாடுகளையும் ஆண்டிருந்தார்கள் என்பதில் ஸந்தேகமில்லை. வாஸ்தவத்தில் அவனது அரசாட்சியின் ஐந்தாவது வருஷத்தில் (புதுக்கோட்டையிலுள்ள) குன்னாண்டார்கோவிலுக்கும் (No. 348 of 1914.) திருச்சிராப்பள்ளிக்கு ஸமீபமுள்ள திருவெள்ளரைக்கும் (No. 541. of 1905.) தானங்கள் செய்திருக்கின்றான். அவனது ஆறாவது வருஷத்தில் ஜெஞ்சியின்பக்கமுள்ள தொந்தூரிலும் (No. 283. of 1916) உத்தரமல்லூரில் (செங்கற்பட்டுஜில்லா) 7-ஆவது வருஷத்தில் 1898-இல் 80-ஆவது நம்பரிலும், 9-ஆவது வருஷத்தில் 1898-இல் 74-ஆவது நம்பரிலும், 10-ஆவது வருஷத்தில் 1898-இல் 51 - ஆவது நம்பரிலும் லிகிதங்கள் தோன்றியிருக்கின்றன.

திருவல்லிக்கேணி (சென்னை) லிகிதங்களும் (No. 234. of 1903 Ep. Ind. Vol. VIII. No. 29. P. 291.) காஞ்சிக்கருகே கூரம் லிகிதங்களும் (No. 35. of 1900.) அவனது அரசாட்சியின் 12-வது வருஷத்தில் தோன்றியவைகளாக இருக்கின்றன.

16-ஆவது வருஷத்திலும் தந்திவர்மன் முத்தரையர் ராஜ்யத்தில் ராஜ்யபாரம் நடத்தியிருந்தான். ஏனென்றால் விடேல விடுகுமுத்தரையன் என்பவன் மலையடிப்பட்டிலிகிதங்களிரண்டில் தான் தந்தியின்கீழ்ச் சிற்றரசனே என்று ஒப்புக்கொண்டிருக்கிறான். (Nos. III. & IV. P. 23. Some inscriptions of Muttarayars - Journal of S. I. association. July 1911.)

உத்தரமல்லூர் லிகிதம் (No. 61. of 1892.) அவனது அரசாட்சியின் 21-ஆவது வருஷத்தில் அதாவது நம்முடைய கணக்குப்படி 800-இல் உள்ளதாக இருக்கிறது.

இந்தக்காலத்துக்கு அணித்தாகத்தான் மூன்றாவதுகோவிந்தன் காஞ்சியில் ஆண்ட தந்திகனையென்று, தந்திவர்மனைத்தனக்கு இறை செலுத்தும்படி செய்தான். (Ind. Ant. Vol. IX. P. 127.)

இந்த ஸம்பவத்தினால் பல்லவர்களின் சக்தி அனேகமாய்க்குன்றியிருக்கலாம்.

உண்மையாக தந்தி அரசாட்சி 21-ஆவது வருஷத்துக்கும் 49-ஆவது வருஷத்துக்கும் இடையில் (800—828) ஒரு லிகிதமாவது இல்லாமலிருப்பதும் கவனிக்கத்தக்கது.

தந்தியின் அரசாட்சி முடிவிலுள்ள இரண்டு லிகிதங்கள் கிடைத்திருக்கின்றன. அவனது 49-ஆம் ஆண்டில் பாணவரசன் விஜயாதித்யன் குடிமல்லத்துக்கு ஒருதானமளித்தபொழுது (No. 226 of 1903) அப்பாணவரசன் பல்லவர்களுக்குக்கீழ்ப்பட்டே இருந்தான். திருச்சாணூர் லிகிதம் தந்தியின் 51-ஆவது வருஷத்தில் உண்டாயது. (No. 262 of 1904).

பல்லவராஜ்யத்தின் தென்பாகத்தில் விசேஷமாக தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் தந்தியின் அரசாட்சியின் இறுதிக்காலத்தில் லிகிதங்கள் ஒன்றுவது இல்லாமலிருப்பதும் கவனிக்கத்தக்கது.

காவேரிநதிக்கரையிலுள்ள ஞாபகச்சின்னங்கள் ஒன்றிலாவது 35 வருஷங்களுக்கு—அதாவது 16-ஆவது வருஷம்முதல் (மலையடிப்பட்டி) அவன் அரசாட்சி முடிவுவரையிலும் தந்தியின் பெயர் சொல்லப்படவே இல்லை.

795-முதல் 830-வரையுள்ள இந்த நீண்டகாலத்தில் ஒருதானமாவது செய்யப்படாமலிருந்தது மிக வியப்பானதே. இதிலிருந்து நாம் ஒன்று ஊகிக்கலாம்.

கீழே வரும் 11 லிகிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன.

| | |
|---|---|
| No. 17 of 1907 | No. 13 of 1908 |
| No. 51 of 1895 | No. 10 of 1899 |
| No. 414 of 1904 | No. 84 of 1910 |
| No. 413 of 1904 | No. 105 of 1905 |
| No. 364 of 1907 | No. 690 of 1905 |
| No. 358 of 1907 | |

இந்த லிகிதங்களினால் பல்லவராஜ்யத்தின் தென்பாகத்தில், மாறன் சடையன் என்ற ஒரு பாண்டியனது அரசாட்சியின் 4-ஆவது வருஷம் முதல் 16-ஆவது வருஷம்வரை பாண்டியர் வாசம் செய்தார்கள் என்று தெரியவருகிறது. இவ்வாறு வசித்தது படையெடுப்புக்காரணமாக வெனத்தோன்றுகிறது.



தந்திவர்மனுக்குப் பின்வந்த பல்லவ அரசர்காலத்தில் பாண்டியர்கள் இவ்வாறு வசித்தார்கள் என்று எண்ணமுடியாது. ஏனென்றால் தெள்ளாறு நந்தியின் அரசாட்சி ஆரம்பம்முதல் பராந்தகச் சோழன் வருகைவரையுள்ள பலலிகிதங்கள் கிடைத்திருக்கின்றன. இவைகளைப் பரிசோதனைசெய்தால் இந்தக்காலத்தில் பாண்டியர் படையெடுப்பு நிகழ்ந்ததாக எண்ண இடமில்லை- உண்மையாக தந்திமகன் நந்தி அரசாட்சியின் ஆறுவது வருஷத்திலும் (திருவெள்ளறை) 10-ஆவது வருஷத்திலும் (தில்லைஸ்தானம்) 12-ஆவது வருஷத்திலும் (செந்தலை) 18-ஆவது வருஷத்திலும் (கோவிலடி, திருச்சென்னம்பூண்டி) 22-ஆவது வருஷத்திலும் (திருப்பலாத்துறை) உள்ள லிகிதங்களும் நிருபதுங்கன் அரசாட்சியின் 7-ஆவது வருஷத்திலும் (நார்த்தாமலை) 18-ஆவது வருஷத்திலும் (கோவிலடி) 21-ஆவது வருஷத்திலும் (கண்டியூர்) 22-ஆவது வருஷத்திலும் (லால்குடி, கோவிலடி) உள்ள லிகிதங்களும், சோழராஜன் ஆதித்யனது 2-ஆவது, 5-ஆவது 6-ஆவது 7-ஆவது வருஷங்களிலுள்ள (திருவெறும்பூர்) சாஸனங்களும் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களிற் காணப்படுகின்றன.

ஆகையால் தந்திவர்மன் ஆளுகைக்கப்பால் பாண்டியர்கள் காவேரிநதிக்கரையை உடையராயிருந்தார்கள் என்று எண்ணமுடியாது.

ஆகையால் அவர்கள் படையெடுப்பு தந்தியின் அரசாட்சிமுடிவில் அதாவது 825-இல் என்று எண்ணுகிறேன். பாண்டியர் சரித்திரத்தைப்பற்றிப் பேசியபொழுது, இந்தத்தேதியைத்தான் நாம் வரகுணனுக்குக் குறிப்பிட்டிருக்கிறோம். ஆகையால் காவேரிநதிக்கரையிலுள்ள லிகிதகர்த்தாவாகிய மாறன்சடையனே 'சோழமண்டலத்தையும் தொண்டைமண்டலத்தையும் மதுரையோடுசேர்த்த' வரகுணன் என்று தோற்றுகிறது. Prinsep's lists made from Halasya mahatmyam and Tiruvilayadal puranam.)

ஒருகால் இந்த வரகுணனே முதலாவது சேனன்காலத்தில் அதாவது 821-முதல் 841-வரை (மஹாவம்சகாலத்தில் 25-வருஷம் குறைத்து) சிங்களத்தை வென்றிருக்கவேண்டும்.

அது எப்படியிருந்தாலும் மேலேசொன்ன லிகிதங்களின் உதவியால், பல்லவராஜ்யம் தாக்கப்பட்ட விஷயத்தை நாம் விளக்கக்கூடும்.

சோழதேசத்திலுள்ள இடவைக்கு ஒருசேனையை அனுப்பியதோடு படையெடுப்பு ஆரம்பமாயிற்று. (Insc. No. 690 of 1905) இவ்வூர் வரகுணமஹாராஜன் சாசனமொன்றையுடைய (No. 17 of 1907) திருவிசலூர் இருக்கும் மண்ணிநாட்டில் (S. I. I. Vol. II Part V. Introduction Page 23). அதே பெயருடைய ஊராக இருத்தல்கூடும்.

திருச்சிராப்பள்ளி, அம்பாசமுத்திரம் லிகிதங்களால் வரகுணன் வேம்பிலே அழித்தானென்று தெரியவருகிறது. இந்த வேம்பில் திருவிசலூராயிருக்கலாம். அதற்கு வேம்பற்றூர் என்று புராதனப்பெயருண்டு. சோழநாடெல்லாம் வெல்லப்பட்டது; ஏனெனில் மாறன் சடையன் காலத்தில் பொறிக்கப்பட்ட திருச்சிராப்பள்ளி (No. 414 of 1904), தில்லைஸ்தானம் (No. 51 of 1895) சாஸனங்கள் வரகுணனைப் பற்றிக்கூறுகின்றன.

இந்தச் சாஸனங்களெல்லாம் 4-ஆவது வருஷத்தியனவாயிருப்பதால் இந்தப்போர் அக்காலத்தில் நிகழ்ந்திருக்கலாம்.

கீழ்வரும் லிகிதங்கள் பல்லவராஜ்ய ஆக்ரமணம் நிலைபெற்றிருந்ததென்று தெரிவிக்கின்றன.

| | | |
|---|---|---|
| 4-ஆவது வருஷத்தில் | திருச்சியில் | (No. 413 of 1904) |
| 6-ஆவ்து ,, | ஆடுதுறையில் | (No. 364 of 1907) |
| 8-ஆவது ,, | ,, | (No. 358 of 1907) |
| 8-ஆவது ,, | கும்பகோணத்தில் | (No. 13 of 1908) |
| 10-ஆவது ,, | செந்தலையில் | (No. 10 of 1899) |
| 13-ஆவது ,, | திருவெள்ளறையில் | (No. 84 of 1910) |

வரகுணன் காலத்தை நிர்ணயம் செய்வதற்கு, செந்தலை லிகிதம் மிகவும் முக்கியமானதென்று நினைக்கிறேன். விடேலவிடுகுமுத்தரையன் தந்திவர்மன் அரசாட்சியின் 16-ஆவது வருஷத்தில் வாழ்ந்தான்



என்றும் (மலையடிப்பட்டி லிகிதங்கள்) அவன் மாறன்சடையன் அரசாட்சியின் 10-ஆவது வருஷத்தில் நியமத்தில் (செந்தலை) ஒருதானம் செய்தானென்றும் நாம் அறிகின்றோம்.

இதனால் வரகுணபாண்டியன் படையெடுப்பு, தந்திவர்மன் காலத்தில் நிகழ்ந்ததாகத்தெரிகிறது.

வரகுணமஹாராஜனது அரசாட்சியின் 16-ஆவது வருஷத்திலுள்ள அம்பாசமுத்திரம் லிகிதமே (No. 105 of 1905) பல்லவராஜ்ய பிரவேசத்தைப்பற்றிய கடைசிலிகிதம். இந்தக்காலத்தில் வரகுணன், பெண்ணார் நதிக்கரையில் தொண்டைநாட்டிலுள்ள அரைசூரில் பாளயம் அடித்திருந்ததாக அந்த லிகிதம் கூறுகின்றது.

இந்தக் காலத்தில் பாண்டியர்கள் பல்லவராஜ்யத்தின் பாதியைப் பிடித்துக் காஞ்சீபுரத்தையும் தாக்க முயன்றார்கள்போலும்.

படையெடுத்து வந்தவனைத்தோற்கடித்த பல்லவ அரசன் யார்? அதைக்கண்டுபிடிக்க முயல்வோம்.

### (3) தெள்ளாறு நந்தி (சுமார் 830—854).

தந்தியின் மகனான நந்தியின்தாய் அக்களனிம்மதியென்ற ஒரு கடம்பராஜகுமாரி. இந்த விஷயம் அடங்கியுள்ள வேலூர்ப்பாளயம் சாஸனங்கள், தந்தையின் ஸிம்ஹாஸனத்தைப்பெறுவதற்கு அவன் போர்செய்யவேண்டிவந்ததாகக் கூறுகின்றது. (V. 20) "இந்த நந்திவர்மன் தன் புஜபலத்தினால் இறுமாப்படைந்து, பிறருக்கு அடையமுடியாத பல்லவராஜ்யத்தை, போர்க்களத்தில் எதிரிகளையெல்லாம் கொன்று தொலைத்தபிறகு, பெற்றான்" பத்தாவது வருஷத்தில் உள்ள தில்லைஸ்தான லிகிதம் (No. 52 of 1895) நந்திக்குத் தெள்ளாறெறிந்த என்னும் அடைமொழி கொடுப்பதால், அவனது முதற்பத்தாவது வருஷத்திற்குள் உண்டான தெள்ளாற்றுச் சண்டையை இது சூசிப்பிக்கலாம்.

இந்தப்போரில் அவனுக்கு எதிரியாக நின்றவன் யார்? அநேகமாய் எதிரியாக நின்றவன் பாண்டியனாகவே இருந்திருக்கவேண்டும். தெள்ளாறெறிந்தவனைத் தலைவனாகவுடைய நந்திக்கலம்பகம் 64-ஆவது

பாட்டில் அவன் வைகை (மதுரைக்கருகில் உள்ள நதி)க் கரையில் வெற்றிபெற்றனென்று கூறுகின்றது. (Ind. Ant. Vol. XXXVII Page 172).

தெள்ளாறு என்னும் பட்டணம் தெள்ளாறுக்கிராமமேயன்றி வேறன்று; அது ஒருகாலத்தில் தெள்ளாற்றுப்பற்றின் தலைநகராயிருந்தது. (Ins. No. 73 of 1908); இப்பொழுது அது வடஆற்காடு ஜில்லா வண்டிவாஷ் தாலுகாவின் பகுதியாயிருக்கின்றது; பல்லவர் காலத்தில் இந்தப்பட்டணம் இருந்ததென்று 'பல்லவர்பழமை' முதற் புத்தகம் 69-ஆவது பக்கத்தில் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. உண்மையாக இந்த இடத்தில் பல்லவர் மாதிரியில்கட்டிய அநேக ஆலயங்களின் மீதங்களை நான் அங்கே கண்டேன்.

காஞ்சியிலிருந்து 30-மைலுக்குத் தெற்கேயுள்ள தெள்ளாறுவரைப் பாண்டியர்கள் சென்றார்கள் என்று சொல்லுவது யுக்திக்குப் பொருந்துமா?

தந்தியின் அரசாட்சிமுடிவில் பல்லவராஜ்யத்தின் தென்பகுதி பாண்டியர்களால் தாக்கப்பட்டதை நாம் ஒப்புக்கொண்டால் மேலே கூறியதும் பொருத்தமானதே. இந்தப்பிரவேசத்தின் முடிவில் வரகுணன் தொண்டைமண்டலத்தில் பெண்ணாற்றங்கரையிலுள்ள அரைசூரில்பாளயம் அடித்திருந்ததாக நமக்குத்தெரியும். (Ambasamudram Insc. No 105 of 1905)

நந்திஸிம்ஹாஸனம் ஏறியபிறகு, வரகுணன் பல்லவராஜ்யத்தின் மீதப்பாகத்தைப் பிடிக்க எண்ணி காஞ்சியைத்தாக்கினன் என்று நாம் எண்ணலாம். அங்ஙனம் தாக்கவந்தவனைத் தெள்ளாற்றில் நந்திதடுத்து, பலமுறை தோற்கடித்திருக்கலாம். அந்தத்தோல்வியில் முக்கியமானது, கும்பகோணத்தின் பக்கமுள்ள பழையாறை என்னும் பெயருடைய பழையாற்றில் உண்டானதாயிருக்கலாம். பிறகு வைகைக்கரைவரை நந்தி அவனைத்துரத்திச்சென்றிருக்கலாம்.

தெள்ளாறெறிந்த என்னும் அடைமொழியளித்த இந்தப்புகழ்பெற்ற போரினால், அவன் காஞ்சியில்மட்டுமன்றி (Insc. No. 12 of 1895) காவேரியின் கரைகளிலும் சமாதானமாக அரசாண்டிருந்தான்.



தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி இவைகளைச்சுற்றியுள்ள நாடுகளில் தெள்ளாறு வென்றவனது பலலிகிதங்கள் காணப்படுகின்றன. அவனது 10-ஆவது வருஷத்தில் தில்லைஸ்தானத்திலும் (No. 52 of 1895) 12-ஆவது வருஷத்தில் சேந்தலையிலும் (No. 11 of 1899) 18-ஆவது வருஷத்தில் கோவலடியிலும் (No. 283 of 1901) 22-ஆவது வருஷத்தில் திருப்பலாத்துறையிலும் (No. 180 of 1907) அந்த லிகிதங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

அவன் நாயர் பிரதேசத்தை ஆண்டானென்று வேளூர்ப்பாளயம் சாஸனங்கள் கூறுகின்றன. (நாயர்பிரதேசம் செங்கற்பட்டுஜில்லா சைதாப்பேட்டைத் தாலுகாவிலுள்ளது) வடக்கே குடிமல்லத்தையும் அவன் ஆண்டான். அவ்விடத்தில் பாணஅரசன் விக்ரமாதித்தன் அவனுக்குக்கீழ்ச் சிற்றரசனாயிருந்தான். (Insc. No. 229 of 1903, and No. 1a of 1880. S. I. I. Vol. III, No. 42. P. 93).

அவனது ஆளுகையில் புலவர்களும் ஏராளமாயிருந்தார்கள். நாம் முன்னே சொன்ன நந்திக்கலம்பகம் தவிர வேறு அனேக நூல்களும் உண்டாயின.

“இந்தப்பல்லவ அரசன் ஆளுகையிற்றான் பாரதவெண்பாப் பாடிய பெருந்தேவனார் வாழ்ந்திருக்கவேண்டும்; ஏனென்றால் உத்தியோகபர்வம் கடவுள்வாழ்த்தில் தன் காலத்தவனை தெள்ளாற்றில் பகைவரைவென்ற பல்லவனைப்பற்றிக்கூறுகின்றார்.

புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு முதலிய நூல்களின் கடவுள்வாழ்த்து மேலேகூறிய பெருந்தேவனாராலேயே பாடப்பெற்றதென நம்பப்படுகிறது.” (G. O. No. 922, 923. August 1899. P. 6.)

(4) நிருபதுங்கன். (சுமார் 854—880.)

பாகனூர்ச்சாஸனங்கள் இந்த அரசனுடைய பிறப்பை மிக நுட்பமாகக்கூறுகின்றன. மூன்றாவது நந்திவர்மன் ராஷ்டிரகூடவமிசத்தைச் சேர்ந்த சங்கா என்னுமொரு ராஜகுமாரியை மணஞ்செய்தான். அவள் மகன் நிருபதுங்கன். இந்தப்பெயர் 815-முதல் 879 - வரை அரசு

செய்த முதல் அமோகவர்ஷன் என்னும் ராஷ்டிரகூட அரசனும் வசித்துள்ளானுகையால், சங்கராஜகுமாரி முதலாவது அமோகவர்ஷன் மகள் என்பதற்கு ஸந்தேகமில்லை. (E. p. Ind. Vol. IV. P. 181.)

நிருபதுங்கன் முடிசூட்டப்பெற்றபொழுது இளைஞனுக இருந்தானென்றும், அரிசித் நதிக்கரையில் பாண்டியர்களை அவன் வென்றதனுல் அவனது அரசாட்சியின் ஆரம்பகாலம் புகழ்பெற்றதாயிருந்ததென்றும் பாஹூர்ச்சாஸனங்கள் கூறுகின்றன.

இந்தவிஷயத்தைப்பற்றி நாம் முன்னமேயே கூறியுள்ளோம். இந்த ஆறு, அரிசில் அரசிலாறே என்று மகா-ா-ா-ஸ்ரீ கோபிநாதராயரவர்கள் கூறுகின்றார்கள். (Vide. S. I. I. Vol. II. P. 52.) இந்த அரசிலாறு கும்பகோணம் வழியோடி காரைக்காற் பக்கத்தில் கடலோடுகலக்கும் அரசலாறேயாம்.

நிருபதுங்கன் சத்துரு, அரிசித் நதிக்கரையிலுள்ள குடமூக்கில் (கும்பகோணம்) பல்லவர்களைத்தாக்கிய மாறவர்மன் பரசக்ரகோலாஹலனே என்று நாம் கூறியுள்ளோம்.

நிருபதுங்கன் ஸ்ரீராமனைப்போல் புகழ்படைத்தான் என்று பாஹூர்ச்சாஸனங்கள் கூறுகின்றன. அதை நினைக்கும்போது நமக்கு இலங்கையின் ஞாபகம் வருகின்றது. இரண்டாவதுசேனனும் மாயாபாண்டியனும் நிருபதுங்கனோடு சேர்ந்திருந்தார்கள் என்றும் இந்தச் சண்டையின்முடிவில் அதாவது சுமார் 861-இல் மதுரை பிடிபட்டதென்று நாம் முன்னரே கூறியுள்ளோம்.

பாஹூர்ச்சாஸனங்கள் அவனது அரசாட்சியின் 8-ஆவதுவருஷத்தில் உள்ளவை. ஆகையால் நமது காலநிர்ணயம் சரியாயிருந்தால் அந்தக்காலம் மதுரை பிடிபட்டதற்குச் சற்றுப்பிறகு 862-ஆக இருக்கலாம்.

நிருபதுங்கன், ஸமாதானத்தோடு அரசாண்ட ஒரு புகழ்பெற்ற அரசன். ஏனென்றல், அவன் காலத்தனவாக பல்லவராஜ்யம் முழுவதும் விரவிக்கிடக்கும் அனேக சாஸனங்கள் அகப்பட்டிருக்கின்றன.



அவையாவன: வடக்கே திருவாலங்காடு (Nos. 460 & 461 of 1905) திருவொற்றியூர்களிலிருந்து (No. 162 of 1912) தெற்கே கண்டியூர் (No. 17 of 1895) கோவிலடி (Nos. 303, 301, & 300 of 1901) லால்குடி (No. 84 of 1892) வரையிலும். அன்றியும் குடிமல்லம் சாஸனங்களும் (No. 228 of 1903) நார்த்தாமலைச்சாஸனங்களும் (No. 365 of 1904), வடக்கே பாண அரசன் வித்யாதரனும், தெற்கே முத்தரையனும் (சாத்தம்—பளியில்) அவனுக்குக்கீழ், சிற்றரசர்களாயிருந்தார்கள் என்று கூறுகின்றன. ஆகையால் நிருபதுங்கனது ராஜ்யம் வடக்கே சுவர்ணமுகியாறுமுதல் தெற்கே தென்வெள்ளாறுவரை அதாவது காளஹஸ்திமுதல் புதுக்கோட்டைவரை பரவியிருந்தது.

அன்றியும் இந்தச்சாஸனங்கள் எல்லாம் அவனது அரசாட்சியின் ஆரம்பத்திலும் முடிவிலும் தோன்றியனவாகக் காணப்படுவதனுல் அவனது அரசாட்சி 26-வருஷமும் அவன் புகழ் குன்றவேயில்லையென்று முடிபு கூறலாம்.

(5) அபராஜிதன். அபராஜிதனைப்பற்றிக்கூறும் 12-சாஸனங்கள் கிடைத்திருக்கின்றன. 1912-இல் 159, 190-நம்பர் லிகிதங்களில் அவனுக்குப் போத்தரையர் என்னும் பட்டம் இருப்பதனுல் அவன் ஒரு பல்லவ அரசன். இந்த லிகிதங்கள் எல்லாம் அவனது அரசாட்சியின் மூன்றுவது வருஷத்துக்கும் 19-ஆவது வருஷத்துக்கும் இடையில் தோன்றியவை.

அவையாவன:—

| | | | | |
|---|---|---|---|---|
| 3-ஆவது | வருஷம் | No 351 of 1908. | மாங்காடு |
| 4 | ,, | ,, | No 158 of 1912. | திருவொற்றியூர் |
| 4 | ,, | ,, | No 161 of 1912. | ஷை |
| 4 | ,, | ,, | No 31 of 1912. | சத்யவேடு |
| 5 | ,, | ,, | No 32 of 1912. | ஷை |
| 6 | ,, | ,, | No 190 of 1912. | திருவொற்றியூர் |
| 7 | ,, | ,, | No 163 of 1912. | ஷை |
| 8 | ,, | ,, | No 159 of 1912. | ஷை |
| 12 | ,, | ,, | No 180 of 1912. | ஷை |

18 ,, ,, No 435 of 1905. திருத்தணி
18 ,, ,, No 433 of 1905. ஷை

திரிபுவனவீரதேவன்காலத்ததாய ஒருலிகிதமும் உத்தரமல்லூரிற் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது அது அபராஜிதனுடைய அரசாட்சியின் 19-ஆவது வருஷத்தைப்பற்றிக் கூறுகின்றது.

மாமண்டூர்ப்பக்கத்திலுள்ள உக்கல்கிராமமும் அபராஜித சதுர்வேதிமங்கலம் என்னும் பெயருடைத்தாயிருந்தது. (S. I. I. Vol. III P. 2).

அபராஜிதன் ஆளுகையில் நிகழ்ந்த இரண்டு ஸம்பவங்களைப் பற்றி நமக்குத்திட்டமாய்த்தெரியும்.

### (1) ஸ்ரீபுறம்பிய (திருப்புறம்பியம்) யுத்தம்.

வரகுணபாண்டியன் ஸ்ரீபுறம்பியத்தில் அபராஜிதனோடும்அவன் நண்பனான மேலைக்கங்க முதலாவதுபிரிதிவிபதியோடும் போர்புரிந்தானென்று உதயேந்திரம் சாஸனங்கள் கூறுகின்றன. (G. O. No 492, 2nd July 1906—Part II No 9. P. 64).

இறுதிப்பெயர்க்காரன்யுத்தத்தில் கொல்லப்பட்டான். முதலாவது பிரிதிவிபதியின் கடைசிலிகிதம் 879-இல் உள்ளதாகையால் ஸ்ரீபுறம்பியயுத்தம் 879-க்குப்பின் உண்டானதாகவே ஒப்புக்கொள்ள வேண்டும்.

862—863-இல் ஸிம்ஹாசனமேறின பாண்டியனே வரகுணன் என்று சொல்லப்படுகிறது. (Insc. No 705 of 1905).

சோழர்கள் வரகுணனுக்கு நண்பர்களாக இருந்திருக்கலாம்; ஏனென்றால் 1912-இல் 337-ஆவது நம்பர் லிகிதம், பாண்டியரும் சோழரும் மேலைக்கங்க பிருதிவய்யனுக்குச் சத்துருக்களாயிருந்தனரென்று கூறுகின்றது.

### (2) பல்லவர்நிலை குலைந்ததும் ஆதித்யன்வென்றதும்.

முதல் ஆதித்யன் என்ற சோழவரசன் பல்லவஅரசன் அபராஜிதனைப்போரிற்புறங்கண்டு அவன் ராஜ்யத்தையும் பிடித்தானென்று



திருவாலங்காட்டுச்சாஸனங்கள் கூறுகின்றன. பாட்டு 49. (G. O. No 492 2nd July 1906 P. 65). 1911-இல் 286—287-ஆவது நம்பர் லிகிதங்களால் இந்தச்சண்டையில் ஆதித்தனுக்கு ஸ்தாணுரவி என்ற ஒருசேரஅரசன் துணைவனாயிருந்தானென்று தெரிகிறது. (G. O. 919 29th July 1912. Part II No 11 P. 61).

தொண்டைமண்டலம் ஆதித்யன் அரசாட்சியின் 21-ஆவது வருஷத்துக்குமுன் அதாவது 900-க்குமுன் வெல்லப்பட்டதென்று மேலே கூறியுள்ளோம். (G. O. No 503 27th July 1907. Part II No 29. P. 71).

ஆகையால் அபராஜிதன் 9-ஆவது நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவன் என்பதும் பல்லவவமிசத்தில் அவனே கடைசிஅரசன் என்பதும் நிச்சயம்.

ஆனால் பல்லவவமிசாவளியில் அபராஜிதன் எந்தஸ்தானத்தை வகிக்கிறான்என்பதை முக்கியமாய்க் கவனிக்கவேண்டும்.

இந்த விஷயத்தைப்பற்றி இரண்டு அபிப்பிராயங்கள் உள்ளன. (1) அபராஜிதன் நிருபதுங்கன்மகன் என்று வெங்கய்யா அவர்கள் சொல்லுகிறார்கள். (G. O. No 492, 2nd July 1906. Part II No 9. Page 64).

அப்படியானால் நிருபதுங்கன் ஸ்ரீபுறம்பியத்தில் கொல்லப்பட்டான் என்றும், யுத்தத்தில் கைகலந்திருந்த அவன்மகன் ஸிம்ஹாஸனமேறி அபராஜிதன் (ஜெயிக்கப்படாதவன்) என்ற பட்டமும் பெற்றான் என்றும் நாம் கொள்ளவேண்டும்.

ஸ்ரீ புறம்பியயுத்தத்தில் சோழராஜகுமாரன் சோழராஜனாக முடிசூட்டப்பெற்று முதல்ஆதித்யன் எனப்பெயரும் பெற்றான். ஆகையால் தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்கள் அவன்வசமே இருந்திருக்கவேண்டும்.

ஆனால் தொண்டைமண்டலமோ கி. பி. 880-முதல் 900-வரை 20-வருஷம் அங்கேயே அரசாண்ட அபராஜிதன்வசம் இருந்துவக்

து. அவனுடையவும் ஆதித்யனுடையவும் அரசாட்சியின் இருபதாவது வருஷத்திலே ஆதித்யன் சோழர்களின் உதவியோடு அதைக் கைப்பற்றினன்.

இதற்கு அநுகூலமாக அபராஜிதனுடையலிகிதங்கள் மாங்காடு, திருவொற்றியூர், சத்யவேடு, திருத்தணி, உத்தரமல்லூர் முதலிய தமிழ்நாட்டின் வடபாகத்திலுள்ள பட்டணங்களிலேயே காணப்படுகின்றன. தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி ஜில்லாக்களில் ஒன்றுமே காணப்படவில்லை.

மேலும் முதல்ஆதித்யன் காவேரிநதிக்கரைகளை கி. பி. 882—885, 886, 887-முதலிய வருஷங்களில் கைக்கொண்டிருந்தானென்று 1911-இல் 222-ஆவது நம்பர் லிகிதத்தாலும் (இரண்டாவது வருஷத்தில் திருநாகேசுவரம்) 1914-இல் 101, 104, 105, 127, 130, 133-ஆவது நம்பர் லிகிதங்களாலும் (5-ஆவது, 6-ஆவது, 7-ஆவது வருஷங்களில் திருவெறும்பூர்) நாம் அறிகின்றோம். அன்றியும் "அநேக கங்க—பல்லவ சிலாலிகிதங்கள்உள்ள திருவொற்றியூரில் ராஜகேசரிவர்மன் (ஆதித்யன் I) ஆளுகையில் உள்ள ஒரு பிரமாணமாவது காணப்படாமலிருப்பதற்குக் காரணம் விளங்கவில்லை. ஒருக்கால் திருவொற்றியூர் இடம் பெற்றிருக்கும் தொண்டைமண்டலத்தின் வடபாகம் அவன் ஆளுகையில் முழுதும்வராமல் இருந்திருக்கலாம்." (G. O. No 961. 2nd August 1913. Part II No 18. P. 94).

திருவொற்றியூர் ஆலயத்தில் அபராஜிதன் அரசாட்சியின் 4-ஆவது, 6-ஆவது, 7-ஆவது, 8-ஆவது, 12-ஆவது வருஷங்களில் உள்ள 6-லிகிதங்கள் இருக்கின்றன; ஆனால் ஆதித்யனுடையதாக ஒன்றேனும் இல்லை.

(2) அபராஜிதன் என்னும் பெயர் நிருபதுங்கனது மறைபெயரே என்று கோபிநாதராயரவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். (The Pallavas and Ganga Pallavas—Madras Christian College Magazine-April 1907).



அபராஜிதன் நிருபதுங்கனாகவே இருந்தால் ஸ்ரீ புறம்பியத்தில் ஒரேஒரு யுத்தமே உண்டாயிருக்கவேண்டுமென்று இதற்கனுகூலமாகக்கூறலாம்.

இதற்குமாறாக அபராஜிதன் நிருபதுங்கன்மகனென்று கொள்ளப்பட்டால் இரண்டு சண்டைகள் உண்டாயிருக்கவேண்டும்.

(1) 880-க்கு அணித்தாக அபராஜிதன் வரகுணபாண்டியனை வென்ற ஸ்ரீ புறம்பிய யுத்தம்.

(2) 899-க்கு அணித்தாக ஆதித்யன் தொண்டைமண்டலத்தை வென்றயுத்தம்.

இதில் அபராஜிதனே தோல்வியடைந்திருக்கவேண்டும்.

இதில் எது சரியானதென்று இனிமேல் அறியப்படும் புதுவிஷயங்களால் உறுதிப்படவேண்டியதாயிருக்கிறது.

---

## முடிவுரை.

---

முன்பக்கங்களில் பல்லவசரித்திரத்தைப்பற்றியுள்ள நமது அறிவைவிசாலப்படுத்த முயன்றோம்.

அறியப்படாத விஷயங்கள் இன்னும் பலவுள; உறுதியடையவேண்டிய பாகங்களும் சிலவுள; ஆனாலும் முக்கியமான விஷயங்களையெல்லாம் அறிந்துகொண்டோமென்பது எனது நம்பிக்கை.

### (1) ஸிம்ஹவிஷ்ணுவுக்கு முன் பல்லவர்கள்.

அநேக தாம்பிரசாஸனங்களால் (மயிதவோலு, செந்தலூர், ஓம்கோடு, உதயேந்திரம், கூரம் முதலியன) பல்லவவமிசம் மிகப்பழமையானதென்று விளக்கப்பட்டிருக்கிறது.

ஆனால் பரஸ்பரம் இணைக்கமுடியாத அநேகவமிசங்களைப்பற்றியும் இவை கூறுகின்றன. இந்த அரசர்களுக்கும் ஸிம்ஹவிஷ்ணு

வமிசத்துக்குமுள்ள சம்பந்தம்முற்றும் கவனிக்காமலே விடப்பட்டிருக்கிறது. இந்த இரகசியங்களிற் பல வாயலூர்லிகிதங்களால் விளக்கமுற்றிருக்கின்றன.

ராஜாவானமுதற்பல்லவன் கி. பி. இரண்டாவது நூற்றாண்டின் முடிவில் ஒரு ஆந்திரஅரசன்மகளை மணந்து அந்த உயர்பதவியைப் பெற்றான் என்று நாம் நினைத்துள்ளோம்.

ஸ்கந்தவர்மன், குமாரவிஷ்ணு, புத்தவர்மன், (செந்தலூர்ச்சாஸனங்களில் இந்தப்பெயர்கள் உள்ளன) முதலிய அரசர்கள் சமுத்ரகுப்தனுக்கு எதிரியான விஷ்ணுகோபனுக்குமுன், கி. பி. 339-க்கு அணித்தாக ஆண்டிருக்கவேண்டுமென்று வாயலூர் லிகிதத்தினால் விளக்கப்படுவதாகத்தோன்றுகிறது.

உதயேந்திரம் சாஸனங்களிலிருந்து, ஸ்கந்தன்—ஸிம்ஹன்—ஸ்கந்தன்—நந்தி என்ற வமிசாவளியைப் பெறுகின்றோம்; ஆனால் இந்தச்சாஸனங்கள் ஸந்தேகமுடையனவாகத் தோன்றின. அது ஒரு உண்மையான பிரமாணத்தின் பகர்ப்போ அல்லது பொய்ப்பிரமாணமோ என்று நமக்கு விளங்காதிருந்தது.

முற்றிலும் சமானமான வமிசாவளியைத்தந்திருக்கிற வாயலூர் லிகிதத்தினால் உதயேந்திரம் வமிசாவளி மெய்யானதென்று விளக்கப்பட்டிருக்கிறது. மேலும் உருவுபள்ளி வமிசாவளியோடொத்திருக்கும் வீர—ஸ்கந்த—ஸிம்ஹ என்ற வரிசை வாயலூர்ச்சாஸனத்தில் கண்டுபிடிக்கப்பட்டதால், உருவுபள்ளிச்சாஸனகாலத்தில் அரசாண்ட ஸிம்ஹவர்மன் உதயேந்திரம் சாஸனங்களில் கூறப்படும் நந்தியின் பாட்டனேயென்று நிரூபிக்கப்பட்டது.

கடைசியாக, ஸிம்ஹவிஷ்ணு—விஷ்ணுகோபன்-ஸிம்ஹவர்மன் ஸிம்ஹவிஷ்ணு என்னும் பெயர்த்தொகுதிகளையுடைய வாயலூர்லிகிதமே ஸிம்ஹவிஷ்ணுவின் அடுத்த முன்னோர்களைப்பற்றிச் சரியாகக் கூறும் பிரமாணம்.

வாயலூர்லிகிதம் விளக்கப்பட்டது ஸிம்ஹவிஷ்ணுவின் முன்னோர் சரித்திரத்தை அறிவதற்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது.



## (2) ஸிம்ஹவிஷ்ணுவின் வமிசம்.

திருவிதாங்கூர் ஸமஸ்தானத்தில் மத்தவிலாஸப்ரஹஸனம் கண்டெடுக்கப்பட்டதும் இந்நூலைப்பற்றி மாமண்டூர்லிகிதத்தில் குறிக்கப்பட்டிருப்பதும் அதைச்சார்ந்த சரித்திரத்தை விளக்குவதற்கு மிக உதவியாக இருக்கிறது.

ஸிம்ஹவிஷ்ணுவின் மகனான முதல் மஹேந்திரவர்மனே மாமண்டூர், வல்லம், தலைவனூர், சீயமங்கலம், மஹேந்திரவாதி, பல்லாவரம், திருச்சிராப்பள்ளி முதலிய இடங்களிலுள்ள குகைகளை வெட்டினான் என்பதற்கு இப்பொழுது ஸந்தேகமில்லை.

ஞானியான முதல்மஹேந்திரவர்மனைப்பற்றித் திட்டமான சில விஷயங்கள் நமக்குத்தெரியும். அவன் ஒருகவியாகவும், ஸங்கீத வித்வானாகவும், சிற்பசாஸ்திரியாகவும், ராஜ்யாதிகாரியாகவும் இருந்தான். கிருஷ்ணாநதிக்கரையில் வழங்கியிருந்த கலாசாஸ்திரங்களைத் தென்னாட்டில் நடப்பாக்கி, தமிழ்நாட்டில் சமயமும், இலக்கியமும் விளக்கமுறும்படி செய்தான்.

## (3) நந்திவர்மன் வமிசம்.

8-ம் 9-ம் நூற்றாண்டுகளுக்குப் பல்லவர்சரித்திரமே இருக்கவில்லை. பாஹூர்ச்சாஸனங்களில் காணப்பட்ட கொங்கணிகன் என்ற ஒரு பெயரே சரித்திரகாரர்களைக் குழப்பத்துக்குள்ளாக்கிவிட்டது. அந்த விஷயத்தைத்தெளிவாயுணர்ந்தவர் கோபிநாதராயர் ஒருவரே. கங்க—பல்லவவாதம் தப்பானதென்று அவர் உறுதியாகக் கூறிவிட்டார்.

நிருபதுங்கனது முன்னோர்கள் பெயருடன்காணப்பட்ட கொங்கணிகன் என்னும் பெயரினால், அவன் நந்திவர்மன் பல்லவமல்லனது வமிசத்தான் அல்லனென்றும், கங்கஅரச வமிசத்தைச்சேர்ந்தவனென்றும் ருசுவாகிவிட்டதாக, அவ்வாதத்தை ஸ்தாபித்தோர் பின்னும் வாதிக்க இடமிருந்தது.

வாயலூர்லிகிதத்தினால் இந்தவிஷயம் பூரணமாக விளக்கமடைந்துவிட்டது.

ஸிம்ஹவிஷ்ணுவமிசத்து ஒரு அரசன் ஆளுகையில் உள்ளதும் ஏழாம்நூற்றாண்டினதுமான இந்தலிகிதம், பல்லவர்களின் முன்னோர் கூட்டத்தில் விமலனையும் கொங்கணிகனையும்பற்றிக் கூறுகின்றது.

ஆகவே, வாயலூர்லிகிதத்தால் எல்லாஸந்தேகங்களும் நீங்கிவிட்டன; கடைசியான பல்லவர்களின் வமிசாவளிப்பட்டிகையும் ஸந்தேகமற உறுதிபெற்றுவிட்டது.

முற்றும்.

பண்டிதர். S. முத்துசுவாமிப்பிள்ளை
ஸென்று ஜோஸப் ஹைஸ்கூல்,
திருவனந்தபுரம்.

---

உ

கடவுள் துணை.

# துவண விஞ்ஞாபனம்.

செந்தமிழ்ச் சீரியர்களுடைய திப்பிய சமுகங்களுக்கு:—

செந்தமிழ்ப் பதினாறாந்தொகுதியின் பத்தாவது பகுதியிலே (௫௦௭, ௫௦௮) திருவனந்தபுரம் ஹைக்கோர்ட்டு வக்கீல் ஸ்ரீமான் K. G. சங்கரையர் (B.A., B.L.) அவர்கள் எழுதியிருந்த செந்தமிழபிமானிகளுக்கு ஒரு விஞ்ஞாபனம் என்ற தலைப்பின்கீழ்க் கண்டவிஷயம் நம்மனோரனைவர்க்கும் மிக்க மகிழ்ச்சியைத் தந்திருக்குமென்பதொருதலை.

அதே விஷயமாக நமது தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகக்கூட்டத்திலே தீர்மானஞ்செய்யப்பெறுதல் நல்லதாமென்பதைக் கருதி நான்கு மாதங்களுக்குமுன் மூன்று தீர்மானங்களைச் 'செந்தமிழ்ப்' பத்திரிகையிலே வெளிவருமாறு அனுப்பிவைத்தேன். அவை, 'அடியேன் தமிழ்ச்சங்கத்தின் அங்கத்தினன் அல்லன்' என்ற காரணத்தாலோ (அங்கத்தினனல்லாததற்கும் இதற்குந்தொடர்பின்று.) அன்றி வேறு எக்காரணத்தாலோ பிரசுரிக்கப்பெறவில்லை. எனினும், ஸ்ரீமாந்-ஸியாவாதி ஐயரவர்களது விஞ்ஞாபனத்தால் அடியேனது விருப்பம் ஒருவகையிற் பூர்த்தியாயது.



ஆதலின், அடியேன் ஸ்ரீமான் ஐயரவர்களது விஞ்ஞாபனத்தை முழுமனத்துடன் ஆதரிப்பதோடு வஞ்சிமாநகராராய்ச்சி என்ற தலைப்பெயருடன் கூடிய பத்திராதிபரவர்களது அரியபெரிய ஆராய்ச்சியுரையைப் பூர்த்திசெய்தருளுமாறு வேண்டுகிறேன். காலங்கடந்தமையின் அத்தீர்மானங்களை ஈண்டு யான் காட்டவில்லை.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்.

---

## அரசவாழ்த்து.

தாரணிக்குத் தன்னரசோ டாட்சிசமா தானமிவை
சாரமென்றோர்க் தானவற்றைத் தானாட்டத்—தீரமுடன்
சண்டையிற்சேர்ந் தான்வென்றான் ஜார்ஜரசன் நீடூழி
மண்டலத்தே வாழ்க மகிழ்ந்து.

ஊ. சா. வேங்கடராமன்,
தண்டமிழ்த்தொண்டன்.

---

## 1918-ஞு டிசம்பர்மீ 15உ காலை 9-மணிக்குக்கூடிய மதுரைத் தமிழ்ச்சங்கத்தின் காரியநிர்வாக சபையில் முடிவுசெய்யப்பட்ட தீர்மானங்களின் விவரம்.

—:0:—

1. மகா-ள-ள-ஸ்ரீ. Hon'ble K. இராமையங்காரவர்கள், B.A. B.L.,
—அக்கிராசனம் வகித்தவர்,
2. ,, V. S. இராமசாமிசாஸ்திரியவர்கள் B.A. B.L.,
3. ,, M. கோபாலகிருஷ்ணையரவர்கள்.
4. ,, T. C. ஸ்ரீநிவாஸையங்காரவர்கள் B.A. B.L.,
5. ,, T. சுதர்சனாச்சாரியர் அவர்கள்.

இவர்கள் வந்திருந்தார்கள்.

### தீர்மானங்கள்:—

I. 1918-ம்௵ செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களின் வரவு செலவு கணக்குகளை அங்கீகரிக்கலாயிற்று.

II. சங்கம்வைத்துள்ள பாலவனத்தம் எஸ்டேட் கட்டிடத்திற்கு ௴ 1-க்கு ரூ. 100-வாடகை அளித்துவர வேண்டுமென்று கொடுத்துள்ள பாலையம்பட்டி ஜெமீந்தாரவர்களின் நோட்டீஸைக் கவனித்து வேண்டுவன வற்றைச் செய்வதற்கு, கனம் அக்கிராசனாதிபதி யவர்களும் இல்லாததால் தள்ளிவைக்கலாயிற்று.

III. 1918–19-ம் வருஷத்திற்குத் தயாரித்த பட்ஜெட், கனம் அக்கிராசனாதிபதியவர்களும் இருந்து கவனிப்பதற்காகத் தள்ளிவைக்கலாயிற்று.

IV. சங்கத்தின் அங்கத்தினராகிய மகா-௱-௱-ஸ்ரீ ராவ்பகதூர் S. Rm. M. ராமசாமி செட்டியாரவர்கள், மகா-௱-௱-ஸ்ரீ V. J. தம்பிப்பிள்ளையவர்கள் காலஞ்சென்றமைக்கு, சங்கத்தார்க்குண்டாகிய அநுதாபத்தை மகா-௱-ஸ்ரீ Hon'ble அண்ணாமலை செட்டியாரவர்களுக்கும், Mr. V. J. தம்பிப்பிள்ளையவர்கள்மனைவியார்க்கும் முறையே தெரிவிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

V. 1919-ம்வருஷத்தில் சங்கத்தாரால் நடத்தப்பெறும் மெற்றிக்குலேஷன் தமிழ்ப்பரீக்ஷைக்கு, சென்னை S. S. L. C. பரீக்ஷைக்கு வைக்கப்பட்டிருக்கும் C. Group-ல் கண்ட தமிழ்ப்பாடங்களையே பாடங்களாக அனுசரிக்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

VI. யாழ்ப்பாணம் இராமநாதன் காலேஜ் பெண்களுக்கு சங்கத்தாரால் நடத்தப்படும் பரீக்ஷை சம்பந்தமாக ஷை கலாசாலைத்தலைவர் மகா-௱-௱-ஸ்ரீ Hon'ble P. இராமநாதன் அவர்களின் விவரமான கடிதம் எதிர்பார்க்கப்படுகிறது.

VII. சிவகாசி, பரீக்ஷாஸ்தலங்களில் ஒன்றாக ஏற்படுத்தப்பட்டதை அங்கீகரிக்கலாயிற்று.

VIII. கலாசாலை மாணவர்களின் போஷணைக்காக மாதந்தோறும் ரூ. 10 அளித்துவருவதாக, திருப்பத்தூர் மகா-௱-௱-ஸ்ரீ ராம. நா. நாகப்பபிள்ளை அவர்கள் அன்புடன் ஒப்புக்கொண்டிருப்பதற்கு சங்கத்தார் நன்றிபாராட்டி வந்தனமளிக்கலாயிற்று.

IX. சங்கத்தின் அங்கத்தினருள் பெரும்பாலார் சந்தாத்தொகை சரிவரச் செலுத்தாதிருப்பதினால், அன்னோர்களை அங்கத்தினர் ஸ்தானத்தினின்றும் விலக்கிவிட வேண்டுமென்பதாக மகா-௱-௱-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்கள் தெரிவித்துக்கொண்டதில், அன்னோர்கட்கு சந்தாபாக்கி விவரங்கண்டு கடிதம் எழுதிக்கேட்கும்படி தீர்மானிக்கலாயிற்று.

K. RAMAAIYANGAR,
அக்கிராசனம் வகித்தவர்.

---

(True copy.)

*Joint Secretary.*

3-MAR 1919 MADRAS

உ
சிவமயம்

# செந்தமிழ்.

தொகுதி-கஎ.] காலயுக்தி௵ மார்கழி௴ [பகுதி உ
Vol. XVII. December—January, 1919. No. 2.

## முப்பொருளாராய்ச்சி.

காண்டல், கருதல், உரையாதிய அளவைகளானும், மனமாதிய அந்தக்கரணங்களானும், பிறளவற்றானும், எவ்வகைத்தானும் உள்பொருளெனத் தெள்ளிதிற்றெளிய எட்டியும் எட்டாமன் மறைந்தும் இடந்தொறு மீண்டிய பொருள்களை எல்லாம் இனமுறைநிரைத்துத் தொகுத்து வகுப்பின் அவையனைத்தும் பதி, பசு, பாசம் எனும் முப்பெரும் பிரிவுகளிலடங்குமென் றறிஞர்கூறுப.

இல்பொருள் யாண்டும்இல்பொருளேயாம்; உள்பொருள் காலதேசங்கட்கிசைய நிலைமாறித் தோன்றிமறைந்து விகாரமெய்தினும் என்ஞான்றும் உள்பொருளேயாகலின் சொல்லிய பதி, பசு, பாச மாகிய மூன்றும் ஆதியுமந்தமுமில்லா நித்தியப்பொருள்களாமெனக. அவை அங்ஙனமாயினும் தம்முள் ஒத்தபடித்தன்மையும் ஆற்றலுமின்றி ஒன்றற் கொன்று வேற்றியல் புடைத்தாம்.

இப்பெரும் பெற்றிய முப்பொருள்களின் பொதுவியல்பு சிறப்பியல்புகளை விரித்துப்பேசும் நூல்கள் யாவையெனில், அகண்டாகார நித்தவியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் உய்தற்பொருட்டு அவர்கண்மீதுவைத்த பெருங்கருணையினால் சதாசிவமூர்த்தியாய் எழுந்தருளித் தற்புருடம் முதலிய நான்கு முகங்களினால் தோற்றுவித்த இருக்காதி நான்குவேதங்களும், ஈசானமுகமாகிய உச்சிமுகத்தினால்தோற்றுவித்த காமிகமுதல் வாதுளமிறுதியாகிய இருபத்தெட்டுச் சிவாகமங்களும், இம்மூலவாகமங்கள்வழித்தோன்றிய

*

இருநூற்றேழு உபாகமங்களும், வேதத்தின் ஞானகாண்டத்தை விரிக்கும் ஈசாவாசியம், கேனம், கடம், பிரசினம், முண்டகம், மாண்டூக்கியம், ஐதரேயம், தைத்திரீயம், சாந்தோக்கியம், ஆதிய உபநிடதங்களும், வேதாகமங்களின் சாரத்தை ஒருங்குதிரட்டித் திருஞானசம்பந்தர் முதலிய சைவ சமயாசாரியர் நால்வராலும் அருளிச்செய்யப்பட்ட தேவார திருவாசகங்களாகிய தமிழ்வேதங்களும், வேதாகமங்களினதும் தேவார திருவாசகங்களினதும் சாரத்தின் சாரமாய் ஆகமங்களின் முரணறுத் தொற்றுமைகாட்டற்கெழுந்த இரௌரவாகமத்து 73-வது பாவவிமோசனபடலம் எனப்படும் ஞானபாதத்தாகிய பன்னிருசூத்திரமுடையதும் சிவபெருமானால் நந்தியந்தேவர்க்கும், அவரால் சனற்குமாரமுனிவர்க்கும், அவரால் சத்தியஞானதரிசனிகளுக்கும், அவரால் பரஞ்சோதிமுனிவர்க்கும் முறையே அருளப்பட்டதும், பரஞ்சோதிமுனிவர் ஆஞ்ஞைப்படி வடமொழியினின்று தமிழ்மொழிக்குச் சுவேதவனப்பெருமாள் என்னும்பிள்ளைத்திருநாமமுடைய மெய்கண்டதேவரால் மொழிபெயர்க்கப்பட்டதுமாகிய * சிவஞானபோதமும் அதன்வழிப்பிறந்த சிவஞானசித்திமுதலிய பதின்மூன்று சைவசித்தாந்த சாத்திரங்களும் பிறவுமாமெனக.

வேதம் என்னுஞ்சொல் அறிதற்கருவி எனப்பொருள்படும்; ஆகவே பதிபசுபாச மென்னும் முப்பொருள்களையும் அறிதற்குக் கருவியாயுள்ளது என்பது கருத்து. ஆகமம் என்பது (பரமாப்தரினின்றும்) வந்தது எனப் பொருள்படும். அன்றியும் ஆ என்பது பாசமெனவும் க என்பது பசுஎனவும் ம என்பது பதிஎனவும் பொருள்படுமென்றும், ஆ என்பது சிவஞானமெனவும், க என்பது மோக்ஷமெனவும், ம என்பது மலநாசமெனவும் பொருள்படுமென்றும் ஆன்றோர் கூறுவர். வேதத்துக் கன்மகாண்டம் பதிபசுபாசவியல்லைச்சுருக்கியும் ஞானகாண்டம் விரித்துங் கூறும்.

இப்பெருந்துணைய நூற்பரப்பனைத்தும் எடுத்தோதிப்போந்தவற்றுள் சிறுச்சிறுபாகங்கள்மாத்திரமே சாமானிய அறிவுடையார்க்கு

* 1. திருவுந்தியார், 2. திருக்களிற்றுப்படியார், 3. சிவஞானபோதம், 4. சிவஞானசித்தியார், 5. இருபாவிருபஃது, 6. உண்மைவிளக்கம், 7. சிவப்பிரகாசம், 8. திருவருட்பயன், 9. வினாவெண்பா, 10. போற்றிப்பஃறொடை, 11. கொடிக்கவி, 12. நெஞ்சுவிடுதூது, 13. உண்மைநெறிவிளக்கம், 14. சங்கற்



ஒருவாறு புலப்பட ஏனையபாகங்கள் மிகமயக்கி மலைவுசெய்யாநிற்கும். உயிரினும் விழுமியதாயோம்பற்குரிய நல்லொழுக்கம்பூண்ட நன்மாணாக்கர் நல்லாசிரியரை முறைப்படியடைந்து தொண்டுபூண்டொழுகிச் சோபானமுறையிற் பலநூல்களையுஞ் செவ்விதின் ஆராய்ந்து அறிவைப்பெருக்கிப் பக்குவராயபின்னரே பதிபசுபாச ஞானநூல்களைக் கேட்டற்குரியராவர். கல்வியின்றிப் பக்குவ்ராதலோ இயலாது.

இந்நிலவுலகின்கண்ணே செறிந்துள்ள உயிர்வருக்கங்களுள் ஐம்புலவுணர்வோடு நன்மை தீமைகளைப் பகுத்துணரவல்ல மனவுணர்ச்சியுமுடையராய் முதன்மைபெறு மக்கள் நன்குறுதற்கு வேண்டப்படுஞ் சவிகற்பஞானத்தைப்பயக்கும் வியஞ்சகஞானகாரணமாய் விளங்குவது கல்வியாம். மக்கள் தமக்கு இயற்கையாயுள்ள மனக்கருவியினால் நிருவிகற்பஞானச்செய்தியும், செயற்கையான கல்வியறிவினால் சவிகற்பஞானச்செய்தியு மெய்துகின்றார். நிருவிகற்பக்காட்சியாவது பெயர், சாதி, குணம், கன்மம், பொருளென்றிவற்றாற் பகுத்தறிதலின்றி இஃதொன்று தோன்றுநின்றதெனப் பொருளுண்மைமாத்திரையே அறியும் ஞானசத்தி. சவிகற்பக்காட்சியாவது, பெயர் சாதி முதலியவற்றாற் பொருளையுள்ளவாறுணரு ஞானசத்தி. இச்சத்தியை அபிவிர்த்தியாக்கி, உடலுடனழியுஞ் சாதிமுதலியன போன்றழியாமல், உயிருடன்செல்லுந்தரத்தினதாகிய கல்வியின் மாட்சியை,

“இம்மை பயக்குமா லீயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை யுலகத்தும் யாங்காணேங் கல்விபோன்
மம்ம ரறுக்கு மருந்து.”

“அறம்பொரு ளின்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையு நாட்டு—முறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியி னூங்கில்லைச்
சிற்றுயிர்க் குற்ற துணை.”

என்றின்னபல ஆன்றோர் கூறியவற்றானு முணர்க.

நன்மாணாக்கர் இயல்புகூறின், ஆசிரியன் கற்பிக்குநூற்பொருளைக் கற்பித்தவாறுணர்தலும், கற்பித்தபொருள் பற்றுகக்கொண்டு சூழ்ந்து வேறு நற்பொருளுணர்தலும், தம்போலக்கற்பவர்க் குபகாரிக

ளாதலும், தந்தைதாய் ஆசிரியர் முதலியோர் செய்நன்றியறிதலும், தீயசிற்றினச் சார்பின்மையும், சோம்பு, தடுமாற்றம், மானம், மறவி, கடுநோய், வெகுளி, களவு, காமம் என்றிவை யிலராதலும், ஆசிரியனை யடைந்து வழிபடுதலும், தருமநெறி தவறாமையும், ஆசிரியன் குறிப்பறிந்து நடத்தலும், கேட்ட நூற்பொருளைச் சிந்தித்தலும், பாடத்தை மறவாமற்காத்தலும், மீட்டு மாசிரியனையடைந்து கேட்ட நூற்பொருளை ஐயவிபரீதங்கள் நீங்க வினவுதலும், நூற்பயிற்சியுடையார் பிறர் அறிந்தாதல் அறியாதாதல் ஐயமுற்றாதல் வினவுஞ் சொற்பொருள்வினுக்களுக்கு அவர் கொள்ளுமுறையான் விடையிறுத்தலும், நூற்பொருள்களைக் கற்றோரவையில் அவரனுமதிகொண்டெடுத்துப் பிரசங்கித்தலுமுடையராகி உலகநடையறிந்தொழுகுவோர் நூல்கற்றற்குரிய நன்மாணக்கராவர்.

நல்லாசிரியர் யாவரெனில், உயர்குடிப்பிறப்பும், மனத்தூய்மையும், நல்லொழுக்கமும், பலகலைப்பயிற்சியும், வாய்மையும், மாணக்கர் மாட்டன்புடைமையும், பொருளவாவின்மையும், நடுவுநிலைமையுமென்னு மெண்வகை யிலக்கணங்களுடையராய்க், கொடையும், ஊக்கமும், உலகியலறிவும், நிலைபெற்றதோற்றமும், பொறையும், நிறையும், மறப்பின்மையும், அறிவும், உருநலனும், ஆற்றலும், புகழும், சொல்வன்மையும், மாணக்கரால்விரும்பப்படுநீர்மையும் தொன்னெறியாற் பொருந்தினோர் கற்பிக்கும் நல்லாசிரியராதற்குரியரென்றறிக.

நல்லாசிரியரைக்கண்டடைந்து விதிப்படி வித்தியாரம்பஞ்செய்து தண்டமிழ்க்கலைகளைக் கற்கப்புகு நன்மாணக்கர் முன்னர்த் தமிழ் நெடுங்கணக்கோதி எழுத்தினைத்துச் சொல்லாக்கவும் சொற்றொடுத்து வாசிக்கவும் பயின்றபின்னர் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், வெற்றிவேற்கை, வாக்குண்டாம், மூதுரை, நல்வழி, நன்னெறி முதலிய நீதி நூல்களைக் கிரமமாகக்கற்றுப் பொருளுணர்ந்துகொள்ளவேண்டும். அதன்பின்னர் திவாகரம், பிங்கலந்தை, சூடாமணி முதலிய நிகண்டுகளைக்கற்று அவைகூறுஞ் சொற்பொருளுணர்ந்து, நாலடி, ஆசாரக்கோவை, முதுமொழி வெண்பா, நீதிநெறிவிளக்கம் ஆதிய நீதிநூல்களைக்கற்று அவற்றின்பொருளையும் அவற்றின்கண்வரு நிகண்டுச் சொற்களையுந்தெளிந்துகொள்ளவேண்டும். அப்பால் வைதீக சைவ சாத்திரங்களோதுதற்குவேண்டியசைவதீக்கையை விதிப்படிபெற்றுப்



பஞ்சாக்கர அட்டாக்கர மந்திர செபவனுட்டானமுடையராய்த் தேவார திருவாசகமாதிய தமிழ்வேதங்களைப் பண்முறையோதப் பயின்று கொள்ளவேண்டும்.

பின்னர், தமிழ் இலக்கணச்சுருக்கங்களில் ஒன்றிரண்டைக்கற்று, நன்னூலைத்தொடங்கிக் காண்டிகை விருத்தியுரைகளுடன் ஆராய்ந்து * குமரகுருபரமுனிவர், சிவப்பிரகாசமுனிவர், சிவஞானயோகிகள், கச்சியப்பமுனிவர், சுப்பிரமணிய முனிவராதியோர் செய்த பிரபந்தங்களையும், கந்தபுராணம், பெரியபுராணம், கோயிற்புராணம், காஞ்சிப்புராணம், தணிகைப்புராணம், திருவிளையாடற் புராணம், காசிகாண்டம், பிரமோத்தரகாண்டம், உபதேசகாண்டம், வாயுசங்கிதை, பிரபுலிங்கலீலை, பாகவதம்முதலிய தமிழ்ப்புராணங்களையும், இராமாயணம், பாரதம் என்னுந் தமிழ் இதிகாசங்களையுங்கற்று இலக்கிய அறிவை யீட்டி முற்றொடுத்த இலக்கண அறிவை மேலும் வளர்க்குமுகத்தால் அகப்பொருள்விளக்கம், புறப்பொருள்வெண்பாமாலை, வெண்பாப்பாட்டியல், தண்டியலங்காரம், நேமிநாதம், வீரசோழியம், குவலயானந்தம் ஆகிய இலக்கணநூல்களைக்கற்று, கற்ற இலக்கியங்களில் இவ்விலக்கணவிதிகள் அமைவரு முறைகளையுங் கண்டுணர்ந்து செல்லவேண்டும். அப்பால், தொல்காப்பியமென்னும் பழம்பெருநூலை இளம்பூரணஞ், சேனவரய, நச்சினார்க்கினிய மென்னு மூவுரைகளோடு நன்றாராய்ந்து, சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, நைடதம், இரகுவம்சமாதிய தமிழ்க்காவியங்களையும் ஓதியுணரவேண்டும். சிந்தாமணி முதலிய ஆருகபௌத்தகாவியங்களைச் சைவநன்

* குமரகுருபரமுனிவரியற்றிய பிரபந்தங்கள், திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை, மதுரைக்கலம்பகம், நீதிநெறிவிளக்கம், திருவாரூர் நான்மணிமாலை, முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ், சிதம்பர மும்மணிக்கோவை, சிதம்பரச் செய்யுட்கோவை, காசிக்கலம்பக மென்றித்திறத்தன. சிவப்பிரகாச முனிவரியற்றிய பிரபந்தங்கள், நால்வர் நான்மணிமாலை, திருச்செந்திலந்தாதி, பழமலையந்தாதி, நன்னெறி, திருவெங்கைக்கோவை, திருவெங்கைக் கலம்பகம், திருவெங்கையுலா வென்றித்திறத்தன. சிவஞானயோகிகளியற்றிய பிரபந்தங்கள், அரதத்தாசிரியர்சுலோகபஞ்சகமொழிபெயர்ப்பகவல், சிவதத்துவ விவேகம், சோமேசர் முதுமொழிவெண்பா, குளத்தூர்ப் பதிற்றுப்பத்தந்தாதி, கலசைப் பதிற்றுப்பத்தந்தாதி, இளசைப் பதிற்றுப்பத்தந்தாதி, செங்கழுநீர்விநாயகர் பிள்ளைத்தமிழ், அமுதாம்பிகை பிள்ளைத்தமிழ், திருவேகம்பரந்தாதி, திருமுல்லைவாயிலந்தாதி, திருத்தொண்டர் திருநாமக்கோவை யென்றித்திறத்தன. கச்சியப்பமுனிவர்பிரபந்தங்கள், தணிகையாற்றுப்படை முதலியன. சுப்பிரமணியமுனிவர்பிரபந்தங்கள், துறைசைக்கோவை முதலியன.

மாணாக்கர் கற்றல் தகுங்கொலோவெனின், அவற்றினிடத்துப் பொதுவான உலகியனீதி கூறப்படுதலானும், தொல்காப்பிய இயற்றமிழ்ப் பிரயோகம் மிகவருதலானும், அப்பயனோக்கிக் கற்கலாமென்க. ஆயினும், கற்குமிடத்து அவைபால் மனமழுந்தப்பயின்று அவற்றின் கொள்கைவசத்தராகாமல் தஞ் சுயசமயசித்தாந்தப் பார்வையாற் கற்கவேண்டும்.

தம்மதச்சார்பினதாய் மிக்கபயன்றரக்கூடிய நூல்களை ஒருமுறை இருமுறை மும்முறைதானும் அழுந்தப்பார்த்து மெய்ப்பொருளுணரவேண்டும். புராணேதிகாசங்களை அவை அவை தோன்றிய தேசகால வழக்க பழக்கங்களுடன் ஒட்டிப்பார்த்து, நூலாசிரியர் கருத்தும் அவர் எடுத்தோது வன்மையும், அணி அலங்காரச் சிறப்புகளும், உள்ளுறையாக மறைதரப் பொதிந்துள நுண்பொருள் யாதென்றும் வகை வகை ஆராய்ந்துணர்ந்து செல்லவேண்டும். "எனைத்தானு நல்லவைகேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்" "எப்பொருள் யார்யார்வாய்க்கேட்பினும்அப்பொருள், மெய்ப்பொருள்காண்பதறிவு" என்னுந் திருவள்ளுவர் மொழிகளைத் தினமும் அயராமல்ஞாபகத்திலிருத்திக்கொள்ளவேண்டும்.

இப்பருவத்தே தருக்க அறிவைப் பெருக்குமாறு தருக்கசங்கிரக தீபிகை, தருக்கபரிபாடை ஆதியநூல்களையுங் கற்றுவரவேண்டும். இலக்கணவிலக்கிய அறிவு மேலும் வளர்தர இறையனார் அகப்பொருளுரை, பிரயோக விவேகவுரை, இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச் சூத்திரவிருத்தி, இலக்கணவிளக்கச்சூறாவளி என்பனவற்றையும் சங்கநூல்களாகிய * எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு, கல்லாடம், பெருந்தேவனார் பாரதம் என்பனவற்றையும், தெய்வவிலக்கியங்களாகிய திருக்குறள், திருக்கோவை என்பனவற்றை

---

* எட்டுத்தொகை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்பனவாம்.

பத்துப்பாட்டு, திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன.

பதினெண் கீழ்க்கணக்கு "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப் - பால்கடுகங் கோவை பழமொழி - மாமூல - மின்னிலைய காஞ்சியுட னேலாதி யென்பவே - கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு" என்பதனாலறிக.



யும், பரிமேலழகருரை பேராசிரியருரைகளோடு அறிவெழப் பன்முறை நன்றாராய்ந்து கொள்ளவேண்டும். தருக்க நூலாராய்ச்சியுடன் பூகோள ககோள கணித நூலாராய்ச்சிகளையுங் குறைவற ஈட்டி, தரும சொரூபங்களையும் ஆசார பிராயச்சித்தங்களையுங் கலியுகத்துக்கேற்ப விரித்துரைக்கும் பராசரஸ்மிருதி முதலிய தருமநூல்களையும் ஐயவிபரீதங்களறக் கற்றுக்கொள்ளவேண்டும். யாஞ்சவற்கியர்பால் பதியுண்மை ஆராயப்புக்க சல்லியர் ஆங்கவர் ஓதியவற்றைச்சூழ்ந்து மேலும் மேலும் வினாநிகழ்த்தி ஐயமகற்றி உண்மைதெளிந்த முறைபோலக் கற்குமெவற்றையும் ஆசிரியன்பால் அயர்வின்றி ஆராய்ந்துணர்ந்து செல்லவேண்டும். இயலுமானால், தமிழ்ப்பெரும்புலமைக்கின்றியமையா வடமொழியிலக்கியவிலக்கணவாராய்ச்சியுஞ் சிறிது செய்தல் மிக்க பயன்றரும்.

இதுகாறுஞ்சொல்லிவந்தமுறைப்படி கல்விபயின்றுவரும் மாணாக்கர், தம்பயிற்சியின் விசேடநோக்கம், பொருள், பண்டம், உத்தியோகம் முதலியனவற்றைத் தேடும்பொருட்டெனக் கொள்ளாது, அறிவைவளர்த்தலும், வளர்க்குமவ்வறிவின் றுணைக்கொண்டு உலகியலையுந் தம்மியல்பு வரவு போக்குகளையும் தம்மைப் பந்தித்துள்ள பாசத்தினியல்பையும் தம் நாயகனாகிய பதியின் இயல்பையும் உணரவேண்டுமென்பதே முக்கிய நோக்கமும் பேரவாவுமாகச் சதாகாலமுஞ் சிந்தையிற்கொண்டு இவ்வெண்ணம் பலித்தற்குளவாகிய வழிவகைகளிலே முயன்றுவரவேண்டும். அத்தகை முயன்றுவரு முறுதியினானும், மேற்கூறியபடி கல்வியீட்டி எய்திய பருவநலத்தானும்,உலகியலுணர்ச்சியானும் அறிவின்முதிர்ந்த மாணாக்கர் சைவசமய விசேடதீக்கையுற்றுச் சைவசமயநெறி, சிவதருமோத்தரம், பரமததிமிரபாநு, ஞானாமிர்தம், தத்துவப்பிரகாசம், சோமசம்புசிவாசாரியர்கிரியாகாண்டக்கிரமாவலி, சித்தாந்தசாராவலி என்பனவற்றையும் சதுர்வேததாற்பரியசங்கிரகம், சிவதத்துவவிவேகம், சிவகர்ணாமிர்தம், பிரமதருக்கத்தவமாதியனவற்றையுங்கற்று வைதிக சைவானுட்டானங்களைவரப் பயின்றுகொள்ள வேண்டும்.

அதன்மேல், மனமிகத்தூயராய் நல்லதின்னலனுந் தீயதின்றீதுங் கண்டு புண்ணியபாவங்களைப் பகுத்துணர்ந்து நன்னெறிச்சேறுமியல் பினராய் விவேக அறிவுதோன்றி, சொள்ளிவட்டம்போலும் காற்றாடி

போலும்சுழன்றுசூழ்ந்துவரும் பிறவிக்கஞ்சி வீடுபேற்றின் அவாமிக்குடையராய் நிருவாணவிஞ்ஞானதீக்கையுற்றுப் பரிபக்குவமெய்திய நன்மாணுக்கரே சிவஞானபோதம், சிவஞானசித்தி, சிவப்பிரகாசம், திருவருட்பயன் முதலிய அத்துவித சைவசித்தாந்த நூல்கள் பதினான்கையும் அவற்றினுரைகளோடும், வேதாந்தசித்தாந்த சாத்திரப்பொருளனைத்தையுமடக்கி விளக்கும் சகலகலாரூபமான சிவஞானமாபாடியத்தினோடுங் கற்பதற்கதிகாரிகளாவர். சிவஞானபோதங் கற்கப்புகுமுன், சைவாகமங்களிற் சிலவற்றையும், சரியை, கிரியை, யோகமென்னும் மூன்று பாதங்களையும் விரிக்கும் சோமசம்புபத்ததி, வருணபத்ததி என்னும் நூல்களையும் ஆவசியகங் கற்றுக்கொள்ளவேண்டும். ஆகமங்களின் பொருள்கள் தம்முள் வேறுபட்டு முரணுவதாலும் உபநிடதங்களின் பொருள்கள், துவித, விசிட்டாத்துவித, கேவலாத்துவித பாடிய வுரைகளாற் பேதிக்கப்பட்டிருத்தலானும் அவைகளைச் சைவசித்தாந்த ஞானகுரவர் முன்னிலையிலே ஓதியுணரவேண்டும்.

இப்பரிசோதிமிக்கறிவுற்றுப் பக்குவமெய்தாப் புல்லறிவாளர் முப்பொருளியலைக் கற்றிட முயலுதல் முடவன் கொப்புத்தேனுக்காசைப்படுமாறொக்குமன்றோ! அன்னவர்க்கோதி யுணரவைத்தல் யார்க்குத்தானமையும். பருவமெய்தித் தாமாயுணராச் சிறுவர்க்குக் காமவின்பத்தியல்பைச் சொல்லால்விளக்கியுணர்த்த வல்லாருமுளர்கொல்லோ!

தற்காலம் இலங்கையில் நவீனபோலியாகவும் சுத்தமாகவும் நிலவாநிற்கும் சைவமதத்தினைச்சார்ந்த அருட்பெரும்பாலார் தங்கள் அருமைப்பெருமைச்சிறுவர்களைச் சவலைப்பருவ நீங்காமுன் தமிழ் நெடுங்கணக்கையும் ஆத்திசூடி முதலிய சில்லறை நூல்களையும் வாசக புத்தகங்கள் ஒன்றிரண்டையுங் கிள்ளைகட்குப்பயிற்றுமாறு விரைவிலேகற்கக் கற்பித்து அவ்வளவில் ஏட்டைக் கட்டுவித்து அரசவுத்தியோகத்துக் கேற்றவராக்கு மவாமேலீட்டால் அங்கிலங்கற்கச் சைவகலாசாலைவாய்க்காவிடத்துக் கிறிஸ்தவபள்ளிக்காயினும் அனுப்பிவிடுகின்றார்கள். அங்ஙனமிவர்கள்சென்று பயில்வருநாளில் படிப்படியே தங்கள் தாய்மொழியாகிய தமிழ்மொழியையும் குலமதாசாரவொழுக்கங்களையும் புறக்கணித்துக் கைசோர விடுகின்றார்கள். ஆயிரத்தில் ஒருவரிருவர் வாலிபதசையடைந்துழியேனும், அதன்பின்னர்



லௌகீக குடும்பவிடயங்களில் அமிழ்ந்திச் சுழலுநாளிலேனும் தங்குறை நினைந்து ஐயோ வாணாளை வீணாளாய்க் கழித்தனம் இனியாவது சைவமதநூல்களை ஆராய்வோமென் றுருகிநைந்து குரவரைத் தேட முயல்வது முண்டு. இத்தன்மையோர் சிலர் அநேக முறைகளில் ஒருவரையடுத்து ஞானநூல்களைக்கற்பிக்கும்படி கேட்டவிடத்து, அவர் அங்ஙனஞ் செய்யவுளமிரங்கியும் அன்னோர் பரிபக்குவமின்மை நோக்கி, மறுத்துவிட்டதை நாமறிவோம். உயர்ந்த ஓர் மலையினுச்சிக்கண்ணே யடைய விரும்பினானொருவன் அடிமுதற் படிநிரை யிவர்ந்துசெல்லாது ஒரேமுறையில் உன்னித் துள்ளியுற முயன்றால் அஃதமைவ தெங்ஙனம்.

இவ்வுண்மையைச் சிந்தித்து ஒப்புக்கொள்ளாமல் தங்கள் வேண்டுகோட் கிசையாது மறுத்தனரே என்று மனநொந்து, தாங்கற்றளவில் பெற்றுள்ள அறிவாற்றல் முப்பொருளியலைஆராய்தற்கமையாதோவென்றும் வாளாமயங்குனர்க்கும் அன்னவரை ஒக்கும் பிறருக்கும், தங்கள் திறனிலை யுணருமாறு முப்பொருளைக்குறித்துச் சைவாகம சாத்திரங்கள்கூறும் பொருட்பொழிப்பின்னதென்றும், அதன்பால் அன்னவர்க்கு (உணரும் பக்குவமின்மையால்) நிகழ்ந்தெழக்கூடிய ஐயவிபரீத மலைவுகளில் மாதிரிக்குச்சிலவற்றையுஞ் சுருக்கி இங்ஙனங் காட்டுவாம்.

### முப்பொருளைக்குறித்துச்<br>சைவாகமசாத்திரங்கள் கூறுஞ்சாரப்பொழிப்பு.

1. தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி எண்குணத்தேகனாய் விளங்குங் கடவுளைப் பதியென்றும், அநேகமாகிய ஆன்மாவைப் பசுவென்றும் ஆணவம், கன்மம், அசுத்தமாயை, சுத்தமாயை என்னும் நான்கினையும் பாசமென்றுங் கூறப்படும். பதியின் எண்குணங்களாவன, சருவஞ்ஞத்துவம், திருத்தி (அல்லது பூர்த்தி,) அநாதிபோதம், சுவதந்திரம், அலுத்தசத்தி, அனந்தசத்தி, நிராமயான்மா, விசுத்ததேகம் என்பனவாம். இவற்றை முறையே தன்வயத்தனாதல், தூயவுடம்பினனாதல், இயற்கை யுணர்வினனாதல், முற்றுமுணர்தல், இயல்பாகவே பாசங்களினீங்குதல், பேரருளுடைமை, முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பமுடைமை என்று தெளிக. நிராமயான்மாவை அநாதிபோதத்தினும், விசுத்ததேகத்தினை அலுத்தசத்தியினும் அடக்கி அறு

குணங்களாகவும், இவ்வாறையும் சத்து, சித்து, ஆனந்தமென்னு மூன்றனுளடக்கி முக்குணங்களாகவுங் கூறவும்படும். பதியை "நிர்க்குணன்" "குணாதீதன்" என்று கூறுவதென்னையெனில், சாத்துவிக, இராசத, தாமதமென்னும் மாயாகுணங்களில்லாதவனென்னுங்கருத்துப்பற்றி யென்க.

2. ஏகனாகிய பதிக்கு அநாதிபோதமும் சுவதந்திரமுமுடைமையின், ஒருவருமறிவிக்காமல் எல்லாவற்றையுமறியுமாற்றலும் ஆன்மாக்களுக்கு அறிவிக்குந் தன்மையுமுண்டு. அனேகமாகிய பசுவுக்கு அறிவித்தால் அறிகின்றகுணமும் பிறருக்கு அறிவிக்க வியலாத குணமுமுண்டு. ஆணவமலத்திற்கு ஆன்மா வேண்டுங்காரியத்தை மறைத்து வேண்டாக்காரியத்தில் விருப்பங்கொடுக்குங்குணமும், புண்ணிய பாவமாகிய கன்ம மலத்திற்கும் அசுத்தாசுத்தமாகிய மாயா மலத்திற்கும் ஆன்மா ஆணவத்தைப் பொருந்தினால் அவ்வாணவத்தில் அழுத்துவித்தல், பதியைப் பொருந்தினால் அப்பதியுடன் அழுத்துவித்தல் முதலிய குணமுமாம்.

3. இவ்வாறு நித்தியப்பொருள்களும் வியாபகம் வியாத்தி வியாப்பியம் என மூவகையாயிருக்கும். இவற்றுள் வியாபகமாவது நிறைந்திருத்தல், வியாத்தியாவது சமநிறைவாயிருத்தல், வியாப்பியமாவது அடங்கியிருத்தல். அஃதெவ்வாறெனில், சமுத்திரம் வியாபகம் அதுபோலும் பதி, அச்சமுத்திரத்தில் தண்ணீர் வியாத்தி அதுபோலும் பதியிடத்தில் ஆன்மா, அத்தண்ணீரில் உப்பு வியாப்பியம் அதுபோலும் ஆன்மாவிடத்தில் பாசமென்க.

4. சிவபதியாகிய கடவுளர் ஆன்மாக்களுடன் கண்ணும் ஆதித்தனும்போலப் பேதநிலையினருமல்லராய், உடலுயிர்போல அபேதநிலையினருமல்லராய், குணகுணிபோலப் பேதாபேதநிலையினருமல்லராய், அம்மூன்றற்கும் பொதுவாய்க் கண்ணொளியும் ஆன்மபோதமும்போல அத்துவிதநிலையினராயிருப்பர்.

5. தோன்றி நின்றொடுங்கும் பிரபஞ்சத்துக்கு நிமித்தகாரணனாகிய கர்த்தா வேண்டுமென்றன்ன பலநியாயமுகத்தால் அளவைகட்கொப்பப் பதியுண்மையும், உடலைக்கொண்டு ஐம்புலன்களுக்கும்



வேறாய ஆன்மாவுளதெனநாட்டிப் பசுவுண்மையும், நிமித்தகாரணனாகிய குலாலன் காரியப்பொருள்களாகிய கடம் முதலியன வரைதற்கு முதற்காரணமாகிய மண்முதலியனவேண்டிநிற்குமுறைகாட்டி, நிமித்தகாரணப்பதிக்குப் பிரபஞ்சகாரியத் தோற்றவொடுக்கப்பொருட்டு முதற்காரணமாயை வேண்டற்பாலதென்று மாயையுண்மையுஞ் சாதிக்கப்படும்.

6. ஒன்றிலொன்று கலந்து அடங்கியிருக்கும் இவ்வாறுபொருளும் அநாதிநித்தியமாயிருப்பனவன்றி எங்கும் வியாபகமாயுமிருக்கின்றன. பதிதான் அநாதி நித்தியம் மற்றைய பசு முதலியன எவ்வாறு அநாதிநித்தியமெனில், சூரியனுள்ளபோதே கண்ணும் அக்கண்ணை மறைத்த இருளும் உளவேயாகலின் பதியின் அநாதிநித்தியவியல்பு பசு முதலியவற்றுக்கும் அமையுமென்க. எங்கும் வியாபகமாதல் எவ்வாறெனில், எண்ணிறந்த கண்களுக்கு ஓராதித்தனிருந்து விளக்குவதுபோலப் புவனங்கள்தோறுஞ்செறிந்துள எண்ணிறந்த ஆன்மாக்களுக்குப் பதி ஒருவனே அறிவித்தலானும் கண்ணானது சூரியமண்டல முதலிய எல்லாவிடங்களினும் போக்குவரத்தில்லாமல் எல்லாக் காரியங்களையுமறிதலானும் இருளொன்று எண்ணிறந்தகண்களையும் மறைத்தல்போல ஆணவமலமொன்று எண்ணிறந்த ஆன்மாக்களையும் மறைத்தலானும், பலதானியங்கள் அந்தந்த ஊரிலிருப்பவர்களுக்கு ஆங்காங்கே புசிப்பாயிருத்தல்போலப் பலகன்மங்கள் அந்தந்தப்புவனங்களிலிருக்கும் ஆன்மாக்களுக்கு ஆங்காங்கே புசிப்பாயமைதலானும், குலாலனானவன் பலபண்டங்களை அந்தந்த ஊரிலிருப்பவர்களுக்கு ஆங்காங்கே படைப்பதுபோல அசுத்தாசுத்த மாயையானது பல தனுகரணாதிகளை அந்தந்தப் புவனங்களிலிருக்கின்ற ஆன்மாக்களுக்கு ஆங்காங்கே படைத்தலானும் இவ்வாறுபொருள்களும் வியாபகமென்றே சொல்லப்பட்டனவென்க. இப்படி வியாபகமாயிருக்கின்ற ஆறுபொருள்களும் ஒன்றுக்கொன்று எவ்வாறு சம்பந்தப்பட்டனவெனில், அநாதியிலே ஆன்மாக்கள் ஆணவமலத்திற்கிடந்தார்கள், அவ்வாணவமலம் கன்மத்திலே விருப்பத்தைக் கொடுத்தது, இதனையுணர்ந்த பதியானவர் ஆன்மாக்களது விருப்பத்துக்கேற்ற மாயாகருவிகளைக் கொடுத்து அவைகளினிடமாகக் கன்மங்களைப் புசிக்கச்செய்வார், அநாதியிலே சகலலோகங்களுமுண்டாகின்ற முறைமை இவ்வாறாகும்.

7. ஆன்மாக்கள் அனாதியில் ஆணவமலத்திற் கிடந்தனரென்றால் அவ்வாணவமலம் அவர்கட்குப் பதியினால் கூட்டிவைக்கப் பொருந்தியதோ அன்றித் தானேவந்து பொருந்திற்றோவெனில், பதியானவன் சர்வானுக்கிரக நின்மலனாதலினால் தான் கூட்டிவைத்திரான், ஆணவமலமுஞ் சடமாதலால் தானேவந்து பொருந்தவும் மாட்டாது, ஆதலால் ஆன்மாக்களே ஆணவமலத்தைப் பிடித்தனரென்க.

8. ஆன்மாக்களுக்கு ஆணவமலம் இயற்கையோ செயற்கையோவெனில், இயற்கையானால் பாலுக்கு வெண்மையும் கரிக்குக் கருமையும் ஒருக்காலும் விட்டுநீங்காததுபோல ஆன்மாக்களுக்கு ஆணவமலம் ஒருக்காலும் விட்டுநீங்காது. செயற்கையானால், வெள்ளைவத்திரத்தில் அழுக்கேறுவதுபோல முத்தியிலும் வந்துபொருந்தும். ஆதலால் இரண்டுமன்று, செம்புக்குக் களிம்பும் நெல்லுக்கு உமியும் கடல்நீருக்கு உப்பும்போல ஆன்மாக்களுக்கு ஆணவமலம் அனாதி செயற்கையென்றும் அனாதிசையோகமென்றுஞ் சொல்லப்படும்.

9. இந்த ஆணவமலமே ஆன்மாக்களுக்குக் கன்மத்தில் விருப்பத்தைக் கொடுக்கும்; கொடுத்த விருப்புக்கிசையக் கன்மங்களையறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது, ஆன்மாக்களும் கன்மத்தை அறிந்தெடுத்துப் புசிக்கமாட்டார்கள், விரும்பப்பட்ட கன்மமுந்தானேவந்து ஆன்மாவைப்பொருந்தமாட்டாது, இந்தச் செய்தியை யுணரும் பதியே இரக்கத்தினால் அவ்வான்மாக்கள் கன்மத்துக்கேற்ற தனுவைக் கொடுத்து அத்தனுவினிடமாக அக்கன்மத்தைக்கூட்டிப் புசிப்பிப்பான். அஃதெவ்வாறெனில், குழந்தைக்குப் பாலின்கண்ணுண்டாகியவிருப்பம் தாய்கொடுத்தவிருப்பமோ குழந்தைக்குண்டாகிய விருப்பமோவெனில், தாய்கொடுத்தவிருப்பமானால், அவள் கொடுக்கின்றபோதெல்லாம் பாலையருந்தவேண்டும், குழந்தைக்குண்டாகிய விருப்பமானால் மாந்தங்கொண்டவேளையினும் மாறாதருந்தல்வேண்டும், இவ்விரண்டுமின்மையால் பசியே குழந்தைக்குப்பாலின்கண் விருப்பத்தைக்கொடுத்தது. விருப்பத்தைக்கொடுத்த பசியும் பாலையறிந்தெடுத்துக்கொடுக்கமாட்டாது, விரும்பியகுழந்தையும் பாலையறிந்தெடுத்துக் குடிக்கமாட்டாது, விரும்பப்பட்ட பாலும் குழந்தைவாயில்வந்துபுகமாட்டாது, இந்தச்செய்தியைத் தாயானவளறிந்து இரக்கத்தினாலே பாலையெடுத்துப் பாலடையிற்பெய்து குழந்தையின் வாயிலேவைத்துப்



புகட்டுவள். இவற்றுள் குழந்தையைப்போலும் ஆன்மா, பசியைப்போலும் ஆணவமலம், பாலைப்போலுங் கன்மமலம், தாயைப்போலும் பதி, பாலடையைப்போலும் தனு எனவறிக.

10. ஆணவமலம் சடப்பொருளாதலின் விருப்புமுதலியவற்றைக்கொடுக்குஞ்செய்தி அதற்கெங்ஙனமுண்டெனில், மயக்கம், வெம்மை, தண்மை முதலியவற்றை முறையேகொடுக்கும் விஷம், தீ, நீர் முதலிய சடப்பொருள்களுக்குச் செய்தியுண்டானாற்போல அதற்குமொருவகைச் செய்தியுண்டென்க. இறைவன் ஆன்மாக்களுக்குத் தனுக்களைப்படைக்குமிடத்து பாண்டங்களைத் தன்னினைவின்படி செய்யாது பிறர் நினைவின்படி வரையுங் குலாலனைப்போல ஆன்மாக்கள்நினைவின்படியேபடைப்பான்.

11. ஆன்மாக்கள் எங்கும் வியாபகராயிருத்தலின் தனுக்களை எவ்வாறு பற்றுவரெனில், படிகமலையானது எந்தப்புறத்தில் வன்னத்தைக் கொடுத்தாலும் பற்றிக்கொள்வதுபோல எல்லாப் புவனங்களிலும் வியாபகராயிருக்கின்ற ஆன்மாக்கள் எந்தப்புவனத்திலே சரீரத்தைக்கொடுத்தாலும் பற்றிக்கொள்வர். அஃதெவ்வாறெனில், படிகமலை ஒன்று, அப்படிகமலைக்கு ஒளி ஒன்று, அவ்வொளிக்கு பற்றுங் குணமொன்று, பற்றுந்தொழிலொன்று, வன்னமொன்று, வன்னத்தைப் பற்றுவிப்பானொன்று ஆக அறுவகைப்படும். அவற்றுள் படிகமலையைப்போலும் ஆன்மா, படிகமலைக்கொளிபோலும் ஆன்மபோதம், அவ்வொளிக்குப் பற்றுங்குணம்போலும் ஆன்மபோதத்திற்கு அறியுங்குணம், அவ்வொளிக்குப் பற்றுந்தொழில்போலும் ஆன்மபோதத்திற்கு அறியுந்தொழில், வன்னத்தைப்போலும் மாயாகருவி, வன்னத்தைப் பற்றுவிக்கின்றவனைப்போலும் பதி எனவறிக.

12. ஆன்மாக்களுக்கு அறியுங்குணமிருத்தலினாலே அவர்களை ஆணவமலம் எவ்வாறு மறைக்குமெனில், சந்திராதித்தருக்கு ஒளியிருந்தும் இராகுகேதுக்கள் மறைப்பதுபோலும், பிரகாசம்பொருந்திய நெருப்பை நீர் மறைப்பதுபோலும், ஆகாயத்தை மலைமறைப்பதுபோலும் ஆன்மாக்களை ஆணவவிருள் மறைக்குமென்க. இம்மறைப்புத்தான் ஆன்மாக்களுக்குவருவானேனெனில், அவர்கள் கன்மத்தால் வந்தது: ஆனால், ஆன்மாக்கள் அவயவமின்றி நிரவயவராயிருக்க அக்

கன்மந்தான் எவ்வாறுவந்ததெனில், தாம் நிரவயவரென்பதை மறந்து அவயவரென்னுங்கருத்துக்கொண்டமையால் அக்கன்மம் வந்தது. அக்கன்மத்தால் மாயையுண்டாயது, அம்மாயையால் தனு கரண புவன போகங்களுண்டாயின.

13. பதியானவர் ஆன்மாக்களுக்குக் கன்மத்தைப் புசிப்பிக்குமிடத்து இச்சாஞான கிரியாசொரூபராயிருந்து புசிப்பிப்பார். அஃதெவ்வாறெனில், ஆன்மாக்களை முத்தியிற்சேர்க்கவேண்டுமென்பதே இச்சை, ஆன்மாக்கள் இச்சித்தகன்மங்களை அறிவதே ஞானம், அக்கன்மங்களை ஆன்மாக்களுக்கு ஊட்டி யுறக்கித் தொலைப்பித்தலே கிரியை எனவறிக. ஆன்மாக்கள் அக்கன்மங்களைப் புசிக்குமிடத்தும் இச்சாஞானகிரியாசொரூபராயிருந்தே புசிப்பர். அஃதெவ்வாறெனில், பண்டபதார்த்தங்களிற் சென்று பற்றுதலே இச்சை, அவைகளைப் பகுத்தாராய்தலே ஞானம், சர்வத்தையுந் தனதென்றழுந்துதலே கிரியையாமென்க.

14. ஆன்மாக்களின் கன்மங்கள், தூலம், சூட்சுமம், அதிசூட்சுமம் என மூவகையாயிருக்கும். வினைகள் யாவும் தூலகன்மமென்றும், அவ்வினைகளுக்குப் பின்றொடர்பலனாகவரும் புண்ணிய பாவங்களெல்லாம் சூட்சும கன்மமென்றும், இப்புண்ணிய பாவங்கட்குப் பின்றொடர் பலனாகவரும் இன்பதுன்பங்களனைத்தும் அதிசூட்சுமகன்மமென்றுந் தெளிக. இம்முத்திறக்கன்மங்களும் முறையே ஆகாமியம், சஞ்சிதம், பிராரத்துவம் எனப்படும். இருவினைகள் ஆகாமியமும், அவ்வினைப்பயனாகிய புண்ணியபாவங்கள் சஞ்சிதமும், அப்புண்ணிய பாவங்களின் பயனாகிய இன்பதுன்பங்கள் பிராரத்துவமுமென்றுணர்க. ஒருவன் பயிரிடுவதுபோலும் இருவினைகள், அப்பயிரால் உண்டான பலனைக் களஞ்சியத்திற் கட்டிவைத்தல் போலும் புண்ணிய பாவங்கள், கட்டிவைத்ததை நாளுக்குநாள் சிறிதுசிறிதா யெடுத்துண்பதுபோலும் இன்பதுன்பங்களை ஆன்மாக்கள் அனுபவித்தல்.

15. கன்ம பலன்கள் ஆன்மாக்கள் நினைத்தவண்ணம் பலன்பட்டு வருவதில்லை. ஒருவன் முன்னே பனைநட்டுப் பின்னர்க் கத்தரிநட்டு, அதன் பின்னர் கீரைப்பயிரிட்டால், பின்பயிரிட்டகீரை பதினைந்து நாளளவிற் புசிப்பாகும், கத்தரி இரண்டுமாதத்திற் பயன்றரும், பனை



பதினைந்து வருடத்தின்பின் பக்குவப்பட்டு வரும். அதுபோல ஆன்மாக்கள் முன்பு ஆர்ச்சித்த கன்மம் முன்னேபலன்பட்டுவாராமல் வெகு சனனத்திற்குப்பின் பலன்பட்டு வருதலும் பின்பு ஆர்ச்சித்தகன்மம் உடனே பலன்பட்டு வருதலுமுண்டு.

16. கன்மம் ஆன்மாக்களுக்குப்புசிப்பாகவருங்காலம் ஆதிதெய்வீகம், ஆதிபௌதீகம், ஆதியாத்மிகம் என மூவித தாபத்திரயங்களால் வரும். ஆதிதெய்வீகமாவது, தாய்வயிற்றின் கண்ணே கருப்பாசயத்து வேதனை, பிரசவவேதனை, உடம்புதிரைதல், முதலிய மூப்பால் வருந்துன்பம், அளவிலா அஞ்ஞானத்தால்வருஞ் சங்கற்பவேதனை, யமன் உயிர்கொண்டு போகும்போது எய்தும் மரணவேதனை, நரகத் துன்பம் முதலியவாகத் தெய்வத்தையே காரணமாகக்கொண்டு வருவனவாம். ஆதிபௌதீகமாவது குளிரால் வரும்துக்கம், மழையினால் வருநடுக்கம், உஷ்ணமுடைய கோடைக் காலத்தால் வருதுன்பம், காற்றினால்வருதுன்பம், மின்னல் இடி என்பவற்றால் வருதுன்பம் முதலிய சடப்பொருள் காரணமர்க வருவதாம். ஆதியாத்மிகமாவது தேகத்தைப்பற்றிவருவிதனமும் மனதைப்பற்றிவருவிதனமுமாக இருதிறப்படும். அது சடத்தோடுகூடிய சேதனவாயிலாக வருவதாம். இவ்வினைகள், உலகம், வைதிகம், அத்தியான்மிகம், அதிமார்க்கம், மாந்திரம் என ஐவகைப்பட்டு ஒன்றற்கொன்று உயர்வுடையதாய் முறையே நிவிர்த்திகலை, பிரதிஷ்டாகலை, வித்தியாகலை, சாந்திகலை, சாந்தியதீதகலை என்பவைகளிலடங்கி, அசுத்தபோகம், மிச்சிரபோகம், சுத்தபோகம் என்பவைகளைக் கொடுக்கும். கூவல், தண்ணீர்ப்பந்தல் முதலியவற்றை அமைத்தல் உலக புண்ணியம், யாகமுதலியவற்றைச் செய்தல் வைதிக புண்ணியம், சிவபூசை முதலியவற்றைச் செய்தல் அத்தியான்மிக புண்ணியம், யோகஞ்செய்தல் அதிமார்க்க புண்ணியம், மந்திரோச்சாரணம் ஞானசாஸ்திர முதலியவற்றை ஓதுதல் மாந்திரபுண்ணியமாம்.

17. இக்கன்மங்கள் ஆன்மாக்களுக்கு எவ்வாறொழியுமெனில், ஒருவன்பயிரிட்டுக் கண்டநெல்லை முக்கூறாக்கி ஒருகூற்றைக் களஞ்சியத்திலும், மற்றொருகூற்றை உணவுக்காகச் சேமித்தும், மூன்றாங் கூற்றை வயலில் விதைத்துமிருக்க, களஞ்சியத்திலிருந்த நெல் தீப்பட்டு வெந்தும், உணவுக்காக வைக்கப்பட்ட நெல் உண்டு செலவழிந்

தும், விதைக்கப்பட்ட நெல் மழையின்றிக் காய்ந்தழிந்தொழிவது போல ஆன்மாக்களுக்குப் பக்குவகாலம் வந்துழி, சஞ்சித கன்மமானது ஞானாசாரியருடைய திருவருள் நோக்கால் வெந்தும், பிராரத்துவகன்மமானது எடுத்த சரீரத்திற்குப் புசித்துத் தொலைந்தும், ஆகாமிய கன்மமானது நின்மலஞானத்தால் மேலைக்கு வராமலும் நீங்கிப் போய்விடும். இவ்வாறே சஞ்சித பிராரத்துவ ஆகாமிய மென்னும் மூவகைக்கன்மங்களு மொழியு முறைமை யென்றுணர்க.

18. கண்ணானது ஒருக்கால் இருளோடும் ஒருக்கால் ஒளியோடுங் கூடியிருப்பதன்றி எக்காலத்துந் தனித்திராததுபோல ஆன்மாக்களெல்லாம் மலத்தொடுகூடி அதன்பாலழுந்தி அதன்மயமாயேனும், அன்றிப் பதியொடுசார்ந்தழுந்தி அப்பதிமயமாயேனும் இருப்பார்களன்றி எக்காலத்துந் தனித்திரார்கள். மலமுடன் அழுந்திய ஆன்மாக்கள் பெத்தான்மாக்களென்றும், பதியுடனழுந்திய ஆன்மாக்கள் முத்தான்மாக்களென்றும் பெயர்பெறுவர். பதியானவர் பெத்தான்மாக்களிடத்துப் பாலுக்குள்நெய்போலும் முத்தான்மாக்களிடத்தில் தயிருள் வெண்ணெய்போலவுங் கலந்திருப்பார். மலத்திலழுந்திய ஆன்மாக்களுடன் நின்மலனாகிய பதி கலந்திருப்பதெங்ஙனம், ஒளியுமிருளும் ஓரிடத்துறையுமோ வெனில் ஒருமரத்தில் அடிதொட்டு நுனியந்தம் இரசமும் அக்கினியுங் கூடியிருத்தல்போலப் பதியானவர் ஆன்மாக்களைக் கூடியிருப்பாரென்க.

19. அன்றியும் பெத்தான்மாக்கள் விஞ்ஞானகலர், பிரளயாகலர், சகலர் என மூன்று பேதவகுப்பினராவர். ஆணவமலமொன்றுடன்கூடியிருக்கின்ற ஆன்மாக்கள் விஞ்ஞானகலர் என்றும், ஆணவமலம் கன்மமலமென்னும் இவ்விரண்டொடுங்கூடியிருககின்றனஆன்மாக்கள் பிரளயாகலர் என்றும், ஆணவமலம், கன்மமலம், மாயாமலமென்னும் இம்மூன்றொடுங் கூடியிருக்கின்ற ஆன்மாக்கள் சகலர் என்றுஞ் சொல்லப்படுவர்.

20. ஆன்மாக்கள் நரகத்திற் றுன்பங்களை யனுபவிக்குமிடத்து அவர்களை விட்டு நீங்காத பதிக்கும் அத்துன்பங்களுண்டோவெனில் ஆதித்தனொளி படிகவொளியிற்கலந்து வன்னங்களைப் பற்றுவித்துந் தான்பற்றாதவாறுபோல ஒருக்காலுமில்லையென்க.



21. ஆன்மாக்கள் எக்காலத்திலும் பிரபஞ்சசையோகராதலால், கேவலம், சகலம், சுத்தமென மூன்றவத்தைகள் அவர்கட்குண்டு. இம்மூன்றும் காரணம், காரியமென இருவகைப்படும். இவற்றுள் காரணகேவலமானது அனாதியிலே ஆன்மாக்கள் அறிவுகெடாமல் ஆணவமலத்தில் அழுந்திக்கிடத்தல்; அது கண்ணானது இராக்காலத்திருளிலே ஒளிகெடாமல் விழித்திருத்தல்போலும். காரியகேவலமாவது, நெற்றி, கண்டம், இதயம், நாபி, மூலம் என்னும் ஐந்திடத்தினும், சாக்கிரம் சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்னும் கீழாலவத்தை ஐந்தையுமடைதல்; காரணசகலமாவது அனாதி கேவலத்திலே அழுந்திக்கிடந்த ஆன்மாக்கள் மாயாகருவிகளினாலே அக்கேவலம் நீங்கிச் சுகதுக்கங்களை அறிதல். அது இராக்காலத்தில் இருளிலே அழுந்திக்கிடந்த கண்ணானது விளக்கினாலே இருள்நீங்கிப் பதார்த்தங்களைக் காணுதல்போலுமாம். காரியசகலமாவது இலாடத்தானத்திற்றானே துரியாதீதமுதல் சாக்கிரமீறாயுள்ள மத்தியாலவத்தை ஐந்தையுமடைதல். காரணசுத்தமாவது அனாதிகேவலத்தினும் சகலத்தினும் அழுந்திக்கிடந்த ஆன்மாக்கள் அருட்டெரிசனத்தினால் அவைகளை விட்டு நீங்கிப் பிரமாணந்தத்தை யனுபவித்தல். அது இராக்காலத்திருளோடும் விளக்கோடுங் கூடியிருந்தகண்ணானது ஆதித்தனுதயஞ்செய்தவிடத்து அவைகளைவிட்டு நீங்கி அவ்வாதித்தனைக் கண்டுகொண்டிருத்தல்போலுமாம். காரியசுத்தமாவது நின்மலசாக்கிரமுதல் நின்மலதுரியாதீதமீறாயுள்ள மேலாலவத்தை ஐந்தையுமடைதல்.

22. பதியின் பஞ்சகிருத்தியங்களாவன, சிருட்டி, திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகமென்பவைகளாம். இக்கிருத்தியங்கள் ஆன்மாக்களுக்கோ சரீரங்களுக்கோவெனில், ஆன்மாக்கள் நித்தியராதலால், சிருட்டி, திதி, சங்காரம் வேண்டற்பாலரல்லர்; சரீரம் சடமாதலின் திரோபவமும் அனுக்கிரகமுங் கூடாவாம். இனி அச்சரீரங்கள் முத்தொழிற்படுமிடத்து அவற்றில் ஆன்மாக்கள் அழுந்துவதி

னாலும் ஆன்மாக்களுடைய இரண்டுதொழில் சரீரங்கட்கில்லாமையினாலும் பஞ்சகிருத்தியமும் ஆன்மாக்களுக்கேயாமென்க.

23. பதியானவர் ஆன்மாக்களிடத்தில் பஞ்சகிருத்தியத்தை நடத்துவது எவ்வாறெனில், இவர்களுக்கு மாயாகருவிகளைப்படைத்து அறிவை உண்டாக்குவதே சிருட்டி, மாயாகருவிகளை நிறுத்தி அறிவை நிலைபெறச்செய்தலே திதி, மாயாகருவிகளை ஒடுக்கி அறிவைப்போக்குவதே சங்காரம். அவர்களுடைய அறியுந்தொழில்களை அருளைக்கொண்டு மலசத்திகளால் மறைப்பித்து அவ்வவர்கள் கன்மங்களைத் தக்கபடி நிறுத்தலே திரோபவம்; அவர்களுக்கு இன்பதுன்பங்களைப் புசிப்பித்துப் புண்ணியபாவங்களாகிய வினைகளை அறுத்தலே அனுக்கிரகமென்க.

24. ஆன்மாக்கள் பஞ்சகிருத்தியப்படுதல் எவ்வாறெனில், அவர்கள் அறியுந்தொழிலே சிருட்டி, அறியுந்தொழிலில் நிலைநிற்றலே திதி, அறியுந்தொழில் நீங்கலே சங்காரம், அறியுந்தொழில்நீங்குமிடத்துள்ள அறியாமையே திரோபவம், இன்ப துன்பங்களைப் புசித்துப் புண்ணிய பாவங்களைக் கழித்தலே அனுக்கிரகமென்றறிக.

25. பதியின் பஞ்சகிருத்தியமும் அவற்றில் ஆன்மாக்கள் படுதலும் இவ்வாறாயிருக்க, அவர்கள் பிறந்தார், நரகமுற்றார், மோக்கமடைந்தாரென்று வேதாகமங்கள் கூறுவதெவ்வாறெனில், ஆன்மாக்கள் மாயாகருவிகளைப்பற்றியறிந்திருத்தலே பிறப்பு, அம்மாயாகருவிகளை நீங்கி அறியாதிருத்தலே இறப்பு, ஆயாசமுற்றிருத்தலே நரகம், அனாயாசமுற்றிருத்தலே மோக்கம் எனவறிக.

26. ஆன்மாக்கள் மோக்கமடையுமிடத்துக் கெட்டுக்கூடுவரோ கெடாதுகூடுவரோவெனில் கெட்டால் கூடத்தக்கவராகார், கெடாதிருந்தால் கூடவேமாட்டார்கள், ஆதலால் ஆன்மா கெடாமல் விடயத்திற்செல்லும், அவ்வான்மபோதம் நிகழ்ச்சிகெட்டுக் கூடுமென்றறிக.



27. பதியானவர் முன்னுரைத்த மூவகை ஆன்மாக்களை ஆட்கொள்ளுமிடத்து, விஞ்ஞானகலருக்கு ஒளியுருவாயும், பிரளயாகலருக்குத் தேவவுருவாயும், சகலருக்கு மனித உருவாயுந்தோற்றி ஆட்கொள்வர். ஆனால், ஆன்மாக்களுக்கு மலப்பிணியினால் சரீரங்கள் உண்டாகும், நின்மலனாகிய பதிக்குச் சரீரமுண்டாவதற்குக் காரணமென்னையெனில், பிள்ளைக்குண்டாகிய பித்தத்தைத்தீர்க்கப் பிதாவுக்கு ஆசைப்பிணியுண்டாவதுபோல, ஆன்மாக்களுக்குள்ள மலப்பிணியை நீக்கவேண்டிப் பதிக்கு ஆசைப்பிணியுண்டாகும், அதனாற் சரீரங்களுண்டாகுமென்க. பதியானவர் ஆன்மாக்களின் மலப்பிணியை நீக்குமுறை அவர்கட்கு இருவினை ஒப்புவந்தகாலத்து வண்ணான் வத்திரத்திலுள்ள அழுக்கை உழமண்கொண்டு நீக்குவதுபோல மாயாகருவிகளைக்கொண்டு நீக்குவரென்க.

28. இருவினை ஒப்பாவது, ஒருவன் விருப்புறு பதார்த்தங்களையும் வெறுப்புறு பதார்த்தங்களையுங் காணுமிடத்து, விருப்பும் வெறுப்புமற்ற பதார்த்தங்களைக் கண்டாற்போல, நல்வினைப்பயனுந் தீவினைப்பயனும் வந்தால், அவ்விரண்டினிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நிற்குநிலையாம். அஃதெவ்வாறெனில், ஒருவன் வைப்பாட்டியிடத்துச் சிறிதுநாளும் மனையாட்டியிடத்துச் சிறிதுநாளுமாகக்காலங் கழித்துவருகையில், இல்லறநூல்கேட்டவிடத்து வைப்பாட்டியை விடுத்து மனையாட்டியோடு வாழ்வதே சரியென்றும், துறவறநூல் கேட்டவிடத்து, அம்மனையாட்டியும் பாசபந்தத்திற்கேதுவாகலான் அவளையும் விடுத்துத் துறவுபூண்பதே சரியென்றுங்கண்டு பின்னர் அவ்விருவரிடத்தும் விருப்பு வெறுப்பொழிவதுபோல, ஒருவன் பாவமும் புண்ணியமுஞ்செய்துவருகையில் அறநூல் கேட்டவிடத்துப் பாவத்தை நீக்கிப் புண்ணியஞ்செய்வதே சரியென்றும், ஞானநூல் கேட்டவிடத்து அப்புண்ணியமுஞ் சனன மரணத்துக்கேதுவாகலான் அதனைவிடுத்து ஞானத்தையடைவதே சரியெனக்கண்டு பின்னர் இரண்டினிடத்தும் விருப்பு வெறுப்பின்றி நிற்குநிலையே இருவினை ஒப்பாகும்.

29. இருவினையொப்பின்கணுண்டாகின்ற மலநிவிர்த்திக்குக் காரணம் அனாதிதொடுத்து மோட்சபரியந்தம் ஆன்மாக்களாலுண்டாகின்ற சிவபுண்ணியங்களாம். அப்புண்ணியங்கள், அபுத்திபூருவம், புத்திபூருவம், உபாயசரிதை, உபாயகிரியை, உபாயயோகம், உபாயஞானம், உண்மைச்சரிதை, உண்மைக்கிரியை, உண்மையோகம், உண்மைஞானம் எனப் பத்துவிதமாயிருக்கும். இவற்றுள் முந்திய ஒன்பதும் மலநிலை,அவைகள் ஆன்மாக்களாற் செய்யப்படுவன; பிந்திய ஒன்று அருணிலை; அஃது, தத்துவரூபம், தத்துவதரிசனம், தத்துவசுத்தி, ஆத்மரூபம், ஆத்மதரிசனம், ஆத்மசுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் எனப் பத்துவிதமாயிருக்கும்.

30. இந்தப்பத்தையும் பரிபக்குவனானவனுக்குப் பதியானவர் ஞானாசாரியராக எழுந்தருளிவந்து சுத்தாவத்தையின் காரியமாகிய நின்மலசாக்கிர முதலாயுள்ள ஐந்தவத்தைகளிலடக்கி அந்த உண்மைஞானத்தை யறிவிப்பார். இவ்வாறு அளவற்ற காலம் ஆணவமலத்தினால் மறைபட்டிருந்த ஆன்மாக்களை முத்தியிற் சேர்க்கவேண்டுமென்று கடல்போன்ற பெருங்கருணையினாலே சர்வஞ்ஞானமுடைய பதியானவர் தக்க திருமேனிகொண்டு அவர்களை அவ்வாணவ விருளினின்றுமெடுத்து, விஞ்ஞானகலர் முதலிய மூன்று வகையாகத் தொகுத்துத் தனுமுதலிய மாயாகருவிகளைக்கொடுத்து அவைகளினிடமாக நல்வினை தீவினையென்னு மிருவகைவினைகளையூட்டி, அவ்வினையொப்பில் மலபரிபாகமுண்டாக்கி முத்தியிற் சேர்ப்பிப்பார்.

---

பசுஞானத்தினாலும் பாசஞானத்தினாலும் அறியப்படாத சிவபெருமானை அவரது அருள்ஞானக்கண்ணினால் ஆன்மாவில் ஆராய்தல் வேண்டும். புறப்பொருள்களைக் காணுமியல்பினதாகிய கண்ணானது தன்னியல்பை அறியமாட்டாதவாறுபோல தத்துவதாத்துவிகங்களை அறிகின்ற ஆன்மாவானது தன்னையுமறியமாட்டாது தன்னைச் செலுத்



துஞ் சிவபெருமானையுமறியமாட்டாது. சிவபிரான் ஆன்மாவின்கண்ணே அறியற்பாலராம். அசத்தாகிய பிருதிவி முதலிய தத்துவங்கள் நிலையில்லாதனவென்று விவேகித்து அறியின், சிவஞானசொரூபம் வெளிப்படும். அச்சிவஞானத்தினால் ஆசாரியன் மாணாக்கனுக்குச் சித்தாந்த மகாவாக்கியத்தை உபதேசிப்ப, அவன் சோகம்பாவனையை நாடோறும் பயின்றுவந்தால், மாயாகன்மங்களைவிட்டு நீங்குவான். ஐம்புலன்களுக்கு வேறாக ஆன்மா தன்னைக்காண்டலும் பிரபஞ்சத்தை அசத்தென்று காண்டலுமாகிய இரண்டும் சிவப்பேற்றிற்குச் சாதகங்களாம். அச்சாதகங்களாற் சிவஞானம் விளங்கி ஞேயமாகிய சிவம் காட்சிப்பட்டவிடத்து முன்னர்த் தான்பற்றிய ஏகதேசக்காட்சி வாசனைநீக்குதற்கு ஸ்ரீபஞ்சாட்சரத்தை விதிப்படி செபித்தல் வேண்டும். தனது உடலின்கண்ணே இதயம், நாபி, புருவநடுவாகிய மூன்றிடத்தையும் முறையே பூசைத்தானம், ஓமத்தானம், தியானத்தானமாய்க்கொண்டு, முப்பத்தாறுதத்துவங்களாலமைந்த இதயகமலத்தில் அமர்ந்த பஞ்சாட்சரத் திருமேனியிற், கொல்லாமை, ஐம்பொறியடக்கல், பொறை, அருள், அறிவு, வாய்மை, தவம், அன்பு என்னும் அட்டபுஷ்பங்கொண்டு பூசித்தல்வேண்டும். அங்ஙனம் பூசிக்குங்காற் சிவபெருமான் அறிவுக்கு அறிவாய் விளங்கி ஆன்மாவின்கண் வெளிப்பட்டு இன்பம் அளித்திடுவர். அங்ஙனம் விளங்கக்கண்டுணர்ந்த ஆன்மாவானது அணைகடந்து கடலிற்சென்றடங்குநீர்போல, ஐம்புலத்தடைகடந்து சிவபெருமானார் திருவடியைத் தலைப்பட்டு அதனினின்றும் நீங்காது என்றும் சுகானந்தப் பெருவாழ்வுறற்பாலதாம்.

---

விரிந்தகன்றாழ்ந்த பெருங்கடல்நீர்ப்பரப்பை ஒரு கைத்துணை நீரிற்காட்டுவதுபோல, முப்பொருளியலைக்குறித்து வேதாகம சாத்திரங்கள் கூறுங்கருத்தைத் தொகுத்துப் பொழிப்பாக்கி இத்துணையுஞ் சொல்லிவந்தவற்றைக்கொண்டு பக்குவமாணாக்கர் நன்றுதெளிந்து

மேனுஞ்சொல்லாதொழிந்த இயல்புகளையு முய்த்துணர்ந்துகொள்வர். அபக்குவர்க்கு, அங்கிலேய அபூரண தர்க்கசாஸ்திரப்பயிற்சி வசத்தானும், நூதன விபரீத விவேகஞானத்தானும் எழக்கூடிய ஆசங்கைகளிற்சிலவற்றை (மாதிரிகாட்டற்காய்) இங்ஙனந் தருகின்றாம்.

1. முதலும் ஈறுமில்லாப்பொருள் ஒன்றுளதேல், அது மேல் கீழ் முன் பின்னாகிய எம்மருங்கினும் எல்லையின்றிப் பரந்து யாண்டும் நிறைந்து ஏகமாய், நித்தியசர்வவியாபகமாயிருக்கவேண்டும். பதி எனப்படும்பொருள் அவ்வியல்பிற்றாயின் வேறு பசுபாசங்களென்பவை அதனையொத்து நித்தியப்பொருள்களாவதெங்ஙனம்? அவைதாமிருத்தற்கிடமெங்கே? இடம்பெறின், இடங்கொடுக்கும்பதி அபூரணராதல் வேண்டுமன்றோ!

2. பதி பசுவுடன்கலந்திருக்குமுறை அத்துவிதமென்றால், அதன்கருத்தென்ன? ஏகம் ஏகமே, துவிதம் துவிதமே. இரண்டு பொருள் கலக்குங்கால் பேதமற்றொன்றாகவேண்டும் அல்லது பேதமுற்றிரண்டாகவேண்டும். ஒன்றாயுமின்றி இரண்டாயுமின்றியிருத்தல் எவ்வாறு? அன்றியும் இரண்டுபொருள் ஒருங்குபடுமாயின், அவை தனித்தனி முன்னிருந்த அளவைப்பிரமாணத்தினும் ஒருங்குசேர்ந்திருக்கும் மொத்த அளவை இருமடங்கு விரியப்பெறுமன்றோ. ஒரு படி அரிசியும் ஒருபடி பயறும் கலக்கப்படின் அக்கலவை இருபடியாதற்குத்தடையுண்டோ?

3. ஆன்மா ஒன்றா, பலவா, எண்ணும் எல்லையுமற்றனவா? ஒன்றாயினும் பலவாயினும் ஒரு காலவரையில் யாவும் முத்திசேர்ந்துவிடும். அப்பால் பஞ்சகிருத்தியங்களைப் பதி நடாத்துவதெப்படி? ஆன்மா எண்ணு மெல்லையுமற்றனவெனில், ஒவ்வொன்றாகப் பல சேர்ந்தபொருட்டொகுதி எண்வகை கடப்பினும் எல்லைகடக்குமா



றெங்ஙனம்? ஆன்மாக்கள் நாளுக்குநாள் முத்தியிலுஞ் சேர்வதால் அங்ஙனஞ்சேராமல் எஞ்சிநிற்பவற்றின் றொகையானது படிப்படி குறைவுபடுவதில்லையோ?

4. இதற்குமுன் சென்றுபோனகாலத்துக்கு ஒரு எல்லையுமில்லை. எல்லையில்காலத்தினும் முத்தி கைகூடாமல், சனன மரண துன்பங்களிற் சிக்கியுழலும் ஆன்மாக்களுக்கு இனிமேல் முத்திவாய்ப்பதெங்ஙனம்? பதி தாமுள்ளவரையின் அவரின் பஞ்சகிருத்தியமும் நிகழுமியல்பினதாயின் முத்திபெறு ஆன்மாக்களும் என்றுமுளராதல் வேண்டும். அன்னவர்வகுப்பை நாமுஞ்சேரவில்லையென்று எப்படிச் சாதிக்கலாம்.

5. இரக்கமென்பது பதியினிடம் இயல்பாயுளதெனில், அது அவரை விகாரியாக்கித் தான் கதித்தவிடத்து அவரினது நீதியையுங் கோடச்செய்யுமன்றோ!

6. அறிவித்தாலன்றி அறியாத ஆன்மாவைச் சதாகாலமும் நித்திரைக்கண்கிடப்பதுபோல அறிவின்றிக்கிடக்கவிடாமல், அறிவைக் கொடுத்துக் கன்மத்திலும் இன்பதுன்பநுகர்ச்சியினும் செலுத்துவதென்னை?

7. பதியானவர் ஆன்மாக்கள்மீது இரக்கமுடையராதலின், அவர்களை அதர்மநெறிக்குய்க்கும் மலபந்தங்களை ஒருக்காலும் முளைய விடாமல் ஒரேமுறையில் வேரறக்களைந்துவிட்டாலென்ன?

8. சூரியனுள்ளபோதே கண்ணும் அதனை மறைக்குமிருளு முண்டாயிருத்தல்போல, பதியுள்ளஞான்றே பசுவும்பாசமு முண்டாமெனில் கண்ணானது ஒளியுடனும் இருளுடனும் மாறிமாறிக் கூடியிருத்தல்போலப், பசுவானது ஒரோவொருமுறை கூடலாமேயன்றி நித்தியமுங்கலந்திருக்கும் முத்திலைப்பெறுதலெங்ஙனம்?

இன்னுமிவ்வாறே பலப்பல மலைவுகள் மலைமலைபோலெழுந்து அபக்குவரை மயக்க அவர்கள் மலைமுகட்டேய்திய குரீஇ ஆங்குறை தற்கிடங்காணாது நின்று தயங்குவதுபோல மிக்க இடர்ப்பட்டுக் கலங்காநிற்பர்.

அஃதன்னமாக, முற்சொல்லிய முறைப்படி தமிழ்க்கல்வி தொடங்கிப் படித்தற்குக் காலங்கழிந்து வயதேறிவிட்டதே, குடும்ப பாரம் மிகவருத்துகின்றதே, இடம்பொருள் முதலிய துணையில்லையே என்று பல சாட்டுப்போக்குகள் சொல்லத்தலைப்படுவார்க்கு 'மனமிருந்தால், இடமுண்டு" என்னும் ஒருவார்த்தையைமாத்திரமே சொல்லி இவ்வியாசத்தை இத்துடன் முடிக்கின்றாம்.

மட்டுநகர்.<br>
1918ஆ மார்கழி மீ 29உ

இங்ஙனம்,<br>
ச. பூபாலபிள்ளை.

---

நம்மாழ்வார்பேரில் ஸ்ரீ ஸ்ரீ<br>
குமரகுருபரசுவாமிகள்குலதிலகராகிய<br>
நல்லகுற்றாலக்கவிராயரவர்களியற்றிய

## வண்ணம்.

---

தாந்ததந்தன னாதந்தனனா, தனந்தன, தாந்ததந்தன னாதந்தனனா, தனந், தனந், தனந்தன, தானதானன, தானதானன, தானதானன, தானதானன, தனனதனதன, தனனதனதன, தனனதனதன, தனன தனதன, தானதந்தன, தானதந்தன, தானதந்தன, தானனதான.

க-ஆவது கலை.

தாந்திதிந்திமி தாதிந்திமிதா, ததிங்கண், தாங்குடிங்கெனவே வன் பணிமே, னடம், புரிந், திடுஞ்சிறு, தாளினார்தட, வாவிமேன்மத,யானை கூறிய, போதிலேயுயர், கருடன்விரைவொடு, செலுவதிலையென, வவனையிணையடி, யணைவுகொடுவிடா, தோடிவந்துகை, யாழிகொண் டுக, ராவரிந்தபு, ராதனர்மாமன்.

ஈந்தவஞ்சனை சேர்வண்டிலையே, யுதைந்தவர், காஞ்சனன்படவே நெஞ்சுகிரால், வகிர்ந், தவன், குழந்தைவி, வேகமார்ப்ரக,லாதன்மாலரி, நாமமேபிர, தானமாயுரை, பொழுதிலவன்முன, மதலைமிசைவளை, யெயிறுதெரிவுற, வெளியில்வருமுயர், நரசிங்கர்செவ், வானபஞ்சவர், தூதுசென்றச, காயர்நிலாவு.

சார்ந்தவெண்டிரை மோதுங்கடன்மேல், விளங்கிய, பாந்தள்சம் ப்ரமமாகுந்தவிசா,வுறங்,குகொண்,டலென்றவு, தாரர்மாமுனி, வேள்வி காவல்செய்,போதுதாடகை,மாளவேயொரு,தருமமிதிலையி,லனுகிமுது சிலை, நெரியவளைவுசெய், பெருமையுலகுளார், காணவிந்திரை, சீதை மங்கையை, மாமணஞ்செய்த, ராகவமாயர்.

ஆதிகாரணரடிகள்பரவுவோர். (ஞ)

உ-ஆவதுகலை.

தாங்குமம்மலர் வாமெழுண்கணனார், சிறந்ததெய், வேந்திரன் கதி சேரும்பூவியோர்,களுந், தவம், பெரும்பெரி, தானமாமுனி, வோருநேர்

துதி, தூயமாதவர், காரியார்செயு, முசிததவமிது, பெரிதுபெரிதென, வுதவுமவர்வயின், மதலைவடிவமை, வாழ்குறுங்குடி, மேவுநம்பிய, நாளி லிங்கவ, தாரசொரூபர்.

சேர்ந்தபண்பெற வேசொம்புடனே, முழங்கிசை, யார்ந்ததங்கவி யால் விண்டுவின்மே, லுவந், துளன், புதங்கவி, சேடநான்மறை, யோது சாரம்வி,ளுவிமேலுரை,ஞானநூல்வகை,பொருளுமினியசொல்,விதமு மமைவுற,வரிமையிகபர,மகிமைபுரியந,லாயிரந்தமிழ்,பாடியன்றுசொல், போதர்புங்கவர்,மோனமனைலர்.

சார்ந்த சங்கவி ரோதஞ்சொலுபோ, தறிந்தவ, ராய்ந்தசிக்தை புகாவொண்பொருணூல்,பகர்ந், தபின்,புவந்திவர்,தாமனோரத, மாகயா வினு, மேகமாய்நிறை, தேவநாயகர், வரதரெனவவ, ரவர்களுரைகவி, பலவுமொருகவி, யெனமுன்மொழியவொர், பான்மைதந்தவு, பாயர்சுந் தர, மீறுமொய்ம்பின்மு, நூலணிமார்பர்.

ஆவலாயடியர்பணிசரணினர். (வ)

## ரு-ஆவதுகலை.

சேர்ந்தவெங்கதிர் பாயுஞ்சிறையோ, திமங்கொடு, வாஞ்சை மிஞ்சவு மாதக்தொறுமே, யிசைக், கிடும், பெருந்திரு, நாளிலேகரு டேசன்மேலெழின், மீறுகேசவர், கூடவேவர, முருடுதுடிதவின், முழவி னொலியெழு, வரிசையொடுதெரு,நவிலுலவுநர்,வீரர்சங்கணி,யாதரெம் பெரு, மான்வணங்கிய, பாதர்மகேசர்.

மாந்தர்முன்புசெய் பாவங்களினல், வருந்துயர், நீண்டவெம்பசி கோய் வெங்கலிநோய், பயந், தகன், றிடும்படி,ஞானபோதனை,காரிசேய் நிதி, சேரும்வாழ்வருண், மாதபோதன, ருலகமிசைசில, மனுடர்மெலி வுற, வவதிசெயவரு, பிணிகளொதுவும, காதவஞ்சனை, யேயிதென்றும, டாமலன்பரை, யாளும்வைபோகர்.

தேர்ந்து நன்றறியா வம்பர்கண்மே, னறுந்தமிழ், யான்பகர்ந் திடை யாதென்கவியே, தினம், புனைந், துசெம்பொரு, ளாடையாபர, ணுதிபாலன, மேடைவீடுகள், சாலிசேர்வய, னிலைமைபுலமையு, முலவு சிவிகையு, முதவியதுதின,மெனதுமரபினர், வாழவும்பள, மீறுசம்பள, நாளுமன்புட, னேதருத்யாகர்.

சோதிசேர்மகுடமணிசிரசினர். (வரு)



## சு-ஆவதுகலை.

தேம்பொருந்திய மாவுஞ்செறிபூ, கமுகுதளிர், வேங்கைவிண்படர் நீள்சந்தனமால், கடம், புடன், செருந்திக, ஞாவல்பாதிரி, மேவுசோலையி, லேறிவானர, யூகமீதிகல், புரியவுலவிய, பலவிலுறுகனி, சிதறிவிரிவதி, லொழுகிவருநற,வாழையிஞ்சிகு,லாவுமஞ்சளின்,மேடுசென்றடர், சாலி யின்மோதி.

மீண்டுவண்டுகள் சேர்பங்கயமார்,குளம்புக,மேய்ந்திடும்பக டாலங் குவரால்,வெருண்,டெழுஞ்,சினந்தனின், மேதிகாலடி, யூடுபோய்வெடி, தாவவேபல, சேவல்பேடையை, நெடியசிறைகொடு,தழுவவயறொறும், வளைகளுலவுநல், வளமைபெருகிட, வேதமுந்திகழ், வேள்வியுந்தெரு, வீதிதங்கவெ, நேரமுமாலை.

சேர்ந்ததென்குருகூர் வந்தருள்கூர்,பரம்பொருள்,வாய்ந்ததண்புளி சேர்மண்டபமீ, தலங், கிர்தந், துலங்குவி, மானநீண்மதின், மேவுகோயி லில், வாழ்தயாநிதி, யானதேசிகர், கருணைபொழியிரு, கமலவிழியினர், வகுளமணமல, ரணியுமழகினர், காரிநங்கைகு, மாரர்வண்சட, கோபர் செண்பக, மாறர்விசாகர்.

தோகையாடியபொதியவரையிலே. (இ)

## ரு-ஆவதுகலை.

கூந்தல்வண்டினமோ தண்டலையோ, முகங்குளிர், தோய்ந்தசந் திரனோ பங்கயமோ, மடந், தைகண், களம்புய, மோகபோலமொய், சாணையோசிறு, நாசியோகுமி, ழோசொல்காரிகை, புருவநெளிசிலை, திருவையனையநல், வனிதைதிருநுதல்,ஒளிசெய்பிறையிது,காதுநங்கை யர், சேணையங்கச, னேறுமுஞ்சலி, தோவிவள்வாய்செவ்.

ஆம்பலென்பதுவோ தந்தமெலா, முருந்தக,டேன்குழம்பமுதாய் மண்டிதமே, தயங், குகிஞ், சுகந்தவ, ரோசொல்வாய்மொழி, சீனியோ பகர், பாதமோதளிர், நாபிபூமகிழ்,மிடறுவரிபெறு,கமுகுகடிதட,நெடிய சிலைமதன்,முழுகுதடமது,தோள்கரும்பிணை,யோநன்முன்கைகள்,யாழ் விளம்புப, யோதரமோது.

கோங்கரும்பிளநீர் பம்பரமோ, வுடம்புபொன், வாய்ந்தசெண் பகமோ வெண்சொலுவே, னரம், பைரஞ், சிதந்தரு,வாலகோகில, மாது

மேனகை, தேவமோகினி, நேசமாமயி, லரிவைமடவியர், திலகமுருவசி, யிளையர்முனிவரு, மருளுவடிவினள், பூவைசுந்தரி, மோகவஞ்சிவ,சிகரந் தரு, வேள்கவியாணி.

கோதிலாவெனதிருகண்மணியினாள். (இரு)

சு-ஆவதுகலை.

கூண்டதங்கமளா வுஞ்சுவர்தோய்,பளிங்கறை, தோன் றுபஞ்சணை மேல்விந்தையிள, னடந்,துவந்,திருந்தவள்,சீர்விடாதொலி,வீணைநீவிவ, ராடிதோடிமு, காரிபாடிய, விசையிலுரைகிளி, மொழியிலெனதுள, முருகியிருமயல், பெருகியவண்முன, மேகநின் றுச, லாயிடும்பொழு, தாசைகொண்டவ, ளுனெனவோதி.

நேர்ந்ததின்றல வோவந்ததட, பலன்பெற, யான்சொல்பண்புது கேள் பெண்கொடியே, சுகந், தமஞ், செனுங்குழல், சூடவோகர,மீதிலே வளை, பூணவோசுரு, ளீயவோவுன, தடிமையெனமுறி, யெழுதிடெனி லவண், முறுவல்புரியவென், மனதுநிலையில, தோயஞ்சொலி, நீள்கருங் குழல், கோதுமுன்பரு, ளரங்கியபார்வை.

கூர்ந்தபின்பினிதாய் நெஞ்சதிலே, நயம்பெற, வேண்டுதண்பனி நீர்சந்தசவா,துருங்,குமங், கலந்தணி, வாளநேகப்ர, காசமாமணி, மாலை வேயென, மார்பமுடிய,* துகிலநெகிழ்தர, விடுவள்குவிதனமுனையை நெருடென, நவில்வண்மடிமிசை,யேசரிந்துவி, டாதுகொஞ்சுவள், சினி தங்கித, ழீவள்குழாய்வள்.

கூடவோருயிரெனமெய்பிரிவிலாள். (ஞ)

எ-ஆவதுகலை.

காந்தளங்கையின லன்புடனே, பொருந்திமெய், சேர்ந்தணைந் ததிலே யிங்கிதமா, யிணங், கனங், கனந்தவி, காரமீறமு, ஞேதிநேர்சிர, மார்புலாவுகை, மூலமீதுகிர்,பதியவொருகர,மாவடடமணி,தடவுகரிகர, மதிகசுகய, மாகவம்பர, மானகண்கவை, நாவலோந்துது, ளாவியவேளை.

தான் குனிந்தணைவாணின் றணைவாண், மலர்ந்தொரு, பாங்கிருந் தணைவாளங்கதனே, ரெனுந், திறம், புனைந்தவ, தானமாவிளை, யாடு கேரள, லீலைகூடிம, லாடியேபல, காணவகைசெயு, முபரிமுறைய வண், மருவுதொழில்செய, வுனது நினைவெது, வாவதென் றவை, வாண்முனங்குவண், மேன்முரண்டுசெ, யாதுறவாவள்



காஞ்சனந்திகழ் கோலங்குலையா, முகங்கவுண், மோந்துசெங்கை யினுண்மென்சுருடா, வெனும், பகிர்ந், துதின்றனு, கூலமாவெனை, மேவுபோதுடல், சோகதாகமு, ரூமணீமயில், விசிறிகொடுவிசி, றென மெய்புகலுவள், சரசவகையொடு, துகிலையுரிகுவள், காலிரண்டிடை, நேர்நெருங்கவி, டாதுகொண்டணை, வாள்பரிவாவள்

நீதியாலிரவில்விழிதுயிலுறாள். (ஞரு)

அ-ஆவது கலை.

கான்பொதிந்தவசோகந்தளவோ, துகஞ்சமொய், தேன்பொதிந்த கலாரஞ்செறிகூ, தமென், றபஞ், சவெங்கணை, வேள்சபாசென, வாது கூறிவி, டாமல்வீறுடு, தேடிநேர்பொரு, தலகமிடுவது, விலகுமிருகர, முலவுவளைகல, கலெனவலறியோர், பாமெறிந்திரு, பாததண்டைக, ளூபுரங்கள்க, வீரெனுநாதம்

ஓங்கவண்டுபுறவுங்குயில்கா, டையுஞ்சிறு, போந்துமஞ்சமு வீரம் பெறுகோ, ழியும், புலம், புமென்குரல், கூவுமோசைகள் பூகமான கீரபமீதுக, கீகி கிகிகி, கருகு கருவென, விரையைமுடிகுழ, லவிழுவனை மலர், சொரியநுதன்மிசை, வேர்வரும்பமை, யூடழிந்துகண், வேன் மருண்டிட, ராகமதேற

காம்பெனுஞ்சிறு தோண்முங்கியவா, ரமுங்குழை, பூண்டசெம் பொனுமோர்பங்குபளீ, ரெனுஞ், சிவந், திடுங்கனி, வாய்வெளேறென, வாசமாமுக, சோலைபேயொளி, கூரமாமலர், மதுவையளிநுகர், பருவ மெனமண, மகிழவிருவரு, மருவுதருணம, தாகவுஞ்சல, ராசிபொங்கிமு, னேசொரிந்திட, மேவியலீலை.

நேமிமேல்வருசுகிர்தபலனிதே. (க)

---

தோங்கல்களைச்சேர்த்தால் ஒருகவியாகவேண்டும்.

ஆதிநாரணரடிகள்பரவுவோர், ஆவலாயடியர்பணிசரணினர்
சோதிசேர்மகுடமணிசிரசினர், தோகையாடியபொதியவரையிலே
கோதிலாவெனதிருகண்மினாள், கூடவோருயிரெனமெய்பிரிவிலாள்
நீதியாலிரவில்விழிதுயிலுறாள், நேமிமேல்வருசுகிர்தபலனிதே

---

இருபது வருடத்துக்குமுன் நான் ஸ்ரீவைகுண்டத்துக்குப்போ யிருக்கும்போது, ஸ்ரீலஸ்ரீ குமரகுருபரசுவாமிகள் திருவவதார மனை யில் வசித்திருந்தேன்; அங்கு, சுவாமிகளுடைய மாபிலே வந்த நல்ல

குற்றாலக் கவிராயரவர்களியற்றிய வண்ணம் என்று ஒரு சுவடிகிடைத்தது. பாண்டிநாட்டிலே அக்காலத்தில், தமிழ்வித்துவான்களெல்லாம் பலவகையான வண்ணங்கள் செய்வதிலதிக சமார்த்தியமுடையவர்களாயிருந்தார்கள்; பலவித்துவான்கள் வீடுகளிலும் பல்வித வண்ணங்களிருக்கின்றன; இக்காலத்திலே வண்ணங்கள் செய்யுந் தமிழ்வித்துவான்களரியராயிருக்கின்றார்கள் ஆதலாலிதுபோன்ற வண்ணங்களைப் பார்த்தாலிவ்வாறு செய்வார்களென்றெண்ணி மகாமாட்சிமைதங்கிய சேதுபதிரெகுநாதவளவாயவர்கள் வண்ணத்தையச்சிட்டபின், இவ்வண்ணத்தையும் பரிசோதித்து, எழுதுவோராலே நேர்ந்தவழுக்களைந்து, அரும்பதவுரையுமெழுதி வெளியிடலாயினேன்.

## அரும்பதவுரை.

### ௧-ஆவதுகலை.

வாவி—தடாகம்.
ஆழி—சக்கரம்.
கரா—முதலை.
மாமன்—என்றது கஞ்சனை.
வண்டில்—அசுரனாகிய சகடம்.
காஞ்சனன்—இரணியன்.
உகிர்—நகம்.
மதலை—தூண்.
எயிறு—பல்.
பாந்தள்—அரவு.
சம்பிரமம்—மகிழ்ச்சி.
தவிசு—அணை.
முனி—விசுவாமித்திரமுனி.
சிலை—வில்.
இந்திரை—இலக்குமி.

### ௨-ஆவதுகலை.

எண்கணனார்—பிரமதேவர்.
காரியார்—பிதாவின் பெயர்.
உசிதம்—தகுதி.
மதலை—பிள்ளை.
குறுங்குடிநம்பி— திருக்குறுங்குடிநம்பியென்னும் பெருமான்.
சொம்பு—கூட்டம்.
விண்டு—திருமால்.
ஆயிரம்—என்றது முதலாயிரத்தை.
போதர்—ஞானத்தர்.
புங்கவர்—உயர்ந்தவர்.
மோனமனோலர்—மௌனமனத்தர்.
பொருளூல்—என்றது தாம்விடுத்த கவியிலுள்ள அகப்பொருளூற்கருத்தை.
மனோரதம்—இன்பம்.
ஒருகவியென—பலருஞ்செய்த கவியெல்லாமொருகவியெனலாக.
பான்மை—தன்மை.
மெய்ம்பு—தோள்.

### ௩-ஆவதுகலை.

ஒதிமம்—அன்னம்.
வாஞ்சை—விருப்பம்.
எழில்—அழகு.
கேசவர்—திருமால்.
முருடு, துடி, தவில், முழவு—இவை வாத்தியவிசேடம்.
சங்கணியாறர்—பொருநைநதியின்றுறையார்.
எம்பெருமான்—என்றதுராமாநுசரை.
சேய்—பிள்ளை.
நிதி—திரவியம்.
தபோதனர்— தவமாகியதனத்தையுடையவர்.
அகாதவஞ்சனை— மிக்கவஞ்சனையென்பது கருத்து.
வைபோகர்—விபேகர்.
இடைதல்—வருந்தல்.
சாலி—நெல்.
புலமை—அறிவு.
உம்பளம்—வெகுமானம். வெகுமானமாகக்கொடுக்கு நிலமென்றுங்கூறுவர்.



### ௪-ஆவதுகலை.

தேம்—தேன், வாசனை.
பூகம்—கமுகு.
வானரயூகம்—வானரமாகிய குரங்கு ஒரு பொருட்பன்மொழி.
நறை—தேன்.
பங்கயம்—தாமரை.
பகடு—எருமைக்கடா.
மேதி—அவ்வெருமைக் கடாவைச்சுட்டியது.
சிறை—இறகு.
குருகூர்—ஆழ்வார்திருநகரி.
வகுளம்—மகிழம்பூ.
காரி—பிதாவின் பெயர்.
நங்கை—காரியார் மனைவியாகிய வுடைய நங்கையார்.
செண்பகமாறர்—என்றதுமொருபெயர்.
விசாகர்—என்றதுமொருபெயர்.
தோகை—மயில்.
பொதியவரை—பொதியமலை.

### ௫-ஆவதுகலை.

தண்டலை—சோலை.
அம்புயம்—தாமரை.
கபோலம்—கன்னம்.
சாணை—சாணைக்கல்.
குமிழ்—குமிழம்பூ.
வனிதை—பெண்.
நுதல்—நெற்றி.
அங்கசன்—மன்மதன்.
உஞ்சல்—ஊஞ்சல்.
முருந்து—மயிலினிறகடிக்குருத்து.
கிஞ்சுகம்—முருக்கம்பூ.
துவர்—பவளம்.
நாபி—கொப்பூழ்.
மிடறு—கழுத்து.
கடிதடம்—அல்குல்.
பயோதரம்—கொங்கை.
இரஞ்சிதம்—இன்பம், பிரியம்.
கோகிலம்—குயில்.

### ௬-ஆவதுகலை.

கூண்டுதல்—கூடுதல்.
சலாம்—வந்தனம் - துலுக்குமொழி.
சுகந்தம்—நண்டு மலரெனக.
மஞ்சு—மேகம்.
சுருள்—வெற்றிலைச்சுருள்.
முறுவல்—சிரிப்பு.
வேய்தல்—சூடுதல்.
துகில்—ஆடை.
நவில்வள்—சொல்வள்.

### ௭-ஆவதுகலை.

ஓதி—கூந்தல்.
கைமூலம்—கையடி.
உகிர்—நகம்.
அரவபடம்—என்றது அல்குலை.
கரிகரம்—என்றது கரிகாலிலையை.
கேரளம்—மலையாளம்.
உபரி—மேல்.
காஞ்சனம்—பொன்.
பரிவு—அன்பு.

### ௮-ஆவதுகலை.

தளவு—முல்லை.
கஞ்சம்—தாமரை.
கல்லாரம்— என்றது நீலத்தை.
நூபுரம்—சதங்கை.
சிகி—மயில்.
போத்து போந்தென விகாரமாயிற்று.
போத்து—செம்போத்து.
அஞ்சம்—அன்னம்.
கிரீபம்—கழுத்து.
வனைதல்—அணிதல்.
இராகம்—சிவப்பு.
காம்பு—மூங்கில்.
கூர—மிக.
அளி—வண்டு.
ஞேமி—பூமி.
சுகிர்தம்—புண்ணியம்.

### வண்த்தியல் வெண்பா

எட்டுக்கலையாயிடையிட்டெதுகையாய்க்
கட்டுக்கலைக்குமுக்கண்ணியாய்—முட்டமுட்டத்
தொங்கலுமாகித்தொடையும்பலவாகிப்
பங்குபெறும்வண்ணத்தின்பண்பு.

### அகவல்

முதற்கலைக்கிடுவதுதெய்வச்செயலே
யிரண்டற்கிடுவதுகிளைகொடைவிருது
மூன்றற்கிடுவதுபுகழும்வாகையு
நான்கற்கிடுவதுநாடுநகரமு
மற்றைப்பாதிற்குயிரங்கல்
கலவியின்மகிழ்தலுங்கழறுவர்வண்ணமே
வேறுதுறையினும்விளம்புவர்புலவர்.

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீன வித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய
ரா. சுப்பிரமணியக்கவிராயர்

---

மாட்சிமைதங்கிய

## தளவாய் ரெகுநாதசேதுபதியவர்கள்மீது வண்ணம்.

*தந்தானத்தன தந்தானத்தன தந்தானத்தன தனதானன, தத்தன தத்தன தத்தன தத்தன தத்தன தனதானன.*

வங்காரக்கிரி சிங்காரத்தொடு சங்காரச்சிலை யெனவேயொரு கைக்குள் வளைத்தொரு கைக்குள்வடிக்கணை முப்புரம்வெப்பெழ விடுவார் யிசை

செம்பாதிக்கொரு வெண்பாதிப்பிறை சம்பாதித்தொரு முடிசூடினர் பத்திரதத்தன் விசித்ரனெனத்தகு புத்ரனருச்சனை புரிதாளினர்

வண்காசிக்கதி கஞ்சேதித்தல யிங்கேகித்தனு முறைவோமென மைக் கண்மடக்கொடி முக்யபருப்பத வர்த்தனிபுத்தமி யுடன்வாழ்பவர்.

### தொங்கல்.

ராமநாயகரைமுற்றுநம்பிறேன். (ரு கலை)

வங்காளத்திலி ருந்தேசெச்சையில் வந்தார்கொற்றவர் சிலபேர்சிலர் மக்கர்துருக்கர்வ ரத்தடைபட்டும ணிக்கடைநிற்பார்கள் சிலபேர் சில

பொன்காணிக்கைகொ ணர்ந்தோமிப்பொழு தென்றூர்குச்சரர் சில பேர்சில கோப்பையடித்தது பட்டுமுடித்தலை ரத்னமுதிர்ப்பார்கள் சிலபேர்சில

மன்றுடிச்சொலி நின்றூரிட்டனர் கன்றுளைத்திரள் சிலபேர்மிகு கப்ப வழக்கநடக்கைதரச்சொலி யொப்பமிடச் சொல்வர் சிலபேரென.

ராசகாரியநடத்துங்கண்மால். (வ கலை)

செங்காவிக்குடை யுங்காவிக்கொடி யுங்காவிச்சிவி கையுமாய்விரு தொக்கவரத்துரை மக்கள்வரப்படை பக்கம்வரப்பொரு களை மீதெழு

செந்துள்பட்டிரு சந்த்ராதித்தர்ம றைந்தோடத்தரி யலர்போரணி தட் டழியப்பரி பட்டழியக்கரி செந்துருளச்சமர் பொருதேர்பரி

சண்டாடப்பகை கொண்டாரைத்தலை பந்தாடப்பெரு நரிபேயுண
ரத்தசலத்தைதர ணப்பலியிட்டிர ணக்கொடிகட்டிய ரணகேசரி.
வாமமார்குழலியர்க்குவந்தவேள். (௰௫ கலை)

சம்பாகத்தொடு சொம்பாகக்குயில் பண்பாடச்செய லொருபான்
மயில் வட்டமணிச்சிறை விட்டுநடித்திடு கட்டளைசெக்கணி யொரு
பாலளி

கொண்டாடப்பல வின்கோலச்சுளை பொன்போலப்பெய்வ தொருபா
லுயர் பச்சைமடற்கமு குச்சிதுளக்கிவெண் முத்தமுகுப்பன
வொருபால்வளர்

செந்தேன்வைத்தப சுங்காமொய்த்திடு தென்சேறவைத்துரை தள்வாய்
தரு சித்தசனுத்தமன் முத்தமிழ்வித்வச னத்தைவ, ளர்த்தவன்
ரெகுநாதமன்.
மாரிநீருவிசுற்றுகுன்றின்வாய். (௰௬ கலை)

சங்கீதக்கிளி வந்தாள்சற்றெல்கி நின்றாளுப்பரி கையின்மேல்வள
ரொப்பனையிட்டொரு சற்பனையிட்டிரு கட்கடையிட்டவள் மணி
மார்பிலெ

பூந்தேகுத்தும தம்பாய்வெற்பைவி ரைந்தேதொட்டபி னுடன்மேல்
விழ வைச்சதுவர்ப்பிள வெச்சில்வகைச்சுருள் வைத்துதுயத்
தனு மவளையிதழ்

தந்தாளிப்படி யுண்டோபற்படு மென்றாள்சொற்படி மெல்வேமெல்
முத்தமளித்தும டிக்குளிருத்திமு லைக்குளணைத்தொரு கையளி
ரென.
சேமமார்தருமுழக்கமண்டவே. (௰௭ கலை)

சஞ்சீவிப்புற வுங்காடைக்குல மும்பேடைக்குயின் மயில்போளி
குக்கிலனத்தொடு குக்குடமெட்டுவ லைப்படுபுட்குரல் வரவேமன

துஞ்சோரத்துகி லுஞ்சோரக்குழ லுஞ்சோரப்பர வசமாயுளு ருக்கி
யுருக்கிம ணித்தொடையெட்கவெ ருக்கிநெருக்கிமன் மதனுமொரு

சந்தோடத்தெய்வம் வந்தேறிச்சன தம்பேசிப்புள கிதமாய்மலி கைத்
தொடையிச்சி மருக்களபப்புள கிப்பெருநற்பரி மளம்வீசிய.
சீதவீயிலந்தசப்ரமஞ்சமேல். (௰௮ கலை)



அங்கோசிற்றிடை யிங்கோசிற்றிடை யெங்கோபற்றிட மெனமாயமெ
னப்பதறிப்பத றிக்கதறித்துவ ளத்துவளப்பரி புரமோலிட

முன்போகித்தது பின்போகித்தது சம்போகத்தினி லறியாமன்ம யக்கம்
வரத்தழு வித்தழுவிப்புண ரப்புணரப்புது நலமாகியி

ரண்டாகத்துயி லொன்றாகத்தய வொன்றாகச்சிறு பிறையாகிய நெற்றி
வியர்த்தொரு சற்றவசக்களை நித்திரைமெத்தையில் வரவேயுடன்.
காமமீறியமுயக்கிலன்றில்போல். (௰௯ கலை)

அன்பாகத்தொழி லின்பாகச்செய்து முன்பாகப்பொரு மிருபார்வைம
யக்கமயக்கிவ ருட்டிவெருட்டியி தத்தறிவைத்திறை கொளவேயமிர்

தம்போலக்குதி கொண்டேசித்தச னன்போடொத்தெழு சலராசிய
ணைத்தலைதத்திய டைத்தபெருக்கின்ம ணத்தைவிடற்கொரு
கதியேதென

வெண்காயக்கமு முன்காய்க்கமு மின்றேயுத்தியி னன்றாகப்பெரி தறி
வோமென மெச்சொரு வர்க்கொரு வர்க்கதிகப்பட விச்சைகொ
ளச்செய்த சுகலீலையே. (௨௰ கலை)

காதலாய்மிகநினைக்குநெஞ்சமே.

## தொங்கல்களைச்சேர்த்தால் ஒருகவியாகவேண்டும்.

ராமநாயகரைமுற்றுநம்பினேன், ராசகாரியநடத்துநங்கண்மால்
வாமமார்குழலியர்க்குவந்தவேள், மாரிநீருவிசுற்றுகுன்றின்வாய்
சேமமார்தருமுழக்கமண்டவே, சீதவீயிலகுசப்ரமஞ்சமேல்
காமமீறியமுயக்கிலன்றில்போல், காதலாய்மிகநினைக்குநெஞ்சமே.

கிளையாளன் சேது பதிரெகு நாயகன் கிஞ்சுகவா
யிளையார் கலவி யிடத்துநம் மீச னிடத்துமன்றி
வளையாத பொன்முடி சற்றே வளையு மகுடமன்னர்
தளையாடி நொந்தகை காளாஞ்சி யேந்துஞ் சமயத்துமே.

இக்கவி, இவ்வண்ணத்தின்பின் வரைந்திருந்தது. இவ்வண்ணஞ் செய்தவர் ஊர், பெயர், காலமுதலியன விளங்கவில்லை. எழுதுவோராலே நேர்ந்த பிழைகள் பலவாயிருந்தன, அப்பிழைகளாற் சந்தச்சிதைவாயினபடியாற் சந்தச்சிதைவும் பொருட்சிதைவுமில்லாத

படி யென்னறிவிற்கியன்றபடி திருத்தி வெளியிட்டிருக்கிறேன்; இதனினுஞ் சுத்தமானபிரதிகிடைத்தாலடுத்த செந்தமிழில் வெளியிடலாகும்.

## அரும்பதப்பொருள்.

வங்காரம்—பொன்.

பத்திரதத்தன்—தசரதன்.

கொப்பு—கொண்டை.

கப்பம்—அரசிறைப்பொருள்.

தரியலர்—பகைவர்.

இரணம்—போர்.

செக்கணி—சண்டுமெயினடம்.

சிங்கைச் சிலேடை வெண்பாவிலே, "மிக்கசிறைமயிலு மென்பயிர்க்குத் தீம்புனலுஞ் – செக்கணியாடிக்களிக் குஞ்சிங்கையே" எனக்கூறியிருத்தல் காண்க.

சற்பனை—வஞ்சனை.

அளி—வண்டு.

துவர்ப்பிளவு—பாக்குப்பிளவு.

சன்னதம்—ஆவேசம்.

சம்போகம்—புணர்ச்சி.

வருட்டி—வற்புறுத்தி

சலராசி—சலக்கூட்டம்.

காயக்கம்—மோகமயக்கு; மருட்கைவித்தை யெனவும் வழக்குண்டு.

### வண்ணத்தியல் வெண்பா.

எட்டுக்கலையாயிடையிட்டெதுகையாய்க்
கட்டுக்கலைக்குமுக்கண்ணியாய்—முட்டமுட்டத்
தொங்கலுமாகித்தொடையும்பலவாகிப்
பங்குபெறும்வண்ணத்தின்பண்பு

### அகவல்.

முதற்கலைக்கிடுவதுதெய்வச்செயலே
யிரண்டற்கிடுவதுகிளைகொடைவிருது
மூன்றற்கிடுவதுபுகழும்வாகையு
நான்கிற்கிடுவதுநாடுநகரமு
மற்றைப்பாதிநற்றுயிரங்கல்
கல்வியின்மகிழ்தலுங்கழறுவர்வண்ணமே
வேறுதுறையினும்விளம்புவர்புலவர்.

இங்ஙனம்,
திருவாவடுதுறையாதீன வித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய
ரா. சுப்பிரமணியக்கவிராயர்.



# மேலாய்க்குடித் தமிழபிவிருத்திக்கந்தவேள் சங்கத்தைந்தாவதாண்டின் வருடக்கொண்டாட்டம்.

சந்தனப்பொதியச்செந்தமிழ்முனியும், சௌந்தரபாண்டியனெனுந்தமிழ்நாடனும், சங்கப்புலவருந்தழைத்தினிதிருந்த மங்கலப் பாண்டிவளநாட்டில், பலவளங்களும்நிறைந்து தமிழபிமானிகளுக் குறைவிடமாய் விளங்கும் மேலாய்க்குடியென்னும் ஊரின்கண், நமது மதுரைத்தமிழ்ச்சங்க அக்கிராசனாதிபதி ஹில்லைஹனல் ஹானரபில் ராஜராஜேஸ்வரதுரையாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்களைப் போஷகராகவும், அவர்களது அருமைமைத்துனர் ஸ்ரீமத்: எம். வேலுச்சாமித்தேவரவர்களை அக்கிராசனாதிபதியாகவும் அடைந்து அரும்பெரும்பாக்கியங்களைப்பெற்றுவளரும் இச்சங்கம், தனதுபலவகைப்பட்ட துறைகளிலுஞ் செழிப்புற்று, எல்லாம்வல்ல இறைவன் திருவருளால் சென்ற நவம்பர்மீ 16, 17வ களில் சோதுகுடி எம். கே. எம். அப்துல்காதிறுராவுத்தர் சாஹிப்பஹதூர் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஷை மேலாய்க்குடியைச்சார்ந்த திருச்சண்முகபுர விஜய மண்டபத்தில் வெகுவிமரிசையாக நடைபெற்றதானது தமிழகத்துக்குப் பெருமகிழ்ச்சி தரத்தக்கதே. இவ்வைந்தாவதாண்டு நிறைவைக் கொண்டாடிக் களித்தற்பொருட்டு இச்சங்கத்தினங்கத்தினரும் ஏனைத் தமிழபிமானிகளும் பலவிடங்களினின்றும் தந்தம் தேகசிரமத்தை யொருசிறிதும் பாராட்டாது வந்து சபையில் ஒன்றுகூடியளித்த அற்புதக்காட்சியானது தங்கள் தாய்மொழியும் தனிமொழியுமாகிய தமிழபிவிர்த்தியில் அன்னவர்கட்குள்ள பேரபிமானத்தைக் காட்டியதோடு, இச்சங்கத்திற்கு இனியுண்டாகும் பேரபிவிர்த்திக்கும் பெருமைக்கும் அறிகுறியாகவும் தோற்றிற்று. இத்தகு சிறப்புப்பெற்ற வித்வக்கழகத்தின் முன்பு (1) இரசாயனம் (2) வியவசாயம் (3) மனமடக்குமுறை (4) ஒற்றுமை (5) பரோபகாரம் (6) பக்தி (7) வாய்மை (8) நன்றிமறவாமை (9) அறம் (10) தமிழ்மொழியின் தளர்ச்சியும் வளர்ச்சியும், என்னும் அரியவிஷயங்களைப்பற்றி கனம் V. காசிவிஸ்வநாத பிள்ளையவர்கள் (1) கனம் எம். கே. மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் (2) ஸ்ரீமத் A. சுந்தரராஜையங்கார் அவர்கள் (3) கனம் இரங்கசாமி

பிள்ளையவர்கள் (4) கனம் கண்ணுசாமிபிள்ளையவர்கள் (5) கனம் P. சிவசாமிசேர்வையவர்கள் (6) கனம் V. காசிவிஸ்வநாதபிள்ளையவர்கள் (7) கனம் மாணிக்கவேலுபிள்ளையவர்கள் (8) கனம் சிவஞானம்பிள்ளையவர்கள் (9) கனம் P. சிவசாமிசேர்வையவர்கள் (10) என்னும் தமிழறிஞர்கள் முறையே "கேட்டார்ப்பிணிக்குந்தகையவாய்க்கேளாரும்-வேட்பமொழிவதாம்சொல்" என்ற பொய்யாமொழிக்கிலக்காய், சுருக்கமாயும் இனிமையாயும் பிரசங்கித்தனர். அன்னவர்களது பிரசங்கமுடிவில் சபாநாயகர் மேற்கண்ட ஒவ்வொருவிஷயங்களுக்குமுரிய தமது அபிப்பிராயத்தைப் பற்பல மேற்கோள்களுடன் நன்குவிளக்கிக் காட்டிச் சபையைக் களிப்பித்தனர். முடிவில், சபாநாயகரவர்கள் அடியிற்குறிப்பித்துள்ள மங்களவாழ்த்து அகவற்பாவை வாசித்துப் பல்லாண்டுகூறி நமது இந்திய சக்கரவர்த்திப் பெருமானும் பிரிட்டிஷ் மன்னருமாகிய ஜியார்ஜ் அரசருக்கும், செந்தமிழ்வளர்க்கும் சிறப்புறு வள்ளலும் சேதுபதிமன்னர்பிரானுமாகிய மாட்சிமைபொருந்திய ராஜராஜேச்வரதுரையாகிய முத்துராமலிங்கசேதுபதியவர்கட்கும், இச்சங்க அக்கிராசனாதிபதியாகிய செந்தமிழ்ச்செல்வர் ஸ்ரீமான் எம். வேலுச்சாமித்தேவர் அவர்களுக்கும், முறையே மும்மூன்று வந்தனஞ் செலுத்தி ஆனந்தகரகோஷத்துடன் தமதாசனத்திலமர்ந்தனர்.

சங்க அக்கிராசனாதிபதியவர்கள் சபாநாயகருக்கு வந்தனோபசாரம் வழங்கி, சபையோர்கட்கெல்லாம் சந்தனபுட்பதாம்பூலமளிப்பிக்கச் சபையோர் மிக்க மணக்களிப்புடன் தத்தமிருக்கைக் கெழுந்தருளினர்.

### மங்களவாழ்த்து.

பூவுலகத்திற்புண்ணியமிகுத்ததென்
றவரும்புகழுவின்றும்வழங்கும்
ரதகண்டத்திற்பன்னலம்பழுநிய
ரமலிபாண்டிவளநாடதனில்
டலம்பதியின்குணதிசையகத்துச்
ர்சால்சிறப்புமோர்சால்வளனு
மலைபடுபொருளுமலைபடுபொருளுங்
காடுபடுபொருளு நாடுபடுபொருளு
கர்படுபொருளும்புகாறச்செறிந்து
தலைமயக்குற்றநிலைசால்வளனும்
அளவிலாப்பொருளுமளப்பரும்போகமும்

## ஒரு வருடக்கொண்டாட்டம்

பளகிலாதெய்தியபான்மைத்தாகி
நன்னூலாயநன்னூல்பலவும்
தொன்னூல்முதலதொன்னூலனைத்தும்
ஒல்காப்பெரும்புகழ்த்தொல்காப்பியனருள்
தொல்காப்பியமும்தொல்காப்பியமும்
பல்காற்பயின்றசொல்லேருழவர்
ஒருங்குசேர்ந்திருந்தருங்கலையாயும்
ஆன்றோராதிசான்றோருடைத்தாய்
நிதிக்கோனகருநிகரிலாமுகலைப்
பதிக்கோராசாய்ப்பாருலகுவக்கும்
நற்றமிழ்க்கூடல்நகர்த்தமிழ்ச்சங்க
முற்றியதவத்தான்முதன்மைவகித்தோன்
கல்வியிற்கம்பன்கவின்மலரம்பன்
பல்வகைத்திறனுஞ்சொல்வகையமைந்தோன்
ஆரியங்கன்னடமாங்கிலந்தெலுங்கு
சேரியல்தேர்ந்தசிறந்தபல்புலவரும்
அமிழ்திலுமினியதமிழ்மொழிக்கடலுள்
இலக்கியமிலக்கணமென்றபன்மணிகளைத்
துலக்கியநால்வகைத்தூயபாவலரும்
பகர்ந்தசெழும்பிரபந்தமனைத்தும்
உகந்தணிந்தவரவர்க்குறுபொருளுதவுவோன்
எந்தநேரமும்வந்தபாவலரைப்
பக்கத்திருத்திமிக்கசொற்கேட்டு
மனமிகமகிழும்வள்ளற்கோமான்
உத்தமோத்தமர்களுவகைபூத்தழைக்க
எத்தனையோசபைக்கிறைமைவகித்தோன்
கோதுபதியாக்குணங்குடிகொண்ட
சேதுபதிகடிலதசிம்மேறு
மன்னுபல்கவிஞர்துன்னியவறுமை
இராமலிங்ககற்றுமெங்கோன்முத்து
ராமலிங்கராஜராஜேச்வரன்
அருமைமைத்துனன் அருங்கலைவிநோதன்
மன்பெரும்புலவர்மனங்குதுகலிப்பக்
கற்பகமென்னப்பொற்புறவழங்குவோன்
வறுமைப்பிணிமுதல்வருந்துயரகற்றி
நம்பிவந்தடைந்தோர்நாடியவனைத்தும்
நிறைவேற்றிவைத்தும்நேருற்றவரை
அன்னைதந்தைபோலருள்செய்துகாத்தும்
நல்லறமானவில்லறத்துடனே
யிருந்துபல்வகைநலம்இன்பமாய்ச்செய்வோன்

மண்டலம்போற்றிவழுத்துசம்பன்னன்
அரியசற்குணன் அன்புமிக்குடையோன்
சாந்தசீலன் தருமநன்னெறியினன்
திரண்முத்தரும்பிமரகதங்காய்த்துப்
பவளம்பழுத்ததிவள்பசுங்கமுகப்
பொதும்பர்புடைசூழ்ந்துததும்புசீர்வளனூர்
கடிகமழ்மேலாய்க்குடிநகர்புரப்போன்
பூமிபாலகன்புரந்தரன்வேலுச்
சாமிகாவலன்றலைமைபூண்டிங்
கிம்மைச்செய்ததுமறுமைக்காமெனும்
அறவிலைவாணிகன்ஆஅய்அல்லன்
என்னும்புலவர்பண்ணிப்புகழும்
வள்ளற்பெயராற்றெள்ளியமேலாய்க்
குடிநகர்தன்னில்வடிவுடன்வளரும்
கந்தவேளின்கருணைமிக்கூரும்
தமிழபிவிருத்திக்கந்தவேள்சங்கத்
தைந்தாம்வற்சரமஹோற்சவமாகும்
இந்நாள்நன்னாளாகுகவீண்டு
குழுமியிருக்கும்விழுமியபலரும்
பலநலம்பெருகிப்பல்லாண்டுவாழ்க
வாணர்வாழ்கவண்டமிழ்வாழ்க
மாதவர்போற்றுஞ்சேதுகாவலர்
ஞாயிற்றினொளிபோனாளும்வாழ்க
கந்தவேட்குகந்தகந்தவேள்சங்கம்
எந்நாளுமிந்நன்னாள்போல்
இனிதுகூண்டுநனிமகிழ்ந்தோங்குக
சங்கத்தலைவருஞ்சங்கத்தவர்களும்
பொங்கித்தழைத்துப்பொலிவுடன்வாழ்குக
தருமமீறிப்பெருவடர்புரிந்த
ஜெர்மனரசின்கர்வமழித்திவ்
வுலகெலாமேத்துமுயர்புகழ்நிறீஇய
ராஜகெம்பீரன்ராஜராஜேஸ்வரன்
வெற்றிவிக்ரமன்விஜயமார்த்தாண்டன்
ஐந்தாம்ஜியார்ஜு அரசுங்கோனும்
ஊழியூழிவாழிவாழி
எல்லாம்வல்லஇறைவன்றிருவருள்
பாலித்தருள்வான்பரவுதுமியாமே.

ஒரு செந்தமிழ்நேயன்.

---

உ

கடவுள் துணை.

# பண்டைத்தமிழரசர்களதாட்சி. *

உலகத்திலே மக்களாய்ப்பிறந்தார் ஒவ்வொருவருந் தற்காலந் தத்தந் தேசத்தினுடையவும் வகுப்பினருடையவுமாகிய பண்டை †நாகரிகங்களை ஆராய்ந்தறிவதிலேயே விருப்பமுள்ளவர்களா யிருக்கிறார்கள். இங்கிலேயிற் பாரமார்த்திகஞானத்தையே பெரிதெனக்கருதியுள்ள இந்தியர்களாகியநாமும்,-நமது பண்டைப்பெருமைகளை உண்மைக்கு மாறுபாடாகத்திரித்துணர்த்தப்புகுந்த சிலபல புத்தகங்களைக்கண்டதும்,-நமது பண்டைப்பெருமைகளின் உண்மையை ஆராய்ந்தறியுமாறு சரித ஆராய்ச்சிசெய்யத் தொடங்கவேண்டிய தவசியமாயிற்று.

மனிதனாகப்பிறந்த எவனும் எல்லாத்தேசங்களின் முழுவிவரங்களையுந்தெரிந்துகொள்ள முடியாவிட்டாலும்,-அனைத்தையும் தெரிந்துகொள்ளவேண்டியதுதான்முதன்மையானது,-தான்பிறந்த தேசத்தின் முன்னைவரலாறுகளையேனுந்தெரிந்துகொள்ளவேண்டியது மிக அவசியமானதொன்றாம். ஆதலின், நாமும் நமது தாய்நாடாகிய தண்டமிழ் நாட்டைப்பற்றித் தெரிந்துகொள்ளவேண்டியதொருதலையாகின்றது.

நிற்க, ஒருதேசத்தினுடைய அல்லது ஒருவகுப்பினுடைய பண்டைப்பெருமைகளை அறிந்துகொள்வதற்கு முதலிலே அத்தேசம் அல்லது அவ்வகுப்பினுடைய கல்வி, அறிவு, ஒழுக்கம், வழக்கம், உணவு, மதக்கோட்பாடு, கைத்தொழிற்பெருக்கம், வியாபாரப்பெருக்கம்,

* இது கும்பகோணம், கவர்ன்மெண்டுகலாசாலைத்தமிழ்ச்சங்கத்திலே (14—12—17-லே) பென்ஷன் ப்ரொபஸர் ஸ்ரீமான் K. சுந்தரராமையர் அவர்கள் தலைமையின்கீழ்க்கூடிய விசேஷக்கூட்டத்திலே செய்யப்பெற்ற உபந்யாசமாகும்.

† நாகரிகம்-கண்ணோட்டம். இப்பதம் நமது தமிழ்நாட்டிற்குப் புதுவதன்றென்பதும், வெகுகாலத்திற்குமுன்னரேயே இத்தகைய அரியபொருளில் நந்நாட்டாரால் வழங்கப்பெற்றுவந்ததென்பதும், சங்கத் தொகைநூல்களுள் முதலாவதாகிய நற்றிணைநானூற்றின் 'முந்தையிருந்துநட்டோர்கொடுப்பி, னஞ்சுமுண்பர்நனி நாகரிகர்' என்ற (௩௫௫) செய்யுளடிகளால் விளங்கும். இங்கு, இக்கருத்தையே அடியொற்றிப்பயின்று வரும் 'பெயக்கண்டு நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர்' என்ற (௫௮0) திருக்குறளும் அதனுரையும் உய்த்துணரற்பாலன.

அரசாட்சி ஆகிய இவற்றை ஆராயவேண்டுவது அவசியமாகின்றது; மிக்க நாகரிககாலத்தன்றி இவையனைத்தும் நன்னிலையில் அமையாவென்பது முற்காலத்தற்கால மேதாவிகளதுகொள்கையாதலின்.

அங்ஙனம் ஆராய்ந்தறிவதற்கு அவ்வக்காலங்களிலே நடந்தசெய்திகளைத் தம் பின்வருவோர்க்குத் தெரிக்கும்வண்ணம் பண்டைப் பெரியோர்களாலே தொன்றுதொட்டு எழுதிவைக்கப்பெற்றுள்ள பழையநூல்களே போதியகருவிகளாகின்றன. இஃதெத் தேசத்தார்க்கும் ஒப்பமுடிந்ததொன்றாம். ஆதலின், அம்முறையே நாமும் நமது பண்டைத் தண்டமிழ்ச்சான்றோர்களாலே இயற்றப்பெற்றனவும், இற்றைச்சுமார் இரண்டாயிரவாண்டுகளுக்கு முற்பட்டகாலத்தே நடந்தசெய்திகளை உள்ளவாறே கூறுவனவுமான சங்கத்தமிழ்நூல்களிலிருந்து ஒருவகையாகத் தொகுக்கலாம்.

இனி, முறையே ஆராயவேண்டுவன கல்விமுதலாய பலவுளவேனும், ஒரேகாலத்தில் அனைத்தையும் ஆராய்வது முடியாததாதலானும், ஒருவகையாலேனும் எவ்வாறு நமதுபண்டைப் பெருமைகளிருந்தன என்பதைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்னும் அவா நமக்கு மிக்குளதாதலானும், அனைத்திற்கும்ஆதியாகிய அரசாட்சியைக்கூறுமுகத்தான் ஒருசிறிது நமது ஆவல்நிறைவேறுமென்பதுகருதி ஈண்டுப் ‘பண்டைத்தமிழரசர்களதாட்சி’ என்ற தலையங்கம் எடுத்துக்கொள்ளப்பெற்றது.

இத்தலையங்கம், பண்டைக்காலத்திருந்த தண்டமிழரசர்களது அரசாட்சி எவ்வாறிருந்தது என்பதைத்தெரிவிக்கப்புகுந்த ஒரு கட்டுரை எனப்பொருள்படும்.

இனி, இத்தலையங்கத்தைப் பண்டைக்காலம் என்பது யாது? அக்காலத்திய அரசராவார் யாவர்? அவர்களது இயல்பு எவ்வாறிருந்தது? அவர்கள் எத்தகைய பழக்கமுள்ளவர்களாயிருந்தார்கள்? எவ்வாறு அரசாண்டுவந்தார்கள்? என்பனவற்றை ஆராயுமுகத்தான் ஒருவகையிற் பூர்த்திசெய்யலாம். இம்முறையே அடியேற்கெட்டியவளவு சிறிது கூறுவன்.

கால ஆராய்ச்சிக்குத் தற்காலம் நம்மவர்க்கு முதற்கருவியாகவுள்ளது இறையனார்அகப்பொருளுரையிற்கண்ட முச்சங்க வரலாற்றுக்



குறிப்பே. இத்துணைகொண்டாராய்ந்த பல பெரியோர்கள் பலமாதிரியாகத் தீர்மானித்திருக்கிறார்கள். அவ்வரலாற்றுள் தலைச்சங்கப்புலவரென முரஞ்சியூர் முடிநாகராயர் அறியப்படுகிறார். அவர் பாரத யுத்தகாலத்தில் இருந்தவர் என்பது இரண்டாம் புறப்பாட்டால் விளங்குகின்றது. பாரதகாலம் இற்றைக்கு ஐயாயிரத்து இருபதாண்டுகளுக்கு முற்பட்டதென்பது நமதுபண்டைப்புராண இதிகாசங்களாற் கண்ட உண்மை. இவ்வுண்மை இறையனார்களவியலுரையிலே காட்டப்பெற்றுள்ள வருஷங்களோடு முரண்படுகின்றது. எனினும் ஈண்டு எனது ஆசிரியரவர்கள் கூறியவற்றைக்கொண்டு ஒருசிறிது பொருத்திக் காட்டுவன். அதுவருமாறு:—

“களவியலிலே சங்ககாலங்களைக் கூறியிருக்கும் மூன்றிடங்களிலும் ‘முன், முன், முன்’ என்ற ஒருசொல்லை முறையே பெய்துகொண்டு படித்தல் பொருத்தமானது. அங்ஙனம் சேர்த்துக்கொண்டால் அது தலைச்சங்ககாலத்தைச் சற்றேறக்குறைய ஐயாயிரத்துமுந்நூறு வருஷங்களுக்கு முந்தியதென்று காட்டிவிடும். ஏனெனில், இறையனாரகப் பொருளுரையிலே கி. பி. ஒன்பதாம்நூற்றாண்டிலே நடந்த யுத்தச்செய்திகள் பயின்றுவருதலின் என்க.” இவ்வாறுபார்த்தால் அது, பாரதகாலத்தில் முரஞ்சியூர் முடிநாகராயர் இருந்தார் என்ற செய்தியை உறுதிப்படுத்துகிறது. இங்ஙனமேபார்க்கக் கடைச்சங்ககாலமும், பண்டையோர்நட்ட தண்டமிழ்ப்பயிர்க்கோர் கொண்டலென்னக் குவலயத் துதித்துக், கற்போர்க்கெளிதிற் கைவரச்செய்வானச்சிற்பதித்திறை மெச்சும்புகழமை, ஐயரவர்களாகு மாரியப், பெரியரா மஹாமஹோ பாத்தியாயப்பேராசிரியரவர்களது குறிப்பிற்கொத்துவருவதாகும். இதனால் நமது செந்தமிழ்நாடு சற்றேறக்குறைய ஐயாயிரவாண்டுகளுக்குமுன்னரேயே மிக உன்னத நிலையிலிருந்ததென்பது போதரும்.

இனி, “நளியிரு முந்நீர் ஏணி யாக
வளியிடை வழங்கா வானஞ் சூடிய
மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்
முரசு முழங்கு தானை மூவர்”

என்றதனால் அக்காலத்திய தமிழ்நாட்டரசர் ‘சேர, சோழ, பாண்டியர்’ என மூவராவர் என்பதாம். இங்கு வடமொழி ஆதிகாவியமாகிய

ஸ்ரீமத் வால்மீகிராமாயணமும், ஸ்ரீமத் மஹாபாரதமும், திருக்குறட் பரிமேலழகர் உரை முதலாய பிறவும் உய்த்துணரற்பாலனவாம்.

அவ்வரசர்கள், 'தங்களுக்குக்கிடைத்த பரம்பரையாகவந்த அவ்வரசச் செல்வத்தை விதிக்கடவுளாலே கொடுக்கப்பெற்றதென்றும், குடிபுரவிரக்குங் கூறிலாண்மையுடையரா யிருப்பின் அவ்வரசர்க்கு அரசாட்சி மிக்கபாரமானதாயிருக்குமென்றும், விழுமிய குணமுடையவராயிருப்பின் அவர்க்கு அது மிக்கநொய்தாயிருக்குமென்றும், குடிபழிதூற்றுங் கோலராக இருத்தல் கூடாதென்றும் எண்ணியிருந்தார்கள் என்பது அறியக்கிடக்கின்றது. இங்கு 'மூத்தோர் மூத்தோர்க் கூற்றம் உய்த்தென' என்ற முதற்குறிப்புள்ள சோழன் நலங்கிள்ளி என்பானது புறப்பாட்டும், 'பொருந்திய, என்னிழல் வாழ்நர் சென்னிழற் காணாது; கொடியனெம்மிறையெனக் கண்ணீர்பரப்பிக், குடிபழிதூற்றுங்கோலேனாகுக' என்ற பாண்டியன் நெடுஞ்செழியனது புறப்பாட்டடிகளும் ஆராயத்தக்கன.

அவர்கள், அருளும் அன்பும் நிறைந்த பெரியோர்களது சேர்க்கையையே பெற்றிருந்தார்கள். தங்களுடைய முன்னோர்கள் பின்பற்றிவந்த நீதிநூல்களையும் பிற அறிவுநூல்களையுங் கற்றுவந்தார்கள். யாகாதிகருமாக்களைச் செய்துவந்தார்கள். தக்கார்க்குத் தக்காங்கீத்து வந்தார்கள். இத்தகைய பொதுத்தொழில்களோடு ஆயுதப்பயிற்சி, பலகைவரைவாட்டல், குடிகளைக்காத்தல் ஆகிய சிறப்புத்தொழில்களிலும் வழுவாதிருந்தார்கள்.

அவர்கள், நல்லறிவாளர்களது சேர்க்கைபெற்றிருந்ததனால் சபையிலேபேசப்பெறும் அரியவிஷயங்களையும் அறியவல்ல புத்திசத்தியுடையவர்களாகவும், விரைவிலே முடிக்கவேண்டிய காரியங்களைச் செய்து முடிப்பதிற் சோம்பலில்லாதவர்களாகவுமிருந்துவந்தார்கள். அன்றியும், அன்னார் தங்குடைக்கீழ்வாழுங் குடிகளை எவ்வகைத்துன்பமும் அடையாவண்ணம் உயிர்போலக் காத்துவந்ததோடு அவர்கள் மாட்டுச் சந்திரனைப்போன்ற கருணையும், மேகத்தைப்போன்ற வண்மையுமுள்ளவர்களாயிருந்துவந்தனர்.

ஒவ்வொரு நாளின் பகற்பொழுதையும், முதற்பத்துநாழிகைகளைப் பெரியோர்பாற் பலவகைப்பட்ட அறவுரைகளைக் கேட்டலாலும்,



இடைப்பத்துநாழிகைகளைத் தம்மைக்காணவந்த பரிசிலர்க்குவேண்டுவனவற்றைக்கொடுத்தல், விருந்தினர் சுற்றத்தார்முதலியவர்களுடன் உண்ணல் ஆகியவற்றைச் செய்வதாலும், கடைப்பத்துநாழிகைகளை மந்திரிமுதலாயவர்களுடன் அரசாட்சி சம்பந்தமான ஆலோசனைகளைச் செய்வதாலும் போக்கிவந்தார்கள்.

பால் தன்னினிப்புமாறிப் புளிப்பினும், சூரியன் தன்னொளிமாறி இருளினும், நான்கு வேதங்களின் ஒழுக்கம் வேறுபடினும் தங்களது இயற்கை அறிவினின்று சிறிதும் வேறுபடாதவர்களும், அரசன் தவறிய காலத்தில், அவன் தம்மை மதிப்பதற்காக,—அவன் சொல்வதையே 'சரி சரி' என்றுகூறித் தங்களுடைய கடமையை மறவாது அப்பொழுதே அவனுடைய தவற்றை எடுத்துக்காட்டி இடித்துரைத்து அவனைத்திருத்தக் கூடியவர்களும், முக்காலங்களையும் முன்னருணர்ந்து நன்கு ஆராய்ந்து உறுதியாயினவற்றைக் கூறுகின்றவர்களும், நால்வகையுபாயங்களையும் இடமறிந்து காலமறிந்து உபயோகிக்குஞ் சதுரர்களுமாகிய உத்தமமந்திரிமார்களென்னுஞ் சுற்றத்தாரைப் பெற்றிருந்தார்கள். ஏனைய படை, குடி, கூழ், நட்பு, அரண் ஆகிய ஐவகை உறுப்புக்களை ஒருங்கேபோற்றி வந்தார்கள்.

மந்திரிமார், கருமாதிகாரர், சுற்றத்தார், கடைகாப்பாளர், நகரமாக்கள், படைத்தலைவர், இவுளிமறவர், யானைவீரர் என்ற எண்பேராயத்தை யுடையவர்களாயிருந்தார்கள். (இது, தற்காலத்திலுள்ள சட்டசபையைப்போன்றதுபோலும்.)

மந்திரிமார், புரோகிதர், ஒற்றர், சேனாபதியர், தூதர் ஆகிய ஐம்பெருங்குழுவையும் பெற்றிருந்தார்கள். (இது, தற்காலத்திய நிர்வாக சபையைப்போன்றதுபோலும்.)

இத்தகைய பெரியோர்களுடன் கலந்தே அரசாண்டுவந்தார்களாகையால், அவர்கள் தங்களது நாட்டிலுள்ளோர் எவ்வகைத்துன்பமுமின்றி இனிது வாழ்வதற்காகவும், செங்கோல்கோடாது நடைபெறுவதற்காகவும் தம்மிடம்வந்து முறைகூறுவோர் அனைவர்க்கும் எளிதிற் காட்சிகொடுத்து அவர்களோடு அளவளாவி இனிமையாகப்பேசி அன்னார் கூறிய அனைத்தையும் முற்றக்கேட்டுத் தீரஆராய்ந்து தக்கது செய்து வந்தார்கள்.

தங்களிடத்தில் ஏதேனும் வழக்குவருமாயின் அவ்வழக்கிலே சம்பந்தப்பட்டவர்களைக் கவனித்து ‘இவர் நம்மைச்சார்ந்தவர் ஆதலின் இவரது குற்றத்தைப்பொறுத்து இவரை மன்னித்தல்வேண்டும். இவர் மக்குப்புறம்பானவர் ஆதலின் இவரது குணத்தையுங் குற்றமென்றுரைத்தல் வேண்டும்’ என்று எண்ணிக் கோல்கோடாது துலாக்கோல் போல நடுவுநிலைமையிலேயே நின்று நீதிசெலுத்திவந்தார்கள். இங்கு, மந்திரிமார்களாற் பலவழிகளாலுங் குற்றமற்றவனென நிரூபிக்கப்பெற்றும் அதற்குடன்படாது தனது ஒரேமகனைத் தேர்க்காலிலிட்டுறைக்கத்துணிந்த மனுச்சோழன் சரிதமும், உண்மையையறிவான் தட்டிய குற்றமற்ற தனதுகையைக் குறைத்த பொற்கைமாறன் சரிதமும் பிறவும் உய்த்துணரத்தக்கன.

அவர்கள், தங்களது தேசத்தின் பொருளாதாரத்திற்கு இன்றியமையாதனவாகிய உழுதொழில், கைத்தொழில், பண்டமாற்றல் ஆகியவற்றை விருத்திசெய்து தேசத்தை முன்னேற்றிவந்தார்கள். இது, சோழன் கரிகாற் பெருவளத்தானைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்ற புலவர்பெருந்தகையாராலே பாடப்பெற்றதும், பத்துப்பாட்டினுள் ஒன்பதாம் பாட்டாயதுமாகிய பட்டினப்பாலையிற் பயின்றுவரும் புகார்ப்பட்டினத்தைச் சிறப்பிக்கும் அடிகளால் இனிது விளங்கும். இதற்கு வேறுபல சான்றுகளுமுள.

அவர்கள், நீரிலே கப்பல்கள்மூலமாயும், நிலத்திலே வண்டிகள் மூலமாயும் நடக்கும் ஏற்றுமதி இறக்குமதி ஆகிய பண்டமாற்றல்களால் வருகின்ற சுங்கப்பொருள்களையும், வழியற்றவர்கள், அறிவற்றவர்கள் ஆகிய இவர்களுடைய பொருள்களையும், குடிகளுடைய நிலவருவாயில் ஆறில் ஒருபங்கையும், ஓரளவிற்கு மேற்பட்ட பூமியின்கீழுள்ள புதைபொருள்களையும் தங்களுடைய பொருள்களாகக் கருதிவந்தார்கள். இங்குப் பதினெண்கீழ்க்கணக்கினுள் ஒன்றாயதும் பொய்கையாராற் பாடப்பெற்றதுமாய இன்னிலைப் பதினேழாம்பாட்டாராயத்தக்கது.

அவர்கள், ‘ஒருமாநிலத்திலேவிளைந்தநெல்லை முறைப்படி அறுத்துக்கொணர்ந்து சேர்த்தால் அஃதொரு யானைக்குப் பலநாளுணவிற்காகும். அங்ஙனமின்றி அவ்யானையே நேரில் வயலிற்சென்று தின்னுமாயின் வாய்புகுவதனினுங் காலாற்கெடுவது அதிகமாகும். வண்டி ஓட்டுவோன் நேரியவழியிற்செலுத்தாது தவறிநடப்பானாயின் அந்த வண்டி பகையாகிய சேற்றிலகப்பட்டுக் கெட்டுவிடும்’ என்ற பலவகைப்பட்ட நீதிகளை நன்குணர்ந்துகொண்டு குடிகளுக்குச் சிறிதுங் கஷ்டமின்றிக் காலத்திற்கேற்றவாறு வரிகளை வசூல்செய்து வந்தார்கள்.



அவர்கள், இவ்வாறு வரும் தங்களுடைய பொருள்களைத் தருமங்காரணமாக வறியர்முதலாயினார்க்கும், பொருள்காரணமாக நால்வகைச்சேனை, பிரிந்தார்ப்புணர்த்தல், புணர்ந்தார்ப்பிரித்தல் முதலியவற்றிற்கும், இன்பங்காரணமாக இளமரக்கா, செய்குன்று, முதலாயவற்றிற்குமாகச் செலவிட்டு இம்மையிலனுபவிக்கவேண்டிய மூன்று புருடார்த்தங்களையுங் குறைவின்றி அனுபவித்துவந்தார்கள். இத்துணையுங் கூறியவாற்றால் நமது தலையங்கம் ஓராற்றான் விளக்கப்பெற்றதாம்.

கும்பகோணம் } ஒ. சா. வேங்கடராமன்,
27-12-17. } தண்டமிழ்த்தொண்டன்.

---

உ

## நாமகள் பதிகம். *

1. பூமிசைக்கலைகட்கெல்லாம்புகலிடமாகித்தூவெண்
பூமிசைவீற்றிருக்தும்புகழ்மிகுபாவலோர்செந்
நாமிசைநடம்புரிந்தும்ஞாலம்விளக்கம்செய்யும்
நாமகள்நலங்கொள்பொற்றாள்நாளும்நாம்வணங்கிஉய்வாம்.

2. பொருளியல்அறியாமாந்தர்புகழ்செல்வப்பொருளீட்டம்
மருளினைப்பயக்கும்;மற்றம்மருளறநீக்கிச்சிந்தை
தெருளுறச்செய்யும்வாணிதிருவுளத்தூற்றெடுக்கும்
அருள்பெறுபுலவனுக்கும்அரியநூற்பொருளின்செல்வி.

3. பூவினுக்கரசர்பூணும்புகழெலாமவர்தம்நாட்டுள்
மேவுறும்;ஆண்டும்அச்சீர்விரைவினில்குறைந்துமங்கும்
நாவினுக்கரசியின்கண்நல்லருள்வாய்க்கப்பெற்ற
பாவினுக்கரசர்சீரோபாரெலாம்பரவிப்பல்கும்.

4. படிக்குநல்லுயிரன்னாய்!நின்பதிதன்கைவருந்திநாளும்
தொடக்குறப்படைத்தல்செய்யுந்தொல்லுலகிருளாற்சூழும்
ஜடப்பொருட்பிண்டமன்றோ?கலைசரஸ்வதி!அருட்பெருக்கில்
விடற்கருங்கலையின்சோதிவிரித்தெங்கும்விளக்கிலாயேல்.

5. தேவிபாரதிகரத்துச்சேர்ந்தொளிர்றாலும்செம்மை
மேவியயாழும்தெய்வமேனியின்எழிலும்மூன்றும்
தீவியதமிழிலென்றும்திகழியவிசைகூத்தென்னும்
மூவகைப்பாகுபாட்டைமுறைமுறைவிளக்குமன்றே.

6. செந்தமிழ்க்கடல்நீருண்டுசீரியற்புலவரென்னும்
கந்தரம்முழங்கித்தண்ணென்கவிமழைபொழியுந்தோறும்
சிந்தையுளுவந்துவந்துதிருநடம்புரியும்பைங்கட்
சுந்தரமயிலாம்வாணிதுணைமலர்ப்பாதம்போற்றி.

7. பூமகள்செருக்கின்முன்னாள்புலந்துனைப்பிரிந்தாளேனும்
ஆமவளிற்றைநாள்நீ அருளகல்லறிவுபெற்று
நாமகளே!உன்னோடுநட்புப்பாராட்டலானாள்
பூமிசையிருவீர்நட்பும்பொலிகஎந்நாளும்மாதோ.

8. கரும்பென்கோகற்கண்டென்கோகாய்ச்சியபாகென்கோயான்
விரும்பியெவ்வெவரும்வேண்டும்தேனென்கோவின்னேருண்
ணும், அரும்பெறலமுதேயென்கோ அன்னைபாமகள்கண்ணேக்
கின், பெரும்பயனைஎய்தும்பேசருமின்பந்தன்னை.

[என்கோ—என்பேனோ?]

9. பொங்குநீர்க்கடல்சூழ்தந்தபுவிநிறைமாந்தரெல்லாம்
தங்களுட்பிறப்பால்போரால்சமயபேதத்தால்மற்றும்
இங்கிவைபோல்வபற்றால்எத்துணைமுரண்பட்டாலும்
எங்கும்நாமடந்தைபொய்யாத்தெய்வமென்றேத்துகின்றார்.

10. வெள்ளுருஅணிகள்ஆடைவிளங்கவெண்முறுவல்தோன்ற
வெள்ளிதழ்மலரின்மேலோய்!வேண்டுவன்வரமொன்றுன்பால்
வெள்ளியஅறிவுள்ளோரும்வேறுளரென்போல்வாரும்
ஒள்ளியஉணர்வோடுன்தாட்குறுதொண்டுபுரிகவென்றே.

வே. முத்துஸ்வாமிஐயன் எம். ஏ. எல். டி.

மதுரை.

*இப்பதிகம் 15—10—18-இல் (விஜயதசமியன்று) மதுரை ஆங்கில கலாசாலைத் தமிழ்ப்பண்டிதர் சங்கத்தின் விசேஷக்கூட்டத்தில், மதுரைத் தமிழ்ச்சங்கத்துப் பாண்டியன் புத்தகசாலையில் ஸரஸ்வதிதேவிக்குப் புனர்பூஜை நடந்தேறியவுடன் ஆக்கியோரால் படித்துப் பொருள் கூறப்பட்டது.



வீரவிஜயர்
(1413—1419)
(மனைவி-நாராயணம்பிகை)

தேவராயர் II
1419—1444?

ப்ரதாபதேவராயர் } ?
1444—1449

மல்லிகார்ஜுனர்
1452(3?)—1464 (5?)

விரூபாக்ஷர் I
(1470—1471)

ராஜசேகரர்
1. (1468—1469)
2. (1479—1480)
3. (1486—1487)

விரூபாக்ஷர் II
1483—1484)

ிப்பு:—(1) 1476—1477 ப்ரௌடதேவராயர் (யார்தெரியவில்லை) (2) மல்லிகார்ஜுனர்காலமான 1452 முதல் பரம்பரைக்ரமமும், காலக்குறிப்புகளும் சரியானபடி தெரியவில்லை.

## விஜயநகர அரசர்

[2-ம் வம்சாவளி]
திம்மர்
(மனைவி-தேவகி)

ஈசுவரர்
(மனைவி-புக்கம்மாள்)

நரசிம்ம (நரச)
(1498-ல் ராஜ்யத்தைப் பிடித்துக்கொண்டார்)
டி 3 மனைவிகள்

(1) [திப்பாஜி அம்மாள்]
வீரநரசிம்மர்
(?—1509)

(2) [நாகலம்மாள்]
கிருஷ்ணதேவர்
1510—1530

(மகள்)
டி கணவன்
ராமராயர்

(மகள்)
டி கணவன்
திருமலைராயர்

1542—1565 ராஜப்ரதிநிதிகள்.

(3) [ஓபாம்பிகை]

ரங்கர்
(=திம்மாம்பாள்

சதாசிவராயர்
1542—1567
பேருக்குராஜா
(1565 தலைக்கோட்டையுத்தம்)

அச்சுதர்
1530—1542

வெங்கடராயர்






## விஜயநகர அரசர்கள்

[முதல் வம்சம்]

1336—1343 ஹரிஹரர் I
—1376 புக்கர் I

[கம்பராயர் 1343—1355 சங்கமர் 1356 மேமீ 3வ.]

[நெல்லூர்த்தானசாஸனம்]

1376—1399 ஹரிஹரர் II
1399—1406 (நவம்பர்) புக்கர் II
1406—1412 (1413?) தேவராஜர் I
1412 (1413?)—1419 வீரவிஜயர்
1419—1444(?) தேவராஜர் II
1444—1449 (?)
1452 (3?)—1464 (5?) மல்லிகார்ஜுனர்
1468—1469 ராஜசேகரர்
1470—1471 விரூபாக்ஷர்
1476—1477 ப்ரௌட தேவராயர்
1479—1480 ராஜசேகரர்
1483—1484 விரூபாக்ஷர் II
1486—1487 ராஜசேகரர்

[இரண்டாம் வம்சம்]

1490 நரசிம்மன்
?—நரச (வீரநரசிம்மன்)
1509—1530 கிருஷ்ணதேவராயர்
1530—1542 அச்யுதராயர்
1542—1567 சதாசிவராயர்
(ஆயுள் அளவும் கைதியாக இருந்தார்)

[மூன்றும் வம்சம்]

1542—1565 ராமராஜ் }
1565—1567 திருமலேராயர் } சதாசிவரின் ப்ரதிநிதியாய் ஆண்டார்கள்.

1567—1575 ஷை திருமலைராயர், ராஜ்யத்தை ஸ்வாதீன மாய் அடைந்து அரசனாய் ஆண்டார்.

1575—1586 ரெங்கராயர் II

1586—1614 வெங்கடராயர் I

[ஸூவல்]

1565 தலைக்கோட்டை யுத்தம். விஜயநகரத்தரசன் மஹம்ம தியரால் தோல்வியடைந்தார். இத்துடன் விஜயநக ரும் பாழாயிற்று. இதுவரை மஹோந்நத தசையிலி ருந்து மஹம்மதியரைத் தெற்கே வராது தடுத்து தென் னிந்தியா முழுமையும் ஏக சக்ரமாய் ஆண்டுவந்த விஜயநகர் ராஜ்யமஹிமையும் போய்விட்டது. தெற்கே யுள்ள (விஜயநகரராஜ்யச்) சிற்றரசர்கள் எல்லோரும் சிலவருஷங்களுக்குள் ஸ்வாதீனர்களாகிப் பின்பு, மஹம் மதியரசுக்குச் சிற்றரசர்களானார்கள்.

1565 வங்காள அரசன் ஸூலோமான், ஒரிஸாவை ஜயித்து, வங்காளத்துடன் சேர்த்துக்கொண்டான்.

1571-1576. சாமராஜ உடையார். விஜயநகர் ஆதீனத்தினின்றும் விலகித் தன்மைசூர் ராஜ்யத்தை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டார்.

1570 திருநெல்வேலி ஜில்லாக் கடல்ப்ரதேசங்களில் பஞ்சம்.

[Portugese Records.]

1574. துளஸீதாஸ். ஹிந்திபாஷையில் ராமாயணமியற்ற ஆரம்பித்தார்.

1577. வீரபத்ரன். பந்தல்லா (Bundella.) நாட்டுச்சிற்றரசன். ப்ரத்யோதர். வீரபத்ரன் வருதிப்படி ஜயதேவர் இயற்றிய சந்திராலோகம் என்ற நூலுக்கு உரை எழுதினார்.

1578. (சகம் 1500) சிலைலிபி. மதுரை (திருமலைநாயக்கன்) மண்டபக்கல்தூணில் உள்ளது. திருமலைநாயக்கன் முன்னோரான பெரியவீரப்பனால் கட்டப்பட்டதாய் இதில் எழுதியிருக்கிறது.



1585-1614. வெங்கடபதி. விஜயநகர ராஜவம்சத்தரசன். விஜய நகரினின்றும் சந்திரகிரிக்குத் தலைநகர் இவர்காலத் தில் மாற்றப்பட்டது.

அப்பயதீக்ஷிதர் தன் அபிமானியான வெங்கடபதியர சன் வருதிப்படி குவலயாநந்தம் எழுதினார்.

1586 வரதுங்கராமபாண்டியன் பராக்ரமபாண்டியனுடைய 2-ம் குமாரன்.

—[குவலயாநந்தம்.]

1589 தோடர்மால் மரணம் அக்பர் ஸமஸ்தானத்திலிருந்த கஜானா மந்திரி இவர். ஹிந்து வங்காள ராஜப்ரதிநிதி யாகவும் ஆண்டார்.

1590 நாராயணபட்டபாதர் ஸ்வாஹாஸுதாகரம் என்ற காவ்யம் இயற்றியவர். கேரளதேசத்தில் மேப்புன் னூரில் பிறந்தவர்.

கிருஷ்ணகவி ஷையார் குமாரர். தாராசசாங்க காவ்யம் இயற்றியவர்.

1592 ஒரிஸாவில் ஆண்டகடைசி ஹிந்து அரசன் மஹம்மதி யரால் தோல்வியடைந்தான்.

1595-1602 லிங்கயநாயக்கர் மதுரை நாயக்கர்வம்ச 4-ம் அரசன்.

1596-7 அபுல் பேஸல் 'ஐனி அக்பரி,' 'அக்பர்நாமா' என்ற நூல்களை எழுதிமுடித்தார். இவர் அக்பர் ஸமஸ்தான சரித்திர ஆசிரியர் – 1602-ல் பந்தல்லாத்திருடனால் கொலையுண்டார்.

—[1906 I. R. 421]

1597 விஜயநகர ஸமஸ்தானத்துக்குட்பட்ட நாடுகள்:—

| | நாடுகள். | தலைவர். |
|---|---|---|
| (1) | ஜெஞ்ஜி | கிருஷ்ணப்பநாயக்கன். |
| (2) | தஞ்சை | ? நாயக்கன். |
| (3) | மதுரை | குமாரகிருஷ்ணப்ப நாயக்கர். |

(4) சென்னபட்டணம் ஜகதேவராயர்.
(5) ஸ்ரீரெங்கபட்டணம் திருமலைராயர்.
(6) பெண்ணகொண்டா ?

—[Mackenzi]

1597 [சகம் 1521] சுந்தரமிச்ரர், 'அபிராமாமணி' என்ற (7-அங்க) நாடகம் இயற்றினர்.

1600-11-1 சீமையில், ஈஸ்ட் இந்தியா கம்பனியாருக்கு, எலிஸபெத் மஹாராணியார் வியாபாரப்பட்டயம் அளித்தார்கள்.

160-1609 முத்துகிருஷ்ணப்பநாயக்கர் மதுரை நாயக்கர் வம்ச 5-ம் அரசன்.

1605-1627 ஜஹாங்கீர் தில்லியிலாண்ட முதல் சக்ரவர்த்தி.

1606 ராபர்ட்-டி-நிகோலஸ் வரவு.

1608 துகாராம் ஜனனம் - பிறப்பிடம் புனவுக்கடுத்த இந்திராயணி நதிக்கரையிலுள்ள தேகு என்ற கிராமம்.
1649-முதல் இவர் இருப்பிடம் தெரியவில்லை.

இவர் சிறந்தமஹாராஷ்ட்ர பாகவதர். விடோபருடன் ஐக்கிமாய் விட்டதாயும் சொல்லுவதுண்டு.

1643-ல் சிவாஜி மஹாராஜாவைப்பற்றிக் கவிபாடி இருக்கிறார்.

[1649-ஐ பார்க்கவும்.]

1608 [சகம் 1530=கீலக-சைத்ர, சுக்ல-நவமி ஞாயிறு] ஸ்ரீராமநவமி தினத்தில் ராமதாஸ் ஜனனம்.
இவர் ஆதிப்பெயர்—நாராயணர்.

ஆர். எவ்ஸ். நாராயணஸ்வாமி ஐயர்,
—— மதுரை பி. ஏ., பி. எல்.

பிழைதிருத்தம்

எங்கிலாந்தர்வெற்றியும் இந்தியர்மேன்மையும்

| பாட்டு. | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 1 | 1 | வெண்சுடர் | வொண்சுடர் |
| ,, | 13 | மக்கணன் | மக்கணண் |
| 2 | 4 | மரிந்தனவே | மிரிந்தனவே |
| 4 | 5 | றெழிற்றுரை | றெழிற்றுறை |

கா. ஸ்ரீ. கோபாலாசாரியர்,
கிருஸ்டியன்காலேஜ், சென்னை.

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-கஎ.] காலயுக்தி௵ தைமீ [பகுதி ௩
Vol. XVII. January—February, 1919. No. 3.

## கடவுளுண்டு.

அன்பர்களே ஈண்டெடுத்துக்கொள்ளப்பட்ட விஷயமாவது, கடவுளுண்டென்பது; இப்பதப்பொருளையாராயின், கடவென்னும் பகுதியும், உள்ளென்னுந் தொழிற்பெயர்விகுதியும்பெற்றுக் கடத்தலெனப் பொருள்பெற்றுநின்று தொழிலாகுபெயராய், வற்றல் என்பதுபோல எல்லாவற்றையுங் கடந்துநிற்றலையுடையதாய்நின்ற செம்பொருளையுணர்த்தாநிற்கும்.

இங்ஙனங்கடந்துநின்றதாகிய செம்பொருளை இல்லையென்பாரும், அஃதுண்டென்பாரும், அங்ஙனமுண்டென்பார்களில் தெளிவுக்காட்சியாலுண்மையின்னதெனவுணர்ந்து கூறுவாரும், அச்செம்பொருளைத் திரிவுக்காட்சியாகவுணர்ந்து பலதிறப்படக் கூறுவாரும் பலராவர்.

கடவுளுண்டு எனவே இல்லையென்பாரை மறுத்து, உண்டெனச் சித்தாந்தங் கூறியதாயிற்று.

அங்ஙனமில்லையென்பவர்களிலே மிக்கவர் உலகாயதமதமேற்கொண்டு களிப்பவராம். அவர் மாதர்போகமே முத்தியெனக் கூறுவர். அவர்வாழ்ந்திருக்கும் பதம் பெரும்பாலும் பரத்தையர் வீதியாகக் கூறுவர்.

திங்கள்வான்குடைக்கீழுலகாணையிற்செலுத்துந்
துங்கமாமதன்றுறவெனும்பகைகெடத்துரப்பான்
றங்குபாசறையெனவுலகாயதசமய
மெங்கள்வாழ்பதமெனக்கணிகையர்மறுகிலங்கும்.

எனக் காளத்திப்புராணத்திற் கூறியிருக்கின்றமை காண்க.

உலகாயதமதமேற்கொண்ட ஓர் ஆத்திரேயனென்னுமறையோனுக்குக்குருவானவர் 'பூமரமாயூர்வனவாய்மிருகமாய்ப்புட்குலமாய்மனிதராகிப்—பாமரராய்ப்பண்டிதராயொழுக்கத்தாலுயர்ந்தேணிப்பழுப்போலேறிக்—தேமறையோனுயிரினைமேற்சுவர்க்கபதத்தினனுபதஞ்செலுத்தற்பாலாய் —காமமெனுமந்தரத்தேதாவிபினிக்கீழ்வீழ்தல்கடனேவையர' என்பது முதலாகவெடுத்துக்கூறினார்,

"கொழுந்துவிட்டறிவுதோன்றக்கொளுத்தியசூரவன்வாய்மை — கழுந்தனையானுக்கேதோகடத்தினைக்கவிழ்த்துவீழ்த்த — வழுந்தெனத்தகையவாகவுகுத்துமேலுரைப்பதானா—னெழுஞ்சுடர்விளக்கிட்டாலுமிருளன்றோகுருடர்க்கம்மா."

"மணிநகையாரேதெய்வம்வாக்குபதேசங்கொங்கைத் — துணைகுருபீடம்பாதத்துணைவருடுவதேபூசை — யணைவதுமுத்தியாசானின்னுமறியாய்போலுங்— கணிகையர்முகத்திற்கூறுங்காமனாகமங்களென்றான்" என அவ்வாத்திரேயனாகியசீடன் கூறினானெனத் திருக்குற்றாலத் தலபுராணத்திற் கூறியிருக்கின்றார். இவ்வாறு மாதர்போகம் முத்தியெனவிரும்பிக் கடவுளில்லையெனக்கூறுகின்ற அவ்வுலகாயதனுரையை மறுத்துக் கடவுளுண்டெனத் தெரிந்தவரை கூறத்தொடங்கியிருக்கின்றேன்.

இனிச் செம்பொருளாகிய கடவுளில்லையென்பானாகிய உலகாயதன் கூறுங்கூற்றுவன, காட்சிப்பிரமாணமே மெய்யாவதெனவும், அஃதொழிந்தவனுமானமுதலியபிரமாணங்கள் வேண்டாவெனவும், காட்சிப்பொருளாவன நிலம், நீர், தீ, வளியென நான்கேயெனவும், அப்பொருள் நித்தமெனவும், இந்நான்கு பொருள்களின்கூட்டமே யுடம்பெனவும், அப்பொருளின் கூட்டத்தானாயவுடம்பின்கண்ணறிவானது வெற்றிலைபாக்குச்சுண்ணாம்பு முதலிய கூடியகூட்டத்திலொருவகைச் செந்நிறந்தோன்றுமாறுபோல வெளிப்படுமெனவும், இங்ஙனமன்றிக் கன்மமும், உயிரும், இறைவனுமுண்டென்று கூறுவது மலடிமகன் முயற்கொம்பிலேறி ஆகாயப்பூவைப்பறித்ததனோடொக்குமென்றும், இன்பதுன்பங்கள் கன்மத்தாலுண்டாகுமென்று கூறுமேவாமானால் நீரானது சந்தனமுதலியவற்றோடு கூடவும், அக்கினியோடுகூடவும் எந்த நன்மை தீமையைச் செய்தது, இவையெல்லாம் பொருள்கட்கியற்கைக்குணமேயன்றிக்கருமமில்லையெனவும், உடம்பின்குணமான்மா



ஆவதன்றி யிதற்கந்நியமாக ஆன்மாவொன்றுளதாயின், மனம், நேத்திரமுதலிய ஏனையவிந்திரியங்களாலறியப்படவேண்டும், அங்ஙனமிந்திரியங்களானறியவாராமையால் உலகத்தில் முயற்கொம்பிற்கு வடிவம் நீளமுதலிய விலக்கணங்கூறுவோர் கூற்றையொக்குமெனவும், பூதங்களின் கூட்டத்தானே வடிவங்களுண்டாமாதலால் இதனையுண்டாக்குதற்கோரிறைவன் வேண்டாமெனவும், மாதர்போகமே மோட்சமெனவுங் கூறுவன்.

நீ கூறுமாறே பிரத்தியட்சப்பிரமாணமேமெய் அனுமானமுதலிய அளவைகள் பொய்யெனில்? நீ பிறந்து குழவியாய் வளருங்காலத்தில் உன் தந்தை தாயார் இறந்துபோய் நீ வளர்ந்திளமைநீங்கியபின்னர்ச் சாத்தன் கொற்றன் இருவர்க்குந் தாய்தந்தையுள்ளார் அதுபோல எனக்குந் தாய்தந்தையிருந்து இறந்திருக்கவேண்டும் என்று நீ கருதல் காட்சிப்பிரமாணமன்று அனுமானப் பிரமாணமேயாமென்க; இதுபோலின்னுமேனைய பிரமாணங்களை யூகித்தறிந்துகொள்க.

காட்சிப்பிரமாணத்திற்கு விஷயமாக நீ கொண்ட நிலன், நீர், தீ, வளியென்னும் நான்கு பூதங்களையும் நித்தமென்றும், அவற்றின் கூட்டமே தேகமென்றுங் கூறினாய்? அவை வடிவமாகப் பரிணமித்துத் தோன்றலுங், கெடுதலுமுளவாதலாற் கடபடாதிகள்போல அவை யநித்தமேயாம்; அன்றியும் அவைசடமாகலின் அவைகளைக் கூட்டிக் காரியப்படுத்துமொரு கருத்தாவை யவாவிநிற்கும்; எங்ஙனமெனில், மண்சடமாகலின் அதனைக் கடவடிவமாகிய காரியமாகச் செய்தற்குக் குயவனாகிய ஒருகருத்தாவை வேண்டிநிற்றல்போலவெனக்கொள்க.

அப்பூதக்கூட்டத்தானாயவுடம்பின்கண்ணே அறிவானது வெற்றிலைபாக்குச்சுண்ணாம்பாலாய கூட்டத்திலொருவகைச் செந்நிறந் தோற்றுவதுபோலத் தோற்றுமென்றாய்? அங்ஙனங்கூடிய செந்நிறமெக்காரணத்தானும் பின்பிரியாது; அங்ஙனமே நீ கூறிய அவ்வறிவானது இவ்வுடலைவிட் டெக்காரணத்தானும் பிரியாதிருக்கவேண்டும்; இங்ஙனமின்றி யுடல்கிடக்க அவ்வறிவுநீங்கிப்போதலால் நீ கூறுங் கூற்றுப் பொருத்தமின்றென்க.

அன்றியும், அங்ஙனந்தோன்றுமறிவு பூதங்களே பிறிதில்லையென்று கூறுவாயானால், நிலமுதலிய பூதங்களில் அறிவுபுலப்படக்கண்டிலம்

என்றறிக. அங்ஙனமன்று அப்பூதங்களுடலாய்ப்பரிணமித்த காலத்தே யறிவுபுலப்படுமென்னில்; அவ்வுடம்பு சவமாய்க்கிடந்த காலத்து அப்பூதங்களிருந்தும் அறிவு காணப்படவில்லையென்றறிக. அச்சவமாயவுடம்பின்கண் வாயுவினியக்கங் குறைந்ததாலறிவுகாணப் படவில்லையெனின்? நீயுறங்கும்போது நீ குறைந்ததென்று கூறும் வாயுவிருந்தும் அறிவு நிகழா தொழிந்ததன் காரணமென்னை கூறுவாயாக. அன்றி வெற்றிலைமுதலிய கூட்டத்தினுண்டாஞ் செந்நிறமொன்றே; நீ கூறும் இப்பூதக்கூட்டத்தின்கட்டோன்றுமறிவு ஒருதன்மைத்தாகாது வேறு வேறு புலனென்றும், பொறியென்றும், குணமென்றும், தனித்தனியுண்டாதற்குக் காரணங்கூறுவாயாக. வெற்றிலை முதலியவற்றைச் சிவப்பேறக் கூட்டுதற்கொரு கருத்தாவேண்டுமென்று நீ துணிந்ததுபோல அப்பூதங்களின்கூட்டமுந் தாமேகூடுமாறின்மையால் அவற்றைக்கூட்டற்கொருகருத்தாவேண்டுமென்க.

நீ முன்னரில்லையென்றுகூறியவண்ணங் கன்மமில்லையாயின் ஊர்வனமுதலான எண்பத்துநான்கிலக்க யோனிபேதங்களுமின்றாய் அவ்வியோனிபேதங்களாலுண்டாகும் ஓரறிவு முதற்கொண்டு ஆறறிவிறுதியாக நிகழுமுணர்ச்சியின் பேதங்களுமின்றாம். அன்றி நீ கூறும் பூதக்கூட்டம் அக்கரங்களையும், உணவின்பேதங்களையும், குணபேதங்களையும், சாதிபேதங்களையுந் தரமாட்டா; இவைகளை யித்துணை வேறுபாடாகத்தருவன கன்மங்களேயாமென்றறிவாயாக.

நீரானது சந்தனத்தைக்கூடிற் குளிர்ந்தும், நெருப்பைக்கூடில் வெதும்பியுமிருத்தலால் அந்நீரென்னகன்மஞ்செய்தது ஆதலாற் கன்மமில்லை என்றனை; நீ யெடுத்துக்காட்டிய சந்தனத்தையுந் தழலையுஞ்சார அந்நீராய வொருபொருட்கு இரண்டுதன்மையுண்டாயதன்மையை ஆராயுமிடத்து யாதாமொரு காரணத்தாற் சேர்க்குமொரு கருத்தாவாலன்றி, அந்நீரானது அவ்விரண்டுதன்மையுந் தன்னிடத்துண்டாக்கிக் கொள்ளாதென்றுணர்வாயாக. அதுபோலக் கன்மமும் இருவகைப்படப்பொருந்தி யொருகருத்தாவாற் சுகதுக்கங்களை யுயிர்கட்குக் கொடுக்குமெனவறிக; ஆதலால், அச்சுகதுக்கங்கள் உயிருக்காவதன்றிச் சடமாகிய வுடம்பிற்கில்லையென்றுணர்வாயாக.

இந்திரியங்களா லறியப்படாமையின் ஆன்மாவில்லையென்றுகூறினாய்? சரீரமானது தன்னைக்கண்ட கண்ணைக்காணமாட்டாது; அச்சரீ



ரத்தைக் காணவல்லது கண்ணாம்; அதுபோல உயி ரறிவுடைப்பொருளாகலின் இந்திரியங்களையறியும், இந்திரியங்கள் சடமாகலின் அறிவுடைப்பொருளாகிய உயிரையறியமாட்டா, ஆகையால் இந்திரியங்களால் அறியப்படாது ஆன்மாவென்று நீ கூறியது பொருந்தாதென்க.

பூதபரிணாமமே வடிவங்கள் இதற்கோரிறைவன் வேண்டாவென்று கூறினாய்? பூதங்கள் கடம்போலக் காரியப்பட்டுச் சிறிதுபொழுது நின்று மீளவும் அழியா நிற்கும்; இவையிங்ஙனம் காரியப்படுதற்கும், கெடுதற்கு மொருகருத்தா வேண்டுமென்க. மண்ணிற் கடமுதலானவையுண்டானாற்போல பூதங்களாலுண்டாயினது சரீரமென்னில் மண் குயவனாற் கடமுதலிய வடிவங்களாகக் காரியப்பட்டாற்போல ஒரு கருத்தாவினுடைய செய்கையாற் சரீரமுதலிய வடிவமாய்க் காரியப்பட்டதென்றுணர்வாயாக; சிவஞானசித்தியாரிற் காரியகாரணங்கள் என்னுஞ் செய்யுளாற் காண்க.

அசுத்தம், சடம், அநித்தியமாகிய மாதர்போகத்தையே சுத்தஞ் சுகநித்தியமாகிய மோக்கமென்றாய் அதினியல்பைக் கேட்பாயாக. ஒரு பொற்பணியானது மலத்திடைவிழுந்தால் அதனைக் கையாலெடுத்தல் பொருந்தாது; அதுபோல மகளிர்பால் மிக்கவேட்கையுண்டாதற்குக் காரணமான சந்தனம், ஆபரணமுதலிய செயற்கைப்பொருள்களை நீக்க அதனியல்பாகிய அசுத்தத்தைக் கண்டுவிடத்தக்க பொருளாம். "என்னகண்டுநீமாதரார்வடிவமீதிச்சைவைத்துழல்கின்றாய் — பொன்னையுந்துகிலையும்பிரித்திடில்வெறும்புழுமலக்கூடல்லாற் —பின்னையுண்டு கால்கண்டுநீமயங்குதல் பிராந்தி" அன்றியும், எற்புச்சட்டகமாயும், முடைக்குரம்பையாயும், புழுப்பிண்டமாயும், கோழை, ஈரல், மலமூத்திர பாத்திரமாயும், உள்ளதென்றச்சரீரத்தினியல்பை நோக்குவாயாக; இவ்வசுத்தங்களைப் போக்கவே பூவும், சாந்தும், எண்ணெயும் புனையப்பட்டனவென்க. அன்றியுங் காமமுதலானவைகளைச் சுகமென்று கொண்டாய் அஃதெத்தன்மை யென்னின் குளிர்மிக்ககாலத்து வெப்பத்தைவிரும்பி அக்கினியையடையின் அவ்வக்கினி சுகந்தருவதுபோலவும், வெப்பமிகுந்தகாலத்துப்புனலையணையின் அப்புனல் சுகந்தருவதுபோலவுமாமென்க; ஆதலால் இம்மயக்கவறிவையொழித்து எல்லாம் வல்ல விறைவனது திருவடிஞானத்தைப் பெறுவாயாக. இங்ஙனமூலகாயதன் கடவுளில்லையெனக் கூறியதற்கிசைய வெடுத்துக்கூறிய

காட்சிப்பிரமாணமுதலியனவெல்லாஞ் சிவஞானசித்தியாரிற் கூறியவாறுரைத்து மறுக்கப்பட்டன.

இன்னும் வேறுகாட்சிப் பிரமாணமுமெடுத்துக் கூறுவாம்; சூரிய சந்திரர்முதலியோர்கள் விதித்தநாழிகையிற்றப்பாது உதிப்பது மொடுங்குவதும், மேகம் மழைபெய்வதும், பெய்யாமையும், கடல் கரையினீங்காமையுங் காணுங்கால் உலகினிமித்தமாக இறைவனாக்கினையின் வழியினாமெனக் கொள்ளப்படும். தாமாகச் செய்தால் தமக்கோர்பயன் கருதிச்செய்யவேண்டும்; அங்ஙனமின்மையால்,அவ்வாறு செய்விப்பதற்கொருகருத்தாவுண்டென்பது விளங்குகின்றது.

இன்னுந்தேவர்கட் கிறையாக இந்திரனிருக்கிறான், மனிதருக்கிறையாக நரபதியிருக்கிறான், மிருகங்கட்கிறையாகச் சிங்கமிருக்கின்றது; அதற்கு மிருகராசனென்று பெயர். பறவைகட் கிறையாகக் கருடனிருக்கின்றது; அதற்குப்பறவைவேந்தென்று பெயர். விருக்ஷங்கட்கிறையாக அரசிருக்கின்றது; அதற்குத் தாருவேந்தென்று பெயர்; இங்ஙனமே பலவிசித்திரமானஉலகத்திற்கும் ஓரிறைவனாகிய உலகநாயகனுண்டென்று தெரிகிறது. இன்னுஞ் சராசரங்களெல்லாமிறைகளை யின்றியமையாவென்பது காட்சிப்பிரமாணமேயென விளங்கக் கம்பராமாயணத்தில்

“முறைதெரிந் தொருவகை முடிய நோக்குறின்
மறையவன் வகுத்தன மண்ணில் வானிடை
நிறைபெருந் தன்மையி னிற்ப செல்வன
விறைகளை யில்லன யாவை காண்கிலம்.”

எனக் கூறுமாறு காண்க.

அன்றியும், கடவுளின்றி யிவ்வுலக நடைபெறுதென்பதற்கு, “அவனசையாமலணுவுமசையாது” என்று கூறும் பழமொழி யிப்பொழுதுங் கேட்கிறதேயொரு சாட்சியாயிருக்கிறது.

அன்றியுந் திருவள்ளுவர் “அகரமுதலவெழுத்தெல்லாமாதி பகவன்முதற்றேயுலகு” எனக் கூறினார்; இதினுள் காணப்படாதகடவுட்கு உண்மை கூறுவார் காணப்பட்ட வுலகத்தைச்சுட்டி யிவ்வுலக மாதிபகவனாகிய முதலையுடைத்தென்றும், அதற்கெடுத்துக்காட்டுவமையாக எழுத்துக்களெல்லாமகாரமாகிய முதலையுடையவாறுபோல எனக்கூறி



னார். இதனுரையில் அகரத்திற்குத் தலைமை விகாரத்தானன்றி நாதமாத்திரையாகிய வியல்பாற் பிறத்தலானும், ஆதிபகவற்குத் தலைமை செயற்கை யுணர்வானன்றி யியற்கையுணர்வான் முற்று முணர்தலானுங்கொள்கவென்றார். இங்ஙனங் காட்சிப்பிரமாணமொன்றைக்கொண்டு ஒரு கடவுளுண்டெனச் சாதித்தது யாவருக்கும் புலப்பட்டதேயாம்.

அன்றி முதன்மையென்பதற்கிங்ஙனமுரைகூறினராயினும், அகரம் அங்காத்தலையுடையதாய்ப்பிறத்தலானும், ஏனையவெழுத்துக்களெல்லாம் இதழ்நாப்பல்லணத்தொழிலாற்பிறப்பினும் அவ்வாங்கத்தலையின்றிப் பிறவாமையானும், அதனால் எல்லா அக்கரங்களினும் அகரங்கலந்து நிற்றலானும் எழுத்துக்களெல்லாம் அகரத்தை முதலாக வுடையன அதுபோல, ஆதிபகவனாகிய கடவுளையன்றி யுலகந்தோன்றாமையானும், அக்கடவுள் சேதனாசேதனமாகிய வுலகமெங்குங் கலந்து நிற்றலானும் உலகம் அக்கடவுளை முதலாக வுடையதெனக் கூறலுமாம். சிவஞானபோதத்தில், “ஒன்றின்றால்—அக்கரங்களின்றாமகரவுயிரின்றேல், இக்கிரமத்தென்னுமிருக்கு” என்றார்; அகரவுயிரில்லையாயின் அக்கரங்களில்லையாம், இம்முறையே வேதம் பிரமப்பொருளில்லையாயின் ஒருபொருளுமில்லை யென்றோதும் என்பது இதன் பொருளாயினும், அகரவுயிரின்றேல் அக்கரங்கள் தோன்றுதலு மியங்குதலுமில்லை யென்பதும், பிரமப்பொருளில்லையேல் உலகிலெப்பொருளுந் தோன்றுதலு மியங்குதலுமில்லை யென்பதுங்கருத்தாம். இங்ஙனமெடுத்துக்காட்டிய வுவமையாற் கடவுளாகிய பிரமப்பொருள், உலகிற்கு வேறாகியும், வேறல்லாமையைக் குறித்து நின்றவாறு காண்க. “இன்றாம்” “இன்றேல்” என இன்றியமையாமை விளக்குதற்கு எதிர்மறைமுகத்தாற் கூறினாரேனும், ஒரு கருத்தாவுண்மையால் இவ்வுலகமுண்டென்பதே கருத்தாகக்கொள்க;

இனி யுலகத்திலெத்தனையோ கோடிக்கணக்காக மனிதர்களைப் பார்க்கின்றோம், ஒவ்வொருவருக்கும் முப்பத்திரண்டு அங்கங்கள் கணக்குப்படியிருக்கின்றன; அவைகளில் ஏதேனும் வேற்றுமை காணப்படவில்லை. முகங்களின்மாத்திரம் இன்னாரின்னாரென்று வேற்றுமை தோன்றும் வண்ணம் ஒரு தோற்றம் விளங்குகிறது. அத்தோற்றத்தை எல்லாம்வல்ல இறைவன் படைக்கும்போதுண்டாக்கினானன்றி

இடையிலொருவருண்டாக்கினதில்லையே, இன்னும் சிலர் ஆறுவிரல், இரண்டு தலை, குருடு, முடம் இவற்றை யுடையவர்களாய்ப் பிறப்பதற்குக் காரணமென்னை? அச்செல்லாம் ஒன்றாய் அதிலேயிருவகையாய்ச் சிலர் வாழ்ந்திருக்கவும் பலர் அவரைத் தாழ்ந்திருக்கவுங் காணப்படுவதற்குக் காரணமென்னை? அவரவர் வினைவசத்தால் இறைவனுண்டாக்கினா னென்பதற்குச் சந்தேகமில்லையே? ஆதலால் இங்ஙனங் கூறிய பலவகைப் பிரத்தியட்சப்பிரமாணங்களைக்கொண்டு எல்லாம் வல்ல இறைவனொருவனுண்டென்பது தெளிவாக விளங்குகின்றது.

ஒருவன் ஓர்வினைசெய்யின் அது தனக்கேனும் பிறர்க்கேனுமாகும் பயன்கருதிச் செய்வானன்றி வீணாகச்செய்யான்; ஆதலாற் கடவுளிவ்வுலகத்தை ஒருபயன்கருதிச்செய்தாரெனல் வேண்டும்; அங்ஙனமாயின், இவ்வுலகத்தைப் பயன்கருதிச் செய்தாரெனில் கடவுள் இயல்பாகவே பாசங்களை நீங்கியிருக்கையாலும், பேரானந்தராகையாலும், ஒப்புயர்வில்லாராகையாலுந் தனக்காம் பயன்கருதிச் செய்தாரல்லர், ஆன்மாக்களாகிய பிறர்க்காம் பயன்கருதிச் செய்தாரெனல் வேண்டும், அங்ஙனஞ்செய்தல் அளவிலாற்றலும், முற்றுணர்ச்சியும், பேரருளுடைமையுமுள்ளகடவுள் ஆன்மாக்களின்மேல்வைத்த பேரருளாலென்றுகொள்ளல்வேண்டும்; இதற்கோருபமானம் வருமாறு; விடத்தான்மயங்கிக்கிடக்கின்றவொருவனுக்கு, அருளுடைய வொரு வைத்தியன் மருந்துகளுதவி அம்மயக்க நீங்கச்செய்து சுகமுறச்செய்வதுபோலப், பேரருளுடைய கடவுளும் பாசங்களான்மறைப்புண்டுகிடந்த ஆன்மாக்களுக்குத் தனுகரணபுவனபோகங்களைக்கொடுத்துச் செய்வினைமுறைப்படி பயன்களை யனுபவிக்கச்செய்து பாசங்களைநீக்கிப் பக்குவம் வருவித்துப் பேரின்பமடையச் செய்வாரென்க.

இவ்வாறுபகரிக்கிற கடவுளை நாமெவ்வாறறிவதென்னில் ஆகமப்பிரமாணத்தாலன்றியும், அனுமானப்பிரமாணத்தால் யாவருநன்கறியலாகும். சூரிய சந்திரர் நாள் கோள்கள் மேகஞ் சமுத்திரமலைகள் பஞ்சபூதசராசரமுதலிய விசித்திரமானவையெல்லாஞ் சீவராலுண்டாக்க முடியாவாகலானுஞ், சூரியசந்திரர்முதலியோர் முறைமாறாது வருதலானும் பாம்பு முதலியன கடவுளைத் தியானித்து அக்கடவுளருளிய மந்திரங்களைக் கணித்து நோக்கவே வசமாகுதலானும், யோனியுட் புகுந்த விந்து உதிரத்துடன் சேர்ந்து பத்துமாதமிருந்து மண்மாமுத



லியவற்றாற் பாவைமுதலியன வுண்டாதல்போற் குழவியுருவாயுண்டாகிக், குடத்துள்ளே யெடுத்துவிட்ட பூசனிப்பிஞ்சானது பருத்து அக்குடமுடையாமல் அக்குடவாயின்வழிவருமருமைபோலத் தாய்வயிற்றிலிருந்து சிறிய யோனிவழி வருதலானும், ஆணும்பெண்ணுங்கூடியே அவ்வடிவாகப் பிறத்தலானும், அவ்வாறு கூடாமலே அகத்தியர் முதலோர்போலப்பிறத்தலானும், வித்தின்படியே தாவரங்களுண்டாவதினாலும், அவயவங்கணிறைந்து பிறத்தலானும், குருடு முதலிய அவயவபங்கத்துடன் பிறத்தலானும், நோயும் நோயில்லாமையுந் தரித்திரமுஞ் செல்வமும் அறிவு மறிவிலாமையு முள்ளவர்களாகப் பிறத்தலானும், ஒன்பது துவாரமிருக்கவும் வெளிப்படாது உயிர் உடம்பினுள்ளேயிருத்தலானும், ஒருறுப்புக்குறைந்தால் அதனையுண்டாக்கிக்கொள்ள முடியாமையானும், தசவாயுக்கள் செய்யுந்தொழிலை உயிர் நிறுத்திக் கொள்ளமுடியாமையானும், ஆணாவது பெண்ணாவது வேண்டுமென்றால் அவ்வாறின்றி அலியாகப்பிறத்தலானும்பிள்ளைவேண்டாமென்பவர்க்கே பலபிள்ளைகள் பிறத்தலானும், முற்சென்மமும் பிற்சென்மமுமறியாமையானும் இங்ஙனமே பலவித காரணங்களாலும், கடவுளொருவருண்டென நன்கறியலாகும். அக்கடவுளெவ்வாறு நம்மையுண்டாக்குவரென்னில்? ஆபரணங்கடபடாதிகளைப் பொன்மண் நூல்முதலிய காரணங்களினாலே யுண்டாக்குகின்றவர்போலக் கடவுள் திருவருளாலே முதற்காரணமாகிய மாயையிலிருந்து உயிர்களைச் செய்தவினைக்கீடாகத் தனுகரணபுவனபோகங்களையுண்டாக்கிக் காத்துச் சங்கரித்துத் திரோபவித்து அனுக்கிரகஞ் செய்வாரென்றறிக. இப்பஞ்சகிருத்திய முறைமை யீண்டுரைப்பிற் பெருகுமாதலிற் கூறவில்லை யென்றறிக.

இனி யிங்ஙனம், இறைவனுண்டெனக் கொள்ளினும், தேர்முதலாயின பலர்கூடிச் செய்யக்காண்டலின் அங்ஙனமே இவ்வுலகத்தைத் தோற்றுவித்தற்கும் பலகர்த்தாவேண்டுமெனின்? அவ்வுரை பொருந்தாது, ஏனெனில்? தேர்முதலாயினவற்றைச் செய்வோரெல்லாம், அவர்கட்குத் தலைவனாவானொருவன் இவ்வாறே செய்கவெனக் கட்டளையிட்டவாறே செய்தலா லொருவனாற்செய்யப்பட்டன வென்று பிரத்தியட்சமாகக் காண்கின்றோமன்றோ? அதுபோலவே யிவ்வுலகத்தைத் தோற்றுவித்தலும், காத்தலும், அழித்தலும் பலகர்த்தாக்கள் செய்யினும், அவரையெல்லாம் ஏவலாளராகக்கொண்டிவ்வாறுசெய்கவெனக் கட்டளையிட்டருளிய எல்லாம்வல்ல கடவுளொருவரே யுண்டென்பது தெளியப்படுதலாலென்க.

இனிப் பல சமயத்தாரும் ஒவ்வொருவரை முதற்கடவுளாக வெடுத்துக் கூறுவர்; அவருரைப்பனவெல்லா மெடுத்து மறுப்பதற்கு ஈண்டவகாசமின்மையால், அவற்றைப் பின்னர்க் கூறவேண்டும்.

இனி யெல்லாம்வல்ல முதற்கடவுளின் முக்கியகுணங்களெட் டென்பர், திருவள்ளுவரும், "எண்குணத்தான்றாளைவணங்காத்தலை" யென்றார். அவை, "முடிவிலாற்றலை தன் வயத்தினை முற்றுணர்ச்சியை பேருண்—மடிவிலாட்சியை தூயமேனியை மற்றியற்கை யுணர்ச்சியை—படியிலாவியல் பாசநீங்கிய பாசநோயை வரம்பிலின்—புடையையுன்னடி யேங்களென்றுமு னக்கடைக்கல மையனே" எனக் காஞ்சிப் புராணத்திற் கூறிய செய்யுளானும், பரிமேலழகருரையானுமுணர்க. இவ்வெண்குணங்களையுடைய பரமபதியாகிய கடவுளையும், அக்கடவுளை வழிபடுமார்க்கங்களையும், அவற்றாலாம் பயன்களையுந் தெரியுமுறையாற் றெரிந்து அவற்றைக் கடைப்பிடித் தொழுகியுய்வதே யறிவுடையோர் கடனாமென்க. இங்ஙனம் காட்சிப்பிரமாணம்பற்றிக் கடவுளில்லை யென்பாரை மறுக்கப்புகுந்தமையால், ஏனைப்பிரமாணங்களை மிகவெடுத்துக்கூறாது, அக்காட்சிப்பிரமாணங்களையே மிகவெடுத்துரைத்தும், அதனுடன் அநுமானப்பிரமாணத்தையுரைத்தும் கடவுளுண்டெனச் சாதித்ததென்க. சுபம்.

இங்ஙனம்,

திருவாவடுதுறையாதீன வித்துவானும்,

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற் பரிசோதகருமாகிய

ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

---

(இது, காளயுக்திஸு மார்கழிமீ 28உ இராமநாதபுரஞ் சமஸ்தானத்தைச்சார்ந்த அபிராமத்தில் வித்தியாபாற்கரசெந்தமிழ்ச்சங்கத்தில், அக்கிராசநாதிபதியாயிருந்தபோது செய்த பிரசங்கம்.)

# நோயில்லாவாழ்வு.

அலைகடல் வளைஇய மலர்தலையுலகில் உருப்பெற்றுமல்காநின்ற மன்னுயிர்த் தொகுதிக்கு இம்மையில் வேண்டற்பாலனவாகிய பேறுகள் அனைத்தினும் விசேடமுற்றுத் தலைநிற்பது நோயில்லாவாழ்வாகும். எவ்வகைய எத்துணைப் போகங்கள் அமைவரப் பெறினும் தேகசுகமொன்றில்லாவிடின் அவற்றொன்றையேனும் அநுபவிக்குமாறில்லை. உடற்குற்றம் பதினெட்டனுள் ஒன்றாகிய பசி ஒருவற்கு வந்தடையுமாயின், மானம், குலம், கல்வி ஆதிய பத்துக்காரியங்கள் பறந்துவிடுமென்ன ஔவைப்பிராட்டி சொற்றனள். நாமும், நோய்வந்தடுத்தால் பத்தன்றிப் பத்துநூறுகாரியங்கள் பசியொடும் பறந்துவிடுமெனச் சொல்வேம்.

மானிடப்பிறவியால் அடையும்பயன் யாதெனில், நாம் நன்குறுதற்கு இன்றியமையாது வேண்டப்படும் சவிகற்பஞானத்தைப் பயப்பதாய் வியஞ்சக ஞானகரணமாய் விளங்கும் கல்வியை ஈட்டி நல்லதனலனுந் தீயதன்றீதுங் கண்டு புண்ணிய பாவங்களைப் பகுத்துணர்ந்து நன்னெறிச்சேறி, சிவபுண்ணியங்களிற் பயின்று ஞானத்தையடைந்து வீட்டைப்பெறுதலாம். தேகமானது நல்ல சுகநிலையிலிருந்தாலன்றி அங்ஙனஞ் செய்தல் மிகவரிதாகும்.

நோயானது தெய்வமே காரணமாகவும், வெய்யில், குளிர், மழை, காற்று, மின்னல், இடிமுதலிய சடப்பொருள் காரணமாகவும் பிறகாரணங்களாலும் வந்தடையும். அவற்றுள், தெய்வத்தால் நேர்வன பிராரத்துவவழிவரலின் பவந்தொறுமீட்டு தீவினைகளே அவைகட்குக் காரணமாகும். அதுபற்றி அவற்றைத் தடுத்தலும் அரிதாகும். தானம், தருமம், தவமாதியவற்றில் மிகமுயன்று ஓர்வாறிதம்பெறினும் பெறலாம். மற்றையத் துன்பங்களும் ஊழ்வழிவருவனவாயினும் ஒழுங்கப்பிறழ்வுமவற்றுக்கேதுவாகலின் அப்பிறழ்வுக்குரியவர்களும் பாத்திராகின்றார்கள். ஆதலின் தெய்வத்தைநோதலுந்தகாது.

புண்ணியபூமியாகிய பரதகண்டத்துப் பண்டைக்காலத்தினர் நீடிய ஆயுசொடு சுகாநுபவங்களைப்பெற்று வாழ்ந்தனர். அன்னார்க்குத் தக்கதுணைநின்றது தருமாசாரங்களைக்கைக்கொண்டு அநுசரித்த

வந்த மரபேயாம். தெய்வத்தன்மையுடைய மகான்களால்வகுக்கப்பட்ட தருமநூல்களிலேவிதித்துள்ள ஆசாரங்கள் ஒவ்வொன்றும் பயில்வார்க்குத் தேக ஆரோக்கியத்தைப் பயப்பதாகும். ஒவ்வொருவருணத்து நால்வகை ஆச்சிரமத்தோரும் நித்தியம் பயின்று கையாடிவரவேண்டிய எல்லாவகைத் தருமாசாரங்களையும் செவ்விதிற் றொகுத்து விரித்துக் காட்டியிருக்கின்றனர். அவற்றை இகழ்ந்து தணந்தொழுகுவார்க்குப் பலிப்பது சஞ்சலமேயாம். அவ்வாசாரவிதிகளில் ஒன்றாயினும் போதியநியாயமின்றி ஏற்படுத்தப்படவில்லை. இவ்வுண்மை தெளியாதார் அனேகவிதிவிலக்குகளைப் பிரயோசனமற்றவையென்றவமதித்துப் பயிலாதொழிவர்.

நாற்பதத் தருமதேவதை முப்பதமொடிந்து ஒருகாலில் உலாவும் இக்கலியுகம் முதிர்ந்துவரலால் பண்டையோர் அநுசரித்துவந்த தருமாசாரங்களும் நாளடைவிற் குன்றிப்போகின்றன. இங்ஙனமாதற்குப் பொய்புனைந்த இதரசமயங்களும் அச்சமயங்கள் விதிக்கும் அதர்மாசாரங்களுமே முக்கிய காரணமாகும். உயிர்க்கொலை மிகவும் பாவமான செய்கையென்று சைவங்கண்டித்துவற்புறுத்த ஆகாரத்துக்கு வேண்டுவனவற்றைக்கொல்லலாமென்று மற்றொருமதம் சாதிக்குமாயின் புண்ணியம் நடைபெறுவதெங்ஙனம்.

இக்காலத்தில் குன்றிவரு தருமாசாரங்களைப் பண்டையநிலைக்கு வளர்த்து நிறுத்தல் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவுடைய நம்மனோர்க்கு மிகவரிதாகும். ஆயினும் வயித்தியநூல் பரப்புதல் முதலிய பிறவழிகளில் முயன்று தேகசுகத்தைக் காப்பாற்றுமுறைகள் அநுசரிக்கச் செய்யவேண்டும். ஆண் பெண் இருபாலார்க்குங் கல்விபயிற்றுகழகங்களிலே இவ்விஷயம் மிகமுக்கியமாகக் கவனிக்கத்தக்கது.

தோல், நரம்பு, என்பு, தசை, இரத்தமாதியவற்றால் அமையப்பட்ட நமது தேகத்தின் இயல்பையுங் குறைகுணங்களையும், மூளை, கண், செவி, வாய், மூக்கு, சுவாசப்பை, ஈரல், இரைப்பை, சலப்பை ஆதிய ஒவ்வோர் உறுப்புக்களின் அமைவும் இயல்புங் குணங்குறியுந் தத்துவ நிலைகளையுஞ் செவ்விதிற் சுருக்கித் தெளிவாக விளக்கியும் இவ்வுறுப்புகளில் நோயடுக்கு முறைமைகளையும் ஏதுக்களையும் காட்டிப், புலரியிற்றுயிலெழும்பல், மலசலவிமோசனஞ்செய்தல், தந்தம்விளக்



கல், சௌளஞ்செய்தல், ஸ்நானம்பண்ணல், உடுத்தல், உண்ணல், சுத்தநீர்பருகல் ஆதியபலநித்தியகருமங்களில் ஆரோக்கியத்துக்கடுப்பன இவையென்றும், அடாதன இவையென்றும், சாதாரணமாய்ப் பரம்புகின்ற தடிமல், இருமல், தலைநோய், காய்ச்சல், வயிற்றுளைவு, பேதி, கண்ணோய் ஆதிய பிணிகளின் இயல்பையும், அவைகள் உண்டாகின்ற காரணங்கள் முறைகளையும், அவற்றைத் தடுத்தற்குரிய எத்தனங்களையும் மற்றுமின்னோரன்ன சுகங்காத்தற்கேற்ற வழிவகைகளையும் மாணவர் பருவத்துக்கேற்றபடி முறையாகப்பயிற்றவேண்டும். சுவர் இருந்தாலன்றோ சித்திரம் எழுதலாம்! தேகம் நன்னிலையிற் காப்பாற்றப்படினன்றோ வாழ்வு சிறக்கும். ஆதலின் பள்ளிக்கூடங்களிலே மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டுவரு பலவிதபாடங்களுடனும் உடற்கூற்றையும் ஆரோக்கியநூல்களையும் (வயித்தியராக்குமாறல்ல, தங்கள் சுகத்தைப்பேணற்கிசைந்த அளவில்) கிரமமாகக்கற்பிக்கவேண்டும். நோயடுத்தபின் அவுடதப்பிரயோகஞ்செய்வதினும் வாராமற்காப்பதே இனிதாகும். சிறுவர்பொறுப்பைக்கையேற்றுள்ள பெற்றார்முதலிய சகலரும் இதனைக் கவனிக்கவேண்டியது. வயித்தியத்துறையிற்சென்று சிறந்தபண்டிதரானோர் காலத்துக்கேற்ற ஆரோக்கிய நூல்கள் ஒன்றிரண்டைச் சுருக்கி எழுதிப் பாடசாலைகளுக்குதவினால் பெரும்புண்ணியமாகும்.

மட்டுநகர்.<br>1—1—1919.

இங்ஙனம்,<br>ச. பூபாலபிள்ளை

## ஓர் ஐயவினா.

நேற்று, இன்னுஞ் சொல் செய்யுள் வழக்கிலுண்டா? நேற்று வந்தான் என்று சொல்லும்பொழுது, இது என்னசொல். நன்னூல் விருத்தியுரையில் பொதுவியலில் வினைத்தொகைக்கு உதாரணம் கூறும்போது நெருநல்அடுகளிறு, இன்றுஅடுகளிறு, நாளைஅடுகளிறு என்று கூறப்பட்டிருப்பதில் நெருநல், இன்று, நாளை என்பன என்ன சொல். இவை பெயர்ச்சொல்லாயின் எல்லா வேற்றுமை யுருபுகளையும் ஏற்கவேண்டுவது அவசியமில்லையா?

குறிப்பும் பண்பும் மிசையுந் தோற்றிப்
பெயரும் வினையும் போன்றவை யிரண்டற்கு
மடியு மாகி யவற்றேற் புழிநின்
றொருபொருட் குரிமையும் பலபொருட் குரிமையு
முடைய வாகி யுணரா தவற்றை
யுணர்ந்தவை சார்த்தி யுணர்வன வுரிச்சொல்

என்று இலக்கண விளக்கத்தில் உரிச்சொல்லின் இலக்கணம் கூறப்பட்டிருத்தலால் அதனுள் அடங்காதா? இவற்றையறிந்த பெரியார் நன்றாக விளக்குமாறு வேண்டுகிறேன்.

மாணவன்.

---

உ

கடவுள் துணை.

# ஐயவினாத்தொடர்.

---

செந்தமி ழறிவிற் சிறந்தநற் பெரியீர்,

(க) எனது அஞ்சுமுகத்திற்கு ஆறுமுகமாகமுன்னின்று அடியேனை ஆண்டுவரும் முருகப்பெருமான்மீது ஆசிரியர் நக்கீரனாராலே பாடப்பெற்ற திருமுருகாற்றுப்படை, ஆறுபடைவீடுகள் இவையிவை என்பதையும் அவற்றின்சிறப்புக்களையும்பற்றியேகூறுகிறது என்று எவ்வாறு கொள்வது? அங்ஙனம் அதனைக்கொள்ள அதனுள் ஆறு தனித்ததிருப்பதிகள் கூறப்பெற்றிருக்கவேண்டாமா? வேண்டுமாயின் அவை எவையெவை? குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்ற இவ்விரண்டுந் தனித்த தலங்களாகமாட்டா என்று ஊகிக்க மூலமும் உரையும் இடந்தருகின்றனவே. முருகக்கடவுளுக்கு ஆறுபடைவீடுகள் உண்டு என்று கூறப்பெறும் வழக்கு சங்ககாலத்தில்,—(முருகாற்றுப்படை எழுதிய காலத்தில்,—)உண்டா? உண்டாயின் அஃது எதனால் நிரூபிக்கப்படும்? அங்ஙனங் கொள்ளாது 'உலகத்திலுள்ள எல்லாமலைகளையுஞ்சுட்டி அவையனைத்தையும் அவனுடைய திருப்பதிகளாகக்கவே' குன்றுதோறாடல் என்றும், 'அன்பர்கள் வாழ்த்திவழிபடுவான் நிருமித்துக்கொண்ட அனைத்துக்கோயில்களையுஞ் சுட்டவே' நகர் என்றுங்கூறி 'ஆண்டாண்டுறைதலுமறிந்தவாறே' (திருமு-உசகூ) வீடுபெற்றான் இரவலனுக்குக்கூறவேண்டிய முருகக்கடவுளுடைய அனைத்து இடங்களையுங்கூறி முடித்துவிட்டதாகக் கொள்வதால் வரும் இழுக்கென்னை?



(உ) அதிகக் கட்டுப்பாடில்லாததும், விஷயங்களைப் போதிய வளவு வேண்டியவாறு கூறுவதற்குத் துணையாயிருப்பதுமான அகவற்பாவிலே, தாம் எடுத்தவிஷயத்திற் சிறிதுங்குறைபடாதுகூறும் ஆற்றலும் தெய்வத்தன்மையும் தமிழ்மாட்டும் தமிழ்மக்கண்மாட்டும் பேரருளும் படைத்த ஆசிரியர் நக்கீரர், தம்மாற்படைத்துக்கொள்ளப்பட்ட வீடுபெறுதற்குற்ற தொழிலிலே முயலும் சுயேச்சையினையுடைய தகுதியுடையவனாகிய அந்த இரவலனை ஏதேனும் ஒருசொல்லாலேனும் சுட்டிக்கூறாது உய்த்துணர்ந்து வருவித்துக்கொள்ள வைத்திருப்பாரா? விளிப்பெயரைச் சுட்டிக்கூறியிருக்கிறார் என்று கொள்வதற்கு, புலமையோய் (திருமு-உஅ0) என்றபாகம் இடந்தராதா? என்னுடைய சிற்றறிவிற்குக் கிழவோனேஎன்றசுற்றுச்சொல்லும் அந்த இரவலனைக் குறிப்பதுதான் என்றுசொல்லுவது பொருந்துமோஎனப்படுகிறது.*

ஆதலின், பெரியோர்களே, ஒன்றற்கும் பற்றாத அடியேனுடைய ஐயப்பாடுகளை நீக்கி என்னை நல்லாற்றுப்படுத்தருளுமாறு பன்முறையும் வேண்டுகின்றேன்.

கும்பகோணம் } உ.வே. சா. வேங்கடராமன்,
15-2-19. } தண்டமிழ்த்தொண்டன்.

---

# ஒரு தமிழ்ச்சங்கவருடக்கூட்டம்.

---

இருபெருஞ்செல்வமும்ஒருங்கேவாய்க்கப்பெற்றவள்ளலும் மதுரை நான்காம்தமிழ்ச்சங்கபோஷகரும் ஆகிய காலஞ்சென்ற

---

* சென்ற ஆண்டிலே 'இவனியாரென்குவை' என்ற புறப்பாட்டாராய்ச்சி சம்பந்தமானவாதங்களைக்கண்டு இங்ஙனங்கூறப்பயங்கொண்டேனாயினும், மலைமகண்மகனே (திருமு-உருஎ) என்றும், மகன் (கலி-அ0) என்றும் னகரவீற்றுச்சொற்கள் விளிப்பொருளில்வந்து இப்பாட்டுரையாசிரியராலே இரண்டிடத்தும் அவ்வாறே பொருளெழுதப்பட்டுள்ளனவால் அடியேற்கு இந்த ஐயமுந் தோன்றுகிறது.

இராமநாதபுரம் மஹாராஜா மாட்சிமைதங்கிய ஸ்ரீமான் பாஸ்கரஸேதுபதியவர்களின் ஞாபகார்த்தமாக இவ்வூரில் நிறுவப்பெற்றுள்ள இச்சங்கத்தின் மூன்றாவதுஆண்டு நிறைவு விழாக்கொண்டாட்டமானது நாளது ஜெனவரிமீ 11, 12, 13 தேதிகளில் அபிராமம் ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஸந்நிதியில் அமைத்திருந்த கொட்டகையில் சிறப்புடன் நடைபெற்றது.

உள்ளூரினின்றும் பிறவூரினின்றும் பலபிரபுக்களும் வித்வான்களும் வந்து கூடினார்கள். இக்கொண்டாட்டத்திற்கு அக்ராசனராக வந்த திருவாவடுதுறைஆதீனவித்வானும் மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் சைவநூற் பரிசோதகருமாகிய ஸ்ரீமாந் சே. ரா. சுப்பிரமணியக்கவிராயரவர்களை இச்சங்கத்தார்கள் மேளதாளவாத்தியவைபவங்களுடன் எதிர்சென்றழைக்கப்பட்டு, மதுரை அமெரிக்கன் காலேஜ் தலைமைத்தமிழ்ப் பண்டிதரும் இச்சங்கத்தின் நிரந்தரஅக்ராசநாதிபதியுமாகிய மகா-ள-ள-ஸ்ரீ A. கார்மேகக்கோனாரவர்கள் ஷை கவிராயரவர்களைச் சபாநாயகராக வீற்றிருக்க வேண்டிக்கொள்ளச் சபையார் கரகோஷத்துடன் அங்கீகரித்தார்கள்.

அக்கிராசனர் ஆசனத்தமர்ந்தபின் ஷை கார்மேகக்கோனாரவர்கள் செய்யுள்வடிவமானவரவேற்புப்பத்திரம் ஒன்று அக்கிராசனரவர்களுக்கு வாசித்துக்கொடுத்தார்கள்.

ஸ்ரீ கா. சு. தண்டியப்பனாசாரி அவர்களாலும் சீனிவாசன் என்ற மாணவனாலும் கடவுள்வாழ்த்துப் பாடப்பெற்றது. அவைத்தலைவரின் முன்னுரையானபின் சங்கத்தின் காரியதரிசி மகா-ள-ள-ஸ்ரீ D. நாகலிங்கம்பிள்ளை அவர்களால் சங்கத்தின் சென்றஆண்டின் அறிக்கைப்பத்திரம்வாசித்துச் சபையார்களுக்கு வழங்கப்பட்டது.

பின்பு மதுரைத் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ சிதம்பரபுன்னைவனநாதமுதலியாரவர்களும், மதுரைத் திராவிடவித்தியாசங்கத்தலைவர் மகா-ள-ள-ஸ்ரீ ப. ரா. ஐயாச்சாமி ஐயர் B. A. அவர்களும் முறையே "அறிவுடைமை" "அருளுடைமை" என்ற விஷயத்தைச் சபையார் கேட்டின்புறுமாறு பலமேற்கோள்களுடன் பிரசங்கம் செய்தார்கள். பின்பு இராமநாதபுரம் தமிழ்ப்பண்டிதர் மகா-ள-ள-ஸ்ரீ ப. சிவசாமிசேர்வை காரரவர்கள் கல்வியிற்பெரிய "கம்பரி"ன் சரிதையையும் அவர்



வாக்குவளத்தையும்பற்றி இனிமையாக ஒரு பிரசங்கம் புரிந்தார்கள். பின்பு தமிழ்ப்பண்டிட் மகா-ள-ள-ஸ்ரீ A. கார்மேகக்கோனாரவர்கள் "தாய்மொழிப்பயிற்சி" என்ற விஷயத்தையெடுத்துக்கொண்டு நம் தமிழ்ப்பாஷைக்குச் சர்வகலாசங்கத்தார்செய்யவேண்டிய கடமையையும் ராஜாங்கத்தார் நம்பாஷைக்குச் செய்கின்ற உதவியுடன் நாம்செய்ய வேண்டிய உதவியையும்பற்றி ஒரு உபந்நியாசம் செய்தார்கள். அன்று மாலை 3-மணி முதல் இரவு 9-மணிவரை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மறுநாட்காலை மீண்டும் 8-மணிக்குச் சபைகூடிற்று. அவ்வமயம் அபிராமம் ஸ்ரீ K. நடராஜத்தேவரவர்கள் "நட்பு" என்ற விஷயமும் சங்கக்காரியதரிசி ஸ்ரீ D. நாகலிங்கம்பிள்ளை அவர்களால் "இல்லறவொழுக்கம்" என்ற விஷயமும் இராமநாதபுரம் ஸ்ரீ ஆ. நாகலிங்கம்பிள்ளையவர்களால் "பழியஞ்சினதிருவிளையாடலும்" மதுரை ஸ்ரீ கலியாணசுந்தரமையரவர்களால் "சகோதரத்வம்" என்றவிஷயமும் பிரசங்கிக்கப்பட்டன.

மாலை 3-மணிக்கு மறுபடியும் சபைகூடியது. அச்சமயம் ஸ்ரீ ப. தா. மு. பொன்னுச்சாமிஆச்சாரியவர்களால் "தர்மம்" என்ற விஷயமும்,ஸ்ரீமாந். துபாஷ் D.K. முகம்மதுயாசிம் அவர்களால் "கல்வி" என்ற விஷயமும் வெகு இனிமையாகப் பிரசங்கிக்கப்பட்டன. பின்பு மதுரை செட்டில்மெண்டு ஆபீஸ் ஹெட் ரைட்டர் மகா-ள-ள-ஸ்ரீ காந்திமதிநாதபிள்ளையவர்கள் "பெண்கல்வி" என்ற விஷயமாய் மிகுந்த உருக்கத்துடன் பிரசங்கம்புரிந்தார்கள். பின்பு மதுரை 7-வது சர்க்கிள் கலாசாலைகளின் இன்ஸ்பெக்டரின் பெர்ஸனல் அஸிஸ்டெண்டு இன்ஸ்பெக்டர் ஸ்ரீமாந் வே. முத்துசாமி ஐயர் M. A. L. T. அவர்கள் "தமிழ்நாடு" என்ற விஷயத்தை யெடுத்துக்கொண்டு தமிழ்நாட்டின்எல்லையையும் செந்தமிழ்நாட்டின் எல்லையையும் செந்தமிழ்நாட்டின் பலவகை அமைப்புக்களையும்பற்றிக் கரும்பலகையில் பலவிதவிளக்கக் குறிப்புகள் வரைந்துகாட்டிப் பலசங்கநூல் ஆராய்ச்சியுடன் சபையோர் மகிழுமாறு நீண்டதோர் பிரசங்கம் செய்தார்கள். பின்பு ஸ்ரீ ப. மு. வேலுப்பிள்ளையவர்கள் "அன்னையும்பிதாவு முன்னறிதெய்வம்" என்ற விஷயத்தைப் பிரசங்கம் செய்தார்கள்.

பின்பு ஷை மகா-௱-௱-ஸ்ரீ ப. ரா. ஐயாச்சாமி ஐயர் B. A. அவர்கள் "ஈச்வரசந்திரவித்தியாசாகரர்" என்னும் பெரியார்சரிதையைப் பலவித நயத்துடன் பிரசங்கித்துச் சபையாரை மகிழ்வித்தார்கள்.

அதன்பின் ஸ்ரீ வே. முத்துசாமி ஐயர் M. A. L. T. அவர்களும் ஸ்ரீ. சிதம்பரபுன்னைவனநாதமுதலியாரவர்களும், ஸ்ரீ காந்திமதிநாதபிள்ளையவர்களும், ஸ்ரீ A. கார்மேகக்கோனாரவர்களும் தனித்தனியே செய்த மங்கலவாழ்த்துப்பாக்கள் படிக்கப்பட்டன.

மூன்றாம்நாள் மாலை 3-மணிக்கு மறுபடியும் கொண்டாட்ட நிகழ்ச்சி ஆரம்பித்தது. அப்போது மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை மாணவர் ஸ்ரீ. சடகோபரெட்டியாரால் "கொல்லாமை" என்ற விஷயம் உபந்யாசிக்கப்பட்டது. அபிராமம் வாலிபர்களால் "இஷ்டமேஷ்டம்" என்றகதை சம்பாஷணைரூபமாக ஜனங்கள் ஆனந்திக்குமாறு நடத்தப்பட்டது. பின்பு தமிழ்ப்பண்டிட் ஸ்ரீ சிதம்பரபுன்னைவனநாதமுதலியாரவர்கள் தாம்மொழிபெயர்த்த "மைத்ரேயிசம்பாஷணை"யை யாவரும் மகிழுமாறு வாசித்தார்கள். பின்பு ஸ்ரீ A. கார்மேகக்கோனாரவர்கள் "வாய்மை" என்ற விஷயத்தைப் பிரசங்கித்தார்கள். பின்பு சபாநாயகரவர்கள் தாம் எழுதியுள்ள "கடவுள் உண்மை" என்ற அரிய பெரிய வியாசத்தை யாவரும் அதிக உற்சாகத்துடன் கேட்டுமகிழும்படி இனிமையாகப்படித்துவியாக்யானம்செய்தார்கள். (இவ்வியாசம் இச்சங்கத்தாரால் அச்சுப்பிரதிரூபமாகவெளிப்படுத்தப்படும்).

பின்பு சபாநாயகரவர்கள் சங்கத்தைப்பற்றிய தமது அபிப்பிராயங்களைக் கூறியவளவில் சங்கக்காரியதரிசிஅவர்களால் சபாநாயகருக்கும் விஜயம் செய்தோருக்கும் வந்தனோபசாரம் சொல்லவும் சந்தன புஷ்ப தாம்பூலாதிகள் அளிக்கவும் அரசவாழ்த்து மங்கலவாழ்த்துக் கூறவும் சுமார் 8½-மணிக்கு இச்சங்கத்தின் மூன்றாம்வருடக்கொண்டாட்டம் இறைவனருளால் இனிது பூரணமாயிற்று. சுபம்.

வித்யாபாஸ்கரசெந்தமிழ்ச்சங்கம், ) D. நாகலிங்கம்பிள்ளை,

அபிராமம். காரியதரிசி.

# இந்துதேச சரித்திர காலக்குறிப்புகள்.

## (Chronological Notes Of Indian History)

"செந்தமிழ்" தொகுதி ௧௭-ன், ௧௧௨-ஆம்பக்கத்தொடர்ச்சி.

1608 [சகம் 1530=கீலக-சைத்ர, சுக்ல-நவமி ஞாயிறு] ஸ்ரீ ராமநவமி தினத்தில் ராமதாஸ் ஜனனம்

இவர் ஆதிப்பெயர்—நாராயணர்.

இவர்தகப்பனார்—சூர்யாஜீபந்த்.

தாயார்—ராணுபாய்.

பிராமணர் ஜமதக்நிகோத்ரம் ஆசுவலாயனம்.

பிறப்பிடம்—ஸதாரா ஜில்லாவில், ஜாம்ப் என்ற கிராமம்.

மரணம்—1682.

1609-1623 முத்துவீரப்பநாயக்கர் மதுரை நாயக்கர்வம்ச 6-ம் அரசன். கிறிஸ்தவமதத்தைப் பரவாது கண்டித்தார்.

1609 ராஜஉடையார் அரசில், மைசூர், விஜயநகர ஆதீனத்தினின்றும் விலகி ஸ்வாதீனமடைந்தது.

1612. (விக்ரம 1668) கமலாகர பட்டர், காவ்யப்ரகாசம் என்ற அலங்காரசாஸ்திரத்துக்கு உரை எழுதினார்.

வஸுரிதுரிதுர் பூபதே கதேப்தே நாபதிவிக்ரம தோதயாதிரௌத்ரே தபவிசிவதிதௌ ஸாமபிதோயம், ரகுபதிபாதஸரோருஹே ஸமர்ப்பித:—சகமலாகரர் அப்பய்யாதீக்ஷிதரைப்பற்றிச் சொல்லுகிறார். அப்பய்யாதீக்ஷிதர் ஜயதேவருடைய சந்திராலோகம் என்ற நூலைப்பற்றிச் சொல்லியிருக்கிறார்.

(2) நிர்ணயஸிந்து.

கமலாகரர், சுதர்சனாசாரியார் எழுதிய, ஆபஸ்தம்ப கிருஹ்யசூத்ர, உரையைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். ஷை சூத்ரத்துக்கு இன்னொரு உரை எழுதிய ஹரதத்தரைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்.

குறிப்பு—காவ்யப்ரகாசம் எழுதியவர் மம்மடர்.

1613 (சகம் 1535) வரகுண ஸ்ரீவல்லப குலசேகரபாண்டியன்.

1614 வெங்கடபதி மரணம். இவர் விஜயநகர 3-ம் வம்சத்தரசன்.

1623-1659 திருமலைநாயக்கர். மதுரை நாயக்கர் வம்ச 7-ம் அரசன். திருச்சிறாப்பள்ளியிலிருந்து மதுரைக்குத் தலைநகர்மாற்றப்பட்டது.

1623 ராபர்ட்-டி-நோபிலஸ், மதுரைக்கு மறுபடிவந்தார்.

1624 துளஸீதாஸ் மரணம்.

1627 சிவாஜி ஜனனம்.

பிறப்பிடம்—புனாவுக்குத் தெற்கே 50-மைல் தூரத்திலுள்ள சிவனேரி என்ற ஜாகீர் கிராமம்.

இவர் மஹாராஷ்ட்ர மஹாராஜ்யஸ்தாபகர்.

1630 பட்டநீலகண்டர், வ்யவஹார மயூகம் இயற்றினார். இவர் ஊர்:—சம்பல்—யமுனாநதிஸங்கமஸ்தலமாகிய பிரேஷ்ம.

—[Hindu Polity.]

1631 (1687 விக்ரம) ஜயந்தர், தன் குருவாகிய கிருஷ்ணபண்டிதர் இயற்றிய பரக்ரியா கௌமுதி உரைக்கு தத்வசந்திரிகா, என்ற சுருக்கம் எழுதினார்.

ஐயம்? இந்த கிருஷ்ணபண்டிதர், சேஷகிருஷ்ணபண்டிதரா அல்லது கம்ஸவதநாடகம் இயற்றிய நரசிம்மர் புதல்வன் கிருஷ்ணகவியா?

1636 (கலிபு 738) நீலகண்டர், நீலகண்ட விஜயம் இயற்றினார்.

ஆசாரியதீக்ஷிதர் (பரத்வாஜகுலம்) வம்சாவளி.

- ரங்கராஜமகி
  - அப்பய்யாதீக்ஷிதர்
    - நருநாததீக்ஷிதர்
      - வேங்கடாத்வரி (விசுவகுணாதர்சம் இயற்றியவர்)
  - ஆச்சாதீக்ஷிதர்
    - நாராயணதீக்ஷிதர்
      - நீலகண்டதீக்ஷிதர்



1638 சிவாஜி பிதாவும், பீஜபூர் சுல்தானுடைய சேனாபதியுமான ஷாஜி, தக்ஷிணதேசத்தில் படையெடுத்து வந்து மதுரை அரசரையும், தஞ்சை அரசரையும் பிஜபூர் சுல்தானுக்குச் சிற்றரசராக்கினார்.

1648 கோயம்புத்தூரில் கொடும்பஞ்சம்.

—[Jesuits' Records.]

1649 (சகம் 1571) துகாராம் ஜனனம். பிறப்பிடம்—புனாவுக்கு வடமேற்கே 16-மைல் தூரத்தில் இந்திராநதிக்கரையிலுள்ள தேகு என்ற கிராமம்.

முருய் (Moroy) என்ற சூத்ரவர்ணத்திலவதரித்த விசுவம்பரர் என்ற ஓர் பெரிய விஷ்ணுபக்தரின் 7-ம் தலைமுறையில் துகாராம் பிறந்தார்.

[1608ஐயும் பார்க்கவும்]

துகாராம் மரணம்—1688 (சகம் 1510).

சிவாஜிகாலத்து 3 கவிகள்:—

(1) ஏகநாத்—(Literary) பாஷாகவி.

(2) ராமதாஸ் (Practical) லௌகிக ஸம்பிரதாயம்.

(3) துகாராம் (Emotional) பக்தகவி.

1653 ஸ்தானவாசிகள் (துந்தியர்) என்ற க்ஷபணர் பிரிவு ஏற்பட்டது.

1659 அப்ஸல்கான். பிஜபூர் சுல்தானுடைய சேனாபதி. சிவாஜி மீது படையெடுத்து இறந்தான்.

1659 திருமலைநாயக்கர் மரணம்.

9-1707 ஔரங்கசீப்—தில்லியிலாண்ட முதல் சக்ரவர்த்தி.

659-62 தஞ்சாவூர் திருச்சிராப்பள்ளி மதுரைஜில்லாக்களில் கொடும் பஞ்சம்.

[Jesuit Records]

1659 கோல்கொண்டா மஹமதியர் ஷிடி சீமையில் படையெடுத்து வந்தார்கள்.

1660-1682 சொக்கநாதன். மதுரை நாயக்கர் வம்ச 9-ம் அரசன்.

1666 குருகோவிந்தர் ஜனனம்.

இவர்பிதா—தேஜ் பஹதூர்சிங். பிறப்பிடம்—பாடலீபுரம் (பாட்னா) 1675 (9-ம் வயதில்) சிக் மத 10-வது ஆசாரியர் ஆனார்.

சிக் ஜாதியாரைத் தமது உபதேசத்தால் போர்வீரர்களாக்கி, ஔரங்கசீபுக்கு விரோதமாய்க் கொடும்போர் புரியச்செய்தார். 1708ல் ஔரங்சீப் இறந்ததும் அவர் மகன் பஹதூர்ஷா சக்ரவர்த்திக்கும் இவருக்கும் நேசமுண்டாயிற்று. இருவரும் தெற்கே படையெடுத்துச் சென்றார்கள். கோதவரி நதிக்கரையில் நந்தர் என்ற இடத்தில் குருகோவிந்தர் (வஞ்சனையால்) கொலையுண்டார். இதுமுதல் சிக்ஜாதியாரின் பெருமையும் குறைய ஆரம்பித்தது.

1666 தஞ்சை மஹாராஷ்ட்ரர் அதிகாரத்துக்குள்ளாயிற்று.

1674 (ஜ்யேஷ்ட சுக்லத்ரயோதசி) ராஜகாட் நகரில் சிவாஜிக்குப் பட்டாபிஷேகம்.

1674 வெங்கோஜி தஞ்சையைப் பிடித்தார்.

1675 தஞ்சையில் மஹாராஷ்ட்ர ராஜ்ய ஸ்தாபனம்.

வெங்கோஜி தஞ்சையில் ஆண்ட மஹாராஷ்ட்ர முதல் அரசன். இவர் சிவாஜியின் மாற்றாந் தாயின் புதல்வன்.

1676 சிவாஜி தஞ்சைமீது படையெடுத்துவந்து, வெங்கோஜியுடன் சமாதானம் செய்து தஞ்சையை அவருக்கு ஸ்வாதீன அரசாக்கினார்.

1677 மைசூர்ச் சேனை மதுரைமீது படையெடுத்துவந்தது.

1680 ஏப்ரல்-5 சிவாஜி மரணம்.



1680 வீரமாமுனிவர்-பெஸ்சி என்ற கிறிஸ்தவப்பாதிரி. இதாலியில் பிறந்தவர். 1706—1741 வரை தென் இந்தியாவிலேயே இருந்து இறந்தார்.

1682-1684 ரெங்ககிருஷ்ண முத்துவீரப்பநாயக்கர். மதுரை நாயக்கர் வம்ச 10-ம் அரசன்.

1684 ஷாஜி (ருத்ரகிரி) தஞ்சை மன்னன்.

1685-1707 தக்ஷணத்தை ஜயிக்க ஔரங்கசீப்செய்த போர்கள்.

1687 வெங்கோஜி மரணம்.

1689-1704 மங்கம்மாள் ராணி. தன் பௌத்ரன் சொக்கநாதன் சிறுவயதாயிருந்ததால், அவனுக்குப்ரதிநிதியாய் மதுரை ராஜ்யத்தை ஆண்டாள்.

1693 ராமபத்ரதீக்ஷிதருக்கு, தஞ்சை மன்னன் ஷாஜிமஹாராஜன், 4 ஸ்தலம், தானம் செய்தார் [தானசாஸனம்.]

நல்லதீக்ஷிதர் | யக்ஞதீக்ஷிதர் | ராமபத்ரர் =

நாராயணர் | சொக்கநாதர் | =(மனைவி) புத்ரி

இவர்குரு—நீலகண்ட தீக்ஷிதர்.

இவர் இயற்றிய நூல்கள்:—

(1) அஷ்டப்ராஸ:
(2) சாபஸ்தவ:
(3) ஜானகீபரிணய (நாடகம்)
(4) பதஞ்ஜலி சரிதாக்ய (காவ்யம்.)
(5) பர்யாயோக்தி நிஷ்பந்த:
(6) ப்ரஸாதஸ்தவ:
(7) பாணஸ்தவ:

(8) விஸ்வகர்ப்பஸ்தவ:

(9) ஶ்ருங்காரதிலகம்.

1700 சீமைப் பார்லிமெண்ட் ஆக்ட்-இந்தியாவிலிருந்து வரும் சாயத்துணி, சிட்டிமுதலான ஜவுளிகளை இங்கிலாந்திலுள்ளோர், உபயோகிக்கக்கூடாது என்று நிர்ப்பந்தவிதி இதனால் ஏற்படுத்தினார்கள். [Lecky]

ஆர். எஸ். நாராயணஸ்வாமி ஐயர்,
பி. ஏ., பி. எல்.
மதுரை.

---

## ஓர் அறிக்கை.

---

கனவான்களே!

இப்போது உலகில், நாகரிகத்தில் சிறந்ததெனப் பெருமை பாராட்டிவரும் ஏனையதேசங்களெல்லாம், அநாகரிகம் எனும் அந்தகாரத்தினடுவே உழுண்டுகொண்டிருந்த அப்பூர்வகாலம்முதல், உலகத்துக்கே ஓர் திலகம் போலவும் கொடிவிளக்குப்போலவும் விளங்கிய நமதுதேசத்தின் பெருமையும், சரித்திரத்தையும், மஹான்களே எடுத்துரைக்கக்கூடும்.

ஆங்காங்கு படித்தவிடங்களில் பொறுக்கி எடுக்கப்பட்ட சிலகுறிப்புகளை இங்ஙனம் தொகுத்து எழுதத்துணிந்தேன். இதை என் அவாவால் செய்யமுயன்றேனே யொழிய, அறிவால் அல்ல.

இவ்வரிய பெரிய விஷயத்தில் நமது தமிழபிமானிகள் யாவரும் தங்கள் தங்கள், ஆராய்ச்சிப்பயனையும், தீர்மானங்களையும் இச்செந்தமிழ்மூலமாகவாவது, அல்லது எனக்கு நேரிலாவது தயவுடன் அறிவிப்பார்களானால், இதைப்புஸ்தகரூபமாய் ப்ரசுரிக்க மிகச்சாதனமாயும், நம் தமிழ்ப்பாஷா விளக்கத்துக்கும் தேசசரித்திர விளக்கத்துக்கும் பேருதவியாகும்.

மதுரை, 7—2—19.

இங்ஙனம்
தங்கள்
ஆர். எஸ். நாராயணஸ்வாமி.

## மூன்றாம்பாகம்.

## இரண்டாம் சோமேசுவரன் அரசாட்சியும் விக்கிரமாதித்தனும்.

---

**இரண்டாம் சோமேசுவரன் முடிசூடியது**

தந்தை ஆகவமல்லன் (அல்லது) முதலாம் சோமேசுவரன் கி. பி. 1068-ம் வருஷம் மார்ச்சுமாதம் 29-ம் தேதியில் துங்கபத்திரைக்கரையில் குருவர்த்தி என்னுமிடத்தில் ஜலசமாதியடைய, அவனுக்குச் செய்யவேண்டிய சடங்குகளைச் செய்துமுடித்து, அதுகாறும் இளவரசனாயிருந்த சோமேசுவரன், புவனைகமல்லன் என்கிற பிருதுடன் ஏப்ரல் மாதம் 11-ம் தேதியில் ராஜ்யபாரத்தை ஏற்றான். (1) சோழவீரராஜேந்திரன் இதுதான் தக்க சமயமென்று நினைத்து “சோமிவரன் கட்டியகண்டிகை அவிழ்ப்பதன் முன்னம்” (2) கம்பிலியைச்சுட்டு, (அனந்தபூர் ஜில்லாவைச்சார்ந்த) குத்தியை முற்றுகைபோட்டு, (ராயச்சூர்ஜில்லா இடத்துறையிலுள்ள) கரடிக்கல்லில் ஜயஸ்தம்பமொன்று நாட்டினான். இவைகள் சோமேசுவரனது பலக்குறைவை ஒருவாறு விளக்கும். வனவாசிக்கு இறைவனான லக்ஷ்மணன் இச்சமயம் சளுக்கியருக்குப் பேருதவிபுரிந்து ஓர் ஊன்றுகோலாயிருந்தனன் (3).

---

1. Epi. car. VII. S. K. 136.
2. இதற்கு இரண்டாம் சோமேசுவரன் இளவரசுகண்டிகையை அவிழ்த்து (அதாவது புவராஜாபதவியைவிட்டு) அரசனுக்குமுன்னே என்று மகா-ா-ா-ஸ்ரீ ராவ்சாஹிப் கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்கள் அபிப்பிராயப்படுகிறார்கள். Vide his paper on the Cholas in the journal of South Indian Association Vol. I, 60. மற்றவர்கள் ஆகவமல்லனாகிய முதலாம் சோமேசுவரன் ராஜபதவியை விட்டவுடனே (அதாவது இறந்தவுடனே) என்று பொருள்கொள்வர். கண்டிகை இளவரசுக்குமட்டும் உரித்தன்று அரசனுக்கும் உண்டு என்பது மணிமங்கலசாசனத்தால் விளங்குகிறது. வல்லவர்கோனை வரவுகாணாது வல்லவனுக்கிச் சுந்தரகண்டிகைகட்டி சளுக்கிபதம்பெற்ற (S.I.I. III. No. 20 கருவூர்ச்சாசன) சோழசாசனங்களில் பெரும்பாலும் முதலாம் சோமேசுவரன் ஆகவமல்லனென்று குறிப்பிக்கப்பட்டிருப்பதால் முந்திய அர்த்தமே விசேஷப்பொருத்தமுடையதாகும்.
3. Epi car VII. S. K. 136.

இஃது இங்ஙனமிருக்க விக்ரமாதித்தன் வேங்கியிலிருந்து திரும்பி வருகையில் ஆகவமல்லன் இறந்த செய்தியைக் கேள்வியுற்றுத் தந்தைக்குரிய சடங்குகளைக் கிருஷ்ணாநதியில் செய்துமுடித்துத் தமையனைத் தேற்றக்கலியாணபுரத்துக்கு விரைந்து வந்தான். சோமேசுவரனும் அவனை அன்புடன் எதிர்கொண்டு அழைத்தான். இருவரும் பிதாவின் பிரிவாற்றாது துக்கித்ததோடு சிலகாலம் மிகுந்த ஒற்றுமையோடிருந்தனர். விக்கிரமாதித்தன் தான் சண்டையில் அடைந்த பொருள்களையும் தமையனிடம் கொடுத்து அவன் சொற்படி நடந்துவந்தான் (4).

**விக்கிரமாதித்தன் இளவரசானது**

யுவராஜனாகி இருந்தகாலத்தில் விக்கிரமாதித்தன் பல்லவவரசனை ஜயித்ததாக ஒருசாசனத்தில் (5) சொல்லப்பட்டிருப்பதால், இக்காலத்தில் தான் சோமேசுவரன், தம்பி விக்கிரமாதித்தனை இளவரசாக நியமித்திருத்தல் வேண்டும் மேலும் சோமேசுவரனுக்குச் சற்றேறக்குறைய ஏற்கனவே 40 பிராயமானபடியாலும் அதுவரையில் புத்திரரின்மையாலும் பராக்கிரமசாலியான தன் தம்பியையே யுவராஜனாகச் செய்தானென்பது அசம்பாவிதமன்று.

**சோமேசுவரன் நெறிதவறி நடந்தது**

சிலகாலத்திற்குப் பிறகு சோமேசுவரன் நெறிதவறி நடக்கலுற்றான். உலோபகுணம் மேலோங்க, பலர் மேலும் குற்றஞ்சாட்டி அவர்மனம் நோவச் செய்தான். மேன்மேலும் வரிகளை விதித்துக் குடிகளை வருத்தினான். பெரியோர் சொல்லை அசட்டைசெய்து செருக்குற்றவனாக, குந்தளதேசமானது பெருமை குன்றியது. அதனால் சளுக்கியரது கீர்த்தியும் மலினமடைந்தது (6).

---

4. விக். சரி. IV-69-76.
5. கால்கநாத சாசனம் Bom. Gaz. IV. 442.
6. விக். சரி. IV. 97; V-9 தேங்கலி, கலீஜ், சடக்சாசனங்கள் Bom. Gaz. IV-444.



**விக்கிரமாதித்தன் சோழரோடு உறவாடியது**

அதுகண்டு விக்கிரமாதித்தனும் வருத்தப்பட்டு, தமையனை நல்வழிக்குக் கொண்டுவரப் பிரயத்தனப்பட்டும் அது பயனிலவாக, தம்பி ஜயசிங்கனோடு கலியாணபுரத்தை விட்டுத் தான் ஏற்கனவே மண்டலாதிபதியாகவிருந்த வனவாசி மாகாணத்திற்குச் சென்றான். கோபகா பட்டணத்தை (கோவாவை) பிரதான நகராகக்கொண்டு (பம்பாய் இராஜதானியின் வடபாகமாகிய) கொங்கணத்தையாண்டுவந்த சிற்றரசனான கதம்பவமிசத்து முதலாம் ஜயகேசியும் அவனைப்பணிந்து மிகுந்த திரவியம் உதவினான். (7) ஆலுப (அலுப்பி) தேசத்தரசனும் அங்ஙனமே செய்தனன். அப்பால் விக்கிரமாதித்தன் கேரளதேசத்தரசனைத் தாக்கி, ஜயங்கொண்டு திடீரென்று தென்புறமாகச் சோழராஜ்யத்துக்குள் பிரவேசித்தான். வீரராஜேந்திரன் இடுக்குற்றுச் சமாதானம்செய்துகொள்ளுமாறு தூதனுப்ப, விக்கிரமாதித்தனும் அதற்கிசைந்து துங்கபத்திரைக்குத் திரும்பினான். வீரராஜேந்திரனும் அவ்விடம் வந்து தன்பெண்ணை அவனுக்கு மணம் செய்வித்தான் என்று பில்ஹணர் (8) கூறியுள்ளார். இங்ஙனம் கலியாணம் நடந்ததாகச் சாசனங்கள் வெளிப்படையாகக் கூறாவிடினும் இதுசமயம் விக்கிரமாதித்தனும் வீரராஜேந்திரனும் ஒருவாறு விரோதம் நீங்கினார்களென்பது மட்டும் அவற்றாலும் (9) விளங்குகின்றது.

---

7. J. B. R. A. S. IX. 282.
8. விக். சரி. V-20; VI-3.
9. J. B. R. A. S. IX-279-ல் கொங்கணஜயகேசி இவ்விருவர்களையும் சிநேகிதராக்கினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது.
   பெரும்பேறு சாசனம் V. I. I. III. No. 84வீரராஜேந்திரனது எட்டாம் வருஷம் (1070-1 கி. பி.) இதில் வீரராஜேந்திரன் சோமிவரனை கன்னரதேசம் கைவிடத்துரத்தி, தன்னடிபணிந்த சளுக்கி விக்கிரமாதித்யனுக்கு எண்டிசை நிகழக் கண்டிகைகட்டி, இரட்டபாடி எழரையிலக்கமுமெறிந்து கொடுத்தருளினதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயமே வீரராஜேந்திரனது 5-ம் வருஷத்து மணிமங்கல சாசனத்திலேயே (அதாவது கி. பி. 1067-8-லேயே) காணப்படுகிறதென்றெண்ணி மேனூர் வந்த புரட்டனை வல்லவனுக்கிச் சுந்தர கண்டிகை கட்டி' என்பதற்கு விக்கிரமாதித்தனென்று பொருள் கொண்டு பரிகாசமல்லவென்றும் சரித்திர சம்பந்தமான விஷயம் அடங்கியுள்ளதென்றும் டாக்டர் ஹூல்ஷ் அபிப்பிராயப்படுகிறார். ஆனால் இது தவறு என்று ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். (2-ம் பாகம்) மேற்கண்ட பெரும்பேறுசாசனத்தை முழுதும் நம்புவதற்

இவ்வாறு விக்கிரமாதித்தன் தன் மனைவியோடு துங்கபத்திரைக் கரையில் சந்தோஷமாகக் காலங்கழித்து வருகையில், தன்மாமனாகிய வீரராஜேந்திரன் (கி. பி. 1070-1-ல்) இறந்தானென்றும் சோழதேசமே குழப்பமடைந்திருந்த தென்றும் கேள்வியுற்று, உடனே காஞ்சிக்குப்போய் கங்கைகொண்ட சோழபுரத்திற்கும் சென்று தன் மைத்துனனை அதிராஜேந்திரதேவனை (10) சிங்காதனத்திலிருத்தி விக்கிரமாதித்தன் துங்கபத்திரைக்குத் திரும்பினான். திரும்பினவுடனே சோழநாட்டில் மற்றோர்குழப்பமுண்டாகி அதில் அதிராஜேந்திரதேவன் கொல்லப்பட்டான். இவன்காலத்து நிகழ்ந்த குழப்பம் கலிங்கத்துப்

இடமில்லை. ஏனெனில் கி. பி. 1076 வரையில் சோமேசுவரன் சளுக்கிராஜ்யத்தை யாண்டுவந்தானென்பது சாசனங்களால் யாவர்க்கும் ஒப்பமுடிந்தது. அதற்குப்பின்னரே விக்கிரமாதித்தன் ஆண்டான். ஆகையால் இரட்டபாடியை கி. பி. 1070 இலேயே விக்கிரமாதித்தனுக்கு வீரராஜேந்திரன் எங்ஙனம் கொடுத்திருக்க முடியும். மேலும் 'கண்டிகைகட்டி' என்பதற்கு 'அரசனாக்கி' என்று பொருள்கொள்ளாமல் இளவரசாக்கினான் என்று சிலர் பொருள்கொள்ளுகிறார்கள். இதுவும் பொருந்தாது. ஏனெனில் சோமேசுவரனே விக்கிரமாதித்தனை ஏற்கனவே தன் ராஜ்யத்திற்கு இளவரசாக்கினானென்று மேலே கூறியுள்ளோம். மேலும் சளுக்கி ராஜ்யத்திற்கு சோழ வீரராஜேந்திரன் யுவராஜாபிஷேகம் செய்தானென்பது கடைத் தேங்காயை எடுத்து வழிப்பிள்ளையாருக்கு உடைத்தாற் போலாகும். கன்னர (கர்நாட்) தேசத்தை சோமேசுவரன் கைவிடத்தரத்தியது முழுதுமுண்மையாயின் ஏன் வீரராஜேந்திரன் சளுக்கியராஜ்யத்தைச் சோழராஜ்யத்துடன் சேர்த்துக்கொள்ளக்கூடாது. அல்லது ஏன் தன்மாப்பிள்ளையாகிய விக்கிரமாதித்தனை அப்பொழுதே சளுக்கியர் சளுக்கியிருக்கக் கூடாது? ஆகையால் இங்கு 'கண்டிகைகட்டி' என்பது கன்னர தேசத்தை ஜயித்த வீரராஜேந்திரன் பெண்ணை விக்கிரமாதித்யன் மணந்தபோது கொடுத்ததொரு பரிசிலையே குறிப்பது போலும்.

10. கலிங்கத்துப்பரணியில் அதிராஜேந்திரனைப்பற்றியே ஒன்றும் காணப்படவில்லை 'குந்தளரைக்கூடற்சங்கமத்துவென்றகோனபயன் (வீரராஜேந்திரன்) குவலயங்காத்தளித்தபின்னை (1070-1-கி. பி.) இந்தநிலக்குலப்பாவை இவன்பாற் (குலோத்துங்கன்) சேர என்ன தவம் செய்திருந்தாள் என்று காணப்படுகிறது ஆயினும் வீரராஜேந்திரனுக்குப்பின் (குலோத்துங்கனுக்குமுன்) ஒருவன் சோழராஜ்யத்தை ஆண்டானென்பது S. I. I. No. 57-Vol. III-ல் விளங்குகிறது. அதிராஜேந்திரதேவனது 3-ம் வருஷத்திய சாசனமொன்று வீரராஜேந்திரன் கடைசிவருஷமாகிய எட்டாமாண்டு ஏற்படுத்திய ஒரு விஷயத்தைக் குறிக்கிறது. மேலும் விக்கிரமசோழனுலா 23-ம் பாடலில் அக்கவற்பின் (கூடல் சங்கமத்துவீரன்) காவல் புரிந்தவனி காத்தோனும் என்று கூறப்பட்டவனும் இவனேயாவன். இவன் வீரராஜேந்திரன் மகனென்பது. விக் சரி 'சோளசூனோ' என்பதனால் விளங்குகிறது.



பரணியிலும் (11) இரண்டாம் ராஜேந்திரசோழன் (முதலாம் குலோத்துங்கன்) சாசனங்களிலும் (12) விரிவாகக் காணப்படுகின்றது. இக்குழப்பத்திற்குக் காரணம் இன்னதென்று விளங்கவில்லை. குலோத்துங்கன் சுங்கந்தவிர்த்த சோழன் என்று பேரெடுத்ததால் ஒருகால் வீரராஜேந்திரன் விதித்த வரியும் அதிராஜேந்திரதேவனது பலக்குறைவும் இதற்குக் காரணமாயிருக்கலாம். ராமானுஜருடைய சிஷ்யராகிய கருடவாஹன ஸ்ரீநிவாசரது திவ்யசூரிசரிதத்திலிருந்து (13) கிருமிகண்ட சோழன் ஒருவன் சிவமதத்தைத்தழுவி வைஷ்ணவர்களை வற்புறுத்த, அதனால்கலகம் நேர்ந்ததென்று தெரியவருகிறது.

அதிராஜேந்திரதேவன் கொல்லப்பட்டதனால் புகழ்பெற்ற ராஜராஜன் (I) முதலாகவந்த சோழவமிசமே ஒருவாறு முடிவுற்றது (14). உடனே வேங்கிநாத ராஜிகன் (ராஜேந்திரசோழன்) 1070 கி. பி. யில் சோழராஜ்யத்தை யடைந்தான் (15). இவன் சந்திரகுலத்துச் சளுக்கியனானபோதிலும் தாய்தந்தையர் இருவர்மூலமாகவும் சூரியகுலத்துச் சோழராதுவழிவந்தவனாகையால் (16) அதிராஜேந்திரதேவனுக்

11. "மறையவர்வேள்விகுன்றிமநுநெறியனைத்துமாறித்
துறைகளோராறுமாறிச்சுருதியுமுழக்கமோய்ந்தே"

சாதிகளொன்றோடொன்றுதலைதடுமாறியாரும்
ஓதியநெறியினில்லாவொழுக்குமுமறந்தபோயே
ஒருவரையொருவர்கைம்மிக்கும்பர்தங்கோயில்சோம்பி
அரிவையர்கற்பிற்சோம்பிஅரண்களுமழியவாங்கே
X. 27-9.

12. "தென்றிசைத்தேமருகமலப்பூமகள்பொதுவையும்
பொன்னியாடைநன்னிலப்பாவையின்றனிமையும்"
S. I. I. III. 142.

13. Ind. Ant. XLI. 220-4.
14. Ind. Ant. XLI. 223 'Now I have closed the rule of the king of the Chola family'
Ind. Ant. XL-136 கோயிலொழுகு.
15. விக். சரி. VI. 6-26.
16. இரண்டாம்பாகம்-வம்சாவளிபார்க்க.
'உபயகுலோத்தமன்' கலிங்கத்துப்பரணி I. 2.

'திங்களினிளங்குழவிசெம்மலிவனென்றும்
செய்யபரிதிக்குழவியையனிவனென்றும்
தங்களின்மகிழ்ந்திருகுலத்தரசர்தாமும்
தனித்தனியுவப்பதோர்தவப்பயனுமொத்தே'
X. 7.

கப்பால் சோழநாட்டரசுக்கும் இவனே தௌஹித்ர பாத்தியத்தால் முறைமையில் (17) உரியவனாயினான்.

துங்கபத்திரைச் சண்டையும் சோமேசுவரன் அரசிழந்ததும்

இதைத்தடுக்க வெண்ணி, வீரராஜேந்திரன் மாப்பிள்ளையும் அதிராஜேந்திரதேவன்மைத்துனனுமாகிய விக்கிரமாதித்தன் சோழநாட்டின்மேல் படையெடுக்க முயன்றான். அதற்குமாறாக ராஜேந்திரசோழனும் தனக்குப் புதிதாகக் கிடைத்த வரசைநழுவவிடாவண்ணம் விக்

"இருண்முழுதுமகற்றும்விதுகுலத்தோன்றேவி
பகல்விளங்குதபனகுலத்திராசராச
னருடிருவின்றிருவயிற்றில்வந்துதோன்றி
யாவிலையினவதரித்தானவனேமீள"

X. 3.

"கங்கைகொண்டசோழன்றேவி
குலமகடன்குலமகன்" X. 5.

17. இந்த ராஜேந்திர சோழனை கங்கைகொண்டசோழன் சுவீகாரஞ்செய்துகொண்டு சோழநாட்டுக்கு இளவரசாக்கினான் என்பது கலிங்கத்துப்பரணியிலும் குலோத்துங்கன் சாசனங்களிலும் காணப்படுகின்றது. இவன் பிறந்ததும்

"அலர்மழைபொன்மழைபொழியவதுகண்டு
கங்கைகொண்டசோழன்றேவி
குலமகடன்குலமகனைக்கோகனத
மலர்க்கையாலெடுத்துக்கொண்டே"

"அவனிபர்க்குப்புத்திரனுமடையாள
மவயவத்தினடைவேநோக்கி
யிவனெமக்குமகனாகியிரவிகுலம்
பாரிக்கத்தகுவனென்றே"

"தான்வேண்டிக்கோடலுமே
தன்னுடையதேவியரிற்றலைமைத்தேவி
தேன்வேண்டுமொழிச்செல்விதிருமகட்குத்
திருமகனாய்க்கொடுத்தபின்னை"

"திங்களினிளங்குழவிசெம்மலிவனென்றுஞ்
செய்யபரிதிக்குழவியையனிவனென்றுந்
தங்களின்மகிழ்ந்திருகுலத்தரசர்தமுந்
தனித்தனியுவப்பதொர்தவப்பயனுமொத்தே"

X. அவதாரம், 5, 6, 6 (அ), 7.



கிரமாதித்தனுக்கெதிராக சோமேசுவரனைத் தன்னோடு சேர்ந்துகொள்ளும்படி தூண்ட, அவனும் அதற்கிணங்கினான். ஆகவே விக்கிரமாதித்த

"இசையுடனெடுத்தகொடியபயனவனிக்கிவனை
யிளவரசில்வைத்தபிறகே
திசையரசருக்குரியதிருவினைமுகப்பதொரு
திருவுளமடுத்தருளியே" X-18.

நமன் கோட்டம்

பட்டதுசக்கிரக்கோட்டம் X-23.

'பண்டிதசோழன்மகன்' XIII-62.

(கங்கைகொண்டசோழன்?)

இளங்கோப்பருவத்து சக்கரக்கோட்டத்து விக்கிரமத்தொழிலால் புதுமணம்புணர்ந்து வைராகரத்துக் குஞ்சரக்குழாம்பலவாரி' S. I. I. III. ஆனால் கங்கைகொண்ட சோழனுக்கு ராஜாதிராஜன் ராஜேந்திரன் வீரராஜேந்திரனென்ற மூன்றுபிள்ளைகளிருந்தமையால் தௌஹித்ரனை சுவீகாரஞ்செய்துகொள்ளக் காரணமில்லை என்று கருதி கலிங்கத்துப்பரணியில் இளவரசாக்கினானென்பதின் நோக்கம் கலகத்தை உண்டுபண்ணி அதிராஜேந்திரதேவனைக்கொன்று சோழராஜ்யத்தை வஞ்சித்தடைந்த குலோத்துங்கனை முறையில் அதைப்பெற்றவனென்றுவிளக்க சயங்கொண்டாரது பொய்க்கற்பனையென்று டாக்டர் ஹல்ட்ஷ்ம், ஸ்ரீமான் ராவ்சாஹிப் எஸ். கிருஷ்ணசுவாமி ஐயங்காரவர்களும், கிருஷ்ணசாஸ்திரி அவர்களும் அபிப்பிராயப்படுகிறார்கள். (S. I. I. III. 196, Epi. Sep. 1899, 1904, Ac. Ind).

ஆனால் ராஜாதிராஜன் ராஜேந்திரன் வீரராஜேந்திரன் என்ற மூன்று சகோதரரும் கங்கைகொண்ட சோழனது பிள்ளைகள் என்று நிச்சயிக்க இடமில்லை. வீரராஜேந்திரன் கங்கைகொண்டசோழனை ஐயனென்று சொன்னதனாலேயே அவன் அவனுக்குத் தந்தை என்று நிச்சயிக்கவிடமில்லை. தமையனாகவிருக்கலாமென்று தோன்றுகிறது. (S. I. I. III. 195.) அங்ஙனமாயின் சுவீகாரம் செய்துகொண்டான் என்பதில் அசம்பாவிதம் ஒன்றுமில்லை. மேலும் அதிராஜேந்திரனது காலத்தின் குழப்பத்திற்கு காரணம் இன்னதென்று விளங்கவில்லை. குலோத்துங்கன் அவனைக் கொன்றான் என்பதற்கு ஆதாரம் ஒன்றுமில்லை அதிராஜேந்திரன் இறந்தபின் தௌஹித்ரபாத்தியத்தால் முறையே சோழராஜ்யத்திற்கு இவன் உரியவனாகிறான். ஆகையால் வஞ்சித்ததை மறைப்பதற்கென்று நினைக்க இடமில்லை.

இவன் இளவரசாக்கப்பட்டிருந்தால் என் கங்கைகொண்டசோழனிறந்ததும் சற்றேறக்குறைய (கி.பி. 1042) ராஜ்யத்தையடையவில்லை என்ற கேள்வி எழுகிறது. இது விஷயத்திற்கு என்றால் பின்வெளிவரும் குலோத்துங்கன் சரித்திரத்தைப்பார்க்க 'மஹாமஹோபாத்தியாயர் சாமிநாதையரவர்களால் பரிசோதிக்கப்பட்ட கலிங்கத்துப்பரணி வெளிவந்தும் பக்ஷத்தில் பலசந்தேகங்கள் நிவர்த்தியாகலாம். அது எற்கனவே அவர் தமிழுலகத்திற்குச்செய்த நன்மையை இன்னும் வளர்ப்பதாகும்.

னுக்கும் இவ்விருவருக்கும் கி. பி. 1075-6-இல் (18) துங்கபத்திரைக்குத்தென்புறத்தில் ஒருபெரும்போர் விளைந்தது. எதிரிகள்இருவர்சேனைகளுக்கும் இடையே விக்கிரமாதித்தன் நின்று அவர்களை ஒன்றுசேரவொட்டாமல் தன் சாமர்த்தியத்தினால் தடுத்தான். ஹொயசள எரியங்கனும் கொங்கணகதம்ப ஜயகேசியும் திரிபுவனமல்ல பாண்டியனும் மற்றும் பலசிற்றரசரும் (19) விக்கிரமாதித்தன் பக்கல்நின்று பேருதவி புரிந்தனர். தம்பி ஜயசிங்கனும் உடனின்று உதவினானென்பது சொல்லாமலே விளங்கும். பில்ஹணர் கூறுமாறு (20) ராஜேந்திரசோழன் முதுகிட்டோடினானென்று சொல்லவிடமில்லையாயினும் (21) சோமேசுவரன் தோல்வியடைந்து சிறைபிடிக்கப்பட்டு ராஜ்யத்தை இழந்தானென்பது மாத்திரம் தெளியக்கிடக்கின்றது.

---

18. இரண்டாம் சோமேசுவரனுடைய கடைசிசாசனத்தின் தேதி கி. பி. 1075, டிசம்பர்மாதம் 11-ம் தேதி Epi. Car. VII. S. K. 130. விக்கிரமாதித்தனுடைய பிரதம சாசனத்தின் தேதி கி. பி. 1076 மார்ச்சுமாதம் 14-ம் தேதி (Epi Car VII Honnali 14) ஆகையால் இச்சண்டை இவ்விருதேதிகளுக்கும் இடையே நடந்திருத்தல்வேண்டும்.

19. Epi. Car. V. A. K. 102 A.
Epi. Car. VII. S. K. 124 dated 1077 A. D.
Epi. Car. VII. Ci. 33.
ஹேமாதரி-விரதகண்டம்.

20. விக். சரி. VI. 26-99.

21. "இன்னாள்பிற்குலப்பிறைபோல்நிற்பிழையென்னுஞ்
சொல்லெதிர்கோடிற்றல்லது தன்கைவில்லெதிர்
கோடாவேன்(கு)புலத்தாசாளத்தியவிட்டகளிற்றினதீட்டமும்"

S. I. I. III. 53. சோழபுரசாசனம்

இன்னாற்பிற்குலப் ... ... வில்லெதிர்கோடா
விக்கலன் கல்லதர் நங்கிலிதுடங்கி, மணலூர்நடுவெண
துங்கபத்திரை யளவும் எங்கணும்பட்ட வெங்களிறும்
விட்ட தன்மானமுங் கூறிய வீரமுங்கிடப்ப

S. I. I. III. 69. திருக்கழுக்குன்ற சாசனம்.

"அயில்முனைக்
கொத்தளவாசர்தந்தளமிரிய ”
வாளுறைகழித்துத்தோள்வலிகாட்டிப்
போர்பலகடாத்திவடதிசைவாகைசூடி" S. I. I. III. 142.



விக்கிரமாதித்தன் தமயனை வஞ்சித்தவனா? அல்ல

விக்கிரமாதித்தன் தமையனோடு சண்டைசெய்யநேர்ந்தசமயத்திலும், சண்டையில் ஜயமடைந்து முடிசூட்டிக் கொள்ளுஞ் சமயத்திலும், தனக்குமனமில்லாதிருந்தும் சிவபிரான் கட்டளைக்கிணங்கியே அவன் அவ்வாறுசெய்ததாகவும் ஆகையால் அவனுக்குச் சளுக்கிய அரசகிடைத்தது முழுதும் தெய்வ சங்கற்பமேயென்னும் பில்ஹணர் சொல்லுகிறார். ஆனால் இதற்கு மாறாக, சிவபிரான் பெயரை பில்ஹணர் தருவித்துக்கொண்ட இடங்களிலெல்லாம் விக்கிரமாதித்தன் நெறிதவறி நடந்தவனேயென்றும், ஆகவே துரோகசிந்தையோடு நெடுநாள் சூழ்ச்சிசெய்து விக்கிரமாதித்தன் சாமர்த்தியமாகத் தமையனிடத்திலிருந்து அரசையபகரித்துக் கொண்டானென்றும் டாக்டர் பூலர் அபிப்பிராயப்படுகிறார்.(22) ஈண்டு சிவபிரான்பெயரைக் கொணர்ந்ததனாலேயே விக்கிரமாதித்தனைப்பற்றிக் கெடுதலாக அனுமானிக்க இடமில்லை. நெறிதவறிநடக்கும்சமயங்களில் மட்டுமே சிவபிரான்பெயரைப் பில்ஹணகவி கொணர்ந்தாரென்பது ஒவ்வாது. ஏனென்றால் காஹாடதேசத்து வித்தியாதராசிலாஹான் தன் பெண்மணியான சந்திரலேகாவை இன்னவனுக்கு மணஞ்செய்து கொடுப்பதென்று விளங்காமல் மனக்குழப்பமடைந்திருக்கையிலும் சிவபிரான் கட்டளையைக்கொண்டே சுயம்வரத்திற்கு ஏற்பாடு செய்ததாகப் பில்ஹணரே மற்றோரிடத்தில் கூறியிருக்கிறார். எனவே சிவபிரான் பெயரைக் கவிவருவித்துக்கொண்ட இடங்களிலெல்லாம், முதலில் உண்டாகிய மனத்தடுமாற்றம் நீங்கித் தெளிவுபிறந்ததென்பதே பொருளாகுமன்றி. பூலர் கொள்ளுமாறு விக்கிரமாதித்யனுடைய குணக்கேட்டை மறைப்பதற்கன்று.

---

"துங்கபத்திரிச்செங்களத்திடைச்
சோளசேகரன்வாளெறிந்தபோர்
வெங்கதக்களிற்றின்கடத்தினால்
வெளியடங்கவேமிசைகவித்தவே"

கலிங்கத்துப்பரணி IV 7.

'தண்டநாயகர்காக்குநவிலையிற்
கொண்டவாயிரங்குஞ்சரமல்லவோ'—XI 74.

'இடைக்கப்பொருதுமணலூரின்
கிழ்காளட்டபாணிக்கீழ்' XIII 93.

22. பூலர்பதிப்பு விக். சரி. முகவுரை 37.

விக்கிரமாதித்யன் கொங்கணதேசத்து கதம்பஜயகேசியோடும் அநுப்பியரசனோடும் சேர்ந்து உறவாடியதன் நோக்கம்யாது? தமையனை அரசாட்சியினின்றும் நீக்கவேண்டியே இவ்வாறு செய்திருக்கலாமென்று டாக்டர் பூலர் கூறுகிறார். ஆனால் இவர்கள் சளுக்கிராஜ்யத்தின் சிற்றரசர்களாயிருந்தபடியால் சக்கரவர்த்திக்குப் பிரதிநிதியாகவும் இளவரசாகவுள்ள விக்கிரமாதித்யனுக்கு முறைமையிலேயே கீழ்ப்படிந்து பலவிதங்களிலும் உதவிக் கடமைப்பட்டவராயினர்.

இதுநிற்க பகைவனான வீரராஜேந்திரனுடைய பெண்ணை விக்கிரமாதித்யன் மணஞ்செய்துகொண்ட காரணமென்ன? இதுவும் சோழருடைய உதவியால் சளுக்கிராஜ்யத்தைத் தான் அடையும்பொருட்டாக என்று பூலர் கூறுவர். அப்படியானால் கி. பி. 1070-இல் வீரராஜேந்திரனிறந்த பிறகு சோழனால் உதவிகிடைக்கு மென்ற நம்பிக்கையும் நீங்கிப்போயிருக்குமல்லவா? ஆகையால் அதிராஜேந்திரதேவன் இறந்து ராஜேந்திரசோழன் சோழராஜ்யத்தை யடையும் பொழுதே தானும் தமையனை எதிர்த்து எளிதில் சளுக்கிராஜ்யத்தைக் கைப்பற்றியிருக்கலாமே. அப்படிச் செய்யாமல் ராஜேந்திரசோழனையும் பகைத்துதன்னிலைமையை முன்னிலும் கேடாக்கிக் கொள்வானேன்? இடையூறுகளை மென்மேலும் தானே தருவித்துக்கொண்டதால், சளுக்கிராஜ்யத்தை அபகரிப்பதே விக்கிரமாதித்யனது நோக்கமாயிருந்திராது. மேலும், தமையனுடைய அரசை அபகரிப்பதற்குச் சோழருடைய உதவி விக்கிரமாதித்யனுக்கு அநாவசியமே. விக்கிரமாதித்யனுக்கு கடைசியாக சளுக்கிராஜ்யம் கிடைத்ததும் மேலே கூறியவாறு சோழரையும் பகைத்தெதிர்த்ததாலல்லவா? விக்கிரமாதித்யனுக்குச் சோமேசுவரனை ராஜ்யத்தினின்று துரத்திவிட வேண்டுமென்ற துராசை நீடித்தகாலமாக இருந்திருக்கும்பக்ஷத்தில், சோமேசுவரன் அரசாளுந்திறமையற்று குடிகளையும் வருத்திவந்தமையால் உயிர்த்துணைவனான தம்பியிருக்க, சிற்றரசர் பலரும் தன்பாலிருக்க, தானும் தமையனைக்காட்டிலும் பதின்மடங்கு பலசாலியாயிருக்க எட்டுவருஷங்கள் (1068 கி.பி. முதல் 1076 கி. பி. வரையில்) காத்திருந்தது எதற்காக? மேலும் கி.பி. 1074-ம் வருஷத்து நீரல்கிசாசனத்தில் (23) சோமேசுவரன் விருப்பத்தின்படி மகாமண்டலேசுவரனான விக்கிரமாதித்யன் ஒருதானங்கொடுத்

23. Bom. Gaz. IV. 444.



ததாகச் சொல்லியிருப்பதிலிருந்து சகோதரரிருவரும் அதுவரையில் பகைத்துக்கொள்ளாமல் ஒருவாறு ஒற்றுமையாகவேயிருந்ததாகத்தெரியவருகிறது. ஆகையால் விக்கிரமாதித்யனுக்கு நீடித்தகாலமாகத் துரோகசிந்தனை யிருந்ததென்பது நம்பத்தக்கதாயில்லை. விக்கிரமாதித்யனுடைய உண்மையான நோக்கத்தைத் தீரவிசாரியாமலே ராஜத்துரோகியென்று அவன்மேல் பெரும்பழி சுமத்துவது மேற்கண்ட காரணங்களால் ஒருகாலும் அடாது.

தந்தையின் காலத்தில (1042 கி. பி. 1067 கி. பி.) சற்றேறக்குறைய 25-வருஷங்கள் இளவரசுபட்டமின்றியே சளுக்கிராஜ்யத்தின் நன்மைக்காக உழைத்து, அப்போதே வெங்கியும் சோழராஜ்யமும் ஐக்கிய மாகாவண்ணம் கலிங்க சக்கரக்கோட்டங்களுக்குச் சென்று, தமையன் காலத்திலும் அரசு சீர்குலைவதைக் காணப்பொறானாய்த் தன்னாலியலுமுதவி செய்யவேண்டிச் சோழரால் நேரக்கூடிய அபாயத்தை ஒருவாறு விலக்க எண்ணங்கொண்டு துங்கபத்திரைக் கரைக்குச்சென்று, சோழசளுக்கி விரோதத்தை மாற்ற அவன் பெண்ணையு மணந்து, இவ்வாறு புதிதாக ஏற்பட்ட ஒற்றுமையை நிலைநிறுத்தும் வண்ணம் பின்னிட்டும் அதிராஜேந்திர தேவனுக்காகக் காஞ்சிக்குச்சென்று விக்கிரமாதித்யன் தமையனுக்கு பிள்ளையில்லாமலிருப்பதைக்கண்டு இளவரசுபதவியிலேயே முழுதும் திருப்தியடைந்தவனாய்ச் சிங்காதனம் எப்போது கிடைத்தாலுஞ் சரியென்று இருந்ததாக ஏன் நினைக்கப்படாது? பின்னர் ராஜேந்திரசோழன் வெங்கியையும் சோழநாட்டையும் அதிராஜேந்திர தேவனிறந்ததும் ஒருங்கு சேர்த்துக்கொண்டதனால் கோதாவரிமுதல் கன்யாகுமரிவரையில் சோழராஜ்யம் பரவ, சளுக்கிராஜ்யத்திற்கு பெரிதும் பலக்குறைவு நேரக்கூடுமென்று நினைத்து அதைத் தடுக்கவேண்டிக் கூடுமானால் மைத்துனனது ராஜ்யத்தைச் சளுக்கிராஜ்யத்துடன் சேர்க்க விரும்பிச் சேனை திரட்டியிருக்கலாகாதா? இதைக் கண்டராஜேந்திரசோழனும் தனக்குப்புதிதாகக் கிடைத்த சோழதேசம் தன்னைவிட்டு நீங்காவண்ணம் தந்திரமாக, விக்கிரமாதித்யன் தம்பியுடன் கலியாணபுரத்தை விட்டுச் சென்றதும், ஜயகேசியுடனும் அநுப்பிதேசத்தரசனுடனும் உறவாடியும், சோழன்பெண்ணை மணந்ததும் பின்பு அதிராஜேந்திர தேவனுக்காகக் காஞ்சிக்குச் சென்றதும் எல்லாம் வேறுதவிகொண்டு சளுக்கி சிங்காதனத்தை யடைவதற்காகவேயென்று

கடமாகச் சொல்லி, (24) ஏற்கனவே சளுக்கிராஜ்ய பரிபாலன விஷயமாய்ச் சிறிது மனஸ்தாபப்பட்டிருந்த சகோதரரைத் தீராவிரோதிகளாக்கியிருக்கக்கூடாதா? அதனாலுண்டான பெருஞ்சண்டையில், ராஜேந்திரசோழனைக் காஞ்சியில் நிலைத்திராதபடி தடுக்க விக்கிரமாதித்யன் சேகரித்த படையானது தமையனுடைய புத்தியீனத்தினால் அவனையே தோற்கச்செய்ய உபயோகப்பட்டதுபோலும் சண்டையில் ஜயித்த பிறகும், குடிலமதியும் (25) பலசாலியுமான குலோத்துங்கன் வேங்கி சோழநாடுகளுக்கு அதிபதியாயிருக்க, அதற்கு ஈடாகச் சளுக்கி சிங்காதனத்திலும் வல்லவனான அரசனில்லாவிடின் சளுக்கிராஜ்யத்திற்கு ஊனமுண்டாகுமென் றெண்ணி விக்கிரமாதித்யன் தமையனுக்குப்பதிலாகத் தானே ராஜ்யபாரத்தையும வகித்திருக்கலாம் விஷயங்களிவ்வாறிருக்க நீரவிசாரியாமலே ராஜிகன் கற்பித்ததையே உண்மையென்று மயங்கி, விக்கிரமாதித்தனை வஞ்சகனென்று பலரும் நினைக்க வாய்ந்ததென்னை? பில்ஹணகவி அவனிடம் சமஸ்தான வித்துவானாகவிருந்து அவனைப்புகழ்ந்து எழுதியதே காரணம்போலும் ஆனால் வித்தியாபதியாக இருந்ததனாலேயே பில்ஹணர் கூறியதெல்லாம் பொய்ப்புகழ்ச்சியென்று சொல்லுவதற்கில்லை. (26) தமையனாயிருந்து ராஜ்யத்தை இழக்க நேர்ந்ததனால் பலரும் சோமேசுவரன் விரோதியாகிய குலோத்துங்கனோடு சேர்ந்த குற்றத்தையு மறந்து அவன் பக்கல் மனமிரங்குவதோடு விக்கிரமாதித்யனையும் ஆய்ந்தோய்ந்து விசாரியாமலே தூஷிக்கத் தொடங்கிவிடுகிறார்கள். ஆகையால் இதுகாறும் வெளிவந்த ஆதாரத்தைக்கொண்டே விக்கிரமாதித்யன் ராஜ்யத்தை வஞ்சனையாக அடைந்தானென்று துணிந்துரைக்க இடமில்லை. (தொடரும்)

அ. வா. வெங்கடராமய்யர்,
இராஜாங்க கலாசாலை, கும்பகோணம்.

---

24. ராஜிகன் சூழ்ச்சியைப்பாழாக்கின பாண்டியன் என்று விக்கிரமாதித்யனுக்கு உதவிபுரிந்த திருபுவன மல்லபாண்டியன் கூறப்பட்டிருக்கிறான். Epi. Car. VII. Cl. 33.
25. விக். சரி. VI.
26. பண்டைக்காலத்து சமஸ்தான வித்துவான்கள் தம்மை ஆதரித்த அரசரிடமும் மனச்சாட்சிக்கு விரோதமாக நடந்துகொண்டதில்லை என்பதற்கு காளிதாசன், கம்பன், போதராசு இவர்களின் சரித்திரம்பார்க்க. பில்ஹணகவியும் அப்படிப்பட்டவரே என்பது அவர் சேதிகர்ணனொடு சண்டையிட்டு அவன் ராஜ்யத்தை விட்டுவந்ததே சான்றாகும்.

# புத்தகக்குறிப்பு.

இராமாநுஜன்:—இது இராமாநுஜ தரிசனமான ஸ்ரீவிஷ்டாத்துவைத சித்தாந்தத்தின் தத்துவார்த்தங்களையும், சமயாசாரியப் பிரபாவங்களையும் சம்பிரதாயங்களையும் தெளிவான தமிழ்நடையில் யாவருமறியும்படி மாதமொருமுறை வெளியிட்டு வருவதொரு தமிழ்ப்பத்திரிகை. இதன் வருடச்சந்தா ரூபா3 இதைப்பற்றிய மற்றும் விவரங்களறிய விரும்புவோர் திருநெல்வேலிக் சொக்கரகுளத்திலிருக்கும் இராமாநுஜசபை உப அக்கிராசனாதிபதி ஸ்ரீ,உ,வே. பெரியநம்பி,ஆர், சுந்தரராஜ அய்யங்கா ரவர்களுக்குத் திரும்புசீட்டு மூலமாவது தபாற்றலையனுப்பியாவது எழுதிக்கேட்டுத், தெரிந்துகொள்ளலாம்.

தருமசீலன்:-இது ஜைநசமயக் கொள்கைகளையும் ஒழுக்க முறைகளையும் சரித்திரங்களையும் பலரும் அறியும்படி தெளிவான நல்ல தமிழ் நடையிலெழுதப்பட்டுவரு மொருமாதாந்தப் பத்திரிகை இதன் வருடச்சந்தா ரூ1. வெளிநாடுகளுக்கு ரூ. 1—4—0 வேண்டுவோர் இதன் பத்திராதிபரான தி, ஆதிநயினா வர்களுக்கு தருமசீலன் ஆபீஸ் 27, ஆச்சாரப்பன்தெரு, ஜார்ஜடவுன், சென்னை என்ற விலாச மெழுதித் தெரியப்படுத்திப் பெறலாம்.

வியவஸாயமஞ்சரி:-இது, உழுதொழிற்குரிய முறைகளும் குறிப்புகளும் அடங்கியது: பயிரிடுபவர்களுக்கு மிகவு முபயோகமுள்ளது, இதன் விலை அணா 12. வேண்டுவோர் ஜி, எ, வைத்தியராமன் அண்ட் கம்பெனி ஹைகோர்ட்டுக் கெதிரில் 3, 4, கொண்டிசெட்டித்தெரு, ஜார்ஜடவுன், மதராஸ். என்ற விலாசத்துக் கெழுதிப்பெறலாம்.

ஸ்ரீலலிதாநவரத்தினமென்னும் மனையடி சாஸ்திரம் (முதற்பாகம்) இது முனிவர்களாலும், சிற்பிகளாலும் சொல்லப்பட்ட பல நூல்களிலுள்ள கவிகளின் பொருளை யொருங்குதிரட்டி, புலிவலம் ஸ்ரீமான் ஆர். கோபாலைய ரவர்களா லெழுதிப் பதிப்பிக்கப்பட்டது. இதில் கிராமநிர்மாணம் கிரகநிர்மாணங்களி லறியவேண்டிய விஷயங்கள் பல அடங்கியுள்ளன. இதன் விலை ரூ 1. வேண்டுவோர் ஆர். கோபாலையர், புலிவலம் விஜயபுரம்போஸ்டு நன்னிலம்தாலூகா என்ற விலாசத்துக் கெழுதிப் பெறலாம்.

(தெய்வீகராஜபுராணமென்னும்) திருக்கோவலூர்ப் புராணவசனம்:—இது கும்பகோணம் வாணாதுறை ஹைஸ்கூலின் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத். தி. வை. சதாசிவபண்டாரத்தாரால் நன்று யெழுதப்பட்டது. இதன் விலை அணா 10. வேண்டுவோர், எஸ். தங்கவேலு உடையார் 15-வது நம்பர்வீடு கடலங்குடித் தெரு கும்பகோணம் என்ற விலாசத்துக்கெழுதிப்பெறலாம்.

திணைமொழி ஐம்பதுமூலமும் பழைய உரையும்:—பதினெண் கீழ்க்கணக்கு நூல்களு ளொன்றாகிய இது, இலக்கணவிளக்க பரம்பரை ஸ்ரீமான், சோமசுந்தரதேசிக ரவர்களாற் பரிசோதிக்கப் பட்டு, திருவாரூர்த் தமிழ்ச்சங்கத்தாராற் பதிப்பிக்கப்பட்டது. இதன் விலை அணா 2. வேண்டுவோர் ஷை சங்க காரியதரிசியவர்களுக் கெழுதிப்பெறலாம்.

சூளாமணி (வசனம்) —இது ஜைனகாவியங்களி லொன்றாகிய சூளாமணியை இனியதமிழ் நடையில் யாவருமெளிதிற் படித்துணருமாறு கடலூர் டவுன் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீமத், ந. பலராமையரவர்களா லெழுதப்பெற்றது. இதன் விலைரூபா ஒன்று. வேண்டுவோர், சென்னை கணேஷ் கம்பெனிக் கெழுதிப்பெறலாம்.

பரதன் அல்லது உத்தமசகோதரன்:—இது பெரும்பாலும் ராமாயணத்தின் போக்கைத்தழுவிப் பக்தி, பெருந்தன்மை, மனவுறுதி, ஸத்யம் முதலிய குணங்களை விளக்கித் தமிழ்நடையில் எழுதப்பட்டது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் சென்னை கணேஷ் கம்பெனிக் கெழுதிப் பெறலாம்.

1. சிவாஜி மஹாராஜ்.

2. குமணராஜன்.

3. சுகிர்லாபம் அல்லது நட்பின் மேன்மை:—இவை மதுரை வக்கீல் ஸ்ரீமத் ஆர். எஸ். நாராயணசாமிஐயர் (பி. ஏ. பி. எல்.) அவர்களால் படிப்பவர் விரும்புமாறு நன்றுயெழுதப்பட்ட சிறியகதைப் புத்தகங்கள். புத்தகமொன்றுக்குத் தனித்தனி விலை அணா 2. வேண்டுவோர், கல்வி பப்ளிஷிங் ஹௌஸ், மதுரை. என்ற விலாசத்திற்கெழுதிப் பெறலாம்.



கணபதி:—இப்புத்தகம் ஸ்ரீமத், எம். ஏஸ். சுந்தரசர்மா (பி. ஏ.) அவர்களாலங்கில நடையிலெழுதப்பட்டதொரு சிறியபுத்தகம். இதன் விலை அணா 2. வேண்டுவோர் கல்வி பப்ளிஷிங் ஹௌஸ் மதுரை என்ற விலாசத்திற்கெழுதிப்பெறலாம்.

ஹரிச்சந்திரன்:—இது, ராவ்சாஹெப் சம்பந்தமுதலியார் (பி.ஏ.பி. எல்.) அவர்களால் வசனநடையில் நன்றுயெழுதப்பட்டதொரு நாடக புஸ்தகம். இதன் விலை ரூபா ஒன்று. வேண்டுவோர் சென்னை டௌன் கம்பெனிக் கெழுதிப்பெறலாம்.

அற்புதக்கணையாழியென்னுமொரு கற்பனைக்கதை:—இது மதுரைத் தமிழ்ச்சங்கத்தினங்கத்தினரும், ஸௌராஷ்ட்ர ஹைஸ்கூல் தலைமைத்தமிழ்ப்பண்டிதரும், பாண்டியநேசன் பத்திராதிபருமான ஸ்ரீ. பு சிதம்பரபுன்னைவனநாதமுதலியாரவர்களாற் பலமேற்கோளுடன் நன்று யெழுதப்பட்டுள்ளது; படிப்பவர்க்குக் கல்வியறிவை வளர்ப்பதற்குச் சாதகமாயிருப்பது. இதன் விலை அணா 5. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப்பெறலாம்.

அநுபவாநந்ததீபிகை (மூதற்றிருமுறை):—இது ஸ்ரீமத் ல. நாராயணசாமி நாயக்கரவர்களாற் செய்யுளு மூரையுமா யெழுதப்பட்டதொரு ஞானநூல். இதன்விலை ரூபா 1. வேண்டுவோர் சென்னை ரிப்பன்பிரஸ் தம்புசெட்டிவீதி என்ற விலாசத்துக் கெழுதிப்பெறலாம்.

எனது பிரதிக்ஞை:—இதில் மலர்ந்த பார்வை, தீரமொழிகள் சந்தோஷ நிறைந்த நினைவுகள், வீரியமுடைய செயல்கள் என்ற விஷயங்களைக்கொண்ட உபந்யாச ரூபமாய் ஸ்ரீமான் ஜினராஜதாசரவர்களாலெழுதப்பட்டதன்மொழிபெயர்ப்புவசனங்கள் நிரம்பியுள்ளது. இதன் விலை ரூபா 1. வேண்டுவோர் தஞ்சாவூர் ஜில்லா பேரளம் போஸ்டு திருமீயச்சூர், பிரம்ம வித்தியாபிரஸ் ஆபீஸுக் கெழுதிப் பெறலாம்.

மோஹனதாஸ் காந்தி:—இது பொதுநலம் வேண்டித் தந்நலந் துறக்கும் புண்ணிய புருஷரு ளொருவராய் விளங்கும் ஸ்ரீமத். மஹாத்மா காந்தியென்பவரின் பிறப்பு வளர்ச்சி வரலாறு முதலிய விஷயங்

ளடங்கிய அவரது சரித்திரச்சுருக்கமாயெழுதப்பெற்று மதராஸ், ஜி. ஏ. வைத்தியராமன் அன்ட்கம்பெனியிற் பதிப்பிக்கப் பெற்றதொரு சிறு புத்தகம். இதன் விலை அணா 5. வேண்டுவோர் ஷை கம்பெனிக் கெழுதிப்பெறலாம்.

நீதிபுரநியாயம்:—இது கே. எஸ். வெங்கிடராமன் என்பவரால் எழுதப்பட்டதொரு இனிய தமிழ் நாவல். இதன் விலை அணா 4. வேண்டுவோர் ஸ்ரீ, என். கனகராஜய்யரவர்கள் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் விக்டோரியா மிமோரியல் ஹைஸ்கூல் போடிநாயக்கனூர் என்ற விலாசத்துக் கெழுதிப்பெறலாம்.

ஸ்ரீஜகத்குருஸ்துதி, நானு ஜீவவாதக்கட்டளைச் செய்யுள், ஸ்ரீ அகோராரந்தாதி, இம்மூன்றும் ஸ்ரீ சிவாநந்தர் என்பவரால் அன்போடு பாடப்பெற்றவை. இவற்றால் அவரது குருபக்தியும் வேதாந்த வுணர்ச்சியும் நன்கு விளங்கும்.

உருத்திராக்க விளக்கம் (ஒழுக்கநூல்பிரிவு 2.) இது திருவாளர் திடிசைகிழார் அ. சிதம்பரனார் என்பவரால் உருத்திராக்கத்தைப்பற்றி இதுவரை பலரறிந்ததும் அறியாததுமாகிய பலவிஷயங்கள் தொகுத்தெழுதப்பட்டுள்ளது; செங்கல்பட்டு சைவசமயாபிவிருத்தி சபையாரால் பலர்க்கு முபயோகமாகும்பொருட்டு வெளிப்படுத்தப் பட்டது. வேண்டுவோர் மேற்கண்ட சபைக்கெழுதித் தெரிந்து கொள்ளலாம்.

---



சிவமயம்.

# *பிரபந்ததீபிகை.

1. மதிநாக நதிவேணி யன்சுதனை யஞ்ஞான
      மதவந்த காரதீப
   மயமான போதமரு டேசிகக் கடவுளிரு
      மலரடி வழுத்தல்செய்வாம்
   பதினறை யாறிற் பெருக்குபிர பந்தாதி
      பலவகை யெடுத்துரைக்கின்
   பாரில்வரு ணங்நாலி னந்தகன் செவிடுமை
      பாஷண்டி யலியுலோபன்
   அதிபால னங்கவி னன்முதி யரைத்தள்ளி
      யருளுதா ரன்குலீனன்
   அர்த்தமுள்ள னிற்பன சலட்சணன் புலவர்தமி
      ழுருமைகண் டருவோர்பால்
   இதமான பத்துப் பொருத்தமு மிலக்கண
      விலக்கியப் பொருள்சிறக்க
   விசைபெற வுரைப்பனென் சிற்றறிவி னாற்சொல்லு
      மின்சொற் றழைக்கவென்றே.

2. ஆசுமது ரஞ்சித்ர வித்தார நாற்கவியி
      னனவெண் பாமுதலின
   மாகிய விணைப்பத மொலிப்பதம் பெயர்வினை
      யாருமுயர் திணையஃறிணை

---

* இது வேம்பத்தூர்ச் சங்கவித்துவான்களிலொருவராகிய பெரிய சாமாவையரவர்கள்புத்திரர் பாப்புவையரென்ற முத்துவேங்கடசுப்பையரவர்களியற்றியது. ஏட்டுப்பிரதியிலுள்ளபடியே, வெளியிடப்படுகிறது. இனிப்பரிசோதித்துக் குறிப்புரையுடன் புத்தகரூபமாக வெளியிடப்படும்.

மாசிலா வொருமைதன் மைபன்மை முன்னிலை
மாட்சியள பெடைகாலமும்

வளமுறு முயிர்ச்சந்தி மெய்ச்சந்தி பகுபதம்
வருமாரி யக்தேசிகக்

தேசுமிகு வல்லிடை மெல்லினங் குறினெடிற்
சீரான வுயிர்மெய்களுஞ்

செப்புகுற் றியலுகர மாகிய குறுக்கஞ்
சிறந்திடுங் தலைவிதலைவன்

பேசரிய நவரதம் விருத்திபா கம்ரீதி
பின்புபொரு ளணியக்கரப்

பிறப்புவினை முற்றுபெயர் முற்றொடு மறிந்துவகை
பேசுவர்கள் புலவோர்களே;

3. அரியதமிழ் பத்துப் பொருத்தங் களைத்தெரிக்
தபிதான மாம்பொருத்தம்

அகாமுத லன்கிற்கு முங்கீர தாகுமே
அ.ஆ. விரண்டினுக்கும்

அருமணி கடல்கா ருடன்பூவு மெய்துமே
யாம் உ ஊ முதலைந்தினுக்

கானபொன் னேமியும் ஒகாமுதல் மூன்றுக்கு
மாழிநீர் கார்பொருந்தும்,

தருககா வுஞ்சீர் கிகிக்குறுஞ் சீர்வேலை
தானேகு கூச்சொலாகும்

சாருமணி கெக்கேகை கொக்கோ விரண்டிற்குஞ்
சானவி யுடன்காருமாம்

சகரமொடு சகரவா காரமணி பால்சுதை
தருவேழ மேசிசிக்குச்

சாத்திய சுசூமுத லைந்துச் குறும்பூவை
சாதரு பஞ்சீர்சொசோ.

தெரிஞஞா வுக்கமுத மாழீதகாவைத்
திருத்திகிரி யேபொருந்தும்

திதியெனுஞ் சொல்லுக் குநீரே துதுாவைந்து
செல்வமும் வேலைத்தொதோ



சீர்மதி நநாமுத லாறுமுல கெய்துமே
சீர்நிநீ யாதியாகுஞ்

சேருமே நந்நூச்சொல் நெக்கேகை யமுதமணி
சிந்துநொந் நோவமுதமாம்,

பரவுபம் முதனுன்கு பூக்தாணி தேர்புபூ
பார்பொன்சொல் பெப்பேயுறும்

பார்தருவு மகாமுத லன்குபூ மும்மூப்பு
பாரும்மெ மேமைபிறையாம்

பகர்மொமோ பிறையயா சீர்யுயோ புவிவவா
பங்கசை தேர்விவீக்குப்

பதுமைபின் னன்கிற்கு மதிபணி யெனத்தேர்ந்த
பாவலர்க ளுரைசெய்வரே.

4. சாதகம் பிள்ளைக் கலிப்பரணி கோவையர
சன்விருத் தந்தொகைநிலை

சாருமைக் திணையெண் டருஞ்செய்யு ளங்கமொடு
தானையது ராகநாமக்

தாரகை யிரட்டைமணி பன்மணி புகழ்ச்சிபல
சந்தமெய்க் கீர்த்திகாப்புத்

தண்டகந் தும்பையிணை மணிவேனின் மும்மணிவ
சந்தமுற் பவநான்மணி.

ஓதுநவ மணிவீர வெட்சியுட னேவாகை
யுழிஞைநுமணி நொச்சிகாஞ்சி

யுயர்வருக் கம்பெரு மகிழ்ச்சிநா றொடுபதிற்
றொலியலந் தாதிதூதோ

டுலவலங் காரபஞ் சகமும்வா யுறைவாழ்த்
துலாவள மடற்கைக்கிளை

யூர்பெயர்கொ ணேரிசையோ டின்னிசை குறத்திபெ
டுழத்திபாட் டுக்குழமகன்.

பாதாதி கேசவர லாற்றுச் செருக்களம்
படுவஞ்சி பெருமங்கலம்

பதிகமுஞ் செவியறி வுறாஉவெழுநேர் கடிகைவெண்
பாவட்ட மங்கலமுநாற்

பதுசதக மெழுகூற் றிருக்கைசின் னப்புவொரு
பாவொருப இருபாவிரு
பதுதசாங் கப்பத்து நயனப்ப யோதரப்
பத்துத் தசாங்கத்தயற்

காதுமாற் றுப்படை விருத்தலக் கணமூசல்
காப்பிய மிரண்டுபவனி
காதல்வா தோரணம் வெற்றிக் கரந்தைமஞ்
சரிகலம் பகம்விளக்குக்

கண்படை புறங்கையறு துயிலெடைக் கடையெனுங்
கருதுநிலை யாறெடுமுது
காஞ்சிமங் கலவெள்ளை தாண்டக மிரண்டோடு
கண்டபுற நிலைவாழ்த்துளே.

5. ஆதியி னிலக்கணக் கடலெனும் பலநூல்க
ளாராய்ந் துணர்ந்தவதனை

யாசிரிய மெனும்விருத் தத்தினாற் கூறுது
மலகுறு சகாப்தமாண்டு

தேதியுடு வோரையுந் திங்களுஞ் சாதகன்
றிசைசித்ர மபகாரமுங்

கிரமான க்ரகநிலை யறிந்துசொல் சாதகஞ்
செப்புபிள் ளைக்கவிக்கு

மாதமிரு திங்களிற் காப்பைந்து செங்கீரை
மாதமே ழிற்றாலமாம்

வரைநவஞ் சப்பாணி முத்தமோ பன்னொன்று
வாரானை சம்வற்சர

மோதுமொன் றரைவருட மிந்திரண் டிற்சிற்றி
லொலிபறை முழக்கன்மூன்றி

லூரிரத நாலிலாண் பால்கழங் கம்மானை
யூசல்பெண் பாலாகுமே.



6. வெம்போர் முகத்தா யிரம்யானை யைக்கொன்ற
வீரனைத் தலைவனாக

வேண்டிப் புகழ்ந்துபின் கடவுளரை வாழ்த்தலு
மேலினைஞர் கடைதிறப்பு

வண்பாலை யிற்காளி கோயிலிற் காளிகள்
வண்பேய்க ளோடாடியு

மற்றுமொரு கூளிபேய் சொற்கருது தலைவனான்
மாறாத கீர்த்திபொங்கப்

பண்பாய வன்வழிப் பிறர்பொருள்க டோன்றவுமு
பாயமாஞ் சமரம்விரும்

பலுமவன் வென்றியைக் கருதியிரு சீரடிப்
பாவுமுச் சீரடியுமிற்

செம்பாக மாகநற் சீர்முத லமைந்திடச்
சீருற்ற தடியிரண்டாய்ச்

செப்புபஃ றாழிசையி னோரோரு கவிதையாய்ச்
செப்பிடிற் பரணியாமே.

7. அரியவொரு போகுவெண் பாக்கலித் துறையுமன்
பாய்க்கலி யுறுப்பினாலே
யம்புய வகுப்புமா தங்கமற மூங்கால
மம்மானை கார்குறம்பா

ணடூழ சற்றவஞ் சம்பிரதம் வண்டுகளி
யலர்தழைத் தூதிரங்க
லாணைக் கிளைசித்து வென்றவகை யீரொன்ப
தாமுறுப் புக்களியைய

வருமருட் பாக்கலிப் பாக்கலி விருத்தம்
மடக்குக் கலித்தாழிசை
மன்னுமா சிரியம்வி ருத்தமா சிரியமும்
வஞ்சித்து றைவெண்டுறை

வஞ்சிச் செயுள்வஞ்சி யாம்விருத் தங்களுமி
வற்றுறு மிடையிடையினின்
மருவுவெண் பாக்கலித் துறையிரவி யந்தாதி
வான்முறைத் தொடையதாக.

வெண்பா வலர்க்கிளை யுறுஞ்சிறப் பாகவு
மெய்துமந் தாதியாற்சொற்
கிசைத்தொடை யோகால தாகவும் பண்புட
னியம்ப விணைமணிமாலையே.

பகரும்வெண் பாமுதல் வேறுபடு பாவுமப்
பாவினம தாயொன்பதாய்ப்
பண்புபொரு ளுறுசெய்யு ளந்தாதி யாகவே
பாடனவ மணிமாலையாம்

நிகரில்வெண் பாக்கலித் துறையிருந் தம்மகவ
னேருமந் தாதித்தொடை
நிலைபெறவே வெண்ணைந்து செய்யுளாய்ச் சீருற
நிகழ்த்தனுன் மணிமாலையாம்

மகவலடி யுங்கலியி னடிமயங் கியவஞ்சி
யானவப் பாவினுலே
யாண்மகளை யேபுகழ்ந் தேகருத் தளவினி
லாற்றுவது நாமமாலை

மகிழ்வுறுஞ் செய்யுள்பப் பத்தாக வொவ்வொரு
வகைக்குமோர் சந்தமாகி
வாறாறு செய்யுளாய்ச் சொல்வதே பலசந்த
மாலையாய்ச் சொல்வார்களே.

12. அலகுறு கலம்பகத் துள்வரு மொருபோகு
வம்மானை யூசன்மூன்று
மன்றிமேற் சொல்லிய வுறுப்பமைத் தவ்வா
றாற்றல்பன் மணிமாலையாஞ்
சொலுவரிது வேகலம் பகமாலை யாகுமே
சொல்லுமெய்ப் பொருளின்மேலுந்
தூயவெண் பாவிரு பஃதுகாற் பதுகலித்
துறையிரவின் மணிமாலையாஞ்



சிலதகவ லடியுடன் கலியடி மயங்கிவஞ்
சிப்பாவி னுன்மாதர்கள்
சீர்மையைக் கூறல் புகழ்ச்சியின் மாலையாஞ்
செப்பும் மொழிக்குமுதலாம்
பெலமிகும் வருக்கத் தெழுத்திற்சொல் வோர்செயுட்
பேசுவது வர்க்கமாலை
பெறுதலைவி யழகுகுண மாக்கஞ் சிறப்போதல்
பெருமகிழ்ச் சியின்மாலையே.

13. மருவுசொற் சீரடி யெனுங்கட் டுரைச்செய்யுள்
மரபுவழி யிற்செய்திடு
மற்புயன் கீர்த்தியை விரித்தெடுத் தோதலே
வளருமெய்க் கீர்த்திமாலை
யரியதெய் வங்காத்த லாகமூன் றைந்தெழி
னறைசெயுட் காப்புமாலை
யருவேனின் முதலே னிலைச்சிறப் பித்தோத
லாகுமே வேனின்மாலை
விரவிளந் தென்றலை வருணித் துரைப்பதே
மேலாம் வசந்தமாலை
வெகுதுசி யின்படையி னணியைப் புகழ்ந்திடும்
வெகுவகுப் பாமுறையினை
யுரையருந் தகைசுற்பின் மாதர்கள் குணங்களை
யோதறு ரகைமாலையா
முயர்மால் பிறப்பாசி ரியவிருத் தத்தா
லுரைத்த லுற்பவமாலையே.

14. அகவலோசைபிற மூதவா சிரியமா
யதன்முனை றெடுத்துச்சொலு
மாடிய கொடிப்படை யினைப்புகழ்ந் துரைசெய்வ
தாகுமே தானைமாலை
பகரும்வெண் பாக்கலித் துறையகவன் முப்பதும்
பன்னுதொடை யந்தாதியாய்ப்

பாடன்மும் மணிமாலை வெண்பாமுந் நூறுகவி
பாடறன் டகமாலையாம்

மிகுசுத்த வீரன்மாற் றூர்புறஞ் சென்றுபசு
வேட்டுநிரை கவருதற்கு

வெட்சியின் மாலைசூ டியவண்ண மேகிய
மீட்டாவி னிரைகவர்ந்தே

விகறுறந் தூர்வருந் தலைவன்மேற் பாவினுக்
கியைதசாங் கம்பொருந்த

விசைவெற்றி யைக்கருதி யேபாட லதுவீர
மெனும்வெட்சி மாலையாமே.

15. மாற்றலர்கள் கொண்டநிரை மீட்போர் கரந்தைபூ
மாலைசூ டிப்போகிமீள்

வகையினை விரித்தோதன் வெற்றிக் கரந்தையின்
மஞ்சரி யெனக்கூறுவார்

வேற்றுமைப் பகைவர்மேற் போர்குறித் தேகுவது
வேந்தர்பூ வஞ்சிமாலை

வேய்ந்தெழு படைச்சிறப் பாசிரிய வகையினால்
விள்ளல்போர்க் கெழுவஞ்சியாம்

பார்த்துநற் குலமுறை பிறப்புமேம் பாட்டுடன்
பலசிறப் புங்கீர்த்தியும்

பதியவஞ் சிப்பாவி னாற்றொருத் தேபுலவர்
பகரின்வா லாற்றுவஞ்சி

யேர்த்திடும் பாட்டுடைத் தலைவனூர்ப் பெயரினை
யெடுத்துமெண் ணாற்பெயர்பெற

விரைந்து கவிமுத லாயிரம் வரைசொல்ல
லெண்செய்யு ளாகுமன்றே.

16. சமரத்தி லறுபட்ட மனிதனுடல் பரியுடற்
றந்தியுட லங்கடனையுக்

தசையிரத் தங்கூளி பேய்பிசா சங்கழுகு
சம்புகாய் காகமுதலா



வெமதெம தெனத்தின்னு மாரபா ரத்தெக்
களித்திருக் கப்பூதமு

மிசைபாடி யாடியின் னமருந் தச்சிறப்
பெய்திட வுரைப்பதுவே

வமர்செருக் களவஞ்சி யாகும் பரந்தலை
யணிசிறப் புச்செய்யுளா

மலர்காஞ்சி மாலைசூ டிப்பகைவ ரூர்ப்புறத்
ததினூன்றல் காஞ்சிமாலை

கலைமயாய்ப் புறத்தகத் துன்றிவலி பேசிடுங்
கள்ளர்கட் கோடலின்றிக்

கந்தநொச் சியின்மாலை சூடித்தன் மதில்காத்தல்
கழறநொச்சி யின்மாலையே.

17. மருவலர்க ளூர்ப்புறஞ் சூழவே வுழிஞைப்பூ
மாலைசூ டித்தானையான்

மதியினை யூர்வளைந் தாலென வளைப்பதை
வழுத்தலே யுழிஞைமாலை

பொருதுமாற் றலரோடு தும்பைமா லைவேய்ந்து
பொருதுவது தும்பைமாலை

பொருபகையை வென்றவா கைமாலை யணிவதைட்
புகல்வதா சிரியகவியா

வரும்வாலக மாலையாங் கொலைபுரி களிற்றினை
யடக்கினவ ருக்குமெதிரா

யடல்புரி களிற்றைச் சிதைத்தடக் கினவர்க்கு
மமைதல்விட் டோடுகளிறை

யுரமுடன் பற்றிப் பிடித்தடக் கினவர்க்கு
முறும்வீர முஞ்சிறப்பு

மோதுவஞ் சிப்பாவி னாற்சொல்வர் தோரணத்
துலவுமஞ் சரியாகுமே.

18\. நெடிலடிச் செய்யுட் டொகுத்தது நெடுந்தொகையு
நேர்குறி லடிச்செய்யுளால்

நிரவித் தொகுத்தது குறுந்தொகை கலிப்பாவி
னேர்தொகுத் தொகையுமாய

முடிவதே போல்வன தொகைநிலைச் செய்யுளா
முறையினீ ரெண்கலையையு

முடியவோ ரடியதா யிங்ஙன நாலடியின்
முடிதலெண் ணெண்கலையதா

யடிகள்பல சந்தமாய் வண்ணமுங் கலைவைப்பு
மந்தாதி தவறுமிலே

யலகுமுப் பதுசெய்யுட் பாடுதுஞ் சிறுபான்மை
யாகுமெட் டுக்கலையெனுந்

தொடர்புறு மன்றிவெண் பாவகவ லுங்கலித்
துறையான விம்மூன்றையுஞ்

சோர்வில்லப் பத்தாக வந்தாதி யாகவுஞ்
சொல்லொலிய லந்தாதியே.

9\. பத்துவெண் பாக்கலித் துறைபத் துடன்பொருள்
பற்றிடுந் தன்மைதோன்றப்

பலசிறப் புற்றவந் தாதியாய்ப் பாடுவது
பண்பதிற் றந்தாதியாம்

வெற்றிவெண் பாநூறி னாலுங் கலித்துறையின்
விண்டுவந் நூறதேனும்

வினவியந் தாதித் துரைத்தனூற் றந்தாதி
மிக்கவிள மைப்பருவமா

யுற்றதலை மகனைப் பிறப்பும் பரம்பரை
யுறுங்குல மினுமென்பதா

யுயர்தலைமை யாய்மாதர் புடைசூழ வேபருவ
முளபெண்கள் கண்டுதொழவே



மத்தகய மீதுபரி சிவிகைமீ தும்பவனி
வருதலைவ னைத்துதித்து

மானே ரிசைக்கலியின் வெண்பாவி னாற்கூறல்
வருமுலா வாகுமன்றே.

20\. கனவிலொரு மாதினைக் கண்டணைந் தின்பங்
கலந்துபின் விழித்துமாதைக்

காணும லவள்பொருட் டாகமட லூர்வதைக்
கலிவெள்ளை யாலரற்ற

வினையுலா மடலா மறம்பொரு ளின்பங்க
ளிம்மூன்று கூறும்பய

னெள்ளிமங் கையர்திறத் துறுகாம வின்பமதை
யேபயன் கொண்டேதலை

வனையியற் பேரினைத் தக்கதே வெதுகையாய்
வாரெட்டி யுந்தனிச்சொன்

மறுத்தின் னிசைக்கலியின் வெண்பாவி னாற்றலை
மகளிரந் தேகுறைபெறு

தனைவரை மடலூர்வ தென்னவீ ரடியெதுகை
யாகவே யறைவளமட

லைவிருந் தம்வெள்ளை நாலெனிற் கைக்கிளைக்
கறையொரு தலைக்காமமே.

21\. கலித்துறையி னாலுநேர் வெண்பாவி னாலகவ
லாயினு மெவ்வொன் றினைக்

கணித்தொன்று பப்பத்தி னந்தாதி யாகவே
கழறுமொரு பாவொருபஃ

தொலியகவல் பத்துவெண் பாப்பத்து மந்தாதி
யுற்றதொடை யிருபானினைத்

தோதுமிரு பாவிரு பஃதாகு மகவலா
லுயர்விறலி யாணர்கூத்தர்

பல்பொருள ரீகரல்ல ரில்லொருவர் பரிசுதவு
　　பரிசினுக் கேகுவாரைப்
பரிசுற்று வருவோர்க ளாற்றினிடை யேகண்டு
　　பரிசுதவு தலைவன்கொடை
நிலைகீர்த்தி கொற்றமுஞ் சாற்றலாற் றுப்படை
　　நீவணங் குந்தெய்வமே
நினைப்பாது காப்பநின் வழிவழியு மிகுவதாய்
　　நிகழ்த்தல்புற நிலையாகுமே.

22. வேந்தரும் வேந்தரைப் போல்வாரு மவையின்கண்
　　மிகவெடுத்து வைகியவழி
விறன்மருத் துவரமைச் சருமுதலி யோருக்கு
　　விழிதுயில் கொளுமிடமதைச்
சார்ந்துகரு திக்கூறல் கண்படைநி லையதாந்
　　தலைவனியி னாற்பாசறை
தனியொரு மணக்கவலை யன்றித் துயின்றவர
　　சர்க்குரற் புகழ்கொடுத்தல்
சேர்ந்துகரு தியனுதர் துயிலெடுப் புதலாய
　　நிகழ்த்தறுயி லெடைநிலையதாம்
நிலைப்பாட் டுடைத்தலைவ னுமமது சரவின்
　　னிசைவெள்ளை தொண்ணூறெனுஞ்
சேர்ந்தெழுப தேனுமல ததுவைம்ப தேனுஞ்
　　சிறக்கவுரை பெயரின்னிசை
செம்பாட் டுடைத்தலைவ னூரைமுன் செய்யுடொகை
　　செப்பலூ ரின்னிசையதே.

23. பாட்டுடைத் தலைவனொடு பெயர்சார நேரிசை
　　வெண்பாவி னாற்றொணூ றம்
பத்தே ழெனுமைம்ப தேனுஞ் சிறப்புடன்
　　பாடுவது பெயர்நேரிசை



மீட்டுமத் தலைவனூர் சாருமுன் றொகைதொடை
　　விளம்பலூர் நேரிசையதாம்
வெண்பாவி னூர்சி றக்கவீ ரைந்துசெயுள்
　　விள்ளுமூர் வெண்பாவதாம்
மூட்டுதசை புட்குதவு வேனுமல் வேற்றலையு
　　மொன்றாக வோங்குவதுபோ
லான்றகோ லைடுவிளக் கொன்றுபட் டோங்குமா
　　றோங்குதல் விளக்குநிலையாம்
நாட்டந் தனைத்தசச் செய்யுளாற் கூறனைய
　　னைப்பத் தெனப்புகலுவார்
கனிமுலை யைத்தசச் செய்யுளாற் கூறுவது
　　நற்பயோ தரப்பத்திதே.

24. பத்துக் கலித்துறையு மூப்பது விருத்தமும்
　　பகர்கலித் தாழிசையுமாய்ப்
பகர்காடு மலைகட னிலவுருணை யீனீடு
　　பாவுதோள் வரணமங்கலம்
பெற்றிடப் பாடிமுடி வேந்தர்க் குரைப்பதாய்ப்
　　பேசலா சன்விருத்தம்
பெறுமன் பனைக்கத்தை யாசிரிய மீரேழு
　　பேசற் றசாங்கத்தயல்
உற்றவடி முடிவரை கலியின்வெண் பாவினு
　　லோதல்பா தாதிகேசம்
மொளிருமுடி யடிவரை கலியின்வெண் பாவா
　　லுரைத்தல்கே சாதிபாத
மத்தகா சிரிய விருத்தங் கலித்துறை
　　யகவல்சந்த விருத்தமு
மரம்வெள்ளை யும்மாறி யந்தாதி செயுமு
　　றலங்கார பஞ்சகமே

25. தவமுனிவர் சேணிடை வருதலாற் பிறர்வருந்
தந்நீர வாயில்காப்போய்
தலைவர்க்கென் வரவிசை யெனக்கடைக் கண்ணின்று
சாத்தெனச் சொல்கடைநிலை
அவனியின் கணவனோ டில்லாள் கழிந்துளி
யவர்கடப் பட்டவழுவி
னப்பொரு ளெலாம்பிறர்க் கறிவுறுத் தித்தானு
மப்போ திறந்தேபடா
தெவர்தா மொழிந்தவா யத்தார்க ளும்பரி
சில்பெரும் விறலியோருஞ்
செயறனிப் படறுழந் திடுசெய லின்றுநிலை
செப்பிடுங் கையறுநிலை
பவனமுறு வரசனுக் குத்திடு தசாங்கமும்
பாடுநே ரிசைவெள்ளையால்
பத்துச் செயுட்கூற லதுவே தசாங்கமுறு
பத்தென வுரைப்பார்களே.

26. ஒருபொரு டனைக்குறித் துட்பன்செய் யுட்பதிக
மோதல்கலி வெண்பாவினு
லுயர்பெண்க டங்கையிற் கண்டவிள மைதன்மை
யுடையகுழ மகனைப்புகழ்த்
தோதல்குழ மகனரு முயர்குலப் பெண்ணினை
யொன்பது வகுப்பின்வெண்பா
வொன்பது செயுட்செய்வ தாகுமங் கலவள்ளை
யுற்றிடுங் காலமிடமும்
பொருளுமா கியவிவற் றுள்ளினுவ் வொன்றினைப்
பொருந்தி நாற்பதுவெள்ளையாற்
புகல்வதே நாற்பதா மாண்பாலு மாதர்பாற்
போலுமவ ரவர்காதலைப்

இங்ஙனம்
வேப்பத்தூர் பி.பாஸ்கரையர்
தமிழ்ப்பண்டிதர்
சேதுபதிஹைஸ்கூல் மதுரை.

MAY 1919
MADRAS

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-கஎ.] காலயுக்தி௵ மாசி௴ [பகுதி ச
Vol. XVII. February—March, 1919. No. 4.

புதிதாகக்காணப்பட்ட

## * திருவிடைவாய்த்தேவாரப்பதிகம்.

காவிரிக்குத் தென்கரையிலுள்ள சிவக்ஷேத்திரங்கள் பலவற்றிற்கு இப்பொழுது மூவர் முதலிகளான அப்பர், சம்பந்தர், சுந்தரரால் பாடப்பட்ட தேவாரப்பதிகங்கள் கிடைக்காததால் இறந்துவிட்டனஎன்று அறியப்படும் க்ஷேத்திரங்களில் இத்திருவிடைவாய் க்ஷேத்திரமும் ஒன்று எனக்கருதப்பட்டு வந்தது. இது க்ஷேத்திரந்தானென்பதற்கு அறுபான்மும்மைநாயன்மார்களில் ஒருவரான ஐயடிகள்காடவர்கோன் நாயனர் தமது க்ஷேத்திரத் திருவெண்பாவில்,

மாண்டுவா யங்காவா முன்ன மடநெஞ்சே
வேண்டுவா யாகில் விரைந்தொல்லைப்—பாண்டவாத்
தென்னிடைவாய் மேய சிவனர் திருநாம
நின்னிடைவாய் வைத்து நினை.

என்று கூறப்பட்டிருப்பதே போதியதாம். இந்தக்ஷேத்திரம் இப்பொழுதும் பாண்டவாயாற்றின் தென்கரையிலேதான் இருக்கிறதாயினும் முற்காலத்தில் இருந்த சிறப்பையிழந்து ஒருசிறிய உட்கிராமமாக இருக்கிறது. இக்கோவிலைப்போய்ச் சுற்றிவருகையில் பல பழையசிலாலிகிதங்களைப் பார்த்தோம். அவற்றைச் சோதித்துவருகையில் பின்வரும் திருஞானசம்பந்தசுவாமிகளின் 11-பாடல்கள் மகாமண்டபம், அர்த்த மண்டபங்களில் வெட்டப்பட்டிருந்தன. அவை வருமாறு.

* இவ்வூர் கொரடாச்சேரி ரயில்வேஸ்டேஷனுக்குத் தெற்கில் 2-மைல் தூரத்துள்ளது.

கௌதமன் நிறைந்தான் தேவனுன நாற்பத்தெண்ணாயிரபட்டன் உள்ளிட்டோரும் ஆத்திரையன் மகேஸ்வரன் வேதவனமுடையானை ஆளுடையான் பட்டன் உள்ளிட்டோமும் பாரத்துவாசி திருவேகம்பன் திருவிடை வாயிலுடையானை வீரபத்திரபட்டன் உள்ளிட்டோமும் கோட்டூர் உடையான் அம்பலத்தாடி பொன்னம்பலக் கூத்தன் பக்கல் கொண்டகாசு 16-க்கு நத்தம்பொருசந்தி விளக்கு சந்திராதித்தவரை எரிக்கக் கடவோமாவோம் இவ்வனைவோம்.

இன்னும் 7, 8, சாசனங்கள் தென்படுகின்றன. இவைகளால் இத்தேவாரப்பகுதிகள் அதற்கு முன்னரே பொறிக்கப்பட்டன என்றேற்படும்.

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்
இலக்கணவிளக்கபரம்பரை.

## விநோதரசமஞ்சரி.

சென்னைமாநகரியினின்றுந் தோன்றிப் பலவருடங்களாக இங்கே வழங்கும் விநோதரசமஞ்சரி என்னுந் தமிழ்ப்புத்தகத்தை இங்குள்ளார் சிலர் தக்கதொரு தமிழ்நூலென்று பாராட்டுகின்றனர். அதன்கண் நமக்குத் தோன்றும் ஆக்ஷேபங்கள் பல.

கம்பர் இராமாயணம் பாடியகாலம் பகல் என்று விநோதரசமஞ்சரி சொல்லுகின்றது. தமிழ்நாவலர்சரிதையிலே வரும் ஒரு வெண்பாவினாலே இரவு என்பது பெறப்படுகின்றது. இவற்றுட் கொள்ளத்தக்கதியாது?

கம்பர் பாடிய "ஆழியான்பள்ளியணையே" என்ற வெண்பாவால் விடம் நீங்கினவர் தில்லைமூவாயிரவருள் ஒருவரா? புதுவைச்சேதிராயரா? தமிழ்நாவலர்சரிதை சேதிராயர் என்கின்றது. திருக்கைவழக்கம் எதனை அநுசரிக்கின்றது?

விநோதரசமஞ்சரி ஓரேழைப்பெண்ணுடைய விவாகவீட்டிற்கு வந்த சேரசோழ பாண்டியர் பொருட்டு நுங்குதரும்படி பனந்துண்டத்தை ஔவையார் பாடினார் என்கின்றது. தமிழ்நாவலர்சரிதையோ அவ்விவாகம் பாரி என்னுஞ் சிற்றரசன் புதல்வியராகிய அங்கவை சங்கவை என்னும் நங்கையரிருவர்க்கும் நடந்த விவாகம் என்கின்றது. இவற்றுட் கொள்ளத்தக்கது யாது? ஔவையார் தரும்படி கேட்டது நுங்காயின்;

9-MAY 1919



"நுங்குக்கண்முற்றி யடிக்கண் கறுத்து நுனிசிவந்துப்-பங்குக்கு மூன்றுபழந்தரவேண்டும் பனந்துண்டமே" என்றும் பாடுவாரா? விநோதரசமஞ்சரியிலே ஜாத்துலவார், அருக்காணி, திராஜார், மேஜர்கஸ்தி, மிட்டா, முஸ்திப்பு, நிஜாமலி, கம்மண்டோ, கரிக்காலி, அதிமாஷ்சு, இந்துக்கள், சோபா, ஆடங்கம், ஏடாகூடம், பட்டி, பட்டா, சஞ்சிகை, சொக்காய், தைநாத், டப்பா, குஜோத்தியம், சடுகுடுப்பை முதலியனவாகப் பலவகைச் சொற்கள் வருகின்றன. இவைகள் எப்பாஷைச் சொற்கள்?

இங்கே இவைகட்குப் பொருள்சொல்லவல்ல பண்டிதர்கள் பொருள் கூறுதல் நன்று.

இங்ஙனம்,
அ. குமாரசுவாமிப்பிள்ளை,

## பதார்த்ததீபிகை.

"செந்தமிழ்" தொகுதி ௧௬-ன், ௫௩-ஆம்பக்கத்தொடர்ச்சி.

### ஆகாயாதி

பின்னைந்துள் வானொலி யுள்ளது காலம் பெறுங்குணமோ
முன்னதுவாத லிறப்பாதி மூன்றிற்கு மூளுந்திசைக்
குன்னுங் கிழக்கு முதல வழக்கிற் கொருமுதன்மை
மன்னழி யாமை நிறைவேக மும்பொது மற்றிவைக்கே.

(இ-ள்) பின்னைந்துள் வான் ஒலி உள்ளது—பின்னுள்ள ஆகாயம், காலம், திக்கு, ஆன்மா, மனம் என்னும் திரவியங்கள் ஐந்தனுள்ளே ஆகாயம் என்னும் திரவியம் சத்தம் என்னும் குணமுள்ளது;—காலம் பெறும் குணமோ இறப்பு ஆதி மூன்றிற்கும் முன்னது வாதல்—காலம் என்னும் திரவியம் பெறுகின்ற குணம் யாதோவெனின் இறந்தது முதலிய மூன்று வழக்கிற்குங் காரணமாதலாம்,—மூளும் திசைக்கு உன்னும் கிழக்கு முதல வழக்கிற்கு ஒரு முதன்மை—பொருந்திய திசைக்குரிய இலக்கணமோ நினைக்கப்படுகின்ற கிழக்கு முதலிய வழக்கிற்குக் காரணமாகலாம்,—இவைக்கு மன்னு அழியாமை நிறைவு வேகமும் பொது—ஆகாயம் முதலிய இவை ஐந்துக்கும் நித்தியமும், வியாபகமும், ஒன்றாயிருக்குந்தன்மையும் பொதுக்குணங்களாம் எ-று.

புறப்பொறிக்குப் புலனாதலாற் சத்தம் ஒரு குணம் என்பதும், குணமாதலான் அதன் சார்பிடம் ஆகாயம் என்பதும் அறிதற்பாலன. சத்தம் ஆகாயகுணம் என்பதை மறுத்துப் பஞ்சபூதகுணம் என்று வேதாந்திகள் கூறுவர். நையாயிகர் சிலர் பார்த்திபகுணம் என்பர். காரியத்திற்கு நியதமாய் முன்னிற்றல்பற்றிக் காரணத்தை முன்னது என்றார். தொல்காப்பியரும் காரணத்தை முன்னிலை என்பர், முதன்மை என்பதும் இப்பொருட்டு.

### ஆன்மா

அறிவுக் கிருப்பிட மான்மா விருதிற னாகுமெல்லாம்
அறிபவ னீச னொருவன் சுகதுக்க மற்றவன்காண்
பிறிது பிறிதுமெய் தோறும்வெவ் வேறு பிரிந்துநித்தம்
உறையும் வியாபகன் சீவாத்து மாவென வுன்னுதியே.

(இ-ள்) ஆன்மா அறிவுக்கு இருப்பிடம்—ஆன்மாவாவது அறிவுக்கு உறைவிடமாயுள்ளது. இருதிறன் ஆகும்—அவ்வான்மாவும் சீவான்மா, பரமான்மா என இருவகைப்படும். ஈசன் எல்லாம் அறிபவன்—பரமான்மா எல்லாவற்றையும் அறிபவரும், ஒருவன்—ஏகரும், சுகதுக்கம் அற்றவன் காண்—சுகதுக்கமில்லாதவருமாயிருப்பர். சீவான்மா பிறிது பிறிது மெய்தோறும்—சீவான்மா வேறுவேறாகிய சரீரந்தோறும்—வெவ்வேறு பிரிந்து நித்தம் உறையும் வியாபகன் என உன்னுதி—வெவ்வேறாகப் பிரிந்து அழிவின்றி உறையும் வியாபகமுடையது என எண்ணுக. எ-று.

ஆத்துமத்தன்மையாகிய பொதுமையுடையதே ஆத்துமா என்பாருமுளர். ஆத்துமா என்பது வியாபகமுடையது எனப்பொருள்படும். சீவான்மா—தேகாபிமானமுடையது. பரமான்மா—மேலான ஆன்மா. சீவான்மா சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு, முதலிய குணங்களையும் இடையிலேதோன்றிய அறிவு, விருப்பு, செயல் என்பவைகளையுமுடையது. பரமான்மாவோ சுகம், துக்கம், விருப்பு, வெறுப்பு முதலியன இல்லாதது, நித்தியமான அறிவு, விருப்பு முதலியனவுடையது. தடைப்படாத வியாபகத்தை முதலியனவுடையது.

வரும்

இங்ஙனம்
அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

## தற்காலம் தமிழ்நாட்டுக்கு விஜயஞ்செய்துள்ள மகிதலம் போற்றும் மஹாகவியாம் வங்காளத்து ஸ்ரீமான் ஸர் ரவீந்திரநாத தக்கோர்மீது பாடிய

# வரவேற்பு வாழ்த்துக்கவிகள்

1. பங்காளத் தெழுந்துகலை பரவுமதி யமுதமெனப்
  பலநல் னூல்கள்
 நங்காலத் திவைபோலந் நாட்டிலுயர் நாவலரும்
  நவிலாச் சீர்த்தி
 இங்காரப் பொருணயங்கூர் எழிற்புலவர் சிரமணியே!
  எவ்வம் சற்றும்
 தங்காத ரவீந்திரநாத் தக்கோய்உன் வரவினுளம்
  தளிர்க்கின் றேமால்.

(காளத்தெழுந்த அமுதமென-தொடைமுரண். ஆர-நிரம்ப எவ்வம்-பழிச்சொல், வரவின்-வரவால்.)

2. உத்தமநற் குணஞ்சான்ற புவீந்திரராம் தமிழரசர்
  உவந்து போற்ற
 முத்தமிழ்ச்சீர் கொழித்தொளிரும் கவீந்திரருக் குறைதலமாம்
  முதுதென் னாட்டில்
 சத்துவிகத் தண்கதிர்பூ தலம்விரிக்கும் ரவீந்திரநாத்
  தக்கோய்! மிக்கோய்!!
 பத்திமிகப் பரவியுனைப் பரிந்தேற்கும் எமக்காசி
  பாலிப் பாயே.

3. பாமடந்தைக் குயர்தொண்டு பரிவொடுசெய் முறையால்நம்
  பரத நாடாம்
 கோமடந்தைக் குரியமதக் கோட்பாடு தத்துவச்சீர்
  குலவும் அன்பு
 பூமடந்தைக் குறும்பொறுமை புண்ணியந்தே சாசாரம்
  புகழென் றின்ன
 நாமடைந்திங் குய்யநல்ல வழிகண்டாய் ரவீந்திர! செந்
  நாத்தக் கோயே!.

(பூமிபோற் பொறுமை என்க; தேச-ஆசாரம் எனவும் பிரிக்கலாம்)

4. சந்தமிகச் சேர்ந்தொளிரும் தாய்மொழியிற் பன்னூல்சீர்
சால யாத்துத்
தந்தமதி ரவீந்திரனே! 'சாந்திநிகே தன'க்கல்விச்
சாலைச் சிடர்
தந்தமது தரமறிந்து தருகலைச்சீ ரூட்டுவிக்கும்
தாய்போல் வாய்!எம்
சுந்தமது ரத்தமிழுங் நனம்வளர்க்க எமக்குமதி
கழறு வாயே.

('சாந்திநிகேதனம்' என்பது இவரால் போல்பூரென்னுமிடத்தில் நடை பெறும் கல்விச்சாலை.)

5. அகவிருள்தீர்த் தவில்ரவியும் இன்பளிப்பால் இந்திரனும்
அனையோ ருள்ளும்
தகலரும்சீர் மேன்மையினுல் நாதனுமாந் தன்மையுறச்
சகத்தோ ருன்பேர்
மிகவழுசிற் புவிக்குரவீந் திரநாதத் தக்கோறு
விழைந்து போற்றிப்
பகரவியப் பென்னோபொற் பரிசினுமெய் பரிசினுஞ்சீர்
படைத்த மேலோய்!?

Noble Prize

(நோபொற் பரிசு என்றும் பிரிக்கலாம்; இது இவர்க்கு உலகெலாம் பாராட்டும் கவிதாஸாமர்த்யத்துக்காக அளிக்கப்பெற்ற 120000 ரூ. மதிப்புள்ள ஸம்மானம்.)

நேரிசைவெண்பா.

வாழி ரவீந்திரநாத் தக்கோய், மகிதலத்து;
வாழி கவீந்திரஉன் மாட்சிநலம்;—வாழி
தவேந்திரமுன் னோர்வாழ்கம தாய்நாடு வாழி
புவீந்திரனெம் ஜார்ஜரசம் பொலிந்து.

வே. முத்துஸாமி ஐயர் எம்.ஏ., எல்.டி.,
மதுரை

---

# சளுக்கிய விக்கிரமாதித்தன் சரித்திரம்

## நான்காம் பாகம்.

## விக்கிரமாதித்தன் அரசாட்சி.

(கி. பி. 1076—1127 கி. பி.)

**விக்கிரமாதித்தன் முடிசூடியது**

விக்கிரமாதித்தன் துங்கபத்திரைச் சண்டையில் ஜயமடைந்து பிரதான நகரமாகிய கலியாணபுரஞ் சென்று, மகாராஜாதிராஜன், பரமேசுவரன், பட்டாரகன், பரமபட்டாரகன், சத்தியாசிரய குலதிலகன், சாளுக்கியாபரணன், திரிபுவனமல்லன், சக்கரவர்த்தி என்னும் பலபிருதுகளுடன் சிற்றரசர்கள் புடைசூழவும் குடிகள் கொண்டாடவும் மகுடம் சூடினன். இவனுக்குக் கலிவிக்கிரமன் என்றும் பரமர்த்திதேவனென்றும், பரமாடி பெருமனடி என்றும் வேறு பெயர்களும் வழங்கிவந்தன. இவன் முடிசூட்டிக்கொண்ட சுபதினத்திலேயே நெடுநாளாகத் தன்னோடுழைத்துவந்த தம்பி ஜயசிங்கனை வனவாசிக்கு மண்டலாதிபதியாகவும் சளுக்கிய ராஜ்யத்திற்கு இளவரசாகவும் நியமித்தான். (1) தான் அரசாளத்தொடங்கியவுடனே, தக்ஷிணத்தில் தொன்றுதொட்டு வழங்கிவந்த சாலிவாகன சகாப்தத்திற்குச்சரியாகத் தானும், உஜ்ஜயினிநகரத்துப் பிரபல விக்கிரமாதித்தனைப்போல, தன்பெயராலேயே சாளுக்கிய விக்கிர வருஷமென்கிற புதிதொரு சகாப்தத்தை ஏற்படுத்தினன். (2) இச்சகாப்தமும் அவனுக்குப்பிறகு சற்றேறக்குறைய நூறுவருஷகாலம் (3) வழங்கிவந்ததாகத் தெரியவருகிறது.

**பட்டாபிஷேக கால நிர்ணயம்**

இனி இவ்விக்கிரமாதித்தன் பட்டந்தரித்ததினம் இன்னதென்று நிச்சயிக்க ஒருவாறு முயலுவோம். சாளுக்கிய விக்கிரமசகாப்தத்தின் முதல்வருஷமாகிய நள பால்குன சுத்தபஞ்சமி பிரகஸ்பதி வாரத்தில் பட்ட பந்தோற்சவ நிமித்தமாக பலதானங்கள் செய்யப்பட்டனவாக வடகிரிசாசனம் (4) கூறுகிறது. இப்பட்ட பந்தோற்சவம் விக்கிரமாதித்தன் பட்டந்தரித்த நாளே

1. Epi. car. VII. S. K, 293; 297. Bom. Gaz. Ch. IV.
2. Ind. Ant. VIII கடக், தேங்கிலி, வடாவிசாசனங்கள்.
3. Ind. Ant. VIII. சிந்தாசாஸனம்.
4. Ind. Ant. VIII. 191.

யென்று சர்வால்டர் எலியட் என்பவரும் (5) பட்டாபிஷேகத்தைச் சேர்ந்த கொண்டாட்ட நாட்களிலொன்று என்று ஸ்ரீமான். ரா. கோ. பண்டாரகரும் (6) அபிப்பிராயப் படுகின்றனர். ஆனால் விக்கிரமாதித்தன் சகல பிருதுசனுடனும் நளவருஷம் சைத்ர சுத்த பஞ்சமியிலேயே ஆண்டுகொண்டிருந்தானென்பது ஹொன்னலிதாலுகாவில் பசவ கோயிலுக்கெதிரிலுள்ள ஒரு கல்வெட்டுச்சாசனத்தால் (7) தெரிய வருகிறது. ஆகையால் வடகிரி சாசனத்திற்கண்ட பட்டபந்தோற்சவமென்பதற்கு ஏற்கனவே நடந்த பட்டாபிஷேகத்தைக் கொண்டாடுவதாகிய (முதல்) வருஷாந்தர உற்சவமேயென்று பொருள்கொள்ளவேண்டுவதாகின்றது. ஆகவே பட்டாபிஷேகதினமானது ராக்ஷஸவருஷம் பால்குன சுத்த பஞ்சமி (அதாவது கி. பி. 1076-ம் வருஷம் பிப்ரவரி மாசம் 11-ம்வ) (8) என்றே நிச்சயித்தல் வேண்டும். ராக்ஷஸவருஷத்தில் எஞ்சிநின்றன சில நாட்களேயாகையால் அவையும் வெகுவாகப் பட்டாபிஷேகக் கொண்டாட்டத்திலேயே கழிந்தனவாக, விக்கிரமாதித்தன் நள சைத்ரசுத்த ப்ரதமையிலிருந்தே தன் சகாப்தத்தைத் தொ டங்கினவனுவான். சாளுக்கிய விக்கிரமசகாப்தத்தில் அநேக காலவரை யறைகளைப் பரிசீலனைசெய்து அவைகளெல்லாம் சாந்திரமானத்தை யே அநுசரித்தவையென்று புரொபெசர் கீல்ஹாரன் சொல்லியிரு பதும் (9) மேற்சொன்ன முடிவையே வற்புறுத்தும்.

**சந்திரலேகா சுயம்வரம்**

பட்டாபிஷேகம் நடந்த சில நாட்களுக்கெல்லாம் விக்கிரமாதி தன் திக்குவிஜயம் செய்யப் புறப்பட் சோழன், முதலான பலவரசர்களையும்மு கிடச்செய்து இரண்டாமுறை கலியாண திற்குத் திரும்பினான். அப்போது கரஹாடதேசத்துச் சிலாஹார வ சத்து வித்தியாதரன் பெண்ணும் ஜகஜ்ஜோதியாக விளங்கினவளுமா சந்திரலேகாவுக்குச் சுயம்வரமென்று கேள்வியுற்று அங்குச் சென்று

5. Ind. Ant. VIII.
6. Early History of the Dekkan p. 63.
7. Epi. Car. VII. H. 14. விக்கிரமாதித்தன் காலத்தைக்குறித்து இ வரையில் வெளிவந்த சாசனங்களிலெல்லாம் இதுதான் முந்திய
8. Indian Calendar by Sewell and Dikshit Bom. Gaz. Cli. I 446; n. 6.
9. Ind. Ant. XXII 109; 110.



அவ்விடத்தில் வந்திருந்த அயோத்தி, சேதி, கன்னியாகுப்ஜம் சர்மண்வதி (சம்பல் நதிதீரம்) கோபாசலகௌட மாளவகூர்ஜ்ஜர சோழபாண்டிய அரசர்களை யெல்லாம் மதியாமல் சந்திரலேகா, விக்கிரமாதித்தனை சோழ சளுக்கியரசர்களிருவரையும் ஏககாலத்தில் துங்கபத்திரைச் செங்களத்திடைப் பொருது வாகைசூடியவனென்று அவனுக்கேமாலையிட்டாள். இவ்வாறாகப் பில்ஹணர் கூறியிருக்கும் விஷயங்கள் சாசனங்களுக்கும் ஒப்பமுடிந்தன. விக்கிரமாதித்தன் மனைவியரில் சந்தலதேவி அல்லது சந்திரலேகா என்று ஒருத்தி இருந்ததாகச் சாசனங்களாலும் தெரியவருகிறது. அவளுடைய சௌந்தரியத்தைப் பில்ஹணகவி பாதாதிகேசபரியந்தம் பலசுலோகங்களில் விரிவாக வருணித்திருக்கிறார். அவள் பேரழகுவாய்ந்தவளென்பதற்கு யாதொரு ஐயமுமில்லை. ஏனெனில் காச்மீர தேசத்தரசனாகிய ஹர்ஷன் (கி. பி. 1089 1101 கி. பி.) அவளுடைய சித்திரத்தைக்கண்டமாத்திரத்திலேயே அவளழகிலே ஈடுபட்டு மதிமயங்கி விக்கிரமாதித்தனை வென்று அவளை வலிந்தடையத் தூராசைகொண்டு அவ்வெண்ணம் நிறைவேறும்வரையில் தாம்பூலம் பச்சைக்கர்ப்பூரம் உபயோகிப்பதில்லை யென்று வீண் சபதம் செய்துகொண்டானென்பது கல்ஹணர் எழுதிய ராஜதரங்கிணியால் (10) தெரியவருகிறது. விக்கிரமாதித்தன் சந்திரலேகாவை மணந்த விஷயத்தில், சுயம்வரம் உண்மையில் நடந்ததா அல்லது சிறப்பித்துரைக்க வேண்டிப் பில்ஹணகவி சாதுரியமாகக் கற்பித்தாரா என்னும் கேள்வி எழுகின்றது. கர்னல் டாட் எழுதின ராஜஸ்தான் என்னும் நூலிலிருந்தும் இதர நூல்களிலிருந்தும் கி. பி. பன்னிரண்டாவது நூற்றாண்டில் பிருதிவிராஜன் காலத்திலும் சுயம்வரம் நடந்து வந்ததாகத் தெரியவருகிறது. மேலும் பில்ஹணர் கூறியுள்ள நாட்டரசர்கள் அவன் காலத்தினரென்பதிற் றடையில்லை. கவிசிரேஷ்டரான பில்ஹணர் கூறியனவெல்லாம் சரித்திர சம்மதமுடையனவாகாவென்று பலர் கண்மூடித்தனமாகச் சொல்லுவது தவறென்பது இதனாலும் நன்கு விளங்கும்.

**விக்கிரமாதித்தன் மனைவியரும் மக்களும்**

சந்திரலேகா பட்டராணி அல்லது பேரரசியாக நெடுநாளிருந்தாள். விக்கிரமாதித்தனது மனைவியராகிய மயிலாலதேவி, சவாலதேவி, லக்ஷ்மதேவி, ஜக்கலதேவி, மலயமாதேவி முதலிய பலருள்ளும் இவளொருத்தியே அவனுடைய சுக்கந்தவளாயிருந்து மூன்று மக்களைப் பெற்றாள். (11) மயிலாலதேவி

10. தரங்கம் VII. சுலோகம் 1119, 1121, 1122, 1124.
11. Bom. Gaz. Ch. IV. 445-449.

யென்னும் குமாரத்தி முதலாம் ஜயகேசியின் பேரனை கொங்கணதேசத்துக் கதம்பவமிசத்து இரண்டாம் ஜயகேசியை மணந்தாள். (12) மூத்தகுமாரனை ஜயகர்னன் கி. பி. 1102-இல் பிஜபூரில் மண்டலாதிபதியாக விருந்து தந்தைகாலத்திலேயே இறந்துவிட்டான். இளையவனாகிய சோமேசுவரன் பூலோக மல்லன் என்னும் பிருதுடன் தந்தைக்குப் பிறகு கி. பி. 1127-இல் அரசடைந்தான். அதிக சமர்த்தனை அரசனல்லனாகிலும் சகல சாஸ்திர சம்பன்னனாகவும் அபிலஷிதார்த்த சிந்தாமணி என்னும் நூலை இயற்றியவனாகவும் விளங்கினன்.

அவன்காலத்திய போர்களும் கலகங்களும்

விக்கிரமாதித்தன் தனது ஆட்சியில் கி. பி. 1081-இல் பாலான்வய வமிசத்தைச் சார்ந்த பலவராயனென்பவனைத் தோல்வியடையச்செய்தான். (13) தம்பி ஜயசிங்கன் வனவாசி சாந்தலிஜ் பெறுவோலா புலிகீர்முதலாய மாகாணங்களுக்கு கி. பி. 1077 முதல் கி. பி. 1082 வரையில் மண்டலாதிபதியாகவிருந்து இலக்ஷ்மணன் இராமபிரானிடம் இருந்ததைப்போல, தமையனிடம் அந்நியோந்நியமாக இருந்துவந்தான். (14) ஆனால் அதற்கப்பால் (கி. பி. 1082—1087 கி. பி.) குடிகளை வருத்திப்பணஞ்சேகரித்து, சேனையைப் பலப்படுத்திக்கொண்டு சோழவரசனோடு உறவாடி, தமையனுடைய போர்வீரரையும் தன்பால் சேரும்படி தூண்டிச் சளுக்கிய ராஜ்யமுழுவதையுமே அபகரிக்க முயன்றான். விக்கிரமாதித்தனும் அவனோடு சண்டைசெய்து வனவாசியை அவனிடமிருந்து மீட்டு கதம்ப வமிசத்துச் சாந்திவர்மனுக்குக் கொடுத்துவிட்டான். (15) மற்றொருமுறை துங்கபத்திரைக் கரையில் விக்கிரமாதித்தனுக்குங்குலோத்துங்கனுக்கும் சண்டைநடந்து ஜயாபஜயம் சொல்லமுடியாமற் கிடந்தது. பிறகு கி. பி. 1088 வருஷங்களில் நருமதையைக் கடந்து வட இந்தியாவில் கன்னம்மா முதலியவர்களை விக்கிரமாதித்தன் ஜயித்ததாகத் தெரியவருகிறது. (16).

---

12. J. B. R. A. S IX. & XI. கதம்பசாசனங்கள்.
13. Bom. Gaz, Ch. IV.
14. Epi. Car. VII. S. K. 297.
15. Flut's Kanarese dynasties Bom. Gaz. Ch. IV.
16. Bom. Gaz. Ch. IV.



விக்கிரமாதித்தனது அரசாட்சியின் பிற்பகுதியில் சற்றேறக்குறைய கி. பி. 1117-இல் ஹொய்சளர் கலகஞ்செய்தார்கள். இவர்கள் முதலில் சளுக்கியருக்குச் சிற்றரசராயிருந்து உதவிபுரிந்து வந்தனர். (17) முதன் முதலில் விநயாதித்தன் என்பவன் (கி. பி. 1047—1100 கி. பி.) தேவபுரி அல்லது துவாரசமுத்திரத்தை (மைசூரிலிருக்கும் ஹளேபீட்டை) ராஜதானியாக்கிக்கொண்டு குந்தளவரசன் பக்கத்தில் சண்டைசெய்து பல விரோதிகளையும் தோல்வியடையச் செய்தான். (18) அவன் மகனும் யுவராஜனுமான எரியங்கனும் சளுக்கியருக்கு முக்கிய படைத்துணைவனாயிருந்து துங்கபத்திரைக்கரையில் கி. பி. 1076-இல் நடந்த சண்டையில் விக்கிரமாதித்தனுக்குப் பேருதவி புரிந்தான். 19 அவனுடைய இரண்டாம் புத்திரனை விஷ்ணுவர்த்தனன் துவார சமுத்திரத்திற்கும் பெறுவோலாவுக்கும் இடையிலுள்ள அயல் நாடுகளைத்தாக்கி மைசூரில் ஆண்டுவந்த சோழ சிற்றரசனை ஆதியமனது வலியடக்கி கிருஷ்ணவேணி வரையிற் சென்று வனவாசியையும் பாழாக்கி சக்கரவர்த்தி விக்கிரமாதித்தன் அனுப்பிய படையையும் வென்றான். (20) அவனுடைய மந்திரியாகிய கங்கராஜனும் விக்கிரமாதித்தனது சிற்றரசர் பன்னிருவர்கீழிருந்த சேனையைக் கன்னகாலா என்னுமிடத்தில் இரவில் தாக்கினன். (21) அதேசமயத்தில் கொபசாபட்டணத்துக் கதம்பர்களும், கொளம்பபாடி பாண்டியர்களும, கொங்கணசிலாஹாரர்களும் ஹொய்சளரோடு சேர்ந்து கலகஞ் செய்ததாகத் தெரியவருகிறது. ஏனென்றால் இவர்களையெல்லாம் சிந்தாசிற்றரசனாகிய ஆச்சா அல்லது இரண்டாம் ஆசுகி என்பவன் தோற்கச்செய்ததாக சாசனங்களில் (22) சொல்லப்பட்டிருக்கிறது. விக்கிரமாதித்தனும் தன்குமாரத்தி மயிலால தேவியைக் கொங்கண தேசத்துக் கதம்ப ஜயகேசிக்கு மணஞ்செய்வித்ததனாலேயும், கி. பி. 1126-இல் தன்மகனை மூன்றாம் சோமேசுவரன் முறைமையில் யாதொருதடையுமின்றிச் சளுக்கிய ராஜ்யத்தை யடைந்ததனாலேயும், ஹொய்சளரும் இதற்கப்பால் ஒரு நூற்றாண்டுவரையிலும் சிற்றரசராகவேயிருந்தனரென்று ஏற்படுவதனாலேயும் மேற்கண்ட கலகங்களால் சளுக்கியருடைய ஆதிக்யத்திற்குக் குறைவு ஒன்றும் நேரவில்லை யென்பது தெளியக்கிடக்கின்றது. ஆயினும் 'யானைவரும் பின்னே மணியோசைவரும் முன்னே' என்றவாறு இக்க ஹொய்சள கலகமானது சளுக்கியராஜ்யத்திற்குப் பின்னிட்டு அவர்களால் நேரிட்ட கெடுதியை ஒருவாறு முற்குறிப்பதா

---

17. Rice. Mysore Gazetteer.
18. Epi. Rep. 1892.
19. Epi. Car. VII. S. K. 64 சொரகண பெல்கோலசாசனம்.
20. Epi. Car. II. No. 138. கடக்சாசனம் Ind. Ant. II.
21. Epi. Car. II. No. 45.
22. J. D. R. A. S. XI, 234. 244 ஈரேகல் சாசனம்.

யிற்று. விக்கிரமாதித்தன் காலத்திற்குப் பிறகு, வீரபெல்லாளனை முன்னிட்ட ஹொய்சளரும், விஜ்ஜளனை முன்னிட்ட கலசுரிகளும் சளுக்கிய நாட்டைத்தாக்கிச் சின்னபின்னமாக்கினார்கள். பிற்காலத்தில் நாடானது இங்ஙனம் க்ஷீணதசையடைந்ததற்கு விக்கிரமாதித்தன்மேலேயே முழுதும் தோஷம்சொல்லுவதற்கில்லை. அவன் இக்கலகங்களைத் தக்க சமயத்திலேயே அறிந்து அவைகளைத்தடுக்கத் தன்னாலியன்றவரையில் முயன்று ஒரு அணைகோலிவைத்தான். அவனிறந்த ஐம்பது வருஷங்களுக்கப்பால் இந்நாடு அழிந்துபட்டதென்றால் அவனுக்குப் பின்னிட்டு அரசுபுரிந்தோர்களுடைய பலக்குறைவே அதற்கு முக்கிய காரணமென்பது சொல்லாமலே அமையும்.

கி. பி. 1120—1124 கி. பி. வருஷங்களில் விக்கிரமாதித்தனது சாசனங்கள் அநேகம் வேங்கிநாட்டு திராக்ஷாராம என்னும் புண்ணிய ஸ்தலத்தில் காணப்படுகின்றன. (23) இதன்காரணம் என்ன? குலோத்துங்கன் 1117 கி. பி.-இல் இறக்க, அப்போது வேங்கிப் பிரதிநிதியாயிருந்த அவன்மகன் விக்கிரமசோழன் தக்ஷிணம்வந்து தந்தையின் மகுடம் சூடினான். சளுக்கிய வேங்கிநாடு சோணாட்டில் ஐக்கியமாகாவண்ணம் பலவருஷங்கள் வீணில் கஷ்டப்பட்ட விக்கிரமாதித்தன் இதுதான் தக்கசமயமென்றெண்ணி விக்கிரமசோழனுக்கப்பால் வேங்கிப்பிரதிநிதியாக வைக்கப்பட்ட சோழனை ஜயித்து வேங்கியை சிலவருஷங்கள் தனதாக்கிக்கொண்டான் (24).

**அவன் ராஜ்யத்தின் விஸ்தீரணமும் சிற்றரசர்களும்**

சளுக்கியராஜ்யமானது விக்கிரமாதித்தனது காலத்தில் வடக்கே நருமதைமுதல் தெற்கே துங்கபத்திரை வரையிலும்கிழக்குத்தொடர்ச்சிமலைமுதல் மேல்கடல் வரையிலும் பரவியிருந்தது. இது அநேக மாகாணங்களாகப் பிரிக்கப்பட்டு மண்டலேசுவரர் அதிகாரத்துக்குள் இருந்தது. இவர்களில் முக்கியமானவர்கள் சேவுணதேசத்துயாதவர்களும் கங்சபாடி ஹொய்சளர்களும், கொங்கண கொல்லாபுர தேசத்துச் சிலாஹாரர்களும், ஹாங்கல் கோபகாபட்டணத்துக் கதம்பர்களும், எல்பெர்கா சிந்தர்களும் குட்டல் குட்டர்களும் கலசுரிகளும் ஆவர். (25)

விக்கிரமாதித்தன் கி. பி. 1076 முதல் 1127 கி. பி. வரையில் 51-வருஷங்கள் அரசாண்டான். (26) ராஜ்யம் இக்காலங்களிலெல்லாம் பெரும்பாலும் சண்டைசச்சரவின்றிச் செழித்தோங்கியிருந்தது. நாட்டில் சோரர் பயம் சிறிதுமின்றிக் குடிகள் கவலையற்றுக் களிகூர்ந்திருந்தனர்.

23. Sewell's List of Antiquities in the Madras Presidency.
24. Epi. Rep. 1903. p. 4.
25. Bom. Gaz. Ch. IV. 450-8.
26. Epi. Rep. 1904.



**குடிகளின் விசுவாசம்**

குடிகள் விக்கிரமாதித்தனைத் தெய்வமாகக்கொண்டாடி அன்பு செலுத்தி வந்தனர். ராஜனுக்குப் புத்திரப் பேறுண்டாயின் தன் தலையைப் பிரமனுக்குச் சுழலையாட்டத்தில் அர்ப்பணம்செய்வதாக ஒரு இடையன் பிரார்த்தனை செய்துகொண்டான் என்று ஒரு சாசனத்தில் (27) காணப்படுகிறது. இதனாலேயே இவன்பால் குடிகளுக்குண்டாயிருந்த ராஜவிசுவாசம் நன்கு புலப்படும்.

**விக்கிரமாதித்தனது மதக் கோட்பாடு**

விக்கிரமாதித்தன் சிவபிரானுடைய பூர்ண அனுக்கிரகத்தைப் பெற்றவனென்றும் சிவபிரானே இவனது குலதெய்வமென்றும் பில்ஹணர் கூறியிருப்பதால் இவனைச் சைவனென்றே சொல்லவேண்டும். ஆயினும் மகாவிஷ்ணுவுக்கும் ஒரு பெரிய ஆலயம் அமைத்ததாகத் தெரியவருகிறது. மேலும்தான் இராசகுமாரனாயிருக்கையிலேயே பர்மாடி பாசதி என்னும் ஜின ஆலயத்தையும் கட்டிவைத்தான். (28) பௌத்த விஹாரங்களுக்கும் விசேஷதானங்கள் இவன்காலத்தில் கொடுக்கப்பட்டன. ஆகையால் விக்கிரமாதித்தன் எல்லா மதங்களையும் பக்ஷபாதமில்லாமல் சம்ரக்ஷித்து வந்தானென்பது விளங்குகின்றது. புண்ணிய காலங்களில் ஷோடசமஹாதானங்களையும் செய்து ஏழைகளிடத்தில் பெருங்கருணைவாய்ந்தவனாய்ப் பலகுளங்களையும் கிணறுகளையும் வெட்டி விக்கிரமபுரமென்று ஒரு நகரத்தையும் பிரதிஷ்டை செய்தான். இவ்வாற்றால் இவனுக்கு 'ஜகதேகதானி' என்ற பெயரும் வழங்கலாயிற்று.

**வித்துவான்களை ஆதரித்தது**

வித்துவான்களை ஆதரிப்பதில் பாமார வமிசத்து முஞ்சன் போஜன் இவர்களைக்காட்டிலும் விக்கிரமாதித்தன் சிறந்தோங்கியவனென்று பில்ஹணர் கூறியிருக்கிறார். காச்மீரதேசத்துப் பண்டிதரானபில்ஹணர் தன்னை ஆதரிக்கத்தகுந்த அரசர்ஒருவரும் வடஇந்தியாவில் இல்லாததுகண்டு தக்ஷிணத்தில்விக்கிரமாதித்தனிடம் வந்தடைந்து வித்தியாபதியாக அமர்ந்ததே இதற்குப் பெரிதொருசான்றாம். இந்தியா முழுதுமே கொண்டாடப்பட்ட மிதாக்ஷரம் என்னும் தர்மசாஸ்திரத்தைச்செய்த விஞ்ஞானேசுவரரென்னும் மகானும் இவ்வரசனுடைய சமஸ்தானத்திலேதான் விளங்கினார்.

**முன், பின் விக்கிரமாதித்தனும் வேறுபாடும்**

சற்றேறக்குறைய இருபத்தைந்துவருஷகாலமாகத் தந்தையின் காலத்திலும், தமையன் காலத்திலும் நேர்ந்த பலவேறுபோர்களிலும் ஈடுபட்டு வீரனாய் விளங்கிய விக்கிரமாதித்தன் அரசெய்திய பின்னர் ஐம்பது ஆண்டுகளாகக் கூடுமான வரையில் அயல்நாட்டு விஷயங்களில் தலையிட்டுக்கொள்

27. Epi. Car. VII S. K. 248.
28. Epi. Car. VII. S. K. 124. Ind. Ant. X. தாம்ரசாசனம்.

னாமலே ஆண்டுவந்தது பெரிதும் வியக்கத்தக்கதே. இம் மாறுபாட்டிற்குக் காரணமென்னே? தன்னைத்தமையனாசாட்சியில் விக்கிரமாதித்தன் பாலிய யௌவன தசைகளிலிருந்தான். பெரியோர்வாசகம் சிரமேற்கொண்டு காரணகாரியங்களை விசாரிப்பது தன் பொருட்டல்லவென்றெண்ணிச்சொல்லியவண்ணம் செய்தலே கடமையாகக்கருதியிருந்தனன். மேலும் அக்காலத்தில் மாளவ சோழ சளுக்கிய ராஜ்யங்களுக்குள் தத்தம் எல்லையைப்பற்றி ஒரு அமைதி ஏற்படவில்லை. போஜனிறந்தபின் மாளவதேசம் பின்னடைந்தது. குலோத்துங்கன்காலத்து, சோழராஜ்யமும் கன்னியாகுமரி முதல் கடற்கரையோரமாய் மஹாநதி வரை பரவியது. சளுக்கியநாடு வடக்கே நருமதைமுதல் தெற்கே துங்கபத்திரையளவும் நீண்டிருந்தது. குலோத்துங்கனும் விக்கிரமாதித்தனும் பலபோர் புரிந்தும் ஒருவரை ஒருவர் முடிவாகத் தோல்வியடையச்செய்ய வியலாமல் தத்தம்பலத்தையறிந்து பிற்காலத்தில் குடிகளின் நன்மையைக் கருதி வீண்சண்டை செய்யாமலிருந்தனர். மேலும் மகுடம் சூடினபோது விக்கிரமாதித்தனுக்கு வயது சற்றேறக்குறைய ஐம்பதாயிற்று. தான் அது காறும் செய்த சண்டைகளையும் அவைகளின் பலாபலன்களையும் தன் முதுமைப்பருவத்தில் ஆய்ந்தோய்ந்து பார்க்குங்கால் சண்டை சச்சரவால் வரும்பலனைவிட சமாதானத்தாலும் நாட்டைச் சீர்திருத்துவதாலும் வரும்பிரயோசனம் பலமடங்கு பெரிதென்று விக்கிரமாதித்தன் உணர்ந்தனன் போலும். இவ்வாறு ஒருங்கே போர்த்துறையிலும் அரசியலிலும் ஒப்புயர்வற்று விளங்கிக் குடியோம்பி வந்த அரசர் அரிதேயாம். வாய்த்தற்கருமையான வேறொரு சிறப்பும் இவன்பால் காணக்கிடக்கும் சரித்திரத்தில் சிறப்பித்துக் கூறப்படுவோரில் பலர் தங்கள் முன்னோர்உழைக்கத் தாம் அதன்பலனை அநுபவிப்பாராவர். வேறு பலர் தாங்கள் பல்லாண்டு உழைத்தும் பலனை அநுபவிக்கக் கூடாமல் வாளாகழிவர். விக்கிரமாதித்தனோ, அவ்வாறன்றித் தானே முக்கியமாகப் பாடுபட்டு நிலைநிறுத்திய நாட்டை கடவுளருளால் கண்குளிரக்கண்டு நெடுங்காலம் ஆண்டு வந்தனன். ஆகையால் மிதாக்ஷரத்தில் விஞ்ஞானேசுவரர் சொல்லியவாறு, இப்புவியின் கண் கலியாணபுரத்தைப்போன்ற நகரும், விக்கிரமாங்கனைப் போன்ற பூபதியும் வேறெங்கும் வேறெக்காலத்திலுமே காணப்படுதலரிதேயாம். அவன் கீர்த்தி நீடூழிகாலம் சிறந்தோங்கி வளர்க.

விக்கிரமாதித்தனது ஒப்புயர்வற்ற சிறப்பு

நான்காம்பாகம் முற்றிற்று (இன்னும் வெளிவரும்.)

அ. வா. வெங்கடராமய்யர், M.A., L.T.,
சரித்திரபோதகாசிரியர்,
இராஜாங்க கலாசாலை, கும்பகோணம்.

---

உ

குமரன் துணை,

திருச்சிற்றம்பலம்.

மெய்கண்டதேவன் மெல்லடிவாழ்க.

# கடைச்சங்ககாலம்.

தலையிடைகடை யென்ற முச்சங்கங்களில் கடைச்சங்கத்தின் காலமே ஈண்டு ஆராய்ச்சிக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. கடைச்சங்க காலத்தைத் தீர்மானிப்பதற்குக் கருவிகள் சிலப்பதிகாரமும் இலங்கைச்சரிதமுமாம் அவைகளை ஆராய்வோம்.

சிலப்பதிகாரம் கோவலன் மாதவியோடீடிக் கண்ணகியுடன் மதுரைசென்று சிலம்புகாரணமாக மடிந்ததையும், சேரன் செங்குட்டுவன் கண்ணகியைப் பிரதிட்டை செய்து வணங்கியதையும் கூறும் நூல். செங்குட்டுவனுடன்பிறந்தவராகிய இளங்கோவடிகளாலெழுதப்பட்டது. வடவாரியர்படைகடந்த பாண்டியன் நெடுஞ்செழியன், கிள்ளிவளவன், செங்குட்டுவன், இலங்கைமன்னன்கயவாகுவாகிய அரசர்கள் செயல்களைக்கூறுவது. இலங்கைச்சரிதத்தால் கயவாகுகாலத்தைத் தீர்மானித்தலால் தமிழரசர்கள் நெடுஞ்செழியன் முதலியோர் காலத்தையும் தீர்மானிக்கலாம். மேலும், சிலப்பதிகாரம் கதையையறிவிப்பதுடன் அக்கதைநடந்தகாலத்தை நிர்ணயித்தற்குக் கருவியாகவுள்ள சோதிடக் குறிப்புகளையும் தருகிறது. முதலில் அந்நூலிலிருந்தறியவிருக்கும் பல அரிய விஷயங்களையுமாராய்வோம்.

காவிரிப்பூம்பட்டினத்தில் சித்திரைமாதத்தில் சித்திரைநாளிலே இந்திரவிழாவிற்குக் கொடியேறிற்று. ஆசிரியர் இளங்கோவடிகள்(சிலப் V-64) "சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென, அந்நாள்" என்று கூறுவதாலிதனையறியலாம். மணிமேகலையில் (I-8) "நாலேழ்நாளினும்" என்று காணப்படுவதால் அவ்விழா இருபத்தெட்டுநாள் நடந்தது எனவறியலாம். இருபத்தொன்பதாவதுநாள் கொடியிறங்கிற்று. மறுநாள் கடலாட்டு நடந்தது. அன்று மாலையில் கோவலனும் மாதவியும் முடிப்பிரிகின்றனர். மாலையிற் "றோன்றியதிங்கட் செல்வனுஞ் சீரியனல்லன்" (சிலப் VIII-59) என்றதினாலே அன்று சூரியனத்தமித்த

வுடன் சந்திரனுமெழுந்தான். (சிலப் VIII-115-116) "மாலைவா ரானெனினுமாணிழை, காலைகாண்குவமென," என்றும், (சிலப் IX 2-4, 66-67 & 76-79) "பகன்மாய்ந்த

மாலைமணிவிளக்கங்காட்டியிரவிற்கோர்
கோலங்கொடியிடையார்தாங்கொள்ள
..................................கோவலனும்
பாடமைசேக்கையுட்புக்கு..................
மாடமதுரையகத்துச்சென்றென்னோடிங்
கேடலர்கோதாயெழுகென்றநீடு
வினைகடைக்கூட்டவியங்கொண்டான்கங்குற்
கனைசுடர்கால்சியாமுன்" என்றும், (சிலப்-IX சுற்று
வெண்பா)

"மாதவிதன்சொல்லை (மேற்குறித்த VIII-115-116) வறிதாக்க—மூதை, வினைகடைக்கூட்டவியங்கொண்டான்கங்குற், கனைசுடர்கால் சியாமுன்," என்றும், (சிலப் X 1-3).

"வான்கண்விழியாவைகறையாமத்து
மீன்றிகழ்தவிசும்பின்வெண்மதிநீங்கக்
காரிருணின்றகடைநாட்கங்குல்" என்றும் வருமடிகளால் முன்னிரவில் கோவலன் தன் மனைவி கண்ணகியை யடைந்து அவளு டன் விடிவதற்குமுன்னமே அன்று பூர்வபக்கச் சதுர்த்தசியாகை யால் சிறிது முன்னரே சந்திரனஸ்தமித்ததனால் வந்துசூழ்ந்த விருளிலே தென்மேற்கிலுள்ள மதுரைநோக்கிப்புறப்பட்டான்; அப்பொழுது பயணத்திற்கு ஆகாதவைகளான பல துர்நிமித்தங்கள் நிகழ்ந்தனவென் றறியலாம். பலதுன்பங்களையடைந்து மதுரை சேர்ந்த கோவலன் காலையில் கண்ணகியைப் பிரிந்து சிலம்புவிற்கப்போனான். இது (சிலப் XIX 35-36) "வண்டாரிருங்குஞ்சிமாலைதன்வார்குழன்மேற்

கொண்டாடழி இக்கொழுநன்பாற்காலைவாய்" என்ற வடிகளாலறியப்படும். அவ்வாறு சிலம்புவிற்கப்போனவன் பொற் கொல்லன்செய்தவஞ்சனையால் பாண்டியன் நெடுஞ்செழியனாற் கொல் லப்பட்டான். இச்செய்தி அன்று பலதுர்நிமித்தங்கள்கண்டு குர வைக்கூத்தாடியிருந்த இடைச்சியருக்கு நண்பகலில் தெரிய, அது உடனே அவர்களுடன் (சிலப் XVIII) "நண்பகற்பொழுதேநடுக்கு



கோய்கைமிகு, மன்பனைக்காணாதலறுமென்னெஞ்சன்றே" என்று புலம்பியிருந்த கண்ணகிக்கும் தெரிந்தது. உடனே அவள் உச்சியினி ருந்து காய்ந்துகொண்டிருந்த சூரியனைநோக்கி (XVIII) "காய்கதிர்ச் செல்வனே கள்வனோவென்கணவ" னென்றாள் அவன் 'உன்கணவன் கள்வனல்லன், இவ்வூரை இரவிற்றீயுண்ணும்' என்று சொன்னது கேட் டுக் கணவனைக்காணச் சென்றாள் கண்ணகி. மாண்டுகிடக்குமிடம் தெரி யாது அலைந்து திரிந்து ஊராரிற் சிலர்காட்ட (சிலப் XIX-37-38)

"புண்டாழ்குருதிபுறஞ்சோரமாலைவாய்க்
கண்டாளவன்றன்னைக்காணாக்கடுந்துயரம்" பின் மிகவருந் தினள். அப்பொழுது (சிலப் XIX 31-32)

"மல்லன்மாஞாலமிருளூட்டிமாமலைமேற்
செவ்வென்கதிர்சுருங்கிச்செங்கதிரோனசென்றொளி" த்தான் உடன் அவள் (XIX-43) "யாருமின்மருண்மாலையிடருறுதமியேன் முன்" என்று பல புலம்பி விரைந்துசென்று அரசனைக்கண்டு தன் கணவன் குற்றமற்றவனென்று நிரூபித்தாள். நெடுஞ்செழியன் தன் குற்றத்தையுணர்ந்து மனமுடைந்து அக்கணமே மாண்டான். உட னே கண்ணகி வஞ்சினங்கூறி அவ்வூரை மும்முறைவலம்வந்து எரி யூட்டினாள். அப்பொழுது சூரியனஸ்தமித்து நாலைந்துநாழிகையே சென்றதாகும். அவ்வாறு தீப்பற்றியது இரவிலேதானென்பதைத்தூங் கியிருந்த பிள்ளைகளையும் கணவரையுமெழுப்பி மாதரோடினரெனப் பின்வரும் (சிலப் XXII-126-131).

"தூமென்சேக்கைத்துனிப்பிதம்பாராக்
காமக்கள்ளாட்டடங்கினர்மயங்கத்
திதலையல்குற்றேங்கமழ்குழலியர்
குதலைச்செவ்வாய்க்குறுநடைப்புதல்வரொடு
பஞ்சியார்ந்தவமளியிற்றுஞ்சுதுயிலெழுப்பி
வானரைக்கூந்தன்மகளிரொடுபோத" என்ற வடிகளே காட் டும். இது (பதிகம் 39-41) "அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்க், கொன்றையஞ் சடைமுடி மன்றப் பொதியிலில், வெள்ளியம்பலத்து நள்ளிருட்கிடந்தேன்," அப்பொழுது மதுராபதி கண்ணகிமுன் தோன் றினாள் என்று சீத்தலைச்சாத்தனார் சொன்னதாக வருமடிகளாலும்

விளங்கும். இருளிலேயே மதுரை யெரிந்ததென்பதை (சிலப் XXVII 74-78).

"தாதெருமன்றத்துமாதரியெழுந்து
கோவலன்றீதிலன்கோமகன்பிழைத்தா
னடைக்கலமிழந்தேனிடைக்குலமாக்காள்
குடையுங்கோலும்பிழைத்தவோவென
விடையிருளியாமத்தெரியகம்புக்கதும்"

(மாதரி செய்தியறிந்து மதுரையிலெரிந்துகொண்டிருந்ததீயில் விழுந்துமாண்டாள். அது இடையிருளியாமத்தா) மெனவருமடிகளால் நன்கு விளங்கும். (சிலப் XXIII-133-137) "ஆடித்திங்கட்பேரிருட்பக்கத், தழல்சேர்குட்டத்தட்டமிஞான்று, வெள்ளிவாரத்தொள்ளெரியுண்ண, வுரைசான்மதுரையோடரசகேடுறுமெனு முரையுமுண்டே"

என்ற வடிகளான் மதுரை யெரியுண்டது ஆடிமாதம், வெள்ளிக்கிழமை, கிருஷ்ணபக்கத்தட்டமி, அழல்சேர்குட்டமென்றறியலாம். அழல்சேர்குட்டமென்றது நக்ஷத்திரம் ஆயின் அது எதனைக்குறிக்குமென்றாராய்வோம். சிலப்பதிகாரஅரும்பதவுரையில் (பக்கம் 63) அழல்சேர்குட்டம் கார்த்திகைபரணி" என்றெழுதப்பட்டுள்ளது. அதாவது கார்த்திகையே.) ஆனால் அது பரணிக்குமேல் வந்ததாகும். புறநானூற்றிலுள்ள (229) "ஆடியலழற்குட்டத்தாரிருளரையிரவின்" என்ற வடியினுரை "மேடவிராசிபொருந்திய கார்த்திகைநாளின் முதற்காலின்கண் நிறைந்த இருளையுடைய பாதியிரவின்கண்" என்றதினாலேயும் அழல்சேர்குட்டமென்றால் கார்த்திகையே யென்றறியலாம். ஆகையால் மதுரை சூரியனஸ்தமித்த 4, 5 நாழிகையிற் பரணிக்கு மேல்வந்த கார்த்திகையிலெரிந்ததாகும். அன்று நடுயாமம்வரை இருளிருந்தது. அதற்குப் பதினாலாம்நாள் வியாழக்கிழமை பூர்வபக்கச் சப்தமியன்று சேரநாட்டைச்சேர்ந்த செங்குன்றத்தில் தன்கணவன் கோவலனோடும் தேவவிமானத்திலேறிச் சென்றாள், அது கண்ட மறவர் பலர் அங்குவந்திருந்த சேரன் செங்குட்டுவனுக் கறிவித்தனர், மதுரையில் நடந்தவைகளை நேரில் நன்கறிந்தவராகிய சீத்தலைச்சாத்தனாரென்னும் சங்கப்புலவர் மதுரையிலும் காவிரிப்பூம்பட்டினத்தும் நடந்தவைகளை அவனுக்கு அறியச்சொல்லினர், அதனைக்கேட்டுக் கொண்டிருந்த சேரனுடன் பிறந்தவரான இளங்கோவடிகள் சிலப்பதிகாரமெழுதினர். ஆனால் அந்நூல் முடிவுறப் பலவாண்டுகளாயின.



ஏனென்றால் அதன்பின் சேரன் கல்கொணர இமயஞ்சென்றுதிரும்பி வஞ்சியிற் கண்ணகியை ஆலயத்தமர்த்தியவரை நடந்த கதையெல்லாம் நூலாசிரியர் குறித்துள்ளார்.

செங்குட்டுவன் பத்தினிக்கடவுளாகிய அக்கண்ணகிக்குக் கோவில் கட்ட வெண்ணியவனாய் அவள் உருவச்சிலைக்காகக் கல்கொண்டுவரும் பொருட்டுப் பெருஞ்சேனையோடும் இமயமலையைநோக்கிப் புறப்பட்டான். ஓரிடத்துப் பூர்வபக்கத்திருதியைப்பிறையைக் காண்டலும் இன்று 32 மாதங்களாயினவெனக் கணிகூறுகிறானாகையால் அவன் புறப்பட்டதும் பூர்வபக்கத்திருதியையேயாமென ஊகித்தறியலாம். அவன் ஒரு சிறிதும் தாமதியாது புறப்பட்டானெனத் தெரிவதால் அவ்வாறு அவன்புறப்பட்டது கண்ணகி விமானமேறிச்சென்ற 26ம் நாள் திங்கட்கிழமை பூர்வபக்கத்திருதியையாயிருக்கவேண்டும். சேரன் இமயஞ்சென்று திரும்பிக் கண்ணகியைப் பிரதிட்டைசெய்தவரை நடந்த விஷயங்கள் மிகவும் முக்கியமானவை யாகையினாலே அவற்றை நுண்ணிதினாராய்தல் வேண்டும்.

"ஞாலங்காவலர்நாட்டிறையிருங்
காலைமுரசங்கடைமுகத்தெழுதலும்" (சிலப் XXVI 53-54)

கணி நன்னிமித்தங்கூற வஞ்சியினீங்கினன். சேரன் சிலமாதங்களில் நீலகிரியடைந்து தங்கினான். அங்கு பலவரசர்களும் திறையனுப்புகின்றனர். வேனிலைப் பாடிவந்தனர் கொங்கணரும் கருநாடரும். பின்வந்த கார்காலத்தைப் பாடிவந்தனர் குடகர். அப்பொழுது வடவாரிய வரசர் நூற்றுவர் கன்னரனுப்பிய திறையைக் கொணர்ந்தனர் தூதுவர். அத்தூதுவரை நூற்றுவர் கன்னரிடஞ்சென்று தானும் பெருஞ்சேனையும் கங்கையைக்கடக்கப் படகுகள் தயாரிக்கும்படி சொல்லவேவினன். உடன் வந்ததென்னன்றிறைகொண்டு நீலகிரியினீங்கினான். சேரன் ஒரு வருஷம் அந்நீலகிரியிற் றங்கியோனாவன், கார்கால ஆரம்பமாகிய ஆவணிமாதத்துப் புறப்பட்டவன் கங்கைகடந்து பகையரசர்கனக விசயரைப் பதினெட்டுநாழிகையில் வென்றான். வென்றவுடனே சேனைத்தலைவனையனுப்பி இமயத்திருந்து கல்கொண்டு கங்கையில் முறையே நீர்ப்படைசெய்து யாற்றின் தென்கரையிற்றங்கினான். அப்பொழுது மாடலமறையோன் வருகிறான். வந்தவனிடம் தான் வஞ்சி நீங்கியபின் மதுரையிலும் புகாரிலும் நடந்தவைகளை யுசாவியறிந்து

கொள்ளுகிறான். அன்று மாலையில் சேரன் திருதியைப்பிறையைக் கண்டனனாகக்கணி, (சிலப் XXVII 149-150) "எண்ணான்கு மதியம் வஞ்சிநீங்கியது, மண்ணாள்வேந்தேவாழ்கென்றேத்" தினனாகையால் அன்றுவரை சென்றது 32 மாதங்களாம். ஈதெவ்வாறுமென்றாராய் வோம். வஞ்சியிலிருந்து ஆவணியிற் புறப்பட்ட சேரன் மறுவருஷம் ஆவணிவரை நீலகிரியிலிருந்தான். ஒருவன் வஞ்சியிலிருந்து கங்கை சென்றுதிரும்பக் குறைந்தது ஒருவருஷமாகும். ஆவணியில் வஞ்சியி னீங்கிக் கங்கைக்கரைசென்றதூதுவர் மறுவருஷம் ஆவணியிலேயே நீலகிரியிற் சேரனைக்கண்டனரெனத்தெரிவதால், அவர்கள்போக ஆறு மாதங்களும் அங்கிருந்து திரும்ப நீலகிரிவரைவர ஆறுமாதங்களே சென்றனவாகும். நீலகிரிவரையுமே திரும்பிவருவதற்கு அதிகமாக நாட்கள்சென்றதன்காரணம் வடவாரியரனுப்பிய காணிக்கைப்பொருள்களையும் உடன்கொண்டு வந்ததேயாம். கங்கைக்கரையிலிருந்தனுப்பிய சேனைத்தலைவன் இமையஞ்சென்று கல்கொண்டுவர இரண்டு மாதங்களாம். ஆகப்பதினான்கு மதியும் நீக்கிஇருப்பன 18 மாதமாம். வடவாரிய மன்னர் கனகவிசயரைப் போரில் 18 நாழிகையிலேயே வென்றானெனத் தெரிவதால், சண்டையினால் இடையிட்டு நாட்கள் சென்றனவெனல் முடியாது. ஆனால் அவன் சண்டையை யெதிர்பார்த்துச் சில நாட்கள் இருந்திருக்கலாம்: அதற்கு அதிகமாயின் ஒரு மாதமே சென்றிருக்கும். இதனையும் நீக்கினால் 17 மாதங்களுள. இவைகளே சேரன் நீலகிரியிலிருந்து கங்கையின் வடகரைசேரச் சென்றகாலமாம். இவன் மிகப்பெரிய சேனையோடும் சென்றதால் இத்தனை மாதங்கள் சென்றிருக்கவேண்டும். கங்கைத் தென்கரையிலிருந்து திரும்பி நீலகிரிவர 17 மாதங்களாம், அதிலிருந்து வஞ்சிவரை யுள்ளவழி முற்கூறியதிலிருந்து ஐந்திலொன்றாகையால் அதற்கு 3½ மாதங்களாம். ஆகத்திரும்பிவரச் சென்றன 20½ மாதங்களாம். இதனால் சேரன் செங்குட்டுவன் வஞ்சியிலிருந்து புறப்பட்டு இமயஞ்சென்றுதிரும்பிவரச் சென்றன 52½ (32+20½) மாதங்களாம். அவன் வஞ்சிவந்தது மதுரை தீப்பட்டதிலிருந்து 55-வது மாதத்திலாம். அது 4 வருஷங்களும் 6½ மாதங்களுமாம்.

செங்குட்டுவன் கங்கைக்கரைசேர்தற்கு அதிகநாட்களே சென்றிருக்கும்; ஏனென்றால் வழிசெய்தற்குக் காடுகளை வெட்டிக்கொண்டு



போகவேண்டியதிருந்திருக்கும். ஆனால் திரும்பவருவதற்கு எனக்
போல் அதிக நாள் சென்றிராது என்று சிலர் சொல்லலாம். விசய
அது அவ்வாறில்லை. என்னை? கரிகாற் சோழனும் நெடுஞ்செழியனும் பந்த
இமயமலைவரை பெரும்படையோடு சென்று வெற்றிபெற்றிருக்கிறார்களெனத் தெரிவதாலும், செங்குட்டுவனும் முன்னொருமுறை பெரும் படையோடு சென்று ஆரியமன்னரை வென்றானெனத் தெரிதலாலும் வழி அப்பொழுது செம்மையாகவே யிருந்திருக்கவேண்டும். சிறிது சரியில்லாதிருந்திருக்கலாமெனக் கொள்வோமாயினும் அவன் நீலகிரியிற்றங்கியிருந்தபொழுது ஏவலாளரையனுப்பிச் சரிப்படுத்தச் செய்திருப்பன். செங்குட்டுவன் முன்னொருமுறை கங்கைக்கரையில் ஆரிய மன்னரைவென்றமை, (சிலப் XXV-156-164)

"கொங்கணர்கலிங்கர்கொடுங்கருநாடர்
பங்களர்கங்கர்பல்வேற்கட்டியர்
வடவாரியரொடுவண்டமிழ்மயக்கத்துன்
கடமலைவேட்டமென்கட்புலம்பிரியாது
கங்கைப்பேரியாற்றுக்கடும்புனனீத்த
மெங்கோமகளையாட்டியவந்நா
ளாரியமன்னரீரைஞ்ஞூற்றுவர்க்
கொருநீயாகியசெருவெங்கோலங்
கண்விழித்துக்கண்டதகடுங்கட்கூற்றம்",

என்றும், (சிலப் XXVIII-120-121.)

"உடன்றுமேல்வந்தவாரியமன்னரைக்
கடும்புனற்கங்கைப்பேரியாற்றுவென்றோய்,"

என்றும், (சிலப் XXIX) "கொங்கர்செங்களம்வேட்டுக் கங்கைப்பேரியாற்றுக்கரைபோகியசெங்குட்டுவன்," என்றும் வருகிறவடிகளிலிருந்து நன்கறியலாம்.

இனி, சேரன் வஞ்சி சேர்ந்த சின்னாட்களிலேயே சோழபாண்டியர் காணும்படியனுப்பிய கனகவிசயரும், அவர்களைக்கொண்டு சென்ற சேனைத்தலைவனும், மாடலனும் வஞ்சி புகுந்தனர். சோழபாண்டியர் தன்னை மதியாததைக் கேட்ட சேரன் வெகுண்டனனாக, மாடலன் அவனுடைய வெகுளித்தீயைத்தணித்து, (சிலப் XXVIII-120-132),

"வையங்காவல்பூண்டநின்னல்யாண்
டையைந்திரட்டிசென்றதற்பின்னு
மறக்களவேள்விசெய்யாதியாங்கணு
மறக்களவேள்விசெய்வோயாயினை," என்றும் (அடி 157-158) "செங்கோல் வேந்தே நரைமுதிர் யாக்கை நீயுங்கண்டனை," என்றும், (அடி177-178)

"அருமறைமருங்கினரசர்க்கோங்கிய
பெருநல்வேள்விநீசெய்யல்வேண்டும்,"

என்றும் கூறுகிறான். இதிலிருந்து சேரன் செங்குட்டுவன் பட்டத்திற்குவந்து ஐம்பதியாண்டுகளாயினவென வறியலாம். அவ்வைம்பது அவன்வயதாகாதோவெனின், ஆகாது. என்னை? அவன் நரைமுதிர்யாக்கையுடையவனாயிருந்தானாகையால். மேலும் பட்டத்திற்கு வருமுன் அறக்களவேள்வி செய்யமுடியாதாகையாலும் "நீ இதுவரை ஆண்ட 50 யாண்டுகளிலும் மறக்களவேள்வியே செய்வோயாயினை" யென மாடலன் கூறுதலாலும் வயதென்பது பொருந்தாது.

அவ்வாறு மாடலனால் இராயசூயம் செய்யத் தூண்டப்பட்ட சேரன் (சிலப் XXVIII-225) "பால்பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து" நன்கு உருவமையச்செதுக்கிய கண்ணகிச்சிலையைப் பிரதிட்டை செய்தான். பின் நித்திய பூசையும் திருவிழாவும் நடத்தும்படி கட்டளையிட்டு அங்கேயிருந்தான். அவ்வாறிருந்தவன் தான்செய்யப்போகும்வேள்வி மற்றையவரசர்கள் திறைகொண்டே தொடங்கற்பாற்றாகையால், அன்னார் திறைபெறலானான். அப்படித்திறைபெறுதற்குக் கண்ணகிகோட்டத்திருக்கும்போது தேவந்தியு மடித்தோழியுங் காவற்பெண்டும் அங்கே கண்ணகியைக் காணவருகின்றனர். இவை (சிலப் XXIX) "தடமுலைப் பூசலாட்டியைக் கடவுண் மங்கலஞ் செய்த பின்னாட் கண்ணகிதன் கோட்டத்து மன்னரசர் திறைகேட்புழி காவற்பெண்டு மடித்தோழியுங் கடவுட் சாத்தனுடனுறைந்த தேவந்திகையுமுடன்கூடிச்சேயிழையைக்காண்டுமென்று மதுரைமாநகர்புகுந்து முதிராமுலைப் பூசல்கேட்டாங் கடைக்கலமிழந்துயிரிழந்த விடைக்குலமகளிடமெய்தி யையையவண்மகளோடும் வையையொருவழிக் கொண்டு மாமலைமீமிசையேறிக் கோமகடன்கோயில்புக்கு நங்கைக்



குச்சிறப்புயர்ந்த செங்குட்டுவற்குத் திறமுரைப்பார்மன்," எனக் காணப்படுமடிகளான் நன்கு விளங்கும். கங்கை சென்று கனகவிசயருடன் திரும்பிய மாடலமறையோன் காவிரிப்பூம் பட்டினத்துக்குவந்த காலத்துக் கண்ணகி பிரதிட்டையைக் கேள்விபுற்று அதனைக்காணவே தேவந்தி முதலியோர் வந்தவராவர். அவர்கள் வரும் வழியில் மதுரையடைந்து அங்குள்ளவர்களிடம் மதுரை யெரியுண்டதையும் நன்கு உசாவியறிந்து மாதரிமகள் ஐயையையுமுடன்கூட்டிக்கொண்டு கண்ணகிதன் கோட்டமுறுகின்றனர்.

கங்கைக்கரையிற் சேரனிடம் மாடலன் மாதவிதுறவெய்தியதைக் கூறுகிறான். அதைக்கூறும்பொழுது, மாதவி நற்றாயை நோக்கி, "நான் நற்றிறம்படரக்கடவேன். மணிமேகலையைத் தீவினைசையர் கோலங் காணுதொழிக" வெனச் சொல்லித் துறந்தாளெனவுங் கூறுகிறான். இதிலிருந்து அப்பொழுது மணிமேகலை யாதுமறியாத சிறுபெண்ணாவளெனவறியலாம். பின் தேவந்தி சேரனிடம், "மணிமேகலை தகுந்த பருவமடைந்ததுகண்ட நற்றாய் யாதுசெய்வதென் மாதவியிடங்கேட்க அவள் மணிமேகலையைக் கோதைத்தாமம் குழலொடுகளைந்து துறவு பூணச்செய்தா" ளெனக் கூறுதலால் கண்ணகிபிரதிட்டைநடந்தபொழுது மணிமேகலை மடந்தையாய்த் துறவுபூண்டிருந்தாளென்பது பெறப்படும். இது அடித்தோழியரற்றில், "மணிமேகலை துறவுங் கேட்டாயோதோழி" யெனவருமடியால் தெளிவாகும், மாடலன் மதுரை யெரியுண்டதும் கண்ணகி மாண்டதுஞ் சொல்லக்கேட்டே மாதவிதுறந்தாளென்பது (சிலப், XXVIII-88 & 89) "மைந்தற்குற்றது மடந்தைக்குற்றதுஞ் செங்கோல்வேந்தற் குற்றதுங்கேட்டு" என்றும், அவ்வடித்தோழியரற்றில் (சிலப் XXIX)

"காதலன்றன்வீவுங்காதலிநீபட்டதுவு
மேதிலார்தாங்கூறுமேச்சுரையுங்கேட்டேங்கிப்
போதியின்கீழ்மாதவர்முன்புண்ணியதானம்புரிந்த
மாதவிதன்றுறவுங்கேட்டாயோதோழி" எனவும் வருமடிகளால் நன்கு விளங்கும்.

கண்ணகி யாவரையும் வாழ்த்துதலும், தேவந்தி தெய்வமுற்று மாடலனைக் கமண்டல நீரை அங்குவந்திருந்த மூன்று சிறுகுழந்தைகள் மீதும் தெளிக்கச்செய்கிறாள். அக்குழந்தைகள் தம் முற்பிறப்

புணர்ந்து கண்ணகியைக்குறித்துப் புலம்பினர். அங்கு நின்றோர் அவர்களைக் கண்ணகிநற்றாயும் கோவலன்நற்றாயும் மாதரியுமாகக் கண்டனர். கண்ணகிநற்றாயும் கோவலன்நற்றாயும் அரட்டன் என்னும் செட்டிக்கு இரட்டைப் பெண்களாகப் பிறந்திருந்தனர். மாதரி திருவனந்தபுரத்தில் சேடக்குடும்பி என்னும் அந்தணன் மகளாகப் பிறந்திருந்தாள். அக்குழந்தைகட்கு அப்பொழுது என்னவயதிருக்குமென் றாராய்வோமாயின், (சிலப் XXX-52) "சேடக்குடும்பியின் சிறுமக" ளென்றும், (ஷை 66-68)

"முதிராமகளிரைத்
தெளித்தனையாட்டினிச்சிறுகுறுமகளி
ரொளித்துப்பிறப்பினராகுவர்காணாய்"

என்றும், (ஷை 114) "குதலைச் செவ்வாய்க் குறுந்தொடிமகளிர்" எனவும் வருமடிகளால் இளஞ்சொல்லையுடைய 4, 5 வயதுக் குழந்தைகளாயிருக்கலா மெனவறியலாம். இனி முற்பிறப்பில் அவர்கள் மாண்டதெப்பொழுதென்று பார்ப்போம்.

மாதரி மதுரை யெரியுண்டவன்றிரவே உயிர்துறந்தாளென்பது முன்னர்க் காட்டப்பட்டது. அதற்கு இரண்டுமாதங்களில் குமரியாடி மாடலன் மதுரைவந்தவனாவான். பின்னுமிரண்டுமாதங்களில் புகாரடைந்திருப்பான். மற்றுமிரண்டொருமாதங்களில் கண்ணகிநற்றாயும் கோவலன்நற்றாயும் மாண்டவராவர். ஆகலின் மதுரை யெரியுண்ட 5, 6 மாதங்களில் அன்னார் மாண்டனரென வறிகின்றோம். இதனால் அப்பொழுது அவ்விரட்டைக் குழந்தைகட்கு 4 அல்லது $4\frac{1}{2}$ வயதும், சேடக்குடும்பியின் மகளுக்கு $4\frac{1}{2}$ அல்லது 5 வயது மிருக்க வேண்டும்.

முற்காட்டியபடி மதுரை யெரியுண்டு நான்கு வருஷங்களும் ஆறரைமாதங்களுமாக, செங்குட்டுவன் வஞ்சிவந்தவன் அதிலிருந்து ஒரு மாதத்தில் கண்ணகியைப் பிரதிட்டித்தான். அது பங்குனிமாதமெனக. அவ்வாறு மாதரிமாண்டு 4-வருஷங்கள் சென்று 8வது மாதத்தில் கண்ணகி பிரதிட்டை நடந்ததாக அதன் பின்னரே மேற்குறித்த செய்திகள் நடந்ததாம். (சிலப் XXX-157-104),



"அருஞ்சிறைநீங்கிய ஆரியமன்னரும்
பெருஞ்சிறைக்கோட்டம்பிரிந்தமன்னரும்
குடகக்கொங்கருமாளுவவேந்தருங்
கடல்சூழிலங்கைக்கயவாகுவேந்தனு
மெந்நாட்டாங்கணிமையவரம்பனி
னன்னாட்செய்தநாளணிவேள்வியுள்
வந்தீகென்றேவணங்கினர்வேண்டத்
தந்தேன்வரமென்றெழுந்ததோர்குரல்,"

என்றவடிகளால் பலவரசர் கண்ணகியைப் பணிந்து தங்களுக்கருளுமாறு வேண்டினரெனவும் அவர்களுள் இலங்கைமன்னன் கயவாகுவுமொருவன் எனவுமறியலாம். உரைபெறுகட்டுரையில் "அரந்தை கெடுத்துவரந்தருமிவளென, ஆடித்திங்களகவையினாங்கோர், பாடிவிழாக்கோள் பன்முறையெடுப்ப" என வருவதால், அவன் உடனே இலங்கை சென்று வந்தவாடியில் கண்ணகியை ஆங்குப் பிரதிட்டித்து வணங்கினனெனவுமறியலாம். குடகக் கொங்கரு மாளுவ வேந்தரும் சேரனைக் கண்டு கண்ணகியை வணங்கி இராயசூய யாகத்தையும் பார்த்துவிட்டுப் போகவந்தவராவர். இனி இக்குறிப்புக்களைக்கொண்டு சிலப்பதிகார காலத்தை யாராய்வோம்.

சிலப்பதிகாரகாலத்திற்குக் கணிதக்குறிப்பெழுதியோர் மூவர். (1) உரையாசிரியர் அடியார்க்குநல்லார் இன்னவாண்டில் நடந்ததெனக் குறியாது இன்னமாதம் இன்னதேதி இது நடந்ததெனக்குறிக்கின்றார். ஆனால் மதுரை யெரியுண்டதுமட்டும் இன்னதேதி யெனத் தெரியவில்லை; ஏனெனில் அப்பிரிவிற்கு அவர் உரை கிடைக்கவில்லை. ஆனால் இவர் தேதிமுதற் கணித்துக்கூறுபவர் ஆண்டின்னதெனக்குறியாமைக்குக் காரணந் தெரிந்திலது. (2) திவான் பகதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் கி. பி. 756-ல் மதுரை யெரியுண்டதெனவும், அவ்வாண்டில் இன்னமாதம் இன்னதேதி இன்னது நடந்ததெனவுங் குறிக்கின்றார்கள், மேலும் உரையாசிரியர் கூறுவதையும் தங்கள் குறிப்போடு பொருத்த முயலுகின்றார்கள். அத்துடன் மணிமேகலைக் கதையும் கி. பி. 771-ல் நடந்ததென்கின்றார்கள். (3) திருவனந்தை ஹைகோர்ட் வக்கீல் கே. ஜி. சங்கரையரவர்கள் கி. பி. 157-ல் தான் மதுரை யெரியுண்டது, அவ்வாண்டில் இன்னமாதம் இன்னதேதி இன்னது நடந்ததென்கின்றார்.

கள். அத்துடன் மணிமேகலைக் கதையும் கி. பி. 162-ல் தான் நடந்ததாமென முடிவுகாட்டுகிறார்கள். முதலில் உரையாசிரியர் கூறுவனவற்றை யாராய்வோம்.

“பங்குனி 29-ல் வித்தியாதரநகரில் காமவிழவு சித்திரைநக்ஷத்திரத்து முடிந்தது. சித்திரைத்திங்கட்புகுதிநாள் சோதி, திதி மூன்றாம் பக்கம், வாரம் ஞாயிறு சித்திரை 28உ சனி, பூரணை, சித்திரை. வைகாசி 28உ பூர்வபக்கத்திரயோதசி, திங்கள், அனுஷம், அன்று கடலாட்டு. வைகாசி 29உ செவ்வாய், கேட்டை, 14-ம் திதி. அன்று மாலையில் கண்ணகியைச் சேர்ந்து விடியுமுன் நாசயோகத்து அவளுடன் மதுரை நோக்கி நடந்தான்.” இவைகளே அடியார்க்கு நல்லார் குறிப்பன. பங்குனி 29ல் சித்திரையானால் சித்திரைப்புகுதிநாள் சோதியாகாதாகையினாலும் சித்திரைத்திங்கட்புகுதிநாள் சோதியாயிருக்க 28ந்தேதி சித்திரையாவதின்றாகையினாலும், சித்திரைத் திங்களில் சோதியன்று திதி மூன்றாம்பக்கமாகாதாகையினாலும், சித்திரை 28ம் தேதி சனியன்று பூரணையாக அதற்கு 31வது நாள் வைகாசி 28 திங்களன்று பூர்வபக்கத்திரயோதசியாயிராதாகையினாலும், என்றைக்குக் கொடியேறுகிறதோ அன்றே முதற்றிருநாளெனக் கொள்ளும் வழக்கப்படி 28 நாள் விழாநடந்து 29-வது நாள் வைகாசி 26ந் தேதி சனியன்று கொடியிறங்கியிருக்கவேண்டுமாகையால் வைகாசி 27 ஞாயிறன்று கொடியிறங்கிற்றெனல் பொருந்தாதாகையினாலும், கொடியேறியநாளையும் இறங்கியநாளையும் தவிர்த்து 28 நாள் விழா நடந்ததெனக்கொண்டு வைகாசி 27ல் கொடியிறங்கி 28உ திங்களன்று அனுஷத்தில் நாட்கடலாட்டு நடந்ததெனக் கொண்டாலும் நூலில் கடலாடியவன்றிரவே விடியுமுன் கோவலன் பயணமாயினனெனத் தெளிவாகக்கூறியிருக்க நாசயோகமெனக் காட்டுதற்பொருட்டுக் கடலாடிய மறுநாள் வைகாசி 29உ செவ்வாயன்று அனுஷத்தில் பயணமாயினனெனல் ஒருவாற்றானும் பொருந்தாதாகையினாலும் இச்சோதிடக் குறிப்புகள் ஒப்புந்தகையனவல்ல.

திவான் பகதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் எழுதுகிறபடி அவர்கள் குறிப்பும் உரையாசிரியர் குறிப்பும் ஒன்றோடொன்று பொருந்துமாறில்லை எனவும், மதுரை யெரியுண்ட நாளைக்கு அவர்கள் கொடுக்கும் கணிதம் முற்றிலும் பிழையெனவும் கடைச்சங்ககால



மெனத் தலைப்பிட்டுச் செந்தமிழில் வந்த வியாசத்தில் திருவனந்தை ஹைகோர்ட் வக்கீல் கே. ஜி. சங்கரையரவர்கள் காட்டியுள்ளார்கள். மேலும் அவ்வாண்டில் ஆடிமாதம் 3 தேதி (ஜூன்மீ 25உ வெள்ளியன்றாவது பொருந்துமாவென நோக்கினாலும் அன்று கிருஷ்ணாஷ்டமியேயாயினும் ரேவதி 19நா-20-வி வரையிருந்து அதன்மேல் அசுவதியாம் ஆகையால் அவ்வாண்டு சிலப்பதிகாரக் கணிதக் குறிப்பிற்கு ஒருவாற்றானும் பொருந்தாதாம். அவர்கள் மணிமேகலை காலத்தையும் குறித்தார்களாகையால் அதனைப் பின்னராராய்வோம். இனி ஐயரவர்கள் குறிப்பையாராய்வோம்.

ஐயரவர்கள் முடிபுகள் பின்வருவன:—

1. மதுரை யெரியுண்டது நள்ளிருளாகலின் (சிலப்-பதிகம் 41-3) அந்நள்ளிருளில் பரணியும் 8-ம் திதியும் சேர்ந்திருத்தல் வேண்டும். இன்னும், அரும்பதவுரையாசிரியர் “அழல்சேர்குட்டம்” என்பதற்கு அதன்பொருளாகிய கிருத்திகையென்றெழுதாது “பரணி கார்த்திகை” யென்றெழுதியதை நோக்குங்கால் பதப்பொருளை விசேஷமாகக் கவனியாது உண்மையைக் கவனித்து எழுதுகின்றாரென்றேற்படு மாகலின் நள்ளிருட் சமயத்துப் பரணியும் 8-ம் திதியும் நிச்சயமாயிருந்து தீர வேண்டும் என்று பிள்ளையவர்கள் சொல்லுகிறார்கள்.

2. நூலுட் கூறப்பட்டவைகளை மட்டுமெடுத்துக்கொண்டால் அவைகளுக்குப் பொருத்தமான காலம் 2-ம் நூற்றாண்டில் மட்டும், 11 வருஷங்கள் கிடைக்கின்றன. அவைகள் கி. பி. 100, 103, 107, 117, 130, 134, 144, 157, 171, 188, 198.

3. கஜபாகு கி. பி. 154—187ல் ஆண்டான். கி. பி. 100 முதல் 144-முடியவுள்ள காலமும் கி. பி. 188, 198 இவ்விரண்டு வருஷங்களும் கஜபாகுவின் ஆட்சிக்காலத்திற்குப் புறம்பாகவுள்ளனவாதலின் அவைகளை நீக்கினால், கி. பி. 157, 171 ஆகிய இரண்டே வருஷங்கள் எஞ்சுகின்றன. இவ்விரண்டினுள் எதைக்கைக்கொள்வோமென்பதற்கு, சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலுங் கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்களைப் பரிசீலனை செய்யவேண்டும்.

4. கண்ணகி பிரதிஷ்டை சமயத்து மணிமேகலைக்கு வயது 14க்குக் குறைந்திருக்க முடியாதென்பதும் அவள் மணிபல்லவத்திற்குச்

சென்றகாலத்து அவளுக்கு வயது 18க்கு மேற்பட்டிருக்க முடியா தென்பதும் ஊகித்தல் கூடும். ஆகவே இவ்விரு செய்திகட்கு மிடைப் பட்டகாலம் 4 வருஷங்கட்கு மேற்பட்டிராதென்பது தெளியக்கிடக் கின்றது.

5. ஆகவே கோவலன்மரணத்திலிருந்து மணிமேகலைநூலாரம் பத்திற் கூறப்பட்ட செய்திகள்வரை 7-வருஷங்கட்கு மேற்படாது என்றேற்படுகிறது.

6. இரண்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கி. பி. 162, 170, 181, 189, 200 இந்த வருஷங்களிலேயே வைகாசிவிசாகம் முதன் மூன்று நாள்களுக்குள் வருகின்றது. கி. பி. 157 அல்லது 171-வதி லிருந்து ஏழுவருஷங்கட் குட்பட்ட ஒருவருஷத்தை மேற்குறித்த வரு ஷங்களினின்றும் தெரிந்தெடுக்கவேண்டும். கி. பி. 162 என்ற ஒரு வருஷந்தான் பொருத்த முடையதாயிருக்கின்றது. இதனோடொத் துச் சிலப்பதிகாரச்செய்திநிகழ்ந்தகாலமாயேற்படுவது கி. பி. 157.

7. மணிமேகலைநூலிற் கூறப்பட்ட சரிதம் சிலப்பதிகாரச் சரி தத்திற்குப்பின் நிகழ்ந்தபோதிலும் சிலப்பதிகாரத்திற்கு முந்தியநூல் மணிமேகலை. ஏனெனின், இளங்கோவடிகள் சிலப்பதிகாரமியற்றி முடிந்தவுடன் மணிமேகலை துறவினையும் பாடுதற்குவிருப்பமுளரென்று சாத்தனாரிடஞ் சொல்ல அதற்குச் சாத்தனார் தாம் முன்னரே அதனை இயற்றி விட்டதாய்ச் சொல்லுதலின், ஒருவர் முன்னர் மற்றவர் அரங் கேற்றினர்.

8. வஞ்சியினீங்கி வடநாட்டு யாத்திரைசென்று சேர்தற்கு இடைநின்றகாலம் 'எண்ணான்குமதியம்' (சிலப் XXVII-149).

9. வில்லவன்கோதை வந்து சேர்தற்கு 3 அல்லது 4 மாதங் களுக்கு மேற்சென்றிராது, உடனே கண்ணகி பிரதிஷ்டையுமாயிற்று. ஆகையால் கோவலன்மரணத்திற்கும் கண்ணகி பிரதிஷ்டைக்கும் இடைநின்ற காலம் 3-வருஷங்களே என்றது பெறப்படும். மேல்வரும் XXIX-ம் காதையிற் கூறப்படுவனவற்றாலும் இது உறுதியடைகின் றது. (இது தேவந்தி முதலியோர் புகாரிலிருந்து வஞ்சி வந்தது.) இதிற் சொல்லியிருக்குஞ் செய்திகளுக்கு 3-வருஷங்களுக்குமேற் சென் றிராது. 32 மாதங்களென்று நூலகத்துக் காணப்படாமற் போயின்,



மிகக் குறைந்தகாலந்தான் சென்றிருக்கவேண்டுமென்று நினைக்கக் கூடிய விதத்திற்றான் செய்திகளுள்ளன.

10. கி. பி. 171-வது வருஷத்தில் கடலாட்டுச் சனியன்று வரு கிறது. ஆனால் அது அக்கிழமையில் நிகழாது.

11. மரணயோகமிருக்க வேண்டுமென்று நூல் கூறவில்லையாயி னும், மேற்கூறிய (கி. பி. 157) வைகாசி 25-ல் புறப்படுஞ் சமயத்து நக்ஷத்திரம் அநுஷமாயிருந்தாலும் அந்நாளில்திங்கட்கிழமையும் விசாக நக்ஷத்திரமுஞ் சேர்ந்து வருதலால் மரணயோக மிருக்கிறது. ஆடி மாதம் 29-ம் தேதி வெள்ளிக்கிழமை அன்று பரணி சூரியோதயத்திற் குப் பின் 58-நாழிகை 17 பலம் வரையிருந்தது. கிருஷ்ணாஷ்டமி சூரியோதயமாய் 47 நாழிகை 38 பலத்திற்குப் பின்றொடங்கிற்று. மதுரைத் தேவிக்கும் கண்ணகிக்கும் நிகழ்ந்த சம்பாஷணத்தை நள் ளிருளில் (அந்நாள் நடு இரவு வரைதான் இருட்டு இருக்கும்) சாத்த னார் கேட்டார். இதற்கு ஒருமணி நேரத்திற்குப்பின் பரணியும் அஷ் டமியுஞ் சேர்ந்திருந்த சமயத்து (சூரியோதயத்திற்குப் பின் 47 நாழி கை 38 பலத்துக்கும், 58 நாழிகை 17 பலத்துக்கும் இடையிட்ட சம யத்தில்) மதுரை யெரியுண்டதென்று நாம் ஊகிக்கலாம்.

12. கண்ணகி பிரதிஷ்டை காலத்தில் செங்குட்டுவனுக்கு 50 வயதாயிருந்ததென்று, "நின்னல் யாண்டையை ந்திரட்டி சென்றதிற் பின்னும்" என்ற மாடலன் மொழிகளால் (சிலப் XXVIII-129-130) உணரப்படும்.

மேற்கண்ட 12-ம் ஐயரவர்கள் வியாசத்திலிருந் தெடுக்கப்பட்ட குறிப்புகள். இவைகளுள் முதற்கூற்றில் ஐயரவர்கள் பரணியும் 8-ம் திதியும் சேர்ந்திருத்தல் வேண்டுமென்பது பிழை. மதுரை யெரியுண் டது கார்த்திகையும் 8-ம் திதியும் சேர்ந்த காலமேயென்பது முன்னரே நன்கு காட்டப்பட்டது. அவர்கள் அழல்சேர்குட்டம் என்பதற்கு அரும்பதவுரையாசிரியர் 'பரணிகார்த்திகை' யென வெழுதியுள்ளா ரென்பதும் பிழையாம். ஈதொன்றினாலேயே அவர்கள் முடிபு முற்றி னும் பிழையென நிலை நாட்டலாமெனினும் மற்றையவைகளையும் ஆராய்வோம். இரண்டாவது குறிப்பில் கண்டுள்ள பலவாண்டுகளில் கி. பி. 144-வது வருஷத்தைத் தவிர மற்றவை பொருந்தவில்லை,

மேலும் யான் கி. பி. 1-முதல் 200 வரை கணித்துப்பார்த்தும் பொருத்தமான வேறோராண்டையும் காணவில்லை.

மூன்றாவது குறிப்பில் அவர்கள் கயவாகு கி. பி. 154—187—ல் ஆண்டானென்கிறார்கள். அதைக் குறித்ததற்கு முதலில் புத்த நிர்வாணத்தைக் கி. மு. 489 எனத் தீர்மானிக்கிறார்கள். இதனைச்சற்று ஆராய்வோம்.

அசோக மன்னன் புத்தர் நிர்வாணமடைந்த 218-வது வருஷத்தில் பட்டத்திற்கு வந்தவன். இவனுக்கு முன் பிம்பசாரன் 25 வருஷங்களும், சந்திரகுப்தன் 24 வருஷங்களும் ஆண்டனரெனத் தெரிய வருகிறது. ஆகையால் சந்திரகுப்தன் புத்த நிர்வாணகாலத்திற்கு 168 (217-25+24 வருஷங்களுக்குப் பின் பட்டத்திற்கு வந்தவனும். உலகமெங்கும் புகழ்பெற்ற மகா அலெக்சாண்டர் இந்தியாவிற்குக் கி. மு. 327-ல் படையெடுத்துவந்து 325-ல் திரும்பியவனும், அவன் புறப்பட்டுப் போனபொழுது தான் சந்திரகுப்தன் பட்டத்திற்கு வந்தவனாவான் ஏனென்றால் அவன்புறப்பட்டுப் போனவுடன் சந்திரகுப்தனால் கிரேக் 2-சேனாபதிகள் இந்தியாவில் கொல்லப்பட்டார்களெனக் கேள்விப்படுகிறான். ஆகையால் இதற்கு 168 வருஷங்களுக்குமுன் அதாவது கி. மு. 493 (325+168)ல் புத்தர் நிர்வாணமடைந்தவராவர். புத்த நிர்வாணகாலத்தை கி. மு. 477, 480, 483, 486, 483, 489 முதலிய பலவருஷங்களில் ஆம் என கெய்கர, ரிஸ்டேவிட்ஸ் முதலிய பல ஆசிரியர்களும் பல படை ஊகித்துச் சொல்லியிருக்க இவ்வாறு கி. மு. 493-ல் தான் புத்த நிர்வாணமென நிலைநாட்டிய தென்னையோவெனின் இது புத்தர் காலத்திய பலகணிதக் குறிப்புக்களுக்கும் பொருந்தியிருத்தலினாலும் மற்றைய வருஷங்களெல்லாம் அவ்வாறு பொருந்தாமையினாலுந்தான். மேலும் அவ்வாசிரியர்கள் புத்தநிர்வாணம் அவ்வருஷங்களுக்குச் சில வருஷங்கள் முன்னாகவாவது அல்லது பின்னாகவாவதிருக்கலாமென்கின்றனர். ஆகையால் பழைமையிற் குறித்துள்ள கணிதக் குறிப்புகளுக்குக் கி. மு. 493 பொருந்தியிருக்கும் விஷயத்தில் இதுவே புத்தர் நிர்வாண மடைந்தவாண்டென வறுதியிட்டுரைக்கலாம். புத்தர் நிர்வாண மடைந்தது வைகாசி மாதம் நிறைமதி செவ்வாய்க்கிழமையிரவு நடுயாமத்தாம். ஆகையால் அவ்வருஷத்து வைகாசித்திங்



களில் நிறைமதி செவ்வாயன்றாதல்வேண்டும், இவ்வாறு முற்கூறிய பலவாண்டுகளிலும் வரவில்லை. கி. மு. 483-ல் வைகாசி 27 செவ்வாயன்று 40 நாழிகைக்கு மேலும், 486ல் வைகாசி 31 செவ்வாயன்று 45 நாழிகைக்கு மேலும் பூரணைவருவதால் அவைகளை ஏகதேசமாகப் பொருந்தியதாகக்கொள்ளினும் மற்றைய குறிப்புக்கள் பொருந்தாமையினாலே இவை புத்தநிர்வாணமாகா. ஆனால் கலி 2609, கி. மு. 493 வைகாசி மாதத்தில் 19உ செவ்வாய்க்கிழமை சூரியஉதயத்து 2 நா-11 வி. க்கு மேல் பூரணைவந்து அன்றுமுழுவது மிருந்ததாம். அதற்கு ஈசான சகாப்தம் 148 ஆம். இது அக்காலத்து வழங்கிவந்ததாகும். இனி மற்றைய கணிதக்குறிப்புக்களைக் காட்டுதும்.

புத்தர் ஈசான சகாப்தம் 68-ல் வைகாசிமாதம் பூரணைகூடிய வெள்ளியன்று பிறந்தார். தமது 29-வது வயதில் ஈசானசகம் 96 வைகாசிமாதம் வெள்ளிக்கிழமையிரவு நிறைமதியில் வீடுதுறந்து காடு சென்றார். ஈசான சகம் 103 வைகாசித் திங்களில் பூரணை கூடிய புதன் கிழமையிரவு ஞானம்பெற்றார். ஈசானசகம் 107 ஆடிமாதம் சனிக்கிழமை சூரிய உதயத்தில் நிறைமதியில் புத்தருடைய தந்தையிறந்தார். இவைகளே நாம் ஆராயவேண்டிய கணிதக்குறிப்புக்கள்.

கி. மு. 573, ஈசானசகம் 68ல் வைகாசி 3ம் தேதி வெள்ளியன்று நிறைமதியாம். ஆகையால் அன்றே புத்தர் பிறந்தவராவர். கி. மு. 545, ஈசானசகம் 96ல் வைகாசி 24ம் தேதி வெள்ளியன்று பூரணையாம். ஆகையால் அன்றிரவே புத்தர் வீடுதுறந்து காடுசென்றது. கி. மு. 538, ஈசானசகம் 103 வைகாசி மாதம் 6ம் தேதி புதன்கிழமை பூரணையாம். ஆகையால் அன்றிரவே புத்தர் ஞானம்பெற்றவராவர். கி. மு. 534, ஈசானசகம் 107 ஆடிமாதம் 18ம் தேதி சனிக்கிழமையன்று பூரணையாம். ஆகையால் அன்று சூரியோதயத்திற்றான் புத்தருடைய தந்தை மாண்டது. இதிலிருந்து ஈசானசகமும் கி. மு. 641ல் தொடங்கியதாமெனவு மறியலாம். இவ்வாறு புத்தருடைய வாழ்நாளில் பலகாலத்துக் குறிக்கப்பட்ட பல கணிதக்குறிப்புக்களும் பொருந்தியிருத்தலை யினிது காணலாம். ஆகையால் புத்தர் நிர்வாணமடைந்தது கி. மு. 493 தான் எனத்தெளியலாம்.

இலங்கைச் சரிதங்களில் மகாவம்சத்திற்கு முந்தியது தீபவம்சம். அது புத்தர் நிர்வாணமடைந்த 642வது வருஷத்திலிருந்து 664 வரு

ஷங்கள்வரை கயவாகு மன்னன் இலங்கையை ஆண்டதாகக் கூறும். ஆகையால் (641—663)—493 கி. மு.=கி. பி. 148—170; இதுவே கயவாகு ஆண்டகாலம். கரிகாலசோழன் படையெடுத்துச்சென்று இலங்கையிலிருந்து 12000 சிங்களவர்களைப்பிடித்துவந்தானெனத் தெரிவதால் பதிலுக்குப்பதில் படையெடுக்க வெண்ணியிருந்த கயவாகு தான்பட்டத்திற்குவந்தவுடனே பெருஞ்சேனையோடும் சோணாடுவந்தவனாவான். ஆகையினாலே அவன் கி. பி. 148 அல்லது 149ல் தான் தென்னிந்தியா வந்திருக்கவேண்டும். இதிலிருந்து ஐயரவர்கள் புத்த நிர்வாணகாலமெனச் சொல்வதும் கயவாகுகாலமெனச் சொல்வதும் பிழையாமெனவறியலாம். மேலும் அவர்கள்குறிக்கும் காலம் சரியெனக்கொண்டாலும் மேற்கண்ட காரணத்தால் கயவாகு சோணாட்டுக்கு கி. பி. 154 அல்லது 155ல் வந்தவனாகவேண்டும். மதுரை யெரியுண்டதும் இதற்கு முன்னாகல் வேண்டும். ஆனால் அவர்களோ மதுரை யெரியுண்டதே கி. பி. 157 என்கிறார்கள். ஆகையால் மதுரை யெரியுண்டது கி. பி. 157 அல்லது 171 ஆகத்தானிருக்கவேண்டுமெனக் கொண்டதும் பிழையென்பது சொல்லாமலே விளங்கும். அவ்விரண்டு வருஷங்களுள் ஒன்றைத் தீர்மானித்தற்கு மணிமேகலைக்கதையையுமாராய்கிறார்கள். இது 4, 5, 6 வது குறிப்புகளிலாம். இதனைச்சற்றுக் கவனிப்போம்.

கோவல கண்ணகியரது முடிவை மாடலமறையோன் கூறக்கேட்டவுடனே மாதவி தான் துறவெய்துகிறதோடு தன் மகளையும் கணிகையர்கோலங்காணாதொழிக வென்கிறாள். தகுந்த பருவமடையுமட்டும் மணிமேகலை மாதவி நற்றாயுடனிருக்கிறாள். அவள் தகுந்த பருவமடைந்தவுடன் அவளை யாதுசெய்வதென நற்றாய் மாதவியிடம் கேட்க அவள் மணிமேகலையைக் கோதைத்தாமம் குழலொடுகளைந்து துறவியாக்குகிறாள். மாதவி துறவைச் சேரனிடம் கங்கைக்கரையில் மாடலனுரைத்தான். மணிமேகலை துறவைக் கண்ணகிபிரதிஷ்டைக்காலத்து அது காணவந்த தேவந்தி கூறினாள். இதுவே மாதவி மணிமேகலையைப் பற்றிச் சிலப்பதிகாரம் கூறுவது, இதற்கு முற்றிலும் மாறுபட்ட செய்திகளே மணிமேகலையிற் காணப்படுவது. ஆடிமாதத்தில் கோவலன்மாள அதை மாடலன் கூறக்கேட்டுத் துறவெய்தினாள் மாதவி, அவளுடனேயே மணிமேகலையும் வசித்தாள். அடுத்துவந்த சித்திரையில் இந்திர விழவிற்குக் கொடியேறிற்று. முதல் நாள் மாலை நடனத்துக்கு மாதவி



மணிமேகலை வரவில்லை. அதுகண்டு நகரத்தா ரேசினராக நற்றாய் தோழிமூலமாய் இவ்வாறு நகரத்தா ரேசுகின்றனர், ஆகையால் நீயும் நின்மகளும் ஆடலுக்குவரவேண்டுமென்று சொல்லியனுப்புகிறாள். இவ்வாறு காணப்படுதலினாலேயே முன்குறித்தபடி கோவலன் மாண்டமறு சித்திரையிலேயே மணிமேகலையிற்குறிக்கப்பட்ட செய்தி நடந்ததாகத் தெரிகிறது. இது நடந்தது மாதவிதுறவெய்திச் சிலவருஷங்கள் சென்ற பிறகென்றால் அது பொருந்தாது. ஏனென்றால் அவள் துறவெய்தியபொழுதே அவ்வேச்சுரை நிகழ்ந்திருக்கும், நற்றாயும் சொல்லியனுப்பியிருப்பாள்.

அப்பொழுது மணிமேகலையின் நிலையைக் கவனித்தால், அவள் மனம் உதயகுமாரனிடம் சென்றதாகத் தெரிவதனாலும், அவளை ஆசிரியர் பலவிடத்தும் "ஏந்திளவனமுலை மடந்தை" (மணி III-120) யென்றும், "வளரிள வனமுலை மடந்தை" (மணி IV-97) யென்றும் குறிப்பதாலும் அவளைப் பதினெட்டுவயதுப்பருவத்தினளென வெண்ணவேண்டியிருக்கிறது. அவ்வாறு பருவமடைந்தும் அவளாகத் துறந்தவளாகவுந் தெரியவில்லை. மாதவி அவளைத் துறப்பித்தாளெனவுந் தெரியவில்லை. மேலும் சிலப்பதிகாரத்துக் கூறுகிறபடி குழல்களைந்து மாதவி துறவியாயிருந்தாளென்றால் நற்றாய் அவளை நடனத்துக்கழைத்தாளெனல் பொருந்தாது. ஏனென்றால் முண்டிதக்கோலத்தள் நடனஞ்செய்து பயனில்லை. மாதவி குழல்களைந்திருந்ததை மணிமேகலை கூறவில்லை. அதற்கடுத்தவாண்டில் காஞ்சியில் மணிமேகலை தானே துறவெய்தினாளென்னும் அந்நூல். அதற்குள் கண்ணகிபிரதிஷ்டை நடந்து சிலவாண்டுகளானதாகவுந் தெரிகிறது. ஏனென்றால் காஞ்சி போகுமுன் மணிமேகலை வஞ்சியில் கண்ணகியை வணங்குகிறாளெனக் காணப்படுகிறது. இவ்வாறு காணப்படுவதால் கோவலன்மாண்ட இரண்டு வருஷங்களுக்குள் கண்ணகி பிரதிட்டையாய்ச் சிலவாண்டுகளும் சென்றிருக்க வேண்டுமென ஊகிக்கவேண்டியதிருக்கிறது. இவைகள் சிலப்பதிகாரம் கூறும் செய்திகளுக்கு முற்றிலும் மாறுபட்டுள்ளன.

இதற்கிடையில் சோழன்மகன் உதயகுமாரனது கொலையும் காவிரிப்பூம் பட்டினத்தைக் கடல்கொண்டதும் கேட்கப்படுகின்றன. கண்ணகி பிரதிட்டைக்குமுன் இச்செய்திகள் நடந்திருந்தால் இவை சிலப்பதிகாரத்துக் காணப்படவேண்டும். ஐயரவர்கள் வியாசத்திலிருந்து

யாம் மேலே குறித்துள்ள 7வது குறிப்பில் கண்டுள்ளபடி இளங்கோவடிகள் சாத்தனாரிடம் தாம் மணிமேகலைதுறவினையும் பாடும் விருப்புடையராகவிருந்தலைக்கூற அவர் தாம் அதை முன்னரே பாடிமுடித்துவிட்டதாகக் கூறுகின்றனர். இது செய்தி சிலப்பதிகார மணிமேகலைப் பாயிரங்களில் காணப்படவில்லை. உரையாசிரியர் அடியார்க்குநல்லார் மட்டும் இதனைச் சுட்டுகின்றார். அதன்படி இச்செய்திகள் சிலப்பதிகாரம் பாடிமுடிக்குமுன் நிகழ்ந்தவையானால் மிக முக்கியமான அவை அதிற் காணப்படாதது வியப்பே. இவ்விதமுள்ளது சிலப்பதிகாரத்திற்கும் மணிமேகலைக்குமுள்ள ஒற்றுமை. மேலும் மணிமேகலையிற் பலவிடத்தும், "இன்றேழ்நாளிலிந்நகர்மருங்கே," (மணி VII-23) என்றும், "இன்றேழ்நாளிலிடையிருள்யாமத்து," (மணி VII-106) என்றும், "வழுவறுதெய்வம்வாய்மையினுரைத்த, வெழுநாள்வந்ததென்மகள்வாராள்," (மணி XI-128, 129) என்றும் காணப்படும் செய்திக்கு முற்றிலும் மாறுபாடாக மணிமேகலை மணிபல்லவம்போன மறுநாளே தன் தாயையடைந்தாளெனக் காணப்படுகின்றது. மேலும் அவள் சென்ற ஏழாம் நாளே திரும்பினாளெனக் கொண்டாலும் அன்று பூரணையாகையால் இடையிருள்யாமமென்றது பிழையாம். மணிமேகலை மணிபல்லவம் சென்றபொழுது இடையிருள் யாமமாம். ஆனால் திரும்பி வரும்பொழுது பூரணை. கொடியேறியநாள் பூரணையையடுத்தே வருமாகையால் அதன் மறுநாள் இடையிருள் யாமமாகாது. கொடியேறிச் சிலநாட் கழித்தே மணிபல்லவம் போனதென்றால் அன்றுமாலையிற் சந்திரன் தோன்றினானென்றதால் கொடியேறி 20 நாட்களுக்கு மேற்சென்றிருத்தல் வேண்டும். 20 நாள் வரை ஊராரேச்சுரை நற்றாய் அறியாதிருந்திருக்கவும் முடியாது. அதை அவள் மாதவிக்குச் சொல்லியனுப்பாமலுமிராள். இவ்விதமுள்ளது மணிமேகலை நூல். ஆகையினாலே சிலப்பதிகாரத்துக்காணப்படும்சாத்தனார் மணிமேகலையாசிரியரன்று. அந்நூல் நடையே இதற்குத் தகுந்த சான்றாகும். திருவள்ளுவர்பேரானெழுந்த ஞானவெட்டிபோன்றது மணிமேகலை. அந்நூலாசிரியர் சிலப்பதிகாரமெழுதிய சிலநூற்றாண்டுகளுக்குப்பின்னிருந்தவராகையினாலே இவ்வாறு மாறுபட வெழுதினார். உண்மையிவ்வாறுள்ள தாகையால் சிலப்பதிகாரகாலத்தையாராயும்போது மணிமேகலையையுமுடனாராய்தல்தவறுமெனவறியலாம்.



இனி, 8, 9 குறிப்புக்களிலுள்ள விஷயங்கள் முற்றிலும் பிழையென முதலிலுள்ள சிலப்பதிகார சரிதவாராய்ச்சியால் நன்கறியலாம். அவர்கள் தேவந்தி முதலியோர் வஞ்சிக்குப் புகாரிலிருந்துவர 3 வருஷங்களாயினவென்கிறார்கள். இது பெரும் வியப்பே! மூன்று மாதங்களுக்கதிகம் அப்பயணத்திற்கு வேண்டாம். இவ்வாறு அவர்கள் 3 வருஷங்களென வெழுதியது மாடலன் முதன்முறை புகாரடைந்தபொழுது கண்ணகியின் முடிவைக் கூறவில்லையென்றும் அதனால் கண்ணகியைத்தேடிக் கண்டுபிடிக்கும்பொருட்டே தேவந்தி முதலியோர் புகார்விட்டுப் போந்தனரெனவும் பிழைபடக்கொண்டதனாலேயேயாம். பத்தாவது குறிப்பில் ஐயரவர்கள் கி. பி. 171ல் கடலாட்டுச் சனியன்று வருகிறபடியாலும் அது சனியன்று நிகழாதாகையினாலும் அவ்வாண்டில் சிலப்பதிகாரக்கதை நடந்ததில்லையென்கிறார்கள். இது பொருந்தாது. இதற்கு நூலாதாரமுமில்லை, வழக்கமுமில்லை. திருவிழாக்களில் நீராட்டு என்றுகணிதப்படி வருகிறதோ அன்றே அது என்னகிழமையாகவிருந்தாலும் நிகழும். இன்றும் சனியன்று விதிப்படி வருகிறகாலங்களில் கடலாட்டு திருச்செந்திலில் அன்றே நிகழ்வதை நாம் காண்கிறோம். ஏனெனில் இதுவே விதியும் வழக்கமும். இதற்குப் பிரதானமாவது நக்ஷத்திரமேயாம்; கிழமையன்று. ஆகையால் இவ்வாறு ஏதோ சொல்லிக் கி. பி. 171 வதாண்டை விலக்க அவர்கள் முயன்றுள்ளார்கள். சிலப்பதிகாரத்துக் கூறப்பட்டபடி ஆடிமாதத்துத் திதி நக்ஷத்திரங்கள் கூடாமைபற்றியே இவ்வாண்டு விலக்கப்படும். மேலும் நம்மாராய்ச்சியிலோ இவ்வாண்டு கயவாகு காலத்திற்குப் பின்னாலுமுள்ளது, இனி அவர்கள் கி. பி. 157ல் தான் மதுரை யெரியுண்டதெனக்கூறும் 11வது குறிப்பையாராய்வோம்.

சித்திரை மாதம் 27ந் தேதிக்கும் வைகாசிமாதம் 25ந் தேதிக்கும் அவர்கள் கணிதம் சரியே. ஆனால் அவர்கள் சொல்லுகிறபடி திங்கட்கிழமை அனுஷ நக்ஷத்திரமிவை பிரயாணத்திற்குப் பிரதிகூலமானவையன்று; அனுகூலமானவைகளே. மேலும் திவான்பகதூர் சுவாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் 4மணி நேரத்திற்குப்பின்வந்த நாசயோகத்தை அப்பொழுதாமென்று சொல்கிறார்களென் றெழுதிய ஐயரவர்கள் தாங்குறித்தபொழுது சித்தயோகமாயிருப்பினும் 23மணி நேரத்திற்கு முன்வந்த மரணயோகத்தைக் குறிக்கிறார்கள். ஆடிமாதம் 29க் தேதி

வெள்ளியன்று பரணி 58நா-17வி, கிருஷ்ணசப்தமி 47நா-38வி யென்பதில் திதி சரியே. உண்மையில் அன்று அசுவதி 1நா-28வி யிருந்தது. அதன்மேல் அன்றுமுழுதும் பரணியே. மேலும் மறுநாள் 6நா-58விக்கு மேல்தான் கார்த்திகை வருகிறது. அவர்கள் கணித்தபடியே அன்று இரவில் கார்த்திகை 1நா-43வி யிருந்ததெனக் கொள்ளினும் அன்று பரணியாகுமே யன்றிப் பரணிக்குமேல் கார்த்திகையாவதின்று. மேலும், மதுரை யெரியுண்டது கார்த்திகையிலென நூல்கூற இவர்கள் கணிதப்படி பரணியிலாம். ஆகையால் இவர்கள் கணிதக்குறிப்பு நூலுக்கு முற்றிலும் மாறுபட்டதாம். இது முன்னருங் காட்டப்பட்டது.

“மதுரை யெரியுண்டது நள்ளிருளாகலின் அந்நள்ளிருளில் பரணியும் 8ம் திதியும் சேர்ந்திருத்தல் வேண்டும்” என்று ஐயரவர்கள் எழுதுகிறார்கள். அவ்வாறு பார்த்தாலும் அந்நாளில் நடுயாமத்து அதாவது இரவு 15 நாழிகைக்கு பரணியும் 8ம் திதியும் அவர்கள் கணிதப்படி சேர்ந்திருக்கிறதாகவுங் காணவில்லை. அன்று 8ம் திதி 47நா-38விக்கே வருகிறது. அதாவது நடுயாமத்தின் பின் 2நா-38வி வரை கிருஷ்ண சப்தமியிருந்தது. இவ்வாறு நடுயாமத்தின் பின்வந்த அட்டமியில் மதுரை யெவ்வாறெரிந்ததாகுமோ? இன்னும் அன்று கிருஷ்ணசப்தமி நடுயாமத்தின் பின்னுமிருந்ததாக அன்று சந்திரன் 14 நாழிகைக்கே உதித்திருப்பான், ஆகையால் நடுயாமத்திருளில் மதுரைமாதெய்வம் கண்ணகியைக்கண்டுபேசியதென நூல் கூறுவது அந்நாளில் ஒருவாற்றானும் பொருந்தாது. மேலும் மதுரை யெரிந்துகொண்டிருக்கும் போது வெம்மையை யாற்றமுடியாதபடி மதுரைமாதெய்வம் கண்ணகி முன் தோன்றியதென நூல்கூற அவர்கள் அது தோன்றிப்பேசிய ஒரு மணிநேரத்திற்குப் பின்னரே மதுரைபிற்றீப்பற்றியதாமென்பது வியப்பேயாமன்றோ? 12வது குறிப்பிலுள்ளபடி அவ்வடியிற் குறித்தது செங்குட்டுவன் வயதல்ல, அவன் அரசாளத்தொடங்கிச்சென்ற ஆண்டேயாமென்பது மேலேகாட்டப்பட்டது. இவை நிற்க, கி. பி. 144 பொருந்துமாவென இனி ஆராய்வோம்.

அவ்வாண்டிற் சித்திரை மாதம் 21ந் தேதி வெள்ளிக்கிழமையன்று காவிரிப்பூம் பட்டினத்து இந்திரவிழாவிற்குக் கொடியேறிற்று. அன்று சித்திரை 53நா-10வி. பூர்வபக்கச் சதுர்த்தசி அன்று முழுதுமிருந்தது.



28 நாள் விழாநடந்ததாக வைகாசிமாதம் 17ந் தேதி வியாழனன்று விழா முடிந்ததாக 18ந்தேதி வெள்ளியன்று கொடியிறங்கியது. அன்று சித்திரை 12நா-10வி. பூர்வபக்கத்துவாதசி 30நா-57வி. வைகாசிமாதம் 19ம் தேதி சனியன்று கடலாட்டு நடந்தது. அன்று சுவாதி 16நா-17வி. திரயோதசி 34நா-4வி. அன்றே கோவலனுமாதவியுமூடிப் பிரிந்தனர். பிரிந்தகோவலன் உடனே தன்மனைவி கண்ணகியைக் கூட்டிக்கொண்டு பூர்வபக்கச் சதுர்த்தசியாகையால் விடியுமுன்னிருந்த விருட்டில் பிரயாணத்திற்கு ஆகாதவாரம் திதி நக்ஷத்திரங்களும் வாரசூலை முதலியனவும் கூடிய பொழுதில் ஒருவருமறியாது புறப்பட்டுத் தென்மேற்கிலுள்ள மதுரைநோக்கிப் போனான். விடியும்பொழுது மரணயோகமாம். அவ்வாண்டில் ஆடிமாதம் 25ம் தேதி வெள்ளியன்று பரணி 36நா-17வி. கிருஷ்ண அஷ்டமி 8நா-2வி. அன்று சூரியாஸ்தமனம் 31நாழிகைக்கு. அதன்மேல் $5\frac{1}{4}$ நாழிகைவரை பரணியுள்ளது. தன் கணவனைப்பிரிந்து அரசனையடைந்த கண்ணகி கோவலனைக் கள்வனல்லவென்று நிரூபித்து வஞ்சினங்கூறி அவ்வூரை மும்முறை வலம்வந்து உடன் ஊரை யெரியூட்டினளாகையால் அதுவரை சென்றது மேலேகாட்டியபடி 4, 5 நாழிகைகளேயாம். அத்தினத்துச் சூரியாஸ்தமனத்துக்கு 4, 5 நாழிகையின் பின் பரணியும் கார்த்திகையும் கூடுகின்றன. 8ம் திதியும் நடுயாமத்தின்பின்னும் 3 நாழிகை வரையிருந்தது. ஆகையால் அன்றே மதுரை தீப்பட்டதாகும். அன்றிரவே நடுயாமத்திருளில் மதுரைமாதெய்வம் கண்ணகியைக்கண்டுரையாடியது. அன்றே மாதரி தீப்புகுந்ததும்.

அதற்குப் பதினாலாம்நாள் ஆவணிமாதம் 4ம் தேதி வியாழனன்று பூர்வபக்கச் சப்தமியிற்றான் கண்ணகி தன் கணவனோடும் சேரநாட்டுச் செங்குன்றத்துத் தேவவிமானமூர்ந்து சென்றது. அது கேட்ட சேரன் செங்குட்டுவன் சிறிதும் தாமதியாது ஆவணிமாதம் 29ம் தேதி திங்கட்கிழமை பூர்வபக்கத் திருதியையன்றே பெருஞ்சேனையோடும் இமயமலைநோக்கிப் பயணமாயினன். அன்று துவிதியை 19நா-10வி. அஸ்தம் 26நா-37வி. அவன் அன்று காலையிலேயே சுபமுகூர்த்தத்தில் பயணமானவனாவான்.

அவ்வாறு பயணமானவன் வடவாரியவரசரைவென்று கற்கொண்டு திரும்பி வஞ்சிவந்து கண்ணகிபடப் பிரதிட்டை செய்யும்

வரை சென்றது முன்காட்டியபடி 4 வருஷங்களும் 7 மாதங்களுமாம். கண்ணகி பிரதிட்டை கி. பி. 149 பங்குனி மாதத்தாம். விழாச்செய்து கொண்டு கண்ணகிக்கோட்டத்திலிருப்புழி பலவரசர்கள் வணங்கவருகிறார்கள். அவர்களுள் இலங்கைமன்னன் கயவாகுவுமொருவன். கி. பி. 148ல் பட்டத்துக்குவந்த அவன் கி. பி. 149ல் சோழனை வென்று வஞ்சிவந்தான். அவன் அடுத்துவந்த ஆடியில் இலங்கையில் கண்ணகியைப் பிரதிட்டித்து வணங்கினான். கண்ணகி பிரதிட்டை நடக்கும்போது செங்குட்டுவன் பட்டத்திற்குவந்து 50 வருஷங்கள் சென்றனவாகையால் அவன் கி. பி. 99ல் பட்டத்துக்கு வந்தவனாவான். இனி இக்கடைச்சங்கம் எப்பொழுது ஆரம்பித்திருக்குமென்றாராய்வோம்.

கடைச்சங்கம் 1850 வருஷங்கள் இருந்தது. முடத்திருமாறன் முதலாக உக்கிரப்பெருவழுதியீறாகப் பாண்டியர் நாற்பத்தொன்பதின்மர் அக்காலத்தாண்டனர். ஆகையால் கி. மு. 1800ற்றில் இக்கடைச்சங்கம் ஆரம்பித்திருக்கவேண்டும். இதனால் கடைச்சங்கம் 1850 வருஷங்கள்வரை ஓங்கித் திகழ்ந்தது எனவும் அப்பொழுது பல பாவலர் பல அரியநூல்களை இயற்றினர் எனவும் நாம் நன்கறியலாம். மறைத்திருவன் சுவாமி விருதை சிவஞானயோகி அவர்களும் தமிழ்மொழியும் சிவநெறியும் என்ற நூலில் "கடைச்சங்கம் கி. மு. 1850 முதல் கி. பி. 10 வரையும் இருந்ததாய்க் குறிக்கப்படுகின்றது; கி. பி. 90 வரை இருந்ததாய்க் குறிப்பாருமுளர்" என்றெழுதியுள்ளார்கள். திருவன் M. S. பூர்ணலிங்கம்பிள்ளையவர்கள் B.A., L.T., யும் தமிழ்மொழி வரலாற்றில் (A Primer of Tamil Literature) கடைச்சங்கம் கி. பி. 100 வரை யிருந்ததென்று குறித்திருக்கிறார்கள். ஆகையால் கி. மு. 1800ல் ஆரம்பித்த கடைச்சங்கம் சிலப்பதிகாரப்பதிப்பில் கண்ட ஒரு தனிச்செய்யுளில் "இருந்தது ஆயிரத்துத் தொளாயிரத்தைம்பதுவருடமென்ப" என்றும் காணப்படுகிறதாகையால் கி. பி. முதல் நூற்றாண்டின் பிற்பகுதியிலாவது இரண்டாம் நூற்றாண்டின் முற்காலிலாவது முடிந்திருக்கவேண்டும். அதன் பின்னரே சிலப்பதிகாரக் கதை நடந்ததாகும். இதற்கு, சிலப்பதிகாரத்தில் அப்பொழுது கடைச்சங்கம் இருந்ததாகக் காணப்படாமையே சான்றாகும். ஆனால் அச்சங்கத்திருந்த புலவர் சீத்தலைச் சாத்தனாரே சிலப்பதிகாரக் கதையில் காணப்படுகிறாராகையால் கடைச்சங்கம் கலைந்த சிலவாண்டுகளின் பின்னர் சிலப்பதிகாரக்கதை நடந்ததாகும் என்பது நன்கு தெளியலாகும்.

இ. மூ. சுப்பிரமணியபிள்ளை

# தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்.

"செந்தமிழ்" தொகுதி-௧௯ பகுதி ௪-ல் ௱௧௧௯-ஆம்பக்கத்தொடர்ச்சி.

10. "மெய்யோடியையினுமுயிரியறிரியா"

பன்னீருயிர்களும் பதினெட்டு மெய்களுடன் இயைந்தாலும் அவ்வுயிர்கட்குளவாம் இயல்பிற்றிரியா என்க.

உயிர்கட்கு இயல் குறி னெடிலாய் வேற்றுமைகொண்டு இயல்பாயும் நீண்டனவாயும் ஒலிப்பனவாம்.

மெய்கட்கு இயல் அரையளவினவாய்த் தனித்திருத்தலும் உயிருடன் இயைந்தவழி அவை ஒழிவனவும் பிறவுமாம்.

அவ்வுயிர்கள் மெய்யோடு இயைவது "புள்ளியில்லா எல்லாமெய்யும் என்றவிதிப்படி வடிவுதிரிந்துயிர்த்து, மெய்யின் வழியது" என்ற விதிப்படி ஒலிக்குமுறைமுதலியனவற்றைப் பெறுதல்.

உயிர் இயல்திரியா எனவே மெய்யியல் திரியும் என்பதூஉம் உயிர்க்கியல் திரியாதபொழுது வடிவுமுதலியன திரியும் என்பதூஉம் பெறுமவற்றாற் சற்றேனும் மெய்வடிவுதிரியா என்பது பெறுதுமோவெனின் அற்றன்று; ஒன்றியொன்று இயைவதனான் அவ்விரண்டும் வேற்றுமையுறுமன்றே! அவ்வாறுய அவைகளுள் மெய்க்கு வடிவுமுதலியவற்றுள் சிலமாறுபாடும் உயிர்க்கு வடிவுமுதலியவற்றுள் அறவே மாறுபாடும் பெறும் என்க. இவைகருதியன்றோ இயையினும் என்றார்.

இயல்திரிதலும் உயிர்க்குச் சிலமாறுபாடும் மெய்க்குப் பலமாறுபாடும் பெறாஉம் எனவுங்கொள்க. அவ்வுயிர்கள் மெய்யின் இயைபால் தம்மளவு மிகுந்தும் குறைந்தும் மாறுபடாவெனக் காட்டற்கன்றே இயையினும் என்றார்.

இக்காரணங்களால் இயலிற்றிரியா அவ்வுயிர்கள் வடிவுகளிலும் ஒலிக்குமுறைமைகளிலும் தலைமையுறாஉம் செயல்களிலும் அம்மெய்களோடியைவதான் மாறுபடும் என்க.

உயிர்கட்கேமே தனித்து மொழியாம் ஆற்றலுடைமையின் மெய்களோடியையினும் உயிரியல் திரியா எனச்சிறப்பித்தும் அவை மெய்களின் இயைபால் வேறுபடுவன கருதி மெய்யோடெனத் தொடங்கியும் விளக்குவாராயினரென்க.

உயிரளவு கூறிவைத்தார் இச்சூத்திரத்தால் உயிர்மெய்க்களவு புலனுக்குக் கூறாது மேலே மெய்க்களவு கூறுவதுபற்றி உயிர் அளவே உயிர்மெய்க்களவாவதன்றி ஆண்டே மெய்யளவும் பெறுதென்பதூஉம் விளக்கியதென்க. அல்லதூஉம் உயிரளவு கூறிவந்தார் மெய்யளவு கூறியபின்னரே உயிர்மெய் அளவு கூறவேண்டும் ஆதலிற் குற்றமோவெனில் அற்றன்று; உயிரளவும் மெய்யளவும் இணைந்தவையே உயிர்மெய்யளவாமெனலன்றோ அவ்வாறு உரைக்கற்பாற்று. இவ்வாறு கூட்டுங்கால் அவ்வளவு மறைவதை ஆசிரியர் நச்சினார்க்கினியர் கூறிய உவமைமூலத்தானும் கண்டுகொள்க. இது வேறுவகையாகி மெய்யளவொழிந்து உயிரளவே பெற்று வருவதினானும், இனி உயிரளவு கூறுதல் ஒருவாறு முடித்தமையானும், அவ்வாறு பிற்கூறில் பொதுப்பட அவ்வளவு குறைந்ததோ எனப்பிறக்கும் ஐயம் அறவே நீக்கவேண்டினமையானும், ஆசிரியர் ஈண்டே இயைத்துப் போந்தாரென்க. இவையன்றியும் அவ்வளவை உய்த்துணரவைத்ததூஉம் நாம் எடுத்துக்காட்டியவைகளை வலியுறுத்தும் எனவும் கொள்க. இந்நுணுக்கமறியாதும் "அவ்வியனிலையுமேனை மூன்றே" என்பதில் இயல் என்றதற்கு ஆண்டமைந்த பொருள் அளவு எனலையும் ஓராதும் "மெய்யோடியையினும் என உயிர்மேல் வைத்துக் கூறியது அவ்வுயிரின் மாத்திரையே இதற்கு மாத்திரையாகக் கூறுகின்றமை நோக்கிப்போலும் என ஐயங்கொள்வாரும், உள்ளவைகளை விளக்காது ஒப்புத்தேடி விளக்குவார்போன்றாரும் ஆயினரென்க. இங்குக் காட்டியவை நன்னூலாரெங்குப் பெற வைத்தாரோ அறியேம்.

11. "மெய்யினளபேயரையெனமொழிப."

[மேற்கூறியவைகளான் மெய்க்களவில்லையோ, எனவும் அல்லதுண்டோ எனவும், உண்டேலெவ்வள வெனவும், அல்லதூஉம் எவ்வெவ்விடத்துண்டு எவ்வெவ்விடத்தில் எனவும் பிறக்கும் ஐயமகற்ற வேண்டி இச்சூத்திரம் வகுத்தார்.]



தனித்தனி ஒவ்வொரு மெய்யெழுத்தினளவே அரைமாத்திரையாகும் என்று கூறுவர் ஆசிரியரென்க. மேற்காட்டியபடி ஐயம் அகற்றவின் ஏகாரம் தேற்றம்.

12. "அவ்வியனிலையுமேனைமூன்றே."

சார்பிற்றோற்றத்தன அவ்வேனையனவாயினும் அளவுமுதலிய இயல்புகளில் அம்மெய்யினிலையினிற்பனவாம்.

அவ்வப்பெயர் கூறாது ஏனை என்றார் இயலான் அன்றி அவ்வகையுட் பிற ஒவ்வாமை கருதி என்க.

13. "அரையளவுகுறுகன்மகர முடைத்தே—
இசையிடனருகும் தெரியுங்காலை"

ஆராயும் காலத்து ஏனை மெய்களைப் போலவே அரைமாத்திரையுடைய மகரப்புள்ளி வேறோரெழுத்தொடு புணரும் இடத்தே சிறுபான்மையாய்த் தன் அரைமாத்திரையிற் குறுகுதலை உடைத்து என்க.

அரைக்கான் முதலிய மாத்திரைகளை ஈண்டாராய வேண்டியது இன்மையானே அரைமாத்திரையிற்குறுகுதல் கான்மாத்திரையே என ஓர்க.

இசை என்பதன் பொருளை ஒலியேஎனப் பொருள்கொண்டார் கூற்றை மெய்யெனநம்பித் தாம் வேறுவகைகாட்டுவார்போல அதனையே விளக்கிச் சிறப்படைய வேண்டுவாராதலின் பிறன்கோட் கூறலென்னும் உத்தி முதலியவைகளைப் புணர்ப்பாராயினரென்க. அவ்வாறாக்கினவர் "போன்ம். வரும்வளவன்" என்பனவற்றைப் புணர்ச்சியிடத்தே எனத்துணியாது பிறவற்றைமட்டும் துணிந்தமையாலே அவை பொருந்தாமையுணர்க.

14. "உட்பெறுபுள்ளியுருவாகும்மே."

வடிவின் மேலன்றி உள்ளே புள்ளிபெறுத யகரத்தோடு வேற்றுமை காணவேண்டி அப்பகரத்தின் வடிவினுள்ளே இணையும்படி பெறுகின்ற புள்ளியே மகரத்திற்கு உருவாகும் என்க (உ-ம்) ப்+oம.

இவ்வியலை நூன்மாபென்றதற்கேற்ப மகரம் அளவிற்குறுகும் என்றேகூறி மேலேமொழிமரபில் "ணகாரைமுன்னம்" என்னும் சூத்

திரத்தால் விளக்கிய இவ்வேது நோக்காது நன்னூலார் பதவியலில்வேறு பலகூறி மயங்கவைப்பர்.

உருவுட் புள்ளிபெறுவது மகரமாவதுபோலவே உருவுட் புள்ளி பெறாதது பகரமாமெனவும் உரைகொள்ள உபகாரப்படுத்தியதையும் கண்டுகொள்க. தனித்துப்புள்ளி பெறுமெனவே பிறர் கூறுவர்.

15. "மெய்யி னியற்கை புள்ளியொடு நிலையல்"

எடுத்துக்கூற இனிதாமாறு அகரத்தைக் கூட்டுவதற்கு முன்னரும் ஏனையுயிரோடு இயைவதற்கு முன்னரும் உள்ள மெய்யினது இயற்கைவடிவு புள்ளியொடுநிற்றலாமென்க. இக்காட்டிய உரையால், மெய்யின் இயற்கை புள்ளிபெறாது இருக்கும் எனவும் உயிர்மெய்யின் வேற்றுமைகளைக் காணவே புள்ளியமைந்ததெனவும் இவைபோன்ற பிறவும் தம்மறிவுவன்மையாலே குறிகூறுவார்போன்று வீணே இயைத்தார்கூற்றுக்கள் பொருந்தாவெனக் கண்டுகொள்க. அன்றியும் ஒப்புக்காட்டிய சூத்திரத்தில் இயக்கம் என்றதையும் ஈண்டமைந்த இயற்கை என்பதையும் வேற்றுமை காணாது மயங்கியுரைத்தமையும் கண்டுகொள்க. மெய்யினியற்கை இவ்வாறாகும்போது உயிர்மெய்க்குப் புள்ளியின்மை பெற்றாம்.

16. "எகர வொகரத் தியற்கையு மற்றே."

எகர ஒகரத்து இயற்கையும் அம்மெய்யைப்போலவே யாண்டும் புள்ளிபெறும் அத்தன்மைத்து. ஏகாரம் விகாரத்தாற்றொக்கது. உயிர் மெய்க்குப் புள்ளியின்மை கூறவே அவற்றுள் எகர ஒகரங்கள் மெய்யொடு புணரும்போது அம்மெய்க்குள்ள புள்ளி நீங்காது நிற்குமெனத் தெளிவுபடுத்தவன்றோ மெய்யினியற்கைகூறியதும் இதையுரைத்தாரென அறிக. இம்முறையை நன்னூலாரும் உரைகாரர்களும் மறந்தனர்போலும். இதற்குத் "தொல்லைவடிவின்" என நன்னூலார் சூத்திரித்தார். அச்சூத்திரத்திற்கு உரைவகுத்தார் அதன்கண்ணுள்ள ஆண்டு என்பதை ஆரியமொழிகளையும் பொதுமொழிகளையும் புணர்மொழிகளையும் அறிதற்பொருட்டுக் குற்றுகர இகரங்கட்குப் புள்ளியை யியைத்தாருளராதலின் சேர்த்தாரெனவும் பிறவற்றைப் பிறரும் கூறுமுகத்தாலே அச்சொற்போக்கின்வழுவை மறைப்பாராயினர்.



ஆண்டு' இவை புள்ளியெய்துமெனின் அது தொன்மைக்கின்மை வெளிப்படையாதலின் அவ்விருவகையார் கூற்றுக்களும் பொருந்தாமையுணர்க.

"புள்ளியில்லாவெல்லாமெய்யு
முருவுருவாகியகரமோடுயிர்த்தலும்
ஏனையுயிரோடுருவுதிரிந்துயிர்த்தலும்
ஆயீரியலவுயிர்த்தலாறே."

உயிர்மெய் ஆவதற்கும் சாரியை பெறுவதற்கும் உரிய எல்லா மெய்யெழுத்துக்களும் தமக்கியல்பாயமைந்த வடிவின்கண் உள்ள புள்ளியை இல்லாவடிவினவாகி அகரமோடுயிர்த்தலும், அவ்வடிவே திரிந்து ஏனை உயிர்களோடு உயிர்த்தலும் என உயிர்க்கு முறைமை அவ்விரண்டியல் பினையுடையனவாம்.

எல்லாம் என்ற சொற்போக்காலே சாரியையும் இயைத்தாம். உயிர்த்தலை யாண்டும் உரைத்தது வழுவோ எனின் ஆகாது. உயிர்த்தலை ஓரிடத்தே பெய்து ஓரேமுடிபாக்கின் அகரவியைபானுய மெய்க்கமைந்த ஓரேவடிவுபோலவே ஏனையுயிர் இயையும். மெய்யும் எனப் பொருள்படுவதனானே அவ்வாறு கூறினார் என்க. ஏகாரம் பிரிநிலை. செய்யுள்விகாரத்தாற்றொக்கது. நன்னூலார் இயைத்த "புள்ளி விட்டு" என்னும் சூத்திரத்தின் அமைதியைச் சற்றாராய்வாம். ஆண்டு அவ்வொடு புள்ளிவிட்டு எனவும் கவர்படுபொருள்படுமாறு கூறுகின்றார். [உயிரும் மெய்யும் இணைவதாலே உயிர்மெய் என்ற பெயரமைந்த அவ்வெழுத்தின் புள்ளிவிட்ட அவ்வடிவே அகர உயிர் இணைவதற்கு வடிவாகவும் அவ்வடிவின் பலதிரிபே ஏனையுயிர் இயைவதற்கு வடிவாகவும்கொண்டு மெய்யளவொழியப்பெற்று ஒலிக்குமுறைமைக்கொற்று முன்னாகவும் உயிர் பின்னாகவும் வரும்] எனப்பொருள்படும்படி சூத்திரிக்க எண்ணியவர் குறைபட்டனர். மேலும் அகர உயிர் ஏறியதும் மெய் புள்ளியிழப்பதையன்றி வேறு மாறுபாடின்றென்னு முகத்தாலே அகரம் வடிவொழிந்ததெனப் பெறுதுமாதலினானும் அவற்றோடு நில்லாது அவ்வகரமேறிய வடிவே பிறவுயிரேறத் திரியும் என்பதினானும் ஏனையுயிர் வடிவளபு புலனாகின்றது. ஆதலின் அதன்வடிவொழித்தெனச்சூத்திரித்தது தவறென்க. பின்னரும் இருவயிற் பெயரோடென்னும் ஆபாசத்தையுங் கண்டுகொள்க.

18. "மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே."

வரிவடிவாலும் ஒலிவடிவாலும் தனித்துத்தோன்றுகின்ற உயிரெழுத்தின் நிலைமையானது மெய்யெழுத்தோடு இயைந்தவழி அதன் வழித்தாகும் என்க.

அகரமுதலியன ஏறுவதினுனேஇலயயும் மெய்யெழுத்துக்களின் வடிவு வேறுபாடும், அப்பொழுது அவ்வுயிர், மூவ்வகை அமைந்த அம்மெய்களோடு இயைந்து பலபட ஒலிக்கும் ஒலிவேறுபாடும் கொள்வது மெய்வழித்தாலென வுணர்க.

முன்னர்ச் சூத்திரத்தில் "உருவுதிரிந்து" என்றதினுனே இவை பெறப்படவும் ஈண்டும் உரைதருவது எற்றிற்கெனில் இயம்புதும்; அச்சூத்திரம் உயிர்த்தலுக்கும் உருவுதிரிதலுக்கும் பொதுவாதலால் இச சூத்திரம் உருவினைமாத்திரம் ஒழிப்பது முறைமையாகாதாதலால் அல்லதூஉம் ஒலிக்கு முறைமைஈதென ஓர்ந்தார்க்கு வடிவின் முறைமையையும் ஓர்ந்துணரவைக்க வேண்டியது ஆசிரியர்கடன்.

இவ்விரண்டினையும் உணர்தற்கன்றே கேட்குநிலை என்னுது தோன்றுநிலை என்றது என்க.

இந்நுணுக்கமறியாத உரைகாரர் எல்லாம் தோன்றுநிலை என்றதை ஓசை நிற்கு முறைமையெனக் கொண்டதோடு உயிர், வன்மை முதலியனவே எய்து மென்றது பொருந்தாமை உணர்க.

இச்சூத்திரத்தாலும் உயிர்மெய்யொடு இயையுழீஇ அதன் வடிவை இழக்கும் என்பது புலனுகின்றது.

இவைகளை நன்னூலார் அறிவரேல் இணைக்கவாவது முயன்று சுருக்கிக்காட்டுவார்போன்று குறுக்கி இடர்ப்படுத்துவர்.

19. "வல்லெழுத்தென்ப கசடதபற."

க் ச் ட் த் ப் ற் என்னும் மெய்களை வல்லெழுத்துக்கள் என்று ஆசிரியர் கூறுவர்.

20. "மெல்லெழுத்தென்பஙஞணநமன."



ங் ஞ் ண் ந் ம் ன் என்னும் மெய்களை மெல்லெழுத்துக்கள் என்று ஆசிரியர் கூறுவர்.

21. "இடையெழுத்தென்பயரலவழள."

ய் ர் ல் வ் ழ் ள் என்னும் மெய்களை இடையெழுத்துக்கள் என்று ஆசிரியர் கூறுவர்.

மென்மைஇல்வழி வன்மை இன்மையும் வன்மை இல்வழி மென்மை இன்மையும் நேரும். இங்ஙனமாகவும் வன்மையை முன்னெடுத்தோதியது எவன் கருதியோவெனின்? அம்மென்மையை அதுவென்று வன்மையானதாலென்க.

வன்மையையும் மென்மையையும் ஓர்ந்தபின்னரே இடைமை அறியவேண்டுதலின் இடையில் வைக்கவேண்டியதைக் கடையில் அமைத்தார்.

இக்காட்டிய சூத்திரப்போக்கை அறியாத நன்னூலார் "வல்லினம் கசடதபற வெனவாறே" என்றே அம்மூன்றனையும் வகுத்தார். அவைகளால் அவ்வினம் ஆறெனப் பெறப்படுவது குற்றமெனக்கொண்ட அந்நூலுரைகாரர்கள் தமக்கு அறிந்தவாறே இனம் என்றதற்குப் பொருள் விரித்தார்கள். இது நன்னூலாருக்குக் கருத்தாயின் "கசடதபற வெனுமாறும் வல்லினம்." என்றே கூறி இருப்பர். ஏனெனில் அவர் தொல்காப்பியம் கற்ற ஒரு பெரும் புலவராதலின். ஆயின் அவர்கருத்துத்தான் யாதோவெனின் உரைக்குதும். ஒவ்வொருமெய்யும் உயிருடன்கூடிப் பன்னிரண்டாவதால் அவைகளை இனம் என்றார். அதுவும் பொருந்ாது. இவைகளை மட்டும் இனமெனக் காட்டியவர் உயிர்வருக்கங்களையும் அவ்வாறே காட்டாமையின்.

(தொடரும்)

K. S. நவநீதகிருஷ்ணபாரதி,
தலைமைத்தமிழ்ப்பண்டிதன்
ஸ்ரீராமநாதன்காலேஜ், சுன்னுகம், யாழ்ப்பாணம்.

19—7—1918.

உ

பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

## உலக கவி திலகரான மகா பண்டிதர்

# ஸ்ரீ ரவீந்த்ர நாத் தக்கோர்க்குக் கூறிய *வரவேற்பு வாழ்த்து.

பூவேந்து நான்முகனுர் ஆக்கியஇவ் வுலகில்எலாம்
பொலிவுற் ருேங்கிப்
பாவேந்தி ரியஞ்செயித்தோன், பாவேந்தர் பாவேய்ந்து
பரவப் பெற்ருேன்
மாவேந்தர் போற்றிசைப்ப, மன்னுயிர்கள்
மகிழவரு 'மகரிஷீச
தேவேந்த்ர நாததக்கோர் மாதவத்துச் செழுமுளையாத்
திகழு மேலோய். (க)

[பாவேந்திரியம்=பாப இந்திரியம்]

காரிருளைக் கடிந்தோட்டும் 'இரவி'யென மனஇருளைக்
கடிந்து யாண்டும்
சீரிய'இந் திர'னேபோல் மிளிர்ந்து,செந்நாத் தக்கோனுத்
திகழ்த லாலே
நேரிய'ர வீந்த்ரநாத் தக்கோர்'என் ருெருநாமம்
நிலவப் பெற்ருேய்
ஆரிய! நின் வரவெமக்கு நல்வரவா குகநீபல்
லாண்டு வாழி! (உ)

புவீந்திரராய்ப் பல்லுயிரும் தம்முயிர்போற் பயனெய்தப்
புரப்போர், ஞான
கவீந்திரராய் இருமைநலம் எவருமுறப் புரிந்திதயம்
களிப்போர், ஆன
துவீந்திரரும் "உலககவி திலகன்"எனும் துதிபுனையும்
தூய சில
ரவீந்திரநாத் தக்கோய்நின் புலமையினுல் யாவரையும்
ரமிக்கச் செய்வோய்! (ங)

[துவீந்திரர்=புவீந்திரரும், கவீந்திரரும்]

---

* இவ்வாழ்த்து மதுரைத் தமிழ்ப்பண்டிதர் கூட்டத்தாரது விருப்பின் படி தயாரிக்கப்பட்டு, அதனை இயற்றிய ஸ்ரீ ம. கோ. ஐயரால் "தக்கோர்" முன்னிலையிற் படிக்கப்பட்டது.



" 'மின் இரவி ஒளிபெற்ருன்!' 'நறியகொம்புத் தேன்இனிமை
விளங்கப் பெற்ற
தென்!' இமையோர் இமையாமை இறவாமை எய்தினர்என்! "
றெவர் வியப்பர் ?
மன்னருமா சறக்கற்ற மதிவலரும் ஒருங்குபுகழ்
மகிமை யார்ந்த
நின்னிகரில் நீ"நோபில் பரிசு"பெறின் வியப்பென்னே ?
நிகழ்த்து வாயே. (ச)

[நோபில் பரிசு=உலககவிதிலகர்க்கு நோபில் என்பவரால் கொடுபடும் 8000 பவுன்.]

அன்னியர்கள்-(சொற்செறிவு பொருட்பொலிவு வாய்ந்தொளிரும்
அரிய பேறு
மன்னியநம் கவிப்பெருமை மதப்பெருமை அறியாதார்)-
'மாகவீசன்'
என்னநினை ரவீந்திரநாத் தக்கோய்! தம் மனமார
ஏத்தல் என்னே!
முன்னையநம் பாரதமண் டலர்இருந்து நின்பெருமை
மொழியற் பாற்றே. (ரு)

[மண்டலர்=மகாஜனங்கள்]

ஞான்மிகு நின்பிரசங் கம்கேட்கக் *கானடையர்
நயந்து நின்னைத்
தானழைத்தும், அவர்கள் தம்பேர்ப் பொருட்கேற்ப 'நமரைச்சேர
தார்என் றெண்ணு
ஈனர்'என நீஎண்ணி அவர்உறையும் இடம்செல்ல
இசைந்தி டாத
மானவனே ஆதலினுல் உன்னிலொரு தேசாபி
மானி உண்டோ ?. (சு)

[கானடையர்=கால்+நடையர்=காற்பங்குஒழுக்கமுடையோர். Canadians]

தக்கதிரு வள்ளுவனார் "திருவேறு தெள்ளியரா
தலும்வே" றென்ன
ஒக்கஉரைத் துளநல்லூழ் பலவுமொருங் குன்னிடமே
ஒளிரக் கண்டோம்
தொக்ககலா மதியுடன்சேர்ந் தொளிரும்ரவீந் திரன்எனநீ
தோன்றக் கண்டோம்
இக்கலிகா லத்தியல்பிற் காணாத காட்சியெலாம்
யாம்கண் டேமால்.

இயல்இசைநா டகம்இவைகள் முத்தமிழே 'தமிழ்'என்ப
தினிமை ஆகும்
செயிரறநீ இனிமையுற இவைமூன்றும் இனிதிசைத்துச்
சீர்த்தி வாய்ந்து
பெயல்புரைய உலகமெலாம் குளிர்வித்தோய் ஆதலினால்
பெரியோய்! நீஎம்
அயலில்முத் தமிழ்க்குரிமை தமிழ்மொழியும் தேர்ந்துபுகழ்
அணிந்து வாழி! (௩

[பெயல் புரைய=மேகம்போல.]

பூவலயஞ் செய்துநம துத்தமபா ரதவருடப்
புகழை நாட்டும்
பாவலவ! பக்தியொளிர் பண்ணவனன் னாடகவிற்
பன! ரவீந்த்ர!
மேவலரும் ஆவலொடுன் பிரசங்கம் கேட்டுவக்க
விழையும் தெய்வ
நாவல!நின் 'பிறைமதி'கீ' தாஞ்சலி'யா தியநூல்கள்
நாளும் வாழி!

[ஆதியநூல்கள்:— இருட்டறைக் கிறைவன், பூங்காவனத்தன், சித்ரா
ஙாதநா முதலிய நூல்கள்.]

மாந்தரெலாம் எய்ந்தஅறி வொழுக்கமிரு மைப்பயனால்
வயங்கு மாறு
வாய்ந்தமதி யுடையாய்!நீ நின்றியிரே போற்பேணும்
வண்மை சான்ற



'சாந்திநிகே தனம்'வாழி! தகவுறுநின் தந்தையின்சீர்
தழைத்து வாழி
எந்துபுகழ் ஸி. எவ். ஆண்ட் ரூஸ்நச்சி னார்க்கினியன்
இனிது வாழி! (௪௦)

[சாந்திநிகேதனம் - இகபரநன்மை எய்துமாறு மாணவர்களைப் பயிற்றும் பள்ளிச்சாலை.]

ம. கோபாலகிருஷ்ணையர்,
அக்கிராசனாதிபதி,
மதுரை மாணவர் செந்தமிழ்ச்சங்கம்

திருவநந்தபுரத்துச் சிலாசாசன இலாகாத் தலைவரும்
தேசசரித்திர ஆராய்ச்சி, தமிழபிமானம் இவற்
றில் சிறந்து விளங்கியவருமாகிய பிரஹ்மஸ்ரீ
து. அ. கோபிநாதராவ் எம். ஏ. அவர்கள்மீது பாடிய

## இரங்கற்பாக்கள்.

1. அந்தோ! தமிழகத்துக் கந்தகக்கூற் றின்றிழைத்த
சிந்தாகுலக் கொடுமை செப்புந் தரமன்றே;
நந்தாக் கலைக்கோபி நாதனை*எம் ஏதமில்சீர்
மூந்தார் மறையவனை முடித்ததே குறைவயதில்;
மூதறிஞ் சற்குணனை முடித்ததே குறைவயதில்.

2. தேசசரித் திரத்துறையில் தேர்ச்சியோடா ராய்ச்சிபுரியும்
ஆசைசலி யாவூக்கம் ஆயிவற்றுள் உன்போல்யார்?
மாசறநீ செய்'சோழ வம்சசரித் திர'நூல்போல்
தேசுறுவோய்! ஆசறுபன் னூல்தருமுன் சென்றனையே;
சிலைக்கலை†யாய்! சிறப்பிற்பன் னூல்தருமுன் சென்றனையே.

3. வண்டமிழாங் கிலந்தெலுங்கு வடமொழிகே ரளம்‡உரிமை
கொண்டுளகன் னடப்புலமை கூர்ந்துகல்வெட் டாராய்ச்சி
எண்டகுசித் திரம்கீதம் படம்பிடித்தல் எனுமிவற்றில்
பண்டித சிகாமணியே! பார்துறந்தெங் குற்றனையோ?
பாவலர்கா வலரேங்கப் பார்துறந்தெங் குற்றனையோ?

* எம். ஏ. பட்டதாரிகளில் ஒன்றுமாம்.
† ஆய்சிறப்பு என வினைத்தொகையுமாம்.
‡ ராயராதலின் உரிமை என்க.

4. ஆகமசாத் திரநூல்கள் ஆய்ந்தும் புறச்சமயத்து!
ஆருமரு நூலுணர்ந்தும் அரிதின் முயன்றுலகில்
ஏகனெனுஞ் சர்வேசற் கியைபுருவெல் லாம்கொடையால்
மேகமனாய்! விக்கிரக விளக்கநூ லுள்விரித்தாய்;
வித்தகர்கள் வியப்புறஅவ் விளக்கநூ லுள்விரித்தாய்.

5. திருவநந்த புரநாட்டிற் சிலாசாச னத்தலைமை
மருவிநந்தொல் பெரியோர்தம் வாழ்காலந் *துருவியெழில்
†உருவநந்தாச் செல்வாக்கோ டுறுபொருள்ஒண் மதிநட்பாம்
திருவநந்தம் பெருகுகையில் செம்மால்! நீ சென்றனையே
‡தெருமரலுற் றியாம் வருந்தச் செம்மால்! நீ சென்றனையே.

6. செந்தமிழ்சேர் நாடன்றிச் சீமைமுதற் சேணாட்டுள்
சந்தமிகு தனிவிஷய தானமுபந் யாசமிவை
விந்தையுற விரித்தொருநூல் வெளியிடுமுன் உன்னைத்தென்
இந்தியமா திழந்துமிக இன்னலுறச் செய்ததென்னே?
இலங்குகலைப் புலவ! மிக இன்னலுறச் செய்ததென்னே?

7. சரித்திரஆய் வின்திறமோ சாதனசோ தனைத்திறமோ
விரித்துரைபன் மொழித்திறமோ வியன்சித்ர கலைத்திறமோ
திருத்தகுசீர்க் குணத்திறமோ சிரித்தமுக எழிற்றிறமோ
வருத்தமெதற் கென்றுறுவோம்? வாழியநின் புகழுடலே;
வயங்கியெமக் குறுகாட்டா வாழியநின் புகழுடலே.

வே. முத்துஸாமி ஐயர், எம்.ஏ., எல்.டி.,
மதுரை

---

# புத்தக மதிப்புரை.

---

1. விசுவநாதன்:—இது, மதுரைக்காலேஜிற் றமிழ்ப்பண்டித மகா-௱-௱-ஸ்ரீ ம. கோபாலகிருஷ்ணையரவர்களாற் செய்யுணடையிலெழுதப்பட்டதொரு நாடகம். இதில் விஜயநகரத்தரசனிடமிருந்த விசுவ

* துருவி— ஆராய்ந்து.
† உருவம் முதலிய திரு என்க.
‡ தெருமரல்—திகைப்பு.



நாதனென்பவன் றன்னரசனிட்ட கட்டளையாற் றன் றந்தையுடனெதிர்ந்து போர்புரிய நேர்ந்த தருமசங்கடத்தில் அவன் நடந்துகொண்டதை முக்கியமாகக்கொண்ட பலவிஷயங்க ளடங்கியுள்ளன. இப்படிச் செய்யுணடையி லினிமையா யெழுதப்பட்ட நாடகங்கள் அருமையாயிருப்பதால் இது பாராட்டத்தக்கது. இதன் விலை அணா 8. வேண்டுவோர் ஆக்கியோர்க்கெழுதிப் பெறலாம்.

2. சிறுவர்க்காகும் கதைப்பூங்கோத்து:— இது, காலஞ்சென்ற பண்டிதர் வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியாரவர்கள் குமாரர் ஸ்ரீமத் வி. சூ. நடராஜையரால் நன்றுயெழுதப்பட்டுப் பெரிய எழுத்திற் பதிப்பிக்கப்பட்டது. இதிற் சிறுவர்கள் முதலிற் சுலபமாய் வாசகபாடம் படிப்பதற்கு யோக்கியமாகும்படி சம்பாஷணங்களாகவும், சம்பவங்களாகவும், கற்பனைகளாகவும் எழுதப்பட்ட முப்பது சிறியகதைக ளடங்கியுள்ளன. இதன் விலை அணா $2\frac{1}{2}$. வேண்டுவோர் ஆக்கியோர்க் கெழுதிப் பெறலாம்.

3. தாள்கொடுத்துதவியதிருத்துறை:— இது திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூல் உபாத்தியாயர் ஸ்ரீமத் சை. கிருஷ்ணமாசாரியரால் வெளியிடப்பெற்ற எழுபத்திரண்டு பாடல்களுடையது. இதன் முகவுரையிற் சொல்லியிருக்கும் விஷயங்களால் இது தெய்வீக சம்பந்தமுடையதாகக் காட்டப்பட்டிருக்கிறது. அங்ஙனமாயின் இதன்கணுள்ள இலக்கியவிலக்கண வழுக்குவழு வாராயத்தக்கதன்று.

4. ஸம்ஸ்க்ருதசந்திரிகா:-இது, விஷ்ணு காஞ்சியிலிருந்து பிரம்மஸ்ரீ ஸ்ரீசர்ம்மா அவர்களால் மாதமொருமுறை வெளியிடப்படுமொரு வடமொழிப்பத்திரிகை. இதன் முதற்பிரதி வெளிவந்துள்ளது. இதில், பத்திராதிபர் வேண்டுகோள், மதுரவாணீ, பாஷை, தொண்டைமண்டலம் என்னும் விஷயங்க ளடங்கியுள்ளன. தேவநாகரலிபியிற் பதிக்கப்பட்டு வருகிறது. இதன் வருஷச்சந்தா ரூபா 2. தனிப்பகுதி அணா 4. வேண்டுவோர் விஷ்ணு காஞ்சி, சன்னிதி வீதி 24 என்ற விலாசத்துக்குப் பத்திராதிபர்க் கெழுதிப்பெறலாம்.

5. செல்வம்:—இது, பண்டிதரத்நம்-கா. ஸ்ரீ. புழலை, திருநாவுக்கரசு முதலியாரவர்களால் எழுதப்பட்டதொரு பொருளுரை. இதனுள், செல்வத்தை, பொருட்செல்வம், கல்விச்செல்வம், அருட்செல்வம்

எனப் பகுத்துக்கொண்டு ஒவ்வொன்றையும் பற்றிய சிறப்பினைப் பல சான்றுகளாலெடுத்துக்கூறிக் கல்வியைக் கூறுமிடத்துத் தமிழை மிகச் சிறப்பித்துக் கூறியிருப்பது அவர்களது பாஷாபிமானத்தை வெளியிடுகிறது. இதற்குக் கெண்யமுள்ள பலகனவான்களின் நல்லபிப்பிராயம் கிடைத்திருக்கிறது. இவ்வாறே முதலியாரவர்கள் இன்னும் பலபொருணூல்களெழுதித் தமிழுலகுக்குதவிப் பிரஸித்தியடைவாராக.

---

# அநுதாபக்குறிப்பு.

---

திருவனந்தபுரம் ஸம்ஸ்தானத்திற் சிலாசாசன பரிசோதகராயிருந்த ஸ்ரீமத். து.அ. கோபிநாதராயர் M.A. அவர்கள்காலம்சென்றது தெரிந்து வருந்துகிறோம். அவர் நம் மதுரைத் தமிழ்ச்சங்கத் தங்கத்தினராயிருந்து நீண்டகாலமாகச் 'செந்தமிழ்'க்குப் பல அரியவிஷயங்களெழுதிவந்ததுமன்றிச் சிலாசாசனவாராய்ச்சியாற் சோழவம்சசரித்திரமென்னும் புத்தகமொன்றும், புராதனமான சிற்பவுருவங்களைத் தொகுத்துக்காட்டியபுத்தகமொன்றும் எழுதிவெளியிட்டார். இன்னும் நம் தமிழ்நாட்டுப் பூருவசரிதம்பலவும் எழுதிவெளியிடவேண்டுமென்ற ஊக்கத்துட னுழைத்துவந்தார். அவர் செய்யக்கருதிய வேலைகளைச் செய்துமுடிக்குமுன் அவர்க்கு நேர்ந்த அகாலமரணம்* அவருடன் பழகிய பலர்க்கும் அநுதாபத்தை யளிக்கத்தக்கது. அவர் மரணமடைதற்கு முதல்நாள்வரை அவர் சொல்லக்கேட்டெழுதிய அசோக சக்ரவர்த்திசரித்திரம் என்னும் விஷயம் அவர் ஞாபகார்த்தமாகத் திருவனந்தபுரம் ஸ்ரீமத் வெங்கட்ராமசர்மாவால், செந்தமிழில் வெளிவரலாகும். இவரது குணநயங்கள் பலராலும் பாராட்டத்தக்கன. இவரது குடும்பத்தார்க்கு நம் மனப்பூர்வமான அநுதாபத்தை யறிவிக்கிறோம்.

பத்திராதிபர்.

---

## சேது சமஸ்தானத்தைச்சார்ந்த அபிராமம் வித்தியாபாஸ்கர செந்தமிழ்ச்சங்கத்தி மூன்றுமாண்டு நிறைவுவிழாச் சிறப்புச் செய்யுள்.

பூவீற் றிருந்த பொலன்மா மாதொடு
நாவீற் றிருந்த நன்மகள் புல்ல
இருவே றுலகத் தியற்கை யென்னுந்
திருமா மறைக்குப் பெருமுர ணகத்
திகாந்தத் தளவுஞ் சீர்த்தி நிறுவிய
பொன்னுச் சாமிப் பூமான் றுன்பு
பண்ணிய புண்ணியப் பயனாய் நண்ணியோன்
தமிழ்மக வுக்குத் தாயே யென்னப்
பாலவ னத்தப் பதிக்கர சாகிச்
சீலம் வணப்புச் செறிந்த சீரியன்
காண்டற் கெளியன் கருதுபே ரளியன்
பாண்டித் துரையெனும் பண்புடைக் குரிசில்
நீர்முற்ற லன்றிப் போர்முற்ற லறியாப்
புரிசைசூழ் மாட வரிசையா னிலங்கிப்
பாடல் சால் சிறப்புறு கூடன்மா நகரிற்
சின்னாண் முன்னர்த் திகழுற வைத்த
நான்காஞ் சங்க நனிவளர்ந் திடுநாள்
மற்றவ னிறையோன் மலரடி யுற்றிடச்
செம்பிநன் னுடன் சேது காவலன்
நம்பினோர்க் குதவும் நலந்தரு குரிசில்
முல்லையங் தாரான் முதிர்ந்த நற்சீரான்
மல்லலார் தேவை வளநக ரரசி
நந்துமா தனத்தான் நலமா தனத்தான்
கந்தமா தனத்தான் கவிகே தனத்தான்
காவியங் குடையான் காவியத் தொடையான்
சென்னைமா நகரிற் சீரிய சட்டப்
பேரவை தன்னுட் பிறங்குமங் கத்தினன்
ராஜரா ஜேசுர நரேந்திரன் வந்து
மருவுறுந் தமிழைமுன் வளர்த்தபாண் டியர்போல்
மேலாப் புரக்குமந் நாலாஞ் சங்கத்து
நூற்பரி சோதக நுவலரும் பணியைப்
பாற்படப் புரியும் பருணிதன் நாற்கவி
சாலவே பொழியுங் கோலக் கொண்மூ
நிறைநசை யாதினத் துறையும் நாவலன்

கற்க கசடற வெனும் பெருங் கவிக்கோ
ரொற்கமி லிலக்கா யுற்ற பண்பினன்
சந்தச் சுவைகனி சிந்தப் பாடும்
ராமசா மிக்கவி ராயர் வரோதயன்
சுப்பிர மணியனென் னுைப்பில் குருமணி
அக்கிரா சனத்தி லமர்ந்தன னாகப்
பாரியே யென்ன வாரி யளித்து
வறியோர் வதனக் கமல மலர்த்தும்
பாற்கர சேது பதிஞா பகமாய்
மற்றவ னாட்சி மருவபி ராமப்
பதியிடை யமைத்த பாற்கர வித்தியா
செந்தமிழ்ச் சங்கந் திகழ்மூ வாண்டின்
நிறைவு விழாத்தான் குறையொன் றிலாமல்
எம்-ஏ முத்துச் சாமி யையர்
முதலிய தமிழுணர் மூதறி வாளர்
பிரசங்க மாரி பெயலெனப் பொழிய
மன்னவை யோர்கள் மகிழ்கனி பூப்பப்
பாட்டளி முரலும் பைந்துழா யலங்கல்
வேட்டணி மார்பன் விழைந்துறை கோயிற்
சந்நிதி முன்னர்ச் சமைத்தினி திலங்கு
முன்னூறுஞ் சுதன்மைநேர் முதன்மை மண்டபத்தில்
நிகழ்ந்ததா லதன்சீர் நிகழ்த்தவும் படுமோ
செந்தமிழ் வாணருஞ் செந்தமிழ்ச் செல்வியும்
ஐந்தாம் ஜார்ஜெனு மரசர் கோமானும்
கோது பதியாத குணமுறுஞ் செல்வச்
சேதுபதி யரசர்தந் திருமா பதுவும்
துங்கமா ரிந்தச் சங்கத் திலங்கும்
அங்கத் தவர்களு மன்பொடும் பொருளாற்
பங்கமில் வகையிதைப் பாலிப் போரும்
சந்தத மோங்கித் தழைத்தே
யூழியூழி கால முவந்து வாழியவே.

ஆ. கார்மேகக்கோன்,
தமிழ்ப்பண்டிதர்,
அமெரிக்கன்காலேஜ், மதுரை.

12—1—19.

---

௧

கடவுள் துணை.

# பொருட்டொகைநிகண்டு

இது,

புதுக்கோட்டைச்சமஸ்தானத்தைச்சார்ந்த
குடுமிமாமலை வைத்தீசுரதீக்ஷிதரவர்கள் குமாரர்

## சுப்பிரமணியபாரதியவர்கள்

இயற்றியது.

திருவாவடுதுறையாதீனவித்துவானும்,
மதுரைத்தமிழ்ச்சங்கத்துச் சைவநூற்பரிசோதகருமாகிய

## சே. ரா. சுப்பிரமணியக்கவிராயர்

திருத்தியும், விளக்கியும், கூட்டியுஞ் செய்யப்பெற்றது.

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப்பிரசுரம்-41.

மதுரைத்
தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்பதிப்பு.

இதன் விலை அணா 6.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-கன.] காலயுக்தி௵ பங்குனி௴ [பகுதி ரு.

Vol. XVII. March—April. 1919. No. 5.

## "அறஞ் செய விரும்பு."

அன்புமிக் குடைய ஆயிற் சிறந்து
மன்பதைக் கிரங்கி மாதவ நெறிகளைப்
பண்ணமை யின்சொற் பாமுறை தொகுத்துத்
தண்ணமு தென்னத் தரணியி லுதவிய
ஆர்த்தகு மதிசேர் ஔவைப் பிராட்டி
"ஆத்தி சூடி" ஆரம் பத்தில்
இறைஞ்சிக் கடவுளை யேத்திய பின்னர்
அறஞ்செய விரும்பென் றிதம்பெறச் சொற்றனள்.

இந்த அழகிய உபதேசத்தை ஆண்பெண் இருபாலாரும் கல்வி பயிலத் தொடங்கிய சிறுபருவத்தில் கிள்ளைபோல் கற்று "தருமத்தை நீ செய்ய விரும்புவாயாக" என்று சொல்லிக் கொடுக்கப்படும் பொழிப் புரையை மாத்திரங் கேட்டுப் பருவக்குறைவால் மேலாராய்ச்சி நிகழ்த் தா தொழிகின்றனர்.

அறம் எனப்படுவது சதாகாலமுங் கற்றுச்செல்லும் எல்லாக் கலைகளிடத்தும், கைக்கொண்டொழுகும் ஒழுக்கங்களின் கண்ணும் பிறவனைத்தின் பாலும் நாம் ஆராய்ந்துணர வேண்டுவதொன்றாதலின், பருவமுதிரும் மாணவர் சிந்தையைக் கிளத்துமாறு அதன் இயல்புகளை இவ்வனஞ் சிறிது ஆராய்வாம். அறம், சீலம், சுகிர்தம், தருமம், புண்ணியம் என்பனவெல்லாம் ஒருபொருட் கிளவிகள். நல்வினை, வீறு, ஒழுக்கம், ஆசாரம், உறுதி, தவம், ஆதியனவும் அறத்தின்பாற்படும்.

*

அன்றியும் அறம்பாடுதல், கையறம், அறம்விழுந்தகுடி என்றன்ன சிலவகை சொல்லுமிடங்களில் தீமையைக் குறித்து நிற்கும்.

ஔவைப் பிராட்டியார் அறம் என்னுஞ் சொற்கொண்டு தெரிக்கப்புக்க கருத்தியாது? மற்றோரிடத்தில் அறத்தை "ஈதலறம்" என்றனர். இவ்விடத்தும் ஈதலைத்தான் கருதினரோ வென்றால் அத்துணையில் நிற்க முறைகாணோம். அறங்கள் யாவற்றினும் மிகமேலாகச் சிறந்து தலைநிற்பது ஈகையாதலின், பலபயிர்த் தோட்டத்தை மிக்குள்ள வாழைநோக்கி வாழைத்தோட்டம் என்றாற்போல அறப்பிரிவுகளிற் சிறந்தோங்கிய ஈகையின் சிறப்புப்பற்றி "ஈதலறம்" என்றனர்.

சூடாமணி நிகண்டை நோக்கினால் ஈகை என்னுஞ் சொல் செயல்பற்றிய பெயர்த்தொகுதியில் "புரவுதானம் பகுத்தல் பொழிதலே யுதவல் நீட்டல் ... ... ..." என்னுஞ் செய்யுளில் (அறம் என்னுஞ் சொல்கலவாமல்) வகுக்கப்பட்டும், அறம் என்னுஞ் சொல் பண்புபற்றிய பெயர்த்தொகுதியில் "அறமென்பதருமங்காணே" என்று வகுக்கப்பட்டு மிருப்பதைக் காணலாம். ஆதலின் ஒன்று செயல்பற்றிய பெயரும், மற்றது பண்புபற்றிய பெயருமாய்ப் பேதப்பட்டமை காண்க.

அறம் என்பது யாது என்னும் வினாவுக்குக் கற்றுணர்ந்தோர் கொள்ளுமுகத்தான் விடையிறுப்பின், வேதத்துள் விதிக்கப்பட்ட விதிகளுக் கடக்கமாகச் செய்யப்படுங் கருமத்தில் உண்டாவது எதுவோ அதுவே அறம் அல்லது தருமம் எனப்படு பொருளாமென்று சொல்லவேண்டும். இப்பொருள் நமது தூலபொறிகளைக்கொண்டு விடயித்தறியக்கூடிய விடயமாகாமல், சுவர்க்கம் முதலிய பலன்களைப் பெறுவதற் கேதுவாகியும், அபூர்வமாகியும் உள்ளது. அபூர்வம் என்பது கிரியை செய்வதற்கு முன்னில்லாதிருந்து செய்தபின் உண்டாவது (இல்லாதென்னாது, இல்லாதிருந்து என்பதின் கருத்து கவனிக்கற்பாலது). அன்றியும், அது கிரியையின்கண் தான் தோன்றிய காலம் முதல் பயன்றருவரைக்கும் கிரியை இயற்றியவனுடன் நின்று பலனெய்திய பின்னர் அழியு மியல்பினது. இப்பொருள் வேதகர்த்தாவாகிய சிவபெருமானது திவ்விய ஆஞ்ஞா சத்தியின் வழிமுறைத் தோன்றி நின்றொடுங்கு மியல்பினதன்றி ஒருவரால் நேரே செய்யப்படக் கூடிய ஒரு பொருளுமன்று.



நட்டபயிருக்குக் காவலிடும்படி ஒருவனை ஏவுங்கால் அவன் அதனை அங்ஙனஞ் செய்தல் இயலாது; ஆயின், வேலியை நடுகின்றான், அவ்வேலி தானேகாவலாகின்றது. வந்தடைந்த ஒரு அதிதியின் பசியை ஆற்றுகென்று மற்றொருவனைப் பணிக்குமிடத்து அவனுக்கும் அது செய்தல் அமையாது, ஆயின், அன்னபானாதிகளைக் கொடுக்கின்றான், அவற்றை அதிதியானவன் அருந்தியவிடத்துப் பசி தானே தணிகின்றது. இவ்விரண்டிடத்தும் வேலிநடு தொழிலைக் காவல் மேலேற்றிக் காவலென்றும், அன்னமிடுதலைப் பசியாற்றலென்றும் முறையே வழங்கப்பட்டன. இதுபோலும் பலதொழிற்பொருட்குரிய பெயர்களை அவ்வத் தொழிலுக் கிட்டு வழங்காமல், தொழிலின் பிற்பலனாக வரு பொருட்பெயரையே தொழிலுக்கிட்டு வழங்குதல் சாதாரண வழக்காம். இம்முறை கொண்டே தருமமானது செய்தற்பால தொன்றன்றாயினும் அதனை விளைவித்தற் கேதுவும் கருவியுமாகிய செய்கைகள் பலவற்றையும் தருமம் என்னும் பெயரினால் வழங்கி வருகின்றோம். பாட்டர் என்பவரும் தருமஇயலை விரிக்குமுகத்தான் இவ்வழக்குப் பற்றியே திரவியங்கள், தொழில்கள், குணங்கள் முதலியவை தருமமென்று கூறிப் போந்தனர். திரவியம் முதலியன வெல்லாம் பலன்றரு தருமத்தை ஏற்படுத்துங் கருவிகளன்றி அவைதாமே தருமமாவதில்லை.

தரும வடிவத்தைப் பலரும் பலவாறு விரித்தனர். விதிக்கப்பட்ட கருமத்தால் அடையத்தக்க புருடனுடைய குணமே தருமம் என்றும், விலக்கிய கருமத்தால் அடையத்தக்க புருடனுடைய குணமே அதர்மமென்றுந் தருக்கர் கூறினர்.

வேதவாணையே இலக்கணமாக உடையது தருமம் என்று மீமாஞ்சகர் சூத்தரித்தனர்.

காரியம், நியோகம்=ஆணை, அபூர்வம்=முன்னில்லாது வருவது, என்னும் மொழிகளால் கூறப்பட்டதும், தாது=பகுதிப்பொருளால் அடையத்தக்கதும், சுவர்க்க முதலிய பலன்களைப் பெறுதற்கு ஏதுவாகியும் உள்ள ஆன்மகுணமே தருமமென்று பிரபாகரர் கூறினர்.

விசுவாமித்திரர், தருமவடிவத்தை உரைக்குமிடத்து, ஆகமங்களை உணர்ந்த ஆரியர்கள் செய்து கொண்டிருக்கப்பட்டதாகிய எதனைப் புகழ்கின்றார்களோ, அதனைத் தருமமென்றும், எதனை இகழ்கின்

ளோர்களோ அதனை அதருமமென்றும், இப்படிப்பட்ட தருமத்தின் வடிவத்தை மனந்தெளிந்து கவலையற்றிராதவன் அறியமாட்டான், அங்ஙனம் அரிதில் அடையத்தக்க விடயங்களிலும் புண்ணியர்களானவர்க்கு உணர்ச்சித்திறம் உண்டு என்றுங் கூறினர்.

மநுவானவர், வித்துவான்களும், காமம், வெகுளியில்லாதவர்களும் ஆகிய சற்புருடர்களால் தினந்தோறும் சேவிக்கப்படுவதாகியும், மனம் ஒத்துக் கட்டளையிடப்பட்டதாகியும் உள்ளது எதுவோ அதுவே தருமம் என்றனர்.

இன்ன பல்லோர் கூற்றும் நுணுகி ஆராயுங்கால் ஒற்றுமையுறக் காணப்படும். இவர்கள் கருத்தையே பின்வரு செய்யுளுந் தழுவியது:—

வேத வாணியி லமைந்தட னொன்றியே விளங்கிப்
பேத மாய்வரு நாலுகந் தொறும்பொருள் பிரிவுற்
றோது மாகிலக் கற்பமோ டொடுங்கிமே லொடுங்கா
வேது வாயுயர் பொருளதே தருமமென் றிசைப்பார்.

சீமந்தனிபுராணம், விரதச்சருக்கம், 18 செய்யுள்.

தருமமானது, காலதேசங்கட் கிசையப் பேதப்படும். கிருதயுகத்தில், உயிர் உடம்பிலுள்ள எலும்பு அழியாமலிருக்கு மளவு மிருக்கின்றது. திரேதாயுகத்தில், அது அவ்வுடம்பின் தசையில் நிற்கின்றது. துவாபரத்தில் இரத்தத்திலும், கலியில் உணவு முதலியன வற்றிலும் முறையே தங்கிநிற்கும். ஆதலின் முன்னுகத்துக்குரிய வேள்வி, விரதமாதிய அநேக தவங்கள் பின்னுகத்துக் கமையாவாம்.

கிருதயுகத்திலே "வியாஜஉபாதிவிட்ட"=வேறொரு நிமித்தத் தடையில்லாத முழுத்தருமமும் முதலில் நான்கு கால்களையுடைய இடபரூபமாய் மனிதரிடத்தில் நிலைபெற்றிருக்கும்; திரேதாயுகத்தில் தருமம் ஒருகால் குறைந்து மூன்றுபங்கோடு அமைக்கப்பட்டிருக்கும்; துவாபரயுகத்தில் இரண்டு அல்லது அரைப்பங்காகி "மிசிரதருமம்" என்று பெயர் பெற்றிருக்கும்; "மிசிரதருமம்=பாவத்தோடுகூடிய தருமம். கலியுகத்தில் மூன்று காலு மற்றிருக்கும். ஆதலால் கலியுகத்திலே மைந்தரும் மாதரும் பாவத்திற் சிறந்தவராவார். வருந்தி முடிக்கத்தக்க தருமங்களிலே மனச்செல்லுகை உண்டாவதில்லை. எளிதாகிய தருமங்களையே தருமிகள் விரும்புவார்கள்.



வெள்ளப்பிரவாகம் போலும் விரிந்துள்ள தருமக்கடலானது கற்பங்கள் தோறும் ஒடுங்கிச் சிருட்டி ஆரம்பத்தில் மீட்டுந்தோன்றி விரியாநிற்கும்.

மநுவாதிய முப்பத்தாறு தவசிரேட்டர்கள் தந்தம்பெயரால் தருமநூல் செய்திருக்கின்றனர். இவர்களையன்றி வேறு முனிவரர்கூறிய தருமங்களும் மஹாபாரதம் அசுவமேத பருவத்தில் முறையே விரித்திருக்கக் காணலாம். தருமநூல்கள் பலவற்றுள்ளும் இந்தக் கலியுகத்தில் யாவரும் லௌகிக வைதிக தருமங்களைத் தவறாமல் நடத்தித் தாந்தாம் அடையவேண்டிய பயன்களை யெல்லாந் தெரிவிக்கத்தக்க நூல் இது ஒன்றே என்று முனிவர்களாலும் பெரியோர்களாலும் புகழப்படுவது பராசரஸ்மிருதியாம். இந்நூல் இற்றைக்கு முப்பது வருடங்களின் முன்னர் சென்னையில் நிலவிய "ஸ்ரீசகல வேதசாத்திர விளக்கச் சங்கத்"தவரால் வடமொழியினின்றுந் தமிழுக்கு மொழிபெயர்க்கப்பட்டது.

தருமம் என்பது பிரித்துணர்தற்கு மிகவும் அருமையாகிய பொருள் இக்கருத்தைக்கொண்டு திருஷ்டத்துய்மன் "இது அறம், இதுபாவம் என்று தேடுவது நம்மாலாவதன்று, ஆதலின் ஓய்வேதியரே நான் அந்தமுயற்சிக்குச் செல்வோன் அல்லன்" என்று கூறியதாக மஹாபாரதத்துள் சொல்லப்பட்டிருக்கின்றது.

தருமவடிவு தூலமாகவும் சூக்குமமாகவு மிருக்கும். மந்த அறிவினையுடையவர்களாலும் எளிதில் உணரப்படுகின்ற சௌசம், ஆசமனம், சந்தியாவந்தனம் முதலியன தூலதருமமாம். சாத்திர முடிபுணர்ந்த அறிஞர்களாலேயே அறிதற்கு உரித்தாயும் ஏனையரது அறிவுக்கு அதர்மமெனக் கொள்ளத்தக்க துரௌபதை விவாகம் முதலியவற்றைப் போல்வன சூக்கும தருமமாம். தருமத்தை உணர்ந்தவருள் சிறந்தோனாகிய துருபதராஜன் மயக்குற்று ஒருமாதுக்குப் பலநாயகர் உண்டாயிருப்பது உலகவழக்கிற்கும் வேதவழக்கிற்கும் மாறானதென்று ஆக்ஷேபிக்க, தருமராஜன் அவன் மயக்கை அறுக்குமுகத்தான் தருமத்தின் சூக்குமவடிவை விரித்துத் துரௌபதைக்குப் பலநாயகர் உண்டாதல் தருமமேயென்று தக்கநியாயப் பிரமாணங்களைக் காட்டியதாக மஹாபாரதங் கூறும். முன்னிகழ்ந்த இன்னோரன்ன தருமங்கள் பலவும் இக்கலியுகத்தில் விலக்கப்பட்டன. இவற்றின் விரிவை முற்சுட்டிய பாராசரஸ்மிருதி ஆசாரகாண்டம் 138—149 பக்கங்களில் பரக்கக் காணலாம்.

தருமமானது நான்கு வருணங்களுக்கும் பொது எனவும் சிறப்பு எனவும் இருவகைப்படும். பொதுத் தருமங்களாவன, கடவுளைப் பூசித்தல், தன்னிலையுணர்தல், மனமடக்கல், உண்மைமொழிதல், கொல்லாமை, கொடை, தயவுடைமை, சீவகாருண்ணியம், பொறுமை, அழுக்காறின்மை, சுத்தமுடைமை, சோர்வின்மை, மங்கலமுடைமை, இவறலின்மை, அவாவின்மை ஆதியனவாம். நான்கு வருணத்தார்க்கும் உரிய சிறப்புத். தருமங்கள் அவ்வவர் இயற்கைக் குணத்துக் கேற்பப் பிரிக்கப்படும். வேதமோதல், ஓதுவித்தல், வேள்வி வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் ஆகிய ஆறு கருமங்களும் முதற்பிறந்த வேதியனுக்குச் சிறப்புத் தருமங்களாம். வேள்வி செய்தல், வேதமோதுதல், ஈதல், உலகோம்புதல், படைக்கலம்பயிலுதல், சேவை செய்தல் என்னுங் கருமங்கள் ஆறும் அரசனுக்குச் சிறப்புத் தருமங்களாம். அரசனுக்குச் சேவையாவது தேவபிராமண அதிதி குரு பசுப்பணியாம். வேதமோதல், வேள்விபுரிதல், ஈதல், பசுக்காத்தல், வட்டியிட்டல், உழவு வியாபாரம் இவ்வேழும் வைசியனுக்குச் சிறப்புத்தருமங்களாம். சுத்தமுடைமை, அந்தணர்பணிவிரும்புதல், சத்தியம், சினமின்மை, வேதவிதியில்லாதமந்திரம், அவ்வகை நமஸ்காரம் சூத்திரனுக்குரிய சிறப்புத் தருமங்களாம்.

இந்நான்கு வருணத்தினரும், தத்தம் வருணத்திற் பிறழாது நிலைநின்று தமக்குரிய அறங்களைப் பாதுகாத்தல் அறநிலை அறம் எனப்படும்.

அறத்திற்கு அங்கமாக எண்ணப்படு குணங்கள் எட்டு. அவை, அழிந்தோரை நிறுத்தல், அறம்விளக்கல், ஐயப்படாமை, பழியை நீக்கல், பேரன்புடைமை, மயக்கமின்மை, விருப்பின்மை, வெறுப்பின்மை எனப்படும்.

அறவகை மூன்றுவன, ஒழுக்கம், வழக்கு, தண்டம் எனப்படும். இவற்றை முறையே ஆசாரம், விவகாரம், பிராயச்சித்தம் என்பர் வடநூலார். ஆசாரம் என்பது இச்சித்த பொருளைத்தருவது, எனவே புண்ணிய முண்டாவது; ஒழுக்கமென்பதுவும் அதுவே. விவகாரம் என்பது பொருளீட்டல்; வழக்கு=பொருள் காரணமாக வியாச்சியம் (நியாயம் பேசுதல்) செய்தல்; பிராயச்சித்தம் என்பது வெறுப்பைத்



தருகின்ற பாவத்தை ஒழிப்பது. பிராயச்சித்த மெனினுங் கழுவா
எனினும் ஒக்கும். தண்டமாவது ஒழுக்கத்தினும் வழக்கினுந் திறம்
றோரை அவற்றி னெறியே நிறுத்தத் தண்டித்தல்.

அறம் பொதுவும் சிறப்புமன்றி, சிவதருமம் பரதருமமென்று
இருவகை பிரிக்கப்படும். மேலும் "சுரௌதம்" "ஸ்மார்த்தம்" என
றிருவகை பிரிக்கவும் படும். இல்லறம் துறவற மெனவும் இருபா
படும். இவற்றை யெல்லாம் விரிக்கின் இவ்வியாசம் மிகப்பெருகு

நமது நித்திய ஒழுக்கங்களாகிய வைகறையில் துயில்நீத்தெழு
தல், எழும்பியவுடன் நோக்கத்தக்கன நோக்கல், சிந்திக்கத்தக்கன சி
ந்தித்தல், மலசல விமோசனஞ்செய்தல், சுத்தஞ்செய்தல், பல்விளக்க
நீராடல், ஆடையுடுத்தல், விபூதி முதலியன தரித்தல், செபதப தே
பூசை முதலியன செய்தல், தானம் வழங்கல், அதிதி பூசை ஆற்ற
விருந்தோம்பல், பந்தியிலிருந்துண்டல், வெற்றிலை பாக்கிடுதல், கலைப
லல், உழவு, வாணிபம், உத்தியோக மாதிய தொழில் நடாத்தல், சந்
வந்தனம் முடித்தல், பள்ளிகொள்ளுதல் ஆதிய பலவற்றையும், வில
கப்பட்ட முறைகளை ஒழித்து அறம்பயத்தற்கேற்க அமைக்கப்பட்
விதிமுறைகளை ஆராய்ந்து தழுவி அனுசரித்துச் செய்யின் இருமை
யினும் இனிய பயன்களைப் பெறுவாம். ஆசாரத்தால் அறவினைவு
அவ்வினைவால் கடவுள்மீது அச்சமும் அன்பும் பத்தியும், அவற்றா
ஞானமும், ஞானத்தால் வீடு பேறு முண்டாம். ஆதலின், உயிரினு
விழுமியதாய் ஓம்பற்பாலது ஒழுக்கமென்க. இதுபற்றியே ஔவைய
ரும் அறஞ் செய விரும்பு என்றனர்.

விரித்தகன்றுழிய தருமப்பாவையின் விசேட பாகங்களில் த
நின்று விளங்கும் கொடையின் சிறப்பைச் சிறிதாராய்ந்து இவ்விய
சத்தை முடிப்பாம்.

அளி, இடுகை, ஈகை, உதவி, உதாரம், உபகாரம், கடப்பா
கவிகை, கொடை, தத்தம், தானம், தியாகம், பிரதம், புரவு, வண்மை
வாகை, விதரணம், வேளாண்மை, வேள்வி, என்பனபலவும் ஒருபொரு
கிளவிகள். வரையாது கொடுக்குங் கொடை, கொடை யென்றும் மட
என்றுஞ் சொல்லப்படும்.

கிருதயுகத்தில் ஏற்பவன் எங்குள்ளானோ, கொடையாளன் அங்
தானாக வலிதிற்சென்று தனது ஆசிரியனைப்போல அவனை உபசரித்

வேண்டித் தானத்தைக் கொடுக்கிறான். திரேதாயுகத்தில் ஏற்பவனைத் தன்னிடத்திற்கு அழைப்பித்துத் தானத்தைக் கொடுத்தனுப்புகின்றான். துவாபரயுகத்தில் ஏற்பவன் தானேவந்து இரந்தபோது கொடுக்கப்படுகின்றது; கலியுகத்தில் அங்ஙனம் வந்து கேட்டளவில் அமையாது, அடுத்துக் காத்துச் சேவித்துப் பெறவேண்டியதாயிருக்கின்றது. வலிது சென்று கொடுக்குங் கொடையே தலைப்பட்டது; அழைத்துக் கொடுப்பது இடைப்பட்டது; கேட்டபின் கொடுப்பது கடைப்பட்டது; காத்தபின் கொடுப்பதாற் பயனே இல்லை. கேட்டபின் கொடுப்பது கடைப்பட்டதாயினும் கொடைவிருப்புக்குன்றிய கலியிலே அவ்வகை செய்தலும் மிக்கபயனைத் தராதொழிவதில்லை.

தானம்என்பது எல்லாச்சீவகோடிகளாலும் புகழப்படுவதொன்று. அதனினும் செய்தற்கு அருமையான தொழில் பிறிதொன்றில்லை. எல்லா வுயிர்களும் கொடுப்பவனை அடுத்துப் பிழைக்கின்றன. பகைவரும் நட்பினராகின்றனர். எல்லாப்பயனும் தானத்திலே ஸ்தாபிக்கப்பட்டன. அதனால் முற்றுமுணர்ந்தவர்கள் தானத்தை எவற்றினுஞ் சிறந்ததாகக் கூறுகின்றனர் என்று சுருதிகள் முழங்கா நிற்கும்.

இன்ன தன்மைய தானத்தின் சொரூபத்தைச் சுருக்கிச் சொல்லுகில், இரண்டு ஏதுக்களையும், ஆறு ஆதாரங்களையும், ஆறு உறுப்புக்களையும், ஆறு விபாகங்களையும், நான்கு மார்க்கங்களையும், மூன்று வகைகளையும் மூன்று நாதங்களையும் உடையது தானம் என்று கூறப்படும்.

ஏதுக்கள் இரண்டாவன, சிரத்தையும் பத்தியுமெனப்படும்.

ஆதாரங்கள் (நிலைகள்) ஆறாவன, அறம், பொருள், இன்பம், நாணம், உவப்பு, அச்சம் என்பனவாம்.

அறநிலைத்தானம் கைம்மாறு வேண்டாமல் தருமம் ஒன்றே பயன் என்னுங் கருத்தால் தக்கோர்க்கு நித்தமுங் கொடுக்கப்படு தானம்.

பொருணிலைத்தானம் பிரதிபலனைப் பெறும் நோக்கத்தோடு கொடுக்கப்படுவது.

இன்பநிலை அல்லது காமநிலைத்தானம், பரத்தையர், கள், வேட்டை, சூது, இவைகளின் வலிய சம்பந்தத்தால் தகாதவர்களுக்கேயாயினும் விரும்பிக் கொடுக்கப்படுவது.



நாணநிலைத்தானம், சபையிற் புகழப்படுவதால் நாணமுற்று இரந்த பொருளை ஏற்போர்க்குக் கொடுப்பது.

உவப்புநிலைத்தானம், விரும்பியவைகளைக் கண்டாயினுங் கேட்டாயினுங் களிப்பினாற் கொடுப்பது.

அச்சநிலைத்தானம், கோபத்திற் கஞ்சியாயினும் இமிசை தப்புவதற்காயினும் தீங்கு செய்யத் தலைப்பட்டார்க்குக் கொடுப்பது.

தான உறுப்புகள் ஆறாவன, கொடுப்பவன், ஏற்பவன், சிரத்தை, (தருமத்தோடு கூடியதாகிய கொடைப்) பொருள், (தக்க) இடம், (தக்க) காலம் என்பனவாம்.

கொடுப்பவன் இலக்கணம் யாதெனில், பாவமற்றிருத்தல், நோயற்றிருத்தல், தருமசிந்தையுண்டாயிருத்தல், காரணமில்லாமலே கொடுக்கும் இச்சையுண்டாயிருத்தல், சுத்தமுடைமை, பழிக்கப்படாத சீவனத் தொழிலுடைமை முதலியனவாம்.

ஏற்பவனிலக்கணம் மூன்றினால் சுத்தமாக்கப்பட்டு, குற்றமற்ற நடைதழுவி, தயவோடுங்கூடிய இயற்கைக் குணம் பூண்டு, பொறிகளை அடக்கி, யோனிதோஷ மற்றிருப்பவனே சிறந்த பாத்திரமாவான். மூன்றால் சுத்தமாக்கப்படல் தந்தை தாய் ஆசிரியனாகிய மூவராலுந் திருத்தப்பட்டுப் பரிசுத்தனாதல். குற்றமற்ற நடையாவது அறநூல்களான் மறுத்த கருமஞ்செய்யா தொழுகு நடை. யோனி தோஷமாவது பிறப்பின் காரண சம்பந்தங்களால் ஏற்படுகுற்றம். பாத்திரமாவது கொடைப் பொருளை ஏற்கத்தக்க இடம்.

சிரத்தை உடலும் மனமுஞ் சுத்தஞ் செய்துகொள்ளல், இரப்பாரைக் கண்டவிடத்து மிக்க அன்புடனிருத்தல், அவரை நன்குமதித்து இனியனகூறி உபசரித்தல், அழுக்காறற்றிருத்தல் ஆகிய வெல்லாம் கொடை விடயத்தில் சிரத்தையென் றுதகரிக்கப்படும்.

கொடைப்பொருள் ஒழுக்கத்திற்கு விரோதமல்லாததும் பாவமற்றதும் தனது முயற்சியால் தேடியதும் கொடைக்குத் தக்க பொருளாம்.

கொடைக்குரிய இடம் எந்த இடத்தில் வேண்டிய எந்தப்பொருள் கிடைப்பது அருமையோ அந்த இடமே அப்பொருளைத் தருவித்து உதவுதற்குச் சிறந்த இடமாகும்.

கோடைக்குரியகாலம் எந்தக்காலத்தில் எந்தப்பொருள் கிடைப்பது அருமையோ அந்தக்காலமே அப்பொருளைத் தானஞ் செய்வதற்குச் சிறந்த காலமாகும்.

ஆறுவிபாகங்கள் வருமாறு, அனுபவம், தேசம், காலம், ஏற்போன், கொடுப்பவன், இவ்வைந்தின் செல்வமுடைமை திருத்தமுற்றிருந்தால் சிறுபொருட் கொடையேயாயினும் சிறந்ததேயாகும். அச்செல்வம் திருந்தாதவிடத்துச் சிறந்தபொருட் கொடையேயாகினும் வேறாகி விடுகின்றது. இதுவே விபாகம் (விபாகம்=வேறாகத்திரிதல்) அவை துர்ப்பலம், நிர்ப்பலம், ஈனம், துல்லியம், விபுலம், அக்ஷயம் என ஆறு வகைப்படும்.

துர்ப்பலவிபாகக்கோடை நாத்திகனுக்கும், கள்ளனுக்கும், கொலை செய்பவனுக்கும், 'பிறன்மனையவளைப்புணர்வோனுக்கும், பதிதனுக்கும், கோள் சொல்பவனுக்கும், சிசுக்கொலை செய்பவனுக்கும், விசேடமாகவே கொடுக்கப்படினும் அக்கொடை கெட்டபயனைத் தரத்தக்கதாதலின் துர்ப்பலக் கொடையெனப்படும்.

நிர்ப்பலவிபாகம் பெரிய தானமேயானாலும் சிரத்தையின்றிக் கொடுக்கப்படுவது பயன்றராமல் அழிவதால் நிர்ப்பலக் கொடை எனப்படும்.

ஈனவிபாகம் மிருகியையுடைய தானமேயானாலும் அங்கியர்களை வருத்தப்படுத்துவதற்கு வழங்குவது தாழ்வையடைதலால் ஈனக் கொடையாகும்.

துல்லியவிபாகம் நூல்களில் விதித்தவாறே செய்யப்பட்டதாயினும், கலக்கப்பட்டுச் சுத்தியில்லாத மனத்தோடு கொடுக்கப்பட்டதாயின், அது எண்ணத்தின் குற்றத்தினால் கொடைக்குத்தக்க அளவே பயனைத்தருவதாகும். அதுபற்றித் துல்லியக் கொடையெனப்படும்.

விபுலவிபாகம் பூரணமாகிய ஆறு அங்கங்களோடு கூடிய தானம் விரிவாகக் காணத்தக்கதாக விளைதலின் விபுல மெனப்படும்.

அக்ஷயவிபாகம் தயவோடுங் கொடுக்கப்பட்ட தானம் என்றுங் கெடாததாக முடிதலின் அக்ஷயமெனப்படும்.



மேற்கூறிய ஆறனுள் 1, 2, 3, 4 விலக்கப்பட்டன, 5, 6 விதிக்கப்பட்டனவாம்.

தானத்தின் நால்வகை மார்க்கம், ஆஜசிரிகம், காமியம், நைமித்திகம், திவ்வியம் எனப்படும்.

ஆஜசிரிக மார்க்கதானம் தண்ணீர்ப்பந்தல்வைத்தல், தோப்பு, சோலை முதலிய சலமைப்பித்து நிழலுண்டாக்குவது, ஏரிகுளங்கள் செய்து நீர்நிலை யுண்டுபண்ணல் ஆதியனவாம். இவை எப்போதும் சீவர்களுக்குப் பயன்றருவதால் ஆஜசிரிகம் எனப்படும். ஆஜசிரிகம்= எப்பொழுதும் நிலைபெற்றுள்ளது.

காமியமார்க்கம் தன்பிள்ளை பெண்கள் நிமித்தமும், பகையை வெற்றிகொள்ளு நிமித்தமும் ஐசுவரியமடையும் பொருட்டும், மாதர்கள் விடயமாகவும், குழந்தைகட்காகவும் கொடுக்கப்படுவது ஆசையைக் காரணமாக வுடையதாதலின் காமியக்கொடை யெனப்படும்.

நைமித்திகமார்க்கம் இன்னகாலத்தில், இன்ன கருமத்தில், இன்னதன் பொருட்டுக் கொடுப்பதென்று நியமித்துக் கொடுக்கப்படுவது காலம், தொழில், பயன் என்ற மூன்று நிமித்தங்களோடு கூடியதானமாதலின் நைமித்திகதானம் எனப்படும்.

திவ்வியமார்க்கம் வேள்வி செய்து கொடுப்பது திவ்வியதானமாம்.

தானவகை மூன்றுவன—ஒன்பது உத்தமதானம், நான்கு மத்திமம், மற்றைய வெல்லாம் அதமம். இம்முப்பிரிவுகளுமே மூன்றுவகை எனப்படும்.

உத்தமதானம் ஒன்பதாவன அன்னதானம், வித்தியாதானம், கன்னியாதானம், வஸ்திரதானம், கோதானம், பூதானம், சுவர்ணதானம், அசுவதானம், கசதானம், என்பன. இவை உத்தமதிரவியங்களோடும் கொடுப்பது.

மத்திமதானம் போர்வைக்குரிய ஆடை, மனை அல்லது இருப்பிடம், அனுடவித்தற்குரிய ஏனையபண்டங்கள், அமிழ்தம், என்பனவற்றை மத்திமத் திரவியத்தோடும் கொடுப்பது.

அதமதானம் பாதரக்ஷை, பணிசெய்வோர், வாகனம், குடை, பாத்திரங்கள், படுத்தல் முதலிய வற்றுக்குரிய ஆசனம், விளக்கு, விறகு, பழவகை முதலியன பலர்பார்க்கத்தக்க பொருளாமாதலின் தலைப்படு வகையனவாம். கூறுதொழிந்த பிறபல பொருளும் அதம வகுப்பையே சாரும்.

மூன்றுநாதமாவன ஒருவன் தான்செய்த நல்ல கருமம், கொடை, கற்றகல்வி, ஆதியவற்றைத் தானே கூறுவானாயின் அவை அழிந்து விடுகின்றன, தன்னைத்தானே புகழ்ந்துகொண்டால் ஒளிமழுங்கி விடுகின்றது, செய்தபின் வியசனப்பட்டால் விபத்தை அடைகின்றான். இம்மூன்று செயல்களுமே நாதங்களெனப்படும்.

புராண சாரத்துள், தானங்கள், நித்தியம், நைமித்திகம், காமியம், விமலம் என நான்கு வகையாகக் கூறப்பட்டன.

பகவற்கீதையுள், சாத்துவிகம், இராஜசம், தாமசம் எனமூன்று பேதங்களாக்கிக் கண்ணன் கூறினர். இம்மூவகைத் தானங்களின் பயன்களை விஷ்ணு தருமோத்தரமும் எடுத்துக் கூறுகின்றது.

அறங்கள் முப்பத்திரண்டெனவுஞ் சிலர் பிரித்தனர்.

இன்னும் அறத்தின் சிறப்புகளை விரிக்கத் தொடுத்தால் மிகப் பெருகும். வான்வளர்மித்திரன் பேரொளிச் சிறப்பைக் கைச்சிறு விளக்கிற் காட்டுவதுபோல அளக்கரும்பொருளை அடக்கி "அறஞ்செய விரும்பு" என்று ஒளவையார் சாற்றிய முறையை ஆய்ந்துணர்க. இது காறுஞ் சொல்லியவற்றைச் சூழ்ந்து மேலும் அறியவேண்டியவற்றையும் சொல்லாதொழிந்த பிறபலவற்றையும் தக்கநூல்கள் வாயிலேனும் கற்றோர் பாலேனும் மாணவர் ஆராய்ந்துணர்வாராக.

எல்லா நலனு மினிதமைந்து கைகூடப்
பொல்லா தனவெல்லாம் போயகலத்—தொல்லுலகில்
காண்டரு நவின்பக் கடறிளைத்து முத்திபுக
வேண்டின் அறஞ் செய்ய விரும்பு.

சுபமஸ்து.

ச. பூபாலபிள்ளை.

---

உ

# சிவஞானபோதம்.

தத்துவ ஞானத்துறைகளைச் சுருக்கமும் நுணுக்கமுமுற எடுத்து விளக்கும் ஒரு நூல் தமிழிலே இதுபோற் பிறிதில்லை. இதுவே தமிழ்ச்சித்தாந்த சாத்திரங்களுட்டலையாயது. இதனை இயற்றியருளினார் ஸ்ரீ மெய்கண்ட தேவநாயனார். இவருடைய காலம் ஏறக்குறைய எழுநூற்றைம்பது வருடங்கட்கு முன்னெனப.

இந்நூல் சமஸ்கிருதத்துள்ள இரௌரவாகமத்திருந்தெடுத்து மொழிபெயர்க்கப்பட்டதென்பது வெகுகாலந் தொட்டுப் பாரம்பரியமாக வழங்கி வருவதொரு கொள்கை. இது யாதொரு பாஷையிலிருந்தாவது எடுத்து மொழிபெயர்க்கப்படாது தமிழ்ப்பாஷையிற்றானே முதன் முதல் அமைந்ததொரு மூலக்கிரந்த மென்பது இக்காலத்துள்ளார் சிலருடைய கொள்கை. இவ்விரு கொள்கைகளது ஆராய்ச்சியே ஈண்டெடுத்துக் கொள்ளப்பட்டது.

## பரம்பரைக்கொள்கை.

சிவஞானபோதம் இரௌரவாகமத்தின் மொழிபெயர்ப்பென்பது பல நெடுங்காலந் தொட்டுப் பாரம்பரிய வழக்கால் நாட்டப்பட்டுக் கிடக்கின்றது. இந்த விஷயத்திலே முக்கிய சாட்சியமாக வரிக்கப் படத்தக்கார் மெய்கண்ட பரம்பரையில் தோன்றிய திருவாவடுதுறை ஆதீனத்தார். அவ்வாதீனத்துக்கு அடுக்க முக்கிய சாட்சியமாகக் கொள்ளத் தக்கார் சித்தாந்த சாத்திர ஆராய்ச்சியே தமது பெருநோக்காகக்கொண்ட ஏனைய ஆதீனத்தார். இவர்களுக்கு அடுக்க இவ்விஷயத்திலே சாட்சியமாகக் கொள்ளத்தக்கார் சித்தாந்த ஆராய்ச்சியின் வல்லுநராகிய ஏனையோர். இந்த முத்திறச் சாட்சியங்களாலும் சிவஞானபோதம் இரௌரவாகமத்தின் மொழிபெயர்ப்பே என்பது நன்குற நாட்டப்பட்டுக் கிடக்கும்போது, நாம் அந்தக் கொள்கையை ஒப்பாதொழிவது கூடாது. நீதித்தலங்களிற்றானும் உலகவழக்கே மற்றெத்தகைய சாட்சியத்தினும் வலியுடைத்து. அவ்வழக்குப்பிழை

யுடைத்தெனச் சாதிக்க முயல்வார் யாருமுளரேல், அவர்கள் முற்பட்டுவந்து தமது கொள்கையை நியாயவாயிலாகத் தாபித்தல்வேண்டும். அவர்கள் அங்ஙனம் தாபிக்கமாட்டாராயின், உலகவழக்கே நிலையுற்று நிற்கும்.

இந்தப் பாரம்பரியத்துக்கு யாதொரு ஆதாரம் காணப்படவில்லையே எனின், பாரம்பரியத்துக்கு யாதொரு ஆதாரம் காணப்படவேண்டியதில்லை என்பதையும், பாரம்பரியம் என்னும் அளவே அதனுக்குப் பெருவலி கொடுத்திடும் என்பதையும் நாம் சிந்தித்தல் வேண்டும். என்னை? ஆதாரமின்றி யாதொரு பாரம்பரியம் அமைந்திருக்க மாட்டாதாதலின். அந்த ஆதாரத்தை நாம் இப்போது காணுமையால் அங்ஙனம் ஒரு ஆதாரம் இருந்திலதென்று முடிப்பது கூடாது. ஆதாரம் இருந்தமைபற்றியே பாரம்பரியம் அமைந்தது. ஆகவே பாரம்பரியமே அதன் ஆதாரத்துக்கும் தக்க சான்றாகும். அங்ஙனம் ஒரு ஆதாரம் எக்காலத்தாவது இருந்ததில்லையென்று சாதிக்கத் தலைப்படுவார் யாருமுளரேல், அவர்கள் முற்பட்டுவந்து அவ்வாதார மின்மையைப் பிரமாணங்கொண்டு தாபித்தல்வேண்டும். அங்ஙனம் தாபித்தல் கூடாதாயின், பாரம்பரியம் சிறிதாவது தளர்புற்றிடாது.

பாரம்பரியமே இக்கொள்கைக்குப் பிரபலசாட்சியமாகுமேனும், அதனுக்குச் சார்பாயுள்ள பிரமாணங்களுட் சிலவற்றையும் ஈண்டெடுத்துக்காட்டி, அதன்வலிமையை ஒரு சிறிது நிறுத்துவாம்.

## ஆதாரம்.

### (அகச்சாட்சியம்.)

(க) தமிழ்ச் சிவஞானபோதமே, அது சமஸ்கிருத மொழிபெயர்ப் பென்பதற்கமைந்த சாட்சியுத்தைத் தனதகத்துக் கொண்டிருக்கின்றது. எங்ஙனம்? "மலர்தலையுலகின்" என்னும் அதன் தலைச் சிறப்புப்பாயிரத்தின்கண் "நந்திமுனி கணத்தளித்தவுயர் சிவஞானபோத முரைத்தோன்" எனவும், கடைச்சிறப்புப்பாயிரத்தின் கண்ணே" எந்தை சனற்குமரனேத்தித் தொழவியல்பால், நந்தியுரைத் தருளுஞான நூல், சிந்தைசெய்து தானுரைத்தான் "எனவும் முன்னுள்ளதொரு நூலையே பின்னர் மெய்கண்ட நாயனார் தமிழிற்றந்து வைத்தார் என்பது தெள்ளிதின் அறியக் கிடத்தலினென்க.



இந்தப்பாயிரங்களிலே முன்னுள்ள தொருநூலைப் பின்னர் மெய்கண்ட நாயனார் தமிழிற்றந்தருளினர் என்பதன்றி, அவர் அதனைச் சமஸ்கிருதத்திருந் தெடுத்து மொழிபெயர்த்தார் என்பது பெறப்பட்டிலதே எனின், இந்தப்பாயிரங்களால் மெய்கண்ட நாயனார் சிவஞானபோதநூலைச் செய்யுமுன் பிறிதோர் சிவஞானபோதம் உண்டென்பது தெற்றெனப் புலப்படுகின்றது. அந்தச் சிவஞானபோதம் தமிழ்ப்பாஷையிலுள்ளதா, பிறபாஷையிலுள்ளதா என்பதே இங்கு நிச்சயிக்கக்கிடப்பது. தமிழிலே முன்னொரு சிவஞானபோதம் இருந்ததென்பதற்குச் சிறிதாவதோர் ஆதாரமில்லை. அங்ஙனம் ஒரு நூல் இருந்திருக்குமாயின், அதன்பேராவது எமக்கும் கிடைத்திருக்கும். அகத்தியம் இறந்துபட்டு விட்டதாயினும், அதன்பெயர் இன்றும் நின்று நிலவுகின்றது. அகத்தியத்தினும் அனந்தமடங்கு சிறந்த சிவஞானபோதம் ஒன்று முன்னிருந்ததாயின், அதன்பெயர் வச்சிரத்தம்பம்போல என்றும் நின்று நிலவிடும். நாலாயிர ஐயாயிர வருடங்கட்கு முன்னிருந்த அகத்தியத்தின் பெயர் இன்றும் நின்று நிலவிட, அதனினும் அனந்தமடங்கு சிறந்ததும், எழுநூற்றைம்பது வருடங்கட்கு முன்னிருந்ததுமாகிய சிவஞானபோதத்தின் பெயர் மணமுமில்லாமல் ஒழிந்துவிட்டதென்பது அங்கீகரிக்கத் தக்கதல்ல. ஆகவே முன்தொருநூல் சிவஞானபோதமென்னும் பெயரால் நிலவின்றென்பது சிறிதுங் கூடாது. அல்லதூஉம், முன்தொருநூல் சிவஞானபோதம் என்னும் பெயரோடு நிலவின்றாமாயின், அந்நூலைப்பார்த்துப் பிறிதொருநூல் செய்த மெய்கண்ட நாயனார், தாம் இயற்றிய நூலுக்கும் சிவஞானபோதம் என்றே பெயரிட்டு உலகத்தை மயக்கவைத்திட மாட்டார். அருணந்திநாயனாராவது உமாபதி நாயனாராவது சிவஞானபோதத்தை முதநூலாகக் கொண்டு தாம் இயற்றிய நூல்களுக்கு அந்த முதனூற்பெயரைக் கொடுத்திடாமையே இதனுக்குத் தக்க சான்றாகும்.

ஆகவே தமிழில் முன்தொருநூல் சிவஞானபோதம் என்னும் பெயரோடு இருந்தில தென்பதும், தமிழில் இருந்திலதாகவே, எமது சமயசாத்திரங்கட் கெல்லாம் நிலைக்களமாகிய சமஸ்கிருதத்திற்றானே அந்நூல் இருந்திருத்தல் வேண்டும் என்பதும், எனவே சமஸ்கிருதத்தில் இருந்து எடுத்தே மெய்கண்ட நாயனார் அதனைத் தமிழில் மொழிபெயர்த்தார் என்பதும் தட்டின்றிப் போந்திடும் என்க.

அற்றன்று, முன்னுள்ள சிவஞானபோதமே இப்போதும் உள்ளது; மெய்கண்டார் அந்நூலுக்கு உரைமாத்திரமே செய்தருளினர். என்பீராயின், மேலே எடுத்துக் காட்டப்பட்ட பாயிர வசனங்களிலே" உயர் சிவஞானபோத முரைத்தோன்" என்றும் "நந்தியுரைத்தருளு ஞான நூல் சிந்தை செய்து தானுரைத்தான்" என்றும் மெய்கண்ட நாயனார் நூலைச்செய்தார் என்று சொல்லப்பட்டிருக்கின்றதே யன்றி, நூலுக்கு உரைசெய்தார் என்று சொல்லப்படவில்லை. ஆகவே இக்கூற்றுச் சிறிதும் பொருந்தா தென்க. அன்றியும் மெய்கண்ட வள்ளலார் செய்த நூல் "சிவஞானபோதம்" என்னும் பெயரால் விளங்குவ தன்றி "சிவஞானபோதவுரை" என்னும் பெயரால் விளங்குவதுமில்லை. இதுகொண்டும் இக்கூற்றுச் சற்றும் பொருந்தாமை காண்க.

இந்தப்பாயிரங்கள் பிற்காலத்திருந்தார் சிலரால் செய்து நூலுடன் சேர்க்கப்பட்டனவாதலால், இவைகள் ஆதாரமாக மாட்டா எனின், கடைப்பாயிரம் மெய்கண்ட நாயனார் தம்மாலும், தலைப்பாயிரம் அவருடைய சிஷ்யருட்டலைமை பெற்ற அருணந்தி நாயனாராலும் செய்யப்பட்டன என்பது பிறிதோர் ஐதிகம். இநத ஐதிகங்கள் ஆதாரமின்றி எழுந்தன என்று கொள்வதற்கு எமக்கு அதிகாரம் இல்லை. அது கிடக்க, அந்தப்பாயிரங்களைச் செய்தார் யாராயினும் ஆக; அவ்விரு பாயிரங்களும் சிவஞானபோத நூலுக்கு முக்கியாங்கங்களாகத் தொன்று தொட்டு அந்த நூலோடு சேர்ந்து நிலவுற்று வருதலால், அவற்றை நாம் புறந்தருதல் கூடாது. அவை பொய்ச்சாட்சியங்களாமாயின், அவற்றின் பொய்மையைப் பிரமாணங்கொண்டு நிறுத்துதல் வேண்டும். இது கூடாதாயின் அவற்றின் சாட்சியங்களை நாம் தள்ளுமாறில்லை என்க.

(௨) சிவஞானபோதத்திலே "சத்து" "அசத்து" சதசத்து "அநநியம்" சூந்யம் "திதி" "சகசம்" முதலிய பலசித்தாந்த பரிபாஷா பதங்கள் சமஸ்கிருத பதங்களாகவே இருத்தலால், அந்நூல் ஆதியிற் சமஸ்கிருதபாஷையிற்றானே இருந்தது தென்பது நன்றாக வலியுறுத்தப்படும். சிவஞானபோதம் தமிழுக்குரியதோர் முதனூலாமாயின், அந்தப்பதங்களின் பொருள்களை எல்லாம் ஆசிரியர் தமிழ்மொழிகளாற்றானே விளக்கி இருப்பர். இன்னமும், அந்நூலின்கண் "அவத்திதன்" முதலிய வடமொழிப்பதங்களை நூலாசிரியர் எடுத்தாண்டிருப்பதும், அது சமஸ்கிருதத்திருந்தெடுத்து மொழிபெயர்க்கப்பட்ட தென்னும் கொள்கையை வலியுறுத்தும்.



(௩) இனி, சிவஞானபோதத்திலே "அகாரவுகாரமகாரம்" என்றும் "அஞ்செழுத்தாலுள்ள மாவுடைமை" என்றும் "கண்டதொரு மந்திரத்தால்" என்றும் பின்னும் பலவாறாகவும், மந்திரப் பிரசங்கம் கேட்கப்படுவதனாலும், மந்திரங்களுக்கெல்லாம் ஆதாரம் பதங்களும் வன்னங்களுமே யாதலாலும், மந்திர பதவன்னங்களனைத்தும் சமஸ்கிருதத்துக்கே சிறப்பாவன வாதலாலும், இவைகள் ஷடத்துவாக்களுட் சிறந்தனவாய்ச் சித்தாந்த சாத்திரக் கொள்கைகளுக்கு இன்றியமையாச் சிறப்பினவாய் நிற்குமாதலாலும், இவற்றை விளக்கப்புகுந்த நூல் ஆதியிலே சமஸ்கிருத நூலாகவே இருந்ததென்பதும், அதனையே ஆசிரியர் தமிழில் மொழிபெயர்த்தார் என்பதும் விவேகிகட்கெல்லாம் உடன்பாடாகும், இந்த நூலின்கண்ணே சமஸ்கிருதத்துக்குரிய மந்திரப் பொருள்கள் அமைந்து கிடத்தலை நோக்கியே, இதனைவிரித்து விளக்கப் புகுந்த அருணந்தி சிவாசாரியர், தமிழ்மொழிக்குச் சிறிதும் அருகமல்லனவாய பஞ்சப்பிரம மந்திரங்களையும் பிறவற்றையும் சிவஞான சித்தியாரிலே எடுத்துக் காட்டுவாராயினர்.

முன்னொரு காலத்திலே தமிழிலும் மந்திரங்களமைந்திருந்தன என வாதிப்பாரும் சிலருளராவரேல், அவர் தமிழ் அட்சரங்கள் மந்திரசத்தங்கட் குரியனவல்ல என்பதை மந்திர வித்தையின் வல்லார்வாய்க் கேட்டறிக. அன்றியும் தமிழிலே யாதொரு மந்திரமாவது இந்தக் காலத்தில்லாமையும் அவர் கூற்றைப் புறங்கண்டிடுமென்க.

அற்றன்று; ஆசிரியர் இவற்றை எல்லாம் சமஸ்கிருத ஆகமங்களிற் கண்டபடி சிவஞானபோதத்தில் திரட்டி வைத்தாரன்றி, யாதொருநூலை மொழிபெயர்த்தாரல்லர் என்பீராயின், இங்ஙனம் வாதிப்பதால் தமிழ்மொழிக் கெய்தற்பாலதாகிய சிலாக்கியம் சிறிது மில்லை என்க. ஆனால் அது சிவஞானபோதத்துக்குரிய சிறப்பைப் பெரிதுங் குறைத்திடுமாம். சிவஞானபோதம் சிவவாக்காய் நின்று நிலவும் என்னும் கொள்கையை மறுத்து, அது மானுடவாக்கே என்று நாட்டிவிடக் கருதுவது, அதன் அளவிறந்த பெருமையைத் தளர்புறுத்தி விடுதன் மாத்திரையேயன்றி மற்றன்றுமென்க. நன்றுகூறினீர் தேவார திருவாசகங்கள் யாதொரு சிவவாக்கின் மொழிபெயர்ப்பாகாமை பற்றி, அவை தமது சிறப்பிற் குறைந்திடுமோமோ என்பீரேல், தேவார திருவாசகங்கள் தோத்திர ரூபமும் சிவஞானபோதம் சாத்திரரூபமுமா

மாதலின், தோத்திர ரூபங்கட்குரிய சிறப்பைச் சாத்திரரூபங்கட் கமைத்தல் சாலாதென்க. அன்றியும் பக்குவான்மாக்கட்கு இன்றியமையாச் சிறப்பிற்றாய், சகலாகம சாரமாயுள்ள சிவஞானபோதத்தை இறைவன் தான் திருவாய் மலர்ந்தருளிய ஆகமங்களுட் புகட்டி வைத்திலனேல், அது அவனுடைய காருண்ணியத்துக்கும் பெருங்குறைவை காட்டிவிடும் என்பதுங்காண்க.

(௪) சிவஞானபோதத்தின்கண் அமைந்துவிளங்கும் அகச்சாட்சியம் பின்னுமொன்றுளது அதனையும் எடுத்துக்காட்டி அப்பாற் புறச்சாட்சியத்திற் செல்வாம்.

மெய்கண்ட நாயனார் பன்னிரண்டு சூத்திரங்களை மாத்திரமே ஆசிரியயாப்பினும், அவற்றின் வார்த்திகத்தை வசனயாப்பு வெண்பா யாப்பினும் செய்துவைத்தமையால், அவர்முதனூலை ஒருநடையினும் அந்நூலைக் குறித்த தமது விளக்கத்தைப் பிறிதொரு நடையினும் செய்துவைத்தார் என்பது நன்கனுமிக்கக் கிடக்கின்றது. அவர் சூத்திரங்களை முதனூலில் இருந்து எடுத்து மொழிபெயர்த்திலராயின், தாம் செய்யப்புகுந்த நூலை விரித்து அதனை ஓரே யாப்பிற்றானே ஒருங்கு செய்திருப்பார்.

நூலாசிரியர் தாமே நூற்குரை செய்வதும் உரையகத்தே உரைச் சூத்திரங்கள் பெய்வதும் வழக்காமாயினும், நூலை ஒருயாப்பினும் உரைச் சூத்திரங்களைப் பிறிதொரு யாப்பினும் செய்தமைக்குக் காரணம் வேண்டப்படும். அந்தக் காரணம், நூல் தமது வாக்கன்றென்பதைக் காட்டுவதேயாம்.

## புறச்சாட்சியம்.

(௫) இனிப்புறச் சாட்சியங்களுட் சிலவற்றை எடுத்துக்காட்டுவாம்:—

மெய்கண்டதேவர்பால் உபதேசம்பெற்று அவர் செய்தருளிய சிவஞானபோதத்தைச் சிவஞான சித்தியார் என்னுந்திப்பிய சாத்திரத்தில் விரித்துரைத்தருளிய அருணந்திதேவர் தமது நூலின்கண்ணே.

"............முன்னானிறைவனந்திதனக்கியம்பநந்தி
கோதிலருட்சனற்குமாரற்குக்கூறக்



குவலயத்தினவ்வழியெங்குருநாதன்கொண்டு
தீதகலஎமக்களித்தஞானநூலை"

என்றெடுத்தோதி இருப்பதால் மெய்கண்டார் செய்தருளிய "ஞானநூல்" சிவபெருமானால் நந்திதேவருக்கும், அவரால் சனற்குமாரருக்கும் உபதேசிக்கப்பட்டதென்பதும், அதனையே மெய்கண்டார் தமிழுலகம் ஈடேறும்பொருட்டு மொழிபெயர்த் தருளினார் என்பதும், நன்கு பெறப்படும். அந்நூல், ஆதியில் தமிழ்ப்பாஷையிற்றானே உளதாயின், அதனை மெய்கண்டார் மீட்டுந் தம்பெயராற் செய்தற்கோர் அவசியமின்மையால், அது பிறிதொருபாஷையிற்றானே இருந்ததென்பதும், அந்தப்பாஷை தமிழன்றாகவே, அது சமஸ்கிருதமேயாம் என்பதும் இனிது போந்திடுமென்க.

(௬) இன்னமும் அருணந்திசிவாசாரியர் "ஆதலினாலிவையெல்லாம் அருமறையாகமத்தே அடங்கும்" என்றும் "அருமறையாகமம் அனைத்து முரைக்கையினால் அளப்பரிதாம் அப்பொருளை" என்றும், வேதநூல் சைவநூலென்றிரண்டே நூல்கள் வேறுரைக்கு நூலிவற்றின் விரிந்தநூல்கள்" என்றும் சமஸ்கிருதத்துள்ள வேதசிவாகமங்களின் பெருமையை எடுத்துப்பாராட்டி, அவற்றின் பொருளையே சிவஞானசித்தியாரில் எடுத்து விளக்குகின்றமையால், அவர் விரித்துரைக்கப் புகுந்த "ஞானநூ" லாகிய சிவஞானபோதம், வேதம் அல்லது சிவாகமமேயாம் என்பதும், எனவே அதுவும் சமஸ்கிருத நூலேயாம் என்பதும் நன்கனுமிக்கத் தக்கனவாம்.

அற்றன்று; வேதாகமங்கள்தாமும் ஆதியிலே தமிழில் உள்ளன என்று கொள்ளலாகாதோ எனின், நாம் அபிமானம்பற்றி ஓர் ஓர்மதத்தை எடுத்துக்கொண்டு அதனைத் தாபித்துவிடுமாறு பலவாறு ஆரோபிக்கலாம். இந்த ஆரோபங்கள் நியாயமுகத்து நிலைநிற்க வல்லனவோ என்பதை நாம் சித்த சமாதானத்தோடு சிந்தித்தல்வேண்டும். தமிழிலே வேத சிவாகமங்கள் இருந்தன என்பதற்கு நமக்கு இம்மித்துணையாவது ஓர் ஆதாரம் உண்டா? முன்னொருகாலத்திலே இருந்தன எனக் கொள்வதுண்டாயினும் அருணந்தி சிவாசாரியர் காலத்திலே, அதாவது எழுநூறு, எழுநூற்றைம்பது வருடங்களுக்கு முன்னே, தமிழில் வேதசிவாகமங்கள் இருந்தனவென நாம் துணிவது கூடுமா?

கூடாதபோது அருணந்தி சிவாசாரியரால் குறிப்பிடப்பட்ட வேத சிவாகமங்கள் சமஸ்கிருத வேதசிவாகமங்களே என்பதும் அந்த வேத சிவாகமங்களுக்குரிய சிவஞானபோதமும் சமஸ்கிருத நூலேயாம் என்பதும் தட்டின்றிப் போந்திடும் என்க.

இனித்தமிழிலே வேதசிவாகமங்கள் இருந்தன என்று நாம் வாதிக்கத்துணியுமுன், எம்மெல்லார்க்கும் உயர்வொப்பில்லாப் பெருஞ்சிறப்பினவாய் அமைந்து விளங்கும் தேவார திருவாசகச் சுருதிகளை நாம் சிந்தித்தல்வேண்டும். அவற்றிலே வேதசிவாகமங்கள் என்று எடுத்துக் காட்டப்படுவன வெல்லாம் இருக்காதி நான்கும் காமிகாதி இருபத்தெட்டுமே என்பது நன்கு தொனிக்கும்போது, நாம் அந்த மெய்யறிவாளர் தம்மினும் பேரறிவுடையோர்போல நடித்து, சமஸ்கிருதவேத சிவாகமங்களைப் புறக்கணித்து, எமது வேத சிவாகமங்கள் தமிழில் இருந்தன என்று சாதிக்கத்துணிவது, எமது சமயத்துக்கும் சாதிக்கும் பெருந்துரோகம் செய்வதாய்முற்றும் என்பதை நம்மவர் தம்மனதிலே அழுத்திக் கொண்டால் பெருநன்மையாகும்.

(எ) இனி, வேத சிவாகமங்களை எல்லாம் அதிநுட்பமாக ஆராய்ந்து சைவசித்தாந்தத்துக்குப் பெருந்துணையாக அனேக நூல்களையும் வியாக்கியானங்களையும் சமஸ்கிருதத்தினும் தமிழினும் செய்தருளிய அதிவருணாச்சிரம ஆசாரிய வரியராகிய சிவாக்கிரயோகிகள் தாம் இயற்றிய சமஸ்கிருத சிவஞானபோத பாடியத்தில்

“ரௌரவதந்திராந்தர்க்கதம் சிவஞானபோதாக்யம் சாஸ்திரம்”

(இரௌரவாகமத்துள்ளே அடங்கியது சிவஞானபோதம்எனப்பெயரிய சாஸ்திரம்) என்று வெளிப்படையாக எடுத்துக்கூறி இருக்கிறார். இந்த மகானுபாவர் இரௌரவாகமத்திலே சிவஞானபோதம் அமைந்து கிடந்தமையினைத் தாம் நேரிற் காணாமல் இங்ஙனமானதொரு பெரும் பொய்யைச் சொன்னார் என்று நாம் சொல்லத்துணிவது முறையாகாது. அல்லாமலும் வேதசிவாகமங்களிற் பெரிது பயின்றுள இந்த மகோத்தமர் உண்மையையறியாது இங்ஙனம் மலைவுற்றார் என்றும் நாம் சொல்வது கூடாது. ஆகவே அவருடைய சாட்சியம் இவ்விஷயத்தில் பெருவலியுடைத்தென்க.



(ஏ) இன்னமும் இந்தச்சிவாக்கிரயோகிகள் தாம் இயற்றியருளிய சிவஞான சித்தியார் உரையிலே,

“இரௌரவாகமத்திலே பாசவிமோசனப் படலத்திலே அனுஷ்டுப்புச் சந்தசாக த்வாதச சூத்திரம் சகலாகம சாரமாயிருக்கும். அதை உமக்கு உபதேசம் பண்ணுகிறோம். அதைத் தேவமுனிவ கணங்களுக்குப் பக்குவமறிந்து போதியுமென்று” ஸ்ரீபுங்கபுஞ்ச காதித் துவாதச சூத்திரத்தையும் அதனுடைய அர்த்தத்தையும் சிவபெருமான் நந்திநாயனாருக்கு உபதேசம் பண்ணினார்

என்று எடுத்துக்காட்டியுள்ளார். இவர் இந்த நுண்ணிய விபரங்களை எல்லாம் அதாவது சிவஞானபோதம் அமைந்து விளங்கும் ஆகமத்தின் பெயர், அவ்வாகமத்தில் அது அமைந்து விளங்கும் படலத்தின் பெயர், அந்தப்படலத்தில் அது புனையப்பெற்றுள சந்தசின்பெயர் முதலிய இந்தப் பலநுணுக்கங்களை எல்லாம் தமது மனம் போனவாறு கற்பித்துச் சுத்தப்பொய்யை எழுதிவைத்தார் என்று சொல்வது மரபாமோ?

(ஐ) இனி, சிவாக்கிரயோகிகள் செய்தருளிய சித்தியார் உரைக்குப் பாயிரஞ் செய்தார் (இவர்பெயர் புலப்பட வில்லையாயினும், இவர் அவ்வுரைக்குப் பாயிரஞ் செய்தற்குரிய பெரியாராய் விளங்கினர் என்பதைச் சந்தேகித்தல் கூடாது.) ஒருவர்

“கைலைப்பரமனன் றுரைத்த
திடமிகுவடமொழியடைவுறத்தெரிந்து
× × × × ×
தென்னூலுரையாற்றெருளுறச்செய்து
முன்னூனுமம்முறைபெறநிறுவிய
நன்னெறிதருஞ்சிவஞானபோதத்தை”

என்றெடுத்துக்கூறித் தமிழ்ச்சிவஞானபோதம் சமஸ்கிருதமொழிபெயர்ப்பே என்பதைத் தெளிவுற விளக்கிப் போந்தனர்.

இன்னமும் சிவஞான சித்தியாருக்கு உரை கண்டருளிய அறுவருள் ஒருவராகிய நிரம்ப வழகியார் செய்த உரைக்குப் பாயிரம் புகன்ற பெருந்தகையாளர் ஒருவர்

"எந்தைஎம்பெருமான் நந்தித்தலைவர்க்
காறிரண்டாகக்கூறியவஞ்ஞான்
றினிமைகொணந்திமுனிவர்கணத்தாங்
கருளுபதேசப்பொருளெனவறைய.
× × × × × ×
× × × மெய்கண்டானென
நாமந்தோய்ந்தகாமங்காய்ந்தோன்
தன்னுழித்தழுவவந்நூனுவல"

என்று சிவஞானபோதத்தின் வரலாறு எடுத்தோதியமையும், அது சமஸ்கிருதத்தின் மொழிபெயர்ப்பே என்பதே இனிது புலப்படுத்தும்.

(௧௦) சிவஞானபோதத்தின் பெருமையினைத் தமிழுலகம் அறிந்து ஈடேறுதற் பொருட்டுத் திருவவதாரஞ் செய்தருளிய சிவஞானயோகிகள், தாம் இயற்றிய சிற்றுரையிலே "மலர்தலையுலகின்" என்னுஞ் சிறப்புப்பாயிரத்துக்கு உரைசெய்யுமிடத்து

"சிவஞானபோத மென்னும் வடநூலை—மொழிபெயர்த்துக்கூறி வார்த்திகமென்னும் பொழிப்புரையுஞ் செய்தோன்........................ மெய்கண்ட தேவன் என்னுஞ் சிறப்புத்திரு நாமமுடையோன்"

என்று இங்ஙனமே சிறிதாவது சந்தேக விபரீதங்கட் கிடமின்றிச் சிவஞானபோதம் சமஸ்கிருத சூத்திரங்களின் மொழிபெயர்ப்பே என்பதை வெளிப்படையாக எடுத்துக்காட்டிப் போந்தார்.

சித்தாந்தக் கடலை வடித்துக்குடித்த மகாமேகமாகிய இந்தமகா யோகிகள், உண்மையை அறியாது மயங்கினரென்று நாம் சொல்வது கூடுமோ? ரௌரவாகமத்திலே சிவஞானபோதச் சூத்திரங்கள் அமைந்துகிடந்தமையினைத் தாம் காணாது, இந்தச் சைவத்திருவாளர் இங்ஙனம் எழுதிவைத்திடுவரா? வைத்திடுவார் எனின், அவருடைய உரையை யாரோ பொருளென மதித்திடுவார்? அந்த உரையைப் பொய்யுரையென்று யார்யாரும் புறக்கணித்தன்றோ ஒதுக்கிவிடுவர்! அதனை ஒதுக்கிவிட்டால் சிவஞானபோதத்தின் சிறப்பென்படும்? அந்தச் சிறப்பால் தமிழுலகத்துக்கு எய்திய பெருமை என்படும்?



சிவஞானயோகிகள் உண்மையை அறியாதிருந்தாரல்லர். அவர் சனங்களிடத்திருந்த விசுவாசத்தைத் தளர்புறச் செய்வது மரபாகாதெனக்கொண்டு அக்கொள்கையை உடன்பட்டார்போலக் காட்டினரெனின் இதுவா சிவமணங்கமழும் பெருந்தகையாளர் செய்யத்தக்கது? அதுவும் சமயவிஷயத்திலா அவர் அங்ஙனம் செய்யத்தக்கது? உண்மையாகாததொன்றை உலகினர்க்கும் உண்மையன்றெனத் தெருட்டுவதன்றி, அவர்பொருட்டாக அதனை உண்மை என்று நடித்தலா சிவபூசாதுரந்தரராகிய பெரியார்க் கிலக்கணம்? (நாம் எடுத்துக்கொண்ட மதத்தைத்தாபித்து விடுதற்காகப் பெரியாரைப் பொய்ப்படுத்துவது முறையாகாதென்க)

அன்றியும் சிவஞானபோதம் தமிழிற் செய்யப்பட்டதொரு முதனூலேயன்றி மொழிபெயர்ப்பன்றென்பது சிவஞான யோகிகள் கருத்தாமாயின், அவர் அஃதோர்மொழிபெயர்ப்பேஎன்னும் கொள்கையை வலிந்திழுத்துத் தமதுரையுட் புகட்டி வைத்திடார். "உயர் சிவஞான போதம் உரைத்தோன்" என்னும் வாக்கியத்துக்கு அந்தவாக்கியப் பொருளை மாத்திரமே எழுதிவிட்டு அப்பாற் சென்றிடுவர். அங்ஙனம் செய்யாது, அவ்வாக்கியப்பொருளை விரித்து" சிவஞானபோதம் என்னும் வடநூலைமொழிபெயர்த்து வார்த்திகமென்னும் பொழிப்புரை செய்தோன்" என்று இங்ஙனம் தமக்கு உடன்பாடல்லாத கொள்கையை வருவித்து விரித்திடமாட்டார்.

அன்றியும் தமிழ்ச் சிவஞானபோதத்துக்குச் சமஸ்கிருதபோதம் முதனூலன்றென்பது சிவஞானயோகிகள் கருத்தாமாயின், அவர் தமது உரைகளிற் பலபல இடங்களிலே முதனூற் கொள்கையை எடுத்துக் காட்டித் தமது உரையைச் சிறப்பித்திருக்க மாட்டார். அவர் முதனூற்கருத்தைப் பெரிதும் எடுத்தாண்டிருப்பதால், அம்முதனூல் ஈசுர வாக்கென்பதும், அதிலிருந்தே தமிழ்நூல் மொழிபெயர்க்கப்பட்டதென்பதும் அவருடைய உள்ளத்திற் பதிந்திருந்ததோர் உறுதிக்கொள்கை என்பதை ஒருவாற்றானு மறுக்கல் கூடாது.

(௧௧) மெய்கண்ட நாயனாரால் சிவஞானபோதம் தமிழ்மொழியிற் செய்யப்படுதற்கு வெகுகாலத்துக்கு முன்னிருந்த ஸ்ரீமாந் மாணிக்கவாசக சுவாமிகளுக்குச் சிவபெருமான் உபதேசஞ் செய்தருளுமாறு

குருவடிவுகொண்டு சென்றருளியபோது தமது திருக்கரத்திற் சிவஞானபோதத்தைத் தாங்கிச் சென்றார் என்று புராணங் கூறுமாற்றால், சிவஞானபோதநூல் அக்காலத்துமுள தென்பது செவ்விதிற் போந்திடும்.

அன்றியும் மெய்கண்டார் காலத்தினும் மிகப்பழையதாயுள்ள இரௌரவாகமத்துத் தீக்ஷாவிதிப் படலத்திலே

"பாவநாதீக்ஷயாசைநம் சுத்தம்கிருத்வாயதாவிதி
சிவஞானபோதசாஸ்திரம்தத்தத்யாத்பத்யாதிகிருந்த:"

(சீடனுக்குப் பாவனாதீக்கைசெய்து சிவஞான போதத்தைக் கொடுக்க) என்று சொல்லப்பட்டிருத்தலினாலும் இவ்வுண்மை வலியுறுத்தப்படும் (காசிவாசி ஸ்ரீ செந்திநாதையரவர்கள் இயற்றிய "சிவஞானபோத வசனாலங்கார தீபபூமிகை கூம் பக்கங்காண்க.)

ஆகவே மெய்கண்டார் காலத்துக்குமுன் சிவஞானபோதம் உண்டென்பதும், அது தமிழிற்றானே இருந்ததாயின் மெய்கண்டார் தாமியற்றிய நூலுக்கும் அந்தப்பெயரைக் கொடுத்திடமாட்டார் ஆதலால், அது சமஸ்கிருதத்திற்றானே இருந்ததென்பதும், அதனையே மெய்கண்டார் மொழிபெயர்த் தியைசெய்தார் என்பதும் தெற்றெனப்போந்திடுமெனக.

ஸ்ரீமந் மாணிக்கவாசக சுவாமிகள் தமிழரேயாதலின் அவருக் குபதேசஞ் செய்யுமாறு குருமூர்த்தங்கொண்டு சென்ற இறைவன் திருக்கரத்திருந்த நூலும் தமிழ்நூலாகவே இருந்திருத்தல்வேண்டும் என்று வாதிப்பாரும் சிலருளர். மாணிக்கவாசகப் பெருமான் வடமொழி தென்மொழி இரண்டினும் வல்லராய் மந்திரி நியோகம் பூண்டிருந்தாராதலின், அவருக்கு வடமொழியுபதேசம் சாலவும் சால்புடைத்தேயாம். அவர் "ஆகமகலையும் எக்கலையும் கற்றுணர்ந்தார் ஈரெட்டாண்டெல்லைதனில்" என்று புராணங் கூறுதலும் இதனை வலியுறுத்தும்—தமிழ்மக்களுக்கருச் செய்யப்படும் மந்திர தந்திரோபதேசங்கள் இன்றும் சமஸ்கிருதத்திற்றானே செய்யப்பட்டுவருவது உலகறிந்த பிரத்தியக்ஷம்.

(கஉ) சமஸ்கிருதத்திலே சிவஞானபோதம் என்னும் பெயரோடு யாதானுமொருநூல் இருப்பதை நாம் காண்பதில்லையாயின், தமிழ்நூல் அதிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதென்னும் கொள்கையை நாம் ஒருபோது சந்தேகிக்கலாம். சமஸ்கிருதநூல் உலகமெல்லாம் அறியும்படியாக நின்று நிலவும் பொழுது நாம் அவ்வாறு சந்தேகித்தல் சிறிதும் கூடாது.



தமிழ்ச் சிவஞானபோதத்திலே அது அங்ஙனம் மொழிபெயர்க்கப்பட்ட தென்பது சொல்லப்படவில்லையே எனின், மெய்கண்டநாயனார் தாம் இயற்றிய நூலின்கண்ணே நூல்வந்தவரலாறு சொல்லப்புகுந்தாரல்லர். அவர் சொற்சுருக்கமும் பொருட்பெருக்கமுமுறச் சூத்திர ரூபமாகச் செய்தநூலிலே நூல்வரலாறு சொல்லப்பட்டிருக்குமென்று நாம் எண்ணுவது சிறிதும் கூடாது. நூல்வரலாறு பாயிரத்துக்குரியதோர் இலக்கணமாதலின், அது அந்நூற் பாயிரத்திலே சொல்லப்பட்டதென்க. இதுபற்றியும் நாயனார் தாம் அதனைச் சொல்லாதொழிந்தார் என்க.

வடமொழிச் சிவஞானபோதத்திறுதிச் சூத்திரத்திலே "சிவஞானபோதே சைவார்த்த நிர்ணயம் வித்யாத்" என்று சிவஞானபோதத்தை வேறு வைத்தோதி இருத்தலால், அது தமிழில் இருந்தெடுத்து மொழிபெயர்க்கப்பட்டதன்றி தமிழ்நூல் அதிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டதெனல் சாலாதெனின், வடமொழி நூல்கள் முடியுமிடத்து, இங்ஙனமே இந்நூல் முடிந்தது என்று அந்நூற் பெயரைச் சுட்டிக்காட்டி முடிபுரை கூறுவது பெருவழக்காதலால், இவ்வழக்குக்கொண்டு வடமொழிச் சிவஞானபோதம் தன்பெயரால் பிறிதொருநூலைச் சுட்டிற்றென்றல் அமையாதென்க.

அன்றியும் தமிழ்ச் சிவஞானபோதம் வடமொழியிலிருந்தெடுக்கப்பட்டதென்று வாதித்தற்பொருட்டாக, அதனைக் கரவிற் கவர்ந்து வடமொழிப்படுத்தி வைத்தவர்கள், தமது களவை எளிதிற் காட்டிக்கொடுத்தற்கமைந்ததொரு வாக்கியத்தை அம்மொழிபெயர்ப்பின்கட்புகட்டி வைத்தார் என்று கொள்வது சிறிதும் பொருந்தாதென்க.

இனி இரௌரவாகமம் இந்தக்காலத்திலே கிடைப்பதரிதாதலால் அதனிடத்தே சிவஞானபோதம் உண்டென்பதை நம்புமாறெங்ஙனமெனவினவுவாருஞ் சிலருளர். இரௌரவாகமத்தையும் அதனகத்தமைந்துள்ள சிவஞானபோதத்தையும் கண்டமையாலன்றே சிவாக்கிர

யோகிகள் முதலிய பெருந்தலையாளர் அது அந்த ஆகமத்திலே இன்ன படலத்திலே இன்ன அத்தியாயத்திலே உள்ளதென்று தெள்ளிதின் விளக்கிப் போந்தார்கள்—இந்தக் காலத்திலே அந்த ஆகமம் கிடையாமைபற்றி அது கிடைக்கப்பெற்றார் கூறிய சாட்சியத்தை நாம் புறந்தருதல் மரபாகாது.

வேறுசிலர் இரௌரவாகமத்திலே சிவஞானபோதம் இல்லை என்றும் வாதிக்கப் புறப்படுவர். இவர்கள் இங்ஙனம் வாதித்தற்குக்கொண்ட ஆதாரம் யாதோ யாமறிகிலம். இவர் எங்காவது ஒரு பிரதியைக் கண்டு தான் இங்ஙனம் சாதிக்கத் துணிந்தாராயினும், அத்துணிபுதிரம் பெறமாட்டாதென்க—என்னை? ஆகமங்களை எழுதிவைப்பார் எல்லாம் தத்தமக்கு வேண்டிய பாகங்களை யன்றிப் பூர்த்தியுற எழுதிவைப்பது பெரிதுமில்லை. இரௌரவாகமத்திலே சிவஞானபோதம் இல்லையென்று சாதிக்க முயலுவோர், பலதிசைகளினும் இருந்து பலபிரதிகளை வருவித்து, அவற்றுள் ஒன்றிலாவது சிவஞானபோதம் இல்லை என்பதைக் காட்டுதல்வேண்டும். அல்லாக்கால் அவர்களுடைய கொள்கை நிலை பெறமாட்டாதென்க. இங்ஙனமானதொரு சாக்ஷியம் இதுகாறும் பெறப்பட்டிலதாகவே, சிவஞானபோதம் இரௌரவாகமத்துள்ளதெனும் பரம்பரைக்கொள்கை அழிவுற்றிட மாட்டாது. ஆனால் அந்தக்கொள்கையை நாமெல்லாங் காணக்கிடக்கும் சமஸ்கிருத சூத்திரங்களே வற்புறுத்துச் சாதிக்கும்.

இந்தப் பாரம்பரியக் கொள்கையைத் தாபித்தற் கமைந்த ஏதுக்கள் பின்னும் பலவுள—சிவஞானபோதம் பன்னிரு சூத்திரத்ததாதலின் நாமும் இப்பன்னிரண்டு ஏதுக்களோடு இவ்வியாசத்தை முடிக்கின்றோம். இதனை முடிக்குமுன் நம்மவர்க்கு நாம்சொல்லவேண்டுவதொன்றுண்டு. பாரம் பரியத்தாற் பெருஞ் சிறப்புவாய்ந்தேமாகிய நாம் பாரம்பரியஞ் சிறிதுமில்லாத மேலைத்தேசத்தாருடைய சரித்திர ஆராய்ச்சி முறையை அநுசரித்து மோசம்போவது முறையாகாது, நாம் நமது செந்தமிழணங்கைச் சிறப்புச்செய்கிறேம் என்னும் கருத்தால், அவளை 'அமங்கலியாக்கி விடுவது யுக்தமாகாது—சமயவித்தையளவிலே தமிழுக்குச் சமஸ்கிருத உதவி இன்றியமையாதது. தமிழ்ப் பெருமையை எடுத்துப் பாராட்டுவாரில் நாம் எவர்க்காவது பின்னிற்க மாட்டேம். சிவஞானயோகிகள் முதலிய முனிபுங்கவர்களும் அதன்



பெருமையை அறியாதிருந்தாரல்லர். அவர்கள் அதன் பெருமையை நிறுத்தும் பொருட்டே" இருமொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவர் "என்றும்" தொண்டர் நாதனைத் தூதிடைவிடுத்தது முதலையுண்ட பாலனையழைத்ததும்......................தண்டமிழ்ச் சொலோ மறுபுலச் சொற்களோ சாற்றீர் "என்றும்" பசுந்தமிழேனை மண்ணிடைச் சில இலக்கணவரம்பிலா மொழிபோல் எண்ணிடப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ "என்றும் கூறிப் போந்தார்கள். ஆனால் அவர்கள் தமிழை உயர்த்துக் கூறினாரேனும், சமஸ்கிருதத்தைத் தூரம்போக்கியதில்லை. தமிழுஞ் சமஸ்கிருதமுமாகிய இரண்டும் தைவிகசம்பந்தமுடையன என்பதே எமது கொள்கை" ஆரியமும் செந்தமிழுமானான் கண்டாய் "என்று ஆளுடையரசுகள் திருவாய் மலர்ந்தருளியதும், "ஆரியமுந் தமிழும் முடனே சொலக்காரிகையார்க்குக் கருணை செய்தானே" என்று திருமூலநாயனார் அருள்புரிந்ததும் இக்கருத்துப் பற்றியேயாம். இவ்விருபாஷைகளின் தைவிக சம்பந்தத்தைக்குறித்து நாம் எழுத உத்தேசித்திருக்கும், "பாஷோற்பத்தி"யில் விளக்குவோமாதலின் இவ்வளவில் முடிக்கின்றோம்.

யாழ்ப்பாணம்
காலயுக்தி௵
பங்குனி௴ ௧௨

ச. சபாரத்தின முதலியார்.

# இந்துதேச சரித்ர காலக் குறிப்புகள்.

## (Chronological Notes of Indian History.)

(136-ம் பக்கத்தொடர்ச்சி.)

1704-1731 விஜயரங்க சோக்கநாதன். மதுரை நாயக்கர் வம்ச 11-ம் அரசன். திருச்சிராப்பள்ளி தலைநகர்.

தாயுமானவர். கேடிலியப்பபிள்ளையின் குமாரர். சொக்கநாத நாயக்கரின் ஸர்வாதிகாரி. ஷை சொக்கநாதரின் மனைவி, தாயுமானவர்மீது காதல் கொண்டதாயும், அதனால் தன் பதவியை வெறுத்துத் துறவறம் பூண்டுபோய் ராமநாதபுரம் ஜில்லாவில் தேவநகர் என்ற இடத்தில் வசித்ததாயும் சொல்லப்படுகிறது. மரணம் 1742.

—(Ten Tamil Saints).

1704 திருவாரூர் ஒப்பிலாமணி தேசிகர். கும்பகோணம் ஸ்தல புராணம் பாடினார்.

—(13 செந்தமிழ் 186, 1718ஐயும் பார்க்கவும்)

1707 மதுரைக் குன்னத்தூர் சத்திரம் விஜயரங்க சொக்கநாதரால் தான (தாம்ர) சாஸனம் செய்விக்கப்பட்டது.

707-1761 1-ம் பஹதூர் ஷா. ஔரங்க் ஸீப் மகன். தில்லியிலாண்ட முகல் சகரவர்த்தி.

709-1721 ராமநாதபுரம் சீமையில் த்வாதச வர்ஷப்பஞ்சம்.

—(மார்டின் பாதிரி).

1712 அருணாசலக்கவிராயர். தரங்கம்பாடிக்கடுத்த தில்லையடிக் கிராமத்தில் வேளாளர் குலத்தில் பிறந்தார்.

இவர் இயற்றிய நூல்கள்:—

1. அயோமுகி நாடகம்.
2. சீர்காழிப் புராணம்.
3. சீர்காழிக்கோவை.
4. அநுமார் பிள்ளைத்தமிழ்.
5. ராமநாடகம் (60-ம் வயதில்).

அந்திய காலத்தில் சிவபண்டாரமாய் 1779ல் மரணமானார்.

—தமிழ் ப்ளூடார்க்.

1718 (ஏவிளம்பி) திருவாரூர் ஒப்பிலாமணிதேசிகர், தஞ்சை சரபோஜி மஹாராஜன் ஸதஸில் சிவரஹஸ்யம் அரங்கேற்றினார். இவர் 1704ல் கும்பகோண புராணம் பாடினார்.

—(13 செந்தமிழ் 186.)

1721 சீமையில் பார்லிமெண்ட் சட்டநிரூபணம். இதன் ப்ரகாரம் இந்தியாவில் செய்த சீட்டிகளும், சாயத்துணிகளும் இங்கிலாந்தில் உபயோகிக்கலாகாது.



1723 (1779 விக்ரம்) பீமசேனர், காவ்யப்ரகாசம் என்ற ஸம்ஸ்கிருத அலங்காரசாஸ்த்ரத்துக்கு உரைஎழுதினார்.

ஸம்வத் ஶ்ராஹா நீவமுநிஸை (1779)
க்ஞாதே மாஸே மங்கள ஸுதி,
த்ரயோதஶ்யாம், ஸோமவாரே,
ஸமாப் தோயம் ஸுதோதநி

ப்ரஸந்நராகவம் எழுதிய ஜயதேவரைப்பற்றி பீமசேனர் கூறுகிறார்.

1729 சிவகெங்கை ஜமீந்தாரி. ராமநாதபுரம் சீமையிலிருந்து 5-ல் 2 பாகம் பிரித்து சிவகெங்கை என்ற தனி ஜமீந்தாரி ஆக்கப்பட்டது.

1730 சிவகெங்கை ராமநாதபுரம் ஜமீன்தாரிகள் தஞ்சை ஆட்சிக்குள்ளாயின.

30-1769 விஜயரகுநாதத்தோண்டமான். புதுக்கோட்டை ராஜன்.

31-1736 மீனாக்ஷி. மதுரை நாயக்கர் வம்சக் கடைசி அரசி. திருச்சினாப்பள்ளித் தலைநகர்.

32-1745 நல்லாப்பிள்ளை. பாரதம் பாடியவர். தெய்வானைப் புராணமும் இயற்றியவர். பிறப்பிடம்-முத்தாலம்பேடு. இறந்தது-1745ல்.

—(தமிழ் ப்ளூடார்க்).

1733 செங்கல்பட்டுச்சீமையில் பஞ்சம்.

1736 சந்தா சாகிப் மதுரைமீது படையெடுத்துவந்து, வெற்றிக் கோலத்துடன் அதைத்தன்வசமாக்கிக்கொண்டான். இத்துடன் மதுரை நாயக்கர் வம்சமும் ஒழிந்தது.

1738 சதாசிவேந்த்ர ஸரஸ்வதிகளுக்கு புதுக்கோட்டைத் தொண்டமான் தானசாஸனம் அளித்தார்.

இவர் இயற்றிய நூல்கள் :—

(1) ப்ரம்ம ஸூத்ர விருத்தி
(2) யோகஸூத்ர விருத்தி
(3) ஆத்ம வித்யாவிலாஸம்

} ஸம்ஸ்க்ருதம்.

1741 ஸதார மஹாராஷ்டரத்தலைவரான ராகோஜிபோன்ஸ்லே சந்தா ஸாஹிபைத் தோற்கடித்தார்.

மதுரை ராஜ்ய முழுமையும் அராஜகக்கலகம்.

1742 தாயுமானவர் மரணம்.

1742 தஞ்சையிலாண்ட ஷாஹுஜியை ப்ரதாபசிங் விரட்டிவிட்டு, தஞ்சையரசை யபகரித்துக் கொண்டான். சென்னை ஆங்கிலக் கம்பனி ராஜாங்கத்தாரும் ப்ராதாப சிங்குடன் நண்பாரகவே இருந்தார்கள். இந்நிலைமையில் ராஜ்யப்ரஷ்டனான ஷாஹுஜி ஆங்கில ராஜாங்கத்தாரை அடுத்து உதவிபுரியவேண்டினான். கம்பனியார் நண்பனான ப்ராதாபசிங்குக்கு விரோதமாகச் சென்று தேவகோட்டையைப்பிடித்துக்கொண்டார்கள். பிறகு ப்ரதாபசிங்குடன் நட்புப்பாராட்டிப் புதுநண்பனான ஷாஹுஜியைச் சிறைப்பிடித்துக்கொடுத்து அதற்குப் பதிலாய்த் தேவக்கோட்டையைப்பெற்றுக்கொள்வதாய் ஒப்பந்தம் செய்தார்கள்.

1748-1754 அஹமத்-ஷா. தில்லியாண்ட முகல் சக்ரவர்த்தி.

1748 மஹமத்-ஆலி திருச்சிராப்பள்ளியை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு கர்னாட நவாப் ஆனார்.

1748 எயிலாஷபேல் உடன்படிக்கை. இதன் ப்ரகாரம், ப்ரஞ்சுக்காரர் இங்க்லீஷ்காரருக்குத்திரும்பக்கொடுத்தார்கள்.

1749-1765 ப்ரதாபசிங். தஞ்சை மன்னன்.

—(Sewell).

சர்க்கரைப் புலவர். ப்ரதாபசிங் காலத்தவர். மிழலைச் சதகம் இயற்றியவர்.

மிழலைச்சதகம். மிழலைநாட்டைப்பற்றிய 100 பாடல்கள். மிழலைநாடு—(புதுக்கோட்டை, தஞ்சை ஜில்லாவின் ஓர் பாகம்), ஆளுடையார் கோவில், வெள்ளாறு இவைகளின் பெருமையைப்புகழ்வது.

—(Trica. Vol. II. No. 2826)

1750-1760 தென்னிந்தியாவில் ஆங்கிலேயர்க்கும் ப்ரஞ்சுக்காரருக்கும் யுத்தம்.



1751 நவாப் அன்வார் உதீன்கான். ஒரிஸாவை மஹாராஷ்டிரருக்கு அளித்தான்.

1753 சிவால வரகுணராம பாண்டிய குலசேகர தீக்ஷிதர்.

1753 நாயக்கர் வம்சக்கடைசி அரசியான மீனாக்ஷியின் ஸ்வீகாரப் புதல்வனுக்கு ராமநாதபுரம் சேதுபதி மதுரை ராஜ்யத்தைப் பட்டங்கட்டினார்.

பாளையக்காரர் யுத்தம்.

1755 கல்கத்தாவில் இருட்டறைக் கொடுமை நடந்ததாய் ஆங்கில சரித்திரக்காரர் எழுதியிருக்கிறார்கள். இந்த ஸ்தலம் இப்போது கல்கத்தா பெரிய போஸ்டாபீசுப்பக்கம் இருக்கிறது. அக்காலத்தில் வங்காள நவாப்பாக ஆண்ட சுராஜ டௌளா கல்கத்தாவிலிருந்த ஆங்கிலர்மீது கொடிய விரோதங்கொண்டு, கல்கத்தாவைப் பிடித்துக் கொண்டதாயும், அங்கிருந்த 146 ஆங்கிலரைச் சுமார் 400 சதுரடி விஸ்தீரணமுள்ள ஓர் இருட்டறையில் தள்ளித்தாழிட்டுவிட்டதாயும், மறுநாள் காலையில் 23 பேர்தான் உயிர்த்திருந்ததாயும், மற்றவர் மாண்டதாயும் சொல்லுகிறார்கள். இக்கொடுமை நடக்கவேயில்லை என்று தற்கால சரித்திரக்காரர் கூறுகிறார்.

1757 ஜூன் 23. ப்ளாஸி யுத்தம். ஆங்கிலர் மஹமதியர் மீது வெற்றிபெற்றார்கள். இது முதல், ஆங்கிலர்க்கு இந்தியாவில் அரசாட்சி ஏற்பட்டு, வரவரவிருத்தியடைந்தது.

1758 மதுரை ராஜ்யத்தை ஆங்கிலர் தமது ஆதீனமாக்கிக் கொண்டார்கள்.

1770 சங்கர நமச்சிவாயர். பவணந்தி இயற்றிய நன்னூலுக்கு உரை ஆசிரியர். ஸ்வாமிநாதத்தம்பிரான் சிஷ்யர் திருநெல்வேலிவாஸி.

1774-1833 ராம மோஹன் ராய். ப்ராம்ம ஸமாஜ ப்ரதிஷ்டாபனாசாரியார் 1774ல் ஜனனம்.

1777-1787 துளஸாஜி. தஞ்சை மஹாராஷ்ட்ர அரசன்.

1782 ஹைதர்—ஆலி மரணம். திப்பு சுல்தானுக்கு மைசூரில் பட்டாபிஷேகம்.

1783 கல்நல் புல்லர்டன். மதுரைமீது படையெடுத்துவந்து கலகங்களை அடக்கினான்.

1787 தஞ்சை மன்னனுக்கும், ஆங்கில ஈஸ்ட் இந்தியா கம்பனியாருக்கும் நடந்த முதல் உடன்படிக்கை.

1789-1792 வடஸர்க்கார் ஜில்லாக்களில் பஞ்சம்.

1790 மாக்ளியாட். மதுரைக்கு முதல் கலக்டர் ஆனார்.

1792-1823 அப்பு போய். தென் இந்தியாவில் வசித்த கிறிஸ்தவ காதலிக் பாதிரி. இந்துக்களின் ஆசாரவிவஹாரங்களைப் பற்றி (Hindu manners, customs and ceremonies) என்ற புஸ்தகம் எழுதியிருக்கிறார். அன்னிய மதத்தாரை இகழ்வதில் இவருக்கு நிகர் ஒருவருமில்லை.

1798 சரபோஜி மஹாராஜன் தஞ்சை மன்னன் ஆனான்.

1799 4-ம் மைசூர் யுத்தம். ஆங்கிலர் திப்பு சுல்தான்மீது வெற்றிபெற்றார்கள். மைசூர் மஹமதியர் ஆட்சியினின்றும் விலகிற்று.

| | | | |
|---|---|---|---|
| 1799=4900 | கலி அப்தம். ௸ ஆரம்பம் | 3101 | கி. மு. |
| =1849 | விக்ரம ,, | 50 | ,, |
| =1769 | போஜ ,, | 30 | கி. பி. |
| =1721 | சாலிவாஹன ,, | 78 | ,, |
| = 516 | ராமதேவ ,, | 1283 | ,, |
| = 511 | ப்ரதாபருத்ர ,, | 1288 | ,, |
| = 270 | கிருஷ்ணதேவராய | 1529 | ,, |
| = 925 | கொல்லம் ,, | 824 | ,, |

= சித்தார்த்தி௵ மார்கழி௴ 21௳ வியாழக்கிழமை.

௸ குறிப்புகள் பரிமேலழகர் பிரதியொன்றில் காணப்படுகின்றன.

—(3. செந்தமிழ் 176).

ஆர். எஸ். நாராயணஸ்வாமி அய்யர், B. A., B. L.

---

உ

திருச்சிற்றம்பலம்.

# குறுந்தொகையுரை.

நமது தமிழகத்தின் பண்டையநிலை, சரிதம் முதலியவற்றை விளங்க வுரைப்பனவாகிய சங்கநூற்கள் ஒவ்வொன்றாய் வெளிவருவது நமக்கொரு பெரும் பேறேயாகும். அவ்வாறு வருவன சிலவிடங்களில் வழீஇ யிருப்பதும், பின்னர்த் திருத்தமடைந்து செப்பமுறுவதும் இயல்பே.

இத்தகைய நூல்களில் நான்குவருடங்கட்குமுன் வெளிவந்த குறுந்தொகையும் ஒன்று. இந்நூலால், இதனுரையாசிரியர் சவுரிப் பெருமாளரங்கனாரது தாய்மொழியன்பும், புலமை மாட்சியும், ஊக்கப் பாடும் நன்கு அறியப்படும். இதன் பிரதியொன்று எனது நண்பர் செந்தமிழ்விலாச முத்திரத்தினமுதலியாரவர்களாற் றரப்பெற்றுப் படித்துவந்தேன். அக்காலத்து எனக்குத்தோன்றிய சிலகுறிப்புக் களைக் குறித்துவைத்துள்ளேன். அவற்றுளொன்று பின்வருவது:—

குறுந்தொகை ௭-ஆம் பாடல்,

"வில்லோன்காலனகழலே;தொடியோள்
மெல்லடிமேலவுஞ்சிலம்பே; நல்லோர்
யார்கொல்அளியர்தாமே; ஆரியர்
கயிறுபெறைபயிற்கால்பொரக்கலங்கி
வாகைவெண்ணெற்றொலிக்கும்
வேய்பயிலழுவமுன்னியோரே"

என்பது. (இஃது, கொண்டுதலைக்கழிந்துழி யிடைச்சுரத்துக் கண்டோர்கூற்றிற்குதாரணமாக ஆசிரியர் நச்சினார்க்கினியராற் காட்டப் பெறுவது. தொல், அகத்திணை. ௪௰).

இஃது,—

"...............நல்லோர்யார்கொல்; அளியர்தாமே ஆரியர்;
.......................முன்னியோரே"

எனக்கொண்டு 'நல்லோராகிய இவர்கள் எவர்கொல்? கருதினோர்கள். இவர்களின் இருமுதுகுரவரும் இரங்கத்தக்காரே' என்றுரைக்கப் பெறுகிறது.

'ஆரியர்' என்பதற்கு 'இருமுதுகுரவ' ரென அரும்பதவுரையும், மூன்றாமடிக்கு 'பறைகாபிற்றிடத்தாவெ தென்பது' என அருங்குறிப்பும் காணப்படுகின்றது.

இவ்வுரையில், ஆரியர்—இருமுதுகுரவரென்பதும் 'அளியர்தாமே' என்பது அதன்பயனிலை யென்பதும் பொருந்தாது.

புலனெறிவழக்கினுள் தாய்தந்தையரை ஆரியரென்னும் வழக்காறில்லை.

"அளியர்தாமே ஆரியர்" என்பது முன்னோர்முடிபுக்கு முரணுகின்றது.

"ஆவோவாகும் பெயருமாருளவே
ஆயிடனறிதல்செய்யுளுள்ளே" (சொல். ௧௯௨)

என்னுந்தொல்காப்பியத்துக்கும், "பெயர்வினையிடத்" தெனவரும் நன்னூலுக்கும் முறையே இக்குறுந்தொகையை உதாரணங்காட்டவந்த ஆசிரியர் சேனாவரையரும், சங்கரநமச்சிவாயப்புலவரும்,

"நல்லோர்யார்கொல் அளியர்தாமே"

என்றே காட்டினர்.

குறுந்தொகையுரைகாரர்கருத்துப்படியாயின் நல்லோர்யார்கொல் என்பதே போதியதாயிருக்க, நுண்மாணுழைபுலமுடைய அவ்விருவரும் 'அளியர்தாமே' என வேண்டாகூறாரவர்.

அற்றாகவும்,—குறுந்தொகையுரையார் இவ்வாறுகொண்டது:—

ஆரியர்—பூச்சியர்; ஆகவே அவர்க்கும் பறைக்கும் சம்பந்தமில்லையாதல் வேண்டும்; என்று கருதிப்போலும். இனி, இப்பாடற்கு,—

'ஆரிய' ரென்பது வடபுலத்தரசரை யெனவும், அவர் பறையொலி வாகை வெண்ணெற்றொலிக்குவமை யெனவும், "நல்லோர்யார்கொல் அளியர் தாமே' யெனவும், 'ஆரியர் கயிறாடுபறையிற் கால்பொரக்கலங்கி, வாகை வெண்ணெற்றொலிக்கும் வேய்பயிலழுவம், எனவும் முடிபுகொள்ளலும் பொருந்துவதாகும்.



ஆரியவரசரது பறை மிக்க வோசையுடைத்தென்பதும், அதுபற்றி யவ்வரசரும் போர்ப்பறையுடையாராய்க் கூறப்பெறுவரென்பதும் அறியப்படும். அஃது,—

"ஆரியமன்னர்பறையினெழுந்தியம்பும்
பாரிபறம்பின்மேற்றண்ணுமை—காரி
விறன்முள்ளூர்வேங்கைவீதாஅனுந்தோளான்
திறனுள்ளுருள்ளதலர்"

எனவும்,

"ஆரியர்துவன்றியபேரிசைமூதூர் எனவும் ஆசிரியர் சேனாவரையர் காட்டிய உதாரணங்களால் முறையே விளங்கும். (சொல், ௯௧௮; ௯௭௮)
இன்னும்,

"ஆரியர்துவன்றியபேரிசையிமயம்" (௧௧),
"பேரிசைமரபின் ஆரியர்வணக்கி" (20. பதி)

என்னும் பதிற்றுப்பத்தானும் இஃது தெற்றென்னும். இவர்கள் (ஆரியர்) வடபுலத்தினராதலினதற்குரிய அடைசேர்த்து 'வடவாரிய' எனவுங் கூறப்பெறுவர். அதனை.

"வடவாரியர்படைகடந்து"
(மதுரைக்—கட்டுரை-௧௪)

"கொங்கணர்கலிங்கர்கொடுங்கருநாடர்
பங்களர்கங்கர்பல்வேற்கட்டியர்
வடவாரியரொடு" (காட்சி—௧௫௭)

எனச் சிலப்பதிகாரத்துக் கூறுவதால் அறியலாம்.

இவற்றால், இக்குறுந்தொகைக்கு, முன்னோரது முடிபு ஒத்தலானும், அக்காலத்து ஆரியவரசரது பறையின் விசேடமும், வழக்கமும் அறியப்படுதலானும் இவ்வாறுரைகொள்ளலே பொருந்துவதென்பது பெற்றாம்.

இங்ஙனம்,

பேரூர்
5—5—19

அ. கந்தசாமிப்பிள்ளை.
தமிழ்ப்பண்டிதன்
கோயமுத்தூர்க் கலாசாலை.

உ

திருச்சிற்றம்பலம்.

# ஒரு வேண்டுகோள்.

தமிழ்ப்பெருவள்ளலாராகிய கனந்தங்கிய சேதுபதிவேந்தர்பெரு ானாது தூண்டுதலால் செங்குட்டுவனது தலைமைநகராகிய வஞ்சி ாநகர் இதுவெனநிறுவப் பல கட்டுரைகள் எழுந்தமை யறிஞர்யாவரு றிவர்.

அவற்றுட் கொங்கிற் கருவூரே வஞ்சியென நிறுவிப் பிறருரை ளை மறுத்துப் புத்தகவுருவில் எழுந்தது சேது சமஸ்தானப் புலவர் லைவராகிய திருவாளர். ரா. இராகவையங்காரவர்களது கட்டுரையே ாகும். அதனுள்ளும் சிலவற்றை மறுத்து வெளியிட்டனர் வேறு லவர் சிலரும்.

அவ்வனைவருரைகளையும் மறுத்து மற்றுமோர் புத்தகமாக அப் லவர்தலைவரே ஒருகட்டுரை விரைவில் வெளிப்படுப்பதாகத் தெரி றது. அஃது பலவகையாராய்ச்சிகாட்டி யசையாநிலைமைத்தாய் ற்குமெனவே நம்பப்படுகிறது.

எனினும், அப்புத்தகமும் வெளிவந்து அதனுள்ளும் சில மறுக் ப்பட்டு, மீண்டும், மீண்டும் மறுப்பும், நிறுப்புமாகப் பலவுரைகள் எழு மோ என்ற எண்ணமும் தோன்றுகிறது.

ஆதலின், தமிழ்ப் பேராசிரியராகிய உ. வே. சாமிநாத ஐயரவர் ள் முன்னிலையில், இவ்விருபாற் கொள்கையினரையும் அவைகூட்டி, றுப்பும், நிறுப்பும் நேரிலே வாதிக்கச்செய்து ஒன்றன்முடிவே முடிந்த டிவாய் நிறுவப்பெறின் பலர்க்கும் நலந் தருவதாய் ஒருண்மை தளிவித்ததாகும்.

மதுரைத்தமிழ்ச்சங்கவருடோற்சவம் சமீபத்தில் நிகழவிருக் றது. அக்காலை சேதுபதிவேந்தர்கோமகனார் இச்சபை ஒன்று ட்டி உண்மை நிறுவுவிப்பது ஒரு பெரிய உபகாரமேயாகும்.

ஆகையால், இவ்வேண்டுகோள் பொருந்துவதேல் அங்கீகரித்தரு மாறு புரவலர் பெருந்தகையாராகிய கனந்தங்கிய சேதுபதி வேந்த வர்களது திவ்விய சமூகத்திற் பணிவோடு விண்ணப்பம் செய்துகொள் றேன்.

இங்ஙனம்

ஊழியன்

ஒரு கொங்கன்

---

# விநோதரசமஞ்சரி.

முற்றொடர்ச்சி.

இராமாயணம்.

எண்ணுதற் காக்கரி திரண்டு மூன்றுநாள்
விண்ணவர்க் காக்கிய முனிவன் வேள்வியை
மண்ணினைக் காக்கின்ற மன்னன் மைந்தர்கள்
கண்ணினைக் காக்கின்ற விமையிற் காத்தனர்.

எண்ணுதற்கு ஆக்க அரிது. (இராமலக்குமணர்களாற் செய்யப்பட்ட இக்காவற்செயல் பிறராலே நினைத்தற்கும் அரிது. செய்தற்கும்அரிது. அரிது என்பது வினைமுற்று. இதற்கு விநோதரசமஞ்சரி!! எண்ணு தற்கும் செய்தற்கும் அருமையாகத்தொடங்கிய யாகத்தை' என்கின் றது. இதுவும்பொருந்துமா? அருஞ்செயல் யாது? இராமஇலக்குமணர் செயலா? விசுவாமித்திரர் செயலா? அரிது என்பது வேள்வி என்பத னோடு இயையுமா?

இரண்டு மூன்று நாள்—ஆறு நாள். இதற்கு விநோதரசமஞ்சரி "ஐந்துநாள் அல்லது ஆறு நாள்" என்கின்றது இதுவும் பொருந்துமா? இது ஆறு நாள் என்ற வான்மீகராமாயணத்தோடு மாறுகொள்ளாதா? அல்லது என்பது குறிப்பு வினையெச்சமன்றோ! அது விகற்பப்பொரு ளையுங் காட்டுமா?

தனிநிலைக்கவி.

உ. தண்ணீருங் காவிரியே தார்வேந்தன் சோழனே
மண்ணாவ துஞ்சோழ மண்டலமே—பெண்ணாவாள்
அம்பர்ச் சிலம்பி யரவிந்த மேமலராஞ்
செம்பொற் சிலம்பே சிலம்பு.

இத்தனிநிலைக்கவி ஔவையாரும் பொய்யாமொழிப்புலவரும் பாடிய தென்று தமிழ்நாவலர்சரிதை கூறுகின்றது. விநோதரசமஞ்சரியோ ஔவையாரும் கம்பரும் பாடியதென்று கூறுகின்றது. இவற்றுள்ளே சத்தியமாவதுயாது?

வாக்கியம்.

௩. "ஐயா! ஆஸ்திகரே!" "அண்டைவீடு அயல்வீடு" "இவர்கள் எங்கள் தமயனுமல்ல" "மீன்சிரிக்கிறது என்பதாகப் பேசுகிறீர்" "வேதாகமபுராணங்களும், தர்க்கவியாகரணங்களுமாகிய இலக்கிய இலக்கணங்கள்" இவ்வாக்கியங்கள் எவ்வியல்பின? ஐயா! என்னும் ஒருமையும் ஆஸ்திகர் என்னும் பன்மையும் இயையுமா? அண்டை என்பதற்கும் அயல் என்பதற்கும் வேறுபாடு யாது? என்பதாக என்பது எம்முடிபிற்று? வேதாகம புராணங்களும், தர்க்கமும் இலக்கியம் என்றுவது இலக்கணம் என்றுவது சொல்லற்கு இசையுமா? வேதாகமாதிகளும் வேறே! இலக்கியலக்கணங்களும் வேறேயல்லவா?

௪. "புருஷன் பெண்சாதி" "முழுகிப்போனதமிழ்ச்சங்கம்" "அரசிறைப்பணம்" "பால சோசியம்" "விர்த்த வைத்தியம்" "ஏழிலைம் பாலை" என்னும் இவை எவ்வியல்பின?

"இது பள்ளத்தாக்கு இது மேட்டுப் பாங்கு" "சுபேதார் ஜமேதார் லிகிதர்" வாய்க்கொழுப்புச்சீலையால்" "பெரிமாவைமெச்சிறளாம் பொக்கைவாய்ச்சி" "தட்டுமுட்டுக்களும்" "சிலவூர் மிட்டாவும், சிலவூர் பட்டாவும்" என்னும் இவை எவ்வியல்பின?

சொற்கள்.

௫. முன்னருஞ் சில சொற்கள் காட்டினும். இன்னும் சில காட்டுவாம்.

சாவடி, பிலுக்கு, ஜாபிதா, எச்சரிக்கை, அசுவதாட்டி, இச்சகம், சிரஸ்தார், கிஸ்தி, குந்தாணி, அரிசிமண்டி, முகம்மல், உடவாரம், ஒப்படி, கானுகள் என்னும் இவை எப்பாஷைச் சொற்கள்? பொருள் என்னை?

௬. உப்பரிகை, பிரகலாதனன், கவீஸ்வரி, சுவரம், திரணம், சங்கற்பம், சாமக்கிரியை என்னும் இச்சொற்கள் எவ்வியல்பின? பொருள் என்னை? இங்குள்ள உபாத்தியாயர்களாவது பண்டிதர்களாவது தெரிந்திருந்தால் ஆக்ஷேபங்களுக்கு விடைகளும், சொற்களுக்குப் பொருள்களும், சொல்லியல்புகளும் சொல்லல் நன்று. திருத்தங்கள் சித்திக்கும்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

ஸ்ரீ

# ஐயவினாவிளக்கம்.

தைமாதச் செந்தமிழில் என் நண்பரொருவர் நேற்று, என்னுஞ் சொல் என்ன சொல்லென்றும் அது செய்யுள்வழக்கிலுண்டாவென்றும், நெருநல், இன்று, நாளை, யென்னுஞ் சொற்க ளென்னசொற்களென்றும் வினவியதோடு அவைகளுரிச்சொல்லி லடங்காவோ வென்றும் வினவியுள்ளார்; அன்றியும் எல்லாவேற்றுமை யுருபையுமேற்குஞ் சொற்களெவையோ அவையே பெயர்ச்சொற்களென்று தன்கருத்தையுங் குறிப்பித்துள்ளார். அவற்றிற்கு யான்பயின்ற சின்னூல்களைக்கொண் டென்சிற்றறிவிற்கெட்டியவாறு விடையிறுக்க முன்வந்துள்ளேன். நேற்று, என்னுஞ் சொல்லும் நேற்றெனப் பொருள்படும் நெருநல், என்னும் சொல்லும் இன்று, நாளை, யென்னுஞ் சொற்களும் பெயர்ச்சொற்களே. பெயர்ச்சொற்கள் யாவும் எல்லாவேற்றுமையுருபுகளையு மேற்கவேண்டு மென்னு நியதியில்லை, அதைவிளக்கவே நன்னூல் விருத்தியின்கண் சங்கரநமச்சிவாயப்புலவர் "ஏற்குமெவ்வகைப் பெயர்க்குமீறாய்ப்பொருள் வேற்றுமைசெய்வனவெட்டேவேற்றுமை" என்னுஞ் சூத்திரத்திற்குப் பதசாரங் கூறுங்கால் "எல்லாப்பெயரு மெல்லா வேற்றுமையு மேலாதென்பார் ஏற்கு மென்றார்" எனக் கூறிப்போந்தார். அன்றியும், எழுவாயொழிந்த ஏனைய வேற்றுமையுருபுகளை யேலாப்பெயர்களுமுளவென்பதைப் புலப்படுத்தவே பவணந்திமுனிவர் "நீயிர்நீவிர்நானெழுவாயலபெறா" எனவுங் கூறியுள்ளார். இவ்வாறே விளியுருபேலாப் பெயர்களுமுள வென்பதை "நுவ்வொடுவினா" வென்ற சூத்திரத்தாற் கூறினார். ஆகவே யெல்லாப்பெயரு மெல்லாவேற்றுமையுருபுகளையு மேற்கவேண்டுமென்னு நியதியில்லை யென்பது எல்லா வாசிரியர்க்கு மொப்பமுடிந்ததொன்றாம். இனி தமிழ்க்கே தலைசிறந்து விளங்குந் தொல்காப்பியமென்னு நூலின்கண் "திங்கண்முன்வரினிக்கேசாரியை" எனவும், "திங்களுநாளு முந்துகிளந்தன்ன" வெனவும் "ஆனினகரமுமதனோரற்றே நாண்முன் வரூஉம் வன்முதற்றொழிற்கே" எனவும் "நாட்பெயர்க்கிளவி மேற்கிளந்தன்ன வத்துமான்மிசைவரைநிலையின்றே யொற்றுமெய்கெடுதலென்மனார் புலவர்", எனவுங் கூறியுள்ள சூத்திரங்கட்குரைகண்ட

ஆசிரியர் நச்சினார்க்கினியர் 'திங்களை யுணரநின்ற பெயர்' என்றும் "நாளை யுணரநின்ற பெயர் என்றும் உரை கூறியதோடு சித்திரைக்குக்கொண்டான், ஆடிக்குக்கொண்டான், ஆடியாற் கொண்டான்" என்பவை முதலானவுதாரணங்களையெழுதி, அவ்வுதாரணவுருபுகள் இடப்பொருளுணரநின்றனவாகக்கருதி "இவற்றிற்குக்கண்ணென்னுருபு விரிக்க" எனவுங்கூறிப்போந்தனர். நண்பரவர்களுங் காலப்பொருளுணரநின்ற விச்சொற்களைப் பெயரெனக் கோடற்கலகையுறாரன்றே, அங்ஙனம் பெயரெனத்துணிவாராயின் அச்சித்திரை ஆடியென்னுஞ் சொற்களின்மேலங்ஙனஞ் செயப்படு பொருளுணரநின்ற இரண்டாம் வேற்றுமை, கருவிகருத்தாப்பொருளுணரநின்ற மூன்றாம்வேற்றுமை முதலிய வேற்றுமையுருபுகளை யேற்றலாமோ? அங்ஙனமே நேற்று முதலிய பெயரினுமேற்றபெற்றி யேற்றலாமெனவறிக.

அஃதாமாறு:—

எழுவாய்—நேற்றொழிந்தது; இன்று வந்தது.

இரண்டு—நேற்றையடுத்து வந்ததினம் இன்று.

மூன்று—நேற்றோடிரண்டுநாளாயின.

நான்கு—நேற்றைக்கின்று பிற்பட்டது.

ஐந்து—நேற்றினின்றும் மழைபெய்கிறது.

ஆறு—நேற்றதிறுதி இற்றை விடியல். என்றிவ்வாறுருபு மருகிவருதல் காண்க.

ஆதலான் இவற்றைப் பெயரெனக்கொள்ளும் நண்பரவர்கட்கு "நேற்று, இன்று, நாளை யென்னுஞ்சொற்கள் பெயராகாதென்பது யாண்டையதென் றொழிக. நன்னூல் விருத்தியின்கண் நண்பர் காட்டிய வுதாரணங்கள் நெருநலென்ப தேழாம்வேற்றுமையிடப்பொருளுணர நின்று "நெருநலின்கண்" எனவும் "அடுகளிறு" என்பது "அட்டகளிறு" என இறந்தகால வினைத்தொகையாயுமேனையவும் "இற்றைப் பொழுதின்கணடுகின்றகளிறு நாளைப்பொழுதின்கணடுங்களிறு எனவும் விரிந்து பொருள்படுமாறுணர்க. இன்னுந்திருக்குறளில் நிலையாமை யென்றவதிகாரத்தின்கண் நெருநலுள னொருவனின்றில்லை யென்னும், பெருமையுடைத்திவ்வுலகு என்றும், நக்கீரனார் இறையனாரகப்பொருளில் 50-ஆம் பக்கத்தில் "நெருநலைநாளாற்பிரிந்தாற்போலத் தழை



விழைதக்கன்கொடுத்தும்" என்றும் "நெருநலைநாளாற்றலைமகளை வழிபட்டவிடமெதிர்ப்பட்டுத் தலைமகளைக்கண்டாளே போன்றாள்" என்றும் "திருக்கோவையாரிற் பாங்கற்கூட்டத்திலுற்றதுரைத்த கிளவிக்கண் "நெருநலைநாளிற் கயிலைப்பொழிற்கட் சென்றேன்" எனப்போாசிரியர் உரைகூறிப்போந்தமையானு நெருநலென்னுஞ்சொல் ஏழாம் வேற்றுமை யிடப்பொருள்படுமாறுணர்க. இலக்கணக்கொத்து வேற்றுமையியலின்கணுள்ள "ஒன்றிரண்டொான் கேழொடுமெழும்" என்னுஞ்சூத்திரத்திற்குரைகண்ட அந்நூலாசிரியரே "இன்றைக்கு, நாளைக்கு, பகலைக்கு, அந்திக்கு, சந்திக்கு, மாலைக்கு, காலைக்கு, ஊருக்கு, வீட்டிற்கு வருவன்" எனவுதாரணமாகக்காட்டப்பட்ட காலப்பொருளுணரநின்ற சொற்களெல்லாம் நான்காம்வேற்றுமையுருபேற்றவாறுகாண்க. நண்பர் எடுத்துக்கொண்ட நன்னூல் விருத்தியில் "யாதனுருபிற்கூறிற்றாயினும் பொருள்செல்மருங்கின் வேற்றுமைசாரும்" என்னுஞ்சூத்திரத்தின் உரையில் இதே சூத்திரத்தை மேற்கோளாக எடுத்துக்காட்டி அம்மேற்கோட்சூத்திரத்திற்குக் காலப்பொருளுணர நின்ற யாம்மேலெடுத்துக்காட்டியவற்றையே யுதாரணமாகக்காட்டியுள்ளாரென்பதுங் கவனிக்கத்தக்கது. இனி இற்றைக்குச் சற்றேறக்குறைய மூன்றூறாண்டுகளின்முன்பிருந்து திருக்குற்றாலத்தலபுராணமியற்றிய காவலர்புகழும் பாவலர்பெருமானான திரிகூடராஜப்பக்கவிராயரவர்களியற்றிய குற்றாலக்குறவஞ்சியென்னு நூலின்கண் "நேற்றைக்கெல்லாங்குளிர்ந்துகாட்டி யின்றுகொதிக்கு" மென "நேற்று" என்னுஞ்சொல் ஐகாரச்சாரியையோடு குவ்வுருபுபெற்றுப்பயின்று வந்தமைகாண்க. ஆகலான் என்சிற்றறிவிற்கெட்டியமட்டும் "நேற்று, நெருநல், இன்று நாளையென்னுஞ் சொற்கள் பெயர்ச்சொற்களென வென்னுகிறேன். இன்னுமிவற்றைப்பற்றி நண்பர்களாவது ஏனைய கற்றுணர்ந்த பெரியோர்களாவது விளக்க வேண்டுகிறேன்.

நா. சொக்கையன்,
மாணவன்.

# ஒரு வேண்டுகோள்.

உயர்தனிப் பழங்குடி வந்த உடன்பிறப்பாளர்காள்!

உங்கள் வாணாட்களில் சிறுபொழுதேனும், நம்மொழி யாது? அதன் திறம் யாது? நம் முன்னோர் யாவர்? அவர்தம் சிறப்பு எத்தன்மைத்து? அவர்தம் வழிவந்த நம் கடமை யாது? என்பனவற்றைக் கருதியதுண்டா? மலர்தலைவையத்து மாண்புற இந்நாள் பலகலை புணரப் பண்பு மேம்பட்ட மொழிபலவோடு செழுநீர்க்கங்கையும், ஆரிய மொழியும், பேரிசை இமயமும் கருப்பையிற்றோன்றப் பன்னாள் முன்னரே, வெண்டிரை கொண்ட பண்டைய நாட்டில் அண்டரும் போற்ற அரசுவீற்றிருந்த அருந்தமிழ்த்தாயே உங்கள் அன்னைமொழி. எகிப்தியர், யவனர் முதலிய பழநாகரிகம் பெற்ற மரபினருக்கும் முன்னரே பழநாகரிகம் பெற்றிருந்ததோடன்றி, அன்னோர்க்கும் நாகரிகம் கற்பித்தார் என ஓரமற்ற புலவரெல்லாம் ஒப்ப உவந்து கூறும் உயர்வுவாய்ந்த உங்கள் முன்னோர் மகிழ்ந்து உரையாடியது இத்தமிழ்மொழி. இந்நாள் வையமுழுதும் பரவி, நடை, உடை முதலியவற்றால் வெவ்வேறு மரபினரென்று மதிக்கப்பெறும் நம்முடன் பிறந்தார்கட்கும், நமக்கும் முன்னோர்களாகிய பழங்குடிகள், இறைவனாற்படைக்கப்பெற்ற முதல் நிலத்தில், ஒரே இல்லில் ஒற்றுமையாய்ச் சேர்ந்துவாழ்ந்த அந்நாளில் தம் உள்ளக்கருத்துக்களைக் கைக்குறியால் உணர்த்திய காரிருட்காலமிரியக் கதிரெழுந்தென்ன, ஒலிக்குறியாய்எழுந்து, அன்னோர் நாவினையசைத்துக் கள்ளமற்ற அவர்தம் உள்ளக்கருத்தை வெளியிட்டது உங்கள் பழந் தமிழேயாம். நும் தந்தையும், தாயும்மகிழ்ந்து குலாவி, நுமக்கு அறிவும், ஆண்மையும் கரைத்தூட்டியது தமிழே. நும்மக்கள் நும்மை மகிழ்விக்கும் மழலையும் தமிழே. உங்கள் உயிர்க்குயிராய் நின்று நும்மை ஆட்டுவிப்பதும் தமிழென்றறிமின்! உங்கள் உயர்வென்னும் பெருமாளிகைக்கு அடிப்படை யாவதும், உங்கள் உளமென்னும் தாமரைக்கு உறையிடமாவதும், உங்கள் வாழ்வென்னும் மரக்கலம்



தெற்றுந்தோடும் பெருங்கடலாயிருப்பதும், உங்கட்கு நல்வழிகாட்டிப் பேரருளென்னும் பாலமுதூட்டும் தாயாயிருப்பதும் தமிழ் மொழியே. இந்நாள், பொன்னாடுவாரும், புகழ்நாடுவாரும் பொலிந்து, தன்னாடு வளர்குன்றிக், கற்பாரும், புரப்பாருமின்றிக், கலங்கித், தன்மக்களும் பேசுதற்குக் கூசிக்கைவிட, மக்களுக்கிரங்கித் தளர்வதித்தமிழ்மொழி. தளர்ந்தனள் தமிழ்த்தாய்; தாழ்ந்தது தமிழகம்.

சீர்கெழுமானச் செல்வீர்!

"பழையோர் பெருமையுங் கிழமையும் புகழும்
மன்னிய வன்பினும் மன்னையர் பாடி
நற்றயில் வரும்வகை யொத்தறத் துமது
தொட்டிரு லாட்டஅவ் விட்டமா முன்னோர்
தீரமுஞ் செய்கையும் வீரமும் பரிவு
மெண்ணி யிருகணுங் கண்ணீர் நிறையக்
கண்டுயி லாதுநீர் கனிவுடன் கேட்ட
வண்டமிழ் மொழியான் மறித்திக் காலம்
'ஆற்றலம்; ஆண்மையு முரிமையு மொருங்கே
தோற்றனம்' எனச்சொலத் துணிபவர் யாவர்?"

தமிழ்மொழிதன்னை அமிழ்தெனவுண்டனர் நும்முன்னோர். ஈண்டிய சிறப்பிற் பாண்டியராயினர் சங்கமிரீஇத் துங்கமுற்றிருந்தனர். நக்கீரர் முதலாம் நல்லிசைப்புலவர் ஒக்கவிருந்து ஒரு தனித் தமிழ்க்கு இன்னல் வாராதே இனிது போற்றினர். 'அந்தநாள் வந்திலை அருந்தமிழ்ப்புலவோய்! இந்த நாள் வந்து நீ நொந்தெனை யடைந்தாய்! தலைதனைக் கொடுபோய்த் தம்பிகைக் கொடுத்ததன், விலைதனைப் பெற்றுன் வெறுமைநோய்களையே!' என்னத்தமிழ்க்குத் தலையுங்கொடுக்கத் துணிந்தான் தண்ணளிசிறந்த தனிப்பெருங்குமணன். 'இந்நீணிலத்தில், பாடும் புலவர் புகழ் ஒட்டக்கூத்தன் பதாம்புயத்தைச், சூடும் குலோத்துங்கச் சோழனென்றே.யெனைச்சொல்லுவரே.' என்னத்தன்னைச் சிறப்பித்தான் சோழர் மன்னர் மன்னவன். 'மன்னவனு நீயோ? வளநாடு முன்னதோ? உன்னை யறிந்தோ தமிழையோதினேன்?' என்றாடிச்சென்ற பெரும்புலவனுக்கு அடைப்பை தாங்கி அழகு செய்தான் சேரனன்

றோ? பல்கலைநிறைந்த பாவலர் தமக்குப் பல்லக்கேந்தினர் பாண்டியன் முதலோர். நீயிர் என் செய்கின்றீர்? தமிழென்னில் தலை திருப்புகின்றீர். தமிழ்ப்புலவரென்னில் தலைக்கடையிற் றனியிருத்துகின்றீர். தமிழரென்னத் தலைசாய்க்கின்றீர். என்னை நும்பெருமை! கருதுவீர் நந்தம் தமிழ்த்தாய் கட்டுரை. 'மக்காள்! அருந்தி வளர்மின்! நுமக்கு, மிக்கோரில்லா வீரமாய்ப்பரந்து, முதுசுதந்தரத்தின் முத்திரையாகி, இதுபரிணமித்தும் மிதயத்துறைக! அன்னியர் பழிக்கொணு அன்னையின் கற்பிற், கிழிவுறின் மார்பினின்றிதுவே சோரியாய்ப், பொழிகநீர் பொன்றிடுமளவும்! என்றன்றோ, வாழ்த்தி நுந்தமை வளர்த்தனள். அவளுரை தாழ்த்தன்மின்!' 'ஆரியம்நன்று தமிழ்தீது' என உரைத்தானொருவனை வாயடக்கி வலியழித்தான் நல்லிசை பரப்பிய நக்கீரதேவன். நீரோ, 'குகையுள் உற்று அரிமுக மயிர் பற்றியிழுப்பதொப்பத்' தமிழ்மொழி பேசித் தமிழ்ச்சோறுண்டு, உண்டதை மறந்து, உங்கள் முன்னரேயே நும் அருந்தமிழ்த்தாயை முறையின்றிப் புறம் பழிக்கவும் தலையசைத்துத் தடுமாறுகின்றீர்! நும்மாண்மையும் மானமும் அடங்க இழந்தீர் கொல்லோ?

அருமை மக்காள்!

உலகத்தே தோன்றிய பற்பல மொழிகளும், சின்னாளில்தோன்றி ஓங்கி வளர்ந்து, அழியும் படர்கொடியொப்பவும், சிற்சில நிற்பினும், தம் பழவடிவு திரிந்து, மாறி நிற்கவும், நம் தமிழ்மொழியொன்றே ஆலமாமரமென விழுது பல விடுத்து, என்றுமழியாது, ஒரு தன்மைத்தாய்ப், பெருநிழல் கொடுத்துவருகின்றது. இந்நிழலிலேயன்றோ உங்கள் முன்னோர்களும், உலக முன்னோர்களும் வாழ்ந்தது. நம்மருமைத் தமிழ்மொழி எச்சிறப்பும் மிக்க உயர்தனிச் செம்மொழியாயிருப்பவும், இன்னும் உயர்தனிச் செம்மொழி தமிழ் ஒன்றேயாமெனக் கொள்ளக்கிடப்பவும், இதனைப்புறக்கணிப்பதோடன்றிப் புறம்பழிக்கவும் தலைப்பட்டார்கள். படவே, இப்புன்மொழியையும் பொறுத்து மகிழ்ந்தார் பலர்! இங்ஙனமாக எம் அருமைத் தமிழ்த்தாய்க்குண்டாம் வசைக்காற்றாது, அங்ஙனம் வசைகூறுவாரை வாயடக்கி நம் தாயின் பெருமையைவையமறியவும், அவள் எம்மொழிக்குமில்லாப் பழஞ்செம்மையுற்றொளிரவும், எம்மொழியும் பரச அரசு வீற்றிருக்கவும், யாமெல்லாம் தொண்டினிற்சிறந்த தாய்மொழித்தொண்டாற்றவும் வழியாக இக்



கரந்தைத் தமிழ்ச்சங்கம் நிறுவப்பெற்றது. நீவிர் அரசராயினுஞ்சரி, அமைச்சராயினுஞ்சரி, அடிமையாயினுஞ்சரி, தாயிடத்து உங்கள் முதற்கடமையை மறவாது செலுத்துமின்! நம் தாயிடத்தும், உண்மைத்தொண்டினைக் கைக்கொண்ட எம்மிடத்தும் பொறாமையுற்றார் வெற்றுரைகேட்டு மயங்கன்மின்! பிறரையும், பிறமொழிகளையும் குறைகூறுவது எம் கொள்கையன்று. எம்மையும், எம் மொழியையும் முறையின்றிப் புறம்பழிப்பாரைக்கண்டு, மானமழிந்து, மதிகெட்டுப் பேடியராவதும் எம் செயலன்று. 'நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே' என்ற அஞ்சா நெஞ்சனும், எஞ்சா வீரனும் ஆகிய நக்கீரன் வழியினேம். யாய்க்குறும் இடையூறு களைதல் எம்முதற்கடன். யாய், தன் பண்டைய நிலையடைந்து மாண்புறவும், தமிழ்மக்களெல்லாம் ஏனையரோடொப்பக் கல்வி, கைத்தொழில், வாணிகம் முதலியவற்றுற் சிறந்து வளம்பெறவும், உண்மையாக உழைப்பதே எம் மற்றைக்கடன். நம்மவர் யாவரும் நம்மொழியை நன்கு கற்கச்செய்தாலும், நம்பண்டைய கலைகளையும், வரலாறுகளையும் ஆய்ந்தறிந்து, அவற்றை நம்மவரேயன்றி வையத்தாருமறியச்செய்தலும், உலகத்தே அவ்வப்போது தோன்றும் கலைகளையும், வரலாறுகளையும் நம்மவரறிந்து நலம்பெற மொழிபெயர்த்தாக்கிக்கொள்ளுதலும், இன்னும் வேண்டும் செயல்களால் தமிழ்மொழியையும், தமிழகத்தையும் மேம்படச்செய்தலும் எம் கடனும். எம் கடனை இழுக்கின்றிச்செய்தலே எம் நோக்கமாம்.

அருந்தமிழ் மக்காள்!

நம் கடமைகளையும், நோக்கங்களையும் முற்றுவிப்பதில் ஒவ்வொரு தமிழரும் எம்மொடு வேற்றுமையின்றி ஒத்துழைக்க வேண்டுகிறோம். ஒவ்வொருவரும், நாம் என்ன செய்யக்கூடுமென்றெண்ணாது, தாம் செய்யக்கூடியது எத்துணைச் சிறிதாயினும், பின்னிடாது உண்மையன்பொடு செய்யவேண்டுகிறோம். அதுகொண்டே தமிழ்த்தாய் மகிழ்வள். நாம் உண்மையன்பொடு செய்யும் சிறுதொண்டெல்லாம் பெருகி நம

தன்னையையும், நம்மையும் உயர்நலமுறச்செய்யும். ஆகலான், எம் தனித்தமிழ்மக்காள்! எம் உறுதுணை வீரர்காள்? எம்மொடு ஒத்துழைக்கவிரைந்து வம்மின்! நம்முன்னோர் உளமெனுந்தருவில் காய்த்துக் கனிந்த கோதற்ற கொழுங்கனிச்சாறும் ஒப்புயர்வில்லாத் தமிழமுது நம்மாட்டுளது. அதனையாவருங்கலந்துண்டு, தெவிட்டாது மகிழ்ந்து, நம் அன்னைக்கு உண்மைத்தொண்டுபுரிந்து வாழ்த்துவோமாக.

'எந்தையுந்தாயும்மகிழ்ந்துகுலாவியியம்பியதிம்மொழியே—அதன்
முந்துபல்லாயிரம்ஆண்டுகள்வாழ்ந்தோர்மொழிந்ததும்இம்மொழியே
சிந்தையிலாயிரமெண்ணம்வளர்ந்துசிறந்ததும்இம்மொழியே—இதை
வந்தனைகூறிமனதிலிருத்தியென்வாயுறவாழ்த்தேனோ—இதைச்
செந்தமிழ்வாழிய!செந்தமிழ்வாழிய!என்றுசெபியேனோ?
இன்னுயிர்தந்தெமையீன்றுவளர்த்தருளீந்ததுமிம்மொழியே—எங்கள்
அன்னையர்தோன்றிமழலைகள்கூறியறிந்ததுமிம்மொழியே—அவர்
கன்னியராகிநிலவினிலாடிக்கழறியதிம்மொழியே—தங்கள்
பொன்னுடல்மேவப்புதுப்புனலாடிப்புகன்றதுமிம்மொழியே—இதைச்
செந்தமிழ்வாழிய!செந்தமிழ்வாழிய!என்றுசெபியேனோ?'

தஞ்சைக், கரந்தை, } அ. கணபதி,
காலயுக்தி௵ தைமீ } அமைச்சர்.

தஞ்சைநகர்க்

## கரந்தைத்தமிழ்ச்சங்கத்தின்

### ஏழ், எட்டாவது ஆண்டு விழாவிற்குத் தலைவராக எழுந்தருளிய

திருக்கோவலூர் ஆதீனம், திருப்பாதிரிப்புலியூர்
ஸ்ரீமது ஞானியார் மடாலயத் தலைவர்

### ஸ்ரீலஸ்ரீ சிவசண்முகமெய்ஞ்ஞானசிவாசாரிய சுவாமிகள்

அவர்கட்குச்

### சங்கத்தார் கூறும் நல்வரவு

---

ஆசிரியப்பா.

வாழியர்! வருக! மாண்புறு பெரியோய்!
ஊழி பெயரினும் பெயரா வரவோய்!
தமிழ்நா டுஞற்றிய தவத்தினிற் றோன்றி
யெமையா ளரசை யேந்துழ வாரமும்
சிந்தையு ளன்பும் செவ்வாய்ப் பாடலும்
அந்தமில் வேடமும் உடைய அப்பரைக்
கரையேற விட்ட உரையேறு பொருளாந்
தோன்றாத் துணைவர் ஈன்றுளு மாயவர்
விருப்புறு திருப்பா திரிப்புலி யூரிற்
றிருக்கோ வலூர் உருக்கிளர் மடத்திற்
றதிபதி யாய துதிபெறு சீரோய்!
தென்றமிழ்ப் பாப்பும் வடநூற் கருத்தும்
நன்றுணர்ந் தோங்கிய நவையில் புலவ!
கண்டுணர் பொருளெலாங் கண்டென வினிக்கக்
கடன்மடை திறந்தென முகின்மழை பொழிந்தெனத்
தடைபடா துரைக்குந் தனித்தமிழ் நாவல!
திருக்குறள் முதலாஞ் சிறப்புறு நூல்க
ளுரைத்துநன் மாணவர்க் குவக்கும் ஆசிரிய!

இளைஞர்க டமக்குக் கலைகளும் படியோர்
கல்விச் சாலையுங் கழகமு மமைத்து
நல்வித் தகம்புரி செல்வக் குரிசில்!
மணிமயி லுயரிய மாறு வென்றி
யணியயிற் செவ்வேள் அடியிணை நினைதொறும்
நைந்துநைந் துருகுஞ் சிந்தையா ரன்ப!
நின்பல சீரும் நிலத்தினி லாரும்
அன்புட னுரைத்தல்கேட் டின்புற் றனமால்.
ஏனைப் பெரியரு மித்திறம் புரியின்
வானைப் பழித்திவண் மன்பதை மகிழ்மே!
தமிழி னுர்வந் தழைத்திடு சான்றோய்!
விஞ்சை யெலாம்பூந் தஞ்சையைச் சார்ந்தே
யரந்தை கெடுக்குமிக் கரந்தையில் யாங்கள்
தாய்மொழி போற்றலே தருமமுந் தவமுமென்
றாய்ந்து நிறுவி யருமையின் வளர்த்திடு
சங்கத் திருவிழாத் தலைமை யமர்ந்து
தங்கப் புலவர்கள் சொற்பொழி வேற்பித்
தெங்கட் கெல்லா மிரும்பய னளிக்க
இங்குநீ வரப்பெற் றியாமுளந் தழைத்தே
நீர்பெற் றுயர்ந்த நிறைபுல மானேம்.
சீர்பெற் றுயர்ந்த சிவசண் முகமெய்ஞ்
ஞானியா ரென்னும் மானவ! வருக!
வருக! மாதவ! வள்ளால்!
வருக!! நீடூழி வாழியர் வருகவே!!!

வெண்பா.

தாய்மொழியாந் தெய்வத் தமிழ்மொழியைப் போற்றுமா
வாய்மொழிசேர் நன்மக்காள்! வம்மினோ!—தூய்மொழியைச்
சொல்லுமின்! கேண்மின்! துதிமின் கனிந்துருகி
நில்லுமின்! என்றும் நினைந்து.

தஞ்சைக், கரந்தை, } த. வே. உமாமகேசுவரன், பி.ஏ.,பி.எல்.
சித்தார்த்தி௵ வைகாசி௴ }
௰௨ } சங்கத்தலைவர்.

---

உ
கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-கஎ.] சித்தார்த்தி௵ சித்திரை௴ [பகுதி ௬
Vol. XVII. April—May, 1919. No. 6

## 13-வது
## புறப்பாட்டும் உரையும்.-] *

உத்தேசம் ஒருவருஷத்திற்கு முன்னால் 'சேரர்தம் புராதனவஞ்சிமாநகர் யாது?' என்பதைப்பற்றி யொருபெரும் விவாதம் நிகழ்ந்ததை 'செந்தமிழ்' நேயரனைவரும் அறிவர். அந்நகர் மேல்கடற்கரைக்கண்ணதாகிய கொடுங்கோளூரே யென வொருசாராரும் உள்நாட்டதாகிய ஆனிலைக்கருவூரேயென மற்றொருசாராரும் வாதியாநின்றனர். தூத்துக்குடி வக்கீல் ஸ்ரீ. சோமசுந்தரபாரதியவர்கள் கொடுங்கோளூர்க்கக்ஷியை ஸ்தாபித்துச் 'சேரர்பேரூர்' என்றவொரு நூலெழுதி வெளியிட்டார்கள். சேதுசமஸ்தான வித்வான் ஸ்ரீ ரா. ராகவையங்காரவர்கள் பாரதியவர்கள் கூறியிருப்பனவற்றை மறுத்து ஆனிலைக் கருவூர்க்கக்ஷியை வற்புறுத்து 'வஞ்சிமாநகர்' என்ற ஆராய்ச்சியுரை யொன்று பிரசுரித்தார்கள். இவ் ஆராய்ச்சியுரையுள்ளே, 13-வது புறப்பாட்டினையும் அதன் உரையினையும் எடுத்துக்கொண்டு அவை கொங்கிற் கருவூரே வஞ்சியா மென்பதைச் சந்தேகமற விளக்குகின்றன என்று ஐயங்காரவர்கள் தெளிவுறக்காட்டினார்கள். 'இவ்வரிய புறப்பாட்டு கருவூர்த் திசையறியாது அலையும் நெஞ்சமாகிய மரக்கலத்தைக்கொண்டுழலும் நல்லுயிராகிய மீகானுக்கு அவியாத கலங்கரை விளக்குப்போல விளங்குவதாகும்' என்று அவர்கள் தாமே எழுதியிருப்பதால் அவர்களது கொள்கைக்கு இப் புறநானூற்றுச் செய்யுளை யொருபிரபல ஆதாரமாகக் கொண்டார்களென்பது உணரலாகும்.

* (இஃதொரு தலைமுடிவாதலா லிதன் மறுதலைமுடிவும் அடுத்துள்ளது. ப-ர்.)

160926*

2. இப்பால், இருதிறத்தார்களது கொள்கைகளையும் நடுநின்றாராய்தற்குச் 'செந்தமிழ்ப்' பத்திராசிரியரவர்கள் முன்வந்தார்கள். இவர்கள், ஸ்ரீ. ராகவையங்காரவர்களுக்குப் போதாரவாக அமைந்த புறப்பாட்டினை ஆராயப்புகாது 'விழுநீர்வேலிநாடுகிழவோன்' என அச்செய்யுளிற்பயின்றுள்ளதொடர் சேரனைக்குறிப்பதாகுமென்றுமட்டும் எழுதினார்கள். இத்தொடர் சேரனைக்குறிப்பதன்றெனவொருசிலர் ஆசங்கை நிகழ்த்தவே, பதின்மூன்றும் புறப்பாட்டின் பொருளை ஐயமின்றிச் செவ்வனே யுணர்தற்குப் பெருந்துணையாமெனக்கருதி 21 வினாக்களைப் பத்திராசிரியரவர்கள் விடுத்தார்கள். இவ்வினாக்களும் ஆசங்கைகளை முற்ற நீக்குதற்குப்போதிய ஆற்றலிலவா யொழிந்தன. கடைசியாக மாணவநண்பரொருவர் 'இவனியார் என்னும் புறப்பாட்டாராய்ச்சி' யென்ற நுணுகிய ஆராய்ச்சியுரையொன்று வெளியிட்டனர். (செந்தமிழ் XVI, v-252-264.) இது பத்திராசிரியர் விடுத்த கேள்விகட்கு அவர்கள் தாமே கருதிய விடையாக அமைந்துள்ளதென்பது இவ்விரண்டினையும் ஒத்து நோக்கினார்க்கு நன்கு புலப்படும். இவ்வரிய ஆராய்ச்சியுரை யெழுதியோர் இன்னாரெனப் பெயர்மாத்திரையேனும் அறியும் பாக்கியம் நமக்கில்லாதுபோயினும் அவரது ஆராய்ச்சி வன்மையால் அவரொரு வித்வசிகாமணியாயிருத்தல்வேண்டுமென்பது எளிதில் ஊகித்தல் கூடும்.

3. யான் இனியெழுதுவனவற்றை நன்குணர்தற்கு 13-வது புறப்பாட்டாராய்ச்சியின் சரிதம் இன்றியமையாதாமாகலின், அதனையொருவாறு சுருக்கி இங்கே கூறினேன். கொங்குநாட்டு ஆனிலைக் கருவூரே சேரரது புராதன வஞ்சியாமென்று நிலையிடுதற்கு உளவாம் ஆதாரங்கள் பலவற்றுள் ஒன்றாக இப்பாட்டு முளைத்தெழுந்து பின்பு பணைத்தோங்கி வளர்ந்து ஆராய்ச்சி செய்யப்புக்காரது கவனத்தை யெல்லாம் ஒருங்கே தன்பால் ஈர்த்துக்கொண்டது. சேரர் தலைநகர் இதுவென ஆராய்ந்து முடிவுகாண யான் ஈண்டு முயலவில்லை. அஃது எனது நோக்கமுமன்றும். நமக்கிப்போதகப்பட்டிருக்கும் இலக்கியங்களிலுள்ள குறிப்புக்களை மாத்திரம் கொண்டு இச்சரித்திர விஷயத்தைத் தீர்மானித்தல் கூடாதாகும். ஆகவே 13-வது புறப்பாட்டின் பொருள் இன்னதென்று நிச்சயித்தலும் மாணவ நண்பர் தம் ஆராய்ச்சியுரையிற் கூறியிருப்பன எத்துணைப் பொருத்தமுள்ளனவென்று ஆராய்தலுமே எனது கருத்தாம்.



முதலில், 13-வது புறப்பாட்டினையும் அதன் பழையவுரையினையும் பன்முறையும் வாசித்துக்கொள்ளுதல் மிகவும் பயனுடையதாகும். அவை வருமாறு:—

"இவனியா ரென்குவை யாயி னிவனே
புலிநிறக் கவசம் பூம்பொறி சிதைய
வெய்கணை கிழித்த பகட்டெழின் மார்பின்
மறலியன்ன களிற்று மிசை யோனே

களிறே, முந்நீர் வழங்கு நாவாய் போலவும்
பன்மீ னாப்பட் டிங்கள் போலவுஞ்
சுறவினத் தன்ன வாளோர் மொய்ப்ப
மரீஇயோ ரறியாது மைந்துபட் டன்றே
நோயில னாகிப் பெயர்கதி லம்ம

பழன மஞ்ஞை யுகுத்த பீலி
கழனி யுழவர் சூட்டொடு தொகுக்கும்
கொழுமீன் விளைந்த கள்ளின்
விழுநீர் வேலி நாடுகிழ வோனே."

"திணை-பாடாண்டிணை; துறை-வாழ்த்தியல்

சோழன் முடித்தலைக்கோப் பெருநற்கிள்ளி கருவூரிடஞ் செல்வானைக்கண்டு சேரமானந்துவஞ்சேரலிரும்பொறையொடு வேண்மாடத்துமேலிருந்து உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் பாடியது.

இ-ள்—இவன் யாரென்று வினவுவாயாயின், இவன்றான், புலியினது தோலாற் செய்யப்பட்ட மெய்புகு கருவி பொலிந்த கொளுத்தற எய்த அம்புகள் போழப்பட்ட பரந்துயர்ந்த மார்பினையுடைய கூற்றம் போன்றகளிற்றின் மேலோன்; இக்களிறுதான், கடலின் கண்ணே இயங்கும் மரக்கலத்தை யொப்பவும் பலமீனினது நடுவே செல்லும் மதியத்தை யொப்பவும் சுறவினினத்தையொத்த வாண்மறவர் சூழத் தன்னை மருவிய பாகரையறியாது மதம்பட்டது; இவன் நோயின்றிப் பெயர்வானாக; வயலிடத்து மயிலுதிர்த்த பீலியை ஆண்டுள்ள உழவர் நெற்சூட்டுடனே திரட்டும் கொழுவியமீனையும் விளைந்தகள்ளையுமுடைய மிக்க நீராகிய வேலியையுடைய நாட்டையுடையோன்.—எ-று.

களிற்றுமிசையோனாகிய இவன், யாரென்குவையாயின், நாடு கிழவோன்; இவன்களிறு மதம்பட்டது; அதனால், இவன் நோயின்றிப் பெயர்கவெனக் கூட்டி வினைமுடிவு செய்க.

களிற்றுக்கு நாவாயோடு உவமை எதிர்ப்படையைக் கிழித்தோடலும், திங்களோடு உவமை வாளோர்சூழத் தன் தலைமை தோன்றச் செல்லுதலுமாகக் கொள்க. இல்-விழைவின்கண் நின்றது.

பெருநற்கிள்ளி களிறு கையிகந்து பகையகத்துப் புகுந்தமையான் அவற்குத் தீங்குறுமென்று அஞ்சி வாழ்த்தினமையால், இது வாழ்த்தியலாயிற்று; இவற்குத் தீங்குறின் நமக்குத் தீங்குறுமென்னுங் கருத்தால் நோயிலனாகிப் பெயர்கவென்றாராயின், வாழ்த்தியலாகாது; துறையுடையானது பாட்டெனவுணர்க."

இவ்வாறு செய்யுளும் உரையும் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

களிறொன்று மதம்பட்டுக் கையிகந்து கருவூர் புக்கது. அக்களிற்றின்மீது வருவோனாகிய சோழனை அவ்வூர் வேண்மாடத்துமேலிருந்து முடமோசியார்கண்டு தன்னருகிருந்த இரும்பொறைக்கு அவனினையனெனத் தெளிவித்ததாக இச்செய்யுள் இயன்றுள்ளமை அதன் உரை தெரிவிக்கின்றது. ஸ்ரீ. ராகவையங்காரவர்கள் கொண்ட அந்வயமும் பொருளும் நன்கு நோக்கற்பாலன. 'களிற்றுமிசையோனாகிய இவன்யார் என்குவையாயின், நாடுகிழவோன்: இவன்களிறுமதம்பட்டது: இவன் நோயின்றிப் பெயர்க' எனவுரைகாரரோடு ஒத்து அந்வயப்படுத்தினார்கள். எனினும் இவர்கள் புள்ளியீடு செய்தது புறநானூற்று அச்சுப்பிரதியோடு சிறிது மாறுபடுகின்றது. ஆனாற் கருத்து வேறுபடுவதாக எண்ணுதற்கிடமில்லை. இவன் யார் என்று சேரன் புலவரை நோக்கி வினவ 'இங்குக் களிறூர்ந்து வருவோன் நீர் நாடு கிழவோனாகிய சோழன்; இவன் பகையகத்துப் படையெடுத்து வருவானல்லன்; இவன்யானை மதம்பட்டது; அது வாண்மறவரையும் பாகரையும் அறியாது கையிகந்து ஈங்கு வாராநின்றது; இதனால் நீ போர்க்குவருவானாகக் கருதிச் சினவாதருள்க; சோழனும் நோயிலனாகிப் பெயர்க' என முடமோசியார் உண்மை தெளிவித்தாரென்பது அவர்கள் கொண்டபொருள். கருவூர் பகையகமென்பதும், பெருநற்கிள்ளி களிறு இவர்ந்ததும், அது மைந்துபட்டதும், சோணாட்டெல்லையகத்தே யென்பதும், சோணாடு கருவூருக்கு மிக அணித்தாயுள்ளதென்பதும் அவர்களது கருத்து.



ஆனால் மாணவ நண்பரது முடிபோ ஸ்ரீ. ராகவையங்காரவர்களது முடிபொடு முற்றும் மாறுபடுவதாகும். வினைமுடிபு கூறும் உரைப் பகுதியில் அவர் புள்ளியிடலமைத்துக் காட்டியிருக்கும் முறையை நோக்கினால் அவர் கொண்டபொருள் தெற்றென விளங்கும். 'களிற்றுமிசையோனாகிய இவன் யாரென்குவையாயின், நாடுகிழவோன்! இவன்களிறு மதப்பட்டது; அதனால் இவன் நோயின்றிப் பெயர்க' எனப்புள்ளியிடமைத்தனர். சேரன் உடனிருந்த புலவரை நோக்கி, 'களிற்றுமிசை யோனாகிய இவன் யார்? என வினவினனென்றும், புலவர் அவ்வினாவையே அநுகரித்து மொழிந்து 'நாடுகிழவோன்' எனச் சேரனைவிளித்துத் தன்முகமாக்கிப் பின் விடையிறுத்தனரென்றும், 'இவன்யார்' என்றதன் அறியலுறவு செயலாமென்றும், இவன் என் செயற்பாலன் எனப்பொருள்படுமென்றும், அடற்பாலனல்லன் என்பதுபட நோயிலனாகிப் பெயர்கவென விடை கூறினரென்றும் மாணவர் பொருள்கொள்ளுகின்றார். பகையகமென்றது கருவூரன்றென்பதும் கருவூரினுள்ளே சேரன் தங்கியிருந்த இடமே சோழனது பகையகமெனப்பட்டதென்பதும், சேரனுடன் நட்புக்கோடலை விரும்பி அக்காரியார்த்தமாகவே சோழன் கருவூருக்கு யானைமேற் பிரயாணமானானென்பதும், யானை கருவூர்க்கு வந்ததும் மதம்பட்டுச் சோழனுக்கென அமைக்கப்பட்ட விடுதியிலவனைத் தங்கவிடாது சேரனிருந்த இடத்துக்கு அவனைக்கொண்டு சென்றதென்பதும், அப்போது சேரன் 'இவன் என் செயற்பாலன?' எனவினவவும் 'இவன் நிரபராதி அளிக்கத்தக்கவன்' எனப் புலவர் விடையிறுக்கவும் நேரிட்டதென்பதும் மாணவநண்பரது கருத்து. ஆகவே கருவூர் மேல்கடற்கரைக்கண் சோணாட்டெல்லைக்கு வெகுதூரத்தே இருந்ததெனற்கு இப்பாட்டும் உரையும் ப்ரதிகூலமாக இல்லையென்பது அவரது முடிபாம்.

இருதிறத்தாரும் தம்தம் கருத்துக்கிணங்கவே பழையவுரை வகுக்கப்பட்டுளதெனக் கொள்ளுகின்றார்கள்.

'நாடுகிழவோன்' என்பது 'இவன்யார்' என்ற வினாவிற்கு விடையாயமைந்துள்ளதென ஸ்ரீமத். ராகவையங்காரவர்கள் கொண்டார்கள். மாணவ நண்பரவர்கள் அதனை விளியெனக்கொண்டு, இவன்யாரென்ற தன்பொருளை நன்றாயுய்த்துணரின் அவ்வினாவிற்கு நாடுகிழவோனென்பது விடையாதல் ஏலாதென நிச்சயித்தார்கள். சேரனைமுன்னிலைப்

படுத்தியே புலவர் விடையிறுப்பதாக நண்பரவர்கள் கருதுதலினாலே, நாடுகிழவோன் என்பது விளியாதல் பெறப்படின் அது சேரனைக்குறித்தல் வேண்டுமென்றும் சேரனை யுணர்த்துவதாதல் பெறப்படின் அது விளியெனல் சொல்லாதேயமையு மென்றும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். நாடுகிழவோனென்பதனை விளியென முடிவுகாணு தற்குரிய காரணங்களைத் தருவதன் மூலமாகவே நண்பரவர்கள் செய்யுட் பொருளை விரித்துரைக்கின்றார்கள். அவர்களது நெறியையே யானும் பின்பற்றிச் சென்று அவர்களால் தரப்பட்ட காரணங்களின் வன்மை மென்மைகளை ஆராய எண்ணுகின்றேன். நண்பரவர்கள் கொடுத்துள்ள நியாயங்களைக் கீழே ஸங்க்ரஹமாகத்தருகின்றேன். முழுவதையும் வாசிக்கும் விருப்பமுடையார் 'செந்தமிழ்' XVI-ம் தொகுதி 2-ம் பகுதி, 5-ம் பகுதி, இவற்றிற்கண்டுகொள்க.

I விழுநீர்வேலிநாடு=மஹோததியைத் தனக்கு அரணாகவுடையநாடு.

மஹோததி=பெருங்கடல், இது சேரருக்குரியது.
சோழருக்குரியது இரத்நாகரம் என்னுங்குடாக்கடல்.
ஆகவே, நாடுகிழவோன்=சேரன்.

II நாடுகிழவோனே:-ஏகாரம்—ஈற்றசை. நாடுகிழவோன்—இயற்கையண்மைவிளி. 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' (தொல்-சொல்-விளி) விளியாதலால் கிழவோன்=சேரன்.

III 'பழனமஞ்ஞைகிழவோனே' (a) இவ்வரிகளிற் சோழனுக்குரிய சிறப்பியல்களொன்றுங் கூறப்படாமையோடு சேரனுக்கே யுரிய சிறப்பியல்கள் கூறப்படுகின்றன; (i) மலைகளையடுத்துள்ள மருதநிலமுடைய நாடு (ii) மயிலிறகு தொகுக்கும் தொழில் நிகழ்ச்சியுள்ளநாடு. எனவே கிழவோன்=சேரன்.

(b) இவ்வடிகளில் தோன்றுஞ் சுவை மகிழ்ச்சி (இன்பம்); 'நோயிலனாகிப்பெயர்க' என்பதிலுள்ள சுவை அச்சம் (துன்பம்). இங்ஙனம் மாறுபட்ட இருவேறுசுவைகளுக்கு ஏககாலத்தில் ஒரேபொருள் நிமித்தமாக மாட்டாது. ஆகலால் நோயிலனாகிப்பெயர்வோன் கிழவோனன்று. எனவே கிழவோன் சேரனென்பது வெளிப்படை.



(c) இவ்வரிகள் துதிவாக்கியமாயமைந்துள்ளன. ஆதலாற் பயனளித்தற்குரிய சேரனையே குறித்தல் வேண்டும்.

IV 'இவன் யார்' (a) ஈண்டுள்ள வினாவின்கண்ணே யார் என்பது வினா வினைக்குறிப்பாகிய வினைச்சொல்லாதலால் இத்தொடர் வினைப்பயனிலைகொண்ட தொடராகும். இதற்கு வினையே அறிபவுறவு. எனவே இவ்வினா வினைபற்றி வந்ததாகும்; விடையும் வினையாலிறுக்கப்படவேண்டும். கிழவோன் என்ற பெயரால் விடைதரப்பட்டதெனக்கொள்ளின் அது விடைவழுவாம். ஆதலால் நோயின்றிப்பெயர்க என்பதே நேர்விடையாம். வினாவின் பொருள்வருமாறு:—

(1) இவன் செயலென்ன? (பக்-258 வரி 18.)

(2) இவன் செய்தி யென்ன? (பக்-259 வரி 1.)

(3) இத்தன்மையுடையான் செய்தியென்ன? (பக் 261 வரி 14.)

(4) இவன் என்செயத்தக்கவன்? அடற்பாலனா? அல்லனா? (பக்-261 வரி 16.)

விடை-அடற்பாலனல்லன் என்பதுபோதர 'நோயிலனாகிப் பெயர்க' என்பது.

'நாடுகிழவோன்' என்பது விடையாகா தொழியவே, அதனை விளியாகக்கொள்ளுதலல்லதுவேறுவழியில்லை. ஆதலின் அது சேரனையே குறிக்கின்றது.

V உரையிற்கூட்டிக்காட்டிய வினைமுடிபுவாக்கியங்களை நோக்கினும் 'கிழவோன்' விளியென்பதும் சேரனையே குறித்தென்பதும் தெளியலாகும்.

(a) 'என்குவையாயின்' என்பது வினையெச்சமாதலாற் பெயர்கொண்டு முடியாது. எனவே 'கிழவோன்' கொண்டுமுடியுஞ் சொல்லன்று. அதனால் அது விடையாதலுமில்லை; விளியாகவேகொள்ள நேரிடுகின்றது. ஆதலால் கிழவோனென்றது சேரனையே.

(b) 'கிழவோன்' என்பது முன்னும்பின்னுமில்லையாது தன்னந்தனியே யொரு தனிமொழியா யிருப்பதால் விளிப்பெயராகவே கொள்ளுதல் வேண்டும்.

(c) 'களிற்றுமிசையோனாகிய இவன் யார்' என்பது என் குவையாயினென்ற அனுகாரக் குறிப்பிற்குரிய புரோவாதமாம். இதன் பொருள் (முன்பு என்னோடு போரெதிர்ந்து) களிற்று மிசையோனாய் வந்த இவன் யார் என்பது. இப்பொருள் வருபவன் சோழனை னச் சேரனறிந்திருந்தமையை விளக்குகின்றது. ஆத லால், வருபவன் இன்னானெனப் பொருள்படும்படியாய்க் கிழவோன் என்பதனை விடையாயமைத்தலால் நின்று பயனின்மையெனுங்குற்றமுளதாகும். ஆகவே சோ ழனது செயல்பற்றியே வினா நிகழ்ந்ததாதல் வேண்டு மாதலின் 'கிழவோன்' விடையாயமையாது விளிப் பெயராகவே நின்றதெனல் வேண்டும். 'களிற்றுமிசை யோனாகிய இவன் யார்?' என இரண்டு வாக்கியத் தை யொன்றுபடக் கூட்டியுரைத்தமையால் உரை காரர் கருதியபொருள் இதுவே யென்பது வன்மை யுறுகின்றது.

(d) இவன் நாடுகிழவோன் என்று உரையில் இல்லை.

(e) யார் என்ற வினாவிற்கு 'நாடுகிழவோன்' என்பது விடையாயின் அதுகொண்டே முற்றிவிடு மாதலால் 'களிறுமதம்பட்டது' முதலியன வேண்டா கூறலாம். எனவே 'நாடுகிழவோன்' விடையன்று; விளியாம்.

(f) நாடுகிழவோனென்று இடையிட்டு உரையிற் காணப் படுவது இப்பொருட்கு அநுசரணையாயிருக்கின்றது.

VI செய்யுளுரையிரண்டினும் அமைந்து கிடக்கும் சரித்திரம்.

நண்பரவர்களது ஆராய்ச்சிசென்றமுறையினை யொருவாறு இங் கே காட்டினேன். இனி அவர்களால் தரப்பட்ட நியாயங்களை முறைப்பட விசாரணை செய்தல் வேண்டும்.



## I. விழுநீர்வேலிநாடு.

இத்தொடர் 'கிழவோன்' என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழியாகும். இவ் அடைமொழி சேரனொருவனுக்கே பொருந்துமென்பது நண்பரவர்களது துணிபு. 'விழுநீர்' என்பதற்கு உரைகாரர் 'மிக்கநீர்' என்று பொருளெழுதினர்; மிக்க என்பது மஹச் சப்தபரியாயமாகவும் நீர் என்பது உதகசப்தபரியாயமாகவும் உள்ளன; உதகசப்தமும் உதசப்தமும் ஒரே பொருளுடையன; ஆகவே 'மிக்கநீர்' என்ற தொடர்மொழி 'மஹோதகம்' என்னும் பெருங்கடலைக் குறிப்பதாகும்; எனவே விழுநீர்வேலிநாடு' என்பதற்கு 'மஹோதம்' என்னும் பெருங்கடலை வேலியாகவுடையநாடு என்று பொருள்கொள்ளவேண்டும்; சோழநாட்டுக்குரியது 'இரத்நாகரம்' என்னுங் குடாக்கடலேயாம், மஹோததியன்று; சேரநாட்டுக்குரியது மஹோததியாகிய பெருங்கடலேயாம்; ஆகையால் விழுநீர்வேலிநாடு சேரநாடேயாமென்று இங்ஙனமவர்கள் கூறுகின்றார்கள்.

2. சேரநாட்டுக்குரிய கடல் 'மஹோததி' யென்றும் சோழநாட்டுக்குரிய கடல் 'இரத்நாகர' மென்றும் கூறப்பட்டிருக்கின்றன. சேரருக்குரியது இந்தியாவிற்கு மேற்கேயுள்ள கடல்; அஃதாவது பெருங்கடல். சோழருக்குரியது இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள கடல்; அஃதாவது குடாக்கடல். எனவே பெருங்கடல் 'மஹோததி' யென்றும் குடாக்கடல் 'இரத்நாகரம்' என்றும் வழங்குவதாக நண்பரவர்கள் எண்ணுகின்றார்கள். இவ்வாறுகொள்ளுதற்குத் தாம் கடைப்பிடித்த ஆதாரம் இன்னதென்று அவர்கள் எழுதினார்களில்லை. ஆதாரங் கூறுத முறையில் இக்கொள்கையைப்பற்றி ஊன்றியாராயவேண்டிய ஆவசியகமில்லை. எனினும் உண்மை தெளியவேண்டுமென்னும் அவாவுடையேனாதலின், வடமொழி நூல் வழக்கும் ஐதிகமும் இதனை யாதரிக்கின்றனவா என்று விசாரித்துணர விரும்புகின்றேன்.

3. வடமொழிப்பதங்களின்பொருளையெல்லாம் நன்கெடுத்து விளக்கிக்காட்டும் வடமொழி நிகண்டுகள் பலவற்றுள்ளும் மிகச்சிறந்தது அமரகோசமாம். இதற்கு உரையெழுதிய பலருள்ளும் காலத்தாலும் சிறப்பாலும் முற்பட்டவர் க்ஷீரஸ்வாமி யென்பவர். இவர் 11-வது நூற்றாண்டில் திகழ்ந்தவர். அமரகோசத்தைப் பூர்த்திசெய்ய

வேண்டுமென்ற நோக்கத்துடனேயே உரைவகுத்தவராவர். இவரது உரையினும் அமரகோச மூலத்தினும் நண்பரவர்கள் கூறுவன ஒன்றுங் காணப்படவே இல்லை. 'ரத்நாகரம்' என்பது பொதுப்படக் கடலுக்கு ஒரு பெயராகக் கொடுக்கப்பட்டுளதேயன்றிச் சோழருக்குரிய குடாக் கடற் பெயராக உரைக்கப்பட்டிலது. இக்காலத்திய லிங்காபட்டீயத்திலும், ஆப்டே, வைத்யர், வில்ஸன் முதலானோரெழுதிய அகராதிகளிலும் 'ரத்நாகரம்' குடாக்கடற் பெயரென்றும் 'மஹோததி' சோருக்குரிய பெருங்கடற் பெயரென்றும் விளக்கப்பட்டிலவாம். எனவே வடமொழி நிகண்டினும் அகராதிகளினும் நண்பரவர்களது கூற்றிற்கு ஆதாரம் சிறிதுமின்மை தெளியப்பட்டது.

4. இனி வடமொழி நூல்களுட்பயின்றுள்ள பிரயோகங்களையொரு சிறிது நோக்குதல்வேண்டும். ரகுவம்சம், 3-ம் ஸர்க்கம் 17-ம் ஸ்லோகத்தில் 'மஹோததி' யென்றபதம் வந்துளது. திலீபன் தனது அரும்பெறற்புதல்வனை ரகுவினது விரும்பெழின்முகத்தைத் தனது பத்மதுல்லியமான நேத்திரங்களாற் பருகி உள்ளத்தே கரைபுரண்டெழுந்த உவகைப் பெருக்கினைத் தன்னுள்ளடக்கவகையறியாது நின்ற நிலைமையினைக் காளிதாஸர் ஒருவமானமுகத்தால் விளக்குகின்றார். அம்புலிகண்ட பைங்கடல் தன் கொந்தளிப்பை அடக்கலாற்றாதது போல் என்பது உவமானம். 'மஹோததே: பூர இவேந்து தர்ஶநாத்' என்பது மூலம். இங்கே 'மஹோததி' யென்பதற்குப் பொதுப்படப் பெருங்கடல் என்பதுதான் பொருளேயன்றிச் சோருக்குரிய குட பெருங்கடல் என்பது பொருளன்று. உரையாளர் மல்லிநாதரும் குட பெருங்கடற் பெயரென்ற எழுதினாரல்லர்.

5. இக்காவியத்தின்கண்ணேயே 4-ம் ஸர்க்கத்தில் 34-ம் ஸ்லோகத்திலும் 50-வது ஸ்லோகத்திலும், 6-ம் ஸர்க்கத்தில் 54-வது ஸ்லோகத்திலும் 'மஹோததி' யென்றபதம் பயின்றுள்ளது. இம்மூன்று இடங்களிலுள்ள பிரயோகங்களும் நண்பரவர்களுடைய கருத்துக்கு எத்துணை தூரம் ஒத்துளவென்று பார்க்கவேண்டும். 4-ம் ஸர்க்கம் ரகுவீரனது திக்குவிஜயத்தினைக் கூறுகின்றது. 'தனது மஹத்தானஸேநாஸமூகங்களை நடாத்திக்கொண்டு கீழ்சமுத்திரத்தைநோக்கிச்சென்ற (பூர்வஸாகரகாமிநீம்) ரகுவீரன் சிவபெருமானது ஜடாபாரத்தினின்றும் வீழ்ந்த கங்கையைக்கொண்டு சென்ற பகீரதனை யொத்து விளங்கினான் (ஸ்லோ-32)......இவ்வாறு கீழ்த்திசையிலுள்ள தேசங்களையெல்லாங் கடந்து சென்று ஜயசீலனான ரகுவீரன் தாலீவனத்தாற் பசுமை பூத்து விளங்கிய மஹோததியின் கரையை யடைந்தான் (ப்ராப தாலீவன ஶ்யாமமுபகண்டம் மஹோததே:)' என்று காளிதாஸர் நயம்படவுரைக்கின்றனர். இதனையடுத்து ஸுஹ்மர்களையும் வங்க அரசர்களையும் வென்று அடிப்படுத்தமை கூறப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் மஹோததி யென்றது நண்பரவர்களுடைய சோர்பெருங்கடலைக்குறியாது வங்கதேசத்துக்கருகிலுள்ள குடாக்கடலினையே குறிக்கின்றமை தெளிவாம். பின்னர் ரகுவீரன் கலிங்கதேசத்தரசனைவென்று அவனது நிதிமுழுவதும் கைப்பற்றிக் கீழ்சமுத்திரக்கரையோரமாக நெடுகவந்து காவேரிநதியைக்கடந்து தெற்கேயுள்ள பாண்டியதேசத்தை அடைந்தான். பாண்டிய அரசர்களும் ரகுவீரனது ஆற்றலுக்குடைந்தார்கள். மஹோததியில், தாம்ரபர்ணிசங்கமமாகுமிடத்தில், உற்பத்தியாகின்ற மதித்தற்கரிய முத்துக்களைத் (தாம்ரபர்ணீஸமேதஸ்யமுக்தாஸாரம் மஹோததே:) திலீப நந்தனனுக்கு அடியுறையாக வைத்து அவ் அரசரனைவரும் பணிந்திறைஞ்சினார்கள்; இது தாம் நெடுங்காலமாக ஈட்டிவைத்த புகழனைத்தையும் ஒருங்குதொகுத்து ரகுவீரனிடம் சமர்ப்பித்தது போலிருந்தது (ஸ்லோ-50). இவ்விடத்திலும் தாம்ரபர்ணி சங்கமமாகுங் குடாக்கடலே 'மஹோததி' யென்று கூறப்பட்டிருக்கின்றது.

6. ரகுவம்சத்தின் 6-வது ஸர்க்கம் இந்துமதியின் ஸ்வயம்வரவர்ணனை கூறுகின்றது. அம்மாதர்திலகத்தைச் சுநந்தையென்பவள் மன்னர்குலதீபங்கள் விளங்குகின்ற மகாமண்டபத்தே இட்டுக்கொண்டு சென்று, ஆண்டு சித்திரப்பதுமைகள் போன்று ஆடாது அசையாது வீற்றிருந்த அரசர்களது குலவரவை அணிபெற எடுத்துரைக்கின்றாள். அங்ஙனங் கூறும்பொழுது, கலிங்கதேசத்தரசன் "பதிர் மஹேந்த்ரஸ்ய மஹோததேஶ்ச" என்று வருணிக்கப்படுகிறான் (ஸ்லோ 54.) மஹேந்திரத்துக்கும் மஹோததிக்குந் தலைவன் என்பதுவே இதன்பொருள். மஹேந்த்ரம் பர்வதத்தையும் மஹோததி கடலையுங்குறிப்பனவாம். ஈண்டும் கலிங்கதேசத்தையடுத்துள்ள குடாக்கடலே 'மஹோததி' யென்றழைக்கப்பட்டமை காணலாம்.

7. இங்கே காட்டிய மூன்று பிரயோகங்களும் குடாக்கடலானது அதன் வடபெரும் பாகத்திலும் மத்தியபாகத்திலும் தென்பாகத்திலும் 'மஹோததி' யென்று வழங்கப்பட்டமைக்குச் சிறந்த ஆதாரங்களாயின. ஆகவே இவைகள் நண்பரவர்களது கொள்கைக்கு ஆதாரமாகாமையோடு அதற்கு முற்றிலும் விரோதமாக இருக்கின்றன.

8. ரகுவம்சமேற்கோள்களேயன்றிப் பிறநூல் மேற்கோள்களும் எனது கருத்தை யாதரிப்பனவாகக் காட்டுதல் கூடும். ஒன்று மட்டுங்கூறியமைகின்றேன். தைத்திரீயர்களின் மாத்யாஹ்நிக உபஸ்தான மந்திரத்திலும், தைத்திரீய ஆரண்யகத்திலும் குணபாலுள்ள கடலே மஹார்ணவம் (அஃதாவது மஹோததி) என்று கூறப்படுகிறது. 'ய உதகாந் மஹதோர்ணவாத் விப்ராஜமாந:' என்பது மூலம் (தைத்தி-ஆரண்-VII-42). எவன் (சூரியன்) ஒளிபொருந்தியவனாக மஹார்ணவத்திலிருந்து மேலெழுந்தானோ என்பது இதன்பொருள். எனவே சூரியனுதயமாகும் கீழ்த்திசைக்கடல் அஃதாவது குடாக்கடல் மஹார்ணவம் என்று கூறப்பட்டுள்ளமை நன்கு அறியலாகும்.

9. இனி, கர்ணபரம்பரையாக வழங்கிவரும் ஐதிகந்தானும் யாது கூறுகிறதென்று அறிதல்வேண்டும். நண்பரவர்கள் சேரநாட்டுக்குரிய கடல் மஹோததி யென்றும் சோழநாட்டுக்குரிய கடல் இரத்நாகரமென்றும் எழுதியுள்ளார்கள். ஆனால், ஐதிகமோவெனின் நண்பரவர்களது கருத்துக்கு முற்றுமாறாகச் சோழநாட்டுக்குரிய கடல் மஹோததியென்றும் சேரநாட்டுக்குரிய கடல் இரத்நாகரம் என்றுந் தெரிவிக்கின்றது. இவ் ஐதிகத்திற்கு மூலாதாரம் இதுவென என்னால் இப்பொழுது நிச்சயித்தல் கூடவில்லை. எனினும் இங்ஙனம் ஐதிகமொன்றுண்மைக்குக் காலத்தானும் இடத்தானும் சம்பந்தமில்லாத பல்வேறு கல்வியாளர்கள் சான்று பகர்கின்றார்கள். ரகுவம்சப் பதிப்பாசிரியரான நந்தர்கிகர் என்பவர் அப்பதிப்பிற்குத் தாமெழுதிச்சேர்த்த ஆங்கிலக் குறிப்பில் (பக்-122) 'மஹோததி-சோழமண்டலத்திற்குரிய கடல்' ('Sea of the coramandal coast ) என்று கூறியிருக்கின்றார். இதுவுமன்றி இப்பதத்தை ரகுவம்சகாவ்யத்திற் பயின்றுள்ள சிறப்புப் பெயர்களிலொன்றாக (Proper names) அவர் சேர்த்திருக்கின்றார். ஸ்ரீவெங்கடேசஐயரவர்கள், M. A. தாமெழுதிய 'சங்கராசார்யரும் அவரது காமகோடி பீடமும் (Sankaracharya and his Kamakoti Peetta



pp, 11, 18, 19) என்ற நூலில் 'ரத்நாகரம்' என்பது மேல்பாலுள்ள கடலினது பெயரென்றும், 'மஹோததி' யென்பது கீழ்பாலுள்ள கடலினது பெயரென்றும், இக்கீழ்த்திசைக் கடற்கரையிலிருக்கும் கஜகந்நாதபுரியில் மஹோததியெனப்பெயரிய தீர்த்தமுளதென்றும் சொல்லுகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் சோர்பெருங்கடல் 'மஹோததி' யென்றழைக்கப்படுவதற்குச் சான்றாக அக்கடற்கரையிலுள்ளதொரு பட்டினம் 'மஹோதை' யென வழங்கப்படுகிறதென்று மாணவ நண்பரவர்கள் காட்டினமை ஞாபகம் வருகின்றது. முதலாவதாக 'மஹோததி' 'மஹோதை' இவ்விரண்டினுக்கும் யாதோரியையுங் காணப்படவில்லை. வலிந்து இடர்ப்பட்டு ஏதேனுமோரியைபு காட்டுதல் கூடுமாயினும், தீர்த்தத்தின் பெயராகிய மஹோததிக்கும் கடலின் பெயராகிய மஹோததிக்கும் உள்ள வியைபுபோற் கேட்டமாத்திரையிலுண்மையெனத் தெளிவித்தற்குரிய சக்தி அதற்கில்லை. இரண்டாவதாக, மஹோதை யென்ற பெயரின் வரலாறும் காரணமும் தக்க ஆதாரங்களுடன் நண்பரவர்களாற் காட்டப்படவில்லை. ஆகவே அவர்கள் சான்று எனத்தந்தது சிறிதும் வலியிலதாயொழிகின்றது. மேற்குறித்த ஐதிக சம்பந்தமாகப் பிறிதோர் ஆராய்ச்சியாளர் கூறியிருப்பனவற்றை மட்டும் எடுத்துச்சொல்லி நிறுத்துகின்றேன். ஸ்ரீமாந் கே. என், சீதாராம் M. A. (Hons ) M. R. A. S. etc. தமது இந்திய சரித்திரப் பயிற்சி' யென்ற வியாசத்தில் 'ரத்நாகரம் (அரபிக்கடல்) மஹோததி (வங்காளக்குடாக்கடல்) என்ற இரு கடல்களாலும் சூழப்பெற்ற பாரதவர்ஷம்' என்றெழுதிச் செல்கின்றனர் (New India, Weekly Supplement, April 12, 1919). இங்ஙனமாகப் பலதிறத்தினரும் எடுத்துச்சொல்லுதலினாலே ஐதிகமொன்றுளதெனக்கோடல் சரியாயின், அவ் ஐதிகங்கூறுவதின்னதென்பதைப்பற்றிச் சிறிதும் சந்தேகமே இல்லை. ரகுவம்சமேற்கோள்கள் முதலியவற்றால் குடாக்கடல் 'மஹோததி' யென்று குறிக்கப்பட்டமை காட்டப்பட்டது. வழங்கிவரும் ஐதிகமோ அக்குடாக்கடலொன்றே மஹோததி யென்று அழைத்தற்குரிய தென்பதை வெளிப்படுக்கின்றது. ஆதலால் 13-ம் புறப்பாட்டின் கடையடியில் 'விழுநீர்' எனப் பயின்றுவந்தது 'மஹோததி' யென்ற வடமொழிப்பெயரைச் சுட்டுதற்கென நண்பரவர்கள் கொண்டதனோடு உடன்படுவதாயின், விழுநீர்வேலிநாடு சோழநாடென முடிவு காணவேண்டுமேயன்றி அது சேரநாடெனல் எவ்வாற்றானும் பொருந்துவதன்றாம்.

(b) 'கிழவோன்' என்பது முன்னும்பின்னுமில்லயாது தன்னந்தனியே யொரு தனிமொழியா யிருப்பதால் விளிப்பெயராகவே கொள்ளுதல் வேண்டும்.

(c) 'களிற்றுமிசையோனாகிய இவன் யார்' என்பது என்குவையாயினென்ற அனுகாரக் குறிப்பிற்குரிய புரோவாதமாம். இதன் பொருள் (முன்பு என்னோடு பேசவெதிர்ந்து) களிற்று மிசையோனாய் வந்த இவன் யார் என்பது. இப்பொருள் வருபவன் சோழனெனச் சேரனறிந்திருந்தமையை விளக்குகின்றது. ஆதலால், வருபவன் இன்னானெனப் பொருள்படும்படியாய்க் கிழவோன் என்பதனை விடையாயமைத்தலால் நின்று பயனின்மையெனுங்குற்றமுளதாகும். ஆகவே சோழனது செயல்பற்றியே வினா நிகழ்ந்ததாதல் வேண்டுமாகலின் 'கிழவோன்' விடையாயமையாது விளிப்பெயராகவே நின்றதெனல் வேண்டும். 'களிற்றுமிசையோனாகிய இவன் யார் ?' என இரண்டு வாக்கியத்தை யொன்றுபடக் கூட்டியுரைத்தமையால் உரைகாரர் கருதியபொருள் இதுவே யென்பது வன்மையுறுகின்றது.

(d) இவன் நாடுகிழவோன் என்று உரையில் இல்லை.

(e) யார் என்ற வினாவிற்கு 'நாடுகிழவோன்' என்பது விடையாயின் அதுகொண்டே முற்றிவிடு மாதலால் 'களிறுமதம்பட்டது' முதலியன வேண்டா கூறலாம். எனவே 'நாடுகிழவோன்' விடையன்று; விளியாம்.

(f) நாடுகிழவோனென்று இடையிட்டு உரையிற் காணப்படுவது இப்பொருட்கு அநுசரணையாயிருக்கின்றது.

VI செய்யுளுரையிரண்டினும் அமைந்து கிடக்கும் சரித்திரம்.

நண்பரவர்களது ஆராய்ச்சிசென்றமுறையினை யொருவாறு இங்கே காட்டினேன். இனி அவர்களால் தரப்பட்ட நியாயங்களை முறைப்பட விசாரணை செய்தல் வேண்டும்.



# I. விழுநீர்வேலிநாடு.

இத்தொடர் 'கிழவோன்' என்பதற்குக் கொடுக்கப்பட்டுள்ள அடைமொழியாகும். இவ் அடைமொழி சோரனொருவனுக்கே பொருந்துமென்பது நண்பரவர்களது துணிபு. 'விழுநீர்' என்பதற்கு உரைகாரர் 'மிக்கநீர்' என்று பொருளெழுதினர்; மிக்க என்பது மஹத் சப்தபரியாயமாகவும் நீர் என்பது உதகசப்தபரியாயமாகவும் உள்ளன; உதகசப்தமும் உதசப்தமும் ஒரே பொருளுடையன; ஆகவே 'மிக்கநீர்' என்ற தொடர்மொழி 'மஹோதம்' என்னும் பெருங்கடலைக் குறிப்பதாகும்; எனவே விழுநீர்வேலிநாடு' என்பதற்கு 'மஹோதம்' என்னும் பெருங்கடலை வேலியாகவுடையநாடு என்று பொருள்கொள்ளவேண்டும்; சோழநாட்டுக்குரியது 'இரத்நாகரம்' என்னுங் குடாக்கடலேயாம், மஹோததியன்று; சேரநாட்டுக்குரியது மஹோததியாகிய பெருங்கடலேயாம்; ஆகையால் விழுநீர்வேலிநாடு சேரநாடேயாமென்று இங்ஙனமவர்கள் கூறுகின்றார்கள்.

2. சேரநாட்டுக்குரிய கடல் 'மஹோததி' யென்றும் சோழநாட்டுக்குரிய கடல் 'இரத்நாகர' மென்றும் கூறப்பட்டிருக்கின்றன. சேரருக்குரியது இந்தியாவிற்கு மேற்கேயுள்ள கடல்; அஃதாவது பெருங்கடல். சோழருக்குரியது இந்தியாவிற்குக் கிழக்கேயுள்ள கடல்; அஃதாவது குடாக்கடல். எனவே பெருங்கடல் 'மஹோததி' யென்றும் குடாக்கடல் 'இரத்நாகரம்' என்றும் வழங்குவதாக நண்பரவர்கள் எண்ணுகின்றார்கள். இவ்வாறுகொள்ளுதற்குத் தாம் கடைப்பிடித்த ஆதாரம் இன்னதென்று அவர்கள் எழுதினார்களில்லை. ஆதாரங் கூறாத முறையில் இக்கொள்கையைப்பற்றி ஊன்றியாராயவேண்டிய ஆவசியகமில்லை. எனினும் உண்மை தெளியவேண்டுமென்னும் அவாவுடையேனாதலின், வடமொழி நூல் வழக்கும் ஐதிகமும் இதனை யாதரிக்கின்றனவா என்று விசாரித்துணர விரும்புகின்றேன்.

3. வடமொழிப்பதங்களின்பொருளையெல்லாம் நன்கெடுத்து விளக்கிக்காட்டும் வடமொழி நிகண்டுகள் பலவற்றுள்ளும் மிகச்சிறந்தது அமரகோசமாம். இதற்கு உரையெழுதிய பலருள்ளும் காலத்தாலும் சிறப்பாலும் முற்பட்டவர் க்ஷீரஸ்வாமி யென்பவர். இவர் 11-வது நூற்றாண்டில் திகழ்ந்தவர். அமரகோசத்தைப் பூர்த்திசெய்ய

வேண்டுமென்ற நோக்கத்துடனேயே உரைவகுத்தவராவர். இவரது உரையினும் அமரகோச மூலத்தினும் நண்பரவர்கள் கூறுவன ஒன்றுங் காணப்படவே இல்லை. ‘ரத்நாகரம்’ என்பது பொதுப்படக் கடலுக்கு ஒரு பெயராகக் கொடுக்கப்பட்டுளதேயன்றிச் சோழருக்குரிய குடாக் கடற் பெயராக உரைக்கப்பட்டிலது. இக்காலத்திய லிங்காபட்டீயத்திலும், ஆப்டே, வைத்யர், வில்ஸன் முதலானோரெழுதிய அகராதிகளிலும் ‘ரத்நாகரம்’ குடாக்கடற் பெயரென்றும் ‘மஹோததி’ சேரருக்குரிய பெருங்கடற் பெயரென்றும் விளக்கப்பட்டிலவாம். எனவே வடமொழி நிகண்டினும் அகராதிகளினும் நண்பரவர்களது கூற்றிற்கு ஆதாரம் சிறிது மின்மை தெளியப்பட்டது.

4. இனி வடமொழிநூல்களுட்பயின்றுள்ள பிரயோகங்களையொரு சிறிது நோக்குதல்வேண்டும். ரகுவம்சம், 3-ம் ஸர்க்கம் 17-ம் ஸ்லோகத்தில் ‘மஹோததி’ யென்றபதம் வந்துளது. திலீபன் தனது அரும்பெறற்புதல்வனை ரகுவினது விரும்பெழின்முகத்தைத் தனது பத்மதுல்லியமான நேத்திரங்களாற் பருகி உள்ளத்தே கரைபுரண்டெழுந்த உவகைப் பெருக்கினைத் தன்னுள்ளடக்கவகையறியாது நின்ற நிலைமையினைக் காளிதாஸர் ஒருவமானமுகத்தால் விளக்குகின்றார். அம்புலிகண்ட பைங்கடல் தன் கொந்தளிப்பை அடக்கலாற்றாதது போல் என்பது உவமானம். ‘மஹோததே: பூர இவேந்து தர்ஸநாத்’ என்பது மூலம். இங்கே ‘மஹோததி’ யென்பதற்குப் பொதுப்படப் பெருங்கடல் என்பதுதான் பொருளேயன்றிச் சேரருக்குரிய குட பெருங்கடல் என்பது பொருளன்று. உரையாளர் மல்லிநாதரும் குட பெருங்கடற் பெயரென்று எழுதினாரல்லர்.

5. இக்காவியத்தின்கண்ணேயே 4-ம் ஸர்க்கத்தில் 34-ம் ஸ்லோகத்தினும் 50-வது ஸ்லோகத்தினும், 6-ம் ஸர்க்கத்தில் 54-வது ஸ்லோகத்தினும் ‘மஹோததி’ யென்றபதம் பயின்றுள்ளது. இம்மூன்று இடங்களிலுள்ள பிரயோகங்களும் நண்பரவர்களுடைய கருத்துக்கு எத்துணை தூரம் ஒத்துளவென்று பார்க்கவேண்டும். 4-ம் ஸர்க்கம் ரகுவீரனது திக்குவிஜயத்தினைக் கூறுகின்றது. ‘தனது மஹத்தான ஸேநாஸமூகங்களை நடாத்திக்கொண்டு கீழ்சமுத்திரத்தைநோக்கிச்சென்ற (பூர்வஸாகரகாமிநீம்) ரகுவீரன் சிவபெருமானது ஜடாபாரத்தினின்றும் வீழ்ந்த கங்கையைக்கொண்டு சென்ற பகீரதனை யொத்து விளங்கினான் (ஸ்லோ-32)......இவ்வாறு கீழ்த்திசையிலுள்ள தேசங்களையெல்லாங் கடந்து சென்று ஜயசீலனான ரகுவீரன் தாலீவனத்தாற் பசுமை பூத்து விளங்கிய மஹோததியின் கரையை யடைந்தான் (ப்ராப தாலீவன ஸ்ரீயாமமுபகண்டம் மஹோததே:)’ என்று காளிதாஸர் நயம்பட வுரைக்கின்றனர். இதனையடுத்து ஸுஹ்மர்களையும் வங்க அரசர்களையும் வென்று அடிப்படுத்தமை கூறப்படுகின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் மஹோததி யென்றது நண்பரவர்களுடைய சேரர்பெருங்கடலைக்குறியாது வங்கதேசத்துக்கருகிலுள்ள குடாக்கடலினையே குறிக்கின்றமை தெளிவாம். பின்னர் ரகுவீரன் கலிங்கதேசத்தரசனைவென்று அவனது நிதிமுழுவதும் கைப்பற்றிக் கீழ்சமுத்திரக்கரையோரமாக நெடுகவந்து காவேரிநதியைக்கடந்து தெற்கேயுள்ள பாண்டியதேசத்தை அடைந்தான். பாண்டிய அரசர்களும் ரகுவீரனது ஆற்றலுக்குடைந்தார்கள். மஹோததியில், தாம்ரபர்ணிசங்கமமாகுமிடத்தில், உற்பத்தியாகின்ற மதித்தற்கரிய முத்துக்களைத் (தாம்ரபர்ணீஸமேதஸ்யமுக்தாஸாரம் மஹோததே:) திலீப நந்தனனுக்கு அடியுறையாக வைத்து அவ் அரசரனைவரும் பணிந்திறைஞ்சினார்கள்; இது தாம் நெடுங்காலமாக ஈட்டிவைத்த புகழனைத்தையும் ஒருங்குதொகுத்து ரகுவீரனிடம் சமர்ப்பித்தது போலிருந்தது (ஸ்லோ-50). இவ்விடத்தினும் தாம்ரபர்ணி சங்கமமாகுங் குடாக்கடலே ‘மஹோததி’ யென்று கூறப்பட்டிருக்கின்றது.



6. ரகுவம்சத்தின் 6-வது ஸர்க்கம் இந்துமதியின் ஸ்வயம்வரவர்ணனை கூறுகின்றது. அம்மாதர்திலகத்தைச் சுநந்தையென்பவள் மன்னர்குலதீபங்கள் விளங்குகின்ற மகாமண்டபத்தே இட்டுக்கொண்டு சென்று, ஆண்டு சித்திரப்பதுமைகள் போன்று ஆடாது அசையாது வீற்றிருந்த அரசர்களது குலவரவை அணிபெற எடுத்துரைக்கின்றாள். அங்ஙனங் கூறும்பொழுது, கலிங்கதேசத்தரசன் “பதிர் மஹேந்த்ரஸ்ய மஹோததேஸ்ச” என்று வருணிக்கப்படுகிறான் (ஸ்லோ 54.) மஹேந்திரத்துக்கும் மஹோததிக்குந் தலைவன் என்பதுவே இதன்பொருள். மஹேந்த்ரம் பர்வதத்தையும் மஹோததி கடலையுங்குறிப்பனவாம். ஈண்டும் கலிங்கதேசத்தையடுத்துள்ள குடாக்கடலே ‘மஹோததி’ யென்றழைக்கப்பட்டமை காணலாம்.

7. இங்கே காட்டிய மூன்று பிரயோகங்களும் குடாக்கடலானது அதன் வடபெரும் பாகத்திலும் மத்தியபாகத்திலும் தென்பாகத்திலும் 'மஹோததி' யென்று வழங்கப்பட்டமைக்குச் சிறந்த ஆதாரங்களாயின. ஆகவே இவைகள் நண்பரவர்களது கொள்கைக்கு ஆதாரமாகாமையோடு அதற்கு முற்றிலும் விரோதமாக இருக்கின்றன.

8. ரகுவம்சமேற்கோள்களேயன்றிப் பிறநூல் மேற்கோள்களும் எனது கருத்தை யாதரிப்பனவாகக் காட்டுதல் கூடும். ஒன்று மட்டுங்கூறியமைகின்றேன். தைத்திரீயர்களின் மாத்யாஹ்நிக உபஸ்தான மந்திரத்திலும், தைத்திரீய ஆரண்யகத்திலும் குணபாலுள்ள கடலே மஹார்ணவம் (அஃதாவது மஹோததி) என்று கூறப்படுகிறது. 'ய உதகாந் மஹதோர்ணவாத் விப்ராஜமாந:' என்பது மூலம் (தைத்தி-ஆரண்-VII-42). எவன் (சூரியன்) ஒளிபொருந்தியவனாக மஹார்ணவத்திலிருந்து மேலெழுந்தானோ என்பது இதன்பொருள். எனவே சூரியனுதயமாகும் கீழ்த்திசைக்கடல் அஃதாவது குடாக்கடல் மஹார்ணவம் என்று கூறப்பட்டுள்ளமை நன்கு அறியலாகும்.

9. இனி, கர்ணபரம்பரையாக வழங்கிவரும் ஐதிகந்தானும் யாது கூறுகிறதென்று அறிதல்வேண்டும். நண்பரவர்கள் சேரநாட்டுக்குரிய கடல் மஹோததி யென்றும் சோழநாட்டுக்குரிய கடல் இரத்நாகரமென்றும் எழுதியுள்ளார்கள். ஆனால், ஐதிகமோவெனின் நண்பரவர்களது கருத்துக்கு முற்றுமாறாகச் சோழநாட்டுக்குரிய கடல் மஹோததியென்றும் சேரநாட்டுக்குரிய கடல் இரத்நாகரம் என்றுந் தெரிவிக்கின்றது. இவ் ஐதிகத்திற்கு மூலாதாரம் இதுவென என்னால் இப்பொழுது நிச்சயித்தல் கூடவில்லை. எனினும் இங்ஙனம் ஐதிகமொன்றுண்மைக்குக் காலத்தானும் இடத்தானும் சம்பந்தமில்லாத பல்வேறு கல்வியாளர்கள் சான்று பகர்கின்றார்கள். ரகுவம்சப் பதிப்பாசிரியரான நந்தர்கிகர் என்பவர் அப்பதிப்பிற்குத் தாமெழுதிச்சேர்த்த ஆங்கிலக் குறிப்பில் (பக்-122) 'மஹோததி-சோழமண்டலத்திற்குரிய கடல்' ('Sea of the coramandal coast) என்று கூறியிருக்கின்றார். இதுவுமன்றி இப்பதத்தை ரகுவம்சகாவ்யத்திற் பயின்றுள்ள சிறப்புப் பெயர்களிலொன்றாக (Proper names) அவர் சேர்த்திருக்கின்றார். ஸ்ரீவெங்கடேசஐயரவர்கள், M. A. தாமெழுதிய 'சங்கராசார்யரும் அவரது காமகோடி பீடமும் (Sankaracharya and his Kamakoti Peetta



pp, 11, 18, 19) என்ற நூலில் 'ரத்நாகரம்' என்பது மேல்பாலுள்ள கடலினது பெயரென்றும், 'மஹோததி' யென்பது கீழ்பாலுள்ள கடலினது பெயரென்றும், இக்கீழ்த்திசைக் கடற்கரையிலிருக்கும் கஜகந்நாதபுரியில் மஹோததியெனப்பெயரிய தீர்த்தமுளதென்றும் சொல்லுகின்றார்கள். இந்த சந்தர்ப்பத்தில் சேரர்பெருங்கடல் 'மஹோததி' யென்றழைக்கப்படுவதற்குச் சான்றாக அக்கடற்கரையிலுள்ளதொரு பட்டினம் 'மஹோதை' யென வழங்கப்படுகிறதென்று மாணவ நண்பரவர்கள் காட்டினமை ஞாபகம் வருகின்றது. முதலாவதாக 'மஹோததி' 'மஹோதை' இவ்விரண்டினுக்கும் யாதோரியையுங் காணப்படவில்லை. வலிந்து இடர்ப்பட்டு ஏதேனுமோரியைபு காட்டுதல் கூடுமாயினும், தீர்த்தத்தின் பெயராகிய மஹோததிக்கும் கடலின் பெயராகிய மஹோததிக்கும் உள்ள வியைபுபோற் சேட்டமாத்திரையிலுண்மையெனத் தெளிவித்தற்குரிய சக்தி அதற்கில்லை. இரண்டாவதாக, மஹோதை யென்ற பெயரின் வரலாறும் காரணமும் தக்க ஆதாரங்களுடன் நண்பரவர்களாற் காட்டப்படவில்லை. ஆகவே அவர்கள் சான்று எனத்தந்தது சிறிதும் வலியிலதாயொழிகின்றது. மேற்குறித்த ஐதிக சம்பந்தமாகப் பிறிதோர் ஆராய்ச்சியாளர் கூறியிருப்பனவற்றை மட்டும் எடுத்துச்சொல்லி நிறுத்துகின்றேன். ஸ்ரீமாந் கே. என், சீதாராம் M. A. (Hons ) M. R. A. S. etc. தமது இந்திய சரித்திரப் பயிற்சி' யென்ற வியாசத்தில் 'ரத்நாகரம் (அரபிக்கடல்) மஹோததி (வங்காளக்குடாக்கடல்) என்ற இரு கடல்களாலும் சூழப்பெற்ற பாரதவர்ஷம்' என்றெழுதிச் செல்கின்றனர் (New India, Weekly Supplement, April 12, 1919). இங்ஙனமாகப் பலதிறத்தினரும் எடுத்துச்சொல்லுதலினாலே ஐதிகமொன்றுளதெனக்கோடல் சரியாயின், அவ் ஐதிகங்கூறுவதின்னதென்பதைப்பற்றிச் சிறிதும் சந்தேகமே இல்லை. ரகுவம்சமேற்கோள்கள் முதலியவற்றால் குடாக்கடல் 'மஹோததி' யென்று குறிக்கப்பட்டமை காட்டப்பட்டது. வழங்கிவரும் ஐதிகமோ அக்குடாக்கடலொன்றே மஹோததி யென்று அழைத்தற்குரியதென்பதை வெளிப்படுக்கின்றது. ஆதலால் 13-ம் புறப்பாட்டின் கடையடியில் 'விழுநீர்' எனப் பயின்றுவந்தது 'மஹோததி' யென்ற வடமொழிப்பெயரைச் சுட்டுதற்கென நண்பரவர்கள் கொண்டதனோடு உடன்படுவதாயின், விழுநீர்வேலிநாடு சோழநாடென முடிவு காணவேண்டுமேயன்றி அது சேரநாடெனல் எவ்வாற்றானும் பொருந்துவதன்றாம்.

10. இனி, 'விழுநீர்' என்ற தொடர்மொழி மஹோததி யென்ற வடமொழிப் பெயரைக் குறிக்கவல்லதா என்றாராய்தல்வேண்டும். இது தனித்துவரும் பொழுது 'சீரியநீர்,' 'சிறந்தநீர்' எனப்பொருள்படுமேயன்றிப் பிறவாறு பொருள்படுதலில்லை. 'விழுமம் சீர்மையுஞ் சிறப்புமிடும்பையும்' என்பது தொல்காப்பியம் (உரிச்-55). விழு என்றவுரிச்சொல் நீர் என்றதனை விசேடித்து நின்று சாதாரணமாகக்கருதப்படும் நீரை யொழித்து அதனினும் சிறந்ததொரு நீரைக் குறித்தற் பயத்ததாய் வந்தது. இடம்நோக்கியே சிறந்ததிதுவென அறியப்படுதலின், விழுநீர் என்ற தொடர்மொழி பலவேறு தன்மையுள்ள நீரினைக்குறித்து வருவது காணலாம். சிலப்பதிகாரத்தின்கண் (V-168) 'மஞ்சனநீர்' என்ற பொருள் குறித்துவந்தது. ஆராய்ச்சிக் கெடுத்துக்கொண்ட செய்யுளின்கண், வேலியின்னதென விளக்குதற்பொருட்டு அதனையடுத்துவந்தமையானே கடல்நீர்என்ற பொருள் குறித்துவந்தது. ஆகவே இத்தொடர்மொழி இடவிசேஷத்தினாற் கடல்நீரைக் குறித்ததேயன்றி இதற்குரிய பொருள் சீரிய அல்லது சிறந்த நீர் என்பதேயாம். உரைகாரரும் 'மிக்கநீர்' என்றே கூறினர். செய்யுளின்கணுள்ள சொற்களுள் ஒன்றனையும் விடாது பொருளுரைத்துச் செல்லுமியல்பினராகிய இவர் கடலென உரையில் எழுதாமையானே அக்கடலைக் குறிப்பானன்றி நேரேயுணர்த்துஞ்சொல் யாதொன்றும் செய்யுளிலுளதாகக் கருதினாரல்லரென்பது பெறப்படும். 'மஹோததி' என்ற ஸம்ஸ்க்ருத பதமோ, மஹா+உததி எனப்பிரிந்து பெருங்கடல் எனப் பொருள்படும். சீரிய அல்லது சிறந்த நீர் பெருங்கடலெனப் பொருள்படுதல் யாண்டும் இல்லை. ஆகையால் விழுநீர் என்பதற்கு மஹோததியென்றதன் பொருளைத்தானும் உணர்த்து மாற்றலில்லையென்பது தெளிவாம்.

11. இங்ஙனமாகவும், 'மிக்கநீர்' என வுரையிற் காணப்படுவதனை அடிப்படையாகக்கொண்டு 'மஹோததி' யென்பதே கருதப்பட்டதெனக் காட்டுதற்கு முயன்றுள்ளார்கள். 'மிக்கநீர்' என்பதனை 'மஹோதகம்' என்பதன் பரியாயமாகக் கொள்ளுதலுங் கூடும். மஹோதகம் என்பது மஹோதம் எனவருதற்கு நூல்வழக்குக் காட்டப்படவில்லையெனினும் அதனையும் ஆக்ஷேபித்தல் வேண்டா. ஆனால் இதனையடுத்து 'மிக்கநீர் என்ற தொடர்மொழிக்கு மஹோதம் என்னும் பெருங்கடலே



பொருளாமெனவறிக' என்றெழுதியுள்ளார்கள். 'மஹோதம் என்னும் பெருங்கடல்' என்பதற்கு மஹோதம் அஃதாவது பெருங்கடலென்றேனும் அல்லது மஹோதம் என்ற சிறப்புப்பெயருடைய பெருங்கடலென்றேனும் பொருள் கொள்ளுதலமையும். மஹோதம் என்பது பெருங்கடல் என்ற பொருளில் வடமொழி நூல்களில் யாண்டேனும் வந்திருப்பதுண்டா? வந்திருப்பதுண்டாயின், நண்பரவர்கள் எடுத்துக்காட்டியுண்மை தெளிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். மேலும் 'மிக்கநீர்' என்பதன்றோ வடமொழியில் மஹோதம் எனக்கொள்ளப்பட்டது? இவ்வடமொழித்தொடரினை மீண்டுந் தமிழ்ப்படுத்தும்பொழுது 'பெருங்கடல்' என்ன வருமென்றல் சிறிதேனும் அங்கீகரிக்கத் தகுந்ததாமா? மஹோதம் என்பது பெருங்கடல் எனப் பொருள்கொள்ளவில்லை; மஹோதம் என்னுஞ் சிறப்புப்பெயரையுடைய பெருங்கடல் என்பதே தம்கருத்தென அவர்கள் கூறுவார்களாயின், அது சிறப்புப்பெயரென்பது நூல்வழக்கினும் உலகவழக்கினும் காணப்படவில்லையே. 'சேரநாட்டுக்குரியகடல் மஹோததியாகிய பெருங்கடலேயாம்' என்று அவர்கள் தாமே எழுதிச்செல்வதால் மஹோததி யென்பதே சிறப்புப்பெயரெனல் அவர்களும் நன்கறிந்துவைத்ததொன்றுமென்பது பெறப்படும். ஆகவே 'மஹோதம் என்னும் பெருங்கடலே பொருளாமெனவறிக' என்று அவர்கள் எழுதியது எவ்வகையால் நோக்கினும் பொருந்துமாறில்லை. மஹோதம் பெருங்கடல் எனப்பொருள்படுதல் இல்லையாகவே, அது மஹோததியாதலுமில்லை. ஆதலால் 'மிக்கநீர்' என்ற தமிழ்த்தொடரும் 'மஹோததி' யென்றதனை யுணர்த்தும் ஆற்றல் உடையதன்றாம். நியாயங்கூறும் அளவும் மஹோதம் என்றதனைப் பற்றியே பிரஸ்தாபஞ்செய்து முடிபுகூறுமிடத்தில் மஹோததியென்ற தொடர்மொழியினைப் பூர்வசம்பந்தம் யாதொன்றுங்காட்டாது மெல்லெனச் செருகிவிடுதல் நண்பரவர்களது நடுவுநிலைமைக்குத் தக்கதன்றாம்.

12. 'விழுநீர்' என்பது 'மஹோததி' யென்றபெயரின் மொழிபெயர்ப்பு அன்றெனற்கு வேறொரு அதிமுக்கியமான காரணம் இருக்கிறது: மஹோததி யென்ற தொடர்மொழி குறிப்பிட்ட வொருகடலுக்குமட்டும் வழங்கும் சிறப்புப் பெயரென்பதனைப் பூர்விக தமிழ்ச் சான்றோர்கள் அறிந்தவர்களாயினன்றே அதனை மொழிபெயர்த்துத்

தங்கள் செய்யுட்களில் அமைத்துக்கொண்டார்களெனக் கூறுதல் கூடும். இவ்வடமொழித் தொடரின் பரியாயமாகப் பண்டைத் தமிழ்நூல்களிற் காணப்படுவனவற்றுள் பெரும்பாலன பொதுப்படக் கடலினையும், ஒரு சில சோழருக்குரிய கடலினையும் வேறுசில சேரருக்குரிய கடலினையும் உணர்த்துவனவா யிருக்கின்றன உதாரணமாகச் சில தருகின்றேன்:—

A. பொது

(1) 'பெருங்கடல்'-புறம்-198; 204; 397.

அகம்-மணிமிடைபவளம் (புலவுத்திரைப் பெருங்கடல் நீரிடைபோழ)

பதிற்றுப்பத்து-76.

ஐங்குறுநூறு-102; 123; 161-170.

நற்றிணை-45; 74; 106; 117; 155; 163; 231; 245; 375; 392;

குறுந்தொகை-101; 243; 246; 269; 311; 313; 320;

மணிமேகலை-2-73; 12-67; 14-70; 16-19;

நாலடி-275; 332.

'மாக்கடல்'-புறம்-42.

பதிற்றுப்-11; 17.

'நளிகடல்'-புறம்-26.

நாலடி-166; 242.

மணி-6-78.

'இருங்கடல்'-புறம்-201; 363.

'நெடுங்கடல்'-குறள்-17.

'இருமுந்நீர்'-புறம்-20.

'நளியிருமுந்நீர்'-புறம்-35; 66.

மணி-12-92; 16-13.

'வீங்குநீர்'-சிலப்பதி-6-148.

மணி-5-31.

'வீங்குநீர்வேலி'-சிலப்பதி [மங்கலவாழ்த்து. வீங்கு=மிக்க (அடியார்க்கு நல்லார். cf விழு)].



B. சோழர்க்குரிய குணகடல்.

(1) 'வீங்கோதம்' சிலப்பதி 7-28 (புகாரையடுத்துள்ளதாகக் கூறப்பட்டுளது.)

(2) 'நீலமாக்கடல்'-மணி-8-17. (காலை ஞாயிறு தோன்றுவதாகக் கூறப்பட்டுளது.)

(3) 'நெடுங்கடல்'-நாவுக்கரசு-ஒற்றியூர்த் திருத்தாண்டகம்-4.

C. சேரருக்குரிய குடகடல்.

(1) 'நளிநீர்ச்சேர்ப்ப'-ஐங்குறுநூறு-179.

(2) 'பெரியநீர்வேலிசூழ்ந்து, வாசமே கமழுஞ்சோலை வயலணியனந்தபுரம்' நம்மாழ்வார் 10-ப, 2-தி, கெடுமிடர் 4.

13. இங்ஙனமாக வுள்ளன தமிழ்நூற் பிரயோகங்கள். மஹோததி சிறப்புப்பெயரென்பது கடைச்சங்ககாலத்திற் பிரசித்தமாயிருந்ததாயின், அக்காலத்து ஆன்றோர்கள் அதன் மொழிபெயர்ப்பினையும் சிறப்புப்பெயராகவேகொண்டு குறிப்பிட்ட வொருகடலுக்கே பிரயோகித்திருப்பார்கள்; பொதுவொடு சிறப்பினை மயங்கவையாது பொதுவினை வேறுவகையாகத் தெரிப்பார்கள்; பிறிதொரு சிறப்புப்பெயருள்ள கடலுக்கு இச்சிறப்புப்பெயரினை வழங்கார்கள். இந்நியமங்களுக்கு முற்றிலுமாறாகப் பிரயோகங்கள் காணப்படுகின்றன. மஹோததி இரத்நாகரம் என்ற வழக்குவேறுபாட்டினை உணர்ந்திருந்தார்களாயின் 'ரத்நாகரம்' என்ற பெயரினை யெவ்வாறு மொழிபெயர்த்துள்ளார்கள்? பிரயோகம் யாண்டுளது? குறிப்பிட்ட வொருகடலுக்கே தனித்துரியதாய் வழங்கப்பட்டுளதா? அரிதிற் பொருளுணரத்தகுவனவாயிருக்கும் பண்டைத் தமிழ்நூல்கட்குச் சிறப்புமிக்க பேருரைகள் வகுத்த வரம்பில்கேள்விமேதக்கோரால் மஹோததி, இரத்நாகரம் என்பனவற்றிற்குரியவாய்ச் சொல்லப்படுகின்ற வழக்குவேறுபாடு ஓரிடத்தேனும் காட்டப்படவில்லையே! இவ்விஷயங்களை யெல்லாம் உற்றுராயின், மஹோததி சிறப்புப்பெயராமென்பதனைப் பண்டைத்தமிழா

சிரியர்கள் அறிந்துள்ளார்களெனற்கு ஆதாரம் ஒரு சிறிதுமின்மை தெளிவாம். ஆதலால் அவ்வடமொழித்தொடர் மொழிபெயர்த்து அமைக்கப்பட்டதெனல் சிறிதும் அங்கீகரிக்கத்தக்கதன்றாம்.

14. இத்துணையுங் கூறியவற்றான், 'விழுநீர் வேலிநாடு' சேரநாடேயாமென்ற முடிபு எள்ளளவும் பொருந்தாதென்பது நன்குதேறப்படும். 'மஹோததி' சோழருக்குரிய குடாக்கடலை யுணர்த்துதற்கு வருதல் வடமொழிநூல் வழக்கில் உண்டென்பது காட்டப்பட்டது. ஐதிகத்தை நிச்சயித்தல் கூடுமாயின், அது சோழருக்குரிய குடாக்கடலொன்றே மஹோததியெனற்குரியதுஎன்பதைக் காட்டுகின்றது. ஆகவே, விழுநீர் என்பது மஹோததியின் பரியாயமென்று நண்பரவர்கள் கூறுவதனோடு உடன்படுவதாயின், விழுநீர்வேலிநாடு சோழநாடேயென்பது தெளியப்படும். குடாக்கடல் என்ற பெயருடையதனைப் பெருங்கடல் எனக் கூறுதல் தகாதுஎன்று மாணவ நண்பரவர்கள் கருதுவதுபோலத் தோன்றுகிறது. 'குடாக்கடல்' என்பது தற்கால ஆங்கிலவழக்கு. இவ்வழக்கிற்கியையப் பூர்வகாலத்திலும் பெயரிட்டு வழங்கினரென்பது சிறிதும் ஒப்பத்தகுந்ததன்று, மேற்காட்டியபடி மஹோததியென்ற பெயர்வழக்கினை உண்மைக்கு மாறுபடக்கொண்டார்களென்பது மட்டுமன்று; அதனைக் காரணங்காட்டி முடிவுகாணுதலே பிழையாமென்பது எனதுகருத்து. ஏனெனின், 'விழுநீர்' மஹோததியென்றதன் மொழிபெயர்ப்பே அன்றாம். ஆகவே 'விழுநீர் வேலிநாடு' என்ற தொடர்விஷயமாய் அவர்கள்கொண்ட முடிபு முற்றும் பிழைபாடுடையதாகின்றது. இத்தொடரைமட்டுங்கொண்டு நாடுகிழவோன் சோழனோ அல்லது சேரனோவென்பது நிச்சயித்தல் கூடாதாகும்.

15. இம்முடிபில் யானும் நண்பரவர்களும் வேறுபடினும் அவர்கள்கூறுவனவொருசில எனக்கும் அங்கீகாரமேயாம். நீர்நாடு என்பதும் நீர்வேலிநாடு என்பதும் பொருளிற் பெரிதும் வேறுபாடுடையனவாதல் அவர்களால் நன்கு காட்டப்பட்டுள்ளது. ஆதலால் இதனை மறந்து அல்லது புறக்கணித்து 'நீர்நாடு கிழவோன்' என்று நெகிழ்ந்து செல்லுதல் கூடாதாம். நீர்நாடு என்பதும் புனல்நாடு என்பதும் ஒருபொருளனவாதலானும் சோணாடு புனல்நாடென அழைக்கப்படுதலானும் நீர்நாடுகிழவோன் சோழனாவன் என முடிவுகாணுதற்பொருட்டு



'வேலி' என்பது ஒழிக்கப்பட்டதாயின் அது பெரிதும் ஆக்ஷேபத்திற்கிடமானதாகும். ஸ்ரீ. ராகவையங்காரவர்கள் இக்கருத்துடன் அப்பதத்தை விட்டிருப்பார்களென்று சொல்ல யான்துணியவில்லை. எங்ஙனமாயினும் சோழநாடும் கடலினையடுத்துளதாதலின் அதனை நீர்வேலிநாடு என்று சொல்லுதற்கண் யாதோரிழுக்குமின்றாம்.

(தொடரும்.)

S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,
திருவனந்தபுரம்.

குறிப்பு:—எனது நண்பர்களான ஸ்ரீ K. G. சங்கரஐயரவர்களும் ஸ்ரீமாந் S. தேசிகவிநாயகம்பிள்ளையவர்களும் இவ் ஆராய்ச்சியுரையெழுதிமுடித்தற்கண் மிக்க உதவிபுரிந்துள்ளார்கள். அவ்விருவர்க்கும் யான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

---

ஸ்ரீ.

# முன்னதன்மறுதலைமுடிவு.

திருவனந்தபுரம் நண்பர் ஸ்ரீமத் வையாபுரிப்பிள்ளையவர்கள் (பீஏ, பீ. எல்.) எழுதிய "13-வது புறப்பாட்டும் உரையும் I" என்ற ஆராய்ச்சி இதன் முன்பு வைக்கப்பட்டுள்ளது. அதில், அவ்வாராய்ச்சியெழுதற்குக் காரணமான பூருவ விருத்தாந்தத்தை நன்குகாட்டியுள்ளார்கள். அதில், எனக்கும் ஒரு சிறிதியைபுடைமையால் அவ்வாராய்ச்சியில் நுழைந்து எனது கருத்தையும் வெளியிடக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அவ்வாராய்ச்சியில் நண்பரவர்கள், மாணவர் எழுதியவிடயங்களையெல்லாம் நுணுகியறிந்து செவ்வனே சொல்லியிருப்பினும் முக்கியமான ஒரு விடயத்தைத் தவறுபடக்கருதிவிட்டார்கள். அதாவது சோழர்பெருங்கடலொன்றே மஹோததியாவதன்றி உலகத்திலுள்ள பிறிதொரு பெருங்கடலும் மஹோததியாகாதென மாணவர் கருதியதாகக் கொள்ளுதலே. இதுவே இவ்வொருதலையாராய்ச்சியெழுதுவதற் கடிப்

படையாயிற்று. சொல்வோன் கருத்தொடுபடாதபொருளைக்கற்பித்துக்கொண்டு அதனையாக்ஷேபிப்பது சிறிதும் பயனற்றதாமாதலால், முதலில் மாணவர்கருத்தின்னதென அறியுமாறு கீழே விவரித்துக் காட்டுகின்றேன்.

உததி—கடல்; இது கடற் பொதுப்பெயர்; குடாக்கடல், பெருங்கடல் எல்லாவற்றையும் ஒருங்கேயும், ஒவ்வொன்றையும் தனியேயும் உணர்த்தும் முக்கிய விருத்தியுடையது.

மகோததி (மஹத்+உததி)—பெருங்கடல். இஃதடைமொழியாற்றலால் கடற் சிறப்புப்பெயராய்க் குடாக்கடலையொழிந்த பெருங்கடலையெல்லாம் ஒருங்கேயும் தனியேயு முணர்த்தும் முக்கியவிருத்தியுடையது. குடாக்கடலில் ஓரோவழிப் பிரயோகம் காட்டுதல் கூடுமாயின் அது, கங்கைக்கண் இடைச்சேரியென்பதுபோலும் இலக்கணவழக்கேயாம். முக்கியவிருத்திக்குப்பொருத்தமில்லாதவிடத்தில் மட்டும் இலக்கணைகொள்வது முறை.

குடாக்கடல்:—கோணவடிவாற் பரிச்சேதிக்கப்பட்ட கண்டசமுத்திரம்.

பெருங்கடல்:—அங்ஙனம் பரிச்சேதிக்கப்படாத அகண்டசமுத்திரம்; இது பூமண்டலத்தைச் சூழ்ந்து நாற்புறங்களிலுமுள்ளது; (சேரநாட்டருகுமுள்ளது.) சோழநாட்டருகில் இல்லாதது.

ரத்நாகரம்:—இது ரத்நங்களுக்குப் பிறப்பிடமென்னும் பொருளுடையதாய் மகராலயம் என்பதுபோலக் குடாக்கடல், பெருங்கடல் எல்லாவற்றையும் ஒருங்கேயும் தனியேயு முணர்த்தும் முக்கிய விருத்தியுடையது. இதை, 'மஹோததி' என்னும் சிறப்புப்பெயரோடு ஓரியைபுபற்றி வழங்குங்கால், பெருங்கடலொழிந்த குடாக்கடலே யிதன்பொருளாம். இதனைப் பின்வருமுதாரணத்தாலறியலாம்.



பசு:—என்பது ஆவின் ஆண் பெண் எல்லாவற்றிற்கும் உரிய பொதுப்பெயர்.

எருது:—என்பது ஆண்பசுவிற்கேயுரிய சிறப்புப்பெயர், (இவ்விரண்டும் ஓரியைபுபட்டுழி) அங்குமேய்வது பசுவோ? எருதோ? என்றவினாவில் பசுவென்ற பொதுப்பெயர் ஆண்பசுவை யொழித்துப் பெண் பசுவையே யுணர்த்துதல்காண்க. இவ்வாறே, கூவுவது சேவலோ? கோழியோ? என்ற அறிவினாவில் கோழியென்பது சேவலொழிந்த பேட்டை யுணர்த்திவருதலும் காண்க.

இவ்வாறே மாணவர் மஹோததி ரத்நாகரம் எனவழங்குமிடங்களில் ரத்நாகரமென்பது குடாக்கடலையே குறிக்குமெனவறிக. இவ்விஷயங்களை நண்பரவர்கள் கவனித்திருந்தால் இவ்வாராய்ச்சியினொருதலைமுடிபெழுத முன்வந்திருக்கமாட்டார்களென்றே நம்புகிறேன். ஆயினும், அவர்களாக்ஷேபித்துவருமவற்றிற்குரிய சமாதானங்களையும் கீழே ஒருவாறு காட்டுகிறேன்.

இவ்வாராய்ச்சிக்கு நண்பரவர்களெழுதிய பூர்வசரிதச் சுருக்கத்துள், (யானெழுதிய வஞ்சிமாநகராராய்ச்சியில்) 13-ம் புறப்பாட்டின் பொருளையெல்லாம் விரித்தெழுதியாராயப்புகாது அதிலுள்ள 'விழுநீர் வேலிநாடுகிழவோன்' என்றதொடர் சேரனைக்குறிப்பதாகமட்டும் காட்டிவிட்டது ஒரு குறையென்று சொல்லுகிறார்கள்; அஃதுண்மையே' ஆயினும் இப்புறப்பாட்டின் ஆராய்ச்சி மிகவிரிவுடையதாகுமாதலால் அதன் முடிவை முதலிற் குறிப்பாகக்காட்டிப் பின்பு மேற்கோள் வலியாராயுங்கால் விரித்தெழுதலாமென்று விட்டதேயன்றி வேறன்று.

மற்றும் அச்சரிதச்சுருக்கத்துள் 13-ம் புறப்பாட்டின் பொருளை ஐயமின்றிச் செவ்வனேயுணர்தற்குப் பெருந்துணையாமெனக்கருதி (யான்) எழுதியதாகச்சொல்லும் 21 வினாக்களும் பயனற்றனவாயொழிந்தனவெனத் துணிந்து சொல்லுகிறார்கள். அங்ஙனந்துணிந்தவர்கள் அவ்வினாக்களுக்கு முறையே விடையெழுதி அதுகொண்டு கவியின் கருத்து இப்படியிருக்கிறதென்பதைக்காட்டி அதற்கிணங்கப் பாட்டுக்குப் பொருளையெழுதி அதன்பின்பு. அவ்வினாக்கள் பயனற்

றனவாயொழிந்தன’ என்னும் ஒருதலைமுடிபுசொல்லியிருந்தால் அது விசுவசிக்கத்தக்கதாயிருக்கும். அவ்வாறன்றி ஒருதலைமுடிபு சொல்லியது நடுவுநிலைமையுடையதாகாது.

இனி, (ஆராய்ச்சியின் 2-ம் பத்தியில்) பெருங்கடலை மஹோததி யெனவும், (குறிப்பிட்ட) சூடாக்கடலை ரத்நாகர மெனவும் மாணவர் கருதியது தவறென்றும், அதற்குப் பிரமாணங்களில்லை யென்றும் நண்பரவர்கள் தமது கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். சாதாரணமாகத் தெரியக்கூடிய விஷயங்களுக்குப் பிரமாணங்களைக்காட்டி இடத்தை நிரப்புவது மிகையென்று விட்டிருக்கலாம்; அல்லது விரிவஞ்சி விட்டிருக்கலாம். அதனால் அவர்சொல்வது தவறாய்விடமாட்டாது; பிரமாணமில்லாமற் போகவுமில்லை.

தனுஷ்கோடி ஸ்நாநம்பண்ணும் வைதிகோத்தமர் பலரும் தொன்றுதொட்டவழக்காக “மஹோததி ரத்நாகர ஸங்கமே ஸ்நாநம் கரிஷ்யே” என்று சங்கற்பத்திற் சொல்லிவருகிறார்கள். இதனால் தனுஷ்கோடியானது, மஹோததியென்றவொருகடலும், ரத்நாகரமென்ற பிறிதொரு கடலும் கூடுமிடமென வெளியாகிறது.

இவற்றுள், எது? மகோததி? எது ரத்நாகரம் என்றுவிசாரித்தால் சிலர் ‘வடபாலுள்ளது மகோததி; தென்பாலுள்ளது ரத்நாகரம்; என்றும் வேறுசிலர்தென்பாலுள்ளது மகோததி வடபாலுள்ளது ரத்நாகரம் என்றும் ஒருநெறிப்படாதபடி சொல்லுகிறார்கள். இவற்றால் உண்மை தெரிதற்கிடமில்லை. ஆதலாலிதனை ஆராய்ச்சிசெய்தே நிச்சயிக்கவேண்டும்.

ரத்நாகரசப்தம் கடல்களுக்கெல்லாம் பொதுப்பெயரென்றே நண்பரவர்களாலும் ஒத்துக்கொள்ளப்பட்டது; அப்படியே அமரகோசத்திலுமுள்ளது. அதன்பரியாயமாகவே உததிசப்தமும் படிக்கப்பட்டிருக்கிறது. இதனால் இவ்விரண்டு சப்தங்களும் தனித்தனி இடம் நோக்கி ஓரிடத்திற் சூடாக்கடலையும், பிறிதோரிடத்திற் பெருங்கடலையும் உணர்த்தற்குரியனவாம்.

மகோததிசப்தம் அவற்றோடு பரியாயமாகப் படிக்கப்படாமையாலும் அடைமொழியாற்றலுடைமையாலும் சூடாக்கடலை யொழித்துப் பெருங்கடலையே யுணர்த்தும் வலியுடையதாம்.



உததி, ரத்நாகரம் என்னுமிரண்டுமொழிகளும் ஒத்தபொருளுடையவாயிருப்பினும் ஓரியைபுபட வழங்குமிடத்து ஒன்றை மஹத் சப்தத்தால் விசேடித்தால் அது சூடாக்கடலையுணர்த்தாதொழித்துப் பெருங்கடலையே யுணர்த்துவதாகும். அதனோடியைந்து அடைபெறாது நின்ற பிறிதொன்று பெருங்கடலையுணர்த்துமாற்றலிழந்து சூடாக்கடலையே யுணர்த்து மென்பது கூறாமலே பெறப்படும்.

இம்முறைமையால் மாணவர் சொல்வதில் ‘மகோததி’ என்பதற்குப் பெருங்கடல் என்றும் ‘ரத்நாகரம்’ என்பதற்குக் சூடாக்கடல் என்றும் பொருள்படுவதல்லது பிறிதில்லை. இங்கு தனுஷ்கோடியின் வடபாலுள்ளதே மகோததி யென்று துணியப்பட்டுவிட்டால் அதை மாணவர் ரத்நாகரமென்ற சொல்லால்வழங்கியது பிழையென்றே கொள்ளலாம்; தென்பாலுள்ளதே மகோததியெனத் தெளியப்பட்டால் மாணவர் சொல்லியது பிழையாகாதென்றே தெளியலாம். இவ்விஷயத்தில் யானறிந்தவற்றை யிங்குத்தெரிவிக்கின்றேன்.

சோர்கடலருகுள்ளதொரு நகரிக்கு ‘மகோதை’ என்றபெயர் தமிழ்நூல்களில் வழங்கப்பட்டிருப்பது கற்றார் பலரும் அறிவர். அப்பெயர் கேட்டமாத்திரத்தாலே வடமொழித்திரிபாய்த் தமிழில்வந்து வழங்கும் பெயரென யாருமறியலாம். இது வடமொழிவழக்கிற் பெண்பாற்சொல்லாகிய நகரிப்பெயராமாதலால் “ஆவிறஜ”யாக வருதற்குரிய “மஹோதா” என்றவடமொழிப் பெயரென்றறியலாம். இதிற் பெண்பாலெழுத்தான ஆகாரம் ஒழிந்தபகுதி “மஹோத” என்றிருக்க வேண்டுமென்றறியலாம். இம்மட்டும் சாதாரணத் தமிழுணர்ச்சி கொண்டறியத்தக்கது.

இனி ஸம்ஸ்கிருதவுணர்ச்சியாலுமாராயின் “க்ஷீரோத” (பாற்கடல்) “லவணோத” (உவர்க்கடல்) “க்ருதோத” (நெய்க்கடல்) முதலிய சப்தங்களைப்போலவே ‘மஹோத’ சப்தமுமிருப்பதால் அவை நிலைமொழிப்பொருட்கியைந்த கடலை யுணர்த்துதல் போலவே இதுவும் நிலைமொழிப் பொருட்கியைந்த (பெருங்) கடலை யுணர்த்துமென்றறிய வேண்டும். இதில் நிலைமொழியாது? வருமொழியாது? எனவாராயின் நிலைமொழி பெருமைப்பொருளுணர்த்தும் மஹத் சப்தமாயிருக்க வேண்டுமென்பது வெளிப்படையாயார்க்கும் தெரியத்தக்கதே. வரு

மொழியை 'க்ஷீரோத' 'லவணோத' முதலிய சப்தங்களின் வியுத்பத்திகொண்டுபார்த்தால் அது, 'உதகஸ்யோதஸ்ஸம்ஜ்ஞாயாம்: உதீகாரவதஸ்ய; க்ஷீர மணே:' என்றன்முதலிய வியாகரணவிதிகளால் நீரை புணர்த்தும் உதகசப்தம் திரிந்து விகாரப்பட்டு உத சப்தமாயிற் றென் றறியலாம். இவ்விரண்டன் சமுதாயமே மஹோத சப்தமெனவறியத் தக்கது.

இதில் நிலைமொழியாய்நின்ற மஹத்சப்தம் பெருமையையும், வருமொழியாய்த்திரிந்துநின்ற ஓதசப்தம் கடலினையும் உணர்த்துமாதலால் இவ்விரண்டுங்கூடியதொடர் பெருங்கடலென்னும் பொருளுணர்த்துவதாயிற்று. இவ்வாறே க்ஷீரோத முதலிய கடற்பெயர்களுள்ளும் கண்டு கொள்க. இத்தொடர்மொழிகளுள் வருமொழியாய்நின்று கடலை யுணர்த்திவரும் ஓதசப்தமே பிரிந்துவந்து தமிழிலும் "ஓதம்" என்று கடலுக்கு ஒரு பெயராயிருத்தலுங் கண்டுகொள்க. ஆதலால் மஹோத: என்பது பெருங்கடலையுணர்த்துமொரு பெயராமென நன்குதெளியத் தக்கது. இது தொடர்மொழியாதலால் மஹோததிசப்தம்போலவே நிகண்டு முதலியவற்றிற் சேராமலும், பெருவழக்கில்லாமையால் 'ஸமுத்ர' 'ஜலதி' முதலிய கடற்பெயர்கள்போல் காவியப்பிரயோகங்களிற் காணாமலும்போயிற்று. ஆயினும் இது சாஸ்திரசித்தமான பெயராதலால் இப்பெயரடியாக மகோதை யென்னும் ஊர்ப்பெயர் பிறக்கத்தடையில்லை.

இவ்வாறே 'மஹோததி' என்ற பெயரும் மஹத்+உதகம் என்ற இரண்டு பதங்களை உபபதமாகவுடையதொரு தொடர்மொழி. இதற்கு 'மிக்கநீரைத் தாங்குமிடமென்பது பொருளாகும். (இதுவும் 'மகோதம்' என்பதுபோல உதகசப்தம்திரிந்த இடுகுறியாற்றலுமுடையது) மகோதம் என்பதற்கு "மிக்கநீரையுடைய இடம்" என்பது பொருளாகும். (கடலைக்கருதி) "மிக்கநீரைத் தாங்குமிடம்" என்பதிலும், "மிக்கநீரையுடைய இடம்" என்பதிலும் சொல்லும் முறையில் வேறுபாடுண்டேயல்லது பொருளில் வேறுபாடு சிறிதுமில்லையென்பது அறிவுடையோரால் நன்கு அறியத்தகும்.

ஆதலால் மகோதம் என்பதும் மகோததி யென்பதும் சிறிதும் வேறுபாடில்லாத ஒருபொருள் குறித்த பரியாயப் பெயராமென நன்கு



தெளியத்தக்கது. இதனால் சேரநாட்டிரான மகோதையினருகு மகோதம் என்று பண்டையோர் வழங்கியகடல் மகோததியின்வேறாகாத பெருங்கடலேயாம் என்பது சாஸ்திரசித்தமாயறியப்பட்டது.

இனி அம்மகோததியானது மகோதையினின்றும் தமிழ்நாட்டையடுத்து எதுவரையுளதாகுமென்றிடஞ்சுற்றிப்பார்ப்போம். சேரர்க்குச் சிறந்தகடலிதுவென்று நண்பரவர்கள் எடுத்துக்காட்டியவிடத்து "பெரிய நீர்வேலைசூழ்ந்து,வாசமேகமழுஞ்சோலை வயலணியனந்தபுரம்" என்ற திருவாய்மொழிவாக்கியத்தால் திருவனந்தபுரம் பெரியநீர்வேலை (மகோதக்கடல்) சூழ்ந்திருப்பதாகத் தாமேசொல்லித் திருவனந்தபுரத்தருகிருப்பது பெருங்கடலென ஒத்துக்கொண்டிருப்பதால் அது மகோததியாமென்பது நிர்விவாதமாயிற்று. அக்கடலினை அவர்கள் காட்டியபிரமாணமே 'மகோத' என்பதனளவிலே 'பெரியநீர்' என்று மொழிபெயர்ப்பாய்க் கூறியிருப்பதும், அதுவே 'விழுநீர்' 'மிக்கநீர்' என்ற புறநானூற்றுச் செய்யுளுரை வழக்கோடு ஒற்றுமையுடையதாயிருப்பதும் இங்குகவனிக்கத்தக்கன.

இப்பால் இலங்கையிடைப்பட்ட கடலைப்பற்றி ஆராய்வாம். "லங்காம் ப்ராப்ய நலஸ்ஸேதும் பத்வா மஹோததிம்" "யஸ்ய த்ராஸேந ஸேதுர்நவஸாரங்கமிஷ்ருதி" என்றமஹாநாடக சுலோகத்தில் மஹேந்திரகிரிக்கும் இலங்கைக்குமிடைப்பட்டகடல் மஹோததியென்று வியக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அன்றியும் அக்கடலே வான்மீகத்தில் "ஸிந்துராஜோ மஹார்ணவ:" என்று மகார்ணவசப்தத்தாலும், "நிவத்ரீரோ மஹோததே:" என்று மகோததி சப்தத்தாலும் வழங்கப்பட்டுள்ளது. இங்கு இக்கடலே அர்ணவ சமுத்ரமுதலிய பெயர்களாலும் பலவிடங்களிற் சொல்லப்பட்டுள்ளது. அப்பெயர்களெல்லாம் மகோததிக்குமுரிய பொதுப்பெயராதலால் அவை அக்கடலை மகோததியன்றென்று சாதிக்கமாட்டாவாம். அவ்வாறே ரத்நாகர சப்தப்பிரயோகமிருந்து காட்டப்பட்டாலும் அதுவும் அக்கடலை மஹோததியன்றென்று சாதிக்கமாட்டாதென்பது நன்கறியத்தக்கது.

இனி, அதற்கப்பால் தாம்பிரபருணீசங்கம சமுத்திரத்தை, நண்பரவர்களே "தாம்ரபர்ணீஸமேதஸ்ய ஸங்கமாத் மஹோததே:"

என்ற ரகுவம்சவாக்கியத்தால் மகோததியாமென்று காட்டிவலியுறுத்தி விட்டார்கள். இதனால் இதுவும் நிர்விவாதமாயிற்று.

இனி இதன்வடபால் தனுஷ்கோடியளவுமுள்ள கடலைப்பற்றி யாராய்வோம். ராமாயண சரித்ர சம்பந்தமான சேதுபந்தன மிதன் கண்ணதே. இதுவும் மகோததி யென்பதற்கு அனுகுணமாகவே வான் மீகப்பிரயோகங்கள் பலவுள்ளன: அவற்றுட் சிலவருமாறு:—

1. "[illegible]" (யுத்தகா. 1-3)
2. "[illegible]" ( ,,-21-1)
3. "[illegible]" (,, ,, 24)
4. "[illegible]" (,, ,,-29)
5. "[illegible]" (,, 22-1)
6. "[illegible]" ( ,, -22-15 )
7. "[illegible]" ( ,, 22-30)
8. "[illegible]" ( ,, -22-46)
9. "[illegible]" ( ,, -22-48)

என்றிவ்வாறு சேதுபந்தன சமுத்திரம் மகோததியென்று பல விடங்களில் வழங்கப்பட்டிருக்கிறது. இதுகாறுங் கூறியவாற்றால் மகோததி என்னும் பெருங்கடலானது மகோதையென்னும் சேரர்நகரி தொட்டு தனுஷ்கோடியளவும் தமிழ்நாட்டையிடமாகச் சூழ்ந்திருப்பதாக நிரூபிக்கலாயிற்று. இனிப் பரிசேடத்தால் தனுஷ்கோடியில் இம் மகோததியோடு சங்கமிக்கும் பிறிதொருகடலே (வைதிகர் தனுஷ் கோடி ஸ்நாநசங்கற்பத்திற் சொல்லும்) ரத்நாகரமென்றறியத்தக்கதாயிருக்கிறது. ஆதலால் மாணவர், தனுஷ்கோடியின் வடபால் வந்து சங்கமிக்கும் வங்காளக்குடாக்கடலை ரத்நாகரமென்று கருதியது தவறாகாதென்று தோன்றுகிறது.



இனி, வங்காளக் குடாக்கடல் மகோததியாகாதென்று நிரூபிக்கவும் சரித்திரரூபமான சான்றுகளுள்ளன. அவை பின்வருமாற்றாலறியலாம். மணிமேகலையுள், 'பொன்னிறூசி பசுங்கம்பளத்துள், துன்னியதென்னத் தோடுகடல் உழந்துழி' என்ற அடிகளால், புகார் நகரத்து வணிகனொருவன் றனதுமரக்கல மூழ்கிவங்காளக் குடாக்கடலிலுழந்த செய்தி சொல்லியவிடத்து அக்கடல் தோடுகடல் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தொடுகடல் என்ற சொல்லுக்கு, சகரரால் தோண்டப்பட்டகடல் என்பது பொருளாம். இதுவடமொழியுள் சகரால் தோண்டப்பட்டது என்னும் பொருளில் 'சாகரம்' எனவழங்கப்படும். இதனால் சாகரமும் தோடுகடலும் ஒன்றேயாமாதலால் தொடுகடலாகிய குடாக்கடல் தோடாக்கடலாகிய மகோததியாகாதென நன்கறியத்தக்கது.

அன்றியும், இக்கடலே கங்காசங்கமக் கடலாதலால் அது சகரரற்றோண்டப்பட்டதென்று பிரசித்திபெற்ற புராதன சரித்திரசாக்ஷியும் இதனை வலியுறுத்துகின்றது. கல்வியிற் பெரியகம்பரும் "சகரர் தொட்டலாற் சாகரமெனப் பெயர்தழைப்ப, மகரவாரிதி சிறந்தது" என்றதிசயிக்கிறார். இங்கு அவ் வதிசயமாவது, பொதுப்பெயரால் சிறப்புப்பொருள் உணர்த்தப்படுதல் உலகத்தியல்பு; சிறப்புப்பெயரால் பொதுப்பொருள் உணர்த்தப்படுதல் வேறெங்குங்கண்டதில்லை; சாகரம் என்னும் சிறப்புப்பெயரால் பொதுப்பொருளாகிய ஏழ்பெருங்கடலும் வழங்கப்படுதலாலிதன்பெருமை யென்னென்று சொல்வேன்! என்றதிசயித்தலாம். இதனால், கங்காசங்கமத்தாலுண்டாகிய விழுப்பமுடைமையின் பெருமையோடொருபுடை யொப்புமையுடைய வடிவப்பெருமைபற்றி யேழ்பெருங்கடலும் சாகரமெனவழங்கப்படுமென் றறியத்தக்கதாம். இது தொடுகடலுக்கும் ஒக்கும். இங்குள்ள ஒப்புமை, "புறங்குன்றிகண்டனையர்" என்புழிப்போல்வது

இதுகாறுங் கூறியவாற்றால் மகோதைமுதல் தனுஷ்கோடிவரையுள்ளகடல் மகோததியே யென்றும், கங்காசங்கமமுதல் தனுஷ்கோடி வரையுள்ளகடல் மகோததியன்றென்றும் அபாதிதப்பிரமாணங்களால் நிரூபிக்கப்பட்டன.

இனி வங்காளக்குடாக்கடலும் மகோததியாமென்று கருதி கண்பரவர்கள் காட்டிய பிரமாணமொன்றேனும் அவர்கள் கக்ஷிக்குச் சாதகமாயில்லை யென்பதையும் இங்குக்காட்டுகிறேன்.

4-ம் பத்தியில் „[illegible]" என்ற ரகுவம்ச காவியவாக்கியத்தை நண்பரவர்கள் தம்கக்ஷிக்கு ஆதாரவாகக் காட்டியிருக்கிறார்கள். இதிற்சொல்லிய மஹோததி மாணவர் கருதிய மகோததியன்றென்று நிரூபிப்பதாயிருந்தால் அதுவங்காளக் குடாக்கடலையே குறித்ததென்று நண்பரவர்கள் நிரூபித்திருக்கவேண்டும். அப்படி நிரூபிக்கப்படாமையால் அது மாணவர்கருதும் பெருங்கடலாகிய மகோததியை விலக்குவதன்றியே பெரும்பான்மை பற்றிய வழக்காய்ப் பிறகடலையும் தழுவக்கூடுமாயினும் அவற்றுட் சிறப்புடைய பெருங்கடலே உவமையிற் சிறக்குமாதலால் அத்துணைசிறவாதகுடாக் கடலே உவமையாகாதவாறு விலக்கப்பட்டதெனவறியத்தக்கது. ஆதலாலிது மாணவர்கக்ஷியை விரோதிப்பதாயில்லை.

இனி 5-ம் பத்தியில், "இவ்வாறு கீழ்த்திசையிலுள்ள தேசங்களையெல்லாம் கடந்துசென்று ஜயசீலனை ரகுவீரன் தாலீவனத்தாற் பசுமை பூத்து விளங்கிய மகோததியின் கரையையடைந்தான்" என்று கூறி, „ப்ராபதாலீவநச்யாமமுபகண்டம் மஹோததே:" என்ற வாக்கியத்தாற்குறித்த மகோததி வங்காளக்குடாக்கடலே யாமென்று சாதிக்கவருகிறார்கள். இங்கு, அவர்களே "கீழ்த்திசையிலுள்ள தேசங்களையெல்லாங் கடந்துசென்று மகோததிக்கரையை யடைந்தானென்று சொல்லுதலால், இமயமலையையடுத்துத் தரைவழியாக வங்காளக் குடாக்கடலின் வடபாலுள்ள தேசங்களையெல்லாங் கடந்து பூர்வமஹாசமுத்திரக்கரை யடைந்தானென்று பொருள்படுமேயல்லது வங்காளக் குடாக்கடற் கரையடைந்தானென்று பொருள்படாது. அன்றியும், அம்மகோததிக்கரையடைந்த பின்பு வலமாகத்திரும்பித்தெற்கு நோக்கிவரும் பொழுதன்றோ ஸுஹ்மர்களையும் வங்க அரசர்களையும் அடிப்படுக்கவேண்டும். அங்குச்சொல்லிய மகோததிக்கரை வங்காளக்குடாக் கடற்கரையாயின் "கீழ்த்திசையிலுள்ள தேசங்களையெல்லாம் கடந்து சென்றான்" என்றலமையால் சுஹ்மர்களையும் வங்கதேசத்தரசர்களையும் அடிப்படுத்தபின் பன்றோ கடற்கரையை யடையவேண்டும். அங்ஙனமன்றிக் கடற்கரையடைந்த பிற்பாடே அவர்களை யடிப்படுத்ததாகக் கூறுதலால் கீழ்ப்பெருங் கடற்கரையினின்றும் திரும்பித் தென்றிசை நோக்கிவருங்கால் வங்கதேசத்தரசர் முதலியோரை யடிப்படுத்ததாகக் கொள்ளுவதே பொருத்தமுடைத்தாயிருப்பதால் இங்குக்காட்டிய மகோததிவங்காளக்குடாக்கடலாகாதென் றறியத்தக்கதா யிருக்கிறது.



இதன்பின்பு "கலிங்கதேசத்தரசனை வென்று கீழ்கடற்கரையோரமாக நெடுகவந்து காவேரிநதியைச் கடந்து தெற்கேயுள்ள பாண்டிய தேசத்தையடைந்தான்" என்னுமளவும் மறுக்கப்படாதமைந்துள்ள வங்காளக்குடாக்கடலைக் குறித்து மகோததி யென்ற பிரயோகம் ஒன்றேனும் நண்பரவர்களாற் காட்டமுடியாமற் போயிருப்பதும் இங்கு நோக்கத்தக்கதே.

இனி நண்பரவர்கள்காட்டிய "தாம்ரபர்ணீஸமேதஸ்ய முக்தாஸாரம் மஹோததே:" என்ற பிரமாணத்திலுள்ள மகோததிசப்தம் வான்மீகப்பிரயோகங்களுக்கனுகுணமாகப் பொருட்குவாதையில்லாமல் மாணவர் கொள்கையை வலியுறுத்துதலால் நண்பரவர்கள் கொள்கைக்குச் சிறிதும் சாதகமில்லையென்பது முன்னமே நிரூபிக்கப்பட்டது; ஆனால் நண்பரவர்கள் தாம்பரபருணீ சங்கமக்கடலை "குடாக் கடல்" என்று கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அக்கடல் முன்பு மகோததியாயிருந்து மேருசிகரங்களாலிலங்கை யுண்டானபின்பு குடாக் கடலாகத்தோன்றினாலும் அதற்கு முன்பிருந்த பெயருமில்லாமற் போய்விடமாட்டாது. இதனால், தாம்பிரபருணீ சங்கமமுதல் தனுஷ்கோடிவரையு முள்ளகடலை மஹோததி யென்று வழங்கவேண்டுமேயன்றிக் குடாக்கடலென்று வழங்குதல் முறையன்றென்க. அதைக்குடாக் கடலென்பது இக்காலவழக்கேயன்றி வேறன்று. தம்பிரபருணீ சங்கமந் தொட்டுத் தனுஷ்கோடிவரையுமுள்ள கடல் துற்றகடலாகிய மகோததியாதலால் அது தொட்டகடலாகிய குடாக்கடலாகாதெனவறிக.

இனி 6-வது பத்தியில், „பதிம் மஹேந்த்ரஸ்ய மஹோததேஸ்ச" என்ற வாக்கியத்தால் கலிங்கதேசத்தரசன் சொல்லப்பட்டிருப்பதால் இதிலுள்ள மகோததி கலிங்கதேசத்தை யடுத்துள்ள வங்காளக் குடாக் கடலாயிருக்கவேண்டு மென்கிறார்கள்; அதனுடன் சொல்லப்பட்ட மகேந்திர பர்வதமும் கலிங்கதேசத்தருகிருப்பதாக நண்பரவர்கள்காட்டியிருந்தால் நன்றாயிருக்கும். மகேந்திரபர்வதம் தென்கடலருகுள்ளதாக வான்மீக முதலியவற்றாற் பிரசித்திபெற்றிருக்கிறது. அதனுடன் சேர்த்துச் சொல்லப்பட்ட மகோததியும் தென்பெருங்கடலென்று கொண்டு அதுவரையுள்ள நாட்டை அவன் அடிப்படுத்தியிருந்தான் என்று ஏன்கொள்ளக் கூடாது? கூடுமாயின் தென்கடல் மஹோததியேயாமாகையால் இதுவும் மாணவர்கொள்கைக்குப் பாதகமாகிறதில்லையும்,

ஆதலால் நண்பரவர்கள் 7-ம் பத்தியிற்றெருகுத்துரைத்த் ஆதரவுகள் மூன்றும் தம்கக்ஷிக்குச்சிறிதும் சாதகமாகாது மாணவர்கக்ஷிக்கே அநுகூலமாயுள்ளன.

இனி 8-ம்பத்தியில், தைத்திரீய ஆரண்யகத்திலிருந்து ‹‹பஉடிமாகூ ஊமடொணஃவாகூவிஹ்ராஜரோ நः›› என்ற சுருதிவாக்கியத்தைத் தம் கக்ஷிக்கு ஆதரவாகக்காட்டி இந்த சுருதிக்கு, ஸூர்யன் வங்காளக் குடாக்கடலில் உதிக்கிறனென்றே அர்த்தம் சொல்லவேண்டுமென்றும் அதனால் அது மகோததியாயிருக்க வேண்டுமென்றும் நண்பரவர்கள் நிச்சயிக்க வருகிறார்கள். இப்பொருள் உண்மையில்லை யாயினும் தோற்றத்தாலாவது சித்திக்கிறதாவென்று பார்ப்போம். (தோற்றத் தாற்) சூரியோதயமாமிடமாகச் சுருதியிற் சொல்லிய மஹார்ணவம் வங்காளக்குடாக்கடலேயாமானால், இலங்கைமுதலிய பிறவிடங்களிலிருந்து பார்ப்பவர்களுக்கும் சூரியன் வங்காளக்குடாக்கடலிலுதிப்பதாகத் தோன்றவேண்டுமே. அப்படித் தோன்றாமையால் அங்கும் தோன்றுகிறபடி கிழ்பெருங்கடலிலுதிப்பதாகத்தானே சொல்லியதெனக் கொள்ளவேண்டும். அந்தக்கீழ் பெருங்கடலுமே மகோததியாகாதென்று மாணவர் ஆக்ஷேபிப்பாரானால் அது தவறேயாம். சுருதி, வங்காளக் குடாக்கடலின் மேற்றிசையில்மட்டு மிருந்துகொண்டு கூறினமையாலங்ஙனங் கருதியது என்று சமாதானங் கூறலியலாது. ஏனெனில் சுருதி, வடதுருவமுதல் தென்துருவமளவுமுள்ள பூமண்டல முழுதும் அறிந்துள்ளதென்பதை மற்றுமுள்ள அதன் வாக்கியங்கள் பலவற்றாலு மறியலாம் சுருக்கமாய் ‹‹வாயுஃ௨.தீ›› ‹‹ஜஓஙயதீ›› என்றவாக்கியங்களால் காற்றுப்போர்வை போர்த்துக்கொண்டு பூமி கடற்பள்ளியிற் கிடப்பதாகக் காட்டுகிறவேதம், பூமியை யெவ்வளவுதூரம் சுற்றிப்பார்த்தறிந்திருக்கிற தென்பதையும் நாம் சிறிது கவனிக்கவேண்டும். ஆதலால் நண்பரவர்கள்காட்டிய சுருதி வாக்கியமும் மாணவர் கக்ஷிக்குப் பாதகமாகமாட்டாது.

இனி 9-ம் பத்தியிற் பிற்காலத்தாரெழுதிவைத்த சிலபுத்தகங்களிற் சொல்லியிருப்பதை ஐதிகப்பிரமாணமென்று காட்டுகிறார்கள். ஆதாரமற்ற அவை பிரமாணமாம்பொழுது மாணவரெழுதியதும், யானெழுதுவதும்,நண்பரவர்களெழுதுவதும்பிரமாணமாகமாட்டாவெனக்



கருதுவதேதுபற்றியோ? தக்க ஆதாரமில்லாமற் கூறும் நம்மனோர்வாக்கியங்களிற் பிராமாணியமில்லை யென்பதை யுட்கொண்டிருக்கும் நண்பரவர்களுக்கே அப்புத்தகங்களிலும் பிராமாண்யபுத்தியில்லை யென்பது சித்திக்கு மாகையால் பிறரையுடன்படுத்தற்பொருட்டு அவற்றை ஆதரவாகக் காட்டுவது சாதகமாகமாட்டாது.

இனி 10-ம் பத்தியில் விழுநீர் என்ற தொடர்மொழிப் பொருளையாராயத்தொடங்கிப் பலவேறுபொருளுடையதாகப் பிரயோகங்காட்டுகிறார்கள். அத்தொடர் மொழிக்கு வேறிடங்களிலும் பிறிது பொருளில்லை யென்பது மாணவர்கருத்தன்று; அவை செம்பொருளேயாம். அத்தொடர் கடலையுணர்த்தும்பொழுது குறிப்புமொழியாகாதென்று மாணவர் சொல்லவில்லை. முந்நீர், விரிநீர், என்பனபோலவே விழுநீரும் விகுதிதோன்றாது நின்று கடலையுணர்த்துதல் பற்றியே அவ்வாறு நின்று கடலையுணர்த்தும் மகோதசப்தத்தின் மொழிபெயர்ப்பா மென்பதிலென்ன குற்றம்? அம்மகோதசப்தம் பிரஸித்தமில்லாமையால் விளங்குதற்பொருட்டு அதன் பரியாயமாகிய மகோததி சப்தப் பிரயோகம் செய்திருப்பது தவறாகமாட்டாது.

“உரைகாரரும் மிக்கநீர் என்றே கூறினர்” என உரை தம்கக்ஷிக்கனுகூலமாயிருக்கிறதென்று கருதுகிறார்கள். அப்படியானால் விழுநீர் என்பதற்குச் செம்பொருள்பற்றிச் சிறந்தநீர் என்றன்றோ உரையெழுதியிருக்க வேண்டும். அங்ஙனமின்றி இலக்கணையால் மிகுதிப் பொருள்கொள்ளக் காரணமென்ன? செம்பொருளுக்குப் பொருத்தமில்லை யென்பதுதானே உரைகாரர் கருத்தாகவேண்டும்? விழுநீர் என்பதற்கு கடலையுணர்த்தும் ஆற்றலில்லையானால் முந்நீர் என்பதற்கும் கடலைபுணர்த்த மாற்றலில்லையாக வேண்டுமே. நீர்மையொழிந்த புனலையுணர்த்தும் அடையடுத்த நீர்ப்பெயரடியாக அதனையுடைய கடல் என்னும் பொருளை வெளிப்படையாயுணர்த்துஞ்சொல் ஏதேனுமுண்டா? உண்டாயின் (அடையடுத்த) நீர்த்து, நீரது, நீரம், நீரை, நீரி என கடற் பெயரெங்கேனுங் கண்டதுண்டா? இப்பொருளில் விகுதிபுணர்ந்து கெடுதல் மரபாகாதா, விகுதிபுணர்ந்து கெடுவது மரபாயின் அங்ஙனம் புணர்ந்துகெட்டு அடையடுத்த நீர் என்னும் சொல் புனலைபுணர்த்தும் அடையடுத்த நீர் என்னும்சொல்லின் வேறாகாதா? ‘இளங்கொடி’ என்பது இளமையுள்ளகொடி என்னும் பொருளிலும்,

இளமையுள்ள கொடிபோல்வாள் என்னும் பொருளிலும் வழங்குங் காற் சிறிதும் வேறுபாடிலதாமா? இவ்வாறே "பாயினமேகலை" என்பதிலும் வேறுபாடில்லையா? அவ்வாறே விழுநீர், மிக்கநீர், என்றபுன லுணர்த்துந் தொடர்கட்கும் கடலுணர்த்தும் அத்தொடர்கட்கும் வன் வேறுபாடிருக்கலாகாது. சீரிய, அல்லது சிறந்தநீர் பெருங்கடலெனப் பொருள்படுமென்று மாணவர் சொல்லவில்லை; விழுநீர், மிக்கநீர், மகோதம், மகோததி என்பனவே பெருங்கடலெனப் பொருள்படுமெனக் கருதி யுள்ளார்; அது தவறன்று.

இனி 11-ம் பத்தியில் மஹோததி: என்பது பெருங்கடல் என்ற பொருளில் யாண்டேனும் வந்திருப்பதுண்டா என்று வினவுகிறார்கள். "பேரோதமேனிப்பிரான்" என்ற முதலாழ்வார் திவ்யசூக்தியிலும், "பேரோதமேனியான் பேரோத நீர்கடைந்தான்" என்ற பெருந்தேவனார் பாடலிலும் வந்துள்ள 'பேரோதம்' என்ற தொடர்மொழியானது ('ஸ்ரீமுகம்'என்பது திரிந்த *திருமுகம்போல) மகோதத்தின் வேறாகாத ஒருபுடைமொழி பெயர்ப்பாய்த் திரிந்திருத்தலால் அதற்கு மூலமாயுள்ளது மகோதசப்தமாயிருக்கவேண்டு மென்று தெளியலாம். அன்றியும், வியாகரண சாஸ்திர சித்தமாகவே அது பெருங்கடலை யுணர்த்துமெனமுன்னமே காட்டப்பட்டிருக்கிறது. அமரகோசத்துள்ளும் கடலின் பொதுப்பெயர் சொல்லியபிறகு க்ஷீரோத ஊதோதாதி சப்தங்களைப்படித்து இவ்வாறே பிறகடல்களுக்கும் பெயராமாறுகாண்கஎன்று கூறியிருப்பதால் இருதோத மதுதாதி சப்தங்களும் உண்டென்று தானே கொள்ளவேண்டும். இருதோதாதி சப்தங்கள் நூல்களிற் காணப்படாமற் போனால் அநுசாசன சித்தமான அவை இல்லையென்று சொல்லலாமா? அவ்வாறே மஹோதசப்தமும் சாஸ்திர சித்தமாயிருப்பதால் உண்டென்றே கொள்ளவேண்டும். வடமொழி நூல்களை யெல்லாம் நாம் உணர்ந்துவிட்டோமா? நாம் உணர்ந்தமட்டில் காணப்படாத மொழிகளொன்றும் வடநூல்களிலிருக்கக்கூடா தென்பது சித்தாந்தமாகுமா? ஆதலால் சாஸ்திரசித்தமான மஹோத சப்தத்துக்கு வடமொழி நூல்களிலிருந்து பிரயோகம் காட்டாமையால் அது கொள்ளத்தக்கதில்லை யென்று சொல்வது பொருந்தாததாயிற்று.

* "திருமுகமுந் தூதுஞ்செலவிட்டான்" (பெருந்தேவனார்பாரதம்.)



மிக்கநீர் என்ற தமிழ்த்தொடரும் மஹோததி: என்ற வடமொழித் தொடரும் சிறிதும் வேறுபாடில்லாதபொருளுடையனவாய் மகோததியை யுணர்த்துமென்று முன்னர் நிரூபிக்கப்பட்டு விட்டமையால் 11-ம் பத்தியில் நண்பரவர்கள் கூறிய முடிவு பாதிக்கப்பட்டதாயிற்று.

இனி 12-ம் பத்தியில் மஹோததி யென்பது குறிப்பிட்டவொரு கடலுக்கு மட்டும் (அதாவது சேரர்கடலுக்கு மட்டும்) சிறப்புப் பெயரென மாணவர்கருதி யிருப்பதாகக் கற்பித்துக்கொண்டு வாதிக்கிறார்கள். அது கடலுக்குச் சிறப்புப்பெயராகுமேயல்லது சேரர்கடலுக்குச் சிறப்புப் பெயராகாது என்பதே மாணவர்க்குடம்பாடெனமுன்னமே காட்டப்பட்டது. இக்கற்பனையை ஆதாரமாகக்கொண்டு கூறும் ஆக்ஷேபங்களெல்லாம் பயனற்றனவாயின. நம் பூர்வீகத்தமிழ்ச்சான்றோர்கள் வடமொழிவழக்கறியாதவர்களென்று நண்பரவர்கள் கருதுகின்றார்கள். அதனை யேதேனும் ஓராதாரவுகாட்டி நிரூபித்திருந்தால் அங்கீகரிக்கலாகும்.

நண்பரவர்கள் காட்டும் பெருங்கடல் முதலிய பிரயோகங்களில் பெரும்பாலன பொதுவென்று அவர்களே யொத்துக்கொள்ளுகிறார்கள். பொதுவழக்கிலுள்ளது சிறப்புப்பொருள்களுக்கெல்லாம் நியதமாயுரித்தாமென்று சித்திக்கமாட்டாது. பாம்பிற்குப்படமுண்டென்று பொதுப்படக் கூறுவதால் சாரைக்கும் பட்முண்டென்று சித்திக்கிறதில்லை. ஆகையால் அப்பொதுப் பிரயோகங்களைக்கொண்டு சேரர்க்குப் பெருங்கடலுண்டென்று துணிதற்கிடனின்றாம்.

சிறப்புப் பிரயோகங்களில் சேரருக்குப் பெருங்கடலுரியதாகக் காட்டிய பிரயோகங்கள் மூன்றேயுள்ளன. அவை 1. வீங்கோதம் 2. நீலமாக்கடல், 3. நெடுங்கடல் என்பனவாம். இவற்றுள் வீங்கோதம் என்பதற்கு அடியார்க்குநல்லாரேனும், அரும்பதவுரைகாரரேனும் பெருங்கடல் என்று பொருளெழுதவில்லை. முத்தைத்தருதற்கு ஓதம் எழுவாயாய் நிற்றலால் அம்முத்தைத்தந்து கானற்பூங்கோதையைக் கொண்டுசெல்லுங்குறிப்பினால், அக்கடல் கானலளவும் பொங்கிவருமியல்புடைமையையே இங்கு 'வீங்கு' என்னும் வினையடைகுறிக்குமாதலால் அது பொங்கிவற்றுங் கடல் என்று பொதுப்பொருள்

தல்லது பெருங்கடலென்ற சிறப்புப்பொருள்படுவதின்றும். ஆதலா லிது நண்பர்கக்ஷிக்குச் சிறிதும் சாதகமாகவில்லை.

இனி, நீலமாக்கடல் என்ற இரண்டாவது பிரயோகம் மணிமேகலை 8, 17-ல் உள்ளது. அக்கடல் காலைஞாயிறுதோன்றுவதாகக் கூறப்பட்டுள்ள தென்றுமட்டும் காட்டியுள்ளார்கள்; அது மணிபல்லவத்துக்கும் கிழக்கேயுள்ள பெருங்கடல் என்பதை மறந்துவிட்டதுமன்றி உவவனத்துக்கு அருகேயுள்ள புகார்க்கடலென்றும் தவறாகக் கருதியுள்ளார்கள். இவ்விஷயம் வெளிப்பட்டுவிட்டால் அது சோழர்கடலென்று சொல்லற் கியையாதென்பது தெளிவாய்விடும். அன்றியும், மணிபல்லவத்தினின்றும் நோக்குவார்க்குக் காலைஞாயிறுதோன்றுவதாகத் தெரியுங்கடல் வங்காளக்குடாக்கடலாகாது கீழ்ப்பெருங்கடலேயாமாதலால் இதுவும் மாணவர்கக்ஷிக்குப் பாதகமாகமாட்டாது.

இனி மூன்றாவது பிரயோகம் திருநாவுக்கரசு நாயனார் திருவொற்றியூர்த்திருத்தாண்டகம் நான்காம்பாட்டில், "விரையாதே கேட்டியேல் வேற்கணல்லாய் விடுகலங்கள் நெடுங்கடலுள் நின்றுதோன்றும், திரைமோதக் கரையேறிச் சங்கமூருந் திருவொற்றியூர்" என்றதிலுள்ள நெடுங்கடலாம். இதில் * விடுகலங்கள் நின்று தோன்றும் என்ற குறிப்பால் அக்கலங்கள் தங்கி நிற்றற்குரிய அடைகரையே யிங்கு நெடுங்கடல் எனக்கூறப்பட்டதென வறியத்தக்கது. இங்கு, 'நெடுங்கடல்' என்றதில் நெடுமை பெருமையின் பரியாயமாகாது அதன் ஏகதேசமாகிய நீட்சிப்பொருளில் மட்டும் முக்கிய விருத்தியுடையதாம்; ஆகவே கரையருகு மரக்கலங்கள் வரிசையாக நெடுந்தூரம் நிற்குந்துறையின் நீட்டத்தையே புணர்த்தினமையால் நெடுங்கடல் என்னும் இது பெருங்கடலையுணர்த்தியதாகாது.

இனிச் சோழர்கடலுக்குப் பெருங்கடல் என்ற பிரயோகம் தேடிக்கொணர்ந்து காட்டப்பட்டாலும் அங்கும் பெருமைக்கு முக்கிய விருத்தியில்லாமையால், ஐங்காயத்துட் பெருங்காயமென்பதிற் பெருமை காயத்தின் வடிவப்பெருமையுணர்த்தாது கௌணவிருத்தியால்

* விடுகலம்—சுணக்கம் நேர்ந்தழி அதனைத்தீர்க்கும்பொருட்டுச் சம்மாவிட்டுவைத்திருக்கும் கலங்கள்.



வீரியமிகுதியை யுணர்த்துவதுபோலக் கௌணவிருத்தியால் விழுப்பமிகுதியே யுணர்த்துமென வறியத்தக்கது.

இங்கு அவ்விழுப்பமுடைமையே செம்பொருளாமாறு "விழுநீர்வேலி" என்று கூறியிருக்கவும் அச்செம்பொருளை யொழித்து கௌணவிருத்திகொண்டு "மிக்கநீராகிய வேலி" என்று உரைகாரர் எழுதியதனால் விழுப்பமிக்குடைய சோழர்கடலிற் கவிகருத்தில்லையென்பதை அவர் நன்கறிந்தவரென்றறியக்கடவது.

பெருமையீண்டு தன் விசேடியத்தின் இனப்பொருளின் வடிவப் பரிமாணத்தை யெல்லையாக அவாவி நிற்கும் என்பதும் இங்கறியத்தக்கது. இதனாலும் குடாக்கடலின் மிக்க மகோததியே பெருங்கடலென்றறியலாம்.

இனி வேலி என்னும் சொற்பொருளை யாராயினும் அக்கடல் சேரர்க்குரியதென்றே வெளியாகும். வேலி என்ற சொல் 'வேல்' என்ற பகுதியும் இகரவிகுதியும் பெற்றதொரு பகுபதமாயிருப்பதால் அது, வேலின்முட் கொம்பாற்றொடர்புடையதாகப் புலமுதலியவற்றைச் சுற்றியிடப்பட்டதொரு பாதுகாப்பு என்ற செம்பொருளுடையதாம். அது கௌணவிருத்தியால் வேன்முட்கொம்பானன்றிப் பிறவற்றாலிடப்பட்ட பாதுகாப்பிலும், இடப்படாதியல்பாகச் சூழ்ந்திருக்கும் பாதுகாப்பிலும் வழங்கப்படும். ஓரோவழிப் பாதுகாப் பொழியினு மொழியலாம்; சூழ்ந்திருத்தற்பொரு ளொழிதலாகாது. முழுதும் சூழ்தலில்லையாயினும் பெரும்பான்மை, அல்லது செம்பாகமாயினும் சூழ்தல்வேண்டும். அங்ஙனம் சூழ்தல் சோழநாட்டுக்கு ஒரு சிறிதும் பொருந்துவதின்று; வழக்குமின்று. சேரநாட்டுக்கெனில் "அகல்வயன் மலைவேலி" என்றும், "தண்கடல்வேலி நின்குடநாடு" என்றும் சொல்லப்பட்டமையால் ஒருபுறம் மலைவரிசையும் மற்றொருபுறம் கடலுமாக நாடு முழுவதையும் சூழ்ந்தொருவேலியாயமைதல்;

பொருத்தமும் வழக்கும் ஒருங்குள்ளனவாம். பொன்னும் வைரமுங் கூடியதொரு கடகத்தைப் பொற்கடகமென்றேனும் வைரகடகமென்றேனும் வழங்குதல் வழக்காறாயிழுக்காகாதவாறுபோலக் கடலும் மலையுங்கூடியதொரு வேலியைக் கடல்வேலியென்றாலும், மலைவேலியென்றாலுமிழுக்காகாது; அது சேரநாட்டுக்கே சிறப்பாயிருப்பதுமிங்கறியத்தக்கது.

இனி, சேரர்க்குரியதாக நண்பரவர்கள் காட்டிய இரண்டு பிரயோகங்களில் "நளிநீர்" என்பது கடற்பொதுப் பெயராதலால் பெருங்கடலாகிய சிறப்புப்பொருளையும் உணர்த்தும். அதுமாணவர் கொள்கையைவிரோதிப்பதாகாது. இரண்டாவதாகக் காட்டிய "பேரியநீர்வேலி" என்பதிற் "பேரியநீர்" என்பது 'மஹௌக:' என்பதன் மொழிபெயர்ப்பாகவே பெருங்கடலையுணர்த்தி வேலிக்கு அடையாய், 'விழுநீர்வேலி', 'மிக்கநீர் வேலி' என்பவற்றுள்ள 'விழுநீர்', 'மிக்கநீர்' என்பவற்றின் பரியாயமாய்ப் பெருங்கடலையுணர்த்தி 13-ம் புறப்பாட்டிற் சொல்லிய 'விழுநீர்' என்பதும் 'மஹௌக:' என்னும் சேரர்பெருங்கடலும் ஒன்றேயாமென்று காட்டிவிட்டமையால் இது நண்பரவர்கள் கொள்கையைப் பாதித்து மாணவர்கொள்கையையே சாதிப்பதாயிருப்பதும் இங்கு நன்கு கவனிக்கத்தக்கது.

பெருங்கடல் என்பது சேரசோழபாண்டியருள் ஒருவர்க்கேயுரியதாயிருந்தால்மட்டும் அதுசிறப்பாகக்கொள்ளலாமென்று நண்பரவர்கள் கருதுவது மாணவர்கருதியவழியின் வேறானவழியாதலால் அதுகொண்டு சொல்லும் ஆக்ஷேபங்களுள் ஒன்றும் மாணவர் கொள்கைக்குப் பாதகமாகமாட்டாதென வறியத்தக்கது.

---

# இலக்கண வரம்பு.

பரதகண்டத்தில் வழங்கி விளங்கிய பாஷைகளுள்ளே தமிழ்ப்பாஷை ஒன்றுமே கண்ணுதற் பெருமானும், கழகமரந்தரும் சேர்ந்து நண்காராய்ந்தது என்றும், இலக்கணவரம்புடையது என்றும் பரஞ்சோதிமுனிவர் கூறுவர். கழகமாந்தர் = சங்கத்தார்.

## திருவிளையாடற்புராணம்

கண்ணு தற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணு றத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணி டைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோல்
எண்ணி டைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ—

அவ்விலக்கணம் நம்போலிய அற்பமானுடர் புத்திகொண்டு அமைத்ததொன்றன்று. ஆதியிற் சிவபிரான் அகத்தியர்க்குபதேசித்தது. அகத்தியர் தொல்காப்பியர்க்குபதேசித்தது. தொல்காப்பியர் அதங்கோட்டு முனிவர் முதலிய பன்னிருவருக்கும் உபதேசித்தது. அப்பன்னிருவரும் பலர்க்குபதேசிக்கப் பாரம்பரியமாய் வந்து பூமியிற் பரந்தது. அதன் வகையும் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என ஐந்து. இந்த ஐந்தும் முறையே ஒன்றற்கொன்று காரண காரிய சம்பந்த முடையது. அவற்றுள் எழுத்திலக்கணம் சொல்லிலக்கண வுணர்ச்சிக்குக் காரணம், எழுத்திலக்கணம் படியாமற் சொல்லிலக்கணம் படித்துணர்தல் ஒல்லுவதொன்றன்று. செல்லுகை தடைப்படும். இலக்கணவரம்புஞ் சிதையும். மகாசன விரோதமும் வரும்.

இது பற்றியே அகத்தியர், தொல்காப்பியர் முதலிய இலக்கண நூலாசிரியர்கள் யாவரும் தத்தம் இலக்கண நூல்களிலே எழுத்திலக்கணத்தை முதற்கண் ஓதினர். பின்னர் வழிநூல்களாய்வந்த நன்னூல், சின்னூல் முதலியவற்றின் ஆசிரியர்களும் எழுத்திலக்கணத்தை முன்வைத்தலாகிய அவர்கொள்கையைத் தழுவினர். இளம்பூரணர் முதலிய உரையாசிரியர்களும் அக்கொள்கையை மறுத்திலர். பிற்காலத்திலே வசனநடையிலே இலக்கணநூல் இயற்றிய தாண்டவராய முதலியார், விசாகப்பெருமாளையர், ஆறுமுகநாவலர் முதலிய

ஞர்களும் அக்கொள்கையை மறுத்திலர். அன்றுமுதல் இன்றுவரை அதனை அநேகர் அநுசரித்துப் படித்துவந்தனர். இவருள்ளே அகத்தியர்முதலியசிலர் தவத்தான் மனந்தூயராய் முக்குணங் கடந்து இறைவனருளும் பெற்றவர். மற்றையோருள்ளுஞ் சிலர் அருட்பெற்றவர். சிலர் நுண்ணறிவாளர், தமிழுணர்ச்சியிலே யாவரும் பரிபூரணர். குறைவுடையார் ஒருவருமிலர்.

இவர் செயலும், இவர் கொள்கையும், இவரறிவும் ஒருபாற்கிடக்க இப்பொழுதையார் சிலர் எழுத்திலக்கணம்படிப்பிக்குமுன் சொல்லிலக்கணம் படிப்பிக்கவேண்டும் என்கின்றனர். நன்னூலைச் சொல்லதிகாரத்திலே தொடங்குகின்றனர். எழுத்திலக்கண விதிகள் இலகுவிற் புலப்படாதாம்! இதுவரையும்படித்துவந்தார்க்குப் புலப்பட்டதெப்படி? எழுத்திலக்கணம்படியாதவர்க்குச் சொல்லிலக்கணம் எப்படிப் புலப்படும்? அரிச்சுவடி படியாமல் ஆத்திசூடியிற் பிரவேசிக்கலாமா? நன்று! நன்று! "கண்டன மின்றியாங் கலியின் வண்ணமே"

எழுத்திலக்கணம் படியாதவர் பகுபதங்களை முடிப்பதும், தோன்றல் முதலிய விகாரங்களை அறிவதும் எப்படி? இயல்பாயும் விகாரமாயும் வரும் அல்வழி வேற்றுமைப்புணர்ச்சிகளை அறிவது எப்படி? புணர்ச்சியாலே வேறுபட்டிருக்கும் எழுத்துக்களையுஞ் சொற்களையும் அறிவதெப்படி? நன்னூற் சொல்லதிகாரத்தின் முதற்கண்வரும் "முச்சகம்" என்னுந் தொடர்மொழியின் நிலைமொழியை அறிவது எப்படி? அறைகுவன் என்பதைப் பிரித்துணர்வதெப்படி? சொல்லதிகாரத்தாற் பெறப்படுமா? தந்தைதாய் பேண் என்பதா? தந்தைதாய்ப் பேண் என்பதா? வழாநிலையாது?

ஈண்டுச்சிலர் கூறப்பட்டன, செய்யப்பட்டன என்பன போல வருஞ் சில செயப்பாட்டு வினைகளிலுள்ள படு என்னும் விகுதியை நீக்கிப் பெறு என்னும் பகுதியைச் சேர்த்து கூறப்பெற்றன, செய்யப்பெற்றன என்பனபோல முடிக்கின்றனர். படுவிகுதிஉணர்த்தும் பொருளைப் பெறு என்னும் பகுதி உணர்த்துமா? இரண்டுக்கும் பேதமில்லையா? பெறு என்னும் பகுதியின் பொருள் யாது? அது துணையாய் நிற்றற்குரிய இடம் யாது? இரண்டையுஞ் சமமாகக் கருதலால் வரம்பு சிதையாதோ?



இன்னும் சிலர் "விரதி" "பொடி" என்பனவற்றிலே "இ" என்பது விகுதி என்றும், "முருகு" "குருகு" என்பனவற்றிலே "கு" விகுதி என்றும், "ஒளிறு" "இன்று" என்பனவற்றிலே "று" என்பது விகுதி என்றும் கூறுவர். இக்கொள்கையும் இலக்கணவரம்பில் அமையுமா?

இக்காலத்தார் யாவர்க்கும் இனிது விளங்குமாறு இலக்கணநூல்களை ஆக்கவேண்டும் என்றும், "பழையனகழிதலும் புதியனபுகுதலும் வழுவல" என்பதே அதற்கு விதி என்றும் சொல்வாருமுளர். இலக்கிய இலக்கணங்களைக் கிரமம்பெறக்கல்லாது விளங்கவில்லை என்று சிலர் கூறற்கும், பிழைப்பட்ட நூல்களைப் படித்தற்கும் காரணம்யாது? "பழையனகழிதல்" என்பது எதன்பொருட்டு எழுந்தது? பழைய இலக்கியமும், இலக்கணமுமாகிய நூல்கள் தக்கபாண்டித்தியமுடைய தக்கோர் செய்த நூல்களாம்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

---

# செந்தமிழ்நிந்தை சிவநிந்தையேயாம்.

அன்பினைந்திணையென் றறுபது சூத்திரந்
திருவாய்மலர்ந்தசிவபெருமானே
கொங்குதேர்வாழ்க்கைச்செந்தமிழ்கூறினன்
மதிமலிபுரிசைத்திருமுகந்தந்தனன்
வள்ளுவர் நூற்குவளர்சிறப்புரைத்தனன்
கீரன்முன்றோன் றிக்கிளர்சினப்பாவும்
பொய்யாமொழிமுன் புனைந்துரைபாவும்
இயம்பினனன்றியுமெழிலார்தில்லையுள்
அடியார்க்கெளியனென் றருளித்தந்தனன்
வாசகங்கோவைவளம்பெறவரைந்தனன்
தொண்டத்தொகையுந்தொண்டர்புராணமும்
நிறைவினையெய்த அடியெடுத்துதவினன்

பரசிவன்பாகத்தமர்ந்தபாவையும்
கொணர்ந்தேன்சோறெனக்குளிர்கவிகூறினள்
நாடாமுதலெனநாமகள்நவின்றனள்
தந்தையார்செவியில்மந்திரந்தந்தவன்
பகழிக்கூத்தன்பாடல்கேட்கவும்
பொய்யாமொழியெனும்புலவர்பாக்கேட்கவும்
தாமவர்தம்மேற்றமிழ்ப்பாட்டுரைத்தனன்
உருத்திரசன்மராயுரைவிரித்தருளினன்
நம்பியாண்டாரெனும்நம்பிதனக்கே
யும்பல்முகத்தோன்செம்பொருளுரைத்தனன்
நான்முகத்தவனேநானிலந்தன்னில்
வள்ளுவனாத்தமிழ்மாமறையருளினன்
மணவாளயோகிவயின்றமிழ்மறைப்பொருள்
பெருமானரங்கன்பெரிதுங்கேட்டனன்
இவ்வாறெல்லாம்இயற்றமிழ்தன்னை
அரனயனரிமுதலாமுத்தேவரும்
மூத்தபிள்ளையும்முருகக்கடவுளும்
மலைமகள்கலைமகளாமணங்குகளும்
பேசினரெழுதினர்பீடுறப்பாடின
ரென்றாலிதன்சீரியம்பவும்போமோ
இம்பரிலன்றேஇவையெலாமென்றால்
திருக்கைலாயம்சென்றசேரமான்
சிவபெருமான்றன்றிருச்சந்நிதியில்
உலாவெனும்நூலையுரைத்தரங்கேற்ற
எல்லாத்தேவரும்ருசெவிக்கமுதென
உண்டுகளித்தவிவ்வொண்டமிழ்மொழியைத்
தேவபாஷையாய்ச்செப்புதற்கியாதும்
ஐயமின்றாமாதலினெமர்காள்
முத்தமிழுருவேமுனனோனுருவெனச்
சத்தியவசனசாத்திரங்கூறலால்
செந்தமிழ்நிந்தைசிவநிந்தையேயெனச்
சிந்தையிலுணர்ந்துசெந்தமிழ்போற்றி
வாழுமின்வாழுமின்வாழுமின்னீரே

ஸ்ரீ சதாசிவப்பிள்ளை,
நாகை, நாஷனல் ஹைஸ்கூல்,
தலைமைத் தமிழ்ப்பண்டிதர்.

---

# திருஈங்கோய்மலைச்சாசனம்.*

[கோயில்கர்ப்பக்கிரகம் வடபுறம் பொறிக்கப்பட்டிருக்கிறது.]

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன சக்கரவ(ர்)த்திகள் மலைஹா......மருவூரும் கருவூரும் பாண்டியன் முடித்தலையுங்கொண்டு வீராஹிஷேகமும் விஜயாஹிஷேகமும் பண்ணியருளிய (2) ஸ்ரீதிரிபுவன வீரதேவற்கு யாண்டு ௩௰௬-வது ரிஷபநாயிற்று பூர்வபக்ஷத்து த்ரிதியையும் திங்கள் கிழமையும் பெற்ற உத்ரமஸீ (ர்) ஷத்துநாள் வடகரை ராஜராஜ வளநாட்டு மலைஸ்ரீ (3) ஜயங்கொண்ட சோழச்சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறி மஹாஸபையோம் விளைநிலம் ப்ரமாண(ம்) இசைந்திட்டது. ராஜராஜ வளநாட்டு திருவாலிநாட்டு கனக..............(ப)......-வெந்தவ மூவரயர் உடையார் திருவீங்கோய் வூ(ஊ)ருடையார் கோயிலில் எழுந்தருளிவித்த ஆளுடைய பிள்ளையார்க்கும் திருநாவுக்கரசுதேவற்கும் ஆலாலசுந்தரப்பெருமானுக்கும் (5) திருநற்கீரதேவற்கும் திருப்படிமாற்றுக்கும் விஞ்சநத்துக்கும் உடலாக நாங்கள் இவருக்கு விற்றுக் கொடுத்த நிலமாவது; இவ்வூர் பிடகை குலோத்துங்கசோழநல்லூர் கட்டளை (6) யிவ்வூர் ப்ரக்ருதி விளைநிலத்து ஆடவல்லா நதிக்கு கிழக்கு ஜயங்கொண்ட சோழவாய்க்காலுக்கு வடக்கு..........தாரத்துத் தென்கிழக்கடையில் உமா இந்நிலம் (7) இரண்டுமாவுக்கும் விலையாக நிச்சயித்த அன்றாடு நற்காசு ருா இக்காசு ஐஞ்ஞூறும் இந்நிலம் இரண்டு மாவுக்கும் விலையாவதாகவும். இதுவே பொருள் மாவறுதிப் பொருள் சிலவோலை காட்டுவதல்லாததாகவும்.

---

* இந்தச்சிவஸ்தலம் குழித்தலை ரயில்வேஸ்டேஷனுக்கு வடபுறம் காவிரியாற்றுக்கு வடகரையில் இருக்கிறது. முதலி மூவர்தானிருக்கின்றனர். நற்கீரதேவர் காணப்படவில்லை. ரயிலிலிருந்து பார்த்தாலே கோயில் தெரியும். அங்கு இந்த ஒரே சாசனம்தான் எழுதக்கூடியதாக விருக்கிறது.

அல்லது

# ஆரதனகிரிமலைச்சாசனங்கள்.†

[மலைமேல் அம்மன்கோயில் சுவற்றில் வடபுறம் பொறிக்கப்பட்டிருக்கின்றன.]

ஸ்வஸ்திஸ்ரீ வீரமேதுணையாகவந்த யாகமேயணியாகவுக்ர
செங்கோ லோச்சி கருங்கல மந்து
புகழ்மாது விளங்க செயமாது (2) விரும்ப
நிலமகள் நிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர
ஏனை மன்னவ ரியலுற் றிழிதரத்
(3) திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி

விஜயாபிஷேகம் பண்ணி வீரஸிம்ஹாஸநத்து புவனிமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோராஜ (4) கேசரிபன்மரான திரிபுவநச்சக்ரவ(ர்)த்திகள் ஸ்ரீகுலோத்துங்க சோழதேவற்கு யாண்டு ...... ......................(5) ராஜமஹேந்த்ர வளநாட்டு மீகோட்டு நாட்டு ப்ரஹ்மதேயம் குழித்தண்டலைப் பெருங்குறி மஹாசபையோம் மிதுன நாயிற்று அமர (6) ...............புனர்ப்பூசமும் பெற்ற.........நாள் இவ்வூர் நடுவிற் திருமுற்றத்து ராஜேந்த்ர சோழன் திருமண்டபத்தே டபிசெய்து (7) கூடிக்குறைவறக் கூடியிருந்து இந்நாட்டு குறுநாகநாட்டு சிவபாதசேகரபுறத்து மலைவாசலுக்குத் தெற்கில் எழுநூற்றுவன் மடத்திலே தேவரடியார் சிவயோகிகளுக்கு (8)-ம் தவஸிக்கும் அமுது செய்கைக்கு வடக்கிற் கொங்கில ராஜராஜ புறத்திலிருக்கும் வியாபாரிச்சி சொலமாணி? தேன் நங்கைக்குச் சமைந்து இத்தன்மம் (9) செய்விக்கிறது திருவாட்போக்கிமலை மஹாதேவற்கும் திருப்பள்ளியறை நம்பிராட்டியாரையும் எழுந்தருளிவித்த நாடறிபுகழன் தாமோதரனான பிள்ளைக் (10) கடியாற்கு நாங்கள் விற்றுக்கொடுத்த நிலம் விலையா

† வாட்போக்கி என்றும் இரத்தினகிரி யென்றும் சொல்லப்படும், சிவாய-தி குழித்தலை ஸ்டேஷனிலிருந்து தெற்கில் $5\frac{1}{2}$ மைலிலுள்ளது. க்ஷேத் [illegible] திலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரால் இயற்றப்பெற்றது



வணம். எங்களூர் நிலத்துத் திருநாராயணவதிக்குக் கிழக்கு; ஐயன் வாய்க்காலுக்குத் தெற்கு; முதற்கண்ணாற்று (11) முதற் சதுரத்துண்டத்துக் கவுணியன் மாதவன் அரங்கன் நிலத்துக்குத் தென்மேற்கடையித்திருவுலகளந்தருளினபடி நிலம் அருநா நிலம் காறும் விற்றுக்கொடுத்துக் (12) கொள்வதாக எம்பிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு நற்காசு 2. இக்காசு இரண்டும் இந்நிலத்துக்குச் சந்திராதித்தவரை நாங்களே இறை (13) யிறுக்கக்கடவோமாக, இறைகாவலாகக் கொண்ட காசு ௰௩ இக்காசு பதின்மூன்றும் ஆகக்காசு ௰௫. இக்காசு பதினைஞ்சும் இத்தேவர் வஸ்ஸ்ரீதேவர் ஸ்ரீஹஸ்த (14) த்தால் கொண்டு இந்நிலம் காசும் விற்றுக்கொடுத்தோம். பெருங்குறிமஹாசபையோம். இந்நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும். இக்காசுக்கு இது (15) வேபொருள்மாவறுதிப் பொருட்சிலவோலையாவதாகவும். இதுவல்லது வேறுபொருள் மாவறுதிப்பொருட் சிலவோலை காட்டக் கடவதல்லாததாகவும். இப்பரிசிசைந்து இக்காசு பதினை (16) ஞ்சும் கொண்டு .....................மாணிதேன் நங்கைக்கும் சொலமாணி சூற்றிதேவிக்கும் சமைந்து. இப்படி (17) விற்றுப் பொருளறக்கொண்டு விலையாவணஞ் செய்துகொடுத்தோம் (18) பெருங்குறி மஹாசபையோம் பிந்த நிலம். இப்படியே செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்ளப் பெறுவாராக (இனிகையெழுத்து.........).

ஸ்வஸ்திஸ்ரீ புகழ்மாது விளங்கி செயமாது விரும்ப
நிலமகள் நிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் (2) குலைதர
*ஏனை மன்னவ ரியலுற் றிழிதரத்
திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி

விஜயாபிஷேகம்பண்ணி வீரஸிம்ஹாஸநத்து புவனிமுழுதுடையாளொடும் (3) வீற்றிருந்தருளிய கோராஜகேசரி பன்மரான † திரிபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்க சோழதேவற்கு யாண்டு 21-வது ராஜமஹேந்த்ரவளநா (4) ட்டு மீகோட்டு நாட்டு ‡ ப்ரஹ்மதேயம்

* 'விக்கலன் சிங்கணன் மேல்கடல்பாய' என்பர் மிஸ்டர் கோபிநாத [illegible] சோழவம்சசரித்திரத்தில் (பக்—99). [illegible] அல்லது
† இதுவும் சரித்திரத்தில் காணப்படவில்லை. ‡ பிரும்மதே[illegible]

குழித்தண்டலைப் பெருங்குறி சபையோம் கும்பநாயிற்றுப் பூர்வபக்ஷத்து நாயிற்றுக்கிழ (5) மையும் வத்தஷஷ்டியும் பெற்ற திருவோணத்து நாள் இவ்வூர் நடுவிற் திருமுற்றத்து ராஜேந்திரசோழன் திருமண்டபத்தேயஜி செய்து கூடிக்குறைவறக் (6) கூடியிருந்து இந்நாட்டு குறுநாக நாட்டு சிவபாதசேகரபுரத்து மலைவாசனுக்குத் தெற்கில் எழுநூற்றுவன் மடத்திலே தேவரடியார் - சிவயோகிகளுக்கும் (7) தவஸிக்கும் அமுது செய்கைக்கு வடக்கிற் கோங்கில் ராஜராஜ புறத்துக் கைக்கோளர்களான......ரி மணிக்கும் கொள........அமரபுயங்கனை கோட் (8) புலிக்கும் இவ்விருவற்கும் சமைந்து இத்தர்மம் செய்விக்கிறது. திருவாட்போக்கி மகாதேவர்க்கும் திருப்பள்ளி நம்பிராட்டியாரையும் எழுந்தருளிவித்திருந்த நாடறி (9) புகழன் தாமோதரனை பிள்ளைக் கடியாற்கு நாங்கள் விற்றுக்கொடுத்த நிலவிலையாவணம், எங்களூர் நிலத்து மஹாதேவவதிக்கும் கிழக்கு கற்றளிவா (10) சனுக்குத் தெற்கு முதற்கண்ணாற்று முதற்சதுரத்துப் பாரத்துவாசன் சடையன்......யன் நிலம் வரி காலே காணியும்; இந் (11) நிலத்துக்குத் தெற்கடையநிலம்......முக்காணியரைக்காணியும்; இங்கேநாலாஞ் சதுரத்து மளகரன் மாதிருசுவான் நிலம் ......யும் மூன்றுமாகாணிய (12) ரைக்காணியும்; ஆக நிலம் இ; இந்நிலம் அரையும் விற்றுக் கொடுத்துக்கொள்வதாக எம்பிலிசைந்தபொருள் அன்றாடு நற்காசு 3 மூன்றும் இந்நிலத்துக்கு (13) சந்திராதித்தவரை நாங்களே இறை இறுக்கக்கடவோமாக; இறைகாவலுக்குக்கொண்ட காசு 20 இருபதும்; ஆகக்காசு இருபத்து மூன்றும் இத்தேவர் ஸண்டேசுரதேவர் ஸ்ரீஹஸ்தத்தால்கொண்டு இந்நிலம் அரையும் விற்றுக்கொடுத்தோம். பெருங்குறி சபையோம் இந்நிலத்துக்கு இதுவே விலையாவதாகவும் இக்காசுக்கு இதுவேபொருள், மாவறுதிப் பொருள் சிலவோலையாவதாகவும் இது வல்லது வேறுபொருள் மாவறுதிப்பொருட்செலவோலை காட்டக்கடவதல்லாததாகவும் இப்பரிசிலைசந்து இக்காசு இருபத்துமூன்றும்கொண்டு கோட்புலிக்கு சமைந்து இப்படி விற்றுப்பொருளறக்கொண்டு விலையாவணம்செய்து கொடுத்தோம் பெருங்குறி சபையோம் இந்நிலம்; இப்படியே செம்பிலும் சிலையிலும் வெட்டிக்கொள்ளப் பெறுவாராகவும்.



ஸ்வஸ்திஸ்ரீ வீரமேதுணையாகவும் தியாகமே
(2) புகழ்மாது விளங்கச் செயமாது விரும்ப
நிலமகள் நிலவ மலர்மகள் புணர
உரிமையிற் சிறந்த மணிமுடி (3) சூடி
மீனவர் நிலைகெட வில்லவர் குலைதர
ஏனை மன்னவ ரியலுற் றிழிதர
திக்கனைத் துந்தன் சக்கர நடாத்தி

(4) விஜயாபிஷேகம் பண்ணிவீரஸிம்ஹாஸனத்து புவனிமுழுதுடையாளொடும் வீற்றிருந்தருளிய கோ (5) விராஜகேசரி பன்மரான திரிபுவன சக்கரவர்த்திகள் குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு 43 வது ராஜமகே(6)ந்தர வளநாட்டு குறுநாகநாட்டு திருவாட்போக்கிமலை மஹாதேவற்கு திருநந்தா விளக்கெரிகைக்கு இந்நாட்டு சிவபாத (7) சேகரபுறத்து வியாபாரி கடம்பூருடையான் திருத்தாதயன் பெரியானேன் இந்நாயனார் திருமாணிக்கதேவற்கு திருப்புறக்கு டை(8)டயிலே சந்தி ஒன்றுக்கு திருவிளக்கு ஜோதிவிளக்காக எரிக்கக்கடவோமாக. பிள்ளைச் (9) சண்டேஸ்வரதேவர்ஸ்ரீஹஸ்தத்திலே நீர்வார்த்த இத்தேவர் ஸிவப்ராஹ்மணரேம் கொண்ட காசு 3. இக்காசு மூன்றும் (10) கொண்டு இக்காசு 3-க்கும் மஹாச.............அரசுக்குடையானும் கவுசியன் (11) சிவவாக்குதேவர் சிவப்பிராமணரேம் கவுசியன் அஞ்சனு......சாத்தனை திருச்சிற்றம்பல பட்டனும் (12) மகாதேவன் உய்யக்கொண்டானை தெசுஷிணாமூர்த்திஸண்டித பண்டிதனும் மகாஸ்ரீயன் மாணிக்கதேவன் பரஞ்சோதியான் (13) தில்லைநாயகபட்டனும் இவ்வனைவோம் திருத்தயன் பெரியானிடை இக்காசு 3-ம்கொண்டு பலிசைக்கு சிலவாக (14) சந்தி 1-க்கு திருவிளக்கு 1-க்கு தினம் 1-க்கு சந்திராதித்தவரை நாங்கள் திரு—விளக்கு எரிக்கக்கடவோமானோம். ஸ்ரீ (15) ருதிருவாக்குப்படி நடந்து..........பூஜைப்பணி செய்தானு சாகரன் நடனும் மாணிக்கதேவன் திருக்கதவந்திறந்து............ ஐஞ்ஞூற்றுவன் போயனும் உய்யக்கொண்டானும் சம்மதித்து இப்பிரமாணம் செய்துகொடுத்தோம், இ........(18) கையிலும் மாணிக்தேவன் மாணிக்கசோதியும் இப்படி செம்பிலும் சிலையிலும் வெட்டி

கொள்ளப் பெறுவதாகவும். (19) இவ்வனைவோம் இத்திருவிளக்கு எரிகைக்கு திருத்தாதையன் பெரியானுக்கு இவ்வனைவோம் இப்பெரு மக்க (20) ளாக ஸம்மதித்து இப்படி பிரமாணம் செய்துகொடுத்தோம் (இனி கையெழுத்து).

[அம்மன் கோயிலுக்கு எதிரிலுள்ள கணபதியாலயத்திலும், பின்னுள்ள மலைச்சரிவிலும் ஏறும்படியிலும் சிலசாசனங்கள் பொறிக்கப் பட்டிருக்கின்றன.]

இலக்கணவிளக்க பரம்பரை

**திருவாரூர்—சோமசுந்தரதேசிகர்.**

---

உ

கடவுள் துணை.

## தமிழணங்கு தம் மக்களுக்கு அறிவுறுத்தல்.

---

எல்லாம்வல்லஇறையனார்வாயில்
ஆரியமென்னும்அருஞ்சகோதரன்பின்
தங்கையாய்ப்பிறந்தசகோதரியானே
சகத்தினில்வந்தஅகத்தியமுனிவரால்
வளர்க்கவளர்ந்தமங்கையும்யானே
வேங்கடங்குமரிவேலைசூழெல்லையில்
பாங்குடன்பயிலும்பாவையும்யானே
அகரஇகரஉகரமாகிய
மந்திரஎழுத்தால்வாய்ந்ததும்யானே
வல்லினமெல்லினஇடையினமாகிய
மூவகைமெய்யால்முளைந்ததும்யானே
[illegible]



அமிழ்தினும்இனிதெனஅறைந்தனர்பொருளே
முதலிடைகடையெனும்மூன்றுசங்கத்தும்
இயலிசைநாடகமெனும்முத்தமிழாய்
பதினாயிரத்துத்தொண்ணூறாண்டு
நூற்றுத்தொண்ணூற்றெழுவர்பாண்டியரால்
எண்ணாயிரத்தறுநூறுபாவலரால்
வளர்க்கப்பெற்றமடந்தையும்யானே
சீதையைத்தேடிச்சென்றவானரர்க்கு
வழிமுழுதுணர்த்தியவானரத்தலைவன்
நான்செழித்திருந்தநான்மாடக்கூடலைச்
சொற்றதாலென்றன்தொன்மையையறிக
திரிபுரமெரித்தவிரிசடைக்கடவுளும்
குன்றமெறிந்தகுமாரதேவரும்
சங்கத்திருந்துதமிழாய்ந்தனரெனில்
இங்கென்பெருமையையியம்புவார்யாரே
தொண்டர்தோழனார்தூதுபோனதுவும்
கணிகண்ணற்காய்க்காஞ்சியைநீங்கி
மணிவணப்பெருமாள்வழிநடைகொண்டதும்
என்பொருட்டென்பதையினிதினுணர்க
தொல்காப்பெரும்புகழ்த்தொல்காப்பியமாய்ச்
சிவபெருமானேதிருவாய்மலர்ந்து
தம்பெயர்நாட்டியதமிழிலக்கணமாய்
சிந்தாமணிமுதலைந்துகாவியமாய்
உள்ளமினிக்கும்வள்ளுவர்நூலாய்
உம்பரும்வியக்குங்கம்பர்காவியமாய்த்
திருத்தேவாரமாய்த்திருவாய்மொழியாய்
அரியபுராணமாம்பெரியபுராணமாய்
மற்றுளநூலாய்வாய்ந்ததும்யானே

ஆரியம்செந்தமிழாறுனென்று
பரசிவன்உருவமாய்ப்பகரவும்பெற்றேன்
திருமாலுருவெனச்செப்பவும்பெற்றேன்
சபதங்கூறுவோர்தமிழ்மேலாணை
கூறவும்பெற்றகுலக்கொடியானே
இன்னும்என்பெருமையியம்பவும்போமோ
பெருநிலவேந்தரும்குறுநிலமன்னரும்
சைவவைணவசமயகுரவரும்
புத்தரும்சமணரும்போற்றப்பெற்றயான்
ஆங்கிலபாஷையனுகியபின்னர்ப்
பெற்றதாயைப்பேணுர்போல
உற்றுநோக்குவாரொருவருமின்றித்
தளர்வுறுகின்றஎன்தளர்வைநீக்குமின்
கம்பரென்பாகலந்ததென்றுற்போல்
என்மொழிகலந்தேயியம்புவதோர்மின்
ஐரோப்பாவிலமர்ந்தபசுவும்
அம்மாவென்றேயழைவதையறிமின்
பாஷாபிமானம்பாரிலின்றெனில்
தேசாபிமானம்சிறிதுமின்றும்
ஆகையாலென்னைஒகையாய்த்தழுவி
முன்போலென்னைமுதிர்வுறச்செய்து
வாழுமின்வாழுமின்வாழுமின்னீரே.

ஸ்ரீ. சதாசிவம்பிள்ளை,
நாஷனல் ஐஸ்கூல் தமிழ்ப்பண்டிதர்.

—12—18]

---

160926

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-கஎ.] சித்தார்த்தி௵ வைகாசி௴ [பகுதி
Vol. XVII. May—June, 1919. No.

## சளுக்கியவிக்கிரமாதித்தன்சரித்திரம்.

### ஐந்தாம்பாகம்.

### விக்கிரமாதித்தன்காலத்தியநிலைமை.

ஆதாரங்கள். இனி விக்கிரமாதித்தன்காலத்து அரசியல், பொருளியல், ம
கோட்பாடு, குடியியல் முதலியவைகளின் நிலை
யைப்பற்றி ஈண்டுவிரித்துரைப்பது இன்றியமை
ததாகும். இதற்கு முக்கியமான ஆதாரங்கள் இ
காறும் வெளிவந்த எண்ணிறந்த சாசனங்களும் பில்ஹணகவியின
விக்கிரமாங்கதேவசரிதமும், விக்கிரமாதித்தன்மகனாகிய மூன்
சோமேசுவரன் எழுதிய மானசொல்லாசம் அல்லது அபிலஷிதார்
சிந்தாமணியுமாம்.

### I. அரசியல்.

மகாராஜன். சளுக்கியவரசர்கள் மகாராஜாதிராஜன் பரமேசுவரன், பட்டாரக
பரமபட்டாரகன், ஆகவமல்லன், ஜகதேகமல்ல
புவனைகமல்லன், திருபுவனமல்லன் என்னும் பல
துகளுடன் அரசுபுரிந்து வந்தனர். எல்லா அ
காரங்களுக்கும் சக்கரவர்த்தியே மூலகாரணனாகவிருந்தனன்.
சுரிமையும் அவனுடைய சந்ததியாருக்கே உரித்தாயிருந்தது. தன
க்குப்பிறகு மூத்தகுமாரனே ராஜ்யத்தையடைவது முறைமைய

இதர நெருங்கிய உறவினனாவது இராஜ்யத்தை யடைவதுமுண்டு. அரசன் ஈசுவராம்சமாகவே பெரும்பாலும் நினைக்கப்பட்டபோதிலும் தெய்வத்திற்கஞ்சிக் குடிகளின் நோக்கத்தைத்தழுவியே நடக்கவேண்டியவனாயிருந்தனன்.

**ஆலோசனைசபை.** வேண்டிய சமயங்களில் அவனுக்கு நியாயநெறியை யெடுத்துரைக்க மகாபிரதானிகள்கூடிய ஆலோசனைசபையும் ஒன்றிருந்தது. அதில் அக்கிராசனம் வகித்தவர் சர்வாதிகாரி எனப்படுவர்.

**யுவராஜன்.** காலக்கிரமத்தில் அரசன் தன் மூத்தகுமாரனையே இளவரசாக மந்திரி பிரதானிகள் முன்னிலையில் முறைமைப்படி நியமிப்பது வழக்கமாயிருந்தது. அரசனுடைய முதுமைப்பருவத்தில் இராஜ்யபாரத்தை ஏற்றுக் கொள்ளுவதற்கும் ஆன்றோர்முறையே அரசுகடாத்தத்தேர்ச்சியடையவும் இளவரசு நியமனம் உசிதமாயிற்று.

**இராணுவம்.** ஆயிரக்கணக்கான போர்வீரர்கள் எப்போதும் ஆயத்தமாக அரசனது கட்டளையை எதிர்நோக்கியவராய் நாட்டைக்காத்துவந்தனர். மேலும் சிற்றரசர்களெல்லாரும் கப்பங்கட்டிவந்ததோடு வேண்டியபொழுது துணைப்படையுமுதவக்கடமைப்பட்டிருந்தனர். தேர்ப்படை, யானைப்படை குதிரைப்படை, காலாட்படை எனப் படை நால்வகைப்பட்டிருந்தது. யானைகள் முன்வரிசையிலும், குதிரைகள் இருபுறங்களிலும் காலாட்படை பின்வரிசையிலுமாகச் சண்டையில் படை அணிவகுக்கப்பட்டு நின்றது. அது பல பகுதிகளாகப்பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பகுதியும் ஒரு மகாசாமந்தன் அதிகாரத்தின்கீழிருந்தது. இம்மகாசாமந்தர்களும் முறையே ஒரு மகாசாமந்தாதிபதியின் கட்டளைக்குட்பட்டிருந்தனர். 1 சகல போர் விஷயங்களையும் விசாரிப்பதற்கு லாலாசந்திவிக்கிரகி என்னும் மேலான அதிகாரி ஒருவனிருந்தனன். சண்டையில் ஈட்டி, கத்தி, வேல், வில், அம்பு, முதலிய பல ஆயுதங்களை சளுக்கியர் உபயோகித்துவந்தனர். 'அயில்முனைக்கொந்தளவரசர்' (2) என்றும் 'செஞ்சாமரி' (3) என்றும் சாசனங்களில் காணப்படுகின்றன. போர்

1. Ind. Ant. X No. 97.
2. S. I. I. III. 140.
3. do. 63.



தொடங்குமுன் ஒவ்வொரு சமயமும் போர்வீரர்கள் வீரபானம் செய்வது வழக்கம். குடி வெறியினால் வீரன் ஒருவனே ஆயிரம் பகைவரை எதிர்க்க வல்லவனாயினன். மதயானைகளுக்கும் மதுவுண்பித்தலுண்டு. அவையும் வெறிகொண்டு மிதித்தும் குலைத்தும் எதிரிகளைச்சின்னபின்னம் செய்யும். போர்வீரர்மனைவியரும் தம் கணவரோடு போர்க்களத்துக்குப்போவதுண்டு. சேனாபதியொருவன் சண்டையில் முதுகிட்டோடினால் அதற்குத்தண்டனையாகப் பெண்வேடம் தரித்து அவனை அவமானப்படுத்துவ., (4)

**யுத்ததருமம்.** அக்காலத்தரசர்கள் உண்மையான வீரர்களாயிருந்து ஒருவரோடொருவர் மல்லயுத்தம் செய்வதில் மிகப்பிரியமாயிருந்தனர். சளுக்கியருக்குப்பரம்பரையாகவந்த ஆகவமல்லன் திரிபுவனமல்லன் பூலோகமல்லன் புவனைகமல்லன் ராஜமல்லன் யுத்தமல்லன் என்ற மல்ல பிருதுகளும் கண்டுகவனிக்கத்தக்கன. அவமானம் நேருவதாயின் உயிரையும் விடத்துணிவார்கள். சோழராஜாதிராஜன் திண்டிறல் இரட்டமண்டலமெய்தி நதிகளும் காடும் பதிகளுமநேகமழித்தனன் வளவனென்று மொழிப்பொருள் கேட்டு வேகவெஞ்சளுக்கி ஆகவமல்லன் பரிபவமெனக்கிதென்று எரிவிழுந்தெழுந்து செப்பருந்தீர்த்தக்கொப்பத்தகவையில் ஒரு மதயானையிலேறிச்சென்று தன் கையாலே அவனைக்கொன்றான். (5) சோழவீரராஜேந்திரன்காலத்து கூடல சங்கமத்துச்சண்டையில் ஆகவமல்லன் தன் புதல்வரோடு தோல்வியடைப் 'பழியொடு வாழ்வதிற் சாவது சால நன்றென்று ஏவமுற்றின சிந்தையனாகி, முன்னம் புதல்வருந்தானும் முதுகிட்டுடைந்த கூடல்களிலேனும் குறித்த கூடலில் வாராதஞ்சினர் மன்னவரல்லர், போர்ப்பெரும்பழிப்புராட்டராக' வென்று யாவருமறிய ஓலையொன்று எழுதி விடுத்ததே மற்றொரு சாக்ஷியாகும். (6)

ஓரரசன் மற்றோரரசனைப்பழிக்குப்பழிவாங்குவதாயினும் எச்சரிக்கை செய்தே போர்தொடங்குவது வாடிக்கை. கடைசியாகக்கூறிய

4. ஹ்வான்த்சாங்கின் வரலாறு.
5. S. I. I. III. No. 29. ராஜேந்திரனது மணிமங்கலசாசனம் Epi. car. VIII Sb. 325.
6. S. I. I. III. 69.

உதாரணம் இதையும் வற்புறுத்துகின்றது. போர்க்களத்தில் முதுகிட்டோடினவர்களைத் துரத்துவதுண்டென்றாலும் சரணாகதியடைந்தவர்களைச் சளுக்கியர் ஒருகாலும் கொல்வதில்லை. கொள்ளையடித்தல், ஸ்திரீகளையும் பாலர்களையும் பிராமணர்களையும் கொல்லுதல், ஜாதிக்கலப்பு, பிடிபட்ட பெண்டிரை மானபங்கம் செய்தல் முதலியனவெல்லாம் தருமசாஸ்திரத்திற்கு மாறானவையென்று சளுக்கியரால் விலக்கப்பட்டன. இத்தருமசாஸ்திரத்தைச்சோழவரசர்கள் அதிசமாய்க்கவனிக்கவில்லை என்பது சாசனங்களால் தெரியவருகிறது. புகழ்பெற்ற சோழராஜராஜனும் (I) நெறிதவறி நடந்ததாக ஹொட்டூர் சாசனம் (7) கூறுகிறது. ராஜாதிராஜன் இரட்டமண்டலமெய்தி நதிகளும் நாடும் பதிகளும நேகமழித்ததாக அவன் சாசனத்திலேயே (8) காணப்படுகிறது. ஜைனகோயில்களை எரித்த சோழன் கொடுங்கோன்மன்னனென்று சளுக்கிய சாசனத்தில் (9) சொல்லப்பட்டிருக்கிறான். ராஜேந்திரதேவன் மெய்க்கீர்த்திகளில் ஆகவமல்லன் பெருஞ்சேனையெல்லாம்படப்பொருது பாரதுநிகழப்பசும்பிணமாக்கி ஆங்கவன் அஞ்சிப்புறக்கிட்டோட அவனையும் குதிரையும் பெண்டு பண்டாரமும் ஒட்டகத்தோடு அகப்படப்பிடித்துக்கொண்டதாகத் தெரியவருகிறது. (10) சோழவீரராஜேந்திரன் மாதண்டநாயகசாமுண்டராயனைச்செற்று அவன் சிரத்தினையறுத்து மற்றவனொருமகளாகிய இருகயன்தேவி நாகலை என்னும் தோகையம்சாயலை முகத்தோடு மூக்குவேறாக்கினதான அவன் சாசனத்திலேயே (11) காணப்படுகிறது. இம்மாதிரி குலோத்துங்கன் பட்ட

7. Bom. Gaz. IV. 433.
8. S. I. I. III. No. 29.
9. அண்ணிகேர்சாசனம் Bom. Gaz. IV. 441.
10. S. I. I.
11. S. I. I.
11 (a) கலிங்கத்துப்பரணி.

IV. 3 "வட்டவெண்குடைச்சென்னிமானதன்
வாளின்வாயினுன்மறவிவாயிடைப்
பட்டமன்னர்தம்பட்டமங்கையர்
பருமணித்திருக்கருவிருத்தியே."

IV. கோயில்பாடியது 6.
"மீளிமாவுகைத்தபயன்முன்னொர்நாள்
விருதராசரைப்பொருதகொண்டபோ
ராளிவாரணக்கேழல்சீயமென்
றவைகிரைத்துநாசிகையிருத்தியே"



மன்னர்தம் பட்டமங்கையர் பருமணித்திருக்கருவிருத்தினதாகவும் விருதராசரைப்பொருது ஆளிவிரணம் கேழல்சீயம் என்ற பல கொடிகளைக்கொண்டதாகவும் கலிங்கத்துப்பரணியில் காணப்படுகிறது. இம்மாதிரியான நெறிதவறின கொடுங்கோன்மை சளுக்கியரிடத்தில் காணப்படவில்லை. விக்கிரமாதித்தன் காஞ்சியைத்தாக்கினபோது கோயில்களுக்கும் கொடிகளுக்கும் ஒரு பழுதும் நேராமல் காப்பாற்றினதாகப் பில்ஹணர் (12) கூறியுள்ளார். இராஜ தூதர்களை நிரம்ப மரியாதையாக நடத்திவந்ததாகவும் விளக்குகின்றது.

ஒரு குலத்தரசர் மற்றோர் குலத்தரச குமாரத்திகளை மணஞ்செய்யும் வழக்கமுண்டு. கீழைச்சளுக்கி விமலாதித்தன் புகழ்பெற்ற சோழராஜராஜன் I பெண்ணை மணந்ததும் சளுக்கிராஜராஜன் கங்கைகொண்ட சோழன் பெண் அம்மங்கதேவியைக்கலியாணஞ்செய்ததும் குலோத்துங்கன் I சோழராஜேந்திரதேவன் பெண் மதுராந்தகியை விவாகஞ்செய்துகொண்டதும் மேலைச்சளுக்கி விக்கிரமாதித்தன் சோழவீரராஜேந்திரதேவன் பெண்ணைப் பாணிக்கிரகணம்செய்ததும் இதற்கு முக்கிய உதாரணங்களாகும்.

**நாட்டின் பிரிவுகளும் அதிகாரிகளும்.**

இராஜரீக சௌகரியத்திற்காக தேசமானது பல ராஷ்டிரங்களாகவும் ஒவ்வொருராஷ்டிரமும் பல விஷயங்களாகவும் ஒவ்வொரு விஷயமும் பல கிராமங்களாகவும் பிரிக்கப்பட்டிருந்தன. இவற்றின் அதிகாரிகளுக்கு முறையே ராஷ்டிரபதி, விஷயபதி, கிராமகூடக்கு என்ற பெயர்கள் வழங்கிவந்தன. அயுக்தகன் நியுக்தகன் என்ற வேறு சிற்றதிகாரிகளும் இருந்தார்களென்பது தெரியவருகிறது. ராஷ்டிரபதியானவன் மகாதண்டநாயகனெனவும் மகாமண்டலேசுவரனெனவும் கூறப்பட்டான். விஷயபதியானவன் நாலகவுண்டன் நாகவுண்டன் அல்லது மன்னேயன் என்றும் சொல்லப்பட்டான். கிராமபதிக்கு ஊரோடு அல்லது ஊர் கவுண்டன் எனப்பெயருண்டு. இராஜ்யத்தின் பிரிவுகள் அவ்வவற்றுக்கேற்ற சங்கியையோடு குறிக்கப்பட்டு வந்தன. உதாரணமாக கங்கபாடி 96000 வனவாசி 12000, நுளம்பபாடி 32000 என்ற எண்ணிக்கையுள்ளன. இன்னும் 70, 50 முதலிய எண்ணிக்கைகளோடு சிறு பிரிவுகளும் சாசனங்

12. விக். ச.

களில் காணப்படுகின்றன. இவ்வெண்ணிக்கைகள் ஒவ்வொரு பிரிவிலும் அடங்கிய குடிகளின் தொகையையோ கிராமங்களையோ அல்லது வருமானத்தையோ குறிப்பனவென்று கல்விமான்கள் பலவிதமாக அபிப்பிராயப்படுகிறார்கள். ஆனால் இன்னதென்று நிச்சயமாகச்சொல்வதற்கில்லை. ஒரு ஊரைக்குறிப்பிடவேண்டுமானால் அது இன்ன நாட்டை, இன்ன ராஷ்டிரத்தை இன்ன விஷயத்தைச்சார்ந்ததென்று கூறப்படுவது வழக்கம். உதாரணமாக பொன்னவாடிஅக்கிரகாரமானது பாஜ 50 என்னும் விஷயத்தையும் தார்டவாடி 1000 ராஷ்டிரத்தையும் சார்ந்தது. ஹளேபிட் கிராமம் குண்ட விஷயத்தையும் கங்கபாடி 96000 ராஷ்டிரத்தையும் சேர்ந்திருந்தது.

இராஜாங்கமானது இராணுவம் நியாயவிசாரணை, பொக்கிஷம் முதலான பல இலாகாக்களாகப்பிரிக்கப்பட்டு ஒவ்வொன்றும் ஓர் அதிகாரியின் கீழிருந்தது. இவர்களின் தொகுதியே இராஜகாரிய நிர்வாக சபையாகும். ஒரு இலாகாவின் தலைவன் இதர இலாகாக்களின் சம்பந்தமான காரியங்களையும் பார்த்துவருவதுண்டு. உதாரணமாக பிரதானமந்திரியும் பொக்கிஷதாரருமான ரூபபட்டையனென்பவன் அந்தப்புர விசாரணைத்தலைவனாகவும் 18 அக்கிரகாரத்திற்கு மண்டலேசுவரனாகவும் சுங்க விஷயங்களைத்தணிக்கை செய்யும் தண்டநாயகனாகவுமிருந்தனன். (13) நியாயவிசாரணை முழுவதும் விஞ்ஞானேசுவருடைய மிதாக்ஷரத்தை அனுசரித்தேயிருந்தது. இராஜாங்க கட்டடங்களை மேற்பார்வையிட சூத்ரதாரிதணக்கி என்று ஒரு அதிகாரியிருந்தனன். பல இலாகாக்களிலும் மிகவும் முக்கியமானதுபொக்கிஷமே. அதில் பணத்தை நிரம்பச்சேகரித்து வைத்தல் நன்றாக ஆளப்பட்டுவரும் இராஜ்யத்தின் அங்கங்களில் ஒன்றாகும். இராஜ்யத்தின் முக்கியமான வருமானம் நிலவரியே. அதை வசூலிப்பதே இராஜாங்கத்தின் முக்கிய வேலையாகும். நன்செய், புன்செய், தோட்டக்கால், கட்டிமானியம் என்று நிலம் பல்வகைப்பட்டிருந்தது. நிலமானது நீர்வளம் நிலவளத்திற்குத்தக்கவாறு தீர்வை விதிப்பதற்குப்பிரிக்கப்பட்டிருந்தது. விளைவின் ஒரு பகுதியே வரியாக வாங்கப்பட்டு வந்தது. வரியில்லாத நிலங்களுக்கு அம்பலி நிலம் (14) (இறையிலி) என்று பெயர். நிலவரியைத்தவிர வீட்டுவரி கலியாணப்பந்தல்வரி முதலிய பல வரிகள்

18. Epi. car. S. K. 170.
14. Ind. Ant. IX. No. 98.



இருந்தன. தாசிகள்வைத்துக்கொண்டிருந்த கண்ணாடிகளுக்குக்கூட வரிவசூலிக்கப்பட்டுவந்ததாகத்தெரியவருகிறது. (15) கொடேனு என்ற ஒருவரியும் இருந்தது. (16) அது ஒருகால் குடை வியாபாரிகள் செலுத்திவந்த வரியாக இருக்கலாம். நிலவரிக்கு அடுத்தபடி முக்கியமான வரி சுங்கமே. அக்காலத்தில் வாணிகம் மேலோங்கி இருந்ததால் சுங்கத்தால் வருமானம் அதிகம். பெரிய சுங்கம் (பெஜ்ஜுங்கம்) சிறிய சுங்கம் (கிரிகுலசுங்கம்) என இருவிதங்களிருந்தன. (17) இவ்வருமானத்தை வசூலிக்கச் சுங்காதிகாரிகள் சுங்கமங்கைக்கொண்டநிதேவர் பெர்ஜ்ஜீங்காடகணிகரர் என்று பலரிருந்தனர். (18) இதரவருமானத்தை வசூலிக்கக்கரணர்களும், பிரமுககரணர்களும் வட்டவியவகாரிகளுமாகப் பல அதிகாரிகள் உண்டு. (19) இவர்களுக்குமேல் வரவு செலவு கணக்கு முழுவதும் தணிக்கை செய்ய பாண்டாரி அல்லது பொக்கிஷதார் என்று ஒரு உத்தியோகஸ்தர் இருந்தனர். மேற்கூறிய வருமானங்களேயன்றி அரசனுக்கு இராஜசம்பாவனை அல்லது காணிக்கையாகவும் பொருள் கிடைப்பதுண்டு. நிதிநிக்ஷேபங்களும் நதிகளும் கற்பாறை முதலியனவும் அரசனுக்கே உரியனவாகும். வருஷாந்திரச்செலவுபோக மிச்சமிருந்த தொகையைக்கொண்டு ரஸ்தாக்கள், அணைக்கட்டுகள், தடாகங்கள், தண்ணீர்ப்பந்தல்கள், சத்திரங்கள், பாடசாலைகள், வைத்தியசாலைகள் முதலியன ஏற்படுத்தப்பட்டன. பஞ்சம்வந்த காலத்திலும் இந்த மிச்சத்தையே உபயோகித்து வந்தனர். (20)

கிராமத்தில் முக்கியமானவர் பன்னிருவர். (21) அவர்கள் மணி
யக்காரன் பேடல் அல்லது கவுண்டன், கர்ணம்
கிராம விசாரணை. அல்லது ஷான்போக் (கணக்கன்) உபாத்தியாயர்
நீர் சரியாகப்பாய்ச்ச நீர்கிரந்தி, தலையாரி, தோட்டி
ஜோதிஷன், கொல்லன், தட்டான், குயவன், வண்ணான், அம்பட்டன் என்பவராவர். இவர்களுக்கு அப்போதைக்கப்போது சம்பளம் கொடு

15. Epi. car. VII. S. K. 295.
16. Ind. Ant. IX. No. 98.
17. Epi. car. VII. S. K. 297.
18. Epi car. XI Dg. 129, 139, 141.
19. Epi. car. VII. S. K. 297
Do. XI. Dg. 133.
20. Epi. car VII. S. K. 277 வி. ச.
21. Rice. Mysore Gazetteer.

பதில்லை. கிராமத்தார் பொது நன்மைக்காக இவர்களுக்கு நிலங்கள் கொடுத்திருந்தனர். கிராம நிலங்களுக்கு தொட்டன மானியம் கொக்கன மானியம் எனப்பலபெயர்களுண்டு. (22) நியாய விசாரணைக்காகக் கிராமத்தில் ஒரு பஞ்சாயத்தும் (தருமாசனத்தார்) உண்டு. இராஜாங்கத்தில் என்ன மாறுதல்கள் உண்டானபோதிலும் கிராமங்களையும் கிராமத்தாரையும் அவை அதிகமாகப்பாதிக்கா. ஆகவே ஒவ்வொரு ஊர்க்குடிகளும் தங்களுடைய நன்மையைத்தாங்களே நாடினவர்களாய் அந்நியரால் யாதொரு தடையுமின்றிச் சுகமாய்க்காலங்கழித்து வந்தனர்

## II பொருளியல்.

விளைபொருள்கள்.

இறக்குமதி.

குந்தளநாட்டில் வளமை மிகுந்திருந்தது. நெல், கரும்பு முதலியன விசேஷித்து விளைந்தன. வனவாசி மாகாணம் தென்னை, வாழை, கமுகு இவைகளுக்குப்பெயர் பெற்றிருந்தது. ஹிந்துஸ்தானத்திலிருந்து குதிரைகளும், கேரளத்திலிருந்து கற்பூரமும், மேற்கடல்கரைப்பிராந்தியத்திலிருந்து வால்மிளகு, இலவங்கம், முதலிய வாசனைத்திரவியங்களும், சாதாவிலிருந்து (?) குங்குமமும், புண்டரகத்திலிருந்து (?) மணல்போன்ற சர்க்கரையும், காஷ்மீரத்திலிருந்து உயர்ந்த மதுவகைகளும், பாரசீகத்திலிருந்து விளக்கெரிக்கும்எண்ணெயும் இந்த நாட்டிற்கு வியாபாரிகளால் கொண்டுவரப்பட்டன. கடல்மார்க்கமாகவும் வியாபாரம் நடந்ததென்று தெரிகிறது. பில்ஹணர் தக்ஷணத்திற்கு வந்தபோது சௌராஷ்டிரத்திலிருந்து கப்பலேறி வந்தனர். (23)

நாணயங்கள்.

அக்காலத்தில் வியாபாரத்தில் பொன் வெள்ளி நாணயங்கள் வழங்கி வந்தன. நாற்பத்தெட்டுக்குன்றிமணி எடையுள்ள பொன் நாணயத்திற்கு நிஷ்கா என்று பெயர். தாம்பிர நாணயங்களுக்கு ஹூணு அல்லது பணு, ஹாகா அல்லது பாகா என்று பெயர் வழங்கின. (24) சளுக்கிய நாணயங்கள் தாமரை போன்ற வடிவினவாயிருந்தமையால் பத்ம

22. Ind Ant. IX. 75.
23. விக். ச.
24. Madras Journal of literature and science Numismatic gleanings (Elliot).



டங்கா எனப்பட்டன. அவைகளின் ஒரு புறத்தில் சக்கரம் அல்லது தாமரை உருவம் பதிக்கப்பட்டு ஸ்ரீ என்று மும்முறை எழுதப்பட்டிருக்கும். (25)

வீட்டுச்சாமான்கள்.

(26) முகம் பார்க்க, கண்ணாடிகளும் கிரீடாகிருகங்களும் கொடிகட்டிப்பறக்கும் வீடுகளும் பானம் செய்யப்பாத்திரங்களும் (சேஷகங்களும்) சங்குகளும் நீர்த்துருத்திகளும் (கரையந்திரங்களும்) சிவப்புகல் ஜன்னல்களும் எழுதமஷியும் அக்காலத்திலிருந்தனவாகக்காணப்படுகிறது. நீர் முகப்பதற்கு பாணியக்கடி யந்திரம் (சகடம்) இருந்தது. மரங்களின் பாளையிலிருந்து கள் (சுரா) இறக்கினார்கள். சலவைக்கற்களின்மேல் சித்திரம் வரையப்பட்டது. சூர்யோபலம் அல்லது சூரியகாந்திக்கண்ணாடிகள் இருந்தன. முத்துக்களில் துவாரமிடச் சலாகமென்ற நுட்பமான கருவியுண்டு. கத்திகளைக்கூர்மையாக்கச்சாணைக்கல்லும் வைரத்தைப்பட்டைதீர்க்கச் சாணபலபட்டிகையும் இருந்தன. நிலத்தையளக்க சச்சாவி, மாரகுண்டி, பேருண்டகேல் என்னும் பல அளவைக்கோல்கள் உபயோகிக்கப்பட்டு வந்தன. கம்ப, மட்ட என்பன நிலத்தின் விஸ்தீரணத்தைக்குறித்தன. நூறு கம்ப சேர்ந்தால் ஒரு மட்டவாகும். குழி என்பது அக்காலத்து ஒரு முகத்தலளவை. காஸி வீசா என்பன எடுத்தலளவையாகும்.

வியாபாரக்கூட்டங்கள்.

வியாபாரக்கூட்டங்கள் (சிரேணியங்கள்) அநேகம் இருந்தனவென்பது சாசனங்களால் தெரியவருகிறது. இவை வியாபாரக்கூட்டங்கள் மாத்திரமேயன்றித் தொழிலாளிகள்கூட்டங்களும் பல இருந்தன. ஷிகார்பூரில் இரண்டு கற்றச்சர்கள் தங்கள் கூட்டத்திற்கு உண்டான ஒரு அபவாதத்தை நீக்க ஒரு விக்கிரகம் செய்தனர். (28) எண்ணெய் வணிகக் கூட்டத்தார் செக்கு ஒன்றுக்கு ஒரு அகப்பை எண்ணெய் சுவாமிக்குக் கொடுத்தார்கள். (29.) தார்சர்கூட்டமும் மும்முறி (?) கூட்டமும்

25. V. A. Smith's catalogue of coins in the British museum.
26. விக். ச.
27. Ind. Ant. V. 342.
28. Epi. car. VII. S. K. 112.
29. Ind. Ant. V. 343.

இருந்தன. (30) இம்மாதிரியான கூட்டங்கள் ராஷ்டிரகூடர் காலத்திலும் (31) அதற்கு முந்திய ஆந்திர பிருத்யர் காலத்திலும் (32) அதாவது கிறிஸ்துசகாப்தத்தின் தொடக்கத்திலேயே இருந்தனவாகத்தெரியவருகிறது. ஆகவே ஐரோப்பாவைப்போல இந்தியாவிலும் வர்த்தகக் கூட்டங்கள் ஏற்பட்டு மேம்பட்டிருந்ததாகச்சொல்லலாம். கூட்டத்தலைவனுக்குச் சிரேஷ்டி (33) அல்லது செட்டி என்று பெயர்.

பொதுஜன நன்மைக்காக மகாஜனக்கூட்டங்கள் இருந்தன. அவைகளின்தலைவனுக்குப் பட்டணசாமி என்று பெயர். ஐயவோலையிலிருந்த 500 மகாஜனங்கள் தானம்செய்ததாகச் சாசனத்தில் காணப்படுகிறது. (34) ஞானசக்தி என்பவன் 420 மகாஜனங்களுக்கு ஒரு நிலத்தைத்தானமாகக்கொடுத்து அதன் மாசூலை சுவாமி கைங்கரியத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளச்செய்தான். (35) இக்கூட்டங்கள் இன்னவாறு நடந்தேறினவென்று முழு விவரந்தெரியாவிடினும் ஜனங்களுக்கு அவைகளில் அதிக நம்பிக்கையிருந்ததென்பது மாத்திரம் நன்கு விளங்குகிறது.

**வாணிக மேம்பாடு.**

வர்த்தகர்களுக்குப் பெருத்த லாபம் கிடைத்திருத்தல்வேண்டும். ஏனெனில் சாசனங்களில் பல இடங்களிலும் செட்டிகள் கோயில் கட்டினதாகவும் விலையுயர்ந்த விக்கிரகங்கள் செய்வித்ததாகவும் சொல்லப்பட்டிருக்கின்றன. ஹாம்பாசெட்டியின்மனைவி ஜைனதாராபகவதிக்கு ஒரு விக்கிரகம் செய்வித்தாள். (36) லொக்கிகுண்டிசெட்டி சங்கம்வயன் தாராதேவிக்கு ஒரு விஹாரம் கட்டினான். (37) தாம்பல் நகரைச்சேர்ந்த புத்துச் செட்டிமார்கள் பௌத்தனுக்கு ஒரு விஹாரம் அமைத்தனர். வட்டவியவகாரிமாரோ செட்டிதெரு பெருந்தானம் செய்ததாகத்தெரியவருகிறது. (38)

30. Ind. Ant. XIX. 84 ப்லகாம்விசாசனம்.
31. Epi. Ind. V. 165.
32. Early History of the Dekkan.
33. Ind. Ant. X—185—190.
34. Ind. Ant. IX—96.
35. Ind. Ant. XIII—91—94.
36. Epi. Car. VII SK. 169.
37. Ind. Ant. X.
38. Epi. Car. VII SK. 118.



**வட்டி.**

அக்காலத்து வழங்கிவந்த வட்டி விதத்தை கி. பி. 1060-ம் வருஷத்திய தாவணகிரி சாசனத்திலிருந்து (39) ஒருவாறு ஊகிக்கலாம். அதில் நான்குகத்யணங்களுக்கு மாதம் ஒன்றுக்கு ஒரு ஹாகா வட்டியென்றுகுறிக்கப்பட்டிருக்கிறது. இதை ஆதாரமாகக்கொண்டு கணக்கிட்டால் (40) நூற்றுக்கு வருஷம் ஒன்றுக்கு வட்டி சற்றேறக்குறைய எட்டு (41) ஆகிறது. அக்காலத்தில் இராஜ்யத்தில் சண்டைசச்சரவுகள் பலவிருந்ததாகக்கேள்விப்படினும் வட்டி இவ்வாறு குறைந்திருந்தது மேற்கண்ட கவனிக்கத்தக்கது. இதற்குக்காரணம் யாதாகுமென்று யோசித்தால் உபத்திரவங்கள் கிராமத்தாரைப் பாதிக்காமையேபோலும். அவ்வவ்விடத்து மகாஜனங்களும் வர்த்தகக்கூட்டங்களும் தத்தம் நன்மையைத் தாமே கவனித்தனர் என்பதேயாம். (42)

## III மதக்கோட்பாடு.

**சளுக்கியர் குலதேவதை**

நாணயங்களின் வராக முத்திரையினின்றும், வராகக்கொடியினின்றும், சாசனங்களில் காணப்படும் வராகாவதாரவணக்கத்திலிருந்தும் டாக்டர் பூலர் பிலீட் பார்னெட் (43) என்பவர்கள் சளுக்கியரசர்களுடைய குலதேவதை மகாவிஷ்ணுவே யென்று சொல்லிப்

39. Epi. Car. XI Dg. 140.
40. Cole Brooke's Essays Vol. II.
$1$ ஹாகா $= \frac{1}{4}$ பணம்.
$= \frac{1}{4} \times \frac{1}{4}$ திரம்மம்.
$= \frac{1}{4} \times \frac{1}{4} \times \frac{1}{16}$ நிஷ்கம்.
$= \frac{1}{256}$ நிஷ்கம்.
$= \frac{1}{256} \times \frac{20}{3}$ கத்யணம்.
$= \frac{20}{768}$ கத்யணம்.
41. $1$ நிஷ்கம் $= 4$ சுவர்ணம்
$= 64$ மாஷம்
$= 320$ குஞ்சம்
$1$ கத்யணம் $= 48$ குஞ்சம்
$1$ நிஷ்கம் $= \frac{320}{48} = 6\frac{2}{3}$ கத்யணம்
4 கத்யணங்களுக்கு 1 மாசவட்டி 1 ஹாகா
100 12 $\frac{300 \times 20}{768}$ கத்யணம்
$= 7\frac{13}{16}$ or சற்றேறக்குறைய 8%
42. Bhandarkar's Early History of the Dekhan.
43. Epi. Ind. XIII 38.

போந்தனர். ஆனால் விக்கிரமாங்கதேவசரிதத்தில் குலதெய்வம் சிவபிரானென்று வெளிப்படையாகச் சொல்லப்பட்டிருக்கிறது. (44) சளுக்கியரசர்கள் பெரும்பாலும் சிவபக்தரேயாவர். ஆகவமல்லன் சிவபிரானைக் குறித்தே தவஞ்செய்து சிவப்பிரசாதமாக விக்கிரமாதித்தனைப்பெற்றான். சளுக்கியருடைய தானசாசனங்களிலும் சிவலிங்கம் மத்தியில் காணப்படுகிறது. (45) கோயில்களிலும் பிரம விஷ்ணுவுக்கு இடையில் மகாதேவன் விக்கிரகமே அமைக்கப்பட்டிருக்கிறது.

**மதங்களின் வேறுபாடுகள்**

அக்காலத்தில் பலதெய்வங்களும் கொண்டாடப்பட்டு வந்தன. சிவலிங்கத்தையே ஜனங்கள் பூஜித்துவந்தனர். விக்கிரமாதித்தனுக்குப் பாட்டனான ஜயசிங்கன் பாண்டவர்களால் கட்டப்பட்ட பஞ்சலிங்கக் கோயிலைப்பழுதுபார்க்கக் கீர்த்திபெற்றசைவாசாரியாகிய லடுலீசுவர பண்டிதனுக்குத் தானங்கொடுத்தான். (46) மகாவிஷ்ணுவுக்கும் பிரமனுக்கும் கோயில்கள் கட்டப்பட்டன. சிற்சில விடங்களில் ஜைன பௌத்த மதங்களும் ஆதரிக்கப்பட்டுவந்தன. வீரபணஞ்ச வகுப்பினர் ஜைனதேவதையான பத்மாவதிக்குத் தானங்கொடுத்தனர். (47) மண்டலீசுவரனான இலக்ஷ்மணனென்பவன் பெலுவோலாவில் அழிவடைந்திருந்த ஜைன ஆலயங்களைப் பழுதுபார்த்தான். (48)பிரதான மந்திரியான ரூபபட்டையன் பள்ளிகோவில் ஒருபௌத்த விஹாரத்தை ஸ்தாபனஞ்செய்து அதற்கும் தாரபகவதிக்கும் தானங்கள் கொடுத்தான். (49) இவைகளைத்தவிர பகவதி, பள்ளியப்பி, காளி, சக்தி, நாகம் முதலிய இதர தேவதைகளையும் சளுக்கியர் வணங்கி வந்தனர். (50)

---

44. விக். ச. II. 40. குலப்பிரபோ பால மிருகாங்கசேகரன்.
45. J. K. A. S.
46. Epi. car. VII. S. K. 246, 83, 126.
47. Ind. Ant. XIV.
48. Epi. car. VII. S. K. 136.
49. Epi. car. VII. S. K. 170.
50. Epi. car. VII. S. K. 98, 107, 323.
Do. XI, Dg 128.
Epi. Ind. III. 230.



**மதவிரோதமில்லாமை**

அக்காலத்தில் வித்தியாசமின்றி பலமதங்களையும் ஒருவன் தழுவக்கூடும். ரூபபட்டையன் என்பான் கேசவன், லோகீசுவரன், பௌத்தன் முதலிய தேவதைகளுக்குத் தானங்கள்கொடுத்தான். (51) ஆகவமல்லன் தமக்கையாகிய அக்காதேவி ஜைன, பௌத்த, அநந்தருத்திர ஆசாரங்கள்யாவும் அனுசரித்துவந்தாள். (52) மண்டலேசுவரனான நாகவர்மன், ஜைன, விஷ்ணு, சிவகோயில்களைக்கட்டினான். (53) கொல்லாபுரத்து சிலாஹாரன் பெரிய குளமொன்றுவெட்டி அதைச் சுற்றிலும் பௌத்த, சிவ, அருகத விக்கிரகங்களை நாட்டி அவைகளுக்குச் சரிவரப் பூஜைநடப்பதற்குப் பூதானங்களும் செய்தான். (54) பலிநகரத்தில் பிரம விஷ்ணு சிவ ஜைன பௌத்த மதங்களைந்தும் தங்கள் தங்களுடைய கோட்பாடுகளின்படி சண்டைசச்சரவின்றி வழங்கி வந்தன. (55)

ஒருமதத்தைச் சார்ந்தவன் இதரமதத்தைத் தழுவுதலும் உண்டு. ஜயசிங்கன் தன்மனைவி சுகலையின் போதனையால் சைவமதத்தைவிட்டு ஜைனனாயினான். ஹொய்சலபிட்டிதேவனென்பான் வைஷ்ணவ சமயகுரவரான இராமானுஜருடைய பிரசங்கங்களால் தானும் வைஷ்ணவ மதத்தைத்தழுவி விஷ்ணுவர்த்தனன் என்னும்பெயரையும் பூண்டான்.

இந்நூற்றாண்டில் பௌத்த மதம் ஒருவாறு க்ஷீணதசையிலிருந்ததென்றே சொல்லலாம். ஜைனமதமும் அத்தன்மையதே. திரிமூர்த்திகளின் ஆராதனை மட்டுமே மேலோங்கியிருந்தது. அவைகளிலும் முக்கியமாகச் சைவமே தலையெடுத்திருந்தது. ஆனால் அக்காலத்தில் உள்ளன்பு குறைந்து பலவேறுபட்ட போலியாசாரங்களே அதிகரித்துவிட்டபடியால் அச்சைவமும் ஒருவாறு சீர்திருத்தம் செய்யவேண்டிய நிலைமையிலிருந்தது. இதுபற்றியே பின்னிட்டு பசவன் நாளில் லிங்காயமதம் ஏற்படலாயிற்று.

---

51. Epi. car. VII. S. K. 170.
52. Ind. Ant. XVIII. 271.
53. Ind. Ant. IV. 179.
54. J. B. K. A. S. XIII. 4.
55. Epi. car. VII. S. K. 100. VIII. Sb. 277.

ஆகவமல்லன் பலயாகங்களைச் செய்ததாகப் பில்ஹணர் கூறுகிறார்.

**ஆசாரங்கள்**

அஹிச்சத்திரத்திலிருந்து தானகுண்டிக்குவந்த முப்பத்திரண்டாயிரம் பிராமணர்கள் அநேக அக்கினி ஹோத்திரம் செய்ததாகவும் பலநதிகளிலும் பஞ்சலிங்க தீர்த்தத்திலும் ஸ்நானம்செய்ததாகவும் விஸ்தாரமாகச் சாசனத்தில் கூறப்பட்டிருக்கின்றன. வீடுகள்தோறும் தேவதார்ச்சனை நடந்துவந்தது. சாலக்கிராமத்திற்கும் பூஜைசெய்தனர். உபவீதமானது யஜ்ஞம் செய்யும் வேளைமட்டுமேயன்றி எப்போதும் தரிக்கப்பட்டுவந்தது. அக்காலத்துத்துவிஜர்கள் பாரசீகரைப்போல பூணூலைஇடுப்பில்கட்டவில்லை தற்காலத்துத் தென்தேசத்துப் பிராமணரைப்போல ஒருபுறமாகத்தோளின்மேல் தரியாமல் தாவடமாகவே போட்டுவந்தனர். (56)

**தானங்கள்**

மதவிஷயமாக இராஜாங்க உத்தியோகஸ்தர்களும், வியாபாரக் கூட்டத்தாரும், மகாஜனசபையோரும், ஸ்திரீகளும், சந்நியாசிகளும் பலதானங்களைச் செய்தனர். சிலநிலங்கள் சர்வமான்யமாக விடப்பட்டன. இவற்றுக்கே சர்வாப்யந்தரசித்தி யென்றும் பெயர். ஒருவனுக்கே கொடுத்த தானம் ஏகபோக்கிய தானமெனப்படும். பலர் சேர்ந்து அனுபவித்தலாயின் கணபோக்கிய தானம் எனப்படும். (57) ஒருவன் கொடுத்த தானத்தை அவன் சந்ததியார் நிறுத்திவிடுதல் சட்டப்படி கூடுமென்றாலும் பாவத்திற்கஞ்சி அவ்வாறு செய்வதில்லை.

**கோயில்களின் அமைப்பு**

சளுக்கியர்கோயில்கள் வடஇந்தியாக்கோயில்களைப்போலகுவிந்தசிகரத்தையுடையனவாயும் தென்தேசத்துத் திராவிட கோயில்களைப்போல் படிப்படியாகவும் அடிபருத்து மேலே செல்லச்செல்லக் குறுகியிருந்தன. சளுக்கிய ராஜ்யம் வடஇந்தியாவுக்கும் தென் இந்தியாவுக்கும் மத்தியிலிருந்ததால் அந்நாட்டுக் கோயில்களின் அமைப்பும் வடஇந்தியா தென் இந்தியாவின் கோயில்களின் மாதிரிகளை ஒருவாறு தழுவியே இருந்தது. (58) ஆயினும் அவைகளுக்கு மாறாக சளுக்கிய கோயில்களில் மத்தியில் விசாலமான மண்டபங்கள், கல்ஜன்னல்களும்

56. விக். ச.
57. Ind. Ant. XIX. 271.
58. Fergusson's History of Indian and Eastern architecture.



காணப்படும். சித்திரவேலை செய்வதற்கு ஏற்றதான ஒருவித சலவைக் கல்லால் கோயில்கள் கட்டப்பட்டன. (59) அக்காலத்துச் சித்திரவேலையும் அபூர்வமான வேலைப்பாடு உள்ளதென்றும் அதைச் சரிவர விவரிப்பதற்கு இயலாதென்றும் கர்னல் மெடோஸ் டெய்லர் சொல்லியிருக்கிறார். மைசூர் கன்னடதேசங்களிலும் துங்கபத்திரைக் கரையிலும் இவ்வித கட்டடங்களைக் காணலாம். இம்மாதிரி கட்டடம் ஆரம்பித்தது தார்வார்ஜில்லாவிலேயாம். உன்னத நிலைமையை அடைந்தது மைசூர் மாகாணத்திலேயாம். முக்கியமாக துவாரசமுத்திரம் அல்லது தேவபுரி (அதாவது தற்கால ஹளேபீட்) என்கிற இடத்திலுள்ள இரட்டைக்கோயிலே இம்மாதிரி அமைப்புக்கு அழியாச்சான்றாகும். (60)

## IV. குடியியல்.

**சளுக்கியரின் குணவிசேஷங்கள்**

சளுக்கியநாட்டுக் குடிகள் ஆஜானுபாகுவாய் நன்னடக்கையும் அமைதியுமுடையவர்கள். (61) உப்பிட்டவரை உள்ளளவும் நினையுந் தன்மையர். ஆனால் விரோதிகளைத் தண்டிக்காமல் தப்பிப்போகவிடார். யாரேனும் அவருக்கு மானக்கேடுவிளைவித்தால் அதைத் தீர்க்கத் தங்கள் உயிரையும் விடத்துணிவர். 'பழியொடுவாழ்வதிற் சாவதுசாலநன்றென்று' போர்க்களத்திற்கு மீண்டும் அழைத்த ஆகவமல்லன் இதற்கு என்றும் அழியாச்சாக்ஷியாவன். (62) பிறருக்கு இடுக்கண் நேர்ந்தவிடத்து, விரோதிகளாயிருந்தபோதிலும் சுயநலம் கருதாது அவருக்கு உதவிசெய்ய விரைந்துசெல்லுவர். போஜனிறந்த பிறகு மாளவதேசத்தரசனை ஜயசிங்கன் பகைவரால் தாக்கப்பட்டுத் தன் நாட்டைவிட்டு ஓடும்படிநேரிட்டபோது விக்கிரமாதித்தன், தானும் தன் தந்தையுமாக, அவனுக்குதவிபுரிந்து இராஜ்யத்தை மீட்டுக் கொடுத்ததே இதற்கொரு மேற்கோளாகும். (63) மேலும் சளுக்கியர் எதிரிகளிடம் அஞ்சாதநெஞ்சினராய்த் தலைவணங்காத சுபாவமுடையவர்களாயிருந்தனர்.

59. Rae's Châlukyan architecture.
60. Monuments of Central India.
61. ஹ்வான்த்சாங்கின்குறிப்பு.
62. S. I. I. III.
63. இரண்டாம்பாகம் பார்க்க.

**பெண்டிர்** குந்தளதேசத்து ஸ்திரீகள் பாதங்களில் சிலம்புகளும், ஐந்துவிரல்களிலும் மோதிரங்களும், கழுத்தில் ஒற்றைவடமுத்துமாலையும் (ஏகாவணியும்) காதில் குண்டலங்களும் அணிந்திருந்தனர். குங்குமந்திமிர்ந்து மஞ்சனமாடி, சந்தனம்பூசி, நெற்றியில் கஸ்தூரிப்பொட்டிட்டு, கூந்தலுக்குக் கிருஷ்ணாகரு என்னும் வாசனைத்தைலம் தடவி, கூந்தலின் ஒரு பகுதியைச் சுருள்சுருளாக நெற்றியின்மேல் தொங்கவிட்டுக்கொண்டு, சிரசில் புஷ்பம் தரித்துப் பலவிதமாக அலங்கரித்துக்கொண்டார்கள். இடையில் பாவாடைபோன்ற சுச்சமில்லாத ஒருஆடையும் அதன்மேல் ஒருவித கஞ்சுகமும் உடுத்திவந்தனர். (64)

**அரசரின் பொழுதுபோக்கு** அக்காலத்தரசர்கள் யானையேற்றம், குதிரையேற்றம், ஆயுதப்பயிற்சி, மல்லயுத்தம், கோழிச்சண்டை, வேட்டைநாய்வளர்த்தல், பொழில் நீர் வரை செய்குன்று முதலிய விளையாடல், சங்கீதம், நாட்டியம் இவைகளில் விநோதமாகக் காலங்கழித்து வந்தனர். (65) ஈண்டு 'கலையினொடுங் கவிவாணர் கவியினொடு மிசையினொடுங் காதன்மாதர் முலையினொடு மனுநீதி முறையினொடு மறையினொடும்' குலோத்துங்க சோழன் பொழுதுபோக்கினதாகக் கலிங்கத்துப்பரணியில் (66) சொல்லியிருப்பதும் கவனிக்கத்தக்கது.

**அரசியரின் சிறப்பு** இராணிகளுக்கு அங்கபோகமாக மாகாணங்கள் விடப்பட்டன. அம்மாகாணங்களை பிரதிநிதிகளைக்கொண்டாவது அல்லது தாங்களேயாவது ஆண்டுவந்தனர். இவர்களில் உயர்ந்த அரசிக்கு அக்ரமஹிஷி பட்டராணி அல்லது போரசி என்றுபெயர். ஆகவமல்லன்பட்டமங்கையர் மயிலாலதேவி, ஹொய்சலதேவி யென்பார். (67) விக்கிரமாதித்தன்பட்டராணிகள் சந்திரலேகா இலக்ஷ்மாதேவி என்பவர். (68) இலக்ஷ்மாதேவி அரசனுக்குச்சமானமாகத் தானும் அதிகாரம் செலுத்திவந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. சோழரிடத்திலும் இதைக் காணலாம்.

64. விக். ச.
65. அபிலஷிதார்த்தசிந்தாமணி.
66. X. அவதாரம்-46.
67. Epi. car. VII. Hl. 1.
68. Bom. Gaz. IV-438.



'சென்னி யானையுடன் தன்னானை நடத்தும் உரிமைத் தியாகவல்லி' என்னும் கலிங்கத்துப்பரணி வாக்கையும். (69) நோக்குக. ஒருதண்டநாயகன் சந்தலதேவியின் மதயானை எனப்பேர்பெற்றான். (70) இது அவர்களுக்குப் போரிலிருந்த விருப்பத்தை நன்கு விளக்குகிறது.

இராணிகளும் உயர்குலத்து ஸ்திரீகளும் தத்தம் கணவரோடு வேட்டைக்கும் போர்க்களத்திற்கும் செல்லுவதுண்டு. ஜயசிங்கன் சகோதரியும் ஆகவமல்லன் அத்தையுமான அக்காதேவி கிசுக்காடு எழுபதை ஆண்டு வந்தனள். கலகத்தையடக்க கொக்காஜ என்னும் கோட்டையை அவள் முற்றுகை போட்டாள். (71) கெல்ட் ஜாதியைச்சேர்ந்த போயடிசியாவைப்போலவும் ஸ்பெயின்தேசத்து ஸாரகோஸாவைப்போலவும் அவள் போர்த்திறம் நன்குவாய்ந்தவள். சண்டையில் பைரவியென்றும் குணக்கடல் என்றும் சொல்தவறாதவள் (ஏகவாக்கி) என்றும் அவள் சாசனத்தில் (72) கூறப்பட்டிருக்கிறாள். சோழநாட்டிலும் இவ்வழக்கம் உண்டு என்பது 'பிடியின்மேல்வருபிடிக் குலமநேகமெனவேபெய்வளைக்கைமடமாதர்பிடிமீதின்வரவே' என்ற கலிங்கத்துப்பரணி வாக்கியத்தால் தெரியவருகிறது. (73) அக்காலத்து ஸ்திரீகள் ஆடல் பாடல் சித்திரம்வரைதல் முதலியவைகளில் நன்றாகத் தேர்ச்சியடைந்திருந்தனர். பிராகிருதபாஷை பயின்றதோடு சிலர் சமஸ்கிருதமும் பேசவல்லராயிருந்தனர். காஸ்மீரதேசத்தரசன் கீழ் ஓர் ஸ்திரீஇராஜ்யமே யிருந்ததாகவும் கேள்வியுறுகிறோம். (74) ஆகையால் அக்காலத்துப் பெண்டிருக்குப் படிப்பும் சுவதந்திரமும் போர்த்திறமையும் குணமும்பொருந்தியிருந்தனவாகத் தோன்றுகிறது.

69. X. அவதாரம் 55.
70. Epi. Rep. 1916.
71. Bom. Gaz. IV. 435.
72. Ind. Ant. XVIII-271.
73. X-அவதாரம் 56.
74. விக். ச.

**ஜீவகாருண்யம்**

அக்காலத்தில் ஜீவகாருண்யம் விசேஷித்திருந்ததென்று சொல்லலாம். ஓடிக்களைத்த குதிரைகளுக்கும் மதிரா என்னும் ஒருவித மது கொடுக்கப்பட்டது. சண்டைக்குச் செல்லும்போது அவைகளுக்கும் கவசம் போடுவதுண்டு. (75)

**உத்சவாதிகள்**

வேனிற்காலத்தில் ஆடவரும் மகளிரும் இளையரும் முதியோருமாகப் பலரும் சேர்ந்து பாடல்பாடிக்களித்து டோலோத்சவம் என்னும் ஊஞ்சல் திருவிழாவைக் கொண்டாடினார்கள். (76) இவ்வுற்சவமானது இப்போதுகூட கஞ்சம் விசாகபட்டணம் ஜில்லாக்களில் நடந்தேறி வருகிறதென்று கேள்வியுறுகிறோம். பிரமனுக்குப் பிரீதியாக செடில் குத்தும் திருவிழா ஒன்று நடைபெற்றுவந்ததாக சாசனத்தில் (77) சொல்லப்பட்டிருக்கிறது. இத்திருவிழாவில் ஒருவன் முதுகில் செடில் என்கிற ஒருகொக்கியினால்குத்தி அவனைமாட்டிச் சுழற்றுவது வழக்கம்.

**கல்விமேம்பாடு**

சகல சாஸ்திரங்களும் அந்நாளில் பாடசாலைகளில் அப்பியசிக்கப் பட்டு வந்தன. பேகூர் அக்கிரகாரத்திலிருந்த 1300 பிராமணர்கள் சாங்கோபாங்கமாக நான்கு வேதங்களையும் நியாயவைசேஷிகமீமாம்சலோகாயத பௌத்த ஆகமங்களையும் சகல சாஸ்திரங்களையும் பதினெட்டு ஸ்மிருதிகளையும் புராணங்களையும் காவியங்களையும் அவைகளின் வியாக்கியானங்களோடு கற்றுத்தேர்ந்தவரென்று சொல்லப்பட்டிருக்கிறார்கள்.(78) ஷிகார்பூர் சாசனத்தில் (79) லகுல சமயத்தை ஸ்தாபித்த லகுளீசுவரப் பண்டிதரைப்பற்றி விசேஷித்துக் காணப்படுகிறது. வாதத்தில் எதிரிட்டவருடைய மண்டையைப் பிளப்பதில் சிங்கமென்றும், பௌத்த சாகரத்திற்குக் காலாக்கினி யென்றும் லோகாயத சாங்கிய அத்வைத மதத்தினருக்கு அத்தியந்த சத்துருவென்றும் இவன் புகழப்பட்டிருக்கிறான். மல்லிதேவன் அல்லது மல்லிகார்ஜுனனெனப்பட்ட சோமேசுவரபண்டிதர் தாரணசார்வ பௌமரென்றும்(ஞாபகசக்தியில்இணையற்றவரென்றும்) ஆதிபட்டுகவி என்றும், ஆயிரக்கணக்கான கதைகளை ஒருமுறை கேட்டமாத்திரத்திலேயே திருப்பிச்சொல்லும்படியான அவதானியென்றும் ஆசுகவியென்றும், கணிதசாஸ்திர நிபுணர் என்றும் சொல்லப்பட்டிருக்கிறார். (80) இவ்வாறே, ஆகவமல்லன் சோமேசுவரன் விக்கிரமாதித்தன் ஆகிய மூவரசர் காலத்திலும் சேனாதிபதியும் சந்திவிக்கிரகியுமாயிருந்து அவர்களுக்குப் பரம ஆப்தனுமாயிருந்த ரவிதேவனென்பவன் நியாய வியாகரண சாஸ்திரபாரங்கதனென்றும் சங்கீதத்தில் இணையற்றவனென்றும் புகழ்ந்து சொல்லப்பட்டிருக்கிறான். (81) மேலேகண்ட உதாரணங்களால் அக்காலத்தில் கல்வியதிகரித்து உன்னத நிலையிலிருந்ததென்பது நன்கு விளங்கும். தர்மசாஸ்திரங்கள் பலவிடங்களிலும் சிதறி ஒன்றுக்கொன்று ஒருவாறு முரண்பட்டுயிருந்தனவாகையால், அவற்றை ஒருங்கு சேர்த்து ஒழுங்குபடுத்த இக்காலத்திற்றான் முதலில் முயன்றார்கள். ஸ்மிருதிகளுக்கு வியாக்யானமாக பல நிபந்தனைகள் எழுதப்பட்டன. அவைகளில் முக்கியமானது விஞ்ஞானேசுவரருடைய மிதாக்ஷரமேயாம். இது மகாரிஷியாகிய யாஜ்ஞவல்கியருடைய ஸ்மிருதியின் வியாக்கியானமே. இது தொடர்ச்சியாகவே பின் நூற்றுண்டுகளில் ஹேமாத்திரி சாயண என்பவர்களும் தருமசாஸ்திரத்தை ஒழுங்குபடுத்தினர்.

(ஐந்தாம்பாகம் முற்றிற்று.)

அ. வா. வெங்கடராமய்யர், M.A., L.T.,
இராஜாங்ககலாசாலைச் சரித்திரபோதனாசிரியர்,
கும்பகோணம்.

---

75. விக். ச.
76. விக். ச.
77. Epi. car. VII. S. K. 246.
78. Epi. car. VII. S. K. 16.
79. Epi. car. VII. S. K. 126.

80. Epi. car. VII. S. K. 98, 99.
81. Epi. Ind. XII-287 எஹூர்சாசனம்.

ஸ்ரீ:

# விண்டேர்ச்செழியன்.

இவ்வரசன் இடைச்சங்கத்தை நிறுவிய பாண்டியர்களுள் முதன்மை யானவன் என்று களவியலுரை முதலிய நூல்கள் கூறுகின்றன. இவன்பெயர் வெண்டோச் செழியன் எனவும் வெண்டேர்ச்செழியன் எனவும் வழங்கப்பெற்று வருகின்றது. இங்ஙனம் வழங்கும் பெயர்களுக்குக் காரணங்கள் இருப்பனவாகத் தோன்றவில்லை. இப்பெயரின் உண்மையுருவம் விண்டேர்ச் செழியன் என்று இருப்பின் காரணமுடையதாகக் காணப்படுகின்றது. அக்காரணம்தான் விண்ணிலியங்கும் தேரையுடையவன் என்பதாம். இக்காரணத்தின் வரலாற்றை அடியார்க்கு நல்லார் விளக்கியிருக்கின்றார். அது:

"இனித் தேவவிருடியாகிய குறுமுனிபாற்கேட்ட மாணாக்கர் பன்னிருவருட் சிகண்டி யென்னும் அருந்தவமுனி இடைச்சங்கத்து அநாகுலன் என்னும் தெய்வபாண்டியன் தேரோடுவிசும்பு செல்வோன் திலோத்தமை யென்னும் தெய்வமகளைக்கண்டு தேரிற் கூடினவிடத்துச் சனித்தானைத் தேவரும் முனிவரும் சரியாநிற்கத்தோன்றினமையிற் சாரகுமாரன் என அப்பெயர்பெற்ற குமரன் இசையறிதற்குச் செய்த இசைநுணுக்கம்." என்பதாம்.

இதில் அநாகுலன் என்னும் பாண்டியன் ஒருவன் தேரோடு விசும்பு செல்வோன் என்று கூறப்படுதலால், அது, விண்ணில் தேருடன் சரிப்பவன் என்று விண்டேர்ச் செழியன் என்னும் பெயரின் காரணத்தை விளக்குகின்றது. ஆதலால் அப்பெயரின் உண்மையுருவம் விண்டேர்ச்செழியன் என்பதாம்.

தமிழ்ச்சங்கத்துமாணவன்

சு. ஸ்ரீநிவாஸன்.

உ

# அவையல்கிளவி.

அவையல்கிளவியாவது நல்லோர்சவையிற் சொல்வதற்குத் தகுதியல்லாத இழிசொல். அவை - சவை, அல் - அல்லாத, கிளவி - சொல். இடக்கர், கூகனம் என்பன இதன் பரியாயம். இதனை வடநூலார் அசப்பியம் என்பர். அசப்பியம் - சபையிற்சொல்லத்தகாதது. அ - அன்மை, சப்பியம் - சபைக்குரியது. ச்பா+யம்=சப்பியம். சபா - சவை, யம் - ஒருதத்திதவிகுதி. அவையல்கிளவிகள் கூறவேண்டுங்கால் அவ்வாய்பாடுமறைத்து வேறுவாய்பாட்டாற் கூறப்படும். தொல்காப்பியரும் "அவையல்கிளவி மறைத்தனர்கிளத்தல்" என்பர். அதனுரைகாரராகிய சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் அவையல்கிளவிகளை மறைத்து வேறு வாய்பாடுகொண்டு உதாரணங் காட்டினர். அவை "ஆன்முன்வருமீகாரபகரம்" "தண்கழிஇவருதும்" "கான்மேனீர்பெய்துவருதும்" "கருமுகமந்தி" "செம்பினேற்றை" "புலிநின்றிறந்த நீரல்லீரத்து" என்பன. நன்னூலார் "இடக்கரடக்கல்" என்பர். நச்சினார்க்கினியர் சீவகசிந்தாமணியுரையினுஞ் சிலசில காட்டுவர். "குறும்புழை," "முடிப்பது" முதலியன. வேறுஞ்சிலர் தத்தமுரைகளிற் சிலசில காட்டினர். இங்ஙனங்கூறிய பண்டைச்சான்றோர்கூற்றுக்கொண்டன்றிப் புதுவதாய் ஒன்றை அசப்பியம் என்றல் பொருந்துவதன்று.

இங்ஙனமாகவும் ஆங்கிலப்பயிற்சியுடைய நம் மாணவகர் சிலர் தம்மனம்போனவாறே அசப்பியங்கள் என்று பலசொற்களை நிச்சயிக்கின்றனர். மூலையின் பெயர்கள் அசப்பியமாம்! மாதராடவரைக்குறிக்கும் அறிகுறிப்பெயர்களும் அசப்பியமாம்! தொடையின்பெயர்களும் அசப்பியமாம்! இடையின்பெயர்களும் அசப்பியங்களாம்! நன்னூலில்வரும் புணரியல், புணர்ச்சி என்பனவும் அசப்பியமாம். அங்க

சங்கம், மைதுனம் என்பனவும் அசப்பியமாம்! நன்று! நன்று! இவைகளை அசப்பியம் என்ற அறிஞர் யாவர்? இவைகள் சங்கச்சான்றோர் நூல்களிலே வரவில்லையா? மற்றைச் சான்றோர் நூல்களில் வரவில்லையா? இந்த நூலாசிரியர்களுக்கெல்லாம் அசப்பியம் புலப்படாதா? இவரெல்லாம் அங்கீகரித்த சொற்களை அசப்பியம் என்றற்கு நம் மாணவகர் யாவர்? தமிழ்நூல்களிலே பயிற்சியுடையரா? இவைகளும் வேறே! அசப்பியமும் வேறே! என்பதை இவரறியாதது என்னையோ? அசப்பியங்கள் எனப்படுவன முன்னர்க் கூறிய பொருள்களுக்குப் பெயர்களாக இழிசனர் இட்டு வழங்கும் சில கிராமியச் சொற்களாம். அச்சொற்கள் கள்ளுண்போர், புலையர் முதலிய இழிசனர் வாயினின்றே பெரிதும் வெளிவரும். சான்றோர் நூல்களிலும் வாரா! வாய்களிலும் வாரா!

நாவலரவர்களுடைய சைவவினாவிடை முதலிய நூல்களிலும் அசப்பியச்சொற்கள் வரக்கண்டாம் என்றுரும் உளர். அவர்க்கு உண்மை அறிவித்தல் அரிது. அவரை நோக்கி மெய்தானா? அச்சொற்கள் யாவை? என்றபோது, "மைதுனம்" "குதம்" என்பன என்று கூறி வேறும் உண்டு என்று மெல்லக் கூறினர். வேறொருவர் நிகண்டிலேயுள்ள பெயர்களுள்ளும் அசப்பியம் வருகின்றது என்றார். வேறொருவர் பெண் பெயர்களுள்ளும் அசப்பியம் வருகின்றது என்றார். இவரெல்லாம் அறிஞரை வினவி அறிதல் நன்று.

சங்கச்சான்றோர் நூல்களாகிய கலித்தொகை, குறுந்தொகை முதலிய பழந்தமிழ் நூல்களைப் பரிசோதித்துப் பிரகடனஞ் செய்தோருள்ளுஞ் சிலர் அவையல்கிளவிகளல்லாத சிலவற்றை அவையல்கிளவி எனத் திரித்துணர்ந்து மனம்போனவாறே மாற்றினர். ஒருவர் இடக்கர்ச்சொல்லாகிய குஃறொடரன்மொழி இந்நூலகத்து ஒன்பதிடத்து வந்திருந்தமையின்; அவற்றை அறவொழித்துச் சொற்குறைவு தோன்றுவாறு ஏற்றவற்றைச் சேர்த்து" என்றார். பொய்யடிமையில்லாத புலவர்கள் நூலிலே அவையல்கிளவிகளும் வருமா? குஃறொடரன்மொழி என்றது எதனை? அன்மொழியில் வகையுமுண்டா?



இப்பொழுதைப் பாட புத்தகங்கள் எழுதுவோருள்ளுஞ் சிலர் இலக்கிய இலக்கணங்களுக்கு இயைபில்லாத சொற்களைப் பிரயோகிக்கின்றனர். வேறு புத்தகங்கள் எழுதுவோருள்ளுஞ் சிலர் அங்ஙனஞ் செய்கின்றனர். செய்யுள் செய்வோருள்ளுஞ் சிலர் அங்ஙனஞ் செய்கின்றனர். அவை கற்றோர் சபைக்கு உரியனவாகுமா? சில காட்டுதும்.

1. ஆபித்தம், தள்ளுபிடி, ஔவுடதம், நடவடிக்கை, பிடிவாதம், கோரிக்கை, கி, பி, இடைஞர், ஈழை. பிரதட்சணம், நிறுத்தம், பயிர்ச்சி, பிடித்தம், கி, மு.

2. பெயற்சொல், அடிப்பியன்மின், தீமை—தொழிற்பெயர், உபாத்தியாயனி, மைமல், மாகாணம்.

3. "பூதமைந்தும் பொறியுமடங்குற" "தந்தைதாய்பேண்" "குடிவகைபாவித்தல்" "இடைநிலை—மயக்கம். "ஆறுந்திகதி" "மாமேவு கமசிருட்டி மாட்சியினன்" "சிவாசகளல்வெண்பவி"

4. பிரமஸ்ரீ சுப்புக்குருக்கள். வேளாளஸ்ரீ முருகேசு அவர்கள், ஸ்ரீ சிதம்பரநாதனவர்கள், இரெங்கசாமி, காசிநாதனவர்கள் ஸ்ரீ மார்க்கண்டு, சீனிவாசகம்.

5. பிரகஸ்பதி, கிங்கிரர். கிரகப்பிரவேசம், பங்கீகரணம். சிரார்த்தம், ஈஸ்வரன், அதர்வத், பூர்வீகம், பிரகதாரணியம், விஸ்வாமித்திரர், இசமுத்திர, இந்திரனும், இந்திரையும், உபநியாசம், இலிகிதர்,

6. வாழைக்குட்டி, வாழைமரம், இந்துபாலபாடம், பரதேசம், காரைநகர், தாய்மொழியாகிய தமிழ், ஆணுவாத்தி, பெண்ணுவாத்தி, பெண்புலவர், பெண்கல்வி, ஆண்கல்வி, ஐக்கியபோதனை.

7. "வாசஞ்செய்துகொண்டிருக்கை" 'நித்திரைபண்ணிக்கொண்டிருந்தான்' "குடிதண்ணீர்"

8. திராணி, முஸ்திப்பு, தயார், திட்டவட்டம், உச்சிதம்.

இவையெல்லாம் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்ற, தக்கோர் வசிக்கும் சவைக்கு உரியனவாகுமா? இவையெல்லாங்கலந்து வருவது நற்றமிழ் எனப்படுமா?

அங்கிலமொழியும், அங்கிலநடையும் இடையிடை விரவவிட்டுப் புத்தகபத்திரங்கள் எழுதுவோர் சிலர், தமிழ்மொழியிற் பிறமொழி விரவிவருதல் இக்காலத்திற்கேற்ற வழக்காறு என்றும், தமிழ்மொழியில் வேண்டுஞ் சொற்கள் இல்லை என்றுங் கூறுவர். இவ்வழக்குக் கொள்ளத்தக்கதா? பிறமொழி விரவாது தமிழ்வாக்கியம் எழுதுதல் கூடாதா? பண்டைநூலுரைகாரர் தனித்தமிழாக நூலுரைகள் செய்யவில்லையா? அவர்கள் நூலுரைகள் செய்யுமுன் நிகண்டு நூல்களையும் பற்பல இலக்கிய இலக்கண நூல்களையும் படித்திருக்கவில்லையா? அவர்கட்கும் சொன்முட்டுண்டா? பிறமொழிகளுள்ளே நன்கு பயின்று தமிழ் எனத்தக்க சிலமொழிகள் சீவகசிந்தாமணி முதலிய நூல்களிலே வருவதுண்டு. அவையெல்லாம் பெரியோர் வழக்குடையன. பெரியோர்வழக்காய் வருவதும் பிறநாட்டுப் பொருள்பற்றி வருவதும் விலக்கல்ல. இப்போது இங்குள்ளார் சிலர் உண்டவர் என்பதை உண்ணப்பட்டவர் எனவும், வித்தியாசாலை தாபிக்கப்பட்டது என்பதை வித்தியாசாலை திறக்கப்பட்டது எனவும், கட்டப்பட்டது என்பதைக் கட்டப்பெற்றது எனவும், எல்லீரும் வாருங்கள் என்பதை எல்லாரும் வாருங்கள் எனவும் வழங்குவர். இவை பழையன வாகுமா? நிகண்டு நூல்களையும், இலக்கிய இலக்கணங்களையும், பிறவற்றையும் நன்கு கற்றோர்களுடைய நூலுரைகளை அடிக்கடி படித்துப் பழகுதல் நல்லதேயாம்.

இங்ஙனம்,

அ. குமாரசுவாமிப்பிள்ளை.

உ

சிவமயம்.

# பெரியபுராணவாராய்ச்சி.

"பாலாறு வளஞ்சுரந்து நல்கமல்கும் பாளைவிரி மணங்கமழ்பூஞ் சோலைதோறுங், காலாறு கோலியிசை பாடநீடு களிமயில்நின் றாடுமியற் றொண்டை நாட்டைத்" தமது சனனநாடாகக்கொண்ட சேக்கிழார் சுவாமிகள் அருளிச்செய்த திருத்தொண்டர்புராணம் என்னும் பெரியபுராணம் ஈண்டு ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. கலகமிடுமமண்முரட்டுக்கையர்பொய்யேகட்டிநடத்திய சிந்தாமணியைக் கேட்டு" மெய்யென நம்பி மதிமயங்கிய வளவனது போதத்தை நீக்க எழுந்தது இப்புராணமென்பது பலருமறிவர். நமது தொண்டர் சீர் பரவ நாம் மகிழ்ந்து "உலக" மென்று நம் வாக்கினால் அடியெடுத்துரைத்திட நூல்செய்த சேவைகாவலரது நூலுக்கா குற்றம்பாரிக்கப் புகுந்தது. அன்றன்று, கல்வியிற் பெரியராய கம்பர் தன்காலத்தேயே இதுவும் யான்பாடிய இராமாயணம்போற்றானிருக்கிறதுஎன்றாரென்று கன்னபரம்பரைச்செய்தி நடந்துவருமாயின் சற்றேறக்குறைய சமகாலத்தியரது நூலைப்பற்றியுஞ் சொல்வானேன். இப்பொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளவேண்டியதற்குக் காரணம் யாது எனின், இதுவரை பெரியபுராணத்தை நால்வர் அச்சிட்டிருக்கின்றனர். அப்பதிப்புக்கள் வருமாறு:—

1. திருமயிலை சுப்பராய ஞானியார் - பிரமோதூத ௵
2. சிதம்பரம் இராமலிங்கபிள்ளை - பிரமாதி ௵
3. சென்னை பக்தஜனசபையார் - விஜய - ஜய ௵
4. யாழ்ப்பாணம் சதாசிவபிள்ளை - ஹேவிளம்பி ௵

4-வது கூறியதுதான் நாவலர்பதிப்பென்பது. இது இப்போது ஐந்தாவது முறையும் பதிப்பிக்கப்பட்டிருக்கிறது. ஆயினும், இவைகளுள் பாடற்றொகை ஒன்றினைக்காட்டிலும் ஒன்று விருத்தியடைந்திருக்கிறதேயன்றி குறைவுபட்டதாகத் தெரியவில்லை. சேக்கிழார் சுவாமிகள் புராணமியற்றிய நமது உமாபதிசிவமோ,

"தாண்டமிரண்டாவகுத்துக்கதைப்பரப்பைத்தொகுத்துத்
கருதரியசருக்கங்கள் பதின்மூன்று நிலையிட்
டண்டுரைத்த புராணத்திற் றிருவிருத்த நாலா
யிரத்திருநூற் றைம்பத்து மூன்றாக வமைத்துச்

சேண்டகைய திருத்தொண்டர் புராணமெனப் புராணத்
  திருமுறைக்குத் திருநாமஞ் சீர்மைபெற வமைத்திட்
டாண்டவகைமை பெறவெழுதி மைக்காப்புச் சாத்தி
  யழகுபெறக் கவளிகையு மமைத்ததில்வைத்ததன்பின்" (43)

என்றதனால் இப் பெரியபுராணம் 4253 திருவிருத்தங்களையுடைத் திருக்கவேண்டியதென்றாயிற்று. இப்பொழுது அச்சிடப்பட்ட நான்கு பிரதிகளிலுமோ,

| | |
|---|---|
| ஞானியார் பிரதியின் கடைசிப்பாடற்றொகை | 4299 |
| இராமலிங்கபிள்ளை | 4306 |
| பக்தஜனசபை, நாவலர் பதிப்புக்கள் | 4286 |

இவ்வாறு அதிகமாகப் பாக்களை அச்சிட்டிருப்பினும் முற்கூறிய சேக்கிழார் சுவாமிகளது புராணத்தையும் அச்சிடாது விடவுமில்லை. ஆகையால், இதனுண்மை யாராயவேண்டியது அவசியமென யாவரும் ஒப்புவார்களென்பது திண்ணமாகலின் அங்ஙனம் செய்ய முற்பட்டதற்கு மன்னிக்க வேண்டுகிறேன்.

இந் நான்குபதிப்புகளுக்குள் 3 வித வித்தியாசங்களிருப்பதாகத் தெரிவதால் முன்னர் அவற்றை யாராய்வாம். திருமயிலை சுப்பராய ஞானியார் பதிப்பில் திருநகரச்சிறப்பு இறுதியில் பாடற்றொகை 135 இருக்கவேண்டியதற்குப் பதிலாக 145 என்றிருக்கிறது. இவ்விதமே பாட்டுத்தொகைகள் புராண முழுதும் பிசகிக் காணப்படுகிறதேயொழிய தொகை 4281 பாடல்கள்தானிருக்கின்றன. நாவலர் பதிப்பித்துள்ள 4286-க்கு இதனில் 5 பாடல்கள் குறைவதற்குக்காரணம் கண்ணப்ப நாயனார் புராணத்தில் 157-வது திருவிருத்தமுதல் 5 திருவிருத்தங்களை நீக்கி யச்சிட்டிருப்பதேயாம். சிதம்பரம் இராமலிங்கபிள்ளை பதிப்பிலும் இதேமாதிரி பிழைகள் காணப்படுகின்றனவாயினும் கண்ணப்பநாயனார் புராணத்தில் வன்னிபாடலென சுப்பராயஞானியார் ஒதுக்கிய 5 பாடல்களும் சேர்த்து அச்சிடப்பட்டிருக்கின்றன. ஆக 4 பதிப்புக்களில் சுப்பராயஞானியார் பதிப்பு ஒன்று நீங்கலாக, மற்றைய பதிப்புக்களான சிதம்பரம் ராமலிங்கம்பிள்ளை, யாழ்ப்பாணம் சதாசிவபிள்ளை, சென்னை சூளை பக்தஜனசபையார் இவர்கள் பதிப்புக்களிலெல்லாம் ஒரேவிதமாகத்தானிருக்கின்றனவென்பதும், ஞானியார் பதிப்பும் ஒத்தேவருகின்றதென்பதும் விளங்கும். ஆகையால் இதனை விட்டு பெற்றான்சாம்பானுக்குப் பேதமறத்தீக்கைசெய்யக் கட்டளை பெற்ற உமாபதிசிவம் கூறியபடி 4253 பாடல்களைப்பற்றியாராய்வாம்,



கோற்றவன்குடிப்பெரியார் கூறியதைப் பின்னோராவது முன்னோராவது எடுத்தாண்டிருக்கின்றனராவென்று ஆராய்வோமாயின், இக்காலத்துப் புலவர்பெருந்தகையாய், இதுவரை யாவராலும் பாடப்பட்டதாக அறியப்படாத எண்ணிக்கையுடைய பாடல்களையியற்றிய மகாவித்வான் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் தாம்பாடிய சேக்கிழார் சுவாமிகள் பிள்ளைத்தமிழிலே,

கார்கொண்டசோலைசூழாரூரோறனறக்காநம்பியாரூர்முக்
  காலரைக்காலாகமுடிவுசெய்தருண்மாக்கவித்திசையின்வீற்றிருக்கு
மேர்கொண்டதில்லைமூவாயிரர்முன்வழுவருமெழுவருந் தழுவருமெம
  திதையந்தழால்கொண்டுறைந்திடச்செய்தவரையெப்போதுமேத்தெடுப்பாம்
பார்கொண்டதொண்டர்வரலாறுசொல்புராணமம்பலவரருளாலமைந்த
  படிதெரித்திடவுலகெலாமெனுஞ்சுருதிநாப்பண்ணுமீற்றும்வொருத்திப்
பேர்கொண்டசைவபரிபாடையறிவரியசம்பிரதாயமுதலியாவும்
  பிறங்கத்தெரித்தெம்மையாண்டகுன்றத்தூர்ப்பிரானைப்புரக்கவென்றே

என்று நூன்முதலிலேயே கூறியுள்ளார்கள். இவ்வாறு பெரிய புராணத்தே உலகெலாம் என்பது ஆதியில் இருப்பதுபோல இடையிலும் இருக்கின்றதா என்று கவனித்து வருவோமாயின் திருஞானசம்பந்த சுவாமிகள் புராணத்தே,

சோதிமுத்தின்சிவிகைசூழ்வந்துபார்
மீதுதாழ்ந்துவெண்ணீற்றொளிபோற்றிநின்
றாதியாரருளாதலிலஞ்செழுத்
தோதியேறினருய்யவுலகெலாம் (௨௬)

என்று காணப்படுகிறது. இறுதியில்,

என்றுமின்பம்பெருகுமியல்பினா
லொன்றுகாதலினுள்ளமுமோங்கிட
மன்றுளாரடியாரவர்வான்புகழ்
நின்றதெங்குநிலவியுலகெலாம்

என்று காணப்படுகிறது. இவை மூன்றும் கலிவிருத்தமே.

இனி திருஞானசம்பந்தசுவாமிகளது புராணத்திலுள்ள 216 பாடலை நடுப்பாடலாகக் கொண்டால் இதற்குமுன் 2126-ம் இப்பாடலுக்குப்பின் 2126-ம் இருக்கவேண்டும். அவ்வாறு ஆராய்ந்து பார்ப்போம்.

| புராணத்தின் பெயர். | சுப்பராய ஞானியார். | ராமலிங்கம் பிள்ளை. | சென்னைபக்த ஜனசபையும் நாவலர்பதிப்பும். |
|---|---|---|---|
| கடவுள்வாழ்த்து (பாயிரம்) | 10 | 10 | 10 |
| திருமலைச்சிறப்பு | 40 | 40 | 40 |

| புராணத்தின் பெயர்கள். | சுப்பராய முதலியார். | ராமலிங்கம் பிள்ளை | சென்னை பக்த ஜனசபையும் நாவலர்பதிப்பும் | |
|---|---|---|---|---|
| திருநாட்டுச்சிறப்பு | 35 | 35 | 35 | |
| திருநகரச்சிறப்பு | 50 | 50 | 50 | |
| திருக்கூட்டச்சிறப்பு | 11 | 11 | 11 | |
| தடுத்தாட்கொண்டபுரா | 203 | 203 | 203 | |
| தில்லைவாழந்தணர்புராணம் | 10 | 10 | 10 | |
| திருநீலகண்டநாயனர் | 44 | 44 | 44 | |
| இயற்பகைநாயனர் | 36 | 36 | 36 | |
| இளையான்குடிமாறநாயனர் | 27 | 27 | 27 | |
| மெய்ப்பொருணயனர் | 24 | 24 | 24 | |
| விறன்மிண்டநாயனர் | 11 | 11 | 11 | |
| அமர்நீதிநாயனர் | 49 | 49 | 49 | |
| எறிபத்தநாயனர் | 57 | 57 | 57 | |
| ஏனாதிநாயனர் | 42 | 42 | 42 | |
| கண்ணப்பநாயனர் | 181* | 186 | 186 | |
| *குங்கலியக்கலயநாயனர் | 35 | 35 | 35 | *151 முதல் |
| மானக்கஞ்சாரர் | 37 | 37 | 37 | 161 இல்லை |
| அரிவாட்டாயர் | 23 | 23 | 23 | |
| ஆனயர் | 42 | 42 | 42 | |
| மூர்த்தியார் | 49 | 49 | 49 | |
| முருகர் | 14 | 14 | 14 | |
| உருத்திரபசுபதி | 10 | 10 | 10 | |
| திருநாளைப்போவார் | 37 | 37 | 37 | |
| திருக்குறிப்புத்தொண்டர் | 128 | 128 | 128 | |
| சண்டேசநாயனர் | 60 | 60 | 60 | |
| திருநாவுக்கரசுநாயனர் | 429 | 429 | 429 | |
| குலச்சிறைநாயனர் | 11 | 11 | 11 | |
| பெருமிழலைக்குறும்பநாய | 11 | 11 | 11 | |
| காரைக்காலம்மையார் | 66 | 67* | 66 | *2-வது பாட்டு |
| அப்பூதியடிகள் | 45 | 45 | 45 | அதிகம். |
| திருநீலநக்க | 38 | 38 | 38 | |
| நமிநந்தியடிகள் | 33 | 33 | 33 | |
| திருஞானசம்பந்தசுவாமி | 215 | 215 | 215 | |
| ஆக. | 2113 | 2119 | 2118 | |

இவைகளுள் கண்ணப்பநாயனர் புராணத்திலுள்ள 5 பாடல்களை யும், காரைக்காலம்மையார் புராணத்தின் அதிகம்பாடலொன்றையும்



நீக்குவோமாயின் எல்லாப் பதிப்புக்களிலும் 2113 செய்யுட்களே முற் பகுதியில் காணப்படும். இவற்றிலும் ஒவ்வொரு சருக்கத்திலும் ஈற் றில் காப்புப்பாடல் ஒன்று காணப்படுகிறது. அமர்நீதிநாயனர்புராணம் ஈற்றிலே,

மலர்மிசை யயனு மாலுங் காணுதற் கரியவள்ளல்
பலர்புகழ் வெண்ணெய் நல்லூ ராவணப் பழமை காட்டி
உலகுய்ய வாண்டு கொள்ளப் பெற்றவர் பாத முன்னித்
தலைமிசை வைத்து வாழுந் தலைமைநந் தலைமை யாகும்.

தீதுகொள் வினைக்கு வாரோஞ் செஞ்சடைக் கூத்தர் தம்மைக்
காதுகொள் குழைகள் வீசுங் கதிர்நில விருள்கால் சிப்ப
மாதுகொள் புலவி நீக்க மனையிடை யிருகாற் செல்லத்
தூதுகொள்பவராநம்மைத்தொழும்புகொண்டுரிமைகொள்வார்.

நேச நிறைந்த வுள்ளத்தா னீலநிறைந்த மணி கண்டத்
தீச னடியார் பெருமையினை யெல்லா வுயிருந் தொழ வெடுத்துத்
தேசமுய்யத்திருத்தொண்டத்தொகைமுன்பணித்ததிருவாளன்
வாச மலர்மென் கழல்வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்.

நாட்டாரறிய முன்னாளி னன்னாளிறந்த வைம்படையின்
பூட்டார்மார்பிற்சிறியமறைப்புதல்வன்றன்னைப்புக்கொளியூர்த்
தாட்டாமரைநீர் மடுவின்கட் டனிமாமுதலை வாய்நின்று
மீட்டார் கழலே நினைவாரை மீளாவழியின் மீட்பனவே.

என்று தில்லைவாழந்தணர் சருக்கம், இலைமலிந்த சருக்கம், மும்மையா லுலகாண்டசருக்கம், திருநின்ற சருக்கங்களின் இறுதியிலே காணப் படும் நான்கு செய்யுட்களும் ஏடுகளிலே எண்ணிக்கையிடப்படவில்லை. அச்சுப்பிரதிகளிலே மாத்திரம் கணக்கிடப்பட்டிருக்கிறது; ஆயினும் இவை தோத்திரப்பாடல்களாதலையான் ஏடுகளில் காணப்படுவது போலக் கணக்கிடுதற்குரியனவாகா. அன்றியும, ஒவ்வொரு புராண இறுதியிலும் அடுத்தது இன்னபுராணமென்று கூற, இத்தோத்திரப் பாடல்கூறும்போது அங்ஙனம் அடுத்தபுராணமிதுவென்று கூறுதலை யும் கவனிக்க. இவைகளையும் நீக்குவோமாயின் (2113—4=2109) செய்யுட்களே காணப்படுகின்றன.

பழைய கையெழுத்துப்பிரதிகளிலும் இவ்வாறு இருக்கின் றனவோ என்று ஆராய்வானபுக்கு ஒருபத்துப்பிரதிகள் பார்த்து ஒப் பிட்டபோது எங்களதுபரம்பரை ஏட்டில்மாத்திரம் தடுத்தாட்கொண்ட

புராணத்திலே 220 செய்யுட்கள்இருக்கக்கண்டோம். இதனாலுண்டாய வித்தியாசம் 17 செய்யுட்களையும் 2109 செய்யுட்களோடு கூட்டுவோமாயின் நமக்குக் கிடைக்கவேண்டிய 2126 பாடல்கள் கிடைக்கின்றன. அப்பாடல்களையும் ஏட்டிற்கண்டபடியே ஈண்டுக் கூறுவேன்.

வன்றொண்டர் காதல் கண்டு மழவிடை யுடையார் தாமு
முன்றொண்ட ராக வாண்ட முதனம்பி யாரூரற்குச்
சென்றங்குப் போற்றுமிக்க திருத்தொண்டர் தம்பாற் சேர
வொன்றும்பண்பருளவேண்டியொருதொண்டர்வெருளச்செய்தார்.

பெருந்தவத் தொண்டரான பெருவிறன் மிண்ட ரென்பா
ரிருந்தவக் குழாத்தினின்று மெதிர்செயிர்த் தெழுந்து நின்ற
வருந்தவப் பெரியோர் தம்மைப் பணிந்தணை யாதுபோன
வருந்தவ னுடையவேட மற்றிவ னார்கொலென்று. (192)

வேறு

பக்க மேவரு வார்கள் பலருடன்
புக்க போது பொருவிறன் மிண்டர்தா
மிக் கெழுந்த வெகுளியா னம்பியாற்
றக்க வல்லன சாலவுஞ் சொல்லினார். (193)

சொன்ன தொண்டரை நோக்கிமெய்த் தொண்டரான்
மன்னி நீடு வளர்பெருங் கூட்டத்து
முன்னிருந்தா ரொருவர் மொழி கின்றா
ரின்னல் சொல்ல லியல்பல்ல வாமென. (194)

நீல காட்டி யுடையவர் முனின்று
ஞால மேற்க வாட்கொண்ட நம்பியைச்
சீல முன்பறி யாதிவை செப்பினீர்
கோலமே கண்டுகூற லாமோ வென்றார். (195)

என்று கூறலு மிகழ்ந்து விறன்மிண்டர்
நன்று சாலவு மிப்பெரு மக்கள்வந்
தொன்று கூட்ட முணரா வொருவனை
யன்று தம்பிரா னுள்வழக்...............ல்...... (196)

கருந்தடங் கண்ணி பாகர்தங் காதலு
மிருந்த வத்தடி யாரை யணைவின்றிப்
புரிந்த பண்பினிற் றூர்த்தன் புறகெனு
விருந்த தொண்ட ரிருக்கை சாத்துமே. (197)



வெம்பி நீர்மொழி யேல்விறன் மிண்டரே
நம்பி யாரூரர் காணுமன் னாயனா
ரம்பொன் மாளிகை யாரூ ரமர்ந்தரு
டம்பிரான் றோழ னாரா வதாமென. (198)

தோழ ராகினுந் தொண்டரே யாகினு
மாழி மாலயன் காணா வருட்கழல்
சூழு மெய்யடி யாரைத் துடர்வின்றி
வாழு மூரன் பிரானுதல் வைத்திலம். (199)

இன்ன வாறடி யார்புற கென்றபி
னன்ன வாறறிந் தஞ்சியா ரூரர்தா
மின்னு வார்சடை வேதியன் றாடொழப்
பொன்ன வாமணிப் பூங்கோயில் சார்தவம். (200)

பொங்கு மாமறைப் புற்றிடங் கொண்டவ
ரங்குக் காட்சி கொடுத்தரு ளாமையி
னிங்குப் பெற்றெனக் கிவ்வண மோவென்பா
ரெங்குந் தேடி யழிவுற் றியம்புவார். (201)

என்னை யாட்கொண்ட வீசனு மாயெனக்
கன்னை யாயமு தாயறி வாயினாய்
பொன்னை யார்ந்த புரிசடைப் புண்ணியா
வுன்னையா னிங்குக் காணே னொளித்தியோ. (202)

வெள்ள நீர்பரந் தோங்கும் விரிசடை
வள்ள லேமலை யாண்மண வாளனே
தெள்ளு மாமறை யின்றெளி வாகியெ
னுள்ள மேபுகுந் தாயிங் கொளித்தியோ. (203)

ஈசனே யெனக்கே யன்பினில் வைப்பெனப்
பேச லாகும் பெரும்பொரு ளாயினாய்
தேசனே=சிவனே=சிவ லோகனே
யோசை யேயனை யாயுண ரேனென்று. (204)

தோழ ராகிநற் சுற்றமு மாயடி
நீழ றந்தளிப் பாரரி திரங்கவு
மாழி போன்ற வடியார் முனியவு
வாழ வன்றொண்டர் சால வருந்தினார். (205)

வேண்டி யாட்கொண்ட வீறு.........
தான்...,ரையாண நாய் காவாயென்றருள் செய்து
காண்டரும்படி காட்சி கொடுத்ததும்
பூண்டு கொண்டவன் பொன்னடி போற்றுவார். (206)

இதற்குமேல் "மன்பெருந்திருமாமறைவண்டு" என்ற பாடல்கள் காணப்படுகின்றன.

தூரத்தேதிருக்கூட்டம்பலமுறையாற்றொழுதன்பு
சேரத்தாழ்ந்தெழுந்தருகுசென்றெய்திநின்றழியா
வாரத்தாரெல்லார்க்குந்தனித்தனிவேறடியேனென்
றூர்வத்தாற்றிருத்தொண்டத்தொகைப்பதிகமருள்செய்வாய்.

என்றபாடலுக்குப்பின்,

அப்பெரியார்சிவனருளாலளவிறந்தகருணையா
லொப்பரியவாரூரன்பிரானுதலுளதாமென்
றிப்பரிசுக்கினிதிருக்கைகசாத்துமெனவெழுந்தவா
மெய்புவனங்களுமுவப்பவெழுந்தவொலி.........

என்ற செய்புள் காணப்படுகிறது. ஆக இப்பதினேழு செய்யுட்களும் இங்கு அதிகமாகப் பெறுவதால் இவை சேர்ந்த முதற்பகுதியாகு மென்பதற்கு இன்னுமொரு ஆதாரமும் கிடைக்கின்றது:—திருவாரூ ரில் நம்பியாரூர் பரவைநாச்சியாரதில்லமிருந்து சிவவேடங்களின்றித் தூர்த்தவேடத்தோடு சென்றதாயும் அதனை விறன்மிண்டர் தடுக்க அவர் தம்பிரான்றோழனாராகையான் விறன்மிண்டர் கோபித்துச் சென்றனரென்றும் கன்னபரம்பரைச் செய்தி இன்றுமுலாவுகிறது. இத்தகுற்றவாதாரத்தைக் கூறுவரர் அரிதாயிற்று. மேற்காட்டிய பாக்கள் இக்கூற்றை நன்கு வலியுறுத்துகிறது.

இதுவன்றி விறன்மிண்ட நாயனார் புராணத்தே திருத்தொண்டத் தொகைபாடக் காரணமாயிருந்தாரென்று குறிப்பிட்டுச் செல்லும் குன்றத்தூராளி முன் தாம் கூறியதை மனதிலெண்ணியே போலும்.

இதுகாறும் கூறியவற்றைப் பெரியோர்கள் அங்கீகரிப்பார்களா யின் பிற்பகுதியை ஒருவாறு ஆராயமுற்படுவேன்.

இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

---

## புறப்பாட்டுத்தலைவரும்
# மத்தியகாலவரசரும்.

சென்ற 16-வது தொகுதி மாசிமாதப்பகுதியில் புறநானூறுவைப்பு முறை இவ்விதமென ஒருவாறு கூறினும். இப்பொழுது பாண்டியரை மாத்திரம் எடுத்துக்கொண்டு அவர்களில் பெயரொற்றுமையுடையார் யாவரேனும் உண்டாவெனச் சோதிப்பாம்.

### 1. செழியன்.

(a) பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன் புறம் 17, 23, 24, 25, 26, 72 76, 79, 371,

(b) பாண்டியன் நெடுஞ்செழியன் புறம் 18, 19,

(c) பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியன்-புறம் 183,

(d) நம்பிநெடுஞ்செழியன்-புறம்-239,

### 2. மாறன்.

(a) பாண்டியன் இலவந்திகைப்பள்ளித்துஞ்சிய நன்மாறன்-புறம் 55, 57, 196, 198,

(b) பாண்டியன் சித்திரமாடத்துத்துஞ்சிய நன்மாறன்-புறம் 59,

### 3. வழுதி.

(a) பாண்டியன் பல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதி - புறம் 6, 9, 12, 15, 64,

(b) பாண்டியன் கருங்கையொள்வாட் பெரும்பெயர் வழுதி— புறம்-3,

(c) பாண்டியன் கூடகாரத்துத்துஞ்சிய மாறன் வழுதி-புறம் 51

(d) கடலுள்மாய்ந்த இளம்பெருவழுதி—புறம் 182.

இவ்விதமாகச் செழியன் என்ற பெயரை ஈற்றிலேயுடையார் நால்வரும், மாறன் என்ற பெயரை ஈற்றிலே யுடையார் இருவரும், வழுதி யென்றபெயரை ஈற்றிலேயுடையார் நால்வரும் காணப்படுகின்றனர். இவர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியேயாண்ட மன்னரா, அன்றிப்பல பெயருடைய ஒரு அரசனா என்று ஆராய்வது அத்தியாவசியமாகிறது, கடையிலுள்ள வழுதியை யெடுத்துக்கொள்வோமாயின், கருங்கையோள் வாட்பெரும்பெயர்வழுதியைப் பாடிய பாட்டும் ஒன்றுதான்; அவரைப் பாடிய இரும்பிடர்த்தலையாரும் வேறொருவரையும் பாடினாரிலர். ஆசலான் பாடினவரும்பாடப்பட்டவரும்கடைச்சங்கத்தவர்களல்லர் என்று உறுதியாகவே கொள்வதிற் றடையென்னை?

இனி இவரையடுத்த பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியைப் பாடியவர்கள் (1) காரிகிழார் (2) நெட்டிமையார் (3) நெடும் பல்லியத்தனார். காரிகிழாரோ கானட்டனாரோ வென்று சந்தேகப்படும்படியாக விருக்கின்றது. இந்நெட்டிமையாரும் இந்நெடும்பல்லியத்தனாரும் கடைச்சங்கத்துக்கும் அதற்கும் பிற்பட்ட கவிஞர்களாயிருப்பின் மற்றும் பலரைப் பிறர்போலப்பாடியிருப்பார்க ளென்பதில் ஐயமேயில்லை. இவர்கள் பாடல்கள் வேறு காணக்கிடைக்காததே இவர்களது தொன்மையை விளக்கும். பாண்டியன் முதுகுடுமிப்பெருவழுதி தென்னாடுகள்பல கடலினால் வெளவப்படுமுன்னர் ஆண்டவன் என்று பலதக்க காரணங்களால் ஸ்ரீமத் சோமசுந்தர பாரதிகளால் நாட்டப்பட்டிருக்கின்றது. †

இனி, பாண்டியன் ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனும், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியனும் முன்னவன் பாட்டனும் பின்னவன் பெயரனுமாவான் என்று நானறிந்தவரை காலஞ்சென்ற கனகசபைப்பிள்ளையவர்களும், சென்னைச் சர்வகலாசாலைச் சரித்திர ஆசிரியர் ஸ்ரீமான் ராவ்பகதூர் S. கிருஷ்ணசாமி ஐயங்காரவர்களும் செவ்வனே ஆராய்ந்து வெளியிட்டிருக்கின்றார்கள். அவர்கள் கூறுமாறு:—

†"Contemporary with Karikal chola the great was the Pandian King Ariappadai Kadantha Nedunchelian or the

---

Vide Siddhanta Dipika July 1913 & செந்தமிழ்த் தொகுதி. பகுதி.

Vide The Tamil 1800 years ago or Madras Received Vol. II, page 421—



Nedunchelian who had defeated an Aryan army.......... On hearing the sudden death of Nedunchelian, the Pandiyan Prince Verri-Ver-Cheliyan who was then Viceroy of Kortnai hastened to Madura and ascended the throne. He appears to have died after a sbort reign and was succeeded hy his son Neduy-chelian II who was then a boy of tender age."

"கரிகாற் பெருவளத்தானோடு சமகாலத்தவனாகப் பாண்டியநாடாண்டவன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியனாவான்.......... இவன் திடீரென இறந்துபட்டதையறிந்த கொள்கையில் இராஜப்பிரதிநிதியாகவிருந்த இளங்கோவான வெற்றிவேற்செழியன் சிம்மாசனமேறினான். இவனாண்டகாலம் மிகச்சொற்பமே. இவனுக்குப்பிறகு தலையாலங்கானத்திற்செருவென்றநெடுஞ்செழியன் பாண்டியவரசனானான்".

"பாண்டியர்களைப்பற்றியோ, சிலப்பதிகாரத்தில் இரண்டு செழியர்களைப்பற்றிப் பேசப்படுகிறது. ஒருவன் ஆரியப்படைகடந்த நெடுஞ்செழியன்; மற்றவன் நெடுஞ்செழியன் இறந்த காலத்துக் கொற்கையில் பிரதிநிதியாகவிருந்த இளஞ்செழியன்.................................... இப்பாண்டியனுக்குப்பின் பட்ட மெய்தியவன் தன்பிதா மரித்தகாலத்துக் கொற்கையிலிருந்த இளஞ்செழியனான வெற்றிவேற் செழியனே. இவன்பொற்கொல்லர் நூற்றுவரைக்கண்ணகியின்பொருட்டுப்பலியூட்டினானென்பதைத் தவிர்த்து வேறொன்றும் அறிவதற்கில்லை. இவனுடைய அரசாட்சி சிறிதுகாலமே யாதொரு விசேஷமும் இன்றி நடந்திருக்கலாம். மற்றைய இருபெரு வேந்தர்களையும் ஏழு குறுநிலமன்னர்களையும் தலையாலங்கானத்தில் வென்ற நெடுஞ் செழியனே இளஞ்செழியனுக்குப் பின் அரசுகட்டிலேறியவன்" †

(b)-ல் குறிக்கப்பட்ட புறப்பாட்டு 18, 19-பெற்றவனும் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனே என்பது புறம் 19-வது பாட்டால் விளங்கும்.

இனி நம்பிநெடுஞ்செழியனைப்பற்றிய வரலாறு புறப்பாட்டைக் கொண்டு அறிதற்கிடமில்லை. ஆயினும் அவன்பேரரையனென்றுமாத்திரம் ஊகித்தற் கிடமுண்டு. இவ்வாறு செழியன் என்று பெயர்கொண்ட

---

† Ancient India (புராதன இந்தியா) P. 855-7.

வர்களைக்கண்டுபிடித்து இன்னவர்தான் மூத்தார் இவர் இளையவர் என்று கூறுவது கஷ்டமாகஇருக்கும்பொழுது மத்தியகாலத்தர சாண்ட ஒரு பாண்டியன் தனது வமிசாவளியில் மிக்க கியாதிவாய்ந்த ஒன்று இரண்டு பாண்டியர்களைக் கூறியதுகொண்டு இவர்களெல்லாம் அவனது பாட்டன் பூட்டன் என்று சொல்வது எவ்வளவு பேதைமை யாகும்.

இது இங்ஙனமாக சிலாசாசனவிலாகா உத்தியோகஸ்தரான மிஸ்டர் K. V. சுப்பிரமணிய ஐயரவர்கள் B. A. M. R. A. S. தமிழ்ச் சங்கக்கலையாராய்ச்சி என்றொருமகுடமிட்டு 4,5, பாகங்களாக 'இந்து'ப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டுள்ளார்கள். அவர்கள் சொல்வதாவது†

"ஏற்கனவே கூறப்பட்ட நச்சினார்க்கினியரது உரையோடுகூடிய சங்ககாவியத்திலே, நெடுஞ்செழியன், பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதியும், மற்றொருவனுமான இருபாண்டியர்களது வமிசத்தோனாவான். சுமார் 8-ம் நூற்றாண்டென்று கருதப்படும் பராந்தக நெடுஞ்செழியனது செப்பேட்டுச் சாசனமொன்றில் இவர்களது எட்டுத்தலைமுறை வமிசாவளி கூறப்படுகின்றது. இப்பாண்டியனுடைய 769-70 வருஷத்துக்கல்வெட்டொன்றிருக்கிறது. இப்பொழுதுசொல்லப்படுகிற சாசனம் இவனதுதானென்பது அச்சாசனத்தில் அரசனைப் பராந்தக சடையனென்றும், மந்திரி மதுரகவியுமென்பதால் அப்படி உத்தேசிக்கப்படுகிறது (It is assumed), ஆகையினாலே பல்யாகசாலை முதுகுடுமிமுதல் ஆரம்பமாகும் இந்தவமிசாவளியில் நெடுஞ்செழியனைத் தேடவேண்டியிருக்கிறது. இங்கேயும், யான் 1911ல் 'இந்தியன் ஆண்டிகுவேரி' (Indian Antiquary) ஆகஸ்டு சஞ்சிகையில் குறிப்பிட்ட பல்யாகசாலைமுதுகுடுமிப் பெருவழுதியின் பின்னோன் செழியனேயாவான். இவனைத்தவிர வேறு ஒருவருமில்லையென்பதற்கு (1) வேறு ஒருவரும் செழியன் என்ற பெயரை வகிக்கவில்லை என்பதையும் (2) மற்றொரு செப்பேடு நெடுஞ்செழியன்முதற் கூறுகிறதாயினும், அவன் தலையாலங்கானத்தில் வென்ற செய்தியைக் குறிப்பிடுகிறதென்பதையும் குறித்துள்ளேன். ஆகையால் இந்த நெடுஞ்செழியனைப் பட்டயத்தில் கூறப்பட்ட காலாவதியிலிருந்து மேலேற்றவாவது கீழே இறக்கவாவது முடியாமற்போகிறது.

(தொடரும்.)

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்—சோமசுந்தரதேசிகன்.

† The age of Tamil Sangam III.

# இளையான்குடி.

அம்பொன் நீடிய அம்ப லத்தினி
  லாடு வாரடி சூடுவார்
தம்பி ரானடி மைத்தி றத்துயர்
  சால்பின் மேன்மை தரித்துளார்
வம்பு வாய்மையி னீடு சூத்திர
  நற்கு லஞ்செய் தவத்தினால்
இம்பர் ஞாலம் விளக்கி னாரிளை
  யான்கு டிப்பதி மாறனார்.

என்று திருத்தொண்டர் புராணம் என்னும் பெரிய புராணம் கூறுகின்றது. இவ்விளையான்குடிப் பதியோ இன்னவிடத்ததென்று 'பாலாறுவளஞ்சுரந்துநல்கமல்கும்பாலை விரிமணங்கமழ்பூஞ்சோலைதோறுங், காலாறுகோலியிசைபாடநீடுகளிமயில்நின்றாடும்இயற்றொண்டைநாட்டு, நாலாறுகோட்டத்துப்புலியூர்க்கோட்டமென்றிபுனைகுன்றவளநாட்டு மிக்க, சேல் ஆறுகின்ற வயற்குன்றத்தூர்ச்' சேக்கிழார் கூறாது போயினர்.

ஆங்கிலக் கலாசாலைப் பிரவேச பரீட்சைக்கு இந்நாயனார் புராணம் கட்டாய பாடமாக வைக்கப்பட்டு அதற்குக்கொடுத்த குறிப்புரையில் "இளையான்குடி இராமநாதபுரம் ஜில்லாவில் பரமக்குடித் தாலூக்காவிலுள்ளது; இஃது இளைசை என்றும் வழங்கும்" என்று தீட்டப்பட்டிருக்கிறது. (Matric Tamil Test for 1919 p. 28.)

இருபதாம் நூற்றாண்டு அகராதி (Twenteeth centuary Dictionary) யிலும் இளையான்குடி ராமநாதபுரம் ஜில்லாவிலுள்ளது என்று காணப்படுகிறது. அ. குமாரசுவாமிப் புலவர்களது தமிழ்ப்புலவர்சரித்திரத்தில் இதனை இளையாற்றங்குடி என்று கண்டிருக்கிறது (பக்கம் 53)

'மட்டாரும் களங்கதைப் படிக்காசு னேட்டைப்
பட்டாலே சூழ்ந்தாலும் புகழ்மணக்கும்'

என்றுகீர்த்திபெற்ற படிக்காசுப்புலவர் இயற்றிய தோண்டை மண்டல சதகத்தில்,

மீனவர் நாட்டினுஞ் செம்பியர் நாட்டினும் வில்லவர்கோ
னனவ னாட்டினு மிக்கதென் பார்க ளதிசயமோ
கோனவ னாட்டிம் முளையமு தாகிற் குலவமுதார்
வான்வர் நாட்டினு மிக்கதன் றேதொண்டை மண்டலமே. (15)

மேற்கோள்

திருத்தோண்டர் புராணசாரம்.

மன்னியவே ளாண்டொன்மை யிளசை மாறர்
வறுமையா லுணவுமிக மறந்து வைகி

யுன்னரு-நள் ளிருண்மழைபி..............பான்மையாரே.

என்பதால் இளசை தொண்டைநாட்டிலுள்ளது என்பர்,

சோழமண்டல சதகமுடையாரோ,

இளையா னிளையான் குடிமாற னிரவிற் றெளித்த முளைவாரி
முளையா வமுதி னமுதளிப்ப முக்கட் பெருமான் பசிதீர்ந்தே
கிளையார் விடைமேற் றோன்றுத லுங் கேடி லாத பதஞ்சேர்ந்தோன்
வளையா மகிமை படைத்ததன்றோ வளஞ்சேர் சோழ மண்டலமே.

என்பர். இவர் கூறிய இளையான்குடியோ நாலரை மாகாணமென்னும் பிரஞ்சிலாக்கா. காரைக்காலுக்கு மேற்கில் திருநள்ளாறு என்னும் திவ்யக்ஷேத்திரத்திற்குத் தெற்கில் உள்ளது. அங்கு முளைவாரிக்குட்டை என ஓர் குட்டையுளது. இந்நாயனார் அங்கேயே பிறந்ததாகச் சில சான்றுகளுமிருக்கின்றன எனப் பெரியோர் பலர் கூறுவர்.

ஆகையான் கன்னபரம்பரைச்செய்திகளில் கைபோய அறிஞர் இப்பதி இன்ன நாட்டிற்றான் உளது என நிச்சயிக்க வேண்டுகிறேன்.

இலக்கணவிளக்கபரம்பரை,

திருவாரூர்-சோமசுந்தரதேசிகன்.

உ

கடவுள் துணை.

# ஐயவினாத்தொடர்.

பண்டைத் தமிழ்க்குறை விண்டருள் பாவலீர்,

(க) முடத்தாமக் கண்ணியார் செய்தருளிய பொருநராற்றுப் படைக்குத் தலைவன் கரிகாற்பெருவளத்தான் என்பது அப்பாட்டிலுள்ள 'கண்ணார்கண்ணிக் கரிகால்வளவன்' (கசஅ) என்ற பாகத்தால் உறுதியுறுகிறது. அப்பாகத்திற்கு உரையெழுதுங்கால் எச்சகத்தோரும் மெச்சும் புகழ்சேர், உச்சிமேற்புலவர்கொள் நச்சினார்க்கினியராம் பேருரையாசிரியர் 'கரிகாலன்' என்றபாகத்திற்கு "முச்சக்கரமும் என்னுங் கவியானே கரிகாலாதலுணர்க" என்று எழுதியுள்ளார். அம்மேற்கோட்செய்யுளின் ஈற்றடியிலுள்ள 'கரிகாலன் கானெருப்புற்று' என்ற பாகத்திற்குக் "கரிகாலனது காலானது நெருப்புப்பட்டு" என்று பொருள்பட்டு 'அளந்தது' என்ற இரண்டாமடிப்பகுதியைக்கொண்டு முடியலாமன்றோ? "சுடப்பட்டுயிருய்ந்த சோழன்மகனும்" (பழ-கoகு) என்றபாகத்திற்கு உரையெழுதி யுதவிய அப்பெரியார் 'இளமைப்பருவத்துப் பிறராற் சுடப்பட்டும் உயிருய்ந்து போகிய கரிகாலனும்' என்றே எழுதியுள்ளார். இங்கே 'கரிகாலன்' என்றதொடருக்கு எவ்வாறு பொருள்கொள்வது என்பது அடியேனது ஐயுறவாகும்.

(உ) * "கழுமலத்தில் யாத்தகளிறும் கருவூர் விழுமியோன் மேற்சென்றதனால்" என்ற (பழ-சுஉ) பாகத்தின் உரை 'கழுமலமென்னும் ஊரின்கண்ணே பிணித்து நின்றகளிறும், கருவூரின் கண்ணே இருந்த கரிகால்வளவன் கடிகிளையனாயினும் அவன் சிறப்புடையனாத

* இக்கழுமலம் குட்டுவனதாயினுமாக; சோழனதாயினுமாக; அஃதீண்டைக் காராய்ச்சியின்று.

லால், அவன்மேற் சென்று தன்மிசையெடுத்துக்கொண்டு அரசிற் குரிமை செய்தது' என்பது. "சுடப்பட்டு" என்ற பழமொழிச்செய்யுளின் "கடைக்கால் செயிரறு செங்கோல் செலீஇயினான்" என்ற பாகமும் அதனுரையும் இதனை ஒத்திருக்கின்றன என்பது அடியேனது கருத்து. இங்கே இவ்வரலாற்றாலே தான் "பௌவமீமிசைப் பகற்கதிர் பரப்பி, வெவ்வெஞ் செல்வன் விசும்புபடர்ந் தாங்குப், பிறந்துதவழ் கற்றதற் றொட்டுச் சிறந்தநன், னாடு † செகிற் கொண்டு" (௧௩௫-௧௩௮) என்ற பொருநராற்றுப்படை அடிகளிற்பயின்று வருகின்றது என்று கொள்ளலாமா?

(௧) 'தாய்வயிற்றிருந்து தாயமெய்தி' என்ற (பொரு-௧௩௨) பாகத்திற்கும் 'உருகெழுதாயமூழினெய்தி' (பட்டி-௨௨௭) என்றபாகத்திற்கும் பொருளாற் சம்பந்தமிருக்கலாமா?

(௨) 'கரிகாலன்' என்றதொடருக்குக் 'கழுமலத்துயாத்த' என்றற்றொடக்கத்துப்பழமொழிச் செய்யுளால் "(தனது உரிமையாகிய அரசாட்சியை) யானையின் வழியாகப் பெற்றவன்; அல்லது யானையால் வழிகாட்டப்பெற்றுப் பெற்றவன்" என்று பொருள் கொள்வதால் வரும் இழுக்கென்னை?

தயைசெய்து இந்த ஐயங்களைப்போக்கியருளுமாறு பன்முறையும் வேண்டுகிறேன்.

கும்பகோணம்<br>30—3—19.

உ.வே. சா. வேங்கடராமன்,<br>தண்டமிழ்த்தொண்டன்.

---

† செகில்—(யானை)த்தோள். (?)

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௧௭.] சித்தார்த்தி௵ ஆனி௴ [பகுதி ௮.
Vol. XVII. June—July, 1919. No. 8.

## 13-ம் புறப்பாட்டும் அதனுரையும்-II*

இச்செய்யுளிறுதியின்கண்ணுள்ள 'கிழவோன்' என்பது விளிப்பெயரெனக்கொண்டு இவ்விடத்தே விளித்தற்குரியோன் சேரனாதலின் 'கிழவோன்' அச்சேரனேயாதல்வேண்டுமென மாணவ நண்பரவர்கள் கூறுகின்றார்கள். விளியென முடிவுகாணுதற்குத் தொல்காப்பிய இலக்கணமும் தமிழிலக்கியங்களும் துணைபுரிவனவாதலை விளக்கிக்காட்டிக் 'கிழவோன்' என்ற இயற்கையண்மைவிளி பயன்பற்றித் தெரிந்தாளப்பட்டதெனக் குறிப்பித்தார்கள்.

2. முதலாவது நண்பரவர்கள் ஆதாரமாகக்கொண்ட தொல்காப்பியவிதி அவர்களுக்கு அநுகூலமாக வுள்ளதாவென நோக்குதல்வேண்டும். 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்றது தொல்காப்பிய விளியியற்சூத்திரமாதலின் 'கிழவோன்' என்பது இயல்பாய் நின்று அண்மைவிளியாயிற்று எனக்கொள்ளப்பட்டது. சொல்லதிகாரத்திற்கு உரையிட்ட சேனாவரையரும் பிறவுரையாளர்களும் இ, உ, ஐ, ஓ என்ற நான்கிறுதி அண்மைக்கண்விளியேற்குஞ் சொற்கள் இயற்கையாய்விளியேற்கும் என்றெழுதியுள்ளார்கள். எனவே, னகரமெய்யீற்றுப் பெயராகிய 'கிழவோன்' என்னுஞ்சொல் இயல்பாய் நின்று அண்மைவிளியில் வந்ததென்றற்கு இச்சூத்திரம் ஆதாரமாதலில்லையென்பதே பலவுரையாசிரியர்களது கருத்துமாம்.

*

---

* இஃதொருதலை முடிவாதலாலிதன் மறுதலை முடிவும் அடுத்துள்ளது (ப-ர்.)

3. மெய்யீற்றுப் பெயர்கள் இயல்பாய் நின்று அண்மைவிளியேற்றுவந்ததற்குரிய உதாரணங்களை அவர்களறியாமையின் அங்ஙனம் வழுப்படச் சூத்திரத்திற்கு உரைவகுத்தார்களென்று கூறுவதாயின் அதுவும் பொருந்தாதாம். ஏனெனின், 'ஏனைப்புள்ளி யீறுவிளி கொள்ளா' என்ற சூத்திரத்தின் உரையில், னகரவீற்றுயர்திணைப் பெயராகிய 'நம்பன்' இயல்பாய் நிற்றலை யெடுத்துக்காட்டினர் நச்சினார்க்கினியர். சேனாவரையரும் 'கூறப்பட்ட புள்ளியீறு பிறவாற்றான் விளிகொள்வனவுள' என்று பொதுப்படக் கூறினர். இங்ஙனம் அறிந்து வைத்தும் 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்றதனை விளியின் பொதுலக்ஷணமாகக் கொள்ளாது நான்கு உயிரீற்று உயர்திணைப் பெயர்கள் விளியேற்குங் காலத்துமட்டும் ஏற்புடையதொரு லக்ஷணமாக உரையாளர்கள் கொண்டார்கள். இதனானே சூத்திரம் நிறுத்தமுறையில் அதற்கு இப்பொருளைத் தவிரப் பிறவாறு பொருள் காணுதல் தொல்காப்பியரது கருத்தொடு மாறுபடுமென்று அவர்கள் ஆராய்ந்து வைத்தமை நன்கு வெளியாகின்றது. நிறுத்தமுறை நோக்காது தனிப்படநோக்கினால் விளிமரபு முழுவதற்கும் பொதுப்படக் கூறிய லக்ஷணமாகத் தோன்றுநிற்பவும், அவ்வாறுகொண்டு 'நம்பன்' (சீவகசிந்-1975) 'கடல்வண்ணன்' (சிலப்-XVII) முதலியவற்றிற்கெல்லாம் மிக எளிதில் ஆதாரம் காண்டலைவிட்டு 'ஏனைப்புள்ளி யீறுவிளிகொள்ளா' என வேண்டா கூறியதற்குப் பயன் கூறுமுகத்தால் அமைத்துக் கோடலின் காரணம் பிறிதொன்று சிறந்ததாகக் காணுதலரிதாம்.

ஆனால், அடியார்க்கு நல்லார், சிலப்பதிகாரவுரையின்கண்ணே (XVII-ஆய்ச்சியர்குரவை) "கடல்வண்ணன்—அண்மைவிளி; அண்மைச்சொல்லே இயற்கையாகும் என்பதனால்; இது மேலுங்கொள்க" எனவுரையிட்டனர். இதனால் இச்சூத்திரம் பொதுப்படக் கூறப்பட்டதாக அப்பேரறிவாளர் கருதினரென்பது வெளிப்படை. *இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் ஆகிய மூன்றுரையாசிரியன்மாரும் உயிரீற்றுயர்திணைப் பெயர்கள் அண்மை விளியேற்றற்குரிய

* இவரது உரை அச்சில் வெளிவாராததாகலின் அதனைக் கீழே தருகின்றேன். "அண்மைச்சொல்லே இயற்கையாகும்" என்-னின், இதுவும் இறந்தது காத்தது. அணியாரைக் கூவுமிடத்து, அவை இயல்பேயாய் விளியேற்குமென்றவாறு. உ-ம். நம்பிவாழி; நங்காய்வாழி; வேந்துவாழி; எனவரும்.



விதியமைத்தலே தொல்காப்பியரது கருத்தென்பதுபட எழுதினர். இவ்விருதிறப்பட்ட முடிபினும் எதனைத் தொல்காப்பியரது கருத்தாக நாம் கொள்ளுதல்வேண்டும்? இளம்பூரணரை யுள்ளிட்ட மூவரும் தொல்காப்பியத்திற்கு வான்முறையில் உரையிட்டவர்கள். ஆதலின் நூலாசிரியனது கருத்து இன்னதென்றறிதற்கண் பழக்க மிகுதியும் உடையவர்கள். இம்மூவரும் ஒருவர்பின்னொருவராய் வந்தவர்களாவர். ஒருவர் கூறியவற்றிற் பிழைகாணப்படுமாயின் அதனை நன்கெடுத்துக்காட்டி உண்மை யுரையினை வெளியிடுவதன்கண் சிறிதுந்தாழ்க்குமியல்பினரல்லர். இவருள், ஒவ்வொருவரும் பிறர் கூறுமுறையைப் பின்பற்றிக் கதாநுகதிகமார்க்கத்திற் செல்லாது தாமேதனிப்படவாராய்ந்து உரைவகுக்குந் தன்மையாளர். மற்று, அடியார்க்கு நல்லாரோவெனின் சிலப்பதிகார காப்பியத்திற்கு உரையிடுவதே பிரதான நோக்கமாகவுடையவர். ஆதலின் இத்தொல்காப்பிய சூத்திரத்தின் பொருளமைதியினை நிச்சயித்தற்கண் அதனுரைகாரர்களோடொப்ப இவரும் ஊன்றியாராய்ந்தாரென்றல் அசம்பாவிதமாம். ஆகவே, இவ்விருதிறத்தாருள்ளும் இளம்பூரணர் முதலினோரது கருத்தொடு நாம் உடன்படுவதாயின், அது தவறாகாதென்றே நினைக்கிறேன். எனினும் தொல்காப்பியரது கருத்து இன்னதென்று அறிதற்கு அவரது நூலொன்றே தக்க கருவியாம். அக்கருவியின் துணைகொண்டு இச்சூத்திரம் நுதலிய தின்னதென்று நோக்குதல் வேண்டும்.

விளிமரபின்கண்ணே இச்சூத்திரம் நிறுத்த முறையை யெடுத்துக்கொள்க. விளிமரபினை ஆசிரியர் 37 சூத்திரங்களாற் (*சூ. 120-136) கூறுகின்றார். விளியினது பொதுவிலக்கணங்கூறி, அதனையேற்பது பெயரென்றுரைத்து, அங்ஙனம் ஏற்கும் பெயர்களைப் பகுத்துணர்த்துதற்குச் செல்லுகின்றார் (120-1). விளியேற்கும் பெயர்களை மூவகைப்படுத்தினர்:—உயர்திணைப் பெயர், அஃறிணை விரவுப்பெயர், அஃறிணைப் பெயரென. உயர்திணைப் பெயரைப்பற்றி யுள்ளன 122

* இங்கே குறித்த சூத்திரஙகள் நச்சினார்க்கினியருரைப்பதிப்பிற்காணப்படுவன.

முதல் 151 முடியவுள்ள சூத்திரங்கள். அஃறிணை விரவுப்பெயர் 152-ஆம் சூத்திரத்தினும், அஃறிணைப்பெயர் 153-ஆம் சூத்திரத்தினும் கூறப்படுகின்றன. 154-ஆம் சூத்திரத்தில் முற்கூறிய மூவகைப் பெயரும் சேய்மைக்கண் விளியேற்குமுறை புணர்த்தப்படுகின்றது. பெயர்ச்சொற்களேயன்றி 'அம்ம' வென்னும் அசைச்சொல்லும் விளியேற்குமென்பது 155-ஆம் சூத்திரத்தாற் சொல்லப்படுகின்றது. உயர்திணைப் புள்ளியீற்றுப் பெயருள் விளியேலாதன கூறுகின்றது 156-ஆம் சூத்திரம்.

உயர்திணைப் பெயர்கள் விளியேற்குமிடத்து உயிரீற்றுப்பெயர்கள், மெய்யீற்றுப்பெயர்கள் எனப்பகுக்கப்படுகின்றன. இ, ஐ, உ, ஓ, என்னும் நான்கு உயிரீற்றுப் பெயர்கள் மாத்திரமே விளியேற்பன (122). அங்ஙனம் விளியேற்கும்பொழுது பொதுவாக வுண்டாந்திரிபுகள் 123, 124, 125-வது சூத்திரங்களிற் சொல்லப்படுகின்றன. ஏனையுயிரீற்றுப் பெயர்கள் விளியேலா வென்பது 126-ஆம் சூத்திரத்தாற் பெறப்படுகின்றது. பின்பு இகரவீற்று அளபெடைப் பெயரும் ஐகாரவீற்று முறைப்பெயரும் விளிகொள்ளுங்கால் அடையுந்திரிபுகள் சிறப்பாக வுணர்த்தப்படுகின்றன (127-128). இதன் பின்னர் அண்மைச்சொல்லே இயற்கையாகும் (129) என்னும் சூத்திரம் கூறப்பட்டுள்ளது. இச்சூத்திரத்தினை யடுத்துப் புள்ளியீற்றுயர்திணைப் பெயர்கள் விளியேற்குமுறை தொடங்கப்படுகின்றது. இங்கு எடுத்துக்கூறிய முறையில் 'அண்மைச்சொல்லே' என்று தொடங்கும் 129-ஆம் சூத்திரத்திற்கு எவ்வாறு பொருள்கொள்ளுதல் வேண்டும்? 128-ஆம் சூத்திரமுடிய உயிரீற்றுப் பெயர்கள் விளியேற்குமாறு கூறப்பட்டிருக்கின்றது. 130-ஆம் சூத்திரத்தில் மெய்யீற்றுப் பெயர்கள் விளிக்கப்படுமுறை ஆரம்பிக்கப்படுகின்றது. இங்ஙனம் ஆரம்பித்தலினாலே இதற்கு முன்னுள்ள 'அண்மைச்சொல்லே' என்ற சூத்திரம் உயிரீற்றுப் பெயர்களைக்குறிப்பதென்பது எளிதிலறியத்தகும். அவ்வுயிரீற்றுப் பெயர்களைப்பற்றிக் கூறும் சூத்திரங்களின் இறுதியில் இச்சூத்திரம் வைக்கப்பெற்றிருத்தலின், இஃது உயிரீற்றுப் பெயர்களனைத்திற்கு முரிய சூத்திரமென்றுணரப்படுமேயன்றிப் பிறவாறு கூறுதல் பொருந்தாது.



விளிமரபு அனைத்திற்கும் பொதுவான சூத்திரமாக இது கருதப்பட்டதாயின், அங்ஙனம் பொதுவாகவுள்ள சூத்திரத்தினையடுத்து இதுவும் வைக்கப்பெற்றிருத்தல் வேண்டும்; அல்லது பொதுவென அறிவித்தற்குரிய சொற்கள் இதனுட் காணப்படுதல் வேண்டும். விளிமரபில், முதலிரண்டு சூத்திரங்களைத்தவிர, சேய்மை விளியைப்பற்றிக் கூறுஞ் சூத்திரமொன்றே ஐயமின்றிப் பொதுப்படவுள்ளது. அண்மையொடு நெருங்கிய பொருட்டொடர்புளது சேய்மை. இத்தொடர்புநயம்பற்றியே அண்மை சேய்மை விளிகட்குரிய விதியினை ஒரே சூத்திரத்தினுள் அமைத்தார் பவணந்தி முனிவர். ஆகவே இப்பொதுச்சூத்திரத்தினையடுத்து அண்மைவிளிப் பொதுச்சூத்திரத்தினையும் அமையவைத்தலிற் சிறந்த வைப்புமுறை காணுதற்கரிதாம். இங்ஙனம் இயல்பாயும் பொருத்தமாயும்உள்ள வோரிடத்தில் இச்சூத்திரம் வைக்கப்பெறுமையானே, அது பொதுச்சூத்திரமென்ற கருத்து ஆசிரியர்க்கில்லையென்று துணிதல்தகும். மேலும் சேய்மைவிளிச் சூத்திரத்திற்காணப்படுகின்ற 'உளவெனப்பட்ட எல்லாப்பெயரும்' என்றாற்போன்ற பொதுச் சொற்கள் இச்சூத்திரத்திற் காணுமாறில்லை. சூத்திர அமைதியே பொதுப்படவுளதாகலிற் பொதுவினை வெளிப்படக் கூறுஞ்சொற்கள் வேண்டா எனின், விளிமரபில் அங்ஙனமே யமைந்த பிறசூத்திரங்களுளவாகவும் அவை பொதுப்பட எழுந்தனவல்ல வெனற்கு அவ் விளிமரபின் கண்ணேயே சான்றுளவாம். உதாரணமாக 'முறைப்பெயர்க்கிளவியேயொடுவருமே' என்ற சூத்திரத்தை யெடுத்துக் கொள்க. இது பொதுப்பட வெழுந்த சூத்திரம்போலத் தோன்றுகிறது. இத்தோற்றரவு உண்மையாயின், இச்சூத்திரத்தாற் பெறப்படுவதுயாதொன்றும் விளிமரபில் யாண்டும் வருதல் கூடாது. ஆனால் 'முறைப்

பெயர்க்கிளவி முறைப்பெயரியல' என்று ஒரு சூத்திரம் அவ்வியலுட் காணப்படுகின்றது. 'முறைப்பெயர்க்கிளவியே' என்ற சூத்திரத்தினைக் குறிப்பிட்ட வோரீறுபற்றி யெழுந்ததெனக் கொண்டாலன்றி மேற் காட்டியவாறு பிறிதொரு சூத்திரம்வருதற்கு நியாயங்கூறுதல் கூடாது. இதனால் அது பொதுச்சூத்திரமாகாமை அறியப்படும். ஆகவே சூத்திர அமைதி பொதுப்பட விருப்பினும், அதுபொதுவாதல் வியக்த வாசகத்தாற் கூறப்படவேண்டும். இங்ஙனம் ஆசிரியர் கூறிற்றிலர். ஆதலால் 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரம் பொதுவெனக் கருதப்பட்டதென்பதை அறுதியாக வுணர்த்துதற்குரிய நிறப்புமுறையேனும் வியக்தவாசகமேனும் இன்மையால், அச்சூத் திரம் பொதுவாகாமை நன்குதேறப்படும்.

அன்றியும், பெயர்களைத்திணைபற்றி, ஈறுபற்றிவகுத்து விளிமரபு கூறுதலே தொல்காப்பியரது கருத்தாகும். ஏதானுமொருவிதி யாண் டும் அமைவுடைத்தாகி நிற்கும் போதும், அவ்விதியினுள் அடங்கிய வற்றைத் திணை, யீறு, முதலாயினபற்றிப் பிரித்து வேறுவேறு கூறிச் செல்கின்றனர். இதன் உண்மை கீழ்வரும் உதாரணங்களால் நன்கு விளங்கும். சுட்டு வினைப்பெயர்கள் விளியேலாவென்பது ஆசிரியரது முடிபு. அதனை யொரு பொதுச் சூத்திரத்தாற் கூறியொழியாது பல வேறு ஈற்றின்கீழ் நான்கு சூத்திரங்களில் (சூ-139, 144, 145, 150.) அமைத்திருக்கின்றார். அளபெடைப் பெயரைப்பற்றியுள்ள சூத்திரங் கள் தொல்காப்பியரது கருத்தை மிகச் செவ்விதிற் புலப்படுக்கின்றன. அளபெடைப் பெயர்களெல்லாம் எவ்வகைய ஈற்றினவாயினும் இயல் பாய் நின்று விளியாவனவாம். இதனை,

(1) அளபெடை மிகூஉ மிகர விறுபெயர்
இயற்கைய வாகுஞ் செயற்கைய வென்ப. சூ-127.

(2) அளபெடைப் பெயரே அளபெடையியல. சூ 137.



(3) அளபெடைப் பெயரே அளபெடையியல. சூ-143.

(4) அளபெடைப் பெயரே அளபெடையியல. சூ-151.

இந்நான்கு சூத்திரங்களாற் கூறுகின்றார். இந்நான்கும் பொருளில் வேறுபடுவனவல்ல; இவற்றுற்போந்த விதியைப் பிரயோகிக்கும் இட மொன்றே வேறுபடுவது. இவற்றில் பின்மூன்று சூத்திரங்களும் ஒன்றுபோலமைந்துள்ளன. சூத்திரமொன்றின்கண்ணேயே அடக் கிக்கூறவியலும் விஷயத்தை ஒன்றுபோலமைந்த பலவேறு சூத்திரங் களாற் கூறுதலின் காரணம் யாது? தொல்காப்பியர் விளிமரபினை யெடுத்தோதுதற்குக் கைக்கொண்ட முறையொன்றே தக்ககாரணமா வது. அம்முறைதான் பெயர்களைத் திணைபற்றியும் ஈறுபற்றியும் வகுத்து அவை விளியேலுமாறு கூறுதலென்பது விளிமரபினை மனப் பின்றி வாசிப்பார்க்கு எளிதிற் புலனாம். 'அண்மைச் சொல்லே இயற் கையாகும்' என்றதனைப் பொதுப்பட வோதிய சூத்திரமெனக் கொள் வது மேலே தெளியப்பட்ட முறையொடு முற்று முரணுவதாகும். ஆதலால் இச்சூத்திரம் பொதுப்பட வெழுந்ததன்றாம்.

இதுகாறும் உரைகாரர்களது முடிபு இன்னதென்று வரைந்து கொண்டு தொல்காப்பியரது கருத்தும் அதுவேயாதல் வேண்டுமென்றற் குச் சில நியாயங்கள் கூறினேன். பின்னூல்கள் பலவற்றுள்ளும் வீர சோழியம் ஒன்றே தொல்காப்பியத்தை முதனூலாகக்கொண்டு அதனை நெறியினையே போற்றியுரைப்பது. இதன் உண்மை 'தொல்காப்பியக் கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்—பல்காற்கொண்டோடும் படகென்ப' என ஆன்றோர் சிறப்பித்துக் கூறியுள்ளதனானும் அறியப்படும். இந் நூலுள்ளே,

"இகரம்ஈகாரமாம்;ஐயாயாம்;ஏயாம்
உகரமூகாரவுயிர்கள்;—பகர்விளிகள் *
அண்மையிடத்துமளபெடைப்பேர்க்கண்ணும்
உண்மையியல்பாயுறும்."

---

*'பகர்விளிகள்' என்று இதிற் கூறியது இ, ஐ, உ, ஒ, இந்நான்கு உயிரீற்று விளிப்பெயர்களை.

என்று ஒரு வெண்பா காணப்படுகின்றது. 'அண்மைச் சொல்லே இயற்கையாகும் என்ற தொல்காப்பியச் சூத்திரம் இதன்கண் அடங்கும். உரையின் கண்ணேயும் இவை நான்கும் அணியாரைக் கூவுமிடத்து இயல்பாய் விளியேற்கும்' என்று கூறப்பட்டுளது. இதனால் ஈண்டு வியவகரிக்கப்பட்ட தொல்காப்பிய விளிமரபுச் சூத்திரம் இ, ஐ, உ, ஓ என்ற நான்கீற்றுப் பெயர்களுக்கு மட்டும் ஏற்புடையதொரு லக்ஷணமாகக் கருதப்பட்டமை தெளிவாம்.

ஆகவே, இளம்பூரணரையுள்ளிட்டோர் கூறியவுரையே பொருத்தமுடைத் தென்பது இனிது விளங்குகின்றது. 'அண்மைச் சொல்லே இயற்கையாகும்' என்ற விளிமரபுச் சூத்திரம் னகரமெய்யீற்றுப் பெயராகிய 'கிழவோன்' இயற்கையாய் நின்று அண்மைவிளியில் வந்ததெனற்கு ஆதாரமாகாமை யெளிதிலறியக்கிடக்கின்றது. ஆதலால் தொல்காப்பியப்பேரிலக்கணம் நண்பரவர்களுடைய கருத்தை ஆதரிப்பதன்றெனல் நன்குணரலாகும்.

(தொடரும்)

S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,

திருவணந்தபுரம்.

ஸ்ரீ

# முன்னதன்மறுதலைமுடிவு.

சென்ற சித்திரைமாதச் செந்தமிழ்ப்பகுதியில் 13-ம் புறப்பாட்டின்கணுள்ள விழுநீர்வேலிநாடுபற்றி, திருவனந்தபுரம் நண்பர் ஸ்ரீமத் வையாபுரிப்பிள்ளையவர்கள் பி.ஏ., பி.எல்., எழுதிவிடுத்த ஒரு தலைமுடிவுக்கு மறுதலைமுடிவு மொருவாறுடன் விடுக்கப்பட்டது.

இப்பால் அப் பாட்டிலுள்ள கிழவோன் என்றசொல் விளிப்பெயராகமாட்டாதென்று நண்பரவர்கள் எழுதிய ஒருதலைமுடிவின் ஒருபகுதி இதன்முன் வைக்கப்பட்டது. அதைமட்டும் மிகப்பாய்ப் படிப்பார்க்கு அதிற்சொல்லிய முடிவுகளெல்லாம் உண்மையென்று புலப்படும்படி வெகு சாதுர்யமாயும் தெளிவாயும் விரிவாயும் எழுதியிருக்கிறார்கள்.

கிழவோன் என்பது அண்மைவிளியாகுமென்பதை 'கடல்வண்ணன், அண்மைவிளி', "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்றதனால் மேலுங்கொள்க', என அடியார்க்குநல்லார் எழுதிய வலிய சாதனங்கொண்டு முன்னமே மாணவர் நன்கு நிரூபித்துவிட்டார். இனி அதை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு மாணவர்க்கொருசிறிதுமில்லையாயிற்று. இதனை நன்குணர்ந்த நண்பரவர்கள் மாணவர்களுக்கனுகூலமான அடியார்க்குநல்லார் கொள்கையே தவறென்று நிரூபித்துத் தம்கொள்கையை நிலைநாட்டவேண்டிய பொறுப்புடையவர்களாய் முதலில் அச்சூத்திரப்பொருளே மாணவர்கட்சிக்குவிரோதமாயிருக்கிறதென்று காட்டவேண்டி, (சொல்லதிகாரத்துக்கு உரையிட்ட சேனாவரையரும் பிறவுரையாளர்களும்) "இ உ ஐ ஓ என்ற நான்கீற்றண்மைக்கண் விளியேற்குஞ்சொற்கள் இயற்கையாய் விளியேற்கும்" என்றுரையெழுதியிருப்பதாகக் காட்டுகிறார்கள். இவர்கள் காட்டுகிறபடி 'இ உ. ஐ ஓ என்ற' என்னும் ஏழு அக்ஷரங்களும் ஒருவருரையினுமிதுவரை யெழுதப்படவில்லை. நச்சினார்க்கினியருரையில் "நான்கீற்றண்மைக்கண்விளியேற்கும் சொற்கள் இயல்பாய் விளியேற்கும்" எனவும், சேனாவரையருரையில், "நான்கீற்றண்மைச்சொல்லும் இயல்பாய் விளியேற்கும்" எனவும்,, இளம்பூரணருரையுள் "அணியாரைக்கூவு

மிடத்து அவையியல்பாய் விளியேற்கும்" எனவும் பொதுப்படவெழுதப் பட்டுள்ளன. இதனை அவ்வுரைகளின் ஏட்டுப்பிரதிகளையும் நண்பரவர்கள் கீழ்க்குறிப்பிற்காட்டியிருக்கும் இளம்பூரணருரைவாக்கியங்களையும் உற்றுநோக்கினல் நன்கறியலாம்.

இப்படி ஒருரையிலும் இல்லாத "இ உ ஐ ஓ என்ற" என்னும் அடைமொழியை நான்கீற்றுக்கு நண்பரவர்கள் தாமே கூட்டி எழுதிக்கொண்டிருப்பதானது, அவ்வடைமொழி யில்லாவிடின் அவ்வுரைகளுள் ஒன்றும் தம் கக்ஷிக்குச்சிறிதும் அநுகூலமாகமாட்டாதென்பதையும், மாணவர்கட்கிக்கே பெரிதும் அநுகூலமாகுமென்பதையும் நண்பரவர்களே நன்கு தெரிந்துகொண்டிருக்கிறார்களென வெளியாக்குகின்றது. பிறருமதனையறிந்துகொள்ளும்படி இங்குச் சிறிது கூறுகின்றேன்.

உயிரீற்றண்மை விளிக்கே இச்சூத்திரம் உரித்தாமென்பது உரைகாரர்களுக்கெல்லாம் கருத்தாயின் நண்பரவர்கள்போலவே அவர்களும் "இ உ ஐ ஓ என்ற" என்னும் அடைமொழியை நான்கீற்றுக்குக் கொடுத்து விரித்தெழுதியிருக்கவேண்டும். அங்ஙனம் ஒருவரேனுமெழுதாமையால், இச்சூத்திரத்தின் சிங்கநோக்கு நிலையாலும், முன்மொழிந்துகோடல், பின்னதுநிறுத்தல், எதிரதுபோற்றல் என்னும் உத்திவகையாலும்முன்னும்பின்னுமுள்ள இருவகைநான்கீற்றுச்சொற்களும் அண்மையிவியல்பாய் விளியேற்குமென்பதே உரைகாரர்கள் கருத்தெனநன்கறியலாகும்.

சூத்திரங்களுள் முன்னும் பின்னுமாகிய இருதலையும்பற்றிநிற்கும் சிங்கநோக்குக்கிலக்காகாதவிடங்களில்மட்டும் ஒருதலைபற்றிய ஆற்றொழுக்குக் கொள்ளத்தகும். சிங்கநோக்குள்ளவிடத்துள்ள ஆற்றொழுக்கு அச்சிங்கநோக்கால்விழுங்கப்பட்டு அதற்கு அங்கமாய்விடுதலால் அச்சிங்கநோக்கை வெல்லுந்திறனின்றி யிறந்துபடுவதாம். ஆகையால் இங்குச் சிங்கநோக்குப்பற்றியே இருவகை நான்கீறும் பொருளாகக்கொள்ளத்தகும்.

இங்குச் சிங்கநோக்குண்டென்று உரைகாரரொருவருமெழுதவில்லையென்பது கூடாவன்று; ஏனெனில் [illegible] என்ற நியாயத்தால், பிறவிடங்களிற்சொல்லியிருப்பதுகொண்டு



கொள்ளத்தகுமென்று, மாணுக்கர்க்கறிவுவளர்தற்பொருட்டுத்துணரவைத்துச் சொல்லுத லுரைகாரர்க்கெல்லா மியல்பாதலால் உரைகாரரெழுதாதது தவறாகாது. அன்றியு மிச்சூத்திரம் சிங்கநோக்குடையதென்பதற்கு உரைகாரர்களெல்லாரும் தக்ககுறிப்புக்காட்டியிருக்கிறார்கள். எப்படியெனில் இச்சூத்திரத்துக்கு முன்னும் பின்னும் ஒருதலைபற்றி ஆற்றொழுக்குள்ள "ஏனையுயிரே" 'ஏனைப்புள்ளி' என்னும் சூத்திரவுரைகளிலும், பிறசூத்திரவுரைகளிலும் நான்கீற்றையுரைக்குமிடத்து "மேற்கூறப்பட்டநான்கீறு" என்றும், "அந்நான்குமல்லாத புள்ளியீறு" என்றும் நான்கீற்றை விதந்தோதியவர் இடைநின்ற இச்சூத்திரம் உயிர்க்கேயுரியதாயின் முன்கூறியவாறே "மேற்கூறப்பட்ட நான்கீற்று அண்மைச்சொல் எனவிதந்துகூறவேண்டும். அங்ஙனம் ஒருவரும் முறைப்படக்கூறுதுபொதுப்பட நான்கீறென்றே கூறினமையால் இது இருவகை நான்கீற்றுக்கும் பொதுவேயாமென்றறியத்தக்கது.

மேற்கூறப்பட்டநான்கீறு என்றெழுதினுலும் அல்லது நண்பரவர்கள் காட்டியபடி "இ உ ஐ ஓ என்ற" நான்கீறென்றெழுதினுலும் மெய்யீற்றுச்சொற்களுக்கு அண்மைவிளி யில்லையென் றெழித்துவிடுமென்றேகருதி அங்ஙனமொழியாது இருவகை நான்கீற்றுக்கும் பொதுவாகவேண்டுமென்றே எல்லாரு மெழுதினரெனவறிக.

ஆனல் மெய்யீற்றண்மைவிளி யொன்றற்கேனும் அச் சூத்திரவுரையி லுதாரணங்காட்டாமையா லுயிரீற்றுக்கே உரியதாமென்று சொல்லுதல் கூடாது. ஏனெனில், ஒருவகைக்குக்காட்டியதனுனே பிறிதொருவகையியல்பும் எளிதாயறிந்துகொள்ளக்கூடுமென்று விட்டுவிட்டது குறையாகாது. உயிரீற்றுள்ளும் இளம்பூரணர் ஒன்றற்குதாரணங் காட்டவில்லை. 'ஏனைப்புள்ளி' என்ற சூத்திரவுரையில் சேனவரையர், நச்சினர்க்கினியர்காட்டும் பலவுதாரணங்களும் காட்டினரில்லை. அதனாலவைகொள்ளற்கவென்னலாகாதவாறே இதனுமிவை கொள்ளற்கவென்ன லாகாதெனவறிக. இக்குறிப்பால், உயிரீற்றுக்கே உரியதென்று சாதிக்குங் குறிப்பொழிதலால் இச்சூத்திரம் மெய்யீற்றுக் குரியதன்றென்று நிரூபித்தற்கேலாதாயிற்று.

இவ்வாறிச்சூத்திரத்தான் மெய்யீற்றண்மைவிளியுமுடன்கொள்ள விசையாத நண்பரவர்கள் , மெய்யீற்றண்மைவிளியே யில்லையென்று

சொல்லிவிட வியலாதென நினைந்து அதற்கும் விதி தொல்காப்பியத் துண்டென்றுகாட்டக்கருதி, 'ஏனைப்புள்ளியி றுவிளிகொள்ளா" வென்ற சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர்காட்டிய நம்பன் என்னும் இயல்பு விளியை னகரவீற்றண்மைவிளியாக ஆரோபித்துக்கொண்டு அச்சூத்திரத்தால் மெய்யீற்றண்மைவிளி யமைக்கப்பட்டிருப்பதாகக் காட்ட வருகிறார்கள். இதனால், இயல்புவிளியு மண்மைவிளியுமொன்றேயாமென்று அவர்கள் கருதியதாகத் தெரிகிறது. அங்ஙனமாயின் "ஆனெனிறுதி யியற்கையாகும்" "அயனெடிதாயி னியற்கையாகும்" என்ற சூத்திரங்களால் விதிக்கப்பட்ட வியற்கைவிளியும் அண்மைவிளியாக வேண்டுமே? அன்றியும் 'அண்மைச்சொல்விற் ககரமாகும்' என்றசூத்திரத்தால் இயல்பாகாத விகாரவிளியும் அண்மைவிளியன்றாயொழிய வேண்டுமே? அங்ஙனமில்லாமையால் இயல்புவிளியெல்லாம் அண்மைவிளியென்றும், அண்மைவிளியெல்லாம் இயல்புவிளியென்றும் கொள்ளலாகாதென வறியத்தக்கது.

ஒருவாறு நம்பன் என்றுகாட்டிய இயல்புவிளியையே அண்மைவிளியென்று வைத்துக்கொண்டாலும் அதனால் மாணவர்கட்கொரு பாதகமுமுண்டாய்விடமாட்டாது. ஏனெனில் அவர்கட்கு மெய்யீற்றண்மையியல்புவிளியுண்டென்பதுமட்டும் வேண்டுமேயல்லது அது "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்ற சூத்திரத்தாலேயே வந்ததாகவேண்டுமென்னும் ஆவசியக மொன்றுமில்லை. "ஏனைப்புள்ளி" என்ற சூத்திரத்தால் வந்தாலும் இஷ்டசித்தியுண்டாகத் தடையில்லை.

ஆதலால் இவ்விஷயத்தில் நண்பரவர்கள் செய்யும் வாதமெல்லாம் அடியார்க்குநல்லாரை நோக்கியெழுந்ததாகுமே யல்லது மாணவரை நோக்கியதாகமாட்டாது. இவ்விஷயத்தில் அடியார்க்குநல்லார்கட்சி தோல்வியுற்றாலும் மாணவர்கட்சி தோல்வியுற்றதாகமாட்டாது.

இனி அடியார்க்குநல்லார்கொள்கையில் நண்பரவர்கள் சொல்லும் குறைபாடென்னவென்று பார்ப்போம்.

முதலாவது தொல்காப்பியர், இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலிய இலக்கணப்புலவர் கொள்கைக்கு அடியார்க்குநல்லார் கொள்கை மெய்யீற்றண்மைவிளிவிடயத்தில் முற்றும் விருத்தமாமென்பது.



2. அடியார்க்குநல்லார் தொல்காப்பியத்துக்கு உரையெழுதாது சிலப்பதிகாரத்திற்கே யுரையெழுதியிருப்பதால் சிலப்பதிகாரக்கதையொன்றைமட்டும் அவர் நன்குதெரிந்தவராவரேயல்லது தொல்காப்பியச்சூத்திரப்பொருள்களை யூன்றியறிந்தவுணர்வுடையராகாரென்பது.

3. தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவர்களே அச்சூத்திரப் பொருள்களை யூன்றியறிந்த வுணர்வுடையராவராதலால் அவர்கள் சொல்லியவற்றையே பிரமாணமாகக் கொள்ளவேண்டுமென்பது.

இவற்றை நிரூபிக்கவேண்டி அவர்கள் காட்டும் விஷயங்கள் பலவுள. அவற்றுள் ஒன்றேனும் நண்பரவர்கள் கொள்கையை நிரூபிக்க வல்லதாவெனப் பின்பு ஆராய்வோம். முதலில் அடியார்க்குநல்லார் தகுதியை இங்கு ஆராய்வோம்.

தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவரல்லது பிறரொருவரும் தொல்காப்பியத்திலக்கணந் தெரிந்தவராகமாட்டார் என்பது சித்தாந்தமானால் பரிமேலழகர் முதலிய வுரையாசிரியர் பலரும் எழுதியவிலக்கணங்களெல்லாம் பயனற்றனவா யொழியவேண்டும். அவ்வாறில்லாமையாலும், தொல்காப்பிய நூலாலுமுரையாலு மறியப்படாத சில நுணுகிய விலக்கணங்களு மகப்படப் பரிபாடன்முதலிய சங்கநூலுரைகளிற் பரிமேலழகர்முதலிய உரையாசிரியர் பலருமெழுதிச்செல்வதால் அவ்வுரையாசிரியர்கள் தொல்காப்பிய நூலிலும் உரையிலும் சொல்லப்பட்ட விலக்கணங்களை முற்றக்கற்றுணர்ந்திருப்பதுமன்றி அவற்றில்லாத பிறவிலக்கணங்களையு மவரறிந்தவரென விளங்குதலால் அவர் தொல்காப்பிய வுரையாசிரியர்களினின்றும் இலக்கணவுணர்ச்சியிற் சிறிது தாழ்ந்தவரெனச் சொல்லலியலாது.

தொல்காப்பியத்துக்கு உரையெழுதியவரேயன்றி அவரெழுதிய அவ்வுரைகளை நன்கு கற்றவர்களும் அவ்வுரையாசிரியர் கருத்தினையறியாரென்ன லியலாது. அடியார்க்குநல்லார் தொல்காப்பியங்கல்லாதவரென்று சொல்லலு மியலாது.

ஏனெனில், "................பொப்பண்ணகாங்கயர்கோனளித்த, சோற்றுச்செருக்கல்லவோதமிழ்மூன்றுரைசொல்வித்ததே" என்ற பாசுரத்தால் பொப்பண்ணதேவனென்னும் ஒருதாரபுருஷனாலே சம்ரக்ஷிக்கப்பெற்றிருந்துகொண்டு இயலிசை நாடகமென்னும், முத்தமி

ழிலக்கணங்களாலும் இச் சிலப்பதிகாரவுரையைச் செய்தேன் என்று அவர் தாமே சொல்லியிருக்கிறார். இதனாலும் இன்னும் அவர் அவ்வுரையுட்காட்டிய மேற்கோள் பலவற்றாலும் முத்தமிழிலக்கணங்களையு மொருங்கு கற்றே அச்சிலப்பதிகாரவுரையை எழுதியுள்ளார் என்பது தெற்றென வெளியாகின்றது.

ஆதலால் அவர் இயற்றமிழிலக்கணவகையாகிய தொல்காப்பியச் சொல்லதிகாரவுரையுங் கல்லாதவரெனக்கருதுவது உலகங்கொள்ளாதெனவே கொள்ளத்தக்கதாம். ஆகவே அவர் தொல்காப்பியவிலக்கணங்கற்றே "கடல்வண்ணன் அண்மைவிளி" "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்றதனால் மேலுங்கொள்க" எனவெழுதிய விலக்கணம் தொல்காப்பிய நூலுக்கேனும் உரைக்கேனும் ஒருசிறிதும் விரோதிக்கமாட்டாதென்றே தோன்றுகிறது. நண்பரவர்கள் விரோதிப்பதாகவே கருதுகிறார்கள். இதனுண்மையை யாரை விசாரித்தறியலாம்? அவ் வடியார்க்குநல்லாரையும் நச்சினார்க்கினியரையுமே விசாரித்தறியவேண்டும்.

ஆதலால் முதலில் அடியார்க்குநல்லாரையே விசாரிப்போம்.

வினா. சிலப்பதிகாரவுரையில் 'கடல்வண்ணன் அண்மைவிளி' "அண்மைச்சொல்லேயியற்கையாகும்" என்றதனால் மேலுங் கொள்க, வென்றெழுதியது எதற்காக?

விடை. கடல்வண்ணன் என்றபெயர் 'அன்னென்னிறுதியாவாகும் மே" என்ற சூத்திரத்தால் கடல்வண்ணாவென்றன்றோ விளியேற்கவேண்டும்? அங்ஙனமன்றி, கடல்வண்ணன் என இயல்பாதற்கிலக்கணம் யாதோவென மாணவர்க்கையநிகழுமாதலால் அதனை நீக்குதற்பொருட்டேயாம்.

வினா. அண்மைவிளியென்றாலென்ன?

விடை. அண்மையிலுள்ளாரையழைத்தல்.

வினா. அண்மையாவதியாது?

விடை. சிலர் அந்தரங்கத்தில் அபிமுகமாயிருந்துபேசும்பேச்சொலி கேட்கும் இடக்கிடக்கை.



வினா. இங்கு விளிக்கப்பட்ட கடல்வண்ணன் யாவன்? அவன் எங்குள்ளவன்?

விடை. அவன் கண்ணபிரான். கோகுலத்துள்ளவன்.

வினா. இவ்வாய்ச்சியர் குரவைக்கூத்தாடிய இடம் யாது?

விடை. தென்மதுரையிலுள்ள விடையர்தெரு.

வினா. கோகுலத்துக்கும் தென்மதுரைக்கும், எத்துணை தூரம்! இடையே பலநூற்றுக்காவதங்களுண்டே! இங்கு அண்மைவிளியாமென்பதே அசம்பாவிதமில்லையா? (தந்திபால்விளிக்கவும் சமகாலமில்லையே).

விடை. அப்படியன்று; கண்ணபிரான்முன்னின்றே கோகுலத்தில் இடைப்பெண்களாடிய குரவைக்கூத்தின் அநுகாரமாகவே தென்மதுரையிடைப்பெண்க ளாடினமையால் அங்குள்ள அண்மைவிளியையே இங்கு மநுகரித்துக்காட்டவேண்டுமாதலால் அது தவறாகமாட்டாது.

வினா. "அண்மைச்சொல்லேயியற்கையாகும்" என்ற சூத்திரம் உயர்திணை யுயிரீற்றுப்பெயர்களுக்கே உரியதில்லையா?

விடை. அப்படி சூத்திரத்துட்சொல்லவுமில்லை. உரையாளர்களொருவரும் எழுதவுமில்லை. போதகாசிரியர் பாடம் சொல்லவுமில்லை.

வினா. வேறெப்படியுள்ளது?

விடை. அச்சூத்திரம் உயிரீற்றுவிளிக்கும் மெய்யீற்றுவிளிக்கும் இடையே சிங்கநோக்காயுள்ளது; உயிரீறு என்றேனும் மெய்யீறென்றேனும் விதந்தோதாது அவ்விருவகையீற்றுக்கும் பொதுப்பட "அண்மைச்சொல்லேயியற்கையாகும்" என்றே கூறுகின்றது. அதற்குரைவகுத்த உரையாசிரியரும், 'அணியாரைக்கூவுமிடத்து அவை இயல்பாய்விளியேற்கு' மென்று பொதுப்படக்கூறியுள்ளார். சேனாவரையரும் "நான்கீற் றண்மைச்சொல்லு மியல்பாய் விளியேற்கும்" என்றே பொதுப்பட எழுதியுள்ளார். அம்முறைபற்றியே

நச்சினார்க்கினியரும், "நான்கீற்றண்மைக்கண் விளியேற்குஞ் சொற்கள் இயல்பாய்விளியேற்கு" மென்றே பொதுப் படக்கூறியுள்ளார். ஆதலால் அது மெய்யீற்றண்மைச் சொல்லுக்குமிலக்கணமா மென்பதில் விரோதமொன்று மில்லை.

**வினா.** மெய்யீற் றண்மைச்சொல்லுக்கு முரியதென்று நிரூபிக்க முடியுமா?

**விடை.** முடியும்; ஆனால் அவ்வாறு நிரூபிக்கவேண்டியபொறுப்பு இத்தலைக்கில்லை. மெய்யீற்றண்மைச்சொல்லுக்கு முரியதென்பதில் விரோதமுண்டென்று காட்டினால் அதனைப் பரிகரிக்கவேண்டிய பொறுப்பொன்றே இத்தலைக்குரியது. விரோதமுண்டென்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பும், பிறிதொருசூத்திரத்தால் மெய்யீற்றண்மைவிளி பெறப்படுமென்று நிரூபிக்கவேண்டிய பொறுப்பும் அத்தலைக்குரியன. முதலில் அந்நிரூபணத்திற்கு அத்தலைக்குச் சிறந்தசான்றாகச்சொல்லப்பட்ட நச்சினார்க்கினியரை விசாரித்தால், அது கொண்டே விரோதமில்லையெனத் தெளியப்பட்டு மெய்யீற்றண்மைச்சொல்லுக்கு முரியதென்பது நிரூபிக்கப்பட்டதாய்முடியுமாதலா லவரையே விசாரிக்கலாம்.

(இனி நச்சினார்க்கினியரை விசாரிப்போம்).

**வினா.** அண்மைச்சொல்லேயியற்கையாகும் என்ற சூத்திரம் என்னுதலிற்று?

**விடை.** எய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தது.

**வினா.** எய்தியது யாது?

**விடை.** அண்மைப்பொருளல்லாத விளிமாத்திரத்தில் எய்தக்கடவதாய் முன்னும் பின்னும் உயர்திணைக்கண் விதிக்கப்பட்ட விகாரவகை பலவுமாம்.

**வினா.** இங்கு எய்தியது என்ற இறந்தகாலக் குறிப்பால் முற்சூத்திரங்களால் விதிக்கப்பட்ட உயிரீற்று விகாரவிதிகளென்று ஏன் பொருள் கொள்ளக்கூடாது?



**விடை.** அங்ஙனங்கொள்ளின் இனிமேல் விதிக்கப்படும் மெய்யீற்று விதிகளெல்லாம் எய்தும் விதிகளெனவேண்டும். வேண்டவே அவ்விருகூற்றுக்கு மிடைநிகழு மிச் சூத்திரவிதி எய்துகின்ற விதியெனல்வேண்டுமாதலா னிதனைப் பிறிதுவிதி வகுக்கின்றது என நிகழ்காலக்குறிப்பாற் கூறுவதேமுறையாகும். அங்ஙனங்கூறாது பிறிதுவிதி வகுத்ததுஎன இறந்தகாலத்தாற் கூறுதல் முறையின்றாம். அன்றியும் இங்கு எய்தியது என்ற வினைக்குறிப்பிற்கு, விலக்கிற்று என்ற தொழிற்குறிப்பால் இறந்தகாலப்பொருள் பொருந்துவதின்று; நிகழ்காலப்பொருளே பொருந்துவதாம். ஏனெனில், யாண்டும் விலக்குதல் வருமுன்னர்க்காத்தலேயாகும். வந்தபின்பு விலக்குதல் சம்பாவிதமன்று; அது போக்குதலாம். இங்கு எய்தியது போக்கி யென்னாது விலக்கி என்றமையால் எய்துதலும் விலக்குதலும் ஏககாலமுடையவாயிருத்தலால் எய்தியதென்பதற்கு இறந்தகாலப்பொருள் கொள்ளாது, முன்னும் பின்னுமுள்ள சூத்திரங்கள் பலவற்றாலும் விளிமாத்திரத்தி லெய்தக்கடவனவாயுள்ள விகாரங்களையென்றே பொருள்கொள்ளவேண்டும். விலக்கி வகுத்தது என்பது ஓடிவந்தானென்பதுபோலு முடனிகழ்வினையாம். வகுத்தது என்ற இறந்தகாலம் உரையெழுதுவதற்கு முற்பட்டு நூன்முடிந்து சூத்திரங்களானைசெலுத்தத் தொடங்கியகாலம். இங்ஙனம் முன்னும் பின்னுமுள்ள இலக்கணங்களுக்கெல்லாம் நிமித்தமுள்ளவிடத்து சமகாலப்பிரவர்த்தியுண்டென்பதை வியாகரணம் வல்லார்வாய்க் கேட்டறியலாம். ஆதலால் எய்தியதென்றது பாதகமாக மாட்டாது. அன்றியும் எய்தியதென்பதைப் பொதுப்படக் கொள்ளாது மேற்சொல்லப்பட்ட விதியையே கொள்வதாயின், "முறைப்பெயர்மருங்கினையெனிறுதி, யாவோடுவருதற்

குரியவுமுளவே" என்ற சூத்திரத்தால் முறைப்பெயர்களுக்கு விதிக்கப்பட்ட விகாரவிதியைமட்டும் விலக்கி அப்பெயர்களுக்கே அண்மைப்பொருளில் இயல்பு விதித்ததாய் முடிந்து உயிரீற்றண்மைக்கே பொதுவிதியாகாது விரோதிப்பதாகும். அன்றியும், ஏனைப்புள்ளியென்னும் சூத்திரத்தின் உரையாசிரியருரையில் எய்தியது என்பதன் எதிர்மறைச்சொல்லாகியஎய்தாததென்னும் சொற்பொருள், முன்னும் பின்னும் விளிமரபிலுள்ள சூத்திரவிதிகளுள் ஒன்றாலும் எய்தாததென்றே தெளியக்கிடப்பது காண்க. இங்ஙனங் கொள்ளாக்கால் அத்தலைக்கருத்துப்படி முன் சூத்திரங்களாலெய்தாத தெய்துவித்ததாகவேண்டும். வேண்டவே மெய்யீற்று விளியெல்லாம் முன்னமே விதிக்கப்பட்டதாகவும், அவற்றின் வேறுபவிதியே இச்சூத்திரத்தால்விதிக்கப்பட்டதாகவும் கொள்ளல்வேண்டும். அங்ஙனங்கொள்ளலாகாதாதலால், எய்தியதென்பதற்கு ஏற்புழிக்கோடலாற் பெரும்பாலும் முன்சூத்திரங்களாலெய்திய விதியே பொருளாமாயினும், ஒரோவழி மேல்வரும் சூத்திரங்களால் எய்தற்குரிய விதியும் பொருளாமெனவறிக.

வினா. எய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுக்கின்றது என்றெழுதுவது முறையாகாதோ?

விடை. அதுவும் ஒருவகையால் முறையேயாம். ஆனால் அங்கும் எய்திய தென்பதற்கு எய்தக்கடவதென்றே பொருள் கொள்ள வேண்டும். வகுக்கின்றதென்ற நிகழ்காலம் சூத்திரம் ஆணை செலுத்திநிற்கும் நிகழ்ச்சியை நோக்கியதாக வேண்டும். அல்லாக்கால் 'தநநுஎ' என்ற சூத்திரத்தால் விளியேலாதென விலக்கிய தம்முன், நம்பன் என்பன "ஏனைப்



வினா. ஆயின் (செவ்வனே) 'எய்துகின்றதுவிலக்கி' யென்னாது எய்தியது விலக்கி என இறந்தகாலத்தாற் கூறுவதிற் பயனென்ன?

விடை. விலக்காதொழியில் எய்துவதொருதலை யென்னும் தேற்றப்பொருளுணர்த்தல் பயனாயிற்று. இதனை 'இம்மருத்துவன் செத்தவனை யுயிர்ப்பித்தான்' என்னும் வழக்காலறிக. இங்கு இம்மருத்துவன் வந்து உயிர்ப்பியாவழி அவ்வுயிர்ப்பிக்கப்பட்டானிறப்பது ஒருதலை யென்பதே பொருளாதல் கண்டறியலாம்.

வினா. அண்மைச்சொல்லென்பதற் கெவ்வாறு உரை யெழுதப்பட்டிருக்கிறது?

விடை. நான்கீற்றண்மைக்கண் விளியேற்கும் சொற்களென்றெழுதப்பட்டிருக்கிறது

வினா. நான்கீற்றண்மைச் சொற்களென்ற தெவற்றை?

விடை. முன்மொழிந்துகோடலாற் பெறப்பட்ட நான்குயிரீற்றண்மைச் சொற்களும், பின்னதுநிறுத்தலாற் பெறப்பட்ட நான்கு மெய்யீற்றண்மைச் சொற்களுமே.

வினா. அவ்விருவகையும் சேர்ந்தால் எட்டீற்றண்மைச் சொற்களாக வேண்டுமவற்றை நான்கீற்றண்மைச் சொற்கள் என்பது எவ்வாறு பொருந்தும்?

விடை. நான்கீற்றண்மைச் சொல்லென்றது எண்ணடுத்த சினையா விசேடிக்கப்பட்ட அண்மைச்சொல்லென்னும் ஒரு தொ திப் பெயராதலால், அத்தொகுதி யிரட்டித்த பன்மை நான்கீற்றண்மைச்சொற்கள் என வழங்குதல் தவறாகா

வினா. மேலே கூறியவிடை திருப்திகரமாயில்லையே அதற்கு தெளிவான உதாரணங் காட்டக் கூடுமா?

விடை. இருசீரடி, மூவசைச்சீர், நான்மணிமாலை, ஐந்தலைநாகம் அறுசீர்க்கழிநெடிலடி, எழுகூற்றிருக்கை முதலிய எண்ணடுத்த சினைமுதற் பொருளொவ்வொன்று மிரட்டித்தபன்மையில், அச்சினைகளில் வருணபேதமிருப்பினும், முறையே அவை, இருசீரடிகள், மூவசைச்சீர்கள், நான்மணிமாலைகள் ஐந்தலைநாகங்கள் என்றற்றொடக்கத்தனவாய் எண்ணிரட்டாமலே பன்மைப் பெயரால் வழங்குவதுபோல நான்கீற்றண்மைச் சொற்றொகுதியுள்ளும் உயிரும் மெய்யுமாகிய வருணபேத மிருப்பினும். அத்தொகுதி இரண்டு கூடிய கூட்டத்தை எட்டீற்றண்மைச்சொலென்னாது நான்கீற்றண்மைச் சொற்களெனப் பன்மைச்சொல்லால் வழங்கத்தகுமென அறிக. அன்றேல் மூவசைச்சீரிரண்டு கூடிய பன்மையை மூவசைச் சீர்கள் என்னாது அசைவேற்றுமை பற்றி ஆறசைச்சீரென்னல்வேண்டும். ஐந்தலைநாகமிரண்டு கூடியதொகுதியைப் பத்துத்தலைநாகமெனல்வேண்டும். அங்ஙனம் வழங்குதலின்மையால், நான்கீற்றண்மைச்சொற்கள் என்பதற்கு உயிரும் மெய்யுமாகிய இருவகை நான்கீற்றண்மைச் சொல்லும் பொருளாமென அறிக.

வினா. நான்கீற்றண்மைச்சொல் என்றதற்கு மேற்கூறிய நான்குயிரீற்றண்மைச்சொல் என்று பொருள்கொள்ளலாகாதா?

விடை. ஆகாது; ஏனெனில், பொதுப்பட வழங்கிய சொல்லாற்றலுக்குத் தடையுள்ள விடங்களில் மாத்திரம் சிறப்புப்பொருள் கொள்ளுதல் முறையாகும்; ஒரு தடையுமில்லாத விடத்திற் சொல்லாற்றல் வலிமையாற் பொதுப்பொருளே உணர்த்தப்படும்.

வினா. சொல்லாற்றலுக்குத் தடையெது?



விடை. இனம் விலக்கி நிற்கும் அடைமொழிகளும் பிறசார்பு முதலியனவும் ஆம்.

வினா. அண்மைச்சொல் என்றதற்கு நான்கீற்று அண்மைச்சொல் என ஏன் அடைகொடுத்து விசேடிக்கவேண்டும்?

விடை. எல்லாவீற்றிலும் அண்மைவிளி யுண்டென்று மயங்காமைப் பொருட்டே முன்னும் பின்னுமுள்ள நான்கீற்றை யதிகரித்துக் கூறியவாறு.

வினா. நான்குயிரீற்றண்மைச்சொல் என்று உரையெழுதப்பட்டிருந்து பின் ஏடெழுதுவோரால் நான்கீற்றண்மைச்சொல் என வழுப்பட எழுதப்பட்டிருக்கலாகாதா?

விடை. அப்படி யெழுதப்பட்டிருந்தால் ஒருசில வேடுகளிலேனும் ஒருசில பதிப்புக்களிலேனும் வேறுபாடம் காணப்படவேண்டும்; அன்றியும் சேனாவரையத்திலாயினும் பொதுமையி னெழுதப்படாதிருக்க வேண்டும். அங்ஙனமில்லாமையாலும், உரையாசிரியருரையும் பொதுவாகவே யிருப்பதாலும் நான்கீற்றண்மைச்சொல் என்ற பாடமே சுத்தபாடமாமென அறியத்தக்கது.

வினா. ஆயின் உதாரணங்களெல்லாம் உயிரீற்றுக்கே காட்டி மெய்யீற்றுக்குமட்டும் காட்டாது விட்டதென்ன?

விடை. உதாரணங்களெல்லாம் சிறிதும் விகாரமின்றி எல்லாராலு மெளிதினறியப்பட்ட பெயர் வடிவாகிய வியல்பு ஒன்றேயாதலால் ஒருவகைக்குக் காட்டியது கொண்டே பிறிதொரு வகையு மெளிதிலுணரத்தக்க தென்று, விடப்பட்டதன்றி வேறன்று, ஆதலால் அது விரோதமாக மாட்டாது.

வினா. ஏனைப்புள்ளியீறு என்னுஞ் சூத்திரம் என்னுதலிற்று?

விடை. வேண்டாகூறிவேண்டியது முடித்தது.

வினா. வேண்டாகூறலாவதென்ன?

**விடை.** "ஞரலள வென்னுமப்பானுன்கே புள்ளியிறுதி 'விளிகொள் பெயரே" என்ற சூத்திரத்தில் ஞரலள என்னுமெடுத்தோத்தாலும் நான்கு என்னும் எண்ணாலும் அந்நான்கு மல்லாத புள்ளியீறு விளிகொள்ளாவென்பது பெறப்பட்டிருக்கவும், (மறித்தும்) "ஏனைப்புள்ளியீறு விளிகொள்ளா" என்றசூத்திரம் வேண்டா கூறலாயிற்று.

**வினா.** வேண்டியது முடித்தலாவதென்ன ?

**விடை.** ஒரு சூத்திரத்தாலெடுத்தோதற் கெளியவா யொருநெறிப் படுதலின்றியே, முன்னும் பின்னும் கூறிய இலக்கணங்களிலடங்காது பிறழ்ந்து, ஒரு சில இலக்கணப்போலியும், வேறு சில வழுவமைதியுமாய், எய்தியதுவிலக்கல் எய்தியது இகந்துபடாதுகாத்தல் எய்தாததெய்துவித்தல் முதலிய பலவேறு நெறிபற்றி நிற்கும் ஒரு சில இலக்கியங்களை வழக்குநோக்கி அகதிககதியாயமைத்துக்கொள்ளுதலாம். (அஃதாவது இங்குக்கூறப்பட்டபுள்ளியீறு பிறவாற்றான் விளிகொள்ளுதலும் ஏனைப்புள்ளியீறு விளிகொள்ளுதலும் கொள்ளத்தகுமென்பதாம்.

**வினா.** பிறவாற்றால் விளிகொள்ளலாவதென்ன ?

**விடை.** கூறப்பட்டபுள்ளியீற்றுச்சொற்களுக்கு விளிமரபிற் கூறியுள்ள விளியேற்குமாறு இலக்கணநெறியாமாதலால், அதனிற் பிறவாமாறு இலக்கணப்போலியும் வழுவமைதியு முதலிய நெறிவேறுபாட்டால் விளிகொள்ளுதலாம்,

**வினா.** மெய்யீற்றண்மைவிளியு மிதனுளமையாதா.?

**விடை.** அமையாது: ஏனென்றால் அது அண்மைச்சொல்லே இயற்கையாகும் என்ற சூத்திரத்தால் எளிதில் எடுத்தோதி விதித்தற்கேற்றவாறு ஒரு நெறிப்பட்டதும், சார்வத்திரிகமுமாமாதலால் அஃதெடுத்தோதியே விதிக்கற்பாலது. அன்றியும்



அதன் ஒரு பகுதியாகிய னகரவீறும் 'அண்மைச்சொல்லிற் ககர மாகும்' என்றெடுத்தோதியே விகற்பவிதி விதிக்கப்பட்டிருக்கிறது; மெய்யீற்றோடொத்த உயிரீறும் எடுத்தோதியே சார்வத்திரிகமாய் அண்மைவிளி விதிக்கப்பட்டதென்றிருதலைக்கு முடம்பாடாயிருக்கிறது. இங்ஙனமுன்னும் பின்னுமெடுத்தோத்தால் அண்மைவிளி விதிக்கப்பட்டிருக்க இடைநின்ற நான்கு மெய்யீற்றுக்குமட்டும் எடுத்தோதாதிச் சூத்திரத்திலேசினுலண்மைவிளி விதிக்கப்பட்டதென்பது நெறிப்பாடுடையதின்றும். இலேசினுலமைப்பன வேறுகதியற்றவா யருகிவருமிலக்கியவகைகளேயாம். அன்றியும் இச்சூத்திரத்தால் மெய்யீற்றண்மையையுமமைப்பதே தொல்காப்பியர் கருத்தாயின் இதனோடொத்த ஏனையுயிரே என்ற சூத்திரத்துள் உயிரீற்றண்மைவிளியுமிதுபோலமையக்கிடத்தலால், அண்மைச்சொல்லே யியற்கையாகும் என்ற சூத்திரம் வகுத்ததே பயனின்றாய் முடியும். ஆதலால் மெய்யீற்றண்மை விளியை 'ஏனைப்புள்ளியீறுவிளி கொள்ளா' என்ற சூத்திரத்தாலாசிரியரமைத்திருப்பர்என்று கருதுவது சிறிதும் பொருந்தாதென்றறியத் தக்கது.

ஆனால் 'ஏனைப்புள்ளியீறுவிளிகோள்ளா' என்ற சூத்திரவுரையில் உதாரணமாகக் காட்டப்பட்ட விளியுள் ஒன்றேனும் மெய்யீற்றண்மைவிளியில்லையா ?

உண்டு; அவை 'அண்மைச்சோல்லேயியற்கையாகும்' என்ற சூத்திரத்தாலும் பிறவாற்றாலும் பெறப்படாத இலக்கணப்போலியும் வழுவமைதியுமாயுள்ளவை.

விடையைச் சிறிதுவிளக்கிக்காட்டி நிறுவவியலுமா ?

இயலும்; இச்சூத்திரவுரையுட் சேனாவரையாராலும், இளம்பூரணராலும் காட்டப்பட்ட உதாரணங்களுள் ஒன்றேனும்

அந்நான்கிற்று அண்மைவிளியில்லை. நச்சினார்க்கினியருரையிலும் பெரும்பாலும் காட்டப்பட்டன விளிமாத்திரத்தில் வரும் விகாரவகைகளே. இயல்புவிளிகள் சிலவே. அவற்றுள் இங்காராயத்தக்கன நான்குமெய்யீற்றியல்புவிளியுதாரணங்களேயாம். அவற்றுள்

(1) நம்பன் என்றது னகரவீற்றுதாரணமாம், இது 'தநுள' என்ற சூத்திரத்தால் விளியேலாவென்று விலக்கப்பட்டவற்று ளடங்காது பிறழ்ந்துநின்று விளியேற்றமையால் வழக்குநோக்கி அகதிகதியாய் இச்சூத்திரத்திலேசினால் வழுவமைதியாயிங்கமைக்கவேண்டியதாயிற்று. இதனால் "கடல்வண்ணன்" போலும் விலக்கப்படாத அண்மைவிளி இங்கமைக்கவேண்டாது அண்மைச்சொல்லேயியற்கையாகும் என்ற சூத்திரத்தால் விதிக்கப்பட்டதாமென அறியத்தக்கதாம்.

(2) மாந்தர் கூறீர் என்றது விளிமாத்திரத்தில் "ஆருமருவும் ஈரொடுசிவணு"மென்ற சூத்திரவிதியால் "மாந்தீர்" என்று பிரயோகமில்லாத அநிஷ்டரூபமாய் விளியேற்கவேண்டுமாதலால் அங்ஙனம் வேண்டாவடிவை யொழித்து வழக்குநோக்கி வேண்டிய வடிவாகிய மாந்தர் என்னும் இயல்புவிளியே இங்கமைக்க வேண்டியதாயிற்று. ஆதலால் "துன்றியகனைகழற்றூதர்கொள்கெனப், பொன்றிணிகலன் களுந்தூசும்போக்கினான்" *என்புழித் தூதர் என்பதுபோலும் ரகரவீற்றண்மைவிளி இதன்கண் அமைத்ததாக மாட்டாது.

(3) குரிசில் கூறாய் என்ற உதாரணமும் விளிமாத்திரத்தில் எஞ்சிய விரண்டின் என்னும் சூத்திரவிதியால் குரிசீல் என நித்தியமாய் ஈற்றயல் நீட்டமே பெறுவது அருகிய வழக்காதலால் அதற்குப் பெருவழக்காகிய இயல்பும் கொள்ளவேண்டி இச்சூத்திரத்திலேசான் விகற்பிக்கப்பட்டது. ஆதலாலிது சிலப்பதிகாரத்துள்ள மால் என்பது போலு மண்மைவிளிக்குதாரணமாகமாட்டாதென அறிக.

(4) கானல் கூறாய் என்ற உதாரணம் அஃறிணைப்பெயராய் இலக்கணையாலுயர்திணைக்கண் வந்த ஒருமொழியாதலால் அதனீறு உயர்திணைக்குரியதா யெடுத்தோதிய நான்கு மெய்யுளடங்காதாதலால் விளிமாத்திரத்தில் வழுவமைதியாயமைக்கவேண்டியதாயிற்று.

* கம்பராமாயணம் எழுச்சிப்படலம்.



(5) கடவுள் வாழியென்ற உதாரணம் அந்நான்கிற்றுளடங்கியதாயினும் விளியேற்குமென்ற துணையல்லது விளிமாத்திரத்திலிவ்வாறு விளியேற்குமென்று ஒரு சூத்திரத்தாலும் விதந்தோதப்படாமையால் வழக்கு நோக்கி ஆண்டுமியல்பேயா மென்று ஐயமறுத்தற்கு ஈண்டமைக்க வேண்டியதாயிற்று.

(6) விளங்கு மணிக்கொடும்பூணாய் என்ற உதாரணம் இயல்பேயாயினும் பிறவீறுதலா லீண்டாராயத்தக்கதன்று.

(7) கிழவோய் என்ற உதாரணம் அந்நான்கிற்றுச் சொல்லுளடங்கியதா யண்மைவிளியிலியல்புபெறுமாயினும் விளிமாத்திரத்தில் விதந்தோதப் பெறாத விகாரவிளியேற்று நிற்கும் வழக்குநோக்கி இலக்கணப்போலியா யிங்கமைக்கவேண்டியதாயிற்று. மாயோய் என்றவுதாரணத்துக்கும் இஃதொக்கும். இதனாலும், கிழவோன் மாயோன் என்ற சொற்கள் ஒத்தவியல் புடையனவெனவும், அவற்றுள் கிழவோன் என்பது உடம்பொடுபுணர்த்தலாற் பெறப்பட்டதெனவும், மாயோன் என்பது ஒப்பின்முடித்தலாற் பெறப்பட்டதெனவும், அவை அண்மைப் பொருளிலியல் பாய்விளியேற்றலே இலக்கணமுடையவெனவும், ஆதலாலவையிங்கமைக்க வேண்டாவாயினவெனவும் அறியத்தக்கன.

இதுகாறுங் காட்டிய உதாரணங்களு ளொன்றும் அண்மைவிளிக்குதாரண மாகாதென வறியத்தக்கது.

(8) இனி 'ஆவுமானியற் பார்ப்பனமாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும் பேணி' 'என்றாற்போலுமண்மைவிளியுமிதனாற்கொள்க' என்று குறிக்கப்பட்டனவே இங்கு காட்டப்பட்ட அண்மைவிளிகளாம். இம்முதற்குறிப்புடைய பாட்டுப் புறநானூற்றின்க ணுள்ளது. அதனுரையுள் இதனிலக்கணம் இவ்வாறன்றி வேறுவழியாற் காட்டப்பட்டிருக்கிறது. அவ்வுரையிற் சொல்லியது பொருந்தியதா? இவ்வுரையிற் சொல்லியது பொருந்தியதா? என்ற ஆராய்ச்சி ஈண்டைக்கு வேண்டுவதொன்றன்று. பிறநூலுரையாசிரியரினும் தொல்காப்பிய உரைகாரரே இலக்கணத்திலூன்றியவறிவுடையவரென அத்தலையிலுடம் பட்டிருத்தலால் இதனையங்கீகரிக்கத்தடையில்லை.

இங்கு, 'ஆ;' 'பார்ப்பனமாக்கள்;' 'பெண்டிர்;' 'பிணியுடையீர்;' என நான்கு அண்மைவிளிகள் காட்டப்பட்டன. இவற்றுள் ஆவென்

'பது ஈண்டாராய்ச்சிக்குவேண்டுவதன்று. ஏனைமூன்றுமே ஆராயத்தக்கன.

1. பார்ப்பனமாக்கள் என்பதில், மாக்கள் என்பது கள்ளீறேற்ற அஃறிணைப்பெயராய்த் திணைபிறழ்ந்து உயர்திணைக்கண்வந்து அண்மைவிளி யேற்றலால் உயர்திணைக்கே யுரியவாய் ஓதிய அந்நான்கீற்றுளடங்காமையால், 'அண்மைச்சொல்லேயியற்கையாகு' மென்றவிதிப்படி இயல்பு பெறுதற்கு இயலாதாயிற்று. ஆதலாலது வழக்குநோக்கி வழுவமைதியாயிங்குஅமைக்கவேண்டியதாயிற்று.

2. பெண்டிர் என்பது முன்னிலைக்குரிய இர் ஈறுபெற்ற பெயராதலாலதனீறு படர்க்கைக்கேயுரியவா யெடுத்தோதிய அந்நான்கீற்றுளடங்காதாதலா 'லண்மைச்சொல்லேயியற்கையாகு' மென்ற விதிக்கிலக்காதலின்றி அண்மைவிளியேற்றியல்பாய்நின்ற வழக்குநோக்கி வழுவமைதியாயிங்கமைக்கவேண்டியதாயிற்று.

3. பிணியுடையீர் என்பது முன்னிலைக்குரிய ஈர் ஈற்றுப் பெயராதலால் படர்க்கைக்கேயுரியவா யெடுத்தோதிய அந்நான்கீற்றுளடங்காமையால், 'விளங்குமணிக்கொடும்பூணாய்' என்ற பிறவீறுபோலவே அண்மைவிளியேற்று இயல்பாய்நின்ற வழக்குநோக்கி இலக்கணப்போலியாயமைக்கப்பட்டது.

இங்கு, பிணியுடையார் என்னும் படர்க்கைப்பெயரே விளியேற்புழி 'ஆருமருவுமீரொடுசிவணும்' என்ற சூத்திரவிதிப்படி பிணியுடையீர் என விலக்கணமுடையதாய் விளிபெறுமாயினும் அஃது அண்மைவிளியாகாது; விளிமாத்திரமேயாம். அதனோடிதனிடை சொல்லாலொருசிறிதும் வேற்றுமையில்லையாயினும் இஃதண்மைப்பொருளுமுடைமையால் இது வேறாயமைத்துக்கொள்ள வேண்டியதாயிற்று. இவ்வாறே பிறமெய்யீற்றண்மைவிளிக்கும் இயல்புவிளிக்கும் சொல்வேறுபாடில்லையாயினும் பொருள்வேறுபாடுண்டென்றறியத்தக்கது. (அதாவது நம்பன், மாந்தர், குரிசில், கடவுள் என்று இச்சூத்திரவுரையிற் காட்டப்பட்டஇயல்புவிளியும், 'கடல்வண்ணன்' முதலாக அடியார்க்குநல்லார்காட்டிய அண்மைவிளியும் வேறுவேறுவகை என்றறியவேண்டுமென்பதாம்.) இங்கிறுதியிற்காட்டிய நான்குமே அண்மைவிளியென்று உரையிற்காட்டப்பட்டன. இவற்றின்வேறு யுரையில்'இயல்பு'



எனறு காட்டப்பட்ட நம்பன் முதலியனவெல்லாம் விளிமாத்திரத்தில் வந்த இயல்புவிளி என்றறியத்தக்கன. ஆதலால் நம்பன் என்பது அன்னீற்றண்மைவிளிக்குக் காட்டன்றென்றறிக.

வினா. 'ஏனைப்புள்ளியீறு' என்னும் சூத்திரவுரையினிறுதியிற்காட்டிய அண்மைவிளியுடன் சேர்த்தே கடல்வண்ணன்முதலிய அண்மைவிளிகளும் அமைக்கப்பட்டனவாகக்கொள்ளுதல் கூடாதோ ?

விடை. கூடாது; ஏனெனில் இங்குக்காட்டிய அண்மைவிளியனுகாரத்தில் முற்கூறிவந்த முறையே என வென்னுது ("ஆவும் ......பேணி") 'என்றாற்போலும்' அண்மைவிளியென்று இலக்கணப்போலியும்வழுவமைதியுமாந்தன்மைபற்றிப் பகுத்து அண்மைவிளியை விதந்து கூறினமையால், இவை போலாத கடல்வண்ணன் முதலிய அண்மைவிளி இதனுற் கொள்ளல் வேண்டாவென்றே காட்டியவாறாயிற்று.

வினா. னரலள வென்னும் சூத்திரவுரையுட் சேனாவரையர் 'உயிரீற்றுயர்திணைப்பெயர்விளியேற்குமாறுணர்த்தி, இனிப்புள்ளியீற்றுயர்திணைப்பெயர் விளியேற்குமாறுணர்த்துகின்றார்'. என்றதனால், அண்மைச்சொல்லே யியற்கையாகுமென்ற சூத்திரம் உயிரீற்றுக்கேயுரியதென்று சித்திக்கவில்லையா ?

விடை. இதனால் அச்சூத்திரம் உயிரீற்றுக்கேயுரியதென்று சித்திக்கமாட்டாது. உயிரீற்றுக்கு உரியதென்று சித்திக்கும்; அதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லை. அச்சூத்திரமுடிய உயிரீற்றுவிளியு மிருப்பதால் அதனது முடிவே உயிரீற்றுவிளிமுடிவென்று சொல்லவேண்டியதாயிற்று. அதனால் அச்சூத்திரம் மெய்யீற்றுக்குரியதன்றென்று சொல்லியதாகாது. ஏனெனில் பலவற்றிற்குரியதொன்றைச் சிறப்புடைய ஒன்றனுரிமைபற்றிக் கூறியதுகொண்டு ஏனையவற்றிற்குரியதன்றென்று சித்திக்குமாயின் 'அந்தணர்நூற்கும்' என்ற குறளுள் அந்தணர்நூலென்றது ஏனையர்க்குரியதன்றென்று சித்திக்கவேண்டும். அங்ஙனமின்றென்பதை யக்குறளுரையாலறியலாம். இனிப்புள்ளியீற்றுயர்திணைப்பெயர் விள

யேற்குமாறுணர்த்துகின்ற தென்பது ஒரோவழி மாதப் பிறப்பு முதல்நாளில் கலப்புற்றுவந்தாலும், கலப்பற்ற மறு நாளையே முதல்நாளாகவைத்து அம்மாததினமெண்ணுவது போலப் பிற்பட்ட சூத்திரங்களே கலப்பறப் புள்ளியீற்று விளி யுணர்த்துதல்பற்றி அங்ஙனம் கூறப்பட்டதென்க. சேனாவரையர்க்கு மிதுவே கருத்தென்பதை அவருரையுள் யாண்டும் மெய்யீற்றண்மை யியல்புவிளியை யமைத்துக் கொள்ளாது விடுத்ததே சான்றாகக்கொண்டறிக.

**வினா.** அண்மைச்சொல்லே இயற்கையாகும் என்ற சூத்திரவுரையுள் (உரையாசிரியர்) இறந்ததுகாத்தது என்றெழுதி இருப்பதற்குப் பொருள் என்ன?

**விடை.** அதன்பொருள் விளங்கவில்லை.

**வினா.** அதற்கு எய்தியது விலக்கிற்றென்று பொருள்கொள்ளக் கூடாதா?

**விடை.** உரைகாரர்க்கது கருத்தாயின் 'அளபெடைமிகூஉம்' 'சுட்டு முதற்பெயரே' 'நும்மின் றிரிபெயர்' என்ற சூத்திரவுரைகளிலவரெழுதியவாறே 'எய்தியது விலக்கிற்று' என்றே ஒரு முறைப்படவெழுதி இருப்பர். அங்ஙனமெழுதாமையானும், 'முறைப்பெயர் மருங்கின்' என்ற சூத்திரவுரையில் 'இறந்தது காத்தது' என்றெழுதியுள்ளபடி அச்சூத்திரம் எய்தியதை விலக்காமையானும் அவர்க்கது கருத்தன்றென்றறிக. அன்றியும் இறந்தது காத்தது என்பது தகுதியால், இறக்கக் கடவதனைக் காத்தது என்றே பொருள்படுமாதலால் இது வும் அத்தலைக்கொரு சாதகமாகமாட்டாது. விகாரவிதியா லிறக்கக்கடவதாய்நின்றவியல்பைக்காத்ததென்று கொள்ளவே பொருத்தமுடையதா யித்தலைக்கே சாதகமாகும்.

**வினா.** 'அணியாரைக்கூவுமிடத்து அவை இயல்பேயாய் விளியேற்கும்' என்ற இளம்பூரணருரையுள் அவை யென்று சுட்டியதெவற்றை?

**விடை.** இயல்பாய் விளியேற்கு மென்ற பயனிலைக்கு எழுவாயாய்ச் சூத்திரத்துட் பொதுப்படச் சொல்லப்பட்ட அண்மைச்



சொற்களையே. அணியாரைக் கூவுமிடத்து அவையென்றது அண்மைச்சொல் என்றதன் பொருளை விரித்துரைத்தபடி. அதாவது அணியாரைக் கூவுமிடத்து அச்சொற்கள் (அணியாரைக் கூவும் சொற்கள்) என்றபடி.

**வினா.** இங்கு, அவையென்றது நான்குயிரீற்றுச் சொற்களையே சுட்டியதாகக் கொள்ளுதல் கூடாதா?

**விடை.** கூடாது; ஏனெனில் உரைகாரர்க்கது கருத்தாயின் ஏனையுயிரே யென்னுஞ்சூத்திரவுரையில் 'மேற்சொல்லப்பட்ட நான்கு மிருமல்லாத' வெனவும், 'ஏனைப்புள்ளி' என்னுஞ் சூத்திரவுரையுள் 'மேற்சொல்லப்பட்ட நான்கல்லாப்புள்ளி' எனவும் நான்கிற்றை ஆங்காங்குத் தனித்தனி விதந்துகூறிப்போந்த அவர் முன்னும்பின்னுங் கூறியமுறைபற்றி, மேற்கூறப்பட்ட நான்குயிரீற்றண்மைச்சொல் என்றே விதந்தோதி யிருக்கவேண்டும். அங்ஙனமின்றி அணியாரைக்கூவுமிடத்து அவை யென்று பொதுப்படக் கூறியகுறிப்பால் அவை யென்றது உயிரும் மெய்யுமாகிய இருவகை நான்கீற்றண்மைச்சொற்களையும் சுட்டியதென்றேயறியத்தக்கது.

**வினா.** ஆனால் மெய்யீற்றண்மைவிளிக்கேன் உதாரணங்காட்டப்படவில்லை?

**விடை.** உயிரீற் றண்மைவிளியுள்ளும் ஓகாரவியல்புக் குதாரணங் காட்டப்படவில்லை. ஆதலாற் காட்டவேண்டு முதாரணங்கள் முற்றுங்காட்டாது ஒரு சிலவேகாட்டப்பட்டன வென்றுணரத்தகும்.

**வினா.** ஓகாரவீற்றுக்குதாரணம் காட்டப்பட்டிருந்து ஏடெழுதுவோரால் விடப்பட்டிருக்கலாகாதா?

**விடை.** அவ்வாறே மெய்யீற்றுக்கு மெழுதப்பட்டிருந்து விடப்பட்டிருக்கலாம்.

**வினா.** 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்பது உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் பொதுவலாமானால் ஈறுபற்றி வேறு வேறோதிவருமுறைக்கு விரோதமில்லையா?

விடை. ஒவ்வோரீற்றுக்கும் வேறு வேறு சூத்திரங் கூறவேண்டு மென்பது நியமமின்றாம், ‘இ ஈ யாகும் ஐ ஆய் ஆகும்’ என ஒரு சூத்திரத்துள் இரண்டீற்றுக்கு விளிவிதிக்கப்பட்டது (இது ஸஜாதீய விபாகவிதி) ‘எஞ்சியவிரண்டின்’ என்னுஞ் சூத்திரத்தால்இரண்டீற்றுக்கு விளிவிதிக்கப்பட்டது. (இது ஸஜாதீய ஸமுதாயவிதி) ‘புள்ளியுமுயிருமிறுதியாகிய’ என்ற சூத்திரத்தில் உயிரீறு மெய்யீறுமாகிய பலவீற்றுவிளி விதிக்கப்பட்டது. (இது விஜாதீய சமுதாயவிதி) இதுபோல்இங்கு விஜாதீய சமுதாய விதியாய் அண்மையியல்புவிளி விதித்தது தவறாகாது.

வினா. உயிரீற்றுக்கெல்லாமிறுதியில் அண்மையியல்புவிளி இருக்குமுறையே மெய்யீற்றுவிளிகளினிறுதியில் அவ்வீற்றண்மைவிளி இருக்கவேண்டியது முறையாகாதா?

விடை. ஆகாது; ஏனெனில் இயல்புவிளி விகாரவிளி யென்னு மிரண்டனுள் இயல்புவிளி (அகநிலையென்னும்) அந்தரங்க காரியமாகிய சித்தமாயும், விகாரவிளி (புறநிலை என்னும்) பகிரங்க காரியமாகிய சாத்தியமாயு மிருப்பதால் அந்தரங்க பகிரங்கங்களிரண்டனுள் அந்தரங்கமே முற்பட நிகழ்தற்குரியது என்னும் நியாயத்தால் இயல்பாகிய அண்மைவிளியே முற்பட வைத்தல் வேண்டும். இதனை ‘ஆனெனிறுதியியற்கையாகும்’ ‘அயனெடிதாயினியற்கையாகும்’ என அவற்றின் விகாரவிளிக்குமுற்படவே இயற்கைவிளிச் சூத்திரங்களிருத்தலாலறியலாம். ஆதலால் மெய்யீற்றண்மைவிளிச் சூத்திரம் பிற்படவைக்கவேண்டுமென்பது முறையாகாதென்றும் முற்பட வைத்திருப்பதே முறையாகுமென்று மறியத்தக்கது.

வினா. ஆயின் உயிரீற்றண்மைவிளி யிலக்கணத்தை அவ்வாறு முற்படவையாததென்?

விடை. அங்ஙனம் வைப்பிற் சூத்திரம் பல்குமாதலால் மெய்யீறமகப்படவொருசூத்திரமாக்கவேண்டி யிறுதியில் வைத்தாரென்க. இங்கு முறைபிறழக்கூறிய இச்சூத்திரம் மெய்யீற்றுக்குமுரித்தாமென்பதை ஞாபித்துப் பயனுடைத்தாய் விட்டமையாற் பிழையிலதாமென அறிக.



வினா. ஆயின் இவ்வாறே முறைப்பெயர்களை ஒரு சூத்திரமாகக் கூறாது வேறு சூத்திரத்தாற் கூறியதென்?

விடை. முறைப்பெயர்மருங்கின் என்ற சூத்திரத்தால் ஐகாரவீற்றுக்கு ஆகாரம் விதிக்கப்பட்டது. முறைப்பெயர்க்கிளவி யென்ற சூத்திரத்தால் னகரவீற்றுக்கு ஏகாரம் விதிக்கப்பட்டது. இவ்விரண்டு மண்மைச்சொற்போல ஈற்றுனடுத்துநிற்றலும் விதியானொற்றுமையுடைமையு மில்லாதனவாதலால் வேறு வேறு கூறவேண்டியவாயின. இனி னகர ளகரவீற்று முறைப்பெயர்கள் விதியாலொற்றுமையுடையவாயினும் ஈற்றுலடுத்துநிற்றற்குரியன வாகாமையால் மாட்டேற்றால் வேறு கூறலாயிற்று.

வினா. அண்மைப்பொருள்பற்றிய உயிரீற்றுக்கும் மெய்யீற்றுக்கும் விளிச்சூத்திரம் பொதுப்பட வோதியதானால், அவ்வாறு சுட்டுவினாப் பொருள்பற்றிய விலக்குச் சூத்திரங்களையும் பொதுமையில் எல்லாவீற்றுக்கும் ஒன்றாயிருக்கும்படி ஏன் கூறலாகாது?

விடை. அவை ஒவ்வொன்றும் அடுத்துநிற்றற்குரியவாகாத பல வீறுகளாம். அவற்றுள் னகாரகரவீறுகளடுத்துநிற்பினும் னகர வீற்றுக்கே சிறப்பாயுள்ள யான்தான் என்னுஞ் சொற்கு நிகர் ரகரவீற்றுளில்லை; ஆதலால் தான் யா னென்பதற்கு வேறு சூத்திரமோத வேண்டும். அன்றியும் ரகர வீற்றுள் நும்மின் றிரிபெய ரடங்காமையால் அதற்கு வேறு சூத்திரஞ் செய்யவேண்டும். இங்ஙனம் சூத்திரம் சுருங்குமாறில்லாமையாற் பொதுமையிலொருசூத்திரமாகக் கூறவியலாதாயிற்று.

வினா. ஆனால் அண்மைச் சொற்போல அளபெடைப் பெயர்களுக்கெல்லாம் விதியொற்றுமைபற்றி ஒரு சூத்திரத்தால் விதிக்கக்கூடாதோ?

விடை. கூடாது; ஏனென்றால்? அளபெடையீறு உயிரீறு மெய்யீறுபோல் நிறுத்தமுறையான் எடுத்தோதப்பட்ட பிரதானமாகாது. உயிரையும் மெய்யையும் சார்ந்தே விதித்தற்குரிய

அப்பிரதானமாயிருப்பதுமன்றி, அண்மைச் சொற்போல ஈறுதோறுந் தவறாது விளிக்குமியல்புமிலவாம். ஒருசேர நிற்றற்குரிய இயைபுமிலவாம். எங்ஙனமெனில்? உயிரீற்றுள் 'அளபெடைமிகூஉம் இகர விறுபெயர்' என்றதனால் ஓரீறே கொள்ளப்பட்டது. இச்சூத்திரத்தை யடுத்து ஐயீற்று முறைப்பெயர் நிற்றலால் ணகரவீற்றளபெடையியையுமாறில்லை. ஆதலாலது மாட்டெறியப்பட்டது. அதனை யடுத்து, அன்னகரவீற்றுமுறைப்பெயர்விதியும், சுட்டுமுதற்பெயர் விலக்கும் நிற்கவேண்டு மாதலால் ரகரவீற்றளபெடை யியையுமாறில்லை. அதனாலதுவு மாட்டெறியப்பட்டது. அதனை யடுத்துச் சுட்டு முதற்பெயர் விலக்கி நிற்றலால் லகாளகரவீற் றளபெடை யியையுமாறில்லை. அவ்விரண்டு மொருங்கியைந்த வழி ஒரு சூத்திரத்தால் மாட்டெறியப்பட்டன. அதனையடுத்து அஃறிணை விரவுப்பெயர்க்குப் பல்வகைவிளியும் மாட்டெறியப்பட்டமையால் அதற்கீறுதோறும் வேறு கூறவேண்டாதாயிற்று. இங்ஙனம் பொருந்துமிடமின்மையா லொருசூத்திரத்தாளபெடைவிளி கூறப்படாதாயிற்று.

விஞ. அண்மைவிளிபொதுவாயின் அதனோடியையபுடைய செய்மை விளிச்சூத்திரத்தோடு சேரவையாத தென்ன?

விடை. இயல்பாகவே விளிக்குறுப்பாகிய அண்மை முற்பட்டும், சேய்மை பிற்பட்டுமிருப்பதால் அம்முறையே முறையாக அண்மைவிளி விளிமாத்திரத்தினும் முற்பட்டுநிற்கத்தக்கதாயும், சேய்மைவிளி விளிமாத்திரத்திற் பிற்பட்டு நிற்கத்தக்கதாயுமிருக்கும் முறைமைபற்றியே இவ்விரண்டும் ஒருசேரவைத்தற்குரியனவல்ல வாயின.

விஞ. 'அண்மைச்சொல்லிற் ககரமாகு' மென்ற அண்மைவிளிச்சூத்திரம் ஏன் அவ்வாறு அன்னீற்று விளிமாத்திரத்தின் முற்பட நிற்கவில்லை.

விடை. அங்ஙனம் நிற்பின் அன்னீற்றதிகாரமில்லாமையால் நான்கு புள்ளியீற்றுக்குமுரித்தா யிலக்கியத்தைச் சிதைவிப்பது



மன்றி, அன்னீற்றுக்கு இயல்புவிளியை விலக்கி விகாரவிளியே விதித்ததாய் முடியுமாதலால் அதனை நீக்கக் கருதிப் பின் வைக்கப்பட்டதென வறிக.

வினா. 'அண்மைச்சொல்லேயியற்கையாகும்' என்பது பலவீற்றண்மைவிளிக்கும் பொது விதியாகவும், 'அண்மைச்சொல்லிற் ககரமாகும்' என்பது அன்னீறொன்றற்கே யுரிய சிறப்புவிதியாகவுமிருத்தலாற் பொது விதியைச் சிறப்புவிதியே பாதிக்கும் என்னும் நியாயத்தால் அண்மையியல்புவிளி அன்னீற்றுக்கு இல்லையென்று விலக்கப்பட்டதாகாதா?

விடை. ஆகாது; ஏனெனில் ஆசிரியர்க்கு அது கருத்தாயின் விளிமாத்திரத்தினும் அண்மைவிளியே முற்பட்டு நிற்கவேண்டிய முறைபற்றியும், அதிகாரம்பற்றியும் 'அன்னெனிறுதி யாவாகும்மே' என்ற அன்னீற்று விளிச்சூத்திரத்தின் முற்பட்டு வைத்திருக்கவேண்டும். அதாவது 'அன்னெனிறுதி ஆகாரமாகும்' என முன்னும், 'அண்மையில்வழி ஆவாகும்மே' எனப் பின்னுமாகக் கூறியிருக்கவேண்டுமென்பதாம்) அங்ஙனம் வையாது அன்னீற்றுவிளிக்கு முதன்மையாமிடத்தில், 'அண்மைச்சொல்லே யியற்கையாகு' மென்ற சூத்திராந்தர்க்கதமாயுள்ள (அன்னெனிறுதி யியற்கையாகும்' என்னும்) ஒருசூத்திரநிற்பதாகவே பாவித்து, அதனுடன் விரோதியாயிருக்கவேண்டி 'அன்னெனிறுதி யாவாகும்மே' என்ற அன்னீற்று விளிமாத்திரச் சூத்திரத்துக்கும் பிற்பட்டு நிற்கும்படி 'அண்மைச்சொல்லிற் ககரமாகும்' என்ற சூத்திரம் வைக்கப்பட்டிருத்தலால் அது, தனக்கு விஜாதீயமாய் முற்றும் விரோதியாய் அடுத்து முற்பட்டு நிற்கும், 'அன்னெனிறுதியாவாகும்மே' என்ற அன்னீற்று விளிமாத்திரச் சூத்திரத்தைப் பாதிப்பதல்லது, ஸஜாதீயமாய் ஏகதேச விரோதியாய் இடையிட்டுச் சேய்மையிலிருக்கும் 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்ற அண்மை யியல்புவிளிப் பொதுச்சூத்திரத்தை பாதிக்கமாட்டாது. இதனால் அன்னீற்றுச் சொற்களெல்லாம் அண்மை

விளியில், இயல்பும், ஈறுதிரிதலுமாகிய இருவகைக் விகற்பமு முடையவாமென வறிக.

வினா. அன்னீற்றுச்சொற்களுக்கு அண்மைவிளியில் இயல்பும், ஈறு திரிதலுமாகிய இருவகையான விகற்பமுண்டென்று ஆசிரியர் கொண்டனராயின் 'அண்மைச்சோல்லிற் ககரமுமாகும்' என எச்சவும்மைகொடுத்துக் கூறாததற்குக்காரணமென்ன?

விடை. எச்சவும்மைகொடுப்பின், முற்சூத்திரத்தால் அன்னீற்றுக்கு விதிக்கப்பட்ட ஆகாரத்தையே தழுவி, அன்னீறு அண்மை விளியில் அகரமும், ஆகாரமுமாகத்திரிந்து விகற்பமாம் எனப்பொருள்பட்டு இலக்கியத்தைச் சிதைக்குமாதலால் அவ்வெச்சவும்மைகொடுத்துக் கூறக்கூடாதாயிற்று.

வினா. ஆயின், 'அண்மைச்சொல்லேயியற்கையாகு' மென்ற சூத்திரம் உயிரீற்றின் முதற்கண் வைக்கற்பாற்றாகவும், ஆங்கு வையாது உயிரீற்றினிறுதிக்கண் வைத்த காரணமென்ன?

விடை. உயிரீற்று விளியின் முதற்கண்வைப்பின், அங்கு மெய்யீற்றதிகாரமில்லாமையால் 'உளவெனப்பட்ட வெல்லாப்பெயரும்' என்புழிப்போல மெய்யீற்றையு மதிகரித்துக்கொள்ள வேண்டும். அவ்வண்மைவிளியின் விசேடமாகிய 'அண்மைச்சொல்லிற்ககரமாகு' மென்ற விகார விளியுமங்கு முடிக்கவேண்டும்; அதற்கு னகரவீறு தனியே யதிகரிக்க வேண்டும். அதன்பின் உயிரீற்று விகாரவிளி தொடங்குங்கால் அதிகாரப்பட்டு நின்ற மெய்யீற்றை யொழிக்கவேண்டும். அங்ஙனமொழித்த மெய்யீற்றை உயிரீற்று விளி முடிவில் மறுமுறை யதிகரித்துக்கொள்ளவேண்டும். இங்ஙனம் அதிகாரப்பட்டதொன்றன் காரியமுடியுமுன் அதனை யொழிப்பதும், பிறிதொன்றன் காரியமுடித்து மறுமுறையாக வொழித்ததை யதிகரிப்பதும் முறைகேடாமாதலால் உயிரீற்றின் முதற்கண்வையாது அதிகாரமுறைமை வெகு சுலபமாயமையும்படி உயிரீற்று விளிக்கும் மெய்யீற்று விளிக்குமிடையே சிங்கநோக்கு நிலையில் வைக்கப்பட்டதாமென அறிக.



வினா. ஆனால் உரைகாரர்கள் இச்சூத்திரம் சிங்கநோக்கென்று சொல்லி யிருக்கிறார்களா?

விடை. சொல்லவேண்டுமென்பதில்லை. சிங்கநோக் கிலக்கணமும் அதன் பயனும் பிறவிடங்களிற் சொல்லப்பட்டன வாதலானும், மாணாக்கர்க் கறிவு வளர்தற்பொருட்டு உய்த்துணர வைத்துச் செல்வதே உரைகாரர்க்கெல்லா மியல்பாதலாலும், அவர் சொல்லாதுவிட்டது இல்லாததென்பதற்கு நிரூபணமாகாதாகையாலும் அது பாதகமாகமாட்டாது.

(போதும்; நிற்க)

இவ்வாறாக விசாரித்தமட்டில் நச்சினார்க்கினியர், சேனாவரையர், இளம்பூரணர், தொல்காப்பியர் இவர்கள் கூறுவனவெல்லாம் அடியார்க்கு நல்லார்கொள்கைக்குச் சிறிதும் விரோதமின்றி யிணங்கியிருப்பனவாகவே தோன்றுகின்றன. ஆதலால், 'கிழவோன் என்னுஞ் சொல் அண்மைவிளியில் வந்ததென்றற்கு இச்சூத்திர மாதாரமாதலில்லை யென்பதே பலவுரை யாசிரியர் கருத்துமா' மென்று நண்பரவர்கள் கூறிய முடிவு நிலையாதாயிற்று.

உண்மை இப்படியிருக்க நண்பரவர்கள் தாமாராய்ச்சிசெய்தவளவில் தொல்காப்பியநூலும், இளம்பூரணருரையும், சேனாவரையருரையும், நச்சினார்க்கினியருரையும் அடியார்க்கு நல்லார்கொள்கைக்கு முற்றும் மாறாயிருப்பனவாகப் பலவாறு சொல்லுகிறார்கள். அவற்றுள் ஒன்றேனும் நிலைபெறுகிறதாவென்று பார்ப்போம்.

1. நம்பன் என்னும் இயல்புவிளியை 'ஏனைப்புள்ளி' யென்னுஞ் சூத்திர வுரையில் நச்சினார்க்கினியர் காட்டியதனால் அன்னீற்றண்மை விளியமைத்துக்கொள்ளப்பட்டதாகச் சொல்லுகிறார்கள். அது அண்மைவிளியா யமைத்துக்கொள்ளப்பட்டதில்லை என்றும், 'தநநுஎ' என்ற சூத்திரத்தால் விளி யேலாதென விலக்கப்பட்டது பிறழ்ந்து வந்து விளியேற்றுநின்ற வழக்குநோக்கி வழுவமைதியா யமைக்கப்பட்டதென்றும் 'ஏனைப்புள்ளியீறு' என்னுஞ் சூத்திரவுரை விசாரத்தில் முன்னமே விளக்கப்பட்டது. இதனால், 'ஏனைப்புள்ளியீறு விளிகொள்ளா' வெனவேண்டா கூறியதற்குப் பயன்கூறு முகத்தால் அமைத்துக்கோடலின்

காரணம் பிறிதொன்று சிறந்ததாகக் காணுதலரிதாமென்று கூறிய முடிவு நிராகரிக்கப்பட்டது. அன்றியும், இயல்பீறுபோல ஒரு சில பெயரேபற்றிவரும் நான்குயிரீற்றண்மை விளி யுதாரணங்களைக்காட்டிலும் வினைப்பெயருருப்பாயும், பெயருருப்பாயும் அன், ஆன், அள், ஆள், அர், ஆர், ல், ன், உன், ஒன், உள், ஒள், ஒர், எள் எனப்பல திறப்படவரும் மெய்யீற்றண்மைவிளி யுதாரணங்கள் மிகப்பலவாகவும், இவற்றையெல்லாம் 'ஏனைப்புள்ளி' என்னும் சூத்திரத்தாலமைப்பதைக்காட்டிலும், இவற்றின் மிகச்சிலவாகிய உயிரீற்றண்மை விளியை 'ஏனையுயிரே யென்னும் சூத்திரத்தா லமைத்துக்கொள்ளுதலே ஏற்புடையதாயிருப்பவும், அதனை யவ்வாறமைத்துக்கொள்ளாமையால், அவற்றின் மிக்க மெய்யீற் றண்மைவிளியும், 'ஏனைப் புள்ளி' என்னும் சூத்திரத்தாலமைக்கப்படாவெனவும், அவ்வுயிரீறு போலவே இம் மெய்யீறும் 'அண்மைச்சொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரத்தால் விதிக்கப்படுமெனவுமறிக.

2. இனி, 5, 6ம் பத்திகளிற் சொல்லிய விஷயங்களெல்லாம் 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்ற சூத்திரம் உயிரீற்றுக்குரியதில்லை யென்று சொல்லக்கூடாதென்பதைச் சாதிப்பதல்லது பிறிதில்லை. அதில் ஒருவருக்கும் ஆக்ஷேபமில்லை. இனி 7ம் பத்தியில், பொதுவான சேய்மை விளிச்சூத்திரத்தை அடுத்து அண்மை விளிச்சூத்திரம் வைக்கப்படாமையால் உயிரீற்றுக்கே யுரியதாமென்று துணியவேண்டுமென்கிறார்கள், விளிமாத்திரத்திற்கு அண்மை விளி முற்பட்டதாயும் சேய்மை விளி பிற்பட்டதாயும் பொருட்பெற்றியாலும் சொல்லியல்பாலும் நன்கறியக்கிடத்தலால், அம்முறையே முறையாகச் சேய்மைவிளி யிறுதியிலும், அண்மைவிளி விளிமாத்திரத்துக்கு முற்படும் வைக்கப்பட்டனவென முன்னமே அறிவிக்கப்பட்டமையால் 'அண்மைசசொல்லே இயற்கையாகும்' என்ற சூத்திரம் உயிரீற்றினும் மெய்யீற்றுக்கே மிகச் சிறந்ததென்று துணிதற் கிடமுண்டாயிருக்கிறது. ஆதலால் இது உயிரீற்றுக்கே சிறந்ததென்று சாதித்தற்குச் சேய்மை விளியொடு வையாமை சாதகமாகமாட்டாது. பவணந்தி முனிவர் சேய்மை யண்மை விளிகளை யொரே சூத்திரத்திற் சொல்லிய முறையை யுதாரணங் காட்டுகிறார்கள். அம்முறை சிறந்ததாகத் தொல்காப்பியனார் கருதியிருந்தால், இவரும் அவர்போல அன்னீற்று அண்மைவிளிவிகாரத்தை யிறுதியில்வைத்திருக்கவேண்டுமே. அங்ஙனம் வையாமையால் அவர்க்கது கருத்தன்றென்க.

சேய்மை விளிச்சூத்திரம் பொதுவென்று தோன்றற்கு "உளவெனப்பட்ட வெல்லாப்பெயரும்" என்றாற்போன்ற பொதுமையை விளக்கும் அடைமொழி இச்சூத்திரத்தி லில்லாமையாலிது பொதுவாகாதென்றும், இவ்வாறு பொதுமையை விளக்கும் அடைமொழி யில்லாத முறைப்பெயர்ச் சூத்திரங்களொவ்வொன்றும் எல்லா வீற்றுக்கும் பொதுவாகாது ஒவ்வோரீற்றுக்கே யுரியதாயிருப்பது இதற்குச் சான்றாகுமென்றும் காட்டி, பொதுமையை விளக்க வியக்த வாசகம் ஒன்று நியதமாயிருக்கவேண்டும் என்று வெகு பெலமாய் வாதாடுகிறார்கள்.

சேய்மை விளிச்சூத்திரத்தில் உயர்திணையதிகாரமில்லாமையாலதனையும் அகப்படுத்தவேண்டி "உளவெனப்பட்ட வெல்லாப்பெயரு" மென்று விசேடிக்கவேண்டியதாயிற்று. முறைப்பெயர்ச் சூத்திரங்களெல்லாம் முன்னும் பின்னுந் தன்னீறே நிற்ப இடையே கிடத்தலால், இடநோக்கிச் சிறப்பீற்றுக்குரியவாயின. அங்ஙனமின்றிப் பிறவீறு அடுத்து நிற்றற்குரியவேற் பொதுவேயாம். ஆதலால் அது காட்டாகமாட்டாது. பொதுவை விளக்க அடைமொழியாகிய வியக்த வாசகம் வேண்டுமென்றும், சிறப்புப்பொருளை அடைகொடாத பொதுச்சொல்லால் வழங்கவேண்டுமென்றும் ஒரு புதிய இலக்கணம் சொல்லுகிறார்கள். இஃதுண்மையானால் தாமரை விசேடங்களை செந்தாமரை, வெண்டாமரை என அடைகொடுத்து வழங்குவது தவ

றென்றும், அவற்றை தாமரை யென்று அடைகொடாது வழங்குவதே இலக்கணமென்றும், இருவகைத் தாமரையையும் வழங்குமிடத்துத் தாமரையெனப் பொதுப்படவழங்குவது தவறென்றும், போதுத் தாமரை யென்று வியக்தவாசகம் சேர்த்துச்சொல்வதே முறையென்றும் ஏற்படவேண்டும். அன்றியும், 'விளிமரபின்றொடக்கத்தில்' விளியெனப்படுப' என்பதே பிழையாய் முடியவேண்டும். ஏனெனில் பலவகைப்பட்ட வெல்லாவிளியும் என வியக்தவாசக மில்லாமையானென்க. இதனால், 'அச்சூத்திரவமைதி பொதுப்படவிருப்பினும் அது பொதுவாதற்கு ஒரு வியக்தவாசகம் வேண்டும்' என்ற முடிவும் நிலையாதாயிற்று.

இனி நண்பரவர்கள் 8ம் பத்தியில் பெயர்களைத்திணைபற்றியும் ஈறுபற்றியும் வகுத்து விளிமரபு கூறுதலே தொல்காப்பியரது கருத்தென்கிறார்கள். இஃதுண்மையே; ஆயினும் இஃதெவ்வளவுதூரம் பொருந்துமென்று பார்ப்போம். 'இ ஈ ஆகும்' ஐ ஆயாகும்' என்ற சூத்திரம் இரண்டுயிரீற்றுக்குரிய விபாக விதியேயாயினும் சூத்திரம் சுருங்குமாறு இனம்பற்றி ஒன்றாக்கப்பட்டிருக்கிறது. அல்லாக்கால் இரண்டுசூத்திர மாகவேண்டும். 'ஓவும் உவ்வும் ஏயொடு சிவணு,மென்ற சூத்திரம் இரண்டுயிரீற்றுக்குரியதாயினும் சமுதாய விதியாலொன்றுபட்டமையால் ஒரு சூத்திரமாயிற்று. அல்லாக்கால் இரண்டுசூத்திரமாகவேண்டும். ஏனையுயிரே என்ற சூத்திரம் எட்டுயிர்களுக்குரிய சமுதாய விதி. ஆதலால் இதுவும்முன்போ லொருசூத்திரமாயிற்று; அல்லாக்கால் இதுவும் பல சூத்திரமாகவேண்டும். இவ்வாறு மெய்யீற்றுள்ளும் 'ஆருமருவும்' 'எஞ்சியவிரண்டி னிறுதிப்பெயரே." என்பனவும், 'ஏனைப்புள்ளி' என்பதும் பொதுவாயிருத்தல் காண்க. இனிக் 'கிளந்த விறுதியஃறிணை விரவுப்பெயர்' என்றசூத்திரம் எல்லாவீற்றுக்கும் பொதுவா யொன்றாயிற்று. அல்லாக்கால் இதுவும் பல சூத்திரங்களாகவேண்டும். அதன்மேல் "உளவெனப்பட்ட" என்றசூத்திரம் எல்லாத்திணைக்கும் எல்லாவீற்றுக்கும் பொதுவாயொரு சூத்திரமாயிற்று. இதனால், ஆசிரியர் இனத்தாலேனும் விதியாலேனும் ஓரிடத்தில் ஒன்றுபடக்கூறற் குரியனவற்றையும் அவ்வவ் வீறுதோறும் வேறுவேறு விதித்துச்செல்லும் கருத்துடையரல்லர் என்பது வெளியாயிற்று. ஆகவே அண்மைப்பொருள்பற்றி இயல்பாகிய ஒருவிதி பெறுதற்குரிய உயிரீறு மெய்யீறுகளை வேறு வேறு பிரித்தோதவேண்டாது ஒரு சூத்திரத்தாலோதுவதே ஆசிரியர்கொண்ட முறை என்பது நன்கு தெளியத்தக்கது.



இனிச் சுட்டு வினாப்பெயர்களும், அளபெடைப் பெயர்களும் முறையே விலக்கினும், விதியினும் ஒருவழிப்படுவனவா யிருப்பவும் அவற்றை ஈறுதோறும் வேறு வேறோதியதை தம் கக்ஷிக்காதரவாகக் காட்டுகிறார்கள். இவை தனித்தனி ஒருநிலைக்களப்படுதற்குரியனவல்லவென முன்னமே காட்டப்பட்டன. இவையெல்லா மொரு சூத்திரமாயமைதற்குரிய தோரிடத்தை நண்பரவர்கள் சுட்டிக்காட்டி ஒரு சூத்திரமாயோதி அதில் விரோதமில்லை என்று நிரூபித்துவிட்டால் அதற்குப்பரிகாரம் பின்புசொல்லப்படும். அங்ஙனம் நிரூபித்துக் காட்டும்வரை அவ்வுதாரணங்கள் தம் கக்ஷிக்காதரவாகமாட்டாவென வறியத்தக்கன.

இனி நண்பரவர்கள் பத்தாம் பத்தி தொடங்கி நேமிநாத நூலா
ரவு தம்கக்ஷிக்குச் சாதகமாயிருப்பதாகக் காட்டுகிறார்கள். அதில் அ
யார்க்கு நல்லார் கொள்கைக்கு ஆதரவில்லை என்று சொல்லலாமே ய
லது விரோதமிருப்பதாகக் காட்டற்குச் சிறிதுமிடமில்லை. ஏனெனி
அதில் உயிரீற்றுச் சொற்களுக்கு அண்மை விளியியல்புண்டென்
சொல்லியிருக்கிறது. இது இருதலைக்கும் உடம்பா டாதலால் விரோ
திக்கவில்லை. இதுபோல் மெய்யீற்று அண்மைவிளியி யல்பு
டென்று சொல்லப்படவில்லை. இதுவும் விரோதமாகமாட்டாது
ஏனென்றால் இந்நேமிநாதம் மிகச்சுருக்கிய நூலாதலால் ஒருவகைச்

சொல்லியதுகொண்டே பிறிதொருவகைக்கு மண்மைவிளியிலியல் பாமென்ப தறிந்துகொள்ளலாமென்று விட்டிருக்கலாம். மெய்யீற் றுக்கு மண்மை விளி யுண்டென்பது பொருட்பெற்றியாலும் அந்நூ லுள்ளே அன்னீற்றண்மை விகாரவிளி சொல்லப்பட்டிருத்தலாலும் அறியலாம். அதனால் மெய்யீற்றுக்கு அண்மைவிளியி னியல்பு உண்டோ இல்லையோ வென்ற ஐயமுண்டாகக்கூடுமே யல்லது இல்லை யென்ற நிச்சய முண்டாகமாட்டாது. அந்நிச்சய முண்டாகவேண்டு மாயின் மெய்யீற்றுக்கு அண்மைவிளி இல்லையென்று விலக்கியிருக்க வேண்டும். அங்ஙனம் விலக்காமையால் 'அநுக்தமந்யதோக்ராஹ்ய' மென்ற நியாயத்தால் தொல்காப்பியச் சூத்திரங்கொண்டு அடியார்க்கு நல்லார் காட்டியபடி மெய்யீறுகளுக்கும் அண்மைவிளியி னியல்புண் டென்றறியத்தக்கதேயாம். ஆகையால் நேமிநாத மேற்கோளும் நண் பரவர்கள் கக்ஷியை நிலைநாட்ட மாட்டாதாயிற்று.

இதுகாறுங் கூறியவாற்றால், நண்பரவர்கள் இலக்கணநூலாராய்ச் சிகொண்டு பலவாறாகக் காட்டிய விரோதங்களெல்லாம் பரிகரிக்கப் பட்டமையால் அடியார்க்கு நல்லார் காட்டியபடி மெய்யீற்றண்மை விளி விதிச்சூத்திரம், 'அண்மைச்சொல்லே யியற்கையாகும்' என்பது ஆக்ஷேபமற்றதாயிற்று.

பத்திராதிபர்.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௧௭.] சித்தார்த்தி௵ ஆடிமீ [பகுதி

Vol. XVII. July—August, 1919. No. 9

## பதார்த்ததீபிகை.

செந்தமிழ் ௧௭-ந் தொகுதி ௧௭௪-ம் பக்கத்தொடர்ச்சி.

### மன விவரணம்.

இன்பதுன் பம்முத லெய்துங் கருவி யெழின்மனமாம்
மன்பதை தோறும் பிரியாம னிற்கும் வழக்குண்மையின்
என்ப தனந்தம் பரமாணு ரூப மெப்போதுமுள்ள
தென்பது நீயறி சொற்றே னினிக்குண மோதுவனே.

(இ-ள்.) சுகம், துக்கம் முதலியவற்றை நேரே கண்டடைதற்குக் கருவியாகிய இந்திரியமே மனமாகும். அஃது உயிர்தோறும் பிரியா மல் நியதமாய் நிற்கும் வழக்குள்ளதாதலின் அனந்தம் எனப்படுவது. பரமாணுரூபமுடையது; நித்தியமாயுள்ளது. இங்ஙனமே ஒன்பது பதார்த்தங்களையுஞ் சொன்னேன். இனிக் குணங்களைச் சொல் லுவேன் எ-று.

எழில்—அழகு—மன்பதை—மக்கட்பரப்பு; ஆகுபெயர். என் பது—என்று சொல்லப்படுவது. நீயறி என்பது மகடூஉ முன்னிலை.

*

யான் சுகமுடையேன், யான் துக்கமுடையேன் என்றறிதல் வேறோர் இந்திரியத்தாற் பெறப்படாமையின்; "இன்ப துன்பம் முதலெய்துங்கருவி, யெழின் மனமாம்" எனப்பட்டது. மனத்தன்மையாகிய பொதுமையுடையது மனம் என்றும், பரிசமிலதாய்த் தொழிலுடையது மனம் என்றும், சையோக சம்பந்தத்தால் ஆன்மாவைக் கிரகிப்பது மனம் என்றும் இலக்கணங் கூறுவாருமுளர். சீவாத்மா சரீரந்தோறும் வேறு வேறாய் அநேகமாயிருத்தலால் அதனோடு பிரிவின்றி நிற்கும் மனமும் பலவாயிற்று. காட்சி முதலிய இந்திரிய ஞானம் தனித்தனி தோன்றல்பற்றிப் பரமாணு என்றார். மீமாஞ்சகர் மனத்தினை வியாபகமாயிருப்பது என்பர். வியாபகமாயின்; உயிரொடு சம்பந்தப்படமாட்டாது. ஆதலின் அவர்கூற்றுப் பொருந்துவதன்று. ஆன்மசம்பந்தமுடைமையால் நித்தியம் என்றார்.

மனத்தின் குணங்கள் எட்டு. அவை சங்கியை, பரிமாணம், வேற்றுமை, சையோகம், விபாகம், முன்மை, பின்மை, வேகம் என்பன.

## உருவ விவரணம்.

திருக்கினின் மாத்திரங் கொள்ளுங் குணமொளி சித்திரமுன்
உரைக்கு மெழுவகை பார்முதன் மூன்றி லுறுநிலத்தே
புரைக்கு மெழுமையு நீரின் மறைவெண்மை பொற்றழலின்
இருக்கும் வெளிப்பட்ட வெண்மையென் றுய்ந்தறி யேந்திழையே.

(இ-ள்.) கண்ணுன் மாத்திரம் கவரப்படுங் குணம் உருவமாகும். அது சித்திரம் முதலாகச் சொல்லப்படும் ஏழுவகையாகும். பிருதிவி முதலிய மூன்றிலும் இருக்கும். அவற்றுட் பிருதிவியில் எழுவகையும் இருக்கும். நீரிலே விளங்காவெண்மையும், நெருப்பிலே வெளிப்பட்ட வெண்மையும் இருக்கும் எ-று.

திருக்கு—கண். ஒளி—உருவம். சித்திரம் முதலிய எழுவகையாவன சித்திரம், வெண்மை, கருமை, பொன்மை, செம்மை, பசுமை,



புகைமை என்பன. பார்முதல் மூன்றுவன பிருதிவி, அப்பு, தேயு, என்பன. மறை வெண்மை—புலப்படாத வெண்மை. சில நீரிலே கருமை முதலிய நிறந்தோன்றுவது நிலத்தின் சார்பால் என்க. "அப்பென்றும் வெண்மையது" என்னும் வாக்கையும் நோக்குக. ஆய்ந்தறியேந்திழையே என்பது மகடூஉ முன்னிலை.

## இரச விவரணம்.

ஆயுமிரச மிரசனம் கொள்குண மன்னதுகாண்
தோயு மதுரமுன் னாக வறுவகை தொல்புவியும்
பாயும் புனலு மிருப்பது பாரிற் படருமெல்லாம்
தூய மதுரமொன் றே காணு நீரிற் றுகளறவே.

(இ-ள்.) ஆராயப்படுகின்ற இரசகுணமாவது நாவாற் கவரப்படுங் குணமாம். அது மதுரம் முதலாக அறுவகைப்படும். இரசம் மண்ணிலும் நீரிலும் இருப்பது. மண்ணிலே அறுவகைக் குணமும் இருக்கும். நீரிலே மதுரகுணம் ஒன்றே இருக்கும் எ-று.

இரசனம்—நாக்கு. மதுரம்முதலியனவாவன. மதுரம், புளிப்பு, உவர்ப்பு, கைப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்பன. மதுரம்—இனிமை. இரசகுணம் நித்தியம், அநித்தியம் என இருவகை. நீரின் பரமாணுவிலே இரசம் நித்தியமாயிருக்கும். அஃதல்லாததிலிருப்பது அநித்தியம். துகள்—குற்றம். இனிக் கந்தம்முதலியன கூறப்படும். (வரும்.)

இங்ஙனம்

அ. குமாரசுவாமிப் பிள்ளை.

---

# * "பியதச்சீ" (பிரியதர்சீ)

அல்லது

## அசோகவர்த்தனன் என்னும் மௌர்யசக்கிரவர்த்தி.

### (1) முன்னுரை.

வெகுநாள் நிலைநிற்கவேண்டுமென்னும் உட்கருத்துடன் அசோக சக்கிரவர்த்தி அநேகம் ஆதேச (சாஸன)ங்களை இதற்கு ஏறக்குறைய 2200 வருஷங்களுக்குமுன் கற்களிலும், பாறைகளிலும் பொறிக்கச் செய்திருக்கின்றார். இவ்வாதேசங்களை 'அசோக தர்மலிபிகள்' என்று வழங்கிவருவதுண்டு. வெகு சாரமான அநேகம் உபதேச ரத்னங்கள் அடங்கியிருப்பதால், இவை ஜனங்களுக்கு நன்னெறியை யறிவிக்கும் முக்கிய கருவிகளாகும். சதாசாரமே மதத்தினது ஜீவனென்று புத்தபகவனைப்போல் அசோகனும் எண்ணியிருந்தனன். கொலை, களவு, கள்ளுணல், புலாலுணல், பிறன்மனைவிழைதல், வரைவின் மகளிரைவிழைதல், பொய்ச்சான்றுரைத்தல் முதலிய பாவச்செய்கைகள் புத்தமதக் கோட்பாட்டின்படி மறுக்கப்பட்டிருக்கின்றன. இஃதன்றியும், சரித்திரவாராய்ச்சிக்கு இன்றியமையாச் சான்றுகளாகிய பற்பலவிஷயங்கள் இச்சாஸனங்களி லடங்கியிருப்பது வெளிப்படையாம். அசோக மஹாராஜா பௌஷ மாதத்தில் புஷ்ய க்ஷத்திரத்தில் பூலோகத்தில் அவதரித்ததும், † 'இராஜப் பிரதிநிதி' 'மஹாமாத்திரர்' (ரஜ்ஜுகர்-பிராதேசிகர்.) 'ஆயுக்தர்' 'உபாயுக்தர்' ‡ முதலாயவரே அக்காலத்தில் இராஜ்ய காரியங்களையும் தர்மகாரியங்களையும் சரிவர நடத்தும் உத்தியோகஸ்தர் § என்பதும் இச்சாஸனங்களாலே அறியப்பட்டவை.

* இது காலம்சென்ற ஸ்ரீமான் து. அ. கோபிநாதராவு அவர்களது அபிப்பிராயப்படி எழுதப்பட்டது. ராயரவர்கள் மரணமடைவதற்கு முன் சரீரசுகமில்லாம லிருக்கும்தருணம் யாதேனும் படித்திருப்பாரென்று சொல்லவேண்டுமானால் அது இவ்வியாசமாகும். யான் படித்து அவர்கள் கேட்டதே ஒழிய அவரால் பிழைதிருத்த இயலவில்லை. மறுநாள் மரணமடைந்தார்.

† Asoka piller edicts

‡ [illegible]

§ Asoka rock edicts No. 3.



பண்டைக்காலம் தொடங்கி நமது இந்தியநாட்டை அனேக அரசர் ஆண்டுவந்திருந்தும் அவர் எல்லோரும் ஒன்றுபோல குணவந்தராயிருக்கவில்லை. இவ்வுலகத்திற்கு வேண்டிய நன்மைகளைச் செய்து தங்களது புகழை எங்கும் நிலைநிறுத்திய மன்னர் மிகச்சிலராகவே காணப்படுகின்றனர்.

இவருள்ளும் பிரசித்தியை யடைந்தவர்: யுதிஷ்டிரன், சந்திரகுப்தன், அசோகவர்த்தனன், விக்கிரமாதித்தியன், சாலிவாகனன், அக்பர் முதலியோராவர்.

மேற்குறித்த அரசரில், புராணேதிஹாசங்களில் விரிவாகக்காணப்படுகின்ற யுதிஷ்டிரனைப்பற்றிய விவரணங்களும் உபாக்கியானங்களும் சரித்திர வாராய்ச்சிசெய்யும் அறிஞரது பார்வைக்கு விச்வாஸத்தை யுண்டுபண்ணுதாதலின் அவரை யொழித்துவிடவேண்டும். மற்றவரசரைச் சமன்செய்து சீர்தூக்கிப் பார்வையிட்டதில் நமது வியாசத்தின் தலைவனாகிய அசோகவர்த்தனனே முன்னிட்டு நிற்கும் மன்னனாவன். புத்தமதத்தை உலகமெங்கும் நிறுவிய இவ்வசோகனது புகழானது அவனது இராஜ்யத்தில் மட்டுமல்ல 'மேற்கு வேள்பாகநிலையையும், வடக்கு ஸைபீரியாவையும், கிழக்கு ஜப்பான் தீவையும், தெற்கு சிங்களவர் தேசத்தையும்' கூட வியாபித்துக்கொண்டு விளங்கிவந்தது. ஒவ்வொரு காலங்களிலும் அரசரது ராஜ்யமானது சண்டைகள் நிமித்தம் விரிந்தும் குறைந்தும் இருப்பது வழக்கம். ஆனால் அசோகனதுகாலத்தில் அவனது இராஜ்யம் மற்றகாலங்களி லிருந்ததைவிட விரிந்திருந்ததெனவே சொல்லக்கூடும். இவனது இராஜ்யத்தினுட்பட்ட இடங்களை யுற்றுநோக்கின், தெற்கு பாலாற்றிற்கு தென்பக்கத்திலுள்ள பூமியும் அதன் வடகிழக்காயுள்ள ஆசாம் (காமரூபம்) ராஜ்யமும் ஒழித்து, மற்றெல்லா இந்திய பூமிகளும், ஆப்கனஸ்தானம், பலூசிஸ்தானம், இவைகளும், இராஜாங்க முறைமையை நடத்திவரும் இடங்களாயிருந்தன.

இராஜாங்க முறைமையிலும், மதக்கொள்கையிலும் சிறந்து விளங்கிய இவ்வசோகனது சரித்திரத்தை விளக்கும் நூல்கள் தென்னிந்தியாவில் எங்குமில்லை. அஃதன்றியும் அவனது சரித்திரத்தை யுள்ளபடி எடுத்துரைப்பதற்குரிய குறிப்புகளும் இதுகாறும் கண்டுபிடிக்

கப்படவில்லை. நம்பக்கூடாத 'டிந்த' கதைகள் அடங்கிய சிற்சில பௌத்த புராணங்களும் மறுதேசியரால் எழுதி நமக்குதவப்பட்ட சில அசம்பூர்ண லிகிதங்களும் மட்டுமே இப்பொழுது எங்கும் காணப்படுகின்றன. ஆனால் அசோகனது கட்டளையால் பாறைகளிலும் மற்றும் வெட்டப்பட்டிருக்கும் தர்மலிகிதங்கள் 'அவனது வரலாறு, அவன் காலத்தைப் போக்கியவழி, இராஜாங்க முறைமை இவை முதலியவற்றைப்பற்றி ஆங்காங்கு எடுத்துரைக்கின்றன. இச்சாஸனங்களையும், அசோகாவதானம், தீபவம்சம், மஹாவம்சம், முதலாய பௌத்த நூல்களையும் அடியாகக்கொண்டு அநேகம் சரித்திர நூல்கள் பல பாஷைகளிலும் பண்டிதர்களால் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றுட் சிலவற்றை ஆதாரமாகக்கொண்டு மூலக்கிரந்தங்களைத் தழுவியும் யான் இச்சிறு வியாசத்தை எழுதத் துடங்குகின்றேன்.

## (2) பூர்வசரிதமும் அசோகனது பிறப்பும்.

தொன்றுதொட்டுப் புகழோங்கி விளங்கு 'மகதம்' (1) அல்லது 'கீகடம்' (2) என்று பழைய பெயர்கொண்ட 'தக்ஷிணபிஹார்'என்னும் இப்பொழுதுள்ள இராஜ்யப்பகுதிக்கு பழையகாலத்தில் கிரிவ்ரஜம்(3) என்னும் இராஜக்ருஹமும் (4) பிறகு நாளடைவில் குஶாக்ரபுரம் (5) புஷ்பபுரம் (6) எனும் மாற்றுப் பெயர்களையுடைய பாடலீபுரமும் (7) தலைநகராயிருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 1000 வருஷம் முன்தொடங்கி கிறிஸ்துவருஷம் 6-வது நூற்றாண்டு வரையிலும் மகததேசமானது எவ்விதநாகரிகத்திற்கும் ராஜரீகத்திற்கும் இருப்பிடமாயிருந்தது. குருபாண்டவரது (8) காலத்தில் இந்நாட்டின்கண் ஜராசந்தன் (9) எனவோர் அரசன் இருந்ததாகத் தெரியவருகிறது. இவ்வேந்தனை வீமசேனன்(10)யமலோகத்திற்கு அதிதியாக்கியதும், பிறகு

1. 𑌮𑌗𑌧
2. கீகட
3. 𑌗𑌿𑌰𑌿𑌵𑍍𑌰𑌜
4. 𑌰𑌾𑌜𑌗𑍃𑌹
5. 𑌕𑍁𑌶𑌾𑌗𑍍𑌰𑌪𑍁𑌰
6. 𑌪𑍁𑌷𑍍𑌪𑌪𑍁𑌰
7. 𑌪𑌾𑌟𑌲𑍀𑌪𑍁𑌰
8. 𑌕𑍁𑌰𑍁𑌪𑌾𑌣𑍍𑌡𑌵
9. 𑌜𑌰𑌾𑌸𑌨𑍍𑌧
10. 𑌭𑍀𑌮𑌸𑍇𑌨



சகதேவன் (11) குருதேவரது பக்கத்தைச் சார்ந்து போர்புரிந்ததும் மற்றும் மாபாரதத்தினின்றும் (12) அறியப்படும் விஷயங்களாகும். சகதேவனது பிற்காலத்தில், வாழ்ந்திருந்த 21 - அரசரில் 'ரிபுஞ்சயன்' (13) என்னும் அரசனதுமரணத்துடன் (14) '𑌬𑍃𑌹𑌦𑍍𑌰𑌥' ராஜவம்சமானது அறுதியாய்விட்டது. இவ்வம்சம் முடிவையடைந்தது சுமார் கி.மு. 775-வது வருஷத்திலென்று நிச்சயித்திருக்கிறார்கள். கி. மு. 637 வரையும் '𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤' (15) வம்சத்திலுள்ள ஐந்துமன்னரும்*, அதன்பிறகு கி. மு. 370 வரையும் 'சிசுநாக' (16) வம்சத்தைச் சார்ந்த பத்து அரசரும்† மகததேசத்தை யாண்டுவந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன. இவ்விரண்டு வம்சங்களும் மாண்டுபோன பின்னர், மஹாபத்மநந்தனும் அவனது புதல்வர் எட்டுப்பேர்களும், ‡ 'கீகட' திபதிகளாயிருந்து அரசாட்சிபுரிந்தனர். சுமார் கி. மு. 325-ல் அல்லது 322-ல் நந்தவம்சமும் நாசமடைந்தது.

நந்தவம்சத்தைப்பின்பற்றிய வம்சம் மௌர்யவம்சமாகும். (17)

11. 𑌸𑌹𑌦𑍇𑌵
12. 𑌮𑌹𑌾𑌭𑌾𑌰𑌤
13. 𑌰𑌿𑌪𑍁𑌞𑍍𑌜𑌯
14. 𑌬𑍃𑌹𑌦𑍍𑌰𑌥
15. 𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤
16. 𑌶𑌿𑌶𑍁𑌨𑌾𑌗
17. 𑌮𑍌𑌰𑍍𑌯𑌵𑌂𑌶

* "𑌯𑍋𑌽𑌯𑌂 𑌰𑌿𑌪𑍁𑌞𑍍𑌜𑌯𑍋 𑌨𑌾𑌮 𑌬𑌾𑌰𑍍𑌹𑌦𑍍𑌰𑌥𑍋𑌽𑌨𑍍𑌤𑍍𑌯𑌃 𑌤𑌸𑍍𑌯 𑌶𑍁𑌨𑌕𑍋 𑌨𑌾𑌮𑌾𑌮𑌾𑌤𑍍𑌯𑍋 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌸 𑌚𑍈𑌨𑌂 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌂 𑌹𑌤𑍍𑌵𑌾 𑌸𑍍𑌵𑌪𑍁𑌤𑍍𑌰𑌂 𑌪𑍍𑌰𑌦𑍍𑌯𑍋𑌤𑌨𑌾𑌮𑌾𑌨𑌮𑌭𑌿𑌷𑍇𑌕𑍍𑌷𑍍𑌯𑌤𑌿 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌬𑌲𑌾𑌕𑌨𑌾𑌮𑌾 𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌭𑌵𑌿𑌤𑌾 𑌤𑌤𑌶𑍍𑌚 𑌵𑌿𑌶𑌾𑌖𑌯𑍂𑌪𑌃 𑌤𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑍋 𑌜𑌨𑌕𑌃 𑌤𑌤𑌶𑍍𑌚 𑌨𑌨𑍍𑌦𑌿......𑌤𑍇 𑌅𑌷𑍍𑌟𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍁𑌤𑍍𑌤𑌰𑌮𑌬𑍍𑌦𑌶𑌤𑌂 𑌪𑌞𑍍𑌚 𑌪𑍍𑌰...... 𑌪𑍃𑌥𑌿𑌵𑍀𑌂 𑌭𑍋𑌕𑍍𑌷𑍍𑌯𑌨𑍍𑌤𑌿" [𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑌾𑌣𑌂.]

† "𑌤𑌤𑌶𑍍𑌶𑌿𑌶𑍁𑌨𑌾𑌗𑌸𑍍𑌤𑌤𑍍𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌕𑌾𑌕𑌵...𑌭𑌵𑌿𑌤𑌾 𑌤𑌸𑍍𑌯 𑌪𑍁𑌤𑍍𑌰𑌃 𑌕𑍍𑌷𑍇𑌮𑌧𑌰𑍍𑌮𑌾 𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍌𑌜𑌾𑌃 𑌵𑌿𑌧𑌿𑌸𑌾𑌰𑌃 𑌤𑌤𑌶𑍍𑌚𑌾𑌜𑌾𑌤𑌶𑌤𑍍𑌰𑍁𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍍𑌦𑌰𑍍𑌭𑌕𑌃 𑌦𑌰𑍍𑌭𑌕𑌾𑌚𑍍𑌚𑍋𑌦𑌯𑌨𑌃 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑌪𑌿 𑌨𑌨𑍍𑌦𑌿𑌵𑌰𑍍𑌧𑌨𑌃 𑌤𑌤𑍋 𑌮𑌹𑌾𑌨𑌨𑍍𑌦𑌿𑌃 𑌇𑌤𑍍𑌯𑍇𑌤𑍇 𑌶𑍈𑌶𑍁𑌨𑌾𑌗𑌾 𑌭𑍂𑌪𑌾𑌲𑌾𑌃" [𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑌾𑌣𑌂]

𑌤𑌸𑍍𑌯𑌾𑌪𑍍𑌯𑌷𑍍𑌟𑍌 𑌸𑍁𑌤𑌾𑌃 𑌸𑍁𑌮𑌾𑌲𑍍𑌯𑌾𑌦𑍍𑌯𑌾𑌃...............

[𑌵𑌿𑌷𑍍𑌣𑍁𑌪𑍁𑌰𑌾𑌣𑌂.]

இவ்வம்சத்தை நிறுவிய 'சந்திரகுப்தன்' புத்திநுட்பத்தாலும் சாமர்த்தியத்தாலும் வடஇந்தியாவையும் 'ஆப்கனஸ்தானம்' 'பலூசிஸ்தானம்' இவ்விடங்களையும்தன்கீழடக்கி மிக்கபிரதாபத்துடன் இருபத்துநான்கு வருஷகாலம் செங்கோலோச்சிவந்தனன். இம்மன்னனுக்கு 'சாணக்ய' னென்னும் ஓர் முன்குடுமிப்பிராமணன் சிலநாள் 'கருவியுங்காலமும் செய்கையுஞ் செய்யுமருவினையுமாளு' மமைச்சனுயிருந்தமை 'முத்திரா ராக்ஷஸம்' சாணக்கியசூத்திரம்' முதலிய நூற்களினின்றும் வெளிப்படையாய் விளங்குகின்றது. இச்சமயத்தில் 'மெகஸ்தனிஸ்' என்ற ஓர் யவனராஜனின் பிரதிநிதி சந்திரகுப்தனது தலைநகரில் வாசஞ்செய்துவந்திருந்தான். 'ஸெலூக்கஸ்' என்னும் 'க்ரீக்'தேசமன்னவனின் புதல்வியொருத்தியைச் சந்திரகுப்தன் மணந்துகொண்டதாகவும் ஒரு 'கட்டுக்கதை'*யுண்டு. அதாவது:—

பெருநிலவேந்தன் சந்திரகுப்தன் மரணமடைந்தபின் கி.மு. 301-வது வருஷம்முதல் 25 வருஷகாலம் அவனதுமகன் 'பிந்துசாரன்'† (1) மகததேசத்தையாண்டுவந்தனன். பிந்துசார மஹாராஜாவுக்கு எண்ணிறந்த மனைவிகளிருந்தும் மனைவியொருத்தியிடத்தே 'அசோகன்' ‡ (2) 'வீதசோகன், (3) என்னும் இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். இவ்வசோகனது தாயைப்பற்றி ஓர் ஐதிஹ்யம் வழங்குவதுண்டு. அதுயாதெனின்:—

'மகதராஜ்யத்தினுள் 'சம்பாபுரி' (4) என்றவிடத்தில் வசித்துவந்த ஓர் எளிய பிராமணனுக்கு அழகிய ஒரு பெண் இருந்தனள். அவள் பெயர் 'சுபத்திரை' (5). யௌவனப்பருவத்தையடைவதற்கு முன்னரே இப்பெண்ணினது விவாஹமங்களம் நிறைவேறும் விடயத்தைப்பற்றி ஆலோசனைசெய்து அந்தணன் கலங்கிக்கொண்டு இருக்கையில், தற்செயலாய் அவளது ஜாதகத்தை ஓர் ஜோதிஷகரிடம் காண்பிக்கலானன். ஜோதிஷகனும் ஜாதகத்தையுற்றுப்பார்த்து, இவளது கர்ப்பத்தில் இரண்டு புத்திரர் பிறப்பதாகவும், அதிலொருவன் இராஜாதிராஜனும் மற்றொருவன் பிச்சையெடுக்கும் வறியனுமாகக்கடவனென்னும் சமாசாரத்தைத் தெரிவித்ததில் அவ்வந்தணன் அதையுண்மையாக்கவோவெனத் தோன்றுமாறு தனது புத்திரியை பிந்துசார மகாராஜனின் எதிரில் கொண்டுவிட்டனன்.

அரசனும் இப்பெண்மணியின் ரூபலாவண்யங்களைக் கண்குளிரக் கண்டுமகிழ்ந்து அவளைத் தனதுமனைவியாக்கிக்கொண்டு மிக்க அன்புடன்ஆதரித்துவந்தான். இதைக்கண்ணுற்ற அரசனது மற்றமனைவிகள் பொறாமைகொண்டு அவளை அரசனது கண்பார்வையினின்றும் தந்திரத்தினால்மாற்றி இழிந்த வேலைகளைச் செய்வதற்காக நியமனஞ்செய்தார்கள். இங்ஙனம் சிலநாள்செல்லவே அரசன் இப்பெண்ணைப்பற்றி மறந்துவிட்டான். அரசனுக்கு வாழ்க்கைப்பட்டும் தனது விதியின் கொடுமையால் உண்டாகும் கெடுதிகளையெண்ணியெண்ணி அப்பெண்ணும் துயரமுற்றிருந்தனள்.

வெகுநாள்கழிந்து ஒருநாள் அரசன் தற்செயலாய் ஸ்நானகிருகத்தில் சுபத்திரையை நோக்க, தன்னை அரசன் நோக்கிய விவர தெரிந்த அவள் கூக்குரலிடத்துவக்கினள். அதைக்கேள்வியுற்ற அரசன் அவளையழைத்து கூக்குரலின் காரணம் யாதென்று கேள்வியிட்டவுடன், அவள், தான் இழிந்த வேலைசெய்யும் அம்பட்டப்பெண் அல்லவென்றும் அந்தணர்குலத்துதித்த அருமைப்பெண்ணேதாமென்றும் ஆணையிட்டோத, அவ்வாணையில் பூர்ணநம்பிக்கையுடையனு அரசன் அவளை முன்போலத் தனதன்பின்பெருக்கத்திற்கு இருப்பிடமாக எண்ணிவந்தான். இவ்விதம் கடைசி வரையிலும் இன்பமுடன் வாழ்ந்துவந்த இவ்விருவருடையவும் சந்தோஷத்தின் பயனாக அசோகன்' 'வீதாசோகன்' என்னும் இரண்டுதநயர் பிறந்தார்கள்'. என்பதே

இக்கதையானது நம்பக்கூடியதோ அல்லவோ என்பதே சற் சந்தேகத்தினுள் கிடக்கின்றது. ஏனெனின் அசோகனது பிறப்பை பற்றிப் பலவிடங்களிற் பலவிதமாய்க் காணலாம். 'அசோகாவதானப்

---

* கட்டுக்கதை. உண்டாக்கிச் சொல்லப்பட்ட கதை.

† இவனுக்கு 'வாரிசாரன்' என்னும்பெயருண்டு. [illegible]

பாகவதம் 12 ஸ்கந்தம்.

‡ அசோகன் 'சாக்ய'வம்சத்தைச் சார்ந்தவன் எனக் கூறுவாருமுளர் [illegible] Vol. XIV No. 2.

(1) [illegible] (2) [illegible] (3) [illegible]
(4) [illegible] (5) [illegible]

என்ற புத்தசரித நூலில் "பிந்துசாரனது தகப்பன் நந்தனென்றும், நந்தனென்பவன் 'ப்ரஸேநஜித்து' என்னுமரசனது புதல்வன் என்றும், 'ப்ரஸேநஜித்து' 'காகவர்ணி' என்பவனது கொள்ளுபேரனாகிய 'மஹாமண்டல' னுடைய புத்திரனென்றும், 'காகவர்ணி' என்பவன் ஸ்ரீவ்ருஜ மென்னும் இராஜக்ருஹத்தைத் தலைநகராகக்கொண்டிருந்த 'பிம்பிசார' னது புதல்வனாகிய 'அஜாதசத்ரு' வினது கொள்ளுபேரனென்றும், சொல்லப்பட்டிருக்கின்றது.

மகதாதிபனாகிய 'தனநந்தன்' என்பவனைச் 'சாணக்கியன்' என்ற அந்தண அமைச்சன் கொன்று, சந்திரகுப்தனை அவ்விடத்தில் அபிஷேகஞ்செய்ததும், சந்திரகுப்தன் 24 வருஷகாலமும் அவனது மகன் பிந்துசாரன் 28 வருஷகாலமும் மகததேசத்தை யாண்டதும், பிந்துசாரனுக்கு 16 மனைவிகள் இருந்ததும், அம்மனைவியரிடத்து 'சுமனன்' 'திஷ்யன்' 'அசோகன்' முதலிய 101 புத்திரர் உண்டாயிருந்ததும் மற்றும் விஷயங்கள் சில பௌத்தநூற்களில் காணக்கூடும்.

## (3) அசோகனது பால்யமும் அவன் அரசுரிமை பெற்றதும்.

பாலனாகிய அசோகன் பார்வையில் நல்லவனாகவிருக்காமல் விரூபியாகத் தோன்றினன். ஆதலின் பிதாவுக்கு இவனிடத்தில் நேசமில்லாமற்போயிற்று. இவனது சுபாவமும் ஒழுக்கமும் யாவர்க்கும் விரும்பத்தக்கதா யிருக்கவில்லை. எச்சமயத்தில் நோக்கினும் ஒருவனை யல்லது மற்றொருவனை யடித்தோ, இடித்தோ, மற்றெவ்விதத்திலாவது உபத்திரவஞ் செய்துகொண்டிருப்பதே வழக்கமாயிற்று. தன் துர்ச்செய்கைகளால் மற்றவர் நொந்துகொண்டு துன்புறுவதை நோக்க இவன் வெகு உற்சாகமுடையவனா யிருந்தனன். காலப்பழக்கத்தினால் இவனிடத்து ஜனங்கள் உள்வெறுப்புக் கொண்டிருந்தாலும் இவனது கெட்ட குணங்களைக்கண்டு பயந்தே நடந்துவந்தார்கள். இங்ஙனம் அகமும் புறமும் விரூபியான இத்துஷ்டப் பிரபுவுக்கு 'தேவாநாம்ப்ரிய'* 'ப்ரியதர்சீ' என்னும் இரண்டு நல்லபெயர்களை யடைவதற்கு எங்ஙனம் யோக்யதை கிடைத்ததோவென ஆச்சர்யமடைய வேண்டியதா யிருக்கின்றது.

* தேவாநாம்ப்ரியம் — தேவர்களுக்கு மித்திரனாயுள்ளோன்.

ப்ரியதர்சீ — கண்டவுடன்பிரியம்தோன்றும் தன்மையுடையவன்.



பால்யகாலத்திலிருந்த தீயகுணங்கள் யாவும் யௌவனபருவமடைந்தபின்னரும் அவனைவிட்டு நீங்கவில்லை. ஆனதால் பிந்துசாரனுக்கு இவனிடத்தில் வெகுளியும் துக்கமும் அதிகரித்தன. உடனே அவன் இவனைத் தனது அரண்மனையினின்றும் வெளியாக்கிவிடுவதே நலமெனக்கருதியிருக்கும் தருணம், பஞ்சாப்தேசத்தைச்சார்ந்த 'தக்ஷசிலை' என்றநகரத்தில் ஓர் பெரிய சச்சரவுண்டாயிற்று. பிந்துசாரன், உடன் இக்கலகத்தை யடக்கிவருவதற்காக அசோகனை யனுப்பினான். 'அசோகன்' தக்ஷசிலாநகரத்தையடைந்ததும் அங்குள்ளோர் வரவேற்று வந்தனமளித்து உபசரித்தனர். பிறகு ஜனங்களிடம் சச்சரவின் காரணம் யாதெனக்கேள்வியுற்றவுடன், 'ஸுபேதார்' முதலிய உத்தியோகஸ்தர் தங்களுக்குத் தோன்றியவாறு காரியங்களை நடத்தி ஜனங்களுக்கு அஹிதத்தைச் செய்ததின்பொருட்டு க்ஷோபமுண்டானதென்றும், அரசனிடமோ அரசனது குடும்பத்துடனோ யாதொருவித பகையும் நேரிடவில்லையென்றும், விடையளித்தனர். இவ்விஷயத்தில் அசோகன் நம்பிக்கைகொண்டான். எங்ஙனமாயினும் அசோகனது வரவுடன் க்ஷோபம் கலைந்துவிட்டது.

அசோகன் தக்ஷசிலாநகரத்தில் சிறிதுகாலம் வாசஞ்செய்தான். இதனிடையில் அவன் தந்திரத்தினால் காஷ்மீர தேசத்தைக் கைவசப்படுத்திக்கொண்டான். பிறகு அவன் 'தக்ஷசிலை' யில் நின்றும் புறப்பட்டுத் தலைநகர்சென்று தனது பிதாவைக்கண்டு வணங்கியதும் பிந்துசாரன் மறுபடியும் இவனை 'உஜ்ஜைனி' யில் 'ஸுபேதார்' ஆக நியமித்தனுப்பினான். 'உஜ்ஜைனிக்குச் செல்லும் வழியில் பில்ஸாயின் சமீபத்துள்ள 'வேதிஸகிரி' (வேதிசகிரி இப்பொழுதுள்ள விதிஷாநகரம்) யில் களைப்பாறுவதற்காகத் தங்கலானான். இவ்விடத்தில் வைத்துச் செல்வம் மிகுந்த ஓர் பிரபுவின் பெண்ணை மனைவியாக்கிக்கொண்டு உஜ்ஜைனீதேசத்திற்கு அவளை யழைத்துச்சென்றான். இப்பெண்ணின் பெயர் 'தேவி' என்பர். அழகிய இம்மனைவியிடத்து அசோகனுக்கு 'மஹேந்திரன்' என்ற புத்திரனும் 'சங்கமித்திரை' என்ற பெண்ணும் பிறந்தார்கள்.

அசோகன் 'ஸுபேதார்'* ஆக 'உஜ்ஜைனி'யில் தாமஸிக்கும்பொழுது மறுபடியும் 'தக்ஷசிலா' நகரத்தில் க்ஷோபமுண்டாயிற்று. உடன் பிந்துசாரன் இதையடக்கிவருவதற்காகத் தனது சீமந்தபுத்திரனாகிய 'சுசீம'னையனுப்பலானான். பிதாவினது கட்டளைக்கிணங்கி அவனும் அவ்விடம் சென்று வேண்டியமுயற்சிசெய்தும் எளிதில் நினைத்தகாரியம் பயனடையவில்லை. ஆனதால அவ்விடத்தே தங்கலானான்.

இச்சந்தர்ப்பத்தில், வயோதிக தசையையடைந்த பிந்துசாரன் சரீரசுகமற்றவனாய், தனது பிற்காலத்தில் 'சுசீமனை'யே இராஜ்யத்தில் அபிஷேகம் பண்ணவேண்டியிருப்பதால் அவனை யுடனழைத்துவரும்படி அமைச்சரிடம் ஆக்ஞாபித்தனன். 'கல்லாடகன்' என்ற ஒரு பிரதான மந்திரியை சுசீமன் இதற்குமுன் அவமானித்திருந்தபடியால் மந்திரிமார் யாவரும் ஒன்று சேர்ந்து அவனுக்கு இராஜ்யத்தை யளிப்பதில் மனமின்றி ஆளனுப்பாமல், அசோகனை வெகு சீக்கிரத்தில் வரவழைத்தார்கள். பிந்துசாரன் கி. மு. 273-இல் மரணமடைந்தான். மந்திரிமாரது உதவியுடன் அசோகன் பிதாவின்பதவியைக் கைப்பற்றினன். இச்சமாசாரமறிந்ததும் சுசீமன் சேனைகளுடன் தலைநகருக்கு வந்து அசோகனுடன் எதிர்த்தான். ஒன்றும் பயன்படவில்லை. ‡

## (4) புத்தமதம்.

பூவுலகில் பலவிடங்களிலும் கி. மு. 6-வது நூற்றாண்டு புதிய பரிஷ்காரத்திற்கு உதயகாலமாயிருந்தது. 'ரோம்' சாம்ராஜ்யத்தில் 'ஏகராஜாதிபத்தியம்' நாசமடைந்து 'பிரஜாதிபத்தியம்' துடங்கியதும், 'க்ரீக்' தேசத்தில் தத்வசாஸ்திரத்தை முக்கிய விஷயமாகக் கணித்து வந்ததும், 'பாரஸீகா'திபதிகள் அயல்நாடுகளை ஜெயித்தடக்கமுயன்றதும், சீனதேசத்தில் நல்லொழுக்கத்தைப் போதிப்பிக்கும் புதியசட்டங்கள் வெளிவந்ததும், இந்தியாவில் 'புரோஹித' வர்க்கத்தைச் சார்ந்து பொறாமைகொண்டு விளங்கிய ஜனங்களது இடையில் 'ஸு-ஞதஷயா'

* இன்னும் பட்டாளத்தில் (சேனை) ஓர் உத்தியோகப்பெயராய் இது வழங்குகின்றது.

‡ மேற்கூறிய விடயங்கள் யாவும் பௌத்த நூல்களினின்றும் எடுக்கப்பட்டவை. பௌத்த தருமத்தின் மான்மியத்தைப் பெரிதாகக் காட்டும் பொருட்டு பௌத்த பண்டிதர் அசோகனைப்பற்றிய ஓரோர்கதைகள் எழுதி வைத்திருக்கிறார்கள். இவைகளே 'தர்மகதைகள்' எனப்படும்.



நிறைந்த 'கௌதம புத்தன்' அவதரித்துத் தனது கொள்கையை வெளிப்படுத்தியதும், மற்றும் இவ் வாறும் நூற்றாண்டிலாகும்.

இவ்விதம், இராஜாங்க முறைமையிலும், சதாசார விஷயங்களிலும், ஆன்மவிசாரத்திலும் ஒரேவிதம் உயர்கதி உண்டாயிருந்ததும், ஆசார பரம்பரையிலும் மந்திரத்திலும் மட்டும் அடங்கியிருக்கும் மதத்தினது நிலையை 'மனோதேவதை' அல்லது மன:சாக்ஷியை யடியாக்கியிருக்கும் புதியமதம் கவர்ந்துவிடுமென்று பயமுறுத்திக்கொண்டிருந்ததும் ஏகதேசம் கி.மு. 6-வது நூற்றாண்டிலாதலால் இந்நூற்றாண்டே பழஞ்சரிதத்தையும் புதிய சரிதத்தையும் அல்லது பழைய கிரமங்களையும் புதிய கிரமங்களையும் பகுத்தறியும் காலமெனவோர் அறிஞரது கொள்கை.

இந்தியாவில் ஆரியாது மதம் ஆதியில் சமயத்தையொத்திருந்தது. காலம்சென்றுவந்ததும், ஜனங்கள் அதிகரிக்கவே தன்காரியமே தனக்கு முக்கியமாய்த் தோன்றியபடியால் மத விஷயத்தில் அநேக இடையூறுகள் நேரிட்டு, மதமென்றால் சில வெளியாசாரங்களைமட்டும் பின்பற்றி வருதல் என்றாய்விட்டது. இவ்விதம் நெடுநாள் கழிந்ததும் 'ஜாதிவியவஸ்தை' என்பது யாவராலும் அசக்கமுடியாத ஏற்பாடாய் வந்து முடிந்தது. எவ்வித பாபங்களைச்செய்யினும் அந்தணன் அந்தணனாகவே மதிக்கப்படுகின்றான். எவ்வித புண்யங்களைச் செய்யினும் சூத்திரன் சூத்திரனாகவே இருக்கின்றான். 'வேதங்கள் புருஷனால் நிர்மிக்கப்படவில்லை. ஜந்துக்களை வதைபண்ணி யாகம் செய்பவனுக்கு நற்கதி கிடைக்கும்' என்பது முதலிய அறிவுகளை ஜனங்களது இடையில் புகட்டி பிராமணமதம் ஜனசமுதாயத்தின் முன்னேற்றத்தைத் தடுத்துக்கொண்டுவந்தது.*

இவ்விதமிருக்க கி. மு. 557-வது வருஷத்தில் வட இந்தியாவில் 'கபிலவாஸ்து' என்னுமிடத்தில் 'சாக்ய' ராஜவம்சத்தில் 'கௌதமன்' என்னுமொருவன் பிறந்தான். அவ்வரசிளங்குமரன், ஆரிய கிரந்தங்களையும், பிறவற்றையும் கற்றுமுடிந்ததும் அவைகளில் சொல்லியிருப்பனயாவும் உண்மையோவெனச் சிந்திக்கலாயினன்.

* இங்ஙனம் சிலரது கொள்கை.

'மனிதரது இடையில் ஜாதிபேதம் கூடுமோ? ஊண்கொள்ளல், கொடுக்கல், இவைபோல்வநின்றியமையாதாயினும் பொதுக்காரியமாகிய மதவிஷயத்தில் ஜாதிபேதங்கொள்ளுவது நீதியன்று. ஆகையால் இக்கட்டுப்பாட்டை நிறுத்தமுயலவேண்டும்.' என்றெல்லாவிசாரங்களும் அவனது மனதின்கண் தோன்றலாயின. பிறகு அவன் வம்பர்வீணர் எளியார் இவரையுய்வித்தற்குரிய வழிகளையும் தேடலானான்.

'பொருளைச் செலவுசெய்து பாபத்தைப் போக்குவது என்பது அசம்பந்தமாகும். ஒருவனுக்குவேண்டி மற்றொருவன் தெய்வத்தைத் தொழுவதால் தெய்வசகாயம் ஏற்படாது. முக்திபெறுவதற்கு இடையில் தேவதையோ ஆசிரியனோ வேண்டுவதில்லை. இல்லறத்தார் செய்யும் யாகாதிவினைகளும் துறந்தோர் செய்யும் தபஸ்ஸும் பயனையடையாது.' என்றெல்லாம் தனது கருத்தை வெளியிடவாரம்பித்தனன்.

'காமாதிகளுக் கடங்காமல் பிறர்க்குதவிசெய்துகொண்டு காலத்தைக்கழிப்பதே மனிதஜன்மத்தின் கருத்து. இவ்விதம் 'ஆன்மஸம்ஸ்கரணம்' செய்துகொண்டு இருக்கும் ஜீவிததசையே இல்வாழ்க்கையில் சுகமெனப்படுவது' என்ற போதங்களெல்லாம் அவனது மனத்துக்கண் உதிக்கலாயின. உடனே கௌதமன் புத்தனாய்விட்டான். இதே மதத்தினதுகொள்கையெனவும் வெளியிடத் துடங்கினான்.

பிறகு, அவன் 'ஆரிருளுய்த்துவிடும் அடங்காமை'யை நீக்குவதற்கும், நல்வினைகளை யுறுதிப்பொருளாகக் காப்பதற்கும், உரிய அரிய உபதேசங்களை உலகிற்கு உபதேசிக்கலானான். அந்தணர் சண்டாளர் பெரியார் சிறியார் என்னும் பகுதியால் தன் முறைமையை விடாது ஒழுகவேண்டும் அறத்தின் வழுவாத ஒப்பற்ற நிலைமையைக் கைக்கொண்டுவந்தனன். மனைவி புதல்வர் முதலாகிய சம்பந்தமுடையவரிடத்து இருப்பதுபோல உலகரிடத்தும் அன்புடையவனாயிருந்தான். இவ்விதமிருக்கும் இப்புத்தபகவனின் அருளப்பாடுகளை அங்கீகரித்து, ஜனங்கள் ஏராளமாய் அவனது மதத்திற் சேரத்துடங்கினர்.

உண்மையில், ஹிந்துமதத்தில் அப்பிரதானங்களாயிருக்கும் சிற்சில சதாசாரங்களைமட்டும் புத்தன் பிரதானமாக்கிச் செய்தவனேயன்றி அம்மதத்தில் சொல்லப்படாத புதிய தத்வங்கள் ஒன்றேனும் அவனால் சொல்லப்படவில்லை. ஹிந்துக்கள் ஆதிகாலத்தில் நடத்திவந்ததும்,



இடையில் நாசமடைந்ததுமாகிய சில ஒழுக்கங்களைமட்டும் தான் பரவச்செய்ததாக அவன் எண்ணினான். ஆயின் 'பொய்தீரொழுக்கநெறி நின்ற'வனாகிய 'கௌதமன்' யாகாதிவினைகள் நடத்தக்கூடாதென்றும் துறவோர் செய்யும் ஜபாதிகள் பயனையடையாதென்றும், தர்மம் அல்லது நல்லொழுக்கம் ஒன்றினால்மட்டும் ஜீவித சாபல்யம் ஏற்படும் என்றும் வற்புறுத்திக்கொண்டு இருந்தான்.

இப்புத்தமதமானது, வெகுநாள் மிக்க அன்புடனும் ஆதரவுடனும் ஜனங்களால் நடத்தப்பெற்றுவந்த ஹிந்துமதத்தை யுறுதியாக்கும் எதிரியாய் முடிந்ததால் இதை 'அன்பகத்தில்லார்' சிலர் அநாதரித்தும் வந்தனர். இவ்விதம் கி. மு. 500 வருஷத்தினிடையில் இவ்விந்திய நாட்டில் அந்தணமதத்திற்கு இடையூறாகப் புத்தமதமும் பலபக்கங்களிலும் பரவத்துடங்கிற்று.* கி. மு. 487-இல் 'தனக்குவமையில்லாதானா'கிய 'கௌதமபுத்தன்' 'அறவாழியந்தணன்றாள்சேர்ந்தான்'. உடன் புத்தமதத்தைச் சார்ந்த 'சாக்கிய பிக்ஷுக்கள்' எல்லோரும் சேர்ந்து 'இராஜக்ருஹம்' என்னுமிடத்தில் ஓர் சங்கம் ஏற்படுத்தினர். அதற்கொரு நூற்றாண்டின் பிறகு 'வைசாலி'யில் வைத்து ஒரு பௌத்த சங்கம் நடைபெற்றது. இவ்விடத்தில் வைத்து புத்தமதம் இரண்டு சாகைகளாய்ப் பிரிந்தது.

## (5) அசோகன் புத்தமதத்தைக் கைப்பற்றுதல்.

புத்தமதக் கொள்கைகள் பலவிடங்களிலும் வந்துகொண்டிருக்கும் நேரத்தில் அசோகன் மகதநாட்டுக்கு அரசனாயினன். அது சுமார் கி. மு. 273-ல் என்று இதற்குமுன் கூறியுள்ளோம். அசோகன் அரசைப்பெற்றது 'நிறைநீராழி'யை நீந்திக்கடந்தென்றும், அரண்மனையிலுள்ள அரண்மகளிரையும், துணைபுரிய ஒரிளையவனை யொழித்து மற்றெல்லா அரசிளங்குமாரரையும், கொன்றொடுக்கி 'தனக்கே அரசுரிமைபூண்டது' என வசப்படுத்திக்கொண்டானென்றும், அங்ஙனம் கொலைசெய்தது தனக்கு எதிரிகள் கூடாதென்ற எண்ணத்தா

* 'கௌதம புத்தன்' காசிமாநகரில் 'தர்மசக்ரப்ரவர்த்தனம்' நடத்திவருங்காலையில், மஹாவீராசிரியன் 'ஜைன'மதத்தை நிறுவத்துடங்கினன்

லென்றும், மற்றும் சொல்வது தீபவம்சம். * பொய்யுருவமாகிய தீபவம்சத்தினது இக்கூற்று அசோகன் பொறிக்கச்செய்திருக்கும் ஐந்தாவது ஆதேசத்தின் கருத்துப்படிக்கு எதிரியாய் நிற்கின்றது.§

ஆயின், கி. மு. 273-இல் அரசைக் கைப்பற்றிய அசோகனுக்கு முடிசூட்டுக்கொண்டாட்டம் நடந்தேறியது கி. மு. 269ல் ஆகும். இவ்விதம் நான்கு வருஷம் இடைகாண்பது பற்றி, நாட்டின் அவகாசத்தைப்பற்றி சச்சரவுகளும் சண்டைகளும் நேர்ந்திருக்கலாமென அநுமானிக்கக்கூடும். ஆனால் இவ்வநுமானத்தை யுறுதிப்படுத்தும் சத்தேதுக்கள் ஒன்றேனுமில.

பௌத்தனாவதற்கு முன், அசோகன், அசைவிலா மனவெழுச்சியுடையவனும், தோன்றியவாறு நடப்பவனும், கொடுங்கோல் மன்னனுமாயிருந்தான். கொடூரத்தன்மையே உருவமெடுத்துதித்த வெகு துஷ்ட அரக்கனெனத் தோன்றுமாறு அவனது செயல்கள் இருந்தனவென்று பௌத்தநூற்களில் காணப்படுவது மேற்கூறியபடி புத்தமதத்தின் மான்மியத்தை விளக்குவதற்குப்போலும்.

(1) ஒருசமயம் 500 அமைச்சரும் ஒருங்குகூடி அவனது எண்ணத்திற்கு விரோதமாக நின்றனர். உடனதையறிந்த அசோகன் மிக்க கதமுடையனாய் உறையினின்றும் கத்தியெடுத்து 'வாழைப்பிண்டிகளை'ப்போல அவ்வவரது தலைகளை முறித்திடலாயினன்.

(2) பின், ஒருசமயம் அரசப்பெண்கள் உத்தியானவனம் சென்று அசோகமரத்தின் இலைகளையும் பூக்களையும் லக்ஷியமன்னியில் பறித்தெடுத்தெறிந்துகொண்டிருந்தனர். இதையறிந்த அசோகன் 'இப்பெண்கள் இச்செய்கையால் யான் அழகற்றவனென்று என்னிடம் பிரியமின்மையைக்காட்டுகின்றனர்' என்றெண்ணிக்கொண்டு அப்பெண்டிரை, வதைபண்ணினான் போலும்.

இவ்விதம் இராஜதண்டனைகளைத் தானே நடத்தி ஆதிபத்யத்தை மலினப்படுத்துவது இராஜநீதிக்குவிரோதமாதலின், சிக்ஷைகள் நடத்து

* மஹாவம்சம் முதலிய பௌத்த நூல்களிலும் இது காணக்கூடும்.

§ அவ்வாதேசத்தில் கி. மு. 256-இல் அசோகன், அயலோர், மங்கையர், முதலியோரது கற்பைக்காப்பதற்குச் சில உத்தியோகஸ்தர்களை நியமித்ததாகத் தெரியவருகிறது. இங்கு எல்லோரையும் ஆதியிலேயே கொன்றுவிட்டதாகச் சொல்லப்படுவதால் விரோதம் கண்டுகொள்க.



பதற்குத் தனியாய் ஒருவனை நியமிக்கவேண்டுவதாக அமைச்சர் அசோகனிடம் ஆலோசித்தார்கள். அதற்குடன்பட்ட அசோகன் சண்டகிரிகன்' என்னுமோர் பெரும் துஷ்டனைத் தெரிந்தெடுத்து, கொலைமுதலிய தண்டனைகள் நடத்துவதற்கு நியமித்தான். 'சண்டகிரிகனே தந்தையைமட்டுமல்ல தாயையும் கொன்றவனாயிருந்தான்' அவனுக்குத் தண்டித்துக்கொண்டிருப்பதே சுகமாகத் தோன்றிற்று.

அசோகவர்த்தனனது கொடூரச்செயல்களைக் கண்டும் கேட்டும் ஜனங்கள் பயமுற்றிருந்தனர். கீழடங்கிய சிற்றரசர் எல்லோரும் நடுங்கத்துடங்கினர். இவ்விதம் உலகத்தை அடக்கி ஆளுமவன், ஆக்கம், அதிகாரம், யௌவனக்கொழுப்பு, முதலியவைகளால் ஊக்கமுடையவனாய், தான் 'அகல்விசும்புளார் கோமான் இந்திரனே' யென்றும் தனது நாடு அவ்விந்திரனது அமராவதி என்றும் நினைக்கலானான். உலகரில் குற்றம்செய்பவரைத் தண்டிப்பதற்காக ஓர் நரகத்தை (ஜயில்) தாபித்தான். இதைத் தாபித்தது உஜ்ஜைனியிலென்றுசிலரும் பாடலிபுரத்திலென்று மற்றோரும் கூறுவரர். இச்சிறையினகத்து 'யாதனாதண்ட'த்திற்குரிய சாதனங்கள்யாவும் (அதாவது சஸ்திரங்கள், சக்கிரங்கள், காய்ச்சிய எண்ணெய் நிறைந்த குடங்கள், சூலங்கள் முதலியன) தயார் செய்து வைக்கப்பட்டிருந்தன. இச்சிறையிட்டிருக்கும் கட்டிடத்தின் வெளிப்பக்கம் பார்வைக்கு நல்ல தோற்றமுடையதாயிருந்தது. இவ்விடத்தினுள் தெரிந்தோ தெரியாமலோ யாரேனும் சென்றுவிட்டால் அவரைத் திரும்பவிடாது அங்குவைத்தே கொன்றுவிடுவது அரசாக்ஞையாயிருந்தது. இவ்விதம் சிறந்து விளங்கும் நரகஸ்தாபனத்திற்கு 'சண்டகிரிகன்' அக்கிராசனாதிபதியாய் வீற்றிருந்தான்.

ஒருசமயம் இவ்விடத்தில் ஓர் விசேடசங்கதி நடக்கலாயிற்று. பௌத்த சன்னியாசி ஒருவன் பிச்சையெடுத்து நடப்பவனாய் அவ்விடத்தின் அழகைக்கண்டு செல்வவந்தன் வீடென்று நினைத்து அதனுள் புகுதலாயினன். உடனே கடைகாவலர் அவனைப்பிடித்துக் கைகால்களை யிறுகக்கட்டிச் சண்டகிரிகன் எதிரில் கொண்டுவிட்டனர். சன்னியாசியின் கருணைகூர்ந்த குறிப்பினை நோக்கிய சண்டகிரிகன் ஏதோ இரக்கமுடையவனாய் தெய்வம் தொழுதற்கு 4-மணிநேரம் இடைகொடுத்தான். இதனிடையில் மற்றொருவன் தெரியாமல்

இதற்குள் பிரவேசித்தான். உடனவனைக் காவலர் சண்டகிரிகன் ஆக்ஞைப்படி சக்கிரத்திலிட்டுச்சுற்றி வதைபண்ணிவிட்டனர். இதைக்கண்ணுற்ற சன்னியாசி பயத்தால் நடுங்கி மனிதஜீவிதத்தின் க்ஷணபங்குரதையைப்பற்றி யெண்ணி யெண்ணி 'அர்ஹத்' என்னும் உத்தமபதவியை யடைந்தான்போலும். 4-மணிநேரம் கழிந்ததும் இவனையும் பழுக்கக்காய்ச்சிய எண்ணெய்க்கடாரத்தி லிட்டார்கள். அப்பொழுதுற்றகாட்சி மிக்க விந்தையைக்கொடுத்தது. காய்ச்சிய எண்ணெய் மிக்க ஆற்றலுடன் ஆறிற்று. அக்னி தாபசக்தியைவிட்டு நீங்கிற்று. பத்மாசனத்திலிருக்கும் சன்னியாசியின் முகத்தினின்றும் ஒளிபரவிற்று. சண்டகிரிகன் இவ்விந்தையை யரசனிடம் அறிவிக்க அரசன் இதில் சந்தேகமுடையனாய் தானே நேரில்வந்து பார்க்கலானான். பார்வையிட்டதும் மிக்க பக்தியுடன் அப்பெரியாரைக் கடாரத்தினின்றும் இறக்கி அரண்மனைக்கு அழைத்துச்செல்லும் தருணத்தில் சண்டகிரிகன் 'அகம் சென்றார் புறம்போகார் என்னும் சட்டத்தை நினைப்பாயாக' வென்று தடுக்க, அசோகன் கோபம் மிகுந்தவனாய் சண்டகிரிகனை அக்கடாரத்திலிட்டுக் கொன்றுவிட்டுத் தான் சன்னியாசியை யழைத்துச் சென்றனன். கோவிலகத்தில் வாசஞ்செய்வித்தனன். தினந்தோறும் அசோகன் இச்சன்னியாசியைத் தொழுவருவதும் உபதேசங்களைக் கிரஹிப்பதுமாயிருந்து கடைசியில் புத்தமதத்தில் சேர்ந்தான் என்று சில நூற்கள் கூறுகின்றன.

பிந்துசாரமன்னனின் சிரேஷ்ட புதல்வனாகிய 'சுசீம'னின் புத்திரன் 'நிக்ரோதன்' என்பவன் பௌத்தனானதின் பிறகு அசோகன் புத்தமதத்தைச் சார்ந்ததாகவும் மற்றவிடங்களில் சொல்லியுளது. 'உபகுப்தன்' என்ற ஒருயோகியின் உபதேசத்தால் அசோகன் தனது நடபடிகளை மாற்றி புத்தமதத்தைக் கைக்கொண்டதாகவும் ஓர் கதையுண்டு.

புத்தமதத்தைச்சார்ந்த 'தர்மாசோகன்' கி.மு. 231-வது வருஷத்தில் மரணமடைந்தனன். இவ்விதம் கி. மு. 273-முதல் 40-வருஷங்களுக்குமேல் செங்கோல் செலுத்தி வந்த, 'உலகத்திற்கு உயிரெனச் சிறந்த' இவ்வசோகனது ஆளுகையில் அநேக விடயங்கள் நடந்திருக்கக்கூடும். இப்பெரிய இராஜ்யபாரகாலத்தில் இவ்வசோகன் ஒருதடவைமட்டுமே யுத்தம் நடத்தியதாகக் காணப்படுகிறது. இவ்வமர் நடந்தது கி. மு. 261வது வருஷத்திலாகும். கலிங்கதேசம் முதலில் இவனது ஆளுகைக்குட்பட் டிருக்கவில்லை. அத்தேசம் கோதாவரியையடுத்துக் குணதிசையாழியின் ஓரத்திலிருக்கின்றது. அசோகன் இந்நாட்டைப் பிரவேசித்து அங்குள்ளார் யாவரையும் தன் கீழடக்கி அவ்விடத்தையும் தன் கீழ்ப்படுத்திக்கொண்டு முனைமுடிவித்தனன். இப்போரில் அசோகனே ஜயமடைந்தானாயினும், அவன் அனேகாயிரம் ஜனங்கள் மரணமடைந்ததையும் துயரமடைந்ததையும்பற்றி, மிக்க கவலையுற்றான். இச்சமாசாரம், சமரில் மடங்கியவரது கஷ்டப்பாடுகளையும், மாண்டுபோயவரது எண்ணிக்கையையும், ஜயமடைந்தவனது பச்சாத்தாபத்தையுப்பற்றிச் சொல்லும் அசோகனது 13-வது சாஸனவாக்கியங்களினின்றும் வெளியாகும்.* இவ்வாதேசம் தர்மத்தைப் பற்றியும் விரிவாகக் கூறுகிறது.



தர்மம் என்னும் பதத்திற்கு வடமொழியில் அநேகம் அர்த்தங்கள் காணப்படுகின்றன. '[illegible]' என்று நாமலிங்கானுசாஸனத்திலும்,

[illegible]
[illegible] ..... [illegible] ... [illegible]

என்று அநேகார்த்த சங்கிரஹத்திலும் காணப்படுகின்றது. யாதொன்றினால் உலகம் தரிக்கப்படுவதோ அல்லது யாதொன்று உலகத்தைத் தரிக்கின்றதோ' என்ற யௌகிகார்த்தமும் சொல்லப்பட்டிருப்பதால்† 'தர்மம்' என்பதற்கு கிறிஸ்து மதம், பௌத்த மதம், என்றெல்லாம் இப்பொழுது சொல்லிவருவதுபோல 'மதம்' என்ற பதத்திற்குள்ள பொருளும் உண்டென்பது உணரற்பாலது.

உலகில் பிறப்போர் யாவரும் மதத்தைச் சார்தல், ஒழுக்கம் முதலிய சமுதாய நடபடிக்கையுடன் செய்யக் கடன்பட்டிருக்கும் எவ்வித

---

* See the Asoka Rock Edicts No. 13.

† '[illegible]' வடமொழியில் 'தர்ம' மென்பதற்கும், திருவள்ளுவர் திருக்குறளின் வாயிலாக நமக்குபதேசிக்கும் 'அற'த்திற்கும்மிக்க அர்த்தபேத முண்டென்பதையு முணர்க.

வினைகளுக்கும் பொதுப்பெயர் தர்மமென்பது. ஜாதி, தர்மம் இவ்விரண்டும் ஒன்றினையொன்று பற்றியே என்று மிருக்குமென்பது ஹிந்துக்களது கொள்கை. ஒவ்வொரு ஜாதிக்கும் ஒவ்வொரு தர்மம் உண்டென்பது அவர் கருத்து. ஆயின் ஒருமுறையைக் கொண்டிருக்கும் ஒருவன் நடத்தும் தர்மம் மற்றொன்றைச் சார்ந்தவனுக்கு வெறுப்பையுண்டுபண்ணிவந்தது. அசோகனது காலத்தில் 'ஜாதிபாவனை' பலமாயிருந்தது. தர்மத்தைப்பற்றிய அறிவு ஹிந்துக்களுக்கு அன்றுமின்றும் ஒன்றேயாயினும், அசோகனால் கற்களில் வெட்டச்செய்திருக்கும் ஆதேசங்களில் காணப்படும் தர்மத்திற்கும் ஹிந்துக்களது கொள்கையிலிருக்கும் தர்மத்திற்கும் பொருள் வேறுபாடு சிறிதுஉண்டு. இவ்வேறுபாட்டிற்குக் காரணம் புத்தமதத்தில் ஜாதிபேதம் அங்கீகரிக்கப்படாததே

*　　*　　*　　*

தீயவொழுக்கத்தினால் துக்கத்தை யனுபவிப்பானென்பதும், தங்கள் தங்கள் வருணாசிரமங்களுக்குச் சொல்லப்பட்ட ஆசாரத்தையுடையவனாயிருந்தால் அவன் எந்நாளும் இன்பமனுபவிப்பானென்பதும் அம்மதத்தினது காதல் கருத்தாகும். இவ்வசோகன்,

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

## (6) அசோகனது பதினான்குதர்மசாஸனங்கள்.

உலகத்தில் மதங்களை வெளியாக்கிய தத்வஞானிகளில், கிறிஸ்து, மகம்மது, கௌதமன் இவர்களால் நிறுவப்பெற்ற மதங்களை முதன்மையாய்ப் பரவச்செய்த 'ஸெண்டு பாள்' 'காண்ஸ்டண்டைன்' 'காலிப் ஓமர்' முதலியவர்களைச் சீர்தூக்கிப் பார்க்கின் அசோகனே இன்னவர்களில் வைத்து முதற்பெயரை வஹிக்கின்றான். இவ்வசோகனது கருத்து, பிராணிகளிடத்து அன்பை ([illegible])முக்கியமாய்க்கைக்

* ச்லோகः

† [illegible]



கொண்டிருக்கும் புத்தமதத்தைத் தன்னாலியன்றமட்டும் உலகில் பிரசாரப்படுத்தி ஜனங்களைச் சுகிகளாக்கவேண்டும் என்பதாயிருந்தது. தனது ஆதிபத்தியத்தில் எங்கும் புத்தமதத்தை நடப்பாக்க உத்தேசித்து அவன் பலவித ஏற்பாடுகள்செய்து வந்திருந்தான். இவ்வேற்பாடுகளில் முக்கியமானது தர்மலிகிதங்களைப் பாறைகளிலும் தூண்களிலும் வெட்டச்செய்ததே. கற்களில் பொறிக்கப்பட்டவையைப் பற்றி முதலில் கூறுவோம். அரசனிடமிருந்து இவ்லிகிதங்கள் புறப்பட்டவை யாதலின் இவைகளுக்கு ஆதேசங்கள் அல்லது சாஸனங்கள் என்று பெயர் வழங்கலாயிற்று. இவைகளில் 14 லிகிதங்கள் முக்கியமானவை. அவைகளில் சொல்லியிருக்கும் விடயங்களைச் சுருக்கமாக மீண்டெடுத்தெழுதுவேன்.

### முதலாவது சாஸனம். *

இச்சாஸனம் 'தேவாநாம்ப்ரிய' னும் 'ப்ரியதர்ஸி' யுமாகிய மஹாராஜாவினது கட்டளையை முன்னிட்டு எழுதப்பட்டதாகும்.

யாகத்தின்பொருட்டு இங்கு (பாடலீபுர நகரில்) யாதொரு மிருகங்களையும் வதைசெய்யக் கூடாது. கள்ளும், மாம்சமும் அதிகமாய் உபயோகித்துவரும் 'ஸமாஜ'ங்கள் நடத்தக்கூடாது. ஏனெனின் இவ்விதம் 'ஸமாஜ'ங்கள் நடத்துவதில் கெடுதல் நேரிடுவதை மஹாராஜா பார்த்திருக்கின்றார். ஆனால் சிலவிடங்களில் மட்டும் இது தடுக்கப்படவில்லை.

இதற்குமுன்னெல்லாம் மாநிலவேந்தனது பாகசாலையில் (அடுக்களையில்) தினந்தோறும் '[illegible]'த்திற்கு ஆக அநேகாயிரம் மிருகங்களைக் கொல்லுவது வழக்கமாயிருந்தது. இப்பொழுது இந்த லிகிதம் எழுதுங்காலத்தில் தினம் ஒன்றுக்கு இரண்டுமயிலும் ஒரு மானுமட்டுமே கொல்லப்படுகின்றன. ஆனால் மான் என்றும் உபயோகிப்பதில்லை. இனிமேல் இதை முற்றும் நிறுத்திவிடுவதாக நிச்சயித்திருக்கின்றோம்.

* [illegible] ...

..........................................................................

..........................................................................

(இச்சாஸனம் கிரந்தாக்ஷரத்தி லெழுதாமையால் நன்கு விளங்கவில்லையெனப் புள்ளியிடப்பட்டது.)

## இரண்டாவது சாஸனம். †

'தேவாநாம்ப்ரிய' னும் 'ப்ரியதர்சி' யுமாகிய மஹாராஜாவினது ராஜ்யத்திலும், சோளன், பாண்டியன், சத்தியபுத்திரன், கேரளபுத்திரன், இவரது இராஜ்யங்களிலும், சிங்களவர் தேசத்திலும், யவனமன்னனாகிய 'அந்தியோக்கஸ்'ஸின் ஆதிபத்தியத்திலும், அதற்குச் சமீபத்திலுள்ள எல்லாவிடங்களிலும் 'ப்ரியதர்சி' யாகிய மஹாராஜா பசு, பக்ஷி முதலிய எல்லாவித பிராணிகளுடையவும் ரோகங்களைச் சிகித்ஸைபண்ணுவதற்காகத் தகுந்தஏற்பாடுகளைச் செய்துவருகின்றார். மனிதருக்கும், மற்றப் பிராணிகளுக்கும் உபயோகப்படும் கிடையா மருந்துகளை மறுதேசங்களிலிருந்து வரவழைத்து நட்டு வளர்க்கச் செய்திருக்கின்றார். இதுபோலவே காய்கிழங்குகள் எங்கெல்லாம் அகப்படவில்லையோ (ஓஷதானி மூலானி பலானி) அங்கெல்லாம் செடிகளும் மரங்களும் வளர்க்கப்பட்டிருக்கின்றன. மனிதருடையவும் மிருகங்களுடையவும் உபயோகத்தின்பொருட்டு இராஜவீதிகளில் 'ஸாஹ' விருக்ஷங்கள் இருபக்கத்திலும் வரிசையாய் வைக்கப்பட்டிருக்கின்றன. கிணறுகளும் குழிக்கப்பட்டு இருக்கின்றன.

## மூன்றாவது சாஸனம். ‡

'தேவாநாம்ப்ரிய' னும் 'ப்ரியதர்சி' யுமாகிய மஹாராஜா இவ்விதம் சொல்லுகின்றார்.

13-வது அபிஷேக வருஷத்தில் (கி. மு. 256) எம்மால் இது ஆக்ஞாபிக்கப்பட்டிருக்கின்றது.

எனது ஆதிபத்தியத்தின் கீழ் நியமனம் செய்யப்பெற்ற 'யுதர்கள்' * (ஆயுக்தர்கள்) இராஜுகர்கள் (ரஜ்ஜுகர்கள்) 'பிராதேசிகர்' முதலிய உத்தியோகஸ்தர்கள் ஐந்துவருஷத்திலொருமுறை 'அநுஸம்யானம்' செய்யவேண்டும் (சர்க்கீட்டு போகவேண்டும்). மற்று காரியங்களுடன் கீழ் சொல்லும்படி அவர் தர்மோபதேசங்களையும் (தர்மாநுசிஷ்டி) நடத்திவரவேண்டும்.

† Asoka rock edicts No. 2.
‡ Asoka rock edicts No. 3.
ஸுபேயம் = பேயம் அன்ன ஆஹாரம். பேயம் = குடிக்கயோக்கியமானது.
* யுதா:, ஆயுக்த, ராஜூகா:, ரஜ்ஜூகா:, ப்ராதேசிக,



தாய் தந்தைகளுக்குப் பணிவிடைசெய்வதும், நட்பினர், (ஸம்ஸ்துதர்) அயலோர், அந்தணர், சமணர், இவர்களுக்குத் தானம் செய்வதும், பிராணிகளை ஹிம்ஸைபண்ணாமலிருப்பதும்.............. நல்லதாகும். சுருங்கிய செலவும் 'பாண்ட'மும் நல்லதாகும்.

## நான்காவது சாஸனம் *

அநேககாலமாய் யாகத்தின்பொருட்டு பிராணிகளை வதைபண்ணுதல் அதிகரித்திருந்தது. பிராணிகளை ஹிம்ஸைசெய்துகொண்டிருந்தார்கள் ........................ அயலோர், அந்தணர், சமணர் இவர்களிடத்து ஜனங்களுக்கு நேசமில்லாமலிருந்தது.

ஆனால், இப்பொழுது மஹாராஜாவினது தர்மச்செய்கைகளால் எங்குபார்த்தாலும் தர்மமே முன்னதாக நிற்கின்றது. விமானங்கள், யானைகள், தீபங்கள் (அக்னிஸ்கந்தங்கள்) இதுகளுடன் நகரயாத்திரை நடந்ததில் ஜனங்களுக்கு மிக்க சந்தோஷமிருப்பதாகத் தெரியவருகிறது. மஹாராஜா தர்மோபதேசம் துவக்கிய நாள்முதல், ஜந்துக்களைக் கொல்லாமையும், அந்தணர், சமணர் இவரிடத்து ஆதரவும், தாய் தந்தையோருக்குப் பணிவிடையும் ஜனங்கள் செய்துவருதலால் இன்னும் தர்மச்செய்கையை அபிவிருத்திபண்ணுவதற்குத் தகுந்த ஏற்பாடுகள் செய்யப்போகின்றோம். மஹாராஜாவினது, மக்கள், பேரர், கொள்பேரர், முதலியோர் கல்பாந்தகாலம்வரையிலும் தர்மத்தை அபிவிருத்திசெய்துகொண்டே இருப்பார்கள். தர்மமும், நல்லொழுக்கமும் உலகத்தில் குறையாமலிருப்பதற்காக இவ்விகிதம் எழுதப்பட்டிருக்கின்றது.

பிறர்மதத்தைத் தூஷித்து தான் கைக்கொண்டிருக்கும் மதமெல்லாவிதத்திலும் நல்லதெனப் பூஷித்து வருபவன் தனது மதத்தை நசிப்பித்துவரும் பாவியாகக்கடவன். * * *

## ஐந்தாவது சாஸனம் †

'தேவாநாம்ப்ரிய' னும் 'ப்ரியதர்சி'யுமாகிய மஹாராஜா இவ்விதம் உத்தரவுசெய்கின்றார்.

* Asoka rock edicts No. 4.
† Asoka rock edicts No. 5.

நல்வினை துஷ்கரமாகும். நல்லகாரியத்தைச் செய்தவன் செய்ய முடியாத காரியமொன்றைச் செய்தவனாவன். எனது தனயர், பேரன்கள் முதலியோர் என்னைப் பின்பற்றி நடப்பார்களாயின் அது அவர்களுக்கு நல்ல பயனைக்கொடுக்கும்.

தர்மத்தினின்றும் தப்பி நடப்பது பாபமாகும். பாபமோ எளிதிற் செய்யக்கூடியது. எனது ஆளுகைக்கு முன் 'தர்ம மஹாமாத்திரர்கள்' என்னும் உத்தியோகஸ்தர்கள் உண்டாயிருக்கவில்லை. இவர்கள் தர்மகாரியத்தின்பொருட்டு எம்மால் நியமிக்கப்பட்டவர்கள். யவனர், காம்போஜர், காந்தாரர், முதலிய எல்லா வகுப்பினரிடத்தும் தர்மத்தை ஸ்தாபித்து சம்ரக்ஷணைபண்ணுவதற்கும், வேலைக்காரர், அந்தணர் செல்வமிகுந்தவர், கெதியற்றவர், கிழவர், இவர்களுக்கு வேண்டியவைகளைச் செய்துகொடுப்பதற்கும், அநீதியாய்ச் சிறையிலடைத்தல், அடித்தல், முதலிய தண்டனைகள் நடக்காமல் பாதுகாத்துக்கொள்ளுவதற்கும், நியாயமாய்த்தண்டிக்கவேண்டுமிடத்தும் தயவுடன் இருப்பதற்கும், எளியோரைச் சகாயிப்பதற்கும், இங்கு பாடலீபுரத்திலும் மற்றெல்லா முக்கிய நகரங்களிலும் இருக்கும் பெண்களது கற்பைக் காப்பதற்கும், தானத்தைச் சரிவர நடத்திக்கொண்டுபோவதற்கும் வேண்டி 'தர்ம மஹாமாத்திரர்' நியமிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இவ்லிகிதமானது நீடூழிகாலம் நிலைநிற்கட்டும். எனது ஜனங்கள் அறத்தினின்றும் அணுவேனும் வழுவாமல் இவ்வாதேசங்களை யனுசரிப்பாராக.

## ஆறாவது சாஸனம் *

சீக்கிரத்தில் காரியங்களை நடத்துங்கள், தூதுவர் வழியாகச் சமாசாரங்களை யுடனுடன் அறிந்துகொள்ளுங்கள். யான் ஆக்ஞைபிடுவது என்னவெனின், யான் உண்ணும்பொழுதும், அந்தப்புரத்திலிருக்கும்பொழுதும், உத்தியானவனத்தில் உலாவும் சமயத்திலும், மற்றேது 'சமயத்தாயினும் ஜனங்களுடைய சங்கதிகளைப்பற்றி உடனுடன் ப்ரதிவேதகர்' வழியாக அறிய விரும்புகிறேன். எவ்விடத்திலும், எச்சமயத்திலும் அவர்களுக்கு நன்மைசெய்யச் சித்தனாயிருக்கிறேன். நான் இவ்வுலகில் ஜீவித்திருப்பது ஜனங்களுக்கு ஹிதத்தைச் செய்வதற்காகவே. நான் இச்சாஸனத்தைப் பாறையில் பொறிக்கச்செய்வது இது வெகுகாலம் நிலைநிற்கவேண்டுமென்னும் உத்தேசத்துடனும்,

* Asoka rock edicts No. 6.



என்னைப் பின்பற்றிவரும் அரசர்கள் என்னைப்போல் இவ்விஷயத்தில் கருத்துடனிருக்கவேண்டும் என்னும் எண்ணத்துடனுமாகும்.

## ஏழாவது சாஸனம் *

எனது ஆதிபத்தியத்தின்கீழ் பலஜனங்கள் பலமதத்தைப் பின்பற்றி வருகின்றனர். இவரெல்லோரும் சுகமாயிருக்கக்கடவர். ஏனெனின்: இன்னவர்கள் இந்திரியங்களை வசியம்பண்ணி மனச்சுத்தியுடன் இருக்கவேண்டும் என்ற கருத்துடையவர்கள்; * *

## எட்டாவது சாஸனம் †

முன்னெல்லாம் அரசர்கள் மனோவிநோதத்தின்பொருட்டு வேட்டையாடுவதற்கு வேண்டி 'விஹாரயாத்திரை' செய்துவந்திருந்தனர். ஆயின் 'தேவானாம்ப்ரிய'னும் 'ப்ரியதர்சி'யுமாகிய மஹாராஜா 11-வது அபிஷேக வருஷத்தில் (கி. மு. 259) 'ஸம்போதிபாராயண'ராய் 'தர்மயாத்திரை' ஆரம்பித்திருக்கின்றார். இவ்யாத்திரை தொடங்கியது அந்தணர், சமணர், இவரைத் தர்சித்து தக்ஷிணை கொடுப்பதற்கும், குருஜனங்களைக் கண்டு அவர்களுக்குப் பொருளுதவி செய்வதற்கும், ஒவ்வொரு இடங்களையும் நேரிற்கண்டு அங்குள்ளவர்க்கு தர்மோபதேசம் செய்வதற்கும், தர்மத்தைப்பற்றிய வாதப்பிரதிவாதங்கள் நடத்துவதற்கும், வேண்டியாம்.

இங்ஙனம் 'விஹாரயாத்திரை'க்குப் பதிலாக 'தர்ம யாத்திரை' நடத்துவதில் மஹாராஜா சந்தோஷமுடையவரா யிருக்கின்றார்.

## ஒன்பதாவது சாஸனம் §

இவ்வாழ்க்கையில் ஸ்திரீ புருஷர்கள் அநேகம் மங்களகாரியங்கள் செய்வது வழக்கம். மங்களகாரியங்கள் செய்யவேண்டியவைகள்தான். ஆனால் அவைகளைக்கொண்டு பிரயோஜனமொன்று மில்லையென்றே

* Asoka rock edicts No. 7.
† Asoka rock edicts No. 8.
§ Asoka rock edicts No. 9.

சொல்லலாம். 'தர்ம மங்கள காரியங்க'ளாவெனில் மிக்க பயனை யளிக்கின்றன. அவை யாவன:—தாஸரிடத்தும் வேலைக்காரரிடத்தும் மிக்க தயவுடன் பெருமாறுதல், குருஜனங்களை வெகுமதித்தல், அந்தணர், சமணர், இவர்களைப் பூஜித்து தக்ஷிணையளித்தல் முதலியனவாம்.

தான் நினைத்தகாரியம் பயனையடையுமளவாக 'தர்ம மங்கள கர்ம'ங்களைச் செய்யவேண்டும். இவ்விஷயத்தை எல்லோரும் எல்லோரிடத்திலும் சொல்லவேண்டும். 'தர்ம மங்கள கர்ம'ங்கள் சாசுவதமாயிருக்கக்கூடியவை. இல்லறத்தில் அது பலனைக் கொடுக்காவிடினும் மற்றொருகாலத்தில் பயனை யளிக்குமென்பதில் ஐயமில்லை, * *

## பத்தாவது சாஸனம் *

இப்பொழுதும் மேல்வரும்காலத்திலும் தர்மத்தைக் கைக்கொண்டே நடக்கவேண்டும். நம் நாட்டிலுள்ள ஜனங்கள் யாவரும் 'தர்மோக்த விதி'களைக் கைப்பற்றி அதன்படி நடக்கின்றார்கள் என்பதில்மட்டுமே மஹாராஜா புகழைத்தேடுகின்றார். யாம் இப்பொழுது சில காரியங்களை நடத்திவருகின்றனம். அவையெல்லாம் மேல் நிகழும் காலத்தை யுத்தேசித்துச் செய்யப்பட்டனவாகும். ஜனங்கள் எல்லோரும் ஆபத்திலின்று தப்பிக்கொள்ளவேண்டும். 'அப்புண்ய'த்தையே 'ஆபத்'தென்று சொல்லுவது. அதினின்றும் ரக்ஷிப்படுவது எளிதில் முடியாது. ஆகையால் இவ்விஷயத்தில் மிக்க சிரத்தை பாராட்டவேண்டும்.

## பதினோராவது சாஸனம் †

தூதுவரிடத்து அன்பைக்காட்டுதல், தாய் தந்தைகளுக்குப் பணிவிடைசெய்தல், நட்பினர், அயலோர், சமணர், அந்தணர், ஸம்ஸ்தர்? முதலியோருக்குப் பொருளுதவி செய்தல், இவைகளையே

* Asoka rock edicts No. 10.
† Asoka rock edicts No. 11.



'தர்மதான'மெனச் சொல்லுகின்றோம். இதனால் இவ்வுலகத்தில் இன்பமும் மேலுலகத்திம் 'அநந்தமாய புண்யமும்' உண்டாகின்றன.

## பன்னிரண்டாவது சாஸனம் *

எவ்வித மதத்தைச்சார்ந்து கிருஹஸ்தனாகியோ சன்னியாசியாகியோ இருந்தாலும் சரி, அவர்களை மஹாராஜா பூஜைசெய்து உபசரித்துவருகின்றார்.

ஆனாலவர் இவ்வுபசாரங்களை யொன்றையும் காரியமாகக் கணிக்கவில்லை. தான் ஒருமதத்தைக்கொண்டு பிறர்மதத்தைத் தூஷிப்பது அரிது. ஏனெனின் ஏதேனுமொரு காரணம்பற்றி எல்லாமதங்களும் பூஜிக்கத்தக்கவையா யிருக்கும்.

## பதின்மூன்றாவது சாஸனம் †

'தேவாநாம்ப்ரிய'னும் 'ப்ரியதர்ஶி'யுமாகிய மஹாராஜா 9வது அபிஷேக வருஷத்தில் 'கலிங்கரை'ப் போரில் வென்றார். இப்போரில் ஒருநூற்றைம்பதினாயிரம் ஜனங்களைப் பிடித்துச் சிறையிலடைத்தார். நூறாயிரம் ஜனங்கள் மரணமடைந்தார்கள். இதற்கும் அனேகமடங்கு ஜனங்கள் பலவிதத்தில் நாசமடைந்தனர். கலிங்கதேசத்தை, தன் கீழடக்கி அத்தேசத்திலும் தர்மோபதேசத்திற்காக ஜனங்களை நியமித்தார். * * * *

மஹாராஜாவினது அபிப்பிராயத்தில் உத்தமமான ஜயம் தர்மஜயமேயாகும். ஆகையால் எல்லோரும் தர்மபரிபாலனத்திற்குவேண்டியமுயற்சி செய்துவாருங்கள். அறிஞர் தர்மோபதேசத்திற்குப் புறப்படவேண்டும். மஹாராஜா தன்னுடைய நாட்டிலும் அயல் நாடுகளிலும் தர்மத்தைப் பரவச்செய்திருக்கின்றார். மேற்கு யவனராஜனாகிய 'அந்தியோக்கஸ்தீயோஸ்' என்பவனது 'ஸிரியா' தேசத்திலும் அதன் வடக்கு 'தாலமி' 'அந்திகோணஸ்' 'மாகஸ்' 'அலக்ஸாந்தர்' இவரது

* Asoka rock edicts No. 12.
† Asoka rock edicts No. 13.

ராஜ்யங்களிலும், தெற்கு 'சோழன், பாண்டியன், தாம்ரபர்ணி, (ஸிலோன்?) யவனர், காம்போஜர், நாபங்கிகன், போஜர், பிதிநகர், ஆந்திரர், புளிந்தர், இவாதி நாடுகளிலும் தர்மாசரணம் செய்துவருகின்றனர். * * * இக்காரியத்தின்பொருட்டே இச்சாஸனம் வரையப் பெற்றது.

## பதினான்காவது சாஸனம்*

மஹாராஜாவினது ஆக்ஞைப்படி இச்சாஸனங்கள் எழுதப்பட்டன. மஹாராஜாவின் ஆதிபத்தியம் மிக்க விஸ்தாரமுடையது. எல்லாச் சாஸனங்களையும் ஒன்றுபோல விஸ்தரிக்கவேண்டியதில்லையென்று சிலவற்றைச் சுருக்கமாகவும் சிலதை விரிவாகவும் எழுதியிருக்கின்றனம். இதுகாறும் அநேகம் சாஸனங்கள் வரைந்தாய்விட்டன. மேலும் அநேகம் எழுதப்போகின்றோம்.

சில வாக்கியங்கள் ஒருதடவைக்குப் பலதடவையாக எழுதப்பட்டிருக்கின்றன. அது, விடயத்தின் சுவையனுசரித்தாயிருக்கும். இவ்விதம் பலதவணை சொல்லியாவது ஜனங்களை யனுசரிக்கச்செய்யவேண்டுமென்பதே கருத்து.

பொருள் மாறி விளங்கியோ அல்லது வெட்டப்பட்டவனது சிரத்தைக் குறைவினாலோ வாசகங்கள் முழுதும் பொறிக்கப்படவில்லையென்றும் வரக்கூடும். ‡

## (7) இச்சாஸனங்களைப்பற்றிய மற்றவிவரங்கள்.

மேற்கூறிய 14 சாஸனங்களையும் அசோகன் தனது ஆதிபத்தியத்தின்கண் ஜனசஞ்சாரம் அதிகமாய் ஏற்படும் பட்டணங்களிலும் இராஜவீதிகளின் ஓரங்களிலும் ஜனங்களது கண்பார்வை எளிதில்படும்படி பாறைகளில் வெட்டச்செய்திருக்கின்றான். ஆயின், மிக்க இடங்களி

* Asoka Rock Edicts No. 14.

‡ இச்சாஸனங்களைப் படிப்போர் அசோகனது பெருந்தன்மையைப் பற்றி அறியக்கூடும்.



லும் இருக்கக்கூடிய இவ்வாதேசங்கள் காலப்பழக்கத்தினாலும் எதிரிகளின் முன்னேற்றத்தினாலும் இப்பொழுது நஷ்டமாய்விட்டன. நாளதுவரையில் ஏழு இடங்களில்மட்டுமே இவை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அவ்விடங்களின் விவரத்தைக் கீழ்ச்சொல்லுவேன்.

1-வது 'ஷாஹபாஜ்கஹீ' என்னுமிடத்துள்ளது. இவ்விடமானது இவ்விந்தியா மஹாராஜ்யத்தின் வடமேற்குத்திசையில் 'பேஷாவர்' ஜில்லாவில் 'யூஸுப்ஸாயி' என்னும் தாலூக்கைச் சார்ந்ததாகும். கஹீ' என்ற பதத்திற்கு 'கோட்டை' என்பது பொருள். இவ்விடம் சிந்து நதிக்கரையிலுள்ள 'அதக்' என்ற விடத்தினின்றும் வடமேற்கு 25 மைல தூரத்திலும், 'பேஷாவர் பட்டணத்தினின்றும் வடகிழக்கு 40 மைல் தூரத்திலு மிருக்கின்றது. இவ்விடத்தின் தென்கிழக்குப் பாகத்தில் ஓர் குன்றின் சரிவில் பாறைகளுள. இப்பாறைகளில் மேற்கூறிய 14 ஆதேசங்களும் காணக்கூடும். 24 அடி நீளம் 10 அடி உயரம் 10 அடி கனமுமுள்ள ஓர் வெண் கற்பாறையில் 13 ஆதேசங்கள் கொத்தப்பட்டிருக்கின்றன. 'ஷாஹபாஜ்கஹீ' யின் சமீபத்தில் 'கபர்தகிரி' என்னுமோர் கிராமமுளது. ஆனதுபற்றிப் போலும் இச்சாஸனங்களை 'கபர்தகிரி சிலாலிகிதங்கள்' (கபர்தகிரி?) என்று வழங்கிவருவது.

2-வது 'மான்ஸரா' என்ற விடத்துள்ள சாஸனம். இவ்விடம் இந்தியா சமஸ்தானத்தின் வாயுமூலையில் 'ஸெண்ட்ரல் பிராவின்ஸ் 'ஹஸாரா' ஜில்லாவைச்சார்ந்தது. இது 'ஆபொட்டாபாத்' என்ற விடத்திலிருந்து 15 மைல்தூரத்திலிருக்கின்றது. 'பெரி'(ஹட்டாக) என்ற புண்ய ஸ்தலத்திற்குச் செல்லும் பாதையின் அருகில் யாத்ரை ஜனங்கள் எளிதில் நோக்கும்படியாக இது எழுதப்பட்டுளது. இக்கற்பாறையின் ஒருவசத்து 12-வது லிகிதமும் மறுவசத்து 13 லிகிதங்களும் காணப்படுகின்றன. இவ்விரண்டு இடங்களிலும் 12-வது சாஸனத்திற்குப் பிராதானியம் கொடுத்திருக்கின்றது.

3-வது 'கால்ஸி'யிலுள்ளலிகிதம். 'டேராடூன்'ஜில்லாவைச்சார்ந்த 'ஸஹாரன்பூரி'ல்நின்றும், சேனைகளது இருப்பிடமாகிய 'சக்ராதா' என்றவிடத்திற்குச்செல்லும் ரோட்டிற்குச்சமீபம் 'மசூரி' (மான்சூரி) என்றவிடத்திலிருந்து மேற்கு 15-மைல்தூரத்தில் 'கால்ஸி' என்னு மோர் இடமுண்டு. இதற்குத் தென்பாகத்தில் 1½ மைலுக்கப்பால், அடியில் 10 அடி கனமும் அதன்மேல் 6 அடி கனமுமுள்ள ஓர்பாறை யில் 'ப்ராஹ்மீ' என்னு மெழுத்தின் பழையவடிவில் 14 சாஸனங்களும் சரியாகக் கொத்தப்பட்டிருக்கின்றன.

4-வது 'ஸோபார'த்திலுள்ள சாஸனங்கள். பம்பாய் பட்டணத் தின் வடக்கு "டாணா" ஜில்லாவைச்சார்ந்த 'ஸோபாரம் என்னுமிடத் தில் (ஸூர்பாரக) 8-வது லிகிதத்தின் சில வரிகள்மட்டுமே காணப் படுகின்றன. மற்றவையெல்லாம் அழிந்துபோயின போலும்.

5-வது 'கிர்நார்' லிகிதம். கி. பி. 1822-ல் 'கர்ணல் டாட்' என்ற ஆங்கிலேயர் இச்சாஸனத்தைப்பற்றிய விவரணமொன்று முதன்மையாய் வெளியிட்டனர். 'காடியாவாட்' (ஸௌராஷ்ட்ர) என்ற விடத்தைச் சார்ந்த 'ஜூநாகட்' என்னும் ஸ்தலத்திற்குச் சமீபம் 'கிர்நார்' என்ற ஓர் மலையில் ஒரு பாறையின்கண் இச்சாஸனங் கள் காணப்படுகின்றன. ஆனால் இப்பாறை நாளடைவில் மண்ணி னடியிலாய்விட்டது. பிறகு ரஸ்தாவெட்டும்பொழுது கண்டுபிடிக்கப் பட்டது. இதில் சிலபாகம் உடைந்துவிட்டது.

6-வது 'யௌலீ' லிகிதம். 'ஒரிஸ்ஸா' தேசத்தில் 'பூரி' ஜில்லா வில் 'புவநேச்வரம்' என்றவிடத்தினின்று 7 மைல் தெற்கு 'யௌலீ' என்ற ஓர் கிராமமுளது. அதனை யடுத்திருக்கும் ஓர்மலை யின் பாறையில் லிபிகள் காணப்படுகின்றன. இவ்வக்ரஹாரமானது 'ஜகந்நாத'த்தி னின்றும் வடக்கு 20 மைல் தள்ளியிருக்கின்றது.



7-வது 'ஜௌகட்' லிகிதம். 'கஞ்ஜாம்' ஜில்லாவில் 'பெர்ஹாம் பூர்' தாலூக்காவில் 'இருஷிகுல்ய' நதியின் வடக்குக் கரையில் இருக்கும் 'பெர்ஹாம்பூர்' பட்டணத்தினின்றும் 14 மைல் தூரத் தில் 'ஜௌகட்' என்னுமிடமுண்டு. 'ஜௌகட்' என்னும் பதத்திற்கு 'அரக்குக்கோட்டை' என்பது பொருள். கோட்டையினது ஓரங்க ளில் எதிரிகள் பிரவேசிக்காமலிருக்குமாறு அரக்கு பூசப்பட்டிருந்த தால் இப்பெயர் வழங்கியது போலும். இவ்விடத்தின் மத்தியில் இருக்கும் ஓர் பாறையின் தென்கிழக்குப் பாகத்தில் லிகிதம் வரையப் பெற்றிருக்கின்றது.

'யௌலீ' 'ஜௌகட்' இவ்விரண்டு இடங்களிலும் உள்ள சாஸ னங்களில் 11-ம் 12-ம் சாஸனங்கள் காணப்படவில்லை. ஆனாலதற்குப் பதிலாக வேறு இரண்டு லிகிதங்கள் இருக்கின்றன. அவை தர்மத் தைப்பற்றியதே.

(1) மாசந்தோறுமுள்ள புஷ்ய நக்ஷத்திரத்தன்று இவ்வா தேசங்களை ஜனங்களிடம் வாசித்துக் காண்பிக்க வேண்டும்.

(2) பட்டணங்களிலும் மற்ற விடங்களிலும் ஜனங்களை சரியான காரணமன்னியில் தண்டிக்கக்கூடாது.

(3) உத்தியோகஸ்தர் ஜனங்களை சங்கடப்படுத்தாம லிருப் பதற்காக இவ்வாதேசங்கள் பாறையில் பொறிக் கப்பட்டிருக்கின்றன.

இவ்விஷயங்கள்மட்டும் இவ்விரண்டுசாஸனங்களிலும் அதிகமாய்க் காணப்படுகின்றன.

இனி, ஆங்காங்குக் காணப்படும் சில ஒற்றைச் சாஸனங்களையும் தூண்களில் பொறிக்கப்பட்டவைகளையும், அசோகனது இராஜாங்க முறைமை, முதலியவைகளையும் பற்றி மற்றொருமுறை கூறுவேன்

இவ்வாராய்ச்சியில் எனக்கு மிக்க உதவிபுரிந்த ரிட்டயர்ட் தாசில்தார் எம். வி. நாராயண பிள்ளை B. A., அவர்கள்மாட்டு யான் நன்றிசெலுத்தக் கடப்பாடுடையேன்.

[illegible] ।
[illegible] ॥

வெங்கடராம சர்மா,
155 சாலை, திருவனந்தபுரம்.

---

உ

சிவமயம்.

# நன்னூல்.

நன்னூல் என்பது "சனகைச் சன்மதிமுனியருள் பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி என்னு நாமத்திருந்தவத் தோனு"லே, அகத்தியந் தொல்காப்பிய முதலிய முந்து நூல் வழியே "சில்வகை யெழுத்திற் பல்வகைப்பொருளைச் செவ்வனாடியிற் செறித் தினிதுவிளக்கித் திட்பநுட்பஞ் சிறந்தன சூத்திரங்களாற் செய்யப்பட்டதோ ரிலக்கணநூல். இது, ஐயிருநூற்றுமுமகற்றியம்மாண்பொடு முப்பத்திரண்டுத்தியு மமைந்துள்ளது. கற்போரினிதுணர்ந்துகொள்ளுமாறு தொகை வகை விரியிற் றரப்பட்டது. தமிழ்ப் பதங்களைப் பகுத்துணர்ந்து கொள்ளுமாறும் வடமொழிப்பதங்கள் தென்மொழிக்கண்வந்து வழங்குமாற்றை இனிதுணர்ந்து கொள்ளுமாறும் தென்மொழி யிலக்கண நூலுணர்ச்சியோடு தமது வடமொழி யிலக்கணநூலுணர்ச்சியுங் கொண்டு பவணந்தியார் பதவியற்கணமைத்த புது விதிகளும் தன்னுள் வாய்ந்துள்ளது. இத்துணை பெருமைவாய்ந்ததாகிய இந்நன்னூலின் சிறப்பு நோக்கியே, இதனை; இலக்கணக்கொத்துநூலாரும் "முன்னோரொழியப் பின்னோர்பலரினுள் நன்னூலாருந் - தொன்னூலாரு மிணையோ வென்னுந் துணிவே மன்னுக" எனப் பவணந்தியாரைப் புகழும்வாயிலாற் புகழ்ந்தனர். இங்ஙனமே, "பல்கலைக் குரிசில் பவணந்தி யென்னும் புலவர் பெருமான்" என நன்னூல் விருத்தியுரைகாரரும் புகழ்ந்தனர். இலக்கண விளக்கநூலாரும் இதனையே அங்கீகரித்து இதன்கணுள்ள சூத்திரங்களையே தந்நூலினும் பெரும்பாலும் பொருத்தியாத்தனர். இதன் சிறப்புநோக்கியே பலர் காண்டிகைசெய்தனர். பலர் பிரகடனஞ் செய்தனர். இதன் சிறப்புநோக்கியே விரிவுரையு மெழுந்தது. தொல்காப்பியப் பாயிரவிருத்தி முதலிய வற்றிலே சிவஞான சுவாமிகளும் இதன் சிறப்பைப் பலவிடங்களிற் புகழ்ந்தனர். ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுக நாவலர் பெருமானும் இதன் சிறப்பு நோக்கியே இதன் காண்டிகை விருத்திகளைத் திருத்தமுற அச்சிட்டனர். மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்களும் தாம் புதிதாகப் பதித்த இந்

நன்னூன் மயிலைநாத ருரையின் முகத்திற் றுமுரைத்த நூலாசிரியர் வரலாற்றிலே இதனையும் இதனாசிரியரையும் நன்கு புகழ்ந்தனர். சுன்னாகம் வித்துவ சிரோமணி அ. குமாரசுவாமிப் புலவரும் தாமியற்றிய புலவர் சரித்திரத்திலே பவணந்தியாரைக் கூறுங்கால் "இந்நன்னூல் பாணினி வியாகரணம் போலச் சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருள்சொலுந் திட்பநுட்பஞ் சிறந்தது" என இதனைப் புகழ்ந்தனர், இதுவே தற்காலத்தில் இந்தியாவிலும் இலங்கையிலுமுள்ள செந்தமிழ்க்கழகங்களிலும் ஆங்கிலக் கல்லூரிகளிலுங் கற்பிக்கப்படுகின்றது. சுருக்கிச் சொல்லுகில் இதனை அங்கீகரியாதார் இல்லை என்றே சொல்லலாம். அங்ஙனமாக:

இந்நன்னூலைப் பவணந்தியார் பிழையுறச் செய்தனர் என்று இராமநாதன் காலேஜ்; தலைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ நவநீதகிருஷ்ண பாரதியாரவர்கள் தாமெழுதிச் செந்தமிழில் வெளிப்படுத்திய "தொல்காப்பியமும் பிற்காலத்தாரும்" என்னும் விஷயத்திலே கண்டனஞ் செய்தனர். நன்னூலாரைப் புகழ்ந்தாரையன்றி இகழ்ந்தாரை நாமிற்றைவரை யறியோம். மஹாமஹோபாத்தியாயர் உ. வே. சாமிநாதையரவர்களும், செந்தமிழ்ப் பத்திராதிபராயிருந்த சேதுபதி சமஸ்தான வித்துவான் ரா. ராகவையங்காரவர்களும், இப்போது செந்தமிழ்ப் பத்திராசிரியரா யிருக்கும் வித்துவான் திரு. நாராயணையங்காரவர்களும், சுன்னாகம் வித்துவ சிரோமணி அ. குமாரசுவாமிப் புலவரவர்களும் முதலிய தற்கால வித்துவ சிரேட்டர்களும் இதனைக்கண்டிக்க முன் எழுந்திலர். இப்போது பாரதியாரவர்களே முன் எழக்கண்டனம். இது பேராச்சரியமே.

பாரதியா ரவர்கள்போலவே இன்னும் பலர் சேனாவரையர், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலிய உரையாசிரியர்களையும் *கண்டித்துப் பேர்படைக்கலாமென்று முன் எழுந்தனர். எழுகின்றனர். ஆனால் அவர்களுளொருவரும் பாரதியாரவர்களைப்போல நூலாசிரியரைக் கண்டிக்க முன் எழுந்திலர். ஆகையால் அவர்கள் பாரதியாரவர்களிற் புத்தியுடையவர்களே. முன்னூல்களையும் உரைகளையும் கண்டித்துப் புகழ்பெற விரும்பும் பாரதியார் முதலியோர் தாம் புதிய

* அபிப்பிராயங் கூறுவதன்றிக் கண்டிப்பது தகுதியன்று.



லுரைகளியற்றிப் புகழ்படைத்தாலென்னை? அஃது அவர்களான் டியாதுபோலும். நிற்க.

ஒருவரைக் கண்டனஞ்செய்பவர் அவரினும் அறிவாற்றல்களான் க்கவராயன்றோ விருத்தல்வேண்டும். இன்றேல் அவர்கண்டனம் ங்ஙனம் அங்கீகரிக்கப்படும். பாரதியாரவர்களோ தாமெழுதிய விஷத்தைப் பிழையறவெழுதும் ஆற்றலில்லாதவர்களா யிருக்கின்றார் அங்ஙனமாக அவர்கள் நன்னூலாரைக் கண்டிப்பது எவ்வாறு?

பாரதியாரவர்கள் தாமெழுதிய விஷயத்திலே;

(1) வெளிப்படுத்தினார் பலராவர். இதற்குச் சான்றாக நன்னூல் உடையாரையே இதுபொழுது ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது என்றனர். இதிற், 'பலராவர்' எனமுடித்து 'இதற்குச் சான்றாக' எனச் சுட்டியதூஉம் வழூஉ. 'எடுத்துக்கொள்ளப்பட்டது' என்பதற்கு எழுவாயின்றாதலும் வழூஉ. வெளிப்படுத்தினார் பலருள் நன்னூலாரும் ஒருவர் என்பது தோன்ற வாக்கியம் எழுதப்படாமையும் வழூஉ.

(2) "ஆசிரியர்" என்றனர். இங்கே ஆசிரியரை இன்னார் எனத் தெரித்துக்கூறாமையும் வழூஉ.

(3) "ஏனைய மூன்றின்" என்றார். இதிற் றும் துணியப்பட்டதாகக் கொண்ட மூன்றிற்கு முற்றும்மை கொடாமையும் வழூஉ.

(4) வாளாச் சேறலின் என்பதிற் சகர மிக்கதூஉம் வழூஉ.

(5) "உயிராவது உயிர்மெய்யாவது தனித்தும் மெய்சார்ந்து வரினும் அவ்வளவினவே" என்றார். உயிர்மெய் மெய்சார்ந்து வருவது எவ்வாறு? சார்ந்துவருதலின்மையின் வழுவன்றோ? விகற்பத்தால் மெய்சார்ந்துவருதல் உயிர்மெய்க்குமெய்திற்றன்றோ?

(6) "கண்ணிமை" என்பதால் அளவின் பெயர் கூறுவார் போன்று என்றார். கண்ணிமை, நொடிகளால் அளவின்பெயர் கூறினாரன்மையின் அளவின்பெயர் கூறுவார்போன்று என்றதூஉம் வழூஉ.

(7) "அவ்வாறாய அவைகளுள், மெய்க்கு வடிவு முதலியவற்றுட் சில மாறுபாடும், உயிர்க்கு வடிவுமுதலியவற்றுள் அறவே மாறு

பாடும் பெறும் எனவும் கொள்க" என்றார். 'பெறும்' என்பதற்கு எழுவாயின்மையும் வழூஉ. உயிர் வடிவு முதலியவற்றுள் அறிவே மாறுபாடும் பெறும் என்றதூஉம் வழூஉ. "தொல்காப்பியருக்கும் நன்னூலாருக்கும்" அது கருத்தன்மையின்.

(8) "இக்காரணங்களா லியலிற்றிரியா அவ்வுயிர்கள்" என்றார். இதில், முன் காரணங்களைத்தெரிக்காது இக்காரணங்கள் எனச்சுட்டியொழிந்ததூஉம் வழூஉ.

(9) உயிர்கட்கு இயல் குறில் நெடிலாய் வேற்றுமைகொண்டு இயல்பாயும் நீண்டனவாயும் ஒலிப்பனவாம்" என்றார். 'வேற்றுமை கொண்டு' என விகாரமெய்துவதாகக் கூறியதூஉம் வழூஉ. இயல் எழுவாய் ஒலிப்பன என்னும் பன்மைமுடிபிற்றாயதூஉம் வழூஉ.

(10) "மெய்கட்கு இயல் அரையளவினவாய்த் தனித்திருத்தலும் உயிருடனியைந்தவழி அவை ஒழிவனவும் பிறவும்" என்றார். இதில் 'அவை' எனப் பன்மையாகச் சுட்டியதூஉம் வழூஉ. 'ஒழிவன' எனப் பன்மையாகக் கூறியதூஉம் வழூஉ.

(11) "அவ்வுயிர்கள் மெய்யோடியைவது புள்ளியில்லா எல்லா மெய்யும் என்ற விதிப்படி வடிவுதிரிந்துயிர்த்து, மெய்யின்வழியதென்ற விதிப்படி ஒலிக்கு முறைமுதலியனவற்றைப் பெறுதல்" என்றார். இதில் வடிவுதிரிந்துயிர்த்தலைத், தொல்காப்பியர் மெய்கட்குக் கூறப் பாரதியாரவர்கள் உயிர்கட்குக் கூறியதூஉம் வழூஉ.

(12) "தனித்தனி ஒவ்வொரு மெய்யெழுத்தினளவே அரை மாத்திரையாகும்" என்றார். 'தனித்தனி' 'ஒவ்வொரு' என்பவைகளில் ஒன்றே அமையவும் இரண்டுங் கூறியதூஉம் வழூஉ.

இவ்வழூஉக்களேயன்றிச், செவிக்கின்பம் பயவாமை, எடுத்தவிஷயங்களை முறையுறக்கூறி விளக்காமை, தொல்காப்பியர் கருத்து இது; உரைகாரர் கருத்து இது; நன்னூலார் கருத்து இது; தங்கருத்து இது என விளங்கக்கூறாமை யாதியபல வழூஉக்களும் பல்கியுள்ளன. இவ்வகை வழூஉக்கள் வாராவண்ணம் தம்விஷயத்தைஎழுதத்தெரியாத பாரதியாரவர்கள், தொல்காப்பிய உரைகாரர்களையும், நன்னூலாரையும் கண்டனஞ்செய்ய முன் எழுந்தது அதிசயிக்கத்தக்க தொன்றன்றோ? நிற்க.



இனிப் பாரதியாரவர்கள், தொல்காப்பியரோடு நன்னூல முரணி வழுவடைகின்றார் என்றது உண்மையோ என ஆராய்வாம்

தொல்காப்பியர் "எழுத்தெனப்படுவ, அகரமுத னகரவிறுவ முப்பஃதென்ப—சார்ந்துவரன்மரபின்மூன்றலங்கடையே எனவு அவைதாம், குற்றியலிகரங் குற்றியலுகர—மாய்த மென்ற, பாற்புள்ளியுமெழுத்தோரன்ன" எனவுங் கூறிய இருசூத்தி பொருள்களையும் தாமமைத்து நன்னூலார் "அது முதல்சார்பெ னிருவகைத்தே" எனவும், "உயிருமுடம்புமாமுப்பதுமுதலே" எனவும், "உயிர்மெய்யாய்தமுயிரளபொற்றள—பஃகிய இ உ ஐ ஔ மஃகான்—றனிநிலைபத்துஞ் சார்பெழுத்தாகும்" எனவும் தொ தும் வகுத்தும் கூறினான்றித் தொல்காப்பியரோடு மாறுபடக் கூ றிலர்.* தொல்காப்பியர் சார்பெழுத்து மூன்றென நன்னூலார் தென்றது மாறுபாடன்றோ எனின், மூன்றெனக்கூறியபின்னும் தொல் காப்பியர் உயிர்மெய்யும் உயிரளபெடையும் மகரக்குறுக்கமு முத யன கூறுதலானும், † அவிநயனாரும் ஏனையவுங் கூறுதலானும் அ றையுஞ் சேர்த்துப் பத்தென்றாராதலின் மாறுபாடு யாண்டை தென்க. அங்ஙனமாயின் தொல்காப்பியர் நியமந் தவறினான்றோ எனின், மூன்றே என வரையறுத்திலராதலிற் றவறிற்றிலர். இ ஙனமாகப் பாரதியாரவர்கள் "இதையறியாத நன்னூலார் தாமே நுணுக்கங் கண்டார்போன்று மனக்கோட்டை கட்டி முதனூலே மாறுபடவும், முறையின்றிப் படிப்பாரிடர்ப்படவும் 'உயிரளபு' என தொடங்கிக் கூறுவர் என நன்னூலார்மேல் வழுவேற்றல் பயன கூற்றாமென்க.

இன்னும், பாரதியாரவர்கள் "அம்முதலீராறாவிகம்முதன் மெய்ம்மூவாறெனவிளம்பினர்புலவர்" எனத் தொகையறியா கெடுத்தார் என நன்னூலார்மேற் குற்றஞ்சாற்றினர். நன்னூல அங்ஙனம் கெடுத்தாரோ? எனின், அன்று. தொல்காப்பியர் "அ றுள் அ, இ, உ, எ, ஒ என்னு மப்பாலைந்து—மோரளபிசைக்கு

*தொல்காப்பியர் செய்கைநோக்கிச் சார்பெழுத்து மூன்றென்ற நன்னூலார் செய்யுளியலுநோக்கிப் பத்தென்றுங் கூறினர் என்பர் நன்னூ விரிவுரைகாரர்.

† மயிலைநாதருரை 5-ம் சூத்திரத்து விரிவுரை நோக்குக.

குற்றெழுத்தென்ப" என்பது முதலிய சூத்திரங்களாலும் உயிர் மெய்களின் தொகை வகை விரிகளையும், அவற்றின் அளவு வடிவு முதலியவற்றையும் விரவக்கூறினர். நன்னூலாரோ, அவற்றுள்; அளவு வடிவு முதலியவற்றைத் தாம் உருவம் மாத்திரை என வகைதோன்ற வேறுவைத்தும்; உயிர் மெய்களை, எழுத்தின்பெயர் கூறுமுகத்தானே" அம்முதலீ ராறுவிகம்முதன்—மெய்ம்மூவாறெண விளம்பினர்புலவர்" என்பது முதலிய சூத்திரங்கள் எட்டானும் தொகைவகைதோன்றவும், பாரதியாரவர்கள் கூறியவைகள் யாவுமமையவும்யாத்தனர். அன்றிக் கெடுத்திலர். அங்ஙனமாக,—நன்னூலார்மேற் குற்றமேற்றியது பாரதியாரவர்கள் ஆராய்ச்சியின்மையேயாம். பாரதியாரவர்கள் "கசடதபற என்னும் ஆறும் வல்லினம் என்னாது "வல்லினங் கசடதபற என ஆறே" எனச் சூத்திரித்ததும் வழூஉ என்றார். 'என' என்பது எண்ணுப்பொருளில் வருமென்பது பாரதியாரவர்களுக்குத் தெரிந்திலது போலும். "கசடதபற என்னும் ஆறெழுத்தும் வல்லினமென்னுங் குறியவாம் என்னும் மயிலைநாதருரையைநோக்கித்தெளிக.

இன்னும், பாரதியாரவர்கள் "புள்ளிவிட்டவ்வொடுமுன்னுருவாகியு—மேனையுயிரோடுருவுதிரிந்து — முயிரளவாயதன்வடிவொழித்திருவயிற்—பெயரொடுமொற்றுமுன்னாய்வருமுயிர்மெய்" என்னுஞ் சூத்திரத்தையும், நன்னூலார் தொல்காப்பியரோடு முரணிக்கூறினர் என்றார். அதுவும் முரணாமை காட்டுதும். தொல்காப்பியர் கூறிய "புள்ளியில்லா வெல்லா மெய்யு—முருவுருவாகியகரமொடுயிர்த்தலு—மேனையுயிரோடுருவுதிரிந்துயிர்த்தலு—மாயீரியல்வுயிர்த்தலாறே" என்னுஞ் சூத்திரப்பொருளை "புள்ளிவிட்டவ்வொடுமுன்னுருவாகியு—மேனையுயிரோடுருவுதிரிந்தும்" என்னுமடிகளுளமைத்தும், "மெய்யோடியையினுமுயிரியறிரியா" என்னுஞ் சூத்திரப்பொருளை "உயிரளவாயதன்வடிவொழித்து" என்பதனுளமைத்தும், "மெய்யின் வழியதுயிர்தோன்றுநிலையே" என்னுஞ் சூத்திரப்பொருளை "இருவயிற்பெயரொடுமொற்றுமுன்னாய்வரு முயிர்மெய்" என்பதனுளமைத்துஞ் சூத்திரித்தாரன்றித் தொல்காப்பியரோடு இதன்கண்ணும் முரணிற்றிலராதலிற் பாரதியாரவர்கள் நன்னூலார்மேலேற்றிய குற்றங்கள்யாவுந் தூரம்போய்த் துச்சமாமெனக. மெய்ம்மாத்திரையுந் தோன்றுமோ என்னுமையத்தை நீக்குதற்கு 'உயிரளவாய்' என்றும்,



உயிரின்வடிவை யொழிக்குமேயன்றி, எண்ணையுங் குறியையு மொழியாது என்பது தோன்ற "அதன் வடிவொழித்து" என்றும் மேற்போந்த சூத்திரத்தினுள் நன்னூலார் கூறினர் எனக. நச்சினார்க்கினியரும், இளம்பூரணரும் "மெய்யோடியையினுமுயிரியறிரியா" என்னுஞ் சூத்திரத்து விரிவுரைக்கண் அளவும் என்னும் குறியும் மாறுபடா என்றதூஉம் இக்கருத்துநோக்கியே. நிற்க:

இனி நன்னூலார் தொல்காப்பியத்தை முதனூலாக்கொண்டு வழிநூல் செய்தாராதலின், *தாம் வழிநூல் செய்தமைக்கேற்ப வேண்டும் விகற்பங் கூறுவதுமுண்டு. அதனால் நன்னூலார் வழுவினர் என்றல் எள்ளற்கிடமாமெனக. இவற்றையெல்லா முற்றுணர்ந்து நன்னூலார்மேற் குற்றஞ்சாற்றுது பாரதியாரவர்கள் இனி அடங்குவார்களாக. இவ்வளவிலமையும்.

---

## பவணந்தியாரையும் நன்னூலையுங் குறித்த கவிகள் சில வருமாறு.

### கொங்குமண்டல சதகம்.

கங்கக் குரிசி லுவக்கநன் னூலைக் கனிந்துபுகல்
துங்கப் புலமைப் பவணந்தி மாமுனி தோன்றிவளர்
கொங்கிற் குறும்பு தனிலாதி நாத குருவிளங்கு
மங்குற் பொழிசன காபுர முங்கொங்கு மண்டலமே.

சொல்காப் பியத்தின் குணதோடந் தேர்ந்து சொலுவதற்குத்
தொல்காப் பியங்கற்க நீண்ட ததனைச் சுருக்கியிசை
யொல்காப் பெரும்பவ ணந்தியென் றோது யுபகரித்த
வல்கா வலன்சீய கங்கனுந் தான்கொங்கு மண்டலமே.

### நன்னூன் மயிலைநாதருரையின் முகவுரை.

இமிழ்திரை வரைப்பி னமிழ்தமீ தென்னுந்
தமிழெனு மளப்பருஞ் சலதியி னுளவாய்ப்

* அகத்தியத்தை நோக்கும்போது இது சார்புநூலாகும்.

புலக்கணக் கருவியா மிலக்கணந் தெரிக்கும்
பன்னூ லுட்கிளர் நன்னூ லென்பது
நாவல மிருத்த பாவலர் யாரு
மருத்தியிற் கூட்டுணும் விருத்தி யுரையுடன்
ஆரிய மொழியுஞ் சீரிய தமிழுஞ்
சமையத் தொடுநன் கமையத் தழைப்புறு
மடந்தொறும் புலவ ரிடந்தொறு நிலை இப்
பின்னரவ் வுரையொடும் பேணுகாண் டிகையொடும்
அளவறு புலவரா லச்சிடப் பெறீஇப்
பழக வினிக்கும் கழகந் தோறும்
பல்லாண் டாகப் பயின்றிலங் குறுமே.

இங்ஙனம்
க. வயித்தியலிங்க பிள்ளை,
வண்ணைநகர், யாழ்ப்பாணம்.

உ

கடவுள்துணை.

# தமிழ்மொழியைவளர்த்தல். *

செந்தமிழ்மொழியானது தென்னாட்டு வழங்கும் தேசபாஷைகள் பலவற்றிற்கும் தாய்மொழியாக இருப்பதுமன்றிப் பழமையினுலும் சிறப்பினுலும் வேறு எந்தப்பாஷைக்கும் தாழ்ந்ததல்லாததாகவும் இருந்துவருகிறதுவெள்ளிடைவிலங்கல். இது, வடநாட்டுப் பாஷைகளுக்குத் தாய்மொழியாயிருக்கிற வடமொழியைப்போலவே தென்னாட்டு வழங்கும் பல மொழிகளுக்குந் தாய்மொழியாக இருத்தலின் 'உயர்தனிச் செம்மொழி' என்று அறிஞர்களாற் கொள்ளப்பட்டிருக்கிறது. இது, மக்களின் அறிவு வளர்ச்சிக்கும், நன்னெறிப் பழக்கத்திற்கும், கடவுள்மாட்டு அன்புபெருகுதற்கும் பெருந்துணை செய்வனவாகிய பல்வேறு சுவைகளுடன் கூடிய பல இலக்கியங்களையும், நீதி நூல்களையும், தோத்திர நூல்களையும் நிரம்பப்பெற்று விளங்குகின்றதும் யாவரும் உணர்ந்ததே. அன்றியும், இது, மிகப்பழங்காலத்திலேயே அமைக்கப்பெற்ற இலக்கணவரம்புகளையுடையதாயிருந்தும், காலத்திற்கேற்றபடி புதிய சொற்பொருள்களைத்தழுவித் தன்னியல்பிற்குறையாது ஒழுகும் ஆற்றலைப்பெற்ற அமைப்போடிருப்பது யாவராலும் போற்றத்தக்கதாம். இது, தற்காலம் இரண்டுகோடி ஜனங்களாற் பேசப்பட்டுவருவதாக இருந்தும், வேறு சர்வகலாசாலையில் இடம்பெறாத நிலையிலிருந்தும், தனக்கெனச் சிறப்புற்ற, சென்னைச் சர்வகலாசாலைச் சங்கத்தாராற் போதுமான ஆதரவு காட்டப்படாதிருப்பதோடு, தன்வளர்ச்சிக்கு இடையூறான சில ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதால் பெரும்பான்மையோரிடம் தனது சுய உருவத்தோடு நான்முகமாகப் பரவாமல் இருந்துவருகிறது. இதனைத் தேசத்தின் துரதிர்ஷ்டமென்றே கொள்ளல்வேண்டும். இந்தத்தேசத்திலே

* இது, கும்பகோணத்திலுள்ள 'தமிழ்ப்பண்டிதர் கழகம்' எனப் பெயரிய கழகத்தின் நிர்வாகசபையார், திருச்சிராப்பள்ளியில் நடைபெற்ற தமிழ்ப்பண்டிதர்களின் முதற்பெருங்கூட்டத்தில் நிறைவேறிய இரண்டாவது தீர்மானத்தைப்பற்றி இரண்டு நாட்கள் கூடியிருந்து ஆராய்ந்தெழுதிய குறிப்பு. அந்த நிர்வாகசபையாரின் அனுமதிபெற்றுப் பதிப்பிக்கப்படுகிறது.

'தமிழ்' முதலிய தேசபாஷைகள் முதன்மையான இடத்தையும், இராஜபாஷையாகிய 'ஆங்கிலம்' இரண்டாவது இடத்தையும், பிறபாஷைகள் மூன்றாவது இடத்தையும் அடையவேண்டியது நியாயமாகவிருந்தும், 'தமிழ்' முதலிய தேசபாஷைகள் ஆங்கிலபாஷையோடொப்பவேனும் போற்றப்படாதிருத்தலோடு தாழ்ந்தநிலைமையினும் வைக்கப்பட்டுவருவது அறிஞர்க்குப் பெரிதும் கவலையை உண்டுபண்ணுவதாக இருக்கின்றது. உலகவழக்கிறந்தொழியாத மேன்மையைப் பெற்றிருப்பதற்காக இஃது இன்னும் உயர்வாக அறிஞர்களாற் போற்றப்படவேண்டும் பெருமையையும் தகுதியையும் பெற்றிருக்கவில்லையா? தேசபாஷை பயிற்சியில்லாமலேயே பட்டதாரிகள் வெளிவரக்கூடிய நிலையிலுள்ள தேசம் இந்தியாவைத்தவிர வேறொன்று இருக்குமென நாங்கள் நினைக்கவில்லை.

தமிழ்நாட்டிலே உள்ளனவும், தமிழ்மொழியைத் தாய்ப்பாலோடு பருகும் பேறுபெற்றவர்கள் தந்த இறைப்பணத்தால் நிலைபெற்றனவுமாகிய தர்மஸ்தாபனங்களிலுள்ள செல்வம் வடமொழி, அங்கிலம்முதலியவற்றின் வளர்ச்சிக்கு உபகாரப்படுகிற அவ்வளவு அளவுகூடத் தமிழ்ப்பாஷைக்கு உபயோகப்படாத நிலைமையிலிருக்கின்றது பெருவியப்பிற்கிடமாம்! இந்நிலைமையை மாற்றி அச்செல்வம் தேசபாஷையாகிய நமது தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் உபயோகமாகும்படி செல்வாக்குள்ளவர்களும், அபிமானிகளும் போதிய அளவு முயல முற்படல்வேண்டும்.

தமிழ்ப்பண்டிதர்களைப் பெருக்குதற்பொருட்டு அநுபவத்திற்கொத்தவாக்கூடிய வகையில் பாடபுத்தகங்களையும், பரீக்ஷைகளையும் அமைத்துத் தேறுகிறவர்களுக்குத் தகுதிச்சீட்டு அளிக்கப்பெறல் வேண்டும். அப்பத்திரங்களைப் பெற்றவர்களிலிருந்தே எதிர்காலத்தில் அங்கிலகலாசாலைகளிலும் கல்லூரிகளிலும் தமிழ்ப்பண்டிதர்கள் நியமிக்கப்படுதற்காக ஒழுங்குகள் ஏற்படல்வேண்டும். அவர்களுக்கு வடமொழி, அங்கிலம் முதலிய பாஷைகளைக் கட்டாயபாடங்களாக வைக்காமல் இஷ்டமான பாடங்களாக வைப்பதுதான் தமிழ்வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படுவதாகுமென்று தோன்றுகின்றது.

இந்தியாவிலுள்ள சர்வகலாசாலைகளிலே தேசபாஷைகளை அலட்சியஞ்செய்யும்படியான எத்தகைய ஒழுங்குகளுக்கும் இடங்கொடுக்



தல் கூடாது. ஆங்கில கலாசாலைகளிலும் தேசபாஷைகளை ஆதரிப்பதுபோல ஒரு பெரிய ஆரவாரத்தைச்செய்து A. Group என்றும், C. Group என்றும் பிரிவுபடுத்தி, எல்லா மாணவர்களுக்குங் கட்டாயமாக ஏற்பட்டிருந்த தேசபாஷையின் பயிற்சியும், கட்டுரை வரைவதும் இஷ்டமானபாடமாகச் செய்யப்பட்டது எந்தப்பெரியாருடைய தந்திரமோ அறியக்கூடவில்லை.

பாடபுத்தகங்களை அமைப்பவரும், தேர்ந்தெடுப்பவரும், பரீக்ஷை செய்பவரும் தகுதியும் அநுபவமுமுள்ள தமிழ்ப்பண்டிதர்களாகவே இருக்கும்படி ஏற்பாடு செய்யப்படுமானால் தமிழைக் கற்பிப்பவர்களாகிய பண்டிதர்களும், கற்பவர்களாகிய மாணாக்கர்களும் உற்சாகப்படுத்தப்படுவதோடு பாஷை சுவையிற் குறையாததாய்ப் பெரிதும் வளர்ச்சியுறுமென்று தோன்றுகின்றது.

தமிழறிவு பெருகவேண்டுமானால் உயர்தர கலாசாலைகளிலும், கல்லூரிகளிலும் கற்பித்தலும், பாடபுத்தகங்களை அமைத்தலும், பரீக்ஷைசெய்தலும் ஆகிய செயல்கள் நன்றாக அமைக்கப்படுதல்வேண்டும். அவற்றைப்பற்றிக் கவனிக்கவேண்டிய விஷயங்கள் பின்னே கூறப்படுந்தன்மையவாக இருத்தல் இன்றியமையாத தொன்றாம்.

I. அவற்றுள், கற்பித்தல் திருந்திய முறையையுடையதாக இருத்தல்வேண்டுமாயின் முதற்கண் கற்பிப்பவருடைய தகுதி, சம்பளம், நிலைமை, கற்பிக்கப்படுங் காலம், ஓய்வுக்காலம், புத்தகசாலை முதலிய பிறவசதிகள் ஆகிய இவை உயர்த்தப்படல்வேண்டும்.

(a) தகுதி :—பெரும்பான்மையோர் தகுதியுடையவர்களாயிருப்பினும் இனி வரவேண்டியவர்களை நோக்கி இதற்கும் ஒரு வரையறை கூறப்படுகிறது. அது, நன்னூல்முதலிய இலக்கணங்களிலும், கோவை, உலா, அந்தாதிமுதலிய பிரபந்தங்களிலும், காவியங்களிலும், சங்கநூல்களிலும், நீதிநூல்களிலும் போதுமான அறிவுள்ளவர்களாகவும், 'செந்தமிழ்' போன்ற பத்திரிகைகளின்வாயிலாகப் பலவிஷய ஆராய்ச்சியுள்ளவர்களாகவும் அன்னார் இருத்தல்வேண்டுமென்பது. சுருக்கக்கூறுமிடத்து நல்ல இலக்கணஅறிவோடு புதினுபிரஞ் செய்யுட்களுக்குக் குறையாத இலக்கிய அறிவையும் பெற்றிராதவர்கள் [illegible] நியமிக்கப்படுதல் கூடாததாம். அன்னோர்க்குப் போதனு

சக்தியையும், நிர்வாகத்திறமையையும் நன்கு பயிற்றுவிக்கத்தக்க போதனாமுறைக் கல்லூரிகளும் உரியகாலத்தில் ஏற்படுத்தப்படுவது விரும்பத்தக்கதொன்றாம்.

(*b*) சம்பளம்:—தற்காலம் பண்டிதர்களுக்குக் கிடைக்கும் சம்பளம் குறைந்ததாகவும், தற்கால நாகரிகத்திற்கேற்றபடி தங்களை வைத்துக்கொள்ளவும் காலட்சேபஞ்செய்யவும் போதாததாகவும் இருப்பதால் அதனை அடியிற்காட்டும் விவரப்படி உயர்த்தவேண்டியது மிகவும்அவசியமும்நியாயமுமானதாகத்தோன்றுகின்றது. அது வருமாறு:—

| | | | |
|---|---|---|---|
| 1-வது பாரமுதல் 3-வது பாரம் முடிய | 30 ரூ. | முதல் 45 ரூ. | வரை |
| 4-வது ,, 6-வது ,, | 45 | ,, 75 | ,, |
| காலேஜ் வகுப்புக்களுக்கு | 75 | ,, 120 | ,, |

(இத்திட்டம் நாடு, பாஷை, கற்பிப்போர் பெருமை இவற்றை நோக்கக் குறைவானதானாலும் காலத்தின்போக்கை நோக்கி இவ்வாறு குறிக்கப்பட்டது. எக்காரணம்பற்றியும் ஒருவருக்குக்கிடைக்கவேண்டிய கிரமமான சம்பளம் நிலைமை இவற்றின் உயர்வு குறைக்கப்படுதலோ அலட்சியஞ்செய்யப்படுதலோ கூடாது.)

(*c*) நிலைமை:—பண்டிதர்கள் எந்த உயர்ந்தவகுப்பிற்குக் கற்பிக்கின்றார்களோ அந்த வகுப்பின் ஆங்கிலபோதகரின் வரிசையிலேயே ஆஜர்க்குறிப்பிலும், சம்பளப் பட்டியலிலும் எழுதப்படுதல் வேண்டும்; அல்லது அவர்கள்பெறுஞ் சம்பளவிகிதப்படியாவது எழுதப்படுதல்வேண்டும்.

(2) மாணாக்கர்கள் புதுவதாகச் சேர்த்துக்கொள்ளப்படும்பொழுதும் பரீக்ஷைக்கு அனுப்பப்படும்பொழுதும், மேல்வகுப்பிற்கு மாற்றப்படும்பொழுதும் பண்டிதர்களுடைய அபிப்பிராயம் மதிக்கப்படுதல் வேண்டும்.

(*d*) கற்பிக்கப்படுங் காலம்:—இது, தற்சமயம் மிகவும் குறைவாக இருப்பதால் தமிழறிவு பெருக்கமடையாத பெருங்குறை ஏற்பட்டுவருகிறது. செய்யுள், உரைநடை, இலக்கணம், கட்டுரை, தனிப்பாடம் முதலியன நடத்தப்படவேண்டியனவாக இருத்தலால்



ஒருவாரத்திற்குப் பத்து அல்லது ஒன்பதுமணி (Period) களுக்குக் குறையாமற் கொடுக்கப்படல்வேண்டும்.

(*e*) ஓய்வுக்காலம்:—கட்டுரை திருத்தும் வேலையிருப்பதால் தமிழ்ப்பண்டிதர்களுக்கு ஓய்வுவேளை வாரத்துக்குப் பத்துமணிக்குக் குறையாமல் கொடுக்கப்பெறல்வேண்டும். திருத்தும்வேலை மிக்குளதாயின் அவ்வளவிற்குத்தக்கவாறு ஓய்வுக்காலத்தைப் பின்னும் அதிகப்படுத்தல்வேண்டும். (இவை ஒருவாரத்திற்கு முப்பதுமணிகளை வேலைக்காலமாகக் கருதி எழுதப்பட்டன.)

(*f*) புத்தகசாலை:—பண்டிதர்களுக்கும், மாணவர்களுக்கும் பயன்படும் புத்தகங்களைப் போதியஅளவு சேர்த்துக்கொடுத்தலவதோடு, அவசியமான பத்திரிகைகளையும் தருவித்துத் தரல்வேண்டும்.

**II.** பாடபுத்தகங்களை அமைத்தல்:—இது, செய்யுள், உரைநடை, இலக்கணம், கட்டுரை, தனிப்பாடம் ஆகிய இவற்றைத் தேர்ந்தெடுத்தல், அளவைநிர்ணயித்தல் முதலியனவாகப் பலதிறப்படும். அவற்றுள்,

(*a*) செய்யுள்:—இது, நீதி, சரித்திரம், தோத்திரம், கற்பனை முதலியவற்றைத் தெரிப்பனவாய், இனிய பல சந்தங்களையுடையனவாய், நல்லிசைப்புலவர்களாற் பாடப்பெற்றுச் சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினியவாய் இருத்தலேயன்றி வகுப்புக்களின் உயர்வுக்குத்தக்கவாறு நடையாலும், அளவாலும், கடினத்தாலும் உயர்ந்துவருந்தன்மையதாயிருத்தலும் இன்றியமையாதது.

(*b*) உரைநடை:—எழுத்துப்பிழை, சொற்பிழை, வாக்கியப்பிழை இவற்றைப்பெற்றிராமலும், வேண்டாத பிறபாஷைச் சொற்களால் அமையப்பெறாமலும் இருப்பதோடு தமிழ்நாட்டு அரசர், புலவர், வீரர், அன்பர், கொடையாளர், மாதர் இவர்களுடைய வரலாறுகளும் இதிகாச புராணங்களிலுள்ள சரித்திரங்களும் மிக்குளதாயும் இருத்தல்வேண்டும். அன்றியும், இன்பப்பகுதி விரவாததும், பிறர் மறுக்கவொண்ணாததும், தமிழ்மொழியின் ஓசையின்பங் குறையாததுமாயிருத்தலும் இன்றியமையாதது.

(*c*) இலக்கணம்:—முதல் மூன்றுபாரங்களில் ஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களுடைய இலக்கண வினாவிடையும், பிறபாரங்களில்,—வேண்டாதன ஒழிந்த,—குறிப்பிட்ட பல நன்னூற் சூத்திரங்களும் கற்பிக்கப்பெறல்வேண்டும். (இதற்கென அனுபவமுள்ள சில தமிழ்ப் பண்டிதர்கள் ஒன்றுகூடிச் சூத்திரங்களைத் தேர்ந்தெடுத்தமைக்கவேண்டியது இன்றியமையாதது.) அன்றியும் அச்சுருக்கம் எல்லாப்பள்ளிக்கூடங்களிலும் தவறாமல் நடத்தப்படும்படியாகவும், தனி வினாப்பத்திரங் கொடுக்கப்பெற்று பரீக்ஷை செய்யப்படும்படியாகவும் விதி ஏற்படுதல்வேண்டும்.

(*d*) கட்டுரை:—இது, தேசபாஷையிலேயே எழுதப்படவேண்டியதாயிருப்பதால் தமிழ்ப்பண்டிதர்களுடைய பொறுப்பிலேயே இருக்கவேண்டியது அவசியமானதொன்றாகின்றது. ஆங்கில நூல்களால் வெளிப்படும் பல விஷயங்களும் தமிழில் வெளிவந்துகொண்டிருப்பதால் அவற்றைப் போதிப்பதில் பண்டிதர்களுக்குச் சிரமமிராது. பாஷையின் நடைமுதலிய பிழையின்றித் திருந்திவந்தாலன்றி மனத்திலே தோன்றுங் கருத்துக்களைப் பிழையின்றிப் பிறருக்கு விளங்கும்படி எழுதுவதற்குத்தக்க வன்மையுண்டாகாது.

(*e*) தனிப்பாடம்:—இன்பச்சுவை, முரட்டுத்தன்மை, அடங்காமை முதலாயவற்றை எழுப்பாதனவாகவும்; உண்மை, அன்பு, அருள், வீரம், தன்மறுப்பு, தன்மதிப்பு, முயற்சி, தேசபக்தி, தெய்வபக்தி, இராஜபக்தி, கீழ்ப்படிதல், கடமையை உணர்தல் முதலாயவற்றை அறிவுறுத்தக்கூடியதாகவும்; பிற ஆச்சரியகரமான விஷயங்களைத் தெரிப்பனவாகவுமுள்ள பிழையின்றி அமையப்பெற்றுள்ள எளிய உரைநடைப் புத்தகங்களே இதற்குத் தேர்ந்தெடுக்குந் தகுதியுடையனவாகும். மிகுதியாகச் செய்யுள் விரவிவாராதன உயர்ந்தனவாகும். இதிலும் வகுப்பு உயர உயர நடைமுதலாயின உயர்ந்துவருவது இன்றியமையாதது.

(*f*) தேர்ந்தெடுத்தல்:—அனுபவமுள்ள தமிழ்ப்பண்டிதர்கள் பலர் அடங்கிய ஒரு கூட்டத்தாராலேயே முற்கூறிய அனைத்துந் தேர்ந்தெடுக்கப்படல்வேண்டும்.



(*g*) அளவு:—முதலாவது பாரமுதல் மூன்றாவதுபாரமுடிய 200 செய்யுட்களுக்குக் குறையாமலும், நான்காவது பாரம்முதல் ஆறாவதுபாரமுடிய 500 செய்யுட்களுக்குக் குறையாமலும் நடத்தப்படுதல் விரும்பத்தக்கதாகும். உரைநடை அதனது நடையின் வன்மை மென்மைகளுக்குத்தக்கபடி அதிகமாகவும் இருத்தல்கூடும். கட்டுரையோ குறைந்தது இரண்டுவாரத்திற்கு ஒன்றுவீதமாவது தவறாமல் எழுதப்பட்டுத் திருத்தப்பெறல்வேண்டும்.

III. பரீக்ஷைசெய்தல்:—இலக்கணத்திற்கெனத் தனியாக ஒரு வினாப்பத்திரமும், செய்யுள் உரைநடை இவற்றிற்கெனத் தனியாக ஒரு வினாப்பத்திரமும் கொடுக்கப்படுதல்வேண்டும். இவ்வினாப்பத்திரங்கள் உபாத்திமைத்தொழிலில் ஐந்துவருஷத்திற்கு மேற்பட்ட அனுபவமுள்ள பண்டிதர்களாலேயே தயாரிக்கப்படுதல்வேண்டும். இதனால், இவற்றைத் திருத்துபவர்கள் தமிழ்ப் பண்டிதர்களாகவேதான் இருக்கவேண்டுமென்பது சொல்லாமலே அமையும். அன்றியும், வேறுவழியிலன்றித் தமிழின்பொருட்டே தங்களுடைய காலமுற்றும் செலவழித்துப் பாடுபடும் தமிழ்ப்பண்டிதர்களுக்குக் கொடுப்பதுதான் நியாயமும் தர்மமும் தகுதியுமாகும். கட்டுரை மொழிபெயர்ப்போடு சேர்த்துக் கேட்கப்படுதலும் எழுதப்படுதலும் நிறுத்தப்பெற்று அக்கட்டுரையும் பண்டிதர்களாலேயே வினவப்பெற்றுத் திருத்தப்பெறல்வேண்டும்; ஆனால் இவ்விஷயத்தில் நல்ல தமிழறிவோடுகூடிய சில ஆங்கில ஆசிரியர்களுடைய உதவிவேண்டுவது இன்றியமையாததொன்றாம்.

ஔ. சா. வேங்கடராமன்,

தண்டமிழ்த்தொண்டன்.

# புத்தகமதிப்புரை.

(1) தொல்காப்பியவுரை; இளம்பூரணம்:—இவ்வுரை பழமையாலும், தெளிவுடைமையாலும் சுருங்கக்கூறலாலும் நூன்முழுவதற்கு முளதாயிருத்தலாலும், பிறவுரை பலவற்றையும் பிறப்பித்தபெருமையாலும் எல்லாவுரைகளிலும் சிறந்ததாகப் போற்றத்தக்கது. இதன் ஒருபகுதியாகிய எழுத்ததிகார வுரைமாத்திரம், தனித்து முன்பு பதிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய இரண்டதிகாரவுரையும் இதுகாறும் பதிக்கப்படாது சிதல்வாய்ப்பட்டருகிவருவதை நன்குபரிசோதித்து அச்சிட்டுத் தமிழுலகுக்குபகரிக்கக்கருதிய ஸ்ரீமான் வ. உ. சிதம்பரம்பிள்ளையவர்கள் அகத்திணையியலும் புறத்திணையியலுமாகிய பாகத்தை அச்சிட்டிருக்கிறார்கள். அதன் பிரதியொன்றெனக்கு அளிக்கப்பட்டதை அவகாசம் கிடைத்தபொழுது இடையிடையே படித்துப்பார்த்தேன். அது படிப்பவர்களுக்கு உரைப்பகுதி நன்குவிளங்கும்படி பத்திபிரித்து நல்லகாகிதத்திற் பதிக்கப்பட்டிருக்கிறது. அச்சில் வெளிவந்ததும், வெளிவாராததுமான உதாரணச்செய்யுள் பலவற்றிற்கும் ஆகரம்காட்டி நன்குபரிசோதித்துப் பதிக்கப்பட்டுவருவதாய்த் தெரிகிறது. இன்னும், பின்னும் முன்னும் அடுத்தடுத்துத் தொடுத்து ஒருபுத்தகமாம்படி ஏனைப்பகுதிகளையும் அச்சிட்டு வெளியிடக்கருதிய குறிப்பும் காணப்படுகிறது. பிள்ளையவர்கள் இந்நன்முயற்சியிற் றலையிட்டிருப்பது தமிழ்மக்களாற் பாராட்டத்தக்கது. பழைய தமிழ்வழக்கும் தமிழிலக்கண விலக்கியவமைதியும் ஆராயப்புகுவார்க்குப் பெரிது முபகாரமாகுமருமைவாய்ந்த இவ்வுரை முழுதும் அச்சிட்டு வெளியிடும் இப்பெரியகாரியம் இடையூறின்றி முடியும்படி இறைவனருள்புரியவும், தமிழபிமானச் செல்வர்கள் இதனை யாதரித்துப் பிள்ளையவர்களை இன்னும் ஊக்கமுடையவராக்கவும் வேண்டுகின்றேன்.

பத்திராதிபர்.

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-கஎ.] சித்தார்த்தி௵ ஆவணி௴ [பகுதி கo.

Vol. XVII. August—September, 1919. No. 10.


# பேராசிரியருரையும் அண்மைவிளியும்.

“அண்மைச்சொல்லே யியற்கையாகும்” என்ற தொல்காப்பியச் சூத்திரத்தால் உயர்திணை மெய்யீற்றுச் சொற்களுக்கும் அண்மைவிளி விதிக்கப்பட்டதென்ற அடியார்க்குநல்லார் கொள்கையை ஆக்ஷேபித்துத் திருவனந்தபுரம் நண்பர் ஸ்ரீமத் வையாபுரிப்பிள்ளையவர்கள் (பீ. ஏ. பீ. எல்.) எழுதிய ஒருதலை முடிவும், அதற்கு மறுதலைமுடிவும் சென்ற ஆனிமாதச் செந்தமிழில் வெளியிடப்பட்டன. அவற்றை நோக்குவார்க்குப் பேராசிரியருரையும், இலக்கியப் பிரயோகங்களும் பெரிதும் பயன்படுமாதலால் அவை இங்குக்காட்டப்படுகின்றன.

## பேராசிரியருரைவருமாறு:—

“அண்மைச்சொல்லேயியற்கையாகும்.”

“இத்திணைக்கண்வரும் எல்லாவீற்றுப்பெயரும் அண்மைக்கண் விளியேற்குமாறுணர்............ற்று. இச்சூத்திரம் முன்னும் பின்னும் நோக்கி நிற்றலிற் சிங்கநோக்காகிக் கிடந்ததெனக்கொள்க. மேற்சொல்லப்பட்ட உயிரீற்றுப்பெயரும், இனியோதுகின்றபுள்ளியீற்றுப் பெயரும் அண்மைக்கணியல்பாகி விளியேற்கும். னகரவீறு சிறப்புவிதி பெறுதலின் அஃதொழிந்தேனைய கொள்ளப்படும். நம்பிவாழி, நங்கைவாழி, வேந்துவாழி, கோவாழி; மாதர்கூறு, அண்ணல் கூறு, தம்பிகூறு, அன்னங்கூறு, கானல்கூறு, எனவரும் பிறவுமன்ன. “ஆவுமானியற் பார்ப்பனமாக்களு” மென்பது மண்மைவிளி.”

*

இப்போசிரியருரையால் "அண்மைச்சொல்லே யியற்கையாகு" மென்ற சூத்திரம் சிங்கநோக்கு நிலையுடையதென்றும் மெய்யீற்றுச் சொற்களுக்கும் உரியதென்றும் வெளிப்படையாயறியப்பட்டது.

ஆதலால் அடியார்க்குநல்லார் கொள்கை தவறென்று சொல்லற்கிடமில்லை. ஆயினுமிவ்வுரையுள் "னகரவீறு சிறப்புவிதி பெறுதலால் அஃதொழிந்தேனைய கொள்ளப்படும்" என்றவாக்கியம் அடியார்க்கு நல்லார் காட்டிய "கடல்வண்ணன்" என்னும் உதாரணத்தையே ஆக்ஷேபிப்பதாயிருக்கிறது. அவ்வுதாரணம் அடியார்க்கு நல்லார் பிரயோகித்த தல்லாமையானும், தொன்றுதொட்டடிப்பட்ட வழக்காகப் பயின்றுவருதலானும், இலக்கியங் கண்டதற்கிலக்கண மியம்பல் முறையாமாதலானும், அடியார்க்குநல்லார் கூறியது தவறென்று துணிதல் கூடாது. பேராசிரியர் இலக்கணநூலிற்குஉரையெழுதியவராதலாலும், ஏதோகாரணங்காட்டி வரைதலாலும் அவர் சொல்வதையும் தவறென்று தள்ளுதல் கூடாது. ஒன்றற்கொன்று மாறுபட்டதாதலால் இருவர்கொள்கையும் பொருந்துமென்று மதபேதங்கொள்ளவும் இடமில்லை. ஆதலாலிதனை இங்கு ஆராய்ச்சி செய்தே முடிவறிய வேண்டும்.

பேராசிரியருரையிற் சொல்லியகாரண மென்னவென்பதை முதலில் விசாரிப்போம்.

அதில், "னகரவீறு சிறப்புவிதி பெறுதலால் அஃதொழிந்தேனைய கொள்ளப்படுமென்றிருக்கிறது. அச்சிறப்புவிதியாவதியாது? னகரவீறுபற்றி யண்மைவிளியில் ஒருசிறப்புவிதியும் விதிக்கப்படவில்லையே. அச்சிறப்புவிதியே யில்லாதபோது அதனால், "அஃதொழிந்தேனைய கொள்ளப்படும்" என்னுந்துணிவு பிறக்கமாட்டாதாதலாலது பிரமாணமாகுமாறில்லை.

இனி "அண்மைச் சொல்லிற் ககரமாகும்" என்பது அண்மைவிளிபற்றியதாமாயினும் அது அன்னீறு பெற்ற சிறப்புவிதியாமேயல்லது னகரவீறு பெற்ற சிறப்புவிதியாவதில்லை.

அது னகரவீறு பற்றிய சிறப்புவிதியாமாயின் சேரமான், மலையமான், எங்கோன், தலைமகன், முதலிய னகரவீற்றுப்பெயர்களை யெல்லாம் அகரவீறாகத்திரித்து இலக்கியத்தைச் சிதைக்குமெனவறிக.



அன்றியும் "அண்மைச்சொல்லிற்ககரமாகும்" என்னுஞ் சூத்திரத்துப் பேராசிரியருரையினும் அது சிறபபுவிதி யென்றெழுதப்படவில்லை; புறநடையென்றே யெழுதப்பட்டிருக்கிறது அவ்வுரை வருமாறு:—

(ய௨) "அண்மைச்சொல்லிற்ககரமாகும்."

"எய்தியது விலக்கி மேலதற்கோர் புறநடை யுணர்த்துதல் நுதலிற்று. அன்னென்னுமீறு மண்மைக்க ணகரமாகி விளியேற்குமென்றவாறு. அன்னென்பது அதிகாரத்தான் வந்தது. சோழ, சாத்த, வெற்ப, எனவரும்"

இவ்வுரையுள் எய்தியது விலக்கி என்றது நிகழும் அதிகாரத்தால் அன்னீற்றுக்குப் பொதுமையினெய்திய ஆகாரமாதலை விலக்கியென்று பொருள்படுவதல்லது, கழிந்த அதிகாரத்தால் எல்லாவீற்றுக்கும் பொதுமையான் எய்திய அண்மையியல்பை விலக்கி என்று பொருள்படமாட்டாது. மேலதற்கோர் புறநடையுணர்த்துதல் நுதலிற்று என்றதில் மேலது என்றது கழிந்த அண்மை இயல்புவிதியாகிய அண்மைச் சொல்லே யியற்கையாகும் என்ற சூத்திரத்தையே குறிப்பதாயிருக்கிறது. புறநடைவிதி யென்பது யாண்டும் பொதுவிதியைப் பாதிக்குஞ் சிறப்புவிதியாகாது, ஒரு விதியின் புறமே நடைபெற்று வரும் (அநுபந்தம்போல் வரும்) விதியாயமைவதாம். ஆதலால் அன்னீறு அண்மைவிளியி லியல்பாதலுடன் அகரமாகத்திரிதலுமுளவாம். என்பதே பேராசிரியர் கருத்தாகவேண்டும். இங்ஙனங்கொள்ளாது அண்மையியல்பை விலக்கி ஆகாரத்திரிபுக்குப் புறநடையாயிற்றென்றால் அன்னீறெல்லாம் அண்மைக்கண் ஆகாரத்திரிவும் உடன்பெற வேண்டுமாதலானும், "அண்மைச்சொல்லே யியற்கையாகும், என்ற சூத்திரமும், இதுபோலெல்லா வீற்றுக்கும் புறநடையாக வேண்டுமாதலாலும், அது பொருந்தாதெனவறிக. அன்றியும், 'முன்னும் பின்னும் நோக்கி நிற்றலிற் சிங்கநோக்காகிக் கிடந்தது' என்று அவர் தாமே யெழுதிய சிங்கநோக்கும், அன்னீற்றால் இடையிட்டு மறைக்கப்பட்ட பிறவீற்றிலும் செல்லாதொழியும். இடையிட்டுச் செல்வது சிங்கநோக்காகாது; அது தவளைப்பாய்த்தாம். இன்னோரன்ன பல பிழைபாடுகளுக்கிருப்பிடமாகி முன்பின் முரணுதலால் அவ்வாக்கியம் பேராசிரியராலெழுதப்பட்டதாயிருக்க மாட்டாதென்றும், அகரத்திரிபுவிதி

அண்மையியல்பு விதிக்குச் சிறப்புவிதியாமென் றெண்ணி அறியாதா ரெழுதிய இடைச்செருகலான போலியுரையாயிருக்கவேண்டுமென்றும் தோன்றுகின்றது. உரையாசிரியருரையினும் இவ்வாறான இடைச் செருகல்களையெல்லாம், சேனாவரையர் போலியுரையென்று நிறுவுத லானும் அறிக. அன்றியும் உதாரண வாக்கியங்களில், நம்பிவாழி நங்கைவாழி, வேந்துவாழி, கோவாழி, பிறவுமன்ன. என்பவையொழிய மற்றவை யெல்லாம் அடிப்பட்ட வழக்கன்மையானும், அவற்றை ஈண்டமைத்தற்கேற்ற குறிப்பொன்று மின்மையானும், பேராசிரியர்க் குடன் பாடல்லாத பிறவீற்றுட் சேர்ந்த மகரவீறுமுடன்கொண்டு, அன்னங்கூறு என்று உதாரணங் காட்டப்பட்டமையானும், இன்னோ ரன்னவை யெல்லாம் விளிமரபிற் கொள்ளாது அதிகாரப்புறநடையா லமைத்தலானும் அவையுமிடைச் செருகலேயென்றறியற்பாலன.

ஆதலாற் பேராசிரியர் கொள்கையும் அடியார்க்கு நல்லார்கொள் கையும் சிறிதும் வேறுபாடின்றியே ஒன்றாயிற்றென்பது வெளிப்படை யாயிற்று. இச்சூத்திரம் முன்னும் பின்னும் நோக்கி நிற்றலிற் சிங்க நோக்காகிக்கிடந்ததென்று பேராசிரியர் வெளிப்படையாகச் சொல்லி யிருப்பதாற் பிறவுரையாசிரியர் குறிப்புக்களும் இதற்கு விரோத மின்றியனுகுணமாயிருக்கவேண்டுமென்றறியத்தகும்.

இனி இலக்கியப் பிரயோகங்களையும் சிறிது காண்போம்.

## சீவகசிந்தாமணி.

(2121) தேமலரங்கட்டிருவே!புகுதக
மாமலர்க்கோதைமணாளன்!புகுதக
காமன்புகுதககாளை!புகுதக
காமவெழில்விஞ்சைநம்பி!புகுதக.
மின்றோய்வரைகொன்றவேலோன்!புகுதக
இன்றேன்கமழ்தாரியக்கன்!புகுதக
வென்றோன்!புகுதகவீரன்!புகுதக
என்றேநகரம்எதிர்கொண்டதுவே.

இதனுள் திரு, காளை, நம்பி என மூன்றுயிரீற்றுச் சொற்களும், மணாளன், காமன், வேலோன், இயக்கன், வென்றோன், வீரன், என ஆறனகரவீற்றுச்சொற்களும் அண்மைவிளியில் இயல்பாய்வந்தன. இனி வருவனவற்றையும் இவ்வாறே பகுத்தறிந்துகொள்க.



## சிலப்பதிகாரம்—முன்னிலை பரவல்.

(ஆய்ச்..குரவை 1) "கடல்வண்ணன்!...கலக்கினையே" (னகரவீறு)
( ஷை 2 ) "வண்டுழாய் மாலையாய்!...மருட்கைத்தே" (ஆய்)
( ஷை 3 ) "திரண்டமரர் தொழுதேத்துந் திருமால்!... (ல்)
( ஷை ஷை ) "மடங்கலாய் மாறட்டாய்! மாயமோ" (ஆய்)
(பதிகம் 62) "அடிகள்! நீரேயருளுகென்றற்கு" (ளகரவீறு)

இவற்றுள் திருமால் "என்பது அயனெடிதாயி னியற்கையாகும்" என்னும் சூத்திரத்தால் வந்த இயல்புவிளியன்று. (சொசுருபிஷா நியாயத்தால்) அண்மைச்சொல்லே யியற்கையாகுமென்பதனால் வந்த அண்மைவிளியென்பதாம்.

(வஞ்சிக்காண்டம் 30-70)

பாசண்டன் யான் பார்ப்பனிதன்மேல் மாடலமறையோன்! வந்தேனென்றலும். (ன்)

## மணிமேகலை.

(1—57) ஆறறிமரபி னறிந்தோர்! செய்யுமின். (ர்)

(1—60) ஒட்டிய சமயத்துறுபொருள் வாதிகள்!
பட்டிமண்டபத்துப் பாங்கறிந்தேறுமின் (ள்)

3—92) வந்தீரடிகள்! நும்மலரடி தொழுதேன் (ள்)
(5—41) யாங்ஙனம் வந்தனை என்மகள்! என்றே (ள்)
(10—23) மடந்தை மெல்லியல்! மலரடி வணங்குழி (ல்)
(10—29) மெல்லியல்! கண்டனை மெய்ந்நடுக்குற்றனை (ல்)
(12—33) பொற்றொடி மாதர்! நற்றிறஞ்சிறக்க (ர்)
(18—87) அத்திறம் விடுவா யரசிளங் குரிசில்! (ல்)
(18—97) கேட்டுமறிதியே வாட்டிறற் குரிசில்! (ல்)
(20—69) வஞ்சந்தெரியாய் மன்னவன் மகன்! என (ன்)
(25—132) பெருமகன்! காணாய் பிறப்புணர்விக்கும் (ன்)
(28—93) தையல்! கேள்நின்றாதையுந் தாயும் (ல்)

(இங்கு ன ர ல ள வென்னும் நான்கு மெய்யீற்றுச் சொற்க ளும் அண்மையியல்புவிளி யேற்றன).

## புறநானூறு.

(18—4) "ஒருதாமாகிய உரவோரும்பல்!" (ல்)
(42—1) "ஆனாவீகை யடுபோரண்ணல்!" (ல்)
(130—1) "விளங்குமணிக் கொடும்பூணாய்! நின்கானத்து" (ய்)
(135—13) "மலைகெழுநாடன்! மாவேளாய்!" (ன், ய்)
(203—6) இன்னாதம்ம வியறே ரண்ணல்! (ல்)
(210—12) விடுத்தேன் வாழியர் குரிசில்! உதுக்காண் (ல்)
(211—6) "அரசுபடக்கடக்கும் உரைசால் தோன்றல்!" (ல்)
(227—1) நனிபேதையே நயனில் கூற்றம்! (ம்)
(230—11) நீயிழந்தனையே யறனில் கூற்றம்! (ம்)

இங்கு நான்கிற்றுளடங்காத மகர யகர விற்றுப்பெயர்களும் அண்மைவிளியேற் றியல்பாயவாறு காண்க.

## மதுரைக் காஞ்சி.

(61) "பொலந்தார்மார்பி னெடியோ னும்பல்!" (ல்)
(151) மேம்பட மரீஇயவெல்போர்க்குரிசில்! (ல்)
(207) கொன்னொன்று கிளக்குவல் அடுபோரண்ணல்! (ல்)

## திருமுருகாற்றுப்படை.

(251 முதல் 274) இங்கு, குழவி! வெறுக்கை! சோன்மலை! சேய்! வேள்! இயவுள்! மதவலி! குரிசில்! என, ல் ள் (ய்) இ ஐ என்ற மெய்யீறும் உயிரீறும் வேறுபாடின்றி அண்மைவிளியேற் றியல்பாயின. இங்குள்ள விளிகளுள், சாதாரண விளிகளை வேறுபிரித்துத் தொகுத்துச் சொன்முடிவு சொல்லிய உரைநடையில், அண்மை விளிகளும் ஒரு சிலவிரவி எண்ணப்பட்டிருப்பவை ஆராயத்தக்கன. அவை அவ்வாறு விரவியடுக்கலாகா என்பதே அவ்வுரைநடையால் வெளியாகிறது.

## கலித்தொகை.

(80—9) "வருகவெம்பாக மகன்;"

இதனுரையில், மகனே! எனக்கண்ணழித்துரையாது மகன்! என்றே கண்ணழித்தமையால் இது அண்மைச்சொல்லே யியற்கையாகுமென்பதனால் வந்த னகரவீற்று அண்மை யியல்புவிளியென்பதே நச்சினார்க்கினியர்க் குடம்பாடாதலால், அடியார்க்கு நல்லார்கொள்கையே அவர்க்கும் உடம்பாடாயிற்று என்றறியலாம்.



## பரிபாடல்.

(2—49) போரடுகுரிசில்! நீயேந்தியபடையே (ல்)
(3—36) நாற்கை யண்ணல்! (ல்)
(3—37) அறுகை நெடுவேள்! (ள்)
(3—38) எண்கை யேந்தல்! (ல்)
(3—40) நூற்றுக்கை யாற்றல்! (ல்)
(3—43) நூறாயிரங்கையாறறி கடவுள்! (ள்)

## இயற்பா (2-ம் திருவந்தாதி பூதத்தார்.)

(97) எங்கள் பெருமான்! இமையோர் தலைமகன்! நீ
செங்கணெடுமால்! திருமார்பா—பொங்கு
படமூக்கிலாயிரவாய்ப் பாம்பணைமேற் சேர்ந்தாய்
குடமூக்கிற் கோயிலாக்கொண்டு.

## திருவாய்மொழி (சடகோபர்).

(6—2—10) இன்றிவ் வாயர்குலத்தை வீடுய்யத் தோன்றிய கருமாணிக்கச்சுடர்! நின்றன்னால் நலிவே படுவோ மாய்ச்சியோமே.

(6—9—6) மாயோன்! உன்னைக்காண்பான் வருந்தியெனைநாளும் தீயோடுடன்சேர் மெழுகாயுலகிற் றிரிவேனோ.

(6—9—10) மறுகாலின்றி மாயோன்! உனக்கே யாளாகும், சிறு காலத்தையுறுமோ அந்தோ தெரிகிலேன்.

(7—2—8) கொழுந்து! வானவர்கட்கென்னும் குன்றேந்திக்கோனிரை காத்தவன்! என்னும், அழுந்தொழும் ஆவியனல வெவ்வுயிர்க்கும் அஞ்சனவண்ணனே! என்னும்

(2—7—8) வாமனன்! என் மரகதவண்ணன்! தாமரைக்கண்ணினன்! காமனைப்பயந்தாய்! என்றென்று உன்கழல்பாடியே பணிந்து

என, ஏனைமெய்யுயிரீற்றண்மை விளியுடன் னகரவீற்றண்மை விளி பலவந்தவாறு காண்க.

## கம்பராமாயணம் (எழுச்சிப்படலம்).

(6 பாட்டு) "தன்றியகனைகழற் றூதர்! கொள்கெனப்,
பொன்றிணிகலன்களும் தூசும் போக்கினன்".

## கலிங்கத்துப்பரணி கடைதிறப்பு.

(1) "கடலமுதனையவர் திறமினோ!"
(3) "பனிமொழியவர்! கடைதிறமினோ"

(21) "மலைநாடியர்! துளுநாடியர்! மனையிற் கடைதிறமின்"

(28) "உருவு மதர்விழியுடையவர்! திறமினோ"

(34) "அதரபானமது பானமாகவறி வழியுமாதர்! கடை
திரமினோ"

(36) "கருங்கண்வேதுபட வொற்றிமென்கைகொடு கட்டு மாதர்!
கடைதிறமினோ"

(37) "அளக வனிதையர்! அணிகடைதிறமினோ"

இங்கு பன்மைக்கேற்ற ரகரவீற்று அண்மைவிளி பலவந்த
வாறு காண்க.

## ...த்துக்குமாரசுவாமிபிள்ளைத் தமிழ் (வருகைப்பருவம்).

(6) குமரநாயகன்! வருகவே
குமரகுருபரன்! வருகவே
இமமுதல்வி புதல்வன்! வருகவே
எழுதவரியவன்! வருகவே
கமலவதனன்! வருகவே
உபயசரணன்! வருகவே
மதுரவசனன்! வருகவே
மருவுகுமரன்! வருகவே.

இன்னும் சிறுபறை சிறுதேர்ப்பருவப் பாடல்களிற் பலகாண
ம். அழகர் பிள்ளைத்தமிழிலும் வருகைப்பருவ முதலிய முன்னி
பாடல்களிற் பல அன்னீற்றண்மை யியல்புவிளிவருதல் காணலாம்.
நூல்களிலும், தேவாரம் திருவாசகம் பெரியபுராணம் கந்த
ணமுதலிய சைவநூல்களிலும், பிறதமிழ்நூல்களிலும் மிகவும் பரி
மூள்ள பண்டிதர்கள் இன்னும் பலபல காட்டுதல்கூடும்.

ஒருவாறு இங்குக்காட்டிய இலக்கியப் பிரயோகங்களாலும் அண்
ச்சொல்லே யியற்கையாகுமென்ற தொல்காப்பியச் சூத்திரம் உயி
மெய்யீறுகளிரண்டற்கும் பொதுவாமென்றே தெளியலாம்.

பத்திராதிபர்.

# தமிழ்ச்சங்ககாலம்.

1. முன்னுரை. கடைச்சங்ககாலம் என்ற என் ஆராய்ச்சிஉரையின் சில பகுதிகளை (செந்தமிழ். தொ. 15) மறுத்து திரு. இ. மு. சுப்பிரமணியபிள்ளை எழுதியிருக்கிறார் (செந்தமிழ். 17. 185-208.). என் பிழைகளை ஒத்துக்கொள்வதில் எனக்குத் தடையொன்றுமில்லை. ஆனாலும், நன்கு ஆராய்ந்தே முடிவுபெற வேண்டியிருப்பதால், அவர் பிழைகளையும் எடுத்துக்காட்டுகிறேன்.

2. முச்சங்கவரலாறு. கடைச்சங்ககாலம் என்ற தலைப்பின்கீழ் நானெழுதியது முன்னூல் வழக்கைப் பின்பற்றியே. ஏனெனில், அடியார்க்குநல்லாருக்கு (கி. பி. 1150-1200) முன், களவியலுரைகாரரை (சூ-1)த்தவிர வேறெவரும், தலையிடைகடையென மூன்று சங்கங்களிருந்தனவாகக் கூறவில்லை. அவர் கூறும் வரலாறும் ஒப்பத்தகுந்ததில்லை. இதற்குரிய சான்றுகள் பின்வருமாறு.

3. முடிநாகராயர். தலைச்சங்கப்புலவராக இந்நூல் கூறும் முரஞ்சியூர் முடிநாகராயர் செய்யுளொன்று (2-வது) புறநானூற்றில் காணப்படுகிறது. இந்நூல் கடைச்சங்கப் புலவர் பாடியதாகக் களவியலுரையே கூறுகிறது இச்செய்யுளும் இயலினும் நடையினும் மற்றப் புறப்பாட்டுகளினின்றும் வேறுபடவில்லை. ஆகையால், முடிநாகராயரும் ஒரு கடைச்சங்கப் புலவரே. பாரதப்போர் முடியுமளவும் பாண்டவருக்கும் கௌரவருக்கும் சோறுபயந்த உதியன்சேரலை 'சுற்றமொடு முழுது சேண்விளங்கி, நடுக்கின்றிநிலியரோ' (வரி 19-20) என அவர் பாடியிருக்கிறாரே எனில், கூறுவேன்; நூலியற்றி மிக்ககாலமான பிறகே வகுக்கப்பட்ட உரை தக்கசான்றாகாது. பாண்டியரும் அர்ஜுனன் வழிப்பிறந்ததால் பஞ்சவரெனவும், மாளுவவேந்தரும் 'ஆரியமன்னரை யிருபதின்மர்' (சிலப். 27-177) எனவும், பாண்டியன் நெடுஞ்செழியனும் 'வடவாரியர் படைகடந்த' (சிலப் 23 கட்டுரை 14, 17-8)வனெனவும் கூறப்படுவதால், முடிநாகராயர் இந்நெடுஞ்செழியன் மாளுவ வேந்தரை வெற்றிகொண்ட செய்தியையே பாடினாரென்றும், உதியன் சேரல் இப்போரிலேயே இருபடைகட்கும் உணவளித்தானென்றும்,

இந்நன்றியை நினைந்தே பின்னர் சேரன் செங்குட்டுவனுக்கு நூற்றுவர் கன்னர் வங்கமுதவினரென்றும் பொருள் கூறுவது தவறாகாது.

4. அகத்தியனார். மேலும், அகத்தியனார் தலையிடைச்சங்கங்களில் இருந்ததாகக் கூறப்படுகிறார். தலைச்சங்கத்தார்க்கு நூல் அகத்தியமெனவும் கூறப்படுவதால், அகத்தியனார் தலைச்சங்கத்தின் தொடக்கத்திலேயே இருந்தவராவர். தலைச்சங்கமிருந்தகாலம் 4440 ஆண்டாதலால், அதற்குக் குறையாது அகத்தியனார் உயிர்வாழ்ந்தது. இது ஒப்பமுடிந்ததா? இவ்வகத்தியனாரே 'குடபாலிருபுறச்சையத்' திருந்த 'தமிழ்திரிநிலங்களுள் பல்லவமும் ஒன்றென்றார் (நன்னூல் 272 மயிலைநாதருரை). பல்லவர் தென்னாட்டிற்கு வந்தது கி. பி. 200-க்குப்பின்னென Mr. Dubreuil காட்டியிருப்பதால், அகத்தியனார் காலமும் அதற்குப்பிறகே. ஆகையால், அவர் தலையிடைச்சங்கங்களில் இருந்தவரல்லர்.

5. தோல்காப்பியனார். தொல்காப்பியமும்இடைச்சங்கத்தார்க்கு நூலாகக் கூறப்படுதலின், தொல்காப்பியனார் இடைச்சங்கத் தொடக்கத்திலேயே இருந்தவராவர். இடைச்சங்ககாலம் 3700 ஆண்டாதலால், கடைச்சங்க நூல்களினின்றும் அவ்வளவு காலத்திற்குரிய நடைபொருள்களில் மாறுதல்களொன்றும் தொல்காப்பியத்திற் காணப்படாதது வியப்பே!

6. முச்சங்கவெண்கள். களவியலுரை தரும் எண்களும் வியக்கத்தக்கன. தலைச்சங்கத்து 89 பாண்டியர் 4440 ஆண்டுகளும் இடைச்சங்கத்து 59 பாண்டியர் 3700 ஆண்டுகளும், கடைச்சங்கத்து 49 பாண்டியர் 1850 ஆண்டுகளும் வீற்றிருந்தனரெனக் கூறப்படுவதால், தலைமுறை ஒன்றிற்கு முறையே 50, 63, 38 ஆண்டுகளாயின இவை மிகையே. மேலும், பாண்டியரின் தொகை 89, 59, 49 என்றும், புலவர்தொகை 59, 549; 49, 449, 4449 என்றும், கவியரங்கேறிய பாண்டியர் தொகை 7, 5, 3 என்றும், இடைச்சங்ககாலம், புலவர்தொகையிரண்டும் 3700 என்றும், கடைச்சங்ககாலம் $3700 \times \frac{1}{2} = 1850$ என்றும், தலைச்சங்ககாலம் இடைகடைச்சங்ககாலம், முச்சங்ககாலம், இவை 4440, 5550, 9990 என்றும் இருப்பதால், முச்சங்கவரலாறு ஒப்பத்தகுந்ததில்லை.



7. பொய்யடிமையில்லாதபுலவர். இதன்றியும், சிவபக்தியிற் சிறந்த தலையிடைச்சங்கப் புலவரைக் கூறாது, நக்கீரர் கபிலர் பரணர் முதல் நாற்பத்தொன்பதின்மரையே பொய்யடிமையில்லாத புலவரென்றும், கடைச்சங்கப்புலவரென்னாது தமிழ்ச்சங்கப்புலவரென்றும் நம்பியாண்டார் நம்பி (கி. பி. 1025) கூறுவதால் (திருத்தொண்டர் திருவந்தாதி-11-ம் திருமுறை-49) அவர் தலையிடை கடையென்ற பிரிவினை அறிந்ததில்லை. ஆகையால் சங்கமொன்றேயிருந்தது. மேலும், களவியலுரை கூறும் முச்சங்கவரலாறு நம்பியின்காலத்திற்குப் பிந்தியதே.

8. கடலாட்டு. இனி நண்பர்கூறுவதை ஆராய்வாம். முதலில், கொடியிறங்கிய மறுநாளே கடலாட்டு நிகழ்ந்ததென்றார். (ப. 185) இதற்குச் சான்று தாராததேன்?

9. துர்நிமித்தங்கள். 'அப்பொழுது பயணத்திற்காகாத பல துர்நிமித்தங்கள் நிகழ்ந்தனவென்றறியலாம்' என்றார். (ப. 186) நூலில் கூறப்படாத இச்செய்தியை அவர் எவ்வாறு உணர்ந்தனர்?

10. மதுரை யெரியுண்டகாலம். 'கண்ணகி அவ்வூரை எரியூட்டினபொழுது சூரியனஸ்தமித்து 4, 5 நாழிகையே சென்றதாகும். அவ்வாறு தீப்பற்றியது இரவிலேதான். ஏனெனில், தூங்கியிருந்த பிள்ளைகளையும் கணவரையுமெழுப்பி மாதரோடினர்' (ப. 187) என்றார். 5 நாழிகை என்றது 2 மணிநேரமாகையால் இரவு 8 மணிக்கு மதுரை யெரியுண்டதாகும். 8 மணிக்குள் பிள்ளைகளேயன்றி, கணவரும் துயில்கொண்டாரென்றால், அவரது ஊக்கம் வியக்கற்பாலதே! நள்ளிருளில் மதுரை தீப்பட்டதென்றே நூல் கூறுகிறது. (சிலப். பதிகம் 41; 27-78). அன்று திதி அஷ்டமியாதலால் (23-134) நள்ளிருளென்றது 12 மணிக்குச் சிறிது முன்னராம். 8 மணிக்கே தீப்பட்டிருக்கவேண்டியதில்லை.

11. அழல்சேர்குட்டம். 'அழல்சேர் குட்டம்' என்பது கார்த்திகையே என்றதற்கு நண்பர்தரும் சான்றுகள் 'கார்த்திகை பரணி' என்ற அரும்பதவுரையும், 'அழற்குட்டம்' (புறம்-229) என்பதற்கு 'கார்த்திகை நாள்' என்ற உரையுமே (ப. 183). 'கார்த்திகை பரணி' என்பதற்கு ,கார்த்திகையே' என்று ஒரு புத்துரையும் கூறினார்.

'கார்த்திகைபரணி' என்பதற்கு பரணிக்குமேல் வந்த கார்த்திகை என்றபொருள் எவ்வாறு பெறப்பட்டது? இதில் 'பரணி' ஒருபயனிலா மிகுபதமா? அழற்குட்டம் வேறு அழல்சேர்குட்டம் வேறு என்பதையு மறந்தனர். இவ்வாறு திருத்திப் பொருள்கூறுவது பயனற்றதொழிலே. ஆயின், இதன் பொருள்தானென்னவெனில், கூறுவேன். அழல் என்பது கார்த்திகை. அழற்குட்டம் என்றதன் உரை கார்த்திகை நாள். ஆகையால், குட்டமென்பது நாள். அழல்சேர் குட்டம் என்றால் கார்த்திகையைச் சேர்கின்ற, அதாவது கார்த்திகைக்கு முன்வரும் நாள் பரணியே. இதைக்குறிப்பதற்கே 'கார்த்திகைபரணி' என்று உரைகூறிற்று. குட்டமென்பதற்குக் குளமென்றும் (புறம்-243), குளத்திற்கு நாளென்றும் (சதபதபிராம்மணம் 11, 5, 5, 7), குட்டம் தாரம் இரண்டிற்கும் ஆழமென்றும் (புறம். 20; சிறுபாண் 180) பொருளிருத்தலும் இம்முடிபையே வலியுறுத்துகின்றது.

12. கோயிலெடுத்தகாலம். இனி, மதுரையெரியுண்டு 4 ஆண்டுகளும் 7 மாதங்களும் சென்றபிறகே கண்ணகிக்குக் கோயிலெடுக்கப்பட்டதென நண்பர் கூறுகிறார். அவர் கணக்கிட்டது, வஞ்சிநீங்குவதற்கு $1\frac{1}{2}$ மாதங்களென்றும், நீலகிரியில் தங்கியது 1 ஆண்டென்றும் கங்கைத் தென்கரை சேர்வதற்கும், திரும்ப நீலகிரிசேர்வதற்கும் 17+17=34 மாதங்களென்றும், சண்டை யெதிர்பார்த்திருந்தது 1 மாதமென்றும், கல் கொணர 2 மாதங்களென்றும், வஞ்சிசேர்வதற்கு $3\frac{1}{2}$ மாதங்களென்றும், கோயிலெடுக்க 1 மாதமென்றுமே (ப. 190). மதுரை தீப்பட்டு 14-ம் நாளில் கண்ணகி செங்குன்றாரடைந்தாளென்றும், அதற்கு 26-ம் நாளில் செங்குட்டுவன் வஞ்சி நீங்கினனென்றும் நண்பர் காட்டியிருக்கிறார். ஆகையால், மதுரையெரிந்த 39-ம் நாளிலேயே வஞ்சி நீங்கியது. இது $1\frac{1}{2}$ மாதங்களுக்கும் குறைவே. நீலகிரியில் தங்கியது 1 ஆண்டென்றும் காட்டினர். கனகவிசயரைச் செங்குட்டுவன் வெற்றிகொண்ட இடம் கங்கைக்கரையென்றே கூறப்படுவதால், குறைந்த அளவையே கொண்டாலும் அது பிரயாகைக்கடுத்திருக்கும். அவன் நேபாளத்தையும் வென்றதாகக் கூறப்படாததால், இமயமென்றது ஹரித்வாரத்தினுமணித்தாயிராது. மதுரையிலிருந்து செங்குன்றாருக்கும், வஞ்சியிலிருந்து நீலகிரிக்கும் 50 காதமும் நீலகிரியிலிருந்து பிரயாகைக்கு 500 காதமும், பிரயாகையிலிருந்து



ஹரித்வாரத்திற்கு 175 காதமுமென்று படம்நோக்கி அறியலாம். மதுரைநீங்கிக் கண்ணகி 14-ம் நாளில் செங்குன்றூர் சேர்ந்தாள். ஆகையால், பிரயாகைக்கு நீலகிரியிலிருந்து போவதற்கு 5 மாதங்களுக்குமேல் வேண்டப்படாது. தூதர்கள் கங்கைக்கரை போய் வருவதற்கு 1 ஆண்டே ஆயிற்றென நண்பரே கூறுகிறார். இவ்வாறிருக்கவும், கங்கைக்கரை சேர்வதற்கு 17 மாதங்களாகுமென்று அவரே எவ்வாறு கூறினர்? இனி, செங்குட்டுவன் சண்டையை எதிர்பார்த்திருந்த செய்தி ஒன்றும் நூலில் கூறப்படவில்லை. ஆயினும், கங்கையின் வடமருங்கெய்தி அந்நாடுகழிந்து சென்றதற்கும் (சிலப். 26. 177-8), கனகவிசயர் போரில்தோற்று, ஓடி ஒளித்துப் பலவிடத்தும் திரிந்ததற்பின்னர் அகப்பட்டதற்கும் (சிலப். 26. 222-230) இவ்வொருமாதம் வேண்டிவரும். பின்னர், கங்கைக்கரைக்கு 500 காதம் செல்வதற்கு 17 மாதங்களாகுமெனக்கூறிய நண்பரே இமையம் போய்வர 350 காதம் செல்வதற்கு 2-ஏ மாதங்களாகுமென்று எவ்வாறுரைத்தனர்? மேலும் நீலகிரியிலிருந்து வஞ்சிவரையுள்ள வழி கங்கைக்கரையிலிருந்து நீலகிரிவரையுள்ள வழியில் 5-ல் ஒன்றென்றும், ஆகையால் அதற்கு $3\frac{1}{2}$ மாதங்களாகுமென்றும் கூறுகிறார். 500 காதங்களில் 50 காதங்கள் 5-ல் ஒருபாகம் எவ்வாறாகுமென்று விளங்கவில்லை. அன்றியும், மதுரையிலிருந்து செங்குன்றாருக்குக் கண்ணகி 14-ம் நாளில் போயினளெனக் கூறுமவரே அதே காதவளவுள்ள நீலகிரியிலிருந்து வஞ்சிக்குள்ள வழி செல்வதற்கு $3\frac{1}{2}$ மாதங்களாமென்று எவ்வாறு கூறினர்? இவ்வாறெல்லாமிடர்ப்படாது கணக்கிடவேண்டும். வஞ்சி நீங்கி 32 மாதங்கள் சென்றதும், செங்குட்டுவன் கங்கைத் தென்கரையடைந்தான். இதில் நீலகிரிசென்று தங்கியிருந்த 1 ஆண்டை நீக்கினால், 20 மாதங்கள் பெறப்பட்டன. இதில் நீலகிரியிலிருந்து கங்கைக்கரைவரை 500 காதம்சென்றதும், பிரயாகையிலிருந்து ஹரித்வாரம் வரை 175 காதம் சேனைத்தலைவன் சென்று திரும்பியதும் நிகழ்ந்தன. ஆகையால், 500+175×2=850 காதம் செல்வதற்கு 20 மாதங்களாயின. ஆகையால் பிரயாகையிலிருந்து வஞ்சிவரை 500×50=550 காதம் செல்வதற்கு 13 மாதங்களுக்குமேல் சென்றிராது. அதன்பிறகு கோயிலெடுத்தற்குச் சிலநாட்களே சென்றிருக்குமென்று நண்பரே கூறுவதால் (ப. 194), அவ்விழவு மதுரை யெரியுண்டு $1\frac{1}{2}$+32+

13½=47 மாதங்கள் அதாவது 4 ஆண்டுகளுக்ககமே நிகழ்ந்ததெனக் கூறவேண்டும்.

13. செங்குட்டுவன்வயது. இவ்விழவு நிகழ்ந்தபொழுது செங்குட்டுவன் 50 ஆண்டுகள் அரசுபுரிந்திருந்ததாக நண்பர் கூறுகிறார் (ப. 192). இதற்குச்சான்றாக, வையங்காவல்பூண்ட நின்னல்யாண்டையைந்திரட்டி சென்றதற்பின்னும், மறக்களவேள்விசெய்யாதியாங்கணும், மறக்களவேள்விசெய்வோயாயினை' (சிலப். 28. 129-132) என்ற வரிகளில் வரும் 50 ஆண்டுகள், பட்டத்திற்கு வருமுன் அறக்களவேள்வி செய்யமுடியாததால், அவனாண்டகாலத்தையே குறித்ததென்றார். இவ்வாறு கூறுவதற்கு 'நின்னல்யாண்டையைந்திரட்டி சென்றதற்பின்னும்' என்பதற்கு 'நீஆண்ட 50 ஆண்டுகளிலும்' எனப்பொருள்கொள்ளவேண்டும். ஆனால் இதன் செம்பொருள் 'உன்வயது 50 ஆண்டாயிருப்பினும்' என்பதே. '50 சென்றதற்பின்னும்' என்பது '50-ல்' என்றாகமாட்டாது. 'காவல்பூண்ட நின்யாண்டு' என்றால் 'அரசனாகிய உன்வயது' என்றே பொருள்படும். 'நீ அரசனாயபின் யாண்டு' என்று பொருள்படவேண்டுமானால் 'காவல்பூண்டு நின்யாண்டு' என்றிருக்கவேண்டும். மேலும், செங்குட்டுவன் நரைமுதிர் யாக்கையைக் கண்டதாகக் கூறப்படுவதால், இவ்வாண்டுகள் அவன் அரசுகாலத்தையே குறித்தல்வேண்டுமென நண்பர் கூறுகிறார். இதுவும் பொருந்தாது. ஏனெனில், 50 வயதில் இயல்பாயும், சிலருக்கு அதற்கு முன்னரே, நரைமுதிர்வதை நேரில்காண்கிறோம். ஆகையால், கோயிலெடுத்தபோது செங்குட்டுவன் 50 வயதினனாயே இருந்தான்.

14. மாதவிதுறவின்காலம். மாடலன் குமரியாடி மதுரைவருதற்கு மதுரையெரியுண்டு 2 மாதங்களாயின என்றார் (ப. 194). இது தவறு. 'மாதவமுனிவன் மலைவலங்கொண்டு' குமரியம்பெருந்துறை கொள்கையிற்படிந்து, தமர்முதற்பெயர்ந்த மாடலனை 'கோவலன் சென்று சேவடி வணங்'கியதாகக் கூறப்படுவதால், மதுரை தீப்படு முன்னரே மாடலன் குமரியாடித் திரும்பியவனாவன் (சிலப். 15. 14-9). பின்னுமிரண்டுமாதங்களில் மாடலன் புகாரடைந்திருப்பான் என்கிறார். ஆனால் மதுரையிலிருந்து செங்குன்றாளவே புகாருமிருந்தலால், 1 மாதத்திற்குமேற் சென்றிராது. மற்றுமிரண்டொரு மாதங்களில் கண்ணகிதற்றாயும் கோவலனற்றாயும் உயிர்துறந்தனரென்கிறார்.



துவும் தவறே. ஏனெனில், 'மைந்தற்குற்றது மடந்தைக்குற்றதுஞ், ங்கோல்வேந்தற்குற்றதுங் கேட்டுக், கோவலன்றாதை...துற ய்தவுந், துறந்தோன் மனைவி மகன்றுயர்பொறாஅ, ளிறந்ததுயரெய்தி ங்கி மெய்விடவுங், கண்ணகிதாதை—அறங்கொள்ளவுக், தானம் ந்தோன்றன்மனைவி—நல்லுயிர்நீத்து மெய்விடவு, மற்றதுகேட்டு தவி—போதித்தானம்புரிந்தறங்கொள்ளவு' (சிலப். 27. 88-108) ன்று கூறப்படுவதால், கோவலன் கண்ணகி இறந்தசெய்தி கேட்ட ம், அவர் தாய்மார் உயிர் துறந்ததாகவும், மாதவிதுறவெய்தியதாக மே கருதவேண்டும். ஆகவே, இச்செய்திகள் நிகழ்ந்தது மதுரை ரியுண்டு 1 மாதத்திற்ககமேயென்க.

15. நண்பர்குறித்த மதுரை யெரியுண்டகாலம். கி. பி. 1-முதல் 0வரை, கி. பி. 144-ஐத்தவிர வேறாண்டொன்றும் மதுரையெரி ண்டகாலத்துக் கணிதக்குறிப்புக்களுக்குப் பொருந்தவில்லை என்றார். -199-200) ஆகையால், இவ்வாண்டும் பொருந்தவில்லையானால், கி. . 200க்குப் பின்னரே மதுரை யெரியுண்டதெனல் வேண்டும். இவ் ாண்டே மதுரை யெரியுண்டதாயின், இதில் ஆடி 25-ல் வெள்ளி ன்று, நள்ளிரவில், பரணியும், பகுளாஷ்டமியும் சேர்ந்திருத்தல் வண்டும். ஆனால், அன்றிரவு 36 நா. 17 வி. வரையே பரணி இருந்த தென நண்பரே கூறுவதால் (ப. 207), நாள்பொருந்தவில்லை. அஷ்டமி ாவது இருந்ததாவென்றால், திரு. L. D. சுவாமிக்கண்ணுப்பிள்ளை யற்றியுதவிய Indian Chronology என்ற அரிய நூலின் கணித முறையை (ப. 92-3)ப் பின்பற்றிக் கணித்ததில் அன்று அஷ்டமி 18நா. 5 வி. வரையுமே இருந்ததால், திதியும் பொருந்தவில்லை. ஆகையால் ண்பர்தந்த காலவரையறைகளெல்லாம் தவறே எனக் கூறவேண்டியதில்லை.

16. புத்தநிர்வாணகாலம். பின்னர் புத்தர் நிர்வாணமடைந்து 218-ஆவது ஆண்டில் அசோகன்பட்டமெய்தினன் என்றார். ஆனால் 4 ஆண்டுகள் தனி அரசு புரிந்தபின்னும், புத்தர் நிர்வாணமடைந்து 218 ஆண்டுகள் சென்றதற் பின்னும் (பரிநிர்வ்ருதே) அசோகன் அபிஷேகம் செய்துகொண்டானென்று தீபவம்சமும் (6.1, 21-2), மஹாவம்சமும் (5.21-2) கூறுவதால், புத்தர் நிர்வாணமடைந்து 218—4=214 ஆண்டுகள் சென்ற பின்னரே அசோகன்பட்டமெய்தியவனாவன்

அவனுக்குமுன் பிந்துசாரன்—பிம்பசாரனென்றது பிழை—25 ஆண்டுகளும் சந்திரகுப்தன் 24 ஆண்டுகளும் ஆண்டதால், சந்திரகுப்தன் பட்டமெய்தியது புத்தரிறந்து 165 ஆண்டுகளுக்குப்பின். தீபவம்சம், மஹாவம்சம், (5-18) கூறுவதுபோல பிந்துசாரன் 28 ஆண்டுகள் ஆண்டானெனக்கொண்டால், 162 என்றாகும். இனி, அலெக்ஸாண்டர் இறந்தபின் இந்தியர் அவன்படைத்தலைவரைக் கொன்றாரென்றும், அவர் சுவதந்திரம்பெறுவதற்குதவியவன் சந்திரகுப்தனென்றும், ஆனால் பட்டமெய்தியபின் அவனே அவர்களை வருத்தினனென்றும் ஜஸ்டினஸ் என்ற யவநாசிரியர் கூறுவதால் (15-4), கி. மு. 323-ல் அலெக்ஸாண்டர் இறந்தபிறகே சந்திரகுப்தன் பட்டமெய்தினான். யவனப்படைத்தலைவரைக் கொன்றது இந்தியரே, சந்திரகுப்தனல்ல. கொல்லப்பட்ட படைத்தலைவர் இருவரென்பதற்கும் சான்றிலது. அலெக்ஸாண்டர் தான் இறக்குமுன் கொல்லப்பட்டதாகக் கேட்ட பிலிப்பாஸூம், அவன் இறந்தபின் கொல்லப்பட்ட படைத்தலைவனும் ஒருவனேயெனப் பிழைபடக்கருதியதால்தான் சந்திரகுப்தன் அலெக்ஸாண்டர் இறக்குமுன் பட்டமெய்தியவனென நண்பர் கூறியது. ஆகையால் கி. மு. 323+165=488க்கு முன் புத்தரிறக்கவில்லையென்றும், கி. மு. 493-ல் புத்தரிறந்ததாக நண்பர்கூறுவது பிழையென்றும் தெளிவாம். ஆனால் கி. மு. 493-ஏ கணிதக்குறிப்புக்களுக்குப் பொருந்துவதென்கிறார். இக்குறிப்புக்களொன்றும் அச்வகோஷரது புத்தசரித்திரத்தை உள்ளிட்ட லலிதவிஸ்தர (கி. பி. 150)த்திற்கு முந்திய நூல்களொன்றிலும் காணப்படாததேன்? இதன்றியும், வைசாகபௌர்ணிமியிலேயே புத்தர் சரித்திரத்தில் பலநிகழ்ச்சிகளும் கூறப்பட்டன. அவர் கர்ப்பத்திற்றோன்றியதும் (லலிதவிஸ்தரம் Ed. Lefmann p. 54 f) பிறந்ததும் (தீபவம்சம் (21-28) அத்திதியிலேயே. இவ்விரண்டுமுண்மையாயின் அவர் கர்ப்பத்தில் 280 நாள் மாத்திரமல்ல, 1 ஆண்டிருந்திருக்கவேண்டும். இதுவும் அவர்பெருமைக்கு ஒரு அறிகுறி போலும்! மேலும், அவர்மகன் ராஹுலன் பிறந்ததும் (Kern: Manual of Indian Buddhism p 6, n. 2), அவர்துறந்ததும் (வே. சுவாமிநாதையர்: புத்தசரித்திரம் 10), மாரனை வென்றதும் (Kern p. 16 n. 2), சம்போதியடைந்ததும் (மஹாவம்சம் 1-12), இறந்ததும் (தீபவம்சம் 15-70; 5-1; மஹாவம்சம் 3-2) இவையெல்லாம் அத்திதியிலேயே நிகழ்ந்தனவாகக் கூறப்படுகின்றன. இவ்வாறே புத்தர் பிறப்பையும், சம்போதியையும் குறித்து மணிமேகலை கூறுகிறது. (10-83; 15. 23-6). இதுபோலவே மஹாவீரர் சரித்திரத்திலும், அவர் தேவாநந்தையின் கர்ப்பத்துள் சென்றதும், திரிசலையின் உதரத்திற்கு மாற்றப்பட்டதும், பிறந்ததும், துறந்ததும், கைவல்யமடைந்ததும் இவையெல்லாம் உத்தரபல்குநீ நாட்களில் நிகழ்ந்தனவாகக் கூறப்படுகின்றது (S. P. E. 22. 217–8, 264-5). இவ்வாறு பெரியாரின் வாழ்க்கைகளில் பல நிகழ்ச்சிகளும் ஒரே திதி அல்லது நாளுடன் பொருந்தியதாக இயற்கைக்கு மாறுபட்டுக் கூறுவது நம்மவர் வழக்கமாகையால், இக்கணிதக் குறிப்புகளினின்றும் அவர்காலங்களை அறுதியிடப்புகுதல் தவறே. மேலும், இக்குறிப்புகள் நம்பத்தகாதவை என்பதற்கு அவை கிழமைகளைக் குறித்ததேயாகும். கநிஷ்கனது 18-வது ஆண்டில்=கி. பி. 129-ல் பொறிக்கப்பட்ட மாணிக்யால கல்வெட்டில், ஹோரை அதற்குச் சுமாரோ பொருத்தமான முஹூர்த்தத்தால் (=$\frac{4}{5}$ஹோரை) 'அதாவது முஹூர்த்தம்' என இருமுறை விளக்கப்பட்டிருப்பதால் (J. R. A. S. 1914. 646), புதிதாயேற்படுத்தப்பட்ட ஹோரையைக் குடிகளுக்கு அறிவுறுத்தவே அவ்வாறு செய்யப்பட்டதென்றும், ஆகையால் கி. பி. 129-க்கு முன் இந்தியாவில் ஹோரை அறியப்படவில்லையென்றும் தெளிவாம். ஹோரை அறியப்படாராயின், வாரநாட் பெயர்களும் அறியப்படவில்லை. ஏனெனில், ஒரு நாளை 24 ஹோரைகளாகப்பிரித்து, ஒவ்வொன்றிற்கும் பூமியிலிருந்துள்ள தூர அளவின்படி முறையாக ஒவ்வொருகிரஹத்தையும் அவைகளின் தேவதைகளாகக்கொண்டு, ஒவ்வொரு நாளையும் முறையே அதன் முதல்ஹோரையின் தேவதை பெயரால் வழங்கி, ஞாயிற்றுக்கிழமையை முதலாவதாக வைத்துமே வாரநாட் பெயர்களும் வரிசைகளும் பெறப்பட்டன. ஆகையால், புத்தர்சரித்திரத்தில் காணப்படும் வாரநாட்பெயர்கள் கி. பி. 129க்குப் பின்னரே

கணிக்கப்பட்டிருத்தல்வேண்டும். இனி, புத்தரிறந்தது இரவு நடுயாமத்தென நண்பர் கூறுகிறார். இது தவறென்பது, புத்தரிறப்பைக் கூறும் நூல்களிலெல்லாம் முந்தியதான மஹா பரிநிர்வாணசூத்திரம் அவர் கடையாமத்திலேயே இறந்தாரெனக் கூறுவதால் (S. B. G. 11-112f), நன்குவிளங்கும்.

17. இலங்கைக்கயவாகுவின் காலம். இனி, கயவாகுவின்காலம் கி. பி. 148-170 யென்றும், அவன் பட்டமெய்தியதும் தென் இந்தியாவிற்குவந்தானென்றும், ஆகையால் யான் கூறும் கி. பி. 157 பொருந்தாது; அவர் கூறும் 144 ஏ பொருந்துவதென்றும் கூறுகிறார். (ப. 202). மஹாவம்சத்திற்கு முந்தியதென அவரே சிறப்பித்துக் கூறும் தீபவம்சம் புத்தரிறந்து 641 ஆண்டுகளும் 9 மாதங்களும் 11 நாட்களும் சென்றபின் கயவாகு பட்டமெய்தினானெனக்கூறுவதால், நண்பர் புத்தரிறந்தகாலமெனக்கூறும் கி. மு. 493 வைகாசி 19-யே கொண்டாலும், கயவாகுபட்டமெய்தியது கி. பி. 150 மாசி 30-ல், கி. பி. 148-ல் அன்று (Mahavamsa fr. Geiger & Bode. Introd. xxxvi-xxxviii). ஆகையால், கயவாகு தென் இந்தியாவிற்கு கி. பி. 150க்கு முன் போயிருக்கமுடியாது. நண்பர் கருதியவழி மதுரை யெரியுண்டு 4 ஆண்டுகளும் 7 மாதங்களும் சென்றபின் கோயிலெடுக்கப்பட்டதென்றாலும், மதுரை யெரியுண்டது கி. பி. 145க்கு முன்னில்லை. கி. பி. 144 என்று நண்பர் எவ்வாறு கூறினர்? இனி, புத்தரிறந்தது கி. மு. 483-ல் என்று Dr. Fleet காட்டியிருக்கிறார் (J. R. A. S. 1909. 1-34) நண்பரும் புத்தரிறந்த கணிதக்குறிப்புகளுக்கு அவ்வாண்டு பொருந்துமென்றார் (ப. 201). ஆகையால் கி. மு. 483 வைகாசி 27-லிருந்து கணக்கிட்டால், கயவாகு பட்டமெய்தியது கி. பி. 160 பங்குனி 8-ல். பின்னர், படைதிரட்டி, கடல்கடந்து, சோணாடு வென்று, கோயிலெடுக்கும்போது வந்தது கி. பி. 161-லாகும். மதுரை யெரியுண்டு 4 ஆண்டுகள் சென்றபின் கோயிலெடுக்கப்பட்டதால்,



கி. பி. 157-ல் மதுரை யெரியுண்டதென்பதில் தவறென்னை? இனி, கரிகாலன் படையெடுத்துச் சென்று இலங்கையிலிருந்து 12000 சிங்களர்களைப் பிடித்துவந்ததாகக் கூறுகிறார் (ப. 202). இச்செய்தி தீபவம்சம் மஹாவம்சம் இவைகளிலாவது, சங்கநூல்களிலாவது, கரிகாலனையே பாடும் பட்டினப்பாலை, பொருநராற்றுப்படை இவைகளிலாவது யாண்டும் கூறப்படாததேன்? இச்செய்தியைக்கூறும் 200, 300 ஆண்டுகளுக்கு முன்னரே தோன்றிய ராஜாவளி, பூஜாவளியும்கூடக் கரிகாலன்பெயரைக் குறியாததேன்? மேலும், பதிலுக்குப் பதில் கயவாகு சோணாட்டின்மேல் படையெடுத்துவந்திருந்தால், இச்செய்தியையும் தீபவம்சம், மஹாவம்சம் கூறாது விடுத்ததேன்? இதன்றியும் பதிலுக்குப்பதிலே கயவாகு படையெடுத்திருப்பினும், தக்க காலத்தை எதிர்பாராதும், முன்பின் ஆராயாதும், பட்டத்திற்கு வந்ததும் போர் தேடவேண்டுமென எந்த அர்த்தசாஸ்திரம் கூறுகிறது? இன்னும், பட்டத்திற்குவந்து பலவாண்டுகள் சென்றபின்னரே, ஒரு கிழவி வருந்துவதன்காரணத்தை ஆராய்ந்தபிறகே முன் சோழர் படையெடுப்பைக் கயவாகு அறிந்தானென நண்பர் சான்றாக்கொண்ட ராஜாவளியே கூறுகிறது.

18. மணிமேகலை சங்கநூலே. இனி, மணிமேகலை சங்கநூலல்லவெனக் காட்டமுயன்றார் (ப. 202-4). கோவலன்கண்ணகி இறந்ததைக்கேட்டதும் மாதவி துறந்தாளென்றும், மணிமேகலை பிராப்தியாகும்வரை மாதவி நற்றாயுடனிருந்தாளென்றும், பிராப்தியானதும், மாதவி அவளைப் போதித்தானம் புரிந்தறம்படுத்தனளென்றும், இது நிகழ்ந்தது கண்ணகிக்குக் கோயிலெடுக்குமுன்னரே யென்றும் நண்பர் கூறுவது எனக்கும் உடன்பாடே. இதன்பிறகு மணிமேகலை கணிகையருடன் பழகும்படி மாதவி நற்றாயுடனிராது, துறந்த தன் தாயுடனிருந்தாளென்பதே பொருந்தும். மணிமேகலையில் கூறப்படும் இந்திரவிழவுகாலத்து, மணிமேகலை தன் தாயுடனிருந்ததால், அவ்விழவு

அவள் துறந்ததற்பின்னரேயாகும். இதற்குமாறாக, மாதவியும் மணிமேகலையும் அவ்விழவின் முதனாளாடலுக்கு வாராததால் அவ்வூராரேச்சுரையெழுந்ததென்றும், மாதவி துறவெய்தியவுடனே அவ்வுரையெழுந்திருக்குமாதலால், இவ்விழவு கோவலனிறந்த மறுசித்திரையே நிகழ்ந்ததென மணிமேகலை கூறுகிறதென்றும் நண்பர் கூறுகிறார். ஆனால் நூலில்கூறப்படுவன 'மணிமேகலையொடு மாதவி' வாராததால் சித்திராபதி துன்புற்றனளென்றும் (2-4-5), ஊராரேச்சுரை இவராடலுக்கு வாராததைக்குறித்தல்லவென்றும், 'கற்றுத்துறைபோகிய பொற்றொடி' மாதவி 'நற்றவம்புரிந்தது நாணுடைத்தென்'றுமே (2. 32-3). 'மணிமேகலையொடு மாதவி வாராத்துன்பம்' என்றதில் மணிமேகலை வாராததே உயர்ந்ததென்பது, 'ஒருவினையொடுச்சொல்லுயர்பின்வழித்தே' என்றதால் (தொல். சொல். 91) தெளிவாம். ஆகையால் மாதவிக்கும் ஆடலுக்கும் இயைபொன்றுமிலது. மணிமேகலை இளையளாதலால் தனியே வாராள். அவளைக் கூட்டிவருவதற்கே மாதவி கூறப்பட்டாள். மாதவி துறவெய்திய பொழுதே ஏச்சுரை யெழுந்திருக்குமாயினும், கோவலன் தன் பிரிவாற்றாது துறந்து தனியேவதிந்திருக்கும் மாதவியை மாதவி நற்றாய் மீண்டும் மறுத்தாள். ஆனால் மணிமேகலையும் துறவுவழிப்படுதலும் அவள் விழவிற்கு வாராததால் துன்புற்ற சித்திராபதி ஊராருரையைக் கூறியாயினும் தன்வழிப்படுத்த முயன்றாளென்பதில் தவறென்ன? ஆகையால் இவ்விழவு கோவலனிறந்த மறுசித்திரையே நிகழ்ந்திருக்க வேண்டியதில்லை. மேலும், மணிமேகலை ஆடலுக்கு வாராததைப்பற்றி நூலொன்றும் கூறவில்லை. அவள் விழவைக் காண்பதற்கு வாராததாலே மாதவிநற்றாய் மனம் புண்பட்டது. (2.3.) ஆகையால் குழல்களைந்த கோலத்துடனாடுவதைப் பற்றி நண்பர் கூறுவனயாவும் வேண்டப்படாதனவாயிற்று. சித்திராபதி மாதவியையும் மணிமேகலையையும் ஆடலுக்கு வரவேண்டினதாகக் கூறுவதற்கு நண்பர் சான்றுதாராததேன்? நூலில் காணப்படுவ



தெல்லாம் 'பயங்கெழுமாநகரலரெடுத்துரை' யென்றும் (2.9), 'பலர் தொகுபுரைக்கும் பண்பில்வாய்மொழி, நயம்பாடில்லை நாணுடைத்' தென்றுமே (2. 35-6). மணிமேகலை துறந்ததாகத் தெரியவில்லையென்று நண்பர் கூறுவதும் தவறே. ஏனெனில், 'மாபெரும் பத்தினிமகள்மணிமேகலை, யருந்தவப்படுத்தலல்லது யாவதுந், திருந்தாச்செய்கைத்தீத்தொழிற்படாஅள்' (2. 55-7) என்று மாதவிகூறுவதால் மணிமேகலை பிராப்தியடைந்தும் பரத்தமைத் தொழில்மேற்கொள்ளாளென்றும், பத்தினிக்கடவுளின் மகளவளாதலால் அரியதவவழிப்புகுதற்குரிய துறவெய்தினாளென்றும், 'தவத்திறம் பூண்டுதருமங் கேட்டுப், பவத்திறமறுகெனப்பாவை நோற்றனள்' (30. 263-4) எனக் கூறப்படுவதால், கச்சிநகர்புக்க பின்னரே மணிமேகலை தவநெறிக்குரிய அறத்தைக் கேட்டனளென்றும், சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துறவைக் கூறுமிடத்து 'ஓங்கியநன்மணியுறுகடல்வீழ்த்தோர்', 'தம்மிற் றுன்பந்தாநனியெய்த' (30.30-1) என்று கூறப்படுவது போலவே, மணிமேகலையிலும் 'அரும்பெறன்மணி, ஓங்குதிரைப்பெருங்கடல் வீழ்த்தோர்போன்று, மையனெஞ்சமொடுவயந்தமாலையும்' (2.72-4) என்று கூறப்படுவதால், ஈண்டும் மணிமேகலை துறவே கூறப்பட்டதென்றும், சிலப்பதிகாரத்தில் மணிமேகலை துறவேயன்றித் தவத்திறம் பூண்டது கூறப்படவில்லையென 'தன்றுறவெமக்குச்சாற்றினள்.' (30.33) என்றவரி காட்டுமென்றும் இனிது விளங்கும். துறவெய்தியிருப்பினும், அறிவு முதிர்ந்த பின்னரே அறவுரைகேட்டல் கூடுமென்று கூறவேண்டியதில்லை. மாதவி குழல்களைந்திருந்தது கூறப்படவில்லை என நண்பர் கூறுகிறார். ஆனால் மாதவிதானே மாதவருறைவிடம் புகுந்து அறவுரை கேட்டதாகக் கூறுவதால் (2.59-69), அவள் குழல்களைந்தது கூறவேண்டாததாயிற்று. குழல்களைந்த பின்னரே சங்கத்தைச் சரணடைந்து அறவுரை கேட்பது சாக்கியர் வழக்கமென யாவருமறிவர். கோயிலெடுக்குமுன் பிராப்தியாகித் துறவெய்திய மணி

மேகலை கோயிலெடுத்தபின்னரே தவநெறிபற்றினளென்று, அவன் கச்சிபோகுமுன் வஞ்சியில் கண்ணகிக் கடவுளை வணங்கியதாகக் கூறப்படுவதால் தெரிகின்றது. இனி, கோயிலெடுக்குமுன் உதயகுமாரன் கொலையுண்டதும் புகாரைக் கடல்கொண்டதும் சிலப்பதிகாரத்தில் கூறப்படவில்லை என்கிறார். புகார்கடல்வயிறுபுக்கது இந்திர விழவு நிகழ்த்தத்தவறியதால் (மணி-25. 197-203). ஆகையால், அது மணிமேகலை வாராதொழிந்த விழவு நிகழ்ந்து ஓராண்டாயினும் சென்றதற் பின்னரே இக்கடல்கோள் கோயிலெடுத்த பிறகே நிகழ்ந்தது. ஏனெனில், கரிகாலன்பெற்ற (சிலப். 5. 99-104) 'வச்சிரமவந்திமகதமொடு குழீஇய, சித்திரமண்டபம்' நீலன் முதலிய கஞ்சுகமாக்கள் கோயிலெடுப்பதற்குச் சிறிது முன்னரே கனகவிசயருடன் செம்பியன் மூதூர் சென்றபோது அங்கிருந்ததாகக் கூறப்படுவதாலும் (சிலப். 28. 85-7), கரிகாலன் புகார்ச்சோழனுதலாலும் (பட்டினப்பாலை), கோயிலெடுக்குமுன் புகார் கடல்கொள்ளப்படவில்லை. ஆகையாற்றான் உதயகுமாரன் கொலையுண்டதையும், புகாரைக்கடல்கொண்டதையும் சிலப்பதிகாரம் கூறாது விடுத்தது. உதயகுமாரன் கொலையுண்ட செய்தி சிலப்பதிகாரத்தில் கூறப்படவேண்டியதேனென்றும் விளங்கவில்லை. கோவலன்கண்ணகி செய்தியையும் கோயிலெடுத்ததையும் கூறவேண்டுவதேயன்றி தம் கால சரித்திரத்தையெல்லாம் விளக்குவதல்ல இளங்கோவடிகள் கருத்து. பின்னர், சிலப்பதிகாரத்துக்கு முந்தியது மணிமேகலையென்பதற்குச் சான்றொன்றுமில்லையென்றார். சிலப்பதிகாரப்பதிகத்திற்கு முன்னுரை கூறுமிடத்து 'மணிமேகலை துறவினை...பெருங்காப்பியமாக முடித்தலைக்கருதி அடிகள் சாத்தனார்க்கு இவ்வுரையையுரைத்தழி, அவர்மணிமேகலைபெயரான்...ஓர் காப்பியஞ் செய்தமைத்தனனெ'ன்றதாக அடியார்க்கு நல்லார் கூறுகிறார். இதன்றியும், கண்ணகி வரலாற்றைச் சாத்தனார் கூறக்கேட்டு அதைச் சிலப்பதிகாரமெனப் பெருங்காவ்யமாக 'உரைசாலடிகளருளமதுரைக், கூல



வாணிகன்சாத்தன்கேட்டனன்' (பதிகம் 10-1, 88-9). இவ்வாறே மணிமேகலையும் 'இளங்கோவேந்தனருளிக்கேட்ப, வளங்கெழுகூலவாணிகன்சாத்த'னால் பாடப்பட்டது (பதிகம் 95-6). மேலும், சிலப்பதிகாரம் 'மணிமேகலை மேலுரைப் பொருண்முற்றிய'தெனக் கூறப்படுகிறது (கட்டுரை. 17-8). ஆகையால் சிறிதும் ஐயத்திற்கிடமின்றி மணிமேகலையே முந்திய நூலாம். சிலப்பதிகாரத்துக் காணப்படும் சாத்தனார் மணிமேகலையாசிரியரல்லவென்றார். ஆனால், மணிமேகலையைச் சாத்தனார்பாட இளங்கோவேந்தன் கேட்டதால், இவ்விளங்கோவும் சிலப்பதிகாரமியற்றியவராகார். ஆகவே, இளங்கோ, இருவர், சாத்தனாரும் இருவராவர். இது பொருந்துமா? இனி, மணிமேகலை கூறும் காலக்குறிப்புகளும் தவறென்றார். சுதமதியைப் பிரிந்து எழுநாள் சென்றதும் மணிமேகலை திரும்பவந்தாள் (மணி 11. 127-31). சுதமதியைப் பிரிந்தது 'இருள்கூர்ந்தவிடையிருள் யாமத்து' (6. 208). இடையிருள் யாமம் யாது? இதில் இருளென்றது இருட்டன்று. ஏனெனில், 'இருள்கூர்ந்த' என்றிவ்வரியிலேயே இருப்பதால் அது கூறியது கூறலாகும். ஆகையால் ஒளிமழுங்கல் அல்லது கருமை என்றே பொருள்கூறவேண்டும். இருளென்பது கருமையென்ற பொருளில் வந்திருப்பதை மதுரைக்காஞ்சியில் காணலாம் (634). கிருஷ்ணபக்ஷத்திற்குப் பேரிருட்பக்கம் என்றிருப்பதும் (சிலப். 23.133) கவனிக்கத்தக்கது. சுக்லபக்ஷமும் கிருஷ்ணபக்ஷமும் நிலவிருப்பதாலும் இருளிருப்பதாலும் பெயர்பெறவில்லை. இரண்டிலும் இருளுண்டு—பின்னிருளும் முன்னிருளும். ஆகையால் முன்னிரவில் முன்னதில் நாளுக்குநாள் ஒளிமிகுந்துவருவதா லது சுக்லமென்றும், மற்றதில் நாளுக்குநாள் ஒளிமழுங்கிவருவதால் அது கிருஷ்ணமென்றும் பெயர்பெற்றன. இவ்வாறே பகலில் ஒளிமிகுந்திருப்பதால் அதன்யாமங்கள் பகல் யாமங்களென்றும், இரவில் ஒளி மழுங்கியிருப்பதால் அதன் யாமங்கள் இருள்யாமங்களென்றும் பெயர்பெற்றன. இருள்யாமங்

கள் 4-ல், முதல்யாமம் தலையாமமெனவும், 4-வது யாமம் கடையாமமெனவும் கூறப்படுவதால், இடையிருள்யாமம் என்றது இரவில் 2-வது 3-வது யாமங்களை. அதாவது 9 மணிமுதல் 3 மணிவரையுள்ள காலத்தைக் குறித்ததாகும். சுதமதியைப் பிரிந்தபொழுது இவ்விடையிருள் யாமம் இருள்கூர்ந்திருந்ததாகக் கூறப்படுகிறது. இதன்பின்னர், மணிமேகலை மணிபல்லவத்தில் அமுதசுரபியைப் பெற்றநாள் புத்தர்பிறந்த வைகாசி விசாகநாளெனப்படுகிறது (11. 40-6). அன்றுதிதி பௌர்ணமியென்றார் நண்பர். இது தவறே. ஏனெனில், 'மதிநாண்முற்றிய மங்கலத்திருநாள்' என்றது புத்தர் ஞானம்பெற்றநாளையே குறித்ததென்பது அதன்பின் 'போதுவறிவிகழ்ந்து புலமுறுமாதவன்' (10. 83-5) என்றிருத்தலால் விளங்கும். ஆயினும், வைசாக விசாகம் பௌர்ணமியை அடுத்தே வருவதாலும், சுதமதியைப் பிரிந்தபின்னரே மணிமேகலை மணிபல்லவம் சென்றதாலும், இருள்கூர்ந்த இடையிருள் யாமம் என்றது பூர்வபக்க துவாதசிக்கு முன்பே வரக்கூடும். இனி மணிமேகலை திரும்பவந்தது 'ஏழ்நாளில்' (7-24) என்றும், 'ஏழ்நாளிலிடையிருள்யாமத்து' (7-106) என்றுமே கூறப்படுவதால், ஏழாம்நாளிரவு இடையாமத்தென்றே தெரிகிறது. அந்த யாமத்தில் இருளிருந்ததாகக் கூறப்படவில்லை. ஆகையால் சுக்ல ஏகாதசி இடையிருள்யாமத்துப் புறப்பட்டு, விசாகநாளில் அமுதசுரபியைப் பெற்று, ஏழாநாளிடையிருள்யாமத்துத் திரும்பவந்தாள் என்பது பொருந்துவதே. இருள்யாமமென்பதற்கு இருள்கூர்ந்த யாமமென்றே பொருள் கூறினும், சுக்ல ஏகாதசியன்று புறப்பட்டவள் ஏழாநாளில் பஹுள சதுர்த்தியன்றும் திரும்ப வரக்கூடுமாகையால், அன்றிரவும் இடையாமத்து இருளிருந்ததெனலாம். இவ்வாறு பொருள்கூறினால், மணிமேகலை சுதமதியைப்பிரிந்தது பௌர்ணமியை அடுத்துவந்த சித்திரை நாளில் இந்திரவிழவிற்குக்கொடியேறி சுமார் 25 நாட்கள் சென்ற பின்னாகும். சுதமதியைப் பிரிந்தது பூர்வபக்கத்திலென்பது 'அந்தி



மாலை நீங்கியபின்னர், வந்துதோன்றிய மலர்கதிர்மண்டிலம்' (6. 1-2) என்றதாலும் விளங்கும். 25 நாள்வரை ஊராரேச்சுரையை மாதவிநற்றாய் அறியாதிருந்திருக்கமுடியாதென்றும், அதை அவள் மாதவிக்குச் சொல்லியனுப்பாமலிராள் என்றும் நண்பர் கூறுகிறார். ஆனால் ஊராரேச்சுரை மாதவி ஆடலுக்கு வாராதலைதக்குறித்தல்லவென்றும், இவ்விழவிற்குமுன்னரே அவ்வுரையெழுந்ததென்றும், சித்திராபதி அவர்களை ஆடலுக்கு அழைக்கவில்லையென்றும், அவ்வுரையைக்கூற வயந்தமாலையை விடுத்ததன்கருத்து தன்வழிப்படுத்தவும்,' இன்னும் விழவு 2, 3 நாட்கள்தானுள்ளது; இனியும் நாம் பேசாதிருந்தால், அவர் வாராதே விழவுமுடிந்துவிடு'மென்று இன்று வாராராயினும் நாளை வருவாரென்று நாள்தோறும் எதிர்பார்த்திருந்து அவர் 25 நாட்களாயும் வாராததுகண்டு துன்புற்ற சித்திராபதி அஞ்சியுமேயென்றும் தெளிவாம். இனி, மணிமேகலை மணிபல்லவம் போன மறுநாளே தன் தாயை அடைந்தாளெனவே காணப்படுகிறதென்றார். ஆனால், மணிமேகலை மணிபல்லவத்திலிருந்தது ஒருநாளே ஆயினும், புகாருக்குத்தெற்கில் 30 யோசனைக்கப்பாலுள்ள அத்தீவுக்குப் (மணி. 6. 211-3) போய் வருவதற்கு 6 நாட்கள்சென்றதாகச் சாத்தனார் கருதியிருக்கவேண்டும். இவ்வாறே சிலப்பதிகாரத்திலும், செங்குட்டுவன் நீலகிரியில் 1 ஆண்டு தங்கியிருந்தும், அவ்வளவுகாலம் தங்கியிருந்ததாகக் கூறப்படவேயில்லை. அவனை கங்கைக்கரை சேர்வதற்கு 1 ஆண்டுக்குமேல் சென்றிருந்தும், அவ்வாறொன்றும் குறியாது, 'ஞாலமாள்வோன்... பாடியிருக்கை நீங்கிப்பெயர்ந்து, கங்கைப்பேரியாற்றுக் கன்னரிற் பெற்ற, வங்கப்பரப்பின் வடமருங்கெய்தி (26. 173-7) என்றே சிலப்பதிகாரம் கூறுகிறது. இனிக் கடைசியாக, மணிமேகலையின் நடையே அது பின்னூலெனக் காட்டுமென்றார். ஒரேகாலத்துப் பல புலவர்கள் பலநடைகளில் இயற்றுவதியல்பு. மேலும், சிறு பாடல்களுக்குரிய நடைவேறு, பெருங்காவ்யங்களுக்குரிய நடைவேறு. இதன்றியும் சமயக்கொள்கைகளை விளக்குவதும் சாத்தனார் கருத்தாதலால், மற்றச் சங்கநூல்களிற் காணப்படாத பல வடமொழிச்சொற்களை வழங்க வேண்டியதாயிற்று. அவைகட்கிணங்க, தமிழ்நடையையும் சிறிது மாற்றவேண்டியதாயிற்று. ஆகையால், இந்நூல் பின்னூலேயெனக் காட்டவேண்டுமாயின், சங்ககாலத்திற் றெரிந்திருக்கமுடியாத சொற்கள் பயின்றுள்ளன எனச் சான்றுதரவேண்டும்.

19. மற்றவை. கி. பி. 171 சயவாகுவின் காலத்திற்குப் பின்னுள்ளதென்றார். இது தவறு. ஏனென்னில் நண்பர்கூறும் புத்தர் பிறந்தகாலத்தையே கொண்டாலும், கி. பி. 150-ல் பட்டமெய்திய கயவாகு 22 ஆண்டு அரசுபுரிந்ததால், அவன் கி. பி. 172 வரை யிருந்தவனாவன். திங்கட்கிழமையும் அனுஷமும் பிரயாணத்திற்கு நல்லவையல்லவென நான் கூறினேன் என்றார். இது தவறு. யான் கூறியது இவை நல்லவையே ஆயினும், அந்நாளுக்குரிய யோகம் காலையிலிருக்கும் யோகமே; அதாவது திங்கட்கிழமையும் விசாகமும் சேர்ந்திருந்தலால், மரணயோகமே. ஆகையால், புறப்படும்பொழுது யோகம் நல்லதாயினும், அந்நாளில் புறப்படக்கூடாது என்பதே. திரு. சுவாமிக்கண்ணுப்பிள்ளை 4 மணிநேரத்திற்கப்புறம் வந்த நாசயோகத்தை அப்பொழுதாமென்று சொல்வதாகக் கூறினேனென்றார். இதுதவறு. நான்கூறியது 4 மணிநேரத்திற்கப்புறமும், மறுநாளும் வந்த நாசயோகம் பிரயாணத்தை எவ்வாறு பாதிக்குமென்பதே. இவ்வாறே, நண்பர் கூறுமாண்டிலும் புறப்படும்போது சனியும் விசாகமும் சேர்ந்திருந்ததால் சித்தயோகமாயிருக்க, மறுநாள் காலையிலிருந்த மரணயோகம் பிரயாணத்தைப் பாதிக்குமென்று பிழைபடக்கூறினார். இதன்றியும், பிறரைப்போல அடியார்க்குநல்லாருரையை நான் மேற்கொள்ளாததாலும், நூலில் மரணயோகத்தைப்பற்றி ஒன்றும் காணப்படாததாலும், இவ்வெதிருரையே வேண்டப்படாததாயிற்று. கி. பி. 157 ஆடி 29-ல் நாள்பொருந்தவில்லை யென்றார். இது தவறு. ஏனெனில், அன்று நள்ளிரவில் பரணியிருந்ததென நண்பரே கூறுகிறார் (ப. 206). அப்பொழுதிருக்கவேண்டியநாளுமதுவே எனக்காட்டப்பட்டது. பின்னர், அவர் கூறுமாண்டில் கோவலன்கண்ணகிபுறப்படும்போது வாரசூலையும் இருந்ததென்றார் (ப. 207). இதுவும் தவறே. ஏனெனில், மதுரை புகாருக்குத் தென்மேற்கில் இருப்பதால், வாரசூலையும் தென்மேற்கிலே இருத்தல்வேண்டும். ஆனால், அன்று சனிவாரமாகையால், வாரசூலை கிழக்கில் அல்லது வடமேற்கிலேயே (காலப்ரகாசிகா. 28. 43, 58-9). இனி, இவ்வாறு நான் மறுத்துக்காட்டாத அவர் கூற்றுரைகளெல்லாம் எனக்கும் உடன்பாடேயாமென வறிக. இச்சிற்றுரையில் பிழைகள் காணப்படுமாயின், அவைகளை எடுத்துக்காட்டி யுதவும்படி நண்பரையும் மற்றுமுள்ள புலவரையும் வேண்டிக்கொள்கிறேன்.

கே. ஜி. சங்கர அய்யர்.

# ஐங்குறுநூற்றுத் திணைவைப்பு.

* இஃது, புலத்துறை முற்றிய கூடலூர் கிழாரால் அளவு கருதித் தொகுக்கப்பட்டு அகத்திலக்கியமாகியதோர் நூல்.

(1) ஓரம்போகி (2) அம்மூவன் (3) கபிலன் (4) ஓதலாந்தை (5) பேயன் என்ற இவ்வைவரால் யாக்கப்பட்டுள்ளது. இவ்வைவரும் தம்மில் இணை-ஒத்த புலவர்கள்; தொகுப்பித்த சேரற்கும், தொகை செய்த கிழாருக்கும், அறிமுகமாயவர்களே; இவ்வைவர் பாடிய ஐந்திணையையும், கிழார், தம்துறைபோய் விரிந்த அறிவுளராக, ஓரம்போகியார்யாத்த மருதம் முதலாகப் பேயன்யாத்த முல்லையீறாகத் தொகை செய்தார். இத்தொகை நூலுக்கு ஆசிரியர் பெருந்தேவனார் கடவுள் வாழ்த்து யாத்தமைத்திருக்கின்றனர்.

இனி, 'நடுவண' தொழிந்த நிலம் நாலெனக்கொண்டு, ஐந்திணை காத்த தொல்காப்பியர் தம்முறைக்கண்ணே, அவற்றிற்கு முறை கூறுங்கால், "முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென" முறை கூறிக்கொண்டு, 'இம்முறையே யன்றியும் சொல்லப்படும்' என்பது படச் "சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே." எனச் சூத்திரம் செய்து சென்றனர். இவ்வுண்மை இலேசு கொண்டே. கலியாதி பிறநூல்களினும் இந்நூலினும் வேறுபடத் திணை கோக்கப்படலாயின. இவற்றால், திணைமுறை வைப்புத்தான், யாதானும் தக்க காரணம்பற்றித் தமக்கு வேண்டியவாறு முடியும் என்பது ஆயிற்று.

ஆசிரியர் தாமுமே, திணை வகுப்புழி முல்லையை முதற் பெய்தும், உரிவகுப்புழிக் குறிஞ்சிப்பாலதாய புணர்ச்சியை முன்னிட்டுச் தம் உண்மை உட்கொண்டு செல்ப. முல்லையை முன்னிட்டுழி, 'அகத்திணையாவதில்லறமே கோக்கிற்றாகலின் இயற்கை முல்லையாகிய இல்லத்திருத்தல் (கணவற்பிழையாமை, கல்லறத்துணையாதல்) முற்படத்தொகுத்தார்' என உரைகூறிய ஆசிரியர் "புணர்தல் பிரிதல்" என்ற உரிச்சூத்திரத்து, 'அகப்பொருள் ஆவது புணர்ச்சியாகலின், அதனை முற்படப் பெய்தெழுத்தார்' என்று முறைகாட்டிச்செல்வர். இவற்றாலும், காரணம் தக்கனநாடித் திணைவைக்க என்பது தெளிகின்றாம்.

இவ்வாறாகவே, நமதுகிழாரும், தமது தொகைநூலில் மருதம் முதலாக முல்லையீறாகத் தொகைசெய்தார். இதற்கு, 'எம்முறைகருதினார் என்பதே ஈண்டை ஆராய்ச்சியாகும்.

கிழார் கோத்தமுறை இதுவே; (வேறன்று) என்று துணியச்
(1) சான்றோர்கள் இம்முறைமை மாற்றாமை இதுவரை யிருத்தலும்,

(2) உரை ஆசிரியர் ஒருப்பட்டுரைசெய்திருப்பதும்,

(3) “மருதமோரம்போகிநெய்தலம்மூவன்
கருதுங்குறிஞ்சிகபிலன்;—கருதிய
பாலைஓதலாந்தை; பனிமுல்லைபேயனே
நூலைஓதைங்குறுநூறு.” என்ற

இவ்வெண்பாவுடன் கூடிச் சான்றாகின்றன. உரையாசிரியரோ, இம்முறை விளக்கிலர்; உரையே சுருங்க உரைத்துச்செல்வர்.

இத்தொகை செய்தார், 'புலத்துறை முற்றினார்.' எனச் சிறப்பிக்கப்படுவர்; புலமாவது நூல்கண்டறிந்த அறிவு; ஆகவே, இவர் செய்தமுறையும் நூற்றுறை யிகவாது நிற்றல்வேண்டுவதாயிற்று.

நூற்றுறையாவது, 'எல்லாப்பிறப்பினும் உயர்ந்ததாய மானுடப் பிறப்புற்றோர் யாவரும் ஓராங்கறம்புரிந்து பேறடைக.' என்பது எல்லார்க்கும் ஒப்பமுடிந்தது. ஆகவே, இக்கருத்துட்கொண்டே, கிழார் இது கோத்தார் என்க.

அதாவது, ஊடியும் கூடியும் இல்லிருப்பான் பின்னைப் பிறப்பறுக்கத் துறக்கவும்வேண்டும் என்பதுபடக் கோத்தார் காண்க.

இவ்வாறு புகாக்கால், இல்லறம் நிரம்பா வாழ்க்கையாய் இழிபுறும் என்ப. தொல்காப்பியர் தமது பொருளதிகாரத்தில், அறிவும் அஃதே அளித்திடும்; என்னை? அனுபவம் முற்றிற்றானே வெறுப்பு? வெறுப்பும் உலகத்துப் பொருள்நிலையாமை உணர்வும் ஒன்றாகூடவேயன்றோ ஒருவர்க்குத் துறவுள்ளம் தோன்றிடுஉம்? ஆதலால், துறவுபுகலே இல்லறமுடிவாகும் என்பது நிலையாயிற்று.

இங்ஙனம் துறவுநிலையாகவே மாந்தர் துறவுச்சேறல் இன்றியமையாமையாய்க. வானப்பிரஸ்தமும் சந்யாசமுமே துறவு.



இக்கருத் தொலிப்பவே, இதன் கடவுள்வாழ்த்தும் அமைந்திருப்பதைக்காண்க.

(1) அகப்பொருளாவது புணர்ச்சி ஆகலான், புணர்ச்சியை நடுவிட்டார். 'நடுவணது எய்தின் இருகடையும் எய்தும்' என்ற முறைத்தக நாற்றிணைக்கண்ணும் நிகழும் என்பதும், இஃதுபற்றியதே இவ்வகத்தொழுக்கம் என்பதும், இஃதுதான் மகளிரது இயற்கை முல்லைக்கு ஆதாரமாவது எனவும் போதர இங்ஙனம் இடைப்படுத்தாராயிற்று.

(2) பின், இவ்வொழுக்கமெல்லாம் இல்லிருந்து அறஞ்செய்தலைக் கருதியது. ஆகலின், அக்கருதப்படுபொருளை, “சிறப்புறு பொருளைப் பிற்படக்கிளத்தல்” என்றாங்குக் கருதப்படுபொருளாக ஈற்றுக்கண்பெய்தார். 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே' என்பஃதால், இல்லிருந்து அறமாற்றி உலகுநிலையீதென்று உணர்ந்து வெறுப்புளத்தராய்க் கிழவியும் கிழவனும் துறவடைதலானே இல்லறம் நிரம்புதலடையும் என்பதுபட ஈற்றுப்பாலதாக முல்லையைப்பெய்தார். இம்முல்லைதான் புணர்ச்சியை இன்றியமையாதது என்பதால் குறிஞ்சிப்பின் இஃதை இட்டுத்தொகுத்தார். அல்லாது வேறுபடத் தொகைபெற்றால், இல்லறம் நிரம்புதல் இன்றிப் பிறழக்கூறியதாக ஒலிக்கும்; ஒலிக்கின், ஆசிரியர்கூற்றுப் பயனிலதாய் முடியும். எனவே, “சிறந்தது பயிற்றல்” என்னும் இலக்கணமுண்மையின் இங்ஙனம் கோத்தார் ஆயிற்று. (இத்துறவு அகப்பொருட்டாதல் தொல்காப்பியம் பொருளதிகாரம் 430-ம் பக்கம் காண்க.)

(3) புணர்தல்கூறி நல்லறமாற்றி இல்லிருத்தல் பெற்றபின் துறவறம் புகுப என்பதால், அப்பொழுதே, சிறந்ததற்குத்தக்க நூலோதல்வேண்டும்; இம்மையில்லறம்சிறக்கப் பொருள்தேடல்வேண்டும்; இவ்விரண்டும், புணர்ந்து இல்லிடை நிலைத்தலால் எய்தப்படாதன. பிரிந்தே பெறப்படுப. என்பதும் புணர்ந்தார் பிரிந்தே சேர்ந்து இல்லிருந்தறமாற்றித் துறவுப்போதுப என்பதும்படக் குறிஞ்சி பாலை முல்லைஎன முறைப்படுத்தாராயிற்று.

(4) பின், கூட்டத்துக்கு இன்றியமையாததாய்க் கூட்டத்தை யணிபெறுத்துவதாய் நிற்கின்ற ஊடலை முதற்பெய்தார். (மருதமாவது, ஊடியும் கூடியும் போகம்நுகர்தல்.)

(5) ஊடலும் இரங்கலும் ஒப்புடைமைபற்றி மருதமொடு நெய்தலையிட்டார். ஒப்புஆவது, இரண்டும் பெரும்பொழுது ஆறும் பெறுதலும், பரத்தையிற் பிரிவுபோலப் பிரிவு ஒப்பு உடைத்தாதலும், பருவரல் உடைத்தாதலும் ஆம்.

இனி, இவ்விரண்டும் பெரும்பான்மை தலைவிக்கே உரியஎன்பதால், இங்ஙனம் இட்டார் எனினும் அமையும். எனிற் பயம்யாதோ? என்றக்கால், இவ்வாழ்வு முற்றிலும் தலைமகளை முன்னிட்டதே என்பது போதரலாயிற்று. "இல்லில்லார்க்கு இல்லை எறுபோற்பீடுநடை" என்பதூஉம், 'இல், இல்லக்கிழத்தி, மனைவி, மனை' என்றற்றொடக்கத் தலைமகள் பெயர்களும். இவ்வுண்மையைச் சிறப்பித்தல் காண்க. இது விரிப்பிற்பெருகும்.

இத்தொகையால், ஊடியும் கூடியும் இல்லிருக்கும் மாந்தர், வெறும்புணர்ச்சி மாத்திரைத்தே இல்வாழ்வு, அன்றித் துய்ப்பவெய்தி நுகர்தன்மாத்திரத்தே என வீணாள்கழியாமை மானமழியாது பொருடேடி ஒப்புரவாற்றியும், சிறப்புறு நூல்களை ஓதியும், விருந்து புறந்தராலாதி ஒழுக்கம் பிழையாதியற்றியும், இற்சிறப்பெய்தியபின்னைத் துறவுளத்தராய் ஈசனையடைந்து தோற்றரவு இசந்து பேறு அடைக என்ற நூற்றுறைக்கோளது தெரிவுறுத்தாராயிற்று.

அகப்பொருட்டாயநூலுட் டிணைநிலைவைப்பிதாகிற் பொருள் ஒழிந்து, பிழையாதோ? எனிற், பிழையாது என்க. என்னை? அகம் புறம் என்று பொருட்பாகுபாடுசெய்த ஆசிரியரே 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" என அகத்திணையியலுட்கூறிச் செல்வதால், இஃது ஒருதலையான் வேண்டப்படுவதாயிற்று. அகத்தொழுக்கம் நிலையாமை துறவு ஏற்படல் அரிதெனு முலகியலே இதற்குத்தக்க சான்றாகின்றது. இன்னும், இன்னோரன்னவற்றால் இது பிழையாது என்க.

பின்னை கூடலின்பின்னன்றோ ஊடல்; அவ்வாறாக, ஊடற்பின் கூடல் எவ்வாறெய்தும்? எனச் சிலர்கூறலாம். 'ஊடுதல் காமத்துக்கு இன்பம்' (கூட்டம், கூடல்) என்ற குறள்வாக்கும், இயற்கைப் புணர்ச்சிப்பின்னே, அகத்தொழுக்கம், அஃதினே ஊடலும், உணர்த்தலும், கூடலும், பிரிதலும், இரங்கலும், இருத்தலும் நிகழும், என்ற ஆசிரி



யர்கோளும், "ஊடலிறுதிக்கட்கூடல் ஒருதலை" என்ற சிவஞான முனிவர் கூற்றும், நானுகர்வும் கண்டு அது கடாவன்மை காண்க.

ஊடலே நைதல் கூடல் பிரிவென நிரலே நிறுத்தியதொகையால் ஊடிக்கூடலும், பிரிந்திரங்கலும் என்பது பெறுக. பின்வந்திருத்தல் முல்லை. இதனால், ஊடல் கூட்டத்தாலும், கூட்டம் பிரிவாலும், பிரிவும் பருவரல் உற்று இரங்கலும் இருத்தலாலும் அழிவடையும் என இவ் வைந்தின் நிலையாமையும், வைகுறுமுதலா மாலையீறாக் காட்டிய தொகையால் நாளது இன்மையும் தெளித்து, இவை சுழன்றுவருதலே அகத்திணைத்தாய இல்வாழ்க்கை என்பது காட்டி, நுகர்ந்து இட்டுக் கழிப்பிபபின்னைத் துறவுபுகுந்து 'பேறடைக என்பதும் அறிவுபடக் கோத்தமை யறிக.

நூலாவது, அறம்பொருள் இன்பெனும் முப்பொருள் தருவதன்றே? ஆதலால், புணர்ச்சி இன்பம்; பிரிந்து இல்லறமாய புரந்தால். விருந்தோம்பல், ஈகை இவை குறைவற நடத்துவான். சென்று தேடிவரும் பொருளும் பொருள்பெற்றுச்செய்யும் இல்லறமும் என மூன்றும் இந்நூல் தரல்காண்க. இப்பொருள்படக் கிழாரும், குறிஞ்சி பாலை முல்லை என்று கோத்துள்ளார் ஆயிற்று. வீடு துறவால் கூறப்பட்டது.

'வீடன்றே விளம்பப்படாப்பொருள்' ஆகலிற் காண் அது நாலுள் விள்ளப்படாது புறத்தே ஒலிக்கத் தொகைசெய்ததும் என்க.

இவற்றால்,

"ஊடலே நைதல் உளமுருகிக் கூடலே
சென்று பிரிதலுடன் வந்திருத்தல்—பின்னை
அறமாற்றி யான்ற துறவடைதல் ஆவதே
கூடல்கிழார் கொண்ட தொகை." என்று துணிக.

S. RANGAN,
30th Sep. 1918.

# புத்தகமதிப்புரை.

(1) பட்டபாண சரித்திரம்:—(ஹர்ஷ சரிதத்தின் முதற்பாகம்) இது, கும்பகோணம் இராஜாங்க கலாசாலையின் பிரதான ஸம்ஸ்கிருத பண்டிதர் அபிநவபட்டபாண ஸ்ரீ. உ. வே. ரா. வே. கிருஷ்ணமாசாரியரால் வடமொழியினின்றும் தமிழ்நடையி லெழுதப்பட்டது. இதற்குக் கும்பகோணம் ராஜாங்க கலாசாலைத் தலைமைத் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ. உ. வே. ம. வீ. ராமாநுஜாசாரியரால் முகவுரை எழுதப்பட்டிருக்கிறது. இதன் ஆக்கியோரெழுதிய முன்னுரையால் அவர்களுக்குள்ள ஸம்ஸ்கிருதபாஷையின அபாரயோக்கியதையும். இதன் பிரயோஜனங்களும் இதன்முதனூலின் சொற்பொருளமைதியின் அருமையும் நன்கு அறியலாகும். சிறந்தபண்டிதர்களா லெழுதப்பட்ட வசனகாவியங்களை நடுத்தரக் கல்விகற்பார்க்கெல்லாம் மிகப்பயன்படத்தக்கன. அத்தகைய காவியங்க ளிக்காலத்தில் மிகச்சுருங்கியுள்ளன. அவற்றைப் பெருக்கவேண்டிப் பலரும் தம்நெஞ்சுக்குத்தோன்றியபடி புதிது புதிதாயெழுதி வெளியிடுவதைவிடக் காவியாலங்கார நாடகங்களிற் கைதேர்ந்த வடமொழிப்புலவரெழுதிய வசனநடைகளை வழுவறமொழிபெயர்த்துக்கொள்வதே சிறந்ததாகும் என்பதை இப்புத்தகம் படிப்பதாலறியலாம். இப்புத்தகத்திலுள்ள விஷயங்களால் படிப்பவர்களுக்கு உலகியலறிவும், காவிய நடையறிவும், ஒழுக்க நடையறிவும் உண்டாவதோடு பல வேறு சந்தர்ப்பங்களையும் அதனதன் சுபாவநிகழ்ச்சி தோன்ற வருணித்து வியாசங்களெழுதவல்ல ஆற்றலும் உண்டாகுமென்று தோற்றுகின்றது. இன்னும் தமிழ்நடை சிறக்குமாறு மேன்மேலு மிவ்வாறான புத்தகங்களை யெழுதி வெளியிடும்படி இஃதெல்லோராலு மாதரிக்கத்தக்கதே. இதன் விலை அணா 10.

வேண்டுவோர் ஆக்கியோரிடம் பெறலாம்.

(2) ஆழ்வார்கள் சரித்திரம்:—இது, கே. டி. ஸ்ரீமான் சுந்தரராஜாச்சார்யர் (பி. ஏ., எல். டி.) இயற்றியது. இதிற் பொய்கையார் முதலிய ஆழ்வார்களுடைய சரிதங்களும், அவர்களியற்றிய பிரபந்த முதலியனவும், யாவருமெளிதி லறியும்படி தெளிவாயெழுதப்பட்டுள்ளன. இதன் விலை அணா 12. வேண்டுவோர் ஜி ஏ. வைத்தியராமன் கம்பெனி, மதராஸ். என்ற விலாசத்துக்கு எழுதிப்பெறலாம்.

(3) பாரஸீக ரத்நங்கள் :—இதுவும் ஜி. ஏ. வைத்தியராமன் அண்ட் கம்பெனியிற் பதிப்பிக்கப்பட்டது. இதிற் பலவிஷயங்கள்பற்றிய 36 சிறியகதைகளடங்கியுள்ளன. இதன் விலை அணா 4. வேண்டுவோர் மேற்கண்ட விலாசத்திற் பெறலாம்.

**பத்திராதிபர்.**

உ

# தொல்காப்பியமும், மயிலைநாதருரையும்.

"சகரக்கிளவியும் அவற்றோரற்றே
அ ஐ ஔ வெனு மூன்றலங்கடையே."

என்னும் தொல்காப்பியச் சூத்திரவுரையில் உரை யாசிரியர், சாலை சிலை என்னும் வடசொற்களைத் தமிழ்ச்சொற்களாகக் கருதிக் கூறியதன்றியும் அவர் சகடமெனவும். சையம் எனவும் வருமாலெனின் அவற்றுள் ஆரியச் சிதைவல்லாதன "கடிசொல்லில்லை" என்பதனாற் கொள்க என்பதுங் கூறினார். மேலும் "கடிசொல்லில்லை" என்னும் சூத்திரம் புதியனவாய்ப்புகூஉம் தமிழ்ச்சொற்கட்காதலைக்கருதாது சையமெனவும் சகடமெனவும் காட்டினார்.

"கடிசொல்லில்லை" என்னும் சூத்திரவுரையில் வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்த சேனாவரையரும் சம்பு என்னும் வடசொல்லைத் தமிழெனக்கருதிக் காட்டினர்.

உச்சிமேற் புலவர்கொள் நச்சினார்க்கினியரும் அச்சூத்திரக்குறிப்பைக் கருதாதும் பிறரையும் மறுத்துச் சகடமென்னும் சொலலைத் தாமும் காட்டினர்.

நன்னூற் பழயவுரைகாரராகிய மயிலைநாதரும் வடசொற்களையும் பிறசொற்களையும் தமிழ்ச்சொற்களெனக் கருதிக்கொண்டு ஒரு நவீன மேற்கோள்காட்டிச் "சம்முதலனைவை" என்றார்.

அவர் பின்னரும், ஆசிரியர் தொல்காப்பியனார் 'குற்றியலுகரம் முறைப்பெயர் மருங்கின் ஒற்றியநகரமிசைநகரமொடு முதலும்." என்றதை "நுந்தையுகரம்" என்ற தலைக்குறிப்பமைந்த நவீன

வெண்பாக்கொண்டு அப்பெயர் முதலில் உயிர்முதற்கண் வரவில்லை என்று மறுத்தார்.

ஆசிரியர் தொல்காப்பியர் "நகரமொடு முதலாகும்" என்றாரன்றி வேறு கூறினாரல்லர்.

நு என்பதில் நகரம் எண்ணப்படாமையானும் அளவு பெறுமையானும் மெய் யுயிரெனப்படாமையானும் இடையீறென்பவைகளுள் ஒன்றையேனும் கூறவொண்ணாமையானும் உகரமே முற்றவொலித்து நிற்றலானும் பிறவாற்றானும் அதனையே முதலெனக்கொள்ளலும் தவறாகாது. இவ்வாறு ஆசிரியர் தொல்காப்பியனாரை யுள்ளிட்டாரனைவரையும் நிந்தித்துரைத்த மயிலைநாதரை முன்னோரிடத்தில் அன்பும் நன்குமதிப்பும் உள்ளவரென்று சொல்வதெப்படி? இன்னும் முன்னோருரைகளிற் குறைகூறும் இயல்புடையாரும் திராவிட பாடிய கர்த்தரும் துறைசையாதீனசிரோன்மணியும் ஆகிய சிவஞானஸ்வாமிகளிடத்தே உட்பற்றின்மையும் இவ்வாக்கியங்களாலேயே தெள்ளிதிற் புலப்படும். மேலும் இச்சூத்திரங்கட் கின்றியமையாதனவற்றை எமது "தொல்காப்பியரும் பிற்காலத்தாரும்" என்ற விஷயத்தொடர்ச்சியில் அமையும் இடங்களிற் செவ்வென் விளக்கிக்காட்டுதும்.

இங்ஙனம்

K. S. நவநீதகிருஷ்ண பாரதி,
தலைமைத் தமிழ்ப்பண்டிதன்,
இராமநாத வித்யாசாலை, சுன்னாகம்.
18th Aug. 1918.

---

உ

சிவமயம்.

# நல்லிசை நாற்பது.

## காப்பு.

(நேரிசை வெண்பா.)

அந்தா மரையயனு மச்சுதனுந் தேடரிய
பைந்தா ரிதழிப் பரமசிவன்—றந்தகரி
மாமுகத்துப் பிள்ளை மலரடியை வந்தித்தே
நாமகத்து வைப்பாம் நயந்து.

வாரணத்தின் பாதமலர் வந்தித்து நாமகத்தில்
ஆரவைத்துக் கொண்டா லருளுண்டாம்—பாரகத்தில்
எல்லா நலனு மினிதமையு மெஞ்ஞான்றுஞ்
செல்வாக்கு முண்டாஞ் சிறந்து.

## நூல்.

தங்கமலை வெள்ளிமலை தக்கமனை மக்களொடு
சங்கரனார்க் கேற்றவெலாந் தாமிருக்க—அங்கவரேன்
பிச்சைக்கு நாடிப் பெருமோடுங் கைப்பிடித்து
நச்சிவெளி வந்தார் நவில்.

ஒருமான் முடிமே லொருமான் கரத்தில்
அரைமானும் பாகத் தமர்ந்தால்—பெருமான்
வருமானங் காணுமோ மற்றவரைக் காக்க
இரவாதென் செய்வா ரிருந்து.

ஆதி சிவனா ரழல்விழியி லோர்பாதி
பாதி யுமையாட்கும் பங்குண்டே—நீதிகெடச்
செப்பரிய மன்மதனைச் சேணறியச் சுட்டபழிக்
கெப்படிப்பங் கின்று மியம்பு.

பாலன் சுவைக்கறியிற் பங்குதனி னில்லை
ஆலத்தும் பங்கில்லை யானதனால்—சேலொத்த

கண்ணுமையாள் கட்பழியிற் காற்கூறுங் கைக்கொள்ளற்
கெண்ணுவளோ போம்போ மெழுந்து. 4.

நாவிருந்தி மார்பிருந்தி நற்பாகத் தேயிருந்தி
மூவ ரிருந்தியதேன் மொய்குழலார்—சேவித்துப்
போனார் புலவர் தவத்தர் புகழடியர்
ஆனா ரவர்ப்பின் னடுத்து. 5.

வேதன் சிரமிழப்ப விண்டாழி வாய்துயில
நாதன் பலிக்கு நடந்தக்கால்—மாதர்தாம்
என்செய்வர் மீகாம னில்லா மரக்கலங்கள்
பின்செல்லு மோநெறியிற் பேசு. 6.

பிரமன் பெரும்படைப்பி லொன்றும் பிழைபோய்ப்
பரமன் முடிமேற் பதிந்தால்—பரமன்
முடியறியா தவ்வேதன் முன்னன்னத் தேறி
நெடிதலைந்த தென்னே நிகழ்த்து. 7.

கங்கை பரவக் கடியரவு மேசூழக்
கொங்கிதழி மூடிக் குவிந்திட்டால்—சங்கரன்றன்
வண்ண முடியும் மறையாதோ மற்றதனைக்
கண்ணுறவும் போமோ கணித்து. 8.

விடையிற் சிவனேற வெண்கதிர்சென் றன்னோன்
சடையேறிக் கொண்ட தரமென்—நடைவழியில்
வெங்கதிரைத் தாங்கிவர வேறுகுடை யில்லாத
பங்கத்தா லாமோ பகர். 9.

பித்தன் பெரும்பித்த னென்றுலகோர் பேசுமொழி
அத்தை மறுத்திங் கவிர்மதியான்—வைத்துள்ளேன்
என்று பரம னியம்புமுரை போன்மதியைத்
தன்றலைமேற் கொண்டான் றரித்து. 10.

ஆட்டுக்கா லைத்தூக்கி யந்தகற்கு விட்டெறிந்த
மாட்டுக்கா ரப்பையன் மாதேவி—காட்டிற்போய்
ஆனைக்கன் றென்றை யவசரத்திற் பெற்றாளின்
றானத்தே வைத்தா டனித்து. 11.

வருவா னொருகுமரன் வள்ளிக்குப் பின்னே
திரிவா னவனைத் திருப்ப—வெருவானைக்



கன்றென்று வேண்டிவரு மென்றே கணித்துமையாள்
அன்றுபெற்று வைத்தா ளறி. 12.

கங்கையைமுன் கட்டியவன் கங்கையைப்பின் கட்டற்கே
மங்கைதரு பிட்டெல்லாம் வாங்கியுண்டு—பங்கடையாப்
பேதத்தா லம்ம பிரம்பி னடிவாங்கி
வாதைப்பட் டன்றொளித்தான் மன். 13.

காட்டி னரியைக் கவினப் புரவியெனக்
கூட்டிக் கொடுபோந்து கொற்றவன்முன்—காட்டி
விகடங்கள் செய்தால் விளைபழிகள் போமோ
சகடங்க டாமே தரும். 14.

வாவிக் கரையிற் றவமாற்று மாதரசைத்
தாவிப் பிடித்துத் தவங்குலைத்த—பாவத்தைக்
கேட்டார் நகையாரோ கிட்டிவரு மப்பழிதான்
ஓட்டெடுத்தாற் போமோ வுரை. 15.

பிச்சைக்குச் சென்றானைப் பேய்தொடர்ந்த வாறேபின்
நச்சித் தொடர்முனிவர் நாரியர்தம்—அச்சத்தால்
தஞ்சம் புகவேண்டித் தன்மாதைச் சார்ந்ததன்றி
வஞ்சித்தா னன்று மகிழ். 16.

தசையி னசையாற் றனிப்பன்றி பின்போய்
விசையனடி யும்பட்டான் மேலோன்—பசிதான்
மலைமானி னோர்பாதி வாய்மடுத்து மையோ
நிலையான தென்னே நிகழ்த்து. 17.

அந்தக் கடுவிடத்தை யந்நாளி லுண்டக்கால்
முந்துங் கனலோங்கி மூளாதோ—சந்தித்த
ஏனத்தை வீம னிளவல் கொளவிட்டுப்
போனக்கா லுண்டோ புகழ். 18.

வீசி வலைகொண்டு மீன்படுக்கு மச்சிவன்மேல்
நேசங்கொண் டம்மை நெறிமடக்கி—மாசகறன்
கண்ணைக் கணையைக் கயலென்று காட்டிமயல்
உண்ணிறையச் செய்தா ளுவந்து. 19.

அவ்வா றவனை யவள்மடக்கிக் கூடாளேல்
எவ்வா றுலக மிதங்கண்டு—செவ்வாறாய்

இல்லக் கடனிறுக்கு மெல்லாரு முத்திநெறி
செல்லற்கெண் ணுரோ திரண்டு. 20.

அன்பர்க்கு வீடுதவு மாதி சிவன்றனக்கு
முன்பொருவீ டின்றி முகில்மேயும்—பொன்பொருப்பிற்
சென்றிருந்தா னங்கதனைத் தென்னிலங்கை ராவணன்போய்
அன்றுபறித் திட்டா னசைத்து. 21.

பத்துத் தலையுடையான் பத்திரண்டு கையாலு
மெத்துக்கு வெற்பை யெடுத்ததெனில்—பித்தேறி
மண்விழுவ னாயின் மடிவ னுமைவாய்க்கும்
மண்விழுமா மென்றே மதித்து. 22.

நல்ல வரங்கேட்டு நாடிவந்த ராவணற்கோர்
கல்லை யிலிங்கமெனக் கைக்கொடுத்துச்—செல்லுலகையில்
மைந்தனையு மேவி வழிப்பறித்தா னிவ்வகைத்தே
அந்தவரா னுற்று மறம். 23.

பிச்சை யெடுத்துழலும் பித்தனுக்குப் பின்னோடிப்
பிச்சைதா வென்றூற் பெறுவதுண்டோ—மெச்சுந்தன்
பல்லைக்காட் டாமற் படாடவிக் கோர்துணையாய்க்
கல்லைத்தந் தானுங் கணித்து. 24.

நள்ளிரவிற் றூது நடந்த சிவனாரின்
கள்ளத் தனமெல்லாங் கண்டீரோ—தள்ளிப்போய்க்
கையோலை காட்டிக் கடிமா மணந்தடுக்கப்
பொய்யுரையுஞ் சொன்னார் புனைந்து. 25.

தந்தைதாய் சுற்றந் தனக்கில்லாத் தாழ்ச்சியினால்
எந்த வகையு மிடும்பிசைத்துச்—சொந்தமெனக்
கொண்டா னொருசிறையைக் கூருநசைக் கோர்வெட்க
முண்டாவ தில்லென் றுணர். 26.

தக்கன் றனையடக்கத் தக்கவலி யில்லாமல்
மிக்கபுகழ் வீரனைமுன் விட்டானே—முக்கண்ணன்
மாமற்குச் செய்யும் வரிசை யிதுவானு
லேமற்றோர்க் கென்னு மியம்பு. 27.



தன்மருகன் கூழுக்குத் தானிரத்தல் கண்டிருந்தும்
பின்பவனை நீக்கிப் பிறர்க்கெல்லா—மின்பமிகக்
காட்டி யவிப்பாகங் கையளிப்பி னம்மருகன்
கேட்டிருப்ப னோமோ கிளத்து.

பல்லுக் கிதமாய்ப் பலதசையு மூட்டிவரு
வில்லுக்கை வேடன் விழிபறித்தான்—சொல்லக்கேள்
செய்நன்றி கொல்லுஞ் சிவனுக்கெக் காலத்து
முய்வுண்டு கொல்லோ வுரை.

கண்ணனைமுன் னோர்மலர்க்காய்க் கண்பறிக்க வைத்தவனெ
றெண்ணுமல் வேட னிலைறச்சிகொடுத்—துண்ணென்றால்
தீமை விளையாதோ தீயவரைக் கொண்டாடிற்
சாமளவுஞ் சஞ்சலமே தான்.

பொய்யில் பரமனுக்குப் பூவாடை கோடியுண்டு
வெய்யில் குளிர்பனிக்கு மேலாடை—கையிலிலை
அத்தாற் கரியுரியை யன்றெடுத்துப் போர்த்துலகில்
வைத்தானே பொல்லா வசை.

கரியி னுரிபோர்த்த காரணத்தை முற்றுஞ்
சரிநீ யறிந்ததிலைச் சாற்றின்—உரியுரிய
முன்னாளிற் பட்ட வடுத்தழும்பை மூடற்காய்
இந்நாளிற் செய்தா னிது.

மொய்குழலாள் தன்னுடனே முன்பாடு சூதுதனிற்
பொய்யுரைக்க மாலுக்குப் புத்திசொல்லி—வையமிசை
பாம்புருவம் பெற்றுப் பரதவிக்க விட்டானே
சாம்பசிவன் செய்கையிது தான்.

மைந்தனொரு சப்பாணிப் பிள்ளை வடதருக்கீழ்
வந்திருந்தா னோர்துணையும் வாய்க்காம—லிந்தவகை
மாமனையே காவற்கு மற்றவன்பா லுய்த்தனனுங்
காமனையே சுட்டான் கணித்து.

என்னவரங் கேட்டாலு மில்லையென்று சொல்லாமல்
முன்னுதவிப் பின்பறிப்பான் முக்கண்ணன்—அன்னவன்பா
பெற்றபுகழ்ச் சூரன் பெருவரங்க ளெல்லாம்போய்
அற்றவகை யென்னு மறை.

இல்லைப்போ வென்று ஸிரக்கத்தான் போயிடத்துஞ்
சொல்லதையே எல்லவருஞ் சொல்வரென—மெல்லவரன்
எவ்வரமு முன்னீக் கிரக்கு மியல்புதனால்
அவ்வரமீட் டேற்பா னடுத்து. 36.

மன்றல் வளங்காண வந்தவரி லோர்முனியைத்
தென்றிசைக்க ணோட்டிச் செலுத்தினனே—குன்றெடுத்து
வில்லாகச் செய்த விமலற் கிதவழ்கோ
சொல்லாரச் சொல்லீர் துணிந்து. 37.

அந்தமுனி யேழ்கடனீ ரள்ளிக் குடித்தபெரும்
உந்தியினன் மன்ற லுணவெல்லாந்—தந்திரமாய்த்
தின்றிடுவ னென்றேங்கித் தென்றிசைக்குய்த் தான்சிவனுந்
தன்றிசையைச் சாட்டாய்ச் சரித்து. 38.

மங்கலஞ்சே ரின்ப மணக்கோலம் பூண்டவொரு
நங்கை நறுங்குழலை நாடிப்போய்ச்—சங்கரனூர்
கொய்வித் தெடுத்தார் குடிப்பிறந்த நல்லவர்கள்
செய்விப்ப ரோவிச் செயல். 39.

தன்மகடன் றூலிபறத் தர்ப்பகனைக் கூசாமல்
முன்னெரித்தோ னானும் மொய்கூந்தல்—தன்சடையைப்
போன்முறுகும் பாம்பு புகுந்துகுடி கொள்ளுமெனத்
தான்களையச் செய்தனனும் சம்பு. 40.

## வாழ்த்து.

வாழ்க மகிதலமே வாழ்கவென வாயார
வாழ்வுரைக ளாமிசைப்பின் வாழாதோ—வாழுமெனில்
நீடூழி நீடூழி நீடூழி வாழ்கவெனப்
பாடிடுவா மென்றும் பரிந்து. 1.

வாயார நாமினிய வாழ்த்துபல சொன்னாலுந்
தாயான மூர்த்தி தயவின்றேல்—வாயாவாம்
மற்றவனை முன்னேத்தி வையகமே வாழ்கென்று
சொற்றனமே யுள்ளந் துணிந்து. 2.

ச. பூபாலபிள்ளை.

உ

கடவுள் துணை.

# செந்தமிழ்.

தொகுதி-௧௭.] சித்தார்த்தி௵ புரட்டாசி௴ [பகுதி ௧௧.

Vol. XVII. September—October, 1919. No. 11.

## குச்சரக்குடிகை.

தமிழின் மேம்படு தகைத்தமிழ் பூணு மணிமேகலையா மணிமேகலையுஞ் சிலம்பாஞ் சீர்மிகு சிலப்பதி காரமும் இலங்கை மன்னன் கஜபாகுவின் காலமாகிய கி. பி. 2-ம் நூற்றூண்டிற்குரியன என்று கூறுவோரில் நானுமொருவன். ஆனால், அவற்றின் காலம் மிகவும் பிந்தியதென்று வாதிப்பாருமுளர். அவ்வாறு துணிதற்கு எடுத்துரைக்கும் பலகாரணங்களுளொன்று மணிமேகலையில் குர்ச்சரரைக் கூறியிருத்தலென்று சிலகலைஞர் எழுதியுள்ளார். மணிமேகலை 18-ம் பாட்டாகிய உதயகுமரன் அம்பலம்புக்க காதையில் ஈரிடத்து "குச்சிரக்குடிகை" என்று வந்திருத்தலை நினைத்தே இவ்வாறு கூறியுள்ளார். இத்தொடர்மொழிக்கு மகாமகோபாத்யாய வே. சாமிநாதையரவர்கள் தமதருமையான பதிப்பின் 162-ம் பக்கத்தில் பின்வருமாறு உரைதீட்டி யிருக்கிறூர்கள். "குச்சிரக்குடிகை (=கூர்ச்சரக்குடிகா) கூர்ச்சரதேசத்துப் பணியமைந்த சிறியகோயில். கூர்ச்சரதேசம் சிற்பத்திற் பெயர் பெற்றதென்பர்" இவ்வுரையால், மேற்கூறிய பதம் குர்ஜர ராஷ்ட்ர அல்லது குஜராத் என்றதேச நிவாசிகளாகிய குர்ஜரரைக் குறிக்குமென்றும், அச்சாதியார் சிற்பத்திற் றேர்ச்சியடைந்தவ ரென்றும், அவர் ஓர் விசேடவிதப்பணி தாபிதஞ் செய்தாரென்றும், அம்மாதிரிப்பணி தென்னாட்டிலும் பரவிற்றென்றும் காணக்கிடக்கின்றன. குர்ஜரரைப்பற்றிய

*

வரலாறு கி. பி. 5 அல்லது 6-ம் நூற்றாண்டிற்குமுன் சரித்திரங்களிற் காணவில்லையென்றும், அதனால் குர்ஜரர் 5-ம் நூற்றாண்டிற்குச் சமீபித்த காலத்தில் புறநாட்டினின்று இந்நாட்டிற் குடியேறியிருக்க வேண்டுமென்றும், குர்ஜரர் தேர்ந்த கலையை வியந்து கூறும் மணிமேகலையும் அதேகாலத்தாக்கப்பெற்ற சிலப்பதிகாரமும் கி. பி. 7 அல்லது 8-ம் நூற்றாண்டிற் றோன்றிய நூல்களாகவேண்டுமென்றுங் கவிஞர் சிலர் கூறுவர்.

இங்குக் "குச்சரக்குடிகை" யென்ற பதம் வழங்கியிருக்குஞ் சந்தர்ப்பம்சற்றுக்கவனிக்கத்தக்கது. மணிமேகலைமீது வேட்கைகொண்ட உதயகுமரன் காமபரவசனாய் மலர்வனம் புகுந்து மணிமேகலையை அகப்படுத்திக்கொள்ள முயன்றும் அவன் தீநோக்கம் நயப்படாமற் போக மணிமேகலையை அவள்மூதாய் சித்திராபதியால் இனிச்சேர்தல் கூடுமென்று நினைத்து அச்சோலையினின்றுமவன்போயினன். பிறகு மணிமேகலா தெய்வத்தின் றிருவருளால் வேற்றுவடிவைக் கொடுப்பதும் ஆகாயவழியே சஞ்சரிக்கச் செய்வதுமாகிய மந்திரங்களிரண்டை அப்பெண்மணி கற்றுணர்ந்து, புத்ததேவரருளிச்செய்த நல்லறவழியை நணுகி, அமுத சுரபியைப்பெற்று, அறவணவடிகளைத்தொழுது, பிக்குணியாய்த் தாபதக்கோலங்கொண்டு தன்னூராகிய காவிரிப்பூம்பட்டினத்திற்கு மீண்டுவந்து, அங்குள்ள ஊரம்பலமாகிய உலகவறவியிற் சென்றிருந்தாள். இதைக்கேட்ட சித்திராபதி உதயகுமரனைநாடி மணிமேகலையிருக்குமிடத்தை அவனுக்குக் குறிப்பிக்க, அவன் விரைவொடு உலகவறவியை யடைந்து, அங்கு உணவளித்துக்கொண்டிருந்த மணிமேகலையினருகிற் சென்று, "நீ இக்கோலங்கொண்டதென்னை" என்று கடாவ, 'வாட்டிறற் குரிசிலை மடக்கொடி நீங்கி, குச்சரக்குடிகை தன்னகம்' புகுந்து, முன் மணிமேகலாதெய்வமுபதேசித்தருளிய மந்திரத்தையோதிக் காயசண்டிகைவடிவமுற்று வெளியே தோன்றினள். மணிமேகலை வேற்றுவடிவுகொண்டாளென்பதை யறியாத உதயகுமரன் அவளைத்தேடிக் குச்சரக்குடிகைக்ககத்துச் சென்றான். இதுவே கதை. இங்குச் சாத்தனார் கூறுங் "குச்சிரக்குடிகை"யின் பொருள்யாது? புலவர் சிகாமணியாகிய நற்றமிழ்க்குரவர் மகா மகோபாத்யாய சாமிநாதையரவர்கள் அப்பதத்தின் பொருள் "கூர்ச்சரதேசத்துப் பணியமைந்த சிறியகோயில்" என்று விளக்கியிருக்கின்றார். என்



சிற்றறிவுக்குத் தோன்றும் பொருள், கற்பாறையிற் சமைத்த சிற்றில் அல்லது கோயில், என்று விநயத்தோடுகூற விரும்புகின்றேன்.

பொருள் முன்னதாயின், சிலவினாக்கள் முறையே எழுகின்றன. குர்ஜரர் பிறநாட்டாரில் எவ்வகுப்பினர்? அவர் இந்தியாவிற் குடியேறிய காலம் யாது? அவர் சிற்பத்தொழிலில் பேரறிஞரென்பதற்குச் சான்றெங்குளது; அவர் நூதன முறையிற் பணியமைத்தன ரென்பதற்கடித்தானமென்னை? அவர் எவ்விதத்திலாவது தக்கணதேசத்தில் வியாபகம் பெற்றதாகச் சரித்திரமுளதோ? கி. பி. 5 அல்லது 6-ம் நூற்றாண்டிற்கு முன்பு குர்ஜரர் சரித்திரத்திற் கூறப்பெற்றிலரென்ற துணிபு அங்கீகரிக்கத்தக்கதா? சகனர் (Sakas) அல்லது ஹூணர் (Hun) ஜாதியார் படையெழுச்சிக் காலங்களில் குர்ஜரர் இந்தியாவிற் புகுந்தனரென்று ஒருவரெழுதுகிறார் (Thompson's History of India p. 86.) சகனர் படையெழுச்சி கி. மு. 2-ம் நூற்றாண்டு. அச்சாதியார் காஷ்மீர் வழியாகப் பஞ்சாபிலும், சகஸ்தானவழியாக வலிண்டிலும் பிரவேசித்தனர். கி. மு. முதல் நூற்றாண்டில் வட இந்தியாவிற் சில விடங்களில் அவர்கள் ஆட்சி செலுத்திவந்ததாகக் கூறப்படுகிறது. ஆதிகாலத்தில் குர்ஜரம் மௌரியராளுகைக்குட்பட்டிருந்தது. மௌரியராட்சி சிதைவுற்ற காலத்து, கி. பி. ஒன்று முதல் நான்காம் நூற்றாண்டிறுதி வரையில் குர்ஜரம் சகனராளுகைக்குட்பட்டிருந்தது. பின்னர் சகக்ஷாத்ரபக் (Saka Satraps) ஆட்சியை விக்ரமாதித்யன் என்ற விசேடப் பெயர்பூண்ட சந்திரகுப்தன் அழித்தனன். கி. பி. 413-ல் சந்திரகுப்தன் காலஞ்செல்ல, அதன்பின்னர் குப்தராட்சியும் வலிகுன்றியதால், 5-ம் நூற்றாண்டிறுதியில் ஹூணர் படையெடுத்து பலவிதமாக நாட்டை யழித்தனர். கடைசியில் 528 அல்லது 530-ம் வருடத்தில் காரூர்க் களத்தில் நேர்ந்தபோரில் நரசிங்ககுப்தனும் யசோதர்மனுமொன்றுபட்டு ஹூணதிபன் மிகிரகுலனைவென்று, அவனைக் காஷ்மீருக்கோட்டினர். இந்நிகழ்ச்சிக்கு இருபதல்லது முப்பது வருடங்கட்குமுன், பட்டார்க என்றவோர் குர்ஜரன் வலபிநகரை வேந்திருக்கையாகக்கொண்டு குர்ஜரத்திலிறை மாட்சிபுரியத் தொடங்கினன். இவன் தாபித்த வலபிராச்சியம் கி. பி. 770-ல் மாண்டதென்பர். மேற்கூறிய வரலாற்றால் சகனர் குர்ஜரத்திற்கு கிருஸ்தப்தத்திற்கு முற்பட்ட காலத்தில் வந்தனரென்று புலப்படும். குர்ஜரர் சகனரன்றென்று

துணியக் காரணமொன்றுங் காணேம். ஹூணரென்று கருதற்கு இலட்சியமொன்றுமிலது. ஹூணர்வலி காரூர்க்களத்தில் முற்றும் முரிவுற்றபிறகு மாளவதேசத்தரசனை யசோதர்மன் குர்ஜரத்தில் ஹூணவரசாட்சியோங்கிவளரச் சம்மதித்தானென்று கூறுதல் சற்றும் பொருத்தமுடையதன்று. குர்ஜரர் சகஸ்தானவழியாக விண்டிற் புகுந்த சகனரின் கிளையேயாவர். ஆயினுமவர் சிற்பத்திற் பெயர்பெற்றவரென்றுவது, விசேட இரீதிப்பணி அவரேற்படுத்தினரென்றுவது யாண்டும் நான் கண்டறியேன். அன்றியும், குர்ஜரரது படைத்தேர்ச்சியோகலைத்தேர்ச்சியோ தக்கணவிராச்சியங்கட்குக் கடந்தேகியதாகச் சரித்திரத்திற் காணவில்லை.

"குச்சரக்குடிகை" என்றதற்கு 'கற்பாறையிற் சமைத்த சிற்றில் அல்லது கோயில்' பொருளென்றேன். அதெங்ஙனமெனின், 'குச்சரம்' என்றது 'குத்தரம்' தகரத்துக்குச் சகரம்போலியாய் வருதல் இலக்கணநெறி. 'குத்தரம்' அல்லது 'குத்ரம்', கூத்ர (குத்ர:) என்றவடமொழிப்பதமேயாகும். குத்ர: என்ற கீர்வாணப்பதத்திற்குப்பொருள் கற்பாறை அல்லது மலையென்றாகும். 'குடிகை' என்றது 'குடிகா' என்ற சம்ஸ்கிருதபதம் 'குடிகா' என்றாலும் 'குடி' என்றாலும் சிற்றில் என்பது பொருள். அதனால் 'குச்சரக்குடிகை' என்றால் 'கற்பாறையிற் குடைந்த சிற்றில்' என்று பொருள்படும். இவ்வாறு பொருள் கொள்வது கதா சந்தர்ப்பத்திற்கும் பௌத்தசங்கவொழுக்கத்திற்குஞ் சாலவும் பொருந்துதல் எளிதிற்புலப்படும். 'குச்சிரக்குடிகை'க்குப் பொருளிங்ஙனங்கொண்டால் மணிமேகலையில் குர்ஜரரைக்குறித்துக் கூறுவதாய்ச் சொல்வது மித்தியாவாசகமாகவே முடியும். சிலப்பதிகாரமும் மணிமேகலையும் கி. பி. 2-ம் நூற்றாண்டிற்குரியனவல்லவென்று இவ்வசனத்தாலேற்படவும் நிமித்தமில்லை.

திருவனந்தபுரம்
1—11—19.

கே. ஜி. சேஷையர்.

---

# யாப்பருங்கல நூலாசிரியர்பெயர்.

தமிழிலுள்ள யாப்பிலக்கண நூல்களுள் 'யாப்பருங்கலம்,' 'யாப்பருங்கலக் காரிகை' என்னும் இருநூலும் இயற்றிய ஆசிரியர் ஒருவரே யாவர். இது, 'இந்நூல் யாவராற் செய்யப்பட்டதோவெனின், ..................அருந்தவத்துப் பெருந்தன்மை அமுதசாகரரென்னு மாசிரியராற் செய்யப்பட்டது' என்று யாப்பருங்கலக்காரிகையுரை செய்தார் கூறிய காரிகை நூலாசிரியர் பெயரும், வீரசோழிய வுரையில் அவ்வுரை செய்தார் 'மாலை மாற்றே சக்கரஞ் சுழிகுளம்' என்னும் யாப்பருங்கலச் சூத்திரத்தை யெடுத்துக் காட்டி, 'என்று அமுதசாகரனார் கூறியனகொள்க' என்றமையாற் பெறப்பட்ட யாப்பருங்கல நூலாசிரியர் பெயரும் ஒன்றாயிருத்தலானும், யாப்பருங்கல விருத்தியுரையில் அவ்வுரை யாசிரியர் 'இந்நூலுடையாரும் 'மாஞ்சீர்கலியுட்புகா' எனவும்...பிறவாற்றானும் விளங்கக் கூறினர்; என்று காரிகைச் செய்யுளை யெடுத்துக்காட்டி, யாப்பருங்கல ஆசிரியரே காரிகை செய்தாராகக் கூறியிருத்தலானும் துணியப்படும். இங்ஙனம் துணியப்பெற்ற இவ்விரு நூல்களையு மியற்றிய ஆசிரியர் பெயர் 'அமிர்தசாகரர்' என்றும், 'அமுதசாகரர்' என்றும் யாப்பருங்கலக்காரிகை யுரைப் புத்தகங்களிலும், யாப்பருங்கலக்காரிகைப் புத்துரைப் புத்தகத்திலும், யாப்பருங்கல விருத்தியுரைப் புத்தகத்திலும், நன்னூல் மயிலைநாதருரைப் புத்தகத்திலும், பிறவற்றிலும் காணப்படுகிறது. 'அமிருதசாகரர்' என்று தமிழகராதியிலும் எழுதப்பட்டுளது.

ஆசிரியன் பெயர் கூறுதல் சிறப்புப்பாயிர விலக்கணத்து ளொன்றாகலின் யாப்பருங்கல வாசிரியர் பெயரையும் அந்நூற் சிறப்புப்பாயிரங் கொண்டே அறிதல்வேண்டும்.

யாப்பருங்கலச்சிறப்புப்பாயிரம்.

'யாப்பருங்கலநனியாப்புறவகுத்தோன்
...............................................
அளப்பருங்கடற்பெயராருந்தவத்தோனே.'

என்று கூறுகின்றது.'

யாப்பருங்கலப் பதிப்புரையிலும், காரிகை முகவுரையிலும் இப்பெயரை ஆராயப்புகுந்தவர்கள் "கடற்பெயராருந்தவத்தோன்" என்று பாயிரங் கூறுவதன்றி வெளிப்படையாற் கூறவில்லை" என்கின்றார்கள்.

பாயிரத்திலுள்ள 'அளப்பருங்கடல்' என்னும் தமிழ்ச் சொற்றொடரும், 'அமிதசாகரம்' என்னும் வடசொற்றொடரும் ஒரு பொருளனவாகலின் ஆசிரியர் பெயர் 'அமிதசாகரர்' என்பதாமென்றும், அதுவே 'அமிர்தசாகரர்' 'அமுதசாகரர்' எனப் பலரானும் திரித்து வழங்கப் பட்டதென்றும் நான் கருதுகின்றேன்.

27—10—19 } திரிசிரபுரம். }  மு. வேங்கடசாமிநாட்டார்.

---

உ

# சிலப்பதிகாரத்திலிருந்து சிந்தாமணியில்வந்தசெய்யுட்கள்.

செந்தமிழ்ப்பாஷையிலுள்ள பழைய காப்பியம் ஐந்தனுள் ஒன்றாய்ச், சேரமுனியாகிய இளங்கோவடிகளால் இயற்றப்பெற்றதாயுள்ள சிலப்பதிகாரத்தை யாம் பார்த்துவருங்காலத்தில் இதில் வந்துள்ள சொற்களும் பொருள்களும் பிற்றைய நூல்களில் வந்திருக்கப் பார்த்தேன். அவற்றைச் செந்தமிழில் வெளியிடுவது பயனாகுமெனத் துணிந்து வரையலானேன் அவை யிவை:—

## முதலாவது புகார்காண்டம்

### மங்கல வாழ்த்துப்பாடல்.

"திங்களைப்போற்றுதுந்திங்களைப்போற்றுதுங்
கொங்கலர்தார்ச்சென்னிகுளிர்வெண்குடைபோன்றிவ்
வங்கணுலகளித்தலான்"



### வில்லிபாரதம் ஆதிபர்வம்.

### குருகுலச்சருக்கம் 6-வது பாடல்.

"அந்தியாரணமந்திரத்தன்புடனிவனை
வந்தியாதவர்மண்ணினும்வானினுமில்லை
புந்தியானுயர்புதனெனும்புதல்வனைமகிழ்வாற்
றந்தியாவருங்களிப்புறவிருக்குநாடன்னில்"
"ஞாயிறுபோற்றுதுஞாயிறுபோற்றுதுங்
காவிரிநாடன்றிகிரிபொற்கோட்டு
மேருவலந்திரிதலான்"

### பாரதம் துரோணபருவம் 2-வது பாடல்.

"காலையாதபனைத்தருமன்மாமதலை
	கைதொழுகடன்முடித்தருளிச்
சாலையார்தழல்செய்வேள்வியந்தணர்க்குத்
	தானமுந்தகுவனவழங்கி
மாலையாமளவிற்றனஞ்சயன்மொழிந்த
	வஞ்சினம்வழுவறமுடிப்பான்
வேலையாரவப்பலபணைமுழங்க
	வெம்முரட்சேனையோடெழுந்தான்"
"பொதியிலாயினுமிமயமாயினும்"

### இராமாவதாரம் கிஷ்கிந்தா நாடவிட்டபடலம் 31.

"தென்றமிழ்நாட்டகன்பொதியில்திருமுனிவன்றமிழ்ச்சங்கஞ்சேர்
	கிற்றீரேல்"

"போதிலார்திருவினாள்புகழுடைவடிவென்றுந்
தீதிலாவடமீனின்றிறமிவடிறமென்று
மாதரார்தொழுதேத்தவயங்கியபெருங்குணத்துக்
காதலாள்பெயர்மன்னுங்கண்ணகியென்பாண்மன்னோ"

### கல்லாடம் 20.

"வடமீன்கற்பினெம்பீடுகெழுமடந்தை"

இராமாவதாரம். அயோ. சித்திரகூட. 16.

"சிலமின்னதென் றருந்ததிக்கருளியதிருவே"

"மண்டேய்த்தபுகழினன்மதிமுகமடவார்தம்
பண்டேய்த்தமொழியினராயத்துப்பாராட்டி"

இராமா. கிஷ்கி. 26.

"வில்லும்வாளுமணிதொறுமின்னிட
மெல்லரிக்குரல்மேகலையார்த்தெழப்
பல்வகைப்புருவக்கொடிபம்பிட
வல்லியாயம்வலத்தினில்வந்ததே"

"இப்பாலிமயத்திருத்தியவாள்வேங்கை
யுப்பாலைப்பொற்கோட்டுழையதாவெப்பாலுஞ்
செருமிகுசினவேற்செம்பிய
னொருதனியாழியுருட்டுவோனெனவே"

இராமா. பால. அரசியல். 11.

"குன்றெனவுயரியகுவவுத்தோளினன்
வென்றியந்திகிரிவெம்பரிதியாமென
வொன்றெனவுலகிடையுலாவிமீமிசை
நின்றுநின்றுயிர்தொறுநெடிதுகாக்குமே"

2-மனையறம்படுத்தகாதை.

73. "மாசறுபொன்னேவலம்புரிமுத்தே
காசறுவிரையேகரும்பேதேனே"

இராமா. பால. பூக்கொய். 31.

"பொன்னேதேனேபூமகளேகாணென்னையென்று"

3-11. "முழங்குகடன்ஞாலமுழுவதும்வரினும்
வழங்கத்தவாவளத்ததாகி"

இராமா. கிஷ்கி. பம்பை. 2.

"குவான்மணித்தடங்தொறும்பவளக்கோலிவர்
கவானரசன்னமும்பெடையுங்காண்டலில்



தவாநெடுவானகந்தயங்குமீனொடும்
உவாமதியுவப்பிலவுதித்ததொப்பது"

12-12. "மயன்விதித்தன்னமணிக்காலமளிமிசை
நெடுநிலைமாடத்திடைநிலத்திருந்துழி"

இராமா. பால. நகர.

"அயின்முகக்குலிசத்தமரர்கோனகரு
மளகையுமென்றிவையயனார்
பயினுறவுற்றபடிபெரும்பாலு
மிப்பெருந்திருநகர்படைப்பான்
மயன்முதற்றெய்வத்தச்சருந்
தத்தமனத்தொழினுணிினர்மறந்தார்
புயனுறுகுடுமிநெடுநிலைமாடத்
திந்நகர்புகலுமாறெவனோ"

26-27. "விரைமலர்வாளியொடுவேனில்வீற்றிருக்கு
நிரைநிலைமாடத்தரமியமேறி"

இராமா. அயோ. மந்திர. 54.

"நீளெழுத்தொடர்வாயினுங்குழையொடுநெகிழ்ந்த
ஆளகத்தினோடரமியத்தலத்தினுமலர்ந்த
வாளரத்தவேல்வண்டொடுகெண்டைகண்மயங்கச்
சாளரத்தினும்பூத்தனதாமரைமலர்கள்"

38. "குழவித்திங்களிமையவரேத்த"

இராமா. அயோத். மந்திர. 6.

"வானின்றிழிந்து...... . .........
........................................
........................................
கானுங்கடலுங்கடந்திமையோரிடுக்கண்காத்தகழல்வேந்தை"

22-25. "அடையார்முனையகத்தமர்மேம்படுநர்க்குப்
படைவழங்குவதோர்பண்புண்டாதலின்

2

னுருவிலாளனேருபெருங்கருப்புவி
லிருகரும்புருவமாகவீக்க"

இராமா. பால. உலா. 22.

"அருப்புமென்முலையாளங்கோராயிழை
இருப்புநெஞ்சினையேனுமொரேழைக்காப்
பொருப்புவில்லைப்பொடிசெய்தபுண்ணியா
கருப்புவில்லிறுத்தாட்கொண்டுகொவென்றாள்"

53-61. குழலும்யாழுமமிழ்துங்குழைத்தநின்
மழலைக்கிளவிக்குவருந்தினவாகியும்"

இராமா. கிஷ்கி. நாடவிட்ட. 62.

"குழல்படைத்தியாழைச்செய்துகுயிலொடுகிளியுங்கூட்டி
மழலையும்பிறவுந்தந்துவடித்தகைம்மலரின்மேலான்
இழைபொருமுலையிருடைனின்சொற்களியையச்செய்தான்
பிழையிலனுவமைகாட்டப்பெற்றிலன்பெறுங்கொலின்னும்

62 64. "நறுமலர்க்கோதைநின்னலம்பாராட்டுநர்
மறுவின்மங்கலவணியேயன்றியும்
பிறிதணியணியப்பெற்றதையெவன்கொல்"

இராமா. பால. நகர. 43.

"குழலிசைமடந்தையர்குதலைக்கோதையர்
மழலையங்குழலிசைமகரயாழிசை
எழிலிசைமடந்தையரின்சொலின்னிசை
பழையர்தஞ்சேரியிற்பொருநர்பாட்டிசை"

67-68. "நானநல்லரிநறும்புகையன்றியு
மான்மதச்சாந்தொடுவந்ததையெவன்கொல்"

பாரத. சபா. இராசசூய. 20.

'நாவியின்மதமுஞ்சாந்துநறும்பனிநீருந்தாரும்
வாவியிற்காவிலுள்ளமலர்களுமற்றும்யாவும்
மேவியவரிவிலாண்மைவிசயனைநல்குகென்றான்
றாவிலைபளிதமேனைத்துணைவரைவழங்கச்சொன்னான்"



75-81. "அலையிடைப்பிறவாவமிழ்தேயென்கோ"

இராமா. அயோத். சித்திரகூட. 5.

"உவரிவாயன்றிப்பாற்கடலுதவியவமுதே"

இன்னும் வரும்.

ஸ்ரீ. சதாசிவம் பிள்ளை,
நாகை நீலலோசனிப் பத்திராதிபர்.

---

# வேளாளர்மரபுஆராய்ச்சி.

இப்பரதகண்டத்தில் சரித்திரகாலத்திற்கு முன்னைகவே உதித்துச் செழித்தோங்கி ஏட்டுவழக்குமட்டிலுமே நில்லாமல் பேச்சு வழக்கிலும் தற்காலத்தியங்கிவருவது தமிழ்ப்பாஷை. இது அகத்தியர் முதலான ஆரியரால் பிற்காலத்து ஆதரிக்கப்பட்டுவந்தாலும் அதற்கு முன்னரும் இதைப்பேசி எழுதிவந்தவர் திராவிடராவர். "இலக்கியத்தினின் றெடுபடு மிலக்கணம்" என்னும் அகத்தியமும், 'எழுத்து' 'சுவடி' என்னும் பதங்கள் ஆரியர் தென்னிந்தியாவிற்குப் போந்ததற்கு முன்னும் இருந்தனவென்னும் பாஷாஞானிகள் கூற்றும் இதற்குச் சான்றாகும். தொல்காப்பியத்திற் கூறப்படும் ஐந்திணை மக்களைநீக்கியும், நகரகத்து வசிப்போரில் ஆரியரைநீக்கியும் கவனிப்போமானால், தமிழ்பேசிய வேளாளர் திராவிடரே யாவர். மேற்குறித்த ஐந்திணைமக்கள் திராவிடர் தென்னிந்தியாவிற்குப் போந்ததற்கு முன்பே ஆங்கிருந்தவர். அவர்கள் பேசியிருந்தபாஷை இன்னதென்று புலப்படவில்லை.

இத்திராவிடராகிய வேளாளர் யாண்டிருந்து தென்னிந்தியாவிற்குப் போந்தனரென்பது இங்கு ஆராய்ச்சியின்று; அவர் போந்தகாலத்து அவருள் சாதிவேறுபாடு இல்லை. பிற்காலத்து, அகத்தியர் முதலிய ஆரியர் வடக்கிருந்து போந்தபின்னரே, தம்முள் ஏற்பட்டிருந்த நால்வருணங்களைத் திராவிடருள்ளும் புகுத்தத் தலைப்பட்டனர்.

இது "மேலோர் மூவர்க்கும் புணர்த்தகரணம், கீழோர்க்காகிய காலமுமுண்டே", "பொய்யும் வழுவுந் தோன்றியகாலை, ஐயர் யாத்தனர் கரணமென்ப" என்னும் 144, 145-ம் பொருளதிகாரச் சூத்திரங்களால் உய்த்துணரப்படும். அக்காலத்து வேளாளர் நால்வருணத் தொழுக்கமும் கொண்டிருந்தாரென்பதை உணர,

"உழுது பயன் கொண் டொலிநிரை யோம்பிப்
பழுதிலாப் பண்டம் பகர்ந்து—முழுதுணர
ஓதி யழல்வழிப்பட் டோம்பாத வீகையா
ஞதி வணிகர்க் கரசு."

என்னும் புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளை நோக்குக. 'முழுதுணரவோதி யழல்வழிப்பட்ட' வேளாளர் 'வைத்திய' ரென வழங்கப்பட்டுப் பிற்காலத்து அழிந்தனர். வருணவேற்பாட்டுக்காலத்தில் வேளாளருள் அந்தணரெனத்தக்கார் இருந்திருப்பினும் பின்னர் அழிந்த காரணத்தால் பிற்காலத்தில் ஆரியரே அப்பட்டத்திற்குரியவராயினர். மன்னர் வகுப்பினருள், முதன்மையாக அக்காலத்தில் தெற்கிலாண்ட முடியுடைவேந்தரையும், இரண்டாவதாக அம்முடியுடை வேந்தர்க்குப் பெண்கொடுத்தலாற் கலந்துவந்த குறுநில மன்னராம் 'வேளிர்' எனப்பட்ட வேளாளரையும் வைத்தனர். இதனை, "மலயமாதவன் நிலங்கடந்த நெடுமுடியண்ணலுழை நரபதியருடன் கொணர்ந்த பதினெண்வகைக் குடிப்பிறந்த வேளிர்" என்னும் 32-ம் பொருளதிகாரச் சூத்திர உரையாலும்; முன்னோர்க்குப் பின்னோர் மகட்படுத்துவந்தமை "நிகர்த்துமேல் வந்த வேந்தரொடு முதுகுடி, மகட்பாடஞ்சிய மகட்பாலானும்" என்னும் 79-ம் பொருளதிகாரச் சூத்திரத்தானும்; இவ்விருவகையோரும் மன்னராந்தன்மை "மன்னர் பின்னோரென்ற பன்மையான், முடியுடையோரும் முடியில்லாதோரும்......இருவகையரென்ப" எனனும் 30-ம் பொருளதிகாரச் சூத்திர உரையாலும் அறிக. ஏனைய வேளாளருள், வாணிகத்தாலும் எண்வகைக் கூலம் பயிரிட்டும் வாழ்ந்துவந்தோரை வணிகரிலும், நெற்பயிரொன்றே பயிரிட்டு வாழ்ந்துவந்தோரை வேள்ளரென நான்காம் வருணத்திலும் வைத்தனர். இதனை, "வைசிகன் பெறுமே வாணிகன் வாழ்க்கை", "வேளாண்மாந்தர்க் குழுதூணல்ல, தில்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" யென்னும் 633, 634-ம் பொருளதிகாரச் சூத்திரங்களானும் பின்னதன் உரையாலுந் தெளிக. எனினும் இவ்விருவகுப்பார்க்கும் வேறுபாடு அதிகமாக இருந்ததில்லை யென்பது பின்குறித்த சூத்திர உரையில் "நிரைகாவலும் உழவுதொழிலும் வணிகர்க்கும் வேளாளர்க்குந் தடுமாறும்...வாணிகவாழ்க்கை வேளாண்மாந்தர்க்குச் சிறுவரவிற்று...உழுதுண்டல் வணிகர்க்குச் சிறுவரவிற்று" என்றவாற்றானும், "வாணிகரையும் வேளாளரையும் வேறு கூறாது 'இருமூன்றுமரபினோ' ரெனக் கூட வோதினர் வழிபாடும் வேள்வியுமொழிந்ததொழில் இருவர்க்கு மொத்தலின்" என்னும் 75-ம் பொருளதிகாரச் சூத்திர உரையாலும் விளங்கும். அன்றியும் பிங்கல முனிவரும் தம் நிகண்டில் 'வேளாளர்' என்னும் பதத்தை வைசியர் பொதுப்பெயருள்ளும் சூத்திரர் பொதுப்பெயருள்ளும் பெய்திருப்பது நோக்குக.



நாலாம் வருணத்தவராகிய வேளாளருள்ளும் இருவகையினருண்டென்ப. இதனை, "உழுவித்துண்போரும் உழுதுண்போருமென... வேளாள ரிருவகையரென்ப...அவருள் உழுவித் துண்போர் மண்டில மாக்களும் தண்டத்தலைவருமாய்...வேளெனவும் அரசு எனவும் உரிமையெய்தினோரும், பாண்டியநாட்டுக் காவிதிப்பட்டமெய்தினோரும், குறுமுடிகுடிப் பிறந்தோர் முதலியோருமாய், முடியுடை வேந்தர்க்கு மகட்கொடைக்குரிய வேளாளராம்" என்னும் 30-ம் பொருளதிகாரச் சூத்திர உரையிற் கூறி இவரை "உயர்ந்த வேளாளர்" என்பர் நச்சினார்க்கினியர். உழுதுண்போர் இழிந்த வேளாளராம்.

இந்நான்காம் வருணத்து 'உயர்ந்தவேளாள'ரே மன்னரில் இரண்டாம் வகையினராகிய 'வேளிர்' ஆவரெனச் சிலர் மயங்குவர். மன்னர்வகையினர் ஆகிய வேளிர்க்கு "உரிய இலக்கணமாவன, தன் பகைவரின் தானேசேறலும், தான் திறைபெற்ற நாடுகாக்கப் பிரிதலும் மன்னர்பாங்கிற் பின்னோரெனப்பட்ட வேளாளரை ஏவிக்கொள்ளுஞ் சிறப்புமாம்." (பொருளதிகாரம் 32-ம் சூத்திர உரை). 'பின்னோரெனப்பட்ட வேளாள' ரென விதந்து கூறினமையின் பிற்குறித்த இருவகை வேளாளரும் வேளிரின் வேறுவரென்பது வெள்ளிடைவிலங்கல். அன்றியும், "வில்லும் வேலும் கழலுங்கண்ணியுந், தாருமாரமும் தேரும் வாளும், மன்பெறுமரபினேனோர்க்குமுரிய" என்னும் 639-ம் பொருளதிகாரச் சூத்திரத்தால் வேளிர்க்குரியன இவை

யென்பதும், "வேந்து விடுதொழிலிற் படையுங் கண்ணியும்" என்னும் 637-ம் சூத்திரத்தால் வேளாளரில் உயர்ந்தார்க்குரியன இவையென்பதும் அவ்வச் சூத்திர உரையாற் பெறப்படும். "பசைபடு பச்சை நெய்தோய்த்து" என்னும் அகப்பாட்டிலும் "விலங்கிருஞ்சிமயக்குன்றத்தும்பர்" என்னும் பழையபாட்டிலும் குறிக்கப்பட்டவர் இரண்டாம் வருணத்து வேளிராவர். 'இருங்கோவேண்மான்', 'அழுந்தூர்வேள்', 'நாங்கூர்வேள்' இவர் நான்காம்வருணத்து உயர்ந்த வேளாளராவர். முன்னவர் 'வேள்சாதி'யரென அங்கீகரிக்கப்பட்டவர்; பின்னவர் அச்சாதியரென அங்கீகரிக்கப்படாவிடினும் 'வேள்' பட்டமும் அதுபோன்ற 'அரசு', 'காவிதி'ப் பட்டமும் பெற்றவராவர். (இக்காலத்துச் 'செட்டிச்சாதி'யிலும் 'தேவாங்குசெட்டி', 'செக்கான்செட்டி' முதலியவற்றிற் காணும் 'செட்டிப்பட்ட'த்திலுமுள்ள வேறுபாட்டினை உற்றுநோக்குக). சாதிப்பெயராகிய 'வேள்', பெயருக்குமுன்வரும்; 'வேள்-ஆய்', 'வேள்-எவ்வி' முதலிய இதற்கு உதாரணமாம். பட்டப்பெயராகிய 'வேள்' பெயரின் பின்னரேவரும். முன்வராது; 'அழும்பில்வேள்', 'இருங்கோவேள்' முதலிய இதற்கு உதாரணமாம். 'வேள்பட்டம்' எய்தினோராகிய நான்காம்வருணத்து உயர்ந்த வேளாளரும் குறுநிலமன்னரைப்போல் நாடாண்டிருத்தல் அமையும்; 'பல்குன்றக்கோட்டத்துச் செங்கண்மா'வில் ஆண்ட 'நன்னன்வேண்மான்' இதற்கு உதாரணமாம். மன்னவர்போலும் செல்வத்தராகி இழிகுலத்தோர் நாடாண்டாராயினும்" என்னும் 640-ம் பொருளதிகாரச் சூத்திர உரையால் இது பெறுதும்.

எனினும், வேள்பட்டமும், வேள் என்னும் சாதிப்பெயரினின்றே வந்ததாதல் வேண்டும். என்னை, திராவிடருள் வருணவேற்பாட்டிற்கு முன், வேளாளர் நால்வருணத்துத் தொழிலையும் செய்துவந்தாரென்பது முன்குறித்த புறப்பொருள் வெண்பாமாலைச் செய்யுளாற் பெற்றும். முதற்கண் அந்தணர்தொழிலோம்பியவேளாளர் ஒழிந்தனர். பின், பிங்கலந்தையில் "வேளிரென்பதுமாங்கவர்மேற்றே" எனக் குறித்த குறுநிலமன்னராம் வேளிர், தம்வள்ளன்மையானிகழ்ந்தபொருமைக் காரணத்தால் பட்டனர். திவாகரத்திற்குறித்த "வேள்புலவரசர்களுக்கு வேந்தரும்" அடுத்தடுத்து நிகழ்ந்த போராலும், சோழவரசர் முதலானோருடன் கொண்ட மணக்கூட்டுறவாலும் தம்பெயர் மாறி



னர்; பன்னிரண்டாம் நூற்றாண்டிற்குப் பிறகு அவர் சரித்திரம் கிடைத்திலது. "வேளாளரிளங்கோக்கள்வைசியர்பொதுப்பெயர்" என்றபடி, பிங்கலமுனிவர் காலத்து வைசியர்க்கு வழங்கிய 'வேளாளப் பெயரும் நாளடைவில் மாறிவிட்டது. தற்காலத்து வேளாளர் நான்காம்வருணத்தவரேயாகி யுள்ளார். அவருள்ளும் 'வேள்' ஆகிய பட்டங்கொண்ட "உயர்ந்த வேளாள"ரும் ஓரிரண்டிடங்களிலேயே காணப்படுகின்றனர். சிலகாலத்தில் "இழிந்தவேளாள"ரினும் வேற்றுமை யொழிவர். பிற்றைய வேளாளரே இக்காலத்து மலிந்து கிடப்பவர்.

இனி, 'வேளாளர்' என்பதன் ரூபாந்தரமாகிய 'வேள்' என்னும் பதம் 'வெல்' என்னும் தாதுவடியாகப் பிறந்ததுபோலும். இதனடியாகப் 'படையில் வெல்லும் வீரன்' என அதற்கு முதற்பொருள் அமைந்தது; கி. பி. பதினோராம் நூற்றாண்டின் முதலில் ஆண்ட முதலாவது இராஜராஜனை நோக்கிய சாசனங்களில் காணும் 'வேளக்காரர்' என்னும் பதத்தில் இப்பொருள் காணலாம். இதனால், 'வேளிர்' என்பது காரண விடுகுறிப் பெயராயிற்று. இதனடியாக வீரரிற் சிறந்த முருகனுக்கு இரண்டாவது பொருளமைந்தது. அடிக்கடி போர்நிகழும் முற்காலத்து இவ்வீரர், வேந்தராலும் மற்றோராலும் உபகாரிகளாக விரும்பப்படுதலின் இப்பதத்திற்கு 'உபகார' மெனவும் 'விருப்ப' மெனவும் வேறிருபொருளும் அமைந்தன. ஆதிவேளிர்களின் வள்ளன்மையும் இதற்குத்துணைப்போந்தது. இவற்றுள் முதலதற்கு, "வேளாண்மை யுபகாரம் ஈகையும் விளம்பும்" என்னும் திவாகரத்தையும், பின்னதற்கு மன்மதனுக்கு 'வேள்' என ஒரு பெயருண்மையும், 'வேட்கை,' 'வேள்வி' என்னும் பதங்களின் பொருளையும் நோக்குக. கடைசியாக, உழுதொழில் ஏனையோர்க்கெல்லாம் உபகாரமாய் நிற்றலின் 'வேளாண்மை' உழுதொழிற்பொருளை மேற்கொண்டது; என்னை,

"உழுதுண்டுவாழ்வாரேவாழ்வார்மற்றெல்லாந்
தொழுதுண்டுபின்செல்பவர்"—திருக்குறள்.

சித்தூர். சுப்பிரமணியாசாரியார், பி. ஏ. எல். டி.
முதலுதவி உபாத்தியாயர்,
லண்டன் மிஷன் ஹைஸ்கூல், சேலம்.

ஸ்ரீ:

# ஆரியரும் தமிழும்.

இப்பேருலகின்கண் புகழ்பெற்ற மொழிகள் பலவற்றுள்ளும் ஆரியமொழி பலவிதத்திலும் பெருமைவாய்ந்ததென்பது மக்களனைவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட தொன்றேயாம். அறம் பொருள் இன்பம் வீடு என்னும் புருஷார்த்தங்களை யறிவிக்கும் நூல்களினால் வடமொழியை ஒத்தும் மிக்கதுமான மொழி வேறு ஒன்றுமின்று என்பதே யாவருடைய துணிபுமாம். ஆயினும் மொழியின் அழகுமுதலியவற்றில் கிரீக் லத்தீன்முதலிய சிலமொழிகள் இதனோடு ஒருபுடை யொப்புடையன என்று மேற்றிசைப்புலவர் சிலர் கூறுவர்.

அத்தகைச் சிறப்புவாய்ந்த ஆரியமொழியினை வால்மீகிமுதலிய முனிபுங்கவர்களும் காளிதாசன்முதலிய புலவர் சிரோமணிகளும் போற்றி வளர்ப்பாராயினர். அவர்களால் அம்மொழிக்குத் தனிமையான அழகு ஒன்று ஏற்படுவதாயிற்று. மற்ற மொழிகளினும் வடமொழிக்கு ஏற்றமுண்டானது இம்மொழி முனிவர்களால் எடுத்தாளப்பட்ட சிறப்பினாலேயாம். மற்ற மொழிகள் அச்சிறப்பினைப் பெறவில்லை என்பது ஒருதலையாம்.

ஆயினும், ஆரியமொழியோ டொப்ப அத்துணைச் சிறந்த தன்றாயினும், தமிழ்மொழி அதனோடு ஒருபுடை யொப்புடைத் தென்பது ஒப்புக்கொள்ள வேண்டிய விஷயமாம். இப்பரதகண்டத்தின்கண் வழங்கும் மொழிகள் பலவற்றுள்ளும் தமிழ்மொழி முனிவர்களின் சம்பந்தம் ஒரு சிறிது ஏற்பட்டுள்ளது என்பதனால் வடமொழிக்கு அடுத்தபடியாக வைத்து எண்ணத்தக்க சிறப்புவாய்ந்த மொழியாம். தமிழ்மொழியை எடுத்தாண்ட ஆரிய முனிவர்கள் வடமொழியின்கண் மிக்க தேர்ச்சிபெற்றவராகக் கருதப்படுபவர்களேயாம். இருமொழியினும் தேர்ச்சிபெற்ற ஆரிய முனிவர்கள் அக்காலத்துத் தென்மொழிச்சங்கத்தில் வீற்றிருந்த புலவர் பெருமக்களுள் சிறப்புவாய்ந்தவர்கள் என்பது தமிழ் மக்களின் அபிப்பிராயமாம். அச்சங்கம் தலை இடைகடைச்சங்கங்களாக மூன்று வேறுகாலங்களில் நிகழ்ந்தன என்பார்கள். அச்சங்கங்கள் நடைபெற்ற காலங்களை யாராய்வது இக்காலத்தவர்களுக்கு



மிகவருமையாம். ஆயினும், கடைச்சங்க காலத்தை யேதோவொருவாறு வரையறுத்து வருகின்றனர்.

நமது ஆராய்ச்சிக்கு எட்டாததூரத்துள்ள தலைச்சங்கத்தில் பல பெரும்புலவர்கள் வீற்றிருந்தனர். அவருள் ஆரிய இருடியரும் இருந்தனர். அவருள் அகத்தியனார் மார்க்கண்டேயனார் வான்மீகனார் கவுதமனார் முதலிய முனிவர்கள் சிறப்புற்றவர்கள். இவர்களால் தமிழில் நூற்கள் இயற்றப்பெற்றிருந்தன. அவை பிற்காலத்து இறந்தொழிந்தன என்று சிலர் எண்ணுவர். ஆயினும் அவர்களாற் செய்யப்பட்ட சிலபாடல்கள் காணக்கிடக்கின்றன.

தமிழ்ப்புலவர்களால் தமிழரசர் பாடப்பெற்றிருத்தல் போலவே வடநாட்டு ஆரியவரசரும் மேலேகூறிய முனிவர்களால் தமிழ்மொழியில் பாடல் பெற்றிருக்கின்றனர். ஆரியமுனிவர்கள் தமிழ்மொழியினை நன்கறிந்திருந்தது போலவே ஆரிய மன்னரும் தமிழினை நன்கறிந்திருந்தனர் என்று கருதவிடமுண்டு. ஆரிய மொழியில் வல்லுநரான முனிவரும் மன்னரும் தமிழ்மொழியை எடுத்தாண்டு கவியரங்கேறினராயின் இத்தமிழ்மொழி எத்துணைச் சிறப்புவாய்ந்தது என்பது நம்மாலியம்பலாம் தகைத்தோ. தமிழ்மொழிக்கு இலக்கணம் செய்தவர்கள் ஆரியமுனிவர்களே. அவர்கள் செய்த இலக்கணமாகிய அஸ்திபாரத்தின் மேலேயே தமிழ்மொழி யின்றளவும் நிலவிவருகின்றது.

வடமொழியை எந்தமுனிவர்கள் சிறந்ததாகக் கருதுகின்றனரோ, வடமொழியில் எந்தமுனிவர்கள் சிறந்தவர்களாகக் கருதப்படுகின்றனரோ, அம்முனிவர்களே தமிழ்மொழியில் இலக்கணமும் நூல்களும் செய்தனராயின் தமிழ்மொழி, தொன்மை தனிமை முதலியவற்றில் வடமொழியோடுறழ்வது என்பதற்கு ஐயமுண்டோ?

தமிழிற்குப் பரமாசாரியரும் இலக்கண வரம்பை நிறுவினவரும் ஆகிய அகத்திய முனிவர் புகழ் வடமொழி தென்மொழி வல்லுநர்களால் அறியப்பட்டதொன்றாம். அவர் மாணாக்கர்களுள் முதன்மை பெற்றவரான தொல்காப்பியர், ஜமதக்னி முனிவர் மகனார் திரணதூமாக்கினியார் ஆவர். இவ்விருவரும் தமிழிற்கு இலக்கணம்செய்த ஆரியமுனிவராவர். 'அகத்தியரால் செய்யப்பட்ட இலக்கணநூல் இக்காலத்தில் சிற்சில சூத்திரங்கள் தவிரப் பெரும்பாலனவற்றால் இறந்

தொழிந்ததாம். திரணதூமாக்கினியாரால் செய்யப்பட்ட தொல்காப்பியமே நிறைந்த விலக்கணமாக விளங்குகின்றது.

இனி, மார்க்கண்டேயனார் வான்மீகனார் கவுதமனார் முதலாயவர்கள் செய்த நூலைத் தலையாய ஓத்து என்று தொல்காப்பியம் புறத்திணையியல், “அறுவகைப்பட்ட பார்ப்பனப்பக்கமும்” (20) என்னும் சூத்திரவுரையில் நச்சினார்க்கினியர் கூறியிருக்கின்றார். அம்முனிவர்களால் செய்யப்பட்ட நூல்கள் இக்காலத்து அரிதாயினமையின் அவற்றைப் பற்றி நாம் ஒன்றும் கூறுவதற்கில்லை. ஆயினும் அவர்கள் செய்தனவாக இரண்டொரு செய்யுட்கள் புறப்பாட்டில் காணக்கிடக்கின்றன. அவருள் மார்க்கண்டேயனார் பாடியதாக:—

“மயங்கிருங்கருவியவிசும்புமுகனும்
இயங்கியவிருசுடர்கண்ணெனப்பெயரிய
வளியிடைவழங்காவழக்கருநீத்தம்
வயிரக்குரட்டின்வயங்குமணியார்த்துப்
பொன்னந்திகிரிமுன்சமத்துருட்டிப்
பொருநர்க்காணாச்செருமிகுமுன்பின்
முன்னோர்செல்லவுஞ்செல்லாதின்னும்
விலைநலப்பெண்டிரிற்பலர்மீக்கூற
உள்ளேன்வாழியர்யானெனப்பன்மாண்
நிலமகளழுதகாஞ்சியும்
உண்டெனவுரைப்பராலுணர்ந்திசினோரே”

என்று காணப்படும் செய்யுளின் பொருள் மிக வருமையானதாம். “நிலமகள் உலகமுழுதும் தமதேயாகத்தனிக்கோலோச்சி யென்னை யாண்ட சக்கரவர்த்திகள் இறந்து படவும் யானும் பத்தினிப்பெண்டிர் போல அவருடன் இறவாது விலைநலப்பெண்டிர்போல இருக்கின்றேனே என்று அழுதனள்” என்று முனிவர் கூறியிருப்பது அறிஞரின் கருத்தை யபகரிக்கும் என்றே கருதுகின்றேன்.

இனிக் கோதமனார் என்னும் முனிவர் கூறியதாகவுள்ள செய்யுளின் அடிகளிற் சில சிதைவுற்றிருத்தலின் அச்செய்யுளின் பொருளை யறிந்து கூறுவது முடியாததாக இருக்கின்றது. ஆயினும் பொதுவாக அச்செய்யுள் யாக்கை நிலையாமையைக்கூறி சில வறங்களை வற்புறுத்து



கின்றது. இக்கோதமனார், மேலே கூறிய பொருள்பொதிந்த செய்யுட்கண் பாண்டவரைவரில் ஒருவனான தருமபுத்திரனை “அறவோன் மகனே” என்று விளித்து நிலையாமையைக் கூறுகின்றார். அதனால் யான் முன்னர்க் கூறியபடி ஆரியமுனிவர், வடமொழியிற்போலவே, தென்மொழியையும் வடமொழியோ டொப்பக்கருதி அதன்கட்பாடும் திறமை வாய்ந்திருந்தனர்; என்பதனோடு, ஆரியாவர்த்தத்தை யாண்ட மன்னர்களும் தமிழினையறிந்து அதன்கட்புலமைநிரம்பியிருந்தனர். என்பது தெய்வீகம் பொருந்தினவனான தரும புத்திரனை விளித்துக் கௌதமனார் பாடிய பாடலாலறியக் கிடக்கின்றது. இன்னும் ஆரியவரசர். தமிழினைச் சுவைத்தறிய அவாவுடையராயிருந்தனர் என்பதைக் குறிஞ்சிப்பாட்டினானறிக.

இனி வான்மீகமுனிவர்,

“பருதிசூழ்ந்தவிப்பயங்கெழுமாநிலம்
ஒருபகலெழுவரெய்தியற்றே
வையமுந்தவமுந்தூக்கிற்றவத்துக்கு
ஐயவியனைத்துமாற்றாதாகலிற்
கைவிட்டனரேகாதலரதனால்
விட்டோரைவிடாஅள்திருவே
விடாதோரிவள்விடப்பட்டோரே”

என்னும் புறப்பாடலில் மனையறத்தையும் துறவறத்தையும் சீர்தூக்கித் துறவறமே யுயர்ந்தது என்று தமது கருத்தை இனிய எளிய செய்யுள்நடையில் விளக்கியிருப்பதைக் கருதும்பொழுது அம்முனிவராற் செய்யப்பட்ட ஆதிகாவ்யமாகிய ஸ்ரீமத் ராமாயணத்தின் ஞாபகம் உதிக்கின்றது. அம்முனிவர்; தமது இராமாயணத்தில் பாண்டியர்களின் தலைநகரும் இடைச்சங்கமிருந்தவிடமும் ஆகிய கபாடபுரத்தை, சுக்கிரீவன் வானரசேனையைத் தென்றிசைக்கனுப்பும்போது அவர்களை நோக்கிக் கூறியதாகக் கூறுவதால் இவருக்குத் தமிழ்நாட்டில் எவ்வளவு அனுபவம் உண்டு என்பது யாவர்க்கும் தெளிவாம். அன்றியும் இவர் இராமாயணத்தில் மாரீசன் இராவணனிடத்தில் ஸ்ரீராமன் பராக்கிரமத்தைக் கூறுவதாகக் கூறுமிடத்தில் “ரகாரராக்ஷீ நீநாரோநி” என்று ர வென்னுமெழுத்துக்குக் காரச்சாரியை கொடுப்பதால் தமிழ் வழக்கில் மிகுதியும் பயின்றவர் என்று

கூறலாம். வடமொழியாளர் ர என்னும் எழுத்தை ரேபம் என்று வழங்குவார்கள். வால்மீகமுனிவர் காரச்சாரியை கொடுத்ததை வடமொழியாளர் ஆரிடம் என்று கூறுவர்.

ஆரியமொழியிலே பயின்று தேர்ச்சிபெற்ற முனிவர்கள் தமிழ்மொழியையும் ஆதரித்திருக்கின்றனர். பரதகண்டத்தின்கண் வழங்கும் மொழிகள் பலவற்றுள்ளும் வடமொழியோடொப்ப முனிவர்களின் ஆதரவுபெற்றிருந்தலின் தமிழ் ஆரியமொழிபோலவே தொன்மைவாய்ந்த தனிமொழியாம். இதுதான் நமது முன்னோர்கள் கருத்தென்பதை, "செந்திறத்த தமிழ் என்கையாலே ஆகஸ்தியமுமநாதி" ஆசார்ய ஹ்ருதயம் முதல் பிரகரணம் (41) என்பதனாலும் அதன் வியாக்கியானம் "அப்படிச்சொல்லலாமோ? ஸம்ஸ்க்ருத பாஷைபோல த்ராவிடபாஷை யநாதியன்றே ஆகஸ்த்யமன்றோ விது" என்னச் சொல்கிறது. "செந்திறத் தமிழோசை வடசொல்லாகி" என்று சம்ஸ்கிருதத்தோடே ஸஹபடிதமும் பிரதமோக்தமுமாகையாலே, அகஸ்தியப்ரகாசிதமான மாத்ரம்கொண்டு ஆகஸ்தியமென்று சொல்லப்படுகிற திராவிடமும் அநாதியாயுள்ளதென்கை. இத்தா லநாதித்வம் ஸம்ஸ்க்ருத திராவிட சாதாரணமென்றதாயிற்று" என்று இருப்பதனாலும் அறியலாம்.

இத்துணையும் கூறியவாற்றால், தமிழ் ஆரிய மொழிபோலவே முனிவர்களின் கருத்தை யபகரிக்கும் இனிமைவாய்ந்த மொழியென்பது தெளிவாம். அதனானே இப்பரதகண்டத்தின்கண் வழங்கும் மொழிகளில் தமிழ் ஆரியத்திற்கு அடுத்து எண்ணத்தகுந்த மொழியாம். இவ்விரண்டு மொழிகளிலும் ஆரியம் நூல்வழக்கில்மட்டும் இருத்தலின் நூல் வழக்கிலும், உலகவழக்கத்திலுமுள்ள தமிழே மற்றெல்லாமொழிகளினும் தலைமைவாய்ந்தது என்பது எனது ஒருதலையான கருத்தாம்.

இன்னும் மேலேகூறிய ஆராய்ச்சியின் பயனாகத் தலைச்சங்ககாலத்தையும், ஒருவாறு வற்புறுத்தலாம் என்று காண்கிறது. ஸ்ரீ. உ. வே. மு. இராகவையங்காரவர்கள் தலைச்சங்கம் பாரதகாலத்தையொட்டியிருந்தது என்று கூறுவர். யானும் அதனையே வற்புறுத்துவேன்.



கோதமனார் நச்சினார்க்கினியரால் தலைச்சங்கப் புலவராகக் கருதப்பட்டவர் அவர் தருமபுத்திரனைப் பாடியிருக்கின்றார். அத்தருமபுத்திரன் தன்னிகரில்லாத் தலைவனாகப் பாரதயுத்தத்தில் விளங்கியவன். தருமபுத்திரனைப் பாடிய கோதமனார் தலைச்சங்கத்தவராகக் கருதப்பட்டபடியால் தலைச்சங்கம் பாரதகாலத்தையொட்டியிருந்தது என்று துணிந்து கூறலாம். அங்ஙனமாயின் தலைச்சங்கத்தவராகக் கருதப்பட்ட வான்மீகமுனிவர் இடைச்சங்கத்துக் கபாடபுரத்தைத் தமது நூலில் கூறியிருக்கின்றனரே யெனின், இவர்காலத்துத் தலைச்சங்கம் அழிவுற்று இடைச்சங்கம் கபாடபுரத்தில் தொடங்கப்பட்டதாகலின் இவர் கபாடபுரத்தைத் தமது நூலில் குறித்தனராம்.

எனவே ஆரியமுனிவர்களுக்கும் தமிழிற்கும் உள்ள சம்பந்தமும் தலைச்சங்ககால பாரதகாலத்தை யடுத்தது என்பது கூறப்பட்டதாம்.

தமிழ்ச்சங்கத்து மாணவன்,
சு. ஸ்ரீநிவாசன்.

---

# தமிழரும்போர்னியோதீவும்.

சிலப்பதிகாரம் மணிமேகலை என்னும் நூல்களில், தமிழ்மக்கள் சாவகம் முதலான தேயங்களுக்கும் சென்றுவருவதுண்டு என்று படித்துள்ளோம். இக்கால நாகரிக மேம்பாடுடையார் பலர் நீவிர் சொல்வது வெறுங்கதையேயன்றி வேறொன்றுமில்லை. அங்ஙனமாயின் கல்வெட்டு, சிலாசாஸனம், தாமிரப் பட்டயம், செப்பேடுமுதலிய பிரமாணங்களேதேனுமுண்டா? அல்லது பாஷை யொற்றுமை யுண்டா என்னும் வினாக்களையெழுப்பி நாம் அதிகமாகச் சொல்லமாட்டாமையால் தமிழுக்கோ ஒரு தாழ்வையும் ஏற்படுத்தமுயல்கின்றனர். அப்படி யிருக்கும்பொழுது, இப்பொழுது சாவகத்துக்கு (Java)ச் சமீபமாயுள்ள கீழ்போர்னியோ வென்னுந்தீவில் 4 சிலா லிகிதங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அக்கற்கள் படேவியா சிற்ப கலாசங்கத்திற்கு கயத்தே (Koete,) சூல்தானால் இனமாக அளிக்கப்பட்டிருக்கிறது. இக்கல்லானது 1879-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டு அதன்பிரதிகள் எடுக்கப்பட்டு முன்னம் நம்நாட்டில் கல்வெட்டுப் பரிசோதகராயிருந்

J. Ph. வோகல் (Vogel) என்பவரால் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருக்கும் விசேஷமென்னவென்றால் இச்சாஸனங்கள் நமக்கு உரித்தான கிரந்தாக்ஷரங்களில் பொறிக்கப்பட்டிருக்கின்றன வென்பது. அவைகளை ஈண்டு குறிக்கின்றேன்.

I.

1. ஸ்ரீமத: ஸ்ரீநரேந்த்ரஸ்ய 2. குண்டுங்கஸ்ய மஹாத்மந: 3 புத்ரோஸ்வவர்ம்மோ விக்யாத: 4. வம்ஸகர்த்தா யதாம்ஸுமாந். 5. தஸ்ய புத்ரா மஹாத்மாந: 6. த்ரயஸ்த்ரய இவாக்நய: 7. தேஷாம் த்ரயாணாம் ப்ரவர: 8. தபோபலதமாந்வித: 9. ஸ்ரீமூலவர்ம்மா ராஜேந்த்ரோ 10. யஷ்ட்வா பஹுஸுவர்ணகம் 11. தஸ்ய யஜ்ஞஸ்ய யூபோயம் 12. த்விஜேந்த்ரைஸ்ஸம்ப்ரகல்பித:

இதன்பொருள்.

ஸ்ரீமத: - ஐசுவரியமுடையவனும்
நரேந்த்ரஸ்ய - மனிதருள்சிரேஷ்டனாகிய ராஜாவான
மஹாத்மந: - கௌரவம்தங்கிய
குண்டுங்கஸ்ய - குண்டுங்கனுக்கு
யதாம்ஸுமாந் - சூரியனைப்போல
வம்ஸகர்த்தா - வம்சத்தைவிருத்திசெய்கிற
அஸ்வவர்ம்மோ விக்யாத: - அசுவவர்மாஎன்னு நாமமுடைய கீர்த்திமான்
புத்ர: - புத்திரனாவான்
தஸ்ய - அவனுக்கு (அசுவவர்மாவுக்கு)
மஹாத்மாந: - கௌரவந்தங்கியவர்களாயும்
த்ரய அக்நய இவ - முத்தீயையொத்த
த்ரய: புத்ரா: - மூன்று குமாரர்கள் (உண்டு)
தேஷாம் த்ரயாணாம் - அந்த மூவருள்
ப்ரவர: - மூத்தவன்
தபோபலதமாந்வித: - தபசு, பலம், மனவடக்கம் முதலிய குணங்களெல்லாம் அமையப்பெற்றவன்
ராஜேந்த்ர: - அரசர்க்கரசனான
ஸ்ரீமூலவர்ம்மா - மூலவர்மன்



பஹுஸுவர்ணகம் - வெகுஸுவர்ணகம்என்னும்யாகத்தை
யஷ்ட்வா - செய்து
தஸ்ய யஜ்ஞஸ்ய - அந்த யாகத்துக்கு
அயம் - இந்த
யூப: - யூபஸ்தம்பமானது
த்விஜேந்த்ரை: - பிராமணர்களுள் சிரேஷ்டமானவர்களாலே
ஸம்ப்ரகல்பித: - ஏற்படுத்தப்பட்டது

II.

1. ஸ்ரீமதோ ந்ருபமுக்யஸ்ய 2 ராஜ்ஞ: ஸ்ரீமூலவர்ம்மண: 3. தாநம் புண்யதமே க்ஷேத்ரே 4, யத்தத்தம் வப்ரகேஸ்வரே 5. த்விஜாதிப்யோக்நிகல்பேப்ய: 6. விம்ஸதிர்க்கோஸஹஸ்ரிகம் 7. தஸ்ய புண்யஸ்ய யூபோயம் 8. க்ருதோ விப்ரைரிஹாகதை:

ஸ்ரீமத: - மகிமைபொருந்திய
ந்ருபமுக்யஸ்ய - அரசர்களுள் முக்கியமான
ஸ்ரீமூலவர்ம்மண: - ஸ்ரீமூலவர்மா என்னும் பெயரையுடைய
ராஜ்ஞ: - அரசனுக்கு
வப்ரகேஸ்வரே - வப்ரகேசுவரம் (என்னும்)
புண்யதமே - சிலாக்கியமான புண்ணியம்வாய்ந்த
க்ஷேத்ரே - க்ஷேத்திரத்தில்
யத் - யாதொரு
தாநம் - தானம்
தத்தம் - கொடுக்கப்பட்டதோ (அது)
அக்நிகல்பேப்ய: - யாகாக்கினிக்குச்சமானமான
த்விஜாதிப்ய: - பிராமணர்களுக்கு
கோஸஹஸ்ரிகம் - 1000-பசுக்கள்
தஸ்ய புண்யஸ்ய - இந்தப்புண்யத்திற்காக
அயம் - இந்த
யூப: - ஸ்தம்பம்
இஹாகதை: - இங்கேவந்த
விப்ரை: - பிராமணர்களால்
க்ருத: - செய்யப்பட்டது.

## III.

1. ஸ்ரீமத்விராஜகீர்த்தே: 2. ராஜ்ஞ: ஸ்ரீமூலவர்மண: 3. புண்யம் ஶ்ருண்வந்து விப்ராத்யா: 4. யேசாந்யே ஸாதவ: 5. பஹுதானம் ஜீவதானம் 6 ஸகல்பவ்ருக்ஷம் ஸபூமிகம் 7. தாநஸ்தேஷாம் புண்யார்த்தம் 8 யூபோயம்ஸ்தாபிதோவிப்ரை: †

### இதன் பொருள்.

ஸ்ரீமத் - மகிமைபொருந்திய
விராஜகீர்த்தே: - விளங்குகிற கீர்த்தியையுடைய
ஸ்ரீமூலவர்மண: - ஸ்ரீமூலவர்மா என்னும் பெயரையுடைய
ராஜ்ஞ: ராஜாவினுடைய
புண்யம் - புண்யத்தை
விப்ராத்யா: - பிராமணர்முதலானவர்களும்
யேசாந்யே - மற்றுமுள்ள
ஸாதவ:பும்ஸோ - சாதுக்களான புருஷர்களும்
ஶ்ருண்வந்து - கேட்கட்டும்

(அவை யென்னவெனில்.)

பஹுதானம் - கணக்கற்ற திரவியங்களையும்
ஜீவதானம் - அநேக பசுமுதலியவைகளையும்
ஸபூமிகம் - பூமியோடுகூடிய
கல்பவ்ருக்ஷம் - தெங்கஞ்சோலைகளையும்
தேஷாம் - கொடுத்தலாம்.
தாநஸ் - இப்படிப்பட்ட தானங்களாலுண்டான
புண்யார்த்தம் - புண்யத்திற்காக
அயம் - இந்த
யூப: - ஸ்தம்பம்
விப்ரை: - பிராமணர்களால்
ஸ்தாபித: - நாட்டப்பட்டது.

இலக்கணவிளக்கபரம்பரை,
திருவாரூர், சோமசுந்தரதேசிகன்.

---

† ஸ்தாபிதோத்விஜை: என்று இருந்தால் சந்தம்சரியாகவருமென்பர்.

# நன்னூற்சூத்திரவமைதி.

(1) இடுகுறி இடுகுறியை உணர்த்துவன.
(உ-ம்) மரம், செடி.

(2) காரணம் காரணத்தை உணர்த்துவன.
(உ-ம்) பொன்னுடையானுக்கு இயற்கையிலேயே பொன்னன் என்றபெயர் அமைந்து வருவது போன்றவை.

(3) இடுகுறிகாரணத்தை உணர்த்துவன.
(உ-ம்) சாத்தன் என்னும் இயற்பெயரினன் பொன்னுடையானுயவழி அவனைச்சாத்தன் என்றழைக்கும் குறிப்பால் பொன்னன் என்று அறிந்து கொள்வது போன்றவை.

(4) காரணம் இடுகுறியை உணர்த்துவன.
(உ-ம்) பொன்னுடையானுக்குப் பொன்னன் என்ற பெயர் அமைந்தாலும் அப்பெயர்கொண்டு அவனைப்பொன்னுடையானெனக் கொள்ளாமை போன்றவை.

(5) இடுகுறியும் இடுகுறியும் இயைந்துணர்த்துவன.
(உ-ம்) துவரைவடை.

(6) இடுகுறியும் காரணமும் அமைந்து உணர்த்துவன.
(உ-ம்) அவரை வற்றல்.

(7) காரணமும் இடுகுறியும் அமைந்துணர்த்துவன.
(உ-ம்) கொத்தவரை, ஓடாவையம்

(8) காரணமும் காரணமும் இயைந்துணர்த்துவன
(உ-ம்) முள்ளிவற்றல்.

(9) காரணமும் இடுகுறியும் அமைந்து பிறிது பொருளுணர்த்துவன.
(உ-ம்) வடாமாலை, பாயாவேங்கை இதனையும் இது போன்ற பிறவற்றையும் சேர்த்தாலும் மேற்காட்டியவற்றுள் அடக்கினாலும் முறையேயாகும். காரணமும் காரணமும் இயைந்தும் காரணமே இயைந்தும் இடுகுறியே

இவைந்தும் பிரிது ஒரு பொருளை உணர்த்துவன அறிக. அவற்றிற்கெல்லாமுதாரணம் வந்தவழிக் கண்டுகொள்க.

(10) இவ்விடுகுறிகாரணப் பெயர் இவ்வளவிற்கு மேலாகப் பலபடி இயைந்துணர்த்துவன.

(உ-ம்) வந்தவழிக் கண்டுகொள்க.

இவை பூ, தம்பி, பிள்ளை என்பவைபோலப் பொதுவாகியும், தனித்தாயினும், அடையடுத்தாயினும் இவையேவந்து சிறப்பாகியும் ஏற்றபெற்றியாகப் பிறவாறாகியும் பொருள்களுக்குப் பெயர்களாய் அமைந்து வருமென்றுணர்க. இக்காட்டியவைகளெல்லாம் ஆகுபெயர்முதலியவற்றிற்குள்ளும் சில அடங்குமாதலிற் குற்றமென்றல் அறியாமை யாகுமெனத் தெளிக.

இவைகட்கு நன்னூலார்காட்டிய "இடுகுறிகாரணப்பெயர்" என்ற சூத்திரமும் அதனுக்குப் பலர்வகுத்த உரைகளும் குன்றக்கூறலாயும் மற்றொன்றுவிரித்தலாயும் நின்றுபயனின்மையாயும் அடங்குவன காண்க.

"ஐ, ஔ இ உச்செறிய முதலெழுத் திவ்விரண் டோரினமாய் வரன்முறையே.

இனமில்லாத ஐகார ஔகாரங்கள் ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகாரங்களைத் தமக்கும் இனமாகப்பொருந்த முதலெழுத்துக்கள் ஓரினமாய் வருதல்முறை" எனப் பிற்காலத்தார் மயிலைநாதருரையைத்தழுவிச் சுருங்கச் சொல்லலையும் ஏற்புழிக்கோடலையும் சேர்த்துப் புதுக்குவாராயினர்.

இடையினத்தை விலக்காததும் குறிநெடிலும், வலிமெலியும் இனமாம் எனவும் விரிக்காதபொழுது இச்சூத்திரம் குன்றக் கூறலாய் முடியும் என்றறிக.

யாம் நன்னூலாரிடத்து எட்டுணையேனும் வெறுப்புடையேமல்லேம் ஆதலாலும் பிறர்போலப் பகைகொளாதுமல் நண்புபாராட்டி உண்மை முதலியவற்றை ஏற்றபெற்றியாக் கொள்ளுந் தன்மையுடையேம் அல்லேம் ஆதலாலும் இவ்



வருமைச் சூத்திரத்தின் உட்பொருளை எமக்கறிந்தவாறு ஒரு சிறிது கூறுதும்.

இனமில்லாத நெடில்களாகிய ஐகார ஔகாரங்களுக்குக் குறில்களாகிய இகர உகரங்கள் இனமாகப் பொருந்தும்படி வருதலும் இவ்விரண்டு எழுத்துக்களைப்போல முதலெழுத்துக்கள் இனமாகிவருதலும் முறைமையாகுமென்க. இவ்விரண்டு = உவமவுருபு தொக்கது.

குறிலினுக்கு நெடில் உயிருள் இனமென்றால் மெய்யுள் மெல்லினத்திற்கு வல்லினம் இனமென்று தானேபெறப்படும். எவ்வாறு என்றால் கூறுதும்.

குறியது நெடியது என்பவைபோலவே மெலியது வலியது என்பவையாகும். ஆகும்பொழுது குறியது நெடியதனுக்கு இனம் என்று குறிப்பிட்டால் மெலியதிற்கு வலியது இனம் என்பது தானே பெறப்படும் என்க. இனிக் குற்றெழுத்து இல்லாத ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனமாகும் என்றாற் போதுமானது. எங்ஙனம் என்றால் ஐ ஔ நெடியன அவைகட்குக் குறியனவில்லை ஆதலால் இகரவுகரங்களை இனமாகக்கொள்க எனின் நெடியதுவே குறியதிற்கு இனம் எனவும், நெடியதுவுங் குறியதுவும் இனமாகும் பொழுது மெலியதுவும் வலியதுவும் இனமாகும் எனவும், குறியது வில்லா ஐகார ஔகாரங்களுக்கு இனங்காட்டி இடையதுவுக்கு இனங்காட்டாதபொழுது இடையதனுக்கு இனம் இல்லையெனவும் இருந்தால் ஐகார ஔகாரங்களுக்குக் குறிப்பிட்ட வண்ணமே குறிப்பிட்டிருக்குமெனவும் கண்டுகொள்க.

இவற்றால் அவருரைகளெல்லாம் போலியுரை என்க.

இங்ஙனம்

நவநீதகிருஷ்ணபாரதி
தலைமைத் தமிழ்பண்டிதன்
ஸ்ரீராமநாதவித்யாலயம்
சுன்னாகம், யாழ்ப்பாணம்.

7—6—1919.

ஸ்ரீ

# பிழைதிருத்தம்.

இந்த, கஎ—ம் தொகுதியில் பக்கம் 384. வரி 14 தொடங்கி மாந்தர்கூறீர் என்றது விளிமாத்திரத்தில் "ஆருமருவுமீரொடுசிவனு மென்ற சூத்திரவிதியால் மாந்தீர் என்று பிரயோகமில்லாத அநிஷ்ட ரூபமாய் விளியேற்கவேண்டுமாதலால் அங்ஙனம் வேண்டாவடிவை யொழித்து வழக்குநோக்கி வேண்டியவடிவாகிய மாந்தர் என்னும் இயல்புவிளியே இங்கமைக்கவேண்டியதாயிற்று; என்பவற்றை யொழித்து, மாந்தர்கூறீர் என்றது, விளிமாத்திரத்தில் எஞ்சிய விரண்டின் என்னும் சூத்திரவிதியால் மாந்தீர் என நித்தியமாய் ஈற்றயல்நீட்டமே பெறுவது அருகியவழக்காதலால், அதற்குப் பெருவழக்காகிய இயல்பும்கொள்ளவேண்டி இச்சூத்திரத்திலேசினுன் விகற்பிக்கப்பட்டது என வுரைத்துக்கொள்ளற்பாற்று. இவ்வாறே 385-ம் பக்கம் 2-ம் வரிதொடங்கி கடவுள்வாழி யென்பதற்கும் மாற்றியுரைத்துக்கொள்க.

393-ம் பக்கத்தில் 13, 15-ம் வரிகளில் இருதி என்றிருப்பவற்றை இறுதி என்று திருத்திக்கொள்க. 404-ம் பக்கம் 4-ம் வரியில் முன்னுறை என்றிருப்பதை முன்னுரை எனவும், 452-ம் பக்கம் 23-ம் வரியில் மாணுளன் என்பதை மணுளன் எனவும், 453-ம் பக்கம் 17-ம் வரியில் ஓட்டிய என்பதை ஒட்டிய எனவும், 454-ம் பக்கம் 23-ம் வரியில் செல்லிய என்பதை சொல்லிய எனவும் ஷை பக்கம் 29-ம் வரியில் சோல்லே என்பதைச் சொல்லே எனவும், 456-ம் பக்கம் 5-ம் வரியில் திரமினே என்பதைத் திறமினே எனவும் ஷை பக்கம் 12-ம் வரியில் குமர என்பதை குமார எனவும், ஷை பக்கம் 14-ம் வரியில் இமம என்பதை இமய எனவும் திருத்திக்கொள்க. பிறவுமன்ன.

---

பிழைதிருத்தம்.

செந்தமிழ் (தொகுதி—கஎ, பகுதி—க0, பக்கம் சஅ௨, வரி-கச)

உட்பற்றின்மையும் என்றதோடு "பிறவும் உடையார் அம்மையிலே நாதலை உயர்த்திக் கூறுவார் என்பது எனக் கூட்டிப்படிக்க.

இங்ஙனம்,

K. S. நவநீதகிருஷ்ணபாரதி.



கடவுள் துணை.

# குணப்பத்து.*

---

பெற்றோர்ப் புகழ்ந்தவரைப் பேணிப் புரந்தருதல்
கற்றோர்க் கடங்கிநிதங் கற்றுவா—னுற்றோ
ரெவருமகிழ் வெய்த விசைத்த விவற்றைக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (க)

அடியவர்மாட் டன்புற் றடங்கி நடத்தல்
கடவுளை நம்பிக் கரைதல்—திடமாய்த்
தவமுயன்று தக்கதொன்றைச் சார்த லிவற்றைக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (உ)

உயிரொன் றிரண்டுண் டெனவெண நட்டல்
செயிரேது மின்றித் திகழ்த—லயிரா
திவர்நமரா மென்ன விருத்த லிவற்றைக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (ங)

மன்னுயிரைத் தம்முயிரென் றெண்ணி மகிழ்ந்தருள
லுன்னியதை யுள்ளபடி யோர்ந்துரைத்தல்—முன்னின்
றவமியற்றி னோர்க்குமமை வாக்க லிவற்றைக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (ச)

தாம்பிறந்த தேசத்தைத் தந்நாட்டைத் தம்மூரைத்
தாம்பகர்ந்த பாஷையைத் தம்மவரைத்—தாம்பல்
லவர்முனுரைத் தாக்க லளித்த லிவற்றைக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (ரு)

எந்தக் குலத்தவரோ யானுலு மென்றுமவ
ரந்தக் குலத்தவரி னொன்றுழுகல்—வந்த
வவமதிப்பை நீக்கலுயர் வாக்க லிவற்றைக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (சு)

---

* இதனை, ஆக்கியோர் அனுமதியின்றி எவரும் பிரசுரித்தல் கூடாது.

இழிந்த குலமுடையார்க் கேற்றங் கொடுத்த
லொழிந்த வுளமடைவா னாக்கல்—மொழிந்த
தவற்றிற்குத் தம்மைத்தாந் தாக்க லிவற்றைக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (௭)

உண்மை யுரைத்த லுயர்வுள்ள லுற்றடைவா
ரெண்மை யிவர்க்காண்ட லென் றுரைப்பான்—கண்மு
னவலரயலைழத் தன்பா யளாவ லிவற்லைறக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (௮)

முந்த முயறல் முனிவகற்றல் முன்கடவுள்
தந்த பொருளதனைத் தம்முன்னே—வந்தோர்க்
கிவறகற்றி யாண்டுமினி தீத லிவற்றைக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (௯)

வந்தன கொண்டு மகிழ்ந்திருத்தல் மற்றெவர்க்கும்
வந்தனை செய்து வரப்பயிற—லெந்த
வுவர்ப்பிற்கு முள்ளுடையா னாக்க லிவற்லைறக்
குவலயத்தோர் கொள்ளல் குணம். (௧௦)

சுபம்

கும்பகோணம் } வேங்கடராம ஐயன்,
7—7—17. } தண்டமிழ்த் தொண்டன்.

# பிழை திருத்தம்.

சென்ற வைகாசிப்பகுதியாக வெளியான செந்தமிழ்ப்பகுதி 7-ல் 'பெரியபுராணவாராய்ச்சி' என்ற தலைப்பின் கீழ்க்கண்டவிடயம் யானெழுதியபடி அச்சிட்டிருப்பதில் வசனநடையில் அநேக பிழைகள் இப்போது புலப்படுகின்றன. அவைகளைப் பெரியார் திருத்தி வாசித்துக் கொள்வார்களாயினும் அதிகமெனக்கண்ட பாடல்கள் பிழையுடன் அச்சேறியபடியாற் பிழைதிருத்தி மீண்டுமொருமுறை பதிக்கின்றேன்.

வன்றொண்டர்காதல்கண்டுமழவிடையுடையார்தாமு
முன்றொண்டராகவாண்டமுதனம்பியாரூரற்குச்
சென்றங்குப்போற்றமிக்கதிருத்தொண்டர்தம்பாற்சேர
வொன்றும்பண்பருளவேண்டியொருதொண்டர்வெருளச்செய்தார். ()



பெருந்தவத்தொண்டரானபெருவிறன்மிண்டரென்பா
ரிருந்தவக்குழாத்தினின் றுமெதிர்செயிர்த்தெழுந்துநின்ற
வருந்தவப்பெரியோர்தம்மைப்பணிந்தணையாதுபோன
வருந்தவனுடையவேடமற்றிவனார்கொலென்று. (19

வேறு

பக்கமேவருவார்கள்பலருடன்
புக்கபோதுபொருவிறன்மிண்டர்தா
மிக்கெழுந்தவெகுளியானம்பிபாற்
றக்கவல்லனசாலவுஞ்சொல்லினர். (19

சொன்னதொண்டரைநோக்கிமெய்த்தொண்டரான்
மன்னிநீடுவளர்பெருங்கூட்டத்து
முன்னிருந்தாரொருவர்மொழிகின்றா
ரின்னல்சொல்லலியல்பல்லவாமென்று. (19

ஓலைகாட்டியுடையவர்முன்னின்று
ஞாலமேற்கவாட்கொண்டநம்பியைச்
சீலமுன்பறியாதிவைசெப்பினீர்
கோலமேநண்டுகூறலாமோவென்றார். (19

என்றுகூறவிகழ்ந்துவிறன்மிண்டர்
நன்றுசாலவுநம்பெருமக்கள்வந்
தொன்றுகூட்டமுணராவொருவனை
யன்றுதம்பிரானாளவழக்கில். (19

கருந்தடங்கண்ணிபாகர்தங்காதல்கூ
ழருந்தவத்தடியாரையணைவின்றி
புரிந்தபண்பினிற்றார்த்தன்புறகெனு
விருந்ததொண்டரிருக்கைசார்தலும். (19

வெம்பிநீர்மொழியேல்விறன்மிண்டரே
நம்பியாரூரர்காணுமநாயனு
ரம்பொன்மாளிகையாரூரமர்ந்தரு
டம்பிரான்றோழனாவர்தாமென. (19

தோழராகினுந்தொண்டரேயாகினு.
மாழிமாலயன்காணாவருட்கழல்

சூழுமெய்யடியாரைத்தொடர்வின்றி
வாழுமூரன்பிரானுதல்லைவத்திலம். (199)

இன்னவாரடியார்புறகென்றபி
னன்னலாறறிந்தஞ்சியாரூரர்தா
மின்னுவார்சடைவேதியன்றூடொழப்
பொன்னவாமணிப்பூங்கோயில்சார்தலும். (200)

பொங்குமாமறைப்புற்றிடங்கொண்டவ
ரங்குக்காட்சிகொடுத்தருளாமையி
னிங்குப்பேறெனக்கிவ்வணமோவென்பா
ரெங்குந்தேடியழிவுற்றியம்புவார். (201)

என்னையாட்கொண்டவீசனுமாயெனக்
கன்னையாயமுதாயறிவாயினாய்
பொன்னையார்ந்தபுரிசடைப்புண்ணியா
வுன்னையானிங்குக்காணேனொளித்தியோ. (202)

வெள்ளநீர்பரந்தோங்கும்விரிசடை
வள்ளலேமலையாண்மணவாளனே
தெள்ளுமாமறையின்றெளிவாகியெ
னுள்ளமேபுகுந்தாயெங்கொளித்தியோ. (203)

ஈசனேயெனக்கெய்ப்பினில்வைப்பெனப்
பேசலாகும்பெரும்பொருளாயினாய்
தேசனேசிவனேசிவலோகனே
யோசையேயுனையானுணரேனென்று. (204)

தோழராகிநற்சுற்றமுமாயடி
நீழறந்தளிப்பாரெதிர்நீங்கவு
மாழிபோன்றவடியார்முனியவும்
வாழவன்றொண்டர்சாலவருந்தினார். (205)

வேண்டியாட்கொண்டவீறற்றதொண்டரை
யாண்டநாயகர்வாவென்றருள்செய்து
காண்டகும்படிகாட்சிகொடுத்தலும்
பூண்டுகொண்டவன்பொன்னடிபோற்றுவார். (206)

இலக்கண விளக்கபரம்பரை
திருவாரூர். சோமசுந்தர தேசிகன்.

---

உ

கடவுள் துணை.


# செந்தமிழ்.

தொகுதி-௧௭.] சித்தார்த்தி௵ ஐப்பசி௴ [பகுதி ௧௨.
Vol. XVII. October—November, 1919. No. 12.


## 13-ம் புறப்பாட்டுரையாராய்ச்சி II.*

செந்தமிழ் ௧௭-ந் தொகுதி ௩௬௮-ம் பக்கத்தொடர்ச்சி.

தொல்காப்பியவிதி இங்ஙனமாக, நண்பரவர்கள் காட்டிய தமிழ் நூற் பிரயோகங்களேனும் அவர்களுக்குப் பயன்படுவனவாவென்று சிறிது ஆலோசித்தல் வேண்டும். 'மனஞ்செய்ஞானத் துன்பெருமை மாசூணாதோ மாயோனே' (1—5—2 என்பதும் 'அண்டாவண்ணம் மண்கரைய நெய்யூண் மருந்தோ மாயோனே' (1—5—8) என்பதும் திருவாய்மொழியினின்று எடுத்துக்காட்டப்பட்டன. ஈண்டுவந்துள்ள 'மாயோனே' என்ற சொல் 'கிழவோனே' என்றதனோடு ஒப்புமையுடையதென்பது அவர்கள் கருத்து. 'மாயோன்' இயற்கைவிளியாதல் போலக் 'கிழவோன்' என்பதும் இயற்கை விளியாகுமென்று ஸ்தாபிப்பதே அவர்களது முடிவான நோக்கம்.

ஆனால், 'மாயோன்' என்பது இயற்கை விளியாகுமா? அதனோடியைந்துவரும் ஏகாரம் ஈற்றசையாகுமா?

தமிழ்ப்பாஷையின் சரிதத்தை ஆராய்வார்க்குச் சங்ககாலத் தமிழிற்கும் பிற்காலத்தமிழிற்கும் உளதாம் வேறுபாடொன்று மிகச்செவ்விதிற்புலப்படும். சங்ககாலத்தான்றோர்கள் அருகிய சொற்களையும் நுணுகிய இலக்கண அமைதியினையும் எடுத்தாண்டுள்ளார்கள். இது பற்றியே அன்னோரது நூற்கள் அரிதிற்பொருள்படுவனவாயின. பிற்

* இதன் மறுதலைமுடிவும் அடுத்துள்ளது.

காலத்தான்றோர்களிற் பெரும்பாலாரும் வழக்குச்சொற்களை மிகுதியும் எடுத்தாண்டு யாவரும் எளிதிற் பொருளுணருமாறு நூலியற்றியுள்ளார்கள். இவ்வுண்மை பக்திநூல்விஷயத்திற் சாலவும் பொருந்துவதொன்றாம். பக்திநூல்களுள்ளேயும் வைஷ்ணவபக்த சிரோமணிகளது அருளிச்செயல்களிலே சாதாரண இலக்கண அமைதிகளும் எளிதுணர் வழக்குச்சொற்களும் மிக்கு நிரம்பியுள்ளன. ஆதலால் திருவாய்மொழி போன்ற பிரபந்தங்களிற் காணப்படும் பிரயோகமொன்றற்கு இலக்கணவமைதி நிச்சயித்தல் வேண்டுமாயின், அது சாதாரண ஜனவழக்கு நோக்கியே பெரும்பாலுந் தீர்மானித்தற் பாலதாம்.

சாதாரணவழக்கின் கண்ணே, பெயர்ச்சொற்கள் ஏகாரத்தொடு புணர்ந்து விளிப்பொருண்மையில் வருமாயின், அவ் ஏகாரம் விளியுருபெனக்கொள்ளுதல் பெரும்பான்மை 'புள்ளியுமுயிருமிறுதியாகிய' என்ற விளிமரபுச் சூத்திரத்தின்கீழ் "வழக்குச் சொல்லால் தெரியப் பொருள்கூறவேண்டியக்கால் இவ் ஏகாரமே விரித்துக் கூறல்வேண்டுதலும் இதனாற்கொள்க" என்று நச்சினார்க்கினியர் வரைந்துள்ளார். இதனானே பெயர்கள் ஏகாரம் விரிந்து விளியேற்றல் சாதாரண வழக்கென்பது இவ்வுரைகாரர்க்கும் கருத்தாம். ஏகாரம்விரிந்து விளியாகின்ற இவ்வழக்கு சங்க இலக்கியங்களில் சிறுவரவிற்றாயும் பிற்கால இலக்கியங்களில் பெருவரவிற்றாயும் உள்ளதாகும். இவ்வுண்மை அவ்வக்காலத்திற்குரிய இலக்கணங்களானும் வெளியாகின்றது. உயர்திணைப் பெயர்களுள் ஒருசிலவே ஏகாரம் விரிந்து விளியாதற்குரியன என்று தொல்காப்பியம் கூறுகின்றது. எவ்வகைய வுயர்திணைப் பெயர்களும் அங்ஙனம் ஏகாரம் விரிந்து விளியாதற்குரியன என்று நன்னூல் தெரிவிக்கின்றது. இவ்வாறாக, ஏகாரம் விளியுருபாகவரும் சாதாரண வழக்குப் பிற்காலநூல்களில் மலிந்து காணப்படுதல் நூல்வழக்கானும் இலக்கணத்தானும் தெளியப்படுகின்றது. ஆதலால் பிற்காலநூல்களில் பெயர்ச்சொல் ஏகாரம் விரிந்து நின்று விளிப்பொருண்மை யுணர்த்துமாயின், அவ் ஏகாரம் விளியுருபாக வந்துளதெனக் கொள்ளுதலே நேரிதாம்.

இம்முடிபிற்கிணங்கவே, திருவாய்மொழிக்கு வியாக்கியானம் வகுத்த பெரியோர்களும் ஏகாரத்தை ஈற்றசையாகத் தள்ளாது, 'மா



யோனே' என்றது முழுவதையும் ஒரு சொல்லாகக்கொண்டு விளிவேற்றுமையாக எடுத்து உரைசெய்தார்கள். முதற்பத்தில், 5-ஆம் திருவாய்மொழியில், 2-வது, 8-வது பாசுரங்களின் வியாக்கியானங்களை நோக்குக. எனவே சாதாரண ஜனவழக்கைப் பின்பற்றி ஏகாரம் விரித்து 'மாயோனே' என்று ஸ்ரீ சடகோபர் அழைத்தருளினாரென்றவில் ஐயப்பாடு சிறிதுமின்றாம். இங்ஙனமாகக் 'கிழவோனே' என்ற பதத்திற்கும் 'மாயோனே' என்ற பதத்திற்கும் உள்ள ஒப்புமைகளில் யாது அத்தியாவசியகமாகக் காட்டப்படுதல் வேண்டுமோ அதுவே இல்லாதொழிகின்றது. திருவாய்மொழி மேற்கோளின்கண் விளியுருபு ஸ்பஷ்டமாக இருக்கிறது; இயற்கை யண்மைவிளி ஆண்டு இலதாம் ஆதலால், 'கிழவோன்' என்பது இயற்கை யண்மைவிளி யெனக்காட்டுதற்கு நண்பரவர்கள் தந்த திருவாய்மொழி மேற்கோள் பயனின்றி யொழிகின்றது.

நண்பரவர்கள் காட்டிய இலக்கியப்பிரயோகம் அவர்களுக்குச் சிறிதும் பயன்தருவதன்றெனத் துணிதற்கு வேறொருகாரணமும் உண்டு. திருவாய்மொழி, திருவாசக முதலியன சங்ககாலத்துக்கு மிகப் பிற்பட்ட காலத்தெழுந்த நூல்களாம். ஆதலால் சங்ககால வழக்கினை நிச்சயித்தற்கு இவைபோன்ற நூல்களினின்றும் பிரயோகம் எடுத்துக் காட்டுதல் சிறிதும் தகுதியன்று; சங்கநூற் பிரயோகமே வேண்டும்.

இதுகாறும் 'கிழவோன்' விளியின்கண் வந்ததென அறுதியிடுதற்கு நண்பரவர்கள் காட்டிய இலக்கணவிதியும் இலக்கியமேற்கோளும் அவர்களை ஆதரிப்பனவல்ல வென்பது முடிவாகக்காட்டப்பட்டது. அவர்கள் அத்துணை யெளிதில் ஸ்தாபிக்க முயன்றவிஷயம் சங்கநூற் பிரயோகங்களை நன்கு ஆராய்ந்தாலன்றி யொருதலையாசத் துணிதற்பாலதன்று. முதலில் அப்பிரயோகங்கள் தாம் எத்தன்மையவாயிருத்தல் வேண்டுமென்பதை நிர்ணயஞ் செய்துகொள்ளுதல் உசிதம். அவை 'கிழவோனே' என்ற பதத்தோடும் ஆட்சியோடும் முற்றும் ஒத்து வந்தனவாயிருத்தல் ஆவசியகம். 'அஃதாவது ஓன்' ஈற்றுயர்திணைச் சொல் ஏகாரத்தோடியைந்து செய்யுளினீற்றில் வருதல். இவ்வாறு வந்துள்ளன சங்க நூற்களில் விளியாகக் காணப்படுகின்றனவா என்பதே பிரயோகங்களால் தெளியப்படுதல் வேண்டும். இதனைத் தெளி

விக்க முயலாது, 'இயற்கைவிளி சங்ககாலத்தும் வழங்கப்படுவதுண்டு' என்று நண்பரவர்கள் கூறிச்செல்வது யாதொரு பயனையுந் தரமாட்டாது. இனி, பிரயோகங்களை நோக்குவோம். 66-வது புறப்பாட்டில், 'வடக்கிருந்தோனே' என்று வந்துளது; அங்கே 'நல்லன்' என்ற குறிப்பு வினைமுற்றிற்கு எழுவாயாக வந்தது; விளியன்று. 229-வது புறப்பாட்டில் 'மாஅயோனே' என்று வந்துளது; அங்கே 'எய்தினளுகொல் மறந்தனன்கொல்லோ' என்ற வினைக்கு எழுவாயாகவந்தது; விளியன்று. இவ்வாறே பலவிடங்களினும் பிரயோகங்கள் உள்ளன. உதாரணங்கள் வருமாறு:—

| | | |
|---|---|---|
| 'கொள்ளாதோனே' | புறம். | 232. |
| 'மரீஇயோனே' | ,, | 234. |
| 'புலர்த்துவோனே' | ,, | 251. |
| 'கேளாதோனே' | ,, | 257. |
| 'கள்வெய்யோனே' | ,, | 258. |
| 'புரைமையோனே' | ,, | 307. |
| 'சால்புடையோனே' | ,, | 311. |
| 'வன்மையோனே' | ,, | 330. |
| 'கிழவோனே' | ஐங்குறுநூறு | 40; 41. |
| 'நின்றோனே' | ,, | 115. |
| 'வாராதோனே' | ,, | 119. |
| 'காதலோனே' | ,, | 157. |
| 'அணங்கியோனே' | ,, | 182. |
| 'மலைகிழவோனே' | அகம். | 107. |
| 'நாடுகிழவோனே' | பதிற்றுப்பத்து | 58; 66. |
| 'நீவியோனே' | குறுந்தொகை | 379. |
| 'உரைத்தோனே' | ,, | 389. |
| 'திகிரியோனே' | நற்றிணை | கடவுள்வாழ்த்து. |
| 'மலைகிழவோனே' | ,, | 28. |
| 'மலைகிழவோனே' | முருகு | 317. |
| 'நாடுகிழவோனே' | பொருந | 248. |



| | | |
|---|---|---|
| 'நாடுகிழவோனே' | மலைபடு | 583. |
| 'படிமையோனே' | தொல் சிறப்புப்பாயிரம். | |

*இவையெல்லாம் படர்க்கையில் வந்துள்ளனவேயன்றி விளியாகவந்தனவல்ல. மேலும் சங்கநூற்களில் ஓரிடத்தேனும் 'கிழவோனே' என்ற வாய்பாட்டுச் சொற்கள் விளிப்பெயர்களாகப் பயின்று வந்தமை காட்டுதற்கரிதாம். இங்ஙனமிருப்ப 13-ம் புறப்பாட்டில் மட்டும், 'கிழவோனே' என்றதனை விளிப்பெயராகக் கொள்ளுதல் நூல்வழக்கொடு முற்றும் முரணுவதாகும். ஆதலால் அதனை விளியென்று கொள்ளுதல் சிறிதும் பொருந்துவதன்றாம்.

* 'ஓன்' ஈற்றுச்சொற்களேயன்றி ஓகாரம் அடுத்த ளகார வீற்றுச் சொற்களும் 'ஓர்' ஈற்றுச்சொற்களும் ஏகாரத் தோடியைந்து செய்யுளினிறுதியில் வரும்பொழுது படர்க்கைக் கண்ணேயே பயின்று வந்துள்ளன.

உ-ம்:—ஓகாரம் அடுத்த ளகாரவீறு.

| | | |
|---|---|---|
| 'வேட்டோளே' | ஐங்குறுநூறு | 1. |
| 'தொடங்கியோளே' | ,, | 42. |
| 'வெளவியோளே' | ,, | 66. |
| 'அழுதுநின்றோளே' | ,, | 69. |
| 'பிணைத்தோளோளே' | ,, | 99. |
| 'கொண்டொளித்தோளே' | புறம் | 339. |
| 'மாஅயோளே' | அகம் | 41,86. |
| 'மாணீரோளே' | ,, | 62. |

'ஓர்' ஈறு.

| | | |
|---|---|---|
| 'கைப்பட்டோரே' | புறம் | 81. |
| 'எதிர்ந்தோரே' | ,, | 27. |
| 'பாடியோரே' | ,, | 124. |
| 'காடிறந்தோரே' | அகம் | 1,25. |
| 'மடமையோரே' | ,, | 43. |
| 'பசப்பித்தோரே' | ஐங்குறுநூறு | 67.

| | | |
|---|---|---|
| 'தெளியுமோரே' | ,, ,, | 36. |
| 'புலமையோரே' | ,, அகத்திணை. | 12. |

ஆயினும் இரண்டிடங்களில் இவ்விருவகைய சொற்களும் விளியாகக் காணப்படுகின்றன. 'வினையமை பாவையினியலி' என்ற 362-வது நற்றிணைச் செய்யுளில் 'மாஅயோளே' என்பதும் 'அமிழ்தத்தன்ன அந் தீங்கிளவி' என்ற 206-வது குறுந்தொகைச் செய்யுளில் 'அறிவுடையோரே' என்பதும் அவ்வாறு விலக்காக அமைந்த இடங்களாம். இவையிரண்டும் சுத்தபாடங்களல்லவெனத் தோன்றுகிறது. பல ஏட்டுப்பிரதிகளை ஒத்துப்பார்த்தபின்னரே ஒருமுடிபுக்கு வரக்கூடும். இஃதெவ்வாறாயினும் 'ஓன்' ஈற்றுச்சொற்கள் சம்பந்தப்பட்ட மட்டில் யான் கூறியவிதி நிராக்ஷேபமாயுள்ளது.

கடைசியாக, சந்தேகம் பிறத்தற்குச் சிறிதும் இடமின்றிக் 'கிழவோயே' என அமைத்துக்கூறுதல் முடமோசியார்க்கு எத்துணையோ எளிதாயிருப்பவும், அங்ஙனம் அவர் செய்யாமைக்குத்தக்க காரணமொன்று நண்பரவர்கள் காட்டக்கடமைப் பட்டிருக்கிறார்கள். இதனை அவர்களே யுணர்ந்து 'கிழவோய்' என்ற விகாரவிளியைப் பிரயோகித்தல் இடர்ப்பாடுடையதென்றும், அவ் இடர்ப்பாட்டினை யொழித்தற்பொருட்டே 'அண்மைப் பொருள் பற்றிய சிறப்பிலக்கணமுடைய இயற்கைவிளியை'ப் புலவர் பிரயோகித்தாரென்றுங் கூறினார்கள். 'ஓன்' ஈற்றுச்சொல் ஏகாரத்தோடியைந்து செய்யுளிறுதியில் வரும்பொழுது அதுவிளியாதலில்லையென்பது மேலே நன்றாக நிறுவப்பட்டது. எனினும் 'கிழவோன்' என்றதனை மீண்டு விளியென்று வைத்துக்கொள்ளினுங்கூடக் 'கிழவோய்' என்றதனையொழித்து முற்கூறிய அண்மைச் சொல்லை முடமோசியார் தெரிந்து எடுத்தாளுதற்கு அதன்கண் அப்புலவர் சிகாமணி கண்டபெருமையாதென விளங்கவில்லை. விகாரவிளிப்பிரயோகத்தால் இடர்ப்பாடுண்டாமென்று நண்பரவர்கள் கூறுகின்றார்கள். இவர்கள் கருதும் இடர்ப்பாடுதான் எத்தன்மையதென அறியவொண்ணாற் கூடவில்லை. படர்க்கைக்கும் அவர்களது கருத்தின்படி விளிக்கும் பொதுப்பட்ட ரூபமான 'கிழவோன்' என்பதனை யெடுத்தாளுதலே நம்மை மயங்கவைத்து இடர்ப்படுக்குமென நினைக்கின்றேன். இத்துணை வியவகாரமும் எழுந்தது இவ்விடர்ப் பாட்டின் காரணத்தாலன்றோ?



மேலும், 'இயற்கைவிளி' 'விகாரவிளி' இவ்விரண்டும் பிரயோகத்திற் பெரிதும் வேறுபடுவனவென்று நண்பரவர்கள் கருதினார்களாகல் வேண்டும். அல்லாக்கால், ஒன்றனை யொழித்துப் பிறிதொன்று கைக்கொள்ளப்பட்டதென்றும் ஒழிக்கப்பட்டதனை வழங்கினால் இடர்ப்பாடு விளையுமென்றும் கூறுதலில் யாதொரு பொருளுமின்றாம். ஆனால், சங்கநூல் வழக்கினை நாம் ஆராய்வதாயின், நண்பரவர்கள் கருதியவேறுபாடு காணப்படவில்லை. ஒரே செய்யுளில், ஒரே சந்தர்ப்பத்தில், ஒரே அரசன் இயற்கை விளியானும் விகாரவிளியானும் அழைக்கப்படுகின்றான். இங்கே வியவகரிக்கப்படுஞ் செய்யுளையியற்றிய முடமோசியார் தாமே 'ஆய்' என்னும் பெருந்தகைவள்ளலை, நோக்கி 'எந்தை மலைகெழுநாடன், மாவேளாஅய், நாடுகிழவோய், யான்வந்தது, களிறுமுதலாயின வேண்டியன்று; நின்னைக்காண்டல் வேண்டிய அளவே; நின் னூழி அன்னவாக' எனக்கூறுகின்றார் (புறநானூறு-135) இதன்கண், 'எந்தை' 'மலைகெழுநாடன்' என்ற இயற்கையண்மை விளிகளும் 'கிழவோய்' என்ற விகாரவிளியும் யாதொரு வேறுபாடுங் கருதப்படாமற் பயின்று வந்திருத்தல் காணலாம். இதுபோன்ற உதாரணங்கள் எண்ணிறந்தன காட்டுதல் கூடும். இங்ஙனமாகப் பிரயோகத்தில், அண்மைவிளிகட்கும் விகாரவிளிகட்கும் வேறுபாடு சிறிது மின்றாகவே, 'கிழவோய்' எனவிளிப்பதனால் இடர்ப்பாடுண்மையும் 'கிழவோன்' என விளிப்பதனால் அஃதின்மையும் காணுமாறில்லை. ஆகவே 'நாடுகிழவோன்' என்ற இயற்கை விளியைத்தெரிந்து எடுத்தாளுதலாற் பி யோஜன மில்லையாம். ஆதலால் முடமோசியார்க்கு விளித்தலே கரு தாயின், 'கிழவோயே' என்றுசெய்யுளை முடித்துத் தாங்கருதியபொருளை மிகத்தெளிவாயுரைத்திருப்பர். சங்கநூற்களில், 'கிழவோய்' என்பதே விளிவடிவாகக் காணப்படுகிறதேயன்றிக் 'கிழவோன்' என்பது வி யாகச் செய்யுளின் ஈற்றில் வருதல் யாண்டுங் காணப்படவில்லையே இக்காரணத்தானும் 'நாடுகிழவோன்' விளியன்றென்பது பெறப்படு

யான் இத்துணையும் ஆராய்ந்ததின் பயனாக, 'அண்மைச்சொல் இயற்கையாகும்' என்ற தொல்காப்பியச் சூத்திரம் எவ்வகைய வி றுப்பெயரும் அண்மை விளியேற்கும் பொழுது இயல்பாகவும் வர கூடுமென்றதற்கு ஆதாரமாகா தென்பதும், 'மாயோனே' என்ற ஏகாரம் விரிந்த விளியாகவின் 'கிழவோனே' என்றதனோடு ஒப்பு

யுடையதன் றென்பதும், சங்கநூல் வழக்கின்கண்ணே ஏகாரம் அடுத்த ஒனீற்றுச்சொற்கள் செய்யுளிறுதியில் யாண்டும் படர்க்கையாகவே வந்துள்ளன வென்பதும், ஆதலால் 'கிழவோனே' என்றது இயற்கை யண்மைவிளி ஏகாரம் அடுத்துவந்ததன் றென்பதும், அஃது ஏகாரம் அடுத்தபடர்க்கைப் பெயரென்பதும், புலவர் விளித்தற் கருத்துடைய ராயின் 'கிழவோய்' எனவே கூறியிருப்பரென்பதும் தெள்ளிதின் உணரத்தக்கன.

தொடரும்.

S. வையாபுரிப்பிள்ளை B.A., B.L.,
திருவனந்தபுரம்.

---

ஸ்ரீ

# முன்னதன்மறுதலைமுடிவு.

சென்ற ஆனிமாதச் செந்தமிழ்ப்பகுதியில் "கடல்வண்ணன் அண்மைவிளி" என்ற அடியார்க்கு நல்லார் கூற்றுத் தொல்காப்பியத் தோடு மாறுபட்டதென்று நண்பரவர்கள் காட்டிய விரோதங்களெல்லாம் நன்கு பரிகரிக்கபபட்டன.

ஆவணிமாதச் செந்தமிழில் வெளிவந்த பேராசிரியருரையும் அண்மைவிளியும் என்றவிளம்புரையாலும் அடியார்க்கு நல்லார் கொள்கை, தொல்காப்பியர்க்கும், உரைசாரியர்களுக்கும், தமிழ்ப் பெரும்புலவர்களுக்கும் உடம்பாடாமென்பதும் நிரூபிக்கலாயிற்று.

இப்பகுதியில், 13-ம் புறப்பாட்டினுள்ள நாடுகிழவோன் என்பது மெய்யீற்றண்மையியல்பு விளியாகாதென நண்பரவர்கள் எழுதிய ஒரு தலை முடிவு இதன் முன்வைக்கப்பட்டிருக்கிறது.

அதில் மாணவரெழுதிய ஆராய்ச்சியில் "மணஞ்செய் ஞானத்துன் பெருமை மாசூணாதோ மாயோனே" "அண்டாவண்ண மண்கரைய நெய்யூண்மருந்தோ மாயோனே" என்ற திருவாய் மொழிப்பிரயோகங் களைக்காட்டியிருப்பது தவறென்று ஆக்ஷேபிக்கப்பலகாரணங்கள் காட்டுகிறார்கள்.



அவற்றுள், முதலில் 'மாயோனென்பது இயற்கை விளியாகுமா? அதனோடியைந்துவரும் ஏகாரம் ஈற்றசையாகுமா?, என்று வினவிக் கொண்டு, தமிழ்ப்பாஷையின் சரித்தை யாராய்வார்க்குச் சங்ககாலத் தமிழிற்கும் பிற்காலத்தமிழிற்கும் வேறுபாடுதோன்று மென்றும், திரு வாய்மொழி சங்ககாலத்திற்கு மிகவும் பிற்பட்டகாலத்ததென்றும், அது அருகிய சொற்களும் நுணுகிய இலக்கணங்களும் பொருந்திய சங்க நூல்களைப்போல அரிதிற்பொருளுணரப்படுவதன்றியே யெளிதிற் பொருளுணரும்படி வழக்குச் சொல்லாற் செய்யப்பட்டதென்றும், ஆதலால் அதுமிகப் பழைமைவாய்ந்த சங்கநூற் பிரயோகங்களுக்குக் காட்டாக மாட்டாதென்றும் வாதிக்கிறார்கள்.

நம்நாட்டிற் காலவாராய்ச்சியிலும் சரிதவாராய்ச்சியிலும் ஒருசிலர் தலையிட்டு அடிக்கடி மாறுதலடையும்படி அவரவர் நெஞ்சுக்குத்தோன் றியவாறெல்லாம் எழுதிவெளியிடப்பட்டதாய் ஒன்றும் முடிவுபெறாது நிற்கும் அவர்கொள்கையைப் பின்பற்றிச் சங்ககாலத்துக்குத் திருவாய் மொழி மிகப் பிற்பட்டகாலத்ததென்று சொல்லிவிட்டார்களேயல்லது அது நிரூபிக்கப்பட்டதாயேற்படவில்லை. அவர்கள் சொற்படி பிற் பட்டதாகவே வைத்துக்கொண்டாலும் பாஷைமாறுதலடைதற்கேற்ற வாறு பல்லாயிரவருடங்கள் பிற்பட்டதாகக் கொள்ளவியலுமா? அவர் கள் கொள்கைப்படி திருவாய்மொழி பிறந்து, ஆயிரவருடங்கட்கு மே லாகியும் அன்றுதொட்டின்றளவும் அதன்பாஷை ஒரு மாறுதலும் அடைந்திருப்பதாகத் தெரியவில்லையே. சங்கநூற்பாஷைக்குத் திரு வாய்மொழிப் பாஷை மாறுதலடைந்திருந்தால் இடையே பல்லாயிர வருடங்கள் சென்றிருக்கவேண்டுமே.

சிலப்பதிகாரம்பிறந்தகாலத்திருந்த செங்குட்டுவன் சங்க நூல்க ளாலும் பாடப்பட்டிருத்தலாற் சிலப்பதிகாரம் சங்ககாலத்து நூலாக வேண்டாமா? அதில் (வஞ்சினமாலையில்) காவிரிப்பூம்பட்டினத்துப் பிறந்த கற்புடையளான வணிகமகளொருத்தி 'வன்னிமரமும் மடைப் பளியும் சான்றாக முன்னிறுத்திக்காட்டிய' சரிதம் குறிக்கப்பட்டிருக் கவில்லையா? அவள் மணம்புரிந்தசெய்தி மதுரைத் திருவிளையாடற் புராணமிரண்டிலும் சொல்லப்பட்டில்லையா? அது திருஞானசம் பந்தநாயனார் பிரபாவத்திலொன்றன்றோ? திருஞானசம்பந்தநாய

னாரும் திருமங்கையாழ்வாரும் சமகாலத்தவரென்பது *“கடியுண்ட நெடுவாளை” $“வருக்கைநறுங்கனிசிதறி” என்றதனிப்பாசுரங்களால் விளங்கவில்லையா?

“பொய்கையார்பூதத்தார்பேயார்புகழ்மழிசை
ஐயன் அருள்மாறன்சேரலர்கோன்—துய்யபட்ட
நாதன் அன்பர்தாட்டூளிநற்பாணன் நன்கலியன்
ஈதிவர் †தோற்றத்தடைவாமிங்கு.”

என்ற உபதேசரத்னமாலையாற் சடகோபர் திருமங்கையாழ்வாருக்கு முற்பட்டவரென்பது விளங்கவில்லையா?

இப்படிப் பிரமாணசித்தமான பழைமையை ஓராதரவு மின்றியே புதுமையென்று சொல்லிவிடுவது புதுமையாயிருக்கிறது.

---

* “கடியுண்டநெடுவாளைகராவிற்றப்பிக்
கயத்துக்குளடங்காமல்விசும்பிற்பாய
அடியுண்டவுயர்தெங்கின்பழத்தாற்பூக
மலையுண்டுகுலைசிதறுமாலிநாடா
படியுண்டபெருமானைப்படித்துப்பாடிப்
பதம்பெற்றபெருமானேபவளச்செவ்வாய்க்
கொடியொன்றுநின்பவனிக்கெதிரேசென்று
கும்பிட்டாளுயிரொன்றுங்கொடுவந்தாளே.”

இது திருஞானசம்பந்தநாயனாரால் சீகாழியில் திருமங்கையாழ்வாரைச் சந்தித்தபோது பாடப்பட்டதென்பது ஐதிகம்.

$ வருக்கைநறுங்கனிசிதறிச்செந்தேன்பொங்கி
மடுக்கரையிற்குளக்கரையின்மதகிலோடப்
பெருக்கெடுத்துவண்டோலஞ்செய்யுங்காழிப்
பிள்ளையார்சம்பந்தப்பெருமான்கேளீர்
அருட்குலவுமயிலைதனிலனலால்வெந்த
வங்கத்தைப்பூம்பாவையாக்கினேமென்
திருக்குமது தகவன்றுநிலவால்வெந்த
விவளையுமோர்பெண்ணாக்கலியல்புதானே.

இது முந்துற்ற பாசுரங்கேட்டவாறே திருமங்கையாழ்வாராற்பாடப்பட்டதென்பது ஐதிகம்.

† தோற்றத்தடைவு—அவதாரக்கிரமம்.



முற்காலநூல்கள் அரிதிற் பொருள்படுவனவென்றும், பிற்கால நூல்கள் எளிதிற் பொருள்படுவனவென்றும் வேறுபாடு கூறுகிறார்கள். அப்படியானால் நன்னூற் சூத்திரச்சொற்றொடர்களினும், தொல்காப்பியச் சூத்திரச்சொற்றொடர்கள் அரிதிற் பொருள்படுவனவா யிருக்க வேண்டுமே; அங்ஙனமன்றி எளிதிற் பொருள்படுவனவா யிருப்பதென்? அவற்றினும் அகத்தியச் சூத்திரங்கள் எளிதிற் பொருள்படுவனவாயிருப்பதென்னை? திருவாய்மொழி யெளிதிற் பொருள்படுவதாயின் அதற்கு ஆறாயிரம், ஒன்பதினாயிரம், பன்னீராயிரம், இருபத்து நாலாயிரம், முப்பத்தாறாயிரம் என்ற கிரந்த சங்கியையுடைய பல வியாக்கியானங்களிருக்கக் காரணமென்ன? சங்கநூல்களுள்ளும் எளிதிற் பொருள்படும் பகுதிகளில்லையா? சங்கத்தாருக்குச் சடகோபர் பாடியனுப்பிய* அண்டகோளத்தென்னும் பாட்டுச் சங்கப்பாடல்களைக் காட்டிலும் எளிதிற் பொருள்படுவதாயிருக்கிறதா?

“பூதனேமுதலோராழ்வார்புகன்றவைசிலவுண்டந்நூல்,
வேதநூலுணர்ந்தோர்க்கல்லால்விரித்திடும்பொருள்விளங்கா.”

என்றதனாற் றிருவாய்மொழி அரிதிற்பொருள்படும் பகுதியிற் சேர்த்து ஆன்றோர் கூறியிருப்பது தவறா? பிற்கால நூல்களிலும் திரி சொற்பிரயோகங்களால் அரிதிற் பொருள்படும் பாடல்களில்லையா? அரிதிற் பொருள்படுவதும், எளிதிற் பொருள்படுவதும், விருத்தி

---

* “அண்டகோளத்தாரணுவாகிப்
பிண்டம்பூத்த பேரொழியொருமை
யீருயிர்மருங்கி னாருயிர்தொகுத்து
நித்திலத்தன்ன வெண்மணல்பரப்பி
வேரும்வித்து மின்றித்தானே,
தன்வலியறியாத் தொன்மிகுபெருமா
மூவழிமுப்பழ முறைமுறைதருதலி
னொன்றாண்டொண்சுவை தருவதுமற்றது
கல்விலெழுந்து கடலிலழுந்தி
யறுகாற்குறவ னீரறவிலக்கு
நிறைபொழிற்குரம்ப தருகட்பொன்றுவித்
தறுகோட்டாமா விளைக்குநா
னவனே தலையிலி யவன்மகன் முலையிலி
தானுமீனு ளினவும்படா அ
னெழுவர்மூவர் சிறுவரைப்பயந்தனள்
அவளிவனுவனென் றறித
றுகளறுகாட்சிப் புலவாதகடனே.”

பேதத்தாலாவதோ? காலபேதத்தாலாவதோ? யானறிந்தமட்டில் திரிசொற் பிரயோகங்களும், ஆற்றொழுக்கொழிந்த பொருள்கோளும், சொற்பொருட் குறிப்புக்களும், எச்சப்பொருளும் விரவியவாய்ப் புலமைத்திறமைதோன்றப் பாடும் பாடல்களெல்லாம் அரிதிற்பொருள்படுவனவாகவும்; செஞ்சொற் பிரயோகங்களும் ஆற்றொழுக்குப் பொருள்கோளும் வெளிப்படுகுறிப்பும் மாதுரியமு முடையவாகப் பாடும் பாடல்களெல்லாம், எளிதிற் பொருள்படுவனவாகவும் தோன்றுகின்றன. இவ்விருவகைப் பாடல்களும் கற்றுவல்ல புலவரால் எக்காலத்தும் பாடப்படும். இதனைப் பாரதம்பாடியபெருந்தேவனார்வாக்கினுள் புறநானூற்றுக் கடவுள்வாழ்த்துச் செய்யுளா† லும், பாரதத்துள்ள தார் கடவுள்வாழ்த்துச் செய்யு‡ ளாலும் நன்குதெரிந்து கொள்ளலாம்.

இவற்றான் அரிதிற் பொருள்படுவனவும், எளிதிற் பொருள்படுவனவும் முறையே முற்காலப்பாடல்களும் பிற்காலப்பாடல்களுமாமென்னும் முடிவு பிறழ்ச்சியுடையதாமெனவறியத்தக்கதாயிருக்கிறது.

---

† "கண்ணிகார்நறுங் கொன்றைகாமர்
வண்ணமார்பிற் றாருங்கொன்றை
ஊர்திவால்வெள் ளேறேசிறந்த
சீர்கெழுகொடியு மவ்வேறென்ப
கறைமிடறணியலு மணிந்தன்றக்கறை
மறைநவிலந்தணர் நுவலவும்படுமே,
பெண்ணுருவொருதிற னாகின்றவ்வுருத்
தன்னுளடக்கிக் கரக்கினுங்கரக்கும்
பிறைநுதல்வண்ண மாகின்றப்பிறை
பதினெண்கணனு மேத்தவும்படுமே
எல்லாவுயிர்க்கு மேமமாகிய
நீரறவறியாக் கரகத்துத்
தாழ்சடைப்பொலிந்த வருந்தவத்தோற்கே."

‡ "தேனேங்குசோலைத்திருவேங்கடமென்றும்
வானேங்குசோலைமலையென்றும் — தானேங்கு
தென்னரங்கமென்றுந்திருவத்தியூரென்றும்
சொன்னவர்க்குமுண்டோதுயர்."



இன்னும், சங்கநூல் வழக்கை நிச்சயித்தற்குத் திருவாய்மொழி போலும் நூல்களினின்றும், பிரயோகம் எடுத்துக்காட்டுதல் சிறிதும் தகுதியன்றென்று வாதாடுகின்றார்கள். இது நிலைபெறுவதானால் முப்பால் என்னுந் திருக்குறளை சங்ககால நூலாகாமற் போகவேண்டும். ஏனெனில்? "வள்ளுவர் நூல் அன்பர்திரு வாசகந்தொல் காப்பியமே, தெள்ளுபரி மேலழகர் செய்தவுரை" என்று ஆன்றோரால் தொல்காப்பியத்தோடுடன்வைத்தெண்ணி நன்குமதிக்கப்பட்ட பரிமேலழகருரையில், (349) "அற்றதுபற்றெனி லுற்றதுவீடு" என்ற திருவாய்மொழி வாக்கியமும், (370) "நன்றாய்ஞானங்கடந்துபோய்" என்ற திருவாய்மொழிப் பாசுரமும், 'களிப்புங் கவர்வுமற்றுப் பிறப்புப்பிணி மூப்பிறப்பற்று' என்ற திருவாய்மொழிச் சொற்றொடராலாகிய உரைநடையும், இறையனாரகப்பொருள் உரை... இறையனாட்சியதிகாரவுரையுள் "திருவுடைமன்னரைக்காணிற் றிருமாலைக்கண்டேனே யென்னும்" என்ற திருவாய்மொழிப் பிரமாணமும், பெரியார்பணிப்பென்று எடுத்துக்காட்டப்பட்டன.

இவற்றால் சங்கநூல்வழக்குக்குத் திருவாய்மொழிவழக்குக் காட்டாகமாட்டாதென்பது தவறென்னலாமா? அல்லது திருக்குறளை சங்கநூலில்லையென்று தள்ளிவிடலாமா? இதுமட்டுமன்று; இன்னுந் தொல்காப்பியவுரையுள் சேனாவரையர் "அந்நாற்சொல்லும்" என்ற சூத்திரத்தாலெய்திய "நீட்டும்வழிநீட்டல்" என்னுமிலக்கணத்துக்கு "வீடுமின்முற்றவும்" என்ற திருவாய்மொழிப் பிரயோகத்தை உதாரணங்காட்டியிருக்கின்றார்.

இன்னும் பிரயோகவிவேகமென்னும் ஓரிய லிலக்கணநூலுடையார், தொல்காப்பியத்தார் றெளியப்படாத அரியசொல்லிலக்கணங்களைத் திருவாய்மொழிப் பிரயோகங்கொண்டு தெளிவித்திருக்கின்றார் அவைவருமாறு:—

பிரயோகவிவேகத்தின் இரண்டாம்பாட்டுரையில் "அற்புதனாராயணனரிவாமனன்" "திருநாரணன்றாள்" என்ற திருவாய்மொழிப் பிரயோகங்களுதகரிக்கப்பட்டன.

அதன் மூன்றும் பாட்டுரையில் "சடகோபர்முதலாயினோரும் பதினெண்கீழ்ககணக்குச்செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிக

கூறுவது காண்க" என நூலமைதியிலும் திருவாய்மொழி சங்கநூலோடொக்கவே முற்பட்ட சான்றாகக் காட்டப்பட்டிருக்கிறது.

அதன் பதின்மூன்றாம் பாட்டுரையில்,

"கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும்
முள்ளார் முளரியு மாம்பலுமுன் கண்டக்கால்
புள்ளாயோ ரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்
றுள்ளாதா ருள்ளத்தை யுள்ளமாக் கொள்ளோமே." என்று

திருவாய்மொழிப் பாசுரப்பிரயோகத்தால் சொல்லும்பொருளும் பற்றியதோரரிய வேற்றுமையிலக்கணம் விளக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறே அதன் 19, 36, 39-ம் பாட்டுரைகளில் "செய்த வேள்வியர்" "பற்பநாபன் உயர்வறவுயரும் பெருந்திறலோன், எற்பரன்" "கருநாய்கவர்ந்த காலர்சிதைகிய பானையர், பெருநாடுகாணவிம்மையிலே பிச்சைதாம்கொள்வர்" என்ற திருவாய்மொழிப் பிரயோகங்களால் முறையே விகுதிபிரித்துக்கூட்டலும், சொல்வழக்கின் ஐயமறுத்தலும், விரவாவினைபெச்சவடுக்கும் ஆகிய இலக்கணங்களுக்குச் சங்கநூல்வழக்கொடு வாசியற வுதாரணங் காட்டப்பட்டன.

47-ம் பாட்டுரையில் "சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையும், நின்றதுகொல் நேர்மருங்கிற் கையூன்றி—முன்றில் முழங்கு கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற், குழந்துபின் சென்ற வென் னெஞ்சு." என்ற சங்கநூற்பிரயோகத்துக்கு ஒப்பாக "வைகல் பூங்கழிவாய் வந்துமேயுங் குருகினங்காள், கைகள்கூப்பிச் சொல்லீர்' என்ற திருவாய்மொழிப் பிரயோகமும் காட்டப்பட்டுள்ளது.

இன்னும் 49-ம் பாட்டுரையில் "பால்வாய்ப் பிறைப்பிள்ளை யொக்கலைக் கொண்டு பகலிழந்த, மேல்பாற் றிசைப்பெண் புலம்புறு மாலை" 'எனப் பெண்பாலாகுவர் சடகோபர்' என்றும் "வேனிலஞ் செல்வன் சுவைத்துமிழ்பாலை" 'என்பதுமது' என்றும், அஃறிணைப் பொருள்கள் உயர்திணைச் சொற்களால் வழங்குதற்கு, சடகோபர்வாக்கான திருவிருத்தப் பிரயோகங்கள் காட்டப்பட்டன. இன்னும் மாறனலங்காரமுடையாரும் பல காட்டுவர். அவையெல்லாம் இங்குக் கூறின் மிகவிரியுமென விடுக்கப்பட்டன.



இவ்வாற்றால் திருவாய்மொழி அரியவிலக்கண வமைதியுடையதென்பதும், சங்கநூற்பிரயோகங்களுக்குக் காட்டாக நாட்டப்பட்டதென்பதும், நன்கறியலாகும்.

இங்கு, திருவாய்மொழியின் பழமையையும், அதன் இலக்கணவமைதியையும் ஒருங்குபாராட்டிய இலக்கியப்புலவர் வாக்கியங்களும் ஒருசிறிது நோக்கவேண்டும்.

பிற்காலப்புலவர்களில் அபியுக்தரான பிரபோதசந்திரோதயமுடையார்,

"ஆதிநாள்மாறன்மறையையாயிரம்நல்அருந்தமிழாய்உரைத்ததினும்
ஓதிநாவழுக்தார்பொய்கைபூதம்பேய்உற்றபேரையும்சிறிதுணரார்
ஈதினார்சொன்னதிதுபிரபந்தம்இதுதிருவாய்மொழியென்றும்
காதினால்வினவார்பாஞ்சராத்திரம்வைகானசமீதெனக்கருதார்."

என்று, வைணவப்போலிகளை நிந்திக்குமிடத்துத் திருவாய்மொழி ஆதிகாலத்திற்றோன்றிய பழமையுடையதென்றும், அது வேதார்த்தங்களை உட்கொண்டிருப்பதென்றும், (நிர்த்தோஷமாயிருப்பதால்) நற்றமிழாயும், (அரிய இலக்கணங்களமைந்திருப்பதால்) அருந்தமிழாயும், உள்ள சொற்றொடர்களாலாகிய ஆயிரம் பாடல்களுடையதென்றும், அதன் அருமை பெருமையை வெளியிட்டு, அதனை அதிகரித்தொழுகாமைக்கு அநுதபித்திருக்கிறார்.

இனி முற்காலப் புலவர்களில் கல்வியிற்பெரிய கம்பநாடர், சடகோபரந்தாதியுள்,

"ஆயிரமாமறைக்குமலங்காரம்அருந்தமிழ்க்குப்
பாயிரம்நாற்கவிக்குப்படிச்சந்தம்பனுவற்கெல்லாம்
தாய்இருநாற்றிசைக்குந்தனித்தீபம்தண்ணங்குருகூர்ச்
சேய்இருமாமரபும்செல்வியான்செய்தசெய்யுட்களே." (9)

என்று கொண்டாடுகிறார், இதில் "அருந்தமிழ்க்குப் பாயிரம்" என்றதனால், அரிய விலக்கணமுடைய தமிழ்நடையெல்லாம் திருவாய்மொழியில் அடங்கியுள்ளன வென்றார் என்றறியலாம். இவ்வாறே 'நாற்கவிக்குப்படிச்சந்தம்' 'பனுவற்கெல்லாம் தாய்' என்பவற்றால் முறையே தமிழ்ச் செய்யுளிலக்கணங்களாலும், பலதுறைகளமைந்

பிரபந்தலக்ஷணத்தாலும் மிகச் சிறந்ததென்றுரென் றறியலாம். இன்னும் 'பனுவற்கெல்லாம், தாய்' என்றதனால்,

"ஐம்பொருளு நாற்பொருளு முப்பொருளிற் பெய்தமைத்த
செம்பொருளை யெம்மறைக்குஞ் சேட்பொருளைத்—தண்குருகூர்ச்
செய்மொழிய தென்பர் சிலரியா னிவ்வுலகில்
தாய்மொழிய தென்பேன் தகைத்து."

"குறுமுனிவன் முத்தமிழு மென்குறளு நங்கை
சிறுமுனிவன் வாய்மொழியின் சேய்."

என்றற் றொடக்கமான பழைய தனிப்பாசுர விருத்தாந்தங்களை யாதரித்தாரெனவு மறியலாம். இன்னும்,

"அருளிற் சிலம்பி முரியிழைக் கிவர்கொல் அந்திவந்த
இருளிற் பிறிது துயருமுண் டோவிய லோடிசையின்
பொருளிற் சிறந்த வலங்கார வல்லியிற் போக்கிலுள்ளம்
தெருளிற் கரும்பொக்கும் ஆயிரம் பாப்பண்டு செய்தவரே."

என்றதனால் திருவாய்மொழி, இயற்றமிழிலக்கணத்தாலும்; இசைத்தமிழிலக்கணத்தாலும், விஷயவைலக்ஷண்யத்தாலும் சிறந்ததென்றும், நிர்த்தோஷமாய், அப்பிபசிப்பார்க்கு மாதுர்யமுடைய ஆயிரம் பாசுரங்களையுடையதென்றும், பண்டைக்காலத்தே சடகோபராற் செய்யப்பட்டதென்றும் சொல்லியிருக்கிறார். இங்கு பண்டு என்றது கம்பர்காலத்தின் மிக்கசேய்மையைக்காட்டுஞ்சொல்லாதலால், இது ஆதிகாலத்திற் செய்யப்பட்டதென்பதோடு பொருந்துகின்றது. அல்லது *"பண்டுபட்டினப்பாலைகொண்டதும்" என்ற சமான காலப்பிரயோகமான பண்டு என்னும் சொல்லாற்றற்கொப்பவே சங்க காலத்திற் றொழாமை நன்குணரப்படும். இன்னும் "இயலோடிசையிற் சிறந்த பாச்செய்தவர்" என்றகுறிப்பாலும் அவ்வியலுமிசையுமாகிய விருவகையிலக்கணமு மொருங்குவழங்கிய சங்ககாலத்திற் றொழாமை நன்குணரலாகும்.

இன்னும் அக்கம்பர் 48-ம் பாட்டில், "சங்கக்குவடிறக்குத்திய மாறப் பெயர்ச்சொலையானை" எனக் கூறினமையால், ஆழ்வார்,

* கலிங்கத்துப்பரணி



சங்ககாலத்தவர் என்பதும், ஜகத்பிரசித்தராய் வித்யாகெர்வங்கொண்டு பர்வதசிகரங்கள்போல் அவிநதராய் நிமிர்ந்து நின்ற சங்காத்தியக்ஷர்கள், ஆழ்வாரது வைதுஷ்யப்பிரபாவத்தால் கெர்வபங்கமடைந்து படிந்தார்களென்பதும், வெளியாகின்றன. இங்குச் சங்கம் என்றது தமிழ் நூல் வழக்கிற் பிரசித்திபெற்ற தமிழ்ச்சங்கத்தை யுணர்த்துவதல்லது, பிறிதோ ரப்பிரசித்தசங்கத்தை யுணர்த்தாதென வறியத்தக்கது; இதனால் "அண்டகோளத்தாரணுவாகி" என்று ஆழ்வாருளிச்செய்த தனிப்பாசுர விருத்தாந்தமும் குறிக்கப்பட்டதாயிற்று. இதற்கனுகுணமாகவே சங்ககாலப் புலவர்கள் பாடிய பரிபாடலுள் நான்காம் பாட்டில்,

"ஐந்திருள் றநீக்கிநான்கினுட்டுடைத்துத்தம்
ஒன்றுற் றுப்படுத்தநின் னூர்வலர்தொழுதேத்தி
நின்புகழ்விரித்தனர்கிளக்குங்கால்அவைநினக்கு
இறும்பூதன்மைநற்கறிந்தேமாயினும்
நகுதலுந்தகுதிஈங்கூங்குநிற்கிளப்ப"

என்ற அடிகளுள் "ஐந்திருளற..........நின்னூர்வலர்" என்றதனால் இந்திரியநிக்கிரகத்தால் விஷயாநுபவ பரித்தியாகபூர்வகமான பகவதநுபவ சமாதியைக் கைக்கொண்ட பக்தியோகநிஷ்டரான ஆழ்வார்கள் குறிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தொழுது ஏத்தி நின்புகழ்விரித்தனர் என்ற நிகழ்ந்ததன் மேலதாகிய சித்தார்த்தகதனத்தால் அவர்கள் அர்ச்சாவதார ரூபியான திருமாலிருஞ் சோலைமலை யெம்பெருமான் றொடக்கமாகப் பரத்துவமளவும் வணங்கியும் வாழ்த்தியும் பாடிய "கிளரொளியிளமை" தொடக்கமான பாசுரங்கள் குறிக்கப்பட்டிருக்கின்றன.

"அவைநினக்கிறும்பூதன்மை நற்கறிந்தேமாயினும்" என்றதனால் அவற்றிற்சொல்லும் அர்த்தவிசேஷமெல்லாம் ஆச்சர்யமுடையவையெனவும், அவையெல்லாம் உனக்கியல்பாதலால் அவை ஸ்துதிமாத்திரமாகாது பிராமாண்யமு முடையனவாமென்வும் அப்பாசுரங்களின் அர்த்தவிசேஷங்களின் பெருமை குறிக்கப்பட்டிருக்கிறது. நற்கறிந்தேம் என்ற அறிதற்றொழிலின் விசேஷணத்தால் அஃதன்னதாதல் உண்மையென வலியுறுத்தப்பட்டிருக்கிறது. நற்கறிந்தேம் என்ற

பன்மையால் இப்பரிபாடல்பாடிய புலவரோடொத்த சங்கநூற்புலவர் கூட்டங் குறிக்கப்பட்டிருக்கிறது. அறிதற்றொழிலைக் கூட்டத்தில் வைத்தமையால் ஆழ்வார்கள் பாடல் சங்கத்தாரால் நன்குமதிக்கப்பட்டமை விளங்குகின்றது. அவற்றுட் சிலவற்றை ஈங்கும் ஊங்குமாக நினைக் கிளப்பதற்கு நீகருதலுந்தருதி என்றமையால் ஆழ்வார்களுடைய பாசுரங்களிலிருந்தே இடையிடையே தோன்றிய சிலவிஷயங்கள் இப்பரிபாடலிற் சொல்லப்படுகின்றன வென்பது குறிக்கப்படுகிறது. ஆழ்வார் பாசுரங்களின் அபிப்பிராயங்கள் இப்பரிபாடலில் உள்ளனவென்பது பகவத்விஷய காலக்ஷேபம்பண்ணிய பண்டிதர்களாலாராய்ந் தறியத்தகும். அவை "துயரறுசுடரடி" என்ற திருவாய்மொழித் தொடர்மொழியின் அர்த்தவிசேஷத்தையே "நின்னிற்சிறந்த நின்றாளிணை" யென்றதுபோல்வன. இதனுள் தத்தந்தாளிணை தத்தமக்கு நிகிர்ஷ்டமாயிருப்பது உலகியல்பு; அது உன்னளவில் உத்கிருஷ்டமாயிருப்பதே! யென்பது ஆச்சரியமும், அஃதுண்மையாதலால் பிராமாண்யமுமானவாறு காண்க. இவ்வாறே பிறவும் உய்த்துணரத்தகும். திருமாலிருஞ்சோலைமலை என்ற சம்பிரதாய வழக்குப் பிறபரிபாடலிற் பயின்றுவருதலும் இதனை வலியுறுத்தும்.

இவ்வாறு சங்கநூலாகிய பரிபாடலாற் குறிக்கப்பட்டிருக்கும் ஆழ்வார்கள் காலம் சங்ககாலத்துக்கு மிகப் பிற்பட்டதென்று சொல்வது சிறிதும் பொருந்தாதிருக்கிறது. இதுகாறுங் கூறியவாற்றால், திருவாய்மொழி அருந்தமிழிலக்கணங்களமைந்ததென்று சிறந்த பெரும் புலவர்களால் அங்கீகரிக்கப்பட்டிருக்க, அது சாதாரண விலக்கணவமைதியும் எளிதுணர்வழக்குச் சொற்களும் மிக்கு நிரம்பியுள்ளதென்று நண்பரவர்கள் கருதுவது விபரீதமாயிருக்கிறது. சாதாரண விலக்கணமும் எளிதுணர் வழக்குச்சொற்களும் மிக்கு நிரம்பியுள்ளதானால்,

"ஆணல்லன் பெண்ணல்லன் அல்லாவலியுமல்லன்
காணலுமாகான் உளனல்லன் இல்லையல்லன்" என்ற அடிகள்

ஆணில்லை பெண்ணில்லை அல்லாவலியுமில்லை, காணவுமாகாதுள தில்லையில்லதில்லை, என்றன்றோ பிரயோகிக்கப்பட்டிருக்கவேண்டும். அங்ஙனம் பிரயோகிக்காமையாலும் அது சாதாரண விலக்கணவமைதியும் எளிதுணர் வழக்குச்சொற்களும் நிரம்பியதென்று சொல்வது பொருந்தாதென வறியத்தக்கதாயிற்று.



ஆகவே "திருவாய்மொழிப் பிரயோகம் ஒன்றற்கு இலக்கணவமைதி நிச்சயிக்கவேண்டுமாயின் சாதாரண ஜனவழக்குநோக்கியே தீர்மானிக்கவேண்டு" மென்று நண்பரவர்கள் சொல்லிய முடிவு பிராமாணிகர்களால் அநாதரிக்கத்தக்கதாயிருக்கிறது.

இனி நண்பரவர்கள் சாதாரண வழக்கை ஆதாரமாகக்கொண்டு வாதாடுவதையும் சிறிதாராய்வோம்.

"புள்ளிறு முயிரு மிறுதியாகிய" என்ற சூத்திரவுரையில் "வழக்குச் சொல்லாற் றெரியப்பொருள்கூற வேண்டியக்கால் இவ்வேகாரமே விரித்துக் கூறவேண்டுதலும் இதனாற் கொள்க". என நச்சினார்க்கினியர் எழுதியிருப்பது தம்கூற்றுக் காதரவாயிருப்பதாகக் காட்டுகிறார்கள்.

அதில் "வேண்டியக்கால்" என்றமையால் வெளிப்படையாய்த் தெரியப் பொருள்கூறவேண்டுதல் நியதமில்லை என்பதும், அவ்வேண்டுதலும் ஐச்சிகம் என்பதும், "இவ்வேகாரமே" என்றதனால் ஏகாரம் விரித்தற்கு வேறிலக்கணமில்லை யென்பதும், "விரித்து" என்றதனால் விரியாதியல்பாய் நிற்கும் அண்மையியல்பு விளிக்கும், விரிந்துநிற்பதற்கும் பொருள் வேறுபாடில்லையென்பதும், "கூறவேண்டுதலும்" என்பதனால் இங்ஙனங் கூறுதல் அகெதிகெதி என்பதும் பெறப்பட்டன.

இன்னும் வழக்குச்சொல்லாற் றெரியப் பொருள்கூறவேண்டியக்கால் என்றமையால் (இதன் மறுதலைப்பொருள்) செய்யுட் சொல்லால் (அண்மை யியல்புவிளியால்) புலமைத்திறமை தோன்றக் குறிப்பாகப் பொருள்கூறுதலே இலக்கணமுடையதென்றும் சித்திக்கிறது.

வழக்குநடையுஞ் செய்யுள்நடையுமாகிய இவ்விருவகை நடையுள் வழக்குநடைக் குதாரணம் "கடல்வண்ணன்" என்ற சிலப்பதிகாரப் பிரயோகத்துக்கு வழக்குச்சொல்லாற் றெரியப் பொருள்கூறவேண்டுங் கருத்துடைய அடியார்க்குநல்லார் ஏகாரம் விரித்து, "கடல்வண்ணனே" எனக் கண்ணழித்துப் பதவுரை கூறியிருத்தல் காண்க. இங்குக் கடல்வண்ணன் என்ற அண்மை யியல்புவிளிக்கும்

கடல்வண்ணனே என்ற வழக்குச்சொற்கும் சிறிதும் பொருள் வேறுபாடின்மையுமறிக. இதனால் இவ்வேகாரம் பெயர்மாத்திரையாய் எழுவாயோ விளியோ என்றையுறவெய்த நின்ற வண்மைவிளியை விளியெனத் தெளிநிலையாக்க ஒட்டிவழங்குவதால் அது விளிப்பொருளுடையதன்றென் றறியத்தக்கது. அதாவது ஆ ஈ, என எழுத்துணர்த்துமொழியைக் காரச்சாரியைசேர்த்து ஆகாரம், ஈகாரம் என வெளிப்படையாக வழங்குதல்போலக் கடல்வண்ணன்! என்றற்றொடக்கத் தண்மையியல்பு விளியை ஏகாரங்கூட்டிக் கடல்வண்ணனே! என்று வழங்குவதல்லது, கடல்வண்ணன் என்றபெயரையடுத்து ஏகாரம் விளியுருபாக வழங்கப்பட்டதன்று என்பதாம்.

இனிச் செய்யுள்நடைக்குதாரணம், கலித்தொகை 80-ம் பாட்டில் வருகவெம்பாகமகன்! என்ற அண்மை யியல்புவிளியைக் கண்ணழித்துப் பதவுரை கூறமிடத்து ஏகாரம் விரித்துரையாது மகன்! என இயல்பாயே நச்சினார்க்கினியர் இலக்கணநெறியாற் பொருளுரைத்திருப்பது காண்க.

இவ்விருவகை நடையுள்ளும் வழக்குநடை செய்யுட்குச் சிறந்ததன்றென்றும், செய்யுள்நடையே சிறந்ததென்றும் நண்பரவர்களாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. ஆதலால் நண்பரவர்கள் காட்டிய தொல்காப்பியச்சூத்திரத்தின் உரைவாக்கியம் அவர்கள்பக்கத்திற்கு அகெதிக கெதியாயாதரவாயும், மாணவர் சுக்ஷிக்கு இலக்கணநெறியா லாதரவாயுமிருப்பதால் அது விரோதிக்கமாட்டாது.

இங்கு இலக்கணநெறியாற் பொருளுரைத்தலாவது "மாயோன்" என்பதை "அண்மைச்சொல்லே யியற்கையாகும்" என்பதனால் அண்மைவிளியி யியல்பாய்நின்ற செய்யுட்சொல்லாகவும், செய்யுளிறுதி ஏகாரத்தைத் "தேற்றம் வினாவே பிரிநிலையெண்ணே, யீற்றசை யிவ்வைந் தேகாரம்மே" என்றதனால் ஈற்றசையாகிய செய்யுட் சொல்லாகவும் கொண்டு செய்யுள்வழக்காற் சிறக்கப் பொருள்உரைத்தலாம்.

இலக்கணமுறை யிவ்வாறிருக்க எவ்வகையுயர்திணைப்பெயர்களும் ஏகாரம் விரிந்து நின்று விளியேற்கும் என நன்னூல் தெரிவிப்பதாகச் சொல்லுகிறார்கள். அது சுருங்கிய நூலாதலால் இலக்கணமுடையதும், வழக்குவகையால்வந்த வழுவமைதியுமாகிய இருவகை வழக்கையுந்



தொகுத்துக்கூறியதேயன்றி வேறன்று. நன்னூலிற்சொல்லியமுறை யிலக்கணமுடையதாயின் அதனை அறிந்துவைத்த நச்சினார்க்கினியர் உயர்திணைக்குரியவாயோதப்பட்ட "ஓவு முவ்வு மேயொடு சிவணும்" என்ற சூத்திரவுரையிற் பிறவீறபற்றியேனும், "முறைப்பெயர்க்கிளவி" என்ற சூத்திரவுரையிற் பிறபெயர்பற்றியேனும் 'இவ்வேகாரம் விரித்துரைக்கத்தகும்' என்றமைத்திருக்கவேண்டும். அங்ஙனம் அமையாது அஃறிணையில் அண்மைவிளியு மகப்படத் தெளிநிலையாய்வரும் ஏகாரத்தைக் கொண்டமைத்தமையால் பிற்காலத்தாரும் இவ்வேகாரத்தை யிலக்கணமுடையதாகக் கருதவில்லை யென்பதே வெளியாகின்றது.

இனித் திருவாய்மொழி வியாக்கியானங்களில் மாயோனே என ஏகாரமகப்பட விளியாகக்கொண்டு பொருளுரைத்திருப்பதாகக் காட்டுகிறார்கள். இஃதுண்மையே. மாயோனே என ஏகாரம் அகப்படவிளியாகக்கொண்ட வியாக்கியானமுறை அஃறிணைக்குரிய ஏகாரம் உயர்திணைக்கண் மயங்கிவந்த வழக்குநெறியாதலால் அது வழுவமைதிப்பாற்பட்டது.

மாணவர் கூறியமுறையில் மாயோனே என்று இடைப்பட்டு நில்லாது செய்யுளினிறுதியில் நிற்றலால் ஏகாரம் செய்யுட் சொல்லாய்ச் சிறந்த ஈற்றசையாகவும் 'மாயோன்' என்பது 'மாயோன்'! உன்னைக் காண்பான் என்புழிப்போல அண்மையி யியல்புவிளியாகிய செய்யுட் சொல்லாகவும் இரண்டும் செய்யுட்குச் சிறந்தமையால் அவை இலக்கணமுடையவாயின.

இவ்விருவகை யமைதியுள்ளும் கல்லாதாரும் எளிதிலுணரும்படி பொருள்விரித்துரைத்தலிற் கருத்தூன்றிநின்ற வியாக்கியாதாக்கள் வழக்குச் சொல்லாகக்கொண்டு பொருளுரைத்திருப்பது வழுவாகாது.

இலக்கண விலக்கிய நூலுக்கங்களமைந்த தமிழ்த்திறங்காட்டும் உரைநடைக்கு அவை மாணவர்சொல்லியவாறு செய்யுட் சொல்லாகக் கொள்ளுதல் சிறிதும் தவறாகாது. கருத்து வேறுபாட்டால் இலக்கணம் வேறுபட்டாலும் பொருள் வேறுபடாத இவ்விருவகைக்கொள்கையும் ஒன்றற்கொன்று மாறுபடாவெனவறிக. இவ்விருவகைக் கொள்கையும் தொல்லாசிரியர் துணிபென்பதைக் 'கடல்வண்ணன்' என்பதற்குக் கடல்வண்ணனே என வழக்குச்சொல்லால் அடியார்க்கு

நல்லார் பொருளுரைத்தமையானும் (கலித்தொகை 80) மகன் என்பதற்கு மகனே என்னாது மகன்! என அச்செய்யுட் சொல்லால் நச்சினார்க்கினியர் பொருளுரைத்தமையானுமறிக. இவ்வாறே புறநானூற்றுரையாசிரியரும் கிழவோன் என்பதற்கு கிழவோன் எனச் செய்யுட்சொல்லாற் பொருளுரைத்தனரெனவறிக. வழக்குச்சொற் செய்யுளில்வரக்கூடாதென்னும் விலக்கின்மையால் வியாக்கியானமுறையும் நெறியுடையதே. செய்யுளினீற்றேகாரம் விளிக்குறிப்பாகவே கொள்ளவேண்டுமென்னும் விதியின்மையால் மாணவர் கூறியதும் தவறென்று கொள்ளற்கிடமில்லை.

இனி, "கிழவோனே என்ற பதத்திற்கும் மாயோனே என்ற பதத்திற்கும் உள்ள ஒப்புமைகளில் யாது அத்தியாவசியமாகக் காட்டப்படுதல் வேண்டுமோ அதுவே யில்லாதொழிகின்றது" என்கிறார்கள். இது சிறிதும் பொருந்தாது. ஏனெனில் இரண்டு சொல்லும் செய்யுளிறுதியினிற்றலால் அவற்றினிறுதி யேகாரம் இலக்கணநெறியால் ஈற்றசையாதலும், எஞ்சிய கிழவோன், மாயோன் என்பன முறையே கிழமை, மாயம் என்னும் பண்புப் பெயரடியாக அன்விகுதிபுணர்ந்தவழிக் கிழவன், மாயன் என முடிதலும், ஆன் விகுதி புணர்ந்தவழி (கிழவான் மாயான் எனமுடியாது) நித்தியமாய் ஆவோவாகத்திரிந்து கிழவோன், மாயோன் என முடிதலும், அவை அண்மைவிளியில் இயல்பாதலும், விளி மாத்திரத்தில் இலக்கணப்போலியாய்த் திரிந்தவழி கிழவோய், மாயோய் எனமுடிதலும், வழக்குச்சொல்லாகக்கொண்டு பொருள்தெரியக் கூறுங்கால் கிழவோனே, மாயோனே என ஏகாரம் பெறுதற் கிசைதலுமாகிய எல்லாமுடிபினு மொப்புமை யுடையவாமெனவறிக.

ஆகவே கிழவோன்! என்ற அண்மையியல்பு விளிக்கு (திருவாய்மொழி 6-9-6) "மாயோன்! உன்னைக்காண்பான்" "(திரு-மொழி 6,9,10) மாயோன்! உனக்கேயாளாகும்" என்ற சுத்தமான அண்மையியல்பு விளிப் பிரயோகங்களைக் காட்டுதலைக் காட்டிலும் ஏகாரவிசிஷ்டமாக மாணவர்காட்டிய பிரயோகங்கள் இங்கு மிகவும் பொருத்தமுடையவாயின.

ஆதலால்திருவாய்மொழிமேற்கோளில் விளியுருபு ஸ்பஷ்டமாயிருக்கிறது; இயற்கையண்மைவிளி ஆண்டிலதாமென்றது நிலையாதாயிற்று.



இன்னும் திருவாய்மொழி திருவாசகமுதலியன சங்ககாலத்துக்கு மிகப் பிற்பட்ட காலத்தெழுந்த நூல்களென்றும், சங்ககால வழக்கினை நிச்சயித்தற்கு இவைபோன்ற நூல்களினின்றும் பிரயோகம் எடுத்துக் காட்டுதல் சிறிதும் தகுதியன்றென்றும், சங்கநூற் பிரயோகமே வேண்டுமென்றும் மன்றாடுகிறார்கள்.

திருவாய்மொழி சங்ககாலத்திற்குப் பிற்பட்டதில்லை யென்றும், சங்கநூல் வழக்கினை நிச்சயித்தற்குப் பரிமேலழகர் முதலானவர்களால் திருவாய்மொழிப் பிரயோகம் காட்டப்பட்டிருத்தலால் அது தகுதியுடையதென்றும் முன்னமே காட்டப்பட்டது. திருவாசகமும் தகுதியுடையதென்பதைத் திருவாசக சமான கர்த்திருகமான திருக்கோவையாரினின்றும் "கூழின் மலிமனம் போன்றிரு ளாநின்ற கோகிலமே" எனப் பரிமேலழகர் "புறங்குன்றிகண்டனையர்" என்ற குறளுரையில் உதகரித்தமையானும், "ஆரணங்காணென்பரந்தணர்......எழுத்தென்பரின் புலவோர்........சிற்றம்பலக் கோவையைச் செப்பிடினே" என அபியுக்தர் இலக்கணத்துக்கும் பிரமாணமாகக் கூறுதலானும், "தொல்காப்பியந் திருவள்ளுவர் கோவையார் மூன்றினுமுழங்கும்" என இலக்கணக் கொத்துடையார் இலக்கணத்திற்குத் தொல்காப்பியந் திருக்குறளுடன் ஒப்பிட்டுக் கூறுதலானும் அறியலாம்.

பிறநூல்கள், தொல்காப்பியப் பயிற்சியும் சங்கநூற்புலமையுமுடைய பேரறிவாளரியற்றியவாயின் அவையும் பிரமாணமாகக் காட்டத்தகுமென்றேயறியவேண்டும். இதனால் "பொன்றிகழ் புலியூர் மன்று கிழவோனே" என்ற சிதம்பரச்செய்யுட் கோவை (59) பிரயோகமும் பிரமாணமாகக் கொள்ளத்தகும்.

இன்னும், சங்கநூற் பிரயோகங்களே வேண்டுமாயினும் சென்ற ஆவணிமாதச் செந்தமிழ்ப் பகுதியில் வெளிவந்த "பேராசிரியருரையும் அண்மைவிளியும்" என்ற விளம்புரையில் வெளியிட்டுக் காட்டிய பிரயோகங்களைக்கண்டு தெளியலாம்.

அவை, சிந்தாமணியுள் .(2121)

மின்றோய்வரைகொன்றவேலோன்! புகுதக

7 வென்றேன்! புகுதக எனவும்,

சிலப்பதிகாரத்துள் (வஞ்சிக்காண்டம் 30-70)

மாடலமறையோன்! வந்தெனென்றலும்

மாடலமறையோன்! கொள் எனவும் (நீர்ப்படை அடி, 21)

மணிமேகலையுள் (1—57)

ஆறறிமாபின் அறிந்தோர்! செய்புமின் எனவும்

திருவாய்மொழியுள்,

மாயோன்! உன்னைக்காண்பான்
மாயோன்! உனக்கே ஆளாகும்
மாசூணுதோ மாயோனே!
செய்யூண் மருந்தோ மாயோனே! எனவும்

ஒனீற்றுச் சொற்களும், ஓரீற்றுச்சொல்லும் அண்மையியல்பு விளியில் வந்தனவாகக் காணப்படுகின்றன.

இவ்வாறே கிழவோன்; என்னும் ஒனீறும் அண்மைவிளியி னியல் பாய்வரலாமென்று மேற்காட்டிய இலக்கியங்களும் இலக்கணங்களும் ஆதரிக்கின்றன. கிழவோனே என்ற பதத்தோடும் ஆட்சியோடும் முற்றும் ஒத்துவந்தனவாகவே மாயோனே; என்ற திருவாய்மொழிப் பிரயோகங்களிருக்கின்றன. இவற்றைப் பின்பற்றியதாகவே "பொன்றிகழ் புலியூர் மன்று கிழவோனே" என்ற மஹாகவிப் பிரயோகமும் சிதம்பரச்செய்யுட் கோவையிற் காணலாம். இவற்றையெல்லாம் நம் நண்பரவர்கள் சிறிதும் கவனியாது, கிழவோன் என்பது சங்கநூல்களிலெங்கேனும் விளியாகக் காணப்படுகின்றதா வென்பதைப் பிரயோகங்களாற் றெரியப்படுத்தவேண்டு மென்கிறார்கள்.

இலக்கணமில்லாத சொற்களின் பொருளை நிச்சயிப்பதற்கு இலக்கியப்பிரயோகங் காட்டுதல் மரபு. இலக்கணமுடையதா யறியப்பட்டிருக்கும் சொற்பொருளை நிச்சயிப்பதற்கு இலக்கியப்பிரயோகம் காட்டவேண்டு மென்பது அநாவசியகமென முன்னமே மஹோத சப்தார்த்த நிரூபணத்தில் விளக்கப்பட்டிருக்கிறது. அதை இங்கு அங்கீகரியாது இலக்கியப்பிரயோகமே காட்டவேண்டுமென்பதைச் சித்தாந்தமாகக் கொண்டால் இலக்கணநூலே பயனற்றதாய்முடியவேண்டும்; முடியவே



அங்ஙனம் காட்டுவதற்கும் ஓரிலக்கியம் காட்டி நிரூபிக்கவேண்டும். அதற்கும் மற்றொன்று காட்டி மேலு மேலும் செல்லவேண்டுமாதலால் முடிவு பெறுதலின்றி அனவஸ்தையாமென் றறியத்தக்கது.

ஆகையால், நண்பரவர்கள் கருத்துப்படி இலக்கியப்பிரயோகங் கொண்டே நிரூபித்துக் காட்டவேண்டுமென்பது ஒருவிதத்திலும் சாத்தியப்படாதெனவும், அது வழக்குமுறையன்றெனவும் அறியத்தக்கது.

இன்னும் நம் நண்பரவர்கள், அவ்விலக்கியப் பிரயோகம் செய்யுளினீற்றிலிருக்கவேண்டுமென்றும், ஏகாரத்தோடு கூடியுமிருக்கவேண்டுமென்றும், சங்கநூற்பிரயோகமாகவுமிருக்கவேண்டுமென்றும், கிழவோன் என்ற பெயராகவு மிருக்கவேண்டுமென்றும், அது சிறுபான்மையாய் வாராது பெரும்பாலும் வருவதாயிருக்கவேண்டுமென்றும், வேண்டாத பல நிபந்தனைகளை வேண்டுகிறார்கள். இவ்வாறு இதுகாறும் மேலோர்கள்காட்டிய உதாரணங்களொன்றிலும் காணப்படவில்லை. இப்படியான நிபந்தனைகளுக்கெல்லாம் உட்பட்டே சொற்பொருளறியப் பிரயோகங் காட்டவேண்டுமானால் "இன்பத்தின்பக்கமிருந்தைக்க" என்னும் நாலடியுள் "இருந்தைக்க" என்பதற்குப் பிறிதொரு சங்கநூலுள் ஒரு வெண்பாவின் இரண்டாமடியில் மூன்றுஞ்சீரில் "இருந்தைக்க" என ஒரு பிரயோகமகப்பட்டாலல்லது, அது நான்கனுருபேற்ற முன்னிலை வினைப்பெயர் என்று கொண்டு அவர்கள் பொருள்சொல்லவாவது, பிறர்சொன்னால் அதை அவர்கள் அங்கீகரிக்கவாவது சன்னத்தராயில்லையென்றே தோன்றுகின்றது. இந்நிபந்தனைகளொன்றுமின்றி இலக்கணவிதி பற்றியே அச்சொற்பொருளுணரப் பலரும் சன்னத்தராயிருப்பதால், அப்பலரும் இதனை ஆக்ஷேபிக்கமாட்டார்கள். ஆனால் நண்பரவர்கள் கொள்கைப்படி எல்லாம் பொருந்தியிருப்பதே உதாரணமெனில் அச்செய்யுள் முடமோசியார் பாடிய 13-ம் புறப்பாட்டாயுமிருக்கவேண்டுமென்னும் நிபந்தனையும் அவர்கள் ஏன் சேர்த்துக்கொள்ளக்கூடாது? சேர்த்துக்கொண்டால் அதுவே அதற்குதாரணமாகலாம். அப்படி முற்றும் ஒற்றுமைவேண்டாது ஒருபுடை ஒற்றுமையே போதுமெனின் முற்காட்டிய மெய்யீற்றண்மையியல்புவிளியெல்லாம் உதாரணங்களாகக்கொள்ளலாம்; அல்லது

‘பொன்றிகழ் புலியூர் மன்றுகிழவோனே’ என்ற சிதம்பரச்செய்யுட்கோவைப் பிரயோகத்தையாவது கொள்ளத்தடையில்லை.

இனி 66-வது புறப்பாட்டுமுதலிய சங்கநூற் பாடல்களிலிருந்து “வடக்கிருந்தோனே” “மாயோனே” “கொள்ளாதோனே” என்றற்றொடக்கத்தனவாக ஒனீற்றுச்சொற்கள் பலவும் எழுவாய்ப்பொருளில் வழங்கப்பட்டனவாகக் காட்டுகிறார்கள். அவையெல்லாம்நாடுகிழவோன் என்ற பெயர் எழுவாய்ப்பொருளில் எங்கும் வழங்கத்தகாதென்று யாரேனும் வாதிப்பார்களானால் அதனை நிராகரிப்பதற்கு ஆதாரவாகுமேயல்லது வழக்கிலுள்ள “நாடுகிழவோன்” என்பது எழுவாயாமென்றேனும், விளியன்றென்றேனும், நாட்டுதற்குக் காட்டாகமாட்டாவென்றறியத்தகும். காட்டாகுமாயின் அவை, “பொன்றிகழ்புலியூர்மன்றுகிழவோனே” என்றதனையும் எழுவாயாக்கவேண்டுமென்றறிக.

சப்தங்களின் வர்ணானுபௌர்வியசமானாகாரத்தைக்கொண்டு ஒரு பொருளுடைமையே கொள்வதாயிருந்தால், “மகனெனல் மக்கட்பதடியெனல்” என்னுங் குறள்கடையிலுள்ள எனல்என்னும் சொல்லிரண்டற்கும் வெவ்வேறு பொருள்கொள்ளவியலாது. அன்றியும், பலபொருளொருசொல்லுமில்லாதொழியவேண்டும். அங்ஙனமின்மையால் நண்பரவர்கள் காட்டிய உதாரணங்களொன்றும் மாணவர் கொள்கைக்கு விரோதமாகமாட்டாது.

இனி “ஆயினும் இரண்டோரிடங்களில் இப்படர்க்கைபொரு மை பன்மைச்சொற்கள் விளியாகக் காணப்படுகின்றன” வென்று ந றிணை குறுந்தொகைகளினின்றும் உதாரணங்கள் காட்டிக்கொண் “அவை சுத்தபாடங்களல்லவெனத் தோன்றுகின்றன” வென்கிறார்கள். அவை சுத்தபாடமில்லையென்று நிரூபிக்கப்பட்டாலல்லது தமக்கு தோன்றுவதுகொண்டே முடிவுசொல்வது அங்கீகரிக்கத்தக்கதயில்லை. ஓயீற்றுதாரணங்களும் ஒப்புமையுடையவகா.

இனி, அண்மைவிளிக்கும், விளிமாத்திரத்துக்கும் சிறிது பொருள் வேறுபாடில்லையென்று விவாதிக்கிறார்கள். அண்மைவிளி கும், விளிமாத்திரத்துக்கும் பொருள் வேறுபாடில்லையாயின், அ போலவே சேய்மைவிளிக்கும் பொருள் வேறுபாடில்லையென்பதே ந பரவர்கள் துணிபாகவேண்டும். இது துணிபானால், தொல்காப்பியனா



‘அண்மைச்சொல்லேஇயற்கையாகும்’ என அண்மையல்சொல்லைவிலக்காது, “எல்லாச்சொல்லு மியற்கையாகும்” என்று தொடைபழகுபெற என் சூத்திரஞ்செய்யவில்லையோ? அண்மைச்சொல்லே யியற்கையாகும், எனப் பொருளினண்மையைச் சொன்மேலேற்றி விசேடித்து அண்மையில் சொல்லொழியச் சூத்திரஞ்செய்வதற்குக் காரணமென்னை? இதனைச்சிறிது கவனித்தாலும், அடியார்க்கு நல்லார் திருமால்! முதலியனவும் அண்மைவிளியென்றதைக் கவனித்தாலும்; நச்சினார்க்கினியர் “ஆவுமானியற்பார்ப்பனமாக்களும் பெண்டிரும் பிணியுடையீரும்” என்பதை (புதல்வர்ப் பெறாதீரும் என்பதுமகப்பட) அண்மைவிளியெனக் கொண்டிருத்தலைக் கவனித்தாலும் அண்மைவிளிக்கும் விளிமாத்திரத்துக்கும் பொருள் வேறுபாடுண்டென்பதும், அவை விரவி எண்ணப்படாவென்பதும் தொல்லாசிரியர் துணிபென்று நன்கறியலாம்.

இனி, கவிகருத்து விளிப்பொருளிலிருந்தால் நாடுகிழவோய் எனத் தெளிவுபெற வழங்கியிருப்பர் என்று வாதிக்கிறார்கள். இதுவே வழக்காயின், வென்றோன் புகுதக......வேலோன் புகுதக வென்ற சிந்தாமணிப் பிரயோகங்கள், வென்றோய் புகுதுக வேலோய் புகுதுக என்றும், மாடலமறையோன்! என்ற சிலப்பதிகாரப் பிரயோகம் மாடலமறையோய் என்றும் வழங்கப்பட்டிருக்கவேண்டாமா? அவ்வாறு வழங்கப்படாமையா லவையெல்லாம் எழுவாயாய்விடுமோ? அண்மைவிளிக்கும் விளிமாத்திரத்துக்கும் சங்கநூல்வழக்கில் வேறுபாடு காணப்படவில்லை யென்கிறார்கள். திருமுருகாற்றுப்படை யுரையுள் சொன்முடிபுகூறுமிடத்து விளிமாத்திரத்தால் விளித்து எதிர்முகமாக்கிய பின்பே அண்மைவிளியாற் றுதிப்பதாக வேறுபடுத்திக் காட்டியிருத்தலால் வேறுபாடுண்டென்றறியலாம். இதனாலும் வேறுபாடில்லையென்பது நிலைபெறாதாகின்றது.

புறநானூற்றின் 135-ம் பாட்டில் எந்தை! மலைகெழுநாடன்! என்ற இயற்கை யண்மைவிளிக்கும், நாடுகிழவோய்! என்ற விகாரவிளிக்கு யாதொரு வேறுபாடுமில்லையென்று காட்டுகிறார்கள். எதிர்முகமாகாத நிலையில் நாடுகிழவோய்! என விளித்து, எதிர்முகமானபின் துதிகேட்பி கும் நிலையில் அண்மைவிளி வழங்கப்பட்டதாகக் கொள்ளில் இழு

கென்னை? இப்பாட்டுரையில் நாடுகிழவோய் என்னும் விளிமாத்திரத்தையே உரைகாரர் முதலில்வைத்துச் சொன்முடிபு காட்டியிருக்க, அதற்கு விரோதமாக அண்மைவிளிகளை முதலில்வைத்து நண்பரவர்கள் காட்டியிருப்பதும் அதனை மறைப்பதாயிருக்கிறது.

இனி; கடைசியாகச் சந்தேகம்பிறத்தற்குச் சிறிதும் இடமின்றிக் "கிழவோயே" என அமைத்துக் கூறுதல் முடமோசியார்க்கு எத்துணையோ எளிதாயிருப்பவும், அங்ஙனம் அவர்செய்யாமைக்குத் தக்க காரணமொன்று காட்டவேண்டுமென்கிறார்கள். அப்படியானால் கடல்வண்ணா! வென்னாது கடல்வண்ணன்! என்ற சிலப்பதிகாரப் பிரயோகத்துக்கு என்னகாரணம் கண்டிருக்கிறார்கள்?

ஈண்டுக் கிழவோய்! கடல்வண்ணா! வென்பன அண்மைவிளியாகாவாதலால், அண்மைவிளியால் வழங்கவேண்டும் அந்தரங்காபிமுக்கியத்தில் விளிமாத்திரத்தால் வழங்குவது பிழையாமென்றறிந்தே யொழிக்கப்பட்டதென் றறியத்தக்கது.

விளிமாத்திரப் பிரயோகத்துக்கும், அண்மைவிளிப் பிரயோகத்துக்கும் பொருள் வேறுபாடு மிகுதியுமுண்டு. விளிமாத்திரப்பிரயோகம் (படர்க்கையோரை) அநபிமுகமாயிருப்போரை முன்னிலையாக்குமளவில் வழங்கப்படுவது. அண்மைவிளிப் பிரயோகம் முன்னிலையாயிருப்பாரைக் கேட்பித்தல், அல்லது துதிப்பொருளானுவப்பித்தல் முதலிய பொருள் வேறுபாட்டில் வழங்கப்படுவது. இதனை இக்காலத்தும் அரசன் அபிமுகமாயிருந்து உரைகேட்குமிடத்து உரைப்போர் இடையிடையே 'மஹாராஜ' என்ற அண்மைவிளிப்பிரயோகம் சாதாரண வழக்கில் வழங்குதலானுமறியலாம். இங்கு முன்னிலையாக்கற் பொருளின்றியே உவப்புறக் கேட்பித்தற் பொருள்பயந்து நிற்றல்காண்க. இங்ஙனம் பொருள் வேறுபாடுடைமையால் ஒன்றற்கொன்று பரியாயச் சொல்லாகாவென வறியத்தக்கன. இதனால் நண்பரவர்கள்காட்டிய ஓயீற்றுப்பிரயோகங்களெல்லாம் உதவா தொழிகின்றன.

ஆதலால் சேரனோடு அந்தரங்கத்தில் உடனுறைந்து உரையாடிநிற்கும் முடமோசியார்க்கு அச்சேரன் படர்க்கையாகாது முன்னிலையாதல் சித்தித்திருத்தலால் நாடுகிழவோய் என்னும் விளிமாத்திரப் பிரயோகம் பொருளற்றதாயும், துதிப்பொருளால் உவப்புறக் கேட்பிக்கும் அண்மைவிளிப் பிரயோகம் பொருளுடையதாயு, மிருத்தலால் நாடுகிழவோய்! என்னாது, நாடுகிழவோன்! என்றாரென்றறியத்தக்கது.



இனி நண்பரவர்கள் தமது துணிபாகிய தமிழ்ச்சரித்திர வாராய்ச்சிகொண்டு முற்கால வழக்கத்தில் மெய்யீற்றியல்புவிளி யில்லையென்றும் பிற்காலவழக்கில் நாளடைவில் அது மிக்கு வழங்கப்பட்டு வளர்ந்துவருகிறதென்றும் கருதுகிறார்கள். இதுவும் விபரீதமே. ஏனெனில் 'வேற்றுமைதாமே எழெனமொழிப' என்ற தொல்காப்பிய சூத்திரப்பொருளையும், "ஏழியன்முறைய தெதிர்முகவேற்றுமை, வேறெனவிளம்பான் பெயரது விகாரமென், றோதியபுலவனு முளனொருவகையான், இந்திரன் எட்டாம் வேற்றுமை யென்றனன்". என்ற அகத்தியச் சூத்திரப்பொருளையும் சற்றுற்று நோக்குங்கால், கழிபண்டைக்காலத்தார் விளியை ஒருவேற்றுமையாகக் கொள்ளாது பெயரின் இயல்பால் விளிப்பொருளையும் வழங்கிவந்தனரெனவும், பிற்காலத்தே எகர ஒகர, மெய்களுக்குப் புள்ளியடையாளம் கொடுத்து வேறுபடுத்ததுபோல அஃறிணை யல்லாதபெயர்களில் ஈறுதிரிதலும், ஈற்றயனீடலும், பிறிதுவந்தடைதலுமாகிய விகாரங்களைச் செய்து வேறுபடுத்தனரெனவும், அவ்வேறுபாடே நாளடைவிற்பெருகி இயல்பு வழக்குக்குறுகி அண்மைவிளியளவாயிற்றெனவும் அறியக்கிடத்தல் காண்க.

இவ்வாறாகிய அண்மை இயல்புவிளி சங்ககாலத்திலும் அதன் முன்னும் அண்மைப்பொருளில் எல்லாவீற்றுக்குமுரியதாய் வழங்கப்பட்டு வந்திருக்கவும், பிற்காலத்து நூல்களிற் சங்கநூற்புலமையும் தொல்காப்பியப் பயிற்சியுமுள்ள சில மகாகவிப்பிரயோகங்களைத்தவிர ஏனையோர் பிரயோகங்களில் மெய்யீற்றண்மை யியல்புவிளிப்பிரயோகம் காணப்படாமையால், பார்ப்பனவீட்டுப் பசுக்கன்று தன்தாய்க்கு முலையுண்டோவென்று கேட்டகதைபோல் மெய்யீற்றுயர்திணைச் சொற்களுக்கு அண்மையியல்புவிளி யுண்டோவென்று இக்காலத்து நம்மனோர் ஐயுறவெய்த நிற்பதே விளிமரபுபற்றிய தமிழ்ச்சரித்திரச் சுருக்கமாமென்றறியத்தக்கது.

இதுகாறுங் கூறியவாற்றால் மாணவர்காட்டிய திருவாய்மொழிப் பிரயோகம் நாடுகிழவோன் என்பதற்குக் காட்டாகத்தக்கதென்றும், அது அண்மையியல்புவிளி யாகலாமென்றும், வியாக்கியானத்தில்

ஏகாரமகப்படக்கொண்டது பொருள் தெரியக்கூறுங் கருத்துடைய வழக்குமுறையென்றும், அதில் ஏகாரம் விளியுருபு அன்றென்றும், அவ்வண்மைவிளியையே அது வெளிப்படையாக்குங் குறிப்புடைய தென்றும், பொருள் வேறுபடாமையாலும் இலக்கணமுடைமையாலும் மாணவர்கொண்டமுறை பிழைபடுவதன்றென்றும், இலக்கணவிலக்கிய நூனுக்கமுள உரைநடைக்கண் செய்புளிறுதி ஏகாரம் ஈற்றிசையாகக் கொள்ளுதல் தவறுசாதென்றும், நண்பரவர்கள்காட்டிய எழுவாய்ப்பிரயோகங்கள் மாணவர்கொள்கையை விரோதிக்கவில்லையென்றும் மற்றும் அவர்கள் கட்சிக்கு ஆதாரவாகக்காட்டியனவெல்லாம் அசித்தியுடையனவென்றும் நாடுகிழவோன் என்பது அண்மைவிளியாகலாமென்றும் நிரூபிக்கலாயிற்று.

பத்திராதிபர்.

---

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| ௫௨௧ | ௪ | அற்பிசி. | ஐப்பசி. |
| ௫௨௨ | ௨௩ | திணே. | திணை. |
| ௫௨௩ | ௧ | யாரய்ச்சி. | யாராய்ச்சி. |
| ,, | ௧௩ | மெற்கோள். | மேற்கோள். |
| ௫௨௮ | ௧௧ | தமி. | தமிழ். |
| ,, | ௧௬ | பரிகரிக்கப. | பரிகரிக்கப். |
| ,, | ௨௨ | உரைசாரியர். | உரையாசிரியர். |
| ,, | ௨௪ | பாட்டினுள்ள. | பாட்டினுள்ள. |

---



# பதார்த்ததீபிகை.

## முற்றேடர்.

## கந்தமும்பரிசமும்.

நாற்றங் கிராணங் கவருங் குணங்கிதி நண்ணுவது
சாற்று மிருவகை நன்றெனத் தீதெனச் சாருந்துவக்
கூற்றுள வோர்குண மன்னது மூவகை யூதையந்தந்
தோற்றுங் குளிர்சுட நீநீ ரவைபிற தோற்றமின்றே.

(இ-ள்) நாற்றம் கிராணம் கவரும் குணம்; நாற்றமாவது கிராணைதாற் கவரப்படும் ஒரு குணமாம்; கிதி நண்ணுவது—அது பிருதிவிக சண்ணிருப்பது—சாற்றும் இருவகை—சொல்லப்படும் இருவகையாகும்,—நன்று என தீது என சாரும்—அவ்விருவகையும் நறுநாற்றம் என்றும், தீநாற்றம் என்றும் பொருந்தும்,—ஊறு துவக்களவு ஓர் குணம்—பரிசமாவது துவக்கான் மாத்திரம் கவரப்படும் ஒரு குணம்;—அன்னது மூவகை—அப்பரிசம் குளிர், சூடு, குளிருஞ் சூடுமில்லது என்னும் வேறுபாட்டால் மூவகையாகும்;—ஊதை யந்தம் தோற்றும்—வாயு பரியந்தம்வெளிப்படையாயிருக்கும்,—குளிர் நீர் சுடல் தீ—குளிர் நீரிலே இருப்பது; சூடு நெருப்பிலிருப்பது;—அவை பிற தோற்றமின்றே—குளிருஞ் சூடுமாகிய அவையிரண்டும் பிருதிவி வாயுக்களிலே தோன்றுதல் இல்லே. எ-று.

கிராணம் நாசிநுனியிலிருக்கும் பிருதிவியிந்திரியம். கிதி—பிருதிவி. க்ஷிதி என்னும் வடமொழி கிதி எனத்தற்பவமாயிற்று; இருக்கைக்கு ஆதாரம் எனப்பொருள்படும். நறு நாற்றமாவது எதிரே மணந்தறிவார்க்குச் சுகங்கொடுப்பது. தீ நாற்றமாவது மணந்தறிவார்க்குத் துக்கங்கொடுப்பது. இவ்விருவகை நாற்றமும் சிலவிடங்களிலே நீரிலும், சிலவிடங்களிலே வாயுவிலும் நுண்மையான பிருதிவியுறுப்பின் சம்பந்தத்தாலே தோன்றுவதுண்டு. அதுபற்றி நீரிலும் வாயுவிலும் நாற்றம் உண்டு என்று கொள்ளற்க. இன்னும் நாற்றத்திலே வெளிப்பட்ட நாற்றம், வெளிப்படா நாற்றம் எனச்சொல்லும் வகையும் உண்டு. வெளிப்பட்ட நாற்றம் கஸ்தூரிமுதலியவற்றிலும், வெளிப்படா நாற்றம் கிராணம் முதலியவைகளிலும் இருக்கும்.

வெளிப்பட்ட நாற்றத்தை உற்பூதகந்தமென்றும், வெளிப்படாநாற்றத்தை அநுற்பூத கந்தம் என்றும் வடநூலார் சொல்வர். உற்பூதம்—தோன்றியது. உத்—மேலே. பூ—ஆதல். அநுற்பூதம்—தோன்றாதது. அந்—இன்மை. உற்பூதம்—தோன்றியது. ஊறு—பரிசம். எதுகை நோக்கி ஊற்று என விகாரமாயிற்று.

பரிசம்—ஊறு. பரிச்—தொடுதல் கிரகித்தல். ஊறு—உறுதல். துவக்கு—தோலின்கண்ணுள்ளது. பிருதிவி, நீர், தேயு, வாயு என்னும் நான்கு பூதங்களிலும் பரிசம் வெளிப்பட்டிருக்கும் என்பது போதர ஊதையந்தம் தோற்றும் என்றார். ஊதை—வாயு. தேயுசம்பந்தத்தினாலே சில நீரில் வெம்மையும், தேயுமயமாகிய சந்திரன் முதலியவற்றிலே சலசம்பந்தத்தால் தண்மையுந் தோன்றுதல் உண்டு. அது பற்றி நீரிலே வெம்மையும், சந்திரனிலே தண்மையும் உள எனக்கொள்ளற்க. அவை என்றது குளிர் சூடுகளை. பிற என்றது பிருதிவி வாயுக்களை.

இங்ஙனம்
அ. குமாரசுவாமிப் பிள்ளை.

---

## பிழைதிருத்தம்.

செந்தமிழ் (தொகுதி-17, பகுதி-11, பக்கம்-514, வரி-25)

"இடையினத்தை விலக்காததும் குறினெடிலும்,
வலிமெலியும் இனமாமெனவும் விரிக்காதபொழுது
இச்சூத்திரம் குன்றக்கூறலாய்முடியும் என்றறிக."

என்றவாக்கியத்தை

"இச்சூத்திரம் இடையினத்தைவிலக்காமலும் குறி
னெடிலும் வலிமெலியும் இனமாம் என இணைக்
காமலும் சென்றாற் குன்றக்கூறலாய் முடியும் என்றறிக"

எனத் திருத்திக்கொள்க.

இங்ஙனம்
K. S. நவநீதகிருஷ்ணபாரதி.

# யவனர்.

யவனரென்பது பொருட்பெயராகும். யவனதேசத்தில் உற்பத்தியானவரென்று இதன்பொருள். முன்னொருகாலத்தில் யவனர்கள் நமது இந்தியா நாட்டை வியாபித்து இருந்தார்கள். கிறிஸ்துஜனனத்திற்கு முன்னமே இவர்கள் பிராபல்ய மடைந்தார்கள். சுக்கிராசாரியர் தனது நீதிசாஸ்திரத்தில் யவனர்களை நாஸ்திக மதத்தினராகக் கூறியிருக்கின்றார். முத்திராராக்ஷச நாடகத்தில் மிலேச்சர்களைக்குறிக்கும் பலவிடங்களில் யவனர்களை மிகத் தைரியவந்தர்களாகவும் அவர்கள் மகதநாட்டுப் பூபதிகளுடன் போர்புரிந்ததாகவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது. ஆர்யபட்டரென்ற ஆதிகாலத்து ஜோதிடநூலாசிரியர் யவனர்களிடமிருந்தே ஜோதிட நூலைக்கற்றதாக வழங்குவதுண்டு. ஆனால் வடமொழி ஜோதிடநூல்களில் யவனசித்தாந்தமென்று ஒன்று இருக்கின்றது. யவனர்களது சப்தங்களும் அநேகமாய் நூல்களிற் காணப்படுகிறது. கவிச்சக்கரவர்த்தியான காளிதாசனும் தனது ரகுவம்சகாவ்யத்தில் யவனஸ்திரீகள் மிக்க அழகுவாய்ந்தவரென்று வர்ணித்து இருக்கின்றான். இக்காரணங்களால் நம்ஹிந்துதேசத்தில் யவனர்கள் ஒருகாலத்தில் கியாதிபெற்றிருந்தனரென நன்குவிளங்குகிறது.

ஆனால் இவர்களது வாசஸ்தலம் முதலியவற்றைப் பற்பலவிதமாக ஆராய்ந்து நோக்குமிடத்து அவர்கள் ஹிந்துதேசத்தினரென்று கூறுவதற்கு இடமில்லாமலிருக்கின்றது. ஆனாலோ மேற்குத்திக்கிலிருந்து வந்தவர்களாகவே அவர்கள் விளங்குகிறார்கள். ஆனதால் நமதுநாட்டிற்கு மேற்குப்பாகத்தில் ஏதோ சிலதேசங்களுள்ளன. அவைகளில் இவர்களது இருப்பிடம் எது என்று ஆராய்வோம்.

நாம் நமது நாட்டிற்கு மேற்குப்பாகத்தில் காந்தாரதேசமிருப்பதாக முன்னமே அறிந்து இருக்கின்றோம். அந்தத்தேசத்து மன்னனது புதல்வியாகிய காந்தாரியைக் கௌரவ பிதாவான திருதராஷ்டிரன் கலியாணம் செய்துகொண்டதாக இதிஹாஸம் முறையிடுகிறது. ஆனால், ஒருசமயம் காந்தாரதேசத்தை நக்னஜித் என்ற பெயருடைய மன்னனொருவன் ஆண்டதாக ருக்வேதத்தைச் சம்பந்தித்த ஐதரேயப்பிராமணம் பிரஸ்தாபிக்கின்றது. இவையிரண்டிலும் வைத்து எது முன்னமே

இருந்தது என்று கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனதால் அவ்விஷயத்தில் பெரியோர்களே பிரமாணமாயிருக்கின்றார்கள். காந்தாரதேசத்தின் மேற்குப்பாகத்தில் பாரசீக தேசம் இருக்கின்றது. காளிதாசமஹாகவி இக்ஷ்வாகு வம்சத்திற் பிறந்த ஓர் அரசன் பாரசீகாதிபதியொருவனை ஜயித்ததாகக் குறித்திருக்கின்றார். காலாதிகளொன்றும் புலப்படவில்லை.

பாரசீகதேசத்திற்குக் கொஞ்சத்தூரத்திற்கு அப்பால் அரபிதேசம் விளங்குகிறது. இந்தத்தேசம் லக்ஷணம்வாய்ந்த புரவிகளின் உற்பத்தியிடமென்று பிரசித்தி உண்டு. மணற் காடுகளும் மிகுதியாய்க்காணப்படுகின்றன. ஆகையால் ஒட்டகைகளும் ஏராளமாய் உள்ளன. ஹிந்து ஜனங்களுக்குக் காசிமாநகர் எவ்விதமோ அதுபோல அரபிதேசத்தவர்களுக்கு மக்கா என்னும் இடமானது பக்திஸ்தலமாய் விளங்குகிறது. இவ்வரபிதேசத்தின் மேற்கில் ஈஜிப்ட் தேசமானது இருக்கின்றது. இந்தத்தேசத்தில் ஸுல்தானென்பவன் அரசன். நைல் என்ற ஓர் நதியானது இந்தத் தேசத்தைச்சுற்றி இருக்கின்றது. இவ்வாறு மத்யமகாசமுத்திரத்திற்போய்ச்சேருகிறது. சேருமிடத்தில்அலக்ஸாண்டர்பூரி என்னும் நகரமானது விளங்குகிறது. அலக்ஸாண்டர் என்னும் வீரன் புதிதாய் அவ்விடத்தில் இராஜ்யத்தை ஸ்தாபித்ததால் அவ்விடத்திற்கு அலக்ஸாண்டர்பூரி என்று பெயர். இவ்விடத்திலிருந்து கப்பலேறிச்சென்றால் க்ரீஸ் தேசம் அடையலாம். இதையே நாம் யவனதேசமென்றுசொல்லுகிறோம். இந்தத்தேசத்தவர்களது மதத்தையும் , நமது ஹிந்துமதத்தையும் ஒத்துநோக்குமிடத்து ஏகதேசம் இரண்டு மதங்களும் ஒரே இடத்திலிருந்து உற்பத்தியானதாகக் கூறலாம். முதன்முதலில் நம்மவர்களுக்கு இராமசரிதம் மகாபாரதம் இருப்பதுபோல அவர்களுக்கும் கிரந்தங்களிரண்டுண்டு. அவைகளின் பெயர் ஒடிஸியஸ், இலியாட் என்பதாம். நமது இதிஹாஸங்களை வியாசர் இயற்றியதுபோல அவர்களது இதிஹாசங்களையும் ஹோமர் என்னும் ஓர் மகாகவி இயற்றியிருக்கின்றார். இரண்டிலும் கதாபாகம்கூட யோஜித்திருப்பதாகக் கூறுகிறார்கள். ஆனாலது உண்மையோ என்பதிற்றான் சந்தேகம். மன்மதனுக்கு மத்ஸ்யக்கொடி அடையாளமாய் விளங்குவது இரண்டு மதக்காரர்களுக்கும் சமமாகவே இருக்கின்றது. இருவருடைய நாடகநூல்கள் ஒரேவழியில் இயற்றப்பட்டிருக்கின்றன.



இங்கிலீஷ் பாஷையில் நாடகங்களை Tragedy (துக்கத்தில் வந்து முடிவது) என்றும் Commady (சுபத்தில் வந்து முடிவது) என்றும் இரண்டுவிதமாக விரித்திருக்கின்றார்கள். நமது ஹிந்து நாடகங்களிலும் க்ரீக் நாடகங்களிலும் துக்கத்தில்வந்து முடியக்கூடிய நாடகங்களைக் காண்பது முயற்கொம்பாயிருக்கும். அதற்குக் காரணம் என்னவென்றால் நம்மதத்தில யாருக்கு எவ்வித கஷ்டம் நேர்ந்துவிட்டாலும் பிறகு அவர் அந்தியகாலத்தில் ஈச்வரனது பிரசாதத்தினால் சுகமாய் வாழ்வாரென்ற ஓர்கருத்தே.

ஹிந்துக்களுக்கு ஆதிகாலத்தில் சமஸ்கிருதமே பாஷையாயிருந்தது என்பதற்கு அவர் அக்காலத்தியற்றிய வேதபுராணேதிஹாசாதிகளே தக்க சான்றாகும். நம்முன்னோர்களெல்லோரும் இப்பாஷையை ஸ்வரத்துடன் உச்சரித்து வந்தார்கள். வடமொழிக்கு இலக்கணமியற்றிய பாணினிமகரிஷிகாலத்திலும் சுவரத்துடனே பேசுவது வழக்கமாயிருந்தது. இக்காலத்தில் ஸ்வரமின்றி உச்சரிப்பதே கஷ்டசாத்தியமாயிருக்கின்றது. க்ரீக் பாஷையும் ஸ்வரத்துடன் உச்சரிக்கவேண்டும் பாஷையாயிருந்தது. இப்பொழுது இவ்விரண்டு பாஷைகளும் வழக்கொழிந்துவிட்டன. க்ரீக் தேசத்தவர்களது ஜோதிட சித்தாந்தங்கள் அநேகமாய் நம்மிந்தியாவிற் காணப்படுகின்றன. ஆதலின் இவ்விரண்டு பாஷைகளுக்கும் உற்பத்திபீடம் ஒன்றாயிருக்கவேண்டுமென்று சொல்லப்பட்டது.

இந்த க்ரீக்தேசத்தில் அலக்ஸாண்டர் என்று ஓர் அரசன் இருந்தான். இவனதிபால்யத்திலே மிகவும் பராக்ரமியாயிருந்தான். தனது 16-வது வயதில் யுவராஜனாகப்பவித்துப் பிதாவின்சேனைக்கு நாயகனாய் விளங்கி சகல எதிரிகளையும் வென்றான். இவனது பிதாவோ அதிவீரனை ஓர் புதல்வன் தனக்கு உதித்துவிட்டதால் அதேதனது வாழ்நாளில் உத்தமமான சுகமெனக்கருதிச் சந்தோஷங்கொண்டிருந்தான். தனது பிதா பரலோகம் சென்றதும் அலக்ஸாண்டர் சதுரங்கபலசமேதனாய் மனதில் திக்விஜயக்கொள்கைகொண்டு தனதுநாட்டைவிட்டுப் புறப்பட்டான். யூரோப்பாகண்டத்தைக் கீழ்ப்படுத்திவிட்டு, பாரதகண்டத்தையும் ஒரேயுத்தத்தில் வெல்லவேண்டுமென்ற பேராவலுடையவனாகி 12000 காற்படையாட்களோடும் 15000 புரவிச்சைன்யங்களோடும், பாரததேசத்திற்கு மேற்குக்கோட்டைபோற் சோபிக்கும் ஹிந்து

குஷ் பர்வதத்தைக் கடந்து, கபிலா, சிந்து, இந்த இரண்டு நதிகளுடையவும் சங்கமஸ்தலமான புஷ்கலாவதிநகரையடைந்தான். 2230 வருஷங்களுக்கு முன் புஷ்கலாவதிதேசத்தை அஸ்தஸேனன் என்னும் அரசன் பரிபாலித்துவந்தான். அலக்ஸாண்டர் அஸ்தஸேனனுடன் ஒருமாதகாலம் போர்புரிந்தான். அதில் அலக்ஸாண்டர்ஜயமடைந்தான்.

கபிலாநதியின் வடபாகத்தில் அச்வகர் என்று ஓர் இனத்தார் இருந்தார்கள். இவர்கள் யுத்தசூரர்களென்றும் ஹிந்துமதத்தில் பிரதானிகளென்றும் நாமிப்பொழுது அனுபவித்துவரும் வர்ணாச்ரமாசாராதிகளெல்லாம் இவர்கள் ஏற்படுத்தியதென்றும் நமது பழையநூல்களால் தெரியவருகின்றது. இந்த அச்வகக் கூட்டத்தினர்களுக்குப் பிரதானியாய் விளங்கியவன் பெயர் அச்வசேனன் இவ்வச்வசேன மன்னனுக்கு மசகாவதீ என்று பெயருடைய தேசம் ராஜதானியாயிருந்தது. இந்தராஜதானியில் சத்ருக்களால் எதிர்க்கமுடியாத கோட்டைகளும் கொத்தளங்களும் பலவிருந்தன.

அதிகப்பிரமான சேனாசமூஹத்துடன் வரும் அலக்ஸாண்டரைக் கண்ணுற்ற அச்வகர்கள் பயத்தால் நடுங்கிப் பர்வதங்களிலும் கோட்டைகளிலும் அகழிகளிலும்போய்ப் புகுந்துகொண்டார்கள். ஆயினும் அச்வஸேனன் ‘தைரியம் புருஷலக்ஷண’ மென்றபடி தைரியத்தைக் கைவிடாது கொஞ்சச் சேனைகளுடன் எதிரியை எதிர்த்தான். இந்த யுத்தத்தில் அச்வசேனன் வீரசுவர்க்கமடைந்தான்.

அக்காலத்தில் க்ஷத்திரியர்கள் எவ்விதம் யுத்த சூரர்களாயிருந்தனரோ அதுபோல க்ஷத்திரியமாதர்களும் ஆயுதாப்பியாசம் முதலிய செய்திருந்தனர் என்பதில் இவ்வச்வசேனமன்னவனின் மாதாவே தக்கசான்றாகும். ஏனெனில் அச்வசேனன் இறந்ததும் அவனது சதுரங்கபலங்கள் யவனாதிபதியைச் சூழ்ந்தன. உடன் அச்வசேனனது மாதா தனுஷ்பாணியாயிருந்துகொண்டு அவனுடன் போர்புரிந்தனள்.

..........................................................................................

..........................................................................................



யுத்தமானது அநேகமாதங்கள் நடந்துகொண்டிருந்தது. பிற்பாடு அலக்ஸாண்டர் சைன்யசமேதையான அவ்வனிதையைப் பிடித்துச் சிறையிலடைத்தான். இவ்வர்த்தமானத்தைக் கேள்வியுற்றதும் அப்பெண்ணின் தமையனான ஓர் கிழட்டரசன் கொஞ்சம் சேனாபலத்தைச் சேகரித்துக்கொண்டுவந்து யவனாதிபதியோடுகூடப் போரில் மன்றாடினான். ஆயினும் ஜயம்பெறுவது அசாத்தியமாகவே தோன்றியது.

இந்தப்பிரகாரம் அலக்ஸாண்டர் அச்வகஜனங்களை அடக்கிவிட்டு காச்மீரதேசம் சென்று இமயசைலத்தின் தாழ்வரையிலுள்ள விதஸ்தா என்னும் ஆற்றின் கரையிலுள்ள, அபிஸார என்று கூறப்படும் ஓர் ஜில்லாவைத் தன்வசம்கப்படுத்திவிட்டுத்திரும்பவும் புஷ்கலாவதிதேசத்தையே வந்தடைந்தான். அப்பொழுது மழைகாலமானது இவனை எங்கும் போர்புரியவிடாமல் தடஸ்தமாய் வந்துசேர்ந்துகொண்டது. என்ன செய்வான்? வருஷாகாலம் முழுதும் சிந்துநதியின் கரையில் தங்கலானான். மழையின் மும்முரம் முடிந்ததும் தனது சைனியங்களிடம் சிந்துநதியைத் தாண்டுவதற்கு ஆக்ஞையிட்டான். இதினிடையில் தக்ஷசிலா நகரத்திற்கு அதிபன் அலக்ஸாண்டருடன் சக்யம்கொள்ள ஆசைகொண்டவனாய்த் தூதுவரை அனுப்பினான். யவனாதிபதியும் வந்த தூதர்களை உபசரித்து தக்ஷசிலாதிபனின் வேண்டுகோளின்படி அவனது நாட்டுக்குச் சென்றான். யவனர்களெல்லோரும் அவ்வரசனால் நன்கு மதிக்கப்பட்டார்கள். அக்காலத்து நாகரிகத்தின்படியுள்ள நாடுகளில் வைத்து தக்ஷசிலா நகரமே மேற்பட்டதென யவனர் விளம்பரம் செய்துகொண்டார்கள்.

விதஸ்தா, சிந்ரி, இவ்விரண்டு நதிகளுக்கும் மத்யபாகத்தில் ஓர் ராஜ்யம் இருக்கின்றது. இந்ததேசம் புரு என்னும் குலத்திலுள்ள ஓர் அரசனால் பரிபாலிக்கப்பட்டது. இவ்வரசன் துஷ்யந்தனாகவோ அல்லது அவனது புதல்வன் பரதனாகவோ இருக்கக்கூடும். ஏனெனில் காளிதாசன் தனது சாகுந்தளத்தில் துஷ்யந்தனைப் புருகுலத்திலுதித்த பௌரவனென்று.

.......................................................................................

.......................................................................................

என்னும் செய்யுளில் கூறியிருக்கிறான். தக்ஷசிலா பட்டணத்தரசனுக்கும் பௌரவனுக்கும் வெகுகாலமாகவே வைரமுண்டு. அதை இப்பொழுதே தீர்த்துவிடவேண்டுமென்றுள்ளத்தில் கருதிய தக்ஷசிலாதிபன் அலக்ஸாண்டரை ஏவிவிட்டு அவனுக்கும் பௌரவனுக்கும் கலஹத்தை மூட்டிவிட்டான்.

அந்தோ? நம்முன்னோர்களின் மூடத்தன்மையை என்னவென்றுரைப்பது. பௌரவனுக்கும் தக்ஷசிலாதிபனுக்கும் விரோதம் நேரிட்டிருந்தால் அதில் அன்னிய தேசத்திலிருந்து வந்திருக்கும் வீரனுக்கு இடங்கொடுப்பது நியாயமாமோ? இவர்கள் மகாபாரதம் முதலியதுகளைக் கசடறக் கற்றிருந்தும்

"பரஸ்பரவிவாதே து வயம் பஞ்ச தே சதம்
அந்யைஸ்ஸஹ விவாதே து வயம் பஞ்சோத்தரம் சதம்"*

என்னும் அர்ச்சுனனது நீதிச்சொல்லை மறந்துவிட்டார்களே. உண்மையாக இரண்டு மன்னர்களும் சேர்ந்து வந்திருக்குமெதிரியை எதிர்க்கவேண்டியிருக்க மூடபுத்தியான தக்ஷசிலாதிபன் அவனைச் சக்யம் பண்ணிக்கொண்டு பௌரவனுடன் சண்டைக்கனுப்புவது ராஜநீதியின் கருத்தோ? இது முதலிய காரணங்கள்கொண்டே நமது அரசர்களெல்லோரும் அரசுரிமையைக் கைவிட்டனர். என்ன செய்வது?

அலக்ஸாண்டர் பௌரவனைச் சூழ்ந்தான். இப்பௌரவனுக்கு 300 பட்டணங்களும் 400 இரதங்களும் 200 யானைகளும் 400 குதிரைகளும் 50000 காலாட்படையும் இருந்தன. அவைகளையவன் விதஸ்தா நதியின் வடகரையிற்கொண்டு ஸ்தாபித்துவிட்டுச் சகாயத்திற்கு வருவதாக முன்னமே கூறியிருந்த காச்மீர ராஜனை எதிர்நோக்கி நின்றான். இவைகளையெல்லாம்நோக்கிய அலக்ஸாண்டர் கொஞ்சம் பயங்கொண்டு நடுங்கினான். ஆயினும் பௌருஷத்தைக்காண்பிப்பதே சரியென்று துணிவுபெற்றவனாகத் தனது சைனியத்தை இரண்டாகப்பிரித்து ஓரம்சத்தைக் காச்மீரராஜனின் எதிரிலும் மற்றொன்றைப் பௌரவனின் எதிரிலும் விட்டான். க்ஷத்திரியசூரனாகியபௌரவன்யானையானது பத்மவனத்தைப்போல யவனாதிபனின் சேனையை உலைத்துவிட்டது. ஆனால் எங்கோ பிசகுநேரிட்டுப் போதமின்றி விழுந்தனன். இதைக்கண்ணுற்ற அவனது சேனை பயங்கொண்டது. பௌரவன் பிற்பாடு சற்றுத் தெளிந்தெழுந்து தனதுபூர்வவிரோதியான தக்ஷசிலாதிபனால் யுத்தத்தை நிறுத்தவேண்டுமென்று வேண்டிக்கொள்ளப்பட்டாலும் தான் சகாயமின்றி இருந்துகொண்டே ஓர்மதித்த கஜத்தின்மீதேறிக்கொண்டு யுத்தஞ்செய்யத் தொடங்கினான். அலக்ஸாண்டர் இவனது சாமர்த்தியத்தைநோக்கி மகிழ்ந்தவனாய் யுத்தம் செய்யாமல் ராஜ்யத்தைப் பௌரவன்கையிலளித்துவிட்டுச் சென்றான்.

அனந்தரம், சதத்ரு நதிக்கரையிலிருக்கும்.........த்திரக........ ஜனங்களை ஜயித்துவிட்டு கேகயராஜ்யம்......நோக்கிச்சென்றான். இவ்விராஜ்யமானது பண்டு, கைகேசிதேவியின் பிறந்த அகமாயிருந்தது. கேகயராஜ்யத்தின் அரசனது புதல்வி என்னும் பொருள்கொண்டு கைகேயி என்னும் நாமம் வாய்ந்தது. இவ்விராஜ்யத்தை இப்பொழுது அஸ்வபதி என்னும் ஓர் அரசன் அரசாக்ஷி செய்துவருகிறான். இவன், சத்யவானின் மனைவியாகிய சாவித்திரிதேவியின் பிதாவாயிருக்கக்கூடும் இவ்வச்வபதிமகாராஜன் ஏராளமான பணத்தையும் ரத்னங்களையுங் கொடுத்து அலக்ஸாண்டரைத் திருப்திசெய்தான்.

பிற்பாடு அலக்ஸாண்டர் அசுவபதியின் சிற்றரசரான செம்பியர்களை ஜயித்துவிட்டு இராவதி நதியின் ஓரத்தில் சோபிக்கும் பாலவராஜ

* இதன்பொருள் — அர்ச்சுனனதுமொழி—பாண்டவர்களும் கௌரவர்களுமாகிய நாங்கள் அன்னியோன்னியம் சண்டைசெய்து கொண்டால் நாங்கள் ஐந்துபேரும் அவர்கள் நூறுபெயர்களும் இருக்கின்றோம். வேறு வெளியிலுள்ளவனோடு போருக்குச்சென்றால் ஐந்தும் நூறும் சேர்ந்து நூற்றைந்து பெயர்கள் ஆகிவிடுவோமென்று.

தானியை ஆக்ரமித்தான். கோட்டையின் நாலுபக்கமும் தனது சைனியங்களைச் சூழவிட்டுத் தான் சிலபடர்களோடு கூடி நடுநிசியில் கோட்டைமீது ஏறினான். இதைப்பார்த்திருந்த சில மாளவதேச வீரர்கள் இவன்மீது பாணப்பிரயோகஞ்செய்ததும் இவன் அடியற்ற மரம்போல் விழலானான். உடன் சில யவனர்கள் வந்து இவனை ஆச்வாசப்படுத்தினார்கள். பிற்பாடு, மாளவதேச மன்னனே தோல்வியடைந்துள அலக்ஸாண்டருடன் சமாதானங் கொண்டான். இதேசமயத்திற்றான் பாடலிபுத்திரதேசத்தில் நவநந்தர்கள் ராஜ்யபாரம் செய்துகொண்டிருந்தார்கள் என்று யவனக்கிரந்தங்களிற் சொல்லப்படுகிறது. இவர்கள் ரக்ஷித்துவரும் மகததேசத்தை அலக்ஸாண்டர் எதிர்க்கச்செல்லும் சமயம் அவனது சைனியங்கள் "ஊரிலிருந்து புறப்பட்டு வெகுகாலமாய்விட்டது. தாய்தந்தை குழந்தைகளுடைய முகங்கூட மறந்துவிட்டது. ஆனதால் நாட்டுக்குத் திரும்பவேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள். அதின்படி சம்மதங்கொண்ட அலக்ஸாண்டர் தான் ஜயித்தநாடுகளில் ஜயஸ்தம்பம் நிறுத்தியும் ஆங்காங்கு தனது ஆட்களை ஏற்படுத்தியும் செய்துவிட்டுக் காந்தாரதேசம் வழியாய்த் தனது நாடு சென்றான். போகும்வழியில் பிராணனைவிட்டதாக நவீனக்கிரந்தங்கள் கூறுகின்றன. அது சரியல்ல.

இங்ஙனம்

வெ. வெங்கடராம சர்மா,

155 பெரியசாலைத் தெரு,

திருவனந்தபுரம்.

---

ஸ்ரீ:

திருமாலிருஞ்சோலைமலை

# அழகர்பிள்ளைத்தமிழ்

இது:

மதுரைத்தமிழ்ச்சங்கத்துச்

"செந்தமிழ்"ப்பத்திராதிபர்

திரு. நாராயணையங்காரால்

பரிசோதிக்கப்பெற்றுப்

பதிப்பிக்கப்பட்டது.

மதுரைத்தமிழ்ச்சங்கம் * THE MADURA TAMIL SANGAM *

செந்தமிழ்ப்பிரசுரம்—௬௰.

தமிழ்ச்சங்கமுத்திராசாலைப்

பதிப்பு.

1919.

விலை அணா 8.

27 JUN 1919

ஸ்ரீ:

திருமாலிருஞ்சோலைமலை

# அழகர்பிள்ளைத்தமிழ்

## முகவுரை.

---

அமிழ்தினுமினிய தமிழ்மொழியகத்தே, அன்பும், இன்பும், அறனும், மறனும் சான்ற அகத்திணை புறத்திணை தழுவிய துறைவகைகளில் தோன்றுதொட்டு வழக்காயுள்ள பனுவல்கள் எத்தனையோ பலவுள்ளன; அவற்றுள், 'பிள்ளைத்தமிழ்' என்னும் பிரபந்தவகையுமொன்று.

'பிள்ளைத்தமிழ்' என்பது, பெறலருஞ் சிறப்புவாய்ந்த மக்கட் குழவியைப் பாராட்டிப்பாடும் இனியபாடல்களாலாகிய பிரபந்தம் என்று பொருள்படும். இங்கு, 'தமிழ்' என்னுஞ் சொல் பிரபந்தத்தை யுணர்த்து மென்பதை, இந்நூலாசிரியர் தம் ஞானாசிரியர் வணக்கத்துள், 'வேதப்பாட்டிற்றருந் தமிழ்' என்று திவ்யப்பிரபந்தங்களை வழங்குதலாலும், இயலிசைநாடக நூல்களை இயற்றமிழ், இசைத் தமிழ், நாடகத்தமிழ் எனவும், முத்தமிழ் எனவும் வழங்குதலாலுமறிக.

இப்பிரபந்தம், புறப்பொருள் வகையாகிய பாடாண் திணையில் 'குழவிமருங்கினுங்கிழவதாகும்' என்ற தொல்காப்பியச் சூத்திரத்தாற் கொள்ளப்பட்ட *காமப் பகுதியின் பாற்பட்டு மக்கட் குழவிக்குரித்தாக வழங்கப்படுமாயினும், ஒரோவழி, தெய்வத்தோற்றமாகிய மக்கட் குழவியின் பருவத்தை ஆரோபித்தலால், அக்குழவியோ டொற்றுமையுடைய தெய்வத்துக்கும் உரியதாக வழங்கப்படும். இச்சூத்திரத்தில், கிளப்பதாகும் என்னாது 'கிழவதாகும்' என்ற குறிப்பால் குழவிப் பரு

---

* இங்குக் கூறிய காமப்பகுதியாவது, பெறலரும்பிள்ளையைப் பெற்றதாய் முதலியோர் பாராட்டுதற்குரிய, 'குறுகுறு நடந்து சிறுகைநீட்டி, இட்டுந்தொட்டுங் கௌவியுந்துழந்து நெய்யுடையடிசின்மெய்பட விதிர்த்தும்', விளையாடுதன் முதலிய செயல்களை அனுபவிக்குமவரிடைத் தோன்றும் ஒருதலையின்பம். இதனை, 'மக்கண்மெய்தீண்டலுடற்கின்பம் மற்று அவர் சொற்கேட்டலின்பம் செவிக்கு,' என்றற்றொடக்கத் தானுமறிக. இதனாலவர் விளையாட்டுக்காண்டலும் கட்கின்பமென்பது போதரும்.

வங்கழிந்த முதியரை அவரது குழவிப்பருவம்பற்றிப் பாராட்டிப் பாடினும் அப்பாட்டில், அம்முதியரோடொற்றுமையுடைய அக்குழவிக்கு உரிமையுடைமைபால் அது வழுவாகாதென்று கொள்ளப்படும்.

இப்பனுவலைப் பன்னிருபாட்டியலுடையார் பிள்ளைப்பாட்டென வழங்கி, இலக்கணம் பல தாமியம்பியும், ஆன்றோர் கூறிய சில இலக்கணங்களை யெடுத்துக்காட்டியும் போந்தனர்; வெண்பாமாலையுடையார் (*'இளமைந்தர் நலம்வேட்ட வளமங்கையர் வகையுரைத்தல்' என்னும்) குழவிக்கட்டோன்றிய காமப்பகுதியின் பாற்படுப்பர்.

'வழக்கொடு சிவணியவகைமையான' என்ற தொல்காப்பியச் சூத்திரத்துள், 'சான்றோர் செய்த புலனெறிவழக்கோடே பொருந்தி வந்த பகுதிக்கண்ணேயான பொருள்களுள்' குழவிமருங்கினுங்கிழவதாகிய பிள்ளைப்பாட்டுப் பொருள்களையும் அகப்படுத்துக் கூறியிருத்தலால் இப் பிரபந்தவகை தொல்காப்பியர்காலத்துக்கு முற்பட்ட சான்றோராற் செய்துபோந்த பழையவழக்குடையதென விளங்குகின்றது. இதற்குதாரணமாகப் பெரியாழ்வார்திருமொழியுட் பலவேறு பொருள்வகைகளாலும் பிள்ளைப்பாட்டுப் பாடப்பெற்றிருப்பது காணத்தகும். அதன்கண், தால், சப்பாணி, செங்கீரை, முதலியவற்றுடன், இக்காலப் பிள்ளைத்தமிழி லில்லாத பிறப்பின் உவகை, பாதாதிகேசக்காட்சி, தளர்நடை, அச்சோவச்சோ, புறம்புல்கல் அப்பூச்சிகாட்டல், நீராட்டல், பூச்சூட்டல், காப்பிடல், அம்மமூட்டல், முதலியபலவேறு பொருள்பற்றிய பாராட்டல்கள் உள்ளன.

இங்ஙனம் பல பொருள்களிருப்பவும், ஒருபொருள்பற்றிப் பாராட்டும் பாட்டுத் தனித்தனி பதிகமாகவும், பிரபந்தமுழுதும் சதகமாகவும் ஓரளவுடையதாக முடிக்கவேண்டிக் காப்புமுதற் சிறுதேரிறுதியான பத்துப்பொருள்களை இப்பிரபந்தத்துக்குரியனவாகப் பிற்காலத்தார் தெரிந்தெடுத்து நியமித்துப்போந்தனர் போலும்.

இங்ஙனம் பழமையும் அருமையும் வாய்ந்த பிரபந்தவகையிற் சேர்ந்த பிள்ளைத்தமிழ்களிற் சிறந்தவற்றுள் இத்திருமாலிருஞ் சோலைமலை அழகர்பிள்ளைத் தமிழும் ஒன்றெனெண்ணத் தக்கது.

* (இளமைந்தர் நலம் வேட்டவளமங்கையர் வகையுரைத்தலாவது) கண்ணபிரானது இளமைப்பருவ விளையாட்டின்பத்தை விரும்பியசோதைப்பிராட்டியும் இடைப்பெண்களும் பாராட்டியபடியைப்பெரியாழ்வார் அனுகரித்தல்போல்வது.



இவ்வழகர் பிள்ளைத்தமிழ், காப்புமுதற் சிறுதேரிறுதியாகப் பத்துப்பருவப் பாராட்டலையு முடையதாய்ப் பலவேறு சந்தப்பாடல்களாற் சிறந்தது. காவியங்கற்பார்க்கு, இலக்கிய விலக்கண வழக்கு வகை பலவுமெளிதினுணர்த்திச் சொற்பொருளுணர்ச்சியைத் திட்பமுறச் செய்யுந் திறமையுடையது; செய்யுட் செய்வார்க்கு விடயமில்லாவிடத்தும் பொருத்தமுள்ள விசேடணங்களை வருத்தமின்றித் தொடுத்துப் பொருளை விசேடித்துப் பலபடியாகச் செய்யுளை யழகுபெறச்செய்து முடிக்கு மாற்றலையளிக்க வல்லது; ஐந்திணை மயக்கம், நானிலவருணனை, கற்பனை, அலங்காரமுதலிய பலநயங்களமைந்தது. திருமாலினவதாரமாகவந்த கண்ணபிரானது குழவிப்பருவத்தை ஒற்றுமைபற்றி அழகர்மேல்வைத்து, அக்கண்ணபிரானது இளமைநலம்வேட்ட யசோதைப்பிராட்டியுமிடைப் பெண்களுமாகிய "வளமங்கையர்" படியை அத்தியவசித்து மிகவும் பாராட்டிப் பாடப்பெற்றுள்ளது.

இப்பிரபந்தத்தின் பாயிரச்செய்யுளில் 'வள்ளைத்தமிழ்கூர் வேம்பத்தூர் வருமாண்புலவோர்வகுத்தது' என்று சொல்லப்பட்டிருத்தலால் இதனையியற்றியவர் பிறந்தவூர் வேம்பத்தூர் என வெளியாகிறது. இவ்வூரின்கட் டொன்றுதொட்டே ஆசு, மதுர, சித்ர, விஸ்தார கவிகளும், பிரபந்தங்களு மியற்றிப்போந்த பலபுலவர்க ளிருந்துவந்திருக்கின்றனரென்பதை, திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணப்பதிப்பின் முகவுரையில் மஹாமஹோபாத்தியாய பிரும்மஸ்ரீ, வே. சாமிநாதையரவர்களெழுதியிருப்பதால் அறியலாம். இப்பாயிரச்செய்யுளில், 'புலவோர்வகுத்தது' என்ற பன்மைக்கிணங்க வேம்பத்தூர்ச் சங்கப்புலவர் பலர்கூடி இப்பிரபந்தத்தையியற்றினரென்று சிலர் ஓர் ஐதிகம் சொல்வதுமுண்டு. இது பின்வருமாற்றாற் கொள்ளத்தக்கதன்று.

பழிச்சினர்ப்பரவலின் பன்னிரண்டாம் செய்யுளிலே, 'பேசபய வேதாந்ததேசிகன் றடொழுவல் பேரழகனூறளையவே' என்று தொழுவலென்னும் ஒருமையால் அழகனூலாகிய இப்பிரபந்தமுழுதும் [illegible] தற்கு மங்களங்கூறியிருத்தலாலும், மற்றும் சில பாடல்களிலும் மங்களங்கூறியவிடங்களிலெல்லாம் இவர் இப்பிரபந்தத்தை 'என்கவி'என்று தாமேகூறியிருத்தலாலும் இப்பிரபந்தம் ஓரேபுலவராற் பாடப்பெற்றிருக்கலாமென்று தோன்றுகின்றது.

இதற்கனுகுணமாகவே சேதுசமஸ்தானவித்வான் ஸ்ரீமத்-ரா. ராகவையங்காரவர்கள் அரிதின் ஆராய்ச்சிசெய்தெழுதிச் 'செந்தமிழில்' வெளியிட்ட சேதுநாடும்தமிழும்* என்ற வியாசத்தில் இந்நூலியற்றியவரது பெயர், சாமி கவிகாளருத்திரர் என்று எழுதியுள்ளார்கள். கவிகாளருத்ரர் என்பது, பிறரால் வெல்லப்படாத ஆற்றல்பற்றி வழங்கும் 'கவிராக்ஷஸன்' என்பதுபோல இவரது கவித்திறமைபற்றிப்பின்பு வந்த சிறப்புப்பெயராயிருக்கவேண்டுமாதலால் அப்பெயர்க்குமுற்பட்டு, 'மாந்தரக்கொங்கேனாதி'என்புழிப்போலப் பண்புத்தொகை நிலைமொழியாய்நின்ற சாமி என்னும்பெயரே இவரது இயற்பெயராயிருக்கவேண்டுமென்று தோன்றுகின்றது.

பழிச்சினர்ப்பரவலின் பதினான்காம்பாட்டில் இவர், தாம் அழகர்கோவிற்புரோகித நிர்வாகம்பெற்றிருந்த தோழப்பர் என்னும் ஸ்ரீவைஷ்ணவரால் 'தொண்டர்குழுவாகிய அத்தியாபககோஷ்டியிற் சேர்க்கப்பட்டவரென்று கூறியிருத்தலால், இவர் பஞ்சசமஸ்காரம்பெற்றுத் திவ்யப்பிரபந்தங்களோதிச் சாத்தினவரென்பதும் 'வேதப்பாட்டிற்றருந்தமிழுமிருநாலெழுத்தும்'......'அலங்காரர்படியும் என்னெஞ்சகத்துள்நாட்டி' என்றமையால் பகவத்விஷயாதிகிரந்தங்களும், திருமந்த்ரார்த்த வியாக்யானமும், அர்த்தபஞ்சகாதி ரஹஸ்யங்களும் தோழப்பரிடம் அதிகரித்தவரென்பதும், 'நற்றமிழ்ச்சீர்பதிப்போன்'என்றதனால் அரியதமிழிலக்கிய விலக்கணங்களையும் அத்தோழப்பரிடமேகேட்டு நெஞ்சிற் பதியக்கொண்டவரென்பதும் விளங்குகின்றன. இதனால் இவரதுகாலம் இற்றைக்குச்சற்றேறத்தாழ நூற்றைம்பதுவருடங்கட்குமுன்பு திருமாலையாண்டார் சந்ததியாருள் ஒருவர்க்கு மாதுலாய்வந்து அழகர்கோவிற் புரோஹிதநிர்வாஹம் பெற்றிருந்ததோழப்பர்காலமென்றறியத்தக்கது.

இவர், வேதாந்ததேசிகரையும் மணவாளமாமுனிகளையும் வழிபடும் பாசுரங்களால் வடகலைதென்கலையென்னு முபயவேதாந்தங்களுக்கும் முறையே பிரவர்த்தகர்களான அவ்விருவரையும் வழிபாடுபுரியும் தென்கலை வைஷ்ணவரென அறியலாம்.

இந்நூலிலுள்ள பலபாடல்களையும் பார்க்கும்போது இவர் வைஷ்ணவத்தில்மிக்க ஊற்றமுள்ளவரென்பதும், சங்கநூல்முதலிய பழைய

* செந்தமிழ் தொகுதி 13 பகுதி 2 பக்கம் 51.



தமிழ்நூற்பயிற்சியிற் றேர்ச்சியுற்ற பெரும்புலவரென்பதும், பலரும் சொல்லாதவண்ணச்சந்தங்களைக் கற்பித்துக்கொண்டு சொல்லின்பமும் பொருளின்பமும் சுவையும் அலங்காரமு மிலங்கக் கௌடவிருத்தியிலும் கவிகளியற்றுமாற்றலுடையவரென்பதும் விளங்கும்.

இவர் வைஷ்ணவத்தில் மிக்க ஊற்றமுடையராயிருப்பினும் காப்புப் பருவப்பாராட்டிற் பரவுதற்குரியரென விதிக்கப்பட்ட சிவபெருமான், விநாயகர், முருகவேள், வைரவன் முதலியோரையும் நன்கு பரவுதலால் விதிமுறைதவறாதொழுகு மியல்புடையவரென்பதும் விளங்கும்.

இந்நூல் சிலபத்தாண்டுகளுக்கு முன்னரே ஒருவா றச்சிடப்பட்டிருப்பினும் இப்பொழுது அச்சுப்புத்தகம் எங்கும் கிடைக்காமையால் இதனை அச்சிட்டாற் காவியங் கற்பார்பலர்க்கும் மிகப்பயன்படுமென்று கருதி மதுரைத் தமிழ்ச்சங்கத்திலிருந்த இரண்டு குறைப்பிரதிகளையும் ஓரச்சுப் புத்தகத்தையும் வைத்துப் பரிசோதித்துச் 'செந்தமிழ்' வாயிலாக வெளியிடலாயிற்று.

இந்நூற் பரிசோதனைக்குக் கிடைத்த இரண்டொரு பிரதிகளும் பிழைமலிந்திருந்தமையால் அவற்றுள் தெரிந்தவற்றைத் திருத்தித் தெரியாதவற்றை யிருந்தபடியே வைத்துப் பதிப்பிக்கலாயிற்று. ஆதலாற் செந்தமிழ்ப் பயிற்சியிற்றேர்ச்சியடைந்த பெரியோரிதனைக் கண்ணுற்று, சுத்தப்பிரதிகொண்டு, திருத்தவேண்டுமவற்றைத் திருத்தி எனது தவற்றைப் பொறுத்தருள வேண்டுகிறேன்.

இதனை அச்சிடுதற்குத் தமிழ்ச்சங்கக் கலாசாலையுபாத்தியாயர் நல்லசிவன்பிள்ளை பிரதி எழுதிக்கொடுத்தும், அச்சுச் சேர்க்கையை ஒப்பு நோக்கித் திருத்தியும் உதவிபுரிந்தது பாராட்டற்பாலது.

திரு. நாராயணையங்கார்.

## பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| ௩௧ | ௪ | பொன்னூற்ற. | பொன்றாற்ற |
| ௪௫ | ௨௧ | பருப்பின் | மருப்பின் |
| ௪௬ | ௨௰ | அறிய | அரிய |
| ௬0 | ௨௭ | வளவாய் | வள்வாய் |
| ௬௩ | ௩௭ | வெறி | வெரி |
| ௬௪ | ௨௧ | மத்தெரி | மத்தெறி |
| ௬௮ | ௰ | கெக்கர் | செக்கர் |
| ௭௧ | ௬ | வைத்நு | வைத்து |
| ௭௪ | ௨௭ | சோலை | சோலைமலை. |

உ

சிவமயம்

கணபதிதுணை.

# பொருட்டொகைநிகண்டு

இஃது

புதுக்கோட்டைச் சமஸ்தானத்தைச்சார்ந்த குடுமிமாமலை

வைத்தீசுரதீக்ஷிதரவர்கள் குமாரர்

சுப்பிரமணியபாரதியவர்கள் இயற்றியது.

### விநாயகர்துதி.

அருட்கடல் விநாயக னடியிணை யிறைஞ்சிப்
பொருட்டொகை நிகண்டினைப் புகலுது மியாமே.

### ஒருபொருள்.

ஒருமை யாவது முத்திப் பேறு
மஃதிறை யுணர்ந்துற லாமென மொழிப. (1)

### இருபொருள்.

அச்சுவினி தேவ ரவிரு வோர்தமைத்
தேவ மருத்துவ ரென்னச் செப்புவர். (2)

அயன மிரண்டுத் தரந்தக் கிணமே. (3)

உத்தரா யணந்தை யாதியா றேதுப. (4)

தக்கணு யனமெனச் சாற்றுவர் மற்றவை. (5)

அறமிரண் டவையில் லறந்துற வறமே. (6)

இல்லற மில்லத் திருந்தில் லாளொடு
வேதா கமநூல் விதிப்படி யொழுகலே. (7)

*

இல்லற வுறுப்புக ளிருபஃ தாமவை
யில்வாழ்க்கை வாழ்க்கைத் துணைநலம் புதல்வரைப்
பெறுதலன் புடைமை விருந்தோம்ப லினியவை
கூறல் செய்ந்நன்றி யறித னடுவு
நிலைமை யடக்க முடைமை யொழுக்க
முடைமை பிறனில் விழையா மைபொறை
யுடைமை யழுக்கா றாமைவெஃ காமை
புறங்கூ றாமை பயனில சொலாமை
தீவினை யச்ச மொப்புர வறித
லீகை புகழென வியம்பப் படுமே. (8)

துறவற மாவது பற்றைத் துறத்தலே. (9)

துறவற வுறுப்பிரண் டாமவை விரத
ஞான மென்ன நவிலப் படுமே. (10)

விரத வுறுப்பு விளம்பிலொன் பானவை
யருளுடை மைபுலான் மறுத்த றவமொடு
கூடா வொழுக்கங் கள்ளாமை வாய்மை
வெகுளாமை யின்னா செயாமை கொலாமையே. (11)

ஞான வுறுப்பு நான்கவை நிலையாமை
துறவுமெய் யுணர்த லவாவ றுத்தலே. (12)

ஆயுத வகையிரண் டத்திரஞ் சத்திரம். (13)

அத்திரங் கைவிடு மாயுத மென்ப. (14)

சத்திரங் கைவிடா வாயுத மெனத்தகும். (15)

ஆன்மா விரண்டா மவைசீ வான்மாப்
பரமான் மாவெனப் பகரப் படுமே. (16)

சாற்றுசீ வான்மாச் சரீரந் தோறும்
வேறாய் வியாபக மாகி நித்தமா
யிருப்பன வென்ன வியம்புவர் புலவர். (17)

பரமான் மாவீ சுரன்முற் றறிவ
னொருவனே யென்ன வோதுவர் கற்றோர். (18)



இதிகா சங்க ளிரண்டவை பாரதஞ்
சிவரக சியம்பின் செப்பிது நீக்கி
யிராமா யணமென வியம்பப் படுமே. (19)

பாரதம் வியாச முனிவன் பகர்ந்த
சந்திர குலமனர் சரித மென்ப. (20)

இராமா யணம்வரன் மீகி யியம்பிய
சூரிய குலமனர் துகளில் சரிதமே. (21)

இருமை யாவன விம்மை மறுமையே. (22)

இம்மை யாவ திப்பிறப் பென்ப. (23)

மறுமை யாவது வருபிறப் பென்ப. (24)

எச்சமி ரண்டுபெய ரெச்சம்வினை யெச்சம். (25)

கந்தமி ரண்டுநற் கந்தந்துர்க் கந்தம். (26)

நற்கந்த மோப்பத் தகுமென நவிலுப. (27)

துர்க்கந்த மோப்பத் தகாதெனச் சொல்லுப. (28)

கூத்திரண் டுவகை தேசிக மார்க்கமே. (29)

சாந்திவி னோதமுஞ் சாற்றுவர் புலவர். (30)

சுடரிரண் டாமவை சூரியன் றிங்கள். (31)

சூரிய னிகழ்ச்சி துலங்கு பகலென்ப. (32)

திங்களி னிகழ்ச்சி திகழிர வென்ப. (33)

இருபோ தென்பது பகலிர வாமே. (34)

திணையிரண் டவையுயர் திணையஃ றிணையே. (35)

உயர்திணை மக்களென் றோதப் படுமே. (36)

அஃறிணை மிருகம் புண்மர மாதிய
வுயிருள் ளனவுமண் ணுதகந் தீக்க
லாதி யுயிரில் லனவுமா மென்ப. (37)

தோற்ற மிரண்டா மவைசர மசரமே. (38)

சரநிலை பெயர்வன வென்னச் சாற்றுப. (39)

அசர நிலைபெய ராதன வாமே. (40)

பக்க மிரண்டவை சுக்கிலங் கிருட்டின
மிவையே பூருவ மபரமா மென்ப. (41)

சுக்கில பக்கம் வளர்பிறைப் பிரதமை
யாதி பூரணை யதுவரை யென்ப. (42)

கிருட்டின பக்கந் தேய்பிறைப் பிரதமை
யாதி யமாவா சைவரை யென்ப. (43)

பொருளிரண் டுவகை கல்வி செல்வம். (44)

கல்வி யாவது கலைஞான மென்ப. (45)

செல்வம் பொருளெனச் செப்புவர் புலவர். (46)

மரபிரண் டாமவை தந்தைதாய் வழியே. (47)

தந்தை வழியது தாயத் தவர்வழி. (48)

தாயின் வழியது சம்பந்த வழியே. (49)

வினையிரண் டவைநல் வினைதீ வினையே. (50)

நல்வினை யுலக நயக்குஞ் செய்கையே. (51)

தீவினை யுலகஞ் சினக்குஞ் செய்கையே. (52)

வைணவ வாகமம் வகையிரண் டென்ப. (53)

பாஞ்ச ராத்திரம் பகர்வை காநசம். (54)

பாஞ்ச ராத்திரம் பகர்தாந் திரிகம். (55)

வைகா நசமது வைதிக மென்ப. (56)

முப்பொருள்,

அயனரி யரன்மும் மூர்த்தி யாமே. (57)

சூரிய னக்கினி சந்திரன் வழியின்
வருமன் னவர்குலம் வழங்குமுக் குலமே. (58)

பதிபசு பாசமாப் பகர்வர்முப் பொருளே. (59)

அவனவ ளதுவெனு மவைமுப் பாலே. (60)

கன்னமுங் கையுங் கோசமு மென்னு
மின்னமுத் தானத் திழிவன மும்மதம். (61)



அரசர் மூவர் சேரன் சோழன்
பாண்டிய னென்னப் பகருவர் புலவர்.

சேர னவன் றிகழ்சீர் வஞ்சியுங்
குடக நாடுங் கொல்லி மலையும்
பொருநை யாறும் புகழ்பனை மாலையும்
பாடல மென்னப் பகருங் குதிரையும்
விற்கொடி யுமுள னென்ன விளம்புப.

சோழ னவன் றொல்லுறை யூருந்
தண்புன னாடுந் தனிநேரி மலையுங்
காவிரி யாறுங் கவினார் மாலையுங்
கோர மென்னுங் குதிரையும் வரிப்புலிக்
கொடியு முடையவ னென்னக் கூறுப.

பாண்டிய னவன் பகர்சீர்ப் பொருநையுஞ்
செந்தமிழ் நாடுந் திகழ்பொதி யமலையும்
வையை யாறும் மலிவேம் பாரமுங்
கனவட்ட மாகக் கழறுங் கற்கியு
மீனக் கொடியு முளனென விளம்புப.

அரசனீ தியைமூன் றாக்கி யரசிய
லங்க வியலொழி பியலென வறைவர்.

அரசிய லுறுப்பிரு பத்தைந் தாமவை
யிறைமாட்சி கல்வி கல்லாமை கேள்வி
யறிவுடைமை குற்றங் கடிதல் பெரியாரைத்
துணைக்கோ டல்சிற் றினஞ்சே ராமை
தெரிந்து செயல்வகை வலியறிதல் கால
மறித லிடனறித றெரிந்து தெளிதல்
தெரிந்து வினையாடல் சுற்றந் தழாஅல்
பொச்சா வாமை செங்கோன் மைகொடுங்
கோன்மை வெருவந்த செயாமைகண் ணோட்ட
மொற்றாட லூக்க முடைமை மடியின்மை
யாள்வினை யுடைமை யிடுக்கணழி யாமையே.

அரசங்க வியன்முப் பத்திரண் டாமவை
யமைச்சு சொல்வன் மைவினைத் தூய்மை
வினைத்திட் பம்வினை செயல்வகை தூது
மன்னரைச் சேர்ந்தொழு கல்குறிப் பறித
லவையறி தல்லவை யஞ்சாமை நாடே
னரண்பொருள் செயல்வகை படைமாட் சிபடை
செருக்கு நட்பு நட்பா ராய்தல்
பழமைதீ நட்புக் கூடா நட்பு
பேதைமை புல்லறி வாண்மை யிகல்பகை
மாட்சி பகைத்திறந் தெரித லுட்பகை
பெரியாரைப் பிழையாமை பெண்வழிச் சேறல்
வரைவின் மகளிர் கள்ளுண் ணாமை
சூது மருந்தெனச் சொல்லப் படுமே. (68)

அரச னொழிபியல் பதின்மூன் றாமவை
குடிமை மானம் பெருமைசான் றாண்மை
பண்புடைமை நன்றியில் செல்வநா ணுடைமை
குடிசெயல் வகையுட னுழவுநல் குரவோ
டிரவிர வச்சங் கயமை யென்பரே. (69)

இசைமூன் று மந்தர மத்திமந் தாரமே (70)
மந்தர மாவது மந்தவோ சைத்தே. (71)
மத்திம நடுத்தர வோசைத் தாமே. (72)
தார மாவ துச்சவோ சைத்தே. (73)
இடமூன் று தன்மை முன்னிலை படர்க்கையே. (74)
தன்மை யிடமது தனைக்காட் டுவதே. (75)
முன்னிலை யிடமெதிர் முகமாக் கேட்பதே. (76)
படர்க்கை யிடமது பேசப் படுவதே. (77)

ஈசுரன் பிரபுத் துவசா மர்த்திய
குணமூன் று கர்த்தத் துவமகர்த் தத்துவ
மந்நிய தாகர்த் தத்துவ மென்ப. (78)
கர்த்தத் துவமது செய்யுந் தன்மையே. (79)



அகர்த்தத் துவமது செய்யாத் தன்மையே. (80,

அந்நிய தாகர்த் தத்துவ மாவது
வேறுசெய் தன்மை யென்ன விளம்புப. (81)

உலக மூன்றவை பூலோ கம்பர
லோகம் பாதாள லோகமா மென்ப. (82)

பூலோக மாவது நல்வினை தீவினை
புரியு மிடமெனப் புகலப் படுமே. (83)

பரலோக மாவது நல்வினைப் பயனைத்
திளைக்கு மிடமெனச் செப்புவர் புலவர். (84)

பாதாள மாவது தீவினைப் பயனை
நுகரு மிடமென நுவலுவ ரான்றோர். (85)

பூமி யந்தர சுவர்க்கமும் புகல்வர். (86)

கடுக மூன்றவை சுக்குத் திப்பிலி
மிளகா மிவைதிரி கடுக மென்ப. (87)

சுக்கு வாதப் பிணியைத் தொலைப்பதே. (88)
திப்பிலி பித்தத் தைச்சிதைப் பதுவே (89)
மிளகு சிலேட்டுமம் விலக்குவ தாமே. (90)

கால மூன்றவை யிறந்த கால
நிகழ்கா லம்மெதிர் கால மென்ப. (91)

இறந்த காலமுன் னடந்த தென்ப. (92)

நிகழ்காலமது நடக்கின் ற தாமே. (93)

எதிர்கா லம்மினி நடப்ப தாமே. (94)

குணமூன் றவைசாத் துவிக ராசதந்
தாமத மென்னச் சாற்றுவர் புலவர். (95)

சாத்து விககுணத் தன்மையெட் டாமவை
ஞான மருடவம் பொறைவாய்மை மோன
மேன்மை யைம்பொறி யடக்க லாமே. (96)

இராசத குணவிய லெட்டா மவைமன
வூக்க ஞானம் வீரந் தருமந்
தானங் கல்வி கேள்வி தவமே. (97)

தாமத குணவியல் பன்னொன் றுமவை
பேருண்டி நெடுந்துயில் சோம்பு பொய்கொலை
மறதிநீ திவழு வொழுக்க வழுசினங்
காமம் வஞ்ச மென்னக் கழறுப. (98)

குற்ற மூன்றவை காமம் வெகுளி
மயக்க மென்ன வழங்கப் படுமே. (99)

காம மாவது பொருள்விருப் பென்ப. (100)

வெகுளி யாவது பொருள்வெறுப் பென்ப. (101)

மயக்க மாவது விருப்பும் வெறுப்புமே. (102)

சத்தி மூன்றவை யிச்சா சத்தி
ஞான சத்தி கிரியா சத்தியே. (103)

இச்சா சத்தி யுயிர்க்கரு ணேசமே. (104)

ஞான சத்தி கருமமறிந் தூட்டலே. (105)

கிரியா சத்தி யுலகங்க ளாக்கலே. (106)

சாத்திரங் கண்மூன் றவைதான் சாங்கியம்
பதஞ்சலி யம்வே தாந்த மிவையே. (107)

சாங்கிய சாத்திரங் கபிலர்சாற் றியதே. (108)

பதஞ்ச லியம்ப தஞ்சலி பகர்ந்ததே. (109)

வேதாந்த சாத்திரம் வியாதன் மொழிந்ததே. (110)

சிவ தேக மூன்றவை தூல
சூக்குமங் காரண மென்னச் சொல்லுப. (111)

சீவா வத்தை மூன்றவை சாக்கிரஞ்
சொப்பனஞ் சுழுத்தி யென்னச் சொல்லுப. (112)

சுடர்மூன் று சூரியன் றிங்களக் கினியே. (113)

சூரிய னிகழ்ச்சி பகலெனச் சொல்லுப. (114)

மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் காளயுக்திஞு பங்குனிமீ 21, 22, 23 (1919ஞு ஏப்பிரல்மீ 3, 4, 5) ஆம் தேதிகளில் நடத்திய தனித்தமிழ்ப் பரீக்ஷைகளிற்றேறிப் பரிசும், யோக்கியதா பத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விபரம்.

## பாலபண்டித பரீக்ஷை.

[illegible] [illegible]

### I-வது வகுப்பு.

1. 8. K. நாதமுனி, மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

(முதற்பரிசு ரூ70 பெறத்தக்க தங்கப்பதக்கம்).

2. 9. ரா. புருஷோத்தம நாயுடு, மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

(இரண்டாவது பரிசு ரூ 50.)

### II-வது வகுப்பு.

1. 7. இ. சுப்பராயன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

## பிரவேச பண்டித பரீக்ஷை.

### I-வது வகுப்பு.

1. 20. ம. ஐ. சுப்பிரமணிய ஐயர், 207 நேப்பியர்வீதி, மஞ்சக்குப்பம், கூடலூர் N. T.

(முதற் பரிசு ரூ50 பெறத்தக்க தங்கப்பதக்கம்).

2. 14. A. பூவராகன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

(இரண்டாவது பரிசு ரூ30.)

II-வது வகுப்பு.

1. 15. G. சேஷாத்திரி, மதுரைத் தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

2. 21. N. ரங்கனையர், மகாதானபுரம் கிராமம், கன்னியா குமரிபோஸ்டு, நாகர்கோவில் சமீபம்.

3. 19. ச. சோமநாதன், c/o நடராஜையரவர்கள், தமிழ்ப்பண்டிதர், சேலம் காலேஜ்.

4. 18. N. ஜெகந்நாதன், மதுரைத்தமிழ்ச்சங்கக்கலாசாலை, மதுரை.

B. இராஜராஜேஸ்வர ஸேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத்தமிழ்ச்சங்கம்.

---

## மதுரைத் தமிழ்ச்சங்கத்தார் 1919-வரு மார்ச்சுமீ 1-ம் தேதியில் நடத்திய ஆங்கிலக்கலாசாலைத் தமிழ்ப் பரீக்ஷைகளிற்றேறிப் பரிசும் யோக்கியதாபத்திரமும் பெறும் மாணாக்கர்களின் விபரம்.

### பீ. ஏ. பரீக்ஷை.

II-வது வகுப்பு.

[illegible] [illegible]

1. 5. S. நாராயணசாமி, ஸெண்ட் ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

2. 1. நா. அப்பையா அழகிருசாமி, S. P. G. காலேஜ் திருச்சிராப்பள்ளி.

3. 2. C. பன்னிருகைப்பெருமாள், ஸெண்ட்ஜோஸப்காலேஜ் திருச்சிராப்பள்ளி.

---



### யப். ஏ. பரீக்ஷை.

I-வது வகுப்பு.

13. S. இராமசாமி நாயுடு, அமெரிக்கன் காலேஜ், மதுரை. (முதற் பரிசு ரூ 40 பெறத்தக்க தங்கப்பதக்கம்).

47. சையத் இப்ராஹிம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி, (இரண்டாவது பரிசு ரூ35).

21. V. J. ஸ்ரீநிவாஸன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.

(மூன்றாவது பரிசு ரூ 30.)

---

II-வது வகுப்பு.

8. K. கணபதி, மதுரைக்காலேஜ், மதுரை.

19. R. வரதஸாமி ஐயங்கார், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.

15. R. அனந்தநாராயண ஐயர், அமெரிக்கன்காலேஜ், மதுரை.

10. S. A. யாக்கோபு, ஷை ஷை

53. T. V. ஸ்ரீநிவாஸன், முனிசிபல் காலேஜ், சேலம்.

50. S. ரோஸம்மாள் (பெண்) மஹாராஜா பெண்பாடசாலை திருவனந்தபுரம்.

11. N. ரெங்கசாமி ஐயர், அமெரிக்கன் காலேஜ், மதுரை.

12. P. நல்லமணி, ஷை ஷை

54. K. நாகரத்தினம், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

20. S. சிங்காரம், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.

44. S. ரத்தினசலம், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

12. 66. V. நடேசன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

13. 31. A. ரங்காச்சாரி, No. 11 வடக்கு உத்தரத்தெரு, ஸ்ரீரங்கம்.

14. 14. S. A. இப்ராஹீம் அலி, அமெரிக்கன் காலேஜ் மதுரை.

15. 61. V. ராமசாமி பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

16. 64. R. S. நாராயணசாமி ஷை ஷை

17. 28. G. நாராயணசாமி, ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

18. 49. கமலாபாய் ப்ளெச்சர் (பெண்) மஹாராஜா பெண்பாடசாலை, திருவனந்தபுரம்.

19. 65. N. S. நடேசன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

20. 26. வையை பஞ்சநதமகாலிங்கம், ஸெண்ட்ஜோஸப் காலேஜ் திருச்சிராப்பள்ளி.

21. 56. K. நடேசன், மஹாராஜா காலேஜ், புதுக்கோட்டை.

22. 68 B. R. கோபாலசாமி, கோயம்புத்தூர்க்காலேஜ், கோயம்புத்தூர்.

23. 25. S. கஸ்தூரிரெங்கன், ஸெண்ட்ஜோஸப் காலேஜ், திருச்சிராப்பள்ளி.

24. 57. R. பக்தவத்ஸலன், மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை

25. 18. R. நடராஜன், S. P. G. காலேஜ், திருச்சிராப்பள்ளி.

26. 68 A. A. K. குமாரசாமி, கோயம்புத்தூர்க்காலேஜ், கோயம்புத்தூர்.

27. 39. A. ராமமூர்த்தி, ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

28. 68. N. சுந்தரேசன், பிண்டிலே காலேஜ், மன்னார்குடி.

29. 40. S. R. ஸ்ரீநிவாஸன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.



## மெற்றிக்குலேஷன் பரீக்ஷை.

### I-வது வகுப்பு.

1. 245. K. T. வெற்றிவேலு, Diamond Jubilee High School, கோபிச்செட்டி பாளையம்.

[முதற் பரிசு ரூ 30. (வெள்ளிப்பதக்கமும் மீதரூபாவும்]

2. 291. K. தாமோதரன், கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

(இரண்டாவது பரிசு ரூ 25.)

### II-வது வகுப்பு.

1. 141. S. இராமஸ்வாமி, ஹிந்துகாலேஜ, திருநெல்வேலி.

2. 287. B. ஜய்நுல்லாபதீன், கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

3. 236. P. வீரபத்திரன், ஸெண்ட்மிக்கேல்ஹைஸ்கூல், கோயம்புத்தூர்.

4. 423 S. அழகிரிசாமி, St Francis Xavier's High School தூத்துக்குடி.

5. 293. த. ச. அண்ணுசாமி, கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

6. 212. P. E. சாம்பமூர்த்தி, Diamond Jubilee High School கோபிச்செட்டி பாளையம்.

7. 244. K. N. இராமசாமி, ஷை ஷை

8. 238. S. A. ஆசிர்வாதம், ஸெண்ட் மிக்கேல்ஸ்ஹைஸ்கூல் கோயம்புத்தூர்.

9. 223. C. முத்துசாமி, முனிசிபல் காலேஜ், சேலம்.

10. 243. G. S. இராமநாதன், Diamond Jubilee High School, கோபிச்செட்டி பாளையம்.

11. 288. G. திருஞானசம்பந்தமூர்த்தி, கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

12. 289. P. நாகராஜன், „ „

13. 302. M. பரமசிவன், C. M. S. ஹைஸ்கூல் ஸ்ரீவில்லிபுத்தூர்.

14. 370. C. S. ராமச்சந்திரன், பிண்டிலே காலேஜ் மன்னார்குடி.

15. 112. R. இராமச்சந்திரன், S. P. G. ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

16. 222. A. துரைசாமி, முனிசிபல் காலேஜ், சேலம்.

17. 176. A. எக்ஞநாராயணன், St. Francis Xaviers High School, பாளையங்கோட்டை.

18. 107. N. சின்னுசாமி பிள்ளை S. P. G. ஹைஸ்கூல், திருச்சிராப்பள்ளி.

19. 173. A. ஆதிசேஷன், St. Francis Xaviers High School, பாளையங்கோட்டை.

20. 74. P. ராமச்சந்திரன், சேதுபதி ஹைஸ்கூல், மதுரை.

21. 237. V. கிருஷ்ணன், St. Michael's High School, கோயம்புத்தூர்.

22. 256. V. சங்கரராமன், ஸெண்ட்ஜோஸப் ஹைஸ்கூல், கடலூர்.

23. 435. P. சங்கரலிங்கம், கால்டுவெல்ஸ் ஹைஸ்கூல், தூத்துக்குடி.

24. 90. E. அரங்கசாமி, அமெரிக்கன்மிஷன்ஹைஸ்கூல், பசுமலை.



25. 260. T. K. இராமஸ்வாமி சர்மா, போர்டு ஹைஸ்கூல் விழுப்புரம்.

26. 328. A. E. கிருஷ்ணசாமி, ஹிந்துதியலாஜிகல் ஹைஸ்கூல், சென்னை.

27. 335. T. K. இராஜேசுவரன், Pachaiyappa's College, சென்னை.

28. 481. M. சங்கரலிங்கம், ஹைஸ்கூல், பத்தமடை.

29. 224. N. S. சிதம்பரேஸ்வரன், முனிசிபல்காலேஜ், சேலம்.

30. 418. K. நடேசன், விக்டோரியா ஹைஸ்கூல் பாபநாசம்.

31. 174. E. R. சீநிவாசன், St. Francis Xaviers High School, பாளையங்கோட்டை.

32. 325. P. B. ஸ்ரீநிவாஸன், முத்தியால்பேட்டை ஹைஸ்கூல் சென்னை.

33. 184. S. சுந்தரம், St. Francis Xavier's High School பாளையங்கோட்டை.

34. 264 D. பாலசுந்திரம், போர்டு ஹைஸ்கூல், விழுப்புரம்.

35. 308. A. அம்பலவாணன், வூரீஸ்காலேஜ், வேலூர்.

36. 277. K. ஸ்ரீநிவாஸராகவன், மஹாராஜாகாலேஜ், புதுக்கோட்டை.

37. 436. P. சுப்பையா, கால்டுவெல்ஸ்ஹைஸ்கூல், தூத்துக்குடி.

38. 495. T. நடேசன், போர்டு ஹைஸ்கூல், திருவாரூர்.

39. 348. K. வேணுகோபாலன், மாடல்ஹைஸ்கூல், ஸைதாப்பேட்டை.

40. 214. S. சிவசுப்பிரமணிய பிள்ளை, H. G. E. ஸ்கூல், கோட்டாறு.

41. 292. S. நாராயணஸாமி, கலியாணசுந்தரம்ஹைஸ்கூல், தஞ்சாவூர்.

42. 148. J. நாராயணன், ஹிந்து காலேஜ், திருநெல்வேலி.

43. 172. M. முத்தையா, St. Francis Xavier's High School பாளையங்கோட்டை.

44. 261. R. ஸ்ரீநிவாஸாச்சாரி, போர்டு ஹைஸ்கூல் விழுப்புரம்.

45. 71. S. ராமசுப்பு, மதுரைக்காலேஜ், மதுரை.

46. 299. N. சுந்தரராஜன், C. M. S. ஹைஸ்கூல், ஸ்ரீவில்லி புத்தூர்.

47. 338. M. வச்சிரவேலு, Xian College சென்னை.

48. 429. N. சின்னக்கண்ணு, St. Francis Xavier's High School தூத்துக்குடி.

B. இராஜராஜேஸ்வர சேதுபதி,
அக்கிராசனாதிபதி,
மதுரைத் தமிழ்ச்சங்கம்.

---



சந்திர னிகழ்ச்சி யிரவெனச் சாற்றுப. (115)

அக்கினி நிகழ்ச்சி யல்லும் பகலுமே. (116)

தமிழ்மூன் றியலிசை நாடக மாமே. (117)

இயற்றமி ழாவ தெழுத்துச் சொற்பொருள்
யாப்பணி யிவையென வியம்பு நூலே. (118)

இசைத்தமி ழாவ திலக்கண நெறியே
யியம்புங் கீத நெறியென விசைப்பர். (119)

நாடகத் தமிழிலக் கணநிகழ் பாவ
பிராகந் தாள மியையுநூ லென்ப. (120)

தான மூன்றவை தலைப்படு தான
மிடைப்படு தானங் கடைப்படு தானமே. (121)

தலைப்படு தான மாவ தறத்தா
றீட்டிய பொருளைமுக் குற்ற மற்ற
நற்றவத் தோரைக் கொள்கெனப் பணிந்து
குறையிரந் துளமுவந் தீத லென்ப. (122)

இடைப்படு தான மாதுலர் குருடர்
மாதர் முதற்பிறர் சிறுமையைப் பற்றி
மனம திரங்கியே வழங்க லென்ப. (123)

கடைப்படு தான மதுபுக ழார்வங்
கைம்மா றச்சங் கண்ணோட்டங் காரணங்
கடைப்படு மிவற்றைக் கருதித் தருதலே. (124)

உயிரி னுள்ளதீ மூன்று மென்ப
வுதரத் தீவிந் துத்தீ சினத்தீ. (125)

உதரத் துள்ளதீ யுணவைத் தகிக்குமே. (126)

விந்துத் தீக்கரு வினைவிளைத் திடுமே. (127)

சினத்தெழு தீபுண் ணியமதைத் தேய்க்குமே. (128)

தொழின்மூன் றாக்கல் காத்த லழித்தலே. (129)

ஆக்கற் றொழிலோ னயனு மென்ப. (130)

காத்தற் றொழிலோன் கார்வண்ண மாலே. (131)

அழித்தற் றொழிலோ னுருத்திர னுமே. (132)

நூன்மூன் றுமவை முதல்வழி சார்பே. (133)

பக்குவர் மூவர் கரும காண்டி
ஞான காண்டி பத்தி காண்டியே. (134)

கரும காண்டி பலவகைப் பட்ட
சாதியாச் சிரமஞ் சமயந் தெய்வ
முளவெனக் கிரியை யுணர்ந்துசெய் பவனே. (135)

ஞான காண்டி சாதி முதலிய
வல்ல வெனக்கிரி யைதுறந் தென்று
மான்ம தெரிசன மனுட்டிப் பவனே. (136)

பத்தி காண்டி சமயமேற் கொண்டு
கடவுள் வழிபாடு காண்பவ னென்ப. (137)

பரிச்சேத மூன்றவை காலபரிச் சேதந்
தேய பரிச்சேதம் வத்துபரிச் சேதமே. (138)

காலபரிச் சேதமொரு காலத் துண்டொரு
காலத் தின்றெனக் கழறுவ தாமே. (139)

தேயபரிச் சேதமோர் தேயத் துண்டொரு
தேயத் தின்றெனச் செப்புவ தாமே. (140)

வத்துபரிச் சேத மொருபொரு ளிதுவா
மொருபொரு ளிஃதன் றென்ன வுரைத்தலே. (141)

பலைமூன் றுகடுக் காய்நெல் லிக்காய்
தான்றிக் காயிவை தாந்திரி பலையே. (142)

கடுக்காய் வாதப் பிணிகடத் துவதே. (143)

நெல்லிக்காய் பித்த மதைநீக் குவதே. (144)

தான்றிக் காய்கபந் தணிப்ப தாமே. (145)



பாவ புண்ணிய வழக்கமூன் றுமவை
செய்தல் செய்வித்த லுடன்பட லென்ப.

பாவின மூன்றுதா ழிசைதுறை விருத்தமே.

பிணிமூன்று வாதம் பித்தங் கபமே.

வாதநோய்த் தன்மை வலித்த லிசித்தலே.

பித்தநோய்த் தன்மை பிதற்ற லழற்றலே.

கபநோய்த் தன்மை கனைத்த லிருமலே.

புரமூன் றிரும்பு வெள்ளிபொன் மதிலவை
முப்புர மென்ன மொழியப் படுமே.

பேத மூன்றவை சுகத பேதஞ்
சுசாதி பேதம் விசாதி பேதமே.

சுகத பேத மரத்தி னுக்கிலை
பூக்காய் முதல போன்மென மொழிப.

சுசாதி பேத மாவதோர் சாதி
மரத்துக் குமறு மரம்போன் மென்ப.

விசாதி பேத மரத்துக் குக்கற்
போலு மென்னப் புகலுவர் புலவர்.

பொறிமூன் றுமனம் வாக்குக் காயமே.

மனப்பொறி யொன்றற மனனஞ் செய்யும்.

வாக்குமன னத்தை வசனிக் கும்மே.

காயந் தொழிற்கெலாங் காரண மாகுமே.

போதப் பிரகா ரம்மூன் றுமவை
யுத்தேச மிலக்கணம் பரீக்கை யென்ப.

உத்தேச மாவது விவகரிக் கும்பொருட்
பெயரை மாத்திரம் பேசுவ தென்ப.

இலக்கண மாவதப் பொருளின் சிறப்புத்
தன்மை கூற லென்னச் சாற்றுப. (163)

பரீக்கை யப்பொரு ளிலிவ்வி லக்கண
முண்டோ வின்றோ வென்ன வுணர்தலே, (164)

மங்களா சரண மூன்றவை வாழ்த்து
வணக்கஞ் செயப்படு பொருளென வழங்குப. (165)

வாழ்த்து மங்கல வாசக மென்ப. (166)

வணக்கந் தாந்தலை வணங்குதன் முதலவே. (167)

செயப்படு பொருளக் கதையா தியவே. (168)

சூரியன் வீதி சொல்வர் மூன்றவை
மேட மேறு மிதுன மென்ப. (169)

ஒருமுக வெழினியும் பொருமுக வெழினியுங்
காந்துவ ரெழினியு மெனத்திரை மூன்றே. (170)

மண்டல் மூன்றவை யக்கினி யிரவி
சந்திர மண்டல மென்னச் சாற்றுப. (171)

அக்கினி மண்டலங் குதங்குய் யம்மே. (172)

இரவி மண்டலம் நாபி யிதயமே. (173)

சந்திர மண்டல மடிநா டெற்றியே. (174)

மலமூன் றாணவ மாயை கன்மமே. (175)

ஆணவ நானென்ப தென்ன வறைகுவர். (176)

மாயை யுலகிற் குபதான மென்ப. (177)

கன்ம மாவ துயிர்களின் றொழிலே. (178)

முத்தி விக்கின மூன்றறி யாமை
ஐயந் திரிபா மென்ன வறைகுப. (179)

அறியாமை யுண்மைப் பொருளுணா ராமையே. (180)

ஐய மதன்று வோவென் றெண்ணலே. (181)



திரிபொன்றை வேறொன்றாச் சிந்தித்த லென்ப. (182)

மும்மை யாவன வும்மை யிம்மை
மறுமை யென்ன வழங்கப் படுமே. (183)

உம்மை முற்பிறப் பென்ன வோதுப. (184)

இம்மை யிப்பிறப் பென்ன வியம்புப. (185)

மறுமை வருபிறப் பென்ன வழங்குப. (186)

மொழிமூன் றவைமெய் கூறல் புகழ்கூறல்
பழிகூற லென்னப் பகரப் படுமே. (187)

அங்கி மூன்றவை காருக பத்தியந்
தக்கிணாக் கினிய மாகவ னீயமே. (188)

வைசியர் மூவ ரவர்தன வைசியர்
பூவை சியர்கோ வைசிய ரென்ப. (189)

தனவை சியர்பொரு ளீட்டும்வர்த் தகரே. (190)

பூவை சியர்பயிர் புரக்கு முழவரே. (191)

கோவை சியர்பசுக் காக்குங் குணத்தரே. (192)

இவர் வரு ணத்தா லொருவ ராயினுந்
தொழிலான் மூவ ராகுவ ரென்ப. (193)

ஆன்ம தத்துவம் வித்தியா தத்துவஞ்
சிவதத் துவமெனத் தத்துவ மூன்றே. (194)

தைவிக மான்மிகம் பௌதிக மென்னத்
துக்கமூ வகையாச் சொற்றன ருணர்ந்தோர். (195)

உயிர்கள் மூவகை யாக வுரைப்பர்
சகலர் பிரளயா கலர்விஞ் ஞான
கலரிவ ரென்னக் காண்ப ருணர்ந்தோர். (196)

கொடைமணம் வீரங் குறித்திசைத் தவினான்
முரச மூன்றென மொழிகுவ ருணர்ந்தோர். (197)

கொன்றை யங்குழ லாம்ப லங்குழன்
முல்லையங் குழலென வங்கிய மூன்றே. (198)

இடைகலை பிங்கலை சுழுமுனை யெனுமிவை
மூன்றுநா டிகளென மொழிந்தனர் புலவர். (199)

கதலி மாப்பலாக் கானுமுக் கனியே. (200)

வனசரங் கிரிசர நதிசர மென்ன
மூவகை யானையா மொழிகுவர் புலவர். (201)

நாற்பொருள்.

அங்க நான்குதேர் பரிகரி யாளிவை
சதுரங்க மென்னச் சாற்றவும் படுமே. (202)

அரணன் குமலை காடு மதில்கடல். (203)

நால்வகை யாந்தே ரதிரத மாரதஞ்
சமாரத மர்த்த ரதமெனச் சாற்றுவர். (204)

அளவு நான்கவை யெண்ண லெடுத்தன்
முகத்த னீட்ட லாமென மொழிப. (205)

எண்ண லளவு பொருளா வியல்வதே. (206)

எடுத்த லளவு தராசா லியல்வதே. (207)

முகத்த லளவு படியான் முகத்தலே. (208)

நீட்ட லளவு கோலா னிகழ்வதே. (209)

அனுபந்த நான்கவை விடயஞ் சம்பந்தம்
பிரயோ சனமதி காரி யென்ப. (210)

ஆச்சிரம நான்கவை பிரம சரிய
மில்வாழ்வு வானப் பிரத்தஞ் சந்நியாசம். (211)

பிரம சரிய மாசிரி யனிடத்
தோதி விரதங் காத்து விவாக
மின்றி யிருப்ப தென்மனார் புலவர். (212)

இல்வாழ் வில்லறம் வழாதில் லாளொடு
கூடி வாழ்த லென்னக் கூறுப. (213)



வானப் பிரத்த மில்ல றந்துறந்
தில்லோ டாயினுந் தனித்தா யினுமே
வனத்தி லிருந்து தவஞ்செய லென்ப. (214)

சந்நி யாச முற்றத் துறத்தலே. (215)

ஆடூஉக் குணநான் காமவை யறிவு
நிறையோர்ப் புக்கடைப் பிடியென நிகழும். (216)

இராகத் தகுதி நான்கிடஞ் செய்யுள்
குணங்கா லம்மிவை பற்றிக் கூறுவர். (217)

இடம்பற் றியவை இராகத் துள்ளே
குறிஞ்சி யிடத்தி ராகங் குறிஞ்சியே
பலை யிடத்தி ராகம் பஞ்சுரம்
வெஞ்சம மென்ன வுளம்புவ ரிசையோர்
முல்லை யிடத்தி ராகஞ் சதாரியே
மருத நிலத்தி ராக மருதமே
நெய்த நிலத்தி ராகஞ் செவ்வழி. (218)

செய்யுள் பற்றிய விராகத துள்ளே
வெண்பா விராகஞ் சங்கரா பரணமே. (219)

அகவ லுழிசை யிராகந் தோடியே. (220)

கலியி னிராகம் பந்து வராளியே. (221)

கலித்துறை யிராகம் பைரவி யென்ப. (222)

விருத்த விராக மத்திய மாவதி
காம்போ திகலி யாணி பலவுமே. (223)

உலாவி ராகஞ் சௌராட் டிரமே. (224)

தோடைய விராகஞ் சௌராட்டிர நாட்டை. (225)

மங்கள ராக மங்கள கௌசிகம். (226)

பிள்ளைக் கவியிசை கேதார கௌளம். (227)

பரணி யிராகங் கண்டா ரவமே. (228)

குணம்பற் றியவி ராகத் துள்ளே.
இரக்க விராக மாகிரி பியாகடை
நீலாம் புரிபுன் னாகவ ராளி
கண்டா ரவமெனக் கழறப் படுமே. (229)

துக்க விராகஞ் சொல்லிய விரக்க
ராகங்க ளன்றியும் வராளி மேலாமே. (230)

மகிழ்ச்சி யிராகந் தந்நி யாசி
சாவே ரியிரா கங்காம் போதியே. (231)

யுத்த விராக நாட்டையென் றோதுப. (232)

காலம் பற்றிய விராகத் துள்ளே
வசந்த கால விராகங் காம்போதி
யசாவே ரியொடு தந்நியாசி யென்ப. (233)

மாலை யிராகங் கலியாணி காபி
கன்ன டங்காம் போதி யென்ப. (234)

யாம விராக மாகரி யாமே. (235)

விடிய விராகம் பூபாள நாட்டை
யிராம கலிதே சாட்சரி யிந்தோளம். (236)

உச்சி யிராகஞ் சாரங்க மற்றுந்
தேசாட் சரியெனச் செப்புவ ரிசையோர். (237)

எக்கா லத்தினு மியையு மிராக
மாகரி யிந்தோ ளஞ்சா ரங்க
மிராம கலிபூ பாள நீங்கி
நின்ற மற்றவை நிகழு மென்ப. (238)

இழிச்சொன் னான்கா மவைதாங் குறளைபொய்
கடுஞ்சொல் பயனில் சொல்லெனக் கழறுப. (239)

குறளை யாவது கோட்சொல லென்ப. (240)

பொய்சொலத் தகாமையைப் புகல லென்ப. (241)

கடுஞ்சொ லாவது வெட்டெனக் கழறலே. (242)



பயனில சொல்பொருட் பயவாத பேசலே. (243)

உண்டி நான்கவை யுண்ட றின்ற
னக்கல் பருக லென்ன நவிலுப. (244)

உண்டற் குரியவை சோறா தியவே. (245)

தின்றற் குரியவை கறியா தியவே. (246)

நக்கற் குரியவை தேனா தியவே. (247)

பருகற் குரியவை நீரா தி யென்ப. (248)

உபாய நான்கவை சாமந் தானம்
பேதந் தண்ட மென்னப் பேசுப. (249)

சாம வுபாயஞ் சமாதா னம்மே. (250)

தான வுபாயம் பொருளைத் தருதலே. (251)

பேத வுபாயந் துணைவலி பிரித்தலே. (252)

தண்ட வுபாயம் படைகொண்டு தாக்கலே. (253)

உரைநான் காமவை கருத்துரை பதவுரை
பொழிப்புரை யகல வுரையெனப் புகலுப. (254)

கருத்துரை செய்யுட் கருத்தை யுரைத்தலே. (255)

பதவுரை சொற்றொ றும்பய னுரைத்தலே. (256)

பொழிப்புரை பொருளைத் தொகுத்துப் புகலலே. (257)

அகல வுரைய திலக்கண விலக்கிய
மெடுத்துக் காட்டிடன் பொருள்விரித் தியம்பலே. (258)

வேறு பாடு நான்கவை யெறிதல்
குத்தல் வெட்ட லெய்த லென்ப. (259)

கணக்கு வகைநான் கவைதொகை பிரிவு
பெருக்குக் கழிவெனப் பேசப் படுமே. (260)

தொகைதான் பலவெண்ணை யொன்றாக் குதலே. (261)

பிரிவோ ரெண்பல வெண்ணாப் பிரிதலே. (262)
பெருக்கோ ரெண்மற் றெண்ணாற் பெருக்கலே. (263)
கழிவோ ரெண்ணின்மற் றோரெண் கழிதலே. (264)
கதிநான் காமவை தேவர்கண் மக்கள்
விலங்கு நரக ரென்ன விளம்புப. (265)
கரணா நான்கா மவைமனம் புத்தி
யகங்கா ரஞ்சித் தமென வறைகுப. (266)
மனமது பற்றுதன் மருவு மென்ப. (267)
புத்தி விசாரித் தறிபு மென்ப. (268)
சித்த மதுசிந் திக்கு மென்ப. (269)
அகங்கா ரங்கொண் டெழுப்பு மென்ப. (270)
கவிக ணால்வகை யாசு மதுரஞ்
சித்திரம் வித்தா ரமெனச் செப்புப. (271)
ஆசு கவிபொரு ளடிபா வணிமுதற்
கொடுத்துமற் றொருவன் பாடுக வென்ற
வுடனே பாடுங் கவியென வுரைப்ப. (272)
மதுர கவிசொற் பொருளாஞ் செல்வந்
தொடைதொடை விகற்ப முதலி யவலங்
காரத் தோடு மின்னோ சைத்தா
யமுதுறப் பாடுங் கவியென வறைகுவர். (273)
சித்திர கவியுயர் மாலை மாற்றுச்
சுழிகுள மேக பாதஞ் சக்கர
மெழுகூற் றிருக்கை காதை கரப்புக்
கரந்துறை கவின்றா சங்கொளல் வாவன்



ஞாற்றுப் பாத மயக்குப் பாவின்
புணர்ப்புக் கூட சதுக்கங் கோமூத்திரி
யோரெழுத் தினமொற் றெழுத்துத் தீர்ந்த
வொருபொருட் பாட்டுச் சித்திரப் பாவை
விசித்தி ரப்பா வினாவுத் தரமே
சருப்பதோ பத்திர மெழுத்து வருத்தன
மிவைகண் முதலிய மிறைக்கவி யாமே. (274)
வித்தா ரகவி மும்மணிக் கோவை
பன்மணி மாலை மறங்கலி வெண்பா
தசாங்க மடலூர்தல் சாற்று மியலிசை
விரித்துரை கூத்துடன் விளம்பு நூல்களே. (275)
கேள்வி நான்கா மவைதா மறம்பொரு
ளின்பம் வீடா மென்ன மொழிகுவர். (276)
அறமா வதுபிறி தோருயி ருக்குந்
துன்பஞ் செய்யா தின்பஞ் செய்தலே. (277)
பொருளா குவதற வழியி னீட்டிய
பொன்னிதி முதலிய வெண்ணப் புகலுப. (278)
இன்ப மாவ தவ்வகைப் பொருளான்
மனையுட னுகர்ந்து மகிழ்த லென்ப. (279)
வீடா குவதம் மூன்றும் விடுத்தலே. (280)
சாந்து வகைநான் காமவை பீதங்
கலவை வட்டிகை புலியெனக் கழறுப. (281)
மார்க்க நான்கவை வகுப்பாஞ் சரியை
கிரியை யோக ஞான மென்ப. (282)

சரியை கோயி லலகிடன் மெழுகல்
மலர்தொடுத் தணிதீப மேற்ற
லடியவர் பணிமுத லாமென மொழிப. (283)
கிரியை யாவது கிளரிறை பூசை
யாதிய செய்தழ லோம்ப லென்ப. (284)
யோக மாவ தட்டாங்க வுறுப்பிசைந்
தாறு தாரப் பொருளறிந் தேகி
மதியமு துண்டு வளர்சோ தியினிற்
புக்கழுந் துவதெனப் புகலுவர் புலவர். (285)
ஞான மாதவம் மூன்று முற்றி
யருளைப் பெற்று வினையொப்பு வாய்ந்த
பருவந் தன்னிற் பரன்குரு வடிவா
வந்துப தேசம் வகுத்திடப் பதியை
யிரண்டற கலப்பி னெய்தி நிட்டை
புரிந்திருப் பதுவெனப் புகன்றனர் புலவர். (286)
சொல்வகை நான்காம் பெயர்வினை யிடையுரி. (287)
பெயர்ச்சொ லொவ்வொரு பொருளைக் குறித்துத்
தோன்று தொட்டு வழங்குவ தென்ப. (288)
வினைச்சொ லாவது பொருளின் செயலைக்
காட்டி வழங்குவ தென்னக் கழறுப. (289)
இடைச்சொ லாவது பெயர்வினை யோடு
கலந்து தன்பொருள் காட்டுவ தென்ப. (290)
உரிச்சொல் பொருளி னிறஞ்சுவை முதலிய
குணங்களைக் காட்டுவ தென்னக் கூறுப. (291)



தோற்ற நான்கா மவைபை முட்டை
நிலம்வியர் வையினி னிகழு மென்ப. (292)
பையின் றோற்ற மனித ரொடுமா
டாடு முதனாற் காலியா மென்ப. (293)
முட்டையின் றோற்றம் பறவை யூர்வன
நீந்து வனவா மென்ன நிகழுமே. (294)
நிலத்தின் றோற்ற மரம்புல் லாதியே. (295)
வியர்வையின் றோற்ற கிருமிபே னாதியே. (296)
நிலம்நான் காமவை குறிஞ்சி முல்லை
மருத நெய்த லென்ன வழங்குப. (297)
குறிஞ்சி நிலமலைச் சார்பெனக் கூறுப. (298)
முல்லை நிலங்கான் சார்பென மொழிப. (299)
மருத நிலம்வயற் சார்பென வழங்குப. (300)
நெய்த நிலங்கடற் சார்பென நிகழுமே. (301)
நிலைநான் காகு மவைபை சாசம்
மண்டல மாலீடம் பிரத்தி யாலீட
மிவைவிற் றொடுத்தம் பெய்வார்க் குரியவே. (302)
பைசாச நிலையொரு காலி னின்றொரு
காலை முடக்க லென்னக் கழறுப. (303)
மண்டல நிலையிரு காலும் பக்கல்
வளையமண் டலித்த லென்ன வழங்குப. (304)
ஆலீ டநிலை வலக்கான் மண்டலித்
திடக்கான் முந்துற லென்ன வியம்புப. (305)
பிரத்தி யாலீட நிலைதான் வலக்கான்
முந்துற் றிடக்கான் மண்ட லித்தலே. (306)

பண்ணான் காமவை பாலை குறிஞ்சி
மருதஞ் செவ்வழி யென்ன வழங்குப. (307)
பதவி நான்கு சாலோகஞ் சாமீபஞ்
சாரூ பஞ்சா யுச்சிய மென்ப. (308)
சாலோ கம்பதி யுலகத்தில் வாழ்தலே. (309)
சாமீ பம்பதி சமீபத்தில் வாழ் தலே. (310)
சாரூ பம்பதி யுருப்பெற்று வாழ்தலே. (311)
சாயுச் சியம்பதி யுடனொன் றுதலே. (312)
பாநான்கு வெண்பா வாசிரி யப்பா
கலிப்பா வஞ்சிப் பாவெனக் கழறுப
மருட்பாக் கூட்டியைந் தென்றும் வழங்குப. (313)
நால்வகைப் புண்ணியத் தோற்றத் தவர்தவ
மொழுக்க மீகை கல்வியோ ரென்ப. (314)
புலமையோர் நால்வ ரவர்கவி கமகன்
வாதி வாக்கி யென்ன வழங்குப. (315)
ஆசு முதற்கவி யறைகுவன் கவியே. (316)
கமக னேயரும் பொருளைச் செம்பொருள்
நடையாக் காட்டி நவிலு வோனே. (317)
வாதியே காரண மும்மேற் கோளு
மெடுத்துக் காட்டிப் பிறன்கோண் மறுத்துத்
தன்மத நிறுத்து பவனெனச் சாற்றுப. (318)
வாக்கி யறம்பொரு ளின்பம் வீடெனும்
நாற்றிறங் களையுங் கேட்க வேட்க
விரித்துக் கூறுவோ னென்ன விளம்புப. (319)



நான் கவைகொடிப் பூக்கோட் டுப்பூ
ர்ப்பூப் புதர்ப்பூ வென்ன நிகழுமே. (320)
பெண்கள் பருவ நான்கவை வாலை
தருணி பிரவிடை விருத்தை யென்ப. (321)
வாலைப் பருவ வயதைந் தாமே (322)
தருணி பருவ வயதுபதி னொன்றே. (323)
பிரவிடை பருவ வயது நாற்பதே. (324)
விருத்தை பருவ வயதுநாற் பான்மே
லுள்ளன வென்ன வோதப் படுமே. (325)
பெண்வகை நான்கவை பதுமினி சித்தினி
சங்கினி யத்தினி யென்னச் சாற்றுப
இவ்வகை கொக்கோ கத்தியம் புவரே. (326)
அறம்பொரு ளின்பம்வீ டாகுநாற் பொருளே. (327)
பொன்வகை நான்கவை யாடகங் கிளிச்சிறை
சாத ரூபஞ் சாம்பூ நதமே. (328)
மகடூஉக் குணநான் கவைநா ணமட
மச்சம் பயிர்ப்பென வறையப் படுமே. (329)
யுகநான் காமவை கிருதந் திரேதந்
துவாபரங் கலியுக மென்னச் சொல்லுப. (330)
கிருத யுகம்பதி னேழிலக்கத்
திருபத் தெண்ணா யிரமாண் டென்ப. (331)
திரேதா யுகம்பன் னிரண்டிலக் கத்துடன்
றொண்ணூற் றாறா யிரமென மொழிப. (332)
துவாபர யுகந்தா னெட்டிலக் கத்தோ
டறுபத்து நான்கா யிரமென வறைகுவர். (333)

கலியுக மாவது நாலிலக் கத்து
முப்பத் திரா யிரமென மொழிகுவர். (334)
இப்படிச் சதுர யுகமா யிரம்வரிற்
பிரம னுக்கொரு பகலா கும்மே. (335)
வருணம் நான்கவை பிரம சத்திரிய
வைசிய சூத்திர வர்க்க மென்ப. (336)
வானோர் வரநான் கிலகு சூக்கும
மக்கயம் பிரகா சமென மொழிகுவர். (337)
இலகுகன மின்மை யென்னச் சொல்லுப. (338)
சூக்குமங் கண்டிப் பிலதெனச் சொல்லுப. (339)
அக்கயங் கெடுதி யின்மையா மென்ப. (340)
பிரகாசஞ் சோதி மயமெனப் பேசுப. (341)
மத்தளந் தண்ணுமை யிடக்கை சல்லிகையென
வைத்த நான்குமுத் தமத்தோற் கருவி. (342)
வேத நான்கவை யிருக்குத் தைத்திரியஞ்
சாம மதர்வண மென்னச் சாற்றுப. (343)
நால்வகை நரம்பு நவிலுங் காலை
யிணைகிளை பகைநட் பெனவியம் புவரே. (344)
இணையெனப் படுவது கிழு மேலு
மணையத் தோன்று மளவின வென்ப. (345)
கிளையெனப் படுவது கிளக்குங் காலை
குரலே யிளியே துத்தம் விளரி
கைக்கிளை யெனவைந் தாகு மென்ப. (346)
நின்ற நரம்பிற் காறு மூன்றுஞ்
சென்றுபெற நிற்பது பகைநரம் பாமே. (347)



நட்பு நாலாம் நரம்பெனப் படுமே. (348)
சல்லிய கரணி சந்தான கரணி
சமனிய கரணி மிருதசஞ் சீவினி
யிவையே நால்வகை மருந்தெனச் செப்புப. (349)
சந்தானிக பிச்சை தருகண பிச்சை
மாதுகரி பிச்சை யயாசக பிச்சை
யென்பன நால்வகைப் பிச்சை யிவைகளைச்
சைவ சமய நெறியிற் சாற்றினர். (350)
கொட்டு மசையுந் தூக்கு மளவு
மொட்டப் புணர்ப்பது நால்வகைத் தாளம். (351)
நிற்ற லியங்க லிருத்தல் கிடத்தலென்
றுற்ற நான்கு மவினய நிலக்களன். (352)
பெரிதா மிலக்குஞ் சிறிதா மிலக்கு
மசையு மிலக்கு மசையா விலக்கு
மெனநான் கிலக்கம் பெய்யு மிலக்கே. (353)

ஐம்பொருள்.

அகிற்கூட் டைந்தா மவைகள் சந்தனங்
கருப்பூ ரமெரி காசுதே னேலமே. (354)
அக்கினி யைந்தா மவைக ளிராகங்
கோபங் காமஞ் சடந்தீ பனமே. (355)
அங்க மைந்தா மவைதிதி வார
நட்சத் திரமொடு யோகங் கரண
மிவைபஞ் சாங்க மெனவும் புகல்வர். (356)
திதிபிர தமைமுதற் பதினைந் தாமே. (357)
வார ஞாயிறு முதலே ழென்ப. (358)
நட்சத் திரமசு பதிமுத லாய
விருபத் தேழென வியம்புவர் கணிதர். (359)
யோகம்விட் கம்ப முதன்மு வொன்பதே. (360)

கரண வகைபவ முதற்பதி னொன்றே. (361)

அரசர்க் குக்குழு வைந்து மந்திரியர்
புரோகிதர் சேனை பதியர் தூதர்
சாரண ரென்னச் சாற்றப் படுமே. (362)

மந்திரி யானவ ரரசர்க் குத்துணை
யிருந்தா லோசிப் பவரே யென்ப. (363)

புரோகித ரானவ ராசர்க் குவரும்
காரிய முரைத்துங் கிருத்திய மவைகளைச்
செயச்சொலுஞ் சோதிட ரென்னச் செப்புப. (364)

சேனை பதிய ரானவர் படைகொடு
பகைவரை வெல்பவ ரென்னப் பகருப. (365)

தூத ரானவ ரொருவர்க் கொருவர்
சொன்ன செய்தியைச் சொல்பவ ரென்ப. (366)

சாரண ரானவர் புறம்பி னுண்டாகுஞ்
செய்தி யெல்லாந் தெரிந்துரைப் பவரே. (367)

எலுமிச் சம்பழ நாரத் தம்பழ
மாதுளம் பழமொடு தமரத் தம்பழங்
குளஞ்சிப் பழமென கூறுவ ரைங்கனி
யிவையபி டேகத் தியல்வன வாமே. (368)

கடுகுட னோமம் வெந்தய முள்ளி
பெருங்காய மென்னப் பிறங்குமைங் காயம். (369)

சீனக் காரந் திகழ்வெங் காரம்
பொரிகா ரத்துடன் புகல்சௌக் கார
நவச்சா ரம்மென நவில்வரைங் காரம். (370)

அரசர்க் குறுதிச் சுற்றமை வராமவர்
நட்பாள ரந்தணர் நன்மடைத் தொழிலர்
மருத்துவக் கலைஞர் நிமித்திகப் புலவரே. (371)

நட்பாள ரானவ ராசன தின்பந்
துன்பந் தமதெனச் சூழ்ந்தியல் பவரே, (372)



அந்த ணாள ரரசன் வாழ்நாள்
செங்கோல் வளர நீதி செப்புவரே. (373)

மடைத்தொழி லாள ரறுசுவை யுண்டிக
ளுடம்பிற் கினியவா வூட்டுவோ ரென்ப. (374)

மருத்துவக் கலைஞ ருடம்பி னோயறிந்
தன்னு டகப்பரி காரஞ் செய்பவர். (375)

நிமித்திகப் புலவர் பல்லிச் சொன்முதற்
குறிகளை யாய்ந்து கூறு வோரே. (376)

அவத்தை யைந்தவை சாக்கிரஞ் சொப்பனஞ்
சுழுத்தி துரியந் துரியா தீதமே. (377)

அந்நுவய விலக்கண மைந்தவை விசேடணம்
விசேடியங் கருத்தா கருமங் கிரியையே. (378)

விசேடண மாவது பொருளின் குணத்தை
விளக்குஞ் சொல்லென விளம்புவர் புலவர். (379)

விசேடிய மாவது குணச்சொலை யடுத்த
பொருளைக் காட்டுஞ் சொல்லெனப் புகலுப. (380)

கருத்தா வாவது கருதிய வினைகளை
வெளிப்படச் செய்பவ னென்ன விளம்புப. (381)

கரும மாவது செயலாற் றோற்றுஞ்
செயப்படு பொருளா மென்னச் செப்புவர். (382)

கிரியை யாவது செய்பவன் செயலின்
முடிவு காட்டு மொழியா மென்ப. (383)

இலக்கண மைந்தவை யெழுத்துச் சொற்பொருள்
யாப்பணி யென்ன வியம்புவர் புலவர். (384)

எழுத்தி னிலக்கண மெழுத்தின் பெயர்முறை
பிறப்புரு வாதியைப் பேசுவ தென்ப. (385,

சொல்லி னிலக்கணந் திணைபா லிடமிரு
வழக்காதி காட்டி வழங்குவ தென்ப. (386)

பொருளி னிலக்கண மகமே புறமே
யெனுமிரு வகைத்தாய்க் கைக்கிளை யாதிய
வெழுதிணை யகமும் வெட்சித் திணைமுத
லெழுதிணைப் புறமு மாம்பொரு ளியம்புவர். (387)

யாப்பி லக்கண மெழுத்தசை சீர்பந்
மடிதொடை பாவின மாமென மொழிப. (388)

அணியி னிலக்கண முவமை யாதி
யேதி றுதிறா ருகிய பொருளணி
மடக்குச் சித்திர மாகிய விருவகைச்
சொல்லணி யென்னச் சொல்லுவர் புலவர். (389)

இலிங்க மைந்தவை பிருதிவி யப்புத்
தேயு வாயு வாகாய விலிங்கமே. (390)

பிருதி விலிங்கங் காஞ்சியிற் பிறங்கும். (391)

அப்புலிங் கந்திரு வானைக் காவிலே. (392)

தேயு லிங்கந் திருவணு மலையிலே. (393)

வாயுலிங் கம்வரை காளத்தி மன்னுமே. (394)

ஆகாய லிங்கஞ் சிதம்பரத் தவிருமே. (395)

ஈசுரன் முகமைந் தீசானந் தற்புருட
மகோரம் வாமஞ்சத் தியோசாத மைந்தே. (396)

ஈசா னம்முக மனைத்து மாளுமே. (397)

தற்புரு டமுகங் காக்கு மென்ப. (398)

அகோர முகம தழிக்கு மென்ப. (399)

வாம முகமது விளக்கு மென்ப. (400)

சத்தியோ சாத முகந்தோற் றுவிக்கும். (401)

உலோக மைந்தா மவைபொன் வெள்ளி
செம்பிரும் பீய மென்னச் செப்புப. (402)



எழுத்துத் தான மைந்தவை பாலன்
குமா னரசு மூப்பு மரணமே. (403)

பாலத் தானம் அஆ வென்ப. (404)

குமரத் தானம் இஈ ஐயே. (405)

அரசத் தானம் உஊ ஔவே. (406)

மூப்புத் தானம் எஏ மொழிப. (407)

மரணத் தானம் ஒஓ வழங்குப. (408)

ஓதிய தானத் துயிர்மெய் தனின்மெய்
தள்ளி யுயிரைக் கொள்கெனச் சாற்றுப. (409)

பாட்டுடைத் தலைவன் பெயர்முத லெழுத்தை
பாலனுக் கோடல் பாவலர் வழக்கே. (410)

முன்னைய தான மூன்று நன்மையே. (411)

மங்கலச் சொன்முன் னெழுத்துவரை யெண்ணுக
விவைவெண் பாப்பாட் டியலிற் காண்கவே. (412)

ஐம்புல நுகர்ச்சியி னிறப்பன வைந்தவை
மீன்வண் டியானை யசுணம் விட்டிலே. (413)

சுவையா லிறப்பன மீனெனச் சொல்லுப. (414)

நாற்றத் தாலிறப் பனவண் டென்ப. (415)

பரிசத் தாலிறப் பனயானை யென்ப. (416)

ஓசையா லிறப்பன வசுணமென் றோதுப. (417)

ஒளியா லிறப்பன விட்டிலென் றுரைப்ப. (418)

கருமேந் திரிய மைந்தவை வாக்குப்
பாதம் பாணி பாயு வுபத்தமே. (419)

கன்னிகை யைவ ரகலிகை திரௌபதி
சீதை தாரைமண் டோதரி யிவரே. (420)

குரவ ரைவ ரரச னுபாத்தி
யாயன் றந்தை தேசிகன் மூத்தோன். (421)

குற்ற மைந்தவை கொட்டாவி நெட்டை
குறுகு றப்புழுச் சிடலல மரலொடு
நட்டு விழுத லென்ன நவிலுவர். (422)

கேள்வி யைந்தவை யறமாதி நான்கோ
டவற்றின் வழிநிற் றலாமென மொழிப. (423)

கைத்தொழி லைந்தவை யெண்ணெ லெழுத
லிலைகிளல் பூத்தொடுத் திடல்யாழ் வருடலே. (424)

கோச மைந்தவை யன்னமய கோசம்
பிராண மயகோச மனோமய கோசம்
விஞ்ஞான மயகோச மானந்த மயகோசம். (425)

கௌட மைந்தவை சுத்த கௌடங்
கான குச்சஞ் சார சுவத
முற்கல மைதுலை யென்ன வோதுப. (426)

கௌட மென்பது கருதுமோர் தேசமே. (427)

கௌவிய மைந்தவை கோசல கோமயம்
பாறயிர் நெய்யிவை யென்னப் பகருவர். (428)

சத்தக் கருவி யைந்தவை தோறுளை
நரம்பு கஞ்ச மிடறென நவிலுப. (429)

சத்தி யைந்தவை பராசத்தி யாதி
சத்தி யிச்சா சத்தி ஞான
சத்தி கிரியா சத்தி யென்ப. (430)

சயன மைந்தவை யிலவம் பஞ்சு
செம்மை வெண்பஞ்சு மயிரனத் தூவி
இவற்றாற் செய்வன வியம்பு பஞ்சணையே. (431)

சிவதத் துவமைந் தவைசுத் தவித்தை
ஈசுரஞ் சாதாக் கியஞ்சத்தி சிவமே. (432)



சுத்த வித்தை ஞானம தேறிக்
கிரியை குறைந்த தென்னக் கிளக்குப.

ஈச்சுர மாவது ஞானங் குன்றிக்
கிரியை யுயர்ந்த தென்னக் கிளக்குப.

சாதாக்கிய ஞானங் கிரியை யொத்ததே.

சத்தி யாவது கிரியை நாடலே.

சிவமா வதுமெய்ஞ் ஞான மொன்றலே.

சூதக மைந்தவை சனன மரணச்
சூசஞ் சண்டாள நீரிற் றோய்தல்
சுராபா னம்பனல் பொய்கூ றலென்ப.

ஐவர்தங் தையர்பிறப் பித்தோன்கற் பித்தோ
னுபதே சஞ்செய்தோ னன்னந் தந்தோ
னுபத்துக் குதவினோ னுமென மொழிப.

தருவைந் தவையரி சந்தனங் கற்பகஞ்
சந்தா னம்பா ரிசாதமந் தாரமே.

தாய ரைவர்பா ராட்டுதா யூட்டுதாய்
முலைத்தாய் கைத்தாய் செவிலித் தாயே.

தாள மைந்தா மவைசச் சற்புடஞ்
சாசற் புடஞ்சட் பிதாபுத் திரிகஞ்
சம்பத்து வேட்ட முற்கடி தம்மே.

சச்சற் புடதாள மீசன் சத்தியோ
சாத முகத்திற் பிறந்தது பிரம
சாதியா மஃதெட் டுமாத்திரை பெறுமே.

சாசற் புடதா ளமீசன் வாம
முகத்திற் பிறந்த வரச சாதியஃ
தாறு மாத்திரை யளவு மென்ப.

சட்பிதா புத்திரி கதாள மானது
ஈச னகோர முகத்திற் பிறந்த
வைசிய சாதியன் னிருமாத் திரையதே.

சம்பத் துவேட்ட தாள மீசன்
றற்புரு டமுகத் திற்பிறந்த துபின்னுஞ்
சூத்திர சாதிபன் னிருமாத் திரையதே. (446)

உற்கடித தாள மீச னீசான
முகத்திற் பிறந்த சங்கிரம சாதி
யஃதா று மாத்திரை யாகு மென்ப. (447)

திணையைந் தாமவை நிலநான் கினொடு
பாலையுங் கூட்டிப் பகரப் படுமே. (448)

பாலை நீரிலாப் பானில மென்ப. (449)

திணைப்பா லைந்தவை யொருவ னொருத்தி
பலரொன் று பலவெனப் பகரப் படுமே. (450)

திராவிட மைந்தவை துளுவ மாந்திரங்
கன்னட மகாராட் டிரங்கூர் சரமே. (451)

திரவிய முண்டா மிடமைந் தாமலை
காடு நாடு நகர்கட லென்ப. (452)

மலைபடு திரவிய மைந்தவை மிளகு
கோட்ட மகிறக் கோலங் குங்குமமே. (453)

காடுபடு திரவிய மைந்துதேன் கருந்தினை
யரக்கு மயிற்பீலி நாவி யென்ப. (454)

நாடுபடு திரவிய மைந்தவை செந்நெல்
சிறுபய று கரும்பு வாழை யிளநீரே. (455)

நகர்படு திரவிய மைந்தவை யரசன்
பித்தன் மந்தி யானைகண் ணடியே. (456)

கடல்படு திரவிய மைந்தவை யுப்பு
முத்துச் சங்கு பவளமொக் கோலையே. (457)

திருமா லாயுத மைந்தவை சக்கரம்
தனுவா டண்டு சங்க மென்ப. (458)



துரக கதியைந் தவைமல் லகதி
மயூர கதிமிரு வல்லியாக் கிரகதி
வானர கதியுட னிடப கதியே.

தேவ ரைவர் பிரமன் விட்டுணு
வுருத்திரன் மகேசு ரன்சதா சிவனே
யிவரே பஞ்ச கர்த்தாக் களென்ப.

பிரமன் படைத்தலைப் பேணுவ னென்ப.

விட்டுணு காத்தலை மேவுவ னென்ப.

உருத்திர னழித்தலை யுடையவ னென்ப.

மகேச்சுரன் மறைத்தலை மருவுவ னென்ப.

சதாசிவன் விளக்கித் தானருள் பவனே.

ஐந்து பறவை வல்லூ றாந்தை
காகங் கோழி மயிலெனக் கழறுப.

அவைகளி னக்கர மைந்தவை முறையே
அஇ உஎ ஒவ்வுந் தத்த
நெடிலோ டியைந்து நிகழு மென்ப.

அன்னவை யின்றொழி லைந்தவை யுண்டி
நடையர சுறக்கஞ் சாவென நவிலுப.

உண்டி முதன்மூன் று நன்றென வுரைப்ப.

பாதக மைந்தவை கொலைபொய் களவு
கள்ளருந் தல்குரு நிந்தை யிவையே.

புலனைந் தவைசுவை யொளியூ றோசை
நாற்ற மென்ன நவிலப் படுமே.

பூத மைந்தா மவைநில நீர்தீக்
காற்று விசும்பிவை பஞ்ச பூதமே.
பொறியைந் தவைமெய் வாய்கண் மூக்குச்
செவியிவை யென்னச் செப்புவர் புலவர்.

மயிர்ப்பா லைந்தா மவைமுடி கொண்டை
சுருள்குழல் பனிச்சை யென்னச் சொல்லுப. (474)

முடியது மயிரை யுச்சியின் முடித்தலே. (475)

கொண்டை பக்கத்தின் முடித்தலைக் கூறுப. (476)

சுருளது பின்னிச் செருகலைச் சொல்லுப. (477)

குழலது சுருட்டி முடித்தலைக் கூறுப. (478)

பனிச்சை பின்னி விடுதலைப் பகருப. (479)

வெள்ளிடை மன்ற மிலஞ்சி மன்றங்
கன்னின்ற மன்றம் பூத சதுக்கம்
பாவை மன்றமாப் பகர் மன்றைந்துஞ்
சிலப்பதி காரந் திகழ்வுறச் சொலுமே. (480)

மன்மதன் கணைக ளைந்தவை வனசஞ்
சூத மசோகு முல்லை நீல
முன்மத்த மதன மோகஞ் சந்தாபம்
வசிகரண மென்ன வழங்குவர் பெயரே. (481)

ஐங்கணை யவத்தை யைந்தவை சுப்பிர
யோகம் விப்பிர யோகஞ் சோக
மோக மரண மென்ன மொழிகுப. (482)

சுப்பிர யோகஞ் சொல்லு நினைவுமே. (483)

விப்பிர யோகம் வெய்துயிர்த் திரங்கலே. (484)

சோகம் வெதுப்புந் துய்ப்பன தெவிட்டலும். (485)

மோக மழுங்கலு மொழிபிதற் றலுமே. (486)

மரண மயர்ப்பு மயக்கமு மென்ப. (487)

மாலையின் பெயரைந் தவைதம மாயை
மோக மவித்தை யநிர்த மென்ப. (488)

தமமே சிவ சைதன் னியத்தை
மறைக்கை யாற்பெயர் வழங்கப் படுமே. (489)



மாயை சகத்து ரூப மான
வங்கியதாத் தோற்றத் துக்கா ரணமே. (490)

மோகம் விபரீத ஞான முண்டாக்கலே. (491)

அவித்தை யுணர்வினை யழிக்கையா லென்ப. (492)

அநிர்தஞ் சத்துரூ பத்துக் கந்நியம். (493)

மூல மைந்தவை செவ்வியஞ் சித்திர
மூலங் கண்டுபா ரங்கிபே ரரத்தை
சுக்கா மென்னச் சொல்லப் படுமே. (494)

யாக மைந்தவை பிரமந் தெய்வம்
பூதம் பிதிர்மா னுடமெனப் புகல்ப. (495)

பிரம யாகம் வேத மோதுதலே. (496)

தெய்வ யாக மோமம் வளர்த்தலே. (497)

பூதர்க் கிடுபலி பூத யாகமே. (498)

பிதிர்யா கந்தர்ப் பணமுடிப் பதுவே. (499)

மானுட யாக மிரப்போர்க் குணவிடல். (500)

வண்ண மைந்தவை வெண்மை கருமை
செம்மை பொன்மை பசுமை யென்ப. (501)

வாச மைந்தவை லவங்க மேலங்
கருப்பூ ரஞ்சாதிக் காய்தக் கோலமே. (502)

வினைவந் தாமவை யறியான் வினைவ
லறிவொப்புக் காண்ட லைய மறுத்த
லவனறிவு கோடன்மெய் யவற்குக் காட்டலே. (503)

விரையைந் தாமவை கோட்டந் துருக்கந்
தகர மகில்சந் தனமா மென்ப. (504)

ஆன்ம சுத்தி யவிர்தான சுத்தி
திரவிய சுத்தி மந்திர சுத்தி
யிலிங்க சுத்தி யைவகைச் சுத்தியாம். (505)

பாறயிர் நெய்தேன் பகர்சருக் கரையிவை
யைந்தழ தென்ன வறைகுவ ரிவற்றொடு
முக்கனி கூட்டிற் பலபஞ் சாமிர்தம். (506)

கறியுப் புவெடி யுப்பட் டுப்பு
வளைய லுப்பு மண்ணுப் பிவைகள்
பஞ்ச லவண மாகப் பகருவர். (507)

பச்சைக் கருப்பூ ரங்குந் துருக்கங்
காரகில் சந்தனங் கருஞ்சீ தாரி
யிவையின் புகையை வகைவிரைத் தூபம். (508)

ஐந்தெழுத் தவைபஞ் சாக்கர மந்திரம். (509)

பிதிரர் தெய்வம் விருந்துசுற் றத்தார்
தானிவ ரைவர் தாமைம் புலத்தவர். (510)

இன்னு மைவகை யாக மியம்பிற்
கன்ம யாகங் கரைதவ யாகஞ்
செபயா கமெனத் திகழ்மந் திரயாகந்
தியாகயா கம்மெனச் செப்புபா வனையுடன்
ஞானயா கம்மென நவிலுவர் புலவர். (511)

சுத்த மாயை யசுத்த மாயை
கன்ம மாணவந் திரோத மென்ன
வறைந்திடு மிவைக ளைவகைப் பந்தம். (512)

கடித்த னக்கல் பருகல் விழுங்கல்
சுவைத்த லிவையை வகையுண வென்ப. (513)

ஐவகை வடிவ மாவன வெவையெனிற்
சிவசா தாக்கிய மமூர்த்திசா தாக்கிய
மூர்த்திசா தாக்கியங் கர்த்திருசா தாக்கியங்
கன்மசா தாக்கியங் கருதிய வைந்துஞ்
சிவனை வகைவடி வென்னச் செப்புவர். (514)

சாதாக் கியமென் பதுதான் சத்தி
விகற்பமாங் கலையென விளம்புவர் புலவர். (515)



சாத்திர மைவகைத் தாமென வுரைப்பர். (516)

லௌகீ கம்பின் னவில்வை தீக
மத்தியான் மீக மதிமார்க்க மந்திர
மென்ன வுரைப்ப ரினிலௌ கீக
மாயுள் வேதந் தண்டமுத லாயின
வில்வக ளிம்மையிற் பலிக்குநூ லென்ப. (517)

வைதீக மாவது மறைகளிற் கிரியா
காண்டங் கூறுஞ் சோதிட் டோம
முதலிய புண்ணியத் தாலே பெறப்படுந்
துறக்க முதலி யவற்றைச் சொல்லு
மீமாஞ்சை நூலும் விளம்பு நியாயமும்
வைசேடிக நூலு மாமூன் றுவகை
யிவையிம்மை மறுமையிற் பலிக்கு நூலே. (518)

அத்தியான் மீக மாவது சாங்கியம்
பாதஞ் சலியம் பகர்வே தாந்த
மெனமூ வகைப்படு மிவையான் மஞானந்
தனைப் பலிப்பிக்குந் நூலெனச் சாற்றுவர். (519)

அதிமார்க் கநூலா வதுபா சுபதங்
கபா லமாவிர தமெனக் கழறுவர். (520)

மந்திர மாவது சித்தாந்த சாத்திரம். (521)

தொடையும் விலக்குஞ் செலவுஞ் சேமமுந்
தவறறுத் தேவினை தான்செய் தலுமிவை
யைந்துபோர்த் தொழிலு மைவினை யெனத்தகும்
மாச்சரந் தூத்தலும் வருசரம் விலக்கலும்
வளரமர் நீந்தலுங் கருவியுட் காத்தலுங்
கணைபுறங் காணலுங் கழறுவர் முறையே. (522)

நந்தை பத்திரை சுரபி சுசீலை
சுமனை யைவகைப் பசுவெனச் சொல்லுவ
ரிவைசிவ தருமோத் திரயியம் பிடுமே. (523)

ஆமாசயமே லமைபக்கு வாசய
மலாச யத்துடன் வருமூத்தி ராசயக்
கருப்பா சயமெனக் கருதைந் தாசய
ஞானா மிர்தனா னவின்ற தென்ப. (524)

தேவ தீர்த்த மாரிட தீர்த்த
மானுட தீர்த்தம் பூத தீர்த்தம்
பிதிர்தீர்த் தம்மிவை பஞ்ச தீர்த்தஞ்
சைவ சமய நெறியிற் காண்கவே. (525)

(ஆறுபொருள்)

அரசர்க் கங்க மாறவை படைகுடி
கூழுய ரமைச்சு நட்பர ணென்ப. (526)

அரசிய லாறவை யறநிலை யறமே
மறநிலை யறமே யறநிலைப் பொருளே
மறநிலைப் பொருளே யறநிலை யின்பமே
மறநிலை யின்பமே யென்ன வழங்குப. (527)

அறநிலை யறமே யாவது தத்தம்
வருணத் திற்பிற ழாது நிலைபெறப்
பாது காத்த லென்னப் பகருப. (528)

மறநிலை யறமா வதுநிரை மீட்டுப்
பகைவென் று சோற்றுக் கடனது கழியா
தாரைத் தண்டித் துக்குறை செய்தலே. (529)

அறநிலைப் பொருளது நெறிவழி நின்று
தத்தம நிலையினான் முயன்றுபெறு பொருளே. (530)

மறநிலைப் பொருளது பகைஞர் பொருளுந்
திறைப்பொரு ளுஞ்சூ தில்வெல் பொருளுமே. (531)

அறநிலை யின்ப மாவது பருவமுங்
குலமு மொழுக்கமுங் குணமு மொத்த
கன்னிகை யைத்தீ வேட்டில் லத்தி
விருத்த லென்மனா ரியல்புணர்ந் தோரே. (532)



மறநிலை யின்ப மதுதா னேறு
தழுவியும் வில்லா விலக்க மெய்து
மிவ்வா று மாறுடை நெறியின் மணத்தலே. (533)

ஆதார மாறவை மூலஞ் சுவாதிட்
டான மணிபூரக மநாகதஞ் விசுத்தி
யாஞ்ஞை யென்ன வறைகுவர் முனிவர். (534)

மூலா தாரங் குதமென மொழிப. (535)

சுவாதிட் டானங் குய்ய மென்ப. (536)

மணிபூ ரகநா பியென வழங்குப. (537)

அநாகத மிதய மாமென மொழிப. (538)

விசுத்தி யடிநா வென்ன விளம்புப. (539)

ஆஞ்ஞை நெற்றி யென்ன வறைகுப. (540)

ஈசரன் முக்கிய குணமா றுமவை
சர்வஞ் ஞத்துவஞ் சர்வேசுர த்துவஞ்
சருவ நியந்தி ருத்துவஞ் சருவாந்
தரியா மித்துவஞ் சருவ கற்பிதத்
துவமொடு சருவ சத்தித் துவமே. (541)

அன்றியும்,

தன்வயத்த னாதன் முதலில னாத
லுடம்பில னாத லெல்லா நலமு
முளனாத லெங்கும் வியாபக னாத
லெவைக்குங் காரண னாதலு மாமே. (542)

வெண்பா வாசிரி யக்கலி வஞ்சி
பரிபாடன் மருட்பாப் பகருவ ரறுபா. (543

நேர்கட் டிதேனி ரியாசங் கர்ப்பூர
மரா மகில்புகை யுறுப்பா ரென்பர். (544

உட்பகை யாறவை காமங் குரோத
முலோப மோக மதமாற் சரியமே (545

உவர்ப்பா றுமவை யாசிய மிரதி
யாரதி சோகம் பயங்குற் சிதமே. (546)

சிரிப்பா சைவெறுப் புச்சோர் வச்ச
மருவருப் பெனமுறை யாமவற் றின்பொருள். (547)

கரும பூமிக் குரிமையா றுமவை
வரைவுதொழில் வித்தை வாணிக முழவு
சிற்பமிவ் வறுவகைத் தொழிலெனச் செப்புவர். (548)

கருவு ளமைப்பா றவைபே றிளமை
யின்புபிணி மூப்புச் சாக்கா டென்ப. (549)

காலமா றவைபரு வத்தைக் காண்கவே. (550)

சக்கர வர்த்திக ளறுவ ரரிச்சந்
திரனன் முசுகுந் தன்புரு குச்சன்
புரூரவன் கார்த்த வீரிய னிவர்மற்
றொருவரைப் பணியா துலகாண் டவரே. (551)

சாத்திர மாறுவே தாந்தம் வைசேடிகம்
பாட்டம் பிரபாகரம் பூர்வமீ மாஞ்சை
உத்தரமீ மாஞ்சை யென்ன வோதுப. (552)

சிறுபொழு தாறவை மாலை யாமம்
வைகறை விடியனண் பகலெற் பாடு
சூரியாத் தமன முதலொவ் வொன்றும்
பப்பத்து நாழிகை முறையே யென்ப. (553)

சுப்பிரமணிய சுவாமி பிரதானத்
தலமா றுமவை திருப்பரங் குன்றஞ்
சீரலை வாயா வினன்குடி யேரகங்
குன்றுதோ றாடல் சோலை மலையே. (554)

சுவையா றுமவை கைப்புத் தித்திப்புப்
புளிப்புட னுவர்ப்புத் துவர்ப்புக் கார்ப்பே. (555)

தானை யாறவை தேர்பரி கரியாள்
வில்வே லென்ன விளம்பப் படுமே. (556)



அந்தணர் தொழிலா றுமவை யோத
லோது வித்தல் வேட்டல் வேட்பித்த
லீத லேற்ற லென்மனா் மேலோர். (557)

அரசர் தொழிலா றோதல் வேட்ட
லீத லோம்பல் படையைப் பயிற்றல்
போர்செய் தீட்ட லென்னப் புகலுவர். (558)

வைசியர் தொழில்க ளாறு கும்மவை
யோதல் வேட்ட லீத லீட்டல்
பசுவைக் காத்த லேருழுத லென்ப. (559)

சூத்திரர் தொழிலா றவைமுதன் மூவர்க்
கேவ லிவர்பொரு ளீட்ட லுழுதல்
பசுவைக் காத்தல் குயிலுவத் தொழில்செயல்
காருக வினைசெய லென்னக் கழறுப. (560)

குயிலுவத் தொழிலா வனதோற் கருவி
கொட்ட லுந்துளைக் கருவியூ தலுமே. (561)

காருக வினையா வனபட்டு நூலையும்
பருத்திநூ லையுங்கொண் டாடை யாக்கலுஞ்
சுமத்தலு முழுத்தலு மென்னச் சொல்லுப. (562)

நாட்டமைதி யாறவை செல்வம் விளைவு
செங்கோல் வளங்குறும் பின்மைநோ யின்மையே. (563)

பருவ காலமா றவைகார் கூதிர்
முன்பனி பின்பனி யிருவகை வேனி
லிவையே வருடஞ் சாமமே மந்தஞ்
சிசிரம் வசந்தங் கிரீட்டும மென்னு
மாறிரு துக்க ளென்னவு மறைகுப. (564)

கார்கால மாவணி புரட்டாசி யாமே. (565)

கூதி ரைப்பசி கார்த்திகை கூறுப. (566)

முன்பனி மார்கழி தையென மொழிப. (567)

பின்பனி மாசி பங்குனி பேசுப. (568)

இளவேனில் சித்திரை வைகாசி யென்ப. (569)

முதிர்வேனி லானி யாடி மொழிகுப. (570)

போக பூமிக ளாறு தியரி
நல்லரி யேமத மேமவஞ் சங்கள்
தேவ வுத்தர குருவங் களென்ப. (571)

வேதாங் கமாறு சிக்கை கற்ப
மிலக்கணஞ் சந்தோ பிசித நிருத்தஞ்
சோதிட மென்னச் சொல்லப் படுமே. (572)

சைவம் பாசு பதமா விரதங்
காளா முகத்தொடு வாமம் வைரவ
மிவை யகச் சமய மென்ன வியம்புவர். (573)

உலகா யதம்பௌத் தம்மா ருகத
மீமாம்சை மாயா வாதத் துடனே
பாஞ்ச ராத்திர மறுபுறச் சமயமே. (574)

அறுவகைச் சூலை யவைபித்த சூலை
வாத சூலை சிலேட்டும சூலை
வாத பித்த சூலை சிலேட்டும
பித்த சூலை யையகண சூலை
எனமருத் துவநூ லியம்பு மென்ப. (575)

அறுவகை மலடுக ளாவன முறையே
வாத பித்த மலடு கிருமி
மலடுசூழ் மலடு வாயு மலடு
சூதக மலடு துன்மா மிசமல
டெனவே மருத்துவ நூலியம் பிடுமே. (576)

அரித்தி ரான்ன மவிர்பா மான்ன
முற்கான் னத்துடன் மொழிகிரு தான்னந்
ததியா ரன்னந் தக்கரு ளான்ன
மிவைகடெய் வங்கட் கினியவாச் செய்யு
மாறு விதனை வேத்திய மாமே. (577)



## ஏழு பொருள்.

இசையே ழவைகுர றுத்தங் கைக்கிளை
யுழையிளி விளரி தாரமென் றோதுப
விவைவீ ணையில்நரம் பேழென வும்படும். (578)

இசைகள் பிறப்பிட மேழவை மிடறுநா
வண்ணஞ் சிரநெறி நெஞ்ச மூக்கே. (579)

இசைகளி னோசைக் குவமையே ழவைமயி
லிடப மாடுகொக் குருயில் பரிகரி
வண்டு கிள்ளை வாசி யானை
தவளை பசுவா டென்னச் சாற்றுவர். (580)

இசைக ளின்சுவைக் குவமையே ழவைபா
றேன்றயிர் நெய்யே லம்வா ழைக்கனி
மாதுளங் கனியென வழங்குவர் முறையே. (581

இசைகளின் வாசனைக் குவமையே ழாமவை
மௌவன் முல்லை கடம்பு வஞ்சி
நெய்தல் பொன்னு விரைபுன்னை யென்ப. (582

இசையெழுத் துக்க ளியநெடி லேழே. (583

இசைகளின் மாத்திரை யியம்பிடிற் குரலொடு
துத்தங் கிளையுழை யிளியுடன் விளரி
தாரமா முறையே தரும்நான்கு நான்கு
மூன்றி ரண்டு நான்கு மூன்றோ
டிரண்டு மாத்திரை யாமென விசைப்பர். (584

இசைகளுக் கிறைவ ரெழுவர் விசுவா
மித்திர னியம னங்கி திங்க
ளிரவி கௌதமன் காசிப னென்பர்
இவைக ளுக்குமீ ரீசுர னென்ப. (58

இசைகளிற் பிறக்கும் பாலையே ழாமவை
செம்பாலை படுமலைப் பாலை செவ்வழிப்

பாலை யரும்பாலை கொடிப்பாலை விளரிப்
பாலை மேற்செம் பாலை யென்ப. (586)

செம்பாலை குரலே குரலாச் செனிக்குமே. (587)

படுமலைப் பாலை துத்தக் குரலே. (588)

செவ்வழிப் பாலை கைக்கிளைக் குரலே (589)

அரும்பாலை யுழையே குரலா யினென்ப. (590)

கொடிப்பாலை யிளியே குரலா யினென்ப. (591)

விளரியே குரலாயின் விளரிப் பாலை. (592)

மேற்செம் பாலை தாரக் குரலே. (593)

உலோக மேழவை செம்பொன் வெண்பொ
னிரும்பு செம்பீயம் வெண்கலந் தாரவே. (594)

பூலோ கம்புவ லோகஞ் சுவலோ
கம்மகா லோகஞ் சனலோ கந்தவ
லோகஞ் சத்திய வுலக மேழே. (595)

அதலம் விதல மாகுஞ் சுதல
மிதமுறு தாரதலம் ரசாதல மகாதலம்
பாதலத் துடன்கீழ்ப் பகரே ழுலகே. (596)

காமப் பகுதியிற் களவிய லேழ்வகை
யவைதகை யணங்குறுத் தலுங்குறிப் பறிதலும்
புணர்ச்சி மகிழ்தலு நலம்புனைந் துரைத்தலுங்
காதற்சிறப் புரைத்தலு காணுத்துற வுரைத்தலு
மலரறி வுறுத்தலு மாமென மொழிப. (597)

கடலே ழாமவை யுவர்நீர் நன்னீர்
பாறயிர் நெய்கருப் பஞ்சாறு தேனே. (598)

சிரஞ்சீ வியர்க ளெழுவ ராமவர்
அசுவத் தாமன் மாபலி வியாசன்
அனுமான் விபீடணன் மார்க்கண் டமுனி
பரசி ராம னென்னப் பகருப. (599)



சுரமே ழாமவை சரிகம பதநியே. (600)

தாதுக்க ளேழவை நரம்போ டிரத்தஞ்
சுக்கில மூளை தசையென்பு தோலே. (601)

தாள மேழவை துருவ மட்டிய
முரூபகஞ் சம்பை திரிபுடை யடதாள
மேக தாள மென்ன வியம்புப. (602)

தீவே ழவைதா நாவ லிறலி
குசைகிர வுஞ்சம் புட்கரந் தெங்கு
கமுகா மென்னக் கழறப் படுமே. (603)

நதியே ழாமவை கங்கை யமுனை
சரசு வதிநரு மதைகா வேரி
குமரி கோதா வரியிவை சத்த
தீர்த்த மென்னச் செப்புவர் மேலோர். (604)

நரக மேழவை யள்ள லிரௌரவங்
கும்பி பாகங் கூட சாலஞ்
செந்துத் தானம் பூதிமா பூதியே. (605)

நரக வட்ட மேழவை நாடி
லறமிலா தவர்புகு மிருள்குளிர் புகைமணை
முயிலாமை யிரத்தந் தீயெனச் சொல்லுப. (606)

நாட்டுக் குற்ற மேழவை தொட்டியர்
கள்வர் யானை பன்றி விட்டில்
கிள்ளை பெருமழை யென்னக் கிழக்குப. (607)

பாதக மேழகங் கார முலோபங்
காமம் பகையே போசனப் பிரியம்
காய்தல் சோம்ப லென்னக் கழறுப. (608)

பிறப்பே ழாமவை தேவர் மக்கள்
விலங்கு புள்ளூர் வனநீர் வாழ்வன
நிற்பன விவற்றின் யோநி பேத
மெண்பத் துநான் கிலக்க மாமென்ப. (609)

தேவர் யோநி பதினான் கிலக்கமே. (610)

மக்கள் யோநி யொன்ப திலக்கமே. (611)

விலங்குபுள் நீந்துவ பப்பத் திலக்கமே. (612)

ஊர்வன யோநி பதினொ ரிலக்கமே (613)

நிற்பன யோநி யிருப திலக்கமே. (614)

தேவர் பதினொ ரிலக்கந் தாவரம்
பதினெட் டிலக்கம் பகருவர் சில்லோர். (615)

புண்ணிய மேழாம் பூமியிற் பயிரிட
ருனம் விரதஞ் சிநேகநற் போசனங்
கமையுற் சாக மென்னக் கழறுப. (616)

புரியே ழாமவை யயோத்தி மதுரை
மாயை காசி காஞ்சி யவந்திகை
துவாரகை யென்னச் சொல்லப் படுமே. (617)

பெண்கள் பருவ மேழவை பேதை
பெதும்பை மங்கை மடந்தை யரிவை
தெரிவை பேரிளம் பெண்ணெனச் செப்புப. (618)

பேதை வயதுதா னைரைந் தினுக்குமே
லேழு வரையா மென்மனார் புலவர். (619)

பெதும்பை பதினொன் று வரையெனப் பேசுப. (620)

மங்கை பதின்மூன் று வரையா மென்ப. (621)

மடந்தை பத்தொன் பதுவரை யும்மே. (622)

யரிவை யிருபத் தைந்து வரையுமே. (623)

தெரிவை முப்பத் தொன்றெனச் செப்புப. (624)

பேரிளம் பெண்ணாற் பதுவரை பேசுப. (625)

பெரியோ ரியல்பே முவையே யறம்பொரு
ளின்பன்பு புகழ் மதிப்புப் பொறுமையே. (626)



மண்டல மேழவை வாயு வருண
சந்திர சூரிய நட்சத்தி ராக்கினி
திரிசங்கு மண்டல மென்னச் செப்புப. (627)

மலையே ழாமவை கைலை யிமய
மந்தரம் விந்த நிடத மேம
கூட நீல கிரியெனக் கூறுப. (628)

இன்னும் வேறே ழியம்புவ ராலவை
மகேந்திர மலயஞ் சைய மோடு
சாறு மந்த மிருட்ச பர்வதம்
விந்தியம் பாரியாத் திரமென விளம்புவர். (629)

மாதர்க ளெழுவ ரவரபி ராமி
மாயே சுவரிகௌ மாரிநா ராயணி
வராகி யிந்தி ராணி காளியே. (630)

மாதர்க ளெழுவரின் வாகன மேழவை
யனமிட பம்மயில் கருடன் சீயம்
யானை பேயென வறைகுப முறையே (631)

மாதர்க ளெழுவரி னாயுத மேழவை
மறைபி னாகம் வேலாழி கலப்பை
வச்சிரஞ் சூல மென்ன வழங்குப. (632)

முனிவ ரெழுவ ரத்திரி குச்சன்
கௌதமன் பிருகு காசிப னங்கிரா
வசிட்ட னாமென வகுத்தனர் புலவ
ரின்னுமு னிவர்வே றெழென வியம்புவர். (633)

மேக மேழுசம் வர்த்தமா வர்த்தம்
புட்கலா வர்த்தஞ் சங்கா ரித்தந்
துரோணங் காள முகிநீல வருணமே (634)

மேக மேழுந் தருவன வேழவை
மணிநீர் பொன்மலர் மண்கற் றீயே. (635)

வார மேழவை ஞாயிறு திங்கள்
செவ்வாய் புதன்வி யாழன் வெள்ளி
சனியா மென்னச் சாற்றப் படுமே. (636)

வித்தியா தத்துவ மேழவை கால
நியதி கலைவித்தை யிராகம் புருடன்
மாயை யென்ன வழங்கப் படுமே. (637)

சென்றூக் குத்திகழ் மதலைத் தூக்கு
துணிபுத் தூக்கு கோயிற் றூக்கு
நிவப்புத் தூக்கு கழாற் றூக்கு
நெடுந்தூக் கென்ன நிகழெழு தூக்கு
நால்வகைத் தாளங் களின் வழிவருமே. (638)

ஏழ்பரி யரவன வியம்பு காயத்திரி
திருட்டுபு செகதி யனுட்டுபு பந்தி
பிரகதி முட்டினு வென்ன வேழுஞ்
சூரியன் பரியெனச் சொல்லுவர் புலவர். (639)

செய்யுட் குரிய தளையே ழவைதா
நிரையொன் றாசிரி யத்தளை நேரொன்
றாசிரி யத்தளை யியற்சீர் வெண்டளை
வெண்சீர் வெண்டளை மிக்க கலித்தளை
யொன்றிய வஞ்சித் தளையோ டொன்றா
வஞ்சித் தளையென வழங்கப் படுமே. (640)

எண் பொருள்.

அங்க யோகமெட் டாமவை யியம
நியம மாதனம் பிராணா யாமம்
பிரத்தியா காரந் தாரணை தியானஞ்
சமாதி யிவையட் டாங்க யோகம். (641)

இயம மாவது கொலைசெய் யாமை
மெய்ம்மை கூறல் களவு செய்யாமை
பிறர்பொருள் வெஃகாமை யிந்திரிய மடக்கலே (642)

நியம மாவது தவந்தூய்மை தத்துவ
நூலை யோர்தன் மனமுவந் திருத்த
றெய்வம் வழிபட லென்னச் செப்புப. (643)

ஆதன மொன்ப தாமவை சுவத்திகங்
கோமுகம் பதுமம் வீரங் கேசரி
பத்திர முத்த மயூரஞ் சுகமே. (644)



சுவத்திக மாவது தொடைமுழங் காற்கு
நடுவிரண் டுள்ளங் காலையுஞ் செலுத்தி
யிருமாந் திருத்த லென்மனார் புலவர். (645)

கோமுக மாவது சகனப் பக்கத்தி
லிருகாற் பாட்டையு மாறவைத் தவ்விரு
காற்பெரு விரலைக் கைப்பிடித் திருத்தலே. (646)

பதும மாவ திருதொடை மேலு
மிரண்டுள்ளங் காலையு மாறித் தோன்ற
வைத்த லென்ன வழங்கப் படுமே. (647)

வீர மாவது வலமார் தொடையி
லிடக்காற் பாட்டைச் சேர்த்தி யிருமாப்
புற்றி ருத்த லென்ன வோதுப. (648)

கேசரி யாவது பீசத் தின்கீழ்ச்
சீவனி யிடத்துப் பாட்டை வைத்திட
முழங்கையை முழந்தா ளில்வைத் தங்குலி
விரித்து நாசியைப் பார்த் திருத்தலே. (649)

பத்திர மாவது பீசத்தின் கீழே
சீவனி யிடத்திரு காற்பாட் டினையும்
வைத்தவ் விருபா தத்தையு மிருகையா
லிறுகப் பிடித்தசை யாதே யிருத்தலே. (650)

முத்த மாவ திடக்காற் பாட்டாற்
சீவனி தன்னை யழுத்தி வலக்காற்
பாடப் பாட்டின் கீழுந்த விருத்தலே. (651)

மயூர மாவது முழங்கை யிரண்டு
முந்திப் புறத்தி லழுந்தப் புவியிற்
கையூன் றிக்கா னீட்டித் தலையை
நிமிர்த்தி ருத்த லென்மனார் நெறியோர். (652)

சுகாதன மாவது சுகமுந் திடமு
மெவ்வா றிருக்கி னெய்தப் படுமோ
வவ்வா றிருத்த லென்ன வறைகுப. (653)

பிராணா யாம மாவது பிராண
வாயுவை யிரேசக பூரக கும்பகஞ்
செய்த லென்னச் செப்புவர் முனிவர். (654)

பிரத்தியா கார மாவ துபாதியை
நீக்கி யுண்ணோக்க லென்மனார் நெறியோர். (655)

தாரணை யாவது கண்ட மிதய
நெற்றி கபால நாபி யிவற்று
ளொன்றிற் சந்ததஞ் சிந்தை வைத்தலே. (656)

தியான மாவ தைம்புல மடக்கிச்
சிவயோகஞ் சேர்த லென்னச் செப்புப. (657)

சமாதி யாவ திந்திரிய முதலிய
தத்துவ சேட்டைகட் கேதுவாம் யாக்கையு
ணின்றவற் றோடு கூடினு மவற்றிற்
பற்றின்றி யிருக்கு மான்மா வாகிய
தனைத்தான் கண்டு பதியுடன் சார்தலே
யிவற்றிற் சிலவே றவித மியம்புவர். (658)

அரசர்க்குத் துணைவ ரெண்ம ராமவர்
மந்திரி மாருடன் வரும்பெருங் கணக்கர்
சுற்றங் கடைகாப் பாளர் நகர
மாக்கள் படைத்தலைவ ரிவுளி மறவர்
யானை வீர ராமென மொழிப. (659)

அளவை யெட்டா மவைகள் காட்சி
யனுமான மாகம மருத்தா பத்தி
யுபமான மபாவஞ் சம்பவ மைதிகம். (660)

காட்சி யளவை யாவது காணலே. (661)

அனுமான வளவை யாவது புகையைக்
கண்டு நெருப்புண் டென்ப தாமே. (662)

ஆகம வளவை யாவது பெரியோர்
வாய்ச் சொ லென்ன வழங்கப் படுமே. (663)



அருத்தா பத்தி யாவது பகலிலே
யுண்ணா னென்னி லிரவி லேயொழித்
துண்பா னென்ன வுணர்தல் போல்வதே. (664)

மரைபசுப் போல்வ தென்ப துவமானம். (665)

அபாவ வளவை யாவது முன்னு
மில்லைப் பின்னு மில்லை யொருகாலு
மில்லை யென்ப தென்மனார் பெரியோர். (666)

சம்பவ வளவை யாவ தாயிரத்தி
னூறுண் டென்ப தென்ன நுவலுப. (667)

ஐதிக வளவை யாவதிம் மரத்திற்
பேயுள தென்ப தென்னப் பேசலே. (668)

அறத்துறப் பெட்டவை யையப் படாமை
விருப்பு வெறுப்பின்மை மயக்க மின்மை
பழியை நீக்க லழிந்தோரை நிறுத்த
லறம்வி ளக்குதல் பேரன் புடைமையே. (669)

ஈசுரன் குணங்க ளெட்டா மவைக
டன்வயத்த னாத றூய வுடம்பின
னாத லியற்கை யுணர்வின னாதன்
முற்று முணர்த லியல்பாகப் பாச
நீங்குதல் பேரரு ளுடைமை முடிவி
லாற்ற லுடைமை வரம்பி லின்ப
முடைமை யன்றியும் வரம்பின் ஞானம்
வரம்பில் காட்சி வரம்பி லின்பம்
வரம்பி லாற்ற னாம மின்மை
கோத்திர மின்மை யாயு ளின்மை
யிடையூ றின்மை யெனவுங் கூறுப. (670)

ஊறெட் டாமவை வெம்மை தண்மை
மென்மை வன்மை திண்மை நொய்மை
சீர்மை சருச்சரை யென்னச் செப்புப. (671)

எச்சமெட் டாமவை குறள் கூ னூமை
செவிடு குருடு முடமுறுப்பு மயக்க
முறுப்பில் பிண்ட மிவையே யெண்வகை
யுடற்குறை யென்ன வோதவும் படுமே. (672)

ஐச் வரியமெட் டாகு மவைகள்
ராசாங்க மக்கள் சுற்றம் பொன்மணி
நெல்லு வாகன மடிமை யென்ப. (673)

கணமெட் டாமவை நிலநீர் மதியுயிர்
சூரிய னங்கி வாயு வாகாயமே. (674)

கணங்க ளெட்டினுண் முன்னான்கு நன்றே. (675)

நிலக்கண மாவது மூன்று நிரையது
நிரைநிரை நிரைகரு விளங்கனி யென்ப. (676)

நீர்க்கண மாவ தாதி நேரது
நேர்நிரை நிரைகூ விளங்கனி யென்ப. (677)

மதிக்கண மாவ தாதி நிரையது
நிரைநேர் நேர்புளி மாங்கா யென்ப. (678)

உயிர்க்கண மாவது முற்று நேரது
நேர் நேர் நேர்தே மாங்கா யென்ப. (679)

சூரிய கணமா வதுநடு நிரையது
நேர்நிரை நேர்கூ விளங்கனி யென்ப. (680)

தீக்கண மாவது நடுநே ராமது
நிரைநேர் நிரைபுளி மாங்கனி யென்ப. (681)

வாயு கணமா வதுகடை நிரையது
நேர்நேர் நிரைதே மாங்கனி யென்ப. (682)

ஆகாய கணமா வதுகடை நேரது
நிரைநிரை நேர்கரு விளங்கா யென்ப. (683)

கணித மெட்டா மவைசங் கலிதம்
விபகலிதம் குணனம் பாகாரம் வர்க்கம்
வர்க்க மூலங் கனங்கன மூலமே. (684)



சங்கலித மாவது கூட்ட லென்ப. (685)

விபகலித மாவது கழித்த லென்ப. (686)

குணன மாவது பெருக்க லென்ப. (687)

பாகார மாவது பிரித்தலென்ப. (688)

வர்க்க மாவதோ ரெண்ணையவ் வெண்ணு
லொருமுறை பெருக்க லென்ன வோதுப. (689)

வர்க்க மூல மாவதவ் வர்க்கத்
தொகையின் மூலங் காணுத லென்ப. (690)

கனமாவ தோரெண் ணாலே யந்த
வெண்ணைப் பெருக்கிப் பெருக்கிப் பெற்றதை
மறுபடி யவ்வெண் ணாலே பெருக்கலாம். (691)

கனத்துக்கு மூலங்காணல் கனமூலம். (692)

குற்றமெட் டாமவை ஞான வரணியந்
தரிசன வரணியம் வேத நீய
மோக நீய மாயு நாமங்
கோத்திர மந்த ராய மென்ப
விவையாருகத மதநூற் கூறுமே. (693)

சித்தியெட் டாமவை யணிமா மகிமா
லகிமா கரிமா பிரார்த்தி பிராகாமிய
மீசத்துவம் வசித்துவ மென்ன வியம்புப. (694)

சிறிய வுயிர்தொறுஞ் சிறிய வணுவா
யுறைத லணிமா வென்ன வோதுப. (695)

பிருதுவி முதற்சி வாந்தமா முறு
முட்புற மகலா துறைதன் மகிமா. (696)

மேருபா ரம்போல் விளங்கும் யோகியை
யெடுத்தாற் பஞ்செ‌ன விருப்ப தில்கிமா. (697)

அணுப்போ லிருக்கும் யோகியை யெடுத்தால்
மேருபா ரம்போல் விளங்குதல் கரிமா. (698)

பிலத்தி லிருந்தோ னயலுல கிற்புகன்
மீண்டும் பிலம்புகல் பிராத்தி யாமே. (699)

வான்புலத் தியங்க லிச்சித்த போக
நினைந்தபடி வருதல் பிராகா மியமே. (700)

ஈசத் துவமெலா மாட்சியுள னாதலே. (701)

வசித்துவ மாவ தெல்லாந் தன்வச
மாக்க வல்லவ னாத லென்ப. (702)

தயாவி ருத்தியெட் டாமவை பிறர்க்குப்
பொருள்வர வுவத்தல் பிறர்பொருள் பொறுத்தல்
பிறர்கரு மத்திற் குடன்பட றீமைக்
கஞ்சல் பிறர்கரு மஞ்செய விரைதல்
பிறரையந் தீர்த்தனன் மைகடைப் பிடித்தல்
பிறர்துயர்க் கிரங்க லென்னப் பேசுப. (703)

திக்கெட் டாமவை கிழக்குத் தென்கிழக்குத்
தெற்குத் தென்மேற்கு மேற்கு வடமேற்கு
வடக்கு வடகிழக் கிவையென வகுப்பர். (704)

திக்குப் பாலக ரெண்ம ராமவ
ரிந்திர னக்கினி யமனிருதி வருணன்
வாயு குபேர னீசான னிவர்களே
கிழக்காதியட்ட திக்குப்பா லகரே. (705)

திக்குப் பாலகர் குறிகளெட் டாமவை
கொடிபுகை சியநா யிடபங் கழுதை
யானை காக மென்ன வறைகுப. (706)

திக்கு யானைக ளெட்டா மவைக
ளைரா வதம்புண் டரீகம் வாமனங்
குமுத மஞ்சனம் புட்ப தந்தஞ்
சாருவ பூமஞ் சுப்பிர தீபமே. (707)

திக்கி யானையின் பிடியெட் டாமவை
யப்பிரமை கபிலை பிங்கலை யநுபமை



தாமிர கர்ணிசுப் பிரதந் தியங்கனை
யஞ்ச னாவதி யாமென மொழிப. (708)

நாகமெட் டாமவை வாசுகி யனந்தன்
றக்கன் சங்க பாலன் குளிகன்
பதுமன் மாபதுமன் கார்க்கோ டகனே. (709)

மந்திரந் தெய்வ மருந்து நிமித்தந்
தந்திர மிடனே காலங் கருவி
யெட்டுங்கள்ளாற் கியம்புசா தனமே. (710)

நாட்டுக் குற்ற மெட்டா மவைகள்
விட்டி றன்னரசு வேற்றர சியானை
மிகுமழை மிகுகாற் றுக்கிளி கட்டமே. (711)

போக மெட்டா மவைபெண் ணாடை
யணிகல முண்டிதாம் பூலம் பரிமளம்
பாட்டு பூவ மளியெனப் பகருப. (712)

மங்கல மெட்டா மவைகள் சாமர
நிறைகுடங் கண்ணாடி தோட்டி முரசு
விளக்குக் கொடியிணைக் கயலென விளம்புப. (713)

மணமெட் டாமவை பிரமம் பிரசா
பத்திய மாரிடந் தெய்வங் காந்தருவ
மாசுர மிராக்கதம் பைசா சமென்ப. (714)

பிரம மணமது பிரமசா ரிக்குக்
கன்னிகை யைத்தீ முன்னர்க் கொடுப்பதே. (715)

பிரசா பத்திய மணமா வதுதலை
மகனினத் தார்கள் வேண்டத் தலைமக
ளினத்தா ருடன்பட் டவளைத் தீமுனர்க்
கொடுப்ப தென்னக் கூறுவரியலோர். (716)

ஆரிட மணமா குலதோன் றிரண்டு
பசுவு மெருதும் வாங்கிக் கொண்டு
கன்னிகை யைத்தீ முன்னர்க் கொடுப்பதே. (717)

தெய்வ மணமது செப்புங்காலை
வேள்வியா சிரியற் குக்கன் னிகையைத்
தீமுன் கொடுப்ப தென்னச் செப்புவர். (718)

காந்த ருவமண மாவது கொடுப்பார்
கேட்பா ரின்றி யிருவருந் தனியிடத்
தெதிர்ந்து தாமே கூடுவ தென்ப. (719)

அசுர மணமணப் பெண்ணிற் குப்பொன்
சூட்டிச் சுற்றத் தாருக் குப்பொன்
வேண்டுவ கொடுத்துக் கொளலென விளம்புப. (720)

இராக்கத மணமா வதுதான் பெண்ணும்
பெண்ணினத் தாரு முடம்பா டின்றி
வலிதிற் கொள்ள லாமென வழங்குப. (721)

பைசாச மணமா வதுதுயின் றவளையுங்
களித்தவ டன்னையுங் கலத்த லென்ப. (722)

மலையெட் டாமவை கைலையாதி
யேமொடு கந்தமா தனமு மென்ப. (723)

மாலிய வானுங் கந்தமா தனமு
நிடதமு மேம கூடமு மிமயமு
நீலமுஞ் சுவேதமுஞ் சிருங்கமு மெண்மலை
யாகவுங் கூறுவ ரறிவுடை யோரே. (724)

மூர்த்த மெட்டா மவைகள் பூமி
நீர்தேயு வாயு வாகாயஞ் சூரியன்
சந்திர னுன்மா வென்னச் சாற்றுப. (725)
மெய்ப்பரி சத்தொழி லெட்டவை யூன்றல்
கட்டல் குத்த றடவ றட்ட
றீண்டல் பற்றல் வெட்ட லிவைமெய்ப்
பொறியிற் செயப்படுந் தொழிலெனப் புகலுப. (726)

வசுக்க ளெண்மரா மவர்க ளநல
னநில னுபன் சோமன் றரனே
துருவன் பிரத்தியூ டன்பிர பாசனே. (727)



வணிகர் குணமெட் டாமவை தனிமை
யாற்றல் முனிவில னுத லிடனறிந்
தொழுகல் பொழுதொடு புணர்த லுறுவது
தெரித லிறுவ தஞ்சாமை யீட்ட
லவைபகுத் திடலென வறையப் படுமே. (728)
வெற்றி யெட்டா மவைகள் பகைநிரை
கவர்தல் பகைவர் கவர்ந்த தன்னிரை
மீட்டல் பகைமேற் செல்லல் வரும்பகை
முன்னெதி ரூன்றல் தன்னரண் காத்தல்
பகையரண் வளைத்தல் பொருதல்போர் வெல்லலே. (729)
வெற்றி மாலை யெட்டவை வெட்சி
கரந்தை வஞ்சி காஞ்சி நொச்சி
யுழிஞை தும்பை வாகையென் றோதுப. (730)
வாமை சேட்டை ரௌத்திரி காளி
கலவி காரணியே பெலவி காரணி
பெலப்பிர தமநி சர்வ பூதைக
தமநி யென்னச் சாற்றிய வெண்ம
ரட்ட சத்திக ளாமென மொழிப. (731)

ஈசாநி பூரணி யார்த்தி வாமை
மூர்த்தி யாரணி ரோத யித்திரி
செகநி யென்னச் சாற்றிய வெண்மரு
மட்ட சத்திக ளாமென மொழிப. (732)

யாகம் புரிதல் வேத மோதுத
லுணர் தவஞ்சத் தியந்திடம் பொறுமை
லோப மின்மை யென்னு மிவைக
ளட்ட தரும மாகு மென்ப. (733)
நாடி முகமல மமூரி நாக்கண்
சரீரந் தொனியெனச் சாற்றிய வெட்டு
மருத்துவ ரட்ட பரீக்கைத் தானமே. (734)

கருங்குட் டம்பெரு கிரணக் குட்டம்
வெண்குட் டம்மே மிகுசெங் குட்டங்

கிருமிக் குட்டங் கிளர்நீர்க் குட்டம்
விரல்குறை குட்டஞ் சொரிகுட் டம்மென
விவையெண் குட்ட மென்பர் மருத்துவர். (735)

சுக்கான் கல்லு தொகுகொம் பரக்கு
சாதிலிங் கஞ்செம் பஞ்சுதேன் மெழுகுட
னெருமை வெண்ணைகுங் கிலியநற் காவி
யிவையெண் பொருளை யிடித்துத் திரட்டப்
படுவ தட்ட பந்தன மருந்துகள். (736)

அட்ட புட்ப மவைகொல் லாமை
யைம்பொறி யடக்கல் பொறையரு ளறிவு
வாய்மை தவமன் பாமெண் குணங்களு
மாகிய புட்ப மந்தரி யாக
பூசையா கியவகப் பூசைக் குரியன. (737)

மகாஅ வைரவ ருக்கிர வைரவர்
சண்டாள வைரவர் குரோத வைரவ
ருன்மத்த வைரவர் காபால வைரவர்
பீடண வைரவர் சாகர வைரவ
ரிவர்களே யட்ட வைரவ ரென்ப
ரிவர்சிவ லோகத் தியல்சோதி மயமாங்
கோட்டையி லெட்டுக் குலவிய வாயிலிற்
காவல்செய் திருப்பவ ராகக் கழறுவர். (738)

தலைமோ வாய்செவி தாமிரண் டிருபுயங்
கைகளெட் டுறுப்புங் காணும் புவியிற்
றோயப் பணிதல் சொல்லுமட் டாங்க
நமக்கார மென்ன நவிலுவ ருணர்ந்தோர். (739)

சுக்குநல் லரத்தை சொல்லுஞ் செவ்வியஞ்
சித்திர மூலந் திகழ்சிறு தேக்கு
கோரைக் கிழங்கு குலவுநன் னாரிவேர்
காஞ்சொரி வேரெனக் கருதறு மிவைக
ளட்ட மூல மாமென மொழிப. (740)



கொலைகுன் மங்கொடு வாத குன்மம்
பித்த குன்மம் பெருவலிக் குன்மஞ்
சந்தி குன்மஞ் சத்தி குன்மம்
வெய்ய குன்மம் மிகுமெரி குன்ம
மெனவிவை யெண்வகைக் குன்ம மென்ப. (74

அடியா ரடிதொழ லவிர்சிவ பூசையின்
மகிழ்தல் சிவார்ச்சனை வணப்புற வியற்றல்
சிவபணி விடைக டிருந்தச் செய்தல்
சிவசரி தங்கேட் டானந் தக்கண்
ணீருறச் சொரிதல் புளக முறுத
லச்சரி தம்பல காற்சிந் தித்த
றிருப்பணிப் பொருளை யபகரி யாமை
யெனவிவை யெண்வகைப் பத்தியா மென்பர். (7

புன்னைவெள் ளெருக்கம் பூச்சண் பகப்பூ
நந்தியா வர்த்த நறுமலர் பாதிரி
நீலோற் பலமலர் நிலவிய வலரி
மலர்செந் தாமரை மலரா மெண்மலர்
புறம்பே செய்யும் பூசைக் குரியன. (7

தனலக் குமிமிகு தானிய லக்குமி
தைரிய லக்குமி சௌரிய லக்குமி
வித்தியா லக்குமி கீர்த்தி லக்குமி
விசய லக்குமி யிராச்சிய லக்குமி
யிவர்களே யட்ட லக்குமி யென்பர் (7

குலமே ரூபம் யவ்வனம் வித்தை
தனம்பிர புத்துவம் சகாயஞ் சகச
மென்னு மிவற்றால் வருஞ்செருக் கினையே
யெண்வகை மதமா மென்ன வுரைப்பர். (7

செறியா மாந்தந் தெறுபோர் மாந்த
மலட்டு மாந்தம் வளர்பெரு மாந்தம்
வாத மாந்தம் வருசுழி மாந்தம்

வலிமாந் தத்தொடு வன்கண மாந்த
மெனுமிவை யட்ட மாந்த மென்ப. (746)

சிவசம வாத மைக்கிய வாதஞ்
சங்கிராந்த வாதம் பிரவா கேசுர

வாதங் காபா லிகவா தத்தோ
டவிகார வாதம் பேதா பேத
வாத மநேகேச் சுரவா தம்மிவை
யெண்வகைச் சமய வாத மென்பர். (747)

காமக் குரோத லோப மோக
மதமாற் சரியம் வளரு மசூயை
யகங்கா ரம்மிவை யட்ட விகாரம். (748)

அனந்தர் சூக்கும ரரிய சிவோத்தம
ரேக நேத்திர ரேக ருத்திரர்
திரிமூர்த்தி யோடு சீகண்டர் சிகண்டி
யென்பவ ரட்ட வித்தியே சுரரே. (749)

பண்ணல் பரிவட் டணை யாராய்த லுறவரல்
கண்ணிய செலவு விளையாட்டு கையூழ்
குறும்போக் கிசையெழு வுந்தொழி லெட்டே. (750)

வார்தல் வடித்த லுந்த லுறழ்தல்
சீருட னுருட்ட றெருட்ட லள்ள
லேருடைப் பட்டடை யென்னு மிவைக
ளெட்டு வகையி னிசைக்கரண மென்ப. (751)

வீர மச்ச மிழிப்பொடு வியப்பே
காம மவல முருத்திர நகையிவை
யெண்வகை மெய்ப்பாட் டியல்வன சுவையே. (752)

வாத முடனே வலியகல் லடைப்புக்
குட்ட மேக மகோதரம் பகந்தர
மூல ரோகங் கிராணி ரோக
மெனுமிவை யட்ட மகாரோ கங்கள். (753)



சந்தன மகரு தருகத் தூரி
கருப்பூ ரம்பச் சிலைகுங் குமத்துட
னிலாமிச்சை கோட்ட மிவையட்ட கந்தம். (754)

ஓணுன் றவளை யடவி மனைப்பலி
காட்டு மசகந் தேனீ மலையெறும்
பூறு சிலந்தியென் றோதிய விவைக
ளெண்வகைக் கீட மென்ன வியம்புவர். (755)

எள்ளுக் கொள்ளுப் பயறுழுந் தவரை
கடலை துவரை மொச்சை யென்றாங்
குடனிவை முதிரைக் கூல மென்ப. (756)

நெல்லுப் புல்லு வரகு சாமை
தினையுட னிறுங்கு தோரை யிராகி
யெண்வகைத் தானியக் கூல மென்ப. (757)

நெஞ்சு மிடறு நாக்கு மூக்கு
மண்ணுக்கு முதடும் பல்லுந் தலையு
மிசைப்பெருந் தான மெட்டெனச் சொல்லுவர். (758)

எடுத்தல் படுத்த னலிதல் கம்பிதங்
குடில மொலியுருட்டு தாக்கெனக் கிரியை
யெட்டாகு மென்றே வியம்பப் படுமே. (759)

இன்பந் தெளிவே நிறையோ டொளியே
வன்சொ லிறுதி மந்தமுச் சமென
வந்த வெட்டும் பாடலின் பயனே. (760)

அம்மை யழகு தொன்மை தோல்விருந்
தியைபு புலனிழை யெனவனப் பெட்டே. (761

யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
டாப்பிசை யளைமறி பாப்புக் கொண்டுகூட்
டடிமறி மாற்றெனப் பொருள்கோ ளெட்டே. (762

(ஒன்பது பொருள்.)

தமனிய மிரும்பு தாமிர மீய
மிரசித மதுகம் பித்தளை நாகம்

கஞ்ச மென்னக் கருதுறு மிவைக
ளைவகோச மென்ன நாட்டப் படுமே. (763)

நவதா னியமென நவிலும் பொருள்க
ளுழுந்து கடலை யெள்ளுக் கொள்ளு
கோதுமை யவரைநெற் றுவரை பயறே
யவரையென் பதுகரு மொச்சை யாமே
பயறென் பதுபா சிப்பய றென்ப. (764)

அட்ட நாகமு மாதி சேடனு
நவநாக மென்ன நவிலுவர் புலவர். (765)

சங்கம் பதுமந் தருமகா பதும
மகரங் கச்சப முகுந்தங் குந்த
நீலம் வரமென நிகழ்த்துவர் நவநிதி. (766)

இரத மொன்பதா மவைசிங் காரம்
வீரியம் பெருநகை கருணை யிரௌத்திரங்
குற்சிதஞ் சாந்த மற்புதம் பயமே. (767)

கண்ட மொன்பதா மவைகீழ் விதேக
மேல்வி தேகம் வடவி தேகந்
தென்வி தேகம் வடவி ரேபதம்
தென்னி ரேபதம் வடப ரதந்தென்
பரத மத்திம கண்ட மென்ப. (768)

கிரக மொன்பதா மவையா தித்தன்
சோமனங் காரகன் புதன்வி யாழன்
சுக்கிரன் சனியுட னிராகு கேதுவே. (769)

சித்தரொன் பதின்மர் சாத்திய நாதர்
சதோக நாத ராதி நாத
ரநாதி நாதர் வகுளி நாதர்
மதங்க நாதர் மச்சேந்திர நாதர்
கடேந்திர நாதர் கோரக்க நாதரே. (770)



தாரணை யொன்பதா மவைகாம தாரணை
வச்சிர தாரணை மாயா தாரணை
சித்திர தாரணை செய்யுட் டாரணை
நிறைவு குறைவாகிய வெண்பொருட் டாரணை,
சந்த தாரணை வத்து தாரணை
சதுரங்க தாரணை சாற்றுவ ரருகர்.

தான மொன்பதா மவையரி யரும
சமசய சித்திர துருவ நிவிர்த்த
படிம விடம தானங்க ளாமிவை
நவசந்தி தான மென்ன நவிலுப.

சிந்து திரிபதை சவலை சமபாத
விருத்தஞ் செந்துறை மிக்க வெண்டுறை
பெருந்தேவ பாணி சிறுதேவ பாணி
வண்ண மிசைப்பா வொன்பது வகையே.

வாமை சேட்டை ரௌத்திரி காளி
கலவி காரணி பெல விகாரணி
பெலப் பிரமதனி சர்வ பூத
தமனி மனோன்மணி யொன்பது சத்திகள்.

அயனரி யான்மகே சன்சதா சிவனே
சிவஞ்சத்தி நாதந் திகழும் விந்து
நவந்தரு பேத வுருவென நவிலுவர்
முன்னான் குருவம் பின்னான் கருவ
மிடையொன் றுருபா ரூப மென்ப.

கங்கை யமுனை வாணி நருமதை
சிந்து காவிரி கோதா வரியுடன்
சோண மாநதி துங்க பத்திரை
யிவைநவ நதியென வியம்புவர் சைவ
சமய நெறியிற் றுணர்ந் திடுகவே.

தானப் பிரமா னைம்பத் தாமவை.
கால மார்க்கங் கிரியை யங்கம்

கிரகஞ் சாதி கலையி லயைசதி
பிரத்தார மிவையே யாமெனப் பேசுப. (777)

தாளத் தின்கா லப்பிர மாணம்
பத்தவை கண்லவங் காட்டை நிமிடந்
துடிதுரித மிலகு குருபுலுதங் காக
பதமெனக் கீத வல்லோர் பகருவர். (778)

கணகால மாவது தாமரை யிதழை
நூறடுக் கியதிலோ ரிதழி லூசி
செலுத்துங் கால மென்னச் செப்புப. (779)

இலவகா லங்கண மெட்டுக் கொண்டதே. (780)

காட்டை கால மிலவமெட் டென்ப. (781)

நிமிட காலங் காட்டை யெட்டென்ப. (782)

துடிகால நிமிட மெட்டெனச் சொல்லுப. (783)

துரித காலந் துடியிரண் டாமே. (784)

இலகு காலந் துரித மிரண்டே. (785)

குருகால மிலகி ரண்டெனக் கூறுப. (786)

புலுத கால மிலகுமூன் றென்ப. (787)

காகபத காலங் குருவிரண் டாமே. (788)

தாள மார்க்க மாறவை தக்கணம்
வார்த்திகஞ் சித்திரஞ் சித்திர தரமே
யர்த்த சித்திர மதிசித் திரமே. (789)

தக்கண மாவது மாத்திரை யெட்டோர்
கலையா கக்கொண் டதென்னக் கழறுப. (790)

வார்த்திக மாவது நான்கோர் கலையே. (791)

சித்திர மாத்திரை யிரண்டோர் கலையே. (792)

சித்திர தரமாத் திரையொன் றோர்கலை. (793)



அர்த்த சித்திர மாத்திரை யரையே.
அதிசித் திரமாத் திரைகா லோர்கலை
மாத்திரை யாவது கைந்நொடி யளவே.

தாளக் கிரியை யிரண்டவை மார்க்கந்
தேசிக மென்னச் செப்புவ ரிசையோர்.

மார்க்க மெட்டவை நிசத்த நான்கு
சசத்த நான்கெனச் சாற்றுவ ரிசையோர்.

நிசத்த நான்கா மவையா வாப
நிட்கிரா மம்விட் சேபம்பிர வேசமே.

சசத்த நான்கவை துருவஞ் சம்மியந்
தாளஞ் சன்னி பாத மென்ப.

தேசிக மெட்டா மவையே துருவஞ்
சர்ப்பிணி கிருட்டியை பதுமினி விசர்ச்சிதை
விட்சிதம் பதாகை பதித மென்ப
விவற்றிலக் கியங்களை யிசைநூலி லறிகவே.

தாளத்தி னங்க மாறவை பிறைமதி
கணைவில் பாம்பு புள்ளடி யிவற்றை
யநுதுரிதந் துரிதமி லகுகுரு புலுதங்
காக பதமெனக் கழறுவர் முறையே
யிவற்றினுற் பத்தியும் பரியாய நாமமும்
வண்ணமு மதிதே வதையு மாத்திரையு
மர்த்தாங் குலப்பிர மாணமுஞ் சாதைப்
பிரமா ணமுமிசை நூல்பெரி துரைக்குமே.

தாளத்தின் கிரக நான்கவை யதீத
மநாக தஞ்சமம் விடம மென்ப.

அதீதமா வது குரன்முன்னுந் தாளம்
பின்னும் வருவ தென்னப் பேசுப.

அநாகத மாவது தாள முன்னுங்
குரல்பின் னும்வர லென்னக் கூறுப.

சமமா வதுகுரா ரூள யிரண்டு
மொத்து வருவ தென்ன வுரைப்ப. (805)

விடம மாவது குரா லுந் தாளமு
முன்னும் பின்னுங் கலந்து வருவதே. (806)

தாளச் சாதி யைந்து சதுரசிரந்
திரிசிர மிசிரங் கண்டஞ் சங்கீரண
மாமிவை முறையே பிரம வரச
வைசிய சூத்திர சங்கிரம சாதியே
யிவற்றைமுற் கூறிய விலகு வக்கர
காலங் களினா லறிக வென்ப. (807)

தாளத் தின்கலை மூன்றவை யேக
கலைது விகலை சதுர்க்கலை யென்ப. (808)

ஏக கலையக் கரகால மாயுங்
கிரியை யோடும் வரலெனக் கிளக்குப. (809)

இதையிரட் டித்துக் கிரியையொடு வருவது
துவி கலை யென்னச் சொல்லுவர் புலவர். (810)

சதுர்க்கலை யதையிரட் டித்துக் கிரியை
யோடு வருவ தென்ன வுரைப்ப. (811)

தாளத் திலயை மூன்றவை விளம்ப
மத்திமந் துரித மென்ன வழங்குப
விவைவரு வதுகலை யின்னுப் பாமே. (812)

தாளத் தின்சதி யாறு மவைசமம்
விடம மிருதங்கம் வேத மத்தியங்
கோபுச் சஞ்ச ரோதோ வகமே. (813)

சமசதி னெட்டங்க மாயினுங் குற்றங்க
மாயினு மொரேவித மாய்வர லென்ப. (814)

விடம சதியெலா வங்கமுங் கிரம
மின்றிக் கலந்து வரலென் றியம்புப. (815)

மிருதங் கசதி முதலினுங் கடையினுங்
குற்றங் கழுமிடை யின்னெட் டங்கமும்
வருவ தென்ன வழங்குவ ரிசையோர். (816)



வேத மத்தியஞ் சதிமுதல் கடையி
னெட்டங் கழுமிடை யிற்குற் றங்கமும்
வருவ தாகு மென்ன வகுப்பர். (817)

கோபுச் சசதி முதலினெட் டங்கமு
மீற்றிற் குற்றங் கழுமாய் வரலே. (818)

சுரோதோ வகசதி முதலிற்குற் றங்கமு
மீற்றினெட் டங்கமு மாய்வர லென்ப. (819)

தாளத் தின்பிரத் தார முதலிய
மற்றைய விவ்விலக் கணத்தா லுணர்கவே. (820)

புண்ணிய மொன்பதா மவையெதிர் கொள்ளல்
பணித லாதனத் திருத்தருள் கழுவ
லருச்சித்த றூபங் கொடுத்த றீபங்
காட்டல் புகழ்த லமுத மேந்த
லிவைதுறந் தோர்க்குச் செய்வன வென்ப. (821)

மணிக ளொன்பதா மவைகோ மேதக
நீலம் பவளம் புட்ப ராக
மரகத மாணிக்க முத்தவை டூரியம்
வைர மிவையென வகுப்ப ருணர்ந்தோர். (822)

வாயி லொன்பதா மவைகண் காது
மூக்கிவை யொடுவாய் குதங்குய் யம்மே. (823)

வானோர் கணமொன் பானக் கணத்தோர்
பத்திச் சுவாலகர் ஞானா திக்கர்
பத்தி ராசனர் நாத கிருத்தியர்
சத்துவகர் பலவத் தர்பிரா தமிக
ரதிதூதர் தூத ராவ ரிவரே
நவவிலா சசபை யாரென நவிலுப. (824)

பத்திச் சுவாலகர் கடவுளைக் குறித்த
பத்தியி னாலே சுவாலிக் கிறவரே. (825)

ஞானா திக்கர் கடவுளைக் குறித்த
ஞானத்தி னாலாதிக் கம்பெற் றவரே. (826)

பத்திரா சனர்கட வுள்ளெழுந் தருளி
யிருக்குந் தேவ சிங்கா தனத்தைப்
புகழ்ந்திருப் பவர்க ளென்மனார் புலவர். (827)

இம்மூ வருமுத லாகு மர்ச்சியப்
பிரபுத் துவமுடை யோரெனப் பேசுப. (828)

நாத கிருத்தியர் நாதன் கிரியையை
யவனரு ளாற்புரி பவரா மென்ப. (829)

சத்து வகர்கட வுளினரு ளாலே
பற்பலற் புதஞ்செய் சத்துவ முளரே. (830)

பலவத்தர் கடவு டிருவுளப் படியே
யெய்துங் கருமங் கட்கு வருமிடை
யூற்றை யவனரு ளாலே தடுக்கும்
பலாத் காரம் பெற்றவ ரென்ப. (831)

இம்மூ வரிரண் டாகு மர்ச்சியப்
பிரபுத் துவமுடை யோரெனப் பேசுப. (832)

பிராதமிகர் கடவுளின் றிருவுளப் படியே
யிராச்சிய சம்பந்த மான சாதாரண
நன்மை நடத்துந் தலைமை பெற்றவரே. (833)

அதிதூத ரதிகப் பிரதான விசேட
முலகத்தி லறிவிக்கத் தானுதி பதியாய்
வருபவ ரென்ன வழங்குவர் புலவர். (834)

தூத ரானவர் மனிதர் பிறந்த
கணமுத லாகத் தனித்தனி யேயவ
ரவரைப் பாது காத்துநன் னெறியி
னடத்திமற் றும்பிர தானவி சேடங்
களுக்க னுப்பப் படுபவ ரென்ப. (835)

இம்மூவர் மூன்று மர்ச்சியப் பிரபுத்
துவமுடை யோரா மென்னச் சொல்லுப. (836)

அர்ச்சியப் பிரபுத் துவமே யதீச்சுர
பதவி யென்னப் பகர்நரு முளரே. (837)



குரங்கு வேங்கை தோல் குக்கலாடு
பஞ்சா னனநரி சரபம் பாய்முய
லெனுநவ கதியு மியம்புவர் பரிக்கே. (838)

(பத்துப் பொருள்.)

வெள்ளிபொன் வத்திரம் வெல்லம் பூமி
நெய்பால் பசுவெள் ளுப்புப் பத்துந்
தசதா னப்பொரு ளாகச் சாற்றுவர். (839)

சிவனடி யார்கள் செய்கைபத் தாமவை
தத்துவ ரூபந் தத்துவ தெரிசனந்
தத்துவ சுத்தி யான்ம ரூப
மான்ம தெரிசன மான்ம சுத்தி
சிவரூ பஞ்சிவ தெரிசனம் பின்னர்ச்
சிவயோ கஞ்சிவ போக மாமே. (840)

அங்கம் பத்தவை மலையாறு நாடூர்
மாலை பரிகரி முரசுகொடி செங்கோ
லிவையே யரசர்க் குரிய தசாங்கமே
கோல்விடுத் தாணையுந் தானையுங் கூறுவர். (841)

சிற்பத் தொழிற்குறுப் புப்பத் தாமவை
கல்லுலோ கஞ்செங் கன்மா மண்சுதை
தந்தம் வண்ணங் கண்ட சருக்கரை
மெழுகிவை யென்ன விளம்பப் படுமே. (842)

சேனைத் தொகைபத் தாமவை பதாதி
சேனாமுகங் குமுதங் கணகம் வாகினி
பிரளயஞ் சமுத்திரஞ் சங்க மநீக
மக்குரோணி யென்ன வறையப் படுமே. (843)

பதாதி யாவது யானை யொன்று
தேரொன் றுபரி மூன்று நாலைந்து
கூடிய தென்னக் கூறப் படுமே. (844)

பதாதி முதல மேன்மேன் மும்மடி
கொண்டதாஞ் சேனா முகமா தியவே. (845)

திக்குப் பத்தா மவைகிழக் காதி
யெட்டொடு கீழ்மே லென்ன வழங்குப. (846)

திருமா லவதா ரம்பத் தாமவை
மச்சங் கூர்மம் வராக நரசிங்கம்
வாமனம் பரசு ராம னிராமன்
பலபத் திரன்கணன் கற்கி யென்ப. (847)

தீக்குணம் பத்தா மவைவாக் கினது
நான்கு மெய்யினது மூன்று மனத்தது
மூன்றென மூவகை யாமென மொழிப. (848)

வாக்கின் றீக்குண நான்கா மவைகள்
பொய்சொலல் கோட்சொலல் கோபித் துச்சொலல்
பயனில சொல்லெனப் பகரப் படுமே. (849)

மெய்யின் றீக்குண மூன்று மவைகள்
களவு செய்தல் வறிதே தொழில்செயல்
கொலைசெய லென்னக் கூறப் படுமே. (850)

மனத்தின் றீக்குண மூன்று மவைகள்
கொலைநினைக் கைகா மப்பற் றாசையே. (851)

துவர்பத் தாமவை நாவல் கடுக்காய்
நெல்லி தான்றி யாலர சத்தி
யித்தி முத்தக் காசுமாந் தளிரே
மாந்தளிர் முத்தக் காசினை வரைந்து
பூவந்தி கருங் காலியைச் சேர்ந்துப்
பத்துத் துவரெனப்ப கருவர் சிலப்பதி
கார வுரையிற் கண்டு கொள்கவே. (852)

நற்குணம் பத்தா மவைவாக் கினது
நான்கு காயத் தினது மூன்று
மனத்தி னதுமூன் றெனவச னிப்பர். (853)

வாக்கி னற்குணம் நான்கவை மெய்யுரை
நல்வார்த்தை யின்னுரை பயன்படு சொல்லே. (854)

காயத்தி னற்குண மூன்றவை கோயில்
சூழ்த றவஞ்செய றானஞ் செய்தலே. (855)



மனத்தி னற்குண மூன்றவை யருணினை
வாசை யறுத்த றவப்பற் றாமே. (856)

நாடி பத்தா மவைசுழி முனையிடை
பிங்கலை காந்தாரி யத்தி சிகுவை
யலம்புடை புருடன் குருசங் கினியே. (857)

சுழுமுனை நாடி யாவதா தார
மாறினு மூடு ருவிநிற் பதுவே. (858)

இடைபிங் கலைகளி ரண்டுகத் தரிகைக்
கால்போற் பின்னிநிற் பதெனக் கழறுப. (859)

காந்தாரி நாடி நாபியிற் றோன்றிச்
சுரமே ழுக்கு மெழுநா டியாக்
கண்டத் துறுவ தாமெனக் கழறுப. (860)

அத்தி சிகுவை யிரண்டும் பத்து
நாடி யுற்று நயனத்தில் நிற்பவே. (861)

அலம்புடை புருட னிரண்டுஞ் செவியினுற்
றிருபது நரம்புற் றிருப்பன வென்ப. (862)

குருநாடி நாபி யுறைந்து குய்யம்
பற்றி நிற்ப தென்னப் பகருப. (863)

சங்கினி நாடி யுபத்தம் பற்றியதே. (864)

மகளிரான் மலரு மரம்பத் தவைமகி
ழெழி லம்பாலை பாதிரி முல்லை
புன்னை குராவ சோகு குருக்கத்தி
மராசண் பகமிவை முறையே சுவைக்க
நட்புற நிந்திக்க நகைக்க வாட
வணைக்க வுதைக்கப் பாடப் பார்க்க
நிழல்படத் தளிர்த்துப் பூத்து நிலவுமே. (865)

மூலம் பத்தவை சிறுபஞ்ச மூலம்
பெரும்பஞ்ச மூல மென்னப் பேசுப. (866)

சிறுபஞ்ச மூலங் கண்டங் கத்திரி
சிறுவழு துணைசிறு மல்லி பெருமல்லி
நெரிஞ்சி யிவற்றின் வேரா கும்மே. (867)

பெரும்பஞ்ச மூலம் வில்வம் பெருங்குமிழ்
தழுதாழை பாதிரி வாகையின் வேர்களே. (868)

வாயுபத் தாமவை பிராண னபானன்
சமான னுதானன் வியான னாகன்
கூர்மன் கிருகரன் தேவதத்தன்
றனஞ்சய னிவைகள் சடத்தினிற் பனவே. (869)

பிராண வாயுவி தயத்தியங் குவதே. (870)

அபான வாயு குதங்குய் யத்தி
னிடைநிற்ப தென்ன வியம்பப் படுமே. (871)

சமான வாயு கந்தரக் குழியிற்
சந்திடை நிற்ப தென்னச் சாற்றுப. (872)

உதான வாயு நாபியி லுறுவதே. (873)

வியான வாயு வுடன்முழு துறுமே. (874)

நாக வாயு நீட்டன் முடக்கல்
கிளக்கல் செய்வ தென்னக் கிளக்குப. (875)

கூர்ம வாயு வுரோமம் புளகித்
திமைப்ப தென்ன வியம்பப் படுமே. (876)

கிருகர வாயு தும்மலுஞ் சினமும்
வெம்மையும் விளைப்ப தென்ன விளம்புப. (877)

தேவதத்த வாயு வோட்டமு
மிளைப்பும் வியர்வு மியற்றுவ தென்ப. (878)

தனஞ்சய வாயு பிராணன் போகினும்
போகா துடலினை வீக்கித் தலைகிழித்
தகலுவ தென்ன வறைகுவ ராய்ந்தோர். (879)

வேளாண் மாந்த ரியல்புத் தாமவை
யாணைவழி நிற்ற லழிந்தோரைநி றுத்தல்
கைக்கட னாற்றல் கரிலகத் தின்மை
யொக்கல் போற்ற லோவா முயற்சி
மன்னிறை தருத லொற்றுமை கோடல்
விருந்து புறந்தருத றிருந்திய வொழுக்கமே. (880)



(பதினொரு பொருள்)

உருத்திரர் தாம்பதி னொருவ ராமவர்
மாதே வன்னர னுருத்திரன் சங்கரன்
நீலலோ கிதனீ சானன் விசயன்
வீம தேவன் பவோற்பவன் கபாலி
சௌமிய னென்னச் சாற்றப் படுமே. (881)

தேவர் முப்பான் முக்கோடி யர்க்கு
ளுருத்திரர் பன்னொரு கோடிய ருக்குத்
தலைவர் பதினொ ருருத்திர ராகக்
கந்த புராணத் துருத்திரர் கேள்விப்
படலந் தன்னிற் பகர்ந்தனர் காண்கவே. (882)

கரணம் பதினொன் றவைபவ பாலவ
கௌலவ தைதுலை கரசை வனசை
பத்திரவா சகுனி சதுர்ப்பாத நாகவா
கிமித்துக் கினமெனக் கிளக்குப கணிதர். (883)

நதிபதி னொன்று மவைகங்கை யாதி
யேழொடு சிந்து தாமிர பருணி
துங்க பத்திரி கிருட்டிணி யென்ப. (884)

கடைய மயிராணி கருதிய வாடன்
மரக்கால் விந்தை பரவை திருவாட
லல்லியங் கும்ப மல்லரி யாட
குடைதுடி யிரண்டுங் குமர னாடல்
கொட்டிபாண் டரங்க மரனுடை யாட
காம னாடல் பேடெனக் கரைவ
ரிவைகள் பதினொ ராட லென்மனார். (885)

(பன்னிரு பொருள்)

இராசி பன்னிரண் டாமவை மேட
மிடப மிதுனங் கடகஞ் சிங்கங்
கன்னி துலாம்விருச் சிகமொடு தனுசு
மகரங் கும்ப மீன மென்ப. (886)

இராசிகள் நாழிகை யறுப தாமவை
தனித்தனி மீன மேடநா லேகா
விடபங் கும்ப நான்கே முக்கான்
மிதுனஞ் சிங்கம் விருச்சிக மகர
மைந்தே கால்கள் கடகந் தனுசுக
ளைந்தரை கன்னி துலாமைந் தென்ப. (887)

உயிர்மெய் வேதனை பன்னிரண் டாமவை
யனல்சீத மசனி புனல்வாத மாயுதம்
விடமொடு மருந்து பசிதா கம்பிணி
முனிவ ருமை யென்ன மொழிகுப. (888)

சூரியர் பன்னிரு வோரவர் தாத்துரு
சக்கர னரியமன் மித்திரன் வருண
னஞ்சுமா னிரணியன் பகவான் றிவச்சுவான்
பூடன் சவித்திரு துவட்ட னிவர்களே
சித்திரை யாதி மாதமொவ் வொன்றிற்
சூரிய துவாதசா தித்தரா முறையே. (889)

மாதம் பன்னிரண் டாமவை சித்திரை
வைகாசி யானி யாடி யாவணி
புரட்டாசி யைப்பசி கார்த்திகை மார்கழி
தைமாசி பங்குனி யென்னச் சாற்றுப. (890)

கொடுந்தமிழ் நாடு குலவுபன் னிரண்டாந்
தென்பாண்டி குட்டங் குடங்கற் காவேண்
பூழி பன்றி யருவா வருவா
வடதலை சீத மலாடு புனனாடே. (891)

(பதின்மூன்று பொருள்.)

தமிழ்நா டுகள்பதின் மூன்று மவைசெந்
தமிழ்நா டொன்று கொடுந்தமிழ் நாடு
பன்னிரண டெனவிரு பாற்படு மென்ப. (892)



(பதினான்கு பொருள்.)

பதினான்கு வித்தைகள் பகரில் வேதநான்
கங்க மாறுமீ மாஞ்சை தருக்கம்
புராண மிருதி யென்னப் புகலுவர். (893)

உலகம் பதினான் காமவை கீழுல
கேழு மேலுல கேழிரு வகையுமே. (894)

கீழுல கேழவை யதல விதல
சுதல தராதல ரசாதல மகாதல
பாதாள லோக மென்னப் பகருவர் (895)

மேலுல கேழவை பூபுவ சுவசன
தவமகா சத்திய லோக மென்ப. (896)

தயாவி ருத்தி பதினான் காமுயிர்க்
காமுப காரமேழ் கல்வி பயிற்றுத
றுயரந் தீர்த்த றண்டத்தி னீக்க
லையந் தேற்றல் பிறர்குணத் தழுக்கா
றின்றிப் பொறுத்தல் பிறராற் செயப்படுந்
தீமையை மறந்து நன்றியை நினைத்தல்
பிறர்க்குவேண் டித்தெய் வம்வழி படலே. (897)

உடற்குப காரமே ழாவன வுணவு
பான முடையிட மடிமை காத்தல்
சிறைநோய் பயந்தீர்த் தல்பிண மடக்கலே. (898)

முகம்பதி னான்கா மவையஞ் சிதமுக
மதோமுக மாகம் பிதம்பிர கம்பித
மாலோ கிதமுலோ கிதமுத்து வாகிதஞ்
சமஞ்செளந் தரந்துதம் விதுதம்ப ராவிருத்தம்
பரிவா கிதந்திரச் சின மென்ப. (899)

அஞ்சித முகமா வதுவருத் தத்தை
யாற்று திருதோண் மேற்றலைச் சாய்த்தலே (900)

அதோமுகந் தலையைக் குனிந்து பார்த்தலே (901)

ஆகம் பிதமுகஞ் சம்மதித் தற்கு
மேல்கீழ் தலையை யாட்ட லென்ப. (902)

பிரகம் பிதமுக மதிச யத்திற்
சிறிதாத் தலையை யாட்ட லென்ப. (903)

ஆலோ லிதமுக மாசையான் மலர்ந்த
முகமா யொருவனை யழைத்த லென்ப. (904)

உலோலி தமுகந் துயரா லொருதோண்
மேற்றலை சாய்த்த லென்ன விளம்புப. (905)

உத்துவா கிதமுக மண்ணாந்து பார்த்தலே. (906)

சமமுகந் தலையசை யாம லிருத்தலே. (907)

சௌந்தர முகமிகு மகிழ்ச்சியான் மலர்தலே. (908)

துதமுக மாவது வேண்டா மைக்கு
வலமிடந் தலையை யாட்ட லென்ப. (909)

விதுத முகமஃ துணிவணி முதலிய
வேண்டா மைக்கு மிகச்சிர நடுக்கலே. (910)

பராவிருத் தமுகம் வேண்டா மைக்கு
பக்கந் திருப்ப லென்னப் பகருவர். (911)

பரிவா கிதமுக மதத்தா லொருபுறஞ்
சாய்ந்த தலையைச் சிறிதாச் சுற்றலே. (912)

திரச்சீ னமுக நாணமுற் றூட்டலே. (913)

சுவாயம்பு சுவரோ சிடனுத் தமனுயர்
தர்மச னிரேவதன் சாட்குடன் வைவச்
சுதன்சூ ரியசா வர்ணி யோடு
தக்கசா வர்ணி பிரமசா வர்ணி
தர்மசா வர்ணி யுருத்திரசா வர்ணி
யுரோச்சியன் பௌம னிவர்பதி னால்வர்
மனுக்க ளென்ன வழுத்துங் கூர்ம
புராண மதனிற் புகலு மிவரு
ளுரோச்சியன் பௌம னெனவிரு பெயர்க்கு
மிரௌச்சியன் பௌச்சிய னெனவே றியம்புவர். (914)



(பதினைந்து பொருள்.)

திதிபதி னைந்தா மவைகள் பிரதமை
துவிதியை திரிதியை சதுர்த்தி பஞ்சமி
சட்டி சத்தமி யட்டமி நவமி
தசமி யேகா தசிதுவா தசியே
திரயோ தசிசதுர்த் தசியிவற் றோடு
பௌர்ணி மையல தமாவா சியாமே. (915)

திதியின் பகுப்பைந் தவைநந்தை பத்திரை
சயையிருத் தைபுடன் பூரணை யாமே
நந்தை தொடங்கிப் பிரதமை யாதியை
மும்மடங் கெண்ணி மொழியப் படுமே. (916)

திருமா லவதா ரம்பதி னைந்தாஞ்
சனகன் சனந்தனன் சனாதன னோடு
சனற்கு மாரன் னரநா ராயண
னயக்கி ரீவன் றத்தாத் திரேயன்
மோகினி யாக பதியொடு வியாதன்
றன்வந்திரி புத்தன் கபில னிடப
னாரத னென்ன நவிலுவர் முனிவர். (917)

(பதினாறு பொருள்.)

உபசா ரம்பதி னாறா மவைக
டவிசினை யளித்தல் கால்கழு நீர்தரல்
கைகழு நீர்தரல் முக்குடி நீர்தர
னீராட்ட லாடை சாத்தன் முப்புரி நூ
லணித றேய்வை பூசல்பூச் சாத்தன்
மஞ்ச ளரிசி தூவன் னறும்புகை
காட்டல் விளக்கிடல் கர்ப்பூர மேற்ற
லமுத மேந்த,லடைகாய் தருதன்
மந்திர மலரா லருச்சித் தலுமே. (918)

சைவம் பதினா றுமவை யூர்த்த
சைவ மகாதி சைவ மாதி

சைவ மகாசைவம் பேத சைவ
மபேத சைவ மந்தா சைவங்
குணசைவ நிர்க்குண சைவ மத்துவா
சைவம் யோக சைவ ஞான
சைவ மணுச்சை வக்கிரியா சைவ
நால்வகைச் சத்திநி பாதச் சைவஞ்
சுத்தசை வமெனச் சொல்லுவ ரறிஞர். (919)

பேறு பதினா றவைபுகழ் கல்வி
வலிவெற்றி நன்மக்கள் பொன்னென் னல்லூழ்
நுகர்ச்சி யறிவழகு பெருமை யிளமை
துணிவு நோயின்மை வாழ்நா ளென்ப. (920)

சத்திகள் பதினா றுமவை சயையொடு
விசயை யசிதை பராசிதை மேலா
நிவிர்த்தி பிரதிட்டை வித்தியை சாந்தி
யிந்திகை தீபிகை ரேசிகை மோசிகை
வியோம ரூபை யனந்தை யநாதை
யநாசிரு தையென வறைகுவ ருணர்ந்தோர் (921)

(பதினெண் பொருள்.)

கணம்பதி னெட்டவை யமரர் சித்த
தாரகை தைத்தியர் கருடர் கின்னரர்
நிருதர் கிம்புருடர் கந்தருவ ரியக்கர்
விஞ்சையர் பூதர் பைசாசர் சாரணர்
முனிவ ருரக ராகாய வாசிகள்
போக பூமிய ரென்னப் புகலுப. (922)

தருமநூல் பதினெட் டாமவை தாமநு
பிரகற் பதியமங் தக்கங் கௌதம
மங்கிரம் யாஞ்ஞவல் லியம்பிர சேதசஞ்
சாதா தபம்பரா சரஞ்சம் வர்த்த
முசனஞ் சங்கம் லிகித மத்திரி
விட்டுணு வாபத் தம்ப மாரித
மிவைவை திககரு மங்களை யியம்புஞ்
சங்கஞ் சங்க லிதமென வும்படும். (923)



மநுவா மிருதி கிருத யுகக்கே. (924)

கௌதம மிருதி திரேதா யுகக்கே. (925)

சங்கலித மிருதி துவாபர யுகக்கே. (926)

பராசர மிருதி கலியுகத் திற்கே. (927)

புராணம் பதினெட் டவைசிவ புராணம்
பத்து விட்டுணு புராணம் நான்கு
பிரம புராண மிரண்டு சூரிய
னக்கினி புராண மொவ்வொன் றுமே. (928)

சிவபு ராணம்பத் தாமவை யெவையெனிற்
சைவங் காந்த மிலிங்கங் கூர்மம்
வாமனம் வராகம் பௌடிக மச்ச
மார்க்கண் டேயம் பிரமாண்ட மென்ப. (929)

விட்டுணு புராண நான்கா மவைக
ணாரதீ யம்பா கவதங் காருடம்
வைணவ மென்ன வழங்கு மென்ப. (930)

பிரம புராண மிரண்டா மவைகள்
பிரமம் பதும மென்னப் பேசுப. (931)

சூரிய புராணம் பிரமகை வர்த்தமே. (932)

அக்கினி புராண மாக்கி நேயமே. (933)

காமப் பகுதியிற் கற்பிய லீரொன்
பான்வகை யாமவை பிரிவாற் றாமை
படர்மெலிந் திரங்கல் கண்விதுப் பழிதல்
பசப்புறு பருவர றனிப்படர் மிகுதி
நினைந்தவர் புலம்பல் கனவுநிலை யுரைத்தல்
பொழுதுகண் டிரங்க லுறுப்புநல னழித
னெஞ்சொடு கிளத்த னிகழ்நிறை யழித
லவர்வயின் விதும்பல் குறிப்பறி வுறுத்தல்
புணர்ச்சி விதும்ப னெஞ்சொடு புலத்தல்
புலவிபுலவி நுணுக்கமூட
லுவகையென்ன வோதுவர்புலவர். (934

யாக்கைக் குறுகுற் றம்பதி னெட்டவை
பசிநீர் வேட்டல் பயஞ்சின முவகை
வேண்டல் நினைப்பு நரைநோ யுறக்க
மரணம் பிறப்பு மதமின்ப மதிசயம்
வியர்த்தல் கேதங் கையற வென்ப
ரிவற்றுட் சிற்சில பேதமா வியம்புவர். (935)

நார சிங்க முதலுப புராணம்
பதினெட் டாகப் பகருவர் புலவர்
பிங்கல நிகண்டிற் பேசினர் காண்கவே. (936)

சிங்களஞ் சோனகஞ் சாவகஞ் சீனந்
துளுவங் குடகங் கொங்கணங் கன்னடங்
கொல்லந் தெலுங்கங் கலிங்கம் வங்கங்
கங்க மகதங் கடாரங் கௌடங்
குசலந் திராவிடம் பதினெண் பாடையே. (937)

சோதிட் டோம மக்கினிட் டோம
முத்தியஞ் சோடசீ வாசபேய
மதிராத் திரமிகு சோம யாகஞ்
சாதுர் மாசியம் பௌத்திர மேதஞ்
சௌத்தி ராமணி புண்ட ரீக
மங்கி சயனுய ரிராச சூய
மசுவ மேதம் விச்சுவ தித்து
பிரம மேதம் பிரணவ மேதம்
பசுபந் தம்மெனப் பதினெட் டியாகமே. (938)

ஓடாவி கன்னார் குயவர் கொல்லர்
கோவியர் சிவியார் தச்சர் தட்டார்
நாவிதர் மாலைக் காரர் பாணர்
பள்ளர்மூ வாணிபர் வண்ணார் வலையர்
வெட்டியான் பதினெண் குடிக ளாமே. (939)

அகத்தியர் போகர் கைலாச நாதர்
சட்ட முனிகோ ரக்கர்திரு மூலர்
நந்தி கூன்கணர் கொங்கணர் மச்ச



முனிவா சமுனி கூர்ம முனியுடன்
கமல முனியிடைக் காடர் புண்ணாக்
கீசர் சுந்தரா னந்த ருரோமச
முனிபிர மமுனி பதினெண் சித்தரே. (940)

பதினான்கு வித்தை யுடன்மீ மாஞ்சை
நியாய மிருதி நிகழும் புராண
மிவையட் டாதச வித்தை யென்ப. (941)

எருக்கு கண்டங் கத்திரி காந்தை
கறிமுள் ளிகுமிழ் கடுங்கொடி வேலி
சங்கங் குப்பி தகுசிற் றாமலி
தழுதாழை தூதுளை சாற்றுநன் னாரி
பாதிரி நொச்சி பசியமா விலிங்கை
முருங்கை பேரா மல்லி வில்வம்
வேர்க்கொம் பென்ன விளம்பிய விலைகள்
பதினெண் மூலமாப் பகருவர் மருத்துவர். (942)

கடன்கோ டல்லுடன் கருதிய வுபநிதி
கூடி மேம்படல் குறித்துநல் கியதை
நல்காமை யொப்பிப் பணிசெய் யாமை
கூலி கொடாமை குலவிய வுடையா
னல்லாது விற்றல் விற்றுக் கொடாமை
கொண்டுள மொப்பா மையுடன் கட்டுப்
பாடு கடத்தல் பகர்நில வழக்கு
மாத ராடவர் தருமம் வகுக்குந்
தாய பாகந் தருவன் செய்கை
சொற்கொடு மையுடன் றேன்று தண்டக்
கொடுமை சூது கூறு தொழிந்தன
வட்டா தசவிவ கார பதங்களே. (943)

(இருபது பொருள்.)

முத்துச் சனிக்கு மிடமிரு பானவை
மதிபுயல் சங்கு சிப்பிமீ னந்து
முதலை யுடும்பு தாமரை வாழை

கழுகு கரும்பு செந்நெல் மூங்கில்
யானைக் கொம்பு பன்றிக் கொம்பு
பசுப்பன் னாகங் கொக்கு மாதரின்
கழுத்திவை யென்னக் கழறுவர் புலவர். (944)

(இருபத்தோரு பொருள்.)

அரச சின்ன மிருபத் தொன்றவை
முடிகுடை கவரி தோட்டி முரசு
சக்கரம் யானை கொடிமதில் தோரண
நீர்க்குட மாலை சங்குகடன் மகர
மிணைக்கய லாமை சிங்கந் தீப
மிடப மாசன மென்மனார் புலவர். (945)

வள்ள லிருபத் தொருவ ராமவர்
முதலிடை கடையென மூவகைப் படுவரே. (946)

முதல்வள லெழுவர் காரி சகரன்
விராடன் செம்பியன் றுந்து மாரி
நளனி ருதியென நவிலுவர் புலவர். (947)

இடைவள லெழுவ ரக்குர னசந்திமா
னந்திமான் கன்னன் சாந்தன் சிசுபா
லன்வக் கிரனென வறைகுவர் புலவர். (948)

கடைவள லெழுவ ரெழினி யோரி
யாயொடு நள்ளி பாரி பேகன்
மலைய னென்ன வழங்குவர் புலவர். (949)

(இருபத்திரண்டு பொருள்.)

மங்கலச் சொல்லிரு பத்திரண் டாமவை
திருயானை தேர்பரி கடன்மலை மணிபூ
புகழ்சீர் மதிநீ ரெழுத்து பொன்னாரஞ்
சொல்புய லுலகங் கங்கை யமுதம்
பரிதி நிலமிவற் றின்பரி யாய
நாமமு மாமென நவிலுவர் புலவர்; (950)



(இருபத்தினான்கு பொருள்.)

வெகுண்டோ னைய முற்றோன் சோம்பினோன்
களித்தோ னுவந்தோ னழுக்கா றுடையோ
னின்ப முற்றோன் றெய்வ முற்றோ
னஞ்ஞை யுற்றோ னவிலுடம் பட்டோ
னுறங்கினோன் றுயிலை யுணர்ந்தோன் செத்தோன்
மழைபெயப் பட்டோன் பனித்தலைப் பட்டோன்
வெயிற்றலைப் பட்டோ னூண முற்றோன்
வருத்த முற்றோன் கண்ணோ வுற்றோன்
றலைநோ வுற்றோ னழற்றிறம் பட்டோன்
சீத முற்றோன் வெப்ப முற்றோ
னஞ்சுண் டோனவி நயமிரு பானான்
கவிநய மென்பது பாவக மாமே. (951)

(இருபத்தேழு பொருள்.)

நட்சத் திரமிரு பத்தே ழாமவை
அசுபதி பரணி கார்த்திகை ரோகணி
மிருகசீ ரிடந்திரு வாதிரை புனர்பூசம்
பூசமா யிலிய மகம்பூ ரமுத்திர
மத்தஞ் சித்திரை சோதி விசாகம்
மனுடங் கேட்டைமூ லம்பூ ராட
முத்திரா டந்திரு வோண மவிட்டஞ்
சதயம் பூரட் டாதி யுத்திரட்
டாதிரே வதியென வறைகுவர் கணிதரே. (952)

யோக மிருபத் தேழா மவைகள்
விட்கம் பந்திகழ் பிரீதி யாயுண்மான்
சௌபாக் கியஞ்சோ பனமதி கண்டஞ்
சுகர்மந் திருதி சூலங் கண்டம்
விருத்தி துருவம் வியாகத மரிடணம்
வச்சிரஞ் சித்தி விதிபாதம் வரியான்
பரிகஞ் சிவஞ்சித் தஞ்சாத் தியஞ்சுபஞ்
சுப்பிரம் பிரமமைந் திரமவை நிருதியே. (953)

(இருபத்தெண்பொருள்).

சிவாகம மிருபத் தெட்டா மவைகள்
காமிகம் யோகசஞ் சிந்தியங் காரண
மசிதந் தீப்தஞ் சூக்குமஞ் சகச்சிர
மஞ்சுமான் சுப்பிர பேதம் விசய
நிசுவா சஞ்சுவா யம்புவ மனலம்
வீர மிரௌரவம் மகுடம் விமலஞ்
சந்திர ஞான முகவிம் பம்புரோற்
கீதம் லளிதஞ் சித்தஞ் சந்தான
சருவோத் தம்பா ரமேச்சுரங் கிரணத்
துடன்வா துளமென வோதுவ ருணர்ந்தோர். (954)

இருபத் தெட்டுப் பேத நரகம்
பாவப் பயனனு பவிக்கும் போகமாந்
தமமே யந்த தமமோ டிரௌரவ
மகாஅ ரௌரவங் கும்பி பாகங்
கால சூத்திர மசிபத் திரவனங்
கிருமி பட்சண மந்த கூபஞ்
சந்தங் கிசஞ்சன் மலியே சூர்மி
வைதர ணிகொடும் பிராண ரோதம்
வைசசம் லாலா பட்சணம் வீசி
சார பட்சணம் வச்சிர கண்டம்
காரம் பிரசித பட்சணங் கடிய
சூலப் பிரசந்தந் தொக்க விதோகந்
தந்த சூகம் பாரியா வருத்தந்
திரோத னஞ்சூ சிமுகம் பீடண
மென்பன வாமிவற் றுட்சில பெயரை
வேறு கூறலு முண்டென விளம்புப. (955)

(முப்பது பொருள்.)

தோற்கருவி முப்பது சொல்லுங் காலை
பேரிகை படக மிடக்கை யுடுக்கை
சீர்மிரு மத்தளஞ் சல்லிகை கரடிகை



திமிலை குடமுழாத் தக்கை கணப்பறை
தமருகந் தண்ணுமை தாவி றடாரி
யந்தரி முழவொடு சந்திர வளைய
மொந்தை முரசே கண்விடு தூம்பு
நிசாளந் துடுமை சிறுபறை யடக்க
மாசிற குணிச்சம் விரலேறு பாகந்
தொக்க வுபாங்கந் துடிபெரும் பறையென
மிக்க நூலோர் விரித்துரைத் தனரே
சிலப்பதி கார வுரையிற் றெரிகவே. (956)

(முப்பத்தோரு பொருள்.)

முனிவர் முப்பத் தொருவ ரகத்திய
னத்திரியாங் கிரச னிரணிய மாமுனி
யுரோம னேரண்டன் கலைக்கோட்டன் காசிபன்
கௌதமன் சத்தகூன் சச்சி தாநந்தன்
சமதக்கினி சனகன் சனற்கு மாரன்
சுகன்ற தீசி துருவாச நாரதன்
பதஞ்சலி பரத்து வாசன் பராசரன்
பற்பன் பிருகு பிருங்கி புலத்தியன்
மார்க்கண்டன் வசிட்டன் வான்மீகன் விசுவா
மித்திரன் வியாக்கிர பாதன் வியாசனே. (957)

(முப்பத்திரண்டு பொருள்.)

அறமுப் பத்தி ரண்டா மவைக
ளாதுலர் சாலை யோதுவார்க் குண்டி
யறுசம யத்தார்க் குணவு பசுவூண்
சிறைச்சோ றையந்தின் பண்ட நல்க
லறவைச் சோறு மகப்பெறு வித்தன்
மகவு வளர்த்தல் மகப்பால் வார்த்த
லறவைப் பிணஞ்சுட லறவைத் தூரியஞ்
சுண்ணநோய் மருந்து வண்ணார் நாவிதர்
கண்ணாடி காதோலை கண்மருந் துதலைக்
கெண்ணெய்பெண் போகம் பிறர்துயர் காத்த

றண்ணீர்ப் பந்தன் மடந்தடஞ் சோலை
யாவுரிஞ் சுதறி விலங்கிற் குணவு
விலைகொடுத் துயிரைக் காத்த லேறு
விடுத்தல் கன்னிகா தான மென்னப்
பிங்கல நிகண்டிற் பிறங்கச் சொற்றனர்
காஞ்சிப் புராணங் கழுவாய்ப் படலந்
தனிற்சில வேறு சாற்றினர் காண்கவே. (958

இராக முப்பத் திரண்டா மவைகள்
பைரவி தேவக் கிரியை மேக
ரஞ்சி குறிஞ்சிபூ பாளம்வே ளாவளி
மலகரி பௌளிசீ ராகமிந் தோளம்
பல்லதி சாவேரி படமஞ் சரிதேசி
யில்லிதை தோடி வசந்த மிராமக்
கிரியை வராளி கைசிக மாளவி
நாரா யணிகுண் டக்கிரியை கூர்ச்சரி
பங்காளந் தன்னியாசி காம்போதி கௌளி
நாட்டைதே சாட்சரி காந்தாரி சாரங்கமே. (959

புருட ராக மெட்டவை பைரவி
பூபாளஞ் சீபட மஞ்சரி வசந்தம்
மாளவி பங்காள நாட்டை யென்ப. (960)

இராகத் தின்சாதி நான்கிப் பைரவி
யாதி யிவ்விரண் டாகு முறையே. (961)

இராகத்தின் தேவதை யெட்டா குமவை
யீசன் மால்சர சுபதி யிலக்குமி
சூரிய னாதன் விநாயகன் றும்புரு
விவர்பை ரவிமுத லாணெட் டினுக்கே. (962)

பெண்ணிரா கங்க ளிருபத்து நான்கவை
பைரவி யாதிய புருடரா கங்க
ளொவ்வொன் றையடுத் தேவக் கிரியை
முதலிய நிரையே மும்மூன் றாமவை



யவற்றின் மனைவிக ளாமென மொழிப
இவையன் றிப்பல வகைப்பட வழங்கு
மிராகம் பலவுள வென்மனா ரிசையோர். (963)

உபநிட தம்முப் பத்திரண் டாமவை
சீருத் திரம்பி ரகதா ரண்ணியஞ்
சுவேதாசு வதரங் கைவல் லியமே
காலாக் கினிகடம் வல்லிகாத் தியாயனம்
பிரமநா ராயண மங்கிசம் பரமாங்
கிசம்பாற் காம்பிரம பிந்தோ டாருணி
யமிர்த பிந்து பகுவ பஞ்சம்
பிரம சாபாலந் தேசோ பிந்து
வார்சியா யநீயம் போதாய நீய
மாசுவ லாயநீ யஞ்சாங் கியாயநீ
யம்வா சிநாயநீ யஞ்சௌன கீயஞ்
சிவசங் கற்பஞ் சிரவணம் பாரா
கங்கிம் புரோடிய மாண்டூக முண்டிர
மௌண்டிர மென்ன வழங்கப் படுமே. (964)

சிற்ப நூன்முப் பத்திரண் டாமவை
விச்சுவ தருமம் விச்சு வேசம்
விச்சுவ சாரம் விருத்தந் தாவட்ட
நளமய மனுமான் பானுகற் பாரியஞ்
சிருட்டமா னசாரம் வத்துவித் தியாபதி
பாரா சரிய மருடிகஞ் சைத்திகம்
வாத்து போதம் வித்தார மிந்திரம்
வச்சிரஞ் சௌமம் விச்சுவ காசிபம்
மகதந்திரம் விசாலஞ் சித்திரங் காபில
கால பூபநா மசங்கி தையுடன்
சாத்திகம் விச்சுவ போதமா திசாரம்
வெகுச்சுரு மான பேதமா மென்ப. (965)

இலவங்கம் பச்சிலை கச்சோல மேலங்
குலவிய நாகணங் கோட்ட நாகந்

தருமதா வரிசிதக் கோலகன் ஞாரி
வெண்கோட் டங்கத் தூரிகல் வேரி
யிலாமிச் சந்துட னிசைகண்டில் வெண்ணை
கடுகெல்லி தான்றி கருதுங் துத்தம்
வண்ணக்கச் சோல மரேணுக மாஞ்சி
சயிவேகம் புழுகு தருபுனைத் தாது
புலிபுகிர் சரளந் தமாலம் பதுமுக
நுண்ணேலம் வகுள மிசைகொடு வேரி
முப்பத் திரண்டே மாலிகை யென்ப.

(முப்பத்துமூன்று பொருள்.)

தேவர்முப் பத்து மூவரா தித்தர்
பன்னிரு வோர்மருத் துவரிரு வோர்க
ளுருத்திரர் தாம்பதி னொருவரெண் வசுக்களே
யிவர்க்குத் தலைவரு முப்பத்து மூவரே.

(முப்பத்தைந்து பொருள்).

அலங்கார முப்பத் தைந்தா மவைகள்
தன்மை யுவமை யுருவகந் தீவகம்
பின்வரு நிலையே முன்னர் விலக்கே
வேற்றுப் பொருள்வைப்பு வேற்றுமை விபாவனை
யொட்டே யதிசயந் தற்குறிப் பேற்ற
மேது நுட்ப மிலேச நிரனிறை
யார்வ மொழிசுவை தன்மேம் பாட்டுரை
பரியா யம்மே சமாயித முதாத்த
மரிதுண ரவநுதி சிலேடை விசேட
மொப்புமைக் கூட்ட மெய்ப்படு விரோத
மாறுபடு புகழ்நிலை புகழாப் புகழ்ச்சி
நிதர்சனம் புணர்நிலை பரிவருத் தனையே
வாழ்த்துச் சங்கீ ரணம்பா விகமே

(முப்பத்தாறுபொருள்.)

ஆன்ம தத்துவ மவையிரு பத்துநான்
கினிய வித்தியா தத்துவ மேழு



சிவதத் துவமைந் தாகத் தத்துவ
முப்பத் தாறென மொழிந்தனர் புலவர். (969)

(முப்பத்தெண்பொருள்.)

கருதுமுப் பானெண் கலைகளாவன
சிவபூ சையினைச் செய்யுங் காலை
சதாசிவ னைமுகந் தன்னிற் பனவாக்
கொளப்படுங் கிரியா சத்திக ளாகு
மீசான முகத்தி னியவைங் கலைக
டற்புருட முகத்திற் சார்கலை நான்கா
மகோர முகத்தி லவிர்கலை யெட்டு
வாமதே வத்தில் வருபதின் மூன்று
கலைகள் சத்தியோ சாதத்தி லெட்டுக்
கலைக ளாமெனக் கரைகுவ ருணர்ந்தோர். (970)

(ஐம்பத்தாறுபொருள்.,

தேய மைம்பத் தாறு மவைக
ளங்க மருண மவந்தி யாந்திர
மிலாடம் யவன மொட்டியங் கருசங்
கலிங்கங் கன்னடங் கனடங் காசங்
காசிமீ ரங்காந் தாரங்காம் போசங்
கிராடங் குருகு குடகங் குந்தளங்
குருகு விந்தங் கூர்ச்சரங் கேகயங்
கோளங் கொங்கணங் கொல்லங் கோசலஞ்
சகஞ்சவ் வீரஞ் சாலவஞ் சிங்களஞ்
சிந்து சீனஞ் சூர சேனஞ்
சோழஞ் சோனகந் திராவிடந் துளுவந்
தெங்கண நிடதநே பாளப்பாஞ் சாலம்
பப்பரம் பல்லவம் பாண்டியம் புலிந்தம்
போட மகத மச்சமராட
மலையாள மாளவம் யுகந்தாம் வங்கம்
வங்காளம் விதர்ப்ப மென்ன வழங்குப. (971)

(அறுபதுபொருள்.)

வருட மறுபதா மவைகள் பிரபவ
விபவ சுக்கில பிரமோ தூத
பிரசோற் பத்தியாங் கிரச சிமுக
பவபுவ தாது விசுர வெகுதானிய
பிரமாதி விக்கிரம விசுசித் திரபானு
சுபானு தாரண பார்த்தி பவிய
சருவ சித்து சருவ தாரி
விரோதி விகிர்தி கரநந்தன விசய
சயமன் மதந்துன் முகியோர் விளம்பி
விளம்பி விகாரி சார்வரி பிலவ
சுபகிருது சோப கிருது குரோதி
விசுவாவசு பராபவ பிலவங்க கீலக
சௌமிய சாதாரண விரோதி கிருது
பரிதாபி பிரமா தீச வானந்த
விராக்கத நளபிங் களகால யுத்தி
சித்தார்த்தி யிரௌத்திரி துன்மதி துந்துபி
யுருத்திரோற் காரி யிரத்தாக்கி குரோதன
வக்கய வென்ன வறையப் படுமே.

(அறுபத்துநான்குபொருள்.)

கல்லூா னம்மறு பத்துநான் காமவை
யக்கர விலக்கண மிலிகிதங் கணிதம்
வேதம் புராணம் வியாகரண மினிய
நீதி சோதிட தரும யோக
மந்திர சகுன சிற்ப வைத்திய
வுருவசாத் திரமிதி காசங் காவிய
மலங்கார மதுர பாடன நாடக
நிருத்தஞ் சத்தப் பிரமம் வீணை
வேணு மிருதங்கந் தாள மற்றுமை
யத்திர கனகவி ரதகச வசுவ
விரத்தின பூமிப் பரீக்கைசங் கிராம



உ

கணபதிதுணை.

# முகவுரை.

இப்பொருட்டொகை நிகண்டு மதுரைத்தமிழ்ச்சங்கத்தைத்தாபித்துப் பெரும்புகழ்பெற்ற புலவர் பெருமானாகிய பாண்டித்துரைத்தேவரவர்கள் காலத்தில் அவர்களபிப்பிராயப்படி சீர்செய்து, அச்சிட்டு வெளியிடும்படியாகத் தமிழபிமானிகள் கொடுத்த பலவிதமான சுவடிகளிலொன்று.

இந்நூல் செய்தவர் காலமிந்நூலிலெழுதப்படவில்லை.

இந்நூல் பழங்கடிதத்தில். அாளஅ. சூத்திரமாக எழுதப்பட்டிருந்தது.

இதிற்கண்ட பொருட்டொகைகளெல்லாம் பெரும்பாலும் பேரகராதியென்று முன்பதிப்பித்திருக்கிற பிரதியிலுள்ளனவாக விருந்தன. சில பொருட்டொகைகள் வழுவாயுஞ், சில பொருட்டொகைகள் விளங்காதனவாயுஞ், சில பொருட்டொகைகள் சேர்க்கவேண்டுவனவாயுந் தோற்றியபடியால், அவற்றைத் திருத்தியும், விளக்கியுங் கூட்டியுஞ் செய்யப்பட்டிருக்கின்றன. சேர்க்கவேண்டுவனவாகிய பொருட்டொகைகளின்னும் பலவுளவாயினும் அவகாசமின்மையாற் றெரிந்தெடுத்த பொருட்டொகைகள் சிலவற்றை 122 சூத்திரமாகச்செய்து சேர்த்து, ஆயிரஞ்சூத்திரமாக இப்போது அச்சிடப்பட்டிருக்கின்றன. தெரிந்தெடுத்துச் சேர்க்கப்பட்டிருக்கிற பொருட்டொகைகள் சிலவற்றை யின்னநூலிலுள்ளவென்று கூறப்பட்டிருக்கின்றன. பிங்கல நிகண்டிலுஞ், சூடாமணி நிகண்டிலுமில்லாத பொருட்டொகைகள் இந்நூலிலே யமைக்கப்பட்டிருக்கிறபடியால் இந்நூல் கற்போர்க்குப் பேருபகாரமாயிருக்கின்றது.

இங்ஙனம்,

ரா. சுப்பிரமணியக்கவிராயர்.

## பொருட்டொகைநிகண்டு

விருத்த விலக்கண முதுகாஞ் சியுட
னியன்மொழி வாழ்த்துப் பெருமங் கலமே
பெருங்காப் பியஞ்சிறு காப்பிய மாமே.

சாதக மாவது திதிவார நாண்மீன்
யோகங் கரண மோரை கிரக
மிவ்வே ழுறுப்பி னிலைமையுஞ் சோதிட
நூலா லுணர்ந்து நன்கவை யமைத்தே
யவற்றாற் றலைவற் குறுவன கூறலே
யேனைய வெல்லா மியற்றமிழ் நூலினு
மகரா தியினு மறைந்தன காண்கவே.

(நூறு பொருள்.)

அலங்கா ரமினு நூறு மென்ப
ரவைசந் திராலோ கத்திற் காண்கவே.

சொல்லிய வல்லன தொல்காப் பியங்களிற்
கண்டுணர்ந் திடுதல் கற்றோர் கடனே.

முற்றிற்று.

---

## அநுபந்தம்.

### இருபொருள்.

இருநிதி பதும நிதிசங் கநிதி.

### முப்பொருள்.

தேசி வடுகு சிங்கள மென்ன
மெய்க்கூத்து மூவகை விளம்பிடு மிவைகண்
மெய்த்தொழிற் கூத்தா தலினான் மெய்க்கூ

வாத்தியக் கூறுமூ வகையா மென்ப
கீதாங் கமுமேற் கிளர்நிருத் தாங்கமு
முபயாங் கமுமென வுரைக்குமூன் றிற்கும்
வாசித் திடும்வாத் தியங்க ளாமெனச்
சிலப்பதி கார வுரையிற் றெரித்தனர்.

அவைகண் மூன்று மிகுதி யொப்புத்
தாழ்வா மென்னச் சாற்றினா ருணர்ந்தோர்.

நூலா சிரிய ருரையா சிரியர்
போதகா சிரிய ராசிரியர் மூவ
ரிலக்கணக் கொத்தி லியம்பினர் காண்க.

## நாற்பொருள்.

நால்வகைச் சத்திக ணவிலுங் காலை
பார்வதி துர்க்கை பகர்கா டுகிழாள்
விட்டுணு வென்ன விளம்பினர் கந்த
புராண மகாசாத் தப்பட லத்தே.

மாயா காரியம் வகுப்பர் நால்வகை
யவைதநு கரண புவன போகமே.

நால்வகை யொடுக்க நவிலுங் காலை
நித்தியப் பிரளய நிகழுநை மித்திகப்
பிரளயம் பிராகிரு தப்பிர ளயமுட
னாத்தி யந்தப் பிரளய மாமெனக்
கூர்ம புராணங் கூறிய தென்ப.

பேரியாழ் மகரயாழ் பேணுஞ் சகோடயாழ்
செங்கோட் டியாழெனச் செப்புநால் வகையாழ்.

மந்தர மந்தந் தீவிரந் தீவி
தரமென நால்வகைச் சத்திநி பாதஞ்
சித்தியா ருரையிற் செப்பினர் காண்க.



தன்மை யெழுத்துந் தகும்வடி வெழுத்து
பெயரெழுத் தோடு பேசு முடிவெழுத்
தெனநால் வகையெழுத் தியம்பும் பிங்கலம். (11)

## ஐந்துபொருள்.

மாலை யாமம் வைகறை யெற்படு
காலை வெங்கதிர் காயுநண் பகலெனச்
சிறுபொழு தைந்துரைத் திடுமகப் பொருணூல். (12)

அந்தரான் மாச்சீ வான்மாத் தத்துவ
வான்மாப் பூதான் மாமந் திரான்மா
வெனப்பஞ் சான்மா வியம்புவர் தமிழ்ச்சொல்
லகரா தியினி லறிந்து கொள்கவே. (13)

ஈசா னந்தற் புருட மகோரம்
வாம தேவஞ் சத்தியோ சாத
மிவைபஞ்ச மந்திர மெனுஞ்சித்தி யாரே. (14)

நிவிர்த்திபிர திட்டை வித்தை சாந்தி
சாந்தி யதீதை தாமைங் கலைக
ளென்னச்-சித்தியா ரியம்பிடு மென்ப. (15)

சிந்தா மணிதிகழ் சிலப்பதி கார
மணிமே கலைவளை யாபதி குண்டல
கேசி பஞ்சகா வியமெனக் கிளத்துவர். (16)

கடுக்காய்த் தோல்கத் தூரி மஞ்ச
ணெல்லிப் பருப்பு நிகழ்வேப் பவித்து
பஞ்ச கற்பமாப் பகவர் மருத்துவர். (17)

சித்திர மூலஞ் சுக்குச் செவியந்
திப்பிலி திப்பிலி மூல மென்பன
பஞ்ச கோலமாப் பகர்ந்தனர் வைத்திய
பரிபா டையினிற் பரிந்து காண்கவே. (18)